விடுதலைப் போரில் தமிழகம்

சிலம்புச் செல்வர்
டாக்டர்
ம.பொ.சிவஞானம்

பூங்கொடி பதிப்பகம்

விடுதலைப் போரில் தமிழகம்

முதல் பாகம்

பெரியார்-நாகம்மை நூலகம்
சே.எண் 717
அம்பத்தூர், சென்னை-98

சிலம்புச் செல்வர்
டாக்டர் ம.பொ. சிவஞானம்

பூங்கொடி பதிப்பகம்
14, சித்திரைக்குளம் மேற்கு வீதி,
மயிலாப்பூர், சென்னை—600 004.
தொலைபேசி : 24943074

சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ. சிவஞானம் அவர்களின்
100-வது பிறந்தநாள் வெளியீடு

நூல் விவரப்பட்டியல்

நூலின் பெயர்	: விடுதலைப் போரில் தமிழகம்-1
நூலாசிரியர்	: சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சிவஞானம்
பொருள்	: வரலாறு
மொழி	: தமிழ்
வெளியிடுவோர்	: பூங்கொடி பதிப்பகம் 14, சித்திரைக்குளம் மேற்குத் தெரு மயிலாப்பூர், சென்னை - 600 004
வெளியிட்ட ஆண்டு	: முதற் பதிப்பு : 26-6-1982 இரண்டாம் பதிப்பு : மே, 1983 மூன்றாம் பதிப்பு : 26-6-1993 நான்காம் பதிப்பு : 26-6-2005
பக்கங்கள்	: 688
நூல் அளவு	: டெம்மி
எழுத்து அளவு	: 11 புள்ளிகள்
தாள்	: 10.9 கி.கி. வெள்ளைத்தாள்
பைண்டிங்	: சாதா அட்டை
ஒளி அச்சுக் கோர்வை	: அமராவதி சென்னை - 600 083 செல் : 94441-69725
அச்சிட்டோர்	: அமர் ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை - 600 005

விலை : ரூ. 600/- (இரு தொகுதிகள்)

முதல் பதிப்பின் முன்னுரை

இந்தியா ஆறாயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள பிரிட்டனுக்கு அடிமைப்பட்டிருந்த காலம் சுமார் 200 ஆண்டுகளாகும். அதிலே, சரியாக ஒன்றரை நூற்றாண்டுக் காலம் தன் விடுதலைக்காக அது போராடி இருக்கிறது. அந்தப் போராட்டம் பல கட்டங்களாக நடைபெற்றிருக்கிறது. உலக நாடுகள் முழுவதன் கவனத்தையும் கவரத்தக்க வகையில் பல சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன.

விடுதலைப் போராட்டத்தின் இறுதிக் கட்டத்திலே காந்தியடிகள் தலைமை யேற்றார். அவரது தலைமையின் கீழ் உலக வரலாறு காணாத வகையிலே சத்தியம் - அகிம்சை ஆகிய தருமங்களை ஏற்று, சத்தியாக்கிரகம் - ஒத்துழையாமை ஆகிய நடைமுறைகளைக் கடைப்பிடித்துத் தனது விடுதலைக்காக இந்திய நாடு போராடி வெற்றி கண்டது. உலகில் மிகப் பெரிய சாம்ராஜ்யத்தை எதிர்த்துப் போராடி வெற்றி கண்ட பெருமையும் இந்தியாவுக்கு உண்டு.

இத்தகு சிறப்புக்களையெல்லாம் கொண்ட இந்திய விடுதலைப் போராட்ட வரலாறு இன்னமும் முழு அளவில் நூல் வடிவம் பெறவில்லை. நாடு விடுதலை பெற்று 34 ஆண்டுகளாகி விட்டன. இந்த நீண்ட காலத்திலே விடுதலைப் போராட்ட வரலாற்றை இந்திய அரசு அதிகார பூர்வமாக வெளியிட்டிருக்க வேண்டும். ஆனால், அப்படி எதுவும் நடைபெறவில்லை.

இந்திய நாடு பெற்ற விடுதலை வாழ்வானது இனி வழிவழி தோன்றவிருக்கும் புதிய சந்ததியினரால் பாதுகாக்கப்பட வேண்டுமானால், விடுதலைப் போராட்ட வரலாறு முழுமையாக எழுதப்பட்டாக வேண்டும். மிகப் பெரிய நாடான இந்தியா ஆறாயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள சின்னஞ்சிறு நாட்டுக்கு அடிமைப்பட்டிருந்ததற்கான காரணங்களை விளக்கியும், ஒன்றரை நூற்றாண்டுக்குமேல் நடந்த விடுதலைப் போராட்டச் செய்திகளைத் தொகுத்தும் வருங்கால சந்ததியினரின் பார்வைக்கு

வைப்பது இந்தத் தலைமுறையினரின் கடமையாகும். இந்திய அரசுதான் இதற்குப் பொறுப்பேற்க வேண்டும். இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றை முழு அளவில் இந்திய அரசே அதிகாரபூர்வமாகத் தயாரித்து வெளியிடுவது உலகத்திற்குச் செய்யும் சிறந்த சேவையாகவும் இருக்கும். அறவழியில் போராடி மிகப் பெரிய சாம்ராஜ்யத்தை வெளி யேற்றியது இந்தியாதானே!

நாடு விடுதலை பெற்றதையடுத்து, விடுதலைப் போராட்ட வரலாற்றைத் தயாரிப்பதற்கென இந்திய அரசு அப்போது குடியரசின் துணைத் தலைவராக இருந்த டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் தலைமையில் ஒரு குழுவை நியமித்தது. ஆனால் அந்தக் குழு செயலற்றுப் போய்விட்டது.

அதற்குப்பின் விடுதலைப் போராட்ட வரலாற்றை தயாரிப்பதிலே இந்திய அரசு புதிய அணுகுமுறையைக் கடைப் பிடித்தது. முதலில், மாநில வாரியாக விடுதலைப் போராட்ட வரலாறு வெள்ளிவர வழி செய்வதென்றும், பின்னர் அவற்றை அடிப்படையாகக் கொண்டு அனைத்திந்திய ரீதியில் எழுதி வெளியிடுவதென்றும் முடிவெடுத்தது. அந்த முடிவுப்படி, மாநில ரீதியில் விடுதலைப் போராட்ட வரலாற்றைத் தயாரிக்கும்படி அனைத்து மாநிலங்களுக்கும் இந்திய அரசு ஆலோசனை கூறியது.

இது பற்றி கேரள அரசு வெளியிட்டுள்ள 'விடுதலைப் போரில் கேரளம்' என்னும் நூலின் முன்னுரையில் தரப்பட்டுள்ள தகவல் வருமாறு:

''1947-இல் நாடு விடுதலை பெற்றதும் 'இந்திய விடுதலைப் போர் வரலாற்றை' முழுசாக எழுதி வெளியிட வேண்டுமென்ற கருத்து நாட்டின் தலைவர்களுக்குத் தோன்றியது. இந்த வரலாறு வருங்காலச் சந்ததியினருக்குப் பெரும் செல்வமாக அமையும் என்பதில் ஐயமில்லை. இந்த வரலாறு பழைய கால, அண்மைக் கால நிகழ்ச்சிகளைப் படம் பிடித்துக் காட்டுகிற அதே நேரத்தில் நமது வருங்கால சந்ததியினருக்கும் வழிகாட்டியாக அமையும் என்று நம்பப் பட்டது. ஆகவே இந்திய அரசு விடுதலைப் போராட்ட வரலாற்றினை எழுதுவதற்கான முயற்சிகளை எடுத்து, அதனையொட்டி மாநில அரசுகளையும் அந்தந்த மாநிலத்தில் நடந்த விடுதலைப் போராட்ட நிகழ்ச்சிகளைத் தொகுக்குமாறு கேட்டுக் கொண்டது. இந்த வேலை கேரள அரசின் பிரதேச ஆவணக் கமிட்டியிடம் ஒப்படைக்கப்பட்டது.''

இந்திய அரசின் ஆலோசனையை ஏற்று கேரளம், ஆந்திரம், கர்நாடகம், மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், மகாராஷ்டிரம், ஒரிசா ஆகிய மாநிலங்கள் தத்தம் மாநிலங்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றைப் பல தொகுதிகளாக வெளியிட்டு முடித்துவிட்டன. ஏனோ, தமிழக அரசு மட்டும் இதில் ஈடுபடவில்லை. விடுதலைப் போராட்டத்தில் தமிழர் ஆற்றியுள்ள பங்கை எழுதி வெளியிட தமிழகத்தில் தொடர்ந்து இருபதாண்டு காலம் இயங்கிய காங்கிரஸ் அரசே தவறிவிட்டதை நினைக்கும் போதெல்லாம் என் மனம் வேதனைப்படுகிறது.

எந்த ஒரு போராட்டம் பற்றிய வரலாறாயினுஞ் சரி; அது நிகழ்ந்த காலத்தையடுத்தே - அதில் சம்பந்தப்பட்டவர்களாலேயே - எழுதப்பட வேண்டும். அதுதான் உண்மையான வரலாறாக இருக்க முடியும். காலங்கடந்து - பிற்காலத் தலைமுறையினரால் எழுதப்படுவது ஒரு புதிய புராணமாக அமைந்து விடவும் கூடும்.

விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்ட கடைசித் தலைமுறையினரில் சிலர் இன்னமும் நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்களைப் பயன்படுத்திக்கொள்ள இந்திய அரசு முன் வர வேண்டும்.

இராம - ராவணன் போர் பற்றி அது நிகழ்ந்த காலத்திலேயே வாழ்ந்த வால்மீகி முனிவர் எழுதியிருக்கிறார். பாண்டவர் - கௌரவர் போரைப்பற்றி அது நிகழ்ந்த காலத்தில் வாழ்ந்த வியாச முனிவரே எழுதியுள்ளார். மதுரையில் கண்ணகி நிகழ்த்திய வீரப் புரட்சி பற்றிய காப்பியத்தையும் அது நிகழ்ந்த காலத்தில் வாழ்ந்த இளங்கோவடிகள் தான் எழுதியிருக்கிறார். ஒருகால், இந்தச் செய்திகள் கற்பனையாகவும் இருக்கலாம். ஆயினும், இந்தக் கற்பனைகள் போதிக்கும் உண்மை என்ன? ஒரு போராட்டத்தை எழுதி வழங்குவதற்கு, அது நிகழ்ந்த காலத்தில் வாழ்ந்த வருக்குத்தான் - அதிலே சம்பந்தப்பட்டவருக்குத்தான் - முழுத் தகுதி உண்டு என்பதன்றோ!

இந்திய விடுதலைப் போராட்டத்திலே தமிழகம் ஆற்றியுள்ள பங்கை முழு அளவில் எழுதி வெளியிட இதுவரை தமிழக அரசோ, சென்னைப் பல்கலைக்கழகம் போன்ற தனிப்பட்ட ஒரு நிறுவனமோ முன்வந்திருந்தால், அதனை நான் மகிழ்ச்சியுடன் வரவேற்றிருப்பேன். அவர்களுக்குத் தேவைப்படும்

ஒத்துழைப்பைத் தரவும் நான் தயங்கி இருக்க மாட்டேன். அப்படி யாரும் வராததால்தான் அந்தப் பணியை நானே மேற்கொள்ளத் துணிந்தேன்.

இந்திய விடுதலைப் போரில் ஒவ்வொரு மாநிலமும் தன்தன் சக்திக்கு ஏற்பப் பங்கு பெற்றுள்ளன. தமிழகத்தின் நிலையும் அதுதான். உ.பி., வங்காளம், பஞ்சாப், மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களுடன் ஒப்பிடும்போது, விடுதலைப் போரில் தமிழகம் ஆற்றியுள்ள பங்கு அளவில் சிறியதாக இருக்கலாம். ஆயினும், தமிழ்நாடு தனக்குள்ள வாய்ப்புக்கேற்ப தனது பங்கைக் குறைவறச் செலுத்தியிருக்கிறது. இதனைத் தமிழ் மக்கள் உணர்ந்து கொள்வதற்கு 'விடுதலைப் போரில் தமிழகம்' என்னும் பெயரில் நூல் எழுதி வெளியிட வேண்டுமென்று நண்பர்கள் பலர் - குறிப்பாக தமிழரசுக் கழக முன்னணித் தோழர்கள் என்னை வற்புறுத்தி வந்தனர். அதற்கிணங்கவே இதனை எழுதி வெளியிட்டுள்ளேன்.

விடுதலைப் போரில் பல்வேறு சாதியினரும், வெவ்வேறு மதத்தினரும் கலந்துகொண்டு தியாகம் செய்துள்ளனர். அவர்களையெல்லாம் சாதி, சமயக் காழ்ப்பின்றி மக்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டியது எனது கடமையாகின்றது. அந்தக் கடமையைக் குறைவறச் செய்திருப்பதாகவே நான் நம்புகிறேன்.

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுத் தியாகம் செய்தவர்களிலே, மறைந்தவர்கள் போக இன்று நம்மிடையே வாழ்கின்றவர்கள் பல்வேறு கட்சிகளில் பிரிந்து கிடக்கின்றனர். பரஸ்பரம் பகைமை பாராட்டுவோராகவும் இருக்கின்றனர். அவர்களைப் பற்றியும் கட்சி விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பாற்பட்டு செய்திகளைத் தந்திருக்கிறேன் என்று உறுதி கூறுகின்றேன்.

விடுதலைப் போரில் நமது தமிழகம் ஆற்றியுள்ள பங்கை விவரிப்பதுதான் எனது குறிக்கோள். ஆயினும், இந்திய விடுதலைப் போர் முழுவதையும் பின்னணியாகக் கொண்டு, அதில் தமிழகத்திற்குள்ள பங்கை விவரிப்பதுதான் முறையாகும்; தேச பக்தியும் ஆகும். தமிழகம் தனது விடுதலைக்காகத் தனித்து நின்று போராடி அதிலே வெற்றி பெற்றதென்று சொல்வதற்கில்லை. ஒன்றிரண்டு நிகழ்ச்சிகள் முன்னும் பின்னுமாக தமிழகத்திலும் வடபுலத்திலும் தனித்தனியே நிகழ்ந்திருக்கலாம். ஆயினும், ஒன்றரை நூற்றாண்டுக் காலம் நடைபெற்றுள்ள

விடுதலைப் போரானது ஒரு கால கட்டத்தில் குமரி முதல் இமயம் வரை அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் நடைபெற்றிருக்கிறது. இந்தப் பின்னணியில்தான் தமிழகத்தின் பங்கைக் காட்டும் செய்திகளைச் சேகரித்துத் தந்துள்ளேன்.

இந்தியாவின் நீண்ட கால வரலாற்றை ஆராய்ந்தால் அன்னிய நாட்டினரால் ஏற்பட்ட ஆக்கிரமிப்புகள், தமிழகத்தை விட்டுவிட்டு எஞ்சிய இந்தியாவை மட்டும் அடிமைப்படுத்திய தென்றோ, எஞ்சிய இந்தியாவை விட்டுவிட்டு தமிழகத்தை மட்டும் அடிமைப்படுத்தியதென்றோ சொல்வதற்கில்லை. கி.பி. பத்தாம் நூற்றாண்டில் ஏற்பட்ட மொகலாய ஆக்ரமிப்பும் சரி; 18-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆக்கிரமிப்பும் சரி; வட இமயம் தொடங்கி தென் குமரி வரையுள்ள இந்தியா முழுவதையும்தான் அடிமைப் படுத்தியதனை வரலாறு காட்டுகிறது. ஆகவே, தமிழன் தனது விடுதலைக்காகப் போராடியதனைத் தேச பக்தியோடு அணுகி அனைத்திந்தியக் கண்ணோட்டத்துடன் ஆராய வேண்டியது அவசியமாகிறது. அப்படித்தான் நானும் ஆராய்ந்து இந்நூலைப் படைத்திருக்கிறேன்.

தமிழரசுக் கழகத்தின் 'கெஜட்'டாக 'செங்கோல்' என்னும் பெயரில் வெளிவந்து கொண்டிருக்கும் வார இதழில் 1980 ஜனவரி முதல் தேதி இதழ் தொடங்கி இரண்டரையாண்டுக் காலம் வாரந்தோறும் யான் எழுதி வந்த தொடர் கட்டுரையே நூல் வடிவில் தமிழ் மக்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. அந்தத் தொடர் கட்டுரையை எழுதிவந்த காலத்திலே, விடுதலைப் போர் பற்றிய செய்திகளைச் சேகரிப்பதற்கு யான் எடுத்துக் கொண்ட முயற்சிகளும் உழைப்பும் கொஞ்சமல்ல. பித்துப் பிடித்தவனைப் போல செயல்பட்டு, சர்வ சதாகாலமும் அதே நினைப்பாக இருந்து, உணவையும் உறக்கத்தையும் கூடப் புறக்கணித்துச் செய்திகளைச் சேகரித்தேன். அதனால் என் உடல் நிலை பாதித்து, அறுவை சிகிச்சைக்காளாகவும் நேர்ந்தது.

அனைத்திந்திய ரீதியில் இந்திய விடுதலைப் போர் பற்றி எழுதி வெளியிடப்பட்டுள்ள நூல்களிலே தமிழகத்தைப் பற்றிய செய்திகள் இங்கொரு வரி அங்கொரு வரி என்ற அளவில்தான் தரப்பட்டுள்ளன. அனைத்திந்திய காங்கிரசின் அதிகார பூர்வமான நூலாக வெளிவந்துள்ள டாக்டர் பட்டாபி சீதாராமய்யா எழுதியுள்ள 'காங்கிரஸ் மகாசபை வரலாறு' என்ற நூல்கூட இந்தக் குறைபாட்டுக்கு விலக்கு அல்ல. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தையே

கதி கலங்கச் செய்து தமக்கு இரண்டு ஆயுள் தண்டனை கிடைக்கக்கூடிய வகையில் தூத்துக்குடியில் வ.உ. சிதம்பரனார் நடத்திய சுதேசிக் கிளர்ச்சி பற்றி டாக்டர் பட்டாபி தமது நூலில் பிரஸ்தாபிக்கக்கூட இல்லை. வேதாரணியத்தில் ராஜாஜி நடத்திய உப்பு சத்தியாக்கிரகம்கூட ஒன்றிரு வரி என்ற அளவில் தான் இடம் பெற்றிருக்கிறது டாக்டர் பட்டாபி நூலிலே!

அதிர்ஷ்டவசமாக, விடுதலைப் போரில் நேரடியாக ஈடுபட்டு அனுபவம் பெற்றவர்களில் - விரல் விட்டு எண்ணி விடக்கூடிய அளவில் மிகச் சிலர் இன்னமும் நம்மிடையே வாழ்ந்து வருகின்றனர். அவர்களிடமிருந்து செய்திகளைச்சேகரிக்க முயன்றேன். என்றாலும், அப்படிச் சேகரித்த செய்திகளிலேயும் பிழைகளைக் கண்டேன். மறதியாலோ, தனி நபர்களிடம் கொண்ட விருப்பு வெறுப்பாலோ தவறான தகவல்களும் கிடைத்தன. அவற்றையெல்லாம் ஆய்ந்து பார்த்து வேறு செய்தி களுடன் ஒப்பு நோக்கி, எனக்கு உண்மையென்று தோன்றிய வற்றை மட்டும் இந்நூலில் சேர்த்துள்ளேன். விடுதலைப் போர் பற்றி மாவட்ட ரீதியிலும், குறிப்பிட்ட ஒரு இடத்தில் நிகழ்ந்த சம்பவம் என்ற அளவிலும் இதுவரை வெளிவந்துள்ள தமிழ் நூல்களிலேயும் பிழைகள் மலிந்திருக்கக் கண்டேன். அவற்றை யெல்லாம் ஆய்ந்து உண்மையை உறுதி செய்து கொள்ள பெருமுயற்சி தேவைப்பட்டது.

நல்ல வேளையாக, இந்திய விடுதலைப் போரில் 1927 தொடங்கி 1947 வரையுள்ள 20 ஆண்டுக் காலம் இரண்டறக் கலந்து, தமிழ்நாடு காங்கிரசிலே பல நிர்வாகப் பதவிகளை வகித்து, சென்னை - வேலூர் - தஞ்சை - அமராவதி (ம.பி) ஆகிய பல்வேறு சிறைகளில் அடித்தளத் தொண்டர்களுடனும் மேல் மட்டத் தலைவர்களுடனும் பழகிப் பெற்ற அனுபவங்களால் விடுதலைப் போர் பற்றிய செய்திகளை நானே அறிந்து கொள்ள முடிந்திருக்கிறது. அந்த அனுபவத்தையும் கொண்டுதான் இந்த நூலை எழுதியிருக்கிறேன்.

திருச்சி - நெல்லை - மதுரை ஆகிய மாவட்டங்கள் இந்திய விடுதலைப் போரில் ஆற்றிய பங்குகள் பற்றி வெளியான நூல்களிலிருந்து பயனுள்ள தகவல்களைச் சேகரித்துக் கொள்ள முடிந்தது. அனைத்திந்திய செய்திகளை ஆங்கிலத்தில் வெளியான நூல்களிலிருந்து அறிந்து கொள்ள முடிந்தது. எனக்குப் பயன்பட்ட நூல்களின் பெயர்ப்பட்டியலை இந்நூலின் இறுதியில் தந்துள்ளேன். விடுதலைப் போரில் தமிழகம் ஆற்றிய பங்கு

பற்றிய நூலை இந்தத் தலைமுறையில் வெளியிடவில்லையானால் அடுத்த தலைமுறைக்கு அது முடியாத காரியமாகிவிடவும் கூடும்.

தமிழக அரசோ, தமிழகத்திலுள்ள பல்கலைக் கழகங்களுள் ஒன்றோ செய்ய வேண்டிய மிகப் பெரிய பணி இது. எல்லா வசதிகளையும் படைத்த அந்தப் பேரமைப்புகளுடன் ஒப்பிடும் போது எனக்குள்ள அறிவும் ஆற்றலும் மிகமிகச் சொற்பம் என்பதை நான் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். ஆயினும், காலம் இந்தக் கடமையை என் மீது சுமத்திவிட்டதால் இயன்ற அளவு செய்து முடித்திருக்கிறேன்.

இந்நூலில் வாசகர்கள் பார்வையில் குறைகள் படுமாயின் அவற்றை எனக்கு எழுதியனுப்பினால் அடுத்த பதிப்பில் திருத்திக் கொள்ள இயலும்.

இந்நூலுக்கான தகவல்களைச் சேகரிக்க முயன்றபோது பல்வேறு நூல்களின் சரித்திர ஆசிரியரும் எனது நண்பருமான திரு.பெ.சு. மணி அவர்கள் எனக்குப் பல வழிகளிலும் உதவி புரிந்து வந்தார். எளிதில் கிடைக்காத பல நூல்களைச் சேகரித்துத் தருவதிலே சென்னை மாநிலக் கல்லூரி தமிழ் விரிவுரையாளர் திரு.தி.வ. மெய்கண்டாரும், எனது தனிச் செயலர் திரு. சந்திரசேகரும் துணை நின்றனர். ஆங்கிலச் செய்திகளை மொழி பெயர்த்துத் தருவதிலே தமிழரசுக் கழகப் பொதுச் செயலாளர் திரு.ம.சீ. கிருஷ்ணமூர்த்ததி பி.ஏ., உதவி புரிந்தார். இவர்களுக்கெல்லாம் எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஐயத்திற்கிட மில்லாத வகையில் செய்திகளைச் சேகரிப்பதற்கு தமிழ்நாடு சட்டமன்ற மேலவை, பேரவை ஆகியவற்றின் குறிப்பேடுகள் எனக்குப் பெரிதும் பயன்பட்டன. விடுதலைப் போரின் கடைசிக் கட்டமான ஆகஸ்டுக் கிளர்ச்சி பற்றிய உண்மையான செய்திகளைச் சேகரிப்பதிலேதான் கஷ்டம் இருந்தது. அந்தக் காலத்திலே தமிழக சட்ட மன்றம் இயங்க வில்லை. 1939 தொடங்கி 1945 வரை சட்டமன்றப் பேரவையும் மேலவையும் செயல்படவில்லை. ஆகஸ்டுக் கிளர்ச்சி பற்றித் தினசரிப் பத்திரிகைகளிலிருந்து செய்திகளைச் சேகரிப்பதிலும் கஷ்டம் இருந்தது. காரணம், அந்தக் கிளர்ச்சிக் காலத்திலே போராட்டச் செய்திகளையோ, தலைவர்களின் அறிக்கை களையோ, அரசின் அடக்குமுறை பற்றிய செய்திகளையோ வெளியிடுவதற்குப் பத்திரிகைகளுக்குத் தடை விதிக்கப் பட்டிருந்ததுதான்.

இவ்வளவு இன்னல்களுக்கிடையே எப்படியோ அரும்பாடு பட்டு இந்நூலை உருவாக்கி, தமிழின மக்களுக்குத் தந்து விட்டேன். இதை நினைக்கும்போது இமயத்தின் உச்சி மீது நிற்கின்ற ஒரு பெருமிதம் எனக்கு ஏற்படுகிறது.

இந்நூல் 'விடுதலைப் போரில் தமிழகம்' என்னும் பெயரைப் பெற்றிருப்பினும், இந்தியவிடுதலைப் போர் சம்பந்தப்பட்ட அனைத்திந்திய நிகழ்ச்சிகள் எல்லாம் இதிலே தரப்பட்டுள்ளன. இதனைப் படித்து முடித்தால், இந்திய விடுதலைப் போர் வரலாறு முழுவதையும் படித்தது போன்ற மனநிறைவு ஏற்படும். இது இந்த நூலுக்குள்ள தனிச் சிறப்பு என்றும் சொல்வேன்.

இந்திய விடுதலைப் போர் முழுவதையும் நமக்குக் காட்டும் நூல் ஒன்று தமிழில் இதுவரை வெளிவரவில்லை. அதனால், அந்த வகையிலான முதல் நூலாக இந்நூல் அமைந்திருக்கிறது.

இந்நூல் அச்சாகும்போது பிழை திருத்தும் பொறுப்பை ஏற்று, மிகுந்த பொறுமையுடன் உழைத்து உதவி புரிந்த ஒரு பேராசிரியருக்கும் நான் நன்றி செலுத்த வேண்டும். அவர் தமிழிலே பெரும் புலமை பெற்ற டாக்டர் ம.ரா.போ. குருசாமியாவார்.

திரு.வே. சுப்பையா அவர்களின் பூங்கொடி பதிப்பகத்தின் சார்பில் ஏற்கனவே என்னுடைய நூல்கள் பல வெளிவந்துள்ளன. ஆனால், இரண்டு பாகங்களாக வெளிவரும் எனது முதல் நூல் இதுவேயாகும். இத்தகைய சிறப்புமிகு நூலை அதன் பெருமைக்கேற்ப அழகிய பதிப்பாக அச்சிட்டு வெளி யிட்டுள்ள பூங்கொடி பதிப்பகத்தாருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

'செங்கோ'லில் தொடர் கட்டுரையாக வெளிவந்தபோதே பிழைகளை எடுத்துக் காட்டி உதவி புரிந்த நண்பர்கள் பலராவர். அவர்களுக்கும் என் மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ம.பொ. சிவஞானம்.

★-★-★

மூன்றாம் பதிப்பின் முன்னுரை

விடுதலைப் போரில் தமிழகம் என்னும் நூலின் இரண்டாவது பதிப்பு 16-5-83 அன்று வெளியானது. யான் கேட்டுக் கொண்டதன் பெயரில் தமிழக அரசு நாட்டுடமையாக்கி ஆணை பிறப்பித்த பின்னர், மூன்றாம் பதிப்பு பூங்கொடி பதிப்பகத்தாலேயே வெளியிடப்படுகிறது. முதற்பதிப்பு 26-6-82 இல் வெளியானது. இரண்டாம் பதிப்பு 1983 மே திங்களில் வெளியானது. அதற்குப்பின் பத்தாண்டு காலம் மூன்றாம் பதிப்பு வெளிவருவது தடைப்பட்டு இருந்தது. தற்போதைய முதல் அமைச்சர் டாக்டர் செல்வி. ஜெயலலிதா அவர்கள் எனது வேண்டுகோளுக்கிணங்க நாட்டுடைமை ஆணை பிறப்பித்த பின்னர் மூன்றாம் பதிப்பு வெளிவருகிறது குறித்து மகிழ்ச்சி யடைகிறேன். ஒவ்வொரு ஆண்டிலும் எனது பிறந்த நாளாகிய ஜுன் 26-இல் யான் எழுதிய நூலொன்றையேனும் தமிழன்னைக்கு காணிக்கையாக்குவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறேன். அதன்படி, 88-வது வயதையொட்டி இந்நூலின் மூன்றாம் பதிப்பை வெளியிட நேர்ந்தது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

எத்தகைய கூட்டலும் குறைத்தலுமின்றி இரண்டாம் பதிப்புப்படி இந்த மூன்றாம் பதிப்பும் வெளிவருகிறது. முதல் இரண்டு பதிப்புக்களுக்கு பேராதரவு தந்த தமிழ் மக்கள் இந்த மூன்றாம் பதிப்பையும் வாங்கி 88 வயதாகியுள்ள என்னை மகிழ்ச்சிபடுத்தி, மேலும் பல்லாண்டு காலம் வாழ்வதற்கு வழி செய்வார்கள் என்று நம்புகிறேன்.

இந்நூல் நாட்டுடமை யாக்கப்பட்ட பின்னர் இதுதான் முதல் பதிப்பு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு எழுத்தாள ருடைய நூல் அவர் வாழுங்காலத்தில் நாட்டுமையாக்கப்படுவது அதுவும், அந்த எழுத்தாளரின் விருப்பப்படி அரசு ஆணைப் பிறப்பித்து, இந்த நூலை ஒட்டிதான் நிகழும் புதுமையாகும்.

தமிழ் மொழியளவில்தான் இந்நூல் நாட்டுடமையாக்கப் பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். பிற மொழிகளில் வெளியிட ஆசிரியர் என்ற வகையில் எனக்குத்தான் உரிமையுண்டு.

ம.பொ. சிவஞானம்.

சென்னை
26-6-93

பதிப்புரை

இந்தியா இருநூறு ஆண்டுக்காலம் அன்னியருக்கு அடிமைப்பட்டிருந்து விடுதலை பெற்ற நாடு.

மிகப் பெரிய ஏகாதிபத்தியத்தை நூற்று ஐம்பது ஆண்டுக்காலம் எதிர்த்துப் போராடிப் பெற்ற விடுதலை.

விடுதலை பெற்று முப்பத்து நான்கு ஆண்டுகள் ஆன பின்னரும் அந்த மாபெரும் விடுதலைப் போரின் வரலாறு விரிவாக - முழுமையாக யாராலும் எந்த மொழியிலும் எழுதப்படாது இருந்தது. அந்தக் குறையைப் போக்கும் வகையில் சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சி. அவர்கள் ''**விடுதலைப் போரில் தமிழகம்**'' என்ற இந்நூலை எழுதி வழங்கினார்கள்.

விடுதலைப் போரில் பங்கு கொண்டவரும் ஆற்றல் மிக்க எழுத்தாளரும் - பேச்சாளருமாக விளங்கிய சிலம்புச் செல்வர் இந்நூலை இன உணர்வோடு படைத்துத் தந்திருப்பது தமிழினத்திற்கு மிகப் பெரிய சொத்தாக அமைந்துவிட்டது.

இந்நூலின் முதற்பதிப்பு சிலம்புச்செல்வர் டாக்டர் ம.பொ.சி அவர்களின் 77-வது பிறந்த நாள் வெளியீடாகப் பூங்கொடி பதிப்பகம் வெளியிட்டது.

சிலம்புச் செல்வரின் நூல்களைத் தொடர்ந்து வெளியிட்டு வரும் பூங்கொடி பதிப்பகம் தமிழ் இனத்தாரின் சொத்து எனக் கருதப்படும் ''**விடுதலைப் போரில் தமிழகம்**'' நான்காவது பதிப்பை சிலம்புச் செல்வரின் **நூற்றாண்டு பிறந்த நாள் பதிப்பாக வெளியிடும்** பேறு பெற்றமை குறித்து பெரு மகிழ்ச்சி யடைகிறது.

வே. சுப்பையா
பூங்கொடி பதிப்பகம்

சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ. சிவஞானம்
அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் வெளியீடு

தோற்றம்:
26-06-1906

மறைவு:
03-10-1995

முதல் பாகம்

பொருளடக்கம்

விடுதலைப் போர் தொடங்கிய தெப்போது?	17
அயலாரின் ஆக்கிரமிப்புகள்	23
மைசூர் சுல்தான்களின் நாற்பதாண்டுப் போர்	33
பாளையக்காரர்கள் போர்	40
வேலூர்ச் சிப்பாய்ப் புரட்சி	68
தளவாய் வேலுத்தம்பி	72
சிப்பாய்ப் புரட்சி	75
தேசிய கலாச்சார எழுச்சி	85
காங்கிரஸ் மகாசபை பிறந்தது	113
சென்னை மாநகரிலே மூன்றாவது காங்கிரஸ்	122
வங்காளப் பிரிவினை	145
சுதேசிக் கப்பல் கம்பெனி	156
கொள்கைப் போராட்டம்	166
தமிழகத்துப் 'பாரிசால்!'	186
அடக்குமுறைச் சகாப்தம்	202
கலெக்டர் ஆஷ் கொலை	213
திருநெல்வேலிச் சதி வழக்கு	233
1908 முதல் 1915 வரை	252
அரசியல் வானில் ஒரு விடிவெள்ளி	261
சுயாட்சிக் கிளர்ச்சியும் உலகப் பெரும் போரும்	284
பிரிட்டிஷாரின் பிரித்தாளும் தந்திரம்	295
புதுவையில் புரட்சியாளர்கள்	311
அயல்நாடுகளில் இந்தியப் புரட்சியாளர்	334
தென்னாப்பிரிக்க சத்தியாக்கிரகத்தில் தமிழர் பங்கு	341

தமிழ் நாட்டில் காந்திஜியின் வெற்றியுலா 376

ரௌலட் சட்ட எதிர்ப்பு 382

அமிர்தசரஸ் காங்கிரஸ் 415

தமிழகத்துக்குச் சோதனை 438

காந்தி சகாப்தம் பிறந்தது! 448

வெஞ்சிறையில் வீரத் தளபதி! 500

1918 முதல் 1922 வரை தமிழ் நாட்டின் எழுச்சி 509

கயா காங்கிரஸ் 520

சுயராஜ்யக் கட்சி பிறந்தது! 528

புதுப்பாளையத்தில் காந்தி ஆசிரமம்! 536

வைக்கம் சத்தியாக்கிரகம் 543

துரதிருஷ்ட ஆண்டு! 552

பயங்கரச் சோதனைகள் 574

நீல் சிலைச் சத்தியாக்கிரகம்! 582

சென்னையில் 42-வது காங்கிரஸ் மகாசபை 594

சைமன் கமிஷன் பகிஷ்காரம் 602

சர்வ கட்சி மாநாடு 615

கல்கத்தா காங்கிரஸ் 620

டில்லியிலிருந்து லண்டன் வரை 632

எங்கெங்கும் சதி வழக்கு 642

பூரண சுதந்திரப் பிரதிக்னை! 654

பொருளகராதி 665

பெயர் அகராதி 678

விடுதலைப் போர் தொடங்கிய தெப்பொழுது?

பிரிட்டிஷாரின் ஆதிக்கத்திற் கெதிராக நடந்த இந்திய விடுதலைப் போராட்டமானது, எப்போது, எங்கு, யாரால் முதன் முதலில் தோற்றுவிக்கப்பட்டது என்பதிலே வரலாற்றாசிரியர்களிடம் கருத்தொற்றுமை காணப்படவில்லை. தேசியப் பெருந்தலைவர்கள்கூட இதிலே சரியான கருத்துடையவர்களாக இல்லை.

வீர சவர்க்கார், தமது நூல் ஒன்றிலே, *1857* இல் வடக்கே நடந்த சிப்பாய்ப் புரட்சிதான் இந்திய சுதந்திரத்திற்கான முதலாவது போராட்டம் என்று அழுத்தந் திருத்தமாகக் கூறுகிறார்.

மற்றொரு தேசியத் தலைவரான திரு. அசோக் மேத்தா, *'1857'* என்னும் பெயருடைய தமது நூலிலே வீர சவர்க்காரின் கருத்தையே வலியுறுத்துகிறார். விடுதலைக்குப்பின் அமைந்த இந்திய அரசும் இந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டு, 1957 ஆம் ஆண்டில் இந்திய விடுதலைப் போராட்டத்தின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடியது. ஆனால், இது முழு உண்மையன்று. கேரள, கர்நாடக அரசுகள் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை; மறுப்பும் தெரிவித்திருக்கின்றன. விடுதலைப் போர் முதன்முதலில் தொடங்கிய காலம், இடம் பற்றிய கருத்து வேற்றுமைகளைச் சிறிது விரிவாக இங்கு ஆராய வேண்டியது அவசியமாகிறது.

இந்திய தேசியத் தலைவரான வீர சவர்க்கார் கூறுவது வருமாறு:

''1806ஆம் ஆண்டில் மூண்ட வேலூர் சிப்பாய்களின் புரட்சியும் சுதந்திர தாகத்தையே மூல காரணமாகக் கொண்டதாகும்.

பின்னர் ஏற்பட்ட முதலாவது சுதந்திரப் போருக்கு அது ஒத்திகை போலும்!''

(''எரிமலை அல்லது முதலாவது சுதந்திரப் போர்'' தமிழாக்கம்: ஜெயமணி சுப்பிரமணியம், பக்.17)

திரு. சவர்க்கார், பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சியால் சிறைபிடிக்கப்பட்டு வேலூர்க் கோட்டையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த கர்நாடக சிப்பாய்கள் ஒரே ஓர் இரவில் நடத்திய புரட்சியைத்தான் அதற்கு அரை நூற்றாண்டுக்குப் பின் வடபுலத்தில் நடந்த சிப்பாய்ப் புரட்சிக்கு ஒத்திகையாகக் கொள்ளுகிறார். ''எரிமலை'' என்னும் தமது நூலுக்கு ''முதலாவது சுதந்திரப் போர்'' என்ற மற்றொரு தலைப்பையும் திரு. சவர்க்கார் தந்திருப்பது நினைவில் கொள்ளத் தக்கதாகும். நூலின் தலைப்பிலேயே வடபுலத்தில் நடந்த சிப்பாய்க் கலகம்தான் இந்திய சுதந்திரத்திற்கான முதல் போராட்டம் என்பதனை அவர் பிரகடனப்படுத்துகிறார். திரு. சவர்க்கார் கொண்ட கருத்து, ஒரு தனி நபரின் கருத்தாக மட்டுமே இருப்பின், அதை நாம் புறக்கணித்துவிட முடியும். இந்திய அரசும் அதை அப்படியே ஏற்றுக் கொண்டிருப்பதால் அந்தக் கருத்தை நாம் எளிதில் புறக்கணித்து விடுவதற்கில்லை.

மத்திய அரசால் டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் தலைமையில் நியமிக்கப்பட்ட விடுதலைப் போராட்ட வரலாற்றுக் குழு, ''1857 ல் நடந்த சிப்பாய்ப் புரட்சியிலிருந்து விடுதலைப் போர் வரலாறு எழுதப்படும்'' என்று அறிவித்தது. இது செய்தித் தாள்களில் வெளியானதும், ''வீரபாண்டியக் கட்டபொம்மன் நடத்திய பாஞ்சைப் புரட்சியிலிருந்து எழுதப்பட வேண்டும்'' என்று தமிழரசுக் கழகத்தின் சார்பில் வேண்டுகோள் விடப்பட்டது. அதற்கு, ''கட்டபொம்மன் பற்றிய குறிப்பும் இடம் பெறும்'' என்று கழகத்திற்குப் பதில் கிடைத்தது.

சிப்பாய்ப் புரட்சிதான் இந்திய விடுதலைப் போரின் தொடக்கம் என்ற மத்திய அரசின் முடிவைக் கேரள, கர்நாடக மாநில அரசுகளும் ஏற்க மறுத்துள்ளன. கர்நாடக அரசு வெளியிட்டுள்ள ''விடுதலைப் போரில் கர்நாடகம்'' என்ற நூல் கூறுவது வருமாறு:

''1857க்கு முன்னாலேயே இந்திய விடுதலைப் போர் தொடங்கிவிட்ட தென்ற உண்மையை இந்த நூல் எடுத்துக் காட்டும். 1857க்கு முன்னர் ஒரு நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்திலேயே ஐதர் அலி தொடங்கி திப்பு சுல்தான், கிட்டூர்ச்

சென்னம்மாள் போன்ற வீரர்கள் செய்த புரட்சிப் போராட்டங்கள்தான் 1857இல் நடந்த புரட்சிக்கு வித்திட்டன.

''1824இல் நடந்த கிட்டூர்ச் சென்னம்மாளின் போராட்டம் மிகப் பெரிய தேசிய முக்கியத்தும் வாய்ந்ததாகும். இதிலிருந்து தான் இந்திய விடுதலைப் போர் ஆரம்பமானதாகக் கொள்ள வேண்டும். இதுவே 1857க்கு முன்னோடியாக அமைந்தது. இந்தப் போராட்டம் 1857 இல் நடந்த புரட்சிக்கு எந்த விதத்திலும் குறைந்தது அல்ல. அந்தப் போராட்டத்தின் அளவையும், அதில் சம்பந்தப்பட்டவர்களின் எண்ணிக்கையையும் தவிர்த்துவிட்டுப் பார்த்தால், கிட்டூர்ச் சென்னம்மாளின் போராட்டம் நமது தேசிய சுயமரியாதைப் போராட்டத்தின் சின்னமாகவும் விளங்குகிறது.

''ஜான்சி ராணி லட்சுமி பாய்க்கு ஒரு தலைமுறைக்கு முன்பாகக் கிட்டூர் ராணி சென்னம்மா ஆங்கிலேய ஆதிக்கத்திற்கெதிராக ஆயுதம் ஏந்திப் போராடி, இந்தியாவிலேயே முதல் புரட்சியாளராக விளங்கினார். இந்திய சுதந்திரப் போராட்டத்தின் முன்னோடியாக கிழக்கிந்தியக் கம்பெனிக்கு எதிர்ப்பு கிட்டூரில்தான் உருவாகியது.

''வரலாற்றாசிரியர்கள் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் கர்நாடகத்தின் பங்கைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. ராணி சென்னம்மாளின் வீரமிக்க போராட்டம் இந்திய வரலாற்று நூல்களில் ஓர் அடிக்குறிப்பு என்ற அளவில்கூடக் குறிப்பிடப்படவில்லை. இந்திய வரலாற்றில் குறிப்பிடத்தக்க அம்சங்கள் எல்லாமே விந்தியத்திற்கு வடக்கேதான் உள்ளன என்றெண்ணும் மனப்பான்மைதான் இதற்குக் காரணமாகும்.''*

கிட்டூர் ராணி சென்னம்மாள் 1824இல் பிரிட்டிஷாருக் கெதிராகத் தோற்றுவித்த புரட்சிக்குக் கால் நூற்றாண்டுகளுக்கு முன்பே தென்தமிழ் நாட்டுப் பாஞ்சாலங்குறிச்சியில் நடந்த வீரப்புரட்சியையும் ''விடுதலைப் போரில் கர்நாடகம்'' என்னும் நூல் எடுத்துக் காட்டுகிறது. அது வருமாறு:

''ராயண்ணா பிடிபட்டதற்கு 30 ஆண்டுகளுக்கு முன்னதாக தமிழகத்தில் வீரபாண்டியக் கட்டபொம்மன் மற்றொரு சிற்றரசனின் துரோகத்தால் சிறைபிடிக்கப்பட்டு, கொலை செய்யப் பட்டான். அவன், ''பிச்சையெடுத்தாலும் எடுப்பேனேயன்றி,

* History of freedom Movement in Karnataka. Vol.I, P. 181.

ஆங்கிலேயருக்கு அடிபணிய மாட்டேன்'' என்று முழங்கினான். இந்த மாவீரன் மிகக் கேவலமான முறையில் காட்டிக் கொடுக்கப்பட்டுத் தூக்கிலிடப்பட்டான்.

''தூக்கு மேடைக்குக் கொண்டு போகப்பட்ட பிறகும் அவன் தன் வீரத்தையும் சுதந்திர உணர்ச்சியையும் விட்டான் இல்லை. தூக்குக் கயிற்றைத் தானே வாங்கித் தன் கழுத்தில் மாட்டிக் கொண்டு இறந்தான். இந்த வீரத்திற்கு ஈடு இணை கிடையாது''[1]

1962 இல் வெளியிடப்பட்ட ஒரு நூலிலே, அப்போது கர்நாடகத்தில் இயங்கிய காங்கிரஸ் அரசுதான் இந்த எதிர்ப்புணர்ச்சியை வெளிப்படுத்தியிருக்கிறதென்பதை இங்கு சுட்டிக் காட்டியாக வேண்டும்.

1972 இல் கேரள காங்கிரஸ் அரசால் வெளியிடப்பட்ட ''விடுதலைப் போரில் கேரளம்'' என்னும் நூலிலேயும் வடக்கில் நடந்த சிப்பாய்ப் புரட்சிதான் முதலாவது சுதந்திரப் போர் என்று சொல்லப்படுவதற்கு எதிர்ப்புக் காட்டப்பட்டிருக்கிறது. அது வருமாறு:

''இந்தியாவின் வேறு பகுதிகளை விடவும் கேரளாவில்தான் முதன் முதலில் தேசிய எழுச்சியும், முற்போக்குக் கருத்துகளும், சமுதாய உணர்வுகளும் ஏற்பட்டன. கேரளாவில் பிரிட்டிஷார் தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்த முயன்ற ஆரம்பத்திலேயே அதற்குப் பலத்த எதிர்ப்பு ஏற்பட்டது. ஆனால், அரசர்களில் சிலர் பிரிட்டிஷாரை வரவேற்றனர். இங்குமங்குமாகச் சிலர் எதிர்த்தனர். அப்படி எதிர்த்த மிகச் சிலரில் திருவிதாங்கூரைச் சேர்ந்த வேலுத்தம்பி, கொச்சியைச் சார்ந்த பலியத் அச்சன், மலபாரைச் சார்ந்த பழாசி ராஜா ஆகியோர் முக்கியமானவர்கள்.

''வேலுத் தம்பியினுடைய மிகவும் முக்கியமான குண்டாராப் பிரகடனம் சுதந்திரப் போராட்டத்தின் திருப்பு முனையாக அமைந்து மக்களைக் கவர்ந்தது.

''கேரள வர்மா பழசி ராஜா என்பவர்தான் இந்தியாவிலேயே பிரிட்டிஷ் ஆதிக்கத்திற்கெதிராக ஆயுதம் ஏந்தி முதன் முதலில் போராடிய உள்நாட்டு அரசராவார்.''[2]

1. History of Freedom Movement in Karnataka, Vol. I, P.182,
2. The History of Freedom Movement in Kerala, Vol. I.

கேரள அரசு வெளியிட்டுள்ள நூலில் குறிப்பிடப்படும் வேலுத்தம்பியின் போராட்டமானது, 1806 இல் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் நடந்ததாகும். அதற்கும் முற்பட்டது, தமிழ் நாட்டில் வீரபாண்டியக் கட்டபொம்மன் நடத்திய விடுதலைப் போர்!

1857 இல் வடக்கே நடைபெற்ற சிப்பாய்ப் புரட்சிதான் இந்திய விடுதலைக்கான முதலாவது போராட்டம் என்ற கருத்தினைக் கர்நாடக அரசும் கேரள அரசும் மறுத்திருப்பதை ஏற்பதானால், 1792 இல் தொடங்கி தொடர்ந்து 9 ஆண்டுக் காலம் நடைபெற்ற பாஞ்சைப் போர்தான் இந்திய சுதந்திரப் போரின் முதல் நிகழ்ச்சி என்று தமிழரசுக் கழகம் பறையறைந்து சொல்லி வருவதும் ஏற்கத் தகுந்ததுதானே! கர்னாடக அரசும் இதை ஏற்றுக்கொண்டிருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது.

இதுபற்றித் தேசபக்தர் ந. சோமயாஜுலு அவர்கள் ''நெல்லை மாவட்டச் சுதந்திரப் போராட்ட வரலாறு'' என்னும் தமது தொகுப்பு நூலின் முன்னுரையில் கூறுவது வருமாறு:

''இருநூறு ஆண்டுகளாக அடிமைத்தளையில் கிடந்த இந்திய நாட்டினை விடுவிக்கப் பல போராட்டங்கள் நிகழ்ந்தன. வீரர் பலர் அவற்றில் பங்கு கொண்டார்கள்.

''அந்நிய ஆதிக்கத்தை அகற்றிட மக்களிடையே சுதந்திர இயக்கம் தோன்றிய காலம் 1857 என்று பரவலாகப் பேசப் படுகிறது. எனினும், அதற்கு ஒரு நூற்றாண்டிற்கு முன்னரே தேசியப் போராட்ட எண்ணம் பலர் உள்ளங்களில் துளிர்த்துச் செயல்பட்டு வந்தது என்பதற்கு வரலாற்றில் சான்றுகள் காணலாம்.

''தமிழ் நாட்டில் 1780க்குப் பின்னர் விடுதலை உணர்ச்சி காட்டுத் தீப்போல் பரவியது. கட்டபொம்மன், புலித்தேவன், ஊமைத்துரை போன்றார்களின் வரலாறுகள் இவ்வுண்மையை விளக்கும்.''

திரு.ந. சோமயாஜுலு, விடுதலைப் போர் வீரபாண்டியக் கட்டபொம்மனிடமிருந்தே தொடங்குகிறது என்கிறார். அது வருமாறு:

''அன்னியரின் ஆதிக்கத்தால் அடிமைப்பட்டுக் கிடந்த பாரதத்தில் சுதந்திரப் போரை முதன்முதலில் துவக்கிய பெருமை தமிழ் நாட்டின் 'நெல்லை மாவட்டத்'தையே சாரும்.

ஆம், *1857* ஆம் ஆண்டு டில்லி பாதுஷாவான பகதூர்ஷாவால் சுதந்திரப் போருக்கு நாள் குறிக்கப்படுவதற்கு முன்னதாக, *1799*ஆம் ஆண்டு நெல்லை மாவட்டத்தைச் சார்ந்த 'பாஞ்சாலங் குறிச்சி'யில் கம்பெனி ஏகாதிபத்தியத்தை எதிர்த்து ஒரு பெரும் போர் நடைபெற்றது.

''அப்பெரும் போரை நடத்திய வீரபாண்டிய கட்ட பொம்மனால் வெற்றிபெற முடியவில்லை. தமிழகத்தில் மட்டுமல்லாது பாரதத்திலேயே சுதந்திரப் பெரும் போரைத் துவக்கிய 'முதல் வீரன்' என்ற பெருமையும் இவனுக்குண்டு,''

(நெல்லை மாவட்ட விடுதலைப் போர்: பக்.49.)

1857 இல் வடபுலத்தில் நடைபெற்ற சிப்பாய்ப் புரட்சியானது, நடந்த கால அளவாலும், அதில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை மிகுதியாலும், இந்தியரல்லாத வரலாற்றாசிரியர்கள் அதற்குத் தந்துள்ள பெருமதிப்பாலும், இந்திய வரலாற்றில் அது பெற்றுவிட்ட சிறப்பிடத்தை யாரும் மறுத்துரைக்க முடியாது. மறுத்துரைப்பது தேச பக்தியாகாது. ஆயினும், இந்திய விடுதலைப் போரானது எப்போது, எங்கு, யாரால் தொடங்கிவைக்கப்பட்டது என்பதுதான் இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட பிரச்சினையாகும்.

அதன்படி, *1792* இல் நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த பாஞ்சாலங்குறிச்சியிலே, அந்தப் பாளையத்தின் மன்னனான வீர பாண்டியக் கட்டபொம்மன் தொடங்கி வைத்துத் தூக்கு மேடையில் நின்று பிரகடனப் படுத்தினானே அதுதான் இந்தியாவின் முதல் சுதந்திரப் போர் என்ற முடிவுக்கு நாம் வர வேண்டியிருக்கிறது.

இதுகாறும் எடுத்துக்காட்டியவற்றால், இந்திய விடுதலைப் போர் கட்டபொம்மன் காலந் தொட்டுக் காந்தியடிகள் காலம் வரை நடந்திருக்கிறது என்ற உண்மை புலப்படும்.

★-★-★

அயலாரின் ஆக்கிரமிப்புகள்

இந்தியா மிகவும் பழைய நாடு. உலக நாடுகளிலே இரண்டாவது பெரிய நாடு. தெற்கே குமரி முனையையும் வடக்கே இமயப் பெருமலையையும், கிழக்கே வங்காளக் குடாக் கடலையும், மேற்கே அரபிக் கடலையும் நாற்புற எல்லைகளாகக் கொண்ட திருநாடு. இதன் பழம் புகழைப் பாடப் புகுந்த பாரதியார்,

''மாரத வீரர் மலிந்த நன்னாடு,
மாமுனி வோர்பலர் வாழ்ந்த பொன்னாடு;
நாரத கான நலந்திகழ் நாடு;
நல்லன யாவையும் நாடுறு நாடு;
பூரண ஞானம் பொலிந்த நன்னாடு;
புத்தர் பிரானருள் பொங்கிய நாடு;
பாரத நாடு பழம்பெரு நாடே
பாடுவம் இஃதை எமக்கிலை ஈடே!''

என்று இதயப் பூரிப்போடு இசைக்கின்றார்.

நாவலந் தீவு!

பாரதத்தின் அருமை பெருமைகளை அதனைப் பார்த்து விட்டுச் சென்ற அயல் நாட்டு யாத்திரிகர்கள் பலர் தத்தம் நூல்களிலே சுவைபட எழுதியுள்ளனர். இத்தகு பெருமைமிகு நாட்டின் தென் கோடிப் பகுதியாக விளங்குகிறது நம் தமிழ் நாடு. தமிழ் இலக்கியங்களிலேயும் பாரத நாட்டின் பெருமை பேசப்படுகின்றது. இந்திய நாட்டை ''நாவலந் தீவு'' என்கின்றன பண்டைத் தமிழ் இலக்கியங்கள்.

தமிழ் பேசும் இனத்தார் இன்று பாரதத்தின் தென்கோடியில் வாழ்ந்தாலும், முன்னொரு காலத்திலே வடக்கே இமயமலை வரை பரவியிருந்தனர் என்பதனை ஹரப்பா, மொகஞ்சதாரோ

அகழ்வாராய்ச்சிகளால் அறிகிறோம். இமயத்தைத் தங்கள் தாயகத்தின் எல்லையாகக் கருதினர் பழங்காலத் தமிழ் வேந்தர்கள்.

இமய வரம்பர்கள்!

''இமய வரம்பன்'' என்னும் சிறப்புப் பெயர் தமிழ் மூவேந்தர் அனைவருக்கும் பொதுவாகச் சொல்லப்படுகிறது தமிழ் இலக்கியங்களிலே! இந்தியாவின் தென்கோடியில் கோலோச்சிய சேரனும் சோழனும் பாண்டியனும் தங்கள் வில், புலி, மீன் சின்னங்களை இமயத்தின் பிடரியிலே பொறித்த செய்திகளையும் இலக்கியங்களில் காண முடிகிறது, அவர்கள் இமயமே தங்கள் தாயகத்தின் எல்லை என்ற உண்மையை வழி வழி தோன்றும் சந்ததிகளுக்கு உணர்த்துவதற்காகவே அந்தப் பெருமலையில் தங்கள் அரசியல் சின்னங்களைப் பொறித்து உரிமையைப் பதிவு (ரிஜிஸ்தர்) செய்தனர் போலும்!

பாத யாத்திரை!

தென்புலத்தில் வாழ்ந்த தமிழர்கள் வடபுலத்திலுள்ள கங்கையாற்றைப் புனித நதியாகக் கருதி, அதிலே நீராடிப் புண்ணியம் பெற வடபுலத்திற்குச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். சமயவாதிகள் மட்டுமல்ல; சக்கரவர்த்திகளும்கூட! அதுபோல, வடபுலத்து மன்னர்களும் மக்களும் தென்புலத்திலுள்ள காவிரியாற்றையும், குமரி முனையிலுள்ள முப்பெருங் கடல்களின் சந்திப்பையும் புனிதத் தீர்த்தங்களாகக் கருதி, அவற்றில் ஆடிப் புண்ணியம் பெறத் தென் புலத்திற்கு யாத்திரை செய்திருக்கின்றனர்.

வடபுலத்தவர் தெற்கிலுள்ள இராமேசுவரம் கோயிலுக்கு வருவதையும் தென்புலத்தவர் வடபுலத்தில் காசியிலுள்ள விசுவநாதர் கோயிலுக்குச் செல்வதையும் வழக்கமாகக் கொண்டிருந்தனர். இதனால், ''காசி - இராமேசுவரம்'' என்னும் சொற்றொடரும் பிறந்தது. இந்தச் செய்திகளெல்லாம் தென் மொழியான தமிழ் இலக்கியங்களிலும் வட மொழியான சமஸ்கிருத ஏடுகளிலும் பரவிக் கிடக்கின்றன.

வீரக் கண்ணகிக்குத் தனது நாட்டுத் தலைநகரான வஞ்சியம் பதியிலே கோயிலெடுத்து வழிபட விரும்பிய சேர மன்னன் செங்குட்டுவன், அந்தப் பத்தினித் தெய்வத்தின் படிமத்திற்கான

கல்லை இமயத்தில் எடுப்பதையே பெருமையாகக் கருதினான். அப்படியே செய்தான்.

இமயமும் பொதிகையும்

தெற்கிலுள்ள பொதிகை மலையையும் வடக்கிலுள்ள இமய மலையையும் தங்கள் தாயகத்தின் தெய்வத் தலங்களாகப் பண்டை நாள் தமிழ்ப் புலவர்களும், தமிழ் மூவேந்தர்களும், கருதினர். அப்படியே வடபுலத்துப் புலவர்களும் மன்னர்களும் எண்ணினர். இதற்கும் தமிழ், சமஸ்கிருத இலக்கியங்களிலே குறிப்புகள் இருக்கின்றன. தமிழ் மன்னர்களை வாழ்த்துங்கால், ''இமயமும் பொதியமும் போல நீ வாழ்வாயாக!'' என்று சொல்லி வாழ்த்தினர் தமிழ்ப் புலவர்கள்.

அரசியல் ஒருமைப்பாடு இல்லாததேன்?

இந்தியப் பெருநாடு இன்றுள்ளது போல ஒரே அரசின் கீழ் முன் எப்போதும் இருந்ததில்லை யென்று சொல்லப்படுகிறது. இந்தியா போன்ற பெரிய நாடுகளிலே அரசியல் ரீதியான ஒருமைப்பாடு ஏற்படுவதற்கோ, அது நிலை பெறுவதற்கோ பண்டைக் காலத்தில் சந்தர்ப்பம் குறைவாக இருந்தது. துரிதப் போக்குவரத்துச் சாதனங்கள் மலிந்த காலத்திலே தான் அமெரிக்கா, ருஷ்யா போன்ற நாடுகளில் சமஷ்டி அரசுகள் தோன்ற முடிந்தன. ஆகவே, பண்டைக் கால இந்தியாவில் அரசியல் ரீதியான ஒருமைப்பாடு இல்லாமற் போனதை ஒரு குறைபாடாகக் கொள்வதற்கில்லை. அப்போதுகூட, சக்கரவர்த்திகளானோர் பெரிய பெரிய சாம்ராஜ்யங்களை இந்தியாவில் படைத்திருக் கின்றனர். அசோகச் சக்கரவர்த்தி தெற்கே கலிங்கம் வரை படையெடுத்துத் தேசிய ஒருமைப்பாட்டிற்கு முன்னோடியாகத் திகழ்ந்தான். தெற்கே தமிழகத்தில் தோன்றிய இராசராச சோழனும், அவனுடைய வீர மைந்தன் இராசேந்திர சோழனும் வடக்கிலுள்ள கங்கைக் கரைவரை தங்கள் சாம்ராஜயத்தை விரிவுபடுத்தினர் என்று வரலாற்றில் காண்கிறோம். இராச ராசனுக்கு முன்னரும் சங்க காலத்தில் 'குமரியொடு வட இமயத்து ஒரு மொழி வைத்து உலகாண்ட சேரலாதன்' என்று இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைப் பழந்தமிழ் இலக்கியம் குறிப்பிடுகிறது.

இந்தியத் துணைக் கண்டம் அரசியல் ரீதியில் 56 தேசங்களாக இருந்த காலமும் உண்டு. ஏன்? பிரிட்டிஷ் பார்லிமெண்ட்

இந்தியாவை ஆளும் பொறுப்பை ஏற்றபோதுகூட, பிரிட்டிஷ் இந்தியாவுக்குப் புறம்பாக 600 சமஸ்தானங்கள் இருந்தன. அந்தச் சுதந்திர ராஜ்யங்களுக்குத் தான் 'சமஸ்தான இந்தியா' என்ற பொதுப் பெயரைத் தந்தது பிரிட்டிஷ் ஆட்சி. இப்படி இருந்த காலத்தில்கூட, இந்தியாவிலே கலாசார ஒருமைப்பாடு இருந்தது. வடமொழி சொல்லும் வேத காலத்திலும், தமிழ் இலக்கியங்கள் சொல்லும் சங்க காலத்திலும், இந்தக் கலாசார ஒருமைப்பாடு இருந்தது. அதனைக் கட்டி வளர்க்கத்தான் இராமாயணம், மகா பாரதம், சிலப்பதிகாரம் போன்ற காப்பியங்களைப் படைத்தனர் கவிஞர் பெருமக்கள். அந்தக் காப்பியங்களிலே குமரி முதல் இமயம் வரை படர்ந்து கிடக்கும் இந்தியத் துணைக் கண்டம் முழுவதையுமே களமாக்கிக் கதை நடத்துவதையும் பார்க்கிறோம்.

இல்லையென்போர் யார்?

தெய்வ நம்பிக்கையும் மதப் பற்றும் இல்லாதவர்களே வேறு விதமாக நினைக்கக்கூடும். அது அவர்கள் நிற்கும் தவறான நிலையிலிருந்து கண்ட முடிவாகும். தெய்வ நம்பிக்கையும் மதப்பற்றும் உடையவர்கள் தொன்றுதொட்டே இந்தியாவில் கலாசார ஒருமைப்பாடு இருந்து வருவதனை மறுக்க மாட்டார்கள்.

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில்தான் தேசிய ஒருமைப்பாடு உருவானதென்றும், பிரிட்டிஷார்தான் அதை உருவாக்கினார்கள் என்றும் தேசபக்தியற்ற சிலர் கூறுவதைப் பார்க்கிறோம். இது தவறு. தேசிய ஒருமைப்பாடு காண்பதற்கான சாதனங்கள் இருந்ததில்லை யானால், பிரிட்டிஷார் மட்டும் எப்படி அதைச் சாதித்திருக்க முடியும்? பிரிட்டிஷார் காலத்தில் இந்தியா அரசியல் ரீதியாக ஒருமைப்பாடு எய்தியதென்றால், அதற்கு காலம் கைகொடுத்ததுதான் காரணம். ஒரே ஆட்சியின் கீழ் அமெரிக்கா ஒருமைப்பாடு எய்தியதும் இதே காலத்தில்தான். காக்கை குந்தியதற்கும் பனம் பழம் விழுந்ததற்கும் என்ன பொருத்தமோ, அதே பொருத்தந்தான் இந்தியாவில் பிரிட்டிஷார் வந்ததற்கும் அரசியல் ஒருமைப்பாடு ஏற்பட்டதற்கும் உண்டு.

இந்திய மக்கள் தொன்றுதொட்டு இன்றுவரை கடைப் பிடித்து வரும் தீர்த்த யாத்திரை, தல யாத்திரை போன்றவை யெல்லாம் தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்கவும் உறுதிப் படுத்தவும் நம் முன்னோர்கள் செய்த ஏற்பாடுகளாகும்.

போரிட்டவர்கள் மன்னரா, மக்களா?

இந்திய மன்னர்களிடையே நடைபெற்ற பெரும்போர்களுக் கெல்லாம் காரணம், தேசிய ஒருமைப்பாட்டுக்கான பொது அம்சம் எதுவும் இல்லாததுதான் என்று சொல்வோரும் உண்டு. இது, அறியாமையின்பாற்பட்ட வாதம். வடபுல வேந்தருக்கும் தென்புல வேந்தருக்குமிடையே மட்டும் போர் நிகழ்ந்திருந்தால் இப்படிச் சொல்லலாம். இந்து மன்னர்களுக்கும் இஸ்லாமிய மன்னர்களுக்குமிடையே மட்டும் போர் நடந்திருந்தாலும் இந்த வாதத்தில் பசையுண்டு. சரித்திரம் அப்படிச் சொல்லவில்லை. தமிழ் மூவேந்தர்களிடையே போர் நிகழாத ஒரு நூற்றாண்டு அல்லது ஒரு தலைமுறை உண்டா? தமிழ் மன்னர்களிடையே நிகழ்ந்த போரை அடிப்படையாகக் கொண்டது தானே புறநானூற்றில் பேசப்படும் தமிழர் வீரம்?

வட பாரதத்திலே இந்து மன்னர்களே ஒருவரோடொருவர் சண்டை போட்டுக் கொள்ள வில்லையா? இஸ்லாமிய மன்னர்களும் தங்களுக்குள் ஒருவர் தலையை ஒருவர் வெட்டிக் வீழ்த்தவில்லையா? மன்னர்களிடையில் நடந்த இந்தப் போர்களை வைத்துக் கொண்டு இந்தியாவில் தேசிய ஒருமைப் பாட்டுக்கான பொது அம்சம் எதுவுமே இருந்ததில்லையென்று சொல்வது உள்நோக்குடைய பொய்வாதமாகும்.

முதல் அன்னியப் படையெடுப்பு

கி.மு. நான்காம் நூற்றாண்டின் முற்பாதியிலேயே இந்தியாவின் மீது அன்னிய நாட்டாரின் ஆக்கிரமிப்பு நிகழ்ந்தது. முதன்முதலாக, கிரேக்க சக்கரவர்த்தியான மகா அலெக்சாந்தர் என்பவன் கி.மு. 327இல் பாரசீகத்தின் வழியாக இந்தியாவின் வடக்கெல்லையில் படையெடுத்து, சில பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டான். மேலும், ஆக்கிரமிப்பைத் தொடர்வதற்கு இயலாதபடி படை வீரர்கள் அவனோடு ஒத்துழைக்க மறுத்தனர். போரை நிறுத்தி, நாடு திரும்பவேண்டுமென்றும் கோரினர். அதனால், மகா அலெக்சாந்தரின் படையெடப்பு அரைகுறையாக முடிந்தது. தனது 33-வயதில் அவன் காலமானான். போரில் அவனால் கைப்பற்றப்பட்ட இந்தியப் பகுதிகள் அவனது மறைவுக்குப் பிறகு விடுதலை பெற்றன.

மொகலாயரும் புகுந்தனர்!

மகா அலெக்சாந்தருக்குப் பிறகு குறிப்பிடத்தக்க ஆக்கிர மிப்பு ஒன்று உண்டென்றால், அது மொகலாயருடையது தான்.

மொகலாய மன்னர்கள் அடுத்தடுத்துப் பலமுறை இந்தியாவின் மீது படையெடுத்தனர். அவர்களிலே முகமது கஜினி குறிப்பிடத் தக்கவனாவான். மொகலாயர்கள் இந்தியாவின் வடபகுதியைக் கைப்பற்றி தமிழகம்வரை விரிவடைந்தது. பின், மொகலாய வம்சமானது திரும்பிப் போவதற்கு நடந்து வந்த அடிச்சுவடு தெரியாமல் போனதால் இந்தியாவையே புகலிடமாகக் கொண்டு விட்டது. நாட்டால் அன்னியரான மொகலாயர்களை சீரணித்துவிட்டது இந்திய நாகரிகம். பரதேசி என்று வந்த பிற தேசத்தவர்களையெல்லாம் சுதேசிகளாக்கிக் கொண்ட பெருமை இந்திய மண்ணுக்கு உண்டு. அதற்கு எடுத்துக் காட்டாக உள்ளது இந்தியாவிலுள்ள மொகலாயர் வம்சம்.

இது போல, களப்பிரர், பல்லவர், மொகலாயர் தெலுங்கு நாயக்கர், மராத்தியர் எனப் பல்வேறு மொழியினர் பரதேசிகளாகத் தமிழகத்தில் புகுந்து, தமிழர் மீது ஆதிக்கம் பெற்றிருந்தாலும், அவர்களுடைய ஆதிக்கம் முடிவுக்கு வந்த போது அவர்கள் காலத்தில் புகுந்தவர்களையும் தம்மவர்களாக ஏற்றுக்கொண்டனர் தமிழினத்தார். இந்தப் பண்பாட்டைப் பற்றி மெகஸ்தனிசு என்ற நாடோடி யாத்திரிகன் தனது நூலிலே புகழ்ந்து புகழ்ந்து பேசுகின்றான்.

ஐரோப்பியக் கிரகணம்!

இத்தகைய பெருமைமிகு தமிழ் நாட்டைத் தன்னகத்தே கொண்ட பாரதப் பெருநாட்டை ஐரோப்பியக் கிரகணம் பிடித்தது 16ஆம் நூற்றாண்டிலே!

விசயநகரப் பேரரசைச் சார்ந்த நாயக்க மன்னர்களும், டில்லி மொகலாயப் பேரரசைச் சார்ந்த நவாபுகளும், மராத்தியப் பேரரசைச் சார்ந்த மராத்தியர்களும் தமிழகத்தின் மீது அரசியல் ஆதிக்கம் பெற்றிருப்பினும், நாளடைவில் அவர்களெல்லாம் தத்தம் பேரரசின் மேலாதிக்கத்திலிருந்து விடுபட்டுத் தமிழகத்திற்கேவுரிய வகையில் தனியரசு நடத்தினர் என்று அறிகிறோம். ஒருக்கால், இது தமிழ் மண்ணுக்குரிய தனிச் சிறப்புப்போலும்!

இன்னொரு உண்மையையும் இங்கு நினைவூட்டியாக வேண்டும். பிரிட்டிஷாரும் சரி, பிரெஞ்சுக்காரரும் சரி; தமிழகத்தின் மீது அரசியல் ஆதிக்கம் பெற்றது, தமிழரை வென்று அல்ல; அவர்களுக்கு முன்பே தமிழகத்தின் மீது ஆதிக்கம்

பெற்றிருந்த நவாபுகளை வென்றுதான். அந்த வெற்றியும் வீரத்தால் விளைந்ததன்று; வஞ்சனையால், இந்தியரைப் பிரித்தாண்ட தந்திரத்தால் விளைந்ததாகும். ஆம்; தமிழரை வென்று தமிழகத்தில் வெள்ளையர் ஆதிக்கம் பெறவில்லை.

கம்பெனிகளின் வருகை!

மொகலாயர்களை அடுத்து ஐரோப்பியர்கள் அணியணியாக இந்தியாவுக்குள் நுழைந்தனர். ஆக்கிரமிப்பாளர்களாக அல்ல; வணிகர்களாக! ஆனால், அதுவே பின்னால் நிகழ்ந்த ஆக்கிரமிப்புகளுக்கு முன்னோடி நிகழ்ச்சியாக அமைந்தது.

''திரைகடலோடியும் திரவியம் தேடு'' என்றாள் ஔவைப் பாட்டி. இந்த வாக்குப் பிறப்பதற்கு முன்பே தமிழ் நாட்டார் கடலோடி வாணிபத்தில் தலைசிறந்து விளங்கினர். வட பாரதத்தில் உள்ளவர்கள் கடல் கடந்து செல்வது மதத்திற்கு விரோதம் என்று கருதியிருந்த நேரத்திலே தமிழினத்தார் கடலோடி வாணிபத்திலே சிறந்து விளங்கினர். இதிலே தமிழருக்கு இணை தமிழர்தான். இதனை,

''சீன மிசிரம் யவனரகம் இன்னும்
தேசம் பலவும் புகழ்வீசிக் - கலை
ஞானம் படைத்தொழில் வாணிபமும் - மிக
நன்று வளர்த்த தமிழ்நாடு''

என்ற வரிகளில் பாரதியார் நினைவூட்டுகின்றார். இப்படிக் கடலோடி வாணிபத்தில் சிறந்து விளங்கிய தமிழர்களைக் கொண்ட இந்தியாவிற்குத்தான் ஐரோப்பாவிலிருந்து கடலோடி வணிகர்கள் அணியணியாக வருகை தந்தனர். கி.பி. 15ஆம் நூற்றாண்டிலிருந்து 17ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலம்வரை ஐரோப்பிய வணிகர்கள் பல்வேறு நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு வந்தவண்ணமிருந்தனர்.

புகுந்தவர் யார்? எவர்?

இவர்கள் தனிநபர்களாக வரவில்லை. வணிக நிறுவனங்களோடு வந்தனர். போர்ச்சுக்கீசு, டேனிஷ், பிரான்ஸ், டச்சு, பிரிட்டன் ஆகிய நாடுகளிலிருந்தெல்லாம் வணிகக் கம்பெனிகள் இந்தியாவுக்கு வருகை தந்தன. அவை: போர்ச்சுக்கீசியக் கிழக்கிந்தியக் கம்பெனி, பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி, பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி ஆகியனவாம்.

முதலில் வந்த போர்ச்சுக்கீசியக் கம்பெனியார் இந்தியாவின் மேற்குக் கரையோரத்திலுள்ள கோவாவில் முகாம் அமைத்தனர். பின்னர் வந்த டேனிஷ் கம்பெனியார் தென்னார்க்காடு மாவட்டத்தின் ஒரு பகுதியாகவுள்ள தரங்கம்பாடியில் கோட்டை நிறுவிக் குடியமர்ந்தனர். அடுத்து வந்த பிரெஞ்சுக் கம்பெனியார் புதுவையிலும் காரைக்காலிலும் காலூன்றினர்.

ஆட்டுத்தோலுக்கு இடந்தந்த ஆந்திரன்

பிரிட்டிஷ் கம்பெனியார், இன்று செயின்ட் ஜார்ஜ் கோட்டையுள்ள இடத்தில் நிலம் வாங்கி, அங்குக் கோட்டை கொத்தளங்கள் கட்டி முகாம் செய்தனர்.

இந்த ஐரோப்பியக் கம்பெனிகள் தமிழகத்திற்கு வெளியே வடபுலத்திலும் தொழிற்சாலைகளையும் வணிக நிறுவனங் களையம் கோட்டைகளையும் நிறுவின என்றாலும், தமிழகத்தைப் பற்றிய வரலாறாதலால், இங்குப் புகுந்த கம்பெனிகளைப் பற்றித்தான் குறிப்பிட வேண்டியதாகிறது.

சென்னை நகரில் மொழியால் வேற்றவரான விசயநரக நாயக்க மன்னர்களின் கடைசிச் சின்னமாக அரசு புரிந்த சந்திரகிரி மன்னனிடமிருந்து தான் கிழக்கிந்தியக் கம்பெனியார் தற்போது செயிண்ட் ஜார்ஜ் கோட்டை உள்ள பிரதேச நிலத்தை வாங்கினர். பிரிட்டிஷார் ஆட்டுத்தோல் வியாபாரிகளாகவே இங்கு வந்தனர் என்று சொல்லப்படுகிறது. ஆட்டுத்தோலைப் பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்கவே சந்திரகிரி மன்னனிடம் நிலம் வாங்கினராம். அதனாலேதான் பிற்காலத்தில் விடுதலைப் போர் எழுச்சி பெற்றபோது,

''ஆட்டுத்தோலுக் கிடங்கொடுத்த
தாலே வந்த மோசம்''

என்ற பாட்டுப் பிறந்தது.

புகுந்தவர்களிடையில் போர்! போர்!! போர்!!!

தென்னகத்திலே புகுந்த ஐரோப்பிய வணிகக் கம்பெனிகளிலே தொடக்கத்தில் பிரெஞ்சுக் கம்பெனியாருக்கே வாணிபம் லாபகரமாக நடந்தது. கம்பெனியின் செல்வம் வளர்ந்தது. அவர்களுடன் பிரிட்டிஷாரும் போட்டியிட முனைந்தனர். இந்தப் போட்டியானது நாளடைவில் போராகவும் மாறியது.

பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியாரும் சரி, பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியாரும் சரி; தங்கள் பண்டகங்களைப் பாதுக்காப்பதற்கென்று சொல்லிக் கொண்டு ஆயுதம் தாங்கிய ஐரோப்பிய படை வீரர்களை வைத்துக்கொண்டிருந்தனர். அவர்கள் வசம் பீரங்கிகளும் இருந்தன. நாடு பிடிக்கும் வேட்டைக்கும் அவை பயன்படுத்தப்பட்டன.

நவாபுகளை மோதவிட்டனர்!

ஒரு சந்தர்ப்பத்தில் ஐரோப்பாவிலே பிரிட்டனுக்கும் பிரான்சுக்குமிடையே கடுமையான போர் நிகழ்ந்தது. அதன் எதிரொலியாக, தென்னிந்தியாவிலும் பிரிட்டிஷ்காரர்களுக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்குமிடையே போர் மூண்டது. அவர்கள் சாமர்த்தியசாலிகளாதலால், தங்களுக்குள் நேரடியாக மோதிக் கொள்ளாமல் மொகலாய அரசு வம்சத்தின் சின்னமான ஆர்க்காட்டு நவாப் பதவிக்கான வாரிசுகளிடையே கலகத்தை மூட்டிவிட்டு, அவர்களுக்கு உதவி புரிந்தனர். சந்தா சாகிபும் அன்வர் - உத்தீனும் நவாப் பதவிக்கு அடித்துக் கொண்டனர். சந்தா சாகிப்புக்குப் பிரெஞ்சுக்காரர்கள் பக்கபலமாக இருந்தனர். அன்வர் - உத்தீனுக்குப் பிரிட்டிஷ்காரர் பக்கபலமாக இருந்தனர். வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வந்தன. பல ஆண்டுகள் போர் நடந்தது. போர் நடந்த இடங்களிலெல்லாம் இரத்த வெள்ளம் ஓடியது. இருதரப்பிலும் இந்தியர் ஆயிரக்கணக்கில் மாண்டனர். இறுதியில் முகமதலிக்கு வெற்றி கிடைத்தது. இதனால், பிரெஞ்சுக் கம்பெனிக்குத் தோல்வியும் பிரிட்டிஷ் கம்பெனிக்கு வெற்றியும் கிடைத்தன.

நவாபுகளைக் கருவிகளாகக் கொண்டு பிரெஞ்சுக் காரர்களுக்கும் பிரிட்டிஷாருக்கும் நடந்த போரிலே, பிரெஞ்சுக் கம்பெனியின் கவர்னராக டூப்ளேயும், பிரிட்டிஷ் கம்பெனியின் கவர்னராகக் கிளைவும் இருந்த காலம்தான் போரின் முக்கியக் கட்டமாகும். தென்னாட்டுச் சரித்திரத்திலே இந்த இருவருக்கும் தனி இடம் உண்டு.

கடன்கார நவாபு!

ஆர்க்காட்டு நவாப் பதவிக்கு நடைபெற்ற போரின் மத்தியிலே அன்வர் - உத்தீன் மாண்டான். பின், அவன் மகன் முகமது அலி போரைத் தொடர்ந்து நடத்தினான். அவனுக்குப்

போரில் வெற்றி கிடைத்ததென்றாலும், அதற்கு உதவியதற்காகப் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனிக்குக் கடன்பட்டுவிட்டான். சேதமடைந்த ஆயுதங்களுக்காகவும், செத்துப்போன பிரிட்டிஷ் சோல்ஜர்களுக்காகவும் ஈட்டுத் தொகையாக ஒரு பெருந் தொகையை பிரிட்டிஷ் கம்பெனிக்கு அவன் கொடுக்க வேண்டியிருந்தது. இன்னும், அதற்காக, இதற்காக என்று சொல்லிச் சொல்லி கடன் சுமையைப் பெருக்கி வந்தது பிரிட்டிஷ் கம்பெனி.

குடிமக்கள் கடுமையான வறுமையில் வாடியதால் அவர்களிடமிருந்து வரி வசூலிக்க நவாபால் முடியவில்லை. அதனால், பிரிட்டிஷ் படைகளை ஏவி, குடிகளைப் பயமுறுத்திக் கொடுமைப்படுத்தி அவர்களிடமிருந்து வரிகளை வசூல் செய்தான். இந்த வரிகளை வசூலித்துக் கொடுப்பதற்காகவும் பிரிட்டிஷ் கம்பெனிக்கு ஒரு பெருந்தொகை கொடுக்க வேண்டியதாயிற்று. கடன் சுமை ஏறிக்கொண்டே போனது. வட்டித் தொகையும் ஏறியது. முடிவில் ஆர்க்காட்டு நவாப், தனக்குக் கப்பம் கட்டி வந்த பாளையங்களை யெல்லாம் தான் பட்ட கடனுக்காக பிரிட்டிஷ் கம்பெனிக்கு அடகு வைத்தான். அதாவது, அந்தப் பாளையங்கள் மீதுள்ள மேலதிகாரத்தை ஓர் ஒப்பந்தத்தின் மூலம் பிரிட்டிஷ் கம்பெனிக்கு உரிமையாக்கினான். அந்தப் பாளையங்களிலே நெல்லை மாவட்டத்தில் கோயில் பட்டித் தாலுக்காவிலிருந்த பாஞ்சாலங்குறிச்சியும் ஒன்றாகும்.

★-★-★

மைசூர் சுல்தான்களின் நாற்பதாண்டுப் போர்!

16-ஆம் நூற்றாண்டிலே ஐரோப்பிய நாடுகளிலிருந்து கிழக்கிந்தியக் கம்பெனிகள் இந்தியாவுக்குள் புகுந்துவிட்டன வென்றாலும், ராஜ்யங்களைக் கவிழ்ப்பதும், கைப்பற்றுவதுமான முயற்சிகளில் அவை ஈடுபட்டது 18,19 ஆம் நூற்றாண்டுகளில் தான். இந்த அதிகார வேட்டையில் பிரிட்டிஷ், பிரெஞ்சுக் கம்பெனிகளே அதிக தீவிரம் காட்டின. ஒரு ராஜ்யத்திலே அரசுக் கட்டிலில் இருந்த மன்னன் மகப் பேறின்றி மாண்டு விடுவானானால், அவனது வாரிசைத் தேர்ந்தெடுப்பதிலே தலையிடுவதைப் பிரிட்டிஷ் கம்பெனி வழக்கமாகக் கொண்டது. கம்பெனியிடம் கடன் வாங்காத ராஜ்யமே இல்லையாதலால், அதன் தலையீட்டை எதிர்ப்பது அவற்றிற்குச் சங்கடமாயிருந்தது.

இந்த மாதிரிச் சந்தர்ப்பங்களிலே பிரிட்டிஷ் கம்பெனியால் பாதிக்கப்பட்ட அரசுகள் அதற்கு எதிராகப் பிரெஞ்சுக் கம்பெனியின் படை உதவியை நாடியதுண்டு. ஆனால், அதன் உதவிபோதுமான அளவில் கிடைத்ததாக வரலாறு கூறவில்லை.

போட்டியும் தோல்வியும்

அதிகார வேட்டையிலேயும் பிரிட்டிஷ் கம்பெனிக்கும் பிரெஞ்சுக் கம்பெனிக்கும் போட்டியிருந்தது. இந்தப் போட்டி நீண்டகாலம் தொடர்ந்தது. ஆயினும் இறுதி வெற்றி பிரிட்டிஷ் கம்பெனிக்குத்தான்! பிரிட்டிஷ் ஆட்சியினுடையவும், பாராளு மன்றத்தினுடையவும் பின்பலம் இந்தியாவிலிருந்த பிரிட்டிஷ் கம்பெனிக்கு இருந்தது. பாராளு மன்றத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் மூலமாகவும், சட்டங்கள் வாயி லாகவும் இந்தியாவில் வாணிபம் நடத்தப் பிரிட்டிஷ்

கிழக்கிந்தியக் கம்பெனிக்கு அதிகாரம் அளிக்கப்பட்டு வந்ததோடு அவ்வப் போது புதுப்பிக்கப்பட்டும் வந்தது. இதுபோல, பிரான்சு தேசத்து அரசின் பின்பலம் பிரெஞ்சுக்கிழக்கிந்தியக் கம்பெனிக்குப் போதுமான அளவில் இருக்கவில்லை. போட்டியில் அக்கம்பெனி தோற்றுவிட்டதற்கு இதுவும் ஒரு காரணமாகும். புதுவை, காரைக்கால், மாஹி, ஏனாம், சந்திரநாகூர் ஆகிய பகுதிகளை ஆக்கிரமித்துக் கொண்டதோடு பிரெஞ்சுக் கம்பெனியின் அதிகார வேட்டை ஓய்ந்தது. பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி அதிகார வேட்டையில் ஈடுபட்டதற்கு 18ஆம் நூற்றாண்டில் இந்தியாவி லிருந்த் மோசமான அரசியல் சூழ்நிலையும் ஒரு காரணமாகும்.

அவுரங்கசீப் மரணம்

1707இல் மொகலாய அரசின் கடைசிப் பாதுஷாவான அவுரங்கசீப் டில்லியில் காலமானான். அவனோடு மொகலாயப் பேரரசும் அஸ்தமித்து விட்டதென்றே சொல்ல வேண்டும். அந்த நேரத்தில் அவுரங்கசீப் அரசின் படைபலம் வருமாறு: காலாட் படை 2 இலட்சம்; குதிரைப் படை 1 இலட்சம்; யானைப் படை 40 ஆயிரம்; ஒட்டகப் படை 15 ஆயிரம். இவ்வளவு படை பலமிருந்தும், மொகலாயப் பேரரசுக்குத் திறமையான தலைமை இல்லாமற்போனதால், பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆக்கிரமிப்பு வேட்டையை எதிர்த்து முறியடிக்கும் சக்தி அதற்கு இருக்கவில்லை. அவுரங்கசீப் காலத்திலேயே தென்னிந்திய ராஜ்யங்கள் அவனது மேலதிகாரத்திலிருந்து தங்களை விடுவித்துக்கொண்டு விட்டன. கிழக்கிந்தியக் கம்பெனியாரின் பேயாட்டம் தென்னிந்தியாவில் அதிகரித்ததற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

அரசியல் சூழ்நிலை

18ஆம் நூற்றாண்டில் இந்தியாவிலிருந்த மோசமான அரசியல் சூழ்நிலையைத் தலைவர் ஜவகர்லால்நேரு வருணிக்கிறார், கேட்போம்:

''அவுரங்கசீப் மரணத்திற்குப் பின்னுள்ள ஒரு நூற்றாண்டுக் காலத்திலே, பாரதம், ஒட்டுத் தையல்போட்ட துணியைப் போல பார்ப்பதற்கு வேடிக்கையாக இருந்தது, அந்தக் காலம் அடித்துப் பிடுங்குவோருக்கு ஏற்றதாக இருந்தது. வழி முறைகளில் தூய்மையை விரும்புவாரில்லை. கிடைத்த வாய்ப்பைத்

துணிச்சலுடன் பயன்படுத்திக் கொள்வோருக்கு ஏற்ற காலமாகவும் இருந்தது. ஆகவே, இந்தியா அடித்துப் பிடுங்குவோர் ஆதிக்கத்துக்குச் சென்றுவிட்டது.

''அவர்களிலே சிலர் இந்தியாவிலேயே பிறந்து வளர்ந்தவர்கள்; சிலர் வடமேற்கு எல்லை வழியாக வந்தவர்கள்; ஆங்கிலேயரையும் பிரெஞ்சுக்காரரையும்போல, அலைகடலுக்கு அப்பாலிருந்து வந்தவர்களுமுண்டு.

''ஒவ்வொரு நபரும், ஒவ்வொரு கூட்டத்தினரும் தன்வரையில் பார்த்துக்கொண்டு மற்றவர்களைக் குழியில் தள்ளுவதற்குச் சித்தமாயிருந்தனர். சில சமயங்களிலே, இருவரோ அதற்கு மேற்பட்டவரோ ஒன்றுசேர்ந்து கொண்டு, மூன்றாமவனை ஒழிப்பார்கள். பிறகு அவர்களே தங்களுக்குள் சண்டை போட்டுக் கொள்வார்கள்.

''ராஜ்யங்களைக் கைப்பற்றுவதற்கும், குறுகிய காலத்தில் நிறையப் பணம் சேர்ப்பதற்கும், மானத்தை விட்டு பகிரங்கமாகக் கொள்ளையடிப்பதற்கும், சில சமயங்களில் வாணிபம் என்ற போர்வையிலே மறைந்துகொண்டு, கொள்ளை அடிப்பதற்கும் அனைவரும் வெறி பிடித்து அலைந்தனர்.''

(''நேருஜியின் உலக வரலாறு'' - 2ஆம் பாகம்; பக். 174-75)

ஹைதரலியின் போர்!

நேருஜி வருணித்துள்ள அவலச் சூழ்நிலைக்குத் தென்னகமும் விலக்கன்று. ஆயினும், இருளைக் கிழித்துக்கொண்டு எழும் உதய ஞாயிறாகப் பிரிட்டிஷ் ஆதிக்கத்தை எதிர்ப்பதற்குத் தென்னகத்தில் ஒரு மாவீரன் தோன்றினான். அவன் மைசூரை ஆண்ட ஐதர் அலி ஆவான். ஆம்; இன்று கர்னாடகம் எனப்படும் அன்றைய மைசூர் ராஜ்யத்தின் சுல்தான்.

ஹைதரலி பஞ்சாபிலிருந்து கர்னாடகத்தில் குடியேறிய ஏழைப் பக்கிரி ஒருவரின் வழியில் வந்தவன். காளைப் பருவத்திலே மைசூர் இராணுவத்தில் சேர்ந்தான். பல போர்களில் ஈடுபட்டு வியக்கத்தக்க வகையில் வெற்றிகளைக் கண்டு இந்துவான மைசூர் அரசர் பெருமானின் நம்பிக்கைக் குரியவனானான். படை வீரனாகச் சேர்ந்தவன் தளபதி பதவிக்கு உயர்த்தப் பட்டான். அதற்கு மேல், பெங்களூர் பிரதேசத்தை ஐதரலிக்கு

சன்மானமாக வழங்கி, அதற்கு அவனை சுல்தான் ஆக்கினான் மைசூர் மன்னன். அந்த நிலையிலே, ஆதிக்க ஹைதரைப் பிடித்துக் கொண்டது. கேவலமான சூழ்ச்சிகள் செய்து நாளடைவில் மைசூர் ராஜ்யம் முழுவதையுமே கைப்பற்றி விட்டான்.

மைசூர் ராஜ்யத்தை விஸ்தரிப்பதிலேயும் சுல்தான் ஹைதரலி கருத்துச் செலுத்தினான். பல கொடுமைகளைச் செய்து மலையாளப் பிரதேசத்தையும், தமிழகத்தில் சென்னை, திருச்சி, திண்டுக்கல் உள்ளிட்ட சில பிரதேசங்களையும் தனது ஆட்சியில் எடுத்துக் கொண்டான். இந்த நிலையில்தான் ஏற்கெனவே ஆக்கிரமிப்பில் ஈடுபட்டிருந்த பிரிட்டிஷ் கம்பெனிக்கும் மைசூர் ஹைதரலிக்கும் போர் மூண்டது. 35 ஆண்டுகளுக்கு மேலாக விட்டு விட்டு பல கட்டங்களில் போர் தொடர்ந்து நடந்தது. போரின் மத்தியிலே பயங்கரமான புற்றுநோய் காரணமாக 1783 ஏப்ரலில் ஹைதரலி மரணமடைந்தான்.

திப்பு தோன்றினான்!

ஹைதருக்குப்பின் அவனது வீர மைந்தன் திப்பு என்பான் மைசூர் ராஜ்யத்தின் சுல்தான் ஆனான். இந்து அரச பரம்பரையினரிடமிருந்து சூழ்ச்சியால் கைப்பற்றிய அரச பதவிக்கு முதல் வாரிசானான் திப்பு சுல்தான். ஹைதர் மறைந்த பின்னும், பிரிட்டிஷ் ஆக்கிரமிப்பை எதிர்க்கும் போரை தொடர்ந்து நடத்தினான் திப்பு சுல்தான்.

ஹைதருக்குப் பின்னும் 15 ஆண்டுக் காலம் விட்டு விட்டுப் போர் நடந்தது. ''மைசூர் போர்'' என்று சரித்திர ஏடுகளில் சிறப்பித்துச் சொல்லக்கூடிய வகையில் இருமுறை பெரும் போர்கள் நடைபெற்றன. வெற்றியும் தோல்வியும் இரு தரப்பிலும் அடிக்கடி கைமாறின. இறுதியில் 4-5-1799 இல் திப்பு சுல்தானின் படைகள் பிரிட்டிஷ் படைகளிடம் சரணடையவே போர் முடிந்தது. கையில் வாளேந்திய நிலையிலே, திப்பு சுல்தான் வீர மரணமடைந்தான். இது நிகழ்ந்தது ஸ்ரீரங்கப்பட்டணத்தில்,

மைசூர்ப் போருக்கும் இந்திய விடுதலைக்கும் என்ன சம்பந்தம்? குறிப்பாக, அந்தப் போரில் தமிழகத்தின் பங்கு என்ன? இவை ஆராயத்தக்கவையாகும்.

திப்பு வெற்றி பெற்றிருந்தால்...

தமிழர் என்னும் இன உணர்வுடன் ஆராயும்போது, மைசூர் ராஜ்யத்துடன் தமிழகத்தையும் இணைத்துக் கொள்வதற்காகத் திண்டுக்கல் வரை படை நடத்திய ஹைதரலியும் ஆக்கிரமிப்புக் காரனாகவே தோன்றுவது இயற்கை. ஒருகால், பிரிட்டிஷ் கம்பெனியுடன் நடத்திய போரிலே ஹைதரலிக்கோ, திப்புவுக்கோ வெற்றி கிடைத்திருந்தால், தெற்கில் மிகப் பெரிய கர்நாடக சாம்ராஜ்யம் தோன்றியிருக்கும். அதிலே தமிழகமும் அடங்கி இருந்திருக்கும்.

இந்தியாவின் சுதந்திரம் என்றால், அதிலே மொழிவாரிப் பிரதேசங்களின் சுதந்திரமும் அடங்கியிருக்க வேண்டும். இது அரசியல் சித்தாந்தம். ஆனால், ஹைதரலியும் திப்புசுல்தானும் கொண்டிருந்த போக்கு இதற்கு உதவிகரமாக இல்லை. ஆயினும், ஹைதரும் திப்புவும் வெற்றி பெற்றிருந்தால் பிறந்த நிலத்தாலும் பேசிய மொழியாலும் பெற்ற நிறத்தாலுமாக எல்லாவகையிலுமே அன்னியரான ஆங்கிலேயருக்குத் தமிழகம் அடிமைப்படுவது தவிர்க்கப்பட்டிருக்கும். காலப்போக்கில் ஜன நாயக சகாப்தம் தோன்றியதை ஒட்டி, சுல்தான்களின் ஆதிக்கத்திலிருந்தும் தமிழகம் விடுபட்டிருக்கக் கூடும். இந்த வகையில் பார்க்கும் போது பிரிட்டிஷ் ஆக்கிரமிப்பை எதிர்த்து மைசூர் சுல்தான்கள் நடத்திய போரானது இந்திய விடுதலைப் போருடன் ஓரளவு தொடர்புடையதாகவே கொள்ளப்பட வேண்டி யிருக்கிறது.

மன்னர் ''அரசியல்!''

மைசூர் சுல்தான்கள் தமிழகத்தின் மீதும் செல்வாக்குப் பெற்றது அன்றைய மன்னர் பரம்பரையின் அரசியலாக இருந்தது. இராசராச சோழன் கங்கைவரை உள்ள பிரதேசத்தைத் தன் செல்வாக்கின் கீழ்க் கொண்டு வந்ததுபோல, சாம்ராட் அசோகன் தெற்கு நோக்கிப் படை நடத்திக் கலிங்கம் வரையுள்ள பிரதேசத்தைத் தனது பேரரசிலே எடுத்துக் கொண்டது போல மைசூர் சுல்தான்களும் தமிழகத்தை எடுத்துக் கொள்ள முனைந்திருக்கிறார்கள். இதிலே புதுமை ஒன்றும் இல்லை.

நேருஜி கூறுகிறார்!

ஆயினும் பிற்காலத்தில் தேச விடுதலைப் போராட்டம் வீறு கொண்டு எழுந்தபோது, அதில் ஈடுபட்ட விடுதலை வீரர்களால்

ஐதர் அலியும் திப்பு சுல்தானும் சுதந்திர வீரர்களாகவே மதிக்கப்பட்டிருக்கின்றனர். இதோ, ஜவகர்லால் கூறுகிறார்:

''பிரிட்டிஷாருடைய கொடிய எதிரியாவான் மைசூரை ஆண்ட ஹைதர் அலி. அவன் திறமையான ஒரு படைத்தலைவன்; பகைவருக்கு விஷம் போன்றவன்; அவன் ஆங்கிலேயப் படைகளைப் பல முறை தோற்கடித்து வெற்றி கண்டான்.

''1769இல் சென்னையிலேயே தனக்குச் சாதகமான நிபந்தனைகளை ஹைதர் விதிக்க, பிரிட்டிஷார் அதனை ஒப்புக் கொள்ளும்படி நேர்ந்தது. இதற்குப் பத்தாண்டுகளுக்குப் பிறகு ஹைதர் அலிக்கு மற்றுமோர் வெற்றி கிடைத்தது. அவன் மரணமடைந்த பின் அவனுடைய மகன் திப்புசுல்தான், ஆங்கிலேயருக்குத் தீராப் பகையாக வந்து வாய்த்தான். இறுதியாக திப்புவை வீழ்த்தி வெற்றி பெற பிரிட்டிஷாருக்குப் பல ஆண்டுகள் பிடித்தன. இரண்டு மைசூர் போர்கள் நடத்த வேண்டியதாயிற்று.''[1]

சவார்க்கார் பாராட்டு

இந்திய விடுதலைப் போரில் பயங்கரப் புரட்சியிலே ஈடுபட்டவர்களின் இணையற்ற தலைவராக விளங்கிய விநாயக தாமோதர சவர்க்கார் கூறுவது வருமாறு:

> ''இந்தியாவின் சுதந்திரம் சிறிது சிறிதாகப் பறிக்கப் பட்டு வருவதை முதன் முதலாக அறிந்து கொண்டவர் புனா நானா பர்னவிசும் மைசூர் ஹைதரலியுமாவர். இவர்களுக்குப் பின்னர்தான் மற்றவர்களும் அதனை உணரத் தொடங்கினர்.''[2]

திப்புவை வென்ற பிறகு பழைய அரச பரம்பரையைச் சேர்ந்த வாரிசு ஒருவரை மைசூர் அரசு கட்டிலில் ஏற்றியது பிரிட்டிஷ் கம்பெனி. அவருடைய வாரிசுகளே பிற்கால மைசூர் அரசர்கள்.

கர்நாடக அரசின் கண்ணோட்டம்

மைசூர் அரசை ஹைதரலி கைப்பற்றிய முறை காரணமாக, மத ரீதியான வெறுப்பு ஐதர் அலி மீதும் திப்பு மீதும் மைசூர்

1. உலக வரலாறு, பாகம் 2; பக். 196-97.
2. எரிமலை அல்லது முதலாவது சுதந்திரப் போர்; பக். 17.

ராஜ்யத்தில் ஏற்பட்டதுண்டு. அப்படியிருந்தும், சுதந்திர இந்தியாவிலே அமைந்த கர்நாடக அரசு, ஹைதர் அலியையும் திப்புவையும் சுதந்திர வீரர்களாகவே மதிக்கிறது. இந்திய சுதந்திரப் போரே இவர்களிடமிருந்துதான் தொடங்கியது என்றுகூட ''விடுதலைப் போரில் கர்நாடகம்'' என்னும் நூலில் கர்நாடக அரசு வாதாடுகிறது. தந்தையும் மகனுமான ஹைதரும் திப்புவும் பிற்காலத்தில் தேச விடுதலைப் போரில் கலந்த கர்நாடக தேச பக்தர்களால் பெரிதும் போற்றப்பட்டனர். அவர்களை தங்கள் வழிகாட்டிகளாகவே கொண்டனர்.

மைசூர் சுல்தான்கள் நடத்திய விடுதலைப் போரிலே தமிழகத்தின் பங்கு என்ன என்பதுதான் இங்கு நாம் அறிய வேண்டியதாகும். ஹைதர் அலியும் திப்பு சுல்தானும் கம்பெனிப் படைகளை எதிர்த்துப் பல முறை நடத்திய கடுமையான போரிலே தமிழகமும் ஒரு களமாக இருந்தது. சென்னை நகரிலே பயங்கரமான போர் நடந்தது. திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களிலும் நடந்தது. இதனாற்றான், விடுதலைப் போரில் தமிழகத்தின் பங்கை விளக்கும்போது மைசூர் சுல்தான்கள் நடத்திய போர் பற்றியும் விவரிக்க வேண்டியதா யிற்று.

இனி, பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரர்கள் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனிப் படைகளை எதிர்த்து நடத்திய போரைப் பார்ப்போம்.

★-★★

பாளையக்காரர்கள் போர்!

பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியை எதிர்த்துப் பாளையக்காரர்கள் நிகழ்த்திய போர் இன்று உலகம் போற்றுகின்ற வீரபாண்டியக் கட்டபொம்மனுக்கு முன்பே தொடங்கிவிட்ட தெனலாம். திப்பு சுல்தானும் வீரபாண்டியக் கட்டபொம்மனும் சம காலத்தவர். ஒரே ஆண்டில் பிரிட்டிஷ் படைகளால் கொல்லப்பட்டவர்கள். திப்புவின் தந்தை ஹைதர் அலி பிரிட்டிஷ கிழக்கிந்தியக் கம்பெனிப் படைகளை எதிர்த்துப் போர் நடத்திக் கொண்டிருந்தபோது, வீரபாண்டிய கட்டபொம்மனின் முன்னோர்களும் கம்பெனியின் படை பலத்தைப் பெற்றிருந்த ஆர்க்காட்டு நவாபுக்கு அடங்க மறுத்து அடிக்கடிக் கலகம் செய்தனர்.

தமிழ்நாட்டில் பிரிட்டிஷ் படைகளின் நடமாட்டம் இருவகைப்பட்டது. 1792-ஆம் ஆண்டுக்கு முன்பு நவாப் ஆட்சிக்கு உதவியாகவே பிரிட்டிஷ் கம்பெனியின் படைபலம் பயன்படுத்தப்பட்டது. அந்தக் காலத்திலே கம்பெனி நேரடியாக் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால்தான் வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு முன்பிருந்த பாளையக்காரர்கள் நடத்திய போராட்டத்தை விடுதலைப் போராக எடுத்துக் கொள்வதற்கில்லை.

கம்பெனி அரசு துவக்கம்

1792-இல் தான் ஒரு உடன்படிக்கையின் மூலம் ஆர்க்காட்டு நவாபிடமிருந்து ஆட்சிப் பொறுப்பை கிழக்கிந்தியக் கம்பெனி மேற்கொள்ளுகிறது. அதன் பிறகுதான் ரெவின்யூ போர்டை நியமிக்கின்றனர் ஆங்கிலேயர். இதை முதலாகக் கொண்டுதான் ஆங்கிலேயர் ஆட்சி தொடங்குகிறது.

கலெக்டர் என்னும் பெயரால் வரி வசூலிக்கும் அதிகாரிகளாக வெள்ளையர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

நெல்லை மாவட்டத்திலிருந்த பாளையங்களை சர்வே செய்து, அவற்றின் எல்லைகளை ஒழுங்குபடுத்தவும் ஆங்கிலேயர் பொறுப்பேற்றனர். ஒரு பாளையத்திற்குச் சொந்தமான ஒன்றிரு கிராமங்களை இன்னொரு பாளையத்தோடு இணைத்துவிட்டு, சகோதர பாளையங்களுக்குள் எல்லைத் தகராறை ஏற்படுத்தினர்.

பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆதிக்கத்திற்குத் தமிழரிடமிருந்து முதன் முதலில் எதிர்ப்பு ஏற்பட்டது திருநெல்வேலி மாவட்டத்தில்தான். அடுத்து, இராமநாதபுரம் மாவட்டத்தில் ஏற்பட்டது. மொத்தத்தில் பாண்டி மண்டலந்தான் முதன் முதலில் ஆங்கிலேயர் ஆதிக்கத்தை எதிர்த்துப் போர்க் கொடி உயர்த்திய தெனலாம்.

தென்பாண்டிப் பாளையங்கள்

தமிழ் நாட்டில் விஜயநகர நாயக்கராட்சி வலுவாக ஊன்றிக் கொண்டது பாண்டிய மண்டலத்தில்தான். மதுரையே அதன் தலைநகராக இருந்தது. அந்தக் காலத்திலே பாண்டிய மண்டலம் பல பாளையங்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு பாளையமும் கோட்டை கொத்தளங்களையும் ஆயுதந் தாங்கிய படை பலத்தையும் பெற்றிருந்தது. இந்தப் பாளையங்களின் எண்ணிக்கை 72. நெல்லை மாவட்டத்தில் மட்டும் 36 பாளையங்கள் இருந்தன. பாளையங்களின் தலைவர்கள் குறுநில மன்னர் அந்தஸ்தைப் பெற்றிருந்தனர். இது காரணமாக, பாண்டிய மண்டலத்தில் பல புதிய அரச பரம்பரைகள் தோன்றியிருந்தன.

பாளையக்காரர்களில் கம்பளத்து நாயக்க சாதியினரே மிகுதியாக இருந்தனர். இவர்கள் தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள். ஆம்; மதுரை நாயக்கராட்சிக் காலத்திலே தோற்றுவிக்கப்பட்டவர்கள் தாமே! தேவர்கள் எனப்படும் மறவர்களும் பிள்ளைமார்களுங்கூடப் பாளையக்காரர்களாக இருந்தனர். தெலுங்கு நாயக்கரான பாளையக்காரர்களிலே பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரரே மிகுந்த செல்வாக்குடன் விளங்கினார். தேவர்களிலேயே நெற்கட்டுஞ் செவ்வல் பாளையக்காரர் மிகுந்த செல்வாக்குடன் விளங்கினார்.

வீரபாண்டியனின் முன்னோர் காலத்தில்...

பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரருக்கு வேறு சில பாளையங்கள் மீது மேலதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. நவாபுக்கு

வரிவசூலித்துக் கொடுக்கும் ஏஜெண்டுகளாகப் பாளையக்காரர்கள் செயல்பட்டு வந்தனர்.

மதுரை நாயக்கராட்சி மறைந்த பின், பாண்டி நாட்டுப் பாளையங்கள் நவாப் ஆதிக்கத்தின் கீழ் வந்தன. அதுவும் வீழ்ச்சியுற்ற பின் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆதிக்கத்திற்கு வந்தன. பாளையக்காரர்கள் மதுரை நாயக்க மன்னர்களுக்கு அடங்கியிருந்ததுபோல, அவர்களுக்குப்பின் தங்கள் மீது ஆதிக்கம் பெற்ற ஆர்க்காட்டு நவாபுக்கு அடங்கியிருக்கவில்லை. நாயக்கர் ஆட்சிபோல நவாபுகள் ஆட்சி வலிமை பொருந்தியதாக இல்லாதது ஒரு காரணமாக இருக்கலாம். நவாபுகள் மதத்தால் பாளையக்காரர்களுக்கு வேறுபட்டவர்களாக இருந்ததும் மற்றொரு காரணம் எனலாம்.

படையெடுப்புகள்

பாளையக்காரர்களிடமிருந்து வரி வசூலிப்பதை குத்தகை எடுத்திருந்த பிரிட்டிஷ் கம்பெனியார், பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரரிடமிருந்து வரி வசூலிக்க முயன்றபோதெல்லாம் அவர்களிடம் போராட வேண்டியிருந்தது. 1967 இல் மேஜர் பிராண்டு என்பவரும் 1783 இல் கர்னல் புல்லர்டன் என்பவரும் பிரிட்டிஷ் கம்பெனியின் ஆணையைப் பெற்று நவாபுக்காக வரி வசூலிக்கப் பாஞ்சாலங்குறிச்சி மீது படையெடுக்க வேண்டி ஏற்பட்டது. இந்த இரண்டு முறையும் பாளையக்காரர் கோட்டையிலிருந்து தப்பியோடினர்.

கர்னல் புல்லர்டன் படையெடுத்தபோது, கோட்டையிலிருந்து 40 ஆயிரம் வராகன்களைக் கைப்பற்றினார். பிரிட்டிஷ் கம்பெனிக்கு எதிராக பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரர் கொழும்புவை ஆண்டு கொண்டிருந்த டச்சுக்காரருடன் செய்து கொண்டிருந்த உடன்படிக்கையின் நகலும் கைப்பற்றப்பட்டது. இவை சரித்திர நாயகனான வீரபாண்டியக் கட்டபொம்மனின் முன்னோர் காலத்தில் நிகழ்ந்தவையாகும்.

மறவர் குலத்தைச் சார்ந்த நெற்கட்டுஞ் செவ்வல் பாளையக்காரரான பூலித்தேவர் என்பவரும் நவாபுக்கு வரி கட்டத் தவறியதற்காக அவரது கோட்டை மீது படையெடுத்தது கம்பெனிப் படை. பாளையமே நவாபின் நேரடி ஆதிக்கத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

1792 இல் ஆர்க்காட்டு நவாபுடன் கிழக்கிந்தியக் கம்பெனி உடன்படிக்கை செய்து கொண்டபோது, வீரபாண்டியக் கட்ட

பொம்மன் பாஞ்சாலங்குறிச்சியின் பாளையக்காரனாக இருந்தான். ''கட்டபொம்மு'' என்பது குடும்பப் பெயர். ''வீரபாண்டியன்'' என்பதே அவனது இயற்பெயர். அவன் பெயரிலுள்ள ''பாண்டியன்'' என்னுஞ் சொல்லே அவன் பழைய பாண்டிய மன்னர் பரம்பரை வாரிசாக வந்தவன் என்பதைக் காட்டும்.

வீரபாண்டியன் 1790 ஆம் ஆண்டு பிப்ரவரி 14 இல் அரியாசனம் ஏறினான். பிற்காலத்தில் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியின் மாபெரும் எதிரியாக விளங்கினான் வீரபாண்டியக் கட்டபொம்மன். இவனுக்கு துரைசிங்கம் என்றொரு தம்பி உண்டு. அரக்கராதியரை அழிப்பதற்கு இராமனுக்கு வாய்த்த இலக்குவனைப் போல ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போராடத் துரைசிங்கம் துணையானான். இவனுக்கு சரியாகப் பேச வராது. அதனால் ஊமைத்துரை என்று அழைக்கப்பட்டான். கட்டபொம்மன் பாஞ்சாலங்குறிச்சியின் பாளையக்காரனாக வந்தபோதுதான் ஆர்க்காட்டு நவாப் பாளையக்காரர் மீது தனக்கிருந்த மேலதிகாரத்தை ஓர் ஒப்பந்தத்தின் மூலம் கிழக்கிந்தியக் கம்பெனிக்குக் கொடுத்தான். ஆம்; அடிமைகளை விற்பது போலப் பாளையக்கார மன்னர்களை ஆர்க்காட்டு நவாப் விலைக்கு விற்றான்.

மாக்ஸ்வெல் வருகை

மேலதிகாரம் பெற்ற கிழக்கிந்தியக் கம்பெனி மாக்ஸ்வெல் என்ற தளபதியை நெல்லை மாவட்டப் பாளையக்காரர்களிடம் அனுப்பி, வரி வசூலிக்க முயன்றது. பெரும்பாலான பாளையக்காரர்கள் தங்களை அணுகிய மாக்ஸ்வெல் துரையை மாலைமரியாதைகளோடு வரவேற்று, ஆங்கிலேய முறையிலே விருந்து வைத்து கப்பம் என்ற பெயரிலே காணிக்கைகளைச் செலுத்தினர். அவ்வளவு பாளையக்காரர்களும் ஆண்டாண்டு தோறும் வரி செலுத்தி வரவும் இசைவு தெரிவித்தார்கள். எட்டயபுரம் பாளையக்காரர் கிழக்கிந்தியக் கம்பெனி வெள்ளையரின் நம்பிக்கைக்குரிய அடிமையானார். தென் பாண்டிப் பாளையக்காரர்களைப் பற்றி உளவு சொல்வோராகவும் விளங்கினார்.

யாருக்கு, யார் வரி கொடுப்பது?

வீரபாண்டியக் கட்டபொம்மன் தன்னை நாடி வந்த மாக்ஸ் வெல் துரையை மரியாதையோடு வரவேற்றான். கம்பெனிக்கு வரி

செலுத்துமாறு துரைமகன் கேட்டபோது சினங்கொண்டான் கட்டபொம்மன். ''யாருக்கு, யார் வரி செலுத்துவது?'' என்று வெஞ்சினம் கொண்டு வினா விடுத்தான். ''நாடோடிகளாக வந்தவர்களுக்கு நாடாளு மன்னன் வரி செலுத்தவதா?'' என்றும் கேட்டான். ''வானம் பொழியுது, பூமி விளையுது, மன்னவன் காணிக்கு நேற்று வந்தவன் வரி கேட்பதா?'' என்றான்.

''தானம் கேளுங்கள் தருகிறேன். வரி கேட்டால் தரமாட்டேன். எனது இறுதி விடை இதுதான். போய் உங்கள் கம்பெனியின் கவர்னருக்குச் சொல்லுங்கள்'' என்று கூறினான். இதனால், வரி வாங்க வந்த மாக்ஸ்வெல் துரை வெறுங்கையுடன் திரும்பிச் சென்றான். மாக்ஸ்வெல்லுக்குப் பிறகும் வெள்ளை அதிகாரிகள் பலர் - குறிப்பாக, நெல்லை மாவட்டத்திலே வரி வசூலிக்கப்பதற்கென நியமிக்கப்பட்ட கலெக்டர்கள் தங்களை வந்து காணுமாறு கட்டபொம்மனுக்கு அழைப்பு விடுத்தனர். அவ்வளவு பேரும் ராணுவ அதிகாரிகள் என்பதை இங்கு நினைவில் கொள்ள வேண்டும். ஒன்றிரு அதிகாரிகள் பாஞ்சாலங்குறிச்சிக்கே வந்து கட்டபொம்மனைச் சந்தித்தபோது ஐந்நூறுக்கும் மேற்பட்ட படைவீரர்கள் சூழ வந்தனர் என்று வரலாறு கூறுகிறது.

பகை மூண்டது!

1792 இல் தொடங்கிய வரிபற்றிய தகராறு, *1798* வரை முடிவில்லாமல் நீண்டது. கட்டபொம்மனும் வரி கொடுப்பதாக இல்லை. ஆங்கிலேயரும் அவனை விட்டுவிடுவதாக இல்லை. கடிதப் போக்குவரத்து நடந்தது. தூதுவர்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டனர். டேவிட்சன் என்ற நடுநிலை உள்ளம் படைத்த வெள்ளையர் சமரசம் செய்து வைக்க முயன்றார். முயற்சி பலன் தரவில்லை. இந்தத் தகராறு அகில இந்தியாவும் அறியக்கூடிய வகையில் விளம்பரம் பெற்றது. முதலில் வெள்ளையருக்கு வரி செலுத்திய தொடை நடுங்கிப் பாளையக்காரர்களும் கட்டபொம்மன் நிமிர்ந்து நிற்பதைக் கண்டு துணிவு பெற்றனர். கட்டபொம்மனைப் பின்பற்றி வரி கொடுக்க மறுத்தனர். இந்த நிலை ஆங்கிலேயருக்கு அச்சத்தைத் தந்தது.

வீரபாண்டியக் கட்டபொம்மனுக்கு சிவசுப்பிரமணியம் பிள்ளை என்பவர் அமைச்சராக இருந்தார். அவர் சிறந்த அறவாளி. தானாபதிப் பிள்ளை என்று அவர் அழைக்கப் பட்டார். வெள்ளையத்தேவன் என்னும் மறக்குல மைந்தனைத்

தளபதியாகப் பெற்றிருந்தான் வீரபாண்டியன். தம்பி ஊமைத் துரையும் ஆண்மை மிக்க அண்ணனுக்கு ஆலோசகனாக இருந்தான். இவர்களையெல்லாம் பின்பலமாகக் கொண்டு பாஞ்சை மன்னன் வீரபாண்டியன் ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடப்படைபலம் திரட்டினான்.

ஜாக்சனின் இராசதந்திர நாடகம்

இந்நிலையிலே கடைசியாக ஜாக்சன் என்பவன் நெல்லை மாவட்ட கலெக்டராகப் பதவியேற்றான். கட்டபொம்மனுடன் போர் தொடங்குவதற்காகவே வன்னெஞ்சம் கொண்ட ஜாக்சனைக் கலெக்டராக நியமித்தது கிழக்கிந்தியக் கம்பெனி. தன்னைப் பேட்டி காண வருமாறு மன்னர் பரம்பரையில் வந்த வீரபாண்டியக் கட்டபொம்மனுக்குக் கடிகதம் எழுதினான். ஆட்டுத்தோல், மாட்டுத்தோல் வியாபாரம் செய்யப் புகுந்த கிழக்கிந்தியக் கம்பெனியின் அதிகாரியான ஜாக்சனுடைய உள்ளத்தை வீரபாண்டியன் புரிந்து கொண்டான். சண்டைக்கு இழுக்கவே பேட்டிக்கு அழைக்கிறான் பரங்கியன் என்பதை அறிவிற் சிறந்த தானாபதிப் பிள்ளை தம் அரசனுக்கு அறிவுறுத்தினார். அதனால், பேட்டி காண இசைந்து ஒரு தேதியைத் தெரிவிப்பதும், பின்னர்த் தேதியை ஒத்திப் போடுவதுமாக ராஜதந்திர நாடகம் நடத்தினான் கட்டபொம்மன்.

வீரபாண்டியன் பேட்டி காண்பதற்கான தேதிகளை மாற்றிக் கொண்டே போவது கண்டு வெகுண்ட ஜாக்சன், தானே ஒரு தேதியைக் குறிப்பிட்டு, அந்த நாளிலே நெல்லைக்கு வந்து தன்னைக் காண வேண்டுமென்றும், இதில் தவறினால் பாளையம் பறிக்கப்படுமென்றும் கடிதம் அனுப்பினான்.

இதன் பின்னர், வீரபாண்டியன் தன்னுடைய அமைச்சர் தானாபதிப் பிள்ளையுடன் ஜாக்சனைக் காண நெல்லைக்குச் சென்றான். ஆயுதம் தாங்கிய 4 ஆயிரம் படை வீரர்களையும் உடன் அழைத்துச் சென்றான். கலெக்டர் திருக்குற்றாலத்துக்குச் சென்றுவிட்டதாகவும், அங்கு வந்து தன்னைச் சந்திக்கச் சொல்லிவிட்டுச் சென்றதாகவும் வீரபாண்டியனுக்குத் தகவல் சொல்லப்பட்டது.

இராமலிங்க விலாசம்

இப்படி பல ஊர்களுக்கு இழுத்தடித்து இறுதியில் இராமநாதபுரத்தில் உள்ள இராமலிங்க விலாசத்தில் ஜாக்சன்

பேட்டி கொடுத்தான். தன்னை வீரபாண்டியன் மட்டும் தனியே வந்து காணவேண்டுமென்று கூறினான். அதற்கும் சம்மதித்துத் தமது அமைச்சர் தானாபதிப் பிள்ளையுடன் சென்று பேட்டிகண்டான். ஜாக்சன் ஒரு மன்னனிடம் காட்டவேண்டிய மரியாதையைத் தன்னிடம் காட்டாததால், வீரபாண்டியன் சினங்கொண்டு இராமலிங்க விலாசத்திலிருந்து வெளியேறினான். லெப்டினன்ட் கிளார்க் என்பவன் ஜாக்சன் ஆணைப்படி வீரபாண்டியனைக் கைது செய்ய முயன்றான். பாஞ்சை மன்னன், தன் கை வாளால் லெப்டினன்டை தலைவேறு உடல் வேறாக வெட்டிவிட்டு வெற்றிகரமாக வெளியேறி, இராமலிங்க விலாசத்திற்கு வெளியே காத்திருந்த தன் படை வீரர்களுடன் பாஞ்சாலங்குறிச்சிக்குச் சென்றான். வீரபாண்டியனுடன் வந்த அமைச்சர் தானாபதிப் பிள்ளை இராமலிங்க விலாசத்தில் கம்பெனியின் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார்.

பின்னர், கிழக்கிந்தியக் கம்பெனி அதிகாரிகள் முன் திருச்சிராப்பள்ளியில் விசாரணை நடந்தது. இராமலிங்க விலாசத்தில் நடந்த அசம்பாவிதங்களுக்கு கலெக்டர் ஜாக்சனே காரணமென்று தக்க சான்றுகளுடன் விளக்கினார் தானாபதிப் பிள்ளை. கம்பெனி நிர்வாகிகள் உண்மையை உணர்ந்து தானாபதிப் பிள்ளையை விடுதலை செய்தனர்.

இராமனாதபுரம் இராமலிங்க விலாசம் மாளிகையில் நடந்த அசம்பாவிதங்களுக்கு கலெக்டர் ஜாக்சன் கட்டபொம்மனிடம் ஆணவத்துடன் நடந்து கொண்டதே காரணமென்று தானாபதிப் பிள்ளை மூலம் அறிந்த கிழக்கிந்தியக் கம்பெனி அதிகாரிகள் பானர்மென் மீது குற்றஞ்சாட்டி விசாரணை நடத்தினர்.

கம்பெனியின் விசாரணை தொடங்குவதற்கு முன் கலெக்டர் ஜாக்சன் கட்டபொம்மனுக்கு எதிராகப் பொய்ப் புகார்களைத் தயாரித்தான். கம்பெனியின் சார்பிலிருந்த சிவகிரி, ஊற்றுமலை ஜமீன்தார்கள் கட்டபொம்மன் தங்கள் சொத்துகளைக் கொள்ளை யடித்ததாகவும், தங்கள் ஆட்களைக் கொலை செய்ததாகவும் கலெக்டர் ஜாக்சனிடம் புகார் எழுதிக் கொடுத்தனர்.

பொய்ப் புகாரா சரித்திரம்?

இந்தப் புகார்க் கடிதங்களைக் கம்பெனிமுன் சமர்ப்பித்து, தான் குற்றவாளியல்லவென்று வாதாடினான் கலெக்டர் ஜாக்சன்.

ஆனால், கம்பெனியின் நிர்வாகக் குழு, அந்தப் பொய்த் தஸ்தாவேஜுகளை நம்ப மறுத்து, பானர்மென் துரையைக் கலெக்டர் பதவியிலிருந்து நீக்கியது.

கம்பெனியாரே நம்ப மறுத்த இந்தப் பொய்த் தஸ்தா வேஜுகளை ஆதாரமாகக் கொண்டுதான் கட்டபொம்மனைக் கொள்ளைக்காரன் என்றும், கொலைக்காரன் என்றும் வருணித் தெழுதினார் கால்டுவெல் பாதிரியார். அதனை வேதமாகக் கொண்டுதான் இந்திய சரித்திராசிரியர்களும் கட்டபொம்மனைப் பழித்தெழுதுவதை வழக்கமாகக் கொண்டனர்.

ஸ்ரீவைகுண்டம் 'கொள்ளை'

இந்நிலையில், துரதிர்ஷ்டவசமான சம்பவம் ஒன்று ஸ்ரீவைகுண்டத்தில் நடைபெற்றது. கம்பெனி வெள்ளையர்கள் மக்களைப் பயமுறுத்தி, அநியாய விலைக்குத் தானியங்களை வாங்கி, மூட்டை மூட்டையாகப் பல்வேறு இடங்களில் சேமித்து வைத்துப் பாதுகாத்து வந்தனர். அந்த இடங்களில் ஒன்று ஸ்ரீவைகுண்டம்.

வெள்ளையர்களிடம் துவேஷங் கொண்ட அமைச்சர் தானாபதிப்பிள்ளை, தம் ஆட்களை ஏவிவிட்டு, ஸ்ரீவைகுண்டம் நெற்களஞ்சியத்தைக் கொள்ளையடிக்கச் செய்தார். இந்தக் கிளர்ச்சியின்போது களஞ்சியத்தைக் காவல் புரிந்தவன் கொல்லப்பட்டான்.

இதனையறிந்த கம்பெனி வெள்ளையர்கள் ஆத்திர மடைந்தனர். ஜாக்சனுக்குப்பின் கலெக்டராக வந்த லூஷிங்டன் என்பானைக் கட்டபொம்மனிடம் அனுப்பி, ஸ்ரீவைகுண்டமன் நெற் களஞ்சியத்தைக் கொள்ளையடிக்கவும், காவல்காரனைக் கொலை புரியவும் காரணமான தானாபதியைக் கம்பெனியிடம் ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டனர்.

நெற்களஞ்சியக் கொள்ளை நிகழ்ச்சியைக் கட்டபொம்மன் விரும்பவில்லை. வெறுக்கவுஞ் செய்தான் என்றாலும் தானா பதியை கம்பெனியிடம் ஒப்புவிக்க மறுத்தான். கொள்ளை யடிக்கப்பட்ட நெற்களஞ்சிய இழப்பிற்காக ஈட்டுத்தொகை கொடுக்கத் தயார் என்று கூறினான். இதற்கு கம்பெனி இணங்க வில்லை. ஆகவே, ஜாக்சன் பதவி விலக்கப்பட்டபின் ஓய்ந்திருந்த கம்பெனி - கட்டபொம்மன் பகை திரும்பவும் புத்துயிர் பெற்றது.

திடீர்ப் படையெடுப்பு!

கிழக்கிந்தியக் கம்பெனியின் நிர்வாகக் குழு கூடி, பாஞ்சாலங்குறிச்சி மீது போர் தொடுக்க முடிவு செய்தது. அதன்படி, பாளையங்கோட்டையிலிருந்து தளபதி பானர்மென் தலைமையில் பிரிட்டிஷ் படைகள் பாஞ்சாலங்குறிச்சி நோக்கி விரைந்தன. ஆம்; *4-9-1799* அன்று நள்ளிரவில் கட்டபொம்மனின் கோட்டையைத் திடீரென முற்றுகையிட்டான், தளபதி பானர்மென்.

பரங்கியர் படை புகுந்தது கட்டபொம்மன் குலதெய்வமான தேவி ஜக்கம்மாள் விழா நாளிலாகும். அந்த விழாவுக்காகத் தம்பி ஊமைத்துரையும் பாஞ்சாலப் படை வீரர் பலரும் திருச்செந்தூர் சென்றிருந்தனர். அமைச்சர் தானாபதியும் தனது சொந்த ஊரான ஆற்றூரில் இருந்தார். இதுபற்றிக் கம்பெனிக்கு உளவு சொன்னவன் கட்டபொம்மன் சாதியானான எட்டப்பன் ஆவான்.

வீரபாண்டியன் தனித்திருந்த நேரம் பார்த்து ஓரிலி, புரூஸ் டெல்லாஸ், காலின்ஸ், டக்ளஸ், டார்மீக்ஸ், பிளாக், பிரௌன் ஆகிய துணைத் தளபதிகளுடனும், காலாட்படை, குதிரைப்படை, பீரங்கிப்படை ஆகிய முப்படைகளுடனும் தளபதி பானர்மென் கோட்டையைச் சூழ்ந்துகொண்டு, போருக்குத் தயாரானான். கோட்டையைத் தாக்குமுன், துவிபாஷி ராமலிங்க முதலியார் என்பவரைக் கட்டபொம்மனிடம் தூதனுப்பினான். அமைச்சர் தானாபதியைத் தன்னிடம் ஒப்படைத்தால் போரைத் தவிர்க்கலாம் என்பது துவிபாஷி மூலம் தளபதி அனுப்பிய செய்தி. அதற்குக் கட்டபொம்மன் இணங்கவில்லை. தனது அமைச்சரை அன்னியனிடம் ஒப்புவிக்க இரண்டாவது முறையாகவும் மறுத்தான். வெற்றி அல்லது வீரமரணம். இந்த இரண்டிலொன்று தான் தனது முடிவு என்றும் தளபதி பானர்மெனுக்குப் பதில் செய்தி அனுப்பினான்.

பாஞ்சைப் போர்

பாஞ்சாலங்குறிச்சியிலிருந்து திருச்செந்தூர்வரை நகாரா (முரசு) மண்டபங்கள் உண்டு. பாஞ்சையிலுள்ள நகாரா ஒலித்தால், அதைப் பின்பற்றி அடுத்துள்ள மண்டபங்களின் நகாராக்கள் முழங்கி, செந்தூர்வரை ஒலியெழுப்பும். இது, செந்தூர் முருகனை வழிபடுவதற்காகக் கட்டபொம்மன் செய்திருந்த ஏற்பாடு. பகவானை வழிபடுவதற்கான இந்த ஏற்பாடே பகைவனது

வருகையைச் செந்தூர் சென்ற பாஞ்சாலங்குறிச்சியாருக்கு அறிவிக்கவும் பயன்பட்டது. ஊமைத்துரையும் மற்றவர்களும் பாஞ்சை திரும்பினர். கோட்டை முற்றுகையிடப்பட்டிருந்தும், எப்படியோ, பகைவரை ஏமாற்றி உள்ளே புகுந்து விட்டான் ஊமைத்தம்பி.

தானாபதியைக் கைது செய்ய ஆற்றூருக்கும் பிரிட்டிஷ் படை சென்றது. அதனிடம் அகப்படாமல் தப்பித்து, பாஞ்சையை அடைந்து, கோட்டைக்குள் புகுந்து, வீரபாண்டியனுடன் சேர்ந்து கொண்டார் தானாபதி.

பீரங்கிகளைக் கொண்டு கோட்டை தாக்கப்பட்டது. உள்ளிருந்து எதிர்த்த பாஞ்சை வீரர்கள் வெள்ளை வீரர்களால் சுடப்பட்டனர். இரு தரப்பிலும் நூற்றுக் கணக்கானவர் பலியாயினர். கம்பெனி தரப்பில் போருக்குப்பயிற்சி பெற்ற வெள்ளை வீரர்கள் 500 பேர் ஆக்கிரமிப்பில் ஈடுபட்டனர். பேய் வாய்ப் பீரங்கிகளும் துப்பாக்கிகளும் பயன்படுத்தப் பட்டன.

போதாக்குறைக்கு எட்டப்பனும் தன் படைவீரர்கள் 4000 பேருடன் வெள்ளையருடன் சேர்ந்து போர் புரிந்தான். கட்ட பொம்மன் வீரர்களிடம் வில்லும் வாளும் ஈட்டியும் வில்லும் கவணுந்தான் இருந்தன. எதிர்பாராத நேரத்தில் எதிரி தாக்கிவிட்டான்!

மாமன் துரோகியானான்!

கோட்டை வாயிலிலே நடந்த கடுமையான போரிலே பாஞ்சை மன்னனின் தளபதி வெள்ளையத்தேவன் என்பான், காலின்ஸ் என்ற துணைத் தளபதியை, தன் குத்துவாளால் குத்திக் கொன்றான். தலைமறைவாகிவிட முயன்றபோது, தன் மாமனால் காட்டிக் கொடுக்கப்பட்டு வெள்ளையத்தேவன் கைதியானான்.

ஒரே நாளில் கோட்டையைக் கைப்பற்றிவிடலாம் என்ற முடிவுடன் பானர்மேன் படையெடுத்தான். அது நடக்கவில்லை. தாக்குதலில் அவன் தரப்பில் பலியானவர்கள் போக, எஞ்சியவர்கள் சோர்ந்து போனார்கள். அதனால், போரை நிறுத்தி, பாளையங்கோட்டையிலிருந்து மேலும் காலாட் படைகளையும், பீரங்கிப் படைகளையும், குதிரைப் படைகளையும் தருவித்து,

பின்னர்ப் போரைத் தொடர்ந்தான். இதற்கிடையில் போர் தொடங்கிய நான்காவது நாள், கட்டபொம்மன், தன் வீரத்தம்பி ஊமைத்துரையுடனும், மந்திரி தானாபதியுடனும், வேறு சிலருடனும் கோட்டையை விட்டு வெளியேறி, தலைமறைவாகி விட்டான்.

ஐந்து நாள் தொடர்ந்து போராடியபின், ஆறாவது நாளான 9-10-1799 அன்று கோட்டையைக் கைப்பற்றியது கம்பெனியின் படை. கோட்டைக்குள் புகுந்த தளபதி பானர்மேன், அங்கு கட்டபொம்மன், ஊமைத்துரை, தானாபதிப் பிள்ளை ஆகிய மூவரையும் தேடினான். அவர்கள் தப்பியோடித் தலைமறைவாகி மூன்று நாட்களாகிவிட்டது அறிந்து ஏமாற்றமும் வெட்கமும் அடைந்தான். பின், அரண்மனையிலிருந்த அரசியாரையும் ஏனையோரையும் கைது செய்தான்.

அடுக்கி வந்த துரோகம்

தலைமறைவான கட்ட பொம்மனாதியர் நாகலாபுரம் பாளையக்காரரிடம் அடைக்கலம் புகுந்தனர். துரோகிகளால் தகவலறிந்து, கம்பெனிப்படை அங்கும் சென்றது. அங்கு ஒரு குட்டிப்போர் நிகழ்ந்தது. வெள்ளையர் பலரை வெட்டி வீழ்த்தி ஊமைத்துரையும் கட்டபொம்மனும் தப்பியோடி விட்டனர். தானாபதிப் பிள்ளை சிக்கிவிட்டார். அவருடன் நாகலாபுரம் பாளையக்காரர் தம்பி சௌந்தரபாண்டியனையும் கைது செய்து இராணுவக் கோர்ட் முன் விசாரணை நடத்தினான் தளபதி பானர்மேன். அவ்விருவருக்கும் மரண தண்டனை! தேசபக்தனுக்கு வேறென்ன கிடைக்கும் வெள்ளையரிடம் சிக்கிவிட்டால்!

தேசபக்தன் கழுகுக்கு இரை

தானாபதியை ஒரு வேப்பமரத்தில் தூக்கிலிட்டுக் கொன்றான் பானர்மேன்! அத்துடன் விட்டானா? பிள்ளையின் பிரேதத்திலிருந்து தலையை வெட்டி எடுத்து, அதனை, நீண்டதொரு வேல் கம்பின் முனையில் செறுகி, பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டைவாயில் முன் வைத்து வேடிக்கை பார்த்தது வெள்ளை ராணுவம்! பிள்ளையின் தலையில்லா உடலை, நாகலாபுரத்தில் காக்கைக்கும் கழுகுக்கும் இரையாக்கியது! நினைத்தாலே நெஞ்சு நடுங்குகிறது! கோழைத்தனத்தால் அல்ல, தேசபக்தியால்! வாழ்க, தானாபதிப் பிள்ளையின் புகழ்!

நாடாண்டவன் நாடோடி!

நாகலாபுரத்திலிருந்து தப்பியோடிய கட்டபொம்மனும் ஊமைத்துரையும் தலைமறைவாகி, ஊர் ஊராக அலைந்தனர். ஆம், நாடாண்ட மன்னர்கள் நாடோடிகள் ஆயினர்! சுதந்திர தேவியே, உன் அருளைப் பெற என்ன பாடுபட்டனர் தமிழ் மக்கள்!

கம்பெனி, பாண்டி நாட்டிலுள்ள பாளையக்காரர்களுக்குக் கெல்லாம் ''ஆணை'' அனுப்பியது.

''கட்டபொம்மன் கம்பெனியின் விரோதியாகி விட்டான்! அவனுக்கு அடைக்கலம் தருவோர் மன்னிக்கப் படமாட்டார்கள்! அவனைப் பிடித்துக் கொடுப்போர் பரிசு பெறுவார்கள்.''

இதுதான் கம்பெனியின் ஆணை. பரேதேசிகளிடம் சுதேச மன்னனைக் காட்டிக் கொடுத்துப் பரிசு பெறவும் இரண்டு மன்னர்கள் முன் வந்தனர். அவர்கள் புதுக்கோட்டைத் தொண்டைமானும் எட்டயபுரம் எட்டப்ப நாயக்கனுமாவர். அதிலே அவர்களிடையில் போட்டியும் இருந்திருக்க வேண்டும். ஆம்; பரிசு தருபவன் ஆறாயிரம் மைல்களுக் கப்பாலிருந்து வந்திருப்பவன் அல்லவா!

காட்டிக் கொடுத்தான் புதுக்கோட்டையான்!

புதுக்கோட்டை மன்னன் விசயரகுநாதத் தொண்டைமான் கட்டபொம்மனின் அருமை நண்பன்! ஆம்; ஆங்கிலேயனைக் கட்டபொம்மன் பகைப்பதற்கு முன்! அந்த நிலை நீடிப்பதாக நம்பி, மாவீரன் கட்டபொம்மன், புதுக்கோட்டையானின் நட்பை நாடி, அவனிடம் சென்றான். அவன் துணை புரிவான், மீண்டும் போர் புரிந்து பாஞ்சையைப் பரதேசிகளிடமிருந்து கைப்பற்றி விடலாமென்று நம்பி, கசாப்புக்காரனிடம் அடைக்கலம் புகும் ஆடு போன்று, தொண்டைமானிடம் அடைக்கலம் புகுந்தான் கட்டபொம்மன்! தான் மட்டுமல்லாமல், தம்பி ஊமைத் துரையோடு!

மன்னன் தொண்டைமான், கட்டபொம்மன் சகோதரர்களை வரவேற்று, நயமாகப் பேசி, விருந்துபசாரங்கள் நடத்தி, இரண்டு நாட்கள் தங்க வைத்தான். ஆம்; வெள்ளையனுக்கு செய்தி போக வேண்டுமல்லவா!

ஒரு நாள் புதுக்கோட்டை அரண்மனை முற்றுகையிடப் பட்டது, வெள்ளைப் படைகளால்! இல்லை, இல்லை, சுதேசிப் படைகளும் துணைக்கு வந்தன. பாவம்! வீரச் சகோதரர்கள் உண்ட மயக்கந்தீர, அரண்மனையின் மேல் மாடியில் உறங்கிக் கொண்டிருந்த நேரம்! படுக்கையறைக்குள் பரங்கிப்படை புகுந்த சத்தங் கேட்டு, விழித்துப் பார்த்தான் வீரபாண்டியன். கண்ணெதிரே வெள்ளை சோல்ஜர்கள் துப்பாக்கிகளோடு! கையில் வாளிருந்தால், ''இராமலிங்க விலாசம்'' ஆகியிருக்கும் புதுக் கோட்டை அரண்மனை! அந்த வாளைத்தான் முன்பே தொண்டை மான் வாங்கிக் கொண்டானே, பத்திரப்படுத்துவதாகச் சொல்லி!

வேறென்ன சொல்வது? வீரத்தமிழரிருவரும் கைது செய்யப் பட்டனர், வெள்ளை சோல்ஜர்களால்! கண் கலங்கினான் கட்ட பொம்மன்! 'எனக்கு இப்படியும் ஒரு நண்பனா?' என்று முனகியிருக்கும் அவன் வாய்! கைதியாகிவிட்ட கட்டபொம்மன் நேரே கயத்தாறு கொண்டு செல்லப்பட்டான். அங்குதான் தளபதி பானர்மேன் தன் இராணுவத்துடன் முகாம் செய்திருந்தான். ஊமைத்துரையை அவன் அண்ணனிடமிருந்து பிரித்து, பாளையங் கோட்டைச் சிறைக்குக் கொண்டு சென்றனர்!

மரண தண்டனை!

கயத்தாறிலே ஒரு வார காலம் சிறையில் அடைத்து வைத்த பின், 16-10-1799 -இல் இராணுவக் கோர்ட்டின் முன் விசாரணை நடத்தப் பெற்றது. கைகளிலும் கால்களிலும் விலங்கு பூண்ட கோலத்தில் நீதி மன்றத்திலே நிறுத்தப்பட்டான் சுதந்திர வீரன்!

தளபதி பானர்மேன் சாட்டிய குற்றம் என்ன? தேசத் துரோகி என்பதா? - இல்லை. அவன்தானே - கட்டபொம்மன் தானே - முதல் தேச பக்தன்! இதைத்தான் வேறு பாஷையிலே சொன்னான் பரங்கியனான பானர்மேன். ''கிழக்கிந்தியக் கம்பெனியின் விரோதி - துரோகி'' என்பது பானர்மேன் படித்த குற்றச் சாட்டு! தேசபக்தன் பரதேசி ஆதிக்கத்தின் பகைவன் தானே?

★ கம்பெனியின் கலெக்டரான ஜாக்சன் துரைமகன் அழைத்த பொழுதே ஓடி வந்து அவனைக் காணவில்லை என்பது ஒரு குற்றம்!

★ தாமதித்து - பலமுறை வர மறுத்து, பின்னர் வந்தபோதும், இராமநாதபுரம் இராமலிங்க விலாசத்திலே ஜாக்சனைக் கண்ட போதும் அவனோடு பணிவாகப் பேச மறுத்து, அவனுடன் பகைகொண்டு, தளபதி கிளார்க் என்ற ஆங்கிலேயனை வெட்டிக் கொன்றது மற்றொரு குற்றம்!

★ கிழக்கிந்தியக் கம்பெனிக்கு வரி செலுத்த மறுத்தது மாபெரும் குற்றம்!

★ தன் மேலாதிக்கத்திலிருந்த மற்ற பாளையக்காரர்களையும் கம்பெனிக்கு வரி செலுத்தாமலிருக்கத் தூண்டியது மன்னிக்க முடியாத குற்றம்!

—இப்படியெல்லாம் குற்றங்கள் சாட்டி, மன்னர் மரபில் வந்த பாஞ்சைப்பதி பாளையக்காரனுக்குப் பரதேசியாக வந்த பானர்மேன் மரண தண்டனை விதித்தான்.

கட்டபொம்மன், பானர்மேன் சொன்ன குற்றச் சாட்டுகளை மறுக்கவில்லை. ஏற்றான். ஆனால், ''அவற்றை நான் குற்றங் களாகக் கருதவில்லை'' என்று நெஞ்சை நிமிர்த்திக் கூறினான்.

கயத்தாறு என்னும் ஊரில் மங்கம்மா சாலையில் உள்ள புளிய மரமொன்றில் கட்டபொம்மனைத் தூக்கிலிட்டு தண்டனையை நிறைவேற்றினான், பானர்மேன்.

கட்டபொம்மனைப் பிடித்துக் கொடுத்த முதல் நம்பர் பிரிட்டிஷ் விசுவாசியான எட்டப்பன் உள்ளிட்ட கம்பெனியுடன் ஒத்துழைத்த பாளையக்காரர்களுக்கும் ''தண்டனை'' விதித்தான். ஆம்; கட்டபொம்மனைத் தூக்கிலிடும்போது, எட்டப்பன் உள்படக் கம்பெனி விசுவாசிகளாயிருந்த பாளையக்காரர்களை வரிசையாக நிற்கவைத்துக் கட்டபொம்மனுக்கு நேர்ந்த கதியைக் காணுமாறு செய்தான்.

கட்டபொம்மனைப் போல அவர்களும் கம்பெனியின் பகைவர்களாக மாறினால், அவர்களுக்கும் இந்தக் கதிதான் ஏற்படும் என்பதனை உணர்த்துவதற்காகத்தான் இந்த நாடகத்தை நடத்தியதாக தளபதி பானர்மேன் சென்னைக் கவர்னருக்கு எழுதினான். ஆம்; விசுவாசிகளும் விரோதிகளாக மாறக்கூடுந் தானே!

கோட்டைகள் தரைமட்டம்

கட்டபொம்மனைத் தூக்கிலிட்ட பின்னர், பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டை இடித்துத் தகர்த்துத் தரைமட்டமாக்கப்பட்டது.

கம்பெனியின் விசுவாசிகளாக இருந்த மற்ற பாளையக்காரர்களின் கோட்டைகளையும் அவர்களே இடித்துத் தரை மட்டமாக்க வேண்டுமென்று பானர்மேன் ஆணையிட்டான். இப்படி, திருநெல்வேலி மாவட்டத்தில் 2 கோட்டைகள் நாசமாக்கப் பட்டன. பாஞ்சாலங்குறிச்சி கோட்டையை இடித்து, அது இருந்த இடத்தை உழுது வெள்ளெருக்கம் விதையையும் உப்பையும் விதைத்தனர். நெல்லை மாவட்டப் பாளையக்காரர்களிடமிருந்த ஆயுதங்கள் எல்லாம் பறிமுதல் செய்யப்பட்டன.

கட்டபொம்மனுடன் புதுக்கோட்டை அரண்மனையில் கைது செய்யப்பட்ட ஊமைத்துரை உள்ளிட்ட அவன் சகோதரர்களைப் பாளையங்கோட்டையில் சிறை வைத்தனர் கம்பெனி அதிகாரிகள்.

கட்டபொம்மனைத் தூக்கிலிட்டது 1799 அக்டோபர் 16 ஆம் நாளிலாகும். அன்றுதான் இந்தியாவின் விடுதலைப் போர் - பிரிட்டிஷ் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போர் - தூக்கு மேடையிலிருந்த வண்ணம் கட்டபொம்மனால் பிரகடனம் செய்யப்பட்டது. கட்டபொம்மன் தன்மானி! பகைவராலும் போற்றத் தக்க மாவீரன்! மரணத்தின்போதும் பகைவனிடம் தலைகுனியாத வணங்காமுடி!

பகைவனும் பாராட்டினான்!

கட்டபொம்மனை இராணுவக் கோர்ட்டில் விசாரித்து அவனுக்குத் தண்டனை விதித்தது பற்றிச் சென்னைக் கவர்னர் எட்வர்ட் கிளைவ் என்பானுக்கு விவரமாக எழுதினான், தளபதி பானர்மேன். அந்தக் கடிதத்தின் சில பகுதிகள் வருமாறு:

> ''கட்டபொம்மன் பிடிபட்ட நிகழ்ச்சி நடந்தபின் நான் அவனுக்கு அரசாங்கம் விதித்துள்ள பயங்கர மரண தண்டனையைத் தெரிவித்தேன். அரசாங்கத்தின் அதிகாரத்தை அவமதித்ததற்குத் தூக்குத் தண்டனையே சரியான கழுவாய் என்பதையும் கூறினேன்.
>
> ''அதன்பின்னர், அவன் தூக்குப்போடும் இடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டான். கயத்தாற்றுக் கோட்டைக்கு அண்மையில் எல்லோரும் பார்க்கும்படியான ஓர் இடத்தில் அவன் தூக்கிலிடப்பட்டான்!
>
> ''கட்டபொம்மன் தூக்கிலிடக் கொண்டு செல்லப்பட்ட பின்னர், நான் அங்கே கூடியிருந்த பாளையக்காரர்களுக்குச்

சில விளக்கங்கள் தந்தேன். அங்கிருந்த பாளையக் காரர்களெல்லாம் நடந்த நிகழ்ச்சிகளை வியப்போடும், மன அதிர்ச்சியோடும் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

''அப்பாளையக்காரர்களை நோக்கி, கட்டபொம்மு நாயக்கன் செய்த குற்றங்கள் இன்னின்னவை என விளக்கினேன். பின்னர், அன்று நடந்த நிகழ்ச்சிகள், அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் ஆகியவை யாவும் ஏனைய பாளையக்காரர்களுக்கும் அவர்கள் சந்ததியார்களுக்கும் ஓர் எச்சரிக்கையாக இருக்கு மென்பதையும் கூறினேன்.

''வேறு எந்தப் பாளையக்காரனாவது கம்பெனியின் உத்தரவுகளை மீறி நடந்தாலும் அல்லது அரசாங்க அதிகாரத்தை அவமதித்தாலும் அவர்களுக்கும் கட்ட பொம்மனுக்கு நேர்ந்த கதியே ஏற்படும் என்பதையும் கூறி, அரசாங்க உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதே அவர்களது தலையாய கடமை என்பதையும் நினைவுறுத்தினேன்.

''இந்த இடத்தில் மற்றொரு முக்கியமான விஷயத்தைக் கூறலாமென்று கருதுகின்றேன். அது, இங்குப் பொருத்தமாக இருக்குமென்றும் நினைக்கிறேன். நேற்று நடந்த விசாரணையின்போது கட்டபொம்மு நாயக்கன் சிறிதுகூட மனக் கலக்கமின்றிக் காணப்பட்டான்.

''தன்னைப் பிடித்துக் கொடுப்பதற்குப் பெரு முயற்சி எடுத்துக் கொண்ட எட்டயபுரம் பாளையக்காரனையும், சிவகிரிப் பாளையக்காரனையும் கட்டபொம்மன் கோபமும் ஏளனமும் கலந்த பார்வையோடு பார்த்துக் கொண்டிருந்தான்.

''தூக்கு மரத்துக்கு நடத்திச் செல்லப்பட்டபோதுகூட அவன் வீர நடையோடும், வெற்றிப் பெருமிதத்தோடும் இருமருங்கிலு மிருந்த மற்றப் பாளையக்காரர்களை அருவருப் போடு பார்த்துக் கொண்டே அவர்களைக் கடந்து சென்றான். தான் தூக்குமேடை நோக்கி நடத்திச் செல்லப்பட்டபோது தன் தம்பி ஊமைத்துரை என்ன ஆனானோ என்று அவன் கவலைப் பட்டானாம். தூக்கு மரத்தினருகில் சென்றதும், 'கோட்டையை விட்டு வெளி வராமலிருந்து, அக்கோட் டையைக் காப்பாற்றும் புனிதப் போரிலே வீர மரணம் எய்தாமல் போனேனே!' என்று கூறி வருந்தினானாம்.''

வீரபாண்டியக் கட்டபொம்மன் கயத்தாற்றிலே புளியமரம் ஒன்றில் தூக்கிலிடப்பட்டான். ஊர் மக்களைத் திரட்டி வைத்து, தன் சார்பிலிருந்த அடிமைக் குணம் படைத்த பாளையக் காரர்களையும் அணிவகுத்து நிற்கச் செய்து, அவர்களெல்லாம் கண்டு நடுங்கும் வண்ணம் தூக்கிலிட்டது வெள்ளை யாதிக்கம்.

தன்மானி

தூக்கு மேடையில் ஏற்றி நிறுத்தப்பட்ட கட்டபொம்மன், தன்னை எதிர்பார்த்துப் புளிய மரத்தோடு உறவு கொண்டிருந்த தூக்குக் கயிற்றை தானே எடுத்துத் தன் கழுத்தில் மாட்டிக் கொண்டான். ஆம்; கம்பெனியின் சேவகர்கள் அதைச் செய்வதைத் தவிர்த்து விட்டான்.

தூக்குக் கயிற்றை ஏகாதிபத்தியத்தின் கைக்கூலிகள் தன் கழுத்தில் மாட்டுவது தனக்கு அவமானம் என்று அவன் கருதினான். அதனால், தானே மாட்டிக் கொண்டான். பிற்காலத்தில் வட பாரதத்தில் தூக்குத் தண்டனை பெற்ற புரட்சி வீரர் பலரும் கட்டபொம்மன் காட்டிய முறையையே கடைப் பிடித்தனர்.

அமைதியற்ற வாழ்வு!

வீரபாண்டியன் பிறந்தது 3-1-1760 இல். பாஞ்சாலங் குறிச்சிப் பாளையத்தின் அரசனானது 2-2-1790 இல். தூக்கில் மாண்டது. 16-10-1799 இல் 39 ஆண்டுகளே அம்மாவீரன் இந்நிலவுலகிலே வாழ்ந்தான். அதிலே 9 வருடம் 8 மாதம் 14 நாள்களே பாளையக்காரனாக இருந்தான். இந்தக் காலம் முழுவதிலும் பிரிட்டிஷ் கம்பெனியுடன் அவன் போர் புரிந்தான். ஒரு நாள்கூட அமைதியாக ஆட்சி நடத்த அவனை விடவில்லை ஆங்கில ஆதிக்கம்! அவனும் ஒருமணி நேரம்கூட ஆங்கிலக் கம்பெனிக்கு அடிபணியவில்லை! வெள்ளையர் ஆதிக்கத்தை எதிர்த்துப் போர் செய்த மன்னர்கள் எண்ணற்றோர் இந்திய நாட்டிலே! அவர்களுள் கட்டபொம்மன் வரலாறு தனிச் சிறப்புடையதாகும். அந்த வகையில் அவனுக்கு இணை அவன்தான்!

துரோகத்துக்குப் பரிசு!

கட்டபொம்மனைப் பிடித்துக் கொடுத்த புதுக்கோட்டை மன்னனுக்கு, பிரிட்டிஷ் கம்பெனிக்கு வரிசெலுத்தாமலே

ஆட்சிபுரியச் ''சுதந்திரம்'' வழங்கியது கிழக்கிந்தியக் கம்பெனி. தேச பக்தி வாய்ந்த மன்னனைக் காட்டிக் கொடுத்ததற்காகப் புதுக்கோட்டை மன்னன் பெற்ற ''பரிசு'' இது!

கட்டபொம்மனை ஒடுக்க எல்லா வகையிலும் ஒத்துழைப்புத் தந்த எட்டப்பனுக்குச் ''சிவஞானபுரம்'' என்னும் ஒரு கிராமத்தைப் பிரிட்டிஷ் கம்பெனி பரிசளித்தது. இந்தப் பரிசுக்கான ஆணை 22-1-1800 இல் கலெக்டர் லூஷிங்டன் மூலம் அமுல் நடத்தப்பெற்றது!

பானர்மென் பிரகடனம்!

கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட பின் தளபதி பானர்மேன் தனது கையொப்பத்துடன் மற்றுள்ள பாளையக்காரர்களுக்கு வழங்கிய ஆணை வருமாறு:

''பாளையக்காரர் எவரும் எந்தவிதமான கோட்டையையும் இனிமேல் கட்டக்கூடாது. வெடிகுண்டு, துப்பாக்கிகள் முதலிய கருவிகளை யாரும் வைத்திருக்கலாகாது. அவற்றை உற்பத்தி செய்யவும் கூடாது.

''ஈட்டி, துப்பாக்கி, வேல், வாள், வல்லயம் முதலிய படைக்கலங்களைக் குடிமக்களில் எவரும் வைத்திருக்கக் கூடாது. வைத்திருந்தால் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்படும். ஒரு ஜமீனிலுள்ள குடி மக்களுடைய நல்ல நடத்தைக்கு அந்த ஜமீன்தாரே பொறுப்பாவார். குடியானவர் யாராவது ஆயுதங்களை வைத்துக்கொண்டு ஆங்கில அரசுக்குத் தொல்லை தந்தால் அவர் கொல்லப்படுவார். அந்தக் குடியானவரை வைத்திருந்த ஜமீன்தாரும், தன் ஜமீனை இழந்து கம்பெனியாரால் தண்டிக்கப்படுவார்.''

ஜான் பானர்மேன்.

முகாம்: கயத்தாறு
21-10-1799

கப்பலேறினான்!

இந்த ஆணைப்படி பாளையக்காரர் ஒவ்வொருவரும் மன்னர் நிலையிலிருந்து ஜமீன்தார் நிலைக்குத் தாழ்த்தப் பட்டனர். ஆண்டுதோறும் ''அரசு தர்பார்'' நடத்துவதற்கு இருந்த உரிமையும் பறிக்கப்பட்டது. பிரிட்டிஷ் விசுவாசியாக

இருந்த எட்டப்பனுக்கு மட்டும் தர்பார் நடத்திக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.

பாஞ்சாலங்குறிச்சியின் மீது படையெடுக்கவும், அதைக் கைப்பற்றவும், பாஞ்சைப்பதி மன்னனைத் தூக்கிலிடவும் பொறுப்பேற்றிருந்த தளபதி பானர்மென் இவை நிகழ்ந்த 2 வாரங்கள் கழித்து இங்கிலாந்துக்குப் பயணமானான். சென்னை நகரில் அவனுக்கு மிகவும் சிறப்பான முறையில் விருந்துபசாரம் நடத்தி வழியனுப்பி வைத்தனர் கம்பெனி அதிகாரிகள்!

தலை தந்த தமிழன்

பிரிட்டிஷ் கம்பெனியாருக்கு வீரபாண்டியனை விடவும் அவனுடைய அமைச்சனாகிய தானாபதிப் பிள்ளையிடம்தான் அதிகக் கோபம் இருந்தது. தானாபதிப் பிள்ளை பிடிபட்டபோது அது பற்றிச் சென்னை கவர்னருக்குப் பானர்மென் எழுதிய கடிதம் வருமாறு:

''சிவசுப்பிரமணிய பிள்ளை கைது செய்யப்பட்டு இப்பொழுது என் முகாமுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளான், அவனைப் பிடித்துக் கொடுத்த எட்டயபுரம் ஜமீன்தாருக்குக் கம்பெனி சிறந்த பரிசுகள் வழங்க வேண்டுமென்பது என் விருப்பம்.

''பிள்ளையை நாகலாபுரத்தில் எல்லோருக்கும் தெரியும்படி பகிரங்கமான வெளியிடத்தில் தூக்கிலிட்டுக் கொல்லவும் கொன்றபின் அவனுடைய தலையை வெட்டி எடுத்துக் கொண்டு போய்ப் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை முன் நெடிய ஈட்டியில் தொங்க விடவும் திட்டம்!''

ஜான் பானர்மேன்.

முகாம்: நாகலாபுரம்
11-1-1799

தானாபதிப் பிள்ளை தூக்கிலிடப்பட்ட பின் அவருடைய வீடு, நிலம், இதர குடும்பச் சொத்துகள் யாவும் கம்பெனிக்குச் சொந்தமாக்கிக் கொள்ளப்பட்டன.

''கட்டாயச் சொர்க்கம்''

பாளையங்கோட்டைச் சிறையில் வைக்கப்பட்டிருந்த அவருடைய மனைவி முத்துவடிவு, மகன் வெள்ளைச்சாமி என்ற வேலாயுதம் பிள்ளை, மைத்துனன் இராமனாதப்பிள்ளை,

மருமகன் அனவரதம் பிள்ளை ஆகியோரைக் கம்பெனி அதகாரிகள் ''கருணை'' கூர்ந்து விடுதலை செய்தனர்!

கட்டபொம்மன் கட்சியில் சேர்ந்து பிரிட்டிஷ் கம்பெனிக்கு வரி செலுத்த மறுத்த நாகலாபுரம், கோலார்பட்டி, குளத்தூர், காடல்குடி, ஏழாயிரம் பண்ணை ஆகிய பாளையங்களின் தானாபதிகளும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் பாளையங்கோட்டைச் சிறையில் வைக்கப்பட்டனர். அவர்களில் சிலர் நோய்வாய்ப்பட்டு மரணத்தைத் தழுவினர். இது, தேசபக்தி கொண்ட மந்திரிமார்களுக்கு அன்னிய ஆதிக்கம் கொடுத்த கட்டாயச் ''சொர்க்க வாழ்வு!''

இரண்டாவது பாஞ்சைப் போர்

வீரபாண்டியக் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டதோடு வரலாற்றாசிரியர்கள் வருணிக்கும் ''பாளையக்காரர் முதல் போர்'' முடிந்தது. ஆனால், அது முடிந்த பத்தே திங்களுக்குள் ''பாளையக்காரர் இரண்டாவது போர்'' தொடங்கிவிட்டது. இந்தப் போருக்குத் தலைமை தாங்கியவன் ஊமைத்துரையாவான்!

ஊமைத்துரை பாளையங்கோட்டையில் காவற் கைதியாக அடைக்கப்பட்டிருந்த காலத்திலே, அவனைப் பெற்றெடுத்த கம்பளத்துப் பிரிவினரான தோக்கலவார் சாதியார் பரங்கியரைப் பழிவாங்கத் துடித்தனர்!

மணியாச்சி ஜங்ஷனுக்கு ஒரு கல் தொலைவிலுள்ள ஒட்டநத்தம் கிராமத்திலே புரட்சி மனம் படைத்த தோக்கலவார்கள் கூடினர். எப்படியும் பரங்கியரால் இடிக்கப்பட்ட பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டையைத் திம்பக் கட்டிமுடிப்பதென்றும், அப்படி முடித்தபின் பாளையங்கோட்டைச் சிறையைத் தகர்ந்து ஊமைத்துரையை விடுதலை செய்வதென்றும், பாஞ்சைப்பதியின் இளவரசனான அம்மாவீரன் தலைமையில் தோக்கலவார் அரசைத் தோற்றுவிப்பதெனவும் தீர்மானித்தனர். அதன்படி ஆயிரக் கணக்கான புரட்சி வீரர்கள் பாஞ்சாலங் குறிச்சியில் திரும்பவும் கோட்டையை எழுப்பினார்கள். அதற்குத் தேவைப்படும் பொருட்களை விலைக்கு வாங்கியும், கொள்ளையடித்துங்கூடக் சேகரித்தார்கள்.

சிறை தகர்ந்தது!

கோட்டை எழுப்பும் வேலை நடந்து கொண்டிருக்கும் போதே ஊமைத்துரையை விடுவிக்கும் முயற்சியிலும் அவர்கள்

ஈடுபட்டார்கள். அவர்களில் பலர் பல்வேறு மாறுவேடங்களில் திடீரென ஒருநாள் பாளையங்கோட்டைச் சிறைச்சாலையைச் சூழ்ந்துகொண்டு, அதன் தலைவாயில் கதவைத் தகர்த்தெறிந்து உள்புகுந்து, ஊமைத்துரையை விடுதலை செய்தனர். எல்லோரு மாகச் சேர்ந்து இரவோடு இரவாகப் பாஞ்சாலங்குறிச்சிக்கு நடைபோட்டார்கள்.

மீண்டும் கோட்டையில் அரியாசனமேறி அரசோச்சலானான் ஊமைத்துரை. பரங்கியரின் தாக்குதலை எதிர்பார்த்துப் போருக்குத் தயாரானான். இம்முறை துப்பாக்கிகள், வெடிகுண்டுகள் போன்ற நவீன ஆயுதங்களையும் ஊமைத்துரை அதிக அளவில் சேகரித்த வைத்துக் கொண்டான். புரட்சி வீரர்களால் தோற்றுவிக்கப்பட்ட புதிய கோட்டையானது பரங்கியர்களால் அழிக்கப்பட்ட பழைய கோட்டையை விடவும் வலுவானது என்று பிரிட்டிஷ் தலைவர்களே வருணித்துள்ளனர்.

புறப்பட்டது பரங்கிப் படை!

பாஞ்சாலங்குறிச்சியிலே புதிய கோட்டையும், ஊமைத்துரையின் தலைமையில் புதிய அரசும் தோன்றி விட்ட செய்தி கொஞ்சம் தாமதமாகவே கம்பெனியாருக்குக் கிடைத்தது. அச்செய்தி அவர்களுக்கு அதிர்ச்சியைத் தந்தது. மீண்டும் காலாட் படை, குதிரைப்படை, பீரங்கிப் படை ஆகிய முப்படைகளையும் பாஞ்சாலங் குறிச்சிக்கு அனுப்பினர். இந்த இரண்டாவது போர் தொடர்ந்து பல நாட்கள் வரை கடுமையாக நடைபெற்றது. ஆம்; முந்தைய போரை விடவும் கடுமையானது. இருதரப்பிலும் ஏராளமான உயிர்ச்சேதம் ஏற்பட்டது. திரும்பவும் பழைய குருடிதான்! வெற்றி வெள்ளையருக்குத்தான்! ஆனால், ஊமைத்துரை தப்பியோடி விட்டான்!

பாஞ்சாலங்குறிச்சிப் பாளையத்திற்குச் சொந்தமான கிராமங்களில் 79 கிராமங்களை எட்டயபுரம் பாளையத்திலும், எஞ்சிய 25 கிராமங்களை மணியாச்சிப் பாளையத்திலுமாகக் கிழக்கிந்தியக் கம்பெனியார் சேர்த்து விட்டனர். அந்தப் பாளையமே உருக்குலைக்கப்பட்டது. பாஞ்சாலங்குறிச்சி என்ற பெயரே தேசப் படத்திலிருந்து அகற்றப்பட்டது.

பாஞ்சைப் பதியின் தனி நிலை

இந்தக் கதி வடபுலத்திலும் தென்புலத்திலுமாக பிரிட்டிஷ் ஆதிக்கத்தை எதிர்த்த வேறு எந்த அரசுக்கும் ஏற்படவில்லை.

கம்பெனியை எதிர்க்கும் ஒரு அரசன் தூக்கிலிடப்பட்டால், அவனுடைய வாரிசுக்கு அரசுப் பட்டம் கட்டப்படும். அப்படித் தான் மைசூரில் நடந்தது; ஜான்சியில் நடந்தது; கிட்டூரில் நடந்தது. பாஞ்சாலங்குறிச்சியில் பிரிட்டிஷாரிடம் விசுவாசம் செலுத்தக் கூடிய வாரிசு கிடைக்கவில்லை. கட்டபொம்மன் தம்பியர் இருவரும் அவனை விடவும் தீவிரமாகக் கம்பெனியை எதிர்த்து மரண தண்டனை பெற்றனர். கட்டபொம்மனுக்கு மகப்பேறு இல்லை; ஊமைத்துரைக்கு 2 மகளும் ஒரு மகனும் உண்டு. அவர்களிலிருந்து வாரிசு எடுக்க கிழக்கிந்தியக் கம்பெனிக்கு அச்சம்! புலிக்குப் பிறந்தது பூனையாகாதல்லவா! அதனால், பாஞ்சாலங்குறிச்சிப் பாளையத்தையே அழித்து முடித்துவிட்டது பரங்கியர் ஆதிக்கம்!

தோக்கலவார் வீரம்!

கட்டபொம்மனைப் பெற்றெடுத்த தோக்கலவார் சாதியாரையும் அமைதியாக வாழவிடவில்லை பிரிட்டீஷ் ஆதிக்கம். கம்பளத்தாரிலே தோக்கலவார் என்னும் பிரிவைச் சார்ந்தவன் கட்டபொம்மன். ''தொண்டைக் குழியிலே ஜீவனுள்ள மட்டும் தோக்கலவார் சாதி தோற்குமோடா?'' என்று அம் மாவீரன் கூறினான். அந்தச் சாதியினர் அனைவருமே வெள்ளையரால் வேட்டையாடப்பட்டனர். அவர்கள் பாண்டி நாட்டிலே பல்வேறு கிராமங்களில் மறைந்து வாழ்ந்தனர்.

வீரபாண்டியக் கட்டபொம்மனின் மாவீரத் தம்பி ஊமைத் துரை நடத்திய போர் படுதோல்வியுற்றதும், அவன் கம்பெனிப் படையினர் கண்களுக்குப் படாமல் தப்பி, சிவகங்கை போய்ச் சேர்ந்தான். அப்போது சிவகங்கைப் பாளையக்காரர்களாக இருந்த மருது சகோதரர்களுக்கும் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு மிடையே உறவு சரியாக இல்லை. இதனையறிந்து கொண்டு தான் ஊமைத் துரை சிவகங்கைப் பாளையக்காரர்களிடம் அடைக்கலம் புகுந்தான்.

முத்துவடுகநாதன்

சிவகங்கைப் பாளைக்காரரான முத்துவடுகநாதரின் படைத் தளபதிகளாக பெரிய மருதுவும் சின்ன மருதுவும் நமக்கு முதன் முதலில் அறிமுகமாகின்றனர். முத்துவடுகநாதர் ஒரு போரிலே வீரமரணமடைந்தார். களத்திலே அவருடைய வீர மனைவிவேலு நாச்சியாரும் தளபதிகளான மருதுபாண்டியரும் இருந்தும் அவரைக் காப்பாற்றத் தவறிவிட்டனர். இதுபற்றிச் சரித்திர ஆசிரியர்கள் முரண்பட்ட தகவல்களைத் தருகின்றனர்.

முத்துவடுகநாதர் மரணமடைந்த பின்னர், அவர் மனைவி வேலுநாச்சியார் சிவகங்கைப் பாளையத்தின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றார். அவரது நிழலிலே மருது பாண்டியரின் செல்வாக்கு வளர்ந்தது. ஆட்சி அவர்களின் ஆதிக்கத்தில்தான் இருந்ததென்கின்றனர் சரித்திர ஆசிரியர்கள். வேலுநாச்சியாருடன் மருதுபாண்டியருக்கு அரசியல் ரீதியில் போட்டியும் பூசலும் இருந்ததாகத் தெரிகிறது. வேலுநாச்சியார் திடீரென மரண முற்றதும், அதுவரை தளபதியாக இருந்த பெரிய மருது பாளையத்தை ஆக்கிரமித்துக் கொண்டான். சுகஜீவியான பெரிய மருது ஆட்சிப் பொறுப்பிலிருப்பினும் உண்மையில் ஆட்சியை நடத்தியது ஆற்றல் மிக்க சின்ன மருதுதான்.

சிவகங்கைப் பாளையத்தின் பொறுப்பை மருது பாண்டியர் ஏற்கும்வரை அவர்களுக்கும் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு மிடையே அரசியல் ரீதியில் பூசல் எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை. மாறாக நட்பே நிலவியது என்றும் சொல்லலாம்.

உட்பூசல்

மருதுபாண்டியர் அதிகாரத்திற்கு வந்ததால் சிவகங்கை மக்களிடையே பிளவு ஏற்பட்டது. மன்னர் மரபில் பிறக்காத மருது பாண்டியர் முத்துவடுகநாதரின் - வீர வேலுநாச்சியாரின் வாரீசு களாக முடியாதென்று குடி மக்களில் ஒரு சாரார் வழக்காடினர். வழக்கம் போல கிழக்கிந்தியக் கம்பெனி இந்த வழக்கைத் தீர்த்து வைக்க வலுவில் பொறுப்பேற்றது. சிவகங்கையின் பாளையக் காரனாக வருவதற்குத் தனக்குள்ள வாரிசுத் தன்மையைத் தக்க சான்றுகளுடன் நிரூபிக்க வேண்டுமென்று பெரிய மருதுவுக்கு ''ஆணை'' அனுப்பியது ஆங்கிலக் கம்பெனி.

பெரிய மருது சிவகங்கையின் அதிபரானது ஆட்சேபனைக் கிடமில்லாதது என்று சொல்வதற்கில்லை. அந்தக் கால கட்டத்திலே 'வல்லான் வகுத்தது வாய்க்கால்' என்ற பழமொழிப் படித் தான் எங்கும் அரியணையிலேற 'வாரிசுகள்' தோன்றினர்! சிவகங்கையில் பெரிய மருது அதிகாரத்திற்கு வந்ததும் அப்படித் தான் என்கின்றனர் சரித்திராசிரியர்களிலே ஒரு சாரார். இதை ஆராய்ந்து உண்மை காண முயல்வது எடுத்துக் கொண்ட விஷயத்திற்குப் புறம்பானதாகும்.

உரிமை எது?

சிவகங்கை அரியாசனத்துக்கு வாரிசைத் தேர்ந்தெடுப்பது அந்தப் பாளையத்தின் சொந்தப் பிரச்சினையாகும். அதிலே

தலையிடுவதற்கோ, வாரிசு யார் என்பதைத் தீர்மானிப்பதற்கோ அந்நியர்களான ஆங்கிலேயருக்கு உரிமை ஏது? வடக்கில் 1857 - இல் நடைபெற்ற சிப்பாய்ப் புரட்சி முடிந்து பிரிட்டிஷ் பாராளுமன்றம் நேரடியாக இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் வரையில் ஒரு வணிகக் கம்பெனியாகத் தவிர வேறுவிதமாகக் கிழக்கிந்தியக் கம்பெனியைத் தேசபக்தியுடைய சரித்திர ஆசிரியர்கள் ஏற்பதற்கில்லை.

மருது பாண்டியரும் சிவகங்கைப் பாளையத்தின் வாரிசு விஷயத்தில் குடிமக்களிடையே ஏற்பட்ட பூசலில் கிழக்கிந்தியக் கம்பெனியார் தலையிடுவதை எதிர்த்தனர். தளபதிகளாக இருந்தோர் பாளையத்தின் ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றுவது சிவகங்கைச் சரித்திரத்தில் முன்னரும் நடந்திருக்கிறதென்பது மருதுபாண்டியரின் வாதம். பாளையம் முழுவதையுமே ஆக்கிரமித்துக் கொள்ளும் உள்நோக்கத்துடன் இருந்த கம்பெனியார் பெரிய மருதுவின் சமாதானத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. பாளையத்தின் ஆட்சிப் பொறுப்பை உரிய வாரிசிடம் ஒப்புவிக்குமாறு அவர்கள் 'ஆணை' பிறப்பித்தனர். அதையும் புறக்கணித்தனர் வீர மருதுகள்.

இந்த நேரத்தில் தான் பாஞ்சாலங்குறிச்சிப் பாளையத்தின் வாரிசான ஊமைத்துரை சிவகங்கை வந்து சேர்ந்தான். அவனும் மருது பாண்டியரும் கலந்தாலோசித்து, கம்பெனியுடன் போர் தொடுக்கத் தயாராயினர். இது பற்றிய தகவல் தெரிந்ததும், கம்பெனியே சிவகங்கை மீது வலுவில் போர் தொடுத்தது.

தூக்கு மேடையிலே...!

1801 மே *28* இல் சிவகங்கைப் பாளையத்தைத் தாக்கியது கம்பெனிப்படை. இந்தப் போர் நான்கு மாத காலம் தொடர்ந்து நடந்து, அக்டோபர் முதல் தேதியன்று காளையார்கோயில் வீழ்ச்சியிலே போய் முடிவுற்றது. மருதுபாண்டியர் கம்பெனிப் படையினரின் கையில் சிக்காமல் தப்பி விட்டனர்.

புதுக்கோட்டை மன்னன் தொண்டைமான், முன்னர்க் கட்டபொம்மனைப் பிடித்துக் கொடுத்த தேசத் துரோகத் திருத் தொண்டை மருதுபாண்டியர் விஷயத்திலும் தொடரலானான். கம்பெனிப் படையிடம் மருது பாண்டியர் சிக்கினர். அந்தச் சகோதரர்களுடன் ஊமைத்துரை உள்ளிட்ட எழுபது பேரைச் சிறைப்பிடித்தான், கம்பெனிப் படையின் தளபதி கர்னல் வெல்ஷ். பிடிபடும்போது கம்பெனிப் படையினர் சுட்டதால்

சின்ன மருதுவுக்குத் தொடையில் பலத்த காயம் ஏற்பட்டது. அந்தப் படுகாயத்துடன் கைவிலங்கு பூட்டிக் கைது செய்தனர்.

சில நாள்களுக்குப் பின்னர் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள திருப்பத்தூர்க் கோட்டையிலே மருது பாண்டியர் தூக்கிலிட்டுக் கொல்லப்பட்டனர்.

அவர்களோடு சிறைப்பட்ட ஆங்கிலேயர் கம்பெனியின் பரம்பரை விரோதியான ஊமைத்துரையை மட்டும் அவனுடைய சொந்தப் பதியான பாஞ்சாலங்குறிச்சிக்குக் கொண்டுபோய் அங்குள்ள பீரங்கி மேட்டிலே ஊரார் காணத் தூக்கிலிட்டுக் கொன்றனர்.

வீரப் புதல்வர்கள்

மருது பாண்டியர்களுடன் சிறைப்பட்டவர்களிலே சின்ன மருதுவின் இளஞ் செல்வங்களான சிவஞானம், துரைசாமி என்போரும் இருந்தனர். சிவஞானத்தை மருது பாண்டியருடன் சேர்த்துத் தூக்கிலிட்டு விட்டனர். பதினைந்தே வயதுடைய துரைசாமியையும், மற்றுஞ் சிலரையும் கப்பலில் ஏற்றித் தொலை தூரத்திலுள்ள கண்காணாத் தீவில் கொண்டு போய் சிறை வைத்தனர்.

மருது பாண்டியரும் ஊமைத் துரையும் நடத்திய பெரும் போரைப் 'பாளையக்காரர்களின் மூன்றாவது போர்' என்று வருணிக்கிறார் கால்டுவெல் பாதிரியார்.

பொய்ப் பிரசாரம்

கட்டபொம்மனைப் பற்றிப் பழி தூற்றிப் பொய்ச் செய்திகளைப் பரப்பியது போலவே மருதுபாண்டியர் பற்றியும் பலவிதமான பொய்ச் செய்திகளைப் பரப்பினர். கால்டுவெல் பாதிரியார் போன்ற ஏகாதிபத்திய எழுத்தாளர்கள், தேசபக்தியற்ற இந்திய எழுத்தாளர்களிலும் சிலர் பரங்கியர் படைத்த பழி நூல்களுக்கு வழி நூல்கள் எழுதினர். ஆனால், மருது பாண்டியருடன் போரிட்டு, அவர்களைத் தூக்கிலிட்டுக் கொன்ற பகைவனான கர்னல் வெல்ஷ் என்பான் இதயத்திலே மட்டும் கொஞ்சம் ஈரம் இருந்தது. அவன், ''எனது ராணுவ நினைவுகள்'' என்னும் தனது நூலிலே எழுதியிருப்பது வருமாறு:

''சின்ன மருதுதான் எனக்கு முதன் முதலாக ஈட்டி எறியவும், வளரி வீசவும் கற்றுக் கொடுத்தான். வளரி என்னும் ஆயுதம்

இந்தியாவிலேயே தமிழ்ப் பகுதியில்தான் பயன்படுத்தப் படுகிறது. ஆற்றலும் திறமையும் படைத்த ஒருவர் 300 அடி தூரத்திலிலுள்ள ஒரு பொருள் மீதுகூட வளரியை வியக்கத்தக்க வகையில் குறி பார்த்து எறிந்து வெற்றி பெறலாம். இத்தகைய வீர மனிதனையே நான் பிற்காலத்தில் யுத்தம் காரணமாகக் காட்டு விலங்கைப் போல் விரட்டிப் படுகாயப் படுத்திச் சாதாரண வேலையாட்களால் பிடிக்க நேர்ந்தது. அதன்பின் முறிந்து போன தொடையோடு சிறையில் அவன் நொந்து கிடந்ததையும், இறுதியாக வீரம் மிக்க தன் அண்ணனோடும், அவன் வீரத்திற்குச் சிறிதும் குறையாத அவன் மகனோடும், உயிர்த் தோழர்கள் பலரோடும் சாதாரண தூக்குமரம் ஒன்றில் தொங்கிக் கொண்டிருந்ததையும் காண நேர்ந்தது.''

(டாக்டர் ந. சஞ்சீவி எழுதிய 'மானங்காத்த மருது பாண்டியர்'; பக்கம் 47-48)

மரண வாக்குமூலம்

பெரிய மருது தான் தூக்கிலிடப்பட்டபோது தன்னை விசாரித்த இராணுவத் தளபதி முன்பு ஓர் வாக்குமூலம் கொடுத்திருக்கிறான். அதிலே எடுத்துக் கொண்ட பொருளுக்குத் தொடர்புடையவற்றை மட்டும் இங்குப் பார்ப்போம்.

''என்னுடைய ஜமீன் வேலுநாச்சிக்குப் பாத்தியமாயிருந்தது. மேற்படியாளை நான் கலியாணம் செய்துகொண்டு அவள் மூலமாக மேற்படி சிவகங்கை ஜமீனுக்குரிய உயில் சாசனம் பெற்றிருக்கிறேன்.

''நான் கிஸ்திப் பாக்கியை நிறுத்தாமல் கம்பெனிக்குச் செலுத்தி வந்திருக்கிறேன்.''

''என் தம்பி சின்ன மருது பாஞ்சாலங் குறிச்சிக் கட்ட பொம்மு ஊமைத்துரைகளுக்கு அடைக்கலம் கொடுத்துக் காத்ததாகச் சொல்கிறதைத் தவிர எனக்கு யாதொன்றும் தெரியாது.

''என் தம்பி சின்ன மருது சேர்வைக்காரனை மூன்று நாளுக்கு முன் நீங்கள் தூக்கலிட்டதால், என்னைத் தூக்காமல் நிறுத்தி வைக்கக்கூடாது. நான் யாதொரு பாவமும் தெரியாதவனா யிருந்தும், கம்பெனியாருக்கு யாதொரு பொல்லாங்கும் செய்யாதவனாயிருந்தும் என்னுடைய வலது தொடையில்

துப்பாக்கியால் சுட்டுவிட்டதனால் என்னையும் தூக்கிலிடுவது அவசியமாக இருக்கிறது.

''நான் கழுத்தில் கயிறு போட்டுக் கொள்கிறேன். சிவபெருமானே, கேட்கவும்; கம்பெனியார் அவர்கள் என்னை அநியாயமாய்த் தூக்கிலிடுகிறபடியால், என்னுடைய ஜமீன் பூராச் சொத்துக்களையும் வேறு யாருக்காவது கொடுத்தாலும் அவர்கள் எவரும் விருத்தியடையாமல் போவாராக! சிவபெருமானே, நீ வரங் கொடுக்க வேண்டும்.''

பொம்மை ராசா!

மருதுபாண்டியருடன் கம்பெனிப் படைகள் போரிட்டுக் கொண்டிருந்த போதே *12-9-1801* இல் படமாத்தூர் கௌரி வல்லபப் பெரிய உடையத் தேவன் என்பான் கம்பெனியாரால் சிவகங்கையின் அதிபனாக்கப்பட்டான். பெரிய மருதுவின் மரணத்திற்குப் பின்னும் உடையத்தேவனே ஜமீன் பதவியிலே பல ஆண்டுகள் நீடித்திருந்தான். பிறகுதான் ஜமீன் மூன்றாவது கைக்கு மாறியது.

மருது சகோதரர் விருப்பம்

தாங்கள் மாண்டதும் தங்கள் உடல்களைத் திருப்பத்தூரிலும் தலைகளைக் காளையார் கோயில் சிவன் சன்னதிக்கு எதிரிலும் சமாதி வைக்க வேண்டும் என்பதாகக் கம்பெனித் துரைகளுக்கு மருது சகோதரர்கள் வேண்டுகோள் விடுத்தனர். இந்தக் கோரிக்கை மட்டும் கம்பெனியாரால் நிறைவேற்றப்பட்டது.

போராட்ட அடிப்படை வெவ்வேறு

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் தொடக்க நிறுவனமாகிய கிழக்கிந்தியக் கம்பெனியாரின் ஆக்ரமிப்பை எதிர்த்துப் பாஞ்சாலங்குறிச்சிப்பாளையக்காரரும் சிவகங்கைச் சீமை பாளையக்காரரும் போராடினர் என்றாலும், அந்தப் போருக்கான காரணம் வேறுபடுகிறது. பாஞ்சைப்பதி மன்னன் வீரபாண்டியன், கம்பெனியின் ஆதிக்கத்தை ஏற்கவும் அதற்கு வரி செலுத்தவும் மறுத்தான். எந்த வகையிலும், எந்த அளவிலும் அந்நியர்களோடு ஒத்துப் போகாமல் வணங்காமுடியாக நிமிர்ந்து நின்றான். மருதுபாண்டியர் நிலை அதுவன்று. சிவகங்கைக்கு அதிபனாகிய பெரிய மருது கம்பெனிக்கு வரி செலுத்த மறுக்கவில்லை. வரி செலுத்தியதை மரண வாக்கு மூலத்தில் அவனே

உறுதிப்படுத்துகிறான். கம்பெனியோடு அவனுக்கிருந்த தகராறு சிவகங்கைப் பாளையத்தின் மீதான உரிமை பற்றியதாகும். அந்நியரான ஆங்கிலேயரின் மேலாதிக்கத்துக்குக் கட்டுப்பட்டு வரி செலுத்தும் பாளையக்காரனாக இருக்கப் பெரிய மருது இசைந்தும், அவனிடம் வரி வாங்க மறுத்தது கம்பெனி ஆதிக்கம். இதுதான் சிவகங்கைப் பாளையத்திற்கும் கம்பெனிக்கும் ஏற்பட்ட போருக்கான அடிப்படை.

சுதந்திரப் போர்தான்

இது எப்படியிருப்பினும், சிவகங்கையின் வாரிசைத் தேர்ந்தெடுக்கும் உரிமை அந்நியர்களால் நடத்தப்படும் கம்பெனிக்கு உண்டு என்பதை ஒப்புக்கொள்ளப் பெரிய மருது மறுத்ததும், தன்னிடம் வரி வாங்குவதற்கு அதிகமாகக் கம்பெனியார் சிவகங்கையின் உள்நாட்டு அரசியலில் தலையிடுவதை அவன் வெறுத்ததும் ஒரு வகையில் உரிமை உணர்வுதானே! பிரிட்டிஷ் கம்பெனியின் ஆதிக்கத்தை முறியடிக்க மருது சகோதரர்களால் முடிந்திருக்குமானால், அதன் மூலம் தென்னகத்தின் சுதந்திரம் காப்பாற்றப்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. அந்த வகையில் தான் மருது சகோதரர்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்த சுதந்திர வீரர்களின் வரிசையிலே இடம் பெறுகின்றனர். வாழ்க, மருது பாண்டியர் புகழ்!

★-★-★

வேலூர்ச் சிப்பாய்ப் புரட்சி

சிவகங்கைப் பாளையக்காரர் போர் முடிந்ததும் தமிழ் நாட்டில் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆதிக்கம் நிலை பெறலானது. புதுக்கோட்டை சமஸ்தானம் ஒன்றைத் தவிர சுதந்திரமுடைய ஆட்சி என்பது தமிழகத்தில் ஒரு அங்குல நிலத்தில்கூட இல்லாமல் போனது. புதுக்கோட்டைக்குக் கிடைத்த 'சுதந்திர' வாழ்வும் தமிழ் நாடு முழுவதையும் பிரிட்டிஷாருக்கு அடிமைப்படுத்துவதற்குச் செய்த 'தொண்டு'க்குக் கிடைத்த பரிசுதானே!

இந்நிலையிலே, 'வேலூரில் ''சிப்பாய்ப் புரட்சி'' என்று சொல்லத் தக்க வகையில் குட்டிப் புரட்சி ஒன்று நடைபெற்றது. ''55 ஆண்டுகளுக்குப் பின்னால், வடக்கே மிகப்பெரிய அளவில் நடந்த சிப்பாய்ப் புரட்சிக்கு ஒத்திகை வேலூரில் நடந்த புரட்சி'' என்று வீர சவர்க்கார் கூறுகிறாரல்லவா!

கோட்டையிலே இளவரசர்கள்

வேலூர் நகரில் சுற்றிலும் அகழிகளைக் கொண்ட மிகப் பெரிய கோட்டை ஒன்று இன்றும் இருந்துவரக் காண்கின்றோம். ஆர்க்காட்டு நவாபின் ஆட்சியிலிருந்த இந்தக் கோட்டையானது கிழக்கிந்தியக் கம்பெனியின் கைக்கு மாறியது. இதன் விளைவாக, மைசூர்ப் போரில் பிரிட்டிஷாரிடம் தோல்வியுற்று இந்த உலகிலிருந்தே மறைந்து போன மாவீரன் திப்புசுல்தானின் மக்கள் பிரிட்டிஷ் கம்பெனியால் கைது செய்யப்பட்டு அக்கோட்டையில் காவலில் வைக்கப்பட்டனர். இவர்கள் ஒருவர் இருவரல்லர்; 18 பேர். ஆம், ஆண்மக்கள் பன்னிருவர்; பெண் மக்கள் அறுவர். இவர்களில் ஆண் மக்களில் இருவர்க்குத் திருமணமாகி இருந்தது. இவர்களையும் சேர்த்துத் திப்புவின் குடும்பம் முழுவதையும் வேலூர்க் கோட்டையிலே குடி யமர்த்தியது பிரிட்டிஷ் கம்பெனி. அவர்களுக்குத் தேவைப்படும். பணியாட்களையும் அமர்த்திக் கொடுத்தது. நெருங்கிய சுற்றத் தாரையும் அவர்களுக்குத் துணை சேர்த்துக் கொடுத்தது.

மாற்றானுடைய மக்களாயினும், அவர்களுடைய சுதந்திரத்தைப் பறித்துக் கைதுசெய்திருப்பினும், அவர்களை மரியாதையாக நடத்தினர் கம்பெனியார்.

வெள்ளையர்களும் இந்தியர்களுமான இராணுவத்தினர் வேலூர் கோட்டையிலே காவலுக்கு நிறுத்தப்பட்டனர். இந்திய இராணுவத்தினரிலே தமிழரும் இருந்தனர். அவர்கள் எண்ணிக்கையே மிகுதி என்று சொல்லப்படுகிறது.

மதத்தில் தலையீடு!

இந்திய சிப்பாய்களிடம் மத ரீதியான மாறுதலை ஏற்படுத்தக் கம்பெனி முயன்றது. காதில் கடுக்கன் அணிவது தமிழர் வழக்கம். வேலூர்க் கோட்டையிலிருந்த சிப்பாய்களிலும் பலர் கடுக்கன் அணிந்திருந்தனர். அவர்கள் - தங்கள் காதணியைக் கழற்றிவிட வேண்டுமென்று வெள்ளை இராணுவ அதிகாரி ஆணை பிறப்பித்தான். வழக்கமாகத் தலையில் அணிந்திருந்த குல்லாயிலும் மாறுதல் செய்யப்பட்டது. தோலால் செய்யப்பட்ட காலணியும் வழங்கப்பட்டது. இந்த மாறுதல்களெல்லாம் தமிழினத்தைச் சார்ந்த சிப்பாய்களுக்குப் பிடிக்கவில்லை. அரை நூற்றாண்டுக்குப்பின், மத உணர்ச்சியைத் தாக்கக் கூடிய வகையில் இந்து சிப்பாய்களிடம் கிறித்தவர்களால் நடத்தப்பட்ட கம்பெனி ஆட்சி, மாறுதல்களைத் திணித்ததால் தான் வடபுலத்தில் சிப்பாய்ப் புரட்சி தோன்றியது. அதற்கு முன் மாதிரியாக இருந்தன, வேலூர்ச் சிப்பாய்களிடம் வெள்ளை ராணுவ அதிகாரிகள் திணித்த மாறுதல்கள். இந்த மாறுதல்களை எதிர்த்த சிப்பாய்களில் பலரைக் கைது செய்து, அவர்களை சென்னைக்கு அனுப்பி, அங்கே அவர்களுக்குக் கசையடித் தண்டனை வழங்கப்பட்டது!

நள்ளிரவில் பூத்த புரட்சி!

இந்தக் கொடுமை வேலூரிலே தங்கியிருந்த சிப்பாய் களிடையே பழி வாங்கும் உணர்ச்சியை உண்டாக்கியது. வேலூர்க் கோட்டையில் காவலில் வைக்கப்பட்ட மைசூர் இளவரசர்களும் சிப்பாய்களிடையே புரட்சியைத் தூண்டியிருக்க வேண்டும். கோட்டைக்கு வெளியே வேலூர் நகரில் வாழ்ந்த சுதந்திர உணர்வுடைய் தமிழ் மக்களோடும் கோட்டையிலிருந்த புரட்சி மனம் படைத்த சிப்பாய்களுக்கும் இரகசியத் தொடர்பு இருந்ததாகத் தெரிகிறது.

1806 ஆம் ஆண்டு சூலை மாதம் 9 ஆம் தேதியன்று இரவு பிரிட்டிஷ் ராணுவத்தைச் சார்ந்த தளபதிகள் சிலர் கோட்டைக்குள்ளேயே இந்திய சிப்பாய்கள் மத்தியில் தங்கி உறங்கினர். காவலுக்கு வைக்கப்பட்டிருந்த வெள்ளைச் சிப்பாய்களும் இரவு நேரத்தைக் கழிக்கக் கோட்டைக்குள்ளே தங்கினர். அன்று நடுநிசி கழிந்த பின்னிரவு நேரத்தில் சரியாக 3 மணிக்குப் புரட்சி வெடித்தது. போர்த் தளவாடங்கள் நிரப்பப்பட்டிருந்த அறையை இந்திய சிப்பாய்கள் கைப்பற்றினர். லெப்டினண்ட் கர்னல்கள் எண்மர் தங்கியிருந்த இல்லத்தையும் சிப்பாய்கள் முற்றுகையிட்டனர். தளபதிகளும் ஆங்கில இராணுவத்தினருமாக வெள்ளை நிறத்தவர் பலர் புரட்சி வீரர்களால் கொல்லப்பட்டனர். பல மணி நேரம் வேலூர்க் கோட்டைக்குள்ளே துப்பாக்கி வெடிச்சத்தம் ஓயவில்லை. பொழுது விடிந்து, காலைக் கதிரவன் அடிவானத்தில் தோன்றிய பின்னரும் புரட்சி நீடித்தது. லெப்டினண்ட் கர்னல்களில் சிலர் எப்படியோ கோட்டையை விட்டு வெளியேறித் தலை மறைவாயினர். கோட்டைக்குள்ளே பீரங்கிகளும் ஒலித்தன.

8 மணி நேரப் புரட்சி

கோட்டைக்குள்ளிருந்த சுமார் 400 வெள்ளை வீரர்களில், சுமார் 200 பேர்வரை கொல்லப்பட்டனர். காப்டன் மாக்லாசலன் என்ற வெள்ளைத் தளபதி உள்ளிட்ட பலர் படுகாயத்துடன் உயிர் பிழைத்தனர். இதற்குள், வெளியிலிருந்து வெள்ளைப் படைகள் தருவிக்கப்பட்டன. அப்படையினர் கோட்டையின் தலை வாயிலைக் கைப்பற்றி, கோட்டைக்குள்ளிருந்த படை வீரர்களை முற்றுகையிட்டனர்.

சூலை 9 ஆம் தேதி பின்னிரவு நேரத்தில் தொடங்கிய புரட்சி 10 ஆம் தேதி முற்பகல்வரை சரியாக எட்டுமணி நேரம் நடை பெற்றது. இதற்குள் காப்டன் யங், லெப்டினண்ட் உட் அவுஸ், கர்னல் கென்னடி ஆகிய இராணுவ உயர் அதிகாரிகளுடன் ஆர்க் காட்டிலிருந்த தளபதி வெள்ளைப் படையைத் திரட்டிக் கொண்டு வேலூர் நகருக்கு விரைந்தான். ஆர்க்காட்டுப்படை இந்தியப் புரட்சி வீரர்களை வெற்றி கண்டு கோட்டையைக் கைப்பறியது. இந்தப் புரட்சியில் வேலூர் நகர மக்களிலே ஆண்களும் பெண்களுமாகப் பலர் பங்கு கொண்டனர் என்று ''ஆர்க்காட்டு ரூபாயின் அருஞ் செயல்கள்'' என்ற நூலில் ஆசிரியர் கூறுகிறார்.

புரட்சியில் தோல்வியுற்ற இந்தியப் சிப்பாய்கள் வெள்ளையர்களால் பழிவாங்கப்பட்டனர். அவர்களில் சுமார்

800-க்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர். கோட்டையிலும் வேலூரின் சுற்றுப்புறங்களிலும் வேட்டையாடி இரண்டா யிரத்துக்கு மேற்பட்ட இந்தியச் சிப்பாய்களை வெள்ளையர்கள் கைது செய்தனர்.

வெற்றி வெள்ளையருக்கே!

வேலூரில் நிகழ்ந்த சிப்பாய்ப் புரட்சியானது எட்டு மணி நேரத்திற்குள் ஒய்ந்துவிட்டது! அதிலே, இந்துக்களும் இஸ்லாமி யர்களும் பங்கு கொண்டனர். இந்தியச் சிப்பாய்களிலேயே சிலர் துரோகிகளாக மாறி, ஆங்கிலத் தளபதிகளிடம் புரட்சி வீரர்களின் அந்தரங்கத் திட்டத்தை முன்கூட்டி அறிவித்ததனால் தான் வெள்ளையருக்கு வெற்றி கிடைத்தது. முஸ்தபா என்ற துரோகிக்கு இரண்டாயிரம் பகோடாக்களைப் பரிசளித்தது கம்பெனி அரசு.

புரட்சிக்குப் பின்னர், அதிலே முன்னணியிலிருந்தவர் களுக்கு மரண தண்டனையும் ஆண்டுக் கணக்கில் சிறைத் தண்டனையும் கம்பெனி அதிகாரிகளால் விதிக்கப்பட்டன. வேலூர்க் கோட்டையில் சிறை வைக்கப்பட்டிருந்த மைசூர்த் திப்பு சுல்தானின் மக்கள் கைதிகளாக இருந்த நிலையிலேயே கல்கத்தாவுக்கு அனுப்பப்பட்டு, அங்கே காவலிலே வைக்கப் பட்டனர். தமிழ்நாட்டில் நிகழ்ந்ததாலும், தமிழரும் பங்கு கொண்டதாலும் மைசூர் சுல்தானின் மக்கள் சிறை வைக்கப் பட்டதன் காரணமாக எழுந்த வேலூர் புரட்சியானது சுதந்திரப் போரில் தமிழகம் ஆற்றியுள்ள பங்கிலே சிறப்பிடம் பெறுகிறதெனலாம்.

★★★

தளவாய் வேலுத்தம்பி

இனி, திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு எதிராக நடந்த மற்றொரு புரட்சியில் சம்பந்தப்பட்ட தமிழ்நாட்டு வீரனொருவனையும் இங்கு அறிமுகப்படுத்த வேண்டும்.

திருவிதாங்கூர் சமஸ்தானக் குடிமக்களில் பெரும்பாலோர் மலையாளிகள் என்றாலும், கணிசமான அளவில் தமிழ் மக்களும் அச் சமஸ்தானத்தின் குடிமக்களாக இருந்தனர். ஏன், திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் தென்பகுதி முழுவதும் தமிழ்நாடுதான். அதனால், அப்பகுதி ''நாஞ்சில் நாடு'' என்னும் பெயரில் தனி நாடாகவே அக்காலத்தில் கருதப்பட்டது.

திருவிதாங்கூர்ப் புரட்சியிலே ஒரு கட்டபொம்மனாக விளங்குகின்றான் தளவாய் வேலுத்தம்பி. அவன் கட்ட பொம்மனைப் போல மன்னன் அல்லன். ஆயினும், திருவிதாங்கூர் மன்னனை ஆட்டிப் படைத்த திவானாவான். பிற்காலத்தில் திவான் என்று அழைக்கப்பட்ட பதவிக்கு வேலுத்தம்பி காலத்தில் தளவாய் என்ற பெயர் இருந்தது. வேலுத்தம்பி திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் தமிழ்ப் பிரதேசமான நாஞ்சில் நாட்டில் இரணியல் என்னும் நகருக்கு அருகில் உள்ள தலைக்குளம் என்னும் ஊரில் செல்வக் குடியில் பிறந்தவன்.

நாஞ்சில் நாட்டு மகனான வேலுத்தம்பி தளபதி பதவி வகித்தபோது பலராம வர்மா திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் மன்னனாக இருந்தான். வேலுத்தம்பிக்கு முன்பு தளவாய்ப் பதவி வகித்த ஜெயந்தன் சங்கரன் நம்பூத்ரி என்பவன் நிர்வாகத் திறமையற்றவன்; தீமைகளின் மொத்த வடிவம். அவனது திறமை யின்மையால் சமூக விரோதிகள் செல்வாக்குப் செலுத்தினர். அவனுக்கு எதிராக மக்களைத் திரட்டிப் புரட்சி செய்தான் வேலுத்தம்பி. இதனால், அவனை அகற்றி வேலுத்தம்பியைத் தளவாய்ப் பதவியில் அமர்த்தினான் திருவிதாங்கூர் மன்னன்.

பிரிட்டிஷ் விசுவாசி!

இக் காலத்தில் கர்னல் மெக்காலே என்ற வெள்ளையன் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியின் சார்பில் ரெசிடென்ட் பதவியிலிருந்தான். வெல்லெஸ்லி என்பவன் கவர்னர் ஜெனரலாக இருந்த காலமது. வேலுத்தம்பியின் நிர்வாகத் திறமைக்காக மெக்காலேயும் வெல்லெஸ்லியும் அவனை வெகுவாகப் புகழ்ந்து பேசினர். இதனால், உரிமை உணர்வற்று ஆங்கிலேயருடைய மேலாதிக்கத்தை ஆதரித்தான் வேலுத்தம்பி.

இந்நிலையிலே, சந்தர்ப்பச் சூழ்நிலை தன்னைவிடவும் அதிக அந்தஸ்தில் வேலுத்தம்பியை வைத்திருப்பது கண்டு, மன்னன் பலராம வர்மா மனம் புழுங்கினான். தளவாய்க்கும் மன்னனுக்குமிடையே சிறிது பூசல் ஏற்பட்டது. இதனைப் பயன்படுத்தி, தளவாயின் துணை கொண்டு, மன்னனைக் கம்பெனியின் அடிமையாக்க முயன்றான், ரெசிடென்ட் மெக்காலே.

நாயர் படையின் கலகம்

நாயர் படை என்பது திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் சுதேசிப் படையாகும். அதனைக் கலைத்துவிட்டு, சமஸ்தானத்தின் பாதுகாப்புக்கு வெள்ளைப் படையையே நம்பியிருக்கும் நிலையை ஏற்படுத்த முயன்றான் மெக்காலே. தளவாய் வேலுத்தம்பியும் இதற்கு ஒத்துழைத்தான். ஆனால், கலைப்பு உத்தரவை எதிர்த்துக் கலகம் செய்தது நாயர் படை. கலகத்தை முறியடிக்க வெள்ளைப் படையை உபயோகித்தனர் தளவாயும் ரெசிடெண்டும். கலகம் செய்த நாயர் படைக்குத் திருவிதாங்கூர் மக்களுடைய ஆதரவிருந்தது. அதனால், ஒரு கட்டத்திலே தளவாய் வேலுத்தம்பி மனமாற்றம் அடைந்தான். நாயர் படைக் கலைப்பு உத்தரவைத் திரும்பப் பெறுமாறு மன்னனுக்கு ஆலோசனை கூறினான். இதனை ஒட்டி, ரெசிடென்டுக்கும் தளவாய்க்கு மிடையே நட்புக் குலைந்து, பகைமை உருவானது.

சமஸ்தானம் முழுவதையும் வெள்ளைப் படையின் பாதுகாப்பில் வைக்க ரெசிடென்ட் மெக்காலே மன்னனுடைய சம்மதத்தைக் கோரினான். மக்களுடைய எதிர்ப்புக்கு அஞ்சி அதற்கு இணங்க மறுத்தான் மன்னன். பின்னர், சமஸ்தானத்துக்கும் பிரிட்டிஷ் கம்பெனிக்குமிடையே தகராறு மூண்டு, சில ஆண்டு காலம் தொடர்ந்தது.

கம்பெனியின் தாக்குதலிலிருந்து இந்து மதத்தையும் கலாசாரத்தையும் காக்கத் திரண்டெழுமாறு திருவிதாங்கூர் - கொச்சின் மக்களுக்குப் பிரகடனம் விடுத்தான் வேலுத்தம்பி. இது, 'குண்டாட் பிரகடனம்' எனப் பெயர் பெற்றது.

மக்களுடைய ஆதரவோடு மெக்காலேக்கு எதிராகப் புரட்சியைக் கிளப்பினான் வேலுத்தம்பி. உயிருக்கு அஞ்சிக் கொச்சிக்கு ஓடிவிட்டான் மெக்காலே. பின், தளவாய்ப் பதவியையும் துறந்து மக்களிடமிருந்து திரட்டியவர்களைக் கொண்ட புரட்சிப் படையின் தளபதியானான் வேலுத்தம்பி. திருவிதாங்கூர், கொச்சி ஆகிய சமஸ்தானங்களின் நிலப்பரப்பு முழுவதிலும் போர் மூண்டது. வேலுத்தம்பியின் புரட்சிப் படைக்கும், கம்பெனியின் வெள்ளைப் படைக்குமிடையில் வெற்றியும் தோல்வியும் மாறி மாறி ஏற்பட்டன. கொச்சி மந்திரி பழைய அச்சனும் வேலுத்தம்பிக்குத் துணையாக நின்றான். இறுதியில் வெள்ளைப்படைகள் வெற்றி கண்டன. தான் வீழ்ச்சியுற்ற நிலையில் வெள்ளைப்படைகள் தன்னை வேட்டை யாட வந்த போது, மாஜி தளவாய் வேலுத்தம்பி தன் கைவாளைக் கொண்டே தற்கொலை புரிந்து வீர சொர்க்கம் அடைந்தான்.

திருவிதாங்கூர் மன்னன் கம்பெனியிடம் சரணாகதி அடைந்து, அரியாசனத்தில் நிலை பெற்றான். பிரிட்டிஷ் கம்பெனிக்கு எதிராக திருவிதாங்கூர் வேலுத்தம்பியின் தலைமையில் மக்கள் நடத்திய புரட்சி, கேரள அரசால் வெளியிடப்பட்டுள்ள ''சுதந்திரப் போரில் கேரளம்'' என்னும் நூலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இன்று தமிழ்நாட்டின் ஒரு மாவட்டமாக உள்ள கன்னியாகுமரிப் பிரதேசத் தில் பிறந்தான் என்ற காரணத்துக்காக வேலுத்தம்பி நிகழ்த்திய புரட்சி சுருக்கமாக இந்நூலில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

வேலுத்தம்பியும் கட்டபொம்மனும்!

தளவாய் வேலுத்தம்பி ஆரம்பத்தில் பிரிட்டிஷாரின் நண்பனாக இருந்தானென்பதும், திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் மீது கம்பெனி பெற்றிருந்த மேலாதிக்கத்தை அவனும் ஏற்றுக் கொண்டான் என்பதும், மன்னனையும் கம்பெனிக்குப் பணிந்து போகத் தூண்டினான் என்பதும் வரலாறு கூறும் உண்மைகளாகும். இந்த வகையிலே, வணங்காமுடி கட்டபொம்மனுக்கு வேலுத்தம்பி இணையாக மாட்டான் என்றாலும், ஒரு கட்டத்தில், வெள்ளையர் ஆதிக்கத்தை எதிர்த்து வீரப்போர் நடத்தினான், ஆதலால், அவனும் சுதந்திரப் போர் வீரர் பட்டியலிலே இடம் பெறுவதற்குத் தகுதி உடையவனாகிவிட்டான், வாழ்க, வேலுத்தம்பியின் புகழ்!

★-★-★

சிப்பாய்ப் புரட்சி

இந்திய விடுதலைப் போர் வரலாற்றிலே சிறப்பிடம் பெறுகின்ற சிப்பாய்ப் புரட்சியிலே தமிழகம் பங்கு கொள்ள வில்லை என்றாலும், அதற்கான காரணத்தை விளக்குவதற் காகவேனும் இங்குச் சிப்பாய்ப் புரட்சியில் கவனம் செலுத்த வேண்டியவர்களாகிறோம்.

சரித்திர சாசனம்

1857- இல் தொடங்கி - சரியாக ஓராண்டுக் காலம் நடந்த பின் - *1858*-இல் முடிந்த சிப்பாய்ப் புரட்சியானது, மேற்கே பிஷாவர் தொடங்கி கிழக்கே கல்கத்தா வரையுள்ள நிலப்பரப்பு முழுவதும் நடந்திருக்கிறது. அந்த வகையிலே, இந்திய மண்ணில் பிரிட்டிஷ் ஆதிக்கத்துக்கு எதிராக நடந்த ஆயுதப் புரட்சிகளிலே, *1857*-இல் நடந்த சிப்பாய்ப் புரட்சி தனிச் சிறப்பைப் பெற்றுவிட்டது. இந்தியரும் ஆங்கிலேயருமான சரித்திராசிரியர் சிலர் எழுதிய நூல்கள் அந்தப் புரட்சியின் சரித்திர சாசனங்களாகிவிட்டன. ஆயினும், வீர சவர்க்கார் ஒருவர்தான், அந்தப் புரட்சியை வானளாவப் போற்றி எழுதியுள்ளார். அவர், விடுதலைப் போரில் ஈடுபட்டு, ஆயுள் தண்டனை பெற்று, அந்தமான் சிறையில் அடைக்கப்பட்டிருந்தவரல்லவா!

''வடபுலத்தில் நடந்த சிப்பாய்ப் புரட்சியிலே தென்னிந்தியா கலந்து கொண்டிருந்தால் பாரதம் முழுவதும் அப்போதே சுதந்திரம் பெற்றிருக்கும்'' என்று சரித்திர ஆசிரியர்கள் கூறுகின்றனர். ஆனால், அந்தச் சிப்பாய்ப் புரட்சியில் தென்பாரதம் ஏன் கலந்து கொள்ளவில்லை என்பதை அவர்கள் ஆராய்ந்து அறிந்ததாகத் தெரியவில்லை. அதைத் தெரிவிப்பதற்காகவே தமிழ் நாட்டிற்குத் தொடர்பில்லாத சிப்பாய்ப் புரட்சி பற்றி இங்கு ஆராயவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

வடபுலத்தில் நடந்த சிப்பாய்ப் புரட்சி தோல்வியுற்றதற்கு, தமிழ்நாடு உள்ளிட்ட தென்பாரதம் அதில் கலந்து கொள்ளாதது

தான் காரணம் என்று சொல்வது தென்னிந்திய மக்களை அவமதிப்பதாகும். தென்னிந்தியா அதில் கலந்து கொள்ளாத தற்குக் காரணம் பிரிட்டிஷ் விசுவாசத்தோடு கூடிய அடிமைப் புத்தியல்ல.

தமிழகம் கலக்காதது ஏன்?

வடபுலத்தில் சிப்பாய்ப் புரட்சி தோன்றுவதற்கு அரை நூற்றாண்டுகளுக்கு முன்பே, தென்பாரதத்தில் ஹைதரலி, திப்பு சுல்தான், வீரபாண்டியக் கட்டபொம்மன், ஊமைத்துரை, மருது சகோதரர், வேலூர்ச் சிப்பாய்கள் தளவாய் வேலுத்தம்பி, கர்நாடகத்தில் கிட்டூர் ராணி சென்னம்மாள் ஆகியோர் நடத்திய புரட்சிகள் தோல்வியுற்றமையால் சிப்பாய்ப் புரட்சியின் போது தென்னாடு ஓய்ந்து போயிருந்தது.

வடபுலம் கலந்திருந்தால்...

1792-இல் தொடங்கி 1824 வரை மேலே குறிப்பிட்ட வீரர்களும் வீராங்கனையும் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்துப் போர் நடத்தி வீழ்ச்சியுற்றனர். அவ்வளவு நீண்ட காலம் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியைத் தென்பாரதம் எதிர்த்துப் போரிட்ட போது, வட பாரதத்து மக்களும் மன்னர்களும் தங்கள் பங்கைச் செய்ய முன் வந்திருந்தால் 1857-இல் நடந்த சிப்பாய்ப் புரட்சி தேவைப்படாமலே பாரதப் பெருநாடு சுதந்திரம் பெற்றிருக்குமென்று நாமும் சொல்லலாம்.

இந்த வாதத்திலே வாய்மை உண்டு. தென் பாரதம் புரட்சி நடத்திக் கொண்டிருந்தபோது வட பாரதத்தில் கிழக்கிந்தியக் கம்பெனியின் மேலாதிக்கம் சுதேச மன்னர்களால் எதிர்ப்பின்றி ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்ததென்பது வரலாற்றைப் படிப்பவர்கள் எளிதில் அறிந்து கொள்ளக் கூடியதாகும்.

மன்னரில்லாத நாடு

சிப்பாய்ப் புரட்சியில் தமிழ்நாடு கலந்து கொள்ளாததற்கு மற்றொரு முக்கியக் காரணமும் உண்டு. வடபுலத்தில் அந்தப் புரட்சி தோன்றுவதற்கு முன்பே தமிழகத்தில் மன்னர்களின் வாழ்வு முடிந்து போய்விட்டது. தென் தமிழ்நாட்டிலே ஆயுதப் படை வீரர்களைக் கொண்டிருந்த பாளையக்காரர்கள் எல்லாம் ஜமீன்தாரர்களாக்கப்பட்டு விட்டனர். புதுக்கோட்டை மன்னரைத் தவிர ஆயுதப் படையைக் கொண்ட மன்னன் எவனும்

தமிழ்நாட்டில் இருக்கவில்லை. அதனாலும் மகாராஷ்டிர மன்னர் மரபைச் சார்ந்த நானாசாகிபும், ஜான்சியின் ராணியும், அயோத்தி நவாபும், டில்லி பாதுஷாவும் நடத்திய புரட்சியிலே கலந்து கொள்ள தமிழகத்துக்குச் சந்தர்ப்பம் இல்லாமல் போய்விட்டது. வடபுலத்தில் நடந்தது பதவியிழந்த மன்னர்களும் மத உணர்வு கொண்ட சிப்பாய்களும் கலந்த புரட்சிதான்! மக்கள் நடத்திய புரட்சியல்ல! அதனால், தமிழ் நாட்டிலுள்ள மக்களைக் குறை கூறுவதற்குச் சந்தர்ப்பமில்லை!

தென் பாரதத்தில் புரட்சி வலுவாக நடைபெற வில்லையென்றாலும், ஐதராபாத் சமஸ்தானத்தை ஒரு உலுக்கு உலுக்கக் கூடிய வகையில் அந்தச் சமஸ்தானத்தில் சிப்பாய்களில் ஒரு சாராரும், பொது மக்களும் புரட்சியைத் தொடங்கினர். ஆனால், நிஜாம் மன்னரின் துணையால் புரட்சி ஆரம்பத்திலேயே சமாளிக்கப்பட்டுவிட்டது.

வடபுலத்தில் நடந்த சிப்பாய்ப் போரின் ஒரு கட்டத்திலே இமயம் முதல் விந்திய மலைவரையுள்ள நிலப்பரப்பு முழுவதும் புரட்சிக்காரர்களின் செல்வாக்கில் இருந்தது, டில்லி, ஜான்ஸி, அயோத்தி, கான்பூர் உள்பட ஏராளமான ராஜ்யங்களைப் பிரிட்டிஷ் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டு மரபு வழிப்பட்ட மன்னர்களை அரியாசனத்தில் அமர்த்தினர் புரட்சிக்காரர்கள்.

மக்கள் புரட்சியா?

வடநாடு முழுவதும் நடந்த சிப்பாய்ப் புரட்சியில் பொது மக்கள் பெருமளவில் கலந்து கொண்டார்கள் என்று சொல்வதற்கில்லை. மக்களுக்கு, தங்கள் சுதேச மன்னர்களிடமும், அவர்களைத் தாங்கி நின்ற நிலப்பிரபுக்கள், மத குருமார்கள் ஆகியோரிடமும் நல்லெண்ணமிருக்கவில்லை. ஆம்; பல நூற்றாண்டுக் காலம் அவர்களால் மக்கள் கொடுமைப் படுத்தப் பட்டிருக்கிறார்கள் அல்லவா! அதனால், பொது மக்களில் சந்தர்ப்ப நிர்ப்பந்தத்திற்கு ஆளானார்களே - குறிப்பாக, உயர்சாதிக் க்காரர்களே புரட்சிக்காரர்கள் பக்கம் இருந்தனர்.

ஆங்கிலத்தின் மூலம் கல்வி கற்றவர்களான புதிய சாதியார் அவ்வளவு பேரும் புரட்சிக்கு எதிராகப் பிரிட்டிஷார் பக்கம் இருந்தனர். பம்பாய், புனா, கல்கத்தா, சென்னை போன்ற நகரங்களில் ஆங்கில மொழிப் புலவர்களால் நடத்தப்பட்டு வந்த சங்கங்கள் புரட்சியைக் கண்டித்துத் தீர்மானங்கள் போட்டன.

மன்னர்களின் துரோகம்

அப்போது இந்தியாவிலிருந்த 600-க்கும் மேற்பட்ட சமஸ்தானங்களிலே பிரிட்டிஷாரால் ஆக்கிரமித்துக் கொள்ளப் பட்ட ஜான்ஸி, அயோத்தி, டில்லி, மகாராஷ்டிரா, சதாரா ஆகிய சமஸ்தானங்களின் மாஜி மன்னர்கள்தான் புரட்சியில் ஈடுபட்டோ, ஆதரவு காட்டியோ பிரிட்டிஷாருக்கு எதிராக இருந்தனர். அரியணையில் இருக்க பிரிட்டிஷாரால் அனுமதிக்கப்பட்ட சமஸ்தானாதிபதிகள் புரட்சியை முறியடிக்க எல்லா வகையிலும் பிரிட்டிஷாருக்கு உதவி புரிந்தனர். இந்தியாவின் இராணுவச் சாதியாரான சீக்கியர்களும், கூர்க்கர்களும் மகாராஷ்டிரர் களிடம் தங்களுக்கிருந்த பகைமை காரணமாகப் புரட்சியை முறியடிப்பதிலே பிரிட்டிஷாருக்கு உதவி புரிந்தனர்.

இந்தக் காரணங்களால் 1857-ஆம் ஆண்டின் முற்பாதியில் தொடங்கிய சிப்பாய்ப் புரட்சி சரியாக ஓராண்டுக் காலம் நடந்து, 1858-ஆம் ஆண்டின் பிற்பாதியில் படுதோல்வியடைந்தது.

அந்தணர் ஆட்சியிலே!

புரட்சியின் கர்த்தாக்களிலே மகாராஷ்டிர அரியணையின் வாரிசான நானாசாகிப் போன இடம் தெரியவில்லை. தாத்தியாதோபே பிரிட்டிஷாரால் தூக்கிலிடப்பட்டுக் கொல்லப் பட்டார். திரு. ரஸ்ஸல் என்ற ஆங்கிலேயர், ''இந்தியாவில் எனது குறிப்புகள்'' என்னும் தலைப்பில் தாம் எழுதியுள்ள நூலில், ''சிப்பாய்ப் புரட்சியைத் தோற்கடித்தது பிரிட்டிஷார் அல்லர்; இந்தியர்களே'' என்கிறார்.

பிரிட்டிஷார் வருமுன்னர் இந்தியாவில் தாழ் சாதி மக்கள் - அதாவது, அரிசன மக்கள் உயர் சாதியினரால் மிகவும் கொடுமைப் படுத்தப்பட்டனர். தீண்டாமை, பாராமை ஆகிய கொடுமை களுக்கு ஆளாயினர். வட புலத்தில் இந்து சமஸ்தானாதிபதிகளிலே பலர் அந்தணர்களாக இருந்தனர். அவர்கள் சாதிக் கொடுமைகளை நிலைநிறுத்தும் வகையில் கொடுங்கோலர்களாக விளங்கினர்.

ஆங்கிலக் கம்பெனியின் ஆட்சியிலே தீண்டாமையும் பாராமையும் அங்கீகரிக்கப்படவில்லை. சாதி, சமய வேற்றுமை யின்றி இந்தியர் அனைவரும் சமமாக நடத்தப் பட்டனர். இந்து சமயத்தினர் மீது பிராமண வருணத்தாருக்கிருந்த தலைமைப் பிடி தளரலானது. இந்த மாறுதல்கள் கண்டு ஆறுதல் அடைந்த

தாழ்த்தப்பட்ட - பிற்பட்ட சாதிகளின் மக்கள் ஆங்கிலேயருக்கு எதிரான புரட்சியை ஆதரிக்கவில்லை.

ராணியார் பிரகடனம்

மகாராஷ்டிர வீரர் நானாசாகிப் தலைமையில் நடைபெற்ற விடுதலைப் புரட்சி தோல்வி முகம் கண்டு வந்த நேரத்தில் பிரிட்டிஷ் சக்கரவர்த்தினியான விக்டோரியா அம்மையார் ஒரு பிரகடனம் வெளியிட்டார். அது வருமாறு:

''கிழக்கிந்தியக் கம்பெனியாரிடம் இராணுவத் துறையிலும் சிவில் துறையிலும் பணி புரியும் எல்லா அதிகாரிகளையும் அவர்கள் வகிக்கும் பதவிகளில் உறுதிப்படுத்துகிறோம்.

''இந்திய சுதேச மன்னர்களுடன் கம்பெனியார் செய்து கொண்டுள்ள எல்லா உடன்படிக்கைகளையும் நாம் அங்கீகரிப்பதுடன், சிறிதும் வழுவின்றி அவற்றை நடைமுறைக்கும் கொண்டு வருவோம். சுதேச மன்னர்களும் அவ்வாறே நடந்து கொள்ளவேண்டும். தற்போது நம்மிடம் இருப்பவற்றைத் தவிர மற்றப் பிரதேசங்களை ஆக்கிரமித்துக் கொள்ள நாம் விரும்பவில்லை.

எங்களுடைய உரிமைகளிலும் எங்களுக்குச் சொந்தமான பிரதேசங்களிலும் தலையிட முயற்சிப்போர் தண்டனை யடைவார்கள். பிறர் உரிமைகளில் தலையிடவும் நாங்கள் அனுமதிக்க மாட்டோம். எங்களுடையவை போன்றே மன்னர்களின் உரிமைகள்; கௌரவம் முதலியவற்றிற்கு மரியாதை காட்டுவோம்.

''எங்கள் சொந்தக் குடிமக்களைப் போல் அவர்களுடைய குடி மக்களும் நல்லபடியாக வாழவும் முன்னேறவும் வேண்டுமென்பதே எமது விருப்பம். அவ்விதம் விளங்குவதற்கு உள்நாட்டு அமைதியும் நல்ல அரசும் இன்றியமையாது தேவைப்படுகின்றன. இந்தியரல்லாத இதர குடிமக்கள் விஷயத்தில் நாம் எவ்வாறு கடமையைச் செய்யக் கட்டுப் பட்டிருக்கிறோமோ, அது போலவே, இந்தியக் குடிமக்களுக்கும் கடமையைச் செய்யக் கட்டுபட்டிருக்கிறோம். கடவுள் அருளால் அக்கடமைகளையெல்லாம் சிறிதும் வழுவின்றியும், மனச்சான்றுக்கு முரண்படாமலும் நிறைவேற்றுவோம்.

''கல்வி - தகுதி - திறமை - யோக்கியப் பொறுப்புள்ளவர் யாராயினும், சாதி - மத வேற்றுமையின்றி அவர்களுக்கு உத்தியோகங்கள் வழங்கப்படும்.

''பிரிட்டிஷாரைக் கொல்வதில் நேரடியாகச் சம்பந்தப் பட்டவர்களைத் தவிர மற்ற குற்றவாளிகள் மன்னிக்கப்படுவார்கள்.

''அரசுக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் அதைவிட்டுத் தங்களுடைய வீடுகளுக்குத் திரும்பி வந்து அமைதியாக வாழ்க்கை நடத்துவார்களாயின், அவர்களெல் லோரையும் இதன் மூலம் யாதொரு நிபந்தனையுமின்றி மன்னித்து விடுதலை செய்வதுடன், அவர்கள் செய்துள்ள குற்றங்களையும் மறந்துவிடுவோம்.''

புரட்சி தோற்றுவிட்டது!

விக்டோரியா ராணியார் மேற்கண்ட பிரகடனத்தை வெளியிட்ட பின்னும், தலைமறைவாக இருந்த புரட்சித் தலைவர்கள் இங்குமங்குமாகச் சில இடங்களில் நாச வேலை களை நடத்தினர், ஆயினும், ஏற்கனவே வலுவற்றுப் போன புரட்சியானது ராணியாரின் பிரகடனத்தால் செத்தே போய்விட்டது!

மத விஷயங்களில் பிரிட்டிஷ் அரசு தலையிடாதென்றும், அரசாங்க உத்தியோக நியமனங்களில் சாதியும் மதமும் பார்க்கப்பட மாட்டாவென்றும் ராணியார் கூறிய உறு திமொழியானது மத உணர்வுடைய புரோகிதர்கள், மௌல்விகள் போன்றவர்களுக்குத் திருப்தி அளித்துவிட்டதால், அவர்கள் புரட்சியிலிருந்து ஒதுங்கிக் கொண்டனர். ஆம்; ராணியாரின் பிரகடனத்தால் உத்தியோகங்கள் கிறித்துவ மயமாவது தவிர்க்கப்பட்டது.

புரட்சிக்காரர்களை மன்னிப்பதில் ராணியாரின் பிரகடனப்படி பிரிட்டிஷ் அதிகாரிகள் நடந்துகொள்ளவில்லை. அவர்கள் ஈவிரக்கமின்றி பழிவாங்கப்பட்டனர். வெற்றிபெற்ற நாட்டார் தோல்வியுற்ற நாட்டாரை நடத்துவது போன்று புரட்சி நடந்த பிரதேசங்களில் வாழ்ந்த பொதுமக்களைக்கூட பிரிட்டிஷ் ராணுவ அதிகாரிகள் கொடுமைப்படுத்தினர்.

இந்தியா இரண்டானது!

புரட்சி தோல்வியுற்றதும் வட புலத்திலே சுடுகாட்டு அமைதி நிலவியது. உண்மையில் ராணியாரின் பிரகடனத்தால் பயன்பெற்றவர்கள் அதுவரை கம்பெனியாரால் ஆக்கிரமிக்கப் படாமலிருந்த சமஸ்தானங்களின் மன்னர்களேயாவர். ஆம்; சிப்பாய்ப் புரட்சி தோன்றியிராதிருந்தால் இந்தியாவிலிருந்த அத்தனை சமஸ்தானங்களையும் கம்பெனியார் ஆக்கிரமித்து

முடித்திருப்பார்கள். புரட்சியின்போது பட்ட அல்லல்களால் புரட்சிக்கு முன்பு தாங்கள் செய்த தவறுகளை பிரிட்டிஷார் உணர்ந்தனர். அதன் விளைவாக, அதுவரை ஆக்கிரமித்துக் கொண்ட சமஸ்தானங்கள் போக, மற்ற சமஸ்தானங்களை ''சுதந்திர''மாக இயங்க அனுமதித்தனர். இதனால், நிர்வாக முறையில், ''பிரிட்டிஷ் இந்தியா'' என்றும் ''சமஸ்தான இந்தியா'' என்றும் இந்தியப் பெருநாடு இரண்டாக உருவெடுத்தது. ஆனால், இரண்டும் பிரிட்டிஷ் மன்னரின் - பிரிட்டிஷ் பார்லிமெண்டின் ஆதிக்கத்திற்கு உட்பட்டவையாகவே இருந்தன.

ராணியின் பிரகடனத்திற்குப் பின்னர், டில்லியில் அதுவரை கவர்னர் ஜெனரலாக இருந்தவர், சமஸ்தான இந்தியாவின் நிர்வாகத்தைப் பொறுத்தவரை வைசிராயாகவும் இருக்க அனுமதிக்கப்பட்டார். ஆம்; ஒரே நபர் பிரிட்டிஷ் இந்தியாவை நிர்வகிப்பதிலே கவர்னர் ஜெனரலாகவும், சமஸ்தான இந்தியாவை நிர்வகிப்பதிலே வைசிராயாகவும் இருக்கலானார்.

தேசிய ஒருமைப்பாடு

புரட்சியால் இந்தியாவுக்குக் கிடைத்த லாபம் ஒன்று உண்டு. அது, கொள்ளைக்காரர்களும் கொடியவர்களுமான கிழக்கிந்தியக் கம்பெனியாரின் நிர்வாகத்திலிருந்து பிரிட்டிஷ் பார்லிமெண்டின் நேரடி நிர்வாகத்திற்கு இந்தியா உட்பட்டதாகும். ஆம், பிரிட்டிஷார் வருவதற்கு முன்பு நடந்த இந்திய மன்னர்களின் கொடுங்கோலாட்சியையும் அவர்கள் வந்த பின் நடந்த கம்பெனியாரின் கொள்ளை ஆட்சியையும்விட ஒரு வகையில் ''நல்ல ஆட்சி''யாக இருந்தது பிரிட்டிஷ் பார்லிமெண்டரி ஆட்சி!

அத்துடன், சுமார் எழுநூறுக்கும் மேற்பட்ட சமஸ் தானங்களாகச் சிதறுண்டு கிடந்த இந்தியா ஒரே ஆட்சி முறைக்குட் பட்ட பெரும் நாடானது. புரட்சி தோற்று, கம்பெனியாட்சியும் மறைந்து, பிரிட்டிஷ் பார்லிமெண்டரி ஆட்சி இந்தியாவில் தோன்றியபோதுதான் அரசியல் வழிப்பட்ட தேசிய ஒருமைப்பாடு முதன் முதலாக உருவானது. அதிலிருந்த ஒரு குறை என்னவென்றால், பரதேசிகளால் - அவர்கள் நன்மைக்காக அது உருவாக்கப்பட்டதாகும்.

தெளிவிருக்கவில்லை!

புரட்சி பிறந்தபோதே அது தோல்வியுறுவதற்கான அம்சங்களும் அதனோடு சேர்ந்து பிறந்தன. புரட்சியானது,

திறமைமிக்க - பரந்த உள்ளம் படைத்த வீரத் தலைவனைப் பெற்றிருந்தும், அந்தப் புரட்சியை நடத்துவதற்கான தகுதியைப் பெற்றவர்களைக் கொண்ட ஒரு புரட்சிக் கவுன்சில் அகில இந்திய ரீதியில் திறம்பட இயங்கியதென்று சொல்வதற்கில்லை. புரட்சி வெற்றி பெற்றால், அதன்பின் தோன்றும் ஆட்சி இந்து சாம்ராஜ்யமா? இஸ்லாம் சாம்ராஜ்யமா? அல்லது சமயச் சார்பற்ற சாம்ராஜ்யமா? - என்ற பிரச்னைகளிலே புரட்சித் தலைவர்களுக்குத் தெளிவிருந்ததாகத் தெரியவில்லை. அவர்கள் நடத்திய புரட்சியானது ஆரம்ப வெற்றியைக் கண்டிருந்த சமஸ்தானங்களிலே, பிரிட்டிஷாரால் மாஜிகளாக்கப்பட்ட பழைய கொடுங்கோலர்களையே திரும்பவும் அரியணையில் அமர்த்தினர். புரட்சி ஓராண்டுக்கு மேற்பட்ட காலம் நடந்தும், அந்தக் காலத்திலே தெற்கே விந்தியம் முதல் வடக்கே இமயம்வரையுள்ள மிகப் பெரிய பிரதேசம் புரட்சியாளர்களின் செல்வாக்கிலிருந்தும், அந்தப் பிரசேதம் முழுவதற்குமான ஒரு தேசிய (பொது) ஆட்சியை நிறுவப் புரட்சித் தலைவர்கள் முயன்றதாகத் தெரியவில்லை.

வெற்றி பெற்றிருந்தால்?

புரட்சி வெற்றி பெற்று, பிரிட்டிஷார் வெளியேற்றப் பெற்றிருந்தால், இந்தியாவின் நிலை எதுவாக இருந்திருக்கும்? இந்த வினாவுக்கு விடை காண்பது சுலபந்தான். ஒன்று, நானாசாகிப் தலைமையில் மகாராஷ்டிர இந்து சாம்ராஜ்யம் தோன்றியிருக்கும். அதிலே பிரிட்டிஷார் வருமுன் இருந்த மகாராஷ்டிர பிராமண பீஷ்வாக்கள் ஆட்சியில் நிலவிய வருணாசிரம - சாதிக் கொடுமைகளும், நிலப் பிரபுக்களின் சுரண்டலும் திரும்பவும் புத்துயிர் பெற்றிருக்கும். அஃதின்றேல், புதுடில்லியில் திரும்பவும் பகதூர் ஷா தலைமையில் மொகலாயப் (முஸ்லிம்) பேரரசு புத்துயிர் பெற்றிருக்கும்.

இந்த இரண்டில் எது நிகழ்ந்திருந்தாலும் - அதாவது, பிராமண பீஷ்வா தலைமையில் இந்து சாம்ராஜ்யம் தோன்றியிருந்தாலும், மாறாக, மொகலாய சாம்ராஜ்யமே புத்துயிர் பெற்றிருந்தாலும் சொற்ப கால அவகாசத்திற்குப் பிறகு திரும்பவும் மதரீதியில் உள்நாட்டுக் கலகம் தோன்றி நாட்டை அலைக்கழித்திருக்கும். இதற்கெல்லாம் காரணம், சிப்பாய்ப் புரட்சியானது, முற்போக்கான அரசியல் - பொருளாதார சித்தாந்தத்தின் அடிப்படையில் நடைபெறாததுதான். புரட்சித் தலைவர்கள் மதப்பற்றும் நாட்டுப் பற்றும் உடையவர்களென்றாலும், அவர்கள் அழுகிப்போன பழைய வருணாசிரம,

சாதிக்கொடுமைகளை நீட்டிக்கவும் நிலைநாட்டவும் விரும்பும் பிற்போக்காளர்களாகவும் இருந்தனர் என்பதில் கொஞ்சங்கூட ஐயமில்லை.

தமிழகத்தின் பங்கு

சிப்பாய்ப் புரட்சியில் தமிழகம் நேரடியாகப் பங்கு கொள்ள வில்லையென்றாலும், அந்தப் புரட்சியானது தமிழகத்தின் விடுதலைக்காகவும் நடைபெற்றது என்ற உண்மையை உணரவும், அதிலே ஈடுபட்டு இன்னலுற்ற தியாகிகளைப் பெருமைப் படுத்தவும் தமிழ்மக்கள் தவறினார்களில்லை. சிப்பாய்ப் புரட்சியின் அருமை பெருமைகள் காந்தியடிகள் சகாப்தத்தில் தான் சாதாரணத் தமிழர்களுக்குத் தெரிய வந்தன. வீர சவர்க்கார் அவர்கள் ''எரிமலை அல்லது முதலாவது இந்திய விடுதலைப் போர்'' என்னும் தலைப்பில் வடபுலத்தில் நடந்த சிப்பாய்ப் புரட்சி பற்றி ஆங்கிலத்தில் விரிவாக எழுதி வெளியிட்டார். அந்நூல் பிரிட்டிஷ் ஆட்சியின் தடைக்கு உள்ளானது. அதை வைத்திருப்பதோ, பிரதேச மொழிகளில் மொழி பெயர்த்து வெளியிடுவதோ சிறைத் தண்டனைக்குரிய குற்றம் என்று அறிவிக்கப்பட்டது. அந்த நிலையிலும் திருமதி சௌந்தரம் ராமச்சந்திரன் அவர்கள், தடை செய்யப்பட்ட அந்த நூலைத் தமிழில் மொழி பெயர்த்துக் கொடுத்தார்கள். அதனைப் பதிப்பிப்பதற்கு தமிழகம் பெற்றெடுத்த தேசியத் தலைவர்களில் ஒருவரான டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு நிதி திரட்டிக் கொடுத்தார். அப்பொழுது பிரெஞ்சு ஆதிக்கத்திலிருந்த காரைக்காலில் அந்நூல் அச்சிடப்பட்டு, தமிழக மக்களிடையே விற்கப்பட்டது. இதனைத் தடுப்பதற்காக மதுரையில் பல வீடுகள் போலீசாரால் சோதனையிடப்பட்டன. மதுரை மாவட்ட தேச பக்தர்கள் பலர் போலீசாரால் வேட்டையாடப்பட்டனர்.

சிப்பாய்ப் புரட்சியில் உலகுக்கு அறிமுகமான வீராங்கனை யான ஜான்சியின் பெயர் தமிழகத்தில் எண்ணற்ற பெண் குழந்தைகளுக்கு வைக்கப் பெற்றது. வீதிகளுக்கும் பூங்காக் களுக்கும்கூட வைக்கப்பட்டது.

நீல் சிலைப் போர்!

சிப்பாய்ப் புரட்சியை ஒடுக்குவதற்கு நெஞ்சாலும் நினைத்துப் பார்க்க முடியாத கொடுமைகளைப் புரிந்த கர்னல் நீல் என்பவனுக்குச் சென்னை நகரின் மத்திய பகுதியில் வெண்

கலத்தாலான உருவச்சிலையை நிறுத்தியது பிரிட்டிஷ் ஆட்சி. அதனை அங்கிருந்து அகற்ற வேண்டுமெனக் கோரித் தமிழக தேச பக்தர்கள் 1927-இல் சத்தியாக்கிரகப் போர் நடத்தினர். சிலையை உடைத்துச் சேதப்படுத்த முயன்றதற்காகப் பலர் சிறைத் தண்டனையும் பெற்றனர். இந்தப் போர் அப்போதைக்கு வெற்றி தரவில்லையென்றாலும், 1937-இல் ராஜாஜியை முதலமைச்சராகக் கொண்டு சென்னை ராஜ்யத்தில் காங்கிரஸ் ஆட்சி தோன்றிய போது நீல் சிலை மவுண்ட் ரோடிலிருந்து அகப்பற்றப்பட்டு, சென்னை மியூசியத்தில் சேர்க்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக ளெல்லாம சிப்பாய்ப் புரட்சிக்குத் தமிழ் மக்கள் காட்டிய மதிப்பைப் புலப்படுத்துவனவாகும்.

சிப்பாய்ப் புரட்சியானது வடபுலத்தில்தான் நிகழ்ந்த தென்றாலும், அப்போதைக்கு அது வெற்றி பெற்றிருந்தால் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி ஆதிக்கத்திலிருந்து தமிழகத்திற்கும் விடுதலை கிடைத்திருக்கும். அந்த வகையிலே வீர சவர்க்கார் எடுத்துக் காட்டியது போன்று, இந்தியா முழுவதன் சுதந்திரத்திற்காகவும் சிப்பாய்ப் புரட்சி நடைபெற்றது என்பதில் ஐயமில்லை.

★-★-★

தேசிய கலாசார எழுச்சி

1757 முதல் 1857 வரை நாட்டில் தோன்றிய ஏகாதிபத்திய எதிர்ப்புப் புரட்சிகள் தோற்கக் காரணம் அவற்றிற்குப் பொது மக்களுடைய ஆதரவு இல்லாததுதான். இந்திய மன்னர்களிடமோ, மதத் தலைவர்களிடமோ சமுதாயத்தின் அடித்தளத்தில் இருந்த சாதாரண மக்களுக்குப் பற்றோ, பாசமோ இருக்கவில்லை. அதற்குக் காரணம், அவர்களெல்லாம் மன்னர்களாலும் மதத் தலைவர்களாலும் ஒடுக்கப்பட்டு வந்ததுதான்.

தாழ்த்தப்பட்டோர் நிலை

இந்து சமுதாயத்தில் தீண்டாமைக் கொடுமை இருந்து வந்ததால், பலகோடிக் கணக்கான தாழ்த்தப்பட்ட மக்கள், மதத் தலைவர்களின் மீதும் மன்னர்கள் மீதும் நம்பிக்கை வைத்து, பிரிட்டிஷாரை எதிர்க்க முன்வரவில்லை. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அடுத்த நிலையில் இருந்த பிற்பட்ட சாதிகளைச் சார்ந்தவர்கள் நிலையும் இதுதான். இராமன் ஆண்டாலென்ன, இராவணன் ஆண்டாலென்ன என்ற மனப்பான்மையுடன் நாட்டில் நடந்த அரசியல் கலவரங்களை அவர்கள் வேடிக்கை பார்த்தனர். அதனாற்றான், தங்களை எதிர்த்த மன்னர்களையும் பாளையக் காரர்களையும் பொதுமக்களைத் திரட்டி வைத்து, அவர்கள் பார்க்கும்படியாக வெள்ளையர்கள் தூக்கிலிட முடிந்தது. பொது மக்கள் தங்களுக்கு எதிராக இல்லையென்ற நம்பிக்கை வெள்ளையருக்கு இருந்தது.

தாழ்த்தப்பட்டவர்களோ, பிற்பட்டவர்களோ கோழைகள் அல்லர். அன்னிய ஆட்சியை விரும்பியவர்களுமல்லர். அவர்களுடைய நல்லெண்ணத்தை நாட்டின் சுதந்திரத்தைக் காக்கப் போராடியவர்கள் பெற்றிருந்திருப்பார்களானால் பரங்கியர் படையை எதிர்த்து அவர்கள் கலகஞ் செய்திருப்பார்கள். துரதிருஷ்ட வசமாக அந்த நிலை காந்தியடிகள் தோன்றுவதற்கு முன்பு இந்திய நாட்டில் எந்த நாளிலுமே இருக்கவில்லை. காந்தி சகாப்தத்திற்கு முற்பட்ட காலத்துப் பொது மக்களின் மனோநிலையை பாரதியார் கூறக் கேட்போம்.

''இந்தியா நமது தாய்நாடு. இந்தியர் எல்லோரும் நம்முடைய சகோதர, சகோதரிகள்'' என்ற எண்ணமே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏற்படாதபடி அவர்களை உயர்சாதி மக்கள் கொடுமைப் படுத்தி வந்தனர். இந்த நிலையில் அவர்கள் பரங்கியருக்கெதிராகத் தேச விடுதலைப் போரில் கலப்பார்களா? பிரிட்டிஷார் புகுந்த போது மட்டுமல்லாமல், அவர்களுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னே மொகலாயர் பாரதத்தில் புகுந்த போதும், தாழ்த்தப் பட்டோர், அந்த அன்னியரை எதிர்க்காததோடு, அவர்களை வரவேற்கவும் செய்தனர். இதுபற்றிப் பாரதியார் கூறுவது வருமாறு:

''1200 வருடங்களுக்கு முன்பு, வடநாட்டிலிருந்து முகமதியர்கள் பஞ்சாப் நாட்டில் பிரவேசித்தபோது, நம்மவர்களின் இமிசை பொறுக்க முடியாமல் வருந்திக் கொண்டிருந்த பள்ளர், பறையர் பேரிகை கொட்டி, மணிகள் அடித்துக் கொண்டுபோய் எதிரிகளுக்கு நல்வரவு கூறி அவர்களுடன் கலந்து கொண்டதாக இதிஹாசம் சொல்லு கின்றது.''

(பாரதி கட்டுரைகள் - 'ஆறிலொரு பங்கு)

அசோக் மேத்தா கூற்று!

சிப்பாய்ப் புரட்சியின்போது பிரிட்டிஷ் கம்பெனியின் ராணுவத்தில் உயர்சாதியினரே மிகுதியாக இருந்தனரென்றும், அவர்கள்தான் புரட்சியில் ஈடுபட்டனரென்றும், இராணுவத்திலிருந்த தாழ்த்தப்பட்ட சாதி மக்கள் புரட்சியை ஒடுக்கப் பிரிட்டிஷாருடன் ஒத்துழைத்தனர் என்றும், ''இந்தியாவின் முதல் புரட்சி - 1857'' என்ற தமது நூலில் திரு. அசோக்மேத்தா கூறுகிறார். அவர் மேலும் கூறுவதாவது:

''பம்பாய், சென்னை ஆகிய மாகாணங்களில் இருந்த சிப்பாய்கள் புரட்சியில் சேரவில்லை. பம்பாயிலும் சென்னையிலும் பட்டாளத்துக்கு ரொம்ப தாழ்ந்த வகுப்பினரையே திரட்டியிருந்தனர். வங்கத்தில் இதற்கு மாறாக நிலைமை இருந்தது. வங்க இராணுவத்தில் 400 பிராமணர்களும், 200 ரஜபுத்திர க்ஷத்திரியர்களும், 200 முஸ்லீம்களும் 200 தாழ்த்தப்பட்ட வகுப்பினரும் இருந்தனர். காசி, பண்டல்கந்த் ஆகிய இடங்களில் இருந்த துருப்புகளில் உயர் சாதியினரான ரஜபுத்திரரும் பிராம்மணருமே ஆதிக்கம் வகித்தனர். இதனால், புரட்சிப் பிரகடனம் உயர் சாதியினரையே கவர்ந்தது.

''தாழ்த்தப்பட்ட சாதி மக்களின் ஆதரவைக் கொண்டு அயோத்தியைக் காத்துவிடப் போவதாகப் பறைகொட்டினான்

சர்.ஹென்ரி லாரன்ஸ். தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்களான சிப்பாய்கள் தங்கள் குடும்பங்களோடு சேர்ந்து வாழலாமென்றும் வெள்ளையர்கள் கூறினார்கள்.

''பட்டமிழந்த மன்னர்கள், நலிவுற்றிருந்த பிரபுக்கள், மாஜி ஜமீன்தார்கள் முதலியோரின் ஆதரவையே புரட்சித் தலைவர்கள் எதிர்பார்த்தார்கள். சுதேச மன்னர்களின் ஆதரவோடு நிலை பெற்றுவிட்ட பிரிட்டிஷ் ஆட்சியை வெளியேற்ற முடியாது, பொது ஜனங்கள் ஆதரவால்தான் அதைச் செய்ய முடியும் என்பதை உணர்ந்து, தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப்பட்ட மக்கள் ஆதரவைப் புரட்சிக்காரர்கள் திரட்டவில்லை. இதனால், புரட்சியின் ஆரம்பத்திலேயே அது தோல்வியுறுவதற்கான காரணமும் சேர்ந்து கொண்டு விட்டது.''

(''இந்தியாவின் முதல் புரட்சி - 1857'' (தமிழ்); பக், 81-82)

டால்ஸ்டாய் கருத்து

காந்தியடிகளால் தம் குரு எனக் கருதப்பட்ட ருஷ்ய ஞானியான டால்ஸ்டாயும், ''பலகோடி மக்களைக் கொண்ட இந்தியாவானது ஒரு பிரிட்டிஷ் கம்பெனிக்கு அடிமைப்பட்டதற்கு இந்திய சமுதாயத்திலுள்ள குறைபாடுகளே காரணம்'' என்று கூறுகிறார். மேலும் அவர் கூறுவதாவது:

> வியாபாரஞ் செய்ய வந்த ஒரு கம்பெனிக்காரர் இருபது கோடித் தொகையினரான மக்களை அடிமைப் படுத்தினார்கள். மூடநம்பிக்கை சிறிதும் இல்லாத ஒரு மனிதனிடம் இதைச் சொல்லிப் பாருங்கள். இச்சொற்களின் பொருள் என்ன என்பதை அவன் உணர மாட்டான். முப்பதாயிரம் பேர் பெரிய வஸ்தாதுக்கள் அல்லர். பலங் குறைந்த அந்த மக்கள் வீரமும் ஆற்றலும் சுதந்திர வேட்கையும் மிக்கவர்களான இருபது கோடி மக்களை அடக்கிப் பணிய வைத்துவிட்டார்களென்றால், அதற்குப் பொருள் என்ன?
>
> முப்பதாயிரம், இருபது கோடி என்ற எண்களைப் பார்க்கிற போது என்ன தெரிகிறது? இந்தியரை அடிமைப் படுத்தியது ஆங்கிலேயரல்ல; இந்தியர் தம்மைத் தாமே அடிமைப் படுத்திக் கொண்டனர் என்பது விளங்க வில்லையா?''

இது, ''சுதந்திர இந்துஸ்தானம்'' என்ற இந்தியப் பத்திரிகையொன்றின் ஆசிரியருக்கு டால்ஸ்டாய் எழுதிய கடிதத்தின் ஒரு பகுதியாகும்.

1757 முதல் 1857 வரை இந்தியாவில் - தெற்கிலும் வடக்கிலுமாக - இடைவிட்டு இடைவிட்டு ஒன்றன்பின் ஒன்றாகப் பிரிட்டிஷாருக்கு எதிராகத் தோன்றிய புரட்சிகளெல்லாம் தோற்றதனால், இழந்துவிட்ட அரசியல் சுதந்திரத்தை மீட்க வேண்டுமானால், இந்து சமுதாயத்திலிருந்து தீண்டாமையும் சாதி வேறுபாடுகளையும் அகற்றுவதும், இந்திய மதங்களிடையில் சமரச உணர்வைத் தோற்றுவிப்பதும் அவசியமென்ற உணர்வு இந்துக்களிலே அறிஞர்களிடையே தோன்றலானது. அதன் விளைவாக தேசிய ஒருமைப்பாட்டு இயக்கங்கள் இருவேறு முனைகளில் தோன்றின.

சுடுகாட்டு அமைதி!

1857-இல் சிப்பாய்ப் புரட்சி தோல்வியுற்ற பின்னர்ப் பாரதம் முழுவதிலும் கால்நூற்றாண்டுக்காலம் சுடுகாட்டு அமைதி நிலவியது. தெற்கிலும் சரி, வடக்கிலும் சரி; பாரதத்தில் ஆங்கிலேயர் ஆதிக்கத்திற்கெதிராக ஆயுதப் புரட்சி எதுவும் நிகழவில்லை. கால்நூற்றாண்டுக்குப் பிறகு 1885-இல் ''அறிவுப் புரட்சி'' தோன்றுகிறது. அந்த ஆண்டிலே சட்டரீதியான முறையில் பாரதத்தின் முன்னேற்றத்திற்கான முயற்சிகளை மேற்கொள்ள அறிஞர் பலர் கூடி, ''இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை''யைத் தோற்றுவித்தனர். அவர்களிலே வடபுலத்தவரும் இருந்தனர்; தென்புலத்தாரும் இருந்தனர். இந்து, முஸ்லீம், கிறிஸ்துவ, பார்ஸி சமயங்களைச் சார்ந்தவர்கள் எல்லாம் இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையின் பெயரால் பம்பாய் நகரத்திலே ஒன்று கூடினர். இந்தியாவில் ஆதிக்கம் பெற்றிருந்த பிரிட்டிஷ் சாதியைச் சார்ந்தவர்கள் சிலரும் இருந்தனர். ஏன்? காங்கிரஸ் மகாசபை தோன்றுவதற்கு முதல் முயற்சி எடுத்தவரே ஆலன் ஆக்டேவியன் ஹ்யூம் என்ற ஆங்கிலேயர்தான்.

கலாசார எழுச்சி

அரசியல் ரீதியான தேசிய எழுச்சிக்கு வித்தூன்றக் காங்கிரஸ் மகாசபை தோன்றிய நூற்றாண்டிலேயே கலாசார ரீதியிலான தேசிய எழுச்சிக்காகவும் நால்வேறு இயக்கங்கள் தோன்றின.

அந்த வகையிலே இந்தியாவின் வரலாற்றில் 19-ஆம் நூற்றாண்டுக்குத் தனிச் சிறப்பு உண்டு. 20-ஆம் நூற்றாண்டில் பல்வேறு துறைகளில் நாட்டில் ஏற்பட்ட புரட்சிகரமான மாறுதல்களுக்கெல்லாம் 19-ஆம் நூற்றாண்டில் தோன்றிய காங்கிரஸ் மகாசபையும் கலாசார இயக்கங்களுமே காரணம் எனலாம்.

இந்தியா நில அமைப்பால் ஒரே நாடு. சற்றேறக்குறையக் கலாசார ஒருமைப்பாடும் உண்டு. ஆனால், இந்த ஒருமைப்பாடு இந்திய மக்கள் கடைப்பிடித்த பழக்கவழக்கங்கள் அளவில் இருந்ததேயொழிய, மக்களுடைய சிந்தனையிலே ஒருமைப்பாடு இல்லை. நாம் எல்லோரும் ஒரே நாட்டவர் என்னும் தேசபக்தி மக்களிடையே வெளிப்படவில்லை. பரஸ்பரம் பகைமையுணர்வுடைய மத வேறுபாடுகளாலும், உயர்வு தாழ்வோடு கூடிய சாதி வேறுபாடுகளாலும், ஆசார அனுஷ்டானங்களோடு கூடிய குல கோத்திரப் பாகுபாடுகளாலும் இந்திய சமுதாயம் பிளவு பட்டுக் கிடந்தது. ''நாம் எல்லாரும் ஓர் குலம்; நாமெல்லோரும் ஓரினம்; நாம் எல்லாரும் இந்நாட்டு மக்கள்'' என்ற தேசிய ஒருமைப்பாட்டு உணர்வினை உருவாக்க ஓர் இயக்கம் தேவைப்பட்டது. அந்த இயக்கமாக இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் பிறந்ததென்றாலும், அந்தப் பேரியக்கத்தின் முன்னோடிகளாக அந்த நூற்றாண்டின் முற்பாதியில் வேறு பல கலாச்சார இயக்கங்களும் தோன்றின. அவை பிரம்ம சமாஜம், சமரச சுத்த சன்மார்க்க சங்கம், ஆரிய சமாஜம், ஸ்ரீராமகிருஷ்ணர் சங்கம் ஆகியவையாகும்.

தேசிய கலாசார இயக்கங்களைத் தோற்றுவிப்பதற்கென்றே நான்கு மகா புருஷர்கள் பிறந்தனர். அவர்கள் ராஜாராம் மோகன் ராய். இராமலிங்க சுவாமிகள், தயானந்த சரஸ்வதி, இராமகிருஷ்ண பரமஹம்சர் ஆகியோர் ஆவர்.

கிறித்துவ ஆட்சி

புதிதாக உருவெடுத்த பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியாரின் ஆதிக்கம் கிறித்துவ மதத்தைத் தழுவியதாதலால் அந்த அதிகார வர்க்கம் உள்நாட்டு மதங்களை, மதாசாரியர்களைப் புறக்கணித்து, அவமதித்தது. இந்தியாவையே கிறித்துவ மயமாக்கி விடவும் திட்டமிட்டு முயன்றது. இதற்கேற்ப, ஒரு கல்வி முறையைத் தயாரித்து, அதனை இந்திய சமுதாயத்தினரின் வாழ்க்கையிலே திணித்துவிட முயன்றது. அக்கல்வி முறை ஆங்கிலத்தையே போதனா மொழியாகக் கொண்டிருந்தது. 1837 ஆம் ஆண்டிலே பிரிட்டிஷ் கல்வி மந்திரியாக இருந்த லார்டுமெக்காலேதான் ஆங்கிலக் கல்வி முறையை இந்தியாவில் அமுலுக்குக் கொண்டு வந்தார். இந்த முயற்சியானது இந்து - இஸ்லாமியக் கலாசாரங்களுக்கு ஏற்பட்ட அறைகூவலாக இருந்தது. கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த குடியான தமிழ் குடிக்கும் கேடு பயப்பதாக இருந்தது.

நால்வர் தோன்றினர்!

ஆங்கிலக் கல்வி முறையின் மூலம் இந்தியாவில் ஒரு புதிய சாதியே தோன்றியது, 19-ஆம் நூற்றாண்டிலே! இந்தப் புதிய சாதியைச் சார்ந்தவர்களில் சிலர்தான் இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையைத் தோற்றுவித்தனர். இந்தப் புதிய சாதியிலிருந்து தான் வங்காளத்திலே ராம்மோகன் ராய் தோன்றினார். இதற்கு மாறாக, இந்திய மொழிகளின் மூலம் கல்வி பயின்ற மேதைகளாகத் தயானந்த சரஸ்வதியும், இராமலிங்க சுவாமிகளும் விளங்கினர். இராமகிருஷ்ணரோ, தம் தாய்மொழியான வங்க மொழியில்கூடக் கல்வி பெறாத இயற்கை அறிவினராகத் திகழ்ந்தார்.

வங்காளத்தில் பிறந்த ராம்மோகனர் ஆங்கிலத்தின் மூலம் உயர் கல்வி கற்றதோடு, சமஸ்கிருதம், பாரசிகம், கிரேக்கம், ஹீப்ரு, அரபு ஆகிய மொழிகளையும் பயின்றார். இந்து மத வேதங்கள், உபநிடதங்கள் ஆகியவற்றையும் பழுதறக் கற்றுத் தேர்ந்தார். கிறித்துவ வேதத்தைக் கிரேக்க மொழி மூலம் பயின்றார். பாலி மொழி பயின்று அதன் மூலம் புத்த மத நூல்களிலும் ஞானம் பெற்றார். 18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் 1774 - இல் மே 22 ஆம் நாளில் - பிறந்தவர் என்றாலும், 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேதான் பிரம்ம சமாஜத்தைத் தோற்றுவித்தார். இந்து மதத்தில் புரட்சிகரமான மாறுதல்களைப் புகுத்துவதற்கென்றே அந்த சமாஜத்தை நிறுவினார்.

தற்காலத்தில் ‘அருட் பிரகாச வள்ளலார்’ என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படும் இராமலிங்கர், கலி 4925, சுபானு ஆண்டு புரட்டாசித் திங்கள் 21-ஆம் நாளில் (5-10-1823) தோன்றினார். மதமாயை இருளகற்ற வந்த ஞாயிறு போன்று ஞாயிற்றுக் கிழமையன்று தோன்றினார்.

இராமலிங்கர் தோன்றிய அடுத்த ஆண்டிலேயே பாரதத்தின் வட மேற்கிலுள்ள குஜராத் மாநிலத்தில் டங்காரா என்னும் ஊரில் 1824-இல் தயானந்த சரஸ்வதி தோன்றினார். இவரது இயற்பெயர் மூலசங்கரர் என்பதாம். இவர் இந்தி, சம்ஸ்கிருதம், குஜராத்தி ஆகிய மும்மொழிகளிலும் ஆழ்ந்த புலமை பெற்றார்.

இராமலிங்கர் தோன்றிய 13 ஆண்டுகளுக்குப் பின்னர், வங்க மாநிலத்தில் கமார்புக்கூர் என்னும் சிற்றூரில் 1836 -ஆம் ஆண்டில் இராமகிருஷ்ணர் பிறந்தார்.

பொதுக் கொள்கை

இந்தப் பெரியார்கள் நால்வரும் கருத்துக்களில் தங்களிடையே வேறுபாடுடையவர்கள் என்றாலும், மனித சமுதாயத்திலே, மனிதனுக்கு மனிதன் உயர்வு தாழ்வோ, இழிவு சிறப்போ இருத்தல் கூடாதென்ற கொள்கையைக் கொண்டவர்கள். இதனை அடிப்படையாகக் கொண்டு இந்து சமுதாயத்தில் நிலவி வரும் சாதி வேறுபாடுகளை அகற்றவும், உருவ வழிபாடு காரணமாகத் தோன்றிய மூட நம்பிக்கைகளைப் போக்கவும் முயன்றனர்.

இவர்கள் நால்வருக்கும் பொதுவாக இருந்த கொள்கைகள் வருமாறு:

சாதி வேறுபாடுகளை அறவே ஒழித்தல்; தெய்வம் ஒன்று என்ற உண்மையை மக்கள் உணருமாறு செய்தல்; இந்து சமயத்தினரிடையே காணப்படும் குல கோத்திர வேற்றுமை நளைத் தொலைத்துச் சமத்துவம் நிலவச் செய்தல், இந்து மத வேத, ஆகம, சாத்திர நூல்களைத் தாம் தாமே படித்துப் புரிந்து கொள்ளாமல், அந்தணர் சொல்வதை யெல்லாம் மக்கள் அப்படியே நம்புவதை ஒழித்தல்; பெண்ணடிமையை ஒழித்து ஆணுக்குப் பெண் சமம் என்ற நிலையை ஏற்படுத்தல்; சர்வ சமயங்களிடையிலும் சமரசம் ஏற்படுத்தல்.

முன்னோடி

குமரி முதல் இமயம் வரை பரவிக் கிடக்கும் இந்தியப் பெருநாட்டில் நாடு தழுவிய முறையில் பேரியக்கங்களைத் தோற்றுவித்த பெருமை 19- ஆம் நூற்றாண்டிற்கே உரியதாகும். அந்தப் பெருமைக்கு முன்னோடியாக நிற்பது ராம்மோகனர் தோற்றுவித்த பிரம்ம சமாஜம். இதற்கு அடுத்த இடத்தைப் பெறுவது இராமலிங்கர் தோற்றுவித்த சமரச சுத்த சன்மார்க்க சங்கம் மூன்றாவது இடத்தைப் பெறுகின்றது தயானந்தர் தோற்றுவித்த ஆரிய சமாஜம். இறுதி இடத்தைப் பெறுகின்றது. ஸ்ரீராம கிருஷ்ணருக்குப் பின் அவரது பெயரால் விவேகானந்தர் தோற்றுவித்த ஸ்ரீராமகிருஷ்ணர் சங்கம்.

சர்வ தேசிய வாதம்

இராம்மோகனர், தயானந்தர், இராமகிருஷ்ணர் ஆகியோரைச் சேர்ந்த இயக்கங்கள் எல்லாம் இந்திய தேசிய ஒருமைப் பாட்டை அடிப்படையாகக் கொண்டவை. இராமலிங்கர்

தோற்றுவித்த இயக்கமோ, சர்வதேசியக் குறிக் கோளுடன் அமைந்ததாகும். ஆறறிவு பெற்ற மக்களையெல்லாம் ஒருமைப் பாடு உடையவர்களாகச் செய்ய முயன்றனர் வடக்கில் தோன்றிய சான்றோர்கள். தெற்கில் தோன்றிய இராமலிங்கர் உயிர்க்குலம் அனைத்திடமும் ஆன்ம நேய ஒருமைப்பாட்டைத் தோற்றுவிக்க முயன்றார். அதையே சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தின் கொள்கையாகவும் வகுத்தார்.

ஆரிய சமாஜம், பிரம்ம சமாஜம், ஸ்ரீராமகிருஷ்ணர் சங்கம் ஆகியவை அதனதன் கொள்கையில் இன்றளவும் ஓங்கிநிற்கின்றன. பிரம்ம சமாஜம் இடையில் கொஞ்சம் மங்கிய நிலையை அடைந்து விட்டதென்றாலும், கொள்கை வழியில் அது இன்றளவும் நின்று நிலைபெற்றுள்ளது. ஆனால், வள்ளற் பெருமான் எத்தகைய புரட்சிகரமான கொள்கைகளை மக்கள் வாழ்வில் புகுத்த விரும்பினாரோ, அதிலே அவர் வெற்றி பெறவில்லை. தமிழ்நாடு அவருக்குக் கைகொடுத்திருந்தால், பின்னர் வட புலமும் உலகமும் அவரை ஏற்றிருக்கக் கூடும். இன்றும்கூட, இராமலிங்கருடைய சமரச சுத்த சன்மார்க்க சங்கமானது வெறும் இலக்கிய - பக்தி இயக்கமாகவன்றி, சமுதாயப் புரட்சி இயக்கமாகச் செயல்படவில்லை.

தாம் மறையுங்கால், வள்ளற் பெருமான் தம்முடைய சீடர்களைப் பார்த்து மனம் நொந்து கூறிய வாசகம் வருமாறு:

''அகில சகோதர ஒற்றுமையைப் பாராட்டும் இச்சங்கத்தில் அங்கத்தினராக வர நீங்கள் அருகர் அல்லர். இந்தச் சங்கத்தின் உண்மை அங்கத்தினர், இந்தியாவிற்கு வடக்கே வெகு தூரத்தில் வசிக்கிறார்கள். நான் இப்போது உங்களுக்கு வீணில் சொல்லும் சிறந்த உண்மைகளை, அப்போது நீங்கள் தெரிந்து கொண்டு மதித்து நடப்பீர்கள், வடக்கே வெகு தூரத்தில் வசிக்கும் அம்பல சகோதரர்கள், இந்தியாவில், அனேக அற்புதங்களை நிகழ்த்தி நமது தேசத்திற்கு அளவிடக் கூடாத நன்மைகளை விளைவிப்பதைச் சீக்கிரம் நீங்கள் காண்பீர்கள்.''

இது, வள்ளற் பெருமானின் தலைமாணாக்கரான தொழுவூர் வேலாயுத முதலியார் தரும் தகவலாகும்.

பாரதியாரின் நம்பிக்கை

தமிழரால் தம் இயக்கம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்று வள்ளலார் கூறியிருப்பினும், அவரது சமுதாயப் புரட்சி

வெற்றி பெறும் நாள் விரைவில் வரப்போகிறது என்கிறார் தேசியக் கவி சி. சுப்பிரமணிய பாரதியார். அவர் கருத்து வருமாறு:

''எம்மதமும் சம்மதம்'' என்றார், இராமலிங்க ஸ்வாமி.

''உலகத்திலுள்ள மத பேதங்களையெல்லாம் வேருடன் களைந்து, ஸர்வ ஸமய ஸமரஸ கொள்கையை நிலைநாட்ட வேண்டுமானால், அதற்குத் தமிழ்நாடே சரியான களம். உலகம் முழுவதும் மத விரோதங்களில்லாமல் ஒரே தெய்வத்தைத் தொழுது உஜ்ஜீவிக்கும்படிச் செய்ய வல்ல மஹான்கள் இப்போது தமிழ் நாட்டில், தோன்றியிருக்கிறார்கள். அதுபற்றியே பூமண்டலத்தில் புதிய விழிப்பு தமிழகத்தில் தொடங்கும் என்கிறோம்.

''இராமலிங்க ஸ்வாமிகளும், ''சுதேசமித்திரன்'' சுப்பிரமணிய ஐயரும், இவர்களைப் போன்ற வேறு சில மகான்களும் தமிழ்நாட்டின் புதிய விழிப்புக்கு ஆதிகர்த்தாக்களாக விளங்கினர்.

''பூமண்டலம் முழுவதிலும் பெரிய விழிப்பு ஒன்று வரப் போகிறது. அதற்கு ஆதாரமாக இந்துஸ்தானம் கண்ணை விழித்து இருபது ஆண்டுகளாயின. ஹிந்துஸ்தானத்திற்குள் தமிழ்நாடு முதலாவது கண் விழித்தது. ஆனால், இன்னும் புத்தி சரியாகத் தெளியாமல் கண்ணை விழிப்பதும் கொட்டாவி விடுவதுமாக இருக்கிறது.''

(பாரதி கட்டுரைகள் - 'தமிழ் நாட்டின் விழிப்பு')

மிகைப்பட்ட வாதம்

இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை தோன்றுவதற்கு முன்பு தோன்றிய ராம்மோகன் ராய், தயானந்த சரசுவதி, ஸ்ரீராமகிருஷ்ணர் ஆகிய மூவரும் கலாசார ரீதியான தேசிய எழுச்சியை நாட்டில் ஏற்படுத்தி அதன் மூலம் அரசியல் ரீதியிலான தேசிய எழுச்சிக்கு வழி காட்டினர் என வடபுலத்து வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர்.

டாக்டர் பட்டாபி சீதாராமையா அவர்களும், தாம் எழுதி வெளியிட்டுள்ள ''காங்கிரஸ் மகாசபை வரலாறு'' என்னும் நூலின் தொடக்கத்திலே, ''ராம்மோகனர், தயானந்தர், இராம கிருஷ்ணர் ஆகிய மூவரும் இந்திய தேசிய எழுச்சிக்குக் கர்த்தாக்கள்'' என்று கூறுகின்றார்.

இந்திய அரசு, விடுதலைப் போராட்ட நூற்றாண்டு நிறைவு விழாவை 1957-இல் கொண்டாடியபோது, இந்தக்

கருத்துக்கு விளம்பரம் தரும் வகையில் திரைப்படம் ஒன்றைத் தயாரித்து வெளியிட்டது. அதிலே, ராம்மோகனர், தயானந்த சரசுவதி, ராமகிருஷ்ணர் ஆகிய மூவரது சாதனைகளையும் சேர்த்திருந்தது.

வங்காளிகளான சரித்திராசிரியர்கள் ராம்மோகனர், ராமகிருஷ்ணர் ஆகிய இருவரையும் விடுதலை இயக்கத்தோடு அதிக அளவில் சம்பந்தப்படுத்தி எழுதியுள்ளனர். ஆனால், மத்திய அரசும் சரி; சரித்திராசிரியர்களும் சரி; ராம் மோகனர், தயானந்த சரசுவதி, ராமகிருஷ்ணர் ஆகிய மத வழிப்பட்ட தேசிய மறுமலர்ச்சிக்குப் பாடுபட்ட சான்றோர்கள் காலத்திலேயே வாழ்ந்து மதங் கடந்த தேசிய - சர்வ தேசிய ஒருமைப்பாட்டுக்குப் பாடுபட சமரச சுத்த சன்மார்க்க இயக்கத்தைத் தோற்றுவித்த தமிழரான இராமலிங்க சுவாமிகளை நினைவில் கொள்ளத் தவறி விட்டனர்.

தமிழரான சரித்திராசிரியர்களும் இந்தக் குறைபாட்டுக்கு விலக்கல்லர். ஏன், சமரச சுத்த சன்மார்க்க இயக்கத்தவரும் இந்த உண்மையை உணர்ந்திருக்கவில்லை. சமயச் சார்பற்ற இந்திய தேசிய மறுமலர்ச்சிக்கு வள்ளலார் ஆற்றியுள்ள அரும்பணிகள் ''வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு'' என்னும் நூலில் விவரிக்கப் பட்டுள்ளன. அந்நூல் வெளியாகி, அதன் ஆசிரியருக்கு சாகித்திய அகடமியின் பரிசும் கிடைத்த பிறகே, வள்ளற் பெருமானும் தம் சம காலத்தவரான ராம்மோகனர், தயானந்தர், இராமகிருஷ்ணர் ஆகியோருடன் ஒப்பிடத்தக்கவர் என்ற உண்மையைத் தமிழர் உணர்ந்தனர்.

தத்தர் தரும் தகவல்

ராம்மோகனர் இந்திய தேசிய எழுச்சிக்கு வித்திட்டவர் என்கிறார், திரு ஈசுவர தத் என்ற வங்க மாநில சரித்திராசிரியர். அவர் தமது ''காங்கிரஸ் சைக்கிளோபீடியா'' என்னும் ஆங்கில நூலின் (பக் - 1) ராம்மோகனர் பற்றிக் கூறுவது வருமாறு:

''ராஜாராம் மோகன் ராயின் இளமை நாட்கள் இந்தியச் சரித்திரத்தின் புதுமைப் பகுதி தொடங்காத இருண்ட நாட்களாகும். பழமைச் சமுதாயம் அழிந்து ஒழிய வேண்டிய நிலையிலும், அதற்குப் பதிலான புதிய சமுதாயம் மலரத் தொடங்காத நிலையிலும் நாடு இருந்தது. சமய - சமுதாயத் துறைகளும், விவசாயமும், தொழிலும், வாணிபமும் ஒரு குழப்பச் சூழ்நிலையில் இருந்தது.

''கல்வி, சமுதாயம், இந்து சமயம் ஆகிய துறைகளில் உள்ள புழுதி படிந்த பழமையைப் போக்கி, அடிப்படையான

சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்பதுதான் ராய் அவர்களின் முக்கியக் குறிக்கோளாக இருந்தது. இதற்காக, 1828-இல் பிரம்ம சமாஜம் அவரால் நிறுவப்பட்டது.

''ராய் அவர்கள் இறந்த 1833-ஆம் ஆண்டிற்கும் காங்கிரஸ் இயக்கம் தோன்றிய 1885-ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட கால கட்டம் இந்தியச் சமுதாயத்தின் விழிப்புணர்ச்சி தோன்ற ஆரம்பித்த காலகட்டமாகும்.

''பிற்காலத்தில் தாதாபாய் நௌரோஜியும் ரானடேயும் கடைப்பிடித்த மிதவாத அரசியலுக்கு ராம்மோகன் ராய் ஒரு முன்னோடி.''

விடுதலை ஆர்வமுடைய பயங்கரப் புரட்சி இயக்கத்தின் வரலாற்றைக் கூறும் ''ரௌலட் கமிட்டி'' அறிக்கையிலும், இராம கிருஷ்ணரும், விவேகானந்தரும் இந்திய விடுதலை இயக்கத்தின் முன்னோடிகள் என்று சூசகமாகச் சொல்லப் பட்டிருக்கிறது.

ராய், சமய - சமுதாய - கல்வித் துறைகளில் புரட்சிகரமான மாறுதல்களை ஏற்படுத்த முயன்றார் என்பதும், இந்தப் பணிகளுக்காகப் பிரம்ம சமாஜத்தைத் தோற்றுவித்தார் என்பதும் மறுக்க முடியாத உண்மைகளாகும். அந்த வகையில் இந்திய தேசியத்தை உருவாக்கியவர்களிலே அவர் முதல்வராகிறார். ஆயினும், தம்முடைய கொள்கைக்கு வெற்றி தேட அவர் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஒத்துழைப்பைப் பெற்றார் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். ''பிரிட்டிஷாரின் வரவு இந்தியருக்குக் கடவுள் தந்த பரிசாகும்'' என்று சொல்லவும் ராய் தயங்கவில்லை.

ஆங்கில மொழியை இந்து கலாசார மறுமலர்ச்சிக்காகப் பயன்படுத்தவும் அவர் முயன்றார். ஆனால், இந்திய மொழிகளுக்கு - குறிப்பாக தம் தாய்மொழியான வங்க மொழிக்கு எதிராக அவர் ஆங்கில ஆதிக்கத்திற்கு ஆதரவு தரவில்லை மாறாக, வங்கமொழியின் மறுமலர்ச்சிக்காகவும் ராம்மோகன் ராய் அரும்பாடு பட்டார். வங்கமொழியில் பல படைப்பிலக்கியங் களைத் தந்தார்.

இராமகிருஷ்ணரின் வாழ்க்கையும் உபதேசமும் நேரடியாகத் தேசிய எழுச்சியுடன் சம்பந்தபட்டவையல்ல. ஆனால், அவர் காலத்திலும், அவருக்குப் பிற்காலத்திலும் அவருடைய தலைமாணாக்கரான விவேகானந்தர் மக்களிடையே தேசிய எழுச்சியை ஏற்படுத்தினார். வெளிப்படையாகவே தேசபக்தியைப்

போதித்தார். 'தேசம் விடுதலை பெற காளிகருணை புரிவாள்' என்றும் கூறினார். இதனால், இராமகிருஷ்ணரை மூலவராகக் கொண்டு நாட்டில் வளர்ந்த வேதாந்த இயக்கம் - அதாவது, இராமகிருஷ்ணர் சங்கம் தேசிய வரலாற்றோடு தொடர்புடைய தாகி விட்டது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பாதியில் மற்றொரு சர்வதேசிய கலாசார இயக்கம் பாரதத்தில் காலூன்றியது. அது, ''பிரம்ம ஞான சங்கம்'' ஆகும். அதனை, ஆங்கிலத்தில் ''தியோசாபிகல் சொஸைடி'' என்று அழைக்கின்றனர்.

பிளாவட்ஸ்கியும் பெசன்டும்

நியூயார்க் நகரைச் சேர்ந்த பிளாவட்ஸ்கி அம்மையாரும், கர்னல் ஆல்காட் என்பவரும் இச்சங்கத்தை 1875-இல் தொடங்கினர். ஐரிஷ் மாதான அன்னிபெசன்ட் என்பவர் பிரம்மஞான சங்கத்தில் சேர்ந்தார். கர்னல் ஆல்காட்டுக்குப் பின் அவரே சங்கத்தின் தலைவரானார்.

அன்னிபெசன்ட்டும் ஆல்காட்டும் 1879-இல் சென்னை நகருக்கு வருகை தந்தனர். பிரம்ம ஞான சங்கம் சர்வதேச இயக்கமாக மலர்ந்தது. 1883-இல் அச்சங்கத்தின் தலைமை நிறுவனம் சென்னை அடையாறில் நிறுவப்பட்டது.

''தியோசாபி என்பதற்கு ''எல்லாச் சமயங்களிலும் உள்ள உண்மைகளெல்லாம் சேர்ந்தது'' என்று பொருள் சொல்லப் படுகிறது. நடைமுறையில், இந்து சமயத்தின் உயர்ந்த குறிக் கோள்களை உலகெங்கும் பரப்பும் பணியைப் பிரம்ம ஞான சங்கம் மேற்கொண்டது. குறிப்பாக, இந்தியாவில் தேசிய ஒருமைப் பாட்டை வளர்ப்பதில் அதிக அளவில் சங்கம் ஆர்வங் காட்டியது.

சுகவாசிகளின் பூங்கா!

பிரம்மஞான சங்கம் உயர்ந்த கொள்கைகளைக் கொண்டது தானென்றாலும், இந்தியாவில் ஸ்ரீ இராமகிருஷ்ணர் சங்கம் வளர்ந்த அளவுக்கு அது வளரவில்லை. இராமகிருஷ்ணரின் வேதாந்த இயக்கத்திற்குப் பிரச்சாரம் செய்யத் துறவிகள் துணை நிற்கின்றனர். அப்படிப்பட்ட துறவிகள் பிரம்ம ஞான சங்கத்தின் சார்பில் தோற்றுவிக்கப்படவில்லை. மற்றும், சென்னையைப் பொறுத்த வரையில் சங்கம் சுக ஜீவிகள் உலவி வரும் பூங்கா போலாகிவிட்டது. இவையனைத்தும், அச்சங்கம்

பொது மக்கள் மத்தியில் வளராததற்குக் காரணமாகலாம். டாக்டர் பெசன்ட் பிரிட்டிஷ் அரசுக்கு எதிரான போராட்ட அரசியலில் அதிகத் தீவிரங் காட்டியதும் மற்றொரு காரணமென்று சொல்லப் படுகிறது.

பொதுவாக, பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய நால்வேறு தேசியக் கலாசார இயக்கங்களோடு ஐந்தாவதாகப் பிரம்ம ஞான சங்கத்தையும் சேர்த்துச் சொல்லவேண்டியிருக்கிறது.

பிரம்ம ஞான சங்கமானது இந்தியாவில் தேசியக் கல்வியைப் பரப்பி, ஆங்கிலக் கல்வி முறையால் விளையக்கூடிய கேடுகளிலிருந்து மக்களைக் காக்கவும் முயன்றது.

திரு.வி.க. கூறுகிறார்!

டாக்டர் பெசன்ட் அம்மையார், பிரம்ம ஞான சங்கத்தின் கொள்கைகளை நாட்டில் பரப்பப் பிரசாரம் செய்தார். அவர் சிறந்த நாவலர். ஆங்கில மொழி அவரது நாவில் நடமிடும். வெள்ளாடை உடுத்திய ஒரு சந்நியாசினி போன்று தோற்ற மளித்தார். தியோசாபி பற்றியும், பெசன்ட் அம்மையாரின் பேச்சுத் திறன் பற்றியும் திரு.வி. கலியாணசுந்தரனார் கீழ் வருமாறு கூறுகிறார்:

''கிறிஸ்மஸ் காலத்தில் அன்னிபெசன்ட் அம்மையார் காசியினின்றும் அடையாறு போந்து தியோசாபிகல் சங்கச் சார்பில் சொற்பொழிவாற்றுவர். அம்மையார் சொல்லமிழ்தைப் பருகப் பெருங் கூட்டந்திரளும், மாணாக்கர் கூட்டமும் செறியும்; யானுஞ் செல்வேன். காலை ஆறுமணிக்கு அன்னிபெசண்ட் அம்மையார் அடையாறு ஆலமரத்தடியில் காட்சியளிப்பர். அக்காட்சி கலைமகளெனப் பொலிவுதரும். ஒரு மணி நேரம் அம்மையார் சொன்மாரி பொழிவர்.''

(திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புகள்: பக்.638-39)

''ஒவ்வொருபோது உலகம், வேராக உள்ள சன்மார்க்கத்தை மறந்து சமயங்களின் பன்மை மீது மட்டுங் கருத்தைச் செலுத்தித் தடுமாற்றமுறும். அவ்வப்போது பெரியார் தோன்றி ஒருமைச் சன்மார்க்கத்தை வற்புறுத்துவது மரபாக இருந்து வருகிறது. அப்பெரியார் பலர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றியவர் சிலர். அவருள் குறிக்கத் தக்கவர் மாது

பிளாவட்ஸ்கி, இராமகிருஷ்ணர், இராமலிங்க சுவாமிகள். இவர்கள் போதனைகள் எனக்குச் சன்மார்க்க விருந்தளித்தன.''

(திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புகள்: பக். 642-43)

விடுதலைப் போரிலே...

பிரம்ம ஞான சங்கத் தலைமை தேச விடுதலை இயக்கத்திலே நேரடியாகக் கலந்து கொண்ட பெருமைக்குரியது. 1916-இல் தியோசாபி சங்கத் தலைவர் டாக்டர் அன்னிபெசன்ட் காங்கிரசில் சேர்ந்த பிறகுதான், அது புத்துயிர் பெற்றது. அதே காலத்தில் காந்தியடிகளும் காங்கிரசில் சேர்ந்து பெசன்டம்மை யாரின் ''ஹோம்ரூல்'' இயக்கத்தை ஊக்குவித்தார். அவ்வகையில், பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம் ஆகியவற்றைப் போலல்லாமல் இந்திய விடுதலை வரலாற்றிலே பிரம்ம ஞான சங்கத் தலைமை தன்னை வெளிப்படையாகவே இணைத்துக் கொண்டு விட்டது.

வட பாரதத்தில் தோன்றிய பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம், இராமகிருஷ்ணர் சங்கம் ஆகிய கலாசார இயக்கங்கள் தென் பாரதத்திலும் கிளைவிட்டன. ஆனால், ஸ்ரீ இராமகிருஷ்ணர் சங்கந்தான் விரிவாகக் கிளைகள் விட்டுப் பரவியது. பிரம்ம சமாஜம் தமிழகத்திலுள்ள படித்த வகுப்பாரிடையில் அறிமுக மானதென்றாலும், ஆழ வேர்விடவில்லை. காரணம், அது, இதிகாச புராணங்களை வெறுத்ததும், உருவ வழிபாட்டை எதிர்த்ததுந்தான்.

கேசவசந்திர சென்

ராம்மோகன் ராய்க்குப் பிறகு கேசவசந்திர சென் பிரம்ம சமாஜ இயக்கத்தின் தலைவரானார். அவர் 1864-இல் தமிழ் நாட்டிற்கு வருகை தந்தார். அதன் விளைவாக, ''வேத சமாஜம்'' என்னும் பெயரில் பிரம்ம சமாஜத்தின் கிளை சென்னை நகரில் நிறுவப்பட்டது. பின்னர், அது, ''பிரம்ம சமாஜம்'' என்று 1874-இல் பெயர் மாற்றும் பெற்றது.

பிரம்ம சமாஜத்திற்கெனத் தமிழில் ''தத்துவ போதினி'' என்ற பெயருடன் பத்திரிகை யொன்றும் சிறிது காலம் வெளியிடப் பெற்றது. 1878-இல் பண்டித சிவநாத் சென் என்ற பிரம்ம சமாஜத் தலைவர் சென்னைக்கு வருகை தந்தார்.

வள்ளலாருடன் வாதம்!

கடலூரில் சப்பேடு ஸ்ரீதரசுவாமி என்ற பிரம்ம சமாஜிக்கும் இராமலிங்க சுவாமிகளுக்கும் உருவ வழிபாடுபற்றி விவாதம்

நடைபெற்றதாகத் தெரிகிறது. வள்ளலார் உருவ வழிபாடு மந்த நியாயம் என்ற கொள்கையுடைய ரென்றாலும், அதனை அடியோடு வெறுப்பவரல்லராதலால், பிரம்ம சமாஜிகளுடன் அவர் கருத்து வேறுபாடு கொள்ளலானார்.

''சென்னை வாசிகள் நுண்ணறிவும் கனிந்த உள்ளமும் படைத்தவர்களாயினும், தீவிர வைதிகத்தாலும், கட்டுப் பாடான சாதி முறையாலும் பிரம்ம சமாஜக் கொள்கைகள் அவர்களிடையே எடுபடவில்லை'' என்று திரு.எம்.சி. பிரோக் என்பவர் கூறுகிறார்.

தேசியக் கவி பாரதி, ''நாட்டைப் பிடித்துள்ள நோய்களை நிவாரணஞ் செய்யப் பிறந்த ஆயுர்வேத வைத்தியர்'' என்று ராம்மோகன்ராயைப் புகழ்ந்து கூறியுள்ளார். ராம்மோகனரின் பிரம்ம சமாஜக் கொள்கைகளிலே உருவ வழிபாடு எதிர்ப்பானது பாரதியாருக்கு உடன்பாடல்ல என்றாலும், பெண்ணுரிமை, மூட நம்பிக்கைகளை அழித்தல், சாதி வேறுபாடுகளை அகற்றல், மதுவிலக்கு, கல்வியபிவிருத்தி ஆகியவற்றில் உடன்பாடுடைய வராதலால், அவற்றிற்கு ஆதரவு காட்டினார்.

பாரதியார் கருத்து

தமது ''சக்கரவர்த்தினி'' பத்திரிகையிலே பாரதியார் எழுதிய கட்டுரைகளில் சில பகுதிகள் வருமாறு:

''இந்நாட்டு மாதர்களின் அபிவிருத்தியின் பொருட்டாக முதன் முதல் பாடுபட்ட மஹான் ராஜா ராம்மோகன் ராயரென்பவர்.

''ராஜா ராம்மோகனர் விக்கிரக ஆராதனை முதலிய சில விஷயங்களில் சாதாரண அபிப்பிராயத்தினின்றும் மாறு பட்டிருந்தமை அவருக்குப் புகழ்ச்சியேயன்றிக் குறையாக மாட்டாது. அவரது அபிப்பிராயத்தினின்றும் வித்தியாசங் கொண்டோர்கள் கூட அவரது தீரத்தன்மையை வியப்பார்க ளென்பதில் ஐயமில்லை,

''இத்தகைய மகான்கள் இவ்வுலகில் அடிக்கடி பிறப்பதில்லை. ராம்மோஹன் சூரியன் உதித்தபோது இத்தேசம் பேரிருளில் மூழ்கிக் கிடந்தது. ராம்மோஹனராயர் நம்மைப் போன்றவரல்லர். இடையிடையே இவ்வுலகினைக் கைதூக்கி விடும் பொருட்டுத் திருவவதாரம் புரியும் மகா குருகணத்துள்ளே ராம்மோஹனர் ஒருவர்.''

ஆரிய சமாஜம்

தயானந்த சரஸ்வதி தோற்றுவித்த ஆரிய சமாஜத்துக்கும் தமிழ்நாட்டில் அதிக ஆதர வில்லாமற் போய்விட்டது. அது வட புலத்திலும் ''மத சுத்தி'' இயக்கம் என்ற அளவிலேயே இந்துக்களால் வரவேற்கப் பெற்றது. ஆம்; இந்து மதத்திலிருந்து இஸ்லாத்திற்கும் கிறித்துவத்திற்கும் மாறியவர்களைத் திரும்பவும் பூர்வ மதத்திற்குக் கொண்டு வரும் முயற்சியில் ஆரிய சமாஜம் அதிக அக்கறை காட்டியது. அந்த அளவில் அது மிகுந்த தியாக உணர்வையும் தீரத்தையும் காட்டியதெனலாம். இதுமாதிரி மதமாற்றப் பிரச்சினை தமிழ்நாட்டில் அதிகம் இல்லாததால் ஆரிய சமாஜம் இங்கு வளர்ச்சியடையவில்லை போலும்! ஆயினும் பெயரளவில் சென்னை நகரில் ஆரிய சமாஜக் கிளை ஒன்று இயங்கி வருகின்றது. ஆரிய சமாஜப் பிரசார இலக்கியங்கள் தமிழில் நிறைய வெளியிடப்பட்டுள்ளன. அவற்றுள் வேதங் களும், உபநிடதங்களும் அடங்கும்.

தமிழ் நாட்டில் பிரம்ம சமாஜம் வேர்விடாமற் போனதற்கு என்ன காரணமோ, அதே காரணம் ஆரியசமாஜம் வளர்ச்சியற்றுப் போனதற்குப் பொருந்தும், திருக்கோயில்கள் நிறைந்த நாடான தமிழகத்திலே விக்கிரக வழிபாட்டை அடியோடு வெறுக்கின்ற பிரம்ம சமாஜமும், ஆரிய சமாஜமும் வராமற் போனது இயற்கை தானே!

தமிழகத்திலே,...

தமிழ்நாட்டுத் தேசியத் தலைவர்களில் எவரும் பிரம்ம சமாஜத்துடனோ, ஆரிய சமாஜத்துடனோ தொடர்பு கொண்டு இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் வடபுலத்தில் பெருந் தலைவர்களான லாலா லஜபதிராய், சிரத்தானந்தர் ஆகியோர் ஆரிய சமாஜிகளாக இருந்தனர். ஆயினும், ஸ்தாபன ரீதியில் ஆரிய சமாஜம் பிரிட்டிஷ் எதிர்ப்பு இயக்கத்தில் நேரடி யாகவோ, மறை முகமாகவோ ஈடுபடவில்லை. வங்காளத்திலே தேசத் தலைவர் களில் பலர் பிரம்ம சமாஜிகளாக இருந்தனரென அறிகிறோம்.

தமிழ்நாட்டில் மிகுந்த செல்வாக்குப் பெற்ற பெருமை 19-ஆம் நூற்றாண்டில் தோன்றிய கலாசார இயக்கங்களிலே ஸ்ரீராமகிருஷ்ணரின் வேதாந்த இயக்கத்திற்கே உண்டு. தமிழ் நாட்டிலுள்ள படித்த சமூகத்தார் ஸ்ரீ இராமகிருஷ்ணர் சங்கத்துட னும், அதனைச் சார்ந்த மதத்துடனும் கடந்த ஒரு நூற்றாண்டு காலமாகத் தொடர்பு கொண்டு வந்துள்ளனர்.

பெரியார்-நாகம்மை நூலகம் சே.எண்.

வெள்ள விபத்து, தீ விபத்து ஏற்படும் காலங்களில் அவதிப்படும் ஏழை எளியவர்களுக்குத் தொண்டாற்றுவதிலும் இராமகிருஷ்ணர் சங்கங்களும், மடங்களும் ஆர்வம் காட்டி வருகின்றன. உண்மையில் இராமலிங்க சுவாமிகள், எந்தப் பணிகளுக்காகச் சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தைத் தோற்று வித்தாரோ அந்தப் பணிகளிலே இராமகிருஷ்ணர் சங்கமும் மடங்களும் தமிழ் நாட்டில் ஈடுபட்டு வருகின்றன.

விவேகானந்தர்

சுவாமி விவேகானந்தர் அமெரிக்க நாட்டில் சிகாகோ நகரில் கூடிய சர்வ மத மாநாட்டிற்குச் சென்றபோது, அவருக்குப் பேருதவி புரிந்து, அவரை வழியனுப்பி வைத்தனர் சென்னை வாசிகள். இராமநாதபுரம் பாஸ்கர சேதுபதி அரசர் அவர்களும் பேருதவி புரிந்தார். சுவாமிகள் தாயகம் திரும்பிய பின்னும், அவருக்கு வரவேற்பளித்து அவரைப் பெருமைப்படுத்துவதிலே சென்னை ஆர்வங் காட்டியது.

ஸ்ரீஇராமகிருஷ்ணர் பெயரால் சுவாமி விவேகானந்தர் தோற்றுவித்த வேதாந்த இயக்கத்தை இனந்தெரிந்து வரவேற்றது தமிழ்நாடு. ஆம், அந்த வேதாந்த இயக்கத்தைத் தேச விடுதலை இயக்கமாகவும் புரிந்து கொண்டு வரவேற்றனர் தமிழ் மக்கள்.

இராம்மோகனர், தயானந்த சரசுவதி, இராமகிருஷ்ணர் ஆகியோர் தமிழ்நாட்டுக்கு வருகை தந்ததாகத் தெரியவில்லை. ஆனால், இராமகிருஷ்ணரின் பிரதம சீடரான விவேகானந்தர் தமிழ்நாட்டிற்கு வருகை தந்து இங்கு வேதாந்த இயக்கத்திற்கு செல்வாக்குத் தேடப் பாடுபட்டார். அதிலே அவர் வெற்றியும் பெற்றார். சென்னையில் மயிலைப் பகுதியில்தான் முதன் முதலில் இராமகிருஷ்ணர் மடம் நிறுவப்பட்டது. இன்று, தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் இராமகிருஷ்ணர் சங்கங்களும் மடங்களும் கிளைவிட்டுள்ளன. அவற்றின் சார்பில் பள்ளிகளும், கல்லூரி களும், ஏழைகளுக்கான விடுதிகளும் இயங்கி வருகின்றன.

வ.உ.சி. கூறுகிறார்

தமிழ் நாட்டில் விடுதலை வீரர்களைத் தோற்றுவித்த பெருமையும் இராமகிருஷ்ணரின் வேதாந்த இயக்கத்திற்கு உண்டு. தேசபக்தத் தமிழர்களில் முதல்வரான வ.உ. சிதம்பரனார், கல்கத்தா ராமகிருஷ்ணர் மடத்துத் துறவியான இராம கிருஷ்ணானந்தரைத் தாம் சென்னையில் சந்தித்ததாகவும், அவரால்

தூண்டப் பெற்றே தாம் சுதேசி இயக்கத்தைத் தொடங்கியதாகவும் தமது ''சுய சரிதை'' (பக். 41-43)யில் கூறுகிறார்.

இராமகிருஷ்ணானந்தருக்குப் பின்னும் வேறு வங்காளிய ரான சந்நியாசிரியர் இருவரை - அவர்கள் ஜப்பான் செல்லும் வழியில் - சென்னையில் தாம் சந்தித்ததாகவும், அவர்கள் வங்காளத்தில் சுதேசி இயக்கம் எழுச்சி பெற்றுள்ளதைத் தமக்கு விளக்கியதாகவும், அதனால், முதலில் இராமகிருஷ்ணானந்தரால் தமது உள்ளத்தில் விதைக்கப்பட்ட ''சுதேசியம்'' என்னும் வித்தானது, இரண்டிலை விட்டு செடியாக வளர்ந்ததாகவும் வ.உ.சி. கூறுகிறார்.

அவர்களுக்குப் பின்னும் அபேதானந்தர், பிரம்மானந்தர் என்னும் ஞானியரிருவரைச் சென்னையில் தாம் சந்தித்ததாகவும், அவர்களது உறவால் ஏற்கனவே தம் உள்ளத்தில் வளர்திருந்த சுதேசியச் செடியானது மரமாகி, ''தரும சங்க நெசவுச்சாலை''- ''சுதேசிக் கப்பல் கம்பெனி'' - ''சுதேசியப் பண்டக சாலை'' என்னும் மூன்று பயன் தரும் கனிகளைத் தந்ததாகவும் கவிதைத் தமிழில் தத்துவ பாணியில் வ.உ.சி. கூறுகிறார்.

இதனால், இராமகிருஷ்ணரின் சீடர்களான இராம கிருஷ்ணானந்தர், மற்றுமிரு துறவியர், அபேதானந்தர், பிரமானந்தர் ஆகியவர்கள் சுதேசிய இயக்கத்தில் வ.உ.சி.யை ஈடுபடுத்தினரென்பது தெளிவாகத் தெரிகின்றது.

பாரதியாரின் பற்று

தேசியக்கவி பாரதியார் இராமகிருஷ்ணரின் வேதாந்த இயக்கத்தினும், அதன் பிரச்சார பீரங்கியான சுவாமி விவே கானந்தரிடத்திலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். 1906-இல் கல்கத்தா காங்கிரசுக்குச் சென்றிருந்தபோது சுவாமி விவே கானந்தரின் சிஷ்யையான நிவேதிதாவைச் சந்தித்து, அவர்தம் உபதேசத்தில் மனதைப் பறிகொடுத்து அவருடைய சீடரானார்.

பாரதியார், நிவேதிதா தேவி - அபேதானந்தர் ஆகியவர்கள் மீது பாடல்கள் புனைந்துள்ளார். அபேதானந்தர் 1906-இல் தமிழகத் திற்கு வருகை தந்தபோது தூத்துக்குடியில் வ.உ. சிதம்பரனார் தலைமையில் அவருக்கு வரவேற்பு அளிக்கப் பட்டது. இவரும் பிரம்மானந்தரும் தமிழகத்திற்கு வருகை தந்ததைக் கூறுமிடத்து,

''வானில் ஒளிவரும் மதியென விளங்கி
வானுறத் திசையுற வளர்ந்து பரந்து,

தபோதன ராகித் தாரணி அளிக்கும்
அபேதா னந்தன், பிரமா னந்தனாம்
சீரள வேனிலும் தென்றலும் வந்தன''

(''வ.உ.சி சுயசரிதை''யில்)

என்கிறார் வ.உ.சி.

அபேதானந்தர் வருகை

அபேதானந்தர் நீண்ட காலம் அமெரிக்காவில் தங்கி வேதாந்தப் பிரச்சாரம் செய்தபின் இலங்கை வழியாகச் சென்னைக்கு வந்தார்.

சென்னை டவுன் ஹாலில் 15-6-1906-இல் அபேதானந்தருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. அதிலே அவர் பேசியது பற்றிப் பாரதியார் தமது ''இந்தியா'' பத்திரிகை (21-6-1906) இதழில் எழுதியது வருமாறு:

''ஆண்மை இழந்து பள்ளத்தில் விழுந்து கிடக்கிறீர்களே! எழுந்து நின்று உங்களது புருஷத் தன்மையை நிரூபித்துக் கொள்ளுங்கள்'' என்று இத்தேசத்தாரை நோக்கிக் கூறுவதில் விவேகானந்தர் எம்மட்டு ஆத்திரம் கொண்டிருந்தாரோ, அம்மட்டு அபேதானந்தரும் கொண்டிருப்பதைக் காண்கிறோம்.

''தீரத்தன்மையைப் பற்றி மட்டிலு மல்லாமல் ஐக்கியம் முதலிய மற்ற விஷயங்களையும் பேசியிருக்கிறார். இந்தியாவில் 30 கோடி ஜனங்கள் இருக்கிறார்கள். ஆனால், ஒருவனுக்கொருவன் சம்பந்தமில்லாமல் ஒவ்வொருவன் ஒவ்வொரு மாதிரி எண்ணங் கொண்டிருக்கிறான். ஆதலால், வெவ்வேறு வகைப்பட்ட 30 கோடி எண்ணங்கள் ஏற்பட்டுப் போய்விடுகின்றன. எனவே, ஒவ்வொரு காரியமும் எளிதாகச் சந்திக்க முடியாமற் போய் விடுகிறது. பிரிட்டிஷ் தேசத்தில் 4 கோடி ஜனங்கள் மாத்திரமே இருந்தபோதிலும் அவர்களனைவரும் ஒரேவிதமான எண்ணங் கொண்டிருப்பதனால் அவர்கள் காரியங்கள் மிகவும் எளிதாகக் கைகூடி வருகின்றன. இதனை அபேதானந்தர் வெகு தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்.''

(''இந்தியா'' 21-6-1906)

சுவாமி விவேகானந்தரின் சகோதரரும் சந்நியாசியுமான பூபேந்திரர் என்பார், அரசியலில் தீவிரங் காட்டியதற்காகச் சிறையில் அடைக்கப்பட்டார். அப்போது, அவரைப் புகழ்ந்தும் போற்றியும் பாரதியார் மூன்று செய்யுட்கள் புனைந்தார். அவற்றுள் ஒன்றைப் பார்ப்போம்.

''இன்னாத பிறர்க்கெண்ணான் பாரத நாட்
டிற்கிரங்கி யிதயம் நைவான்
ஓன்னாரென் ரெவருமிலான் உலகனைத்தும்
ஒருயிரென் றுணர்ந்த ஞானி,
அன்னானைச் சிறைப்படுத்தார் மேலோர்தம்
பெருமையெதும் அறிகி லாதார்,
முன்னாளிற் றுன்பின்றி இன்பம்வரா
தெனப்பெரியோர் மொழிந்தா ரன்றே!''

விவேகானந்தரும் தமிழ் நாடும்.

சுவாமி விவேகானந்தரைப் பற்றிக் கூறுகையில், 'ஆஹா! இராமகிருஷ்ணர் விவேகானந்தரை உண்டாக்கினார்; விவேகானந்தரோ புதிய பாரத தேசத்தை உண்டாக்கினவர்களிலே முதல் வகுப்பைச் சார்ந்தவர் என்கிறார் பாரதியார்.

சுவாமி விவேகானந்தருக்கும் தமிழ் நாட்டிற்கும் உள்ள தொடர்பைப் பற்றிப் பாரதியார் கூறுகையில், ''இந்து தேசத்தின் புதுக்கிளர்ச்சிக்கு விவேகானந்தர் ஆரம்பம் செய்தார். அவரைத் தமிழ் நாடு முதலாவது அங்கீகாரம் செய்துகொண்ட பிறகுதான் வங்கம், மகாராஷ்டிரம் ஆகிய இந்து தேசத்து மாகாணங்கள் அவரது பெருமையை உணர்ந்தன'' என்கிறார்.

இராமகிருஷ்ணரின் வேதாந்த இயக்கத்திலிருந்து வீசிய தேசிய ஒளியானது - தேச பக்தத் தென்றலானது, வங்காளத்திற்கு அடுத்தப்படியாகத் தமிழ் நாட்டையே அதிகமாக ஆக்கிரமித்துக் கொண்டது.''

வ.உ.சியின் வலது கரம் போன்று விளங்கிய சுப்பிரமணிய சிவாவும் இராமகிருஷ்ணரின் வேதாந்த இயக்கத்தில் முதலில் ஈடுபாடு கொண்டு, அதன் வழியாகத் தேசிய இயக்கத்திற்கு வந்தவராவார். அவர் ''சுதந்திரானந்தர்'' என்னும் புனை பெயருங் கொண்டிருந்தார். சுவாமி விவேகானந்தர் தோற்றுவித்த வேதாந்த இயக்கத்தை வலுப்படுத்தும் வகையில் தமிழில் பல நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்*.

வடபுலத்தின் போக்கு

பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம், இராமகிருஷ்ணர் சங்கம் ஆகியவற்றுக்கு அன்றுதொட்டு இன்றுவரை தமிழ்நாடு

* *திரு. பெ.சு. மணி எழுதி, சென்னை பூங்கொடி பதிப்பகத்தாரால் வெளியிடப் பட்டுள்ள ''பாரதியாரும் இராமகிருஷ்ணரும்'' என்னும் நூலில் விரிவாகக் காணலாம்.*

வரவேற்பளித்தது போல, தமிழகத்தில் இராமலிங்கர் தோற்றுவித்த சமரச சுத்த சன்மார்க்க இயக்கத்திற்கு வடநாட்டில் வரவேற்புக் கிடைக்கவில்லை.

தமிழ் நாட்டிலும் இராமலிங்கரை அருட்பா பக்தர்கள் அறிந்திருப்பது, அவர் போதித்த புரட்சிகரமான சீர்திருத்தக் கொள்கைவழி அல்ல - குறிப்பாக, ஆறாம் திருமறை அருட்பாக்களின் வழி அல்ல; அவராலேயே கைவிடப்பட்ட முதல் ஐந்து திருமுறைகள் வழியில்தான். தமிழ் நாட்டின் நிலையே இதுவானால், வடநாடு அவரை வரவேற்காதது பற்றித் தமிழர் குறைப் பட்டுக்கொள்ள முடியுமா?

தமிழ் நாட்டிலுள்ள பிரம்ம சமாஜத்தாரோ, ஆரிய சமாஜத்தாரோ இராமலிங்கரை அணுகியதாகத் தெரியவில்லை. இராமகிருஷ்ணரின் வேதாந்த இயக்கத்தாருள் சிலர் மட்டும் அவரை ஓரளவு அறிந்து வைத்துள்ளனர். அவர்கள் தமிழராகத்தான் இருக்கின்றனர்.

பிரம்ம ஞான சங்கத்தார் இராமலிங்கரைத் தங்கள் உடைமையாக்கிக் கொள்ள முயன்றதுண்டு. சுத்த சன்மார்க்க சங்கத்துக்கும் பிரம்ம ஞான சங்கத்திற்கும் உள்ள தொடர்பை விளக்கும் பிரசுரங்கள் பலவற்றை அவர்கள் வெளியிட்டுள்ளனர். ஆம்; ஆரம்ப காலத்திலே!

சிப்பாய்ப் புரட்சி முடிந்த 1858-க்கும் இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை தோன்றிய 1885-க்கும் இடையிலுள்ள ஒரு கால கட்டத்திலே பாரத நாடெங்கணும் அரசியல் ரீதியான மறுமலர்ச்சி ஏற்பட்டது. ஆங்கிலத்தின் மூலம் கல்வி கற்ற இந்திய அறிஞர்கள், வடக்கிலும் தெற்கிலுமாக அரசியல் குறிக்கோளுடைய பத்திரிகைகளையும், அமைப்புகளையும் தோற்றுவித்தனர். இந்த முயற்சிகளிலேயும் தமிழகம் தனக்குரிய பங்கைச் செலுத்தியது.

தேசிய ஏடுகள்

நாளேடுகளும் வார ஏடுகளுமாக எண்ணற்ற இதழ்கள் பாரதத்தில் தோன்றின. அவற்றில் பெரும்பாலானவை சமயச் சார்புடையவை. அரசியல் சார்புடையவற்றிலேயும் பிரிட்டிஷ் ஆதிக்கத்தை ஆதரிக்கும் நோக்குடையவை பல. எஞ்சியுள்ள சில ஏடுகளே தேசபக்தியுடன் கூடிய தேசிய வாதிகளால் நடத்தப்பெற்றன.

லோகமான்ய திலகர் ''மராத்தா'' என்னும் பெயரில் ஆங்கில இதழையும், ''கேசரி'' என்னும் பெயரில் மராத்தி மொழி

இதழையும் வெளிக் கொணர்ந்தார். கல்கத்தாவிலே அரவிந்தர் ''யுகாந்தரம்'', ''வந்தே மாதரம்'' என்னும் பெயர்களிலே செய்தி இதழ்களைத் தொடங்கினார்.

அந்நாளிலே புதிதாகத் தொடங்கப்படும் எந்த முயற்சிக்கும் பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய பெருநகரங்களிலேயே கால்கோள்விழா நடப்பது வழக்கம். அப்போது இந்தியாவின் தலை நகரம் கல்கத்தாவாக இருந்தது. அதனால், டெல்லி நகரமானது அரசியல் முயற்சிகளுக்கு முன்னோடியாக இருக்கும் பெருமையைப் பெற்றிருக்கவில்லை. ''புது டெல்லி'' என்னும் பெயரில் நாம் இன்று காணும் அரசியல் நகரம் அப்போது தோன்றியிருக்கவில்லை.

தேசபக்தியைப் பரப்புவதற்கான ஏடுகளைத் துவக்குவதிலேயும் சென்னை நகரம் கல்கத்தாவோடும் பம்பாயோடும் போட்டியிட்டது. 1878-இல் ''இந்து'' என்னும் பெயரில் ஆங்கில மொழி வார ஏடு ஒன்றைத் தேசபக்தர் திரு.ஜி. சுப்பிரமணிய ஐயர் தொடங்கினார். அது, பின்னர் நாளேடாக மறுமலர்ச்சி பெற்றது.

ஆங்கில மொழியில் ''இந்து'' வைத் தொடங்கிய 4 ஆண்டுகளுக்குப் பின், 1882-இல் ''சுதேச மித்திரன்'' என்னும் பெயரில் தமிழில் வாரம் இருமுறை இதழொன்றை திரு.ஜி. சுப்பிரமணிய ஐயர் தொடங்கினார். அது, வார இதழாக மலர்ந்து, பின்னர் நாளிதழாகவும் வளர்ந்தது.

திரு.ஜி. சுப்பிரமணிய ஐயர் ''இந்து'' - ''சுதேசமித்திரன்'' ஆகிய ஏடுகளைத் தொடங்குவதற்கு வேறு பல தேசபக்தர்களும் துணை புரிந்தனர். அவர்களில் திரு.மு. வீரராகவாச்சாரியார் குறிப்பிடத் தக்கவராவர்.

மகாஜன சபை

சிப்பாய்ப் புரட்சிக்குப் பின்னும் காங்கிரஸ் மகாசபை தோன்றுவதற்கு முன்னும் இந்தியாவின் முப்பெரும் நகரங்களிலே அரசியல் சார்புடைய நிறுவனங்களும் தோற்றுவிக்கப் பெற்றன.

1876-இல் கல்கத்தாவில் ''இந்தியன் அசோசியேஷனு''ம் பம்பாயில் 1876-இல் மற்றொரு ''இந்தியன் அசோசியேஷனு''ம் தோற்றுவிக்கப் பெற்றன. சென்னை நகரமும் தன் பங்குக்கு ''மகாஜன சபை'' என்னும் பெயரில் அரசியல் நிறுவனம் ஒன்றைப் படைத்தது. தேசியப் பண்புடைய இலக்கிய

அமைப்புகளும் தோன்றின. வடபுலத்தில் தோன்றிய இலக்கிய அமைப்புகளின் சகோதர அமைப்பாக சென்னை திருவல்லிக் கேணியில் ''இலக்கியச் சங்கம்'' என்னும் பெயரில் ஒரு நிறுவனம் தோன்றியது. பிற்காலத்தில் தேசத்தின் பெருந்தலைவர்களாக மலர்ந்தவர்களிலே பலர் தங்கள் அரசியல் வாழ்வின் ஆரம்ப நாட்களிலே சென்னை மகாஜன சபையுடனும் திருவல்லிக்கேணி இலக்கியச் சங்கத்துடனும் தொடர்பு கொண்டிருந்தனர்.

மக்களிடையே இனவழி ஒருமைப்பாட்டை வளர்க்கும் விழாக்களும் கொண்டாடப்பட்டன. ஆம்; அந்நாளில் மொழிவழி இன ஒற்றுமையானது நில வழியிலான தேசிய ஒற்றுமைக்கு அடிப்படை என்று நம்பப்பட்டது.

தேசிய விழாக்கள்

வங்காளத்தில் ''ஜாதீய மேளா'' என்னும் பெயரில் வங்க தேசிய இனத்தவரிடையே ஒருமைப்பாட்டை உருவாக்கும் இனவழி விழா ஒன்று *1867*-இல் தொடங்கி வைக்கப் பெற்றது. இது, ஆண்டுதோறும் தொடர்ந்து நடத்தப்பெற்றது. இந்த விழாவைக் கண்டு பிரிட்டிஷ் அதிகார வர்க்கம் அச்சம் கொண்டது.

இந்நூலின் ஆசிரியர் (ம.பொ.சி.) மகாஜன சபையில் நீண்டகாலம் தொடர்பு கொண்டிருந்ததோடு, *1948*-இல் அதன் துணைத் தலைவராகவும் இருந்திருக்கிறார்.

1871-ஆம் ஆண்டில் தெற்கே தமிழகத்தில் தில்லையம் பதியை யடுத்துள்ள வடலூரிலே அனைத்துச் சமயத்தினரும் ஒருங்கு கூடி இறை வழிபாடு நடத்தும் நிலையில் இராமலிங்க சுவாமிகள் ஒரு பொதுக்கோயிலை நிறுவினார். அதற்குச் ''சத்திய ஞான சபை'' என்று பெயர் சூட்டினார். ஆண்டுதோறும் தைப்பூச நாளிலே ஒளி வழிபாடு நடைபெறவும் வழி வகுத்தார்.

பம்பாயில் மராத்தியர் மத்தியில் ஏகாதிபத்தியங்களின் எதிரியான வீர சிவாஜிக்கு விழா எடுக்கும் முயற்சி அரும்பெடுத்ததும் இந்தக் காலத்தில்தான். அது, மராத்திய இனத்தவரின் தேசிய விழாவாகவும் பிற்காலத்தில் திலகரால் உருவாக்கப்பட்டது.

தேசிய இலக்கியங்கள்

1882-இல் வங்க மாநிலம் பெற்றெடுத்த பங்கிம் சந்திரர் என்பார், ''ஆனந்த மடம்'' என்னும் பெயரில் வங்க மொழியிலே

நாவல் ஒன்றைப் படைத்தார். இது, 1772 முதல் 1775 வரை வங்காளத்தில் நடைபெற்ற ''சந்நியாசிகள் கலகத்'' தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது. வங்காளியரிடையில் ஒருமைப்பாட்டையும் உரிமையுணர்வையும் ஏற்படுத்தும் வகையில் பங்கிம் சந்திரர் இந்த நாவலைப் படைத்தார். இதிலே வங்க மாதாவை கலகக்கார சந்நியாசிகள் வழிபடும் பாவனையில் ''வந்தே மாதரம்'' என்னும் தலைப்பில் பாடல் ஒன்றையும் சேர்த்து வைத்தார்.

தமிழகமும் தனது பங்குக்கு ஒருமைப்பாட்டு இலக்கியங்களை வழங்கியது. நிலமற்ற உழுவோருக்கும், நிலம் படைத்த உழுவிப்போருக்கும் இடையிலான வர்க்கப் போராட்டத்தை உருவகப்படுத்திக் காட்டும் வகையில் பௌராணிகரான கோபால கிருஷ்ண பாரதியார் ''நந்தனார் சரித்திர கீர்த்தனை'' என்னும் நாடக இலக்கியத்தைப் படைத்ததும் இந்தக் காலத்தில் தான்.

திருத்தொண்டர் புராணத்தில் சேக்கிழார் படைத்த நந்தனார் புராணத்திலே அந்தண மிராசுதார் பாத்திரம் இல்லை. அதிலே வரும் நந்தன் ஏர் பிடித்து உழும் உழவனும் அல்லன் சிவபக்தனான நந்தனாரை மட்டும் சேக்கிழாரிடமிருந்து பெற்றுக் கொண்டு, புதிய நந்தனார் கதையை கோபாலகிருஷ்ண பாரதியார் படைத்தளித்தார்.

வங்கத்தில் பங்கிம்சந்திரர் ''ஆனந்த மடம்'' என்னும் தேசிய நாவலைப் படைத்துத் தந்த நேரத்திலே - அதாவது, 1878-இல் ''பிரதாப முதலியார் சரித்திரம்'' என்னும் நவீன நாவல் ஒன்றை மாயூரம் நீதிபதி வேதநாயகனார் தமிழிலே படைத்தளித்தார். இந்த நாவலிலே ஆங்கில மொழியின் ஆதிக்கத்தை எதிர்க்கும் உரையாடல்களைச் சேர்த்தார். இது தமிழுரிமைக் கிளர்ச்சிக்கு அடிகோலிய முதல் நூலாகும். ''சர்வ சமய சமரசக் கீர்த்தனைகள்'' என்னும் பெயரில் தேசிய ஒருமைப்பாட்டுப் பாடல்களையும் வேத நாயகனார் இயற்றித் தந்தார்.

வள்ளற் பெருமானின் வருணாசிரம எதிர்ப்பு, வறுமை எதிர்ப்பு, மத எதிர்ப்புக் கருத்துக்களைக் கொண்ட ஆறாந்திரு முறைப் பாடற்றொகுப்பு 1885-இல் தான் வெளியிடப்பட்டது.

காங்கிரஸ் பிறந்த சூழ்நிலை

இப்படி, தேசம் முழுவதிலும் பத்திரிகைகளும், அரசியல் அமைப்புகளும், இனவழிப்பட்ட தேசிய விழாக்களும், ஒருமைப்

பாட்டு இலக்கியங்களும் தோன்றி வளர்ந்து கொண்டிருந்த சூழ்நிலையிலேதான் 1885-இல் இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை பிறந்தது.

அந்த மாபெரும் விருட்சம் தோன்றுவதற்கான வித்து விழுந்தது தமிழகத்தின் தலைநகரான சென்னையம்பதியில்தான்!

பிரம்மஞான சங்கமும் வள்ளலாரும்

சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தை நிறுவிய வள்ளற் பெருமான் பிறந்த ஓராண்டுக்குப் பின் ருஷியப் பெண்மணி பிளாவட்ஸ்கி அம்மையாராலும், அமெரிக்க அறிஞர் ஆல்காட் அவர்களாலும் அமெரிக்காவில் பிரம்மஞான சங்கம் நிறுவப் பெற்றது. இவர்கள் இருவரும் தமிழகத்தின் தலைநகரான சென்னைக்கு வந்த பின் இராமலிங்கரின் புரட்சிகரமான கொள்கைகளை அறிந்து அவற்றில் கவர்ச்சியுற்றனர். அதன் காரணமாக, வள்ளலாரின் இயக்கத்தை ஜீரணித்துவிட முயன்றது பிரம்மஞான சங்கம். சங்கம் தோன்றுவதற்குத் தம்மை தூண்டிய மகாத்மாக்களிலே இராமலிங்கரும் ஒருவர் என்றார், பிளாவட்ஸ்கி அம்மையார். ''ஐயத்திற்கிடமில்லாமல், இராமலிங்கர் மகாத்மாவே'' என்றும் அவர் கூறினார்.

என்ன காரணத்தாலோ, இராமலிங்கரின் புரட்சிகரமான கொள்கைகளில் மேடம் பிளாவட்ஸ்கி அவர்களுக்கு ஏற்பட்ட கவர்ச்சி அவருக்குப் பின் பிரம்மஞான சங்கத்தை நடத்தியவர் களுக்கு ஏற்படாமற் போய்விட்டது. குறிப்பாகப் பிளாவட்ஸ்கி அம்மையாருக்குப் பின் தலைமைப் பொறுப்பை ஏற்ற டாக்டர் அன்னிபெசன்ட் அம்மையார் சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தைத் தழுவிச் செயல்பட முயன்றதாகத் தெரியவில்லை.

மற்றொரு ஐரோப்பியர்

இராமலிங்கரின் சமுதாயப் புரட்சிக் கொள்கைகளிலே கவர்ச்சியுற்ற மற்றொரு ஐரோப்பியர் சார்லஸ் ஹெய்மஸத் என்பவராவார். இவர், ''இந்திய தேசியமும் இந்து சமூக சீர்திருத்தமும்'' என்னும் தமது நூலிலே, இந்தியாவில் தேசிய மறுமலர்ச்சி ஏற்படுத்தியவர்களிலே இராமலிங்கரும் ஒருவராவார் என்னும் உண்மையை ஒப்புக் கொள்கிறார். ஆனால், வள்ளலார் தொடங்கி வைத்த தேசிய மறுமலர்ச்சி இயக்கமானது அவருக்குப் பின் ஸ்தாபன ரீதியில் செயல்படாமல் போய்விட்டது என்று மிகுந்த வருத்தத்தோடு கூறுகின்றார். அவருடைய கூற்றை முழுமையாகப் பார்ப்போம்:

''19-ஆம் நூற்றாண்டின் மற்றொரு சமய சீர்திருத்தவாதி மகாத்மா இராமலிங்கம் ஆவார். சன்மார்க்க சங்கம் என்னும் சிறிய அமைப்பின் கீழ்ச் சீடர்களைப் பெற்றிருந்தாலும், அவர் ஒரு மதப் பிரிவைத் தொடங்கவில்லை. 'உலக சகோதரத்துவப் புனிதப் செய்தியோடு இந்தியாவிற்கு இனி நேரவிருப்பதைத் தீர்க்க தரிசனமாக இராமலிங்கர் கூறினார்' என்று பிளாவட்ஸ்கி உரிமை கொண்டாடியதற்குப் பிறகு, பிரம்மஞான சங்கத்தில் இராமலிங்கரின் புரட்சிகரமான கருத்துக்கள் சில புகுந்தன.

''சுவாமிகளின் போதனைகளில் சமுதாயத்தை ஆட்கொண்ட தென ஏதேனும் இருந்தால், அது தற்காலிகமானதுதான். சமூக அநீதிகளையும், கொடுமைகளையும் அழித்தொழிக்க அவர் கொடுத்த போதனை, மனிதர்களது நடத்தையை மாற்றி அமைக்க வல்ல முறையில் ஸ்தாபன ரீதியான முயற்சிகளால் தொடர வில்லை'' என்கிறார் சார்லஸ் ஹெய்ம்ஸத் என்னும் ஐரோப்பிய அறிஞர், ''இந்திய தேசியமும் இந்து சமூக சீர்த்திருத்தமும்'' என்னும் தமது நூலிலே.

வள்ளலார் இயக்கம் வளர்ச்சி அடையத் தடை

வள்ளற் பெருமானின் புரட்சிகரமான போதனைகளை உலக மக்கள் ஏற்கும்படிச் செய்வதற்கான தீவிர முயற்சிஎதுவும் அம்ம கான் மறைந்த பின்னர் யாராலும் மேற்கொள்ளப் படவில்லை என்பது மறுக்க முடியாத உண்மைதான். அதற்குக் காரணம், சமுதாயத்தின் மீது செல்வாக்குப் பெற்றுள்ள சாதிகளி லிருந்து சீடர்களைப் பெறும் அதிருஷ்டம் இராமகிருஷ்ணருக்கு இருந்தது போல இராமலிங்கருக்கு இல்லாமல் போய் விட்டதாகும்.

இராமகிருஷ்ணர், தயானந்தர், ராம்மோகன்ராய் ஆகியோர் சமுதாயத்தில் உயர் குடியினரான - சமயச் சீர்திருத்தங்களுக்கு வழிகாட்டும் உரிமையைப் பெற்றவரான - அந்தணர் வகுப்பில் பிறந்தார்கள். அதனால் அவர்களுடைய கொள்கையை ஏற்க மறுத்த வைதிக வட்டாரங்களும், சமுதாயத்திற்குத் தலைமை தாங்குவதற்கு அவர்களுக்குள்ள பிறப்பு வழிப்பட்ட தகுதியை மறுக்கவில்லை. இந்து சமுதாயத்திலுள்ள பிறப்பு வழிப்பட்ட இந்த உயர்வு தாழ்வு மனப்பான்மை மிக எளிய கருணிகர் சாதியில் பிறந்த இராமலிங்கரின் தலைமை செல்வாக்குப் பெறுவதற்குத் தடையாக இருந்தது.

இராமலிங்கரின் இயக்கம் வளர்ச்சியடையாததற்கு இன்னொரு நியாயமான காரணமும் இருக்கிறதெனலாம். பிரம்ம

சமாஜம், ஆரிய சமாஜம், இராமகிருஷ்ணர் இயக்கம் ஆகிய வற்றைத் தோற்றுவித்த கர்த்தாக்கள் வடபுலத்தினராதலால் சமஸ்கிருதம், இந்தி பொது மொழிகளிலும் தங்கள் கொள்கை களைப் பரப்ப முயன்றனர். அதற்காக அவர்கள் வடபுலம் அளவிலேனும் மக்கள் மத்தியிலே சுற்றுலாச் செய்தனர். அவர் களுடைய போதனைகள் எல்லாம் உரைநடையிலான இந்தி மொழியிலே மிக எளியவர்களுக்கும் போய்ச் சேர்ந்தது.

இவர்களால் தோற்றுவிக்கப்பட்ட லாலா லஜபதி ராய் (ஆரிய சமாஜம்), கேசவசந்திர சென் (பிரம்ம சமாஜம்), சுவாமி விவேகானந்தர் (இராமகிருஷ்ணர் சங்கம்) ஆகியவர்கள் சர்வ தேசமொழியான ஆங்கிலத்தின் துணை கொண்டும் தங்கள் இயக்கங்களை இந்தி மொழி வழங்காத தென் மாநிலங்களிலும், உலக நாடுகளிலும் பரப்பப் பாடுபட்டனர். இராமலிங்கரின் நிலை இதிலிருந்து வேறுபட்டதாகும்.

அவர் தம்முடைய புரட்சிகரமான கொள்கைகளைக் கவிதைத் தமிழில் பாடினார். கவிதை நடை சாதாரணத் தமிழ் மக்களையும் கவர்ந்ததென்றாலும், அவற்றிலுள்ள புரட்சிகரமான போதனைகளை அவர்கள் சரியாகப் புரிந்துகொண்டார்கள் என்று சொல்வதற்கில்லை. அவருடைய புரட்சிகரமான ஆறாந் திருமுறைப் பாடல்கள் அவர் காலத்தில் அச்சிடப்படவில்லை. அதனால், தமிழக அளவிலேயும் சாதாரண மக்களிடையில் தம் காலத்திலேயே தம்முடைய தேசிய கலாச்சாரப் புரட்சி இயக்கத்திற்கு ஆதரவு தேடும் அதிருஷ்டம் வள்ளலாருக்கு இல்லாமற் போய் விட்டது. இவ்வளவிருந்தாலும், வைதிகக் கோட்டையை வெற்றிகரமாகத் தாக்க முடிந்திருக்கிறது. வள்ளலார் காலத்திலேயே திருவாவடுதுறை மடம் உள்ளிட்ட வைதிகச் சைவ மடங்கள் வள்ளலாரின் கொள்கைகளால் தாக்குண்டன. யாழ்ப்பாண வாசியான ஆறுமுக நாவலர் தலைமையில் அருட்பாவுக்கு எதிர்ப்பியக்கமும் உருவானது. நெல்லிக்குப்பம் நீதி மன்றத்திலே இராமலிங்கருக்கு எதிராக ஆறுமுக நாவலர் வழக்குத் தொடுக்கும் நிலைமையும் ஏற்பட்டது.

இராமலிங்கருக்குப் பின்னும் இந்த இருபதாம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டிலே யாழ்ப்பாண வாசியான கதிர்வேலர் தலைமையிலே அருட்பா எதிர்ப்பியக்கம் புத்துயிர் பெற்றது. அப்போதும் அருட்பாவை ''மருட்பா'' என வாதிக்கும் வழக்கொன்று நீதி மன்றத்துக்குச் சென்றது.

அந்தக் காலத்திலே சைவ வட்டாரத்திலிருந்து மறை மலையடிகள் போன்றவர்களும் நாஞ்சில் சதாவதானம், ஷெய்குத் தம்பிப் பாவலரும், கிறித்துவ வட்டாரத்திலிருந்து நீதிபதி மாயூரம் வேதநாயகம் பிள்ளையும் அருட்பா இயக்கத்துக்கு ஆதரவு தெரிவித்தனர்.

வள்ளலாரின் சமரச சுத்த சன்மார்க்க இயக்கமென்னும் தீயிலிருந்து புறப்பட்ட சிறு பிழம்புகளாக மாயூரம் வேதநாயகம் பிள்ளையின் ''சர்வ சமய சமரசக் கீர்த்தனை'' என்ற கவிதை இலக்கியமும், கோபாலகிருஷ்ண பாரதியாரின் ''நந்தனார் சரித்திரக் கீர்த்தனை'' என்ற நாடக இலக்கியமும் தோன்றி, எம்மதமும் சம்மதம் என்ற சமரசக் கொள்கைக்கு - வருணாசிரமக் கொடுமையற்ற சமுதாயம் படைக்கும் இயக்கத்திற்கு - ஆதரவைத் திரட்டின.

பொதுவாக, 19-ஆம் நூற்றாண்டில் வடபுலத்தில் வீறிட்டெழுந்த தேசிய கலாசார எழுச்சியிலே இராமலிங்க சுவாமிகளின் மூலமாகத் தமிழ் நாடும் தனது பங்கைச் சிறிய அளவிலேனும் செலுத்தியிருப்பதை இந்தியாவின் விடுதலைப் போர் வரலாறு காட்டுகின்றது. வடபுலத்தின் எதிரே தலைகுனிந்து நிற்கும் நிலையில் தமிழகம் இல்லை. வள்ளலாரையும், வேதநாயகரையும், கோபாலகிருஷ்ண பாரதியாரையும் தந்து தலை நிமிர்ந்து நிற்கின்றது.

சிப்பாய்ப் புரட்சிக்கு முன்னும் பின்னும் வடபுலத்தில் தோன்றிய தேசிய கலாசார எழுச்சியிலே தமிழகமும் பங்கு கொண்டதென்பதற்கான தஸ்தாவேஜாக விளங்குகின்றது இராமலிங்கர் படைத்த திருவருட்பா. வாழ்க, இராமலிங்கர் புகழ்!

★-★-★

காங்கிரஸ் மகாசபை பிறந்தது!

1884-இல் சென்னை அடையாறிலுள்ள பிரம்மஞான சங்கத்திலே அந்தப் பேரியக்கத்தைச் சார்ந்தவர்களின் வருடாந்திர மாநாடு நடைபெற்றது. அது முடிந்ததும், மாநாட்டுக்கு வந்திருந்தவர்களிலே 17 பேர் திவான் இரகுநாதராவ் இல்லத்தில் தனியாகக் கூடி அனைத்திந்தியாவுக்குமாக ஒரு தேசிய அமைப்பை நிறுவவும், அதற்கு மாநிலந்தோறும் கிளைகள் அமைக்கவும் திட்டமிட்டனர். அவர்கள் பெயர்கள் வருமாறு:

சென்னை : எஸ். சுப்பிரமணிய ஐயர், பி. ரங்கைய நாயுடு, அனந்தாச்சார்லு;

வங்காளம் : நரேந்திரநாத் சென், சுரேந்திரநாத் பானர்ஜி, எம்.கோஷ், சரண்சந்திர மித்தர்;

பம்பாய் : வி.என். மண்டிலிக், கே.டி.தலாங், தாதாபாய் நௌரோஜ்;

புனா : சி. விசயரங்க முதலியார், பாண்டுரங்ககோபால்

பஞ்சாப் : சர்தார் தயாள் சிங்

அலகாபாத் : ஹாரிஸ்சந்திரா

உ.பி. : காளி பிரசாத், இலக்குமி நாராயணன், ஸ்ரீராம்

இவர்களில் சென்னை திரு. எஸ். சுப்பிரமணிய ஐயர், புனா வாசியான திரு.சி. விசயரங்க முதலியார் ஆகிய இருவரும் தமிழராவர். பி. ரங்கைய நாயுடு, அனந்தாச்சார்லு ஆகிய இருவரும் சென்னை வாசிகளாவர்.

அடுத்துவரும் கிறிஸ்துமஸ் வாரத்தின்போது அனைத்திந்திய முதல் தேசிய மாநாட்டை கல்கத்தாவில் நடத்துவதென்று இவர்கள் முடிவெடுத்தனர். இதனைப் பின்னணியாகக் கொண்டு தான் இந்தியதேசிய காங்கிரஸ் மகாசபை தோன்றியதென்று

திரு. மித்தர் என்னும் வங்காள சரித்திராசிரியர் எழுதி வெளியிட்டுள்ள ''காங்கிரஸ் பல்பொருள் களஞ்சியம்'' (காங்கிரஸ் சைக்ளோபீடியா) என்னும் நூல் (பக்கம் 7) கூறுகின்றது.

இதனால், ''இந்திய தேசிய காங்கிரஸ்'' என்னும் விருட்சத்திற்கு வித்து விழுந்தது தமிழ் மண்ணில்தான் என்பது புலனாகின்றது. தமிழகமே! இந்திய தேசியம் பிறந்தது உன்னிடந்தனாதலால், அதைக் காத்து வளர்ப்பதும் உன் கடமை. இதை மறவாதே!

ஹ்யூம் தோன்றினார்!

சென்னையில் கூடிய 17 கனவான்கள் திட்டமிட்டபடி அடுத்து வந்த கிறிஸ்துமஸ் வாரத்திலே, ''இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை'' என்னும் பெயரில் ஒரு புதிய அமைப்பு தோற்றுவிக்கப் பெற்றது. சென்னையில் திட்டமிட்டபடி கல்கத்தாவில் அல்ல; பம்பாயிலே!

காங்கிரஸ் மகா சபையைத் தோற்றுவிக்க நாட்டிலுள்ள அறிவாளிகளுக்கு அழைப்பு விடுத்த பெருமை ஆலன் ஆக்டேவியன் ஹ்யூம் என்பவருடையதாகும். இவர் தந்தை பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர். ஐ.சி.எஸ். தேர்வு பெற்ற பின் ஹ்யூம் 20-ஆவது வயதில் இந்தியன் சிவில் சர்வீசில் சேர்ந்தார்.

அரசு அலுவலில் இருந்தபோதே, மதுவிலக்குப் போன்ற சமூகப் பணிகளில் ஆர்வம் காட்டினார். பிரிட்டிஷ் அரசின் நடவடிக்கைகளில் இந்திய மக்கள் வெறுப்புற்ற நேரங்களிலே, மிகுந்த துணிவுடன் மக்கள் சார்பில் நின்று அரசின் போக்கை மாற்ற முயன்றார். இதனால், ஆளுவோரால் சந்தேகிக்கப்பட்டார். உள்துறை நிர்வாகப் பதவிக்கு வைசிராய் லார்டு ரிட்டன் இவரது பெயரைப் பரிந்துரைத்தபோது மேலிடம் ஏற்க மறுத்தது.

1857-இல் நடந்த சிப்பாய்ப் புரட்சியின்போது, வங்காளத்தில் எட்டாவா மாவட்டத்தில் துணை மாஜிஸ்திரேட்டாகவும், துணைக் கலெக்டராகவும் இருந்தார். அப்போது ஒரு அதிகாரி என்ற வகையில் இவருக்கும் புரட்சியாளர்களுக்கும் அனந்தராம் என்ற சிற்றூரில் மோதல் ஏற்பட்டது. அந்நேரத்தில் மனிதாபிமானம் படைத்த இந்தியர்களாலே இவர் காப்பாற்றப்பட்டார். புரட்சியை ஒடுக்கத் துணிவுடன் தொண்டாற்றியதற்காக இவருக்கு அரசு 'இபிஜ' என்ற பட்டத்தை வழங்கியது.

அரசுக்கு எச்சரிக்கை!

ஆட்சியிடம் ஏற்பட்ட கருத்து வேற்றுமை காரணமாக, ஹ்யூம் தாமாகவே பதவியைத் துறந்தார். 1857 புரட்சி பற்றி ஆய்வு நடத்தும் வேலையைத் தாமாகவே மேற்கொண்டார். அரசு இவர் கோரும் ஆவணங்களையெல்லாம் கொடுத்து ஒத்துழைத்தது. இந்த ஆய்வின் விளைவாக, 1857-இல் ஏற்பட்டது போன்ற ஒரு பயங்கரமான புரட்சி திரும்பவும் எந்த நேரத்திலும் நேரக் கூடுமென்று கூறி அரசை எச்சரித்தார்.

நாடு முழுவதும் சுற்றிச் சிப்பாய்ப் புரட்சியின் விளைவு களை ஆராய நேர்ந்ததால், இந்தியரிலே ஆங்கிலம் படித்த பட்டதாரிச் சாதியினரும் உத்தியோக நியமனங்களில் தங்களை பாரபட்சத்துடன் நடத்துவதால் பிரிட்டிஷ் அரசிடம் ஆழ்ந்த அதிருப்தி கொண்டிருப்பது இவருக்குப் புலனாகியது. இந்த அதிருப்பதியாளர்கள் மக்களுக்குத் தலைமை தாங்கும் பொறுப்பை ஏற்றால் அபாயகரமான விளைவுகள் ஏற்படக்கூடும் என்பதையும் ஹ்யூம் உணர்ந்தார். ஆகவே, சிப்பாய்ப் புரட்சியைப் போன்ற ஒரு புரட்சி திரும்பவும் தோன்றுவதைத் தவிர்க்கவும். ஆங்கிலம் படித்த சாதியினரின் தேவைகளை நிறைவு செய்ய அரசைத் தூண்டவும் ஆங்கிலம் படித்த பட்டதாரிகளைக் கொண்ட அனைத் திந்திய ரீதியிலான ஓர் அமைப்பு தேவை என்பதை ஹ்யூம் உணர்ந்தார்.

வன்முறையிலான சிப்பாய்ப் புரட்சி தோன்றுவதற்கு இந்து - இஸ்லாம் மதத் தலைவர்களே காரணமாக இருந்தனர் என்று அவர் மதிப்பிட்டதால், மக்கள் மீது மதத் தலைவர்களுக்குள்ள பிடிப்பைத் தளர்த்தவும், புரட்சி மனப்பான்மையற்ற ஆங்கிலம் படித்த பட்டதாரிகள் தலைமையின் கீழ் மக்களைக் கொண்டு வரவும் அவர் உள்ளூற நினைத்திருக்கலாம். ஆம்; அந்தத் திருப்பத்தையும் இந்திய சமுதாயம் காண்பதற்கு காங்கிரஸ் மகாசபைதானே முயன்றது. உண்மையில் நாட்டில் தேசிய உணர்வு மறுமலர்ச்சியடைவதற்காகவும், மக்கள் மீது மதத் தலைவர்களுக்கு இருந்த பிடிப்பைத் தளர்த்த வேண்டியது அவசியமாயிற்று.

இந்நிலையில், பல்கலைக்கழகப் பட்டதாரிகளான இந்திய இளைஞர்களுக்கெனத் தனியாக ஹ்யூம் ஒரு வேண்டுகோள் விடுத்தார். படித்துப் பட்டம் பெற்ற இந்தியரில் சிலராவது தங்கள் தாய்நாடு நலமடைய தன் போன்றவர்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று தனது வேண்டுகோளில் ஹ்யூம் குறிப்பிட்டார்.

பட்டதாரிகள் மாநாடு!

இதனையடுத்து, *1885* டிசம்பர் *28, 29, 30* ஆகிய தேதிகளில் இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையின் முதல் மாநாட்டை ஹ்யூம் கூட்டினார். அதற்காக விடுத்த சுற்றறிக்கையிலே ''வங்காளம், பம்பாய், சென்னை ஆகிய மாநிலங்களிலிருந்து வரும் ஆங்கில மொழியில் ஞானமுள்ள, அரசியல் பிரமுகர்களைக் கொண்டதாக மாநாடு இருக்கும்'' என்று குறிப்பிட்டிருந்தார்.

ஆம்; இந்திய தேசியத்தின் பெயரால் முதன்முதலாக ஒரு மாநாடு, இங்கிலீஷ்காரர் ஒருவரால், இங்கிலீஷ் படித்துப் பட்டம் பெற்றவர்களைக் கொண்டதாகக் கூட்டப் பெற்றது. பம்பாய் கோகுல்தாஸ் தேஜ்பால் சமஸ்கிருதக் கல்லூரியில் மாநாடு நடந்தது. இது ஒன்றுதான் அதிலிருந்த ''சுதேசியம்'' ஆகும்.

இம்மாநாட்டிலே மொத்தம் 72 பிரதிநிதிகள் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்து வந்து கலந்து கொண்டார்கள். அவர்களின் மாநிலவாரி எண்ணிக்கை வருமாறு:

சென்னை	*21*
பம்பாய் - சிந்து	*38*
பஞ்சாப்	*3*
வடமேற்கு மாகாணம்	*7*
மத்திய மாகாணம் - பீகார்	-
வங்கம் - பீகார் - ஒரிசா	*3*

காங்கிரஸ் மகாசபை ஆரம்பமானபோது வங்கம், பீகார், ஒரிசா, அசாம் ஆகிய நான்கு மாநிலங்களும் ''வங்காளம்'' என்னும் பெயரில் ஒரே மாகாணமாக இணைக்கப்பட்டிருந்தது இங்கு நினைவிற் கொள்ளத்தக்கதாகும்.

சென்னை மாநிலத்திலிருந்து சென்றிருந்த 21 பேரில் மாவட்ட வாரி எண்ணிக்கை வருமாறு:

சென்னை நகரம்	*8*
செங்கற்பட்டு	*2*
தஞ்சாவூர்	*1*
கும்பகோணம்	*1*
மதுரை	*1*
திருநெல்வேலி	*1*

கோயமுத்தூர்	1
சேலம்	1
கடப்பை	1
பெர்ஹாம்பூர்	1
மசூலிப்பட்டணம்	1
அனந்தபூர்	1
பெல்லாரி	1

இந்தப் பட்டியல்படி சென்னை உள்ளிட்ட தமிழ் மாவட்டங்களிலிருந்து சென்றிருந்தவர்களின் எண்ணிக்கை 16; ஆந்திர மாவட்டங்களின் பிரதிநிதிகள் எண்ணிக்கை 5.

பாரதியாரின் கணிப்பு!

பம்பாயில் கூடிய முதலாவது காங்கிரஸ் மாநாட்டின் சிறப்புகளை வருணித்துத் தேசியக் கவி பாரதியார் எழுதிவெளியிட்ட நூல் ஒன்றிலே, மேலே கண்ட பட்டியலுக்குக் கீழே ''தமிழ் நாட்டின் ஊர்களைக் கணித்திடுக'' என்று குறிப்புத் தந்துள்ளார். தமிழ்நாட்டவர் அதிக எண்ணிக்கையில் கலந்து கொண்டதைச் சுட்டிக் காட்டுவதிலே பாரதியாருக்கு ஒரு தனி மகிழ்ச்சி! இனவுணர்ச்சியுடைய தேசியவாதியல்லவா!

பம்பாய் மாநாட்டிலே திரு. உமேஷ் சந்திர பானர்ஜி என்ற வங்க மாநிலக் கிறித்துவர் தலைமை வகித்தார். அவர் தமது தலைமையுரையிலே தமிழ்நாட்டிலிருந்து பிரதிநிதிகள் வந்த வகையை மாவட்டவாரியாகச் சொல்லி மகிழ்ச்சி தெரிவித்தார். தமிழ்நாட்டிலிருந்து சென்றிருந்த பத்திரிகைக்காரர்களையும் தனியே குறிப்பிட்டு, அவர்களைப் பெருமைப்படுத்தினார். அந்த அளவுக்கு முதலாவது காங்கிரஸ் மாநாட்டிலே பிரதிநிதிகளின் எண்ணிக்கையில் தனது பங்கைத் தமிழ்நாடு குறைவறச் செலுத்தியது.

முதல் மாநாட்டிலே தமிழ்நாட்டின் சார்பில் திரு.ஜி. சுப்பிரமணிய ஐயர் சிறப்பிடம் பெற்றார். அவர் ''இந்து'', ''சுதேசமித்திரன்'' ஆகிய பத்திரிகைகளைத் தொடங்கி நடத்தி வந்ததை முன்பே அறிந்தோம்.

காங்கிரஸ் மாநாட்டிலே தலைமைப்பொறுப்பை ஏற்குமாறு திரு. உமேஷ் சந்திர பானர்ஜியை ஹ்யூம் அழைத்தபோது, தமிழ்நாட்டின் சார்பில் அதனை ஆதரித்துப் பேசினார்.

திரு.எஸ். சுப்பிரமணிய ஐயர். அத்துடனன்றி, மாநாட்டில் முதல் தீர்மானத்தை முன் மொழிந்தவரும் திரு.ஜி. சுப்பிரமணிய ஐயராவர். அந்தத் தீர்மானம் வருமாறு:

''இந்தியாவின் அரசியல் நிலையை இங்கும் இங்கிலாந்தி லும் பரிசோதனை செய்வதாக வாக்குக் கொடுத்தபடி, அதற்காக ஒரு அரசியல் கமிஷன் நியமிக்கப்பட வேண்டுமென்றும், அந்தக் கமிஷனில் இந்தியப் பிரதிநிதிகளுக்கும் இடம் தரவேண்டு மென்றும், அந்தக் கமிஷன் இந்தியாவிலும் இங்கிலாந்திலும் சாட்சிகளை அழைத்து விசாரணை நடத்த வேண்டுமென்றும் இந்த மக்கள் சபை கேட்டுக் கொள்ளுகின்றது.''

தீர்மானத்தை முன் மொழிந்து திரு.ஜி.சு. ஐயர் மாநாட்டுப் பிரதிநிதிகளின் பாராட்டைப் பெறும் வகையில் அருமையான ஒரு சொற்பொழிவை நிகழ்த்தினார். அப்போது அவருக்கு வயது முப்பது.

'சுய அரசாட்சி வினா - விடை'

பம்பாய் மாநாடு நடைபெறுவதற்கு முன்னும், அது நடை பெற்றதற்குப் பின்னும் அது பற்றிய செய்திகளை மக்களிடையே பரப்புவதில் திரு.ஜி.சு. ஐயரின் ஆங்கில ஏடான 'இந்து'வும், தமிழ் ஏடான 'சுதேசமித்திரனு'ம் மிகுந்த ஆர்வம் காட்டின. திரு. ஐயர், 1883 -ல் ''சுய அரசாட்சி வினா - விடை'' என்னும் பெயரில் இந்திய மக்களின் அரசியல் விருப்பங்களைப் புலப்படுத்தும் நூல் ஒன்றை வெளியிட்டார். இந்நூலை காங்கிரஸ் தோன்றக் காரணமாக விருந்த ஹியூம் அவர்கள் பெரிதும் பாராட்டினார். காங்கிரஸ் தோன்றுவதற்கு முன்பே, ''ஒரு தேசியக் கட்சி தேவை'' என்று தலைப்பிட்டு 'இந்து' பத்திரிகையில் ஒரு தலையங்கம் எழுதப்பட்டது. இதுவும் சென்னையிலே 17 கனவான்கள் கூடவும், பம்பாயிலே காங்கிரஸ் மகாசபை தோன்றவும் துணை புரிந்ததெனலாம். இந்தப் பின்னணியாலும் பம்பாயில் கூடிய முதலாவது காங்கிரஸ் மகாசபையிலே திரு. ஜி. சுப்பிரமணிய ஐயர் தனி மதிப்பைப் பெற்றார்.

''காங்கிரஸ் மகாசபையின் சரித்திரம்'' என்னும் தமது நூலிலே, ''தமிழ் நாடு தவமுடையது. ஏனெனில், காங்கிரஸ் மகாசபையின் முதல் கூட்டத்தில் முதல் தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றும் பெருமை தமிழ் நாட்டுத் தலைவராகிய ''சுதேசமித்திரன்'' திரு.ஜி. சுப்பிரமணிய ஐயருக்கே கிடைத்தது' என்று பாரதியார் கூறுகிறார்.

ஜவகர்லால் கருத்து!

பம்பாய் காங்கிரஸ் மகாசபையிலே நடவடிக்கைகள் அனைத்தும் ஆங்கிலத்திலேயே நடைபெற்றன. இந்த மாநாடு பற்றி ''உலக சரித்திரம்'' என்னும் தமது நூலிலே, ''ஆங்கிலம் படித்த வகுப்பாரின் கட்சியை எடுத்துக் கூறும் இடமாகவே அந்த மகாசபை இருந்தது'' என்கிறார் ஜவகர்லால் நேரு.

பம்பாய் மாநாட்டிலே பிரிட்டிஷ் யூனியன் ஜாக் கொடியே உயர்த்தப் பெற்றது. பிரிட்டிஷ் அரசருக்கு வாழ்த்துப் பாடிய பின்பே மாநாட்டு நடவடிக்கைகள் தொடங்கின. பம்பாய் ஆளுநர் அனுப்பிய வாழ்த்துச் செய்தியும் மிகுந்த பக்தி விசுவாசத்துடன் படிக்கப்பட்டது.

தீர்மானங்களில் தமிழர் பங்கு

மாநாட்டிலே எட்டுத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன. அவற்றை முன்மொழிவதிலும் வழி மொழிவதிலும் பங்கு கொண்ட சென்னை மாகாணப் பிரதிநிதிகளின் பெயர்கள் வருமாறு:

திருவாளர்கள் ஜி. சுப்பிரமணிய ஐயர், எஸ். சுப்பிரமணிய ஐயர், வழக்கறிஞர் வி. அனந்தாச்சாரியார், மு. வீரராகவாச்சாரியார், ரங்கைய்ய நாயுடு, தஞ்சை எஸ்.ஏ. சுவாமிநாத ஐயர், எஸ். வெங்கட் சுப்பராய பந்துலு, அனந்தப்பூர் பி. கேசவப் பிள்ளை.

இவர்களில் திரு.மு. வீரராகவாச்சாரியார், ''இந்து'' பத்திரிகையைச் சேர்ந்தவர். அதனைத் தோற்றுவிப்பதிலே திரு.ஜி. சுப்பிரமணிய ஐயருக்குத் துணை நின்றவர். திரு.பி. கேசவப் பிள்ளை, ஆந்திர மாநிலத்திலே அனந்தபூரைச் சேர்ந்த குத்தி என்னும் ஊரில் வாழ்ந்த தமிழர்.

பம்பாய் மாநாட்டிற்குச் சென்னை மாகாணத்தின் சார்பிலே பார்வையாளர்களாகச் சென்றிருந்தவர்கள் வருமாறு: சென்னை யுரேஷியன் சங்கத்தின் தலைவர் திரு.டி.எஸ். ஒயிட், சென்னைக் கலெக்டர் திவான்பகதூர் ஆர். ரகுநாத ராவ், ஆர்க்காடு பேராசிரியர் க. சுந்தரராமன், திருவள்ளூர் டி.என். ஐயர்.

சென்னை மாகாணத்தின் பிரதிநிதிகள் அனைவரும் சென்னை மகா ஜன சபையின் சார்பிலேயே சென்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பம்பாய் மாநாட்டில் சென்னை மாகாணப் பிரதிநிதிகள் பெற்றிருந்த சிறப்பிடத்தைக் குறிப்பிட்டு, ''ட்ரிப்யூன்'' என்னும் பாட்னா பத்திரிகை (16-1-1886) எழுதியிருந்ததாவது:

''சென்னை மாநிலம் அதிக எண்ணிக்கையுள்ள பிரதிநிதிகளை அனுப்பி வைத்தது. அனைவரும் நல்ல கல்வியைப் பெற்றவர்கள். உயர்ந்த சமூக அந்தஸ்து வாய்ந்தவர்கள். தங்களது முற்போக்கான கொள்கைகளாலும், நாவன்மையாலும் அவர்கள் அவையோரைக் கவர்ந்து விட்டனர்.''

கல்கத்தா காங்கிரஸ்

இந்திய தேசிய காங்கிரசின் இரண்டாவது மாநாடு 1886 டிசம்பரில் கல்கத்தா நகரில் நடைபெற்றது. பம்பாயில் நடந்த முதலாவது மாநாடு, அதனைக் கூட்டியவர்கள் எதிர்பார்த்ததை விடவும் அதிக அளவில் வெற்றி பெற்றதால் இரண்டாவது மாநாட்டில் பிரதிநிதிகள் தொகை ஐந்து பங்காக அதிகரித்தது முதல் மாநாட்டிலே 72 பிரதிநிதிகளே கலந்து கொண்டிருக்க, இரண்டாவது மாநாட்டிலே அந்த எண்ணிக்கை 436 ஆக உயர்ந்தது. முதல் மாநாட்டிற்குப் பிரதிநிதிகள் அனுப்பத் தவறிய மாநிலங்களும் இரண்டாவது மாநாட்டிற்கு அனுப்பி வைத்தன. பம்பாய் மாநாட்டிற்குச் சென்னை மாகாணம் 21 பிரதிநிதிகளை அனுப்பியதென்றால், கல்கத்தா மாநாட்டிற்கு 47 பேரை அனுப்பி வைத்தது.

மாநிலவாரி பிரதிநிதிகளின் எண்ணிக்கை வருமாறு:

மாநிலம்	பிரதிநிதிகள்
சென்னை	47
பம்பாய், சிந்து	48
பஞ்சாப், சிந்து	17
வடமேற்கு மாகாணம், ஔத் (உ.பி)	74
மத்திய மாகாணம் - பீகார்	10
வங்காளம், பீகார், ஒரிசா, அசாம்	240
	436

வங்காளத்தின் சார்பில் 240 பிரதிநிதிகள் கலந்துகொண்டதில் வியப்பொன்றுமில்லை. அம்மாகாணத்தில்தானே மாநாடு நடந்தது. செல்வந்தர் நிறைந்த பம்பாய் - சிந்து மாநிலத்திற்குச் சமமாக தென்கோடியிலுள்ள சென்னை மாகாணம் பிரதிநிதிகளை அனுப்பியது குறிப்பிடத்தக்கதாகும்.

சென்னை மாகாணத்திலிருந்து சென்றிருந்தவர்களிலும் தமிழ் நாட்டவரே மிகுதியாக இருந்தனர். அவர்களில் திருவாளர்கள் ஜி. சுப்பிரமணிய ஐயர், எஸ். சுப்பிரமணிய ஐயர், தஞ்சை எஸ்.ஏ. சாதுநாத ஐயர் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்களாவர். தமிழரான குத்திகேசவப்பிள்ளை ஆந்திர மாநிலத்தின் சார்பில் கலந்து கொண்டார். திரு.பி. ரங்கைய நாயுடு, பி. அனந்தாச்சார்லு ஆகிய சென்னை வாசிகளான ஆந்திரர்களும் கல்கத்தா மாநாட்டில் கலந்து கொண்டனர். அந்நாளில் கல்கத்தாவே இந்தியாவின் தலைநகராக இருந்ததால், அங்குக் ''கோயில்'' கொண்டிருந்த கவர்னர் ஜெனரல் காங்கிரஸ் பிரதிநிதிகளில் முக்கியமானவர்களுக்கு விருந்தளித்தார்.

இந்த இரண்டாவது மகாசபைக்கு பம்பாய் பார்ஸி கனவானான தாதாபாய் நௌரோஜ் தலைமை வகித்தார். இவர் தான் 1906-இல் கல்கத்தாவில் கூடிய காங்கிரஸ் மகாசபையிலே ''சுயராஜ்யம்'' என்ற மந்திரத்தை முதன் முதலில் முழங்கினார். லண்டன் பார்லிமெண்டில் அங்கம் வகித்த ஒரே இந்தியர் இவர்தான்!

அரச வாழ்த்துடன்

பம்பாயைப் பின்பற்றிக் கல்கத்தாவிலும் பிரிட்டிஷ் அரசருக்கு வாழ்த்துப் பாடிய்பின் நடவடிக்கைகள் தொடங்கப் பட்டன. வைசிராயின் வாழ்த்துச் செய்தியும் படிக்கப்பட்டது. ஆயினும், அரசு அலுவலர்களில் எவரும் பார்வையாளராகக் கூடக் கலந்து கொள்ளவில்லை. இது, முதல் மாநாட்டின் வெற்றியைக் கண்டு அரசு அச்சப்பட்டதன் விளைவு போலும்!

கல்கத்தா மாநாட்டிலே 15 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. முதல் தீர்மானத்திலே 50 ஆண்டுக்காலம் வெற்றி கரமாக அரசு புரிந்த பிரிட்டிஷ் அரசியான விக்டோரியாவுக்கு வாழ்த்துக் கூறப்பட்டது. அவர் அப்போது இந்தியாவின் சக்கரவர்த்தினி!

அடுத்த தீர்மானத்திலே இந்தியாவில் ஜனப் பிரதிநிதித்துவ ஆட்சி தோற்றுவிக்கப்பட வேண்டியதன் அவசியம் வற்புறுத்தப் பட்டது.

மாநிலந்தோறும் இந்திய தேசிய காங்கிரசின் கிளைகளைத் தோற்றுவிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது. மற்றபடி, பம்பாயில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அனைத்தும் திரும்பவும் பதிவு செய்யப் பெற்றன.

★-★-★

சென்னை மாநகரிலே மூன்றாவது காங்கிரஸ்

காங்கிரஸ் மகாசபையின் மூன்றாவது மாநாடு 1887 டிசம்பரில் சென்னையம்பதியில் நடைபெற்றது. இப்பொழுது ஆயிரம் விளக்கு என்று சொல்லப்படும் பகுதியில் ''மக்கீஸ் கார்டன்'' என்னுமிடத்தில் மாநாடு நடைபெற்றது. பக்ருதீன் தயாப்ஜி என்ற பம்பாய் வணிகப் பிரமுகர் இம்மாநாட்டில் தலைமை வகித்தார்.

பம்பாயிலும் கல்கத்தாவிலும் மண்டபங்களிலேதான் காங்கிரஸ் மகாசபை நடந்தது. சென்னையிலோ, முதன் முதலாக நாற்புறமும் சுவர்களைக் கொண்ட திடலில் சிறப்பாக அமைக்கப்பட்ட விசேஷப் பந்தலில் மகாசபை கூடியது. பந்தலின் நீளம் 130 அடி; அகலம் 92 அடி. தமிழ்நாட்டில் நடைபெற்ற இம்மாநாட்டிலே முந்தைய மாநாடுகளை விடவும் அதிக அளவில் தேசிய மணம் வீசியது.

மக்கள் தந்த பணம்

பம்பாய் மாநாட்டிற்கு ஏற்பட்ட செலவு 3000/-அதனைப் பெரும்பாலும் வணிகர்களே கொடுத்து உதவினர். கல்கத்தா மாநாட்டிற்கு ஏற்பட்ட செலவு ரூ. 16 ஆயிரம். அதில் பெரும் பகுதியை ஜமீன்தாரர்கள் கொடுத்து உதவினர். சென்னை மாநாட்டிற்கு சாதாரணப் பொதுமக்களிடமிருந்தே அதிக அளவில் பணம் திரட்டப்பட்டது. சென்னை காங்கிரசுக்கென 30 ஆயிரம் ரூபாய் திரட்டுவதென்று திட்டமிட்டு மக்களை அணுகினர் மாநாட்டு நிர்வாகிகள்.

திரு.மு. வீரராகவாச்சாரியார் தமிழில் எழுதி வெளியிட்ட ''காங்கிரஸ் வினா - விடை'' என்னும் சிறு நூலின் 30 ஆயிரம் பிரதிகள் விற்கப்பட்டு, அதில் கிடைத்த பொருள் மாநாட்டின் செலவுக்குப் பயன்படுத்தப்பட்டது.

ஓரணா முதல்...

வரவேற்புக் குழுவினர் தந்துள்ள அதிகாரபூர்வமான தகவலின்படி, தலைக்கு ஓரணா முதல் ஒன்றரை ரூபாய் வரையில் 8 ஆயிரம் பேரிடமிருந்து 5500 ரூபாயும், தலைக்கு ஒன்றரை ரூபாய் முதல் 30 ரூபாய் வரை 8000 ரூபாயும் திரட்டப்பட்டதெனத் தெரிகிறது. நிதி உதவியவர்களில் பெரும்பாலோர் தமிழர் என்பதனையும் வரவேற்புக் குழுவின் அறிக்கை சுட்டிக் காட்டுகிறது.

மைசூர் மன்னன் 1000 ரூபாயும், திருவிதாங்கூர் - கொச்சி மன்னர்கள் தலைக்கு 500 ரூபாயும், பெரும் ஜமீன்தார்களான விஜயநகரம் அரசர் 1000 ரூபாயும், வெங்கடகிரி அரசர் 500 ரூபாயும், பொப்பிலி அரசர் 500 ரூபாயும் வழங்கினர்.

கன்னட (மைசூர்),கேரள (திருவிதாங்கூர், கொச்சி) அரசர்கள் காங்கிரஸ் மகாசபைக்கு நிதி உதவியிருக்க, தமிழ் நாட்டிற்கென அப்போதிருந்த ஒரே அரசரான புதுக்கோட்டை மன்னர் நிதி உதவியதாகச் செய்தியில்லை.

திருப்பதி கோயிலில் 'மகந்து'' என்ற பெயரில் மடாதிபதி ஒருவர் இருந்த காலம் அது. அந்த மகந்து 500 ரூபாய் கொடுத்து உதவினார்.

தமிழ் நாட்டவரிலே பெருந் தொகைகள் கொடுத்து உதவியர்களின் பெயர்கள் வருமாறு:-

எஸ். சுப்பிரமணிய ஐயர்	ரூ	400
ஏ. தனக்கோடி முதலியார்	ரூ	300
முத்துக்குமாரசாமி முதலியார்	ரூ	250
சண்முகராச முதலியார்	ரூ	200
தவசிமுத்து நாடார்	ரூ	200
ராசா சர்.டி. மாதவராவ்	ரூ	200
சர்.எஸ். ராமசாமி முதலியார்	ரூ	200
ஜி. மகாதேவ் செட்டியார்	ரூ	200
பி. தியாகராச செட்டியார்	ரூ	200
இராமகிருஷ்ண ஐயர்	ரூ	200
ஏ. சபாபதி முதலியார்	ரூ	200
முகமது அப்துல்லா பாதுஷா சாகிப்	ரூ	200
பி. அனந்தாச்சார்லு	ரூ	200
பி. ரங்கையா நாயுடு	ரூ	200

மேலே தந்துள்ள பெயர்ப் பட்டியலில் வரும் பி. தியாகராச செட்டியார், பிற்காலத்தில் நீதிக்கட்சியை நிறுவி பிராமண

ரல்லாதார் நலனுக்காகப் பாடுபட்டவராவார். அயல்நாடுகளில் வாழும் தமிழர்களும் நிதி அனுப்பி உதவினார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மாநிலவாரிப் பிரதிநிதிகள்

சென்னை மாநாட்டில் கலந்து கொண்ட பிரதிநிதிகளின் மாநிலவாரி எண்ணிக்கை வருமாறு:

சென்னை மாகாணம்	362
பம்பாய் - சிந்து	99
பஞ்சாப்	9
வடக்கு மாநிலங்கள்	45
மத்திய மாநிலங்கள்	13
வங்கம் - பீகார்	79
ஆக.	607

இந்தப் பிரதிநிதிகளில் தொழில்வாரிப் பிரிவினர் விவரம் வருமாறு:

ஜமீந்தார், ஜாகிர்தார்	60
சாதாரண விவசாயிகள்	95
வணிகர், சாதாரணக் கடைக்காரர்கள்	144
ஆசிரியர்கள்	95
பத்திரிகையாளர்கள்	42
தொழிலாளர்கள்	17
மருத்துவர்	8
வழக்கறிஞர், ஓய்வு பெற்ற நீதிபதிகள்	206

இதிலே தனித்தனியே பார்க்குமிடத்து வழக்கறிஞர் எண்ணிக்கையே மிகுந்திருப்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

சென்னை காங்கிரஸ் மகாசபையில் கலந்து கொண்ட சென்னை மாகாணப் பிரதிநிதிகளில் மாவட்டவாரி எண்ணிக்கை வருமாறு:

சென்னை நகரம்	106
செங்கற்பட்டு	25
வடார்க்காடு	46
தென்னார்க்காடு	12
தஞ்சாவூர்	38
திருச்சி	1

மதுரை	*10*
திருநெல்வேலி	*8*
கோயமுத்தூர்	*22*
சேலம்	*23*
ஆக.	*291*

கஞ்சம், விசாகப்பட்டினம், கோதாவரி, கிருஷ்ணா, நெல்லூர், கடப்பை, கர்நூல், பெல்லாரி, அனந்தப்பூர் ஆகிய ஒன்பது ஆந்திர மாவட்டங்களிலிருந்து சென்னை காங்கிரசுக்கு வந்திருந்த பிரதிநிதிகளின் மொத்த எண்ணிக்கை 68. மலபார் மாவட்டத்திலிருந்து 15 பேர் கலந்து கொண்டனர். பல மொழியினரும் கலந்து வாழும் சென்னை நகரப் பிரதிநிதிகள் 106 பேரிலே தமிழரே எண்ணிக்கையில் மிகுதியாக இருந்தனர்.

சென்னை நகர பிரதிநிதிகள் அவ்வளவு பேரையும் கழித்துவிட்டுப் பார்த்தாலும், ஆந்திர மாவட்டங்களின் பிரதிநிதிகளை விடவும் தமிழ் மாவட்டங்களின் பிரதிநிதிகள் எண்ணிக்கையே மிகுந்திருப்பது புலனாகும்.

தமிழ்ப் புலவர்!

காங்கிரஸ் தோன்றிய ஆரம்ப காலத்திலே தமிழகமே அம்மகாசபையைக் கட்டி வளர்ப்பதில் தென்னிந்தியாவைப் பொறுத்தவரையில் முன்னணியில் இருந்திருக்கிறது. இந்தப் பிரதிநிதிகள் எல்லாம் சென்னை பட்டதாரிகள் சங்கம், சென்னை மகாஜன சபை போன்ற பொதுச் சபைகள் சார்பிலும்; திருவல்லிக்கேணி இலக்கிய சங்கம் போன்ற இலக்கிய அமைப்புகள் சார்பிலும்; தென்னிந்திய வர்த்தகக் கம்பெனி, மெட்ராஸ் மெட்டல் கம்பெனி போன்ற வணிக நிறுவனங்கள் சார்பிலும்; அஞ்சுமான் - முப்த் - இ - இஸ்லாம், புரசைவாக்கம் இந்து நிதி போன்ற மத அமைப்புகள் சார்பிலும்; சாணார் முன்னேற்றச் சங்கம் போன்ற சாதிச் சங்கங்கள் பெயரிலும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாவர். இவர்களிலே தஞ்சை ஆர். இராமசாமிப்பிள்ளை என்னும் தமிழ்ப் புலவரும் ஒருவராவர்.

தமிழ் ஒலித்தது!

மாநாட்டில் பேசியவர்களிலே ராவ்சாகிப் மூக்கணாச்சாரி என்னும் தமிழர் உணர்ச்சிப் பெருக்கோடும் பொருட் செறிவோடும் தமிழிலே பேசி ஹ்யூம் உள்ளிட்ட பெரும் தலைவர்கள் பலருடைய பாராட்டுதலைப் பெற்றார். ஆம்; மூன்றாவது

காங்கிரஸ் மகாசபையிலேதான் முதன் முதலில் தமிழ் ஒலித்தது. மூக்கணாச்சாரி புகழ் வாழ்க!

சென்னை காங்கிரஸ் மகாசபை பற்றி ஹ்யூம் தயாரித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் மூக்கணாச்சாரி பற்றியுள்ள தகவல் வருமாறு:

''இரும்பு வியாபாரி; தஞ்சை நகர மன்ற உறுப்பினர்; கும்பகோணம் கை வினைஞர்கள் சங்கத்தின் சார்பில் சென்னை காங்கிரஸ் மகாசபைக்குப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டவர். இவருடன் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றிருவர் எஸ்.ஸி. ஐயாசாமி பத்தரும், என். வைத்தியலிங்க பத்தருமாவர்.''

குடந்தை சங்கர மடம், தருமபுரம் ஆதீனம் ஆகியவற்றின் சார்பிலும் பிரதிநிதிகள் சென்னை காங்கிரசிலே பங்கு பெற்றனர். பல சொல்வானேன்; சமுதாயத்தின் அனைத்து அங்கங்களின் சார்பிலும் பிரதிநிதிகள் கலந்து கொண்டு காங்கிரசை உண்மையான தேசிய ஸ்தாபனமாகச் செய்தது சென்னை காங்கிரசில் தான். அதிக எண்ணிக்கையில் முஸ்லிம்கள் கலந்து கொண்டதும் சென்னை மாநாட்டில்தான். சமுதாயத்திலுள்ள மேல், நடு, கீழ் என உள்ள மூவேறு அடுக்குகளிலிருந்தும் பிரதிநிதிகளை அனுப்பி வைத்ததும் தமிழகத்தைத் தன்னுள் கொண்ட சென்னை மாகாணந்தான். சுருங்கச் சொன்னால், ஜனாப் பத்ருதீன் தயாப்ஜியின் தலைமையில் மக்கள் காங்கிரஸ் மலர்ந்தது சென்னை மாநகரிலே. தமிழினத்தாருக்கே உரிய ஜனநாயகப் பண்பு மக்கீஸ் கார்டனில் நடந்த மாநாட்டிலே ஒளி வீசியது.

சமுதாயச் சீர்திருத்தம் பற்றியும், மதத்தாலும் சாதியினாலும் சிறுபான்மையினராக உள்ளவர்களின் முன்னேற்றம் பற்றியும் இந்த மாநாட்டில்தான் முதன் முதலாகப் பேசப்பட்டது. மாநாட்டின் தலைமையுரையிலே, காங்கிரசில் சேர முஸ்லிம்களுக்கு விசேஷமாக அழைப்பு விடப்பட்டது.

ராசா சர்.டி. மாதவராவ், வரவேற்புக் குழுவின் தலைவராக இருந்து 120 பேர் கொண்ட அந்தக் குழுவின் துணையைப் பெற்று, மாநாட்டை வெற்றிகரமாக நடத்திக் கொடுத்தார்.

தமிழ் நாட்டின் தலைநகரில் நடந்த மாநாட்டிற்குத் தமிழர் ஒருவர் தலைமையில் வரவேற்புக் குழு அமையாமற் போனது ஒரு குறைதான். திரு. மாதவ் ராவ், திருவிதாங்கூர் - பரோடா ஆகிய சமஸ்தானங்களில் திவானாக இருந்தவர். இந்தத் தகுதியில் ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் நிலையில் அன்று

தமிழினம் இருக்கவில்லை போலும்! அந்நாளில், சென்னை வாசியான மாதவராவ் அவர்களின் புகழ் பாரதம் முழுவதிலும், பாரதத்திற்கு வெளியேயும் பரவியிருந்தது.

தீர்மானங்கள்

சென்னை காங்கிரசிலும் வரவேற்புரையிலும் தலைமை யுரையிலும் முக்கிய பிரதிநிதிகளின் சிறப்புரைகளிலும் பிரிட்டிஷ் அரசருக்கு விசுவாசம் தெரிவிக்கப்பட்டது,

சென்னை காங்கிரசில் 11 தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. முந்தைய கல்கத்தா மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை விடவும் குறைந்த தீர்மானங்களையே சென்னை காங்கிரஸ் நிறைவேற்றியது.

காங்கிரசின் தந்தை ஹ்யூம், இந்திய தேசியத்தின் கர்த்தா சுரேந்திர நாத் பானர்ஜி, இந்து தேசியவாதியாக மக்களுக்கு அறிமுகமாகிப் பின் இந்திய தேசியத்திலே இரண்டறக் கலந்த பண்டித மதன்மோகன மாளவியா, பிற்காலத்தில் ''காங்கிரசின் நாக்கு'' என்ற சிறப்புப் பெயரைப் பெற்ற விபினசந்திர பாலர் ஆகியோர் சென்னை மாநாட்டில் கலந்து கொண்டு தமிழினத்தாரிடம் வெளிப்பட்ட தேசிய எழுச்சியைக் கண்டு வியந்தும் புகழ்ந்தும் பேசினர்.

மாநாடு நடைபெற்ற நான்கு நாட்களிலும் பேசியவர்களின் எண்ணிக்கை பம்பாய், கல்கத்தா மாநாடுகளில் பேசியவர்களின் எண்ணிக்கையை விடவும் மிகுதியாகவே இருந்தது. முதல் நாளிலே 41 பேரும், இரண்டாம் நாளிலே 25 பேரும், மூன்றாம் நாளிலே 47 பேரும், நான்காம் நாளிலே 44 பேரும் பேசினர்.

நார்ட்டன் துரை

அந்தக் காலத்தில் ஏர்ட்லி நார்டன் எனும் ஆங்கிலேயர் சென்னையில் புகழ்பெற்ற வழக்கறிஞராக விளங்கினார். இந்தியா முழுவதுமே அவரது புகழ் பரவியிருந்தது. அவரும் சென்னை மாகாணத்துப் பிரதிநிதிகளுள் ஒருவராக இருந்து மேடையேறிப் பேசினார்.

சுரேந்திரநாத் பானர்ஜி, கல்கத்தா இந்தியன் அசோசியேஷன் சார்பில் வடபாரதம் முழுவதிலும் சுற்றுலாச் செய்தார். இந்தியன் சர்வீஸ் தேர்வுக்கான வயது வரம்பு 21 லிருந்து 19 ஆகக் குறைக்கப்பட்டதை எதிர்த்து, அதற்கு மக்களுடைய ஆதரவைத் திரட்டவே அவர் சுற்றுலாச் செய்தார். அப்போது சென்னை

மாநிலத்திற்கும் வருகை தந்தார். ஆனால், தமது முயற்சிக்கு இம்மாநிலத்தவரின் ஆதரவைப் பெற அவரால் முடியவில்லை. இந்தியன் சர்வீஸ் பற்றிக் கவலைப்படும் நிலையில் அன்று தமிழினம் வளர்ந்திருக்கவில்லையல்லவா! இதனால் எரிச்சல் கொண்ட பானர்ஜி, ''இந்தியாவிலுள்ள வேறு மாநிலங்களோடு ஒப்பிடும்போது சென்னை இருளடைந்த மாநிலம்'' என்று வருணித்தார். அந்த வருணனை தவறான மதிப்பீடு என்பதை ஆயிரம் விளக்குப் பிரதேசத்தில் நடந்த காங்கிரஸ் மாநாடு புலப்படுத்தி விட்டது. பானர்ஜியின் பார்வையில் பட்ட மாய இருளைப் போக்க ''ஆயிரம் விளக்கு'' தேவைப்பட்டது!

ஆயிரம் விளக்கு காட்டிய தேசிய ஒளியிலே கவர்ச்சி யடைந்த லட்சுமணபுரி (உ.பி.) பிரதிநிதியான திரு. அமீத் அலி என்பவர், பானர்ஜியின் கருத்தை மறுத்து அவர் காதுகள் கேட்கப் பேசினார், சென்னை மாநாட்டிலே.

சுரேந்திரநாத் பானர்ஜியும் மிகுந்த பெருந்தன்மையுடன் தமது மனமாற்றத்தை அந்த மாநாட்டிலேயே வெளிப்படுத்திப் பேசினார். ''சென்னை இருளடைந்த மாநிலம் அல்ல; மற்ற மாநிலங்களுக்கு ஒளி காட்டும் மாநிலம்'' என்று உணர்ச்சிப் பெருக்குடன் கூறி, மாநாட்டில் திரண்டிருந்த தமிழ் நாட்டுப் பிரதிநிதிகளின் மனங்களைக் குளிரச் செய்தார்.

மூன்றாவது காங்கிரஸ் மகாசபையில் பேசிய சென்னை மாகாணப் பிரதிநிதிகளில் முக்கியமானவர்கள் வருமாறு:

சர்.டி. மாதவராவ், எஸ். சுப்பிரமணிய ஐயர், பி. சோம சுந்தரஞ் செட்டியார், என். சுப்பிரமணியம், சேலம் எஸ். ராமசாமி முதலியார், ராவ்சாகிப் சபாபதி முதலியார், ராவ்சாகிப் டி.எம். மூக்கணாச்சாரி, சுந்தரம் சாஸ்திரி, அண்ணாசாமி ஐயர், சங்கரன் ஐயர், பி. ரங்கைய நாயுடு.

விதிமுறைக் குழுவில் தமிழர்

காங்கிரஸ் அமைப்பிற்கான விதிமுறைகளை வகுக்க 32 பேர்களைக் கொண்ட குழு ஒன்று சென்னை மாநாட்டில் அமைக்கப் பெற்றது. அவர்களிலே எஸ். சுப்பிரமணிய ஐயர், எஸ்.ஏ. சாமிநாத ஐயர், சபாபதி முதலியார், சேலம் சி. விசயராகவாச்சாரியார் ஆகியோர் தமிழராவர்.

சென்னையில் காங்கிரஸ் மகாசபையை நடத்தியவர்கள் ''காங்கிரசின் தந்தை'' ஹ்யூம் எதிர்பார்த்ததை விடவும் தீவிரமாகச் செயல்பட்டனர், சாதாரண மக்களை அணுகுவதிலே!

ஆங்கிலம் அறியாதவரும் பிரதிநிதிகள்

முதல் காங்கிரசுக்கு விடுத்த அழைப்பிலே, ''ஆங்கிலம் தெரிந்த பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய நகரவாசிகளை மட்டுமே கொண்டதாக மாநாடு இருக்கும்'' என்று ஹ்யூம் அறிவித்திருந்தார். பம்பாயிலும் கல்கத்தாவிலும் அப்படித்தான் நடைபெற்றது. அதற்கு மாறாகச் சென்னையில் காங்கிரஸ் மகாசபையை நடத்தியவர்கள் கிராமப் பிரதேசங்களிலிருந்தும் பிரதிநிதிகளைத் தருவித்தனர். ஆங்காங்கே பொதுக்கூட்டங்களை நடத்தி அதிலே பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தனர். இதனால் ஆங்கிலம் தெரியாத கைவினைத் தொழிலாளர்களும் பிரதிநிதிகளாக வர முடிந்தது. அவர்கள் எண்ணிக்கை பிரதிநிதிகளின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு என்று ஹ்யூம் தயாரித்த அறிக்கையே கூறுகிறது. அவர்கள் தங்கள் தாய் மொழியான தமிழிலே பேச வேண்டியதாயிற்று.

ஆளுவோர் அதிர்ச்சி!

பம்பாயிலும் கல்கத்தாவிலும் ஒரு மண்டபத்துக்குள்ளே மறைவாக மாநாடு நடந்ததற்கு மாறாக, சென்னையில் திறந்த வெளித் திடலிலே பந்தல் அமைத்து, அதிலே மாநாடு நடத்தப்பெற்றது. இதெல்லாம் ஆளுஞ்சாதியினரான ஆங்கிலேயருக்கு அதிருப்தியைத் தந்தது.

இவையெல்லாவற்றையும்விட, வரவேற்புக் குழுச் செயலாளரும் ''இந்து'' பத்திரிகை நிர்வாகியுமான திரு. முடாம்பி வீரராகவாச்சாரியார் தமிழில் எழுதிய ''காங்கிரஸ் வினா - விடை'' என்னும் பிரசுரத்தின் முப்பதாயிரம் பிரதிகளை மக்களிடையே விற்று மாநாட்டு நிதிக்கு பணஞ்சேர்த்ததுதான் ஆங்கிலேயருக்கு அதிக அதிர்ச்சியைத் தந்தது. அந்தப் பிரசுரம் காங்கிரஸ் மகாசபையின் அனுமதியுடன் வெளியிடப்பட்டது. பிரசுரம் ஒரு அணா விலையுடைய சின்னஞ் சிறியதுதான். ஆனால், அது தெலுங்கு, உருது ஆகிய மொழிகளிலும் மொழி பெயர்க்கப் பட்டது.

தமிழ்நாட்டில் மட்டுமின்றி, இலங்கை, பர்மா, சிங்கப்பூர் மலேசியா ஆகிய நாடுகளில் வாழும் தமிழர் மத்தியிலும் விற்கப்பட்டு, சென்னை காங்கிரசுக்குப் பணம் திரட்டப்பட்டது.

''இந்து'' ஆசிரியர் ஜி. சுப்பிரமணிய ஐயர் *1883* - இல் எழுதி வெளியிட்ட ''சுய அரசாட்சி வினா - விடை'' என்ற நூலும் சென்னை காங்கிரசின்போது, தமிழ் மக்களிடையே பரப்பப்

பட்டது. 42 வினா - விடைகளைக் கொண்டதான இந்தப் பிரசுரம் மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது. ஐயரவர்கள் தமிழ்நாட்டில் சுற்றுலாச் செய்தபோது, இந்தப் பிரசுரத்தைக் கையுடன் கொண்டு சென்று மக்களுக்கு விநியோகிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

அந்நாளில் ஒரு கொள்கையை சாதாரண மக்கள் மத்தியில் பரப்புவதற்கு, அது சம்பந்தமான பிரசுரத்தை வினா - விடை பாணியில் தயாரிப்பது வழக்கமாக இருந்தது. முதலில் கிறித்துவப் பாதிரிமார்கள்தான் மதப் பிரச்சாரத்திற்கு இந்தமுறையைப் பயன்படுத்தினர்.

அரச விசுவாசம்!

சென்னையில் கூடிய காங்கிரஸ் மகாசபையிலே, பிரிட்டிஷ் அரசிக்கு வாழ்த்துப்பாடப்பட்டது. வெள்ளையரான சென்னை கவர்னர் கன்னிமாராவிடமிருந்து வாழ்த்துச் செய்தியைப் பெற்று, அதை மிகுந்த பக்தி விசுவாசத்துடன் படித்த பிறகே நடவடிக்கை தொடங்கப்பட்டது. பிரிட்டிஷ் அரசியும் இந்தியாவின் சக்கரவர்த்தினியுமான விக்டோரியாவுக்கு அவர் ஐம்பதாண்டுக் காலம் வெற்றிகரமாகப் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை நடத்தியதற்காகப் பாராட்டுத் தெரிவித்து, அவரது ஆட்சி மேலும் நீடிக்க வேண்டுமெனவும் பிரார்த்தித்துத் தீர்மானம் நிறை வேற்றப்பெற்றது. பேசியர்கள் எல்லோரும் பிரிட்டிஷ் ஆட்சியைப் புகழ்ந்தனர்.

ஏமாற்றம்!

இவ்வளவிருந்தும், காங்கிரஸ் மகாசபையானது தமிழ் மொழியின் மூலம் சாதாரண மக்களிடையே - குறிப்பாக, கிராம மக்கள் மத்தியில் அரசியல் பிரசாரம் செய்யப் புகுந்தது பிரிட்டிஷாருக்கு அதிர்ச்சியைத் தந்தது. ஆங்கில மொழி ஒன்றின் மூலமே, படித்துப் பட்டம் பெற்றவர்கள் மத்தியில் மட்டுமே பிரசாரம் செய்வதையே விரும்பியது பிரிட்டிஷ் அரசு. காங்கிரசை நிறுவிய ஹ்யூம் துரைமகனாரும் அதையே விரும்பினார். ஆனால், தமிழகத்தைத் தன்னகத்தே கொண்ட சென்னை மாகாணத்தில் கூடிய காங்கிரஸ் மகாசபையானது, பிரிட்டிஷ் அரசையும் ஹ்யூம் துரையையும் ஏமாற்றி விட்டது!

இத்தனைக்கும், சென்னை காங்கிரசில் தலைமை வகித்தவர் தமிழரல்ல; பம்பாய்வாசி. வரவேற்புக்குழுத் தலைவரோ மராத்தியைத் தாய் மொழியாகக் கொண்டவர். இந்த மொழிப்

புரட்சிக்குக் காரணமானவரான திரு. வீரராகவாச்சாரியார் பி.ஏ. பட்டாதாரி. ''இந்து'' எனப் பெயர் பெற்ற ஆங்கில இதழின் நிர்வாகி.

இப்படி, தமிழுக்கு முற்றிலும் புறம்பான சூழ்நிலையில் நடந்த காங்கிரசிலே எப்படியோ தமிழ் மொழிக்கும் இடம் கிடைத்துவிட்டது. ஆங்கிலத்துக்கு மாற்று மொழியாக அல்ல; ஆங்கிலத்துக்கு அடுத்த மொழியாக! ஆங்கிலந்தான் பிரதான இடத்தைப் பெற்றது. இதுவே பிடிக்கவில்லை, ஆங்கிலேயருக்கு! ஆங்கிலேயர் ஆதிக்கத்திற்கு ஆதரவாக இந்தியரால் நடத்தப்பட்ட ஆங்கில ஏடுகள் தமிழின் மூலம் அரசியல் பிரசாரம் செய்யக் காங்கிரஸ் முற்பட்டதைக் கண்டித்தன. ஆதரித்து எழுதிய பத்திரிகைகளுமுண்டு.

காங்கிரஸ் கொள்கை

பிரதேச மொழிகளில் கிராமப்புற மக்களிடையே காங்கிரசின் கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் பரப்ப வேண்டும் என்பதைத் தனது குறிக்கோளாகவே காங்கிரஸ் மகாசபை கொண்டிருந்தது. இது காங்கிரஸ் வினா - விடைப் பிரசுரத்தில் விளக்கப்படுகிறது. அது வருமாறு:

''ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களில் பலருக்குக் காங்கிரஸ் மகாசபை பலப்படுவது இஷ்டமிராது. அவர்களில் அனேகர் பல குத்தங்களை அதன் முன் வைப்பார்கள். இதற்கெல்லாம் பயப்படாமல் நமது தேசத்தார் அச்சபை விருத்தியடையும்படிச் செய்து வருவார்களேயானால், அச்சபை ஏன் பலப்படாது?

''காங்கிரஸ் விஷயமாக அப்போதைக்கப்போது செய்கின்ற கிரந்தங்களை மகா ஜனங்களுக்குச் சுதேச பாஷைகளில் அறிவித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

''கிறிஸ்துவ மதத்தைப் பரவடிக்க ஆங்கிலேய நாட்டார் எங்கும் அனுப்புவதுபோல் காங்கிரஸ் கமிட்டியார் சில காங்கிரஸ் பாதிரிகளைக் கிராமங்கள் தோறும் அனுப்ப வேண்டும். அப்போதுதான் ராஜரீக விஷயங்களில் கியான முண்டாகும்.''

கால்வின் கண்டனம்

சென்னையில் காங்கிரஸ் மகாசபை முடிந்தபின், அதிகார வர்க்கம் அம்மகா சபைக்கு எதிராகப் போர்க்கோலங்கொண்டது. அதற்குத் தமிழில் தயாரிக்கப்பட்ட ''காங்கிரஸ் வினா - விடை'' பிரசுரமே காரணம் காட்டப்பட்டது. சென்னை காங்கிரஸ்

முடிந்தபின் அப்போது வடமேற்கு மாகாணத்தின் துணை ஆளுநராக இருந்த ஆங்கிலேயரான கால்வின் என்பார், காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஹ்யூம் அவர்களுக்கு, தமிழில் வெளியிடப் பட்ட ''காங்கிரஸ் வினா -விடை'' நூல் பற்றித் தமது கண்டனத்தைக் கடிதமூலம் தெரிவித்தார்.

அந்நாளில், வருடந்தோறும் காங்கிரஸ் மகாசபை முடிந்ததும், அதன் பொதுச் செயலாளர் என்ற முறையில் ஹ்யூம் அவர்கள், மகாசபையின் நடவடிக்கை பற்றிய அறிக்கையொன்றை வைசிராய்க்கும் மாநில ஆளுநர்களுக்கும் அனுப்புவது வழக்கம். அப்படி அனுப்பப்பட்ட ஒரு அறிக்கை காரணமாகத்தான் கால்வி னுக்கும் ஹ்யூமுக்குமிடையே கடிதப் போக்குவரத்து நடை பெற்றது. கால்வின் கடிதங்களிலிருந்து சில பகுதிகள் வருமாறு:

தாங்கள் அனுப்பி வைத்த இரு வெளியீடுகளையும் மீண்டும் மீண்டும் கவனத்துடன் படித்தேன். பிரிட்டிஷ் நிர்வாகமும், ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களும், மக்களது வெறுப்பிற்கும் கோபத்திற்கும் ஆளாக்கப்பட்டுள்ளனர். இது நியாயமற்றது; ஒதுக்கப்பட வேண்டியது; தவறான செய்தியுமாகும். காங்கிரசை விமர்சனம் செய்பவர்கள் இந்த வெளியீடுகளில் கூறப்பட்டுள்ள தற்குக் காங்கிரஸ் தலைவர்களையே பொறுப்பாக்குவார்கள். இந்திய மக்களில் பெரும்பாலோர் எழுதப் படிக்கத் தெரியாத வர்கள்; இவர்களிடம் பிரிட்டிஷ் பார்லிமெண்டைப் பற்றிக் கூறுவதை நான் வருத்தத்துடன் எதிர்க்கிறேன்.

''இந்த வெளியீடுகளைக் கடுமையாகக் கண்டித்துப் பலவிதமான சுதேசப் பத்திரிகைகள் எழுதியதைத் தாங்கள் பார்த்திருப்பீர்கள். ஆனால், அந்தப் பத்திரிகைகள் கூலி பெற்றுக் கொண்டு சுயநலத்திற்காக எழுதுகின்றன என்று கூறிவிடுவீர்கள். மதத்தாலும், இனத்தாலும் நமக்கு அன்னியரான இந்த மக்கள் கல்வி - கேள்வியற்றவர்கள்; எளிதில் உணர்ச்சி வயப்படக் கூடியவர்கள். இவர்கள் மத்தியில் குற்றச் சாட்டுகளையுடைய அந்த வெளியீட்டைப் பரப்புவது புத்திசாலித்தனமுமல்ல; நியாயமும் அல்ல!

''இத்தகைய வெளியீடுகள் எழுதப்படுவதோ அல்லது வெளியிடுவதோ காங்கிரஸ் கட்சியின் நலன்களுக்கு ஒரு கெட்ட காலமாகவே அமையும் என எண்ணுகிறேன். விரிவஞ்சி இத்துடன் விடுவிக்கிறேன். நகைப்பிற்கிடமானது, முட்டாள்தனமானது என எதைப்பற்றியேனும் குறிப்பிட வேண்டுமானால், காங்கிரஸ் வினா - விடையைத்தான் கூறவேண்டும்.

துணைக் கவர்னர் கால்வின் இறுதியாக ஹ்யூமிற்குத் தாம் எழுதிய கடித மொன்றிலே, ஆங்கிலத்தில் மட்டும் பிரசாரம் செய்யும் பழைய நிலைக்குத் திரும்புமாறு ஆலோசனை கூறினார். அது வருமாறு:

''இதற்கு முந்தை காலத்தில் காங்கிரசிற்கு தனிப் பண்பளித்த மனப்பான்மைக்கு காங்கிரஸ் திரும்பவேண்டும். போர்க்குணமும் குரோதமும் வாய்ந்த தமிழ் வெளியீடுகளைக் கொண்டு வருவதை அடியோடு கைவிட வேண்டும்.

ஹ்யூமின் பதில்

கால்வினுக்குப் பதிலளித்து ஹ்யூம் எழுதிய முதல் கடிதம் 60 பக்கங்கள் கொண்டதாகும். அதில் ஒரு பகுதி வருமாறு:

''தாங்கள் எடுத்துக் காட்டிய வினா - விடையின் மேற்கோள்களை நான் மீண்டும் அதிகக் கவனத்துடன் படித்தேன். ஒரே ஒரு சொல்லைக்கூட மாற்றியமைக்க வேண்டியதில்லையென்பதைக் கண்டேன். அவை சென்னையில் திரு. வீரராகவாச்சாரியாரால் எழுதப்பட்டு, நான் சிம்லாவில் இருக்கையில் காங்கிரஸ் கமிட்டியின் ஒப்புதலோடு பதிப்பிக்கப் பெற்றது. என்னுடைய பார்வைக்கு வராமல் வழங்கப்பட்டது. பொதுவாக, எனக்கும் அதற்கும் சம்பந்தமில்லை எனக் கூறலாம்.

''இந்த வெளியீடுகள் எந்த வருக்கத்திற்காக எழுதப்பட்டதோ, அவர்களை மட்டுமே சென்றடையும். முதலாவதாக ஆங்கிலம் படித்த வருக்கம்: இரண்டாவதாக, பலவகைப்பட்ட வணிகர்கள், கடைக்காரர்கள்; மூன்றாவதாக, வசதிபடைத்த விவசாயிகள்; கைவினைஞர்கள் ஆகிய இவர்கள் கிளர்ச்சி மனப்பான்மை இல்லாத மக்கள், சமய, இன வேற்றுமைகள் இந்தக் கேள்வியோடு தொடர்புடையனவல்ல.''

ஹ்யூம் அவர்கள், துணைக் கவர்னர் கால்வினுடன் நடத்திய கடிதப் போக்குவரத்திலே மேலும் அவர் கூறுவதாவது:

''பலவிதமான சுதேசப் பத்திரிகைகள் காங்கிரஸ் வினா - விடையைக் கடுமையாகக் கண்டித்துள்ளன என்று கூறுகிறீர்கள். அத்தகைய கண்டனங்களை நானும் படித்தேன். ஆனால், அதைவிட வினா - விடை வெளியீடுகளை நூறுமடங்கு ஆதரித்துப் பத்திரிகைகள் எழுதியுள்ளதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

''ஆதரவு, எதிர்ப்பு என்ற இரு நிலைக்கும் நான் முக்கியத்துவம் அளிப்பதில்லை யென்றாலும், வாத மென்று வந்து விட்டதால், பதிலளிக்கிறேன். இரண்டு தரப்புகளையும்

கவனித்த பிறகு ஒரு முடிவிற்கு வரவேண்டுமானால், அந்த முடிவு, கேள்விக்கு இடமில்லாமல் வினா - விடை நூலுக்கு ஆதரவான நிலையே அல்லாமல் எதிர்ப்பு நிலை அல்ல என்ற முடிவிற்கு வருவோம்.''

''மக்கள் மூடர்களல்ல!''

பொதுவாக, கால்வினுடன் நடத்திய கடிதப் போக்கு வரத்திலே அவரைத் திருப்திப்படுத்தும் போக்கிலேதான் ஹ்யூம் விவாதம் புரிகிறார். ஆயினும், காங்கிரசை விட்டுக்கொடுக்காமல் விவாதம் புரிகிறார். சாதாரண மக்களை முட்டாள்களாகக் கருதுகிறார் கால்வின். அதை மறுத்து, ''இந்திய மக்கள் கீழை நாட்டிற்கே உரிய பண்பின் வழிநுட்பம் வாய்ந்தவர்கள்'' என்கிறார் ஹ்யூம். மேலும் அவர் சொல்கிறார்: ''ஆங்கிலக் கல்வி பெறாத இந்த மந்தமான - எழுத்தறிவற்ற மக்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்தைப் பற்றி மிகவும் திருப்தியுடன் இருக்கிறார்கள் என்று தாங்கள் நினைக்கிறீர்கள். ஆனால், உண்மை நிலை வேறு. அவர்கள் கடுமையான அதிருப்தி கொண்டிருக்கிறார்கள். எரியும் நெருப்பில் நெய் சொரிவதற்குப் பதிலாக, அவர்கள் நம்பிக்கை யுடன் நாட்டு நடப்புகளைப் புரிந்து கொள்ளவும், சட்டத்திற்கு உட்பட்ட வழியில் அவர்களது அதிருப்தி வெளிப்படவும் ஒரு கால்வாய் அமைக்கப்பட்டுள்ளது.''

வைசிராய் கண்டனம்

திரு. வீரராகவாச்சாரியாரின் காங்கிரஸ் வினா - விடை நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பைப் படித்து, அப்போதைய வைசிராய் லார்டு டப்ரின் என்பவரும் ஆத்திர முற்றார். அவர் பொது மேடையிலேயே அதுபற்றித் தமது கண்டனத்தை வெளியிட்டுப் பேசினார் 30-11-1888-இல் கல்கத்தாவில் நிகழ்த்திய புனித ஆண்ட்ரூஸ் விருந்துச் சொற்பொழி வொன்றில் தமிழ்ப்பிரசுரத்தைத் தாக்கிப் பேசினார். அதன் பின், 3-12-1888-ல் இந்திய அரசின் செயலாளர் திரு. கிராஸ் என்பவருக்கு எழுதிய கடிதமொன்றில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது:

''அடக்கமில்லாத காங்கிரஸ்காரர்கள் ஹ்யூமின் முட்டாள் தனமாக அரசாங்க எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார் கள். தமிழ் வினா - விடை போன்ற வெளியீடுகள் அவதூறு களையும் பழிப்புரைகளையும் பரப்புகின்றன. இவற்றைத் திடச்சித்தமற்ற சாதாரண மக்கள் வியப்போடு கவனித்து வருகிறார்கள்.''

வைசிராய் டப்ரின் பிரபு கல்கத்தா விருந்துக் கூட்டத்தில் வெளியிட்ட கண்டனத்திற்கு திரு. ஜி. சுப்பிரமணிய ஐயரின் ''சுதேசமித்திரன்'' பத்ரிகை வெகு காட்டமாகப் பதிலளித்தது. அதுவும், ''வினா - விடைப் பிரசுரம் அரசாங்க விரோதமான தல்ல'' என்றே வாதித்தது. ஆயினும், தமிழில் பிரசாரம் செய்வதற்குக் காங்கிரசுக்குள்ள உரிமையை உறுதி செய்தது.

வரலாறு பேசுகிறது!

1967-இல் எழுதி வெளியிடப்பட்ட ''காந்தி சகாப்தத்துக்கு முற்பட்ட காங்கிரஸ்காரர்கள்'' என்னும் நூலில் ''காங்கிரஸ் வினா - விடை'' பற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அது வருமாறு:

''தமிழ் காங்கிரஸ் வினா - விடை இந்திய தேசிய இயக்கத்தின் வரலாற்றிலேயே முதன் முறையாகப் பொது மக்களைக் காங்கிரசில் சேருமாறு வேண்டுகோள் விடுத்தது. இந்நூல் தமிழில் இருந்ததால் முன்னுதாரணம் கூறமுடியாத அளவில் பெரும் ஊக்கம் பிறந்தது.

''இந்நூலிலுள்ளது போன்ற விமர்சனம் இந்தியாவில் உள்ள பிரிட்டிஷ் அதிகாரிகளை வெறுப்படையச் செய்ததோடு புண் படுத்தவும் செய்தது. ஒளிவு மறைவில்லாத இதைப் போன்ற பேச்சைக் கேட்டு, அவர்களுக்குப் பழக்கமில்லை. காங்கிரஸ் தலைவர்கள் மக்களிடையே அவர்கள் தாய் மொழியில் நேர்முகமாக வேண்டுகோள் விடுத்ததே, பிரிட்டிஷ் அதிகாரிகளை அச்சுறுத்தியது. சிறுபான்மையினரான படித்தவர்களின் ஆரவாரங் களை அவர்களால் பொருட்படுத்தாமல் இருக்க முடியும். ஆனால், புறநகர்களில் வாழும் லட்சக்கணக்கான மக்களின் ஆதரவை காங்கிரஸ் நாடியபோது, அதனை ஒடுக்க முயன்றனர்.''

இவ்வாறு எழுதப்பட்டிருப்பது, வங்காளியரான பிமேன் பிஹாரி மஜூம்தார், பக்த பிரசாத் மஜூம்தார் என்ற வரலாற்றுப் பேராசிரியர்களின் நூலிலாகும்.

அஞ்சவில்லை!

தங்களுடைய தமிழ்த்தொண்டுக்கு ஏற்பட்ட எதிர்ப்புக்கோ ஆட்சியாளரின் அதட்டல் உருட்டலுக்கோ அஞ்சித் தமிழ் நாட்டுத் தலைவர்கள் தமிழ்மூலம் அரசியல் பிரசாரம் செய் வதைக் கைவிடவில்லை. திரு. வீரராகவாச்சாரியார், எந்த நூல்

வைசிராயின் பகிரங்கக் கண்டனத்திற்கு உள்ளானதோ அதை 1890க்குள் அடுத்தடுத்து நான்கு பதிப்புகள் கொண்டுவந்தார். அத்துடன், தமிழில் ''இந்து நேசன்'' என்ற பெயரில் மாதமிரு முறைப் பத்திரிகையையும் வெளியிடலானார்.

''இந்து'' ஆசிரியர் திரு.ஜி. சுப்பிரமணிய ஐயரும், 1914-ஆம் ஆண்டுக்குள் அடுத்தடுத்த வெளியீடாக 12 நூல்களைத் தமிழில் வெளியிடலானார். அவ்வளவும் அரசியல் பிரசார நூல்கள். அவற்றுள் ''பாரிசால் கொடுமைகள்'' என்னும் நூலும் ஒன்றாகும்.

தமிழ்ப் பிரசுரமான ''காங்கிரஸ் வினா - விடை'' பற்றிக் காங்கிரஸ் மகாசபையின் பொதுச் செயலாளரான ஹ்யூம் அவர்களுக்கும் வடமேற்கு மாகாணத் துணை ஆளுநர் கால்வினுக்குமிடையே நடைபெற்ற கடிதப் போக்குவரத்து ஒரு உண்மையை மக்களுக்கு உணர்த்துகின்றது. அது இந்திய தேசிய இயக்கம் தோன்றியபோதே ஆங்கில ஆதிக்கத்துக்கு எதிராக பிரதேச மொழியின் உரிமைக் கிளர்ச்சியும் தோன்றி விட்டதென்பதாகும். ஆம்; ஆங்கிலேயரின் அரசியல் ஆதிக்கத்தை எதிர்த்த தேசிய வாதிகள் ஆங்கில மொழியின் ஆதிக்கத்தை மட்டும் சகித்துக் கொண்டதில்லை. அதையும் எதிர்த்திருக்கின்றனர்.

வழிபடுவோம்!

இதற்குக் காரணமாக இருந்தவர்கள், திரு.ஜி. சுப்பிரமணிய ஐயர், திரு.மு. வீரராகவாச்சாரியார், திரு. மூக்கணாச்சாரியார், ஆகியோராவர். இவர்களைத் தமிழ்ச் சமுதாயம் நினைவில் கொண்டு போற்றுமாக!

திரு. வீரராகவாச்சாரியார், செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள வடக்குப்பட்டு கிராமத்தில் பிறந்தவர். சென்னை மாநிலக் கல்லூரியில் படித்து பி.ஏ. பட்டம் பெற்றார். சென்னை பச்சையப்பன் கல்லூரியில் ஆசிரியர் வேலை பார்த்தார். பின் திரு.ஜி. சுப்பிரமணிய ஐயருடன் தோழமை கொண்டு, ''இந்து'' பத்திரிகையைத் தொடங்குவதிலே அவருக்குத் துணை நின்றார். அதன் நிர்வாக மானேஜராகவும் இருந்தார். தமது ஐம்பதாம் வயதில் 6-10-1906 இல் செங்கற்பட்டு மாவட்டத்தில் காலமானார்.

இவர் காலமானபோது, தேசியக் கவி பாரதியார், தமது ''இந்தியா'' பத்திரிகை (13-10-1906) இதழில் அனுதாபம் தெரிவித்து எழுதினார். அதிலே, ''மக்களை வசீகரிப்பதில் இவருக்கிருந்த திறமைக்கு எல்லையே கிடையாது'' என்று

குறிப்பிட்டார். காங்கிரஸின் வருடாந்தர மகாசபையை ஒருமுறை லண்டனிலேயே நடத்தவேண்டும் என்று இவர் ஆவல் கொண்டிருந்தாராம்.

இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையானது, ஆண்டுக்கொரு மாநிலத்தில் கூடி, அனைத்திந்தியாவிலும் சுற்றுலா வந்தது. பல்வேறு மதத்தினரும், பல்வேறு மாகாணத்தவரும் அந்த மகாசபையின் தலைமைப் பதவிக்கு மாறிமாறித் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

வெள்ளையரும் தலைவராயினர்!

அந்நாளிலே பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் முழுவதிலும் குடியுரிமை ஒன்றாக இருந்தது. அந்த வகையிலே, இந்தியரல்லாத ஐரோப்பியரும் - குறிப்பாக, பிரிட்டிஷாரும் காங்கிரஸ் மகாசபையின் தலைமைப் பதவிக்குப் பல்வேறு சந்தர்ப்பங்களில் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களிலே சிலர் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் உறுப்பினராகவும் இருந்தனர். பிரிட்டனிலே யும் இந்திய தேசிய காங்கிரசின் கொள்கையைப் பரப்பவும், அங்குள்ள பாராளுமன்றத்திலே இந்தியா சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை எழுப்பவும் பிரிட்டிஷ் தொழிற்கட்சியினர் பெரிதும் உதவியாக இருந்தனர். காங்கிரஸ் மகாசபைக்குத் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆங்கிலேயர்கள் தொழிற் கட்சியினர்தான். இதன் மூலம் ஆளும் சாதியினரான பிரிட்டிஷாரிடம் வெறுப்போ, விரோதமோ தனக்கு இல்லை யென்பதையும் காங்கிரஸ் மகாசபை காட்டிக்கொண்டது.

நாத்திகர் கூடத்தான்!

இந்திய தேசிய காங்கிரஸ் சமயச் சார்பற்ற அமைப்பாதலால் தெய்வ நம்பிக்கையற்ற நாத்திகர்களும் அதன் நடவடிக்கைகளிலே கலந்து கொள்ள அனுமதிக்கப் பெற்றனர். உலகறிந்த நாத்திகரான பிராட்லா என்பவர் பல்வேறு சந்தர்ப்பங்களில் இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையின் வருடாந்திர மாநாடுகளில் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றியிருக்கிறார். ஐரோப்பாவிலுள்ள நாத்திகர்கள் இயற்கையிலேயே ஏகாதிபத்தியங்களின் எதிரிகளாகச் செயல்பட்டனர்.

காங்கிரஸ் மகாசபைக்குத் தலைமை வகித்த ஐரோப்பியர் களின் பெயர்கள், அவர்கள் தலைமை வகித்த ஆண்டு, அந்த ஆண்டுகளில் காங்கிரஸ் மகாசபை நடைபெற்ற நகரங்கள் பற்றிய விவரம் வருமாறு:

1888 - அலகாபாத் - ஜார்ஜ் யூல்
1889 - பம்பாய் - சர். வில்லியம் வெட்டர்பர்ன்
1984 - சென்னை - ஆல்பிரட் வெப்
1904 - பம்பாய் - சலர். ஹென்றி காட்டன்
1910 - அலகாபாத் - சர். வில்லியம் வெட்டர்பர்ன்
1911 - கல்கத்தா - ராம்ஸே மெக்டனால்டு
1917 - கல்கத்தா - அன்னிபெசன்ட்

சர். வில்லியம் வெட்டர்பர்ன் இரண்டு முறை காங்கிரஸ் மகாசபைக்குத் தலைமை வகித்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ராம்சே மெக்டனால்டு

திரு. ராம்சே மெக்டனால்டு காங்கிரஸ் மகாசபைத் தலைவராகத் தேர்ந்தேடுக்கப்பட்டா ரென்றாலும், மகாசபை கூடவிருந்த நேரத்திலே தமது மனைவியார் லண்டனில் காலமானது காரணமாகத் தலைமைப் பொறுப்பை ஏற்க இயலாதவரானார். அவருக்குப் பதிலாகப் பண்டித பிஷன் நாராயண் என்பவர் அந்த ஆண்டில் தலைமைப் பொறுப்பை ஏற்றார். ராம்சே மெக்டனால்டு பிற்காலத்தில் பிரிட்டிஷ் பிரதமராக வந்தார். டாக்டர் அன்னிபெசன்ட் அவர்கள் அப்போது பிரிட்டனுக்கு அடிமைப்பட்டிருந்த அயர்லாந்து (ஐரஷ்) நாட்டைச் சேர்ந்தவர். ஆனால், 1873 இல் இந்தியாவுக்கு வருகை தந்து, இதையே தாய் நாடாக ஏற்றுக் கொண்டு, இந்திய விடுதலைப் போரிலே பெரும் பங்கு கொண்டார். இந்தியா - குறிப்பாக, தமிழ் நாடு அவ்வம்மையாரைச் சுவீகரித்துக் கொண்டது. ஆகவே, இந்தியக் குடிமகளாகவே அவர் கல்கத்தா காங்கிரசிற்குத் தலைமை வகித்தார்.

ஸ்வீகாரக் குடிகள்

காங்கிரஸ் மகாசபை ஆரம்பமான பின்னுள்ள தொடக்க ஆண்டுகளில் நார்டன் என்ற ஆங்கிலேயர் காங்கிரஸ் மாநாடுகளில் பங்கு கொண்டதனை இங்கு மீண்டும் நினைவூட்டுகிறோம். இவருடைய தந்தையின் காலத்திலேயே இவரது குடும்பத்தை இந்தியா ஸ்வீகாரமாக ஏற்றுக்கொண்டு விட்டது.

இதே காலத்தில் ஜான் ஆடம் என்ற மற்றொரு ஆங்கிலேயரும் இந்திய தேசிய இயக்கத்தில் பங்கு கொண்டார். இவர் சென்னைப் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணி புரிந்தார்.

ஏர்லி நார்டன், ஜான் ஆடம் ஆகிய இருவரும் காங்கிரஸ் மகா சபைக்குப் பிரதிநிதியாகச் சென்ற போதெல்லாம் தமிழ் நாட்டின் சார்பிலேயே தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இந்திய தேசிய காங்கிரசில் டாக்டர் பெசன்ட் அம்மையாரின் செல்வாக்கு மிகுந்திருந்த நேரத்திலே ஜி.எஸ். அருண்டேல் என்ற மற்றொரு ஐரிஷ் வெள்ளையர் விடுதலைப் போரில் நேரடியாகப் பங்கு பெற்றார். இவர் சென்னையில் வாழ்ந்தவர். தமிழ் மகளான திருமதி. ருக்மணியை மணந்து, தமிழகத்தின் மாப்பிள்ளையானார்.

திருமதி. மார்கரட் கசின்ஸ் என்ற வெள்ளைப் பெண்மணியும் தியோசாபிகல் சங்கத்தின் சார்பில் காங்கிரஸில் இணைந்து, *1932* - இல் நடந்த விடுதலைப்போரில் நேரடியாகப் பங்கு கொண்டு, ஒரு வருட காலம் சிறைவாசம் புரிந்தார். இவர் சென்னை வாசியாவார். இப்படி, வெள்ளை நிறுத்தவர் பலரை ஸ்வீகாரமெடுத்து இந்திய தேசிய இயக்கத்திற்குத் தந்த பெருமையும் தமிழகத்திற்கு உண்டு.

விடுதலைப் போராட்ட காலத்திலே 55 முறை இந்திய தேசிய காங்கிரஸ் வருடாந்தர மகாசபைக் கூட்டம் நடைபெற்றிருந்தும் தென்னிந்தியர் நால்வரே தலைவர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களுடைய பெயர்கள் வருமாறு:

1891-நாகபுரி-அனந்தாச்சாருலு
1897-அமராவதி-சர்.சி. சங்கரன் நாயர்
1920-நாகபுரி-சி. விசயராகவாச்சாரி
1926-கௌஹத்தி-எஸ். சீனிவாச ஐயங்கார்

இவர்களில், முதலாமவர் ஆந்திரர். இரண்டாமவர் மலையாளி. கடைசி இருவரும் தமிழர். தேசம் முழுவதிலுமுள்ள அனைத்து மாநிலங்களிலுமாக மாறி மாறி நடைபெற்ற 56 காங்கிரஸ் மகாசபைகளிலே எட்டு மகா சபைகள் தென்னிந்தியாவில் நடைபெற்றன. அவற்றுள் ஏழு சென்னை நகரில் நடைபெற்றன. அப்போது, சென்னை மாநகரம் தென்னிந்தியாவின் அதாவது, சென்னை மாகாணத்தின் தலைநகரமாக இருந்த தென்பதனை இங்கு நினைவில் கொள்ள வேண்டும். மகாசபைகள் சென்னையில் நடைபெற்ற ஆண்டுகளும் தலைமை வகித்தவர்களின் பெயர்களும் வருமாறு:

1887-சென்னை-பத்ருதீன் தயாப்ஜி
1894-சென்னை-ஆல்பிரட் வெப்
1898-சென்னை-ஆனந்த மோகன் போஸ்

1903-சென்னை-லால்மோகன் கோஷ்
1908-சென்னை-ராஷ்பிகாரி கோஷ்
1914-சென்னை-பூபேந்திரநாத் பாசு
1923-காகினாடா-மௌலானா முகமதலி
1927-சென்னை-டாக்டர் அன்சாரி

தமிழகத்தின் தலைமையிடமான சென்னை நகரில் நடைபெற்ற ஏழு மகாசபைகளை நடத்தி வைத்த வரவேற்புக் குழுக்களின் தலைவர்கள் பெயர்கள் வருமாறு:

1887-ராஜா சர்.டி. மாதவ ராவ்
1894-பி. ரங்கைய நாயுடு
1898-என். சுப்பராவ் பந்துலு
1903-நவாப் சையத் முகமது
1908-கே. கிருஷ்ணசாமி ராவ்
1914-எஸ். சுப்பிரமணிய ஐயர்
1927-சி.என். முத்துரங்க முதலியார்

மேலே தந்துள்ள பெயர்ப் பட்டியலிலே கடைசி இருவரும் தமிழராவர்.

முக்கியச் செய்திகள்

தமிழ் நாட்டில் நடந்த காங்கிரஸ் மகாசபைகளிலும், தமிழ் நாட்டிற்கு வெளியே தமிழர் தலைமையில் நடந்த காங்கிரஸ் மகாசபைகளிலும் குறிப்பிடத்தக்க முக்கிய அம்சங்களுண்டு. அவற்றை இங்குக் கூற வேண்டியது அவசியமாகிறது.

1887-இல் சென்னையில் நடந்த காங்கிரஸ் மகாசபையானது, விசேஷ பந்தலில் நடைபெற்ற தென்பதையும், பிரதேச மொழியில் பிரதிநிதிகள் பேசிய முதல் காங்கிரஸ் அதுதான் என்பதையும் முன்பே அறிந்தோம். அத்துடன், பிரதேச மொழியான தமிழில் வெளியான பிரசுரமொன்றும் இந்திய வைசிராயின் கண்டனத்திற்குள்ளானதையும் கண்டோம்.

1923-இல் சென்னை மாகாணத்தில் ஆந்திரப் பிரதேசமானது, காகினாடாவில் நடைபெற்ற மகாசபையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மௌலானா ஷௌகத் அலி அவர்கள் சிறையிலிருந்து விடுதலையாகி, நேரே மகாசபைக்கு வந்து தலைமைப் பொறுப்பை ஏற்றார்.

1920-இல் நாகபுரியில் சேலம் சி. விசயராகவாச்சாரியார் தலைமையில் நடந்த விசேஷ காங்கிரசிலேதான் காந்தியடிகளின்

ஒத்துழையாமைக் கொள்கை ஒரு தீர்மானத்தின் மூலம் ஏற்கப் பட்டது. இதிலிருந்துதான் இந்திய அரசியலிலே காந்தி சகாப்தம் தொடங்கியது.

1927-இல் சென்னை நகரில் டாக்டர் அன்சாரி தலைமையில் நடந்த காங்கிரசிலேதான் முதன் முதலாகத் தனது கோரிக்கை பரிபூரண சுதந்திரம் என்பதை ஒரு தீர்மானத்தின் மூலம் காங்கிரஸ் வெளியிட்டது.

மூவேறு சகாப்தங்கள்!

இந்திய விடுதலை இயக்கமானது மூவேறு சகாப்தங்களைக் கொண்டதாகும். அதிலே முதலாவது, ''ஹ்யூம் சகாப்தம்'' என்னும் பெயருக்குரியதாகும். அது, 1885-இல் தொடங்கி 1906 ஆம் ஆண்டுவரையுள்ள 22 ஆண்டுக்கால அளவிற்குரியதாகும். இரண்டாவது, ''லோகமான்ய திலகர் சகாப்தம்'' என்று சொல்லத் தக்கதாகும். அது, 1907-இல் தொடங்கி 1920 வரையுள்ள 13 ஆண்டுகளைக்கொண்ட கால அளவுக்குரியதாகும். மூன்றாவது, ''காந்தி சகாப்தம்'' ஆகும். இது, 1920-இல் தொடங்கி நாடு சுதந்திரம் பெற்ற 1947 வரையுள்ள 28 ஆண்டுக்கால அளவுடையதாகும்.

1885 தொடங்கி 1916 வரையுள்ள கால கட்டத்திலே ஆண்டு முழுவதற்கும் உரிய தலைவர் ஒருவரைக் காங்கிரஸ் மகாசபை பெற்றிருக்கவில்லை. பொதுக்கூட்டத்திற்கென ஓர் தலைவரை நியமிப்பதுபோல வருடாந்திர மகாசபையில் தலைமை தாங்குவதற்கு மட்டுமே தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டார் அந்த நாளிலே! ஆண்டு முழுவதற்குமான நிர்வாகப் பொறுப்பு பொதுச் செயலாளரிடமே இருந்து வந்தது. இந்த நிலை 1885-இல் தொடங்கி 1906 வரை நீடித்து வந்தது. இதிலே, முதல் 22 ஆண்டு காலகட்டத்தில் ஆங்கிலேயரான ஆலன் ஆக்டேவியன் ஹ்யூம் அவர்களே பொதுச் செயலாளராக இருந்து வந்தார் என்பதனை நினைவில் கொள்வோம். அடுத்தடுத்து வெள்ளையர் ஐவர் தலைமை வகித்ததும், மகாசபை கூடிய ஒவ்வொரு சந்தர்ப்பத்தி லும் ராஜ வாழ்த்துப் பாடப்பட்டதும், பிரிட்டிஷ் அரசுக்கு விசுவாசம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டதும் ஹ்யூம் காலத்தில்தான்.

ஆங்கிலேயருக்கே உரித்தாக இருந்த உயர் உத்தி யோகங்களிலே இந்தியருக்கும் பங்கு கோரியதும், மாநிலத்திலும் மத்தியிலும் உள்ள பிரதிநிதித்துவ மன்றங்களிலே அரசால் நியமிக்கப்படும் உறுப்பினர்களின் தொகையைச் சிறியதாக்கும்

வகையிலே தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் கூடுதலாக்க வேண்டுமென்று கோரியதும், இந்தக் கோரிக்கைகளே இந்திய சமுதாயத்தின் உரிமைக் குரல்கள் என்று நம்பியிருந்ததும் ஹ்யூம் காலத்தில்தான். இதனாற்றான், அதனை ''ஹ்யூம் சகாப்தம்'' என்று சொல்ல வேண்டியிருக்கிறது.

சுருங்கச் சொன்னால், எவ்வித எதிர்ப்புமின்றிப் படித்த இந்தியருக்கு உயர் உத்தியோகங்களும் சலுகைகளும் தேடித்தரும் ஸ்தாபனமாகக் காங்கிரஸ் செயல்பட்டது ஹ்யூம் சகாப்தத்திலே! இது, ஹ்யூம் அவர்களின் குறைபாடோ, குற்றமோ அல்ல. காங்கிரசை அவர் தோற்றுவித்ததே இந்தக் காரியங்களுக் காகத்தானே!

வாய்ப்பேச்சு வீரர்கள்!

1885 தொடங்கி 1906 வரை ஒரே போக்கில்தான் காங்கிரஸ் மகாசபை சென்று கொண்டிருந்தது. அனேகமாக ஒரு ஆண்டு மகாசபை நிறைவேற்றிய தீர்மானங்களையே அடுத்த ஆண்டில் கூடும் மகாசபையும் நிறைவேற்றி வந்தது. வருடாந்திர மகாசபையில் பேசுபவர்களிலே சிலர், ஆட்சியின் அன்றாட நடவடிக்கைகளை - குறிப்பாக, அதிகார வர்க்கத்தினர் அங்கு மிங்குமாகச் செய்யும் அக்கிரமங்களை வெறுத்துக் காரசாரமாகப் பேசியதுண்டு. ஆனால், அவர்கள்கூடப் பிரிட்டிஷ் அரசுக்கு விசுவாசம் தெரிவிப்பதிலே மற்றவர்களோடு போட்டியிட்டனர்.

பெரும்பாலும் காங்கிரஸ் மகாசபையிலே தலைமை வகிப்பவர் மிக நீண்ட தலைமையுரை நிகழ்த்துவது வழக்கமாக இருந்தது. 3 மணி நேரம் 4 மணி நேரம் சொற்பொழிவு நிகழ்த்திய வர்களும் உண்டு. அவையனைத்தும் ஆங்கிலத்தில்தான்.

சென்னையில் முதன்முதலில் கூடிய மகா சபையிலே திரு. மூக்கணாச்சாரியார் தமிழில் பேசியதுபோல வடபுலத்தில் கூடிய மகா சபையில் இங்கொருவர் அங்கொருவராக இந்தியில் பேசியதுண்டு. அலகாபாத்தில் கூடிய நான்காவது மகாசபையிலே பாஞ்சாலத் தலைவரான லாலா லஜபதிராய் இந்தியில் பேசினார். இந்தியாவின் பொது மொழி இந்திதான் என்ற கொள்கையுடைய ஆரிய சமாஜத்திலே லாலா லஜபதிராய் முன்னணித் தலைவராக விளங்கினார். அதனாற்றான், ஆங்கிலத்தில் நிறை புலமை பெற்ற வழக்கறிஞராக இருந்தும், அலகாபாத் மகாசபையிலே அவர் இந்தியில் பேசினார்.

தமிழ்நாட்டிலே திரு.ஜி. சுப்பிரமணிய ஐயரும்; திரு.மு. வீரராகவாச்சாரியரும் முதன் முதலில் சென்னையில் கூடிய

காங்கிரஸ் மகாசபைக்கு முன்னும் பின்னுமாக அதன் கொள்கைகளை விளக்கும் பிரசுரங்களைப் பிரதேச மொழியான தமிழில் வெளியிட்டது போல, வடபுலத்திலே எவரும் நமது நினைவுக்கு வரும் வகையில் பிரதேச மொழியில் அரசியல் பிரசுரங்கள் வெளியிட்டுப் பிரசாரம் செய்ததாகத் தெரியவில்லை. ஆம்; 1906-ஆம் ஆண்டு வரை - குறிப்பாக, ஹ்யூம் சகாப்தத்திலே! அந்தச் சகாப்தத்திலே ''தேசியத் தலைவர்'' என்னும் அந்தஸ்திலே பல தலைவர்கள் தேசம் முழுவதற்குமாக அறிமுகமாயினர். அவர்களிலே லோகமான்ய பால கங்காதர திலகர், மகாதேவ கோவிந்த ரானடே, லாலா லஜபதி ராய், கோபாலகிருஷ்ண கோகலே, சுரேந்திரநாத் பானர்ஜி, விபின்சந்திர பாலர், அரவிந்த கோஷ் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்களாவர்.

சமூகச் சீர்திருத்தம்

காங்கிரசைச் சமூக சீர்திருத்த சபையாகவே இயக்க வேண்டுமென்று ஹ்யூம் எண்ணியதையும், அந்தப் பணியோடு அரசியல் பணியையும் சேர்த்து ஆற்றுமாறு வைசிராய் டப்ரின் பிரபு ஹ்யூமுக்கு ஆலோசனை கூறியதையும் முன்பே அறிந்தோம்.

இதன்படி, காங்கிரஸ் மகாசபையானது ஆரம்ப ஆண்டுகளிலே சமூக சீர்திருத்தத் துறையிலும் கருத்துச் செலுத்தியது. ஆனால், இதற்கு எதிர்ப்பு ஏற்பட்டது. சமூகச் சீர்திருத்தம் என்பது இந்து சமய அளவில்தான் தேவைப்படுகிறதென்று மற்ற சமயங்களைச் சார்ந்த காங்கிரஸ் தலைவர்கள் கருதினர். அதனால், அனைத்துச் சமயத்தினருக்கும் பொதுவானதாகவுள்ள காங்கிரஸ் மகாசபையைச் சமூகச் சீர்திருத்த இயக்கமாக நடத்துவதை இந்துக்களல்லாதார் ஏற்கவில்லை. அதனால், முதல் இரண்டாண்டுகளுக்குப் பின்னர், அந்தப் பணியிலிருந்து காங்கிரஸ் மகாசபை தன்னை விடுவித்துக் கொண்டது. ஆனால், சமூகச் சீர்திருத்தப் பணியில் ஆர்வமுடைய இந்து தேசியவாதிகள் காங்கிரஸ் பந்தலிலேயே தனியாக மாநாடு நடத்துவதைச் சில ஆண்டுகள் வரை வழக்கமாகக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு மகாராஷ்டிரத்தில் பிரபல சமூகச் சீர்திருத்தவாதியாக விளங்கிய மகாதேவ கோவிந்தரானடே வழிகாட்டியாக விளங்கினார்.

லாலா லஜபதி ராய் இந்திய மக்களின் கல்வி யபிவிருத்தியிலே அக்கறை காட்டினார். இவரது முயற்சியால் பல ஆண்டுக்காலம் காங்கிரஸ் மகாசபை கூடும் நாட்களிலே ஒரு நாள் கல்வி மாநாட்டிற்கென ஒதுக்கப்பட்டு வந்தது.

முதன் முதலாகச் சென்னையில் கூடிய காங்கிரஸ் மகாசபையிலே முஸ்லிம்கள் பசுவதை செய்வதைத் தடை செய்யக் கோரும் தீர்மானம் ஒன்று விவாதத்திற்கு வந்தது. இதனைக் கொண்டு வந்தவர்கள் பசுவதைத் தடையைச் சமூகச் சீர்திருத்தமாகவே கருதினர். இந்த மாநாட்டிலே பத்ருதீன் தயாப்ஜி என்னும் முஸ்லிம் கனவான் தலைமை தாங்கியதால் பசுவதைத் தடைக் கோரிக்கைத் தீர்மானத்தின் மீது விவாதம் நடத்துவது முறையல்ல என்று சிலர் கருதினர். சிறிய விவாதத்திற்குப் பின் தீர்மானம் கைவிடப்பட்டது.

ஹ்யூம் பருவத்திலே விபின்சந்திர பாலர் போன்ற பிரம்ம சமாஜிகளும், லாலா லஜபதிராய் போன்ற ஆரிய சமாஜிகளும் காங்கிரசிலே முன்னணித் தலைவர்களாக விளங்கினர். பிரம்ம சமாஜமும், ஆரிய சமாஜமும் புரட்சிகரமான மாறுதல்களை இந்து சமயத்திலே புகுத்த விரும்பியவை என்பதை முன்பே அறிந்தோம் அல்லவா!

மதுவிலக்கானது, அந்நாளிலும் சமூகச் சீர்திருத்தப் பணிகளுள் ஒன்றாகவே கருதப்பட்டது, சமூகச் சீர்திருத்தப் பணிகளிலிருந்து ஒதுங்கியிருக்கக் காங்கிரஸ் விரும்பிய பின்னும், மதுப் பழக்கத்தை ஒழிப்பதிலே மட்டும் அம்மகாசபை மிகுந்த ஆர்வம் காட்டியது.

இந்திய தேசிய காங்கிரசின் பெருமுயற்சி காரணமாக லண்டனிலுள்ள பாராளுமன்றத்திலே இந்தியாவில் மதுப் பழக்கத்தை ஒழிக்கும் முயற்சியை அரசு எடுக்கவேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திலகர் சகாப்தத் தொடக்கம்

இந்நிலையில் ஹ்யூம் சகாப்தம் இயற்கையாகவே முடிந்து திலகர் சகாப்தம் தோன்றுவதற்கான ஒரு சூழ்நிலையை அந்நாளைய வைசிராய் லார்டு கர்சான் என்பவர் உருவாக்கினார். அதுதான் வங்கப் பிரிவினை முயற்சி. அதிலிருந்துதான் இந்திய தேசியமானது புரட்சிகரமான திருப்பத்திற்குத் தன்னை யறியாமலே ஆளானது. ஆம்; இந்திய காங்கிரஸ் அல்ல; இந்திய தேசியம். இந்திய தேசியம் என்பது புனிதமான ஒரு தத்துவம். இந்திய தேசிய காங்கிரஸ் என்பது, அந்தத் தத்துவத்திற்குத் தன்னை ஆட்படுத்திக் கொண்ட ஓர் அமைப்பு - அதாவது, கருவி!

★-★-★

வங்காளப் பிரிவினை

பாகிஸ்தான், வங்க தேசம், இன்றைய இந்தியா ஆகிய மூன்றும் இணைந்த துணைக்கண்டமானது, ஒரே தேசமாக இருந்தது பிரிட்டிஷார் வருவதற்கு முன்பு. அரசியல் ரீதியில் அல்ல; கலாசார ரீதியிலே!

காலம் கை கொடுத்தது!

அரசியல் ரீதியில் 56 தேசங்களாக இருந்ததென்று இதிகாசங்களும் புராணங்களும் கூறுகின்றன. அரசியல் ரீதியிலும் இந்தியாவை ஒரே தேசமாகச் செய்யப் பல்வேறு சந்தர்ப்பங்களில் முயற்சி மேற்கொள்ளப் பட்டதுண்டு. வடபுலத்திலிருந்து அசோகன் தெற்கு நோக்கிப் படை நடத்தியதும், தெற்கிலிருந்து இராசராசன் வடக்கு நோக்கிப் படை நடத்தியதும் இந்தியாவை அரசியல் ரீதியிலும் ஒரே நாடாகச் செய்யத்தான். அதிலே அவர்கள் முழு அளவில் வெற்றி பெறவில்லையென்பது உண்மைதான். அதற்குக் காரணம், நவீனப் போக்குவரத்துச் சாதனங்கள் இன்றிருத்தல் போல அன்று இல்லாமைதான். இது, முன்பே நினைவூட்டப்பட்டது. ஆங்கிலேயர் இந்தியாவிற்கு வந்த காலந்தான் இந்த நாடு ஒருமைப்படுவதற்கு ஏற்றதாக இருந்தது. மௌரியர் - சோழர் காலத்தை விடவும் மொகலாயர் காலம் ஒருமைப்பாட்டிற்கு ஓரளவு உகந்ததாயிருந்தது. அதனாற்றான், மௌரியப் பேரரசை விடவும், சோழர் பேரரசை விடவும், மொகலாயப் பேரரசு பெரியதாக - குமரி முதல் இமயம் வரை விரிவுடையதாக - இருந்தது. மொகலாயர் காலத்தை விடவும் பிரிட்டிஷார் வருகை தந்த காலம் இந்திய ஒருமைப்பாட்டுக்கு இன்னும் அதிக வாய்ப்பாக இருந்தது. ரயில் போக்குவரத்து ஏற்பட்டதும், செய்திப் போக்குவரத்து விரிவடைந்ததும் பிரிட்டிஷார் காலத்தில்தானே! ஆகவே, இந்தியாவில் குமரி முதல் இமயம் வரை அரசு நிறுவும் பணியை வெற்றிகரமாக முடிக்க மொகலாயரை விடவும் பிரிட்டிஷாரால் முடிந்தது. இது,

காலத்தால் ஏற்பட்ட சாதனையாகும். பிரிட்டிஷார் வராமலிருந்தாலும் இந்தச் சாதனையை இந்திய அரசர்களே புரிந்திருக்க முடியும்.

பிரித்தாளும் தந்திரம்!

பிரிட்டிஷார் இந்தியாவை ஒருமைப்பாடுடைய ஓரரசு நாடாகச் செய்தது, அவர்களுடைய நன்மைக்காகத்தான். ஆம்; பிரிட்டனில் உற்பத்தியாகும் சரக்குகளுக்கு இந்தியாவை மார்க்கெட்டாகச் செய்யத்தான். இது எப்படியாயினும், இந்தியா அரசியல் ரீதியில் ஒருமைப்பாடு பெற்றது பிரிட்டிஷார் காலத்தில்தான் என்பதை ஒப்புக்கொள்வதற்கு நாம் வெட்கப் படத் தேவையில்லை.

இந்தியாவை ஒருமைப்படுத்திய அதே நேரத்தில், இந்திய அரசின் உள் உறுப்புகளான மாகாணங்களை அமைப்பதிலே அவர்கள் பிரித்தாளும் தந்திரத்தைக் கடைப்பிடித்தனர். பிரிட்டிஷார் வருமுன்பு இந்திய ராஜ்யங்கள் அநேகமாக மொழி வழிப்பட்டவையாகத்தான் இருந்தன. ஒரு மொழிக்குரிய பிரதேசம் ஒன்றுக்கு மேற்பட்ட அரசுகளாக இருந்திருக்கலாம், ஆனால், பல மொழிப் பிரதேசங்கள் ஒரு ஆட்சியில் இருந்ததில்லை. எப்போதோ சில சந்தர்ப்பங்களிலே, இங்குமங்குமாகச் சில பிரதேசங்களிலே அப்படியிருந்திருப்பினும், அவை நிலை பெறவில்லை.

கதம்ப ராஜ்யங்கள்!

பிரிட்டிஷார், இந்திய அரசுக்குட்பட்ட மாகாணங்களைப் பன்மொழிப் பிரதேசங்களாகச் செய்தனர். வங்கம், ஒரியா, இந்தி, அஸ்ஸாமி ஆகிய நான்கு மொழிப் பிரதேசங்களை இணைத்து, அதற்கு கல்கத்தாவைத் தலைநகராக்கி, கல்கத்தா மாகாணத்தைப் படைத்தனர்.

அப்படியே, தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கு மொழிப் பிரதேசங்களை ஒன்றுபடுத்தி, அதற்குச் சென்னையைத் தலைநகராக்கி, சென்னை மாகாணத்தைப் படைத்தனர்.

இதுபோல மராத்தி, குஜராத்தி, பஞ்சாபி, சிந்தி ஆகிய மொழி வேறுபாடுடைய பிரதேசங்களைப் பிணைத்து, அதற்கு பம்பாயைத் தலைநகராக்கி, பம்பாய் மாகாணத்தைப் படைத்தனர்.

இந்திய மொழிகளின் வளர்ச்சியைத் தடுக்கவும், இந்திய மக்கள் தங்கள் கலாசார நெறிப்படி வாழ விடாமல் செய்யவும்,

ஆங்கிலத்தைப் பொதுமொழியாக்கவும் இந்தப் பன்மொழி மாகாணப் படைப்பு அவர்களுக்குப் பயன்பட்டது. இயற்கையாக இங்(; நிலவிய மொழிவழி அரசுகளை நீடிக்கவும் நிலைக்கவும் விட்டிருந்தால், ஆங்கிலத்தை இந்திய மக்கள் மீது அவர்கள் திணித்திருக்க முடியாது.

பன்மொழி ராஜ்யங்களைப் படைத்ததால், அவற்றில் ஒவ்வொன்றிலும் ஆங்கிலத்தை ஆட்சி மொழியாக்குவது சுலபமாகி விட்டது. அதற்கு எதிர்ப்புக் காட்டும் துணிவு இந்தியருக்கு ஏற்படவில்லை. ஆங்கிலத்தின் மூலம் இந்தியாவை மேனாட்டு நாகரிகத்திற்கு அடிமைப்படுத்தவும் இந்தப் பன்மொழி ராஜ்ய ஏற்பாடு அவர்களுக்குக் கை கொடுத்தது.

வேலிக்குப் போட்ட முள்...

ஆனால், 'வேலிக்குப் போட்ட முள் காலுக்கு தைத்தது' என்னும் பழமொழிபோல, பிரித்தாளும் தந்திரப்படி செய்த இந்தப் பன்மொழி ராஜ்ய ஏற்பாடு நாளடைவில், அவர்களுக்கே கேடாக முடிந்தது. ராஜ்யங்களை எளிதில் நிர்வகிக்க முடியாத சங்கடம் அவர்களுக்கு ஏற்பட்டது. அதனால் பம்பாயிலிருந்து முதலில் பஞ்சாபையும், பின்னர்ச் சிந்துவையும் பிரித்தனர். இதற்கு முன்பே வங்கமொழிப் பிரதேசத்தைத் துண்டாடத் திட்டமிட்டனர். இது, லார்டு கர்சான் காலத்தில் நிகழ்ந்தது.

பிரிவினைக்குப் பின்னணி!

வங்கமொழி வழங்கும் பிரதேசத்தை இரண்டாகத் துண்டாட வேண்டும் என்ற முடிவுக்கு இந்திய அரசு வந்ததற்கு ஒரு பின்னணி உண்டு. அந்தப் பின்னணி வங்கப் பிரிவினை பற்றித் தகவல் தரும் வரலாற்று நூல் எதிலும் சரியாக விளக்கப்படவில்லை. ஆகவே, அதனை இங்கு விளங்கிக்கொள்ள முயல்வோம்.

19-ஆம் நூற்றாண்டிலேதான் இந்தியா முழுவதிலுமே விடுதலைப் புரட்சியும் அமைதியான முறையில் தேசிய எழுச்சியும் ஏற்பட்டனவென்றாலும், வங்கமொழி வழங்கும் பிரதேசமே அதற்கு வழிகாட்டியாக இருந்தது.

1747 லே அதாவது, 18-ஆம் நூற்றாண்டிலே வங்காளத்தில் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆக்கிரமிப்பை எதிர்த்து சிராஜ் - உத் - தௌலா நடத்திய புரட்சியைச் சரித்திர ஞானமுள்ள மக்கள் அறிவார்கள். அந்தப் புரட்சியின் தணல் வங்க மண்ணில்

கர்சான் காலம் வரை தணியாமலிருந்தது. 1857-இல் நடைபெற்ற சிப்பாய்ப் புரட்சியிலும் வங்காளம் பிரதான கேந்திரங்களில் ஒன்றாக இருந்தது. அந்தச் சூடும் கர்சான் காலம் வரை நீடித்தது.

ராஜா ராம்மோகன் ராய், ராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர் ஆகிய மெய்ஞ்ஞானியர் தோற்றுவித்த இந்திய ஒருமைப்பாட்டைக் குறிக்கோளாகக் கொண்ட - சமய சீர்திருத்தக் காற்றும் கர்சான் காலத்திலே வேகங்கொண்டிருந்தது. பங்கிம் சந்திர சாட்டர்ஜி வங்க மொழியில் எழுதி வெளியிட்ட ''ஆனந்த மடம்'' போன்ற புரட்சி இலக்கியங்கள் சாதாரண வங்காளியர் உள்ளங்களிலே உரிமை உணர்வைத் தூண்டிக் கொண்டிருந்தன.

19-ஆம் நூற்றாண்டில் விஞ்ஞானம் தந்த திறன்மிக்க சாதனங்களான செய்திப் பத்திரிகைகள் வங்காளத்தில்தான் மிகுதியாகத் தோன்றின. ஆங்கில நாளேடுகள் படித்த மக்களிடத்திலேயும், வங்க மொழி நாளேடுகள் அம்மொழியில் ஓரளவே எழுதப் படிக்கத் தெரிந்து வைத்திருந்த சாமான்யர்களிடையேயும் உரிமையுணர்வை ஊக்குவித்தன. இதனை ஒடுக்க, 1878-இல் பிரதேச மொழிப் பத்திரிகைகளுக் கென்றே அரசு பிறப்பித்த ஒடுக்குமுறைச் சட்டம் எதிர்பார்த்த பலனைத் தரவில்லையாதலால், அது ரத்துச் செய்யப்பட்டு விட்டது.

முதலில் சிறை சென்றவர்!

வங்காளியான சுரேந்திரநாத் பானர்ஜி, அரசாங்க சிவில் அலுவலராகத்தான் மக்களுக்கு அறிமுகமானாரென்றாலும், பின்னர், அவ்வலுவலைத் துறந்து மக்களுடைய உரிமைகளுக் காகப் பாடுபடும் மக்கள் தலைவராக மாறினார். 1883-இல் வெள்ளை நீதிபதி ஒருவர் தமது தீர்ப்பொன்றில் இந்துக்கள் வழிபடும் விக்கரகத்தை அவதூறு செய்ததற்காகப் பானர்ஜி அவரைத் தாக்கி எழுதினார். அதற்காக 2 மாத சிறைத் தண்டனை பெற்றார். இந்தியாவிலேயே அரசியல் காரணத்திற்காக முதன் முதலில் சிறையில் தள்ளப்பட்ட தேசியத் தலைவர் பானர்ஜிதான். இந்த நிகழ்ச்சி வங்க மொழி பேசும் மக்களிடையே கொதிப்பை ஏற்படுத்தியது.

இத்தனை நிகழ்ச்சிகளையும் பின்னணியாகக் கொண்டு லார்டு கர்சான் வைசிராயாக இருந்த காலத்திலே வங்க மாகாணத்தில் கடுமையான அரசியல் புயல் வீசியது. அப்போது மத்திய அரசு வங்கத்தின் தலைநகரான கல்கத்தாவில் இருந்ததால்,

அந்த மாநிலத்தில் தோன்றிய அரசியல் கொந்தளிப்பானது அதன் அஸ்திவாரத்தையே அசைத்துவிடக் கூடியதாக இருந்தது.

'கன்சர்வேடிவ்' கர்சான்!

இந்நிலையில்தான் கல்கத்தாவில் 'கோயில்' கொண்டிருந்த லார்டு கர்சான் பெருமகனார், வங்காளியரின் எழுச்சியை ஒடுக்க வழி கண்டுபிடித்தார். அதுதான், வங்க மாநிலப் பிரிவினை!

லார்டு கர்சான் 1899-இல் இந்தியாவின் வைசிராயாகப் பதவி பெற்றார். இவர் பிரிட்டனிலுள்ள - அரசியல் பிற்போக்காளர்களைக் கொண்ட - கன்சர்வேடிவ் கட்சியைச் சேர்ந்தவர். கர்சான் காலத்திலே வங்க மாநிலமானது, அசாம் - ஒரிசா, பீகார் ஆகிய மொழி வேறுபட்ட பிரதேசங்களைத் தன்னகத்தே கொண்டதாயிருந்தது. வங்கம், ஒரிசா, அசாம், இந்தி ஆகிய நான்கு மொழிக்குரிய நால்வேறு பிரதேசங்களைக் கொண்ட ஒரு பெரிய மாநிலமாக வங்காளம் இருப்பதால், அதனை நிர்வகிப்பது கஷ்டமாயிருக்கிறதென்று காரணம் கூறி, வங்க மாகாணத்தைத் துண்டாட முனைந்தார் லார்டு கர்சான்.

இஸ்லாமிய வங்கம்!

பெரிய அளவில் வங்க மாநிலத்தைப் படைத்ததே பிரிட்டிஷ் ஆட்சிதான். நியாயமான முறையில் வங்க மாநிலத்தைச் சிறியதாக்குவதற்கு வேறு வழி இருந்தது. அதாவது, மொழி அடிப்படையில் ஒரிசாவை வங்கத்திலிருந்து பிரித்துத் தனி மாநிலமாக்கியிருக்கலாம் அப்படியே, பீகாரையும் அசாமையும் பிரித்துத் தனித் தனி மாநிலமாக்கி யிருக்கலாம். அப்படிச் செய்திருந்தால், எஞ்சிய வங்க மாநிலம் வங்க மொழி மட்டுமே வழங்கும் சிறிய பிரதேசமாக அமைந்திருக்கும். ஆனால், இந்த நேரிய வழியைக் கடைப்பிடிக்கப் பிரிட்டிஷ் ஆட்சி விரும்பவில்லை. வங்க மொழிப் பிரதேசத்தை மதவழித் துண்டாடுவது ஒன்றே அதன் குறிக்கோளாக இருந்தது. ஆம்; மொழிவழி இனவுணர்ச்சி மூலம் எழுச்சி கொண்டுள்ள வங்காளியர்களை மத வழியில் பிரித்தாள லார்டு கர்சான் முனைந்தார். அதன் மூலம் வங்காளியரிடையே தோன்றியுள்ள தேசிய எழுச்சி செத்து மடியும் என்று கனவு கண்டார். வங்க மாகாணத்தைக் ''கிழக்கு வங்காளம்'' என்றும், ''மேற்கு வங்காளம்'' என்றும் இரண்டாகத் துண்டாடத் திட்டமிட்டார்.

கிழக்கு வங்காளம், சிட்டகாங் - டாக்கா - ராஜ்ஷாகி ஆகிய வங்க மொழி வழங்கும் மூன்று டிவிஷன்களையும் அசாம் பிரதேசத்தையும் கொண்டதாகும். இதன் சுற்றளவு, 1,06,540 சதுர

மைல்கள். மக்கள் தொகை 3 கோடி 10 லட்சம். இவர்களில் முஸ்லிம்கள் 1 கோடி 80 இலட்சம். இந்துக்கள் 1 கோடி 20 லட்சம்.

எஞ்சிய வங்காளமானது, மேற்கு வங்காளம் என்னும் பெயரிலே 19 ஆயிரம் சதுர மைல்களைக் கொண்டதாகும். தொகை 3 கோடி 17 லட்சம்.

இந்தப் புள்ளி விவரங்களிலிருந்து வங்கமொழி மாகாணமானது மதவழி துண்டாடப் பட்டிருப்பது புலனாகும். கிழக்கு வங்காளம் முஸ்லிம்களை மிகுதியாகக் கொண்டதாக இருப்பதற்கு வைசிராய் லார்டு கர்சான் வழி செய்தார். இந்தப் பிரிவினைக்கு 1904-ஆம் ஆண்டிலிருந்தே முயற்சி யெடுத்தார். 1905 செப்டம்பர் 29-இல் வங்கப் பிரிவினைச் சட்டம் ஒன்றை நிறைவேற்றி 16-10-1905-இல் அதனை அமுல் நடத்தி வைத்தார்.

வங்கப் பிரிவினைத் திட்டம் வைசிராய் கர்சானால் வெளியிடப் பட்டதுமே வங்க மொழி பேசும் மக்கள் கொதித்தெழுந்தனர். வங்க இனத்தவரின் மாபெரும் தலைவரான சுரேந்திரநாத் பானர்ஜி உள்ளிட்ட வங்காளத் தலைவர்கள் போர்க்கோலம் கொண்டனர்.

தேசமெங்கும் எதிர்ப்பு!

1905 டிசம்பரில் கோபாலகிருஷ்ண கோகலே தலைமையில் உத்தரப்பிரதேசத்திலுள்ள காசிமாநகரில் கூடிய காங்கிரஸ் மகாசபையிலே, வங்கப் பிரிவினையைக் கண்டித்துக் குரல்கள் எழுந்தன. தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பிரிவினை எதிர்ப்பு நாள் கொண்டாடும் திட்டமும் அறிவிக்கப்பட்டது.

வங்கப் பிரிவினையானது வங்க மொழி பேசும் மக்கள் மட்டுமே சம்பந்தப்பட்ட பிரச்சினையென்றாலும், பாரத மக்கள் அனைவருமே வங்காளியர் பக்கம் நின்றனர். ''வங்கம் வங்காளியருக்கே! அதனைத் துண்டு போடாதே!'' என்று கோஷித்தனர்' வங்காளியர். மதவேற்றுமையின்றி, மொழிவழி இன அடிப்படையில் வங்காளியர் அனைவரும் ஒன்றுபட்டனர்.

கிழக்கு வங்கத்திலுள்ள ''பாரிசால்'' என்னும் நகரிலே வங்க இனத்தவரின் ஒற்றுமை மாநாடு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. மாநாடு தொடங்கு முன் போலீசார் புகுந்து பிரதிநிதிகளைத் தடியால் அடித்துவிரட்டி, மாநாட்டுப் பிரதேசத்தைத் தங்கள் பொறுப்பில் எடுத்துக் கொண்டனர். தடியடியால் பலர் படுகாயமுற்றனர். மாநாட்டிற்குத் தலைமை வகிக்கவிருந்த

சுரேந்திரநாத் பானர்ஜி உட்பட பலர் கைது செய்யப்பட்டனர். பாரிசாலில் நடைபெற்ற இந்த அடக்குமுறையானது தேசம் முழுவதிலும் உள்ள மக்களுக்கு விழிப்பூட்டியது.

1906 டிசம்பரிலே கல்கத்தாவில் காங்கிரசின் வருடாந்திர மகாசபை கூடியது. அதிலே வங்கப் பிரிவினையை எதிர்த்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பங்கிம்சந்திரர் எழுதிய 'ஆனந்த மடம்'' என்னும் நாவலில் இடம் பெற்றுள்ள ''வந்தே மாதரம்'' என்னும் பாடல் கல்கத்தா காங்கிரசிலே முதன் முதலாக பாடப்பட்டது. அந்தப் பாடலுக்கு இசையமைத்துக் கொடுத்து, தாமே மகாசபையின் மேடைமீதேறி, உணர்ச்சிப்பெருக்குடன் பாடினார் கவி ரவீந்திரநாத் தாகூர். வந்தே மாதரம் பாடல், வங்க நிலத்தை மட்டும் தாயாகக் கற்பனை செய்து, அந்தத் தாயையும் காளி தேவியின் தோற்றத்திலே வருணனை செய்து, அவளுக்கு வங்க மக்கள் வழிபாடு நிகழ்த்தும் வகையில் அமைக்கப் பட்டதாகும். ஆம்; இன வழிப்பட்ட பாடல்!

தமிழர் பங்கு

சகோதர இனத்தவரான வங்காளியருக்கும் வெள்ளையர் ஆட்சி இழைத்த கேட்டுக்குப் பரிகாரம் காண காங்கிரஸ் மகாசபை எடுத்துக் கொண்ட பெருமுயற்சிலே தமிழினத்தவரும் பங்கு பெற்றனர்.

வங்கப் பிரிவினை அமுலுக்கு வருமுன்பே அதனால் பாதிக்கப்படும் வங்கமொழி மாநிலத்திற்கு வாழ்த்துக் கூறிப் பாரதியார் பாட்டு இயற்றினார். இதுதான் ''சுதேச மித்திரனி''ல் வெளியான அவரது முதல் பாடல். பாரதியார் எழுதி, ''சுதேச மித்திரன்'' ஏற்றுக்கொண்ட அந்தக் கன்னிப்பாடல் வருமாறு:

''அங்கமே தளர் வெய்திய காலையும்,
அங்கொர்புணரி தந்திடும் ஊன்உணாச்
சிங்கமே யென வாழ்தல் சிறப்பெனாச்
சென்மை கூறிநந் தாய்ப் பெருந் தேயத்தைப்
பங்கமே பெறும் இந்நிலை நின்றுயர்
பண்டை மண்பிடைக் கொண்டினி துய்த்திடும்
வங்கமே யென வந்தனை, வாழி நீ!.
வங்கமே நனி வாழிய வாழிய!''

இத்துடன் சேர்த்து வேறு இரண்டு செய்யுள்களையும் படைத்து மூன்று செய்யுள்களால் எழுச்சி கொண்ட வங்கத்திற்கு

இதயங்கனிந்த வாழ்த்துக் கூறினார் பாரதியார். இது, 15-9-1905 ''சுதேசமித்திரன்'' இதழில் வெளியானது. வங்கப் பிரிவினை நடைமுறைக்கு வந்தது 16-10-1904-இல். அதற்குச் சரியாக ஒரு திங்களுக்கு முன்பே பிரிவினையை எதிர்க்கத் தொடங்கிவிட்ட வங்க மாநிலத்திற்குப் பாரதியார் வாழ்த்துக் கூறினார்.

கர்சான் கருதியது

வங்க மொழி வழங்கும் பிரதேசத்தை மத அடிப்படையில் பிரிட்டிஷ் ஆட்சி துண்டாடியதன் நோக்கம், இந்தியர் என்னும் தேசிய உணர்ச்சியையும், வங்காளியர் என்னும் இனவுணர்ச்சியையும் கொன்று, இந்து - முஸ்லிம்களிடையே வகுப்புப் பூசலை வளர்ப்பதேயாகும்.

முஸ்லிம்களை மிகுதியாகக் கொண்ட கிழக்கு வங்கத்திலே சிறுபான்மையினரான இந்துக்களின் மத உணர்ச்சியைப் பாதிக்கும் நிலை ஏற்படும். அதுபோலவே, இந்துக்களைப் பெரும்பாலோராகக் கொண்ட மேற்கு வங்கத்திலே சிறுபான்மையினராகவுள்ள முஸ்லிம்கள் பாதிக்கப்படுவர். இது காரணமாக, கிழக்கு வங்கமும் மேற்கு வங்கமும் உள்நாட்டுப் பூசலைச் சந்திக்கும். மேற்கு (இந்து) வங்காளத்திற்கும் கிழக்கு (முஸ்லிம்) வங்காளத்திற்கு மிடையே மோதல் உருவாகும் - என்றெல்லாம் எதிர்பார்த்துத்தான் லார்டு கர்சான் வங்கத்தைத் துண்டாடினார். இது, பிரித்தாளும் தந்திரம் ஆகும்! இது, ஏகாதிபத்தியங்களின் பிறவிக் குணமல்லவா!

சென்னை மாகாணத்திலும் பிரிவினை

இதுபோன்ற பிரித்தாளும் தந்திரத்தை வங்கப் பிரிவினை நடைமுறையிலிருந்த காலத்திலேயே சென்னை மாகாணத்திலும் பிரிட்டிஷார் கடைப்பிடித்தனர்.

இங்கு, தமிழ் மாவட்டமான வடார்க்காட்டிலிருந்து சந்திரகிரி (திருப்பதி), காளத்தி, திருத்தணி, சித்தூர், புத்தூர், பல்லவனேரி ஆகிய ஆறு தாலுக்காக்களையும்; ஆந்திர மாவட்டமான கடப்பையிலிருந்து மதனப்பள்ளி, வாயல்பாடி என்னும் இரு தாலுக்காக்களையும் பிரித்தெடுத்து, இந்த எட்டுத் தாலுக்காக்களையும் கொண்ட சித்தூர் மாவட்டம் ஒன்றை பிரிட்டிஷ் ஆட்சி படைத்தது. இது நிகழ்ந்தது 1911 ஏப்ரல் 1 ல். ஆம், வங்கப் பிரிவினை நடைமுறைக்கு வந்ததையடுத்து!

இனப் பூசலுக்கு தூபம்!

வடார்க்காடு மாவட்டம் அளவிலும் மக்கள் தொகையிலும் பெரியதாக இருப்பதால் அதை நிர்வகிப்பது கஷ்டமாக இருக்கிறது என்ற காரணம் காட்டித்தான் பிரிட்டிஷ் ஆட்சி சித்தூர் மாவட்டத்தைச் சிருஷ்டித்தது. ஆனால், உண்மையான காரணம் வேறு.

ஆந்திரத்திற்கும் தமிழகத்திற்குமிடையில் எல்லைப் பூசலை ஏற்படுத்துவதற்காகத்தான் சித்தூர் மாவட்டம் என்ற பெயரில் இருமொழி மாவட்டம் ஒன்று ஆந்திர - தமிழக எல்லையிலே சிருஷ்டிக்கப்பட்டது. தென்னகத்திலே மதப் பூசல் மருந்துக்குக் கூட இல்லை. ஆனால், இனப் பூசல் சிறிதளவு உண்டு. அதனால், ஆந்திர - தமிழக எல்லைப் பிரதேசத்திலே இனப்பூசல் வலுக்கவழி செய்தது பிரிட்டிஷ் ஆட்சி. இந்த உண்மையை காலம் காட்டி விட்டது.

சென்னை ராஜ்யம் மொழிவழியே திருத்தியமைக்கப்பட்ட போது ஆந்திரத்திற்கும், தமிழகத்திற்குமிடையே எல்லைப் பூசல் உருவானதையும், தமிழகத்திற்கேவுரிய திருப்பதியும் திருக்காளத்தியும் ஆந்திரத்திற்குப் பறி போனதையும் கண்டோம்.

தமிழர் செய்த தவறு

உண்மையில், தமிழருக்கு வங்காளியர் போன்று இனவுணர்ச்சி இருந்திருக்குமானால், அந்நாளைய தமிழகத் தலைவர்கள் தீர்க்கதரிசனம் பெற்றிருந்திருப்பார்களானால், வடார்க்காடு மாவட்டம் துண்டாடப்படுவதை எதிர்த்து அப்போதே கடும்போர் நிகழ்த்தியிருப்பார்கள். ஆம்; வங்கப் பிரிவினையை எதிர்த்து வங்காளியர் களம் புகுந்ததுபோல! அப்படிச் செய்யாததால், வடவேங்கடமே தமிழகத்தின் வடக்கெல்லை என்னும் பெருமை பறிபோய் விட்டது! தமிழரசுக் கழகம் போராடியில்லையானால், தணிகைத் தாலுக்காகவும் பறி போயிருக்கும்!

கர்சானின் வாய்க் கொழுப்பு!

லார்டு கர்சான் ஆணவத்தின் மொத்த வடிவமாக இருந்தார். இந்திய சமுதாயத்தினரை அவமதித்துப் பேசுவதிலே தனி இன்பம் கண்டார். இந்திய வைசிராய்களிலே அவர் ஒரு தனிரகம்!

1898-இல் இந்திய அரசின் வரவு - செலவுத் திட்டத்தைப் பற்றிக் கர்சான் நிகழ்த்திய ஒரு சொற்பொழிவிலே இந்திய

சமுதாயத்தைப் பற்றித் தமக்குள்ள மிகமிக இழிவான எண்ணத்தை அச்சமின்றி வெளிப்படுத்தினார். அது வருமாறு:

''இந்த நாட்டின் அரசாங்க அதிகாரப் பதவிகளில் அவசியம் வெள்ளைக்காரரே இருக்க வேண்டும். ஏனென்றால், அவர்களுக்குத்தான் பிறவியினாலும், பயிற்சியினாலும், படிப்பினாலும், ஆட்சி செலுத்தும் அனுபவத்தினாலும் வேண்டிய அளவு நல்ல பழக்கங்களும், சிறந்த ஒழுக்கமும் இக்காரியத்திற்கேற்ப இருக்கின்றன. வெள்ளைக்காரர்களின் ஆட்சியைத் தவிர வேறு எதுவும் இங்கு இருக்க முடியாததால், வெள்ளைக்காரர்களே ஒழுக்க முறைகளையும், சீர்தூக்கிப் பயில வேண்டிய கொள்கைகளையும் கடைப்பிடித்துக் காக்க வேண்டும்.

''மேல் நாட்டாரின் ஒழுக்க நெறிகளில் சத்தியம் உயர்ந்த ஸ்தானத்தைப் பெற்றிருக்கிறது. கீழ்நாடுகளில் சத்தியத்திற்கு இவ்வளவு உயர்வைக் கொடுக்கவில்லை. தந்திரமும் சூதும் இங்கே புகழப்படுகின்றன. சாதாரணமாய் உலகெங்கும் தந்திரத்தைக் கீழ் நாட்டுக் குணமாகவே குறிக்கின்றனர். எல்லோருக்கும் புரியாத விதம் மிகவும் நுட்பமாகச் சுற்றிச்சுற்றித் தேடும்படியான ஏதோ உள்ளடங்கிய ஒன்று அக்குணத்தில் பதிந்து கிடக்கிறது. கீழ்நாட்டு இலக்கியங்களிலும் இதையே பார்க்கலாம். உங்கள் புராணங்களில் சத்தியத்தை மிகவும் உயர்த்திப் பேசுவார்கள். ஆனால், எங்கும் சத்தியத்தை விட்டு விலகும் மார்க்கங்களையே உங்கள் புத்தகத்தில் குறித்திருப்பதை நீங்களே பார்க்கலாம். அடிக்கடி சரியென்று நம்பிச் செய்யும் சூழ்ச்சியே புகழப்படுவதையும் கவனித்திருக்கலாம்.''

கண்டனக் குரல்

கர்சானின் ஆணவப் பேச்சு இந்தியா வெங்கணும் ஆத்திரத்தை மூட்டி விட்டது. பத்திரிகைகள் கண்டனக் குரல் எழுப்பின. இந்தியச் சட்டசபையிலேயும் எதிரொலி ஏற்பட்டது. தமிழகமும் தனது பங்குக்கு எதிர்ப்புக் காட்டியது. வழக்கறிஞர் வி. கிருஷ்ணசாமி ஐயர். 25-3-1898-இல் சென்னையில் கண்டனக் கூட்டம் ஒன்றை நடத்தினார். அவரும் பிரபல வழக்கறிஞர் நார்டன் துரையும் வேறு பல தேசபக்தர்களும் சொற்பொழிவாற்றினர். லார்டு கர்சானை வைசிராய் பதவியிலிருந்து நீக்கி இங்கிலாந்துக்கு அழைத்துக் கொள்ள வேண்டுமென்று கூடக் கிளர்ச்சி எழுந்தது.

தமிழ்நாட்டுக் காங்கிரஸ்காரர்கள் இந்தியரின் ஒழுக்க நெறியை லார்டு கர்சான் பழித்துப் பேசியதற்குப் பதிலளிக்கும்

வகையிலே நூல் ஒன்றை வெளியிடவும் முயன்றனர். இதற்குத் தூண்டுதல் செய்தவர் சேலம் சி. விசயராகவாச்சாரியார் ஆவர்.

''ஆரிய சரித்திரம்''

ஒழுக்கமும் உயர் குணங்களும் இந்திய சமுதாயத்தினரின் பரம்பரைச் சொத்துக்கள் என்பதனைக் கர்சானுக்கும், அவரைப் போன்றே இந்திய மக்களை இழிவாகக் கருதும் ஆங்கிலேயருக்கும் உணர்த்தும் பொருட்டு நூல் ஒன்றை வெளியிடவும் தமிழ்நாடுதான் முன் வந்தது. வடபுலத்தார் கர்சானைக் கண்டித்துக் கூச்சல் போட்டதோடு ஒய்ந்து விட்டனர். கர்சானுக்குப் பதிலளித்து வெளியிடப்பட்ட நூல் 741 பக்கங்களைக் கொண்டதாகும். ஐயாயிரம் பிரதிகள் தயாரிக்கப் பெற்றன. நூலின் பெயர் ''ஆரிய சரித்திரம்'' என்பதாகும்.

அந் நூலிலே சமஸ்கிருதத்திலான புராதன இதிகாச புராணங்களிலுள்ள கதைகளும் கருத்துக்களும் தொகுத்துத் தரப்பட்டன. அந்த நூலின் பிரதிகள் பாரதம் முழுவதும் பரப்பப் பெற்றன. அதைப்படித்த பரோடா கெய்க்வாட் அரசர், இந்நூலை இந்திய மொழிகள் அனைத்திலுமே மொழி பெயர்த்து வெளியிடத் தமக்கு உரிமைதர வேண்டுமென்று திரு. கிருஷ்ணசாமி ஐயருக்குக் கடிதம் எழுதினார். ஆம்; இந்நூல் சமஸ்கிருதத்தில் தயாரிக்கப் பட்டிருந்தது.

வங்கப் பிரிவினையின் விளைவு

வங்கப் பிரிவினைக்கு ஏற்பட்ட எதிர்ப்பு இந்திய வரலாறு காணாதது. பிரிட்டிஷ் ஆட்சிக்கும் அது புதிய அனுபவந்தான்! ஆயினும், அசைந்து கொடுக்கவில்லை. லண்டன் பார்லிமெண்டிலே எழுந்த வினாவுக்கு ''வங்கப் பிரிவினை முடிந்து போன விஷயம்'' என்று இறுமாப்புடன் பதிலளித்தார், இந்தியா மந்திரியாக இருந்த லார்டு மார்லி. ஆயினும், பிரிவினை எதிர்ப்புக் கிளர்ச்சி இந்திய மக்களிடையே ஒருமைப்பாட்டு உணர்ச்சியை ஏற்படுத்தியது. வங்கப் பிரிவினையின் எதிரொலி தான் தூத்துக்குடியில் வ.உ.சிதம்பரனார் தோற்றுவித்த சுதேசி இயக்கம்.

★-★-★

சுதேசிக் கப்பல் கம்பெனி

வங்கப் பிரிவினை எதிர்ப்பிலே பிறந்த சுதேசி இயக்க மானது பாரத தேச முழுவதிலும் பரவியது. அந்தக் காலத்திலே, சீனாவில் அமெரிக்கப் பொருள்களைப் பகிஷ்கரிக்கும் இயக்கம் தீவிரமாக இருந்தது. அது, பிரிட்டிஷ் பொருள்களைப் பகிஷ்கரிப்பதிலே இந்தியாவுக்கு வழிகாட்டுவதாகி விட்டது.

சுதேசி ஆண்டு

1906-ஆம் ஆண்டு முழுவதும் சுதேசி இயக்க ஆண்டாகவே இருந்தது. ''இந்தியனாக இரு; இந்தியப் பொருள்களையே வாங்கு!'' என்ற முழக்கம் எங்கும் எழுந்தது. காங்கிரஸ் மகாசபையிலிருந்த மிதவாதிகள் சுதேசிப் பொருள்களை ஆதரிப்பதை விரும்பினர். ஆனால், விதேசிப் பொருள்களைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்ற முழக்கத்தை வெறுத்தனர். அது பிரிட்டிஷ் ஆட்சியுடன் மோதலை உருவாக்குமென்று அஞ்சினர். இதற்காக காங்கிரசிலிருந்த தீவிரவாதிகள் மிதவாதிகளை எள்ளி நகையாடினர்.

சுப்பிரமணிய பாரதியார் வங்கத்திலே பிறந்த சுதேசி இயக்கத்தை வரவேற்றார். பங்கிம்சந்திரரின் ''வந்தே மாதரம்'' பாடலைத் தமிழில் மொழி பெயர்த்துத் தமது ''சக்கரவர்த்தினி'' மாத இதழில் வெளியிட்டார். தாமாகவே சுயமாகவும் ''வந்தேமாதரம்'' பாடலொன்றைப் புனைந்தார். ''இந்தியா'' என்ற பெயரில் வார இதழொன்றையும் வெளியிடலானார்.

எங்கும் எதிலும் சுதேசி!

சென்னையில் ஆங்கிலேயரால் நடத்தப்பட்டு வந்த ''அர்பத் நாட் பாங்கு'' முறிந்து விட்டது. அதிலே பணம் போட்டவர்கள் அழுகுரலெழுப்பினர். இதனால், தமிழ்நாட்டுத் தனவந்தர் சிலர் கூடி, இனி ஆங்கிலேயர் பாங்குகளைப் பகிஷ்கரிப்பதென்று முடிவு செய்து, இந்தியன் வங்கியைத் தொடங்கினர். சென்னை வாசியான லாட் கோவிந்ததாஸ் என்பவர் இம்முயற்சியில்

ஈடுபட்டார். கல்கத்தாவிலே சுதேசி வங்கி என்ற பெயரில் தேசிய வங்கி திறக்க முயற்சி எடுக்கப்பட்டது.

அந்நாளில், கல்வி முழுவதும் அரசின் பொறுப்பிலும், அரசின் ஆதரவைப் பெற்ற கிறித்துவ மிஷனரிகள் பொறுப்பிலுமே இருந்தது. மிஷனரிகள் மாணவர்களிடையே பிரிட்டிஷ் ராஜ பக்தியை வளர்த்தனர். சொந்த மதத்தையும் மொழியையும் கலாசாரத்தையும் வெறுக்கும் வகையில் மாணவர்களின் நெஞ்சங்களை நஞ்சாக்கி வந்தனர். அதனால், நாடெங்கும் தேசியப் பள்ளிகளையும், கல்லூரிகளையும், பல்கலைக் கழகங் களையும் தொடங்கச் சுதேசியவாதிகள் முயன்றனர். ''தேசியக் கல்வி'' என்பதாகப் புதிய கல்வித் திட்டமொன்றையும் வகுத்தனர். இந்தத் தேசியக் கல்வி முயற்சியானது வங்கத்திலே தான் தீவிரமாக இருந்தது.

அடக்குமுறை!

திரு.ஜி. சுப்பிரமணிய ஐயர், சுதேசி இயக்கத்திற்கென நிதிதிரட்டும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டார். அதற்காக, தமிழ்நாடு முழுவதிலும் சுற்றுலாச் செய்தார். ஐயரது முயற்சியை ஆதரித்துத் தேசியக் கவி பாரதியார் தமது ''இந்தியா'' பத்திரிகையில் எழுதினார். ஜி.சு. ஐயர் தமிழ்நாட்டில் சுற்றுலாச் செய்தபோது, அவர் திரட்டும் சுதேசி நிதிக்கு மக்கள் பொருள் கொடுக்கக் கூடாதென்று அரசாங்க அதிகாரிகளும், எட்டயபுரத்தார் போன்ற ஜமீன்தார்களும் பிரசாரம் செய்தனர்.

வங்காளத்திலே, ஆகஸ்டு 7 -ஆம் தேதியை மக்கள் ''சுதேசி தினமா'' கக் கொண்டாடினர். அன்று சுரேந்திரநாத் பானர்ஜி மக்களால் கௌரவிக்கப்பட்டார்.

சுதேசி இயக்கத்திற்கு எதிராக அரசின் அடக்குமுறைகளும் அதிகரித்தன. வடக்கே ''பஞ்சாபி'', ''இந்திய சுயராஜ்யம்'', ''வந்தே மாதரம்'' பத்திரிகைகள் மீது வழக்கு தொடுத்து அரசு தொல்லை கொடுத்தது. சென்னையில், ''சுதேச மித்திரன்'', ''இந்தியா'' முதலிய தமிழ் ஏடுகளும்; ''இந்து'', ''பேட்ரியட்'' முதலிய ஆங்கில ஏடுகளும் சுதேசி இயக்கத்திற்கு ஆதரவளித்து வந்தன - ஆம்; அதிகாரிகளின் கெடுபிடித் தொந்தரவுகளையும் தாங்கிக் கொண்டு!

கப்பல் கம்பெனி

சுதேசிய ஆண்டாகிய 1906-இல் தான் இந்திய சுதேசி இயக்கத்திற்கே சிகரம் வைத்தாற் போன்று தமிழகத்தின் தென்

கோடியிலுள்ள தூத்துக்குடியில் சுதேசிக் கப்பல் கம்பெனியை வ.உ. சிதம்பரனார் தொடங்கினார். அந்நாளில் தூத்துக்குடிக்கும் கொழும்புக்குமிடையே பிரிட்டிஷ் ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியின் கப்பல்கள் போக்குவரத்தில் இருந்து வந்தன. இதனால், தமிழ்நாடு சம்பந்தப்பட்ட வரை கடல் வாணிபம் வெள்ளையரின் ஆதிக்கத்தில் இருந்து வந்தது. இந்த நிலைகண்டு நெஞ்சங் குமுறினார் சிதம்பரனார்.

''திரைகடலோடியும் திரவியந் தேடு'' என்பது, ஔவை மூதாட்டியின் அறிவுரை. இந்தியாவில் முதன்முதலில் கடற்படையைப் பெற்றிருந்தது சோழப் பேரரசேயாகும். வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட காலந்தொட்டே கடல் வாணிபத்தில் இந்தியரிலே தமிழ் நாட்டவரே ஆதிக்கம் பெற்றிருந்தனர். கப்பல் கட்டுந் தொழிலிலும் இந்தியரிலே தமிழரே ஆற்றல் பெற்றிருந்தனர். இந்த வரலாற்றுப் பின்னணியை அறிந்தவர் வ.உ. சிதம்பரனார். அதனால், பிரிட்டிஷாரிடம் தமிழர் பறிகொடுத்துவிட்ட கடல் வாணிபத்தைத் திரும்பவும் அவர் மீட்க விரும்பினார்.

சிதம்பரனாரின் சிந்தனை

தூத்துக்குடி வணிகர் சிலருடன் கலந்து ஆலோசித்து, ''சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி'' யைத் தொடங்கினார். கடல் வாணிபத்தைக் கைப்பற்றுவதற்கான முதல் காரியமாக வ.உ.சி. இதனைக் கருதினார். இதனை, வ.உ.சியின் வாக்காலேயே அறிவோம்.

''தேச ஆட்சியின் மீட்சிக்கான முதல்வழி, வியாபாரம் செய்ய வந்த வெள்ளையர்களை விரட்டியடிக்க வேண்டும் என்பதுதான். வெள்ளையர்களை விரட்டுவதென்றால், நம்மவர்க்கு கடல் ஆதிக்கம் வேண்டும்.

''ஒரு காலத்தில் மேற்கே உரோம் தேசத்திற்கும் கிழக்கே ஜாவா, சுமத்ராவுக்கு அப்பாலும் தமிழ்க் கப்பல் போய் வந்தது. அவர்கள் சுதந்திரமாக வாழ்ந்து வந்தனர். எனவே, தமிழர்கள் மீண்டும் கடல்மேல் செல்வது எவ்வாறு என்பதாகத் திட்டமிட்டேன். இத்திட்டத்தின் விளைவுதான் சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி.''

(''வி.ஒ.சி. கண்ட பாரதி,' பக்.33)

தானாபதியின் வாரிசு

தேசத்தில் சுதேசி இயக்கம் கொழுந்துவிட்டெரிந்தபோது வ.உ. சிதம்பரனார் தூத்துக்குடியில் வக்கீல் தொழில் புரிந்து வந்தார். அவர் பிறந்தது கோயில்பட்டித் தாலுகாவிலுள்ள ஒட்டப்பிடாரம் என்னும் சிற்றூரிலாகும். அவ்வூர், கட்டபொம்மன் வாழ்ந்த பாஞ்சாலங்குறிச்சியை அடுத்துள்ளது. வ.உ.சி. பிரிட்டிஷாரை எதிர்த்துக் கட்டபொம்மன் நடத்திய வீரப்போர் பற்றிய வரலாற்றை அறிந்தவர். அம்மாவீரனைத் தன் நெஞ்சத்தில் வைத்துப் போற்றியவர். வீரபாண்டியனின் தலைமை அமைச்சராக இருந்த தானாபதிப் பிள்ளையின் குடும்ப வழியில் வந்தவர் வ.உ.சி. ஆகவே, தன் மூதாதையான தானாபதிப் பிள்ளையின் தலையை வெட்டி, அவரது உயிரைக் குடித்த பிரிட்டிஷ் ஆட்சியின் உயிரைக் குடித்து, பழிக்குப்பழி வாங்க வ.உ.சி காலத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தார். தேசத்தில் எழுந்த சுதேசி இயக்கமானது அவர் எதிர்பார்த்த வாய்ப்பை அவருக்குத் தந்தது. ஆகவே, ஏகாதிபத்தியக் கப்பலுக்கு எதிர்க்கப்பலோட்ட அவர் திட்டமிட்டார்.

பத்து லட்சம்

1882-ஆம் ஆண்டு இந்தியக் கம்பெனிகள் சட்டப்படி 1906-ஆம் ஆண்டு அக்டோபர் 16-ஆம் தேதியன்று சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி பதிவு செய்யப்பெற்றது. இக்கம்பெனியின் வங்கியாக இருக்க ''நேஷனல் பாங்க் ஆப் இந்தியா'' இசைவு தெரிவித்தது.

கம்பெனிக்கெனப் பத்து லட்ச ரூபாய்க்குப் பங்குதாரர் களைச் சேர்க்க முடிவு செய்யப்பட்டது. இந்தியரேயன்றி, இலங்கையர் உள்ளிட்ட ஆசியர் அனைவரும் பங்குதாரராகச் சேரலாமென விளம்பரப்படுத்தப்பட்டது. பங்கொன்றுக்கு 22 ரூபாய் என நிச்சயிக்கப்பட்டது. இதன்படி நாற்பதாயிரம் பங்குகள் சேர்க்கத் திட்டமிடப்பட்டது.

வருவாயைத் துறந்தார் வ.உ.சி

பாலவனத்தம் ஜமீன்தாரரும் மதுரைத் தமிழ்ச் சங்கத் தலைவருமான திரு. பாண்டித் துரைச்சாமித் தேவரை சுதேசிக் கப்பல் கம்பெனியின் தலைவராக்கி, துணைச் செயலாளர் பொறுப்பைத் தாமே ஏற்றார் சிதம்பரனார். வங்கக் கடலிலே பிரிட்டிஷ் கப்பலுடன் நடத்தவிருக்கும் போராட்டத்திற்

கெனவே தம்மை அர்ப்பணித்துக் கொள்ள முடிவு செய்து, பெருவருவாயைக் கொடுத்துவந்த வக்கீல் தொழிலைத் துறந்தார்.

31 பிரமுகர்கள் சுதேசிக் கப்பல் கம்பெனியின் டைரக்டர்களாக இருக்க இசைந்தனர். கனம் குருசாமி ஐயர், சேலம் சி. விசயராகவாச்சாரியார், பால் பீடர் பிள்ளை, சங்கரன் நாயர் ஆகியோர் கம்பெனிக்குச் சட்ட ஆலோசகர்களாக இருக்கச் சம்மதித்தனர்.

வேலைத் திட்டம்

சுதேசிக் கப்பல் கம்பெனி நிர்வாகக் குழுவின் முதல் கூட்டத்தில், அதன் குறிக்கோள் வகுக்கப்பட்டன. அவை வருமாறு:

தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் கம்பெனியார் தீர்மானித்திருக்கும் மற்ற இடங்களுக்கும் நீடித்தும் சௌகரியமாகவும் கப்பல்கள் போகவரச் செய்து பிரயாணத்தையும் வியாபாரத்தையும் சௌகரியப்படுத்துதல்.

''இந்தியர்களையும் இலங்கையர்களையும் மற்றும் ஆசியாக் கண்டத்துச் சாதியார்களையும் கப்பல் நடத்தும் தொழிலில் பழக்குவித்து அதனால் வரும் நற்பலன்களை அடையும்படிச் செய்தல்.

''இந்தியர்களுக்கும் இலங்கையர்களுக்கும் மற்றும் ஆசியாக் கண்டத்துச் சாதியார்களுக்கும் கப்பல் செலுத்துவதற்கும் கப்பல் கட்டுவதற்கும் பயிற்சியளித்தல்.

''இந்தியர் மற்றும் ஆசியாக் கண்டத்துச் சாதியார்களுக்கும் இலங்கை மாணவர்களுக்கும் கப்பல் ஓட்டும் தொழிலையும் கப்பல் கட்டும் தொழிலையும் தொழிலியல் முறைப்படி கற்பிக்கக் கலாசாலைகள் ஏற்படுத்தல்.

''கப்பல் நடத்துவதிலும் வாணிபம் செய்வதிலும் இந்தியர்கள் இலங்கையர்கள் முதலிய ஆசியாக் கண்டத்து வாசிகளிடையே ஐக்கியத்தை உண்டு பண்ணி முன்னேறச் செய்தல்.

''பற்பல வியாபார நிலையங்களில் உள்ள வாணிபங்களுக்குரிய கொள்வன - கொடுப்பன தெரிந்து கொள்வதற்காக இந்தியா, இலங்கை முதலிய ஆசியாக் கண்டத்து நாட்டினரை ஏஜெண்டுகளாக நியமித்தல்.

''கப்பல், இயந்திரப் படகுகள் முதலியன நிர்மாணிப்பதற்கும் அவற்றைச் செப்பனிடுவதற்கும் துறைகள் ஏற்படுத்தல்.''

''ஷா லைன் கம்பெனி''

சுதேசிக் கப்பல் கம்பெனியின் குறிக்கோள் கப்பல்கள் விடுவதோடன்று, கப்பல்களைக் கட்டுவதுமாகும். அதிலே, இந்தியரை மட்டுமின்றி, ஆசியாக் கண்டத்தார் அனைவரையுமே ஈடுபடுத்துவதுமாகும். அந்நாளில் ஆசிய நாடுகளில் பெரும்பாலானவை பிரிட்டிஷாருக்கு அடிமைப்பட்டிருந்தன. அதனால், ஆசியாக முழுவதிலுமிருந்து கடல் வாணிகத்தை ஆங்கிலேயரிடமிருந்து கைப்பற்றுவதைத் தனது குறிக்கோளாகக் கொண்டது சுதேசிக் கப்பல் கம்பெனி. இதற்கு, தொழில் துறையில் வளர்ச்சியடைந்துள்ள ஜப்பானின் உதவியைப் பெறுவதென்றும் கம்பெனியின் நிர்வாகம் முடிவு செய்தது.

தொடக்கத்தில் சுதேசிக் கப்பல் கம்பெனியார் சொந்தத்தில் கப்பல்கள் வாங்கவில்லை. பம்பாயிலுள்ள ஷாலைன் ஸ்டீமர்ஸ் கம்பெனியிடம் குத்தகைக்குக் கப்பல்களை வாங்கி ஓட்டினர்.

வெள்ளையர் செய்த கெடுதல்

சுதேசிக் கப்பல் கம்பெனியை வ.உ.சி. தோற்றுவித்தது கண்டு ஆங்கில வணிக முதலாளிகளும் அதிகார வர்க்கமும் அஞ்சின. அதனால், சுதேசிக் கம்பெனிக்குக் குத்தகை முறையில் கப்பல் கொடுத்துதவ முன்வந்த ஷாலைன் கம்பெனியாரைப் பயமுறுத்தி, கப்பல்களைக் கொடுக்காதபடிச் செய்ய முயன்றன.

அப்போது வாலஸ் என்ற ஆங்கிலேயர் தூத்துக்குடியில் சப் - மாஜிஸ்திரேட்டாக இருந்தார். அவர் சுதேசிக் கப்பல் கம்பெனியை ஒழித்துக் கட்டும் வேலையில் தீவிரமாக ஈடுபட்டார். போலீஸ் அதிகாரிகளை ஏவி, கப்பல் கம்பெனியில் பணி புரியும் ஆட்களை அதிலிருந்து விலகிக் கொள்ளுமாறு செய்தார்.

வெள்ளை அதிகாரிகளின் பயமுறுத்தல் காரணமாக, ஒப்பந்தப்படி கப்பல்கள் தர மறுத்து விட்டது ஷாலைன் கம்பெனி.

> ''இந்நோட்டீஸ் கண்ட ஆறு மணி நேரத்திற்குள் நீவிர் கப்பல் ஒப்புவிக்காத பட்சத்தில் உம் பேரில் நஷ்ட ஈடு கோரி வழக்குத் தொடரப்படும்.''

என்று சுதேசிக் கப்பல் கம்பெனியார் ஷாலைன் கம்பெனியின் பிரதம நிர்வகியான எஸ்ஸாஜி டாஜ்பாய்க்கு எச்சரிக்கை அறிவிப்பு அனுப்பினர்.

சொந்தக் கப்பல்

ஷாலைன் ஸ்டீமர்ஸ் கம்பெனியார் செய்த நம்பிக்கைத் துரோகம் காரணமாகச் சொந்தமாகக் கப்பல்கள் வாங்கினா லொழிய, சுதேசிக் கப்பல் கம்பெனியை நடத்த முடியாது என்ற நிலை ஏற்பட்டது. அதனால், பங்குதாரர்களைச் சேர்க்கும் பணியில் வ.உ.சி. தீவிரங் காட்டினார். பம்பாய், கல்கத்தா முதலிய நகரங்களுக்குச் சென்று காங்கிரஸ் தலைவர்களுடைய உதவியால் பங்குதாரர்களைச் சேர்த்தார்.

''காலியா'', ''லாவோ'' என்னும் பெயருடைய 2 கப்பல்கள் வாங்கப்பட்டன. ''காலியா'' கப்பல் 42 முதல் வகுப்புப் பயணிகளும், 24 இரண்டாம் வகுப்புப் பயணிகளும், 1300 சாதாரண வகுப்புப் பயணிகளும் இருப்பதற்கும், 4000 சரக்கு மூட்டைகள் ஏற்றுவதற்கும் வசதியுடையது.

கப்பல்களில் பயணிகள் ஏறுவதற்கும் சரக்கு மூட்டைகளை ஏற்றுவதற்கும் வசதியாக இரண்டு யந்திரப் படகுகளும் வாங்கப்பட்டன.

'இந்தியா'வில் கார்ட்டூன்

இருபெரும் கப்பல்களை வாங்குவதில் வெற்றி பெற்ற வீரர் சிதம்பரனாரை இந்தியாவிலுள்ள தேசியப் பத்திரிகைகளெல்லாம் பாராட்டின. பாரதியாரின் ''இந்தியா'' பத்திரிகையிலே, ''வந்தே மாதரம்'' எனும் மந்திரச் சொல் பொறித்த கொடியுடன் காலியா, லாவோ கப்பல்கள் தூத்துக்குடித் துறைமுகத்தை அணுகுவது போலவும், ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் கூடி, ''வீரச் சிதம்பரம் வாழ்க!'' எனக் கோஷித்துக் கப்பல்களை வரவேற்பது போலவும் ''கார்ட்டூன்'' பிரசுரிக்கப்பட்டது. சுதேசிக் கப்பல்களை வரவேற்றுப் பாரதியார் எழுதியது வருமாறு:

''வெகு காலமாகப் புத்திரப் பேறின்றி அருந்தவம் செய்து வந்த பெண்ணொருத்தி ஏக காலத்தில் இரண்டு புத்திரர்களைப் பெற்றால் எத்தனை அளவற்ற ஆனந்தமடைவாளோ அத்தனை அளவற்ற ஆனந்தத்தை நமது பொது மாதாவாகிய பாரததேவியும் இவ்விரண்டு கப்பல்களையும் பெற்றமைக்காக அடைவா ளென்பது திண்ணமே.''

ஸ்ரீ.வி.ஒ. சிதம்பரம் பிள்ளையும் அவருடன் நின்று உதவிய மற்ற நண்பர்களும் தாம் பிறந்து வளர்ந்த தாய்நாட்டிற்கு செய்ய வேண்டிய கடமையைச் செய்து விட்டார்கள்.''

(''இந்தியா,'' ஆனி, 1907)

பாரதியார் சுதேசிக் கப்பல்களை வரவேற்றாலும் அவற்றிற்குத் தரப்பட்ட பெயர்கள் அவருக்கு மகிழ்ச்சியைத் தரவில்லை. ''சுதேசிக் கப்பல்களுக்கு விதேச மொழிப் பெயரா?'' என்று கேட்டார். இதோ, பாரதியார் பேசுகிறார்:

''இந்தக் கப்பல்களுக்கு இப்போது கொடுக்கப்பட்டிருக்கும் பெயர்களே எப்போதும் இருப்பனவா? அல்லது சுதேசி இயக்கத்திற்கிணங்க வேறு பெயர்கள் கொடுக்கப்படுமா? நம் கொள்கைகளுக்கிணங்க பெயர்களை மாற்றுவதும் பொருத்த மென்றே எண்ணுகிறோம். இவ்வித அபிப்பிராயம் கம்பெனியா ருக்கு இருக்கும் பட்சத்தில் 'சிவாஜி', 'தாதாபாய்', 'பாலகங்காதர்' அல்லது 'திலகர்', கய்க்கிவார்' இந்த நான்கு பெயர்களுள் இரண்டை எடுத்துக் கொள்ளலாமென்று பிரரேபிக்கின்றோம்.''

('இந்தியா', ஆனி, 1907)

வளர்முகம்

சுதேசிக் கப்பல் கம்பெனியின் செல்வாக்கு நாள்தோறும் வளர்ந்து வந்தது. சுதேசிக் கப்பல்களிலேயே பயணம் செய்வதென்றும், சரக்குகளை ஏற்றுவதென்றும் மக்கள் விரதங் கொண்டனர். இன்னொரு வகையில் சொன்னால், விதேசிக் கப்பல்களைப் பகிஷ்கரிப்பதெனச் சூளுரைத்தனர். தமிழ் வணிகர்களிலே இரண்டொருவர் அதிகாரிகள் தூண்டுதலால் முதலில் பிரிட்டிஷ் கம்பெனிக்கு ஆதரவு காட்டினர். ஆயினும் நாளடைவில் அவர்களையும் தம் வழிப்படுத்தினார் வ.உ.சி.

பிரிட்டிஷ் கம்பெனியார், தங்கள் செல்வாக்கு குறைவது கண்டு, குறைந்த கட்டணத்திற்குப் பயணிகளையும் சாமான் களையும் ஏற்றிக்கொள்ள முன் வந்தனர். ஒன்றிரு நேரங்களில் இலவசமாக ஏற்றிக் கொள்ளவும் செய்தனர். ஆயினும், அதிலே அவர்கள் வெற்றி பெறவில்லை. தரகர்களை அமர்த்தியும், ரயில்வே நிலையங்களில் கையாட்களை நிறுத்தியும் விதேசிக் கப்பல் கம்பெனிக்காகப் பிரசாரம் செய்தனர். அதே முறைகளைச் சுதேசிக் கம்பெனியாரும் கையாண்டு வெற்றி கண்டனர்.

லஞ்ச முயற்சி

இந்தப் போட்டியால் தூத்துக்குடி மக்கள் விதேசிக் கம்பெனியார் மீது வெறுப்பும், சுதேசிக் கம்பெனியார்பால் விருப்புங் கொண்டனர். தூத்துக்குடி நகரில் பொதுக்கூட்டங்கள் போட்டு, சுதேசிக் கம்பெனிக்கு வ.உ.சி. ஆதரவு திரட்டினார்.

பிரிட்டிஷ் கம்பெனியார், சுதேசிக் கம்பெனியை விட்டு விலகுவதானால் ஒரு லட்ச ரூபாய் லஞ்சம் தருவதாக வ.உ.சி.க்கு ஆசை காட்டினார்.

''ஈன்றாள் பசிகாண்பா னாயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை''

என்னும் குறள்நெறிப்படி வாழ்ந்தவராதலால், வெள்ளையரின் லஞ்ச வலையில் விழ வ.உ.சி. மறுத்ததோடு, அதற்காகத் தூது வந்த இரு இந்திய கனவான்களையும் கடிந்து கொண்டார்.

சுதேசிக் கப்பல் கம்பெனி நிறுவியதோடன்றி, சுதேசி இயக்கத்தைப் பல தொழில் துறைகளுக்கும் விரிவுபடுத்தக் கருதித் தூத்துக்குடியில் தரும சங்க நெசவுச்சாலை, தேசியப் பண்டக சாலை ஆகியவற்றைத் தோற்றுவித்தார்.

விவசாயிகளிடையில்

சென்னை நகரில் 'சென்னை விவசாய - கைத்தொழில் சங்கம் லிமிடெட்' ஒன்றை நிறுவினார். இப்பணிகளுக்காக தொழில்துறையில் அனுபவமுள்ள பலருடைய துணையைப் பெற்றார் வ.உ.சி. சென்னை விவசாய சங்கத்திற்காகப் பங்கு ஒன்றுக்கு பத்து ரூபாய் வீதம் பத்தாயிரம் ரூபாய் திரட்டத் திட்டமிட்டார். அந்தப் பத்து ரூபாயைக்கூட பல தவணைகளில் செலுத்தலாமென அறிவித்தார். ஆம்; ஏழை நெசவாளர்களைப் பங்குதாரர்களாகச் சேர்க்கவே இந்த ஏற்பாட்டை அறிவித்தார். சென்னை விவசாய - கைத்தொழில் சங்கத்தின் கொள்கைகளையும் வெளியிட்டார். அவை வருமாறு:

''உழவர் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தல்;

''உழவும் கைத் தொழிலும் நவீனகால முறைப்படி வளர்ச்சி பெறச் செய்தல்;

''சோப்பு, மெழுகுவர்த்தி, பித்தான் ஆகிய பொருள்களை உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலைகள் ஏற்படுத்தல்;

''சென்னை மாகாணத்தில் பல ஜில்லாக்களிலும் தரிசாகக் கிடக்கும் நிலங்களை வாங்கி, விஞ்ஞான முறைப்படி விவசாயம் செய்ய உழவர்களுக்குப் பயிற்சி அளித்தல்.''

தாம் மேற்கொண்ட சுதேசிப் பணிக்கு மக்களுடைய ஆதரவைத் திரட்ட வேண்டி, திரு.வி. சக்கரை செட்டியார்

தலைமையில் சென்னை நகரில் ''சுதேசிப் பிரசார சபை'' ஒன்றை நிறுவினார்.

மக்களை நம்பி

வ.உ.சி. தமிழ்நாட்டு மக்களை நம்பி அகலக் கால்வைத்து விட்டாரென்றே சொல்ல வேண்டும். அந்த வகையில் வடக்குக்கும் வழிகாட்டுவதாக இருந்தது வ.உ.சி.யின் சுதேசி இயக்கம். ஆரம்பத்தில் அமைதியான முறையில் சுதேசி இயக்கத்தை நடத்திச் செல்லவே அவர் நினைத்திருக்க வேண்டும். உண்மையில் தமிழ்நாட்டில் அரசியல் புயல் வீசவில்லை அந்த நாளிலே. அதனாற்றான், தொழில் அதிபர்களுக்கும் வணிகர்களுக்கும் உதவி புரிவதோடன்றி, நெசவுத் தொழிலிலும் விவசாயத் தொழிலிலும் ஈடுபட்டுள்ளவர்களையும் சுதேசி இயக்கத்தில் ஈடுபடுத்தத் திட்டமிட்டார். ஆனால், காலம் அவரை அரசியல் புரட்சிக்காரராக்கி விட்டது!

★★★

கொள்கைப் போராட்டம்!

தமிழ்நாட்டைச் சார்ந்த தூத்துக்குடியில் சுதேசி இயக்கம் வலுப்பெற்றுவந்த நேரத்திலே, இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபைக்குள்ளே தீவிரவாதிகளுக்கும் மிதவாதிகளுக்கு மிடையே போர் மூண்டது. இந்த இரு சாராரும் பல்வேறு விஷயங்களில் கருத்து வேற்றுமை கொண்டிருந்தனர். அந்த வேற்றுமை விஷமாகி, ஒரு போராட்டமே உருவாகக் காரணமாகி விட்டது. அன்னியப் பொருள்களை பகிஷ்கரிக்க வேண்டுமென்று தீவிரவாதிகள் கங்கணம் கட்டிக் கொண்டனர். சுதேசியப் பொருள்களையே ஆதரிக்க வேண்டுமென்பதை மிதவாதிகள் எதிர்க்கவில்லை; ஏற்றுக் கொண்டனர் எனலாம். அதுவும் சொல்லளவில்தான்!

குழுச் சண்டை

காங்கிரஸ் மகாசபையில் மிதவாதிகளே எண்ணிக்கையில் மிகுந்து விளங்கினர். அவர்களுடன் ஒப்பிடுங்கால் தீவிரவாதிகள் எண்ணிக்கையில் மிகவும் குறைந்து விளங்கினர். அதனால், ஒரு தனிக் கட்சியாகவே செயல்பட்டனர் தீவிரவாதிகள். பிற்காலத்தில் காங்கிரஸ் மகாசபையிலே கோஷ்டிப் பூசல் ஏற்பட்டதுண்டு. இதற்குத் தொடக்கமாக இருந்தது. 1906-ஆம் ஆண்டில் காங்கிரசில் தீவிரவாதிகள் - மிதவாதிகள் இடையே நடந்த கோஷ்டிப் பூசல். மிதவாதிகள் பழைய கட்சியார் என்றும், தீவிரவாதிகள் புதிய கட்சியார் என்றும் அழைக்கப்பட்டனர்.

இந்தப் போராட்டத்திற்குத் தமிழகமும் விலக்காக இல்லை. துரதிருஷ்டவசமாக, அந்நாளிலே தமிழகத்தில் மிதவாத காங்கிரஸ்காரர்களே எண்ணிக்கையில் மிகுந்து விளங்கினர். வங்க மாநிலத்திலே தீவிரவாதிகளுக்கே மிகுந்த செல்வாக்கு. பம்பாய் மாநிலத்தில் இரு சாராரும் சம அளவில் கட்சி பிரிந்து சண்டையிட்டனர். சென்னை மாகாணத்திலே மிதவாதிகளுக்கு வக்கீல் வி. கிருஷ்ணசாமி ஐயர் தலைவராக விளங்கினார்.

தீவிரவாதிகளுக்குத் தேசியக்கவி சி.சுப்பிரமணிய பாரதியார் தலைவரானார். ''இந்து'', ''சுதேசமித்திரன்'' பத்திரிகைகள் இருவேறு கட்சிகளில் எந்த ஒரு கட்சியையும் சாராமல் நின்றன. என்றாலும், புதிய கட்சியாருக்கே ஆதரவு தந்தன. ''மெயில்'', ''இந்தியன் பேட்ரியட்''. ''சண்டே டைம்ஸ்'' ஆகிய அரசாங்கச் சார்புடைய ஆங்கில நாளேடுகள் மிதவாதிகளை ஆதரித்து நின்றன.

சுப்பிரமணிய பாரதியாரின் ''இந்தியா'' என்ற தமிழ் வார ஏடும், ''பால பாரதா'' என்னும் ஆங்கில வார ஏடும் தீவிரவாதி களான புதிய கட்சியாரின் போர் முரசங்களாக ஒலித்தன. இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை தோன்றி இருபதாண்டு காலத்திற்குப் பின்னர்தான் அதிலே உட்பூசல் தோன்றியது.

வக்கீல்கள் ஆதிக்கம்

சென்னை மாகாணத்தைப் பொறுத்த வரையிலே மிதவாதிகளைக் கொண்ட பழைய கட்சியாரின் வக்கீல்களே அதிகம். ஆண்டுதோறும் கூடும் மகாசபைகளிலே வைஸ்ராயின் நிர்வாக சபைக்கும் சென்னை மாநில கவர்னரின் நிர்வாக சபைக்கும் இந்தியர்களையும் நியமிக்க வேண்டுமென்றும், உயர்நீதி மன்ற நியமனங்களிலே இந்தியர்களைக் கூடுதலாக நியமிக்க வேண்டுமென்றும் கோரித் தீர்மானம் கொண்டு வந்தது இந்த மிதவாதக் கூட்டந்தான். இத்தகைய பதவிகளைத் தாங்கள் அடைய முடியுமென்ற நம்பிக்கையின் பேரிலேயே சென்னை மாகாண வக்கீல்கள் காங்கிரஸ் மகாசபையில் ஆங்கிலத்தில் புலமை பெற்றவர்களே சேர முடியுமென்ற நிலை இருந்ததும் இம் மிதவாதக் கூட்டம் அம் மகாசபையிலே செல்வாக்குப் பெறுவதற்குச் சாதகமாக இருந்தது. ஆங்கிலம் படித்தவர்களிலே பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஆசிரியர்களாக இருப்பவர்களும், அரசாங்க உயர் அலுவலர்களும் காங்கிரஸ் நடவடிக்கைகளில் ஈடுபட இயலாதவர்களாக இருந்தனர். ஈடுபட்டாலும் பிரிட்டிஷ் பொருள்களை பகிஷ்கரிக்க வேண்டுமென்ற அளவுக்குச் செயல்பட முடியாதவர்களாகவும் இருந்தனர். இதனால், ஆங்கிலம் படித்தவர்களிலே சுதந்திரமாகச் செயல்படுவதற்கு அதிக அளவில் சந்தர்ப்பம் பெற்றிருந்தது வக்கீல் கூட்டந்தான்.

பிற்காலத்தில் சென்னை மாகாணத்திலே ஜஸ்டிஸ் கட்சி தோன்றுவதற்குக் காரணமாக இருந்ததும் இந்த வக்கீல்களின்

ஆதிக்கம்தான். இவர்களிலே மிகப் பெரும்பாலோர் பிராமணர் களாக இருந்ததனாலும், அரசாங்க நீதித்துறை, நிர்வாகத்துறை, பார்லிமெண்டரித்துறை ஆகியவற்றிலெல்லாம் இந்தப் பிராமண வக்கீல்களே நியமனம் பெற்றதாலும் இவர்களுடைய ஆதிக்கத்துக்கு வகுப்புவாத வண்ணம் பூச ஜஸ்டிஸ் கட்சியால் முடிந்தது. அந்நாளில் சட்டம் படித்த வக்கீல்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேருக்கு அதிகமானோர் பிராமணர்களாகவே இருந்தனர். ஆகவே, அவர்கள் ''இந்தியர்'' என்ற பெயரால் அரசாங்கத் துறைகள் அனைத்திலும் நியமனம் பெறுவது இயற்கை யாக இருந்தது. சென்னை மாகாணத்தைப் பொறுத்தவரையில் தீவிரக்கட்சியில் வக்கீல்கள் ஒன்றிருவராகவே இருந்தனர்.

கல்கத்தா காங்கிரஸ்

1906 டிசம்பர் மாதக் கடைசியில் இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையின் இருபத்து இரண்டாவது கூட்டம் வங்காள மாநிலத்தின் தலைநகரான கல்கத்தாவிலே கூடியது. இந்தக் காங்கிரசுக்குத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதிலே தீவிரவாதி களுக்கும் மிதவாதிகளுக்கு மிடையே பலப்பரீட்சை நடந்தது. தீவிரவாதிகள் தங்கள் கட்சியின் தலைவரான லோகமான்ய பாலகங்காதர திலகரைத் தலைவராக்க விரும்பினர். மிதவாதிகள் பிரிட்டிஷ் பத்திரிகையாளரான ஸ்டெட் என்னும் ஆங்கிலேயரைத் தலைவராக்க முயன்றனர். காங்கிரஸ் மகாசபை தோன்றிய நாள்தொட்டே அதன் வருடாந்தரத் தலைவர் பதவிக்கு ஆங்கிலேயரும் தேர்ந்தடுக்கப்படுவது ஆட்சேபிக்கப்படாமல் அமுலிலிருந்து வந்தது. இப்போது பிரிட்டிஷாரிடம் துவேஷம் கொண்ட தீவிரவாதக் கட்சி காங்கிரசுக்குள்ளேயே தோன்றி விட்டமையால் வெள்ளையரைத் தலைவராகத் தேர்ந்தெடுப்ப தற்குக் கடுமையான எதிர்ப்பு ஏற்பட்டது. தென்னாட்டிலே கவிஞர் சி. சுப்பிரமணிய பாரதியார் இந்த எதிர்ப்புக்குத் தலைமை தாங்கினார். தமது ''இந்தியா'' பத்திரிகையில் ஸ்டெட் துரை மகனுக்கு எதிராகத் தலையங்கங்கள் எழுதினார். 6-10-1906-இல் எழுதிய தலையங்கத்தின் ஒரு பகுதி வருமாறு:

> ''காங்கிரஸ் தலைவராக யாரை நியமிக்கப்போகிறார்கள். காங்கிரஸ் சமயத்தில் இங்கு வரப்போகிற மிஸ்டர் ஸ்டெட் என்ற பிரிட்டிஷ் பத்திராதிபரையே வைத்து விடலாம் என்று சிலர் யோசிக்கிறார்களாம். இது என்ன மூடத்தனம்? ''ரெவ்யூ ஆப் ரெவ்யூஸ்'' என்ற புகழ்பெற்ற பத்திரிகையின் தலைவரும் மிகுந்த நீதி அபிமானச் செல்வாக் குடையவருமான ஸ்டெட் மிகவும் சிறந்த

மனிதர்தாம் என்பதை நாம் ஒப்புக்கொள்கிறோம். ஆனால், அவருக்கு இந்தியக் காங்கிரசிலே என்ன அலுவல்? இந்திய ஜனங்கள் தமது காரியங்களைப் பற்றி ஆலோசனை புரிந்து தீர்மானங்கள் செய்யும் மகாசபையில் ஒரு அன்னிய தேசத்தான் தலைமை வகிக்கும் பொருட்டு ஏன் வர வேண்டும்? ஏன் திலகரை வைக்கக் கூடாது? தாதாபாய் நவுரோஜியை நியமிக்க வேண்டுமென்று கல்கத்தா தலைவர்கள் அபிப்பிராயப்பட்டார்கள். அவர்கள் இஷ்டப்படி செய்து கொள்ளட்டும் என்று நாம் சும்மா யிருந்தோம். நமக்குத் திலகரும் தாதாபாய் நௌரோஜியும் ஒன்று போலவேதான். தேசபக்தி விஷயத்தில் அவர் திலகருக்கு குறைந்தவரில்லை என்றும் நாம் நன்றாக அறிவோம். இப்போது நவுரோஜியையும் விட்டு எங்கேயோ கிடந்த ஒரு ஆங்கிலேயனைக் கொண்டுவந்து வைக்க விரும்புகின்றவர்கள் இந்தியாவின் பரம சத்துருக்கள் என்றே நாம் நம்புகிறோம்.''

தாதாபாய் தேர்வு

கல்கத்தாக் காங்கிரஸ் தலைமைப் பதவிக்கான தேர்தல் பற்றி இந்தியப் பத்திரிகைகளிலே சாதக பாதகமான கருத்துக்கள் வெளிவந்தன. லண்டன் பத்திரிகைகளிலும் இது எதிரொலித்தது. அதனாலோ என்னவோ, ஸ்டெட் என்பவர், கல்கத்தா காங்கிரஸ் கூடும் சந்தர்ப்பத்தில் தாம் இந்தியாவிலிருப்பதற்கு இயலாதென்று கூறி, இதுபற்றிய சர்ச்சையிலிருந்து தமது பெயரை விலக்கிக் கொண்டுவிட்டார். பின்னர் மிதவாதிகளின் முயற்சியாலேயே தாதாபாய் நவுரோஜி கல்கத்தா காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். தீவிரவாதிகளும் அமைதியான முறையில் அந்தத் தேர்வை ஏற்றுக் கொண்டுவிட்டனர். தாதாபாய் இந்திய தேசியத் தலைவர்களிலே மிகவும் மூத்தவர்; பிரிட்டனிலேயே தங்கி வாழ்ந்தவர்; பம்பாய் வாசி; பார்ஸி மதத்தவர்; வணிக சமூகத்தைச் சார்ந்தவர்; கல்வி அறிவிலே நிறைகுடம்; பண்பாட்டின் மொத்த வடிவம்; பல மொழிகளில் புலமை பெற்றவர். இந்தக் காரணங்களால் பரஸ்பரம் பகை உணர்வு கொண்டிருந்த இரு கட்சியினரும் தாதாபாயின் தலைமையை ஏற்றுக்கொண்டு விட்டனர். ஒரு பிரச்னை தீர்ந்தது. ஆயினும், தீவிரவாதிகளும் மிதவாதிகளும் கொள்கை ரீதியில் போராடும் குருக்ஷேத்திர பூமியாக கல்கத்தா காங்கிரஸ் இருக்குமென்று எதிர்பார்க்கப்பட்டது.

''சுயராஜ்யம்''

சென்னை மாகாணத்திலிருந்து வக்கீல் திரு.வி. கிருஷ்ணசாமி ஐயர் தலைமையில் மிதவாதக் கோஷ்டியினரும், கவிஞர் சி. சுப்பிரமணிய பாரதியார் தலைமையில் தீவிரவாதக் கோஷ்டியினருமாக மொத்தம் 221 பேர் கல்கத்தா காங்கிரசில் கலந்து கொண்டனர். வ.உ. சிதம்பரனார் இந்தக் காங்கிரசில் கலந்து கொள்ளவில்லை. தூத்துக்குடியில் சுதேசியக் கிளர்ச்சியில் முழு மூச்சுடன் ஈடுபட்டிருந்ததால் அவர் கல்கத்தாக் காங்கிரசிக்குச் செல்லவில்லை.

கல்கத்தாக் காங்கிரசில் முதுபெருங் கிழவர் - மூதறிஞர் தாதாபாய், தமது தலைமையுரையிலே, ''சுயராஜ்யம் பெறுவதே காங்கிரசின் குறிக்கோள்'' என்று கூறினார். காங்கிரஸ் தோன்றி இருபத்திரண்டு ஆண்டுகளில் இப்போதுதான் முதன் முதலாக அதன் அரசியல் கோரிக்கை ''சுயராஜ்யம்'' தான் என்பது தெளிவாக்கப்பட்டது. அதுவும் தீர்மான வடிவத்திலல்ல; தலைமையுரையிலே! ''சுயராஜ்யம்'' என்னும் சொல்லே தாதாபாயின் படைப்பு என்று சொல்லப் பெற்றது.

இந்த லட்சியச் சொல்லை தாதாபாய் முதன் முதலாகச் சொன்னபோது காங்கிரஸ் மகாசபையில் கூடியிருந்த அவ்வளவு பேரும் கைதட்டி ஆரவாரம் செய்தனராம். ஒருகால், மிதவாதிகள் இதற்கு விலக்காக இருந்தனரோ என்னவோ! தாதாபாய் செய்த இந்தப் புரட்சி தீவிரவாதிகளின் கட்சிக்கு வலுத்தேடுவதாகி விட்டது.

பகிஷ்காரம்

கல்கத்தா காங்கிரசிலே இன்னொரு புரட்சியும் நடந்தது. சுதேசிப் பொருள்களை ஆதரிப்பதோடு, விதேசிப் பொருள் களைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்ற ''காங்கிரசின் நாக்கு'' என்று பெயர் பெற்ற விபின்சந்திர பாலர் முன்மொழிந்த தீர்மானம் பிரதிநிதிகளிலே பெருவாரியானவர்களின் ஆதரவைப் பெற்று நிறைவேறியது.

தீர்மானத்தை முன்மொழிந்து திரு. பாலர் பேசியபொழுது சுதேசிப் பொருள்களைப் பகிஷ்கரிக்க வேண்டியதன் அவசியத்தை தக்க சான்றுகள் காட்டி வலியுறுத்தினார். அப்போது சென்னை மாகாண மிதவாதிகள் தலைவர் திரு.வி. கிருஷ்ணசாமி ஐயர் குறுக்கிட்டு, ''அந்நியப் பொருள்களைப் பகிஷ்கரிப்பதை உங்கள் வங்க மாகாணத்தோடு வைத்துக் கொள்ளுங்கள். சென்னை

மாகாணத்தவரிலே ஒருவர்கூட அதைச் செய்யமாட்டார்'' என்று ஆவேசத்துடன் கூறினார். கல்கத்தாக் காங்கிரசிலே அன்னியப் பொருள் பகிஷ்காரத் தீர்மானம் முன்மொழியப்படு முன்பு சென்னை மாகாணப் பிரதிநிதிகளைத் தனியாகக் கூட்டி வைத்து, அன்னியப் பொருள்களைப் பகிஷ்கரிக்கும் தீர்மானத்தை எதிர்க்க வேண்டுமென்று ஐயர் கூறினாராம், கூட்டத்தில் கலந்து கொண்டவர்களில் தேசியக்கவி சி. சுப்பிரமணிய பாரதியார், ஐயரின் கருத்தை ஆட்சேபித்து வெளி நடப்புச் செய்தார்.

பாரதியாரின் கண்டனம்

பொதுவாக, கல்கத்தாக் காங்கிரசிலே சென்னை மாகாண மிதவாதிகள் கடைப்பிடித்த போக்கானது தென்னிந்தியாவுக்கே அவமானத்தைத் தேடியதாகும் என்று அங்கிருந்து சென்னை திரும்பியதும் பாரதியார் தமது ''இந்தியா'' பத்திரிகையில் எழுதினார். அது வருமாறு:

''கல்கத்தா காங்கிரசில் சென்னை பொது ஜனங்களின் பொருட்டுப் பேசினவர்கள் அனைவரும் சென்னை வாசிகளுக்குத் தெரியுமா? சென்னை வாசிகள், அதாவது பொதுஜனங்கள் மேற்கூறிய கனவான்களை தமது உண்மையான பிரதிநிதி என்று தேர்ந்தெடுத்தார்களா? சுதேசிய விஷயமாய் பேசப்பட்ட பொழுது, அன்னிய நாட்டு சரக்குகளை விலக்க வேண்டுமென்று பாபு விபின்சந்திர பாலர் வாதித்த பொழுது, அவ்வாறு செய்ய சென்னை வாசிகளால் முடியாது என்று ஒரு பிரதிநிதி வாதித்தாராம். இவர் இவ்வாறு முடியாதென்று கூறியது தன் மட்டிற்கா அல்லது ராஜதானி பொது ஜனங்கள் அனைவருக்குமா? அப்படியானால், சென்னை பொது ஜனங்கள் அன்னிய சரக்கை முற்றும் விலக்க முடியாதென்றும், அவ்விதமாக காங்கிரஸ் சபையிலே பேசும்படியும் மேற்கூறிய கனவானிடம் சொல்லி அனுப்பினார்களா? அல்லது அக்கன வான் ஜனங்களிடம் கேட்டு அனுமதி பெற்றிருந்தாரா?

''தூத்துக்குடி ஜனங்கள் அன்னிய சரக்கை முற்ற விலக்கி வருகிறார்கள். வங்காளத்துக்கு ஏற்பட்ட துக்கம் தமக்கு வந்ததாகத் தூத்துக்குடியார் எண்ணுகிறார்கள். அப்படியா னால் தூத்துக்குடி போன்ற இடங்களை விலக்கியல்லவா பேசியிருக்க வேண்டியது நியாயம்? மேற்படி விஷயம் காங்கிரசில் தருக்கிக்கப்பட்டபொழுது தூத்துக்குடிப் பிரதிநிதி ஒருவர் இருந்திருந்தால் அன்னிய சரக்கை முற்றிலும் வெறுத்து விலக்க ஆலோசனை செய்திருப்பார்.

இப்படியிருக்கும் பொழுது சென்னை வாசிகள் ஒருவராலும் முடியாதென்று மொத்தமாய்க் கூறுவதற்கு நியாயமென்ன? வங்காளிகள் மட்டும் அன்னிய சரக்கை விலக்குவதானால் தங்களுக்கு சம்மதமென்றும், ஆனால் தங்களால் மட்டும் விலக்க முடியாதென்றும் சென்னைப் பிரதிநிதிள் சொன்னார் களாம். இதன் பொருள் என்ன? வங்காளிகளால் செய்யக் கூடிய காரியம் சென்னையர்களால் ஏன் செய்ய முடியாது? இவர்களும் இந்தியர்களே என்பதில் சந்தேகமுண்டா? அல்லது இவர்களுக்குத் தேசாபிமானம் இல்லையா?''

பாலர் வருகை

கல்கத்தா சென்றிருந்த வக்கீல் கூட்டத்தார் சென்னை திரும்பியதும் சென்னை மாகாணம் முழுவதிலுமாக தீவிரவாதி களுக்கும் மிதவாதிகளுக்கு மிடையே வாதப்போர் நடந்தது. காக்கினாடாவிலும் தஞ்சையிலும் நடைபெற்ற மாவட்டக் காங்கிரஸ் மாநாடுகளிலே வக்கீல்களான மிதவாதிகள் கல்கத்தா காங்கிரஸ் நிறைவேற்றிய அன்னியப் பொருள் பகிஷ்காரத் தீர்மானத்தை ஆட்சேபித்துப் பேசினர். இவர்களுடைய பிரசாரத் திற்கு லண்டனிலுள்ள ஏடுகள் கூட விளம்பரம் தந்தன. சென்னை மாகாணமே அன்னியப்பொருள் பகிஷ்காரத்தை எதிர்க்கிறது என்று எழுதின லண்டன் ஏடுகள். சென்னை மிதவாதிகள் கல்கத்தாக் காங்கிரசிலே ''சுயராஜ்யம்'' என்று தாதாபாய் சொன்னதற்குக் கூட எதிர்ப் பிரசாரம் செய்தனர்.

இச் சூழ்நிலையில் தீவிரவாதக் கூட்டத்தாருக்கு ஆதரவாக சென்னை மாகாண மக்களிடையே பிரசாரம் செய்யும் பொருட்டு வங்காளத் தலைவரான திரு. விபின்சந்திர பாலர் அழைக்கப் பட்டார்.

1907 மே திங்களில் திரு. பாலர் சென்னை மாகாணத்துக்கு வருகை தந்து, முதலில் ஆந்திரத்திலே சுற்றுலாச் செய்தார். ஆந்திரத்திற்கே நேரில் சென்று, திரு. பாலரை தமிழகத்தின் தலை நகரான சென்னையம்பதிக்கு அழைத்து வந்தார் சி. சுப்பிரமணிய பாரதியார்.

கல்கத்தா காங்கிரசிலே தீவிரவாதிகளுக்கும் மிதவாதி களுக்குமிடையே நடந்த கொள்கைப் போராட்டம் காரணமாக காங்கிரஸ் மகாசபையே பிளவுப்பட்டுப் போய்விடும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இருசாராராலுமே மதிக்கப்பட்ட தாதாபாய் தலைமை வகித்ததால் அவரது திறமை காரணமாகப்

பிளவு தவிர்க்கப்பட்டது. இல்லை, தள்ளிப் போடப்பட்டது, அடுத்த காங்கிரஸ் வரையில்!

வங்க மாநிலத்தின் தீவிரவாதியான விபின்சந்திர பாலர் மிகச் சிறந்த நாவலராக விளங்கினார். ஆங்கிலத்தில் பேசுவதிலே அவருக்கிணை அவர்தான் என்று சொல்லத்தக்க சிறப்புடன் விளங்கினார். ''வங்காளி'', ''வந்தே மாதரம்'' ஆகிய ஆங்கிலப் பத்திரிகைகளில் அடிக்கடி கட்டுரை எழுதி அனைத்துலகின் கவனத்துக்கும் உரியவரானார். இயற்கையிலேயே ஆங்கிலத்திடம் மயக்கம் கொண்ட சென்னை வாசிகளுக்குப் பாலரின் வருகை பெருவிருந்தாக அமைந்தது. 1907 ஏப்ரலில் அப்போதைய சென்னை மாகாணத்தில் பாலர் சுற்றுலாவை மேற்கொண்டார்.

ஆந்திரத்தில் பாலர்

முதலில் ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள விஜயநகரம், காக்கினாடா, ராஜமகேந்திரம் ஆகிய பிரதான நகரங்களில் பொதுக் கூட்டங்களிலே பேசிவிட்டு, தமிழ்நாட்டில் சுற்றுலாவை மேற்கொள்ள சென்னை நகருக்கு பாலர் வருகை தந்தார். சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையிலும் விக்டோரியா நகர மண்டபத்திலும் நடந்த பொதுக்கூட்டங்களில் பேசினார். மாணவர்களும் வக்கீல்களும் அவரிடம் பெரிதும் கவர்ச்சி அடைந்தனர். அவருடைய பேச்சுகள் சென்னை நகரில் தீவிரவாதக் கட்சிக்கு ஆதரவைப் பெருக்கியது. பாலர் கூட்டங்களுக்குச் சுப்பிரமணிய பாரதியாரும் அவருடைய தோழர்களுமான தீவிரவாதிகளும் தான் ஏற்பாடு செய்தனர். பாலர் காங்கிரஸ் மகாசபையின் தலைவர்களில் ஒருவராக இருந்தும், கிருஷ்ணசாமி ஐயர் போன்ற சென்னை வாசிகளான மிதவாதிகள் அவரை வரவேற்கவோ, அவருடைய கூட்டங்களில் கலந்து கொள்ளவோ வரவே இல்லை. அவருடைய கூட்டங்களைப் பகிஷ்கரித்தனர் என்றும் சொல்லவேண்டும். சென்னையில் விபின்சந்திர பாலர் இருந்த காலத்தில் பாஞ்சாலத்தில் லாலா லஜபதி ராய் கைது செய்யப்பட்டார். அந்தச் செய்தி கிடைத்ததும், பாலர், தமிழ்நாட்டுச் சுற்றுலாவைச் சென்னை நகர அளவில் முடித்துக்கொண்டு, நேரே கல்கத்தா சென்றார்.

'டைம்ஸ்' பிதற்றல்!

சென்னை மாகாணத்தில் - குறிப்பாக, சென்னை மாநகரில் பாலர் நிகழ்த்திய சொற்பொழிவுகள் அரசாங்க வட்டாரத்தில்

ஆத்திரத்தை வளர்த்தன. ''மெயில்'', ''சென்னை டைம்ஸ்'' முதலிய அரசாங்கச் சார்புடைய ஆங்கில ஏடுகள் பாலரைத் தூற்றின. ''சென்னை டைம்ஸ்'' பத்திரிகை,

> ''இந்தப் பெங்காளிப் பாதகன் வந்து சென்னை வாசிகளை எல்லாம் ராஜத்துரோகிகளாக்கி விட்டான். இவனைக் கணநேரம் கவர்ன்மெண்டார் சும்மாவிட்டு வைக்கக்கூடாது. இவன் ராஜத் துரோகி. இவனை உடனே ஜெயிலுக்குள்ளேனும், அந்தமான் தீவுக்கேனும் அனுப்பி விடவேண்டும்.''

என்று எழுதி விஷத்தைக் கக்கியதாக பாரதியாரின் ''இந்தியா'' *(11-4-1907)* இதழ் தகவல் தருகிறது.

அரசாங்கச் சார்புடைய நாளேடுகளின் தாக்குதலுக்குப் பதிலளித்துத் தமது ''இந்தியா'' பத்திரிகையில் பாரதியார் எழுதியது வருமாறு:

> ''ஆயிரம் நாய் குலைத்தாலும் (ஞாயிறு) சூரியன் தன் ஒளிமங்குமா? விபின்சந்திர பாலர் தமது திவ்விய உபந்நியாசங்களால் ஜனங்களின் நெஞ்சைக் கவர்ந்து கொண்டு விட்டார். பாலர் என்றால் ஸம்ரக்ஷகர் என்று அர்த்தம். இப்பெயர் இந்த மகானுக்கே தகும்.''

நாடு கடத்தல்

பஞ்சாபில் அஜீத் சிங் என்பவர் பிரிட்டிஷ் அரசைக் கவிழ்ப்பதற்கான ஆயுதப் புரட்சிக்கு அந்தரங்கத்தில் திட்டமிட்டுச் செயல் புரிந்தாராம். அதற்காகத் தலைமறைவாகத் திரிந்த அவரை வேட்டையாட முயன்றது வெள்ளையர் ஆட்சி. அவருடன் ரகசியத்தில் தொடர்பு கொண்டிருந்தார் என்பதற்காகத்தான் லஜபதிராய் கைது செய்யப்பட்டார். எவ்வித விசாரணையுமின்றி, பர்மா நாட்டில் மாண்டலே நகரிலுள்ள சிறைச்சாலையில் லஜபதிராயை அடைத்தது ஆட்சி. அப்போது பர்மா இந்தியாவின் ஒரு மாகாணமாக இருந்ததென்றாலும், அங்குச் சிறை வைக்கப்பட்ட லஜபதிராய் நாடு கடத்தப்பட்டவராகவே இந்தியப் பத்திரிகைகளால் வருணிக்கப்பட்டார். தேசியக் கவி பாரதியாரும் அப்படியே கருதி ''லஜபதிராய் துதி'' ''லஜபதிராய் பிரலாபம்'' என்னும் தலைப்புகள் தந்து அவர் நாடு கடத்தப்பட்டதைக் கண்டித்தும், அவரது தியாகத்தைப் பாராட்டியும் கவிதைகள் புனைந்தார்.

வெள்ளையனின் வெறி!

லஜபதி கைது செய்யப்பட்டதைக் கண்டித்து நாடெங்கும் கிளர்ச்சி எழுந்தது. அவரை விடுதலை செய்ய வேண்டுமென்று லண்டன் பாராளுமன்றத்திலும் இந்திய சட்டசபையிலும் கோரிக்கைகள் எழுந்தன. தேசத்தின் பல பாகங்களிலும் கடையடைப்பும், மாணவர்களின் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும் நடந்தன.

சென்னை நகரில் மிதவாத காங்கிரஸ்காரர்களால் விக்டோரியா நகர மண்டபத்திலே கண்டனக் கூட்டம் நடத்தப் பெற்றது. திரு.பி.ஆர் சுந்தரம் ஐயர், திரு.வி.சி. தேசிகாச்சாரியார், மற்றும் பலர் அரசினர் அடக்குமுறையைக் கண்டித்துப் பேசினர். அரசின் அடக்குமுறை மிதவாதிகளுடைய உள்ளத்திலும் கொதிப்பை ஏற்படுத்தியது. தமிழ்நாட்டு மிதவாதிகளின் தலைவரான திரு.வி. கிருஷ்ணசாமி ஐயர், லஜபதிராய் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து, அரசுக்கு தந்தி கொடுத்தார். அது வருமாறு:

> ''புதிய கட்சியாளர்கள் பேசும் பேச்சும் செய்கைகளும் சிறிதும் சரியில்லை என்பது என்னுடைய அபிப்பிராயமா யிருப்பினும், இப்பொழுது லாலா லஜபதிராயை கவர்ன்மெண்டார் தேசப் பிரஷ்டம் செய்திருப்பது மிகவும் அநீதியாயிருப்பதோடு, நிதானக் கட்சியாராகிய எங்களுக்குக்கூட கவர்ன்மெண்டாரிடம் அதிருப்தியை உண்டாக்கக் கூடியதாயிருக்கிறது.''

கூட்டத்தில் குழப்பம்!

விக்டோரியா மண்டபத்தில் நடைபெற்ற கண்டனக் கூட்டத்தில் அனைவரும் ஆங்கிலத்திலேயே பேசினர். அது பிடிக்காமல், தமிழில் பேசுமாறு மக்கள் குரல் கொடுத்துக் குழப்பம் செய்தனர். தமிழில் பேச மறுத்தவர்களை மேலே பேசவிடாமல் இடையிடையே பேச்சை முடித்து உட்காரும்படிச் செய்துவிட்டனர். இந்தக் கூட்டத்தில் குழப்பம் செய்தவர்களுக்குச் சபாஷ் கூறின தீவிரவாதிகளின் பத்திரிகைகள்.

லஜபதிராய் கைது செய்யப்பட்டதையடுத்து, அவர் கைதியா வதற்குக் காரணமான அஜீத் சிங்கும் கைது செய்யப்பட்டார். கைதியான அஜீத் சிங், தமக்கும் லஜபதிராய்க்கும் எந்த விதமான தொடர்பும் இருந்ததில்லை என வாக்குமூலம் கொடுத்தார். அதன் விளைவாக, மாண்டலே சிறையில் அடைப்பட்ட

ஆறு மாதங்களுக்குப்பின் லஜபதிராய் விடுதலை செய்யப் பட்டார்.

லஜபதி கைதியானது பற்றி லண்டன் பார்லிமெண்டில் விவாதம் நடந்தபோது லிபரல் கட்சி உறுப்பினரான சர்.எச்.வின்செண்ட் என்பவர், ''லஜபதிராயை சுட்டுக் கொன்று விடலாகாதா?'' என்று கேட்டார். சபாநாயகரும், இந்தியா மந்திரி மார்லியும் அந்த உறுப்பினரைக் கடிந்து கொண்டனர். தேசபக்தர்களைச் சுட்டுக் கொல்வதும், நாடு கடத்துவதும், அவர்களுக்கு ஆயுள் தண்டனை தருவதும் அந்நாளில் லிபரல் கட்சியார் கூட விரும்பி வரவேற்கத்தக்கவையாக இருந்தன என்பதற்கு வின்செண்டின் வினா சிறந்த சான்றாகும்.

பாரதியாரின் பாடல்

தேசத்தில் அரசின் அடக்குமுறை ஒரு பக்கத்தில் தீவிரமாகிக் கொண்டிருந்த நேரத்திலே, காங்கிரசுக்குள்ளே மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்குமிடையில் தோன்றிய கொள்கைப் போரும் கடுமையாகிக் கொண்டிருந்தது. பரஸ்பர ஏச்சுகள் மலிந்தன. பாரதியார் மிதவாதிகளைக் கேலி செய்தும் திலகர் உள்ளிட்ட தீவிரவாதிகளைப் புகழ்ந்தும் பாடல்கள் புனைந்தார். மிதவாதத்துக்கு விடை கொடுத்தனுப்பும் பாணியிலே, ''போகின்ற பாரதத்தைச் சபித்தல்'' என்னும் தலைப்பின் கீழ்,

> ''வலிமை யற்ற தோளினாய் போ போ போ
> மார்பிலே ஒடுங்கினாய் போ போ போ''

என்னும் வரிகளிலே, கிழட்டுத் தலைவர்களைக் கேலி செய்தார்.

> ''நன்று கூறில் அஞ்சுவாய் போ போ போ
> நாணிலாது கெஞ்சுவாய் போ போ போ''

என்று, உத்தியோகங்கள் கோரி வெள்ளையருக்கு விண்ணப்பம் போடும் தலைவர்களைச் சாடினார்.

ஆங்கிலத்திலே சிந்தித்து, ஆங்கிலத்திலேயே பேசி, ஆங்கிலேயர்களாகவே வாழ்ந்து கொண்டிருந்த மிதவாதிகளைச் சாடும் வகையில்,

> ''வேறு வேறு பாஷைகள் - கற்பாய் நீ
> வீட்டு வார்த்தை கற்கிலாய் போ போ போ''

என்று பாடினார்.

காங்கிரசில் தோன்றியுள்ள தீவிரவாதத்துக்கு வரவேற்புக் கூறும் வகையிலே,

''ஒளி படைத்த கண்ணினாய் வா வா வா
உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா வா
இளைய பார தத்தினாய் வா வா வா
எதிரிலா வலத்தினாய் வா வா வா''

என்று பாடினார்.

மிதவாதிகள் புலம்பல்

மிதவாதிகளின் தலைவரான பிரோசிஷா மேத்தா என்பவர் தீவிரவாதிகளின் தலைவரான திலகருக்குச் சொல்லும் பாவனையிலே கற்பனையாகக் கவிதை புனைந்தார் பாரதியார். கோபால கிருஷ்ண பாரதியாரின் நந்தனார் சரித்திரக் கீர்த்தனை நாடகத்திலே வரும். ''ஓய் நந்தனாரே! நம்ம சாதிக்கடுக்குமோ, நியாயந்தானோ நீர் சொல்லும்!'' என்ற பாடலைப் பின்பற்றி ''ஓய் திலகரே! நம்ம ஜாதிக்கடுக்குமோ? செய்வது சரியோ? சொல்லும்?'' என்று பல்லவி பாடி,

''முன்னறி யாப்புது வழக்கம் - நீர்
மூட்டிவிட்ட திந்தப் பழக்கம் - இப்போது
எந்நக ரிலுமிது முழக்கம் - மிக
இடும்பை செய்யு மிந்த ஒழுக்கம். (ஓய் திலகரே)
''வெள்ளை நிறத்தவர்க்கே ராஜ்யம் - அன்றி
வேறெவ ருக்குமது தியாஜ்யம் - சிறு
பிள்ளைக ளுக்கே உபதேசம் - நீர்
பேசிவைத்த தெல்லாம் மோசம்.'' (ஓய் திலகரே)

என்று கண்ணிகள் புனைந்து மிதவாதத்தைத் தாக்கினார்.

போலிச் சுதேசிகள்!

மிதவாதிள் விதேசப் பொருள்களைப் பகிஷ்கரிப்பதை எதிர்த்தாலும் சுதேசிப் பொருள்களை ஆதரிக்க வேண்டு மென்பதை ஏற்றுக் கொண்டனரல்லவா! அது வெறும் நடிப்பு என்பது பாரதியாரின் கருத்து. அதனால், மிதவாதிகளின் போலிச் சுதேசியத்தையும் கேலி செய்து பாடினார்.

''உப்பென்றும் சீனி யென்றும்
உள்நாட்டுச் சேலை யென்றும்
செப்பித் திரிவா ரடீ! - கிளியே
செய்வ தறியா ரடீ!
''சிந்தையிற் கள் விரும்பிச்
சிவசிவ வென்பது போல,
வந்தே மாதர மென்பார்! - கிளியே!
மனதில் அதனைக் கொள்ளார்''

என்றெல்லாம் பாடினார்.

மிதவாதியான மேத்தா கொள்கையால் தம் சகாக்களானவர் களைப் பார்த்துச் சொல்லுவதுபோல,

''நாமென்ன செய்வோம் துணைவரே - இந்தப்
பூமியிலில்லாத புதுமையைக் கண்டோம்'' (நாம்)

என்று பல்லவி பாடியும்,

''திலகன் ஒருவனாலே இப்படி யாச்சு
செம்மையும் தீமையும் இல்லாமலே போச்சு;
பலதிசையும் துஷ்டர் கூட்டங்க ளாச்சு
பையல்கள் நெஞ்சில் பயமென்பதே போச்சு. (நாம்)
''பட்டம்பெற் றோர்க்குமதிப் பென்பது மில்லை
பரதேசப் பேச்சில் மயங்குபவ ரில்லை;
சட்டம் மறந்தோர்க்குப் பூஜை குறைவில்லை
சர்க்கா ரிடம் சொல்லிப் பார்த்தும் பயனில்லை. (நாம்)
''சீமைத் துணியென்றால் உள்ளம் கொதிக்கிறார்
சீரில்லை யென்றாலோ எட்டி மிதிக்கிறார்;
தாமெத் தையே ''வந்தே'' யென்று துதிக்கிறார்
தரமற்ற வார்த்தைகள் பேசிக் குதிக்கிறார்'' (நாம்)

என்று சரணங்கள் பாடியும், சர்க்காருக்குத் துதிபாடுவோரைச் சாடினார்.

தீவிரவாதிகள், வெள்ளையரிடத்து எந்த அளவுக்கு வெறுப்புக் காட்டினரோ, அதே அளவுக்கு மிதவாதிகளிடத்தும் வெறுப்புக் காட்டினர். இப்படி, நாடு முழுவதிலும் மிதவாதிகளும் தீவிரவாதிகளும் பரஸ்பரம் வசை பாடிக் கொண்டிருந்த நேரத்திலே, 1907-ஆம் ஆண்டுக்கான காங்கிரஸ் மகாசபையை நடத்தியாக வேண்டிய நிலை வந்தது.

சூரத் காங்கிரஸ்

இந்த 23-வது மகாசபையை மகாராஷ்டிரத்திலுள்ள நாகபுரி நகரில் நடத்துவதாகத்தான் கல்கத்தா காங்கிரசில் முடிவு செய்யப்பட்டது. ஆனால், காங்கிரசைத் தங்கள் கைப்பிடிக்குள் வைத்திருந்த மிதவாதிகள், கல்கத்தா காங்கிரஸ் முடிவுக்கு மாறாக, குஜராத்தின் தொழில் நகரான சூரத்தில் மகாசபையை நடத்துவதென முடிவெடுத்தனர். திலகர் மகாராஷ்டிரராதலால், அவரது மாகாணத்தில் மகாசபையை நடத்துவது அவர் கையைப் பலப்படுத்திவிடும் என்று மிதவாதிகள் அஞ்சினர். அதனால், தங்களுக்குச் செல்வாக்குள்ள குஜராத் மாநிலத்திலே, சூரத் நகரில் நடத்தத் திட்டமிட்டனர். சூரத் காங்கிரசுக்குத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதிலேயும் தகராறு ஏற்பட்டது. தீவிரவாதிகள் திலகரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று முடிவுகட்டி, அதற்காக நாடு முழுவதிலும் ஆதரவு திரட்டினர். மிதவாதிகளோ தங்கள் கோஷ்டியின் தலைவரான ராஷ்பிகாரி கோஷைத் தேர்ந்தெடுக்கத் திட்டமிட்டு, வரவேற்புக் குழுவிலும் அதற்கு ஆதரவாகத் தீர்மானம் செய்தனர்.

சூரத்தில் தமிழர் படை!

தலைவரைத் தேர்ந்தெடுப்பதிலேற்பட்ட இந்த கோஷ்டிப் பூசல் தமிழ் நாட்டிலும் எதிரொலித்தது. சூரத் காங்கிரசுக்கு தீவிரவாதிகளை அதிக அளவில் திரட்டி வருமாறு வங்க மாநிலத் தலைவர் அரவிந்தகோஷ் வ.உ.சி.க்குத் தந்தி கொடுத்தார். சிதம்பரனார் சென்னைக்கு வந்து பாரதியாருடனும் மண்டையம் சீனிவாசாச்சாரியாருடனும் கலந்து பேசினார். நூறு பேருக்குக் குறையாத அளவில் பிரதிநிதிகளைத் திரட்டிக் கொண்டு போகத் தீர்மானமாயிற்று. அவர்களில் சரிபாதிப் பேருக்கான ரயில் செலவைத் தாம் ஏற்பதாக வ.உ.சி. கூறினார். எஞ்சிய சரிபாதிப் பேருக்கு மண்டையம் சீனிவாசாச்சாரியார் பொறுப்பேற்றார்.

தேசபக்தர்கள் கூட்டம் அனைத்திந்தியாவிலிருந்தும் சென்று சூரத் நகரை முற்றுகையிட்டது. ஆம்; தீவிரவாதிகளாயினும் சரி; மிதவாதிகளாயினும் சரி; அவர்கள் அனைவரும் தேசபக்தர்கள் தாமே!

காங்கிரஸ் மகாசபையின் முதல் நாள் கூட்டம் தொடங்கியதும், வரவேற்புத் தலைவர் உரையாற்றிய பின், மகாசபைத் தலைவர் ராஷ்பிகாரிகோஷ் தமது தலைமையுரையை

நிகழ்த்த முயன்றார். அந்த உரையிலிருந்த தீவிரவாதிகள் பற்றிய தரக்குறைவான வார்த்தைகளை வாபஸ் பெற வேண்டுமென்று திலகர் குழுவினர் கோரினர். இது பற்றிப் பேச்சுவார்த்தை நடத்த மகாசபை ஒத்தி வைக்கப்பட்டது. ஆனால் பேச்சுவார்த்தையில் சமரசம் ஏற்படவில்லை.

1907 டிசம்பர் 28 ஆம் நாளன்று காங்கிரஸ் மகாசபையின் இரண்டாம் நாள் கூட்டம் தொடங்கியது. மகாசபை தொடங்குவதற்கு முன்பே இரு கோஷ்டியாரும் தனித்தனியே கூடிப் பேசித் தத்தம் அணியினர் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறை பற்றித் திட்டமிட்டுக் கொண்டனர். காங்கிரஸ் மகாசபை கூடியதும் மிதவாதிகளின் செல்வாக்கில் இருந்த வரவேற்புக் குழு முன்னரே செய்திருந்த முடிவுப்படி திரு. ராஷ்பிகாரிகோஷ் தமது தலைமை உரையை நிகழ்த்தத் தொடங்கினார்.

அந்நேரத்தில் லோகமான்ய திலகர் எழுந்து நின்று, திரு. கோஷ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதைத் தாமும் தம்முடைய குழுவினரும் எதிர்ப்பதாகக் கூறினார். சிம்மத் தோற்றமுடைய திலகர் பெருமான் எழுந்து நின்று திரு. கோஷின் தலைமையை ஆட்சேபித்துக் குரல் கொடுத்ததுமே மகாசபையின் எல்லாப் பக்கங்களிலிருந்தும் திலகரின் ஆதரவாளர்கள் அவரது குரலை எதிரொலித்தனர். மிதவாதிகளும் எதிர்க் குரல் எழுப்பினர் - அவ்வளவுதான்! நாற்காலிகள் பறந்தன; மகாராஷ்டிர ஜோடுகள் மிதவாதிகளின் தலைகளைத் தாக்கின. இந்நிலையில் மாநாட்டுத் தலைவர், 23 ஆவது மகாசபை ரத்துச் செய்யப்பட்டு விட்டதாக அறிவித்து, பந்தலிலிருந்து வெளியேறிச் சென்றுவிட்டார்.

இந்த அமளியிலே தமிழ் நாட்டிலிருந்து சென்றிருந்த தீவிர வாதிகள் திலகரை ஆதரித்துச் செயல்பட்டனர். மிதவாதிகளின் தாக்குதலில் இருந்து தங்கள் தலைவரைக் காப்பாற்ற விரும்பி அவரைச் சுற்றி முற்றுகையிட்டுக் காவல் புரிந்தனர். மகாராஷ்டிர தீவிரவாதிகளின் துணையும் தென்னாட்டுத் தீவிரவாதிகளுக்குக் கிடைத்தது.

வ.உ.சி. எங்கே?

இந்த அமளியின் போது, தமிழ் நாட்டுத் தீவிரவாதி களுடைய நிலையைக் கவியரசர் பாரதியர் வருணிக்கிறார், படிப்போம்:

''திலகரைச் சுற்றி நின்று அவருக்கு ஹானி வராமல் பாதுகாத்த வீரர்களின் கூட்டத்திலே சேர்ந்திருந்த சென்னைப் பிரதிநிதிகளிலே இரண்டு பேருக்குப் பலமாக அடிப்பட்டது. இன்னும் எத்தனையோ பிரதிநிதிகள் பலமாக அடிபட்டும், காயம்பட்டும் விழுந்தனர். ஆனால், தமக்கு எத்தனை அடிப்பட்ட போதும், திலகரைக் காக்க வேண்டுமென்று அசையாது நின்ற இந்த சென்னைப் பிரதிநிதிகளின் தீரத்தன்மையை எண்ணும்போது உடல் புல்லரித்து மிகுந்த மகிழ்ச்சி உண்டாகிறது.

''எங்கள் கூடாரத்திலே இருந்த குழப்பமும் பரபரப்பும் வருணித்து முடியத் தக்கவையன்று. ''தூத்துக்குடி சிதம்பரம் பிள்ளை எங்கே?'' என்று ஒரு நண்பர் என்னிடம் மகா ஆத்திரத்தோடு வந்து கேட்டார், ''ஆஹா! அவரைத் தவறவிட்டல்லவா வந்துவிட்டோம்!'' என்று நான் நினைத்து வருத்தமடைந்தேன். கலவரம் அதிகப்படவே, நாங்கள் ஒருவரில் ஒருவர் பிரிந்துபோய், இன்னார் இன்ன இடத்தில் இருக்கிறார்கள் என்று தெரிந்து கொள்ள முடியாமல் போய்விட்டது. ஒரு வேளை போலீசார் பின்னிட்டு ஸ்ரீசிதம்பரம்பிள்ளை, ஸ்ரீதுரைசாமி ஐயர், ஸ்ரீசுரேந்திர நாத் யதிராஜ், திருவல்லிக்கேணி கிருஷ்ணமாச்சாரி முதலியவர்களைப் பிடித்துக் கொண்டு போயிருக்கக் கூடும் என்ற சந்தேகம் எனக்கு உண்டாயிற்று. மனத்திலே ஆத்திரம் பொறுக்கவில்லை. அவர்களைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று இடத்திற்கு இடம் சுற்றிப் பார்த்தேன். எங்கும் அகப்படவில்லை. நாகபூர் பிரதி நிதிகளின் கூடாரத்திற்குள்ளே ஸ்ரீசிதம்பரம் முதலியவர்கள் இருக்கவேண்டுமென்று போய்ப் பார்த்தேன். அங்கும் இல்லை. பின்பு அங்கிருந்து வெளியேறி, எங்கள் வசதிக்கு வந்தபோது எதிராஜ், கிருஷ்ணமாச்சாரி இருவரையும் கண்டேன். சிதம்பரம் பிள்ளை, துரைசாமி ஐயர் இரண்டு பேரும் காங்கிரஸ் பந்தலுக்கு வெளியே வந்துவிட்டதாக வும், அவர்களுக்கு எந்த விதமான சங்கடமும் நேரவில்லை என்றும், அவர்களை தாம் நேரிலே கண்டதாகவும் ஒருவர் சொன்னார். எங்கள் மனம் ஒருவாறு அமைதி அடைந்தது.''

போலீஸ் புகுந்தது!

சூரத் காங்கிரசிற்குச் சென்றிருந்த பிரதிநிதிகளிலே சென்னை நகரில் பிரபல வழக்கறிஞராக இருந்த திரு. துரைசாமி ஐயரும் திரு.வி. சக்கரைச் செட்டியாரும் கலந்திருந்தனர்.

திரு. துரைசாமி ஐயர் பிற்காலத்தில் புதுவை அரவிந்தர் ஆஸ்ரமத்தில் சேர்ந்து கொண்டார். திரு.வி. சக்கரைச் செட்டியார், பிற்காலத்தில் சென்னை மாநகராட்சி மேயராக வந்ததுடன், ஆயுள் முடியும் வரையும் தொழிற் சங்க இயக்கத் தலைவராக இருந்தார். சூரத் காங்கிரசில் கலவரம் ஏற்பட்டதும், போலீசார் புகுந்து பிரதிநிதிகளையெல்லாம் வெளியேற்றிவிட்டு, மகாசபையின் பந்தலை ஆக்கிரமித்துக் கொண்டனர்.

காங்கிரஸ் மகாசபையின் முதல்நாள் கூட்டம் தொடக்கத்திலேயே தடைப்பட்ட பின்னர், இருதரப்பினரிடையேயும் சமரசம் காண முயற்சி நடந்தது. அப்போதுதான் பர்மா சிறையிலிருந்து விடுதலையாகி வந்த லாலாலஜபதிராய் இருதரப்பினராலும் மதிக்கத்தக்கவராக இருந்தார். அவரைத் தலைமை வகிக்க வைத்து சூரத் காங்கிரசை நடத்தி முடிக்கலாமென்று ஆலோசனை சொல்லப்பட்டது. ஆனால் பிளவுக்கிடையே தலைமைப் பொறுப்பை ஏற்க லாலா லஜபதி மறுத்து விட்டார். அதனால், 23 ஆவது காங்கிரஸ் மகாசபை நடைபெறாமல் கலைந்தது கலைந்ததாகவே முடிந்தது.

காங்கிரஸ் உடைந்தது!

டிசம்பர் 29 ஆம் தேதி ''நேஷனல் கன்வென்ஷன்'' என்று பெயர் வைத்துக் கொண்டு, மிதவாதிகள் தனியாகக் கூடினார்கள். அதுபோல, ''நேஷனல் கான்பரன்ஸ்'' என்று பெயர் வைத்துக் கொண்டு தீவிரவாதிகள் தனியாகக் கூடினார்கள். ''நேஷனல் கான்பரன்ஸ்'' என்னும் பெயரிலே புதிய கட்சி ஒன்றைத் தொடங்குவதென்று திலகரைத் தலைவராகக் கொண்ட தீவிரவாதிகள் முடிவெடுத்தனர். இந்தப் புதிய கட்சிக்கு, வங்காளத்திற்கு திரு. அரவிந்த கோஷும், மகாராஷ்டிரத்துக்கு லோகமான்ய, திலகரும், அன்றைய பெரிய சென்னை மாகாணத்திற்கு வ.உ.சிதம்பரனாரும் செயலாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தென்னாடு முழுவதற்கும் வ.உ.சி. செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட செய்தி சூரத் காங்கிரஸ் நடவடிக்கை பற்றி விவரிக்கும் எந்த நூலிலும் குறிப்பிடப்பட வில்லை.

இந்தியா முழுவதற்குமாக உண்மையான தேசியத் தலைவர்களாகத் திகழ்ந்த மூவரிலே ஒருவராக அந்நாளில் சிதம்பரனார் மதிக்கப்பட்டார்.

சூரத்திலிருந்து சென்னை திரும்பிய பாரதியார், ''எங்கள் காங்கிரஸ் யாத்திரை'' என்னும் பெயரிலே சிறிய பிரசுரம்

ஒன்றை வெளியிட்டார். அதிலே, சூரத் நகரில் நடந்த நிகழ்ச்சிகளை யெல்லாம் விவரித்திருக்கிறார். ''புதிய கட்சியாரின் கோட் பாடுகள்'' என்னும் பெயருடைய திலகரின் ஆங்கிலச் சொற்பொழிவு ஒன்றைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார்.

சூரத் காங்கிரசுக்குப் பின் தீவிரவாதிகள் அநேகமாக காங்கிரசிலிருந்து வெளியேறி விட்டனர் என்றே சொல்ல வேண்டும். அதனால், அம் மகாசபை மிதவாதிகளுக்கே சொந்தமாகிவிட்டது. தீவிரவாதிகள் திரும்பவும் காங்கிரசுக்குள் நுழைவதைத் தடுக்கும் வகையில், சூரத்தில் தனியாகக் கூட்டப் பெற்ற மிதவாதிகள் கன்வென்ஷன் காங்கிரஸ் விதிமுறைகளை வகுக்க வழி செய்தது.

போலீஸ் வேட்டை!

சூரத்திலே காங்கிரஸ் பிளவுப்பட்டபின், உண்மையான பிரிட்டிஷ் விரோதிகளை இனந்தெரிந்து கொண்டு விட்டது அரசாங்கம். யாரெல்லாம் மிதவாதக் காங்கிரஸ்காரர்களை வெறுத்தார்களோ, அவர்களெல்லாம் பிரிட்டிஷாரின் உண்மை விரோதிகள் என்றும், யாரெல்லாம் தீவிரவாதிகளை எதிர்த்தார்களோ அவரெல்லாம் பிரிட்டிஷாரின் நண்பர்கள் என்றும் அரசாங்கம் முடிவு செய்து கொண்டுவிட்டது. இதன்படி, அரசாங்கம் மிதவாதிகளின் ஆதரவைப் பெற்று, ''தேசியக் கான்பரன்ஸ்'' என்ற பெயரில் இயங்கிய காங்கிரஸ்காரர்களை வேட்டையாட முயன்றது. சூரத் காங்கிரஸ் முடிந்ததும் தீவிரவாதிகள் போலீசாரால் வேட்டையாடப்பட்டனர்.

சுதேசிக் கப்பல் கம்பெனி கண்ட சிதம்பரனார், அத்துடன் நில்லாமல், அரசியலிலும் தீவிரங்காட்டினார். அந்நாளில் மாநில, மாவட்ட, வட்ட, நகர, கிராம ரீதியில் காங்கிரஸ் மகாசபையின் கிளைக்ள் தோன்றியிருக்கவில்லை. அதனால், பாரத மாதா சமிதி, பாரத மாதா சங்கம், பரங்கி ஒழிப்பு சமாஜம் என்னும் பெயர் களிலே ஏகாதிபத்திய எதிர்ப்பு அமைப்புகளைத் தீவிரவாதிகள் தோற்றுவித்தனர். வ.உ.சி., நெல்லை மாவட்டதிற்கெனத் ''தேசாபிமானிகள் சங்கம்'' ஒன்றை 1908-இல் நிறுவி, அதன் சார்பில் தூத்துக்குடி நகரில் பொதுக்கூட்டங்கள் நடத்தி, சுயராஜ்யப் பிரசாரத்தில் ஈடுபட்டார்.

இத்துடன் நில்லாமல், தூத்துக்குடி கோரல் மில்லில் (இப்போது ஹார்வி மில்) வேலை செய்யும் தொழிலாளருக்கெனத்

தனியாகத் தொழிற்சங்கம் தொடங்கிச் சில வாரங்களுக்குள்ளாகக் கூலி உயர்வு கோரித் தொழிலாளரை வேலை நிறுத்தத்தில் ஈடுபடுத்தினார்.

மும்முனைப் போர்!

சுதேசிக் கப்பல் கம்பெனி மூலம் வெள்ளை வணிகர் களையும், தேசாபிமானிகள் சங்கத்தின் மூலம் வெள்ளை அதிகாரிகளையும், தொழிலாளர் சங்கத்தின் மூலம் வெள்ளை முதலாளிகளையும் எதிர்த்து வ.உ.சி. மும்முனைப் போர் நடத்தினார். இந்த நேரத்தில் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த வத்தலகுண்டு வாசியான இளைஞர் சிவா என்பவர் தூத்துக்குடிக்கு வருகை தந்தார். அவரும் வ.உ.சி. யுடன் சேர்ந்து அரசியல் கூட்டங்களில் பேசலானார்.

தூத்துக்குடி கோரல் மில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த நாட்களிலே, வெள்ளையர்கள் இரவு நேரங்களில் தங்கள் வீடுகளில் இருக்க அஞ்சி, கடலில் மிதக்கும் கப்பல்களில் மனைவி மக்களுடன் தங்கி வாழ்ந்தனர். ''வந்தே மாதரம்'' என்ற கோஷம் நகரமெங்கும் ஒலிக்கத் தொடங்கியது. வீதிகளிலே வெள்ளையர்களைக் கண்டுவிட்டால், அவர்களைக் கேலி செய்யும் பாவனையில் சின்னஞ்சிறு பிள்ளைகள் ''வந்தே மாதரம்'' என்று கோஷிப்பது வழக்கமாக இருந்தது.

இட்டது சட்டம்!

அரசாங்க ஆதரவாளர்களுக்கு, ஜட்கா வண்டிக்காரர் வண்டியோட்ட மாட்டார்; க்ஷவரத் தொழிலாளி க்ஷவரஞ் செய்யமாட்டார்; சலவைத் தொழிலாளி துணி வெளுக்க மாட்டார். சுருங்கச் சொன்னால், சிதம்பரனார் இட்டது சட்டமாக இருந்தது. அரசாங்கச் சட்டத்திற்கும் அதிகாரிகளின் ஆணைகளுக்கும் மதிப்பில்லாமற் போய்விட்டது.

சிதம்பரனாருடன் சேர்ந்து கொண்ட சிவா, அவருடைய விருந்தாளியானார். அந்நாளில் சிதம்பரனாரின் இல்லம் தேசபக்த ரெல்லாம் தங்கும் சத்திரம்போல விளங்கியது, சிதம்பரனாரின் மனைவியான திருமதி மீனாட்சியம்மையார் வந்தவர்களை யெல்லாம் வரவேற்று விருந்தளித்தார். சிவா, கிராம முனிசீப் ஒருவரின் மகனாகப் பிறந்தவர். பட்டதாரியல்ல வென்றாலும், ஆங்கிலத்திலும் அன்னை மொழியான கன்னித் தமிழிலும் ஓரளவு ஞானம் பெற்றார். இளமையிலேயே சந்நியாசியானார்.

1907-இல் அரவிந்தகோஷ் நடத்தி வந்த ''வந்தே மாதரம்'' பத்திரிகையில் வெளியான ஒரு கட்டுரைக்காக அரவிந்தர் மீது வழக்குத் தொடர்ந்தது வங்காள அரசு.

ஆம்; தீவிர காங்கிரஸ்காரர்களை ஒடுக்குவதற்கான முதல் நடவடிக்கையை வங்காளத்திலே மேற்கொண்டது அரசு. அரவிந்தர் வழக்கிலே, அவருக்கு எதிராகச் சாட்சி சொல்ல விபின்சந்திரருக்கு சம்மன் அனுப்பியது நீதிமன்றம். அதனை ஏற்று சாட்சி சொல்ல பாலர் மறுத்தார். ஒரு தேசபக்தருக்கு எதிராக இன்னொரு தேச பக்தர் சர்க்கார் சாட்சியாக நீதிமன்றம் செல்வது தேசத் துரோகமல்லவா! அதைச் செய்ய மறுத்ததற்காக, நீதிமன்றத்தால் பாலருக்கு 6 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அந்தத் தண்டனையை அனுபவித்து விட்டு பாலர் விடுதலையான நாளை தேசமெங்கணும் கொண்டாடினர். தீவிரவாதிகள், நெல்லையிலும் தூத்துக்குடியிலும் பாலர் விடுதலை நாளைக் கொண்டாட ஏற்பாடு செய்தார் சிதம்பரனார். அந்த நாள் ஏப்ரல் 14 ஆம் தேதியாகும். நெல்லையில் தாமிரபரணி ஆற்றில் ஏற்பாடு செய்யப்ப்டிருந்த பொதுக்கூட்டத்திற்கு அரசு தடை விதித்தது.

★-★-★

தமிழகத்துப் "பாரிசால்"!

சூரத்திலிருந்து சென்னை திரும்பியதும், தேசிய தீவிரவாதிகள் கட்சியின் தென்னகச் செயலாளரான வ.உ.சிதம்பரனார், அரசியல் பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டார். சென்னை நகரில் திருவல்லிக்கேணிக் கடற்கரை, மூர்மார்க்கெட் முதலிய இடங்களில் பொதுக்கூட்டங்கள் போட்டுப் பேசினார். வெளியூர்களிலும் பேசினார்.

சுதேசிப் பொருள்களை ஆதரிக்குமாறும், விதேசிப் பொருள்களை பகிஷ்கரிக்குமாறும், பூரண சுயராஜ்யம் பெறத் தீவிரவாதிகளுக்கு ஆதரவளிக்குமாறும் தமிழ் நாட்டு மக்களைக் கேட்டுக் கொண்டார். இந்தப் பிரசாரத்திலே, சுப்பிரமணிய பாரதி, சுப்பிரமணிய சிவா ஆகியவர்களும் வ.உ.சி. யுடன் கலந்து கொண்டனர்.

தடையுத்தரவு!

இந்த நேரத்தில்தான் விபின்சந்திர பாலர் விடுதலை நாள் வந்து சேர்ந்தது. தேசாபிமானிகள் சங்கத்தின் சார்பில் நெல்லைமாவட்ட முழுவதிலும் மார்ச்சு 9-ஆம் தேதியன்று பாலர் விடுதலை விழாவைக் கொண்டாட வ.உ.சியும் சிவாவும் திட்டமிட்டுச் செயல் புரிந்தனர். அரசாங்க அதிகாரிகளும் எதிர் நடிவடிக்கைகளை மேற்கொள்ள முனைந்தனர். தூத்துக்குடியிலும் நெல்லை நகரிலும் மார்ச் 9-இல் ஊர்வலமோ, பொதுக் கூட்டமோ நடத்தக் கூடாதென்று வெள்ளையரான சப் மாஜிஸ்திரேட் வாலஸ் என்பவர் தடையுத்தரவு பிறப்பித்தார்.

அத்துடன் நிற்கவில்லை. நெல்லை கலெக்டர் விஞ்சு துரைமகனார். வ.உ.சி., சிவா ஆகிய இருவருக்கும் பொதுக் கூட்டங்களிலும் ஊர்வலங்களிலும் கலந்து கொள்ளக்கூடாதென்று தடையுத்தரவு கொடுத்தார்.

கம்பெனி பட்ட பாடு!

வ.உ.சி.யும் அவருடைய சகா சிவாவும் தடையை மீறப் போவதாகப் பொதுமக்களுக்கு அறிவிப்புத் தந்தனர். இந்நிலையில், சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியின் நிர்வாகக் கூட்டம் நடைபெற்றது. அதிலே, கலெக்டர் விதித்துள்ள தடையை மீறவேண்டாமென்று வ.உ.சி. கேட்டுக் கொள்ளப் பட்டார். கோரல் மில் தொழிற் சங்கத்திலிருந்தும் தேசாபிமானிகள் சங்கத்திலிருந்தும் விலகிவிடுமாறும் வேண்டிக் கொள்ளப் பட்டார். சுதேசிக் கப்பல் கம்பெனி நிர்வாகக் குழுக் கூட்டத்தில் அதன் துணைச் செயலாளர் என்ற முறையில் வ.உ.சியும் கலந்து கொண்டார். அதனால், அக்கூட்டத்திலேயே கலெக்டர் தமக்கு விதித்த தடையைத் தாம் மீறப் போவதாக அறிவித்து விட்டார்.

உண்மையில் சுதேசிக் கப்பல் கம்பெனியாரின் நிலைமை சங்கடமானதுதான். அவர்கள், கடல் வாணிபம் வேறு; அரசியல் வேறு என்று கருதினார்கள். கடல் வாணிபத்தைக் கைப்பற்றுவதில் வெள்ளையருடன் போட்டியிடுவதோடு சுதேசிக் கம்பெனி நின்றுவிட வேண்டுமென்று அவர்கள் கருதினர். சிதம்பரனார் இதை உணர்ந்தவர்தான். ஆனால், ''சுதேசி'' ''தேசியம்'' ''சுயராஜ்யம்'', ''பகிஷ்காரம்'' என்னும் சொற்களைக்கூட வெறுத்து வெள்ளை அதிகார வர்க்கம். இந்நிலையில் வாணிபம் வேறு, அரசியல் வேறு என்று சுதேசிக் கம்பெனியார் கருதுவது எங்ஙனம்? வாணிபத்துக்கென வந்த கூட்டத்தார்தானே ஆட்சியைக் கைப்பற்றினார்கள். ஆகவே, இந்திய மக்களும் இழந்த வாணிபத்தை வெள்ளையரிடமிருந்து கைப்பற்ற வேண்டுமானால், ஆட்சியையும் கைப்பற்றத்தானே வேண்டும்!

மும்முனைப் போர்!

வ.உ.சி. கோரல் மில் தொழிலாளர் சங்கத்தை நிறுவியது, வெள்ளை முதலாளிகளின் சுரண்டலை ஒழித்துக்கட்டத்தான். அந்நாளில் வர்க்கப் போராட்ட ரீதியில் தொழிற்சங்கம் நிறுவ சந்தர்ப்பம் இருக்கவில்லை. ஆம் அன்று சுரண்டும் வர்க்கம் வெள்ளைக் கூட்டமாகவே இருந்தது. ஆகவே இந்தியாவில் சுந்திரப் போர்தான் வர்க்கப்போர்; வர்க்கப் போர்தான் சுதந்திரப்போர்! இந்த உண்மையை உணர்ந்துதான் வ.உ.சி. வெள்ளை வணிகர்கள் - வெள்ளை முதலாளிகள் - வெள்ளை அதிகார வர்க்கம் ஆகிய மூன்று கூட்டத்தாருக்கும் எதிராகப் போர் நடத்தினார். பாவம்! லாபம் திரட்டும் நோக்குடன் சுதேசிக் கப்பல் கம்பெனியில் பங்குதாரர்களாகச் சேர்ந்தவர்கள்

சங்கடப்பட்டனர், உண்மையில் அவர்கள் எதுவும் செய்ய இயலாத நிலையில் இருந்தனர்.

ஜில்லா மாஜிஸ்திரேட் வாலஸ், வ.உ.சி.யையும் சிவாவையும் தமது அலுவலகத்துக்கு அழைத்து, அவர்களுடன் பேசித் தடையுத்தரவை மீற வேண்டாமென்று கேட்டுக் கொண்டார். அதனை எழுத்து மூலம் எழுதித் தருமாறு வ.உ.சி. கேட்டார். மாஜிஸ்திரேட் மறுத்து விட்டார்.

களம் மாறியது!

பின்னர், தம்முடைய போர் முறைத் திட்டத்தில் வ.உ.சி. மாறுதல் கண்டார். ஆம்; மார்ச்சு 9-இல் தூத்துக்குடியில் தடையை மீறிப் பொதுக் கூட்டத்தில் பேசுவதாக இருந்ததற்கு மாறாக, தூத்துக்குடிப் பொதுக்கூட்டத்தைக் கைவிட்டு, நெல்லையில் மட்டும் பொதுக்கூட்டத்தை நடத்தி, அதிலே தடையை மீறிப் பேசுவதென்று முடிவு செய்தார். ஆம்; அதிகார வர்க்கத்தை அதன் கோட்டையிலேயே சந்திக்கத் தயாரானார். தேச பக்தர்களின் சக்தி முழுவதையும் நெல்லையில் திரட்டுவதற்காகவே தூத்துக்குடி நிகழ்ச்சியை வ.உ.சி கைவிட்டார். இதனால், நெல்லை நகரிலே மிகுந்த பரபரப்பு ஏற்பட்டது. திட்டமிட்டபடி நெல்லை நகரில் ஊர்வலம் நடத்தினார். ஜில்லா மாஜிஸ்திரேட் கோர்ட் எதிரில் - தாமிரபரணி ஆற்றங்கரையில் பொதுக்கூட்டம் நடத்தி, அதிலே சிதம்பரனாரும் சிவாவும் ஜில்லா மாஜிஸ்திரேட் விதித்த தடையை மீறிப் பேசினர். மக்கள் பதினாயிரக்கணக்கில் திரண்டு, தங்கள் தலைவர்களின் வீர முழக்கத்தைக் கேட்டனர். வந்தே மாதரம் என்ற கோஷம் வானை எட்டியது.

பொதுக்கூட்டத்தில் அதிகாரிகள் தலையிடவில்லை. ஆயினும், பலத்த போலீஸ் பந்தோபஸ்து செய்யப்பட்டிருந்தது. வங்காளத்தில் பாரிஸால் நகரத்திற்குள்ள பெருமை தென்னகத்தில் நெல்லைக்கு ஏற்பட்டது.

வெள்ளையரின் சதி!

வெள்ளை அதிகாரிகள் சிதம்பரனாரைச் சிறையில் தள்ளமுடிவு செய்தனர். நெல்லைக்கு வந்து தனது அலுவலகத்தில் தன்னைச் சந்திக்குமாறு வ.உ.சி.க்கு ஆணை அனுப்பினார் கலெக்டர் விஞ்ச். ஆம்; ராமனாதபுரம் ராமலிங்க விலாச மாளிகையில் தம்மைச் சந்திக்குமாறு கலெக்டர் ஜாக்சன் கட்டபொம்மனுக்கு ஆணை அனுப்பினானல்லவா! அதுபோல,

ஜாக்சனின் வாரிசான விஞ்ச் துரை, கட்டபொம்மனின் வாரிசான கப்பலோட்டிய தமிழருக்கு ஆணை அனுப்பினார்! அன்று கட்ட பொம்மன் தம்பி ஊமைத்துரை தன் அண்ணனுக்குச் சொன்னான். ''ஜாக்சன் வஞ்சகன்! அவனைச் சந்திக்க ராமனாதபுரம் போகாதே!'' என்று. அதுபோல, உடன் பிறவாத் தம்பியான சிவா சொன்னார், ''விஞ்சு துரையைச் சந்திக்க நெல்லை போக வேண்டாம்'' என்று. ஆனால், கட்டபொம்மன் ஊமையனின் எச்சரிக்கையை மீறி ராமனாதபுரம் சென்றது போல சிதம்பரனாரும் சிவாவின் எச்சரிக்கையை மீறி நெல்லை சென்று கலெக்டரைச் சந்தித்தார். சிவாவும் பத்மநாப ஐயங்காரும் உடன் சென்றனர். மார்ச் 12-ஆம் நாளன்று இந்தச் சந்திப்பு நிகழ்ந்தது!

சிறைசெய் காதை!

சந்திப்பின்போது, ஆளுஞ் சாதியைச் சார்ந்தவன் என்ற ஆணவத்தின் பேரில் ஆளப்பிறந்த மகனான வ.உ.சி.யை வாய்க்கு வந்தபடி ஏசினார் கலெக்டர் விஞ்ச். சிதம்பரனாரும் பண்பாட்டிலிருந்து வழுவாதபடித் திருப்பிக் கொடுத்தார். இந்த வாக்குவாதத்தைத்தான் ''கலெக்டர் விஞ்ச் ஸ்ரீ சிதம்பரம் பிள்ளைக்குச் சொல்லுதல்'', ''கலெக்டர் விஞ்சுக்கு ஸ்ரீசிதம்பரம் பிள்ளை சொல்லிய மறுமொழி'' என்னுந் தலைப்பிட்டுப் பாடினார் பாரதியார். அப்பாடலிரண்டும் சரித்திரச் சாசனங்களா கும். தமிழ் உள்ளவரை அப்பாடல்களும் இருக்கும்.

பாரதியார் இட்ட தலைப்பு, ''தேசபக்தனுக்கு ஆங்கிலேயன் சொன்னது'' ''ஆங்கிலேயனுக்குத் தேசபக்தன் சொன்னது'' என்பன அல்ல. விஞ்சின் சிதம்பரனாரின் பெயரிட்டே பாடல் தலைப்புகளை அமைத்தார். பாரதியார் காலத்துக்குப் பின் வந்த பதிப்புகளிலே தலைப்பை மாற்றிவிட்டார்கள்.

கடுமையான வாதத்திற்குப் பின்னர், கலெக்டர் விஞ்ச் கப்பலோட்டிய தமிழரையும் சிவாவையும் பத்மநாப ஐயங்காரையும் கைது செய்தார். ஆம்; அன்று ராமநாதபுரத்தில் கட்டபொம்மனுக்கு நேர்ந்ததே, 1908-இல் நெல்லையில் கப்பலோட்டிய தமிழருக்கும் நேர்ந்தது. காலம் வேறுபட்டாலும் காட்சி ஒன்றுதான்! பாரதப் பெருநாடே! உன்னை விடுவிக்க என்னென்ன துன்பங்களையெல்லாம் ஏற்க வேண்டியிருந்தது!

நெல்லை நகரில் கலெக்டர் அலுவலகத்தில் சிதம்பரனார் கைது செய்யப்பட்டதுமே, தூத்துக்குடி நகரிலுள்ள அவருடைய இல்லத்தில் போலீசார் சோதனையிட்டுக் கடிதங்கள் சிலவற்றைக் கைப்பற்றினர்.

அழற்படு காதை!

தலைவர்கள் சிறைப்பட்ட செய்தி நெல்லை நகரில் பரவியதும் நகரம் முழுவதும் கடைகள் அடைக்கப்பட்டன. பள்ளிகளையும் கல்லூரிகளையும் விட்டு வெளியேறி மாணவர்கள் கண்டன ஊர்வலம் நடத்தினர். தொழிலாளர்கள் வேலை நிறுத்தஞ் செய்து, ஊர்வலம் சென்று நகரில் ஆர்ப்பாட்டம் நடத்தினர். சிதம்பரனாரைச் சிறைப்பிடிப்பதற்கு முன்பே, நெல்லை முழுவதிலும் போலீஸ் படைகள் முன்னெச்சரிக்கையுடன் பல பகுதிகளிலும் நிறுத்தப்பட்டன. ஆயினும், பயன் தரவில்லை.

அன்றொரு நாள் கோவலனைக் கொன்றதற்காகப் பாண்டியனைப் பழி வாங்க கண்ணகி மதுரையை எரித்ததுபோல, கப்பலோட்டிய தமிழரைக் கைது செய்ததற்காகப் பிரிட்டிஷ் ஆட்சியைப் பழிவாங்க நெல்லை நகரத்தில் பல கட்டிடங்களை மக்கள் தீக்கிரையாக்கினர். தெருக்களிலுள்ள முனிசிபல் விளக்குகளெல்லாம் பிடுங்கி எறியப்பட்டன. முனிசிபல் மண்ணெண்ணெய்க் கிடங்கு தீக்கிரையாக்கப்பட்டது. முனிசிபல் காரியாலயத்திலிருந்த மரச்சாமான்களையும் ரிக்கார்டுகளையும் வீதியில் கொண்டுவந்து போட்டு அவற்றைத் தீக்கிரையாக்கினர்.

நெல்லை நகரிலுள்ள வெள்ளையர்களை மக்கள் தேடிப்பிடித்து, அவர்களை வீதியில் நிறுத்தி ''வந்தே மாதரம்'' என்று கோஷிக்கச் செய்தனர். அவர்களில் சர்ச் மிஷன் பள்ளியின் தலைமையாசிரியர் ரெவரன்ட் ஷாப்டர் என்பவரும் ஒருவராவர். வெறி பிடித்த கூட்டமொன்று காவல் நிலையத்திற்குள் புகுந்து ஆயுதங்களைக் கைப்பற்றியதோடு, கட்டிடத்திற்கும் தீ வைத்தது!

நெல்லையே எரிந்தது!

கல்லடியால் கலெக்டருக்கும் சப் இன்ஸ்பெக்டர் ஒருவருக்கும் லேசான காயம் ஏற்பட்டது. தமது உயிரைக் காப்பாற்றிக் கொள்ளக் கலகக்காரர்களை நோக்கிச் சுட்டார் துணைக் கலெக்டர் ஆஷ். அதனால், நால்வர் மாண்டனர்; பலருக்குப் படுகாயம். அன்று நெல்லை நகரிலே வெறிக் கூத்தாடினார் துணைக்கலெக்டர் ஆஷ்.

தூத்துக்குடியிலும் தச்சநல்லூரிலும் கடையடைப்பும் வேலை நிறுத்தமும் நடைபெற்றன. 1916-இல் நியமிக்கப்பட்ட ரௌலட் கமிட்டி, ''அன்று நெல்லை நகரம் பட்ட பாட்டைப்

பார்த்தால் பிரிட்டிஷ் அரசே எரிந்து போய்விட்ட காட்சியாக இருந்தது'' என்று தனது அறிக்கையில் கூறுகிறது.

தண்டப் போலீஸ்!

நெல்லை மாவட்டப் போலீஸ் படை போதாதென்றாகி விட்டதால் சென்னை மாநில விசேஷ போலீஸ்படையை நெல்லை நகருக்கு அனுப்பி வைத்ததுடன், அதற்காகும் செலவுக்கு நெல்லை நகர மக்கள் மீது தண்டவரி விதித்தது அரசு. இது, விடுதலைப் போராட்டக் காலத்தில் வழக்கமாக இருந்தது.

விசேஷ போலீசைத் திரும்பப் பெறுமாறு கோர நெல்லைப் பிரமுகர் சிலர் சென்னை சென்று கவர்னரைச் சந்தித்துப் பேசினர். அவர் மறுத்து விட்டார்.

விடுதலையாகி மீண்டும் கைது

நெல்லைக் கலவரம் சம்பந்தமாக 108 பேர்கள் கைது செய்யப்பட்டு அவர்கள்மீது வழக்கும் போடப்பட்டது. 80 பேர் பலவிதத் தண்டனைகளுக்கு உள்ளாயினர், மற்றவர்கள் விடுதலை பெற்றனர்.

சட்டத்தை மீறிப் பொதுக் கூட்டத்தில் பேசியதற்காகக் கைது செய்யப்பட்ட சிதம்பரனாரும் அவருடைய சகாக்களிருவரும் தங்களைக் கைது செய்தது சட்டவிரோதமான செயல் என்று கூறி, உயர் நீதிமன்றத்திற்கு மனுச் செய்துகொண்டனர். உயர் நீதிமன்றம் மனுவை ஏற்று அவர்களை விடுதலை செய்ய உத்தரவு பிறப்பித்தது. பின்னர், விடுதலை செய்யப்பட்டனர். ஆனால், விடுதலையானவர்கள், வீடுகளுக்குச் செல்ல முடியாதபடி, சிறைவாயிலிலேயே வேறு குற்றச்சாட்டுகளின் பேரில் கைது செய்யப்பட்டு மீண்டும் சிறைக்குக் கொண்டு போகப்பட்டனர்.

சிதம்பரனார் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து, தமது ''வந்தே மாதரம்'' (13-3-1908) பத்திரிகையில் அரவிந்தகோஷ் எழுதிய தலையங்கத்தின் ஒரு பகுதி வருமாறு:

''இந்த நெருக்கடியான கட்டத்தில் பாரத மக்கள் தன் உதவியைப் பெறுவதற்குத் தகுதியானவர்கள்தானா என்பதைச் சோதிக்க இறைவன் திருவுள்ளம் கொண்டுவிட்டான் போலும். திரு. சிதம்பரம் பிள்ளை சுதேசிக் கப்பல் கம்பெனியை நிறுவியதானது, பாரத நாட்டில் பிரிட்டிஷாரின் வாணிப ஏகபோகத்துக்கு முடிவுகட்ட மேற்கொண்ட பணியாகும்.

''மாஜிஸ்திரேட்டுகளின் அநீதியும் போலீசாரின் கொடுமைகளும் எவ்வளவுதான் இருந்தாலும், அவை, தெய்வம் கொடுக்கவிருக்கும் தண்டனையிலிருந்து அவர்களைப் பாதுகாக்கப் போவதில்லை. வ.உ.சி.யின் தேசிய முயற்சிகள் தொடர்ந்து நிகழுமாறு பார்த்துக் கொள்ளச் சென்னை மாகாணத் தேசிய வாதிகளை நம்பியிருக்கிறோம்.

''திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பொதுமக்கள் அனைவரையும் பிரிட்டிஷார் சிறைப்படுத்துவதற்கு அவர்களிடம் போதுமான அளவில் சிறைகள் இல்லை. மக்களிலே ஒவ்வொருவரும் சிதம்பரம் பிள்ளையைப் பின்பற்றுவார்களாக! பிற விஷயங்களைக் கடவுளே முடிவு செய்வார்!''

வழக்குரை காதை!

1908-ஆம் ஆண்டு 23, 26-ஆம் தேதிகளிலும்; மார்ச் 1,3 தேதிகளிலும் அரச நிந்தனையாகப் பேசியதாக இ.பி.கோ. 124. ஏ, 109 பிரிவுகள் படியும், சிவராவுக்கு இடமும் உணவும் அளித்து உதவியாக 153-ஏ பிரிவுப்படியும் சிதம்பரனார் மீது போலீசார் வழக்குத் தொடுத்தனர்.

திரு. சுப்பிரமணிய சிவா மீதும், 1908-ஆம் ஆண்டு பிப்ரவரி 23, 25, 26 தேதிகளிலும், மார்ச்சு 5-ஆம் தேதியன்றும் அரச நிந்தனையாகப் பேசியதாக இ.பி.கோ 124 பிரிவுப்படி வழக்கு தொடரப்பட்டது. இவர்களுக்கு உதவி புரிந்ததாகத் திரு. பத்மநாப ஐயங்காரும் குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டு, விசாரிக்கப்பட்டார். திருநெல்வேலி ஜில்லா கூடுதல் மாஜிஸ்திரேட் திரு.ஈ.எஸ். வாலெஸ் முன்பு மார்ச்சு 26-ஆம் தேதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விரிவான விசாரணைக்குப்பின் சிதம்பரனாரும் சிவாவும் குற்றவாளிகள் என முடிவு செய்து, அவர்கள் மீதான வழக்கை செஷன்ஸ் நீதிமன்றத்திற்கு அனுப்பினார் வாலெஸ். திரு. பத்மநாப ஐயங்கார் விடுதலை செய்யப்பட்டார். மாஜிஸ்திரேட் கோர்ட்டில் சிதம்பரனாருக்காகத் தஞ்சை வக்கீல் திரு.என்.கே. இராமசாமி ஆஜராகி வாதித்தார்.

'சபாஷ் சிதம்பரம்!'

மாஜிஸ்திரேட் கோர்ட்டில் வழக்கு நடந்துகொண்டிருந்த போது சிதம்பரனாருக்கு மட்டும் ஜாமீனில் விடுதலை தர மாஜிஸ்திரேட் இசைவு தெரிவித்தார். சந்நியாசி சிவாவுக்குத் தர

மறுத்து விட்டார். அதனால், சக தேசபக்தரை சிறையில் விட்டுத் தாம் மட்டும் வெளியே வர விரும்பாதவராகி, ஜாமீன் விடுதலையை ஏற்க மறுத்துவிட்டார் தேசபக்தர் சிதம்பரனார். இது, அந்தக் காலத் தலைவர் கடைப்பிடித்த அரசியல் நாகரிகம்!

வ.உ.சி. யின் தியாக உணர்வைப் பாராட்டி, ''நல்ல காரியம் செய்தாய் சிதம்பரம்!'' என்று தலைப்பிட்டு ''வந்தே மாதரம்'' பத்திரிகையில் அரவிந்தர் எழுதியது வருமாறு:

''அரசியல் வாழ்வின் அடிப்படையே உண்மையான சகோதரத்துவ உணர்வுதான். அதுவே மனிதர்களை இணைக்கும். அதுவே நமது கூட்டான செயல்களுக்குப் பிணைப்பினைத் தருவது. தன்னைப் பின்பற்றுவோருக்காகத் தன்னையே தியாகம் செய்து கொள்ள ஒரு தலைவன் தயாராயிருப்பதும், தன் தோழர்களைத் தனிமைப்படுத்தாமல் தானே முன்னின்று சிறை வாழ்வைத் தேடிக்கொள்ள நன்கு அறிமுகமான ஒரு தலைவன் தயாராயிருப்பதும் தான் நாட்டின் அரசியல் வாழ்வு உண்மைத் தன்மை பெற்றிருக்கிறது என்பதற்கு அடையாளமாகும்.

''தூத்துக்குடிச் சம்பவத்தில் திரு. சிதம்பரம் பிள்ளை அவர்களின் தூய நடத்தையும் ஒழுக்கமும் பாராட்டுக்குரியவை. அவர் காட்டிய நடைமுறை நேர்த்தியும் மிகச் சிறந்த குண மேம்பாடும் அவர் மிகப் பெரிய, உண்மையான தேசியவாதி என்பதைக் காட்டுகின்றன. தம் தோழர்களையும் தொண்டர் களையும் விட்டு விட்டுத் தமக்கு மட்டும் அரசு கொடுக்க வந்த ஜாமீன் விடுதலையை அவர் மறுத்திருப்பது அவருடைய சிறப்பை மேலும் உயர்த்தியிருக்கிறது.

''தேசியம்'' என்பது வெறும் அரசியல் விஷயம் மட்டு மல்ல; ஆன்மிக வேட்கையும்கூட. அது ஓர் ஆன்மிக ஒழுக்கமும் ஆகும். சொந்த வாழ்க்கையில் வீரம் தழுவிய தியாகத்தை வளர்ப்பதற்கான ஒழுக்க குணநலனை இந்தியரிடையே பேணி வளர்ப்பதற்கான பணிதான் தேசியப் பணி.

'நமது நாடு இழந்துவிட்ட உயர்ந்த பண்புகளையும், பாரம்பரியப் பெருமைகளையும், முற்காலத்து ஆரியக் கோட்பாடு களையும் மீட்டுத் தருவதுதான் தேசியப்பணி. துணிவு, நேர்மை, அன்பு, நீதி ஆகியவை ஒரு தேசியவாதிக்குத் தேவைப்படும் தகுதிகளாகும். இந்த வகையில் முதன் முதலாக மறு பிறவி எடுத்த ஆரிய புருஷனாக நமக்குக் காட்சி அளிக்கும் சிதம்பரம் பிள்ளை வாழ்க! இவ்வளவு சிறந்த மாமனிதனை நமக்கு அளித்த சென்னை மாகாணத்துக்குப் பெருமை சேர்க!''

(''வந்தே மாதரம்'', 27 மார்ச், 1908; ஸ்ரீ. அரவிந்தர் நூற்றாண்டு விழா மலர் - பக். 797)

திருநெல்வேலி மாவட்ட கூடுதல் மாஜிஸ்திரேட், சிதம்பரனார் - சிவா ஆகியோர் மீதுள்ள வழக்கை ஜில்லா செஷன்ஸ் நீதி மன்றத்திற்கு அனுப்பி வைத்த பின்னர், அங்கு, நீதிபதி ஏ. எஃப். பின்ஹே என்ற வெள்ளையர் முன்பு ஏப்ரல் 26-ஆம் தேதியன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சரியாக 2 மாத காலம் விசாரணை நடைபெற்றது.

நீதி மன்றத்திலே பாரதியார்

இந்த விசாரணையின்போது கவியரசர் பாரதியார் நெல்லையிலேயே தங்கியிருந்து, பல நாட்கள் நீதிமன்றத்திற்குச் சென்று, வழக்கு விசாரணையைக் கவனித்து வந்தார். அவர் எதிரிகள் தரப்பில் சாட்சி சொல்லவும் அழைக்கப்பட இருந்தார். பின்னர் அது தவிர்க்கப்பட்டது.

தென்னிந்தியப் பத்திரிகைகளில் மட்டுமின்றி வட இந்தியப் பத்திரிகைகளிலும் இந்த வழக்கு விசாரணை பற்றிய செய்திகள் விரிவாகப் பிரசுரிக்கப்பட்டன. கல்கத்தாவிலிருந்து வெளிவரும் ''யுகாந்தர்'' என்ற ஆங்கிலப் பத்திரிகை கூடுதல் பக்கங்களை வெளியிட்டு, வழக்கு விசாரணையை விரிவாகப் பிரசுரித்து வந்தது. இது தீவிரவாதக் கட்சியின் ஏடு என்பது நினைவில் கொள்ளத்தக்கதாகும்.

சூலை 7-ஆம் தேதியன்று நீதிபதி பின்ஹே தீர்ப்பளித்தார். அன்று நெல்லை செஷன்ஸ் நீதிமன்றத்தில் முன் கூட்டியே விசேஷ போலீஸ் பந்தோபஸ்து செய்யப்பட்டிருந்தது. விசேஷ ஆயுதப் போலீஸ் படை நெல்லை நகரத் தெருக்களில் பாராக் கொடுத்துக் கொண்டிருந்தது. அரசாங்கத் தரப்பில் செய்யப்பட்ட இந்த முன்னேற்பாடுகளைக் கண்ட நெல்லை நகர மக்கள் தங்கள் வீரத்தலைவர்களுக்குக் கொடுந் தண்டனை விதிக்கப்படுமோ என்று அஞ்சினர். நகரம் முழுவதும் பரபரப்பில் ஆழ்ந்திருந்தது.

சிதம்பரனாரும் சிவாவும் குற்றவாளிக் கூண்டில் நின்று கொண்டிருந்த நிலையிலே, வெள்ளையரான பின்ஹே நீதிபதி ஆசனத்தில் அமர்ந்துகொண்டு, சுமார் 50 பக்கங்களில் தான் எழுதிக்கொண்டு வந்த தீர்ப்பைப் படித்தார்.

இரண்டு ஆயுள் தண்டனை!

நீதிமன்றத்திலே பரிபூரண அமைதி நிலவியது. ஆம்; சுடுகாட்டு அமைதி!

நீதிபதி பின்ஹே, சிதம்பரனாருக்கு, அரச நிந்தனையாகப் பேசிய குற்றத்திற்காக ஒரு ஆயுள் தீவாந்தரத் தண்டனையும், அரச விரோதியான சுப்பிரமணிய சிவாவின் அரசியல் பிரசாரத்திற்கு உதவி புரிந்ததற்காக மேலும் ஒரு ஆயுள் தீவாந்தரத் தண்டனையும் விதிப்பதாகத் தீர்ப்பளித்தார்.

அரச நிந்தனையாகப் பேசிய குற்றத்திற்காகச் சிவாவுக்கு 10 ஆண்டுக் காலத் தீவாந்தரத் தண்டனை விதித்தார் நீதிபதி பின்ஹே.

நீதியின் பெயரால் தேசபக்த மாவீரர் இருவருக்கு அநீதி புரிந்த பின்ஹேயின் தீர்ப்பைக் கேட்டதும், நீதிமன்றத்தில் குழுமியிருந்தோரில் தேசாபிமானம் கொண்டவர்கள் எல்லாம் கண்ணீர் விட்டனர். வ.உ.சியின் சகோதரர் திரு. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, பின்ஹேயின் தீர்ப்பைக் கேட்டுச் சித்தம் திரிந்து பித்தரானார்! ஆம்; நீதிமன்றத்திலேயே!

பின்ஹேயின் சித்தாந்தம்!

நீதிபதி பின்ஹே தனது தீர்ப்பிலே, ''சிதம்பரம் பிள்ளை மிகப் பெரிய ராஜத் துரோகி'' என்று கூறியதோடு, பிள்ளையினுடைய எலும்புக்கூடும் ராஜத் துரோகமானது'' என்று சொல்லி, அம் மாவீரருடைய தேசபக்தியை உலகுக்குணர்த்தினார். இது, சிதம்பரனாரின் தேச பக்திக்குப் பகைவன் கொடுத்த பாராட்டு தானே! ''சுப்பிரமணிய சிவா, சிதம்பரம் பிள்ளையின் கையில் அகப்பட்ட ஒரு கோல்'' என்று பின்ஹே குறிப்பிட்டார். ''சிதம்பரம் பிள்ளையின் பேச்சைக் கேட்டால் செத்த பிணம் உயிர்த்தெழும்'' என்றும் கூறினார். இதற்குமேல், ''சிதம்பரம் பிள்ளை பொதுமக்களைக் கூட்டி வைத்துப் பேசியதே அபாயகரமான செயலாகும்'' என்றும் கூறினார்.

பேச்சுரிமை பற்றி நீதிபதி பின்ஹே தனது தீர்ப்பில் கூறிய ''சித்தாந்தம்'' வருமாறு:

''இந்தியாவில் ஒருவர் அரசியல் விஷயமாகப் பேசச் சட்ட ரீதியான சந்தர்ப்பமே இல்லை. ஏனெனில், பிரிட்டிஷாருக்கு இருப்பதுபோல இந்தியருக்கு வாக்குரிமை இல்லை. அரசு ஒரு சட்டத்தை இயற்றினால், அதை மாற்றவோ, திருத்தவோ நேரடியான நடவடிக்கைகளில் ஈடுபடச் சட்டம் அனுமதிக்க வில்லை. இந்தியர்கள் தனியாகக் கூடி விவாதித்து அரசுக்கு வேண்டுகோள் அனுப்பலாம். அப்போதும் அரசு அதைக் கவனித்தாக வேண்டுமென்கிற கட்டாயம் இல்லை.

''இங்கிலாந்தில் அரசியல் விஷயமாகப் பேசுகிறவன் தன்னுடைய வாக்காளர்களைப் பார்த்துப் பேசுகிறான். இங்கிலாந்து மக்களுக்கு வாக்களிக்கும் உரிமை இருக்கிறது. அந்த வாக்குகளை அடுத்த தேர்தல் வரும்போது தன் பக்கமாய்க் கொடுக்கத்தூண்டும் நோக்கமாய்ப் பேசுகிறான். இந்நாட்டிலே அப்படிச் செய்ய சந்தர்ப்பம் இருப்பதாகக் கூற முடியாது.

''திருநெல்வேலியிலும் தூத்துக்குடியிலும் உள்ள சாதாரண மக்களுக்கு வாக்குரிமை இல்லை. ஆகையால், ஒருவன் மக்களைக் கூட்டி வைத்துப் பேசக் கனவிலும் நினைக்க மாட்டான். ஏனெனில், தங்களுடைய விருப்பத்தை நிறைவேற்ற அவர் களுக்குச் சக்தி இல்லை.

''இந்நாட்டில் அரசியல் விஷயத்தைப் பற்றிப் பேசும் ஒருவன் யாரைப் பார்த்துப் பேசுகிறானோ, அவர்கள் சட்டப்படி அமைந்திருக்கும் சக்தி எதையும் உபயோகிப்பதற்கில்லை. பின் எந்த எண்ணத்தோடு பேசுகிறான்? ஜனக் கூட்டத்திற்குள்ள ஒரே சக்தியைப் பயன்படுத்தத் தூண்டுவதற்காகத்தான் பேசுகிறான். அதாவது, ஒவ்வொரு மனிதனுக்கும் உள்ள உடல் பலத்தை உபயோகிக்கும்படித் தூண்டித்தான் பேசவேண்டும். இது, மகா அபாயகரமானதாகும்.

''அன்னியப் பொருள்களை விலக்குமாறு பேசலாம். ஆனால், சாதாரண மக்களைப் பார்த்து அப்படிப் பேசினால், கேட்பவர்கள் அத்துடன் நிற்பார்களா? அரசாங்கத்துடன் ஒத்துழைக்கக் கூடாது என்று பேசப்பட்டது. இது, 124-ஏ. பிரிவின் கீழ் அபாயகரமான எல்லைக்குப் போவதாகும்.''

சிரித்தார், சிதம்பரனார்!

மாவீரர்களான சிதம்பரனாரும் சிவாவும் மிகவும் அமைதியாகத் தண்டனையை ஏற்றுக்கொண்டு, வெள்ளை நீதிபதியைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தனர். ''இடுக்கண் வருங்கால் நகுக!'' என்பதன்றோ வள்ளுவன் வாக்கு!

நீதிபதியின் தீர்ப்புக்குப்பின் இரட்டைக் குதிரை பூட்டிய சாரட்டு வண்டியில் சிதம்பரனாரையும் சிவாவையும் ஏற்றிக் கொண்டு, அவர்களைப் பாளையங்கோட்டைச் சிறைச்சாலைக்கு அழைத்துச் சென்றனர், ஆயுதமேந்திய போலீஸ் படையினர்! தம்மைக் கண்டு விம்மியழுத மனைவியைப் பார்த்து, ''மீனாட்சி, பயப்படாதே! விரைவில் வந்துவிடுகிறேன்'' என்று வ.உ.சி கூறினார். 40 ஆண்டுச் சிறைத் தண்டனை பெற்ற தேசபக்தரின் வீர

உரை இது! தமிழ்த் தாயே! இப்படிப்பட்ட தேசபக்தர்களை இன்னுமின்னும் பெற்றுத் தருவாயாக!

வரலாறு அறியாத கொடுமை!

இரண்டு ஆயுள் தண்டனை என்றால், ஒவ்வொரு ஆயுள் தண்டனைக்கும் இருபது இருபது ஆண்டுகள் என்ற கணக்கிலே மொத்தம் 40 ஆண்டுகாலச் சிறைத் தண்டனையாகும். ''இந்த இரு தண்டனைகளையும் ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டும்'' என்று நீதிபதி பின்ஹே கூறியிருப்பாராயின், 20 ஆண்டுகள் முடிந்ததும் வீரச் சிதம்பரனார் சிறையிலிருந்து வீடு திரும்ப முடியும். அப்படிக்கின்றி, ''இரு வேறு தண்டனைகளையும் ஒன்றன் பின் ஒன்றாக அனுபவிக்க வேண்டும்'' என்றான் அந்தக் கொடுங்கோலன். அதனால், தொடர்ந்து 40 ஆண்டுக்காலம் ஏகாதிபத்திய இருட்சிறையிலே அடைபட வேண்டியவரானார் விடுதலை வீரர் சிதம்பரனார்.

இப்படிப்பட்ட கொடுந் தண்டனையை வேறு வெள்ளை நீதிபதி எவரும் வேறு எந்தச் தேச பக்தருக்கும் அதற்கு முன் விதித்தது இல்லை. இந்தியாவிலேயே முதன் முதலில் இரண்டு ஆயுள் தண்டனை பெற்றவர் தமிழ்த் தாய் பெற்றெடுத்த வீரர் சிதம்பரனார்தான்!

அந்தோ! சட்டம் படித்த வழக்கறிஞருக்கு - சைவ சித்தாந்த வேதாந்த சாத்திரம் படித்த சிவஞானிக்கு - ஏகாதிபத்தியக் கப்பலுக்கு எதிர்க் கப்பலோட்டிய தீரருக்கு இரண்டு ஆயுள் சிறைத் தண்டனை! வ.உ.சியின் உடலுக்கு ஆண்டவன் கொடுத்தது ஒரு ஆயுள்தான்! அதற்கு, அன்னியனான ஆங்கிலேயன் விதித்தது இரண்டு ஆயுள் காலச் சிறைவாசம்! இந்தக் கொடுமை நிகழ்ந்து பல தலைமுறைகளுக்குப் பின்னே இன்று நினைத்தாலும் நெஞ்சு நடுங்குகின்றதே!

''இந்தியனாக இரு; இந்தியப் பொருள்களையே வாங்கு!'' ''இந்தியர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்தால் வெள்ளையரை வெளியேற்றி விடலாம்'' என்று போதித்த பாவத்திற்காக ஒரு ஆயுள் காலச் சிறைத் தண்டனை!

சுத்த தேச பக்தரான சுப்பிரமணிய சிவாவைத் தமது வீட்டில் வைத்துச் சோறு போட்டதற்காக இன்னொரு ஆயுள் காலச் சிறைத் தண்டனை! ''வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்'' என்னும் தமிழ் முதுமொழியை வெள்ளையனான பின்ஹே அறிவானா?

திலகரும் அரவிந்தரும்

சிதம்பரனாருக்கு விதிக்கப்பட்ட கொடுந்தண்டனை குறித்து ஒரு சந்தர்ப்பத்திலே தமது கருத்தைக் கூறிய மூதறிஞர் ராஜாஜி,

> ''சிதம்பரம் பிள்ளைக்கு மரண தண்டனை கொடுக்கும் நோக்கத்துடன் அவர் மீது வழக்குப் போட்டு விசாரித்தார்கள். ஏதோ 'தயவு' செய்து இரண்டு ஆயுள் தண்டனையோடு விட்டு விட்டார்கள்''

என்று சொன்னார்கள். ''சிதம்பரம் கைதியானார்!'' என்ற செய்தி கேட்டபோதே, ''ஆண்டவன் இந்திய மக்களைச் சோதிக்கிறார் போலும்!'' என்று தமது ''வந்தே மாதரம்'' என்ற நாளிதழிலே வேதனையோடு எழுதினார் ஆசிரியர் அரவிந்தர். 'சிதம்பரனாரை தந்த சென்னை மாகாணத்திற்கு தேசம் நன்றியுடையதாயிருக்கும்' என்றும் கூறினார் அந்த மாமேதை.

அப்படிப்பட்டவர் சிதம்பரனாருக்கு இரண்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது குறித்து என்ன எழுதினார் என்று அறிந்துகொள்ளத் தோன்றுகிறதல்லவா! எழுதுவதற்கு அரசு அவரை வெளியே விட்டு வைக்கவில்லை.

சிதம்பரனார் கொடுந் தண்டனை பெறுவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பே 5-5-1908-இல் அரவிந்தரைக் கைது செய்து சிறையிலடைத்து விட்டது வங்காள ஆட்சி. அரசாங்கத்தைக் கவிழ்க்கும் ஆயுதப் புரட்சிக்கு சதி செய்தார் என்று சொல்லி, வங்காள அரசு அரவிந்தர் மீது வழக்குத் தொடுத்தது. அதன் பெயர் ''அலிப்பூர் சதி வழக்கு!''

சிதம்பரனாருக்கு இரண்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டபோது தீவிர தேசியவாதிகளின் தலைவரான திலகர் பெருமானும் சிறைக்கு வெளியே இருக்கவில்லை. தமது ''கேசரி'' பத்திரிகையிலே எழுதிய ஆட்சேபகரமான ஒரு கட்டுரைக்காக அரசு அவரைச் சூன் மாதக் கடைசி வாரத்தில் கைது செய்து, அவர்மீது வழக்குத் தொடுத்தது. நீதிமன்றம் அவருக்குச் சூன் 29-இல் ஆறு ஆண்டுக்காலச் சிறைத் தண்டனை விதித்தது.

புயல் அடங்கியது!

தேச பக்த சாதியினர் ''மிதவாதிகள்'' என்றும் ''தீவிரவாதிகள்'' என்றும் கட்சி பிரிந்து போராடிய குருக்ஷேத்திர பூமியான சூரத் நகரிலே தீவிரவாதிகளின் தேசியக்கட்சி பிறந்தது.

அந்தக் கட்சியின் வங்க மாநிலச் செயலாளரான அரவிந்தரையும், பம்பாய் மாகாணச் செயலாளரான திலகரையும், சென்னை மாகாணச் செயலாளரான வ.உ.சி.யையும் சற்றேறக் குறைய ஏக காலத்தில் சிறையில் தள்ளிவிட்டது ஆட்சி. அநேகமாக இவர்களோடு அடங்கிவிட்டது தீவிரவாதப் புயல்!

சிதம்பரனாருக்கு விதிக்கப்பட்ட தண்டனையானது இந்தியா முழுவதிலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது! மிதவாத காங்கிரஸ்காரர்கூட அதிர்ச்சியடைந்தனர்.

மிதவாதத்தை மதவாதமாகக் கொண்ட மகாகனம் வி.எஸ். சீனிவாச சாஸ்திரியார்கூடப் பின்ஹேயின் தீர்ப்பைக் கேட்டு அதிர்ச்சியடைந்தார். தம்முடைய சக மிதவாதியான சென்னை வி. கிருஷ்ணசாமி ஐயருக்கு எழுதிய ஒரு கடிதத்திலே சாஸ்திரியார் தெரிவித்திருந்த கண்டனம் வருமாறு:

''சிதம்பரம் பிள்ளைக்கும் சுப்பிரமணிய சிவாவுக்கும் விதிக்கப்பட்டுள்ள மிக மோசமான நாடு கடத்தும் தண்டனையைக் கேட்டு நான் கோபமடைந்து விட்டேனா என்பது முக்கியமல்ல; என் கோபம் ஒருபுறமிருக்கட்டும். இவ்வளவு கடுமையான தண்டனையை இரு பெரும் தேசபக்தர்களுக்கு விதித்திருப்பதைப் பொதுமக்கள் பொறுக்க மாட்டார்கள். அவர்களின் ஆவேசம் அடக்கவுணர்ச்சியையும் கடந்துவிடும்.

''ஆற்றல் மிக்க அரசு தனக்கு வேண்டாதவர்களைத் தண்டிக்கச் சட்டத்தைச் சார்ப்பாக்கிக் கொள்ள முடியலாம். ஆனால், மக்களின் மனம் குமுறிவிட்டால் அதைத் தடுக்கச் சட்டத்தால் முடியுமென்று நான் கருதவில்லை.''

பத்திரிகைகள் அலறல்!

திலகர், அரவிந்தர், சிதம்பரனார் ஆகிய முப்பெருந்தலைவர்களைச் சிறையில் தள்ளுவதென்று முடிவெடுத்துவிட்ட அரசானது அதன் எதிர் விளைவுகளிலிருந்து தன்னைக்காப்பாற்றி கொள்வதற்காகத் தேசியப் பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டுப் போடக் கூடிய அளவிலே பத்திரிகைச் சட்டம் ஒன்றை 1908 சூன் 8-இல் அமுலுக்குக் கொண்டு வந்தது. அதன் விளைவாக, செய்திகளைப் பிரசுரிப்பதற்குக் கெடுபிடி ஏற்பட்டது. அதனால், முப்பெருந் தலைவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை முழு அளவில் பிரசுரிக்கவும் கண்டிக்கவும் பத்திரிகைகளால் முடியவில்லை. அப்படியிருந்தும், வங்கத்தின் தீவிர நாளேடுகளான ''அமிர்த பஜார்'' ''வங்காளி'', சென்னை நாளேடுகளான

''சுதேசமித்திரன்,'' ''ஸ்டாண்டர்டு'' ஆகியவை கப்பலோட்டிய தமிழருக்கு விதித்த கடுந் தண்டனை குறித்துக் கண்டனம் செய்தன. ''இங்கிலீஷ் மேன்'' என்னும் அரசாங்கச் சார்புடைய கல்கத்தா ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுதான் பின்ஹேயின் தீர்ப்பை ஆதரித்து எழுதியது.

திலகரும் சிதம்பரனாரும் கொடுந் தண்டனைக்காளானது குறித்துப் பம்பாயிலும் திருவனந்தபுரத்திலும் கொந்தளிப்பு ஏற்பட்டது. கடைகள் அடைக்கப்பட்டன. தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர்.

கல்கத்தாவிலே விபின்சந்திர பாலர் ஆவேசமாகப் பேசினார். ''திலகரையும் சிதம்பரனாரையும் வங்காள மக்கள் என்றென்றும் நினைவில் வைத்துப் போற்றி வருவார்கள்'' என்று கூறினார். அவர்களைப் பின்பற்றும் வகையில் தொடர்ந்து சுதேசிப் பொருள்களை ஆதரிக்கவும், பரதேசப் பொருள்களைப் பகிஷ்கரிக்க வும் வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

ஆந்திரப் பிரதேசத்தில் பெஜவாடாவிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த ''சுயராஜ்யா'' (26-3-1908) வாரப் பத்திரிகையிலே சிதம்பரனார் கைது செய்யப்பட்டது குறித்துக் கண்டனம் செய்ததற்காக அதன் ஆசிரியர் அரிசர்வோத்தமராவ் எம்.ஏ. அவர்கள் கிருஷ்ணா ஜில்லா செஷன்ஸ் நீதி மன்றத்திலே 3 வருடச் சிறைத் தண்டனை பெற்றார்.

மயிலாப்பூர் கிருஷ்ணசாமி சர்மா என்பவர், கரூரில் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றிலே சிதம்பரனார் கைது செய்யப்பட்டதைக் கண்டித்துப் பேசியதற்காகக் கோவை செஷன்ஸ் நீதி மன்றத்தில் 5 ஆண்டுக் கடுங்காவல் தண்டனை பெற்றார். பின்னர் உயர்நீதி மன்றத் திற்கு அப்பீல் செய்ததில் மூன்றாண்டாகக் குறைக்கப் பட்டது.

திலகரும் சிதம்பரனாரும் சிறைப்பட்டதைக் கண்டித்து 25-7-1908 சென்னையில் ஊர்வலமும் மூர்மார்க்கெட்டில் பொதுக்கூட்டமும் நடத்தியதற்காகச் சுரேந்திரநாத் ஆரியா என்ற தமிழ் நாட்டுத் தீவிரவாதி கைது செய்யப்பட்டார். இவருக்கு 5 ஆண்டு தீவாந்தர தண்டனை விதிக்கப்பட்டது. பின்ஹேயின் தீர்ப்பை ஆட்சேபித்து எழுதியதற்காக ''இந்தியா'' ஆசிரியர் திரு. சீனிவாசன் என்பவருக்கு 5 வருடத் தீவாந்தரத் தண்டனை விதிக்கப்பட்டது.

தமது ''இந்தியா'' பத்திரிகையில் பின்ஹேயின் தீர்ப்பை எதிர்த்து எழுதியதற்காக மகாகவி பாரதியாரைக் கைது செய்ய

வாரண்டு பிறந்தது. இச்செய்தியறிந்த பாரதியார் புதுவைக்குச் சென்றுவிட்டார்.

அப்பீல்!

திருநெல்வேலி செஷன்ஸ் கோர்ட்டில் தங்களுக்கு விதிக்கப்பட்ட கொடுந் தண்டனையை எதிர்த்துச் சிதம்பரனாரும் சிவாவும் சென்னை உயர்நீதிமன்றத்திற்கு அப்பீல் செய்தனர். அக்டோபர் 13 ஆம் தேதி நீதிபதிகள் ஆர்னால்டு ரைட், மன்றோ ஆகியோர் முன்பு அப்பீல் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அரசாங்கத் தரப்பில் பாரிஸ்டர் ரிச்மண்டு என்ற ஆங்கிலேயர் ஆஜராகி, செஷன்ஸ் கோர்ட் தண்டனையை உறுதிப்படுத்துமாறு வாதாடினார்.

நவம்பர் 4 ஆம் தேதியன்று நீதிபதிகளிருவரும் தீர்ப்பளித்தனர். அதிலே, சிதம்பரனாரும் சிவாவும் குற்றவாளிகள் என்று செஷன்ஸ் நீதிமன்றத்தில் அளித்த தீர்ப்பை உறுதிப்படுத்தினர். ஆனால், சிதம்பரனாருக்கு அரச நிந்தனைக் குற்றத்திற்காக விதிக்கப்பட்ட ஆயுள் தண்டனையை ஆறாண்டு தீவாந்தரமாகவும், சிவாவிற்கு ஆதரவளித்த குற்றத்திற்காக விதிக்கப்பட்ட மற்றொரு ஆயுள் தண்டனையையும் ஆறாண்டுத் தீவாந்தரமாகவும் குறைப்பதாகக் கூறினர். இந்த இரண்டு தண்டனைகளையும் ஏக காலத்தில் (மொத்தம் ஆறு ஆண்டுகள்) அனுபவிக்க வேண்டுமென்றும் கூறினர்.

சுப்பிரமணிய சிவாவுக்குச் செஷன்ஸ் கோர்ட் விதித்த 10 ஆண்டுத் தீவாந்தரத் தண்டனையை ஆறாண்டுத் தீவாந்தரமாகக் குறைத்தனர்.

நாடகம்!

தேச பக்திக்கு இரண்டு ஆயுள் தண்டனை கொடுத்த செஷன்ஸ் நீதிபதி பின்ஹேயும் ஆளும் சாதியைச் சார்ந்த ஆங்கிலேயர்தான்; அந்தக் கொடுந் தண்டனையை ஆறாண்டாகக் குறைத்த சென்னை உயர்நீதிபதிகளும் ஆங்கிலேயர்தான்; தேசபக்தர்களை அடிப்பவர்களாகப் பலரும், அடிப்பட்டவர்களை அனைத்து ஆறுதல் தருபவர்களாகச் சிலருமாக ஆங்கிலேயர் அணி பிரிந்து நாடகம் நடத்திய காலம் அது.

★-★-★

அடக்குமுறைச் சகாப்தம்!

1908 ஆம் ஆண்டு, பொதுவாக, இந்திய விடுதலை வீரர்களுக்கு ஒரு பயங்கரமான சோதனை ஆண்டாக அமைந்தது. சிவாவும் சிதம்பரனாரும் கொடுந் தண்டனைகளைப் பெற்றபின் முன்னவர் கோவை மத்திய சிறையிலும், பின்னவர் திருச்சி மத்திய சிறையிலும் அடைக்கப்பட்டனர்.

புதுவையில் அடைக்கலம்!

அதிகார வர்க்கம் இந்த இரு பெரும் சிங்கங்களை வேட்டையாடியதோடு அமைதியடைவில்லை; எஞ்சிய தேசபக்தர்களையும் வேட்டையாடமுனைந்தது.

கவியரசர் பாரதியாரையும் கைது செய்ய வாரண்டு பிறப்பித்தது. இதை முன்கூட்டியே தெரிந்து கொண்ட பாரதியார், போலீசாரை ஏமாற்றிவிட்டுப் புதுவை நகருக்குச் சென்றுவிட்டார்! ஆம், அங்கேயே முகாம் போடுவது என்ற முடிவுடன்!

பாரதியாரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்து கொண்டிருந்த ''இந்தியா'' பத்திரிகை மீதும் அடக்குமுறைப் பாணத்தை விடுத்தது அரசு. அதில் வெளியான ஆட்சேபகரமான கட்டுரைகளுக்காகப் பெயரளவில் அதன் ஆசிரியராகவிருந்த திரு. சீனிவாச ஐயங்கார் என்பவர் கைது செய்யப்பட்டார். அரச நிந்தனைக் குற்றத்திற்காக அவருக்கு ஐந்தாண்டுத் தீவாந்தரத் தண்டனை விதித்தது நீதி மன்றம். இதற்குப்பின் ''இந்தியா'' பத்திரிகையின் அலுவலகம் சந்தடியின்றிப் புதுவைக்கு மாற்றப் பெற்றது. அங்கிருந்து தொடர்ந்து வெளியிடப் பெற்றது.

''இந்தியா'' பத்திராதிபர் மண்டயம் திரு. சீனிவாசாச்சாரியாரும் புதுவையில் அடைக்கலம் புகுந்துவிட்டார்! அப்போது, புதுவை, காரைக்கால், சந்திரநாகூர் ஆகிய பிரதேசங்கள் பிரெஞ்சுப் பேரரசின் பிடிக்குள் இருந்தன. ஆனால், இந்தியாவில் ஆதிக்கம் செலுத்திய பிரிட்டிஷ் பேரரசின் அதிகாரம்

அங்கெல்லாம் செல்லுபடியாகாத நிலை இருந்தது. அந்நாளில் பிரிட்டிஷ் அரசுக்கும் பிரான்ஸ் அரசுக்கும் அடிக்கடி ஊடல் நிகழ்ந்து வந்தது. அதனாலும், பிரிட்டிஷ் இந்தியாவைச் சார்ந்த விடுதலை வீரர்கள் பிரெஞ்சு இந்தியாவான புதுவையில் அடைக்கலம் புகுவதைப் பிரெஞ்சு அரசு அனுமதித்து வந்தது. அதனாற்றான் பாரதியார் புதுவையில் அடைக்கலம் புக முடிந்தது அந்தப் புதுமையைப் புரிந்த முதல் இந்திய தேச பக்தர் பாரதியார்தான்.

''மித்திரன்'' மீது தாக்கு!

பிரிட்டிஷ் ஆட்சியின் விஷக் கண்பார்வை திரு.ஜி. சுப்பிரமணிய ஐயரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்து கொண்டிருந்த ''சுதேச மித்திரன்'' பத்திரிகை மீதும் விழுந்தது. அதில் வெளியான ஆட்சேபகரமான சில கட்டுரைகளுக்காக அதன் ஆசிரியர் திரு.ஜி. சுப்பிரமணிய ஐயர் கைது செய்யப்பட்டார். திரு. ஐயர், அந்நாளைய காங்கிரசில் நிலவிய தீவிரவாதிகள் பிரிவிலோ, மிதவாதிகள் பிரிவிலோ தம்மை ஐக்கியப்படுத்திக் கொள்ள வில்லை. இரண்டு பிரிவுகளையும் சாராதவராகவே இருந்து வந்தார். ஆனால், சூரத் காங்கிரஸ் கலைந்த பின், அங்கு மிதவாதிகளால் நடத்தப்பட்ட ''கன்வென்ஷனி''ல் திரு.ஜி.சு ஐயர் கலந்து கொண்டார். தமது மனச்சாட்சிப்படி திரு. ஐயர், தீவிரவாதிகளின் கருத்துக்களையே தம்முடைய எழுத்திலும் பேச்சிலும் எதிரொலித்து வந்தார். உடல்நலக்குறைவு காரணமாக குற்றாலத்தில் தங்கி ஓய்வு பெற்ற வந்த தருணத்தில் 28-8-1908 இல் அங்கு அவர் கைது செய்யப்பட்டார். தென்காசி காவல் நிலையத்தில் சில மணி நேரம் காவலில் வைக்கப்பட்டபின், ரயில் மூலமாக சென்னைக்கு அழைத்து வரப்பட்டார்.

சென்னையில் ''சுதேச மித்திரன்'' அலுவலகத்தையும், அதன் ஆசிரியர் ஜி.சு. ஐயரின் வீட்டையும் போலீசார் சோதனை யிட்டனர். முன்பு, ''சுதேச மித்திரனி''ல் வெளியான ஆட்சேபகர மான கட்டுரைகளுக்காக இபிகோ 124 ஏ விதிப்படி திரு. ஐயர் மீது சென்னை பிரதம மாகாண் மாஜிஸ்திரேட் முன்பு வழக்கு தொடரப்பட்டது. விசாரணைக் கைதியாக அவர் சென்னை மத்திய சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார். விசாரணை முடியும் வரை ஐயரை ஜாமீனில் விடுவிக்க அவருடைய நண்பர்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் மனுச் செய்தனர். தலைமை நீதிபதி

ஆர்னால்டு ரைட் என்பவர் ஜாமீன் மனுவைத் தள்ளுபடி செய்தார். இதனை ''இந்து'' பத்திரிகை கடுமையாகக் கண்டனம் செய்தது.

திரு. ஐயர் தொழு நோயால் பாதிக்கப்பட்டிருந்தார். அதனால், மருத்துவ காரணத்திற்காகவும் ஜாமீன் மனுவை ஏற்க மறுத்தது சென்னை உயர்நீதி மன்றம்.

நன்னடத்தை ஜாமீன்

பின்னர், சென்னை அரசாங்கத்திடம் செல்வாக்குப் பெற்றிருந்த மிதவாத அரசியல்வாதிகளில் சிலர், ஐயரை விடுவிக்கத் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தினர். அதன் விளைவாக, ஐயர் மீது தொடுக்கப்பட்ட வழக்கை வாபஸ் பெறுவதாக அரசாங்க வக்கீல் நியூஜண்ட் கிராண்ட் என்பவர் பிரதம மாகாண மாஜிஸ்திரேட் கோர்ட்டில் அறிவித்தார். அரசு ஐயருக்கு நிபந்தனையற்ற விடுதலை தர மறுத்துவிட்டது. அரசாங்கத்திற்கு எதிராக எழுத்திலோ பேச்சிலோ, பிற வகையிலோ எதுவும் செய்வதில்லையென்று ஒரு வருட காலத்திற்கு நன்னடத்தை ஜாமீன் எழுதிக் கொடுத்த பின்னரே ஐயரை அரசு விடுதலை செய்தது.

ரூ.2500 வீதம் மொத்தம் ஐயாயிரம் ரூபாய்க்கு இருவேறு நபர் ஜாமீன்களும் ஐயருக்காகப் பெறப்பட்டன. அது, திரு. சுப்பிரமணிய ஐயருக்கு மிகுந்த வருத்தத்தைத் தந்ததென்றாலும், தொழு நோயால் அவதிப்பட்டிருந்த நிலையில் அதைச் செய்யுமாறு மிதவாத நண்பர்களால் அவர் கட்டாயப்படுத்தப் பட்டார். இதற்குப் பின்னரும் திரு.ஜி.சு. ஐயர் ''சுதேசமித்திர'' னில் தலையங்கங்கள் எழுதி வந்தாரென்றாலும், அவற்றிலே பழைய ஆவேசம் இல்லை. அனேகமாக இந்த ஜாமீன் விடு தலைக்குப் பின் தமது அரசியல் வாழ்வுக்கு ஐயர் தாமே முற்றுப் புள்ளி வைத்துக் கொண்டு விட்டார். 18-4-1915-இல் தாம் மறையும் வரை சமூகச் சீர்திருத்தப் பணியிலேயே ஈடுபட்டு வந்தார்.

மிதவாதிகள் கைவரிசை

தமிழ்நாட்டிலே தீவிரவாதிகள் அன்னிய ஆட்சியால் அடக்கி ஒடுக்கப்பட்டதானது, மிதவாத அரசியல்வாதிகள் முன்னேற்றத்திற்கு வழி வழங்கி விட்டதாக அமைந்தது. 1908-ம் ஆண்டு டிசம்பர் மாத இறுதியிலே இந்திய தேசிய காங்கிரஸின் 23-வது மகாசபையை சென்னை மாநகரில் நடத்த மிதவாதிகள் கூட்டம் முன் வந்தது. திரு.வி. கிருஷ்ணசாமி ஐயர் வரவேற்புக்

குழுத் தலைவராகப் பொறுப்பேற்றார். உண்மையில் அவர்தானே மயிலாப்பூர் வக்கீல்களைக் கொண்ட மிதவாதிகள் கூட்டத்தின் தலைவர்!

ஒவ்வொரு காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தின் இறுதியிலும் அடுத்த மகாசபை கூடும் நகரை ஒரு தீர்மானத்தின் மூலம் அறிவிப்பது வழக்கமாக இருந்தது. ஆனால், சூரத்திலேயே 23-வது காங்கிரஸ் மகாசபையானது குழப்பத்தில் முடிந்ததால், அடுத்த மகாசபை கூடும் இடம் அங்கு அறிவிக்கப்படவில்லை. அதனால், காங்கிரஸ் பொதுச் செயலாளர்கள் ஒவ்வொரு மாகாணத்தையும் அணுகி, 23-வது மகாசபையை நடத்த ஆதரவு கோரினர். வட புலத்திலே ஒரு மாகாணமும் பொறுப்பேற்கத் துணியவில்லை. ''நம்மால் முடியாது'' என்று கூறி ஒதுங்கி விட்டன. காரணம், நாடு முழுவதிலும் தீவிரவாதிகளான உண்மைத் தேசியவாதிகள் அன்னிய அரசால் வேட்டையாடப்பட்டு வந்ததுதான்.

சென்னையில் காங்கிரஸ்

காங்கிரஸ் மகாசபை கூடினால் ராஜ வாழ்த்துடன் நடவடிக்கையைத் தொடங்க வேண்டும் அல்லவா? மகாசபை கூடும் மாகாணத்தின் கவர்னரிடம் வாழ்த்துச் செய்தி பெற்று அதை பயபக்தியுடன் மகாசபையின் பிரதிநிதிகள் அனைவரும் எழுந்து நின்று கேட்கும் நிலையில் படிக்கவும் வேண்டுமல்லவா? சக தேசபக்தர்கள் அன்னிய ஆட்சியின் அடக்குமுறைக் கொடுமைகளை அனுபவித்து வரும் நேரத்திலே, இந்தத் தன்மான மற்ற சடங்குகளோடு மகாசபையை நடத்த வடபுலத்து மாநிலங்களுக்குத் துணிவு இல்லை; சென்னை மாகாணத்திற்குத்தான் இருந்தது. இங்கும் மயிலாப்பூர் வக்கீல் கூட்டத்திற்குத்தான் இருந்தது. அவர்களிலும் திரு. கிருஷ்ணசாமி ஐயருக்குத்தான் அதிகமாக இருந்தது.

தமிழ்நாட்டிலும் மிதவாத அரசியல்வாதிகளான திரு.வி.எஸ். சீனிவாச சாஸ்திரியார், திரு.பி.எஸ். சிவசாமி ஐயர் போன்றவர்கள் ஆரம்பத்தில் திரு.வி. கிருஷ்ணசாமி ஐயருடைய முயற்சிக்கு எதிராகவே இருந்தனர். ஆனால், ஐயர் எப்படியோ அவர்களைச் சமாதானப்படுத்தி, மகாசபையை சென்னையில் நடத்த மேலிடத்தாரிடம் ''தாம்பூலம்'' பெற்று விட்டார்!

சூரத் காங்கிரசிலே தலைமையுரையைப் படிக்க முடியாமல் தோல்வியடைந்த டாக்டர் ராஷ்பிகாரிகோஷ், சென்னையில்

கூடிய மகாசபையின் தலைவராக வரவேற்புக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்பெரியார் சூரத்தில் தமக்கு ஏற்பட்ட தோல்வியை சென்னையில் ''வெற்றி''யாக மாற்றிக் கொள்ளும் வாய்ப்பினைப் பெற்றார்.

வங்கம் வரவில்லை!

கல்கத்தாவில் நடைபெற்ற 22-வது காங்கிரஸ் மகா சபையிலே 663 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். ஆனால், 1908-இல் சென்னையில் நடைபெற்ற மிதவாத கோஷ்டியார் நடத்திய மகாசபையிலே 626 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். மாகாண வாரிப் பிரதிநிதிகளின் எண்ணிக்கை வருமாறு:

சென்னை	-	404
பம்பாய்	-	134
வங்காளம்	-	36
உத்திரப் பிரதேசம்	-	23
மத்தியப் பிரதேசம்	-	
பீகார்	-	18
பஞ்சாப்	-	7
பர்மா	-	4

வங்காளியான டாக்டர் ராஷ்பிகாரி கோஷ் சென்னை காங்கிரசுக்குத் தலைமை வகித்தும் வங்காளத்திலிருந்து பிரதிநிதிகள் கணிசமான அளவில் வரவில்லை. ஆம்; வங்கமானது பிரிவினை என்னும் கோடரியால் வெட்டப்பட்டிருந்த நிலையில் - வங்க மாவீரர் அரவிந்தர் சதிக் குற்றத்திற்காக குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருந்த நிலையில் காங்கிரஸ் மகா சபையிலே கலந்து கொண்டு பிரிட்டிஷ் அரசருக்கு விசுவாசம் தெரிவிக்க வீரவங்கம் முன் வருமா?

தலைமறைவாயினர்!

சென்னை காங்கிரசில் சிறைக்கு வெளியேயிருந்த தீவிர வாதிகளில் எவரும் கலந்து கொள்ளவில்லை. அவர்களிலே மிகப் பெரும்பாலோர் புரட்சிச் செயல்களில் ஈடுபடுவதற்காகத் தலைமறைவாகி விட்டனர்! அதனால், ஒருதலைப்பட்சமாகவே மகாசபை நடந்தது. சூரத் காங்கிரசுக்குப் பின்னர் 1908 ஏப்ரலில் அலகாபாத்தில் மிதவாதிகளின் கன்வென்ஷன் கூடி, தீவிரவாதிகள் திரும்பவும் காங்கிரசுக்குள் புகமுடியாதபடி அமைப்பு விதிகளைத் தயாரித்துவிட்டது. அந்த விதிகளின்

படித்தான் சென்னையில் கூடிய காங்கிரஸ் மகாசபைக்குப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். அதனாலும் தீவிரவாதி கள் மகாசபைப் பந்தலுக்குள் நுழைய முடியவில்லை.

வழக்கம்போல, அரச வாழ்த்துப் பாடப் பெற்றது. பிரிட்டிஷ் அரசுக்கு விசுவாசம் தெரிவிக்கும் தீர்மானமும் நிறை வேற்றப்பட்டது. அப்போது லண்டனில் இந்தியா மந்திரியாக இருந்த லார்டு பிரபுவின் மனத்தில் கருவாகியிருந்த அரசியல் சீர்திருத்தத்திற்கு அதன் முழு உருவமும் தெரிவதற்கு முன்பே அதற்கு வரவேற்புக் கூறும் தீர்மானம் சென்னை காங்கிரசில் நிறைவேற்றப்பட்டது.

பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் தேச பக்தர்களுக் கெதிராகக் கடைப்பிடித்து வந்த அடக்குமுறைக் கொடுமைகளைக் கண்டித்து வரவேற்புரையிலோ தலைமையுரையிலோ ஒரு வார்த்தைகூடக் கூறப்படவில்லை. சிறையில் அடைக்கப்பட்டிருந்த தீவிரவாதி களை விடுதலை செய்யக் கோரி பிரிட்டிஷ் அரசுக்கு வேண்டு கோள்கூட விடப்படவில்லை. இதற்கெல்லாம் மாறாக, ''அராஜக வாதிகள்'' எனப் பட்டம் தந்து சிறையில் அடைக்கப்பட்டிருந்த தீவிரவாதிகளைக் கண்டித்துப் பேசினார் டாக்டர் ராஷ்பிகாரி கோஷ்.

வழக்கம்போல டில்லி சட்டமன்றத்திற்கும் மாநில சட்ட மன்றத்திற்கும் உத்தியோகப் பற்றற்ற இந்தியர்களை அதிக அளவில் நியமனம் செய்ய வேண்டுமென்று வெள்ளையர் ஆட்சிக்கு வேண்டுகோள் விடப்பட்டது. வைசிராய் நிர்வாக சபைக்கும் மாநில கவர்னர்களின் நிர்வாக சபைகளுக்கும் இந்தியர்களையும் நியமிக்க வேண்டுமென்று கோரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திரு.வி. கிருஷ்ணசாமி ஐயர், சென்னை காங்கிரசை 'வெற்றி' கரமாக நடத்தி முடித்துவிட்டார்! ஆம்; அதட்டிக் கேட்போர் எல்லாம் சிறைகளிலே அடைக்கப்பட்டுவிட்ட காரணத்தால்!

தடம் புரண்டனர்!

1908 முதல் *1916* வரையுள்ள ஒரு காலகட்டத்திலே இந்திய அரசியலில் என்னென்னவெல்லாமோ நிகழ்ந்தன. சிதம்பரனாருக் கும் திலகர் பெருமானுக்கும் கொடுந்தண்டனை விதிக்கப் பட்டதானது தீவிரவாதிகள் வட்டாரத்தையே அச்சுறுத்தி விட்டது எனலாம். சென்னை மாகாணத்தையே தம்முடைய ஆவேசச் சொற்பொழிவுகளால் புரட்சியில் இழுத்துவிட்ட

விபின்சந்திர பாலர், 1908-இல் இந்தியாவிலிருந்து வெளியேறிச் சென்று லண்டனில் முகாம் செய்தார். ஆம்; எந்த அரவிந்தருக்கு எதிராகச் சாட்சி சொல்ல மறுத்து ஆறுமாதச் சிறைத் தண்டனையைப் பெற்றாரோ, அதே அரவிந்தர் அலிப்பூர் சதிவழக்கில் குற்றவாளிக் கூண்டில் நிற்கும்போது, அவரைக் கைவிட்டு பாலர் லண்டன் சென்று 1911 வரை அங்கேயே தங்கி விட்டார்.

நாடு கடத்தல் தண்டனையை முதன்முதலாகப் பெற்ற பெருமைக்குரியவர் லாலா லஜபதிராய். அவர்கூட, 1908 முதல் 1914 வரை இருந்த இடமே தெரியவில்லை. 1914-இல் தாமே விரும்பி பிரிட்டிஷ் அரசின் அனுமதியோடு அமெரிக்கா சென்று, அங்கேயே பல ஆண்டுகள் தங்கிவிட்டார்!

அலிப்பூர் சதிவழக்கில் விடுதலை பெற்ற அரவிந்தர் 4-4-1910-இல் புதுவையிலே அடைக்கலம் புகுந்து அரசியலுக்கே தலை முழுக்குப் போட்டு ஆன்மிகவாதியானார்!

புதுவையோ புதுவை!

தமிழ்நாட்டிலே ''இந்தியா'' பத்திரிகையின் ஆசிரியர் பாரதியாரும் அதன் சொந்தக்காரரான திருமலாச்சாரியாரும் புதுவையில் அடைக்கலம் புகுந்து, தேச பக்தர்களுக்கெல்லாம் புதுவழி காட்டியதை ஏற்கனவே அறிந்தோம். பத்திரிகைகளிலேயும் தீவிரவாதத்தைச் சார்ந்து நின்றவை தடம்புரளலாயின.

''இந்தியா'' பத்திரிகையானது, இந்தியத் தமிழகத்திலிருந்து தன்னைத்தானே வெளியேற்றிக் கொண்டு புதுவையில் அடைக்கலம் புகுந்ததென்றால், வங்க மொழியில் கல்கத்தாவிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த ''அமிர்த பஜார்'' பத்திரிகை ஒரு இரவிலே ஆங்கில மொழிப் பத்திரிகையாக தன்னை மாற்றிக் கொண்டது.

தமிழ்நாட்டிலே முதலாகத் தோன்றிய தமிழ் நாளிதழான ''சுதேசமித்திரன்'' ஆசிரியர் ஜி.சு. ஐயர் ஒரு வருட காலத்திற்கு நன்னடத்தை ஜாமீன் கொடுத்துவிட்டதன் காரணமாக படுமிதவாத ஏடாகிவிட்டது! இப்படி, அரசின் அடக்குமுறைக் கொடுமையானது தீவிரவாதிகளைத் திணறடித்தது.

சிறைக் கொடுமை!

இதே நேரத்தில் சிறைச்சாலைகளில் அடைப்பட்டிருந்த தீவிரவாதிகளின் நிலைமை பரிதாபகரமானதாக இருந்தது.

சிறைச்சாலைகளில் சக அரசியல் கைதிகள் என எவரும் இல்லாத காலத்தில் அவர்கள் ஆண்டுக் கணக்கில் சிறைகளில் அடைபட நேர்ந்தது, அந்நாளில் சிறைச்சாலைகளில் 'ஏ' வகுப்பும் 'பி' வகுப்பும் கிடையாது. அதனால் களவு, கொலை, விபசாரம் ஆகிய கிரிமினல் குற்றங்களைப் புரிந்த சமூக விரோதிகளோடு தேச பக்தர்களும் சேர்ந்து சிறை வாழ்க்கையை நடத்த வேண்டியவர் களானார்கள். சீரியர் சிதம்பரனாரும் லோகமான்யரும் அரவிந்தரும்கூட இதற்கு விலக்கல்லர்.

அன்று சிறைச்சாலைகளை நிர்வகித்த ஐ.ஜி, துணை ஐ.ஜி., சூபரின்டெண்ட், ஜெயிலர் ஆகிய உயர் அதிகாரிகளெல்லாம் வெள்ளையர்களாகவே இருந்தனர். அவர்கள், வெள்ளைச் சாதியையே வெறுத்த தேச பக்த தீவிரவாதிகளைப் பழி வாங்கும் போக்கில் நடத்தினர். பர்மாவிலுள்ள மாண்டலே சிறையில் அடைப்பட்டிருந்த திலகர் கடுமையாக நோயுற்றார்.

ஆரியா பட்ட அவதி!

சென்னை மாகாணத்தில் பெல்லாரிச் சிறையில் அடைப் பட்ட சென்னை வாசியான எதிராஜ் சுரேந்திரநாத் ஆரியா என்பவர் சிறைக் கொடுமைகளைத் தாங்கிக்கொள்ள இயலாதவரானார். இந்நிலையில், தொழுநோய் வேறு கண்டது. இந்தச் சூழ்நிலையால் மனமுடைந்தவராகி, தற்கொலை செய்து கொள்ள முயன்றார். அதிலே அவர் வெற்றி பெறாததால், சிறைச்சாலைச் சட்டப்படி மேலும் 4 மாத கடுங்காவல் தண்டனையைப் பெற்றார். ஏற்கனவே அவர் ஐந்தாண்டு தீவாந்தரத் தண்டனையை அனுபவித்துக் கொண்டிருந்தார்.

திருச்சிராப்பள்ளிச் சிறைச்சாலையில் பத்தாண்டுத் தண்டனையை அனுபவித்துக் கொண்டிருந்த சுப்பிரமணிய சிவா, திடீரெனத் தொழுநோய் கண்டு தொல்லையுற்றார். அதனால், சேலத்தில் தொழுநோய் கண்ட கிரிமினல் குற்றவாளிகள் அடைபட்டிருக்கும் சிறைச்சாலைக்கு அவர் மாற்றப் பட்டார். அந்தோ! சிதம்பரனார் போன்ற சான்றோர்களுடைய தோழமையைப் பெற்றிருந்த சிவா, சமூக விரோதிகளோடு - அவர்களிலும் தொழுநோய் பிடித்தவர்களோடு சேர்ந்து ஆறாண்டுக் காலம் வாழ்க்கை நடத்தும் கொடுமைக்கு ஆளானார், இவர்களெல்லாம் செய்த ஒரே பாவம், தேசபக்தி கொண்டதுதான்! அதிலேயும் தீவிரவாதிகளாக இருந்ததுதான்!

சிறையில் சிதம்பரனார்!

கோவைச் சிறையில் அடைப்பட்ட சிதம்பரனார், உயர் அதிகாரிகளால் அன்றாடம் பழிவாங்கப்பட்டார். அடிக்கடி தனி அறையில் அடைக்கப்பட்டார்! வ.உ.சி. யவர்கள் கொடுமையாக நடத்தப்படுவது கண்டு ஆத்திரமடைந்த கிரிமினல் கைதிகள் ஜெயிலரை அடித்ததால், கோவை மத்திய சிறையில் ஒரு பெருங்கலகமே நடந்துவிட்டது. பல கைதிகள் மீது வழக்குப் போட்டு, அவர்களை மேலும் தண்டனைக்கு உள்ளாக்கியது அரசு.

பழி வாங்கும் நடவடிக்கையால் வ.உ.சியைக் கோவையிலிருந்து கண்ணனூர் மத்திய சிறைச்சாலைக்கு மாற்றினர் சிறை அதிகாரிகள். அங்கு அவரைப் படாதபாடு படுத்தினர். மலச்சட்டியை எடுக்குமாறு வற்புறுத்தினர். அதனைச் செய்ய மறுக்கவே, கல்லுடைக்க வைத்தனர். அதனால், கைகள் புண்பட்டதால், செக்கிழுக்கச் செய்தனர். இந்தக் கொடுமைகளைத் தாங்கிக் கொள்ள இயலாதவராகி, தமக்கு விதித்த தண்டனைக்கேற்பத் தம்மை அந்தமான் தீவுக்கே அனுப்பி விடுமாறு, சிதம்பரனார் வைசிராய்க்கு மனுச் செய்தார். அவருடைய மனைவியார் திருமதி மீனாட்சியம்மையார், தமிழ் நாட்டுச்சிறையில் வைத்துத் தம் கணவரை கொடுமைப் படுத்துவதை விடவும், அவரை அந்தமான் தீவுக்கு அனுப்பி விடுவது கூட நலமென்று பிரிட்டிஷ் மன்னர் பெருமானுக்கே மனுச் செய்து கொண்டார்.

சிறை வாழ்விலே தண்டனை 'வளர்ச்சி'

சூப்ரென்டெண்ட் வந்தபோது எழுந்து நிற்கத் தவறியதற்காக 3 நாள் தண்டனை; ஜெயிலருடன் எதிர் வாதம் புரிந்ததற்காக 4 நாள் தண்டனை; கேழ்வரகு கூழ் உணவு உண்ண மறுத்ததற்காக 9 நாள் தண்டனை - என, இப்படிப் பல்வேறு குற்றங்களுக்காகச் சிதம்பரனாருக்கு அடிக்கடி சிறை அதிகாரிகள் தண்டனைகள் விதித்து, மொத்தம் 37 நாட்களுக்கு சிறைவாச காலத்தை உயர்த்தினர். 129 பவுண்டு உடல் நிறையுடன் சிறைபுகுந்த சிதம்பரனார், சரியாக ஒன்றரையாண்டுக்குள் 111 பவுண்டாகக் குறைந்து விட்டார்.

கப்பலோட்டிய தமிழர், தாம் சிறையிலிருந்த காலம் முழுவதிலும் தம்மைப் படுத்தும் கொடுமைகளை விவரித்து, சென்னை மாகாண அரசின் தலைமைச் செயலாளர், சென்னை மாகாண கவர்னர், வைசிராய், ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தி ஆகியோருக்கு அடிக்கடிக் கடிதங்கள் எழுதியவண்ணம் இருந்தார்.

தமிழக அரசாங்க ஆவணக்களரியில் பாதுகாக்கப்பட்டு வரும் அந்தக் கடிதங்களின் நகல்களைப் பார்க்கும் எவரும் சிதம்பரனார் அந்நாளைய சிறைச்சாலையில் பட்ட அல்லல்களை நினைத்துக் கண்ணீர் வடிப்பர் என்பதில் ஐயமில்லை.

தாம் சார்ந்திருந்த தீவிரவாத வட்டாரத்தினர் சிறைச் சாலைகளில் படும் கொடுமைகளைக் கேட்டு - குறிப்பாக, சிதம்பரனாரும் சிவாவும் சிறைச்சாலைகளில் அனுபவிக்கும் அல்லல்களைக் கேட்டு, பாரதியார் பதறியழுதார் - ஆம்; பாடியழுதார்!

''மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதும்
நூலோர்கள் செக்கடியில் நோவதும் காண்கிலையோ?''

என்று பாடி, கடவுளை நிந்தித்து அழுது புலம்பினார். அந்நாளில் ஆளுவோர் தேச பக்தர்களுக்குச் செய்த கொடுமைகள் ஆண்டவனாலன்றி வேறெவராலும் தீர்க்க முடியாதவையாக இருந்தன. அதனாற்றான், பாரதியார், ஆண்டவனிடம் முறையிட்டு அழுதார்.

மானங் காத்த மகான்!

1908-இல் தேசம் முழுவதற்கும் ஏற்பட்ட பயங்கரச் சோதனையிலே தமிழ் நாட்டின் சார்பில் வ.உ.சி. போன்றவர்கள் பங்கேற்றில்லையானால், பிற்காலச் சரித்திராசிரியர்கள் தமிழகத்தைப் பழித்திருப்பார்கள். அந்தப் பழியைத் தவிர்த்தார் சிதம்பரனார். அவர் அரசியலில் புகுந்தது 1906-இல் இரண்டாயுள் தண்டனை பெற்றது 1908-இல், இரண்டே ஆண்டுகளில் தமிழ் நாட்டிற்கெனத் தனிச் சரித்திரம் படைத்தார், அந்தச் சரித்திர நாயகர். அவர் தோன்றில்லையேல், திலகர் சகாப்தத்தில் தென்னகத்திலே தமிழகத்தின் பங்கு ஒன்றுமில்லையென்று ஆகியிருக்கும்!

வடக்கே ராம் மோகனரும் தயானந்தரும் தோன்றிச் சமுதாயப் புரட்சி விளைவித்த காலத்திலே தெற்கே ஒரு ராமலிங்கர் தோன்றி, தமிழினத்திற்குப் பெருமை தேடினார்.

பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு எதிராக கர்நாடகத்தில் ஐதரலியும் திப்பு சுல்தானும் தோன்றிய ஆயுதப் போர் நடத்திய காலத்திலே, தமிழகத்திலும் ஒரு கட்டபொம்மன் தோன்றித் தமிழினத்தாரின் மானத்தைக் காத்தான்.

இந்த மானங்காத்த வரலாற்றின் தொடர்ச்சியாக, விடுதலைப் போரின் ஒரு கட்டமான திலகர் சகாப்தத்திலே; வீரர்

சிதம்பரனார் தோன்றித் தமிழினத்தின் பங்கை நிறைவேற்றினார், தமிழினமே, அந்தச் சரித்திர நாயகரை நன்றியோடு நினைவில் கொள்ளத் தவறாதே!

பதவி வேட்டை

இவ்வாறெல்லாம் தங்கள் சகோதர தேச பக்தர்கள் அல்லற்பட்டு வந்த நேரத்திலே, மிதவாதிகள் பதவி வேட்டையில் ஈடுபட்டனர். வைசிராய் மிண்டோவும் லண்டனிலிருந்த இந்தியா மந்திரி மார்லியும் சேர்ந்து இந்தியாவுக்கு ஒரு அரசியல் சீர்திருத்தத் திட்டத்தை 1909-இல் வழங்கினர். அதன் பெயர்; ''மிண்டோ - மார்லி சீர்திருத்தம்'' ஆகும். அதன்படி, வைசிராய் நிர்வாக சபையிலேயும் கவர்னர் நிர்வாக சபையிலேயும் இந்தியர்களும் இடம்பெற வாய்ப்பளிக்கப் பெற்றது. மத்திய, மாநிலச் சட்ட மன்றங்களிலே தேர்தலின் மூலம் வருவோரின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டது. மத்திய - மாநில சட்டமன்றங்களிலே வினாக்களை எழுப்பவும் அரசிடமிருந்து விடைகளைப் பெறவும் உறுப்பினர்களுக்கு உரிமையளிக்கப் பெற்றது. படித்த பட்டதாரிகளுக்கும் சொத்துப் படைத்தோருக்கும் ஏற்கெனவே இருந்துவந்த வாக்குரிமை சிறிது விரிவுபடுத்தப்பட்டது.

இந்த அற்பச் சீர்திருத்தத்தை வழங்கியதற்காக, மிதவாதிகள் கையில் சிக்கிய இந்திய தேசிய காங்கிரசானது பரங்கியருக்குப் பல்லாண்டு பாடியது. சீர்திருத்தம் வழங்கிய பதவிகளைப் பிடிக்க மிதவாதிகள் தங்களுக்குள்ளேயே அணிபிரிந்து போட்டியிட்டனர். மிண்டோ - மார்லி சீர்திருத்தத்தை வைத்துக்கொண்டு, காங்கிரசி லிருந்த பெரிய மனிதர்களை வலைவீசிப் பிடித்தது பிரிட்டிஷ் ஆட்சி! ஆம், எதற்காக வக்கீல் கூட்டத்தார் காங்கிரசில் சேர்ந்தார்களோ, காங்கிரசிலிருந்து தீவிரவாதிகளை விரட்டினார் களோ அது அவர்களுக்குக் கிடைக்கும் தருணம் வாய்த்து விட்டது!

பரங்கியர் வழங்கிய பதவிகளைப் பெறுவதிலே பிராமணர் - பிராமணரல்லாதார் என்ற வகுப்பு வாதப் போட்டியும் ஏற்பட்டுவிட்டது! அந்தப் போட்டி காரணமாக, காங்கிரசிலிருந்து விலகி சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியானார், பிராமண ரல்லாதாரான சர். சங்கரன் நாயர்.

பிராமணர்களிலே மிதவாதிகள் தலைவரான திரு.வி. கிருஷ்ணசாமி ஐயரும் சென்னை உயர்நீதி மன்றத்தின் நீதிபதியானார். இது நிகழ்ந்தது 1910-இல். ஒரு வருடத்திற்குள் -

அதாவது 1911-இல் கவர்னர் நிர்வாக சபையின் உறுப்பினரானார் வி.கிருஷ்ணசாமி ஐயர்.

வித்து விழுந்தது!

அந்நாளில் நீதிபதி, அட்வகேட் ஜெனரல், வைசிராய் நிர்வாக சபை உறுப்பினர், கவர்னர் நிர்வாக சபை உறுப்பினர் ஆகிய பதவிகளுக்குக் காங்கிரசைச் சார்ந்த மிதவாதிகளிலிருந்தே நபர்களை அரசாங்கத்தார் பொறுக்கியெடுக்க வேண்டியிருந்தது. படித்தவர்கள் - குறிப்பாக, வக்கீல்கள் அந்த அளவுக்கு காங்கிரசிலே கலந்திருந்தனர்.

இவர்கள் 'மயிலாப்பூர் வக்கீல்கள்' என்றும், 'எழும்பூர் வக்கீல்கள்' என்றும் இரு வேறு பிரிவினராகப் பிரிந்து செயல்பட்டனர். முன்னவர் அநேகமாகப் பிராமணர்களாகவும், பின்னவர் அநேகமாகப் பிராமணரல்லாதாராகவும் இருந்தனர். மயிலாப்பூர் வக்கீல்களுக்குத் திரு.வி. கிருஷ்ணசாமி ஐயர் தலைவரென்றால், எழும்பூர் வக்கீல்களுக்குச் சர்.சி. சங்கரன் நாயர் தலைவராக இருந்தார். டாக்டர் டி.எம். நாயரும் எழும்பூர் கூட்டத்தாருடன் சேர்ந்திருந்தார்.

1917-இல் அறிவிக்கப்பட்ட மாண்டேகு - செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தின் விளைவாகத்தான் ஜஸ்டிஸ் கட்சி தோன்றியது. அதற்கு எட்டாண்டுகளுக்கு முன்பே மிண்டோ- மார்லி சீர்திருத்தம் வழங்கப்பட்டபோது ஜஸ்டிஸ் கட்சி தோன்றுவதற்கான வித்து விழுந்து விட்டது!

பாரதியார் பாட்டு!

அநேகமாக இந்தியாவில் மிதவாதிகள் எனப்பட்டோரில் பெரும்பாலோர் சர்க்காரின் சேவகர்களாகி விட்டனர். அதைப் பெறத்தானே அவர்கள் காங்கிரசிலே சேர்ந்தார்கள்.

''உழுது விதைத் தறுப்பாருக்கு
உணவில்லை; பிணிகள்
பலவுண்டு; பொய்யைத்
தொழுதடிமை செய்வார்க்குச்
செல்வங்களுண்டு; உண்மை
சொல்வோர்க் கெல்லாம்
எழுதரிய பெருங்கொடுமைச்
சிறையுண்டு; தூக்குண்டே இறப்பதுண்டு;

முழுதுமொரு பேய்வனமாம்
சிவேரியிலே ஆவிகெட முடிவதுண்டு.
''இம்' என்றால் சிறைவாசம்; 'ஏன்?' என்றால்,
வனவாசம்; இவ்வா றங்கே
செம்மையெலாம் பாழாகிக் கொடுமையே
அறமாகித் தீர்ந்தது''...

என்று, ஜார் ஆட்சிக் காலத்து ருஷ்ய நாட்டைப் பாரதியார் வருணித்தார். இது, பிரிட்டிஷ் இந்தியாவுக்கும் பொருந்துவதாகும்.

★-★-★

கலெக்டர் ஆஷ் கொலை!

இந்தியாவிற்குப் பிரிட்டிஷாரால் வழங்கப்பட்ட மிண்டோ மார்லி சீர்திருத்தத்தைப் பாரதியார் கேலி செய்து பாடினார். வள்ளலார், இறையருளில் ஆன்மா கலந்து பேரின்பம் பெற வேண்டுமானால், அதற்கு எத்தனையோ தடைகள் இருக்கின்றனவென்பதனைக் ''களக்கமறப் பொது நடனம்'' என்ற பாட்டில் விளக்கினார். அதையே சிறிது திருத்திப் பாடினார் பாரதியார். அந்தப் பாடல் வருமாறு:

களக்கமுறும் மார்லிநடம் கண்டுகொண்ட தருணம்
கடைச் சிறியேன் உளம்பூத்துக் காய்த்ததொரு காய்தான்
விளக்கமுறப் பழுத்திடுமோ? வெம்பிவிழுந் திடுமோ?
வெம்பாது விழினுமென்றன் கரத்திலகப் படுமோ?
வளர்த்தபழம் கர்சானென்ற குரங்குகவர்ந் திடுமோ?
மற்றிங்கன் ஆட்சி செய்யும் அணில் கடித்து விடுமோ?
துளக்கமற யான்பெற்றிங்கு உண்ணுவனோ, அல்லால்
தொண்டைவிக்கு மோஏதும் சொல்லரிய தாமோ?

பதவிகளும் பட்டங்களும்

பாரதியார் புதுவையிலிருந்தபடி, இந்தப் பாட்டை இயற்றினார். உண்மையில் மிண்டோ - மார்லி சீர்திருத்தம் சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள சாதாரண மக்களுக்கு நன்மை தரத்தக்கதாக இல்லை. ஆனால், படித்த வகுப்பாருக்குப் பல பதவிகளை வழங்க வல்லதாக இருந்தது. இதற்குச் சான்றாகப் படுமிதவாதியான திரு.பி.எஸ். சிவசாமி ஐயர் பெற்ற பதவிகளையும் பட்டங்களையும் பார்ப்போம்:

''*1907*-ஆம் வருஷம் முதல் *1912*-ஆம் வருஷம் வரை ஆறு ஆண்டுகள் இவர்தம் வாழ்க்கையில் ஒரு முக்கியக் கட்டம் என்று சொல்லவேண்டும். சென்னை அட்வகேட் ஜெனரல் பதவி வகித்தார். இக்காலத்தில்தான் இவருக்குப் பட்டங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வந்து குவிந்தன.

''1908-ஆம் வருஷம் சி.ஐ.ஈ. பட்டம்; 1915-ஆம் வருஷம் சி.எஸ்.ஐ பட்டம்; 1915-ஆம் வருஷம் கே.சி.எஸ்.ஐ. பட்டம் ஆகியவை இவரைத் தேடி வந்தன.

''1912-ஆம் வருஷம் முதல் 1917-ஆம் வருஷம் வரை சென்னை கவர்னர் நிர்வாக சபை (எக்ஸிகியூடிவ் கவுன்சில்) அங்கத்தினராக உத்தியோகம் பார்த்தார். அக்காலத்தில் ஆங்கிலேயர் ஆட்சியில் ஒரு இந்தியனுக்கு இதைவிட வேறு உன்னத பதவி கிடையாது.''

('அண்ணல் சிவசாமி ஐயர்'; பக். 31)

சர்.பி.எஸ். சிவசாமி ஐயர் 1906-இல் தஞ்சையில் நடைபெற்ற மாவட்ட அரசியல் (காங்கிரஸ்) மாநாட்டில் தலைமை வகித்தவர்.

காங்கிரசிலிருந்த மிதவாதிகளில் பிரிட்டிஷ் ஆட்சியிடம் பதவிகள் பெற்றவர்களின் பெயர்ப் பட்டியலை டாக்டர் பட்டாபி சீதாராமையா அவர்கள் தருகிறார், பார்ப்போம்:

''காங்கிரஸ் மிதவாதிகளில் அநேகர் நீதிமன்றப் பதவிகளைப் பெற்றனர். சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாக வேலை பார்த்த சர்.எஸ்.சுப்பிரமணிய ஐயரை முதல் காங்கிரஸ் மகா சபையிலேயே கண்டோமல்லவா!

''1908-இல் சென்னையில் காங்கிரஸ் கூட்டத்தை நடத்த முழுப் பொறுப்பும் ஏற்ற வி. கிருஷ்ணசாமி ஐயரும் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியானார்.

''1897-இல் கூடிய காங்கிரஸ் மகாசபைக்குத் தலைமை தாங்கிய சர். சங்கரன் நாயரும் 1898 முதல் சிறிது காலம் தீவிர காங்கிரஸ்வாதியாக இருந்த சர். வேப்பா ரமேசும், மற்றும், காங்கிரஸ் மகாசபை ஊழியர்களாக இருந்தவர்களான சர். சேஷகிரி ஐயர், பி.ஆர். சுந்தரம் ஐயர் ஆகியோரும் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகளாகப் பதவி பெற்றனர்.

''இந்தியச் சட்ட நிர்வாக உறுப்பினராகப் பதவி வகித்த சர்.சி.பி. ராமசாமி ஐயர், 1917 - 1919 ஆண்டுகளில் காங்கிரஸ் வானில் இளஞ்சூரியன் போல் ஒளி வீசினார்.

''வைசிராய் நிர்வாக சபை உறுப்பினராக இருந்த சர். முகம்மது அபிபுல்லா, 1898-இல் காங்கிரஸ் மேடையில் தோன்றித் தமது சொல் வன்மையைக் காட்டியவர்தான்!

''சர்.எம். கிருஷ்ணன் நாயர், சர்.கே.வி. ரெட்டி இவ்விருவரும் சென்னை கவர்னர் நிர்வாக சபை உறுப்பினராவதற்கு முன்பு காங்கிரசில் ஈடுபட்டிருந்தவர்களே.

''பிரிட்டிஷ் சக்கரவர்த்தியின் அந்தரங்கச் சபைக்கு நியமிக்கப் பெற்ற வி.எஸ். சீனிவாச சாஸ்திரியார், அரசாங்கத்தில் பல பதவிகளை ஏற்றுக் கொண்டவராவார்.

''காங்கிரஸ் மகாசபையிலிருந்து முதன்முதல் அரசாங்கப் பதவியைப் பெற்றவர் சி. ஜம்புலிங்க முதலியார் எனலாம். அரசினர் இவரை சிவில் நீதிமன்ற நீதிபதி பதவிக்கு நியமித்தார்கள்.''

(காங்கிரஸ் மகாசபை வரலாறு; பக். 54)

வட இந்தியாவில் பிரிட்டிஷ் அரசின் தயவால் பதவி பெற்றவர்கள் பட்டியலையும் டாக்டர் பட்டாபி சீதாராமையா தருகிறார். அது வருமாறு:

''பம்பாயில் திலங்கு, தியாப்ஜி, சந்தவர்க்கர் ஆகிய தீவிர காங்கிரஸ்வாதிகள் மூவர் பிரிட்டிஷார் தயவால் உயர்நீதிமன்ற நீதிபதிகளாயினர்.

''சர். சிமன்லால் செதல்வாட் என்ற காங்கிரஸ்காரர் பம்பாய் கவர்னர் நிர்வாக சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டார். எஸ்.பி. சின்ஹா என்ற காங்கிரஸ்வாதி, 1908-இல் இந்திய சட்ட உறுப்பினர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

''இன்னும், சர் தேஜ்பகதூர் சாப்ரு, சையத் அசன் இமாம், சச்சிதானந்த சின்ஹா ஆகியோர் காங்கிரஸ் மகாசபையின் நடவடிக்கைகளில் பங்கெடுத்துக் கொண்டவர்களென்றாலும், அரசாங்கத்தின் கீழ் பெரிய உத்தியோகங்களில் அமரவும் கொடுத்து வைத்தவர்கள்.''

(''காங்கிரஸ் மகாசபை வரலாறு'' (தமிழ்); பக் 55)

பதவியை நாடியது
காங்கிரஸ் கொள்கைக்கு விரோதமா?

காங்கிரசில் மிதவாதிகளானோர் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் நீதிபதிகளாகவும், வைஸ்ராய் - கவர்னர் நிர்வாகச் சபைகளிலே உறுப்பினர்களாகவும், அட்வகேட் ஜெனரல்களாகவும் பதவிகள் ஏற்றது அவர்கள் சார்ந்திருந்த காங்கிரசின் கொள்கைகளுக்கு விரோதமானதல்ல என்பதையும் இங்குச் சொல்லியாக வேண்டும். பிரிட்டிஷ் ஆட்சியின் நிர்வாகத் தூண்களில்

ஒன்றாக விளங்கிய ஐ.சி.எஸ் காரரான ஹ்யூம் துரை காங்கிரஸ் மகாசபையைத் தொடங்கியபோது, அதன் கொள்கைகளை வகுத்தார். இந்திய அரசின் அதிகாரப் பதவிகளை படிப்படியாக ஆங்கிலேயரிட மிருந்து இந்தியர்களின் கைக்கு மாற்ற வேண்டு மென்பதுதான் அந்நாளைய காங்கிரசின் பிரதான கொள்கையா கும். அந்தக் கொள்கைபடித்தான் காங்கிரஸ்காரர்களிலே ஒரு சாரார் - குறிப்பாக, தகுதியுடையவர்கள் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் பதவிகளைப் பெற்றார்கள். ஆகவே, அதை தேசத் துரோகம் என்று சொல்வதற்கு அந்நாளைய காங்கிரஸ் மகாசபையின் அமைப்பு விதி இடந்தரவில்லை. ஆயினும், இந்திய சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள சாதாரண மக்களின் கல்வி நலனையும் பொருளாதார ரீதியான வறுமை ஒழிப்பையும் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று தீவிரவாதிகள் காங்கிரசை நிர்ப்பந்தித்தனர்.

வழிகாட்டிய வரலாறுகள்

1905 இல் ருஷ்யாவிலே ஏற்பட்ட வர்க்கப் புரட்சியும் அதற்கு முன்பே அமெரிக்காவில் வெற்றிகரமாக முடிந்த சுதந்திரப் புரட்சியும், இந்த இரண்டுக்குமிடையில் பிரான்சு தேசத்தில் வெற்றி நடைபோட்ட குடியரசுப் புரட்சியும் பிரிட்டிஷ் ஆட்சியிடம் அடிமைப்பட்டிருந்த இந்திய சமுதாயத்தினருக்கு வழி காட்டுவனவாயிருந்தன. குறிப்பாக, ஆங்கிலத்தின் மூலம் கல்வி கற்றோர் இந்த உலக அறிவைப் பெறுவது தவிர்க்க முடியாததாக இருந்தது. ஆனால் காங்கிரசில் மிதவாதிகளாக இருந்தோர், அதன் ஆரம்ப காலக் கொள்கையை உறுதியாகப் பிடித்துக் கொண்டு, அந்தப் போக்கிலேயே காங்கிரசை நடத்திச் செல்ல விரும்பினார்கள். அதுதான் அவர்கள் செய்த குற்றமாகும்.

மிதவாதிகளின் பெருந்தலைவராக விளங்கிய கோபால கிருஷ்ண கோகலே, மற்ற மிதவாதிகளிடமிருந்து பிரித்துப் பார்க்கத்தக்க வகையில் சிறந்து விளங்கினார். அரசாங்கம் பல உயர் பதவிகளை வழங்க முன்வந்ததும் கோகலே ஏற்க மறுத்தார். பட்டங்களைக்கூட அவர் வெறுத்தொதிக்கினார். வாழ்நாள் முழுவதும் அவர் சமூக சேவையிலேயே கருத்துச் செலுத்தினார்.

இது எப்படியாயினும், 1785-இல் நடந்த சிப்பாய்ப் புரட்சி தோல்வி யுற்றபின் தேசம் முழுவதையும் பயப் பேய் பிடித்துக் கொண்டிருந்தது. ஆட்சிக்கு எதிராக தும்முவதற்கும் மக்கள்

அஞ்சினார்கள். அந்த நிலையிலே, சட்டரீதியான முயற்சிகளின் மூலம் இந்திய நாட்டினர் படிப்படியாக தேச அரசுரிமையைப் பெற முடியுமென்ற நம்பிக்கையை காங்கிரஸ் மகாசபையைத் தோற்றுவித்தவர்கள் ஏற்படுத்தினார்கள். அதை அவர்களைத் தவிர வேறு யாரும் செய்திருக்க முடியாது. அதற்காக இந்திய நாட்டினர் என்றென்றும் அவர்களுக்கு நன்றி செலுத்தலாம். ஆனால், சட்ட ரீதியான முயற்சிகளில் நாடு முன்னேறுவதற்குரிய அமைதிகர மான கிளர்ச்சியைக்கூட அதிகார வர்க்கம் அனுமதிக்க மறுத்தது. அதன் விளைவாகத்தான் வன்முறைக் கிளர்ச்சி நாட்டில் தலையெடுக்கலானது.

லண்டனில் புரட்சி முகாம்

லண்டனைத் தலைநகராகக் கொண்ட பிரிட்டன் சுதந்திர நாடாகையால், அங்கு எழுத்துரிமையையும் பேச்சுரிமையையும் தடையின்றிப் பயன்படுத்தப்பட அந்நாளிலும் சந்தர்ப்பமிருந்தது. பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளில் வாழும் அனைவருக்கும் ஒரே குடியுரிமை இருந்ததால் இந்திய அரசியல் வாதிகளில் எவரும் லண்டனில் தங்கி வாழவும், எழுத்துரிமையையும் பேச்சுரிமையையும் பயன்படுத்திக் கொள்ளவும் வாய்ப்பளிக்கப்பட்டிருந்தது,

இதன் காரணமாக, இந்தியர்களை ஆயுதப் புரட்சிக்குப் பக்குவப்படுத்த விரும்பிய புரட்சியாளர் சிலர் லண்டனில் முகாம் அமைத்துச் செயல்பட்டனர். இவர்களில் பெரும்பாலோர் உயர் கல்விக்காக லண்டன் சென்ற இந்திய மாணவர்களாவர்.

மாடம் காமா என்ற மராத்தி மாநிலத்தைச் சார்ந்த பார்சிப் பெண்மணி 1901-இல் லண்டன் சென்றார். இவர் திருமண மானவரென்றாலும், இல்லறத்தை வெறுத்துக் கணவரிடமிருந்து பிரிந்து லண்டன் சென்றார். அங்கிருந்த வண்ணம் இந்திய விடுதலைப் புரட்சிக்கான பணிகளில் ஈடுபட்டு வந்தார்.

இந்தியாவில் கத்தியவார் வாசியான சியாம்ஜி கிருஷ்ண வர்மா என்பவரும் 1905 இல் லண்டன் சென்று, அங்கு ''ஹோம் ரூல் லீக்'' என்ற பெயரில் ஒரு புரட்சி அமைப்பை நிறுவினார். ஒரு வருடத்திற்குள் - அதாவது, 1906 இல் ''இந்தியா விடுதி'' என்ற முகாம் ஒன்றையும் ஏற்படுத்தினார். அது, நாளடைவில் புரட்சி உள்ளம் படைத்த இளைஞர்களின் முகாமாக மாறியது.

லண்டனில் சியாம்ஜி கிருஷ்ணவர்மா ''இந்தியன் ரிபார்மர்'' என்ற பெயரிலும், காமா அம்மையார் ''வந்தேமாதரம்''

என்னும் பெயரிலும் பத்திரிகைகள் நடத்தினர். அவற்றில் புரட்சிகரமான கொள்கைகளையும் வேலைத் திட்டங்களையும் வெளியிட்டு வந்தனர். லண்டன் இந்தியா விடுதியில் முகாம் போட்டவர்களில் முக்கியமானவர்கள் விநாயக தாமோதர சவர்க்கார், மதன்லால் திங்கரா, வ.வே. சுப்பிரமணிய ஐயர், திருச்சி டாக்டர். டி.எஸ்.எஸ். ராசன் ஆகியோராவர். இவர்கள் அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் விடுதலைக்காகப் பிரிட்டிஷாரை எதிர்த்து நடந்த ஆயுதப் புரட்சியைப் பின்பற்றத் திட்டமிட்டனர்.

போதாக்குறைக்கு 1905 இல் ருஷ்யாவில் ஜார் ஆட்சிக்கு எதிராக நடந்த புரட்சியையும் இவர்கள் வழிகாட்டியாகக் கொண்டனர். சர்வதேச ரீதியில் அந்நாளில் இயங்கி வந்த வேறு புரட்சி அமைப்புகளின் மாநாடுகளிலே இவர்கள் அடிக்கடி கலந்து கொண்டனர்.

கர்சான்வாலி கொலை!

இந்தியப் புரட்சியின் முதல் வேட்டொலி லண்டனில்தான் கேட்டது. ஆம்; 1908 இல் லண்டனில் கர்ஸான்வாலி என்ற பிரிட்டிஷ் அதிகாரியை மதன்லால் திங்கரா என்ற புரட்சிக்காரர் சுட்டுக் கொன்றார். இந்த இளைஞர் தாம் செய்த குற்றத்தை ஒளிவு மறைவின்றி ஒப்புக்கொண்டு கொடுத்த வாக்குமூலம் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தையே அதிரச் செய்தது. இந்திய விடுதலையை விரும்பிய தீவிரவாதிகளின் உள்ளங்களை எல்லாம் மதன்லால் திங்கரா கவர்ந்து விட்டார், அவர் லண்டனிலே தூக்கிலிடப் பட்டார்.

கர்ஸான்வாலியின் கொலை காரணமாக, லண்டன் ''இந்தியா விடுதி'' மீது பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பார்வை விழுந்தது. அதன் விளைவாக, புரட்சிக்காரர்கள் தங்கள் முகாமைப் பாரிசுக்கு மாற்றிக் கொண்டனர். வீர சவர்க்கார் பாரிசிற்குச் செல்ல முயன்றபோது பிரிட்டிஷ் போலீசாரிடம் பிடிபட்டார்.

அவரை இந்தியாவுக்குக் கொண்டு வந்து சதிக் குற்றம் சாட்டி ஆயுள் தண்டனை விதித்து அந்தமானுக்கு அனுப்பியது அரசு. வ.வே.சு. ஐயர், போலீசாரின் கண்காணிப்பை வெற்றிகரமாக முறியடித்து, 1918-இல் புதுவை வந்து சேர்ந்துவிட்டார்.

இந்தியாவிலே, ஒருபுறம் மிதவாத காங்கிரஸ்காரர்களுக்குப் பதவிகளையும் பட்டங்களையும் வழங்கி, அவர்களை காங்கிரசிலிருந்து ஒருவர் பின் ஒருவராக அரசு வெளியேற்றி

வந்ததென்றால், அதே நேரத்தில் தீவிரவாத காங்கிரஸ்வாதிகளை நாடு கடத்தியும், சிறைகளில் அடைத்தும், தூக்கிலேற்றியும் பழி வாங்கி வந்தது. முரண்பாடுடைய இந்த இரு வேறு நடவடிக்கை களினால் காங்கிரஸ் மகாசபையை அழித்துவிட அரசு முயன்றது.

ருஷ்யப் புரட்சி!

1905-இல் ருஷ்யாவில் ஜார் ஆட்சிக்கு எதிராக முதன் முதலாக ஒரு புரட்சி நடந்தது. அது தோல்வியுற்றதென்றாலும், அதன் மூலம் ஜார் ஆட்சியின் கொடுங்கோன்மை உலகெங்கும் விளம்பரமானது. அதனால், இந்திய காங்கிரசிலுள்ள மிதவாதிகள், ருஷ்ய ஜார் ஆட்சியை உவமை காட்டி, ''அதைவிடவும் இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் ஆட்சி எவ்வளவோ மேலானது'' என்று அரச விசுவாசப் பிரசாரம் செய்து வந்தனர்.

தீவிர காங்கிரஸ் வாதிகளோ, ''ருஷ்ய ஜார் ஆட்சியை விடவும் மோசமானது, இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் ஆட்சி'' என்று சொல்லி அரச நிந்தனைப் பிரசாரத்தைத் தீவிரப்படுத்தி வந்தனர்.

பதவியிலமர்ந்த மிதவாதிகள், தீவிரவாதிகளை ஒடுக்கி அதன் மூலம் காங்கிரசையே அழித்துவிட பிரிட்டிஷ் ஆட்சி எடுத்த அடக்குமுறை நடவடிக்கைகளை ஆதரித்தனர்.

1897-இல் அமராவதியில் நடந்த காங்கிரஸ் மகாசபைக்குத் தலைமை வகித்த சர் சங்கரன் நாயர், பின்னர் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி பதவியிலமர்ந்து விட்டார்.

பிரபல வழக்கறிஞரும் காங்கிரஸ் மிதவாதியுமான ஏர்லி நார்டன் என்பவர், 1908-இல் அரவிந்தர் மீது சதி வழக்கு நடந்த போது, அரசாங்க தரப்பில் ஆஜராகி, ''குற்றவாளி'' எனப்பட்ட அரவிந்தர் தப்பி விடாதபடி அவரை மரண தண்டனைக் குள்ளாக்கும் வகையில் தமது திறமையையெல்லாம் வெளிப் படுத்தி வாதாடினார்!

இப்படி, மிதவாதிகளெல்லாம் அரசாங்க தாசர்களாகி விட்டனர். தீவிரவாதிகளோ இளைஞர்களுக்கு வழி காட்டி அவர்களை நடத்திச் செல்ல வாய்ப்பின்றிச் சிறைச்சாலைகளில் அடைப்பட்டு விட்டனர்.

தோல்வி மனப்பான்மையா?

இந்நிலையில், தோல்வி மனப்பான்மை கொண்ட இந்திய இளைஞர்களிலே சிலர் பயங்கரவாதிகளாக மாறினர். ஆம்;

ஒளிந்து மறைந்து வெள்ளை அதிகாரிகளைச் சுட்டுக் கொல்லும் பயங்கரச் செயல்களில் ஈடுபடத் துணிந்தனர். அதனால் தேசம் விடுதலை பெற்றுவிடுமென்றும் நம்பினர்

வடக்கே வைசிராய் ஹார்டிஞ் டில்லி வீதிகளில் யானை மீதேறி பவனி சென்றபோது, அவர்மீது வெடிகுண்டு வீசப்பட்டது படுகாயத்துடன் அவர் உயிர் பிழைத்தார்.

வங்காளத்தில் முஜப்பூர் ஜில்லா மாஜிஸ்திரேட்டைக் குறிபார்த்து எறியப்பட்ட வெடிகுண்டானது, குறி தப்பி விட்டதால், வெள்ளையரான கென்னடி மாதர்களைக் கொன்று விட்டது. இதைச் செய்தவர் என்று குற்றஞ்சாட்டப்பட்ட குதிராம்போஸ் என்ற 18 வயது இளைஞருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. அந்த இளைஞரின் உருவப்படங்கள் தேசமெங்கும் விற்கப்பட்டன.

அசுவினிகுமார் தத் என்பவர் உட்பட வங்க இளைஞர்கள் ஒன்பது பேர் அரசாங்கத்தால் அநியாயமாக நாடு கடத்தப் பட்டனர். இதனால், வங்காளம் முழுவதுமே வெடிகுண்டுப் பிரதேசம் ஆகிவிட்டது.

தமிழ்நாடு கொலை வழியை விரும்பாத கலை வழி நாடு. அதனாற்றான், சிதம்பரனார் ஏகாதிபத்தியக் கப்பலுக்கு எதிர்க் கப்பலோட்டும் ஆக்கவழிப் பணியில் ஈடுபட்டார். அரசு அவருக்கும் இரண்டு ஆயுள் தண்டனை விதித்து அவரைப் பழி வாங்கியதனால், தமிழ்நாட்டு இளைஞர்களும் கொதிப் படைந்தனர்.

கலெக்டர் ஆஷ் கொலை!

சிதம்பரனாருக்கு வழங்கப்பட்ட கொடுந் தண்டனையும், சிறையில் அவர் கொடுமையாக நடத்தப்படுவதாகப் பத்திரிகை களில் அடிக்கடி வெளிவந்து கொண்டிருந்த செய்திகளும் தமிழ்நாட்டு இளைஞர்களிலும் சிலர் கொலை வழியில் ஈடுபடக் காரணங்களாகிவிட்டன. தமிழகத்திலும் ஒரு குதிராம் போஸ் தோன்றினார். வங்காளத்துக் குதிராம்போஸ் வைத்த குறி தவறிவிட்டது. தமிழ்நாட்டுக் குதிராம்போஸ் வைத்த குறிதவற வில்லை.

1911 ஜூன் 17-இல் நெல்லை மாவட்ட கலெக்டர் ஆஷ்துரை. நெல்லையிலிருந்து ரயிலில் புறப்பட்டு, கொடைக்கானலுக்குப் போய்க் கொண்டிருந்தார். அங்கு அவருடைய நான்கு குழந்தைகள்

இருந்தன. அந்தக் குழந்தைகளுடன் சில நாட்களை இன்பமாகக் கழிக்க விரும்பி மனைவியுடன் சென்று கொண்டிருந்தார். அவருடைய மனைவி ஐந்து நாட்களுக்கு முன்தான் இங்கிலாந்திலிருந்து இந்தியா திரும்பியிருந்தார்.

ரெயில் மணியாச்சி நிலையத்தை அடைந்ததும் அங்கிருந்து கொடைக்கானலுக்கு ரெயில் மாற வேண்டியிருந்தது. அந்த ரெயில் மணியாச்சி வந்து சேராததால், நெல்லையிலிருந்து தாங்கள் வந்த ரயிலிலேயே தங்கி கொடைக்கானல் ரெயிலை ஆஷ் தம்பதிகள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்களுடைய பணியாட்கள் இருவர், வேறு பிளாட்பாரத்தில் சாமான்களுடன் ரெயில் மாறுவதற்காகக் காத்திருந்தனர்.

இந்நிலையில், ஒரு தமிழ் இளைஞர் நாகரிக உடையணிந்து ஆஷை அணுகி, ''குட்மார்னிங் ஆஷ்'' என்றார். ஆஷ் வெறுப்புடன் பதிலுக்கு ''குட்மார்னிங்'' என்று சொல்லிவிட்டு, கையசைப்பால் விலகிச் செல்லுமாறு அந்த இளைஞருக்கு ஆணையிட்டார். அதற்குள், காலை வந்தனம் சொன்ன இளைஞர், தன் கைத் துப்பாக்கியை எடுத்து ஆஷைச் சுட முயன்றார், அதைப் பார்த்ததும் தன் தலையில் அணிந்திருந்த கனத்த தொப்பியை எடுத்து அந்த இளைஞர்மீது வீசி, அவர் வைத்த குறி தவறிப் போகும்படிச் செய்ய முயன்றார் ஆஷ். ஆனால், அம்முயற்சி வெற்றி தரவில்லை. இளைஞரின் கைத்துப்பாக்கியிலிருந்து புறப்பட்ட தோட்டாவானது நெல்லை கலெக்டரின் இடது மார்பில் பாய்ந்து அவரை வீழ்த்திவிட்டது, திருமதி ஆஷ் அலறினார். பிளாட்பாரத்திலிருந்தவர்கள் ஆஷைச் சுட்ட இளைஞரைப் பிடிக்க முயன்றனர். அதற்குள் அவர் ரெயில்வே பிளாட்பாரத்திலிருந்த கழிப்பறைக்குள் நுழைந்து சுட்டுத் தற்கொலை செய்து கொண்டு அங்கேயே மாண்டார்.

சுடப்பட்ட ஆஷ் துரையை அவர் எந்த ரெயிலை எதிர்பார்த்து மணியாச்சி நிலையத்தில் காத்திருந்தாரோ, அதே ரெயிலில் வைத்து, சிகிச்சைக்காக நெல்லைக்குக் கொண்டு சென்றனர். அதற்குள், வழியிலுள்ள கங்கைகொண்டான் ரெயில் நிலையத்தை அணுகியபோது, ஆஷ் துரையின் உயிர் உடலை விட்டுப் பிரிந்துவிட்டது.

தலை சுக்கு நூறாக நொறுங்கியிருந்த நிலையில் ஆஷைச் சுட்ட இளைஞரின் பிரேதத்தை ரெயில்வே போலீசார் கைப்பற்றினர். அவர் யாரென்று அடையாளம் கண்டுபிடிக்க

மூன்று நாட்கள் ஆயின. அடையாளங் கண்டு பிடித்துச் சொல்பவருக்கு ஆயிரம் ரூபாய் பரிசு தரப்படுமென்று அரசு பிரகடனம் செய்தது.

பலிபீடத்தில் தேசபக்தர்!

நெல்லை மாவட்ட கலெக்டர் ஆஷ் துரையைச் சுட்ட இளைஞர் தம் உயிரைக் காத்துக் கொள்ள தப்பி ஓடவில்லை. தேச பக்தியால் கூட மாற்றான் உயிரை மாய்ப்பது குற்றந்தான்! ஆனால், மாற்றானைக் கொன்றபின் தன் உயிரைக் காத்துக் கொள்ளத் தப்பியோடுவதோ, 'நான் கொல்லவில்லை' என்று நீதிமன்றத்தில் நின்று பொய் சொல்லுவதோ உண்மைத் தேசபக்திக்குப் பெருமை தேடுவதாகாது. இலண்டனிலே கர்சான் வாலி என்னும் ஆங்கிலேயரைக் கொன்ற தேச பக்தரான மதன்லால் திங்கரா, தாம் குற்றவாளி என்பதை நீதிமன்றத்திலே ஒப்புக்கொண்டார். அதற்காக, காந்தியடிகள் அவரைப் பாராட்டினார். அதுபோல, ஆஷ் துரையைக் கொன்ற இளைஞர் தன் உயிரைக் காத்துக்கொள்ள ஓடி ஒளியவில்லை. மாற்றான் உயிரைப் பலிகொண்டது போல தன் உயிரையும் பலி கொடுத்தார். ஆம்; பாரத மாதாவின் பலி பீடத்திலே! ஆஷ் கொலையுண்ட மூன்றாம் நாளிலே, அவரைக் கொன்ற இளைஞர் இன்னாரென்று அடையாளம் கண்டு பிடிக்கப்பட்டார். செங்கோட்டை இரகுபதி ஐயரின் குமாரர் வாஞ்சிநாதன் என்பது புலனாகியது. தந்தை காட்டிலாகாவில் அலுவல் பார்ப்பவர் என்றும், அதே துறையில் திருவிதாங் கூரிலுள்ள புனலூரில் மகன் வாஞ்சிநாதையரும் வேலையில் இருந்ததாகவும் அறியப்பட்டன. வாஞ்சிநாதன் தனது அலுவலுக்கு மூன்று மாத ஓய்வு போட்டிருந்த நிலையிலே மணியாச்சி சம்பவம் நிகழ்ந்தது.

திசை திரும்பிய ரயில்!

தன் இதயத்தில் தோட்டா பாய்ந்துவிட்ட நிலையிலும், தன்னைச் சுட்டவரைப் பிடிக்க ரெயிலை விட்டு இறங்க முயன்றார் ஆஷ்துரை. அவரது வீரம் பாராட்டத் தக்கது. ஆனால், அருகிலிருந்த திருமதி ஆஷ், ரெயிலை விட்டு இறங்காதபடித் தம் கணவரைத் தடுத்ததோடு, அவரைத் தன் மடியிலே வைத்து, அவர் உயிர் பிழைப்பதற்கான உதவிகளைப் புரிந்தார்.

ரெயில்வே போலீஸ் உயர் அதிகாரி ஒருவரும் மற்றொரு மருத்துவருமாகச் சேர்ந்து, தூத்துக்குடி - சென்னை மெயில் மணியாச்சியை யடைந்ததும், அதன் பயணத் திசையை மாற்றி, அதிலே ஆஷ் துரையை வைத்து, சிகிச்சைக்காக அவரை நெல்லைக்குக் கொண்டு சென்றனர்.

சென்னை நோக்கிச் செல்லவேண்டிய ரெயில், ஆஷ் துரைக்காக நெல்லை நகருக்குத் திருப்பிவிடப் பட்டது. ஆஷ்துரை ஆங்கிலேயர் அல்லவா! அவருக்காகத் தூத்துக்குடி - சென்னை மெயிலில் பயணஞ் செய்த இந்தியர் நலன் புறக்கணிக்கப்பட்டது. மணியாச்சியை விட்டு எட்டு மைல் தூரம் ரெயில் சென்றதும் ஆஷ் துரையின் ஆவி பிரிந்து விட்டது, திருமதி ஆஷின் மடியில் தலை வைத்தபடியே!

பல ஆண்டுகளாக இருதய நோயால் துன்புற்று வந்த திருமதி ஆஷ் தமது கணவனுடைய பிரிவை அமைதியாகத் தாங்கிக் கொண்டார்.

வாஞ்சியின் தீரம்!

ஆஷ் துரையைச் சுட்ட வாஞ்சிநாதனைப் பிடிக்க துரையின் இந்திய சிப்பந்தி ஒருவர் முயன்றார். அவரும் வாஞ்சியும் ரெயில்வே பிளாட்பாரத்தில் கட்டிப் புரண்டனர். அந்தச் சிப்பந்தியை செங்குத்தாகத் தூக்கியெறிந்துவிட்டு, கம்பீரமாக நின்றார் இளைஞர் வாஞ்சிநாதன்.

மணியாச்சி காவல் நிலையத்திற்குத் தகவல் அனுப்பிப் போலீசாரைத் தருவிக்க ஒருமணி நேரமானதாம்! நினைத் திருந்தால், தப்பியோடிவிட அவகாசம் இருந்தது. வாஞ்சி நாதனுக்கு! ஆனால், அவர் அப்படிச் செய்யவில்லை. சிறிது நேரத்திற்குப் பின் போலீசாரும் ரெயில்வே போர்ட்டர்களும் கூடி, வாஞ்சி நாதனைப் பிடிக்க முயன்றனர். தன்னை நெருங்கினால் அவர்களைச் சுட்டு விடுவதாகப் பயமுறுத்திக்கொண்டே ரெயில்வே பிளாட்பாரத்தில் இருந்த கழிப்பறைக்குள் வாஞ்சி நுழைந்து விட்டார். துரத்திக் கொண்டு வந்தவர்களுக்கு அறைக்குள் நுழையத் துணிவில்லாததால் வெளியே நின்று விட்டனர். இந்த நிலையிலே, கழிப்பறைக்குள் துப்பாக்கி வெடிக்கும் சத்தம் கேட்டது!

அதன் பின் போலீசாரும் போர்ட்டர்களும் அறைக்குள் நுழைந்து பார்த்தனர். அங்கே வலது கையில் பிரௌனிங் தானியங்கித் துப்பாக்கி ஒன்றைக் கையில் தாங்கிய வண்ணம் செங்கோட்டை வாஞ்சிநாதனின் பிரேதம் கிடக்கக் கண்டனர்.

'மலம்' கழன்றது!

உடம்பை ''மலம்'' என்று வருணிப்பர் ஞானியர்! அந்த ''மலத்'' தைக் கழித்துச் சொர்க்கம் புகுவதற்குத்தான் மலம்

கழிக்கும் அறைக்குள் வாஞ்சி சென்றார் போலும்! வாஞ்சியின் சட்டைப் பையிலே பிரான்ஸ் நாட்டு மணிபர்ஸ் ஒன்றிருந்தது. அதற்குள்ளே இரண்டாம் வகுப்பு ரயில் டிக்கெட் ஒன்றும் ஐந்தணாவும் கண்டெடுக்கப்பட்டன.

தேசபக்தரின் தமிழ்க் கடிதம்!

உடம்பிலிருந்து எடுக்கப்பட்ட மற்றொரு பொருளும் உண்டு. அது, வாஞ்சியின் கையாலேயே எழுதப்பட்ட கடிதம்! அக்கடிதம் பரங்கி மொழியில் எழுதப்படவில்லை; தமிழில்தான் எழுதப்பட்டிருந்தது! வாஞ்சி உண்மைத் தேச பக்தரல்லவா! இவை, அரசாங்க தஸ்தாவேஜுகள் தரும் தகவல்கள்!

வாஞ்சியிடமிருந்து எடுக்கப்பட்ட கடிதத்தின் வாசகம் வருமாறு:

''பிரிட்டிஷ் ஆட்சியை வெளியேற்றி சுயராஜ்யத்தை ஸ்தாபிக்க ஒவ்வொரு இந்தியனும் உறுதியோடு முனைந்திருக்கிறான். இராமன், கிருஷ்ணன், சிவாஜி, கோவிந்த சிங் போன்ற மாவீர மகா புருஷர்கள் ஆண்ட இந்தப் புண்ணிய பூமிக்குக் கேவலம் மிலேச்ச வழியைச் சேர்ந்த ஒருவரைச் சக்கரவர்த்தியாக முடிசூட்ட ஏற்பாடு நடக்கிறது. இதை மானமுள்ள எந்த இந்தியனும் அனுமதிக்க மாட்டான் என்பதற்கு முதல் அறிவிப்பே ஆஷ் துரையின் கொலையும் எனது மரணமும்.''

கடிதத்தின் இறுதியில் ''வாஞ்சி'' எனத் தமிழிலும், ஆங்கிலத்திலும் கையொப்பமிடப்பட்டிருந்தது!

அடையாளங் கண்ட தந்தை!

வாஞ்சியின் பிரேதம் மணியாச்சியிலே புகைப்படம் எடுக்கப்பட்டது. பின்னர் சரக்குகளை ஏற்றிச் செல்லும் ரயில் பெட்டி ஒன்றில் வாஞ்சின் பிரேதத்தை வைத்து, போலீஸ் காவலுடன் நெல்லைக்கு எடுத்துச் சென்றனர் போலீஸ் உயர் அதிகாரிகள். நெல்லை, தென்காசி, செங்கோட்டை ஆகிய ஊர்களிலிருந்தெல்லாம் வாஞ்சியை அடையாளம் காட்ட பலர் தருவிக்கப்பட்டனர்.

அடையாளம் கண்டுபிடிக்கப்பட்ட பின், வாஞ்சியின் தந்தையும் காட்டு இலாகா உயர் அதிகாரியுமான செங்கோட்டை ரகுபதி ஐயர் போலீஸ் அதிகாரிகளால் விசாரிக்கப்பட்டார். பிரேதத்தைப் பார்த்து, ''என் மகன் வாஞ்சிதான்'' என்று

அடையாளஞ் சொன்னார், தேசத்திற்காக உயிர்விட்ட அதிர்ஷ்டசாலியான மகனைப் பெற்ற ரகுபதி ஐயர். ஆனால், மேல் விளைவுகளுக்கு அஞ்சியோ என்னவோ, ''சில மாதங்களாக என் மகனுக்கும் எனக்கும் நல்ல உறவு இல்லை'' என்றும் கூறினாராம்!

வாஞ்சிநாதன் தன் வாய்க்குள் கைத்துப்பாக்கியை நுழைத்துத் தன்னைத் தானே சுட்டுக் கொண்டது எதனால்? தன்னுடைய முகம் பிறருக்கு அடையாளம் தெரியாதபடி சுக்கு நூறாக நொறுங்கிவிட வேண்டுமென்று விரும்பியதனால்தான்! தன் முக விலாசத்தைக் காட்டினால், தன் குழாத்தைச் சேர்ந்த பயங்கரப் புரட்சியாளர்களின் விலாசங்களையெல்லாம் ஆட்சி கண்டுபிடித்து விடுமென்றஞ்சி, அதைத் தவிர்க்க வாஞ்சி விரும்பினார். ஆம்; தன்னைச் சார்ந்த சக தேசபக்தர்களின் உயிர்களைக் காப்பதற்காகத் தன் முகம் சுக்கு நூறாகும்படிச் சுட்டுக்கொண்டு கோர மரணத்தை அடைந்தார். விடுதலைப் போர் வரலாற்றிலே இதற்கு உவமையான நிகழ்ச்சி இன்னொன்று இல்லை.

இரண்டு தோட்டா கணக்கு!

பிரேதத்தின் வலது கையிலிருந்தது தோட்டா இல்லாத வெறும் துப்பாக்கித்தான்! இரண்டு தோட்டாக்களை மட்டுமே அதில் வைத்துக் கொண்டு நெல்லையிலிருந்து மணியாச்சிக்கு இரண்டாம் வகுப்பிலே பயணஞ் செய்தார் வாஞ்சி. அதே ரயிலில் முதல் வகுப்பில் பயணம் செய்தார் ஆஷ். மணியாச்சியை ரெயில் அடைந்ததும், ஒரு தோட்டாவை ஆஷுக்கு வழங்கி விட்டு, இன்னொன்றைத் தமக்கு எடுத்துக்கொண்டார்! உயிர் பிரிந்த பின்னும் துப்பாக்கியைப் பிடித்த பிடி தளரவில்லையாம்!

வாஞ்சி தனி மனிதர் அல்ல வென்பதும், அவரோடு சேர்ந்த ஒரு புரட்சிப் படை நெல்லை மாவட்டத்தில் இருக்கிறது என்பதும், ஐந்தாம் ஜார்ஜுக்கு டில்லியில் முடிசூட்டு விழா நடக்கும்போது விபரீதங்கள் நடக்கக்கூடும் என்பதும் அவரிடமிருந்து எடுக்கப்பட்ட கடிதத்திலிருந்து வெளியாயின.

1911-ஆம் ஆண்டின் இறுதியிலே பிரிட்டிஷ் ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்திக்கு டில்லியில் முடிசூட்டு விழா நடக்கும்போது வெள்ளையருக்கு எதிராக ஒரு புரட்சி நாடெங்கும் நடக்க விருந்தது. அதைத்தான் வாஞ்சியின் பிரேதத்திலிருந்து எடுக்கப்பட்டதாகச் சொல்லப்படும் கடிதம் கூறியது!

பத்திரிகைகள் கண்டனம்!

ஆஷ் கொலையானது தமிழ்நாட்டையும் பாரதத்தையும் அதிர்ச்சிகுள்ளாக்கியது. இந்த அதிர்ச்சி பிரிட்டன் வரை எதிரொலித்தது. ''சுதேச மித்திரன்'', ''ஆந்திர கேசரி'', ''தேசாபி மானி'', ''லிபரல்'', ''இந்து'', ''மெயில்'' ஆகிய பத்திரிகைகளில் ஆஷ் கொலையைக் கண்டித்தும், திருமதி ஆஷுக்கு ஆறுதல் தெரிவித்தும் நீண்ட தலையங்கங்கள் வெளியாயின.

பாரிஸ் பத்திரிகை ஒன்று, ''இந்திய மக்கள் உறங்கிக் கொண்டிருக்கவில்லையென்பது ஆஷ் கொலையால் உறுதிப்படுகிறது'' என்று எழுதியது. அது, பாரிசிலிருந்த புரட்சிக் கூட்டத்தின் தலைவியான மேடம் காமா அவர்களால் வெளியிடப்பட்டு வந்த ''வந்தே மாதரம்'' பத்திரிகையாகும்.

ஆஷ் துரை கொலையுண்ட செய்தியைக் கேட்டு, பாரதியார் அதிர்ச்சியடைந்தார். அவர் வெளியிட்ட கருத்து வருமாறு:

''ஒரு துரதிருஷ்டமான சம்பவம்; இதை எதிர்பாராத விபத்து என்று சொல்லட்டுமா? ஏனென்றால், இம்மாதிரியான மற்றொரு சம்பவம் நமது ராஜதானியில் நடந்ததேயில்லை. இந்தியாவின் தென்கோடி ஜில்லாவில் மணியாச்சி ஸ்டேஷனில் நடந்தது. திருநெல்வேலி கலெக்டர் ஆஷ்துரையை வாஞ்சி ஐயர் என்ற இளைஞர் சுட்டுக் கொன்றுவிட்டார். இது மகத்தானதொரு சோக சம்பவம்.

''கலெக்டர் ஆஷுடன் அவரது மனைவியைத் தவிர வேறுயாரும் இல்லை. அவர் அடுத்த ஜில்லாவிலுள்ள புகழ் பெற்ற ஆரோக்கிய ஸ்தலமான கொடைக்கானலுக்கு உல்லாச மாகக் காலங் கழிக்கவோ, தேக சுகம் பெறவோ போய்க் கொண்டிருந்திருக்கிறார்.

''கொலையுண்ட மனிதர் தமது மனைவியுடன் இருக்கிறார். அவர்கள் யுவர்கள்; தெரிந்தவரையில் ஒருவரையொருவர் பரஸ்பரம் காதலிக்கும் தம்பதிகள்; ஜோடியாக இருக்கும் குதூகலத்துடன் உல்லாச யாத்திரை போகிறார்கள். இது போன்றதோர் நிலைமை, பக்தி சிரத்தையுள்ள எந்த இந்துவின் உள்ளத்திலும் புனிதமான எண்ணங்களையே தூண்டிவிடும்.

''இதற்குப் பின் இம்மாதிரி இன்னொரு சம்பவம் நடைபெறவில்லை என்ற விஷயம் சென்னை ராஜதானிக்கே பெருமையளிக்கிறது. சென்னை ராஜதானியில் பயங்கர இயக்கம் பிறக்கும் போதே உயிரற்ற பிண்டமாய்ப் பிறந்தது.''

நொந்த உள்ளத்தின் கணிப்பு

ஆஷ் கொலையுண்ட செய்தி கேரள மாநிலத்திலுள்ள கண்ணனூர்ச் சிறையிருந்த கப்பலோட்டிய தமிழரின் செவிக்கு எட்டியது. ஒருநாள் நள்ளிரவு 12 மணிக்குக் கண்ணனூர்ச் சிறைச்சாலையின் துணை மருத்துவர் வ.உ.சி. யை அணுகி, கலெக்டர் ஆஷ் கொலையுண்ட நிகழ்ச்சியைக் கூறினாராம். அதை வ.உ.சி.யே கூறக் கேட்போம்:

''சிறையின் ஜூனியர் சப்அசிஸ் டெண்டு
சாஜன் நின்று சௌக்கியம் உசாவிக்
''கலெக்டர் ஆஷுவைத் தெரியுமா?'' என்றான்.
''நன்றாகத் தெரியும்'' என்றேன். ''எப்படி'',
என்றான். ''யான் இவண ஏகியதற்கும்
தூத்துக்குடியில் தோனறிய ''சுதேசிக்
கப்பல் கம்பெனி'' செத்தொழிந் ததற்கும்
''அவன்கா ரண''மென் றறைந்தேன். ''ஒருவன்
அவனை நேற்று மணியாச்சி ஜங்ஷனில்
சுட்டுக் கொன்று தன்னையும் சுட்டுச்
செத்தான்'' என்றான். ''நல்லதோர் செய்தி
நவின்றாய் நீ நலம் பெறுவாய்' என்றேன்''

(''வ.உ.சி. சுயசரிதை''யில்)

ஆஷ்துரை கொலையுண்டதைத் தனக்குக் கிடைத்த நற்செய்தியாக வ.உ.சி. கூறக் காரணம், தமக்குற்ற வேதனைகளுக் கெல்லாம் அவர்தான் காரணம் என்பதாகும்.

ஆஷ் கொலையுண்ட பின் சிறையிலிருந்த வண்ணம் வ.உ. சிதம்பரனார் தூத்துக்குடி சுதேசிக் கப்பல் கம்பெனியின் சட்ட ஆலோசகரான சேலம் சி. விஜயராகவாச்சாரியாருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருப்பது வருமாறு:

''நான்சிறைப்பட்ட பின்னும் என்னைப் பின்பற்றிச்சுதேசிக் கிளர்ச்சியை அறவழியில் நடத்திவரும் அன்பர்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், எனது கோட்பாட்டுக்கு மாறாகக் கொலைச் செயல்கள் நடப்பதற்கு வருந்துகிறேன். நாம் போராடுவது பிரிட்டிஷ் ஆட்சி முறையை எதிர்த்தேயாகும். ஆங்கில அதிகாரிகளைக் கொலை செய்வதால் அன்னிய ஆட்சி அழிந்து விடாது. கொடியவர்களாயினும் அவர்களது உயிருக்கும் தீங்கு செய்யக் கூடாது என்பதே எனது கோட்பாடு. இதை புரட்சியில் விருப்பமுடையோருக்கு அறிவியுங்கள்.''

காந்தி சகாப்தம் தோன்றாத கட்டம்!

செங்கோட்டை வாஞ்சிநாதன் நெல்லைக் கலெக்டர் ஆஷ் துரையைக் கொன்றபோது, இந்திய அரசியலிலே காந்தி சகாப்தம் தோன்றியிருக்கவில்லை. தேச விடுதலையை விரும்பிய இளம் வீரர்களுக்கு, அமெரிக்காவிலும் பிரான்சிலும் விடுதலைக்காக நடைபெற்ற ஆயுதப் புரட்சி வரலாறுகளே வழிகாட்டுவனவாக இருந்தன. அப்போது, அயர்லாந்தில் பிரிட்டிஷாருக்கு எதிராக வன்முறையில் விடுதலைப் புரட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அகிம்சைமுறையில் ஆங்கிலேயரை வெளியேற்ற முடியும் என்ற சித்தாந்தம் 1917-க்குப் பிறகுதான் இந்தியாவில் பேசப்பட்டது. காந்தியடிகள் மூலம்தான் அந்தச் சித்தாந்தம் காங்கிரஸ் மகாசபையின் கொள்கையானது. ஆஷைக் கொல்லுமளவுக்கு வாஞ்சிக்கு ஆவேசமூட்டிய நிகழ்ச்சிகளை இங்கு மற்றுமொரு முறை நினைப்பூட்ட வேண்டும்.

தூத்துக்குடியில் வ.உ.சி. தொடங்கிய சுதேசிக் கப்பல் கம்பெனியை அதிகார பலம் கொண்டு வீழ்த்திவிட்டனர் வெள்ளையர்கள். ஒரு சொற்பொழிவுக்காக வ.உ.சிக்கு நாற்பதாண்டுச் சிறைத்தண்டனை விதித்தது வெள்ளையராட்சி. துணைக் கலெக்டர் என்ற முறையில் ஆஷ் துரைக்கும் அதில் பங்கு உண்டு. வ.உ.சி. கைதியானதைக் கண்டித்து நெல்லையில் கடையடைப்பு நடந்தபோது துணைக் கலெக்டர் ஆஷ் துரையின் கைத் துப்பாக்கிக்கு நால்வர் பலியாயினர்.

துவராடையணிந்த துறவியாக வாழ்ந்த சிவாவுக்கு, ஒரு சொற்பொழிவுக்காக, பத்தாண்டுத் தீவாந்தரத் தண்டனை விதிக்கப்பட்டது. அதிலேயும் ஆஷ் துரைக்குப் பங்குண்டு. இதெல்லாம் வாஞ்சியின் நெஞ்சில் வஞ்சத்தை வளர்த்தன.

மற்றும், சிதம்பரனாருக்கும் சிவாவுக்கும் கொடுந் தண்டனை விதித்ததைக் கண்டித்து எழுதியதற்காக ''இந்தியா'' பத்திரிகையின் ஆசிரியர் திரு. சீனிவாச ஐயங்காருக்கு ஐந்தாண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதும், அதே குற்றத்தைச் செய்ததற்காக ''சுயராஜ்யா'' என்ற தெலுங்குப் பத்திரிகை ஆசிரியர் அரிசர்வோத்தம ராவுக்கு மூன்றாண்டுக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டதும், சிதம்பரனாரையும் சிவாவையும் கொடுந் தண்டனைக்குள்ளாக்கியதைக் கண்டித்துக் கரூர் பொதுக் கூட்டத்தில் பேசியதற்காக மயிலாப்பூர் கிருஷ்ணசாமி ஐயருக்கு ஐந்தாண்டுத் தீவாந்தரத் தண்டனை விதிக்கப்பட்டதும் வாஞ்சி போன்ற இளைஞர்கள் நெஞ்சில் வெள்ளையர் மீது வெறுப்பை வளர்த்தன.

திலகருக்கும் சிதம்பரனாருக்கும் சிவாவுக்கும் கொடுந்தண்டனை விதிக்கப்பட்டதைக் கண்டித்துச் சென்னையில் ஒரு ஊர்வலத்தை நடத்திய குற்றத்திற்காகச் சுரேந்திநாத் ஆரியாவுக்கு ஐந்தாண்டுத் தீவாந்தரத் தண்டனை! சிறைக் கொடுமையைத் தாங்கிக் கொள்ள இயலாமல் ஆரியா தற்கொலை செய்து கொள்ள முயன்றதால் மேலும் ஆறுமாதத் தண்டனை!

அக்கிரகாரத்து அதிசய மனிதராக விளங்கிய திரு.ஜி. சுப்பிரமணிய ஐயரைக் கைது செய்து, அவர் தொழுநோயால் தொல்லையுறுவ தறிந்தும் நிபந்தனையின்றி விடுதலை தர மறுத்தது அரசு. நிபந்தனையை ஏற்றில்லையானால், அவருக்கும் ஐந்தாண்டோ, ஆயுள்வரையோ தண்டனை கிடைத்திருக்கும்.

பாரதியார் புதுவைக்குச் சென்றில்லையானால் அவருக்கும் சிதம்பரனாரைப் போன்று ஆயுள் தண்டனையோ, சிவாவைப் போன்று பத்தாண்டு சிறைவாசமோ கிடைத்திருக்கும்!

இந்த நிகழ்ச்சிகளெல்லாமும் வாஞ்சியின் நெஞ்சத்தில் வஞ்சத்தை வளர்த்தன!

சிதம்பரனார் சிறையில் தமக்குற்ற கொடுமைகளைத் தாங்கிக் கொள்ள முடியாமல், ''என்னை அந்தமான் தீவுக்கே அனுப்பி விடுங்கள்'' என்று பிரிட்டிஷ் அரசர் பெருமானுக்கு மனுப் போட்ட செய்தியைப் பத்திரிகைகளில் படித்து வாஞ்சி போன்ற இளைஞர்களின் இரத்தம் துடித்தது!

லண்டன் பாராளுமன்றத்தில் திரு. ரீஸ் என்ற வெள்ளையரே 13-3-1909-இல் கேள்வி கேட்கிறார், ''கிரிமினல் கைதிகளைக் கொண்டு சிறை அதிகாரிகள் அரசியல் கைதியான வ.உ.சி.யைத் தொல்லைப் படுத்துவது உண்மையா?'' என்று. ''அதுபற்றித் தகவல் இல்லை'' என்று பதிலளிக்கப்படுகிறது.

அதே ரீஸ் என்னும் உறுப்பினர், திரும்பவும் 9-6-1909-இல் வ.உ.சி. பற்றி மற்றொரு கேள்வி கேட்கிறார். அதற்கும் பொறுப்பான பதில் இல்லை.

''சிறையில் சிதம்பரனாருக்குக் கேழ்வரகு உணவு அளிக்கப் படுகிறது என்பது உண்மையா?'' என்று சென்னை சட்டமன்றத் தில் பிறந்த வினாவுக்கு, ''இது பற்றித் தகவல் இல்லை'' என்று விடையளிக்கிறது சென்னை அரசு. இந்தச் சூழ்நிலையில்தான் இளைஞர் வாஞ்சி ஆத்திரம் கொண்ட தன் மனத்திற்கு ஆறுதல் தேடும் பொருட்டுக் கொலைச் செயலில் ஈடுபட்டார். இந்த உண்மைகள் அரச தஸ்தாவேஜுகளில் பதிவாகியுள்ளன.

வாழ்விழந்த பொன்னம்மாள்!

வாஞ்சி, 25 வயதுக்குமேல் இல்லாத காளைப்பருவத்தினர்; ஆசாரத்தில் பற்றுடைய அந்தணச் சாதியினர்; ஆங்கில ஞானம் உடையவர்; திருமணமாகி ஐந்து வருடமே ஆனவர்! மணமகள் அவருடைய சகோதரி ஈன்ற மகள். பருவ மணமல்ல; பால்ய மணம்! மனைவி பக்குவமடைந்த நிலையிலே கணவர் உயிர் துறந்தார். முதல் இரவைக்கூட சந்தித்தார்களோ இல்லையோ!

ஒரு தேச பக்தரை மணந்த பாவத்திற்காக பருவமடைந்த நாளிலிருந்தே விதவை வாழ்க்கை நடத்தினார் திருமதி வாஞ்சி. அந்தப் புனிதவதியின் பெயர் பொன்னம்மாள்! இன்னொரு முறையும் சொல்லிப் புண்ணியம் பெறுவோம், அந்தப் புனிதவதியின் பெயர் பொன்னம்மாள்!

★-★-★

திருநெல்வேலிச் சதி வழக்கு

திரு. வாஞ்சியின் உடலிலிருந்து எடுக்கப்பட்ட கடிதத்தில், ''ஐந்தாம் ஜார்ஜுக்கு டில்லியில் முடிசூட்டு விழா நடைபெறும் சந்தர்ப்பத்திலே நாட்டில் புரட்சி நிகழும்'' என்று எழுதப்பட்டிருந்ததால், வாஞ்சியின் பின்னே ஒரு புரட்சிக் கூட்டம் இருக்கக்கூடும் என்று சென்னை மாகாண அரசு ஐயுற்றது. அந்தக் கூட்டத்தைக் கண்டுபிடிக்கத் துப்பறியும் போலீசார் தூண்டி விடப்பட்டனர். ஆஷ் கொலை சம்பந்தமான சதியில் செங்கோட்டை, புனலூர் ஆகிய திருவிதாங்கூர் சமஸ்தான ஊர்களைச் சார்ந்தவர்கள் சம்பந்தப்பட்டிருக்கக்கூடும் என்று துப்பறியும் அதிகாரிகள் நம்பியதால், அவர்கள் சம்பந்தமாக நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளத் திருவிதாங்கூர்ச் சமஸ்தானத்தின் ஒத்துழைப்பும் பெறப்பட்டது.

போலீசாரின் வேட்டை!

செங்கோட்டை நகரில் மாட வீதியிலுள்ள வாஞ்சியின் வீடு சோதனையிடப்பட்டது. அவருக்கு வந்திருந்த கடிதங்கள் பலவும், வேறு அரசியல் நூல்கள் சிலவும், பாண்டிச்சேரியிலிருந்து பாரதியாரால் நடத்தப்பெற்ற ''இந்தியா'' ''விஜயா'' பத்திரிகை களின் பழைய பிரதிகளும் போலீசாரால் கைப்பற்றப்பெற்றன.

வாஞ்சியின் வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்ட கடிதங்களி லிருந்து அவருடைய அரசியல் சகாக்களின் விலாசங்கள் கண்டு பிடிக்கப்பட்டு போலீசாரால் சந்தேகிக்கப்பட்ட நாற்பது பேர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் திருவிதாங்கூர் சமஸ் தானத்தையும் பிரிட்டிஷ் இந்தியத் தமிழகத்தையும் சார்ந்தவர்களாவர். இவர்களில் இருவர் பெண்கள். இவ்விருவரும் விசாரணைக்குப் பின் விடுதலை செய்யப்பட்டனர்.

ஒட்டப்பிடாரம், செங்கோட்டை, திருநெல்வேலி, தென் காசி, மதுரை, தூத்துக்குடி ஆகிய ஊர்களில் பல வீடுகளும், கடை களும், பொது ஸ்தாபனங்களும் போலீசாரின் சோதனைக் குள்ளாயின. அங்கிருந்தெல்லாம் அச்சிடப்பட்ட ஆட்சேபகர மான பிரசுரங்கள் கைப்பற்றப்பட்டன. இவற்றை யெல்லாம்

கொண்டு, குற்றவாளிகள் என்று போலீசாரால் கருதப்பட்ட பதினான்கு பேர்கள் மீது கலெக்டர் ஆஷைக் கொல்வதற்கும் பிரிட்டிஷ் அரசை வீழ்த்துவதற்கும் சதி செய்ததாக இ.பி.கோ. *121-ஏ, 302, 109, 111* விதிகளின்படி சதி வழக்குத் தொடரப்பட்டது. இது, ''திருநெல்வேலிச் சதி வழக்கு'' என்று பெயர் பெற்றது.

வேட்டைக்குப் பலியான வெங்கடேசுவரர்!

திருவிதாங்கூர்ச் சமஸ்தானத்தைச் சேர்ந்த புனலூர் வாசியான கிரிமினல் வக்கீல் திரு. வெங்கடேசுவர ஐயர் என்பவர் ஆஷ் கொலைக்கான சதியில் சம்பந்தப்பட்டவர் என்று கருதி அவரை வேட்டையாட முயன்றனர் போலீசார். அவர் போலீசாரிடம் பிடிபடுவதற்கு முன்பே கூரிய கத்தி ஒன்றால் தம் கழுத்தை அறுத்துக் கொண்டு தற்கொலை செய்து கொண்டார். இந்தக் கோர நிகழ்ச்சி பற்றிப் போலீசாரின் இரகசியக் குறிப்பு கூறுவதாவது:

''புனலூர்வாசியான கிரிமினல் வழக்கறிஞர் திரு. வெங்கடேசுவர ஐயர் ஆஷ் கொலைக்கான சதியில் சம்பந்தப் பட்டிருக்கக் கூடுமென சந்தேகிக்கப்பட்டதால், திருவிதாங்கூர்ப் போலீஸ் சூபரின்டெண்ட் திரு. ஜார்ஜ் என்பவர் ஐயரின் வாக்குமூலத்தைப் பெற விரும்பி, அவரை அழைத்துவரப் போலீசாரை அனுப்பினார். ஆனால், திருவேங்கடேசுவர ஐயர் திரு. ஜார்ஜ் முன் ஆஜராகாமல் கூரிய கத்தி ஒன்றால் தமது கழுத்தை அறுத்துக் கொண்டு தற்கொலை செய்து கொண்டார். அவருக்குச் சுய நினைவு இருந்தபோது, புனலூர் சப் மாஜிஸ்திரேட் திரு. ராமன் தம்பி, புனலூர் அரசாங்க மருத்துவமனையின் துணை மருத்துவர் டாக்டர் நீலகண்டன் பிள்ளை ஆகிய இருவர் முன்பாக, ஒரு காகிதத்திலே, ''மற்றவர்களைப் போல நானும் சதிக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். என்னை சாட்சியாக இந்த வழக்கில் விசாரியுங்கள்'' என்று அவர் எழுதிக்கொடுத்தார்.''

நஞ்சுண்டு மாண்ட தருமராசர்!

ஆஷ் கொலை சம்பந்தமாக விசாரணை நடத்தும் பொருட்டுக் கைது செய்யப்பட்டவர்களிலே செங்கோட்டை திரு. தருமராச ஐயர் என்பவரும் விஷமருந்தித் தற்கொலை செய்து கொண்டார். இந்த நிகழ்ச்சி பற்றிப் போலீஸ் துறையின் இரகசியக் குறிப்பு கூறுவதாவது:

''1911 ஜூன் 25-ஆம் தேதி தருமராஜ ஐயருடைய வீடு சோதனையிடப்பட்டது. ஆனால் அவருடைய வீட்டிலிருந்து ஆட்சேபகரமானது எதுவும் கிடைக்கவில்லை.

''ஜூன் 28-ஆம் தேதி திரு. தருமராஜ ஐயர் விஷம் அருந்தியதால் வாந்தியும் வயிற்றுப் போக்கும் ஏற்பட்டது. இதுபற்றித் தருமராச ஐயரின் உறவினரான சங்கரநாராயண ஐயர் மூலம் செங்கோட்டை சப் மாஜிஸ்திரேட் பரமேசுவர ஐயருக்குத் தகவல் கிடைத்தது. அவர் மூலம் தருமராச ஐயர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு உடல் தேறாமல் ஜூலை 20 ஆம் தேதி காலமானார்.

திரு. தருமராஜ ஐயர் பற்றித் ''திருநெல்வேலி மாவட்ட சுதந்திரப் போராட்ட வரலாறு'' என்னும் நூலில் (பக். 80 இல்) காணப்படும் தகவல் வருமாறு:

''செங்கோட்டை தருமராச ஐயர் பல இன்னல்களுக்கு ஆளானார். அவருடைய வீடு சூறையாடப்பட்டது. நாடெல்லாம் சுற்றித் திரிந்து தேசிய இயக்கத்தை உண்டாக்கிய இவர், போலீசாரின் சித்திரவதைக்குப் பயந்து, நஞ்சு குடித்து அமரரானார்! இவர் நல்ல சுகவாசி; உல்லாச புருஷர்; திருவிதாங்கூர்ச்சமஸ்தான ஆங்கிலேயர்களில் சிலர் இவரது இல்லத்திற்கு அடிக்கடி வந்து, விருந்துண்டு களிப்புடன் போவது உண்டு.''

திரு. வெங்கடேசுவர ஐயர், திரு. தருமராச ஐயர் ஆகியோரின் தற்கொலை நிகழ்ச்சி குறித்துக் காவல்துறை குறிப்புத் தரும் செய்திகளுக்கு மாறான செய்திகளும் செங்கோட்டை, புனலூர் மக்கள் மத்தியில் கர்ண பரம்பரையாக வழங்கி வருகின்றன.

அக்காலத்திலே சிறையில் அடைபடுவது சமூக பகிஷ்காரத்திற்குரிய குற்றமாகக் கருதப்பட்டது. அதனால், சுகஜீவியான திரு. தருமராச ஐயரும், வக்கீல் திரு. வெங்கடேசுவர ஐயரும் சமூக பகிஷ்காரத்திற்கு அஞ்சி, தற்கொலை செய்து கொண்டிருக்கக் கூடும் என்று அனுமானிப்பது இயற்கை.

இது விஷயத்தில் உண்மை எதுவாயினும் சரி; தேசத்திற்காக உயிரிழந்த தியாகிகள் பட்டியலிலே புனலூர் வெங்கடேசுவர ஐயரும் செங்கோட்டை தருமராச ஐயரும் முதலிடம் பெறத் தக்கவராவார்கள்.

மாடசாமி எங்கே?

ஆஷ் கொலை சம்பந்தமாக போலீசாரால் தேடப்பட்டவர்களிலே நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த ஒட்டப்பிடாரம் திரு. மாடசாமிப் பிள்ளையும் ஒருவராவார். ஒட்டப்பிடாரம் கப்பலோட்டிய தமிழர் வ.உ. சிதம்பரனார் பிறந்து வாழ்ந்த ஊர். இந்த புனிதப் பதியில் பிறந்த திரு. மாடசாமி, பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான வன்முறைப் புரட்சியில் ஈடுபட்டிருந்திருப்பாரானால், அது வியப்புக்குரியதல்ல. வீரர் மாடசாமி திரு. வ.உ.சிதம்பரனாரின் தோழராகவும் சீடராகவும் இருந்து சட்டத்திற்குட்பட்ட முறையில் நடந்த சுதேசிக் கிளர்ச்சியில் பங்கு கொண்டவருமாவார். மாடசாமிப் பிள்ளை பற்றிய போலீசாரின் இரகசியக் குறிப்புக் கூறுவது வருமாறு:

> ''தூத்துக்குடி போலீஸ் துணை சூபரின்டெண்ட் திரு. ஜான்சன் தலைமறைவாகி விட்ட திரு. மாடசாமிப் பிள்ளையைப் பிடிக்க எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. அவரது வீட்டிலுள்ள பொருள்களையும் அவருக்குச் சொந்தமான நிலங்களையும் பறிமுதல் செய்வதற்கு நீதி மன்றம் உத்தரவிட்டது.''
>
> ***(''நெல்லைச் சதி வழக்கும் ஆஷ்கொலையும்''; பாகம்-3; பக். 822)***

'குற்றவாளிகள்' பட்டியல்!

தற்கொலை செய்து கொண்டவர்களான வாஞ்சிநாதன், புனலூர் திரு. வெங்கடேசுவர ஐயர், திரு. தருமராஜ ஐயர், தலைமறைவாகிவிட்ட ஒட்டப்பிடாரம் திரு. மாடசாமிப்பிள்ளை ஆகியோர் திருநெல்வேலிச் சதிவழக்கில் குற்றவாளிகள் பட்டியலிலே சேர்க்கப்படவில்லை. ஆனால், இவர்களில் திரு. வெங்கடேசுவர ஐயர் தவிர மற்றவர்களுக்குப் புரட்சியில் இருந்த தொடர்புபற்றிய தஸ்தாவேஜுகளும் கடிதங்களும் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. அரசாங்கத் தரப்பில் சாட்சியம் சொன்னவர்களிலே பலர் இந்த மூவரைப் பற்றி நிறையத் தகவல்கள் கொடுத்தனர். தற்கொலை செய்துகொண்ட புனலூர் திரு. வெங்கடேசுவர ஐயர் பற்றி நீதிமன்ற விசாரணையின் போது பிரஸ்தாபமே எழவில்லை. இது, அவர் நிரபராதி என்பதைக் காட்டும்.

திருநெல்வேலிச் சதி வழக்கில் குற்றவாளிகளாக்கப் பட்டோரிலே ஒருவரான திரு. நீலகண்ட ஐயர் கல்கத்தாவில் கைது

செய்யப்பட்டார். வாஞ்சிநாதன் ஆஷ் துரையைச் சுட்டுக் கொன்றபோது, அந்த இடத்திலிருந்து அவருக்குத் துணை புரிந்ததாகச் சந்தேகிக்கப்பட்ட திரு. சங்கரகிருஷ்ண ஐயரையும் போலீசார் மிகுந்த பிரயாசை எடுத்துக் கண்டுபிடிக்க வேண்டி யிருந்தது. இவர் வாஞ்சிநாதனின் மைத்துனராவார்.

ஆஷ் கொலையிலும், அது சம்பந்தமான சதியிலும் சம்பந்தப்பட்டவர்களைக் கண்டுபிடிக்க திரு. தாம்பே என்பவர் விசேஷ அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

திருநெல்வேலிச் சதி வழக்கில் குற்றவாளிகளாக்கப் பட்டவர்கள் பெயர்கள் வருமாறு:

	பெயர்	வயது	தொழில்
1.	நீலகண்ட பிரம்மச்சாரி	21	பத்திரிகையாளர்
2.	சங்கர கிருஷ்ணய்யர்	22	-
3.	மடத்துப்பட்டி சிதம்பரம் பிள்ளை	24	-
4.	முத்துக்குமாரசாமிப் பிள்ளை	45	மட்பாண்ட வியாபாரி
5.	சுப்பையா பிள்ளை	43	குமாஸ்தா
6.	ஜெகன்னாத ஐயங்கார்	25	சமையல்
7.	அரிகர ஐயர்	21	வணிகர்
8.	ராமசாமி பிள்ளை என்கிற பாபு பிள்ளை	24	விவசாயி
9.	வி. தேசிகாச்சாரி	30	வணிகர்
10.	வேம்பு ஐயர் என்கிற மகாதேவ் ஐயர்	23	சமையல்
11.	சாவடி அருணாசலம் பிள்ளை	20	விவசாயி
12.	அழகப்ப பிள்ளை	18	விவசாயி
13.	வந்தேமாதரம் சுப்பிரமணிய ஐயர்	26	வாத்தியார்
14.	பிச்சுமணி என்கிற வேங்கடாசல ஐயர்	26	சமையல்

விசேட 'நீதி' மன்றம்

நெல்லை சப் டிவிஷனல் முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நெல்லைச் சதிவழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. பூர்வாங்க விசாரணைக்குப் பின் 14 பேரும் குற்றவாளிகள் எனத் தீர்மானித்து மாஜிஸ்திரேட் உயர்நீதி மன்றத்திற்கு வழக்கை அனுப்பி வைத்தார். இந்த வழக்குக்கென விசேஷ நீதிமன்றம் (ஸ்பெஷல் பெஞ்ச்) ஒன்றைச் சென்னை மாகாண அரசு நியமித்தது. அதிலே சர். ஆர்னால்டு வொயிட் என்பவர் தலைமை நீதிபதி.சர். சங்கரன் நாயரும், ஐலிங் என்ற

ஐரோப்பியரும் நீதிபதிகள். திரு. நாயர் 1897-இல் அமராவதியில் கூடிய காங்கிரஸ் மகா சபையில் தலைமை வகித்தார்.

இந்த வழக்கிலே அரசாங்கத் தரப்பிலும் குற்றவாளிகள் தரப்பிலும் ஆஜராகி வாதாடிய வழக்கறிஞர்கள் பெயர்கள் வருமாறு:

திரு.சி.எஃப். நேப்பியர்	பப்ளிக் பிராசிகியூடர்
திரு. ரிச்மண்ட்	அரசு சார்பில்
திரு. சுந்தர சாஸ்திரியார்	குற்றவாளிகள் சார்பில்
திரு. ஜே.சி. ஆதம்	முதல் குற்றவாளிக்கு
திரு. டி. பிரகாசம்	2, 10, 14, குற்றவாளிகளுக்கு
திரு. எம். டி. தேவராஜ்	3, 8 குற்றவாளிகளுக்காக
திரு. ஜே.எல். ரொசாரியா	3, 8 குற்றவாளிகளுக்காக
திரு. ஈ.எஸ். சிதம்பரம்பிள்ளை	3,8 குற்றவாளிகளுக்காக
திரு. பி. நரசிம்ம ராவ்	4,5 குற்றவாளிகளுக்காக
திரு. டி.எ. கிருஷ்ணசாமி ஐயர்	4,5 குற்றவாளிகளுக்காக
திரு. என்.கே. இராமசாமி ஐயர்	6 வது குற்றவாளிகளுக்காக
திரு. எல்.ஏ. கோவிந்தராகவ ஐயர்	7 வது குற்றவாளிக்காக
திரு. எல்.எஸ். வீரராகவ ஐயர்	7வது குற்றவாளிக்காக
திரு. எல்.ஜி. குப்புசாமி ஐயர்	9 வது குற்றவாளிக்காக
திரு. எஸ்.டி. சீனிவாச கோபாலாச்சாரியார்	11,12 குற்றவாளிகளுக்காக
திரு. எஸ். முத்தையா முதலியார்	11,12 குற்றவாளிகளுக்காக
திரு. ரைரு நம்பியார்	13 வது குற்றவாளிக்காக

சதித் திட்டமும் செயலும்

விசேஷ நீதிமன்றத்தில் 11-9-1911-இல் சதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. போலீஸ் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப் பத்திரிகையிலும், நீதிமன்றத்தில் சொல்லப்பட்ட சாட்சியங்களிலும் கீழ் வருமாறு தகவல்கள் தரப்பட்டன:

★ எதிரிகள் அனைவரும் ''பாரத மாதா சங்கம்'' என்ற ரகசிய ஸ்தாபனத்தை நிறுவி, அதன் உறுப்பினராக இருந்தனர்.

★ இவர்கள் ஒரு நாளைக் குறிப்பிட்டு, அந்த நாளிலே வெள்ளையர் அனைவரையுமே கொன்று விடுவதற்குத் திட்டம் வகுத்தனர்.

★ வன்முறையில் தேசத்திற்குச் சுதந்திரம் தேடுவது இவர் களுடைய கொள்கையாகும். இதற்காக இவர்கள் பலமுறை

ரகசியமாகக் கூடிப் பேசியிருக்கின்றனர். அத்தகைய ரகசியக் கூட்டங்கள் புனலூர், செங்கோட்டை, தென்காசி, ஒட்டப்பிடாரம் ஆகிய ஊர்களில் நடைபெற்றன.

★ தங்களுடைய வேலைத் திட்டத்தை நிறைவேற்றுவதாகக் கூறி ஒரு கடிதத்தில் எழுதப்பட்ட உறுதிமொழியிலே, வலது கைக் கட்டைவிரலைக் கீறி ரத்தம் எடுத்து, அந்த ரத்தத்தைக் கொண்டு கையொப்பம் இட்டனர்.

★ குங்குமம் கலந்த சிவப்புத் தண்ணீரை வெள்ளையர்களின் ரத்தமாகப் பாவித்து, காளிதேவியின் உருவத்திற்கு அபிஷேகம் செய்தனர். இந்தச் சந்தர்ப்பங்களிலே, குற்றவாளிகளில் சிலர் கொலைச் செயலுக்குத் தூண்டும் வகையில் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்.

★ தூத்துக்குடியில் வ.உ.சி.யும் சிவாவும் கொடுந்தண்டனை பெறவும், இவ்விருவரும் கைதியானபோது நெல்லையில் நடந்த கலவரத்திலே நிகழ்த்திய துப்பாக்கிச் சூட்டால் சிலர் உயிரிழக்கவும் காரணமானவர்கள் என்று கருதப்பட்ட கலெக்டர் விஞ்சையும், அப்போது துணைக் கலெக்டராக இருந்த ஆஷையும் கொன்றுவிட இவர்கள் திட்டமிட்டனர்.

★ கலெக்டராக இருந்த விஞ்ச் துரை வேறு ஜில்லாவுக்கு மாற்றலாகிவிட்டதால், துணைக் கலெக்டராக விருந்து கலெக்டர் பதவிக்கு உயர்ந்த திரு. ஆஷ் துரையைக் கொல்லச் சதி செய்து அதனை நிறைவேற்றி வைத்தனர்.

★ குற்றவாளிகள் தங்கள் சதிச் செயல்களுக்குப் பாண்டிச் சேரியைத் தலைமையிடமாகக் கொண்டிருந்தனர்.

★ 1910 ஜனவரி 1 தொடங்கி 1911 ஜூன் 17ஆம் தேதிவரை குற்றவாளிகள் சதிச் செயல்களில் ஈடுபட்டிருந்தனர்.

★ ஆட்சேபகரமான பிரசுரங்களை அச்சிடவும், கைத்துப்பாக்கி களைக் கடத்தி வரவும் பிரெஞ்சு இந்தியப் பிரதேசமான பாண்டிச்சேரி இவர்களுக்குப் பாதுகாப்பான இடமாக இருந்திருக்கிறது.

★ புனலூர் காட்டிலாகாவில் வேலை பார்த்து வந்த வாஞ்சி நாதன் தனது வேலைக்கு விடுப்பு போட்டுவிட்டு பாண்டிச்சேரிக்குச் சென்று அங்கிருந்த வ.வே.சு. ஐயரிடம் துப்பாக்கியால் சுடுவதற்குப் பயிற்சி பெற்றார்.

★ 1857-இல் வடக்கே நடந்த புரட்சியைப் போன்ற ஒரு புரட்சியைத் தமிழ்நாட்டில் நடத்துவதற்குத் தமிழ் மக்களைத் தயார்படுத்துவதும் இவர்களுடைய திட்டங் களில் ஒன்றாகும்.

திருநெல்வேலிச் சதி வழக்கு விசாரணைக்காக விசேஷ நீதி மன்றம் 80 நாட்களைச் செலவிட்டது. குற்றவாளிகள் மீது சுமத்தப்பட்ட குற்றங்களை நிரூபிப்பதற்காக ஏராளமான கடிதங்களும், நூல்களும் செய்திப் பத்திரிகைகளும் போலீசாரால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. பாரதியாரின் ''இந்தியா''வும், ''விஜயா''வும் கூட ஆஷ் கொலைக்கான சதியை நிரூபிக்கும் சாட்சியங்களாகத் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. பிரிட்டிஷ் இந்தியாவுக்குள் வரக்கூடாதபடி தடை செய்யப் பட்டிருந்த இந்தப் பத்திரிகைகளின் பிரதிகளை ரகசியமாக பொதுமக்களிடம் வினியோகம் செய்ததும் குற்றவாளிகள் சதிகாரர்கள்தான் என்பதற்குச் சான்றாகக் கொள்ளப்பட்டது.

'அப்ரூவர்கள்!''

இந்தச் சதியில் சம்பந்தப்பட்டவர்களாகக் கருதப்பட்ட திரு. இராமசாமி ஐயர், திரு. சோமசுந்தரம், திரு. ஆறுமுகம் ஆகிய மூவரும் அப்ரூவர்களாக எடுத்துக் கொள்ளப்பட்டனர்.

எதிரிகளில் எவரும் தங்கள் மீது சாட்டப்பட்ட குற்றங்களில் எதையும் ஒப்புக்கொள்ளவில்லை. மறுக்கவும் செய்தனர். வாக்குமூலம் கொடுக்க விரும்பவில்லை. முதல் எதிரியான திரு. நீலகண்ட பிரம்மச்சாரி மட்டும், தாம் கல்கத்தாவிலும் அங்கிருந்து கொண்டு வரப்பட்டபின் நெல்லையிலும் போலீசாரிடம் தந்த வாக்குமூலங்கள் பற்றி ஒரு விளக்கம் அளித்தார்.

தீர்ப்பு இரு வகை

15-2-1912-இல் தீர்ப்பளிக்கப்பட்டது. நீதிபதிகளிலே சர். ஆர்னால்டு வொயிட், திரு. ஐலிங் ஆகிய வெள்ளையர் இருவரும் ஒரு விதமாகவும், இந்தியரான திரு. சி. சங்கரன் நாயர் ஒரு விதமாகவும் தீர்ப்பளித்தனர்.

விசேஷ நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி திரு. ஆர்னால்டு வொயிட்டும் நீதிபதி ஐலிங்கும், பிரிட்டிஷ் அரசாங்கத்தைக் கவிழ்க்க எதிரிகள் சதி செய்தார்கள் என்று இ.பி.கோ 121-ஏ விதியின்படி போலீசாரால் கொடுக்கப்பட்ட குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லையென்று கூறி, அது சம்பந்தப்பட்ட வரையில் எதிரிகள் அனைவரையும் விடுதலை செய்தனர். ஆனால், ஆஷைக் கொல்லச் சதி செய்ததாக இ.பி.கோ 302, 109, 111 ஆகிய விதிகளின்படி கொண்டு வரப்பட்ட குற்றச்சாட்டு 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 14 ஆகிய குற்றவாளிகளைப் பொறுத்த

வரையில் நிரூபிக்கப்பட்டிருப்பதாகக் கூறி, அவர்களுக்குப் பலவிதமான தண்டனைகள் விதித்தனர். மற்றும், *9, 10, 11, 12, 13* ஆகிய ஐந்து எதிரிகள் சம்பந்தப்பட்ட வரையில் இரண்டாவது குற்றச்சாட்டும் நிரூபிக்கப்படவில்லையென்று கூறி, அவர்களை விடுதலை செய்தனர்.

விசேஷ நீதிமன்றத்தின் மற்றொரு நீதிபதியான திரு. சங்கரன் நாயர் என்பவர் திரு. ஆஷைக் கொல்லச் சதி செய்ததாகக் கொண்டு வரப்பட்ட இரண்டாவது குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட வில்லையென்று சொல்லி, அதைப் பொறுத்தவரையில் எதிரிகள் அனைவரையும் விடுதலை செய்வதாகக் கூறித் தீர்ப்பளித்தார். ஆனால், பிரிட்டிஷ் அரசைக் கவிழ்ப்பதற்காகச் சதி செய்தார்கள் என்று கொண்டு வரப்பட்ட முதல் குற்றச்சாட்டு, *1, 2, 6, 14* ஆகிய *4* எதிரிகள் விஷயத்தில் நிரூபிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லி அவர்கள் குற்றவாளிகளே என்று தீர்ப்பளித்தார்.

கருத்து வேறு எனினும் தண்டனை

இரண்டு விதமான குற்றச்சாட்டுகளிலே எது நிரூபிக்கப் பட்டுள்ளது. எது நிரூபிக்கப்படவில்லை என்பதில் நீதிபதிகள் தங்களுக்குள் கருத்து வேற்றுமை காட்டியதால், பெரும்பான்மை தீர்ப்பு நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்டது. விசேஷ நீதி மன்றத்தில் தண்டிக்கப் பெற்றவர்களும், அவர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனைகளும் வருமாறு:

பெயர்		தண்டனை
1. நீலகண்ட பிரம்மச்சாரி	-	*7* வருடம்
2. சங்கரகிருஷ்ண ஐயர்	-	*4* வருடம்
3. மடத்துப்பட்டி சிதம்பரம் பிள்ளை	-	*2* வருடம்
4. முத்துக்குமாரசாமிப் பிள்ளை	-	*1* வருடம்
5. சுப்பையா பிள்ளை	-	*1* வருடம்
6. செகன்னாத ஐயங்கார்	-	*1* வருடம்
7. அரிகர ஐயர்	-	*3* வருடம்
8. ராமசாமி என்கிற பாபு பிள்ளை	-	*1* வருடம்
9. வி. தேசிகாச்சாரி	-	விடுதலை
10. வேம்பு ஐயர் என்கிற மகாதேவ ஐயர்	-	விடுதலை
11. சாவடி அருணாசலம் பிள்ளை	-	விடுதலை
12. அழகப்ப பிள்ளை	-	விடுதலை
13. வந்தேமாதரம் சுப்பிரமணிய ஐயர்	-	விடுதலை
14. பிச்சுமணி ஐயர் என்கிற வேங்கடாசல ஐயர்	-	*1* வருடம்

ஏழாண்டுக் கடுங்காவல் தண்டனை பெற்ற திரு. நீலகண்ட பிரம்மச்சாரி இரண்டாண்டுக் காலம் சிறையில் இருந்த பின் 1914-இல் பெல்லாரிச் சிறையிலிருந்து தப்பியோடி விட்டார். ஆனால், 2 நாட்களுக்குள்ளேயே தர்மாவரம் ரெயில்வே ஸ்டேஷனில் பிடிபட்டார். சிறையிலிருந்து ஓடிய குற்றத்திற்காக மேலும் ஆறு மாத தண்டனை விதிக்கப்பட்டது. மொத்தத்தில் ஏழரை ஆண்டு சிறைத் தண்டனையைச் சென்னை, பெல்லாரி, கண்ணனூர், ராஜமகேந்திரவரம் முதலிய சென்னை மாகாணச் சிறைகளில் கழித்துவிட்டு 1919 ஆகஸ்டில் விடுதலை பெற்றார்.

'தண்டனைக்குரிய நிரபராதி!'

நெல்லைச் சதி வழக்கிலே முதல் குற்றவாளியான திரு. நீலகண்ட பிரம்மச்சாரி நீதிமன்றத்தில் கொடுத்த வாக்குமூலத்தின் சுருக்கம் வருமாறு:

''நான் மனம் திறந்து கூற விரும்புகிறேன். இந்த வழக்கில் தண்டனைக்குரிய ஒருவர் உண்டென்றால், அவர் நானாகத்தான் இருக்க முடியும். ஆனால், நான் நிரபராதி!

''நான் தென்காசியிலிருந்தபோது, திரு. சங்கர கிருஷ்ணய்யரை அனுப்பி, 'வந்தே மாதரம்' சுப்பிரமணிய ஐயரையும், தூத்துக்குடியிலிருந்து ஆறுமுகம் பிள்ளையையும் அழைத்துவரச் செய்தேன். அவர்கள் வந்தவுடன் தென்காசி சிதம்பரம் பிள்ளையின் வீட்டில் ஒரு சங்கத்தை உருவாக்கினோம். அந்தச் சங்கத்தில் நாங்கள் ஒரு உறுதிமொழி எடுத்துக் கொண்டோம். எங்கள் உயிர், உடல், பொருள், சுகம் அனைத்தையும் தாய்நாட்டின் சோவைக்காக அர்ப்பணித்து விட முடிவு செய்தோம். அதன் பின்னர், காளிதேவிக்குப் பூஜை செய்தோம். ஒரு காகிதத்தில் அந்த உறுதிமொழியை எழுதி, எங்கள் கட்டை விரல்களைக் கத்தியால் கீறி அதிலிருந்து ரத்தம் எடுத்துக் கையொப்பமிட்டோம். அங்கு கூடியிருந்தவர்கள் மனத்திலே ஒரு உறுதி ஏற்படுவதற்காக நாங்கள் இதைச் செய்தோம். இதைத் தவிர, வேறு எந்தவிதமான செயல் திட்டமும் நாங்கள் வகுக்கவில்லை. அந்த விஷயத்தில் என் மனதிலும் எந்தவிதமான முடிவும் இருக்கவில்லை. என்னுடைய சகாக்களுக் கும் நான் எதையும் உபதேசிக்கவில்லை. வாஞ்சிநாதனுடனோ அல்லது செங் கோட்டையைச்சார்ந்தவர்களுடனோ சேர்ந்து சங்கம் எதையும் நான் துவக்கவில்லை. அரசுக்கு எதிராக எந்தவிதமான கருத்தையும் நான் பிரசாரம் செய்யவில்லை.

''இந்த முதல் சந்திப்புக்குப் பின் நான் எனது சொந்த ஊருக்குப் போய்விட்டேன். போனபின், நெல்லை மாவட்டக்

காரர்களுடன் எனக்கு ஏற்பட்ட தொடர்புபற்றி யாரிடமும் நான் எதையும் கூறவில்லை. நெல்லைக்குப் போனபின் இவர்கள் என்ன செய்தார்களென்பது எனக்குத் தெரியாது. நான் சொல்வதெல்லாம் உண்மை, நான் எதையும் மறைக்கவில்லை.''

வாஞ்சிநாதன் பற்றி...

நீலகண்ட பிரம்மச்சாரி, 1966-இல் அரியலூர் திரு.எல். சபாபதிப் பிள்ளை அவர்களால் வெளியிடப்பட்டுள்ள ''இந்திய சுதந்திரப் போர்'' என்னும் நூலில் எழுதியுள்ள கட்டுரையிலும் (பக்கம் 297) ஆஷ் கொலையில் தமக்குத் துளியளவும் தொடர்பு கிடையாதென்று கூறுகிறார். அது வருமாறு:

''எந்தத் தனிப்பட்ட ஆங்கிலேயரின் இரத்தத்தையும் சிந்தும் ஆர்வம் எங்களுக்கு இல்லை. தேச விடுதலைக்கு ஏகோபித்த ஆயுதப் புரட்சியை நாங்கள் தேர்ந்தெடுத்தோமே யொழிய, பயங்கரக் கொலை வழியை நாங்கள் நாடவில்லை. விரும்பவும் இல்லை.

''வாஞ்சிநாதன் ஓர் துடிப்புள்ள இளைஞர். திடீர் உணர்ச்சிக்கு ஆளாகக் கூடியவர். புரட்சி இயக்கத்தில் சேர எவ்விதத் தயக்கமும் காட்டாமல் அவர் தனது பரிபூரண சம்மதத்தை அளித்தார். பின் அடிக்கடி நேரிலும், கடித மூலமும் வாஞ்சியுடன் தொடர்பு கொண்டிருந்தேன். போலீசாரின் கண்களை மறைக்க நாங்கள் புனைபெயருடன் நடமாடலானோம்.

''நான் ஊரிலில்லாத சமயம் வாஞ்சிநாதன் என்னைப் பார்க்கப் புதுவைக்கு வந்திருக்கிறார். வ.வே.சு. ஐயரைச் சந்தித்திருக்கிறார். அவர் இவரது துணிவையும் உணர்ச்சி வேகத்தையும் சஞ்சல புத்தியையும் பயன்படுத்திக் கொண்டு ஆஷ் துரையைச் சுட்டுக் கொல்லத் தூண்டிவிட்டார். அதற்கான திட்டத்தையும் வகுத்து, துப்பாக்கி சுடும் பயிற்சியையும் அளித்து, துப்பாக்கி ஒன்றையும் கொடுத்து ஐயர் இவரை அனுப்பி விட்டார்,

''1911-ஆம் ஆண்டு சூன் மாதம் திருநெல்வேலியிலிருந்து கொடைக்கானலுக்குத் தம் மனைவியுடன் திருநெல்வேலி கலெக்டர் துரை ஆஷ் ரயில் மூலம் சென்றார். மணியாச்சி சந்திப்பில் வீரவாஞ்சி திடீரென அவரது பெட்டியில் நுழைந்து சுட்டு அவரை ரத்த வெள்ளத்தில் மிதக்கச் செய்து சவமாக்கினார். தப்பியோட யத்தனிக்கையில் நாலா பக்கமும் கூட்டம் கூடி

விட்டது. வேறு வழியின்றிக் கக்கூசுக்குள் சென்று, வாயில் துப்பாக்கியை வைத்துச் சுட்டுக் கொண்டார்.

''அவர் மண்டையும், காதும், கண்ணும், நாவும், பற்களும் நாலா பக்கமும் சிதறி விழுந்தன. தலையில்லாத முண்டமாக உருத் தெரியாமல் விழுந்தார் வீரர் வாஞ்சிநாதன்! இச்சம்பவம் நடக்கையில் நான் காசியில் இருந்தேன்.''

அப்பீல்!

நெல்லைச் சதி வழக்கில் தண்டனை பெற்ற ஒன்பது பேரிலே முதல் குற்றவாளியான நீலகண்ட பிரமச்சாரியைத் தவிர மற்றவர்கள் விசேஷ நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்து கொண்டார்கள்.

இந்த அப்பீல் மனுவை விசாரிக்க ஐந்து நீதிபதிகள் கொண்ட ''புல்பெஞ்சு'' அமைக்கப்பட்டது. ஆனால், விசாரணையின் முடிவிலே கீழ்கோர்ட்டு தீர்ப்பை புல்பெஞ்சு உறுதி செய்தது.

ஏழாண்டுக் கடுங்காவல் தண்டனை பெற்ற நீலகண்ட பிரமச்சாரி அப்பீல் செய்வதிலே தம் சகாக்களுடன் சேர்ந்து கொள்ளாதது, அவரது துணிவையே காட்டுகின்றது. ஆம்; தண்டனையை ரத்துச் செய்யும்படியோ, குறைக்கும்படியோ வெள்ளையர்களைக் கொண்ட ஒரு நீதிமன்றத்திற்கு மனுப்போட பிரம்மச்சாரியின் தேச பக்தியும் தன்மானமும் அனுமதிக்க வில்லை.

பிரம்மச்சாரி, தமக்கு விதிக்கப்பட்ட ஏழரை ஆண்டு தண்டனையை முழுசாக அனுபவித்தார். நன்னடத்தைக்காகச் சிறைச்சாலையில் தரப்படும் கழிவு நாட்கள் கூட இவருக்குத் தரப்படவில்லை.

கம்யூனிஸ்டாக மாறினார்!

1919-இல் சிறை மீண்டபின் திரு. பிரமச்சாரி கம்யூனிஸ்டாக மாறினார். வர்க்கப் புரட்சிக்கான பிரசாரத்தில் ஈடுபட்டதற்காக 1922 இல் பத்தாண்டுச் சிறைத் தண்டனை பெற்றார். இந்த முறை அவர் சென்னை மாகாணச் சிறையில் அடைக்கப்படவில்லை. மாண்ட்கோமரி (இன்று பாகிஸ்தானிலுள்ளது) சிறையிலும், பஞ்சாபிலுள்ள முல்டான் சிறையிலும், பர்மாவிலுள்ள ரங்கூன் சிறையிலும் பத்தாண்டுத் தண்டனை, முழுவதையும் அனுபவித்த பின் விடுதலையானார்.

ஆன்ம ஞானியானார்!

அரசியல் புரட்சிக்காரராகச் சிறை புகுந்த பிரம்மச்சாரி சிறையிலிருந்து மீண்டபோது ஆன்மஞானியாகக் காட்சியளித்தார். ஆம்; அரசியலுக்கு முழுக்குப் போட்டு, கர்நாடகத்திலுள்ள நந்திமலையில் ஆசிரமம் அமைத்துக்கொண்டு, 88 வயது வரை ஞானியாகவே வாழ்ந்து, 1978 இல் மறைந்தார்.

மாடசாமி என்ன ஆனார்?

ஆஷ் கொலை சம்பந்தப்பட்ட வழக்கில் தலைமறைவாகி விட்ட குற்றவாளியான ஒட்டப்பிடாரம் மாடசாமிப் பிள்ளை என்பவர், பின்னர் பிடிபடவேயில்லை. பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்து வெளியேறி பிரெஞ்சு இந்தியாவான பாண்டிச்சேரியில் பாரதியாருடன் சிறிது காலம் இருந்ததாகவும், அங்கும் பிரிட்டிஷ் போலீசார் அவரை வேட்டையாட முயன்றபோது, அவர் சிங்கப்பூர் சென்றதாகவும் தகவல்கள் கிடைக்கின்றன. அதன்பின் அவர் என்ன ஆனார் என்று அறிந்து கொள்ள முடியவில்லை. அவரது வாழ்க்கை முடிந்து போயிருக்குமென்பதில் ஐயமில்லை.

அவர் நிலை எதுவாகியிருப்பினும், அவரைப் பிரிந்து அல்ல லுற்ற அவரது மனைவியாருக்கும் மக்களுக்கும் சுதந்தரத்தின் பலனை அனுபவிக்கும் பாரத சமுதாயம் நன்றி செலுத்த வேண்டும்.

கோழையா?

மாடசாமி கோழைத்தனத்தால் தலைமறைவாகிவிட வில்லை. தண்டனைக்குப் பயந்தும் தப்பியோடவில்லை. அந்நாளில் போலீசாரிடம் பிடிபடாமல் தப்பியோடி, புரட்சிச் செயல்களிலீடுபடுவது புரட்சியாளரின் வேலைத் திட்டமாக இருந்தது. காந்திய சகாப்தம் பிறந்த பின்னர்தான் இந்த முறை பெருமை தரத் தக்கதல்லவென்று தேச பக்தர்களால் கருதப்பட்டது.

திரு. மாடசாமி பற்றி, அவர் சார்ந்திருந்த புரட்சிக் கோஷ்டியின் தலைவரான நீலகண்ட பிரம்மச்சாரி கூறுவதைக் கேட்போம்:

''எனது புரட்சிப் படையில் மாடசாமி பிரதானமானவர். மகா தீரர்; சூரர்; வீரர்! இவரைப் போல உறுதியும் துணிவும் மிகுந்தவரைக் காண்பதரிது. இவர் சகல கலா வல்லவர். எந்த நிமிஷத்திலும் எந்த வேடத்தையும் போட்டுத் திறமையுடன் செயல்பட வல்லவர். போலீசாரைப் பலதரம் ஏமாற்றியுள்ளார்.

நெருங்கியவர்களைத் தவிர வேறு யாராலும் இவரை அடையாளம் காண இயலாது. அவ்வளவு சாமர்த்தியசாலி! ஒட்டப்பிடாரம்தான் இவரது சொந்த ஊர். திருமணமானவர். குழந்தைகளும் உண்டு. அப்படியிருந்தும், இவர் புரட்சி வேள்வியில் குதித்து நீந்தினா ரென்றால், இவரது ஆண்மையையும் உறுதியையும் என்னென்று புகழ்வது!''

(''இந்திய சுதந்திரப் போர்''; பக். 295)

மறைந்த வரலாறு!

திரு. மாடசாமி தலைமறைவான பின் அவருடைய சொத்துக்களையெல்லாம் நீதிமன்றத்தின் ஆணைப்படி அரசு பறிமுதல் செய்துவிட்டதென்பதை முன்னரே அறிந்தோம். அதனால், கணவனைப் பிரிந்த திருமதி. மாடசாமி தம் குழந்தை களை வைத்துக்கொண்டு என்ன பாடுபட்டாரோ? தேச பக்த மாவீரனுக்கு மக்களாகப் பிறந்த பாவத்திற்காக அந்தக் குழந்தைகள் பசியாலும் பட்டினியாலும் எவ்வளவு காலம் அல்லலுற்றனவோ! அவர்களது தியாக வாழ்வுக்குத் திரைவிழுந்து விட்டதே!

தமிழ்நாட்டை கிழக்கிந்தியக் கம்பெனிக்கு விலைக்கு விற்ற ஆர்க்காட்டு நவாபின் சந்ததியார்கூட அரசு தந்த மாளிகையில் வாழ்ந்து கொண்டு ஆண்டுதோறும் பென்ஷன் பெறுகின்றனரே! வ.உ.சி., மாடசாமி ஆகியோரின் வாரிசுகளுக்கு அந்தப் பாக்கியம் கிடைக்கவில்லை, சுதந்திர நாட்டிலே!

வ.உ.சி. சிறைப்பட்ட பின் சுதேசிக் கப்பல் கம்பெனி ஆட்டங் கண்டது. அதற்கு நிதி திரட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அப்போது தமது ''இந்தியா'' பத்திரிகையில் பாரதியார் எழுதியது வருமாறு:

''கர்ம வீரர் என்றும் பிரதம ஆரிய புருஷர் என்றும் உயர்ந்த பரித்தியாகி என்றும் அரவிந்தகோஷ் முதலிய பெரியோர் களாலேயே பாராட்டப்பட்ட ஸ்ரீமான் சிதம்பரம் பிள்ளையின் பெருந் தன்மையையும் தேசப்பற்றையும் உத்தேசித்து நமது தமிழ் நாட்டோர் அவர் விஷயத்தில் எம்மட்டு சிரத்தை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்களோ, அம்மட்டு சிரத்தை பாராட்டாம லிருப்பது தவறு என்பதாகவே கருதுகிறோம்.

''ஸ்ரீசிதம்பரம் பிள்ளை, யார் பொருட்டு இரவு பகலாக உழைத்தாரோ அவர்கள்கூட பயத்தினாலோ அல்லது சோம்பலினாலோ மூச்சுக் காட்டாமல் பின்வாங்கி நிற்கிறார்கள்.

சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனிக்கு சிதம்பரம் பிள்ளையே பிதாவென்று கூறுதல் தகும். மேற்படி கம்பெனியார் இப்பொழுது இன்னும் பலமான அபிவிருத்திகள் நடத்தி வருகிறார்கள் என்று கேட்டு சந்தோஷிக்கிறோம். ஆனால், அவர்கள் சிதம்பரம் பிள்ளைக்குத் தக்கவாறு நன்றிக்கடனைச் செலுத்தாவிட்டால் இவர்களது முயற்சிகளின்மீது தரும தேவதைகளுக்குச் சினம் பிறக்கும். மேற்படி கம்பெனி பங்காளிகளில் ஒவ்வொருவரும் தலைக்கு நாலணா வீதம் போட்டால் எவ்வளவோ பெரிய நிதி சேர்க்கலாம். இவ்விஷயம் அவசியம் நடத்தித் தீர்வதற்குரியது.''

மகா கவியின் மனவேதனை!

பாரதியார் விடுத்த இந்த வேண்டுகோளுக்கு வெற்றி கிடைக்காதபோது, திரும்பவும் அவர் வேதனைப்பட்டு, தமது ''இந்தியா'' பத்திரிகையில் எழுதியதாவது:

சுதேசிக் கப்பல் நிதிக்கு இரண்டு லட்சம் ரூபாய் வேண்டுமென்று நாம் திரிகரண சுத்தியுடன் ஜனங்களிடம் விண்ணப்பம் செய்தோம். இரண்டு லட்சம் கேட்டதற்கு இரண்டு நூறு வந்திருக்கிறது. என்ன செய்யலாம்! பொது ஜனங்கள் இந்த நாட்டிலே பரம ஏழைகள். அவர்களுக்கு இவ்வித புண்ணியத் தொழிலிலே அபிமானமிருந்த போதிலும் அவர்கள் உதவி செய்ய திராணியில்லாதவர்களாக இருக்கிறார்கள். செல்வர்களைப் பற்றியோ யோசிக்க வேண்டியதில்லை.

''சுதேசிக் கப்பல் கம்பெனி நிர்வாகிகளுக்கு அதைத் தொடர்ந்து நடத்தத் துணிவில்லாததாலும், எதிர்பார்த்த நிதியுதவி பொதுமக்களிடமிருந்து கிடைக்காததாலும், கம்பெனி கலைக்கப் பட்டு விட்டது. இது கூடப் பெரிதல்ல; வ.உ.சி. பம்பாய்க்கே சென்று, அங்கு எந்தக் கப்பலை விலைக்கு வாங்கி அதிலே தூத்துக் குடித் துறைமுகம்வரை பயணம் செய்து வந்து லட்சக்கணக்கான மக்களால் அந்த வெற்றி வீரர் வரவேற்கப் பட்டாரோ அந்த ''காலியா'' என்ற கப்பலானது விலைக்கு விற்கப்பட்டு விட்டது! யாருக்கோ அல்ல; சுதேசிக் கப்பல் கம்பெனியை அழிக்கவும் சிதம்பரனாரைச் சிறையில் தள்ளவும் காரணமாக இருந்த பிரிட்டிஷ் கப்பல் கம்பெனிக்கே விற்கப்பட்டு விட்டது!''

''இழப்புத் தொகை தா!''

இந்தக் கொடுமையைச் செய்ததோடன்றி, கப்பல் கம்பெனிக்கு ஏற்பட்ட பொருள் இழப்புக்கெல்லாம் வ.உ.சிதம்பரா னரின் அரசியல் போக்கே காரணம் என்று சொல்லிக் கம்பெனியின்

பங்குதாரர்களுக்கு இழப்புத் தொகை தரவேண்டுமென்றும் கோரி சிறையிலிருந்த சிதம்பரனாருக்கு ''நோட்டீஸ்'' அனுப்பப்பட்டது. இந்த நோட்டீசைக் கண்டதும், கப்பல் கம்பெனியின் சட்ட ஆலோசகரான சேலம் சி. விஜயராகவாச்சாரியாருக்கு சிறையிலிருந்தபடி வ.உ.சி. எழுதிய கடிதம் வருமாறு:

''என்னால் துவக்கப்பட்ட சுதேசிக் கப்பல் கம்பெனிக்குப் பொருள் உதவிய எல்லோருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவியுங்கள். கம்பெனி முறிந்ததனால் ஏற்பட்ட நஷ்டத்தைப் பங்குதாரர்கள் ஏற்பதே நியாயம். அவர்கள் மறுத்தால், அக்கடன்களை நானே கொடுத்துவிடுகிறேன். ஆனால், நான் சிறை மீளும்வரை அவர்களைப் பொறுத்திருக்கச் சொல்லுங்கள்.''

வேதனைக் கவிதை!

சிறையிலடைப்பட்டுக் கிடந்த சிதம்பரனாருக்கு, கம்பெனி பங்குதாரர்கள் இழப்புத் தொகை கோரி அனுப்பிய வக்கீல் நோட்டீசைக் கண்டபோது, அம்மாவீரர் மனம் என்ன பாடு பட்டதோ? இதோ, இரண்டு வெண்பாக்கல் மூலம் அவரே தமது மனம் பட்ட வேதனையைப் படம் பிடித்துக் காட்டுகிறார். பார்ப்போம்:

எண்ணரிய துன்பங்கள் எய்தியுள வெஞ்சிறையை
நண்ணிடினும் நானஞ்சேன்; நாவாயின் - எண்ணறியா(து)
என்னோரென் தாள்நிதியை ஈயாதெனைக் கொடுக்கச்
சொன்னாலும் யானஞ்சேன் சோர்ந்து.
என்மனமும் என்னுடலும் என்சுகமும் என்அறமும்
என்மனையும் என்மகவும் என்பொருளும் - என்னுயிரும்
குன்றிடினும் யான்குன்றேன் கூற்றுவனே வந்தாலும்
வென்றிடுவேன் காலால் மிதித்து.

இது, சிதம்பரனாரின் வேதனை நிறைந்த நெஞ்சிலிருந்து பிறந்த வீரக் கவிதை! கப்பல் கம்பெனி கலைக்கப்பட்டதும் கம்பெனியின் கப்பல்களிலொன்று வெள்ளையருக்கே விற்கப் பட்டதும் சிதம்பரனாரின் நெஞ்சில் ஆறாத பெரும் புண்ணாக அமைந்துவிட்டது!

உள்ளத்தில் பெருகிய உதிரம்!

சிறையிலிருந்து விடுதலை பெற்றபின் புதுவை சென்று பாரதியாரைச் சந்தித்தார் வ.உ.சி. சிதம்பரனார், அப்போது கப்பல்

கம்பெனி கவிழ்ந்தது பற்றித் தங்களுக்குள் நடந்த பேச்சு வார்த்தை வ.உ.சி.யே கூறுகிறார், கேட்டோம்:

''நான் தோற்றுவித்த கப்பல் கம்பெனி நசித்த பின் எங்கள் கம்பெனியைச் சேர்ந்த ஒரு கப்பலை எங்கள் எதிரியான பி.ஐ.எஸ்.என். கம்பெனியாரிடமே அப்போதிருந்த சுதேசிக் கப்பல் கம்பெனி அதிகாரிகள் விற்றுவிட்டது எனது உடைந்த மனத்தில் உதிரம் பெருகச் செய்தது. இதுபற்றிப் பாரதியாரிடம் பிரஸ்தாபித்தபோது அவர் ஆவேசங்கொண்டு சொல்லிய சொற்கள் நான் புதுவையில் பிரியும்போது என் உள்ளத்தில் உறுத்திக்கொண்டிருந்தன. அவை: 'சிதம்பரம், மானம் பெரிது மானம் பெரிது! ஒரு சில ஓட்டைக் காசுகளுக்காக எதிரியிடமே அக்கப்பலை விற்றுவிட்டார்களே, பாவிகள்! அதைச் சுக்கல் சுக்கலாக நொறுக்கி வங்காளக்குடாக் கடலில் மிதக்க விட்டாலாவது என் மனம் ஆறுமே! இந்தச் சில காசுகள் போய்விட்டாலா தமிழ் நாடு அழிந்து விடும்? பேடிகள்!' என்று எவ்வளவோ கடுஞ்சொற்கள் கூறினார். என்ன செய்வது? தமிழ்நாடு உயரவில்லையென்றுதான் சொல்ல வேண்டும்!''

(வ.உ.சி கண்ட பாரதி; பக்.48)

மனப் புண்ணுக்கு மருந்து!

வ.உ.சி. தொடங்கிய கப்பல் கம்பெனிக்கு ஏற்பட்ட கதியைப் படிக்கும் வாசகர்களுக்கும் நெஞ்சம் புண்ணாவது இயற்கை. அதை ஆற்றுவதற்கு சுதேசிக் கப்பல் கம்பெனி மறைந்த நாற்பது ஆண்டுக்குப் பிறகு, அதே தூத்துக்குடியிலே தூத்துக் குடிக்கும் கொழும்புக்குமிடையே போக்குவரத்து செய்ய ''எஸ்.எஸ்.வி.ஓ. சிதம்பரம்'' கப்பல் வெள்ளோட்டம் விடப் பட்டதைச் சொல்ல வேண்டியது அவசியமாகிறது.

இந்தக் கப்பலைத் தூத்துக்குடி வாழ் வ.உ.சி.யின் நண்பர்கள் எல்லாம் சேர்ந்து தொடங்கிய கம்பெனியே விலைக்கு வாங்கி வெள்ளோட்டம் விட்டது. சுதந்திர இந்தியாவின் முதல் இந்திய கவர்னர் ஜெனரலான மூதறிஞர் ராஜாஜி அவர்கள்தான் கப்பலை மிதக்க விட்டுப் பேசினார்.

துரதிருஷ்டம் என்னவென்றால், இந்தக் கப்பலும் தனது பயணத்தை நிறுத்திக் கொண்டதாகும். கப்பலை ஓட்டவந்த வணிகத் தமிழர்கள் போதிய ஊக்கம் காட்டாததால்தான் அதன் பயணம் தடைப்பட்டது. அதன் பின்னர்; மத்திய அரசே பொறுப்பேற்று, ''எஸ்.எஸ். சிதம்பரம்''என்ற மிகப் பெரிய கப்பல் ஒன்றை இந்தியாவுக்கும் தூரக்கிழக்கு நாடுகளுக்கும்

இடையே பயணம் செய்ய விட்டது. சிதம்பரனாரின் முயற்சி தோற்றுவிடவில்லை. வெற்றியே கண்டது. இரண்டு ஜென்ம தண்டனையடைந்த அவரது தியாகம் வீணாகிவிடவில்லை. நாடு சுதந்திரம் பெற்றதும் அந்தச் சுதந்திர நாட்டிலே தூத்துக்குடி துரைமகனாரின் பெயராலேயே ''எஸ்.எஸ். சிதம்பரம்'' நீலத் திரைக்கடலிலே நித்தமும் பயணம் செய்து கொண்டிருக்கிறது. வாழ்க, வெற்றி வீரர் சிதம்பரனாரின் புகழ்!

வ.உ.சி. சகாப்தம் முடிந்தது!

சுதேசிக் கப்பல் கம்பெனி கவிழ்ந்ததோடு தமிழ் நாட்டு அரசியலிலே ''வ.உ.சி. சகாப்தம்'' முடிந்தது எனலாம். வ.உ.சி, 1907 இல் சூரத்தில் நடந்த காங்கிரசிலே கலந்து கொண்டதன் மூலம் விடுதலைப் பாசறையிலே சேர்ந்தார். சூரத்தில் காங்கிரஸ் நடந்தது 26-12-1907-இல். சிதம்பரனார் சிறைப்பட்டது 12-3-1908-இல். இந்த இரண்டிற்கும் இடைப்பட்ட காலம் 77 நாட்கள்தான். இந்தச் சின்னஞ்சிறு காலகட்டத்திலே பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தையே ஒரு கலக்குக் கலக்கி விட்டார் அந்த மாவீரர்!

வங்க மாநிலத்திலே நடந்த சுதேசிக் கிளர்ச்சிக்கு அடுத்தபடியாக ஒரு மாநிலத்தைச் சொல்ல வேண்டுமென்றால், அது தமிழ் மாநிலம்தான். வங்க மாநிலத்திலே ''பாரிசால்'' நகரம் எத்தகைய புகழைப் பெற்றதோ, அத்தகைய புகழை அதே காலத்தில் தமிழகத்திலுள்ள தூத்துக்குடி நகருக்குத் தேடித் தந்தார் சிதம்பரனார். 15 மாத அரசியல் வாழ்விலே மராத்தி வீரர் திலகருக்கும் வங்கவீரர் அரவிந்தருக்கும் இணையான ஒரு தலைவராகத் தென்னக வீரர் வ.உ.சி. விளங்கினார். அவரை ''ஆரிய வீரர்'' என்று அரவிந்தரே புகழ்ந்தார். தேச விடுதலைக் காகச் சிறை புகுந்த முதல் தமிழர் வ.உ.சிதம்பரனார்தான்! இரண்டு ஆயுள் தண்டனை பெற்ற முதல் இந்தியர் அவர்தான்! ஏகாதிபத்தியக் கப்பலுக்கு எதிர்க்கப்பல் விட்டதிலேயும் அவருக்கிணை அவரேதான்!

நாலரை ஆண்டில் மறந்தனரே!

சிதம்பரனார் 1912 ஆம் ஆண்டு டிசம்பர் இறுதியில் சிறை யிலிருந்து விடுதலை பெற்றார். சிறை வாயிலிலே அவ்வீரரை வரவேற்க ஆளில்லை. சுப்பிரமணிய சிவா ஒருவர்தான் சிறை வாயிலில் அவரை வரவேற்றார். சிதம்பரனார் சிறைக்குப் போகும்போது வீதிதோறும் வெள்ளம் போல் மக்கள் திரண்டு

வழியனுப்பி வைத்தனர் தூத்துக்குடியிலே! அது நிகழ்ந்து நான்கரையாண்டுக்குள் 'வா' என்று சொல்லி வரவேற்க ஒரு ஆள் இல்லாத நிலையிலே சிறையிலிருந்து விடுதலை பெற்றார். அந்த அளவுக்கு அடக்குமுறைக் கொடுமையால் நாட்டு மக்களின் உள்ளங்கள் எல்லாம் அடங்கி ஒடுங்கிக் கிடந்தன.

1908-ஆம் ஆண்டிலிருந்து 1915 ஆம் ஆண்டுவரை தமிழ் நாட்டையும் தன்னுட் கொண்ட பாரதப் பெரு நாட்டிலே நடந்த நிகழ்ச்சிகளை ஒரு பார்வை பார்ப்போம். அவற்றுக்கும் தமிழ்நாட்டுக்கும் உள்ள தொடர்புகளையும் ஆய்ந்து பார்ப்போம்.

★-★-★

1908 முதல் 1915 வரை

இந்திய விடுதலைப் போர் வரலாற்றிலே 1908 முதல் 1915 வரையுள்ள காலகட்டமானது மிகவும் முக்கியமானதாகும். இதிலே, பஞ்சாப், மகாராஷ்டிரம், வங்காளம், தமிழ்நாடு ஆகிய நான்கு மாநிலங்களிலேதான் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போர் தலை தூக்கி நின்றது.

வடபுலத்தன் நிலை

வங்காளத்திலே சுரேந்திரநாத் பானர்ஜி. அரவிந்தகோஷ், ராஷ்பிகாரி கோஷ், விபின்சந்திர பாலர் போன்ற பெருந் தலைவர்கள் விடுதலை விரும்பிகளுக்கு வழிகாட்டிகளாக இருந்தார்கள். மற்றும், வங்கப் பிரிவினை அந்த மாநிலத்தின் தனிப் பிரச்சினையாக இருந்தது. பெரிய நிலச்சுவான்களும் வணிகர்களும் வங்க விடுதலை வீரர்களுக்குப் பின்பலமாக இருந்தார்கள். ஆங்கிலம், வங்காளி ஆகிய மொழிகளில் பத்திரிகைகளும் அதிக அளவில் அங்கு இருந்தன.

இந்தியாவின் தொழில் - வணிகப் பிரதேசமான மகாராஷ்டிரத்திலேயும் திலகர், ரானடே, கோகலே, கபர்தே போன்ற பெருந்தலைவர்கள் மக்களை நடத்திச் சென்றார்கள்.

பஞ்சாபிலும் விடுதலை வீரர்களுக்கு நிலச் சுவான்தாரர் களின் ஆதரவு இருந்தது. இராணுவச் சாதியாரான சீக்கியர்களும் பின்பலமாக நின்றனர். ஆதரவு தந்த பத்திரிகைகளுக்கும் குறைவில்லை.

தமிழகத்தின் தனி நிலை!

வங்காளம், மராத்தி, பஞ்சாப் மாநிலங்களுடன் ஒப்பிடுங்கால், தமிழ்நாட்டின் நிலை வேறு. இங்கு, காங்கிரஸ் என்பது வடிகட்டிய மிதவாதிகளிடம் சிக்கியிருந்தது. தொழில் - வாணிபப் பிரமுகர்களும் சொற்பம். அவர்களில் எவரும் விடுதலை வீரர்களுக்கு ஆதரவாக இல்லை.

வ.உ.சிதம்பரனார் தனித்து நின்றே ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடினார். அவரது சகாப்தமும் திருநெல்வேலிச் சதி வழக்கோடு முடிந்தது. அதன்பின் தமிழ்நாட்டில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க அளவில் அரசியல் சம்பவம் எதுவும் நிகழவில்லை.

சிறையில் தள்ளப்பட்ட சிங்கங்களான வ.உ.சி., சிவா, சுரேந்திரநாத் ஆரியா, கிருஷ்ணசாமி சர்மா ஆகியோர் ஒருவர்பின் ஒருவராக 1912-க்குள் விடுதலை பெற்று விட்டனரென்றாலும், திரும்பவும் பழைய அளவில் மக்கள் மத்தியில் சுதந்திர ஆவேசத்தை எழுப்ப இயலாத நிலையில் தமிழ்நாடு இருந்தது. அரசாங்கத்தின் அடக்குமுறை நடவடிக்கைகளால் தமிழர் சமுதாயத்தின் சப்த நாடிகளும் அடங்கிப் போய் இருந்தன.

நீறுபூத்த நெருப்பு

இந்த நேரத்தில் அனைத்திந்திய ரீதியில் பிரிட்டிஷ் அரசு பல நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தியது. 1911-ஆம் ஆண்டின் இறுதியில் எட்டாவது எட்வர்ட் அரசருக்குப் பிறகு பட்டத்திற்கு வந்த ஐந்தாவது ஜார்ஜ் சக்கரவர்த்திக்கு டில்லியில் தர்பார் நடைபெற்றது. இதையொட்டி இந்தியாவின் தலை நகரம் கல்கத்தாவிலிருந்து டில்லிக்கு மாற்றப்பட்டது. கர்சான் காலத்தில் அமுலுக்கு வந்த வங்கப் பிரிவினையானது வைசிராய் லார்டு ஹார்டிஞ்ச் அவர்களால் ரத்துச் செய்யப்பட்டது. இது ஒன்றுதான் விடுதலை வீரர்களுக்கு மகிழ்ச்சி தரும் நிகழ்ச்சியாகும். ஆயினும், வங்கப்பிரிவினை காரணமாக பொங்கி எழுந்த விடுதலை ஆவேசம் நாட்டில் தணியவில்லை.

வங்கப் பிரிவினையை ரத்துச் செய்வதாலும், தலைநகரை கல்கத்தாவிலிருந்து டில்லிக்கு மாற்றுவதாலும் விடுதலை ஆவேசத்தைத் தணிக்கை செய்துவிட முடியுமென்று பிரிட்டிஷ் அரசு கனவு கண்டது. அந்தக் கனவு நனவாகவில்லை.

1907-இல் அமுல் நடத்திய அரச நிந்தனைப் பிரச்சாரக் கூட்டங்களைக் கட்டுப்படுத்தும் சட்டமும் அடியோடு கைவிடப் பட்டது. அதுவும் தேசியவாதிகளைத் திருப்தி செய்யவில்லை. தேசபக்திக் கனல் நீறுபூத்த நெருப்புப்போல் உள்ளூரக் கனன்று கொண்டிருந்தது. வங்காளத்திலிருந்து நாடு கடத்தப்பட்ட அஸ்வினிதத் உள்ளிட்ட ஒன்பது வங்க விடுதலை வீரர்கள் எவ்வித நிபந்தனையுமின்றி விடுதலை செய்யப்பட்டனர். இதுவும், வங்க இளைஞர்கள் வெடி குண்டில் கொண்டிருந்த மோகத்தைத் தணிக்கவில்லை. வங்காளத்திலும் பஞ்சாபிலும் வெள்ளையர்

களைக் கொல்வது, அரசாங்க கஜானாக்களைக் கொள்ளையடிப்பது போன்ற பயங்கரச் செயல்கள் நிகழ்ந்து கொண்டு தானிருந்தன. ஆயினும், தீவிர தேசியவாதிகள் சட்டரீதியான வசதிகளைக் கொண்டு நடத்திவந்த அமைதியான அரசியல் பிரச்சாரம் அநேகமாக ஓய்ந்துபோய் இருந்தது. அதற்குப் பதிலாக, பயங்கரப் புரட்சியாளர் எழுப்பும் வெடிகுண்டுச் சப்தம் வங்காளத்திலும் மகாராஷ்டிரத்திலும் பஞ்சாபிலும் ஒலித்துக் கொண்டிருந்தது. ஆனால், தமிழ்நாட்டிலே ஆஷ் கொலைக்குப் பின், அது போன்ற பயங்கரச் சம்பவம் எதுவும் நிகழவில்லை.

எல்லோருமே பயங்கரவாதிகளா?

திருநெல்வேலிச் சதிவழக்கில் தண்டிக்கப்பட்டவர்களெல்லாம் பயங்கரவாதிகள் என்ற முடிவுக்கு வருவதற்கில்லை. தேசபக்தர்களை ஒழித்துக்கட்ட அரசு செய்த சதிதான் திருநெல்வேலிச் சதிவழக்கு! அதுபோல, பஞ்சாபிலும் மகாராஷ்டிரத்திலும் வங்காளத்திலும் பல சதி வழக்குகள் அரசால் சிருஷ்டிக்கப்பட்டன. அயல் நாட்டார் சிலர் கட்டுப்பாடாக ஒரு நாட்டிற்குள் புகுந்து அந்த நாட்டை அடிமைப்படுத்தி ஆளுவதை விடவும் சதிச் செயல் வேறு என்ன இருக்க முடியும்? அதை அகற்ற எடுக்கும் நடவடிக்கையானது - அது வன்முறையாகவே இருப்பினும் - எப்படி சதிச் செயலாக இருக்க முடியும்!

புதுவிதமான மூட நம்பிக்கை!

தேச பக்தர்கள் மீது அரசால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களையெல்லாம் அவர்களுக்குப் பெருமை தரக்கூடியவை யென்று கருதி மக்கள் நம்பி விடுவதன் மூலம் சரித்திரம் களங்கப்பட்டுவிடுகிறது. அப்படித்தான் ஆஷ் கொலை சம்பந்தமாக வ.வே.சு. ஐயர், நீலகண்ட பிரம்மச்சாரி போன்றவர்கள் பற்றி அரசாங்கத் தரப்பில் சொல்லப்பட்டுச் சரித்திர ஏடுகளில் ஏறி விட்டவற்றையெல்லாம் மக்கள் அப்படியே நம்பிவிடுவது ஒரு புதுவிதமான மூட நம்பிக்கையாகும்.

உலக யுத்தமும் சுதந்திர வீரர்களும்

1908 முதல் 1915 வரையில் நாட்டிற்கு ஏற்பட்ட சோதனைகள் எல்லாவற்றையும்விடப் பயங்கரச் சோதனை ஒன்று உண்டு. அது 1914-இல் மூண்ட முதல் உலக மகா யுத்தமாகும். ஜெர்மனிக்கும் பிரிட்டனுக்கும் ஏற்பட்ட போர் உலகப் பெரும் போராக விரிவடைந்தது. இது நிகழ்ந்தகாலை ஜெர்மனியில் கெய்சர் என்பார் அதிகாரத்தில் இருந்தார்.

இந்தப் போரைப் பயன்படுத்தி ஜெர்மனியின் துணையைப் பெற்று பிரிட்டனிடமிருந்து இந்தியாவுக்கு விடுதலை தேடிவிடமுடியுமென்று இந்திய தேசபக்தர்களிலே ஒரு சாரார் கருதினர். அப்படிப்பட்டவர்கள் தமிழரிலேயும் சிலர் இருந்தனர். அவர்களெல்லாம் தங்களுக்குள் இரகசியத்தில் தொடர்பு வைத்துக் கொண்டு, உள் நாட்டிலிருந்தபடியும் அயல் நாடுகளுக்குச் சென்றும் புரட்சிச் செயல்களில் ஈடுபட முயன்றனர். அவர்களில் சிலர் ஜெர்மனிக்குச் சென்றனர். பிரிட்டனின் முதல் நெம்பர் விரோதி ஜெர்மனிதானே! அவர்களில் தமிழ் வழங்கும் நாஞ்சில் நாட்டைச் சேர்ந்த செண்பகராமன் முக்கியமானவராவார்.

மற்றும், சென்னை வாசியாக திரு.எம்.பி. திருமலாச்சாரி, தூத்துக்குடி குருநாத ஐயர் ஆகியோரும் ஜெர்மனிக்குச் சென்றனர் என்று சொல்லப்படுகிறது. ஒட்டப்பிடாரம் மாடசாமியும் சிங்கப்பூர் வழியாக ஜெர்மனிக்குச் சென்றதாகவும் செய்தி உண்டு. இவர்களில் நாஞ்சில் செண்பகராமனைத் தவிர, மற்றவர்கள் என்ன ஆனார்கள் என்று தெரிந்து கொள்ள இயலாமற் போய்விட்டது.

குருநாத ஐயர்!

தூத்துக்குடி குருநாத ஐயர் தலைமைக் காவலர் (ஹெட் கான்ஸ்டபிள்) வேலையிலிருந்தார். வ.உ.சி. நடத்திய சுதேசி இயக்கத்தில் ஈடுபடுவதற்காக ஐயர் வேலையிலிருந்து விலகிக் கொண்டாரென்று அரசு காவல் துறை குறிப்பொன்று கூறுகின்றது. வ.உ.சி. கைதியானபோது நெல்லை நகரில் நடந்த பெருங் கலகத்தில் ஈடுபட்டு, அரசாங்கக் கட்டிடங்களுக்குத் தீ வைத்ததாகத் திரு. குருநாதய்யரைக் கைது செய்து, அவர் மீது வழக்கு போட்டது சென்னை மாநில அரசு. இது பற்றித் திருநெல்வேலி மாவட்ட சுதந்தரப் போராட்ட வரலாறு தகவல் தருகிறது. வ.உ.சிதம்பரனாரும் தாம் இயற்றிய சுயசரிதையிலே பலவிடங்களில் குருநாத ஐயரைப் புகழ்ந்து புகழ்ந்து பேசுகிறார்.

நீலகண்ட பிரம்மச்சாரி கூறுகிறார்!

போர்க்காலத்தில் சிறைக்கு வெளியேயுள்ள புரட்சிக் காரர்களுடன் சேர்ந்துகொண்டு புரட்சிச் செயல்களில் ஈடுபட விரும்பியே திருநெல்வேலிச் சதிவழக்கில் தண்டனை பெற்ற நீலகண்ட பிரம்மச்சாரி உலக யுத்தம் மூண்ட செய்தி கேட்டதும் சிறையிலிருந்து தப்பியோடினார். இதனை அவரே கூறுகிறார். கேட்போம்:

''நாங்கள் ஆவலுடன் எதிர்பார்திருந்த உலக மகாயுத்தம் 1914-ஆம் ஆண்டில் ஆரம்பமாகிவிட்டது. பல ஆண்டுகள் நான் தயார் செய்து வைத்திருந்த ஆயுதங்களெல்லாம் நான் சிறைப்பட்டு விட்டதன் காரணமாய் வியர்த்தமாகும் நிலைக்கு வந்து விட்டது. வாஞ்சிநாதனின் விவேகமற்ற ஒரு செயலின் காரணமாய் அவர் தன்னையே அழித்துக் கொள்ள நேர்ந்ததுடன், திட்டமிட்டிருந்த மாபெரும் புரட்சிக்கும் இடையூறு சம்பவித்து விட்டது.

''இந்த எண்ணங்கள் ஒன்றன்பின் ஒன்றாக மோத இதற்கு ஏதாவது மார்க்கம் உண்டாவென்று தீவிரமாய் சிந்திக்க ஆரம்பித்தேன். அதன் முடிவாக, சிறைக் கம்பிகளை அறுத்துக் கொண்டு 1914-ஆம் ஆண்டு பெல்லாரிச் சிறையிலிருந்து வெற்றிகரமாக வெளியேறி வந்து விட்டேன்.

''மனிதன் போடும் திட்டமெல்லாம் நிறைவேறி விடுகிறதா? இறைவனின் சித்தம் வேறுவிதமாக இருக்கையில் நாம் என்ன செய்ய முடியும்? தர்மாவரம் ரெயில்வே ஸ்டேஷனில் ரயிலைவிட்டு இறங்கி வெளியேறும் சமயம் பின்னாலிருந்து, ''அதோ நீலகண்டர்! அதோ நீலகண்டர்! சிறையிலிருந்து தப்பி ஓடிவந்து விட்டார்!'' என்ற சப்தம் கேட்டு திடுக்கிட்டுத் திரும்பினேன். அங்கு வந்த போலீஸ் ஜவான் என்னை அப்படியே பிடித்துக்கொண்டு விட்டார்.''

''எம்டன்'' செண்பகராமன்!

முதல் மகாயுத்தம் தொடங்குவதற்கு முன்னும் தொடங்கியதற்குப் பின்னும் ஐரோப்பாவில் தங்கியிருந்த புரட்சி உள்ளம் படைத்த டாக்டர் செண்பகராமன் உள்ளிட்ட தமிழர்கள் தங்களுக்குள் எப்படித் தொடர்பு கொண்டனர், எந்த வகையில் செயல்பட்டனர் என்ற விவரங்களை அறிந்து கொள்ள முடியவில்லை. யுத்த காலத்தில் நாஞ்சில் டாக்டர் செண்பகராமன் செயல்பட்டவிதம் பற்றி மட்டும் சிறிதளவு தகவல்கள் கிடைக்கின்றன.

யுத்தம் துவங்கியபோது ஐரோப்பா முழுவதிலும் சிதறிக் கிடந்த விடுதலை உணர்வுடைய இந்தியர்களை ஒன்று திரட்டி அவர்களுக்கெல்லாம் டாக்டர் பிள்ளை இராணுவப் பயிற்சி அளித்ததாகத் தெரிகிறது.

டாக்டர் பிள்ளை தமக்கும் தமது ராணுவத்திற்குமாக ஒரு போர்க் கப்பல் வைத்திருந்தார். அதன் பெயர் 'எம்டன்'. அதன் பிரதம என்ஜினீயரும் தளபதியும் அவர்தான்!

'எம்டன்' என்ற, அந்த நீர்மூழ்கிக் கப்பல் சென்னை வரை வந்து, சென்னையில் உயர் நீதிமன்றமுள்ள இடத்திலே குண்டு வீசியது. இது நிகழ்ந்தது யுத்தம் தொடங்கிய ஆண்டிலேயே. இந்நிகழ்ச்சி அந்நாளில் சென்னை நகரையே கிடுகிடுக்க வைத்தது. அந்தக் கப்பலை செண்பகராமன் பிள்ளைதான் இயக்கி வந்தாரென்று சொல்லப்படுகிறது.

அயல் நாடுகளிலிருந்து இந்திய விடுதலை வீரர்கள் நிகழ்த்திய அருஞ்செயல்கள் நிறைய உண்டு. அதிலே தமிழகத்தார் பங்கு மேலே எடுத்துச் சொன்னதை விடவும் அதிகமாகும். முதல் மகா யுத்த காலத்திற்கு முன்பே லண்டனிலும் பாரிசிலும் தங்கியிருந்த இந்தியப் புரட்சி வீரர்களிலே வ.வே.சு. ஐயர் டாக்டர் டி.எஸ்.எஸ். ராசன் ஆகிய தமிழர்களும் கலந்திருந்தனர் என்பதை முன்பே அறியலானோம்.

யுத்த காலத்தில் இந்தியாவில் வெள்ளையர் ஆட்சிக்கு எதிராகப் பெரும் புரட்சி எதுவும் எழவில்லை. அயல் நாடுகளில் புரட்சி நிகழ்த்த டாக்டர் செண்பகராமன் போன்றோர் எடுத்த முயற்சிகளிலே அவர்களுக்கு வெற்றி கிடைக்காத நிலையிலே போர் பிரிட்டனுக்கு வெற்றியாக முடிந்து போய்விட்டது!

காங்கிரஸ் நிலை

1908 தொடங்கி 1915 வரையுள்ள கால கட்டத்திலே காங்கிரஸ் மகா சபையின் போக்கு எதுவாக இருந்ததென்பதையும் சிறிது பார்ப்போம்.

திலகர், வ.உ.சி., அரவிந்தர் ஆகியோர் சிறைப்பட்ட பின்னர்க் காங்கிரஸ் மகா சபையின்பால் மக்களுக்கிருந்த நம்பிக்கை மறைந்து விட்டது. உண்மையில் அது முழுக்க முழுக்க வக்கீல்களின் ஆதிக்கத்தில் போய்விட்டது. ஆண்டுதோறும் மகா சபை கூடிக்கூடிக் கலைந்த தென்றாலும், உள்நாட்டிலும் பிரிட்டனிலும் அதற்கிருந்த மதிப்பு மங்கிப் போய்விட்டது.

1914-இல் சென்னையில் கூடிய காங்கிரஸ் மகா சபைக்குப் பூபேந்திரநாத் பாசு அவர்கள் தலைமை வகித்தார். திரு.எஸ். சுப்பிரமணிய ஐயர் அவர்கள் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்து மகாசபையை நடத்தி வைத்தார்.

கவர்னர் கலந்துகொண்ட காங்கிரஸ்

காங்கிரஸ் மகாசபையின் சரித்திரத்திலேயெ முதன் முதலாகச் சென்னை கவர்னர் லார்டு பெண்ட்லண்டு என்பவர் மகாசபையின் இரண்டாவது நாள் நிகழ்ச்சியிலே கலந்து கொண்டார். மகாசபைப் பந்தலுக்குள் ஆளுநர் பெண்ட்லண்டு பிரவேசித்த போது, மகாசபைத் தலைவரும் பிரதிநிதிகளும் எழுந்து நின்று மரியாதை காட்டி அவரை வரவேற்றனர். மகாசபைத் தலைவர் ஆளுநர் காட்டிய பெருந்தன்மையை வாயாரப் புகழ்ந்து, அவருக்கு நன்றி செலுத்தினார்.

1908-க்கும் 1915-க்கும் இடைப்பட்ட காலத்திலே கூடிய காங்கிரஸ் மகாசபைகளுக்குப் பிரதிநிதிகள் அதிகமாக வரவில்லை. மகாசபை கூடிய ஊர்களிலுள்ளவர்களே பந்தலை நிரப்பினர். வேறு மாநிலங்களிலிருந்து வந்தவர்களின் எண்ணிக்கை சொற்பமாக இருந்தது. திலகரும் சிதம்பரனாரும் அரவிந்தரும் சிறைப்படுவதற்கு முன்பு 1906-இல் கல்கத்தாவில் தாதாபாய் நெளரோஜியின் தலைமையில் கூடிய காங்கிரசிலே 1663 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அதனையடுத்து, 1907-இல் சூரத்தில் கூடவிருந்த காங்கிரஸ் குழப்பத்தில் முடிந்துவிட்டது. பின்னர், 1908 முதல் 1914 வரை காங்கிரஸ் மகாசபை கூடிய நகரங்களின் பெயர்களும் தலைமை வகித்தவர் பெயர்களும் கலந்துகொண்ட பிரதிநிதிகள் எண்ணிக்கையும் வருமாறு:

ஆண்டு	ஊர்	தலைவர்	பிரதிநிதிகள்
1906	கல்கத்தா	தாதாபாய் நெளரோஜி	1663
1907	சூரத்	-	-
1908	சென்னை	ராஷ்பிகாரி கோஷ்	626
1909	லாகூர்	மதன்மோகன மாளவியா	243
1910	அலகாபாத்	வில்லியம் வெட்டர்பர்ன்	636
1911	கல்கத்தா	பிஷன் நாராயண் தர்	446
1912	பங்கிபூர்	ஆர்.எஸ். மதோல்கர்	207
1913	கராச்சி	நவாப் சையது முகமது	550
1914	சென்னை	பூபேந்திர நாத் பாசு	866

உயிர்த் துடிப்பற்ற காங்கிரஸ்

அநேகமாகக் காங்கிரஸ் உயிர்த் துடிப்பற்ற ஒரு ஸ்தாபனமாக மாறிவிட்டது! காங்கிரசிலிருந்து தீவிரவாதிகளை விரட்டுவதிலே சூரத் நகரில் வெற்றி கண்டனர் மிதவாதிகள். ஆனால் அந்த மிதவாதத் தலைவர்களில் ஒருவர்பின் ஒருவராக

பலர் 1908-லிருந்து 1915-க்குள் மறைந்து விட்டனர். அவர்களில் முக்கியமானவர்கள் அனந்தார்ச்சார்லு, வி. பாஷ்யம் ஐயங்கார், திரு.வி. கிருஷ்ணசாமி ஐயர், நீதிபதி பி.ஆர். சுந்தரமய்யர். கோபாலகிருஷ்ண கோகலே, லால் மோகன் கோஷ், பிரோஸிஷாமேதா, ரொமெஷ் சந்திர தத் ஆகியோராவர். மிதவாதிகளிலே இவர்கள் முன்னணித் தலைவர்களாவர்.

பிரிட்டிஷார் தரப்பிலேயும் முன்னணியிலிருந்தவர்களில் மாறுதல்கள் ஏற்படலாயின. பிரிட்டனில் எட்டாவது எட்வர்டு மறைந்து ஐந்தாம் ஜார்ஜ் அரச பதவிக்கு வந்தார். லண்டனில் இந்தியா மந்திரி பதவியிலே மார்லி வெளியேறி செம்ஸ்போர்டு என்பவர் வந்தார். இந்திய வைசிராய் பதவியிலேயும் நபர் மாற்றம் ஏற்பட்டது. ஆம்; லார்டு மிண்டோ போய் ஹார்டிஞ்ச் வந்தார். அவருக்குப் பின் செம்ஸ்போர்டு வந்தார். இருவரும் ஆங்கிலேயர்தானென்றாலும், அவாளுக்கு இவாள் தேவலை என்ற நிலை இருந்தது.

1909-இல் அரசியல் பிரசாரக் கூட்டங்களைக் கட்டுப் படுத்தும் அவசரச் சட்டம் ஒன்று பிறந்தது. ஆறு மாதம் கடந்ததும், அது சில மாறுதல்களுடன் மூன்றாண்டுக்குரிய சாதாரணச் சட்டமாக மறுமலர்ச்சியடைந்தது. அதையும் அடியோடு ரத்துச் செய்து விட்டார் வைசிராய் ஹார்டிஞ்ச். இப்படி இந்திய மக்களின் அழுத கண்களைத் துடைப்பது போன்ற பல மாறுதல்கள் செய்யப்பட்டன. ஆயினும், தேசத்திற்கு விடுதலை கோரிய தீவிரவாதிகள் விஷயத்தில் பிரிட்டிஷ் ஆட்சியின் போக்கு மாறவில்லை.

அரவிந்தர் புதுவைவாசியானார்!

அலிப்பூர் சதி வழக்கில் நிரபராதி என்று கூறி நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பெற்ற அரவிந்தர் வங்கத்திலே அமைதியாக வாழ முடியவில்லை. அவரைத் திரும்பவும் சிறையில் தள்ள அதிகாரவர்க்கம் சூழ்ச்சி செய்து கொண்டிருந்தது. அரவிந்தர், ''வந்தேமாதரம்'' பத்திரிகையில் எழுதிய ஆன்மீக உபதேசங் களையும் அதிகார வர்க்கம் சந்தேகித்தது. அதனால், அவர் கல்கத்தாவிலிருந்து ரகசியமாகக் கப்பலில் பயணம் செய்து புதுவையை அடைந்து அங்கே ஆசிரம வாசியானார்.

தண்டனைக் காலம் முடிந்து விடுதலையான வ.உ.சி.யை அவரது சொந்த ஊரான தூத்துக்குடியில் வாழவிடவில்லை அதிகார வர்க்கம். அவர் நெல்லை மாவட்டத்திலே நிலைபெறாத

படி அரசு அவருக்குத் தொல்லை தந்தது. நீதி மன்றத்தில் தொழில் செய்ய முடியாதபடி வக்கீல் சன்னத்தைப் பறித்து விட்டதால், அவர் சென்னையில் முகாம் செய்தார். அன்றாட வாழ்க்கைத் தேவைகளுக்கே அல்லலுற்றார்.

லாலா லஜபதி நாட்டின் சூழ்நிலை யறிந்து செயலற்றிருந்த நிலையிலும், அவரை ஒரு சதி வழக்கில் சிக்க வைக்க முயன்றது அதிகார வர்க்கம். அப்பெரியார் தாமே விரும்பி அமெரிக்கா சென்று அங்கு முகாம் போடலானார். அச்சமயத்தில் உலகப்போர் மூண்டதால், அவர் திரும்பி வருவது அசாத்தியமாகி விட்டது.

புதுவையில் அஞ்ஞாத வாசம் புரிந்த பாரதியார் தமிழகம் வர சென்னை மிதவாதிகள் எடுத்துக்கொண்ட முயற்சி வெற்றி பெறவில்லை. அதனால், அவர் புதுவையிலையே அடைப்பட்டுக் கிடந்தார்.

★-★-★

அரசியல் வானில் ஒரு விடி வெள்ளி!

1914 விலும் 1915-லும் இந்திய அரசியல் மகத்தான ஒரு திருப்பத்தை அடைந்தது. 1914 ஐ விடவும் 1915-இல்தான் இந்த மாறுதல் உலகோரின் கவனத்தைக் கவர்ந்தது. இந்தக் காலம் இந்தியாவானது இருளிலிருந்து மீண்டு ஒளியில் பிரவேசித்த காலம் எனலாம்.

பட்டாபியார் வருணிக்கிறார்!

1915-இல் இந்திய அரசியலில் இருள் கவிழ்ந்திருந்த நிலையை டாக்டர் பட்டாபி சீதாராமய்யா வருணிக்கிறார், கேட்போம்:

''19-2-1915-இல் கோபாலகிருஷ்ண கோகலே உயிர் நீத்தார். அதே ஆண்டு நவம்பரில் பிரோசிஷா மேத்தாவும் மறைந்தார்.

''1901-இல் நடந்த காங்கிரஸ் மகாசபைக்குத் தலைமை வகித்த ஸ்ரீவாச்சா முதுமையினால் தாம் கண் பார்வையை இழந்து விட்டதாகக் காங்கிரஸ் மகாசபையிலே தெரிவித்தார். அவர் சிறந்த பண்டிதர். ஆனால், படைகளை வெற்றிகரமாக நடத்திச் செல்லக்கூடிய தளகர்த்தர் அல்லர்.

''1900-இல் லாகூர் காங்கிரசில் தலைமை வகித்த சர் நாராயண சந்திர வர்க்கர் அரசியலில் அதிக அளவில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கி நின்றார்.

''ஹேரம்பசந்திர மைத்ராவும் சென்னைவாசியான சுப்பராவ் பந்துலுவும் காங்கிரஸ் பாசறையில் சிறிய அதிகாரிகளே!

''புகழ்மிக்க சுரேந்திரநாத் பானர்ஜியும் நாட்டில் உருவாகி வந்த புதிய சூழ்நிலையைச் சரிவர உணராதவரானார்.

''1914-இல் சூன் திங்களில் பாலகங்காதர திலகர் பர்மாவிலுள்ள மாண்டலே சிறையிலிருந்து ஆறாண்டுக்கால தண்டனை

முடிவடைந்து விடுதலை அடைந்திருந்தா ரென்றாலும், அவர் தேசத் தலைமையை ஏற்கத் தக்க நிலைமையில் இல்லை.

''இந்த ஊழியர் சங்கத் தலைவரான மகாகனம் சீனிவாச சாஸ்திரியார் சுபாவத்தில் தீவிர வாதத்துக்கும் மிதவாதத்துக்கும் நடுவில் அகப்பட்டு, இந்த இரண்டில் எதைப் பின்பற்றுவதென்ற தெளிவில்லாமல் எப்பொழுதும் பின்னணியிலேயே இருந்து வந்தார்.

''பண்டித மாளவிய காங்கிரசை மிதவாத வழியில்கூட நடத்திச் செல்ல இயலாதவராக இருந்தார். அரசியலில் முன்னேறிச் செல்வதற்கான நம்பிக்கையோ, ஊக்கமோ அவருக்கு இருக்கவில்லை.

''காந்திஜி அப்போதுதான் தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு வந்திருந்தார். என்றாலும், அவர் தமது பொது வாழ்க்கையைத் திட்டவட்டமாகத் தொடங்கியிருக்கவில்லை. தம்முடைய அரசியல் குருவான கோபாலகிருஷ்ண கோகலேயின் உபதேசப்படி நாட்டின் நிலைமையை ஆராய்ந்து கொண்டிருந்தார்.

''தேசம் முழுவதிலும் - முக்கியமாக, பாஞ்சாலத்திலே இருந்த நிலைமை லாலா லஜபதி ராய்க்கு வெறுப்பையே அளித்தது. அதனால், ஓய்வுபெறக் கருதி, தாமே விரும்பி யுத்த கால முழுவதும் அமெரிக்காவில் தங்கி வாழ்ந்து வரலானார்.

''மிதவாதிகள் சக்தி அனேகமாக மறைந்து விட்டது. தீவிரவாதிகள் ஒன்றுசேராமல் சிதறிக் கிடந்தனர். தேசத் தலைமை அரசாங்கத்திடம் போய் விடும்போல் இருந்தது. இதுவே 1915 ஆம் ஆண்டில் தேசத்தின் சூழ்நிலை.''

(காங்கிரஸ் மகாசபை வரலாறு (தமிழ்): பாகம் - 1; பக். 94-95)

தமிழ்நாடு தந்த தலைவி!

டாக்டர் பட்டாபி சீதாராமையா விடுதலைப் போர்க் களத்திலே முன்னணியிலிருந்த பெருந் தலைவர்களில் ஒருவர். 1948 இல் தேசிய காங்கிரஸ் மகாசபைக்குத் தலைமை தாங்கியவர். அப்படிப்பட்டவரின் மதிப்பீடு சரியாகத்தானே இருக்க முடியும்.

இந்திய தேசிய சக்தியானது தேய்பிறையாக இருந்த நேரத்திலே அரசாங்க சக்தியானது வளர்பிறையாகிக் கொண்டு வந்தது. இதைத்தான் ''தேசத் தலைமை அரசாங்கத்திடம்

போய்விடும் நிலைமை இருந்தது'' என்று சுட்டிக் காட்டுகிறார் பட்டாபியார்.

இந்த அவலச் சூழ்நிலையிலே பாரதியார் வருணித்தது போல, மாகாளி பராசக்தி மாபாரதத்தைக் கடைக்கண்ணால் பார்த்தாள்! அதனால், தேசத்தின் தென்கோடிப் பிரதேசமான தமிழகத்திலிருந்து ஒரு 'சக்தி' தோன்றியது! ஆம்; தமிழகமானது இந்தியாவுக்கு வழி காட்ட ஒரு தலைவரைத் தந்தது!

காங்கிரஸ் மகாசபை தோன்றிய பின்னுள்ள 30 ஆண்டுக் காலத்திலே முதன் முதலாகத் தெளிவான குறிக்கோளுடனும் அதற்கு வெற்றி தேடும் வேலைத் திட்டத்துடனும் ஒரு தலைமை தேவைப்பட்ட நேரத்திலே அதனை வழங்கத் தமிழ்நாடு துணிவோடு முன்வந்தது!

தமிழகத்தின் வரலாற்றுப் பெருமை

''இந்தியாவுக்குத் தலைமை தேவைப்பட்ட போதெல்லாம் அதனை வழங்கத் தமிழகம் தவறியதேயில்லை. புறச் சமயத் தாக்குதல்களால் இந்தியாவின் புராதன சமயமான இந்து சமயம் தலைமையற்றுத் தவித்தபோது ஆதிசங்கரரைத் தந்த பெருமை தமிழகத்திற்கு உண்டு. அடுத்து, அனைத்து இந்தியாவுக்கும் இராமானுசரைத் தந்த பெருமையும் தமிழகத்திற்கே உரியதாகும். இந்த வரலாற்றுப்படித்தான் இந்திய தேசிய அரசியலுக்கு டாக்டர் பெசன்டைத் தந்தது தமிழ்நாடு.

பெசன்ட் பிரவேசம்

அனைத்துலக இயக்கமாம் தியோசாபிகல் சங்கத் தலைவியான டாக்டர் அன்னிபெசன்ட் இந்திய அரசியலில் பிரவேசித்தார். அரசியல் வானில் அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் பரவியிருந்த இருளுக்கிடையில் விடிவெள்ளியாக அவர் தோன்றினார். ஆம்; பின்னே அடிவானத்தில் எழவிருக்கும் 'காந்தி' என்னும் கதிரவனுக்கு முன்னோடியாகப் பெசன்ட் தோன்றினார். திருமதி. பெசன்ட் அரசியலில் பிரவேசித்தது 1914 இல் ஆகும். அதுவும் சென்னையில்தான் நிகழ்ந்தது. அந்த ஆண்டில் திரு. பூபேந்திரநாத் பாசு தலைமையிலே சென்னையில் கூடிய காங்கிரஸ் மகா சபையில் தோன்றிச் சிறப்புரையாற்றினார் பெசன்ட்.

''இந்தியா விரும்புவது உத்தியோகப் பதவிகளோ, கூடுதல் அதிகாரங்களோ அல்ல. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குட்பட்ட

பூரண சுயாட்சி'' என்று சென்னைக் காங்கிரசிலே பெசன்ட் முழங்கினார். ''காங்கிரஸ் கோரும் சுயாட்சி பிரிட்டிஷாரின் தயவால் பெறுவதல்ல; அது, இந்திய சமுதாயத்தின் பிறப்புரிமையாகும்'' என்பதையும் தெளிவுபடுத்தினார்.

டாக்டர் பெசன்டின் பிரவேசத்தாலோ என்னவோ சென்னைக் காங்கிரஸ் மகாசபையிலே, ''காங்கிரசின் கோரிக்கை பூரண சுயாட்சிதான்''என்னும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

டாக்டர் பெசன்ட், பிறப்பால் தமிழரோ தமிழ் நாட்டவரோ அல்லர். இங்கிலாந்தை அடுத்துள்ள அயர்லாந்தில் பிறந்தவர். அயர்லாந்துக்கு 'ஐரிஷ்' என்ற பெயரும் உண்டு.

டாக்டர் பெசன்ட் இந்திய அரசியலில் பிரவேசித்த நேரத்திலே அவரது தாய் நாடான ஐரிஷ் தேசம் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலிருந்து விடுதலை பெறப் போராடிக் கொண்டிருந்தது திரு. டிவேலரா தலைமையில்!

டாக்டர் பெசன்ட்டும் ஐரிஷ் விடுதலைக் கிளர்ச்சியிலே தொடர்பு கொண்டிருந்தவர். அயர்லாந்துக்கும் இந்தியாவுக்கும் பொது எதிரியாக இருந்தது பிரிட்டன். அதனால், ஐரிஷ் விடுதலை வீரர்களும் இந்திய விடுதலை விரும்பிகளும் பரஸ்பர நல்லெண்ணம் உடையவர்களாக இருந்தனர். இந்தப் பின்னணியில்தான் ஐரிஷ் மாதான பெசன்ட் இந்திய அரசியலில் பிரவேசித்தார்.

டாக்டர் பெசன்ட், 1893-இல் இந்தியாவிற்கு வந்து இந்தியக் குடிமகளாகவே தம்மைப் பதிவு செய்து கொண்டார் என்பதனை மீண்டும் ஒருமுறை நினைவில் கொள்வோமாக!

அனைத்துலக இயக்கமான தியோசாபிகல் சங்கத்தின் தலைவராக இருந்த ஆல்காட் என்பவர் மறைந்தபின், டாக்டர் பெசன்ட் அந்தச் சங்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று சங்கத்தின் தலைமை அலுவலகத்தைத் தமிழகத்தின் தலைநகரான சென்மையம்பதியில் - அடையாறில் அமைத்தார். அந்த நாளிலே, தமிழ்நாடு டாக்டர் பெசன்டை ஸ்வீகாரம் செய்து கொண்டது.

பிரிந்த சக்திகளைப் பிணைத்த 'சக்தி!'

1915-ஆம் ஆண்டிலே நாடு பெற்றிருந்த அவலச் சூழ்நிலை காரணமாக, பிளவுபட்டிருந்த காங்கிரஸ்காரர்களை ஒன்றுபடுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டிருந்தது. பிளவுபட்டவர்கள்

சாமான்யர்கள் அல்லர். மிதவாத அணியிலே - பேரறிஞர்களான கோபால கிருஷ்ண கோகலே, வி.எஸ்.சீனிவாச சாஸ்திரி, மணி ஐயர், சுரேந்திரநாத் பானர்ஜி, பிரோசிஷா மேத்தா ஆகியோர் இருந்தனர். தீவிரவாதிகள் அணியிலே - லோகமான்ய திலகர் தலைமை பெற்றிருந்தார். இந்த இரு அணிகளையும் பிணைக்க வேண்டுமென்றால், அது சாமான்யரால் ஆகக்கூடிய காரியமல்ல. இந்த அரும்பணியிலே டாக்டர் பெசன்ட் தம்மைத் தாமே ஈடுபடுத்திக் கொண்டார். ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களை யெல்லாம் காங்கிரஸ் மகாசபைக்குள் கொண்டு வரும் முயற்சியை மிகுந்த துணிவுடன் மேற்கொண்டார். அதற்காகத் தீவிரவாதியான திலகரும் மிதவாதியான கோகலேயும் வாழும் புனா நகருக்கே சென்றார். அவர்களைத் தனித்தனியே சந்தித்துப் பேசினார். அவர்கள் இருவரையும் கூடச் சந்திக்க வைத்தார்.

சங்க காலத் தமிழகத்திலே தங்களுக்குள் பகைமை கொண்டிருந்த தமிழ் மன்னர்களான அதியமானையும் தொண்டைமானையும் சமரசப்படுத்தி வைத்துத் தமிழினத்தின் ஒற்றுமையைக் காத்தார் ஔவைப் பிராட்டியார்! அதுபோல, பிளவுபட்டிருந்த தீவிரவாதிகளையும் மிதவாதிகளையும் ஒன்றுபடுத்தி வைத்து, விடுதலை வீரர்களின் பாசறையான காங்கிரசைப் பலப்படுத்த 1915 இல் ஓர் ஔவையாராக டாக்டர் அன்னிபெசன்ட் தோன்றினார்! அப்போது அவருக்கு வயது அறுபத்தெட்டாதலால், ஔவையார்தானே!

பெசன்டின் தலைமையைப் பெற்றிருந்த தியோசாபிகல் சங்கமானது ருஷ்யரான பிளவாட்ஸ்கி அம்மையாரின் உழைப்பால் வளர்ந்து தமிழகத்தில் குடி புகுந்ததாகும். ஆயினும், இந்து தருமத்தையும் தழுவியதாகவே தியோசாபிகல் சங்கம் செயல்பட்டது. தமிழரான இராமலிங்க சுவாமிகளைத் தனது வழிகாட்டியாகக் கொண்டது என்பதனை முன்பே அறிந்தோம். இந்தப் பின்னணியை நினைவில் கொண்டுதான் இந்தியாவின் தலைமைப் பொறுப்பை ஏற்கத் தமிழகம் தனது சுவீகார மகளான டாக்டர் பெசன்டைத் தந்ததென்று சொல்ல வேண்டியிருக்கிறது.

டாக்டர் பெசன்ட் 2-1-1914-இல் 'காமன் வீல்' என்னும் பெயரில் ஆங்கில வார இதழ் ஒன்றைத் தொடங்கினார். அந்நாளில் இந்திய அரசியலில் செல்வாக்குப் பெற்றிருந்த 'இந்து' பத்திரிகை டாக்டர் பெசன்டின் தீவிர முயற்சிகளுக்குப் போதிய ஆதரவு அளிக்காததாலும் தமக்கென ஆங்கில நாளிதழ் தேவைப்

படுவதனைப் பெசன்ட் உணர்ந்தார். அதனால், அப்போது திரு. கருணாகரன் என்பவரால் மிதவாத அணியின் நாளேடாக நடத்தப்பட்டு வந்த 'ஸ்டாண்டர்டு' என்னும் ஆங்கில இதழை விலைக்கு வாங்கி, 14-7-1914 முதல் 'புதிய இந்தியா' (நியூ இண்டியா) என்னும் பெயர் மாற்றத்துடன் நடத்தலானார். தாமே அதன் ஆசிரியராக இருந்தார்.

பெசன்டின் வெற்றி!

டாக்டர் பெசன்ட் ஆங்கில மொழியிலே மிகுந்த புலமை பெற்றிருந்தார். யாழினுமினிய குரலும் அவருக்குச் சொந்தமாக இருந்தது. தியோசாபிகல் சங்கத்தின் தலைமையைப் பெற்றிருந்த காரணத்தால் உலகெலாம் புகழ் பெற்றிருந்தார். இத்துணைச் சாதனங்களாலும் இந்திய அரசியலிலே அவர் இட்டது சட்டமானது 1915 ஆம் ஆண்டிலே! டாக்டர் பெசன்ட் அம்மையார் பிரிட்டனின் தலைநகரான லண்டனுக்குச் சென்றார். அந்நாளிலே இந்தியர் மேற்கொண்ட முயற்சிகளுக்கு ஆதரவாக இருந்த பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர்களை ஒருங்கிணைத்து, லண்டனிலேயே ஓர் அமைப்பை நிறுவ டாக்டர் பெசன்ட் முயன்றார். அதிலே அவர் வெற்றி பெறவில்லை. ஆயினும், இந்திய விடுதலை இயக்கத்தின்பால் பிரிட்டிஷ் பொதுமக்களின் கவனத்தைத் திருப்புவதிலே அவர் வெற்றி கண்டார்.

அடையாறு வாசியான டாக்டர் பெசன்ட் அம்மையாருக்கு மயிலாப்பூர் வக்கீல்களின் ஆதரவும் இருந்தது. தங்கள் தலைவரான திரு.வி. கிருஷ்ணசாமி ஐயர் அமரராகி விட்டதால், மிதவாதிகளான மயிலாப்பூர் வக்கீல்கள் கொம்பை இழந்த கொடிபோலத் துவண்டு விழுந்து கிடந்தனர். அவர்களுக்குக் கொழுகொம்பாகப் பயன்பட்டார் டாக்டர் பெசன்ட்.

1914 இல் சென்னையில் நடந்த காங்கிரஸ் மகாசபையின் வரவேற்புக் குழுத் தலைவரான சர்.எஸ். சுப்பிரமணிய ஐயர் டாக்டர் பெசன்டின் சிஷ்யரானார். டாக்டர் சர்.சி.பி. ராமசாமி ஐயரும் பெசன்டைப் பின்பற்ற முன்வந்தார். பெசன்டின் தரிசனத்தால் மயிலாப்பூர் வக்கீல்களின் மிதவாதப் போக்கிலேயும் சிறிது மாறுதலேற்பட்டது. ஆம்; முற்போக்காக!

பிரசாரத் திறமை!

டாக்டர் பெசன்ட் இங்கிலாந்து சென்று திரும்பிய பின்னரே சென்னையில் 'நியூ இந்தியா' பத்திரிகையின் ஆசிரியர் பொறுப்பை ஏற்றார். பத்திரிகைகளில் எழுதியும் மேடைகளில்

பேசியும் தேசத்தில் மகத்தான எழுச்சியை ஏற்படுத்தினார். ஏராளமான பிரசுரங்களையும் வெளியிட்டார். இத்தகைய பிரசாரத் திறமையைத் தேச மக்கள் இவருக்கு முன்னர் வேறெந்தத் தலைவரிடமும் கண்டதில்லை. இவர் எழுதி வெளியிட்ட 'இந்தியா சுதந்திரத்திற்குப் பாடுபட்ட விதம்' என்னும் பெயருடைய நூல், *1885* முதல் *1914* வரையுள்ள இந்திய அரசியலின் வரலாறாகும். இந்நூல் உலகம் முழுவதன் கவனத்தைக் கவர்ந்தது.

தேசியக் கல்வி

இந்திய மொழிகளைப் போதனா மொழிகளாகக் கொண்ட தேசியக் கல்வியே திருமதி பெசன்டின் கல்விக் கொள்கையாக இருந்தது. அவர், லார்டு மெக்காலேயின் கல்வித் திட்டத்தை அடியோடு வெறுத்தார். ஆந்திர மாநிலத்திலே மதனப்பள்ளியில் பிரம ஞான சங்கத்தின் சார்பில் தாம் நிறுவிய கல்வி நிறுவனங்களை சென்னைப் பல்கலைக்கழகம் நடைமுறைப்படுத்தி வந்த கல்வித் திட்டத்தில் வெறுப்பு கொண்டு அதன் தொடர்பிலிருந்து பிரித்து விட்டார்.

'ஹோம்ரூல்' கிளர்ச்சி!

காங்கிரஸ் மகாசபையின் குறிக்கோள் இன்னதெனத் தெளிவாக அறிவித்து விடவேண்டுமென டாக்டர் பெசன்ட் விரும்பினார். அதனால், 'பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குட்பட்ட சுயாட்சி அந்தஸ்து இந்தியாவுக்கு வழங்கப்பட வேண்டும்' என்று *25-9-1915* இல் அறிவித்தார். அதற்கு, ஆங்கிலத்தில் 'ஹோம் ரூல்' (சுய ஆட்சி) என்று பெயர் தந்தார். அந்நாளில், அயர்லாந்து விடுதலை இயக்கத்தார் 'ஹோம் ரூல்' கொள்கையையே கொண்டிருந்தனர். அதனால், ஐரிஷ் மகளான திருமதி பெசன்ட், 'ஹோம் ரூல்' என்னும் பெயரால் இந்தியாவின் குறிக்கோளை வெளியிடலானார்.

முஸ்லீம் லீக் மனமாற்றம்!

1915-இல் மற்றொரு சுபசகுனமும் தென்படலானது. அது, இந்திய முஸ்லீம் லீக் அடைந்த மனமாற்றமாகும். வங்கப் பிரிவினை ஏற்பட்டது. முதல் முஸ்லீம் லீக், பிரிட்டிஷாரிடம் நம்பிக்கை வைத்து, இந்திய தேசிய எழுச்சியில் கலக்காமலிருந்தது. அந்த நம்பிக்கையை இழந்துவிட்டதாக முதன் முதலாக இப்போதுதான் வெளிப்படையாக அது அறிவித்தது. இந்திய தேசிய காங்கிரசுடன் ஒத்துழைக்கவும் வலுவில் முன்வந்தது.

இந்துக்களும் முஸ்லீம்களும் ஒருங்கிணைந்து தேச சுயாட்சிக்குப் பாடுபட வேண்டுமென்றும் லீக் வேண்டுகோள் விடுத்தது. இதனை, காங்கிரஸ் மகாசபை ஒரு தீர்மானத்தின் மூலம் மகிழ்ச்சியோடு வரவேற்றது.

மீண்டும் திலகர்!

இந்நிலையில், தீவிரவாதிகள் தலைவரான பாலகங்காதர திலகர் திரும்பவும், அரசியலில் தீவிரமாக ஈடுபட முன்வந்தார். 1908 முதல் 1914 வரை ஆறாண்டுக் காலம் மாண்டலே சிறையில் அடைப்பட்டிருந்ததால், அவர் தம்முடைய தீவிரவாத சகாக்களுடன் தொடர்பற்றவராக இருந்தார். அரசு தீவிரவாதிகளுக்கு எதிராக எடுத்த கடும் நடவடிக்கைகள் காரணமாக அவர்களனை வரும் செயலற்றவர்களாகிச் சிதறிக் கிடந்தனர். அவர்களை எல்லாம் திரும்ப ஒன்றுசேர்த்து சூரத் காங்கிரசின்போது நிறுவிய 'தேசிய மாநாடு' என்ற கட்சியைப் புதுப்பிக்க விரும்பினார். இது சம்பந்தமாக வ.உ.சிதம்பரனார் உள்ளிட்ட தம்முடைய சகாக்களுடன் கடிதப் போக்குவரத்து நடத்தினார். இம்முறை 'தேசிய மாநாடு' என்னும் கட்சியை காங்கிரசுக்குப் போட்டியாக அல்லாமல், அதன் கிளையாக நடத்தவே திலகர் விரும்பினார். வழக்கம்போல, 1915 டிசம்பரில் காங்கிரசின் 25-ஆவது மகாசபை பம்பாயில் கூடியது. பீகாரியான திரு. சத்தியேந்திர பிரசன்ன சின்கா தலைமை வகித்தார்.

திலகர் விரும்பியதுபோல் தீவிரவாதிகளை ஏற்கும் வகையில் காங்கிரஸ் அமைப்பு விதிகள் திருத்தப்பட வில்லை யென்றாலும், சிறிது தளர்த்தப்பட்டதால், 2259 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். காங்கிரஸ் மகாசபை தோன்றிய காலந்தொட்டு இடையிலுள்ள எந்த ஆண்டிலும் இவ்வளவு பெரிய எண்ணிக்கை யில் பிரதிநிதிகள் கலந்து கொண்டதேயில்லை. இதற்கு, பெசன்டே காரணமாவார். இது, 'சமரச காங்கிரஸ்' எனும் பெயர் பெற்றது. சூரத்தில் பிரிந்து சென்றவர்களைத் திரும்பவும் பிணைக்க முயன்றதால், அது வெற்றி பெறாமல் பம்பாயும் மற்றொரு 'சூரத்' ஆகிவிடுமோ என்ற அச்சமும் தலைவர்களிலே சிலருக்கு இருந்தது. ஆனால், அப்படிப்பட்ட அசம்பாவிதம் எதுவும் நிகழவில்லை. இந்தக் காங்கிரசில் திலகர் கலந்து கொள்ளவில்லை.

முதன் முதலாகக் காந்தியடிகள்

காந்தியடிகள் முதன் முதலாக இந்தக் காங்கிரஸ் மகாசபையில்தான் கலந்து கொண்டார். துரதிருஷ்டவசமாக,

விஷயாலோசனைக் கமிட்டிக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட வில்லை. ஆனால், மகாசபைத் தலைவர் தமக்குள்ள விசேஷ அதிகாரப்படி அவரை விஷயாலோசனைக் கமிட்டி உறுப்பினராக்கினார்.

டாக்டர் பெசன்ட், ஹோம்ரூல் கொள்கைகளையும் அவற்றையொட்டிய வேலைத் திட்டங்களையும் பம்பாய் காங்கிரஸ் மகாசபையில் பிரேரேபித்தார். ஆனால், காங்கிரஸ் அமைப்பு விதிகட்டு முரணானவையென்று கூறி மகாசபைத் தலைவர் தமக்குள்ள விசேஷ அதிகாரப்படி, பெசன்டின் பிரே ரணையை நிராகரித்துவிட்டார். ஆயினும், அப்பிரேரணையை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் பரிசீலனைக்கு 1-9-1916 க்குள் அனுப்பி வைப்பதென்று சமரசம் செய்து கொள்ளப்பட்டது.

பம்பாய் காங்கிரசில் முஸ்லீம் லீக்கும் கலந்துகொண்டது. அதன் காரியக் கமிட்டி காங்கிரஸ் பந்தலிலேயே நடைபெற்றது. இந்திய முஸ்லீம் லீக்குடன் ஒத்துழைப்பதென்ற தீர்மான மொன்றும் காங்கிரசில் நிறைவேற்றப்பட்டது.

புதிய சாதனை

பம்பாய் காங்கிரசில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அதற்கு முன்கூடிய மகாசபைகளில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் தொகுப்பாகவே அமைந்தன. இந்தக் காங்கிரசின் புதிய சாதனை என்னவென்றால், தீவிரவாதிகளை வரவேற்கும் வகையில் காங்கிரஸ் அமைப்பு விதிகள் தளர்த்தப்பட்டதாகும். மற்றப்படி, பம்பாய் காங்கிரசிலும் மிதவாத வாடையே வீசியதெனலாம்.

இலட்சுமணபுரி காங்கிரஸ்

1916-ஆம் ஆண்டிற்கான *31*-ஆவது காங்கிரஸ் மகாசபை உத்தரப் பிரதேசத்தைச் சார்ந்த இலட்சுமணபுரி நகரில் நடைபெற்றது. வங்காளியான அம்பிகாசரண் மஜூம்தார் தலைமை வகித்தார். இந்தக் காங்கிரசுக்கு எதிராக அதிகார வர்க்கம் கெடுபிடிகளைக் கையாண்டது. அரச நிந்தனையாக யாரும் பேச மாட்டார்களென மாநாட்டு நிர்வாகிகளிடம் அதிகாரிகள் உறுதிமொழி கோரினர். அதைத்தர மறுத்து, மாநாட்டுக்கான ஏற்பாடுகளில் அதன் நிர்வாகிகள் ஈடுபட்டனர்.

ஆளுநர் பேசினார்!

நல்ல வேளையாக, மாகாண ஆளுநர் லார்டு மெஸ்டன் அவர்கள் தம்முடைய மனைவியாருடனும் பரிவாரங்களுடனும் மாநாட்டுக்கு வருகை தந்தார். அதனால் அதிகார வர்க்கத்தின் வாலாட்டம் குறைந்தது! ஆளுநர் அவர்களை மாநாட்டுத் தலைவர் வரவேற்று நன்றி தெரிவித்துப் பேசினார். 1914 இல் சென்னையில் நடந்த காங்கிரசில் ஆளுநர் பென்ட்லண்ட் அவர்கள் கலந்து கொண்டதையும் அவர் தமது பேச்சில் குறிப்பிட்டார். மாகாண கவர்னர் ஒருவர் காங்கிரஸ் மகா சபையில் பேசியது இதுதான் முதன்முறையாகும்.

ஒற்றுமைக் காங்கிரஸ்

இந்த மாநாட்டில் லோகமான்ய திலகர் கலந்து கொண்டார். சூரத் காங்கிரசுக்குப் பின் காங்கிரஸ் மகா சபையில் அவர் கலந்து கொண்டது இதுவே முதன் முறையாகும். அவரைப் பின்பற்றிய தீவிர தேசியவாதிகளும் கலந்து கொண்டனர். இதனால், பிரதிநிதிகளின் எண்ணிக்கை பெருகியது. ஆம்; 2301 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இந்த மகா சபை பிளவுபட்டிருந்த தீவிரவாதிகளையும் மிதவாதிகளையும் ஒன்றுபடுத்தியது. இந்து - முஸ்லிம் சமுதாயத்தினரிடையே கொள்கை ரீதியான ஒற்றுமையை உருவாக்கியது. இதனால், இலக்குமணபுரி காங்கிரஸ் 'ஒற்றுமைக் காங்கிரஸ்' எனப் பெயர் பெற்றது.

மேடைக் காட்சி

மகா சபை மேடையிலே சுயாட்சி இயக்கத்தின் கர்த்தாவான டாக்டர் பெசன்ட் தம் தோழர்களான அருண்டேல், வாடியா ஆகியோருடன் அமர்ந்திருந்தார். அப்போதுதான் இந்திய அரசியலில் பிரவேசித்திருந்த மோ.க. காந்தி, தமது தென்னாப்பிரிக்க இயக்கத் தோழரான போலக்குடன் ஒருபுறம் வீற்றிருந்தார். மற்றொருபுறம் முஸ்லிம் லீக் தலைவர்களான ஜனாப் ஜின்னா, முகமதாபாத் ராசா, மஜரூர்-உல்-ஹக், ரசூல் முதலியோர் காட்சியளித்தனர்.

காங்கிரஸ் மகாசபையைத் தங்கள் செல்வாக்கில் வைத்திருந்த மிதவாதிகளான ராஷ்பிகாரி கோஷ், சுரேந்திரநாத் பானர்ஜி ஆகியோரும்; இவர்களுக்கருகே மிதவாதத்தின் முதல் நெம்பர் எதிரிகளான லோகமான்ய திலகர், கபார்தே

ஆகியோரும் பரஸ்பர நட்புணர்ச்சியை வெளிப்படுத்தி அமர்ந்திருந்தனர்.

முந்தைய ஆண்டில் கூடிய காங்கிரஸ் மகாசபையின் ஆணைப்படி காங்கிரஸ் - லீக் அமைப்புகளின் தலைவர்களிடையில் நடந்த பேச்சு வார்த்தைகளின் விளைவாக ஏற்பட்டிருந்த காங்கிரஸ் - லீக் உடன்படிக்கை இலக்குமணபுரி காங்கிரசால் அங்கீகரிக்கப்பட்டது. இது மகத்தான சாதனை.

இக் காங்கிரசிலே காங்கிரஸ் மகாசபை தோன்றிய நாள் முதல் தொடர்பு கொண்டு, சுதேசி இயக்கத்திற்காக அரும்பாடுபட்டவரான திரு.ஜி. சுப்பிரமணிய ஐயரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பெசன்ட் சாதனை

1915-இல் நடந்த பம்பாய் காங்கிரசிலே தலைவரின் அதிகாரத்தால் நிராகரிக்கப்பட்ட பெசன்டம்மையாரின் ஹோம்ரூல் கொள்கையானது, லக்னோ காங்கிரசில் ஒரு தீர்மான வடிவில் ஏற்கப்பட்டது. அத்தீர்மானம் வருமாறு:

''(அ) இந்தியாவின் புராதன நாகரிகத்தை உத்தேசித்தும், கல்வியிலும் பொது வாழ்விலும் ஏற்பட்டுள்ள அபிவிருத்தியை முன்னிட்டும், மேன்மை தங்கிய அரசர் பெருமான், ''வெகு விரைவில் இந்தியாவுக்கு சுயாட்சியளிப்பது பிரிட்டிஷாரின் நோக்கம்'' என்று தயவு கூர்ந்து அறிவிக்க வேண்டும். (ஆ) இவ்விஷயத்தில் முதல்படியாக காங்கிரசும் லீகும் வகுத்துள்ள திட்டம் அங்கீகரிக்கப்பட வேண்டும். (இ) பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் திருந்திய அமைப்பில் இந்தியா சம அந்தஸ்துடைய சுயாட்சி பெற வேண்டும்.''

இந்தத் தீர்மானம் டாக்டர் பெசன்ட் அம்மையார் காங்கிரஸ் மகாசபை மீது அடைந்த வெற்றியின் சின்னமாகும். இதனால், ஹோம்ரூல் இயக்கத்திற்கு அவர் மகத்தான வெற்றியைத் தேடித் தந்து விட்டார்.

பிரிட்டிஷார் ஆத்திரம்

காந்தியடிகள், திலகர், ஜனாப் ஜின்னா, டாக்டர் ராஷ்பிகாரி கோஷ், சுரேந்திரநாத் பானர்ஜி ஆகியோர் கலந்துகொண்ட காங்கிரசிலே, அவர்களுடைய ஆதரவோடு சுயாட்சித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டபின் பிரிட்டிஷ் அரசுக்கு திலகர் மீதும் பெசன்ட் மீதும் அடங்காப் பெருஞ்சினம் ஏற்பட்டது.

சென்னை கவர்னர் லார்டு பென்ட்லண்டு அவர்கள், மாணவர்கள் அரசியலில் ஈடுபடக்கூடாதென்று ஆணை பிறப்பித்தார். 'இந்து' பத்திரிகையின் ஆசிரியர் திரு.ஏ. அரங்கசாமி ஐயங்காரை அழைத்து, நாட்டின் அரசியல் நிலைபற்றி அவருடன் மனம்விட்டுப் பேசினார்.

ஹோம்ரூல் லீக்

1916 செப்டம்பரில் இந்திய அரசியலிலே ஓர் புதிய அமைப்பு தோன்றியது. அது, ''ஹோம்ரூல் லீக்'' என்பதாகும். பழகு தமிழிலே, 'சுயாட்சிச் சங்கம்' என்று பொருள். இதனை அன்னிபெசன்ட் தோற்றுவித்தார்.

1915-இல் நடைபெற்ற பம்பாய் காங்கிரசிலே காங்கிரசையே ஹோம்ரூல் இயக்கமாக மாற்ற பெசன்டம்மையார் தீர்மானம் கொடுத்தபோது, ''அதனை 1916 செப்டம்பர் முதல் தேதிக்குள் அ.இ.கா. கமிட்டி பரிசீலனை செய்யும்'' என்று அறிவிக்கப் பட்டிருந்தும், அந்தக் கால கெடுவுக்குள் அக்கமிட்டி கூடவே யில்லை. இதனால் ஏமாற்றமடைந்து, சுயாட்சி இயக்கத்தைத் தாமே பொறுப்பேற்று நடத்தும் பொருட்டு, பெசன்ட் அம்மையார் 1916 செப்டம்பர் 12-இல் 'ஹோம் ரூல் லீக்' என்னும் பெயரில் புதிய அமைப்பொன்றைத் துவக்கினார். இந்நிகழ்ச்சி சென்னையில்தான் நடைபெற்றது.

1884 இல் சென்னையில் தியோசாபிகல் சொசைடியின் வருடாந்திர மாநாடு நடைபெற்றபோதுதான் - அதில் கலந்து கொண்ட 17 பிரமுகர்களால் தான் - இந்திய தேசிய காங்கிரஸ் என்ற விருட்சம் தோன்றுவதற்கான வித்து விழுந்தது. அது போல, 1916 இல் ஹோம் ரூல் லீக் தோன்றுவதற்கும் தியோசாபிகல் சங்கத் தலைவரே நேரடியாகப் பொறுப்பேற்றார். காங்கிரஸ் மகாசபையை வெள்ளையரான ஹ்யூம் துரைமகனார் தோற்று வித்தார் என்றால், ஹோம்ரூல் இயக்கத்தையும் வெள்ளைப் பெண்மணியான அன்னிபெசன்ட் அம்மையாரே தோற்றுவித்தார்.

பெசன்ட் அம்மையார் ஹோம்ரூல் லீகைத் தொடங்கு வதற்கு ஆறு திங்களுக்கு முன்பே - அதாவது, 23-4-1916 இல் புனா நகரில் பால கங்காதர திலகர் தமது பொறுப்பிலே தனியாக ஹோம்ரூல் லீக் ஒன்றைத் துவக்கினார். அதற்கும் ஆறு திங்களுக்கு முன்பே - அதாவது, 1915 செப்டம்பரில் 'ஹோம் ரூல்' இயக்கம் ஒன்று நாட்டிற்குத் தேவைப்படுகிறது' என்று பெசன்ட் அம்மையார் பொதுவாக அறிவித்திருந்தது. இங்கு நினைவில் கொள்ளத்தக்கதாகும்.

இதய ஒருமைப்பாடு

திலகரும் பெசன்டும் துவக்கிய இந்த இரு அமைப்புகளுக்குள்ளே போட்டி ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு, இருபெரும் தலைவர்களும் ஓர் உடன்படிக்கை கண்டனர். திலகர் பெருமான் தேசம் முழுவதற்குமான பெருந் தலைவராக இருந்தும், தமது ஹோம்ரூல் லீகை மகாராஷ்டிர மாநில எல்லைக்குள் மட்டுமே இயக்குவதென்ற முடிவுக்கு வந்தார். பெசன்டின் சங்கத்தை அனைத்திந்தியாவுக்கு மான தேசிய இயக்கமாக ஏற்கவும் அவர் இசைவு தெரிவித்தார். அவருடைய பெருங்குணத்திற்கு இது மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

பிரிட்டிஷாரின் அச்சம்!

பெசன்ட் அம்மையாரால் நாட்டில் ஏற்பட்ட தேசிய எழுச்சியானது தலைமைப் போட்டி காரணமாகப் பாழ்பட்டுவிடக் கூடாதென்று திலகர் கருதினார். அன்னிபெசன்ட் அம்மையார் தேசத்தின் பெருந்தலைவியாக வருவதைத் திலகரும் விரும்பினார்.

திலகர் மகாராஷ்டிர மாநிலம் முழுவதிலும் சுற்றுலாச் செய்து தமது சுயாட்சிச் சங்கத்திற்கு ஆதரவு திரட்டினார். சாமான்யர்களுக்குப் புரியும் வகையில் பொதுக்கூட்டங்களில் மகாராஷ்டிர மொழியிலேயே அவர் பேசியதால், சுயாட்சி இயக்கத்திற்குப் பொது மக்களுடைய ஆதரவு பெருகியது. தம்முடைய 'மராட்டா', 'கேசரி' பத்திரிகைகளிலே திலகர் சுயாட்சிச் சங்கத்தின் கொள்கைகளையும் வேலைத் திட்டங்களையும் விளக்கினார். இதனால் மகாராஷ்டிர மாநிலத்திலுள்ள மிதவாதிகளிலேயும் பலர் திலகரைப் பின்பற்ற முன் வந்தனர்.

பெசன்ட் அம்மையார், திலகரின் மகாராஷ்டிர சுயாட்சிச் சங்கத்திலிருந்து தமது சங்கத்தைப் பிரித்துக் காட்டுவதற்காகத் திலகரின் இசைவையும் பெற்றுத் தமது சங்கத்தின் பெயருக்கு முன்னே 'அனைத்திந்திய' என்னும் அடைமொழியைச் சேர்த்தார்.

பெசன்ட், இந்தியா முழுவதிலும் சுற்றுலாச் செய்து சுயாட்சி இயக்கத்திற்குத் தேச மக்களின் ஆதரவைப் பெறப் பிரச்சாரம் செய்தார். தம்முடைய 'காமன்வீல்,' 'நியூ இந்தியா' பத்திரிகைகளிலே சுயாட்சிச் சங்கத்தின் கொள்கைகளையும் வேலைத் திட்டங்களையும் விளக்கி எழுதினார். மதச் சுதந்திரம்,

தேசியக் கல்வி, சமூகச் சீர்திருத்தம் ஆகிய கொள்கைகளை விளக்கி எழுதி வந்தார்.

அம்மையார் விடுத்த வேண்டுகோளுக்கிணங்கி மாணவர்கள் சுயாட்சிச் சங்கத்தில் பல்லாயிரக் கணக்கில் சேர்ந்தனர். இதைக் கண்டு மிரண்ட பஞ்சாப் மாநில அரசு மாணவர்கள் அரசியல் இயக்கத்தில் சேருவதற்குத் தடை விதித்தது. பம்பாய், மத்தியப் பிரதேச மாநிலங்களுக்குள் நுழையக் கூடாதென அம்மாநிலங்களின் அரசுகள் பெசன்டம்மையாருக்குத் தடைவிதித்தன. பெண்களும் சுயாட்சி இயக்கத்திற்கு ஆதரவளிக்க முன் வந்தனர். அதைக் கண்டு பெசன்டு அம்மையாரே வியப்புத் தெரிவித்தார்.

பெசன்டும் திலகரும் தேசத்தில் ஏற்படுத்தி வருகின்ற மகத்தான எழுச்சியைக் கண்டு பிரிட்டிஷ் அரசு அஞ்சியது. இவ்விருவரையும் ஒடுக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி, வைசிராய் லார்டு செம்ஸ்போர்டு என்பவர், இந்தியா மந்திரியான மாண்டேகுவுக்கு எழுதினார். இந்தியா மந்திரியிடம் அதிகாரம் பெற்றுத் திலகரையும் பெசன்டையும் ஒடுக்குவதற்கான அடக்குமுறைகளையும் அவர் அமல் நடத்தலானார்.

திலகர் மீது வழக்கு!

திலகரின் சொற்பொழிவுகளில் சில அரச நிந்தனையானவை என்று காரணங்காட்டி, சூலை மாதத்தில் அவர் மீது வழக்குத் தொடுத்தது பம்பாய் மாநில அரசு. அவரிடம் ஓராண்டுக் காலத்திற்கு நன்னடத்தை ஜாமீன் கோரியது. இரண்டாயிரம் ரூபாய்க்குச் சொந்த ஜாமீனும், தலைக்கு ரூபாய் பத்தாயிரம் வீதம் இருபதாயிரம் ரூபாய்க்கு இரண்டு நபர் ஜாமீனும் திலகர் தரவேண்டுமென்று அரசு கோரியது. இந்த வழக்கை எதிர்த்துத் திலகர் பெருமான் பம்பாய் உயர்நீதி மன்றத்திற்கு மனுச் செய்தார். மனுவை ஏற்று, நன்னடத்தை ஜாமீன் வழக்கு சட்டவிரோதமானதென்று உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்தது.

இந்த வழக்கில் திலகருக்கு ஏற்பட்ட வெற்றியால் பொது மக்களிடையில் அவருக்குள்ள செல்வாக்கு அதிகரித்தது. அவரை மக்கள் கடவுளாகவே கருதினர். இந்தச் சந்தர்ப்பத்தில்தான் 'லோகமான்யா' என்னும் சிறப்புப் பெயரை திலகர் பெற்றார். இதற்குத் தமிழில் 'மக்கள் தலைவர்' என்று பொருள்.

தெற்கேயும் அடக்குமுறை

வடக்கே திலகர் மீது ஜாமீன் நடவடிக்கை எடுத்த அதே நேரத்தில் தெற்கே பெசன்ட் அம்மையார் மீதும் அடக்கு முறை

பாணத்தை ஏவியது அரசு. அவரது 'நியூ இந்தியா' பத்திரிகையில் ஆட்சேபகரமான விஷயங்கள் வெளியாயின என்று கூறி, அரசு, ரூபாய் இரண்டாயிரம் ஜாமீன் கேட்டது. ஜாமீன் கட்டப்பட்டது. ஒரே திங்களுக்குள் அந்த ஜாமீன் தொகையை அரசு பறிமுதல் செய்தது. அந்தக் காலத்திலே விடுதலை இயக்கத்திற்கு ஆதரவாகவுள்ள பத்திரிகைகளிடம் ஜாமீன் தொகை கேட்பதும், பின்னர் ஏதேனும் ஒரு காரணம் காட்டி அதைப் பறிமுதல் செய்வதும், திரும்பவும் அதைவிடவும் அதிகத் தொகையை ஜாமீனாகக் கேட்பதும் வழக்கமாக இருந்தது.

பெசன்டின் 'நியூ இந்தியா'விடம் இரண்டாவது முறையாக ரூபாய் பத்தாயிரம் ஜாமீன் கேட்கப்பட்டது. இதனை எதிர்த்துப் பெசன்ட் அம்மையார் சென்னை உயர்நீதி மன்றத்திடம் செய்த முறையீடு அந்த மன்றத்தால் நிராகரிக்கப்பட்டது. இதற்கு மேல் லண்டன் பிரிவி கவுன்சிலுக்கு அம்மையார் செய்து கொண்ட முறையீடும் நிராகரிக்கப்பட்டது.

இதனால், பெசன்ட் அம்மையார், தமது இரண்டு பத்திரிகைகளையும் அச்சிட்டு வந்த அச்சகங்களை விற்றுவிட நேர்ந்தது. 'நியூ இந்தியா' பத்திரிகையை சில நாட்களுக்கு நிறுத்தி வைத்தார். பின்னர், வேறொருவரை ஆசிரியராகக் கொண்டு 'நியூ இந்தியா' வெளிவந்தது.

செல்வாக்கு வளர்ந்தது!

இதனாலெல்லாம் அம்மையாருக்கு மக்களிடையே இருந்த செல்வாக்கைக் குறைத்தவிட அரசால் முடியவில்லை. அவர்மீது ஏவப்பட்ட அடக்குமுறை பாணங்கள் அவருக்கு மக்கள் மத்தியில் இருந்த செல்வாக்கை மேலும் வளர்த்து வந்தன. சீடர்கள் பெருகலாயினர். டாக்டர் ஜி.எஸ். அருண்டேல், அம்மையாரைப் போலவே ஐரோப்பியராவார். அவரும் அம்மையாரின் பிரதம சீடரானார். பிற்காலத்திலே டாக்டர் அருண்டேல் தமிழ் மகளான ருக்மணியை மணந்து தமிழ்நாட்டின் மாப்பிள்ளையாகவே மாறிவிட்டார் என்பதனை இங்கு நினைவூட்ட வேண்டும்.

திரு. வாடியா என்பவர், பிறப்பால் மராத்தி மாநிலத்தவர். அவர் சென்னையில் தங்கி, பெசன்ட் அம்மையாரின் சீடராகி, அவரது ஹோம்ரூல் இயக்கத்தில் இரண்டறக் கலந்தார்.

பெசன்ட் அம்மையாரின் நடமாட்டத்தைக் கண்டு அஞ்சியது பிரிட்டிஷ் அரசு. வில்லி பாரதத்திலே, 'பாஞ்சாலி

நடமாடினாலே பாரதப் போர் மூண்டு விடும்' என்கிறான் சகாதேவன். 'அவளது கூந்தலைக் களைந்து, அவள் காலில் தளைபூட்டி, அவளுடைய நடமாட்டத்தை நிறுத்தினால்தான் மூளவிருக்கும் பாரதப் போரைத் தவிர்க்க முடியும்' என்றும் சகாதேவன் கண்ணனிடம் கூறுகிறான். இப்படி அவன் சொன்னது குறிப்பு மொழியாகத்தான்!

மிதவாதிகள் தீவிரவாதிகளாயினர்!

பாஞ்சாலி விஷயத்தில் சகாதேவன் சொன்னதைத்தான் நவீன பாரதப் போரான விடுதலைப் போரிலே பிரிட்டிஷ் அரசும் பெசன்ட் அம்மையார் விஷயத்தில் அமல் நடத்த முனைந்தது. திடீரெனப் பெசன்டையும், அவருடைய அரசியல் தோழர்களான டாக்டர் ஜி.எஸ். அருண்டேல், திரு. வாடியா ஆகியோரையும் 16-6-1917-இல் சென்னை மாகாண அரசு கைது செய்து உதகமண்டலத்தில் காவலில் வைத்தது.

இந்த நிகழ்ச்சியானது இந்தியாவில் மட்டுமல்லாமல் இங்கிலாந்திலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்திய அரசியலிலே தங்களை மிதவாதிகள் என்று கூறிக் கொண்டிருந்த பலர் தீவிரவாதிகளாக மாறினர். அவர்களிலே பண்டித மோதிலால் நேரு முக்கியமானவராவார். இதோ, ஜவகர்லால் பேசுகிறார்:

''அடக்குமுறை அரசாங்கம் பெசன்ட் அம்மையாரைச் சிறைப்படுத்தியதும் மக்கள் மனம் குமுறினர். அம்மையார் தொடங்கிய சுயாட்சி இயக்கம் வலுப்பெற்று நாடெங்கும் பரவியது. 1907-இல் காங்கிரசிலிருந்து விலகியிருந்த தீவிர வாதிகளேயன்றி, வேறு பல புதியவர்களும் பெசன்ட் இயக்கத்தில் ஈடுபடலாயினர்.

''பெசன்ட் அம்மையார் சிறை சென்றது கண்டு மிதவாதத் தலைவர்கள் உள்ளிட்ட முதியவர்கள் கூடக் கலங்கினர். பெசன்ட் அம்மையார் சிறைப்பட்டதால், என் தந்தையாரும் பிற மிதவாதத் தலைவர்களும் சுயாட்சிச் சங்கத்தில் சேர்ந்தனர். என் தந்தையார் அலகாபாத் கிளையின் தலைவரானார். பெசன்ட் அம்மையாரைச் சிறையில் வைத்ததும் அதன் பின்னர் நடந்த நிகழ்ச்சிகளும் என் தந்தையார் அதுவரை தாம் கடைப்பிடித்து வந்த மிதவாதப் போக்கிலிருந்து மாறுவதற்குக் காரணமாயின.''

('நேருஜியின் சுயசரிதை' (தமிழ்); பக். 49-51)

அப்போது இந்தியா மந்திரியாக இருந்த மாண்டேகு என்பார் பெசன்ட் அம்மையார் சிறையில் வைக்கப்பட்ட நிகழ்ச்சியை மிகுந்த வெறுப்புணர்ச்சியோடு தமது நாட்குறிப்பில் எழுதி வைத்திருக்கிறார்.

முதல் பெண் கைதி!

காந்தியடிகள் பெசன்ட் அம்மையாரைக் குறிப்பிடும்போது, ''போராட்டவாதிகளையெல்லாம் விஞ்சி நிற்கும் போராட்ட வாதி'' என்று கூறுகிறார். பிரிட்டிஷ் அரசு பெசன்ட் அம்மையாரை விசாரணையின்றிச் சிறையில் வைத்ததை, இந்திய சமுதாயத்தினருக்கு விடுத்த அறைகூவலாகக் கருதியது தேசிய காங்கிரஸ். அந்த அறைகூவலை ஏற்று, இந்திய சமுதாயத்தினரின் தன்மானத்தை வெளிப்படுத்தும் வகையிலே, அந்த ஆண்டின் இறுதியில் கல்கத்தாவில் கூடவிருந்த மகாசபையின் தலைவராகத் திருமதி பெசன்டை ஒருமனதுடன் தேர்ந்தெடுத்தது. ஆம்; அவர் சிறையில் இருக்கும்போதே தேர்ந்தெடுத்தது!

பிரிட்டிஷ் அரசு சிறை வைத்த பெருந் தலைவர்களில் சிலரை அந்த ஆண்டில் கூடிய மகாசபையின் தலைவராகத் தேர்ந்தெடுத்த வரலாறு காங்கிரசுக்கு உண்டு. அதற்குத் தொடக்கமாக அமைந்தது சிறையிலிருந்த பெசன்ட் அம்மையாரை அந்த ஆண்டின் காங்கிரஸ் மகாசபைக்குத் தலைவராகத் தேர்ந்தெடுத்தது.

மூதாட்டி மூட்டிய அச்சம்

தமிழ் நாட்டின் சுவீகாரப் புதல்வியான பெசன்ட் அம்மையார் இந்திய விடுதலைப் போர் வரலாற்றிலே பல பெருமைகளைச் சேர்த்து விட்டார். பிரிட்டிஷ் அரசு முதன் முதலாக ஒரு பெண்மணியைச் சிறையில் வைத்ததென்றால், அந்தப் பெண்மணி சென்னை வாசியான பெசன்ட் அம்மையார் தான்!

எழுபது வயதையடைந்துவிட்ட ஒரு மூதாட்டியின் நடமாட்டத்தைக் கண்டு அஞ்சி நடுங்கியது, கதிவரன் அஸ்த மிக்காத நிலப்பரப்பில் ஆதிக்கம் செலுத்திய பிரிட்டிஷ் பேரரசு.

பாவம்! மூன்று திங்களுக்குமேல் அந்தக் 'கிழவி'யைச் சிறையில் வைத்திருக்கும் துணிவு அரசுக்கு இருக்கவில்லை. அம்மையாரைச் சிறையில் வைத்துவிட்டால் சுயாட்சி இயக்கம் நசித்துவிடும் என்று அரசு கருதியதைப் பொய்யாக்கி விட்டனர்.

பாரத மக்கள். அவர் சிறைப்பட்ட பின்னர், காங்கிரசையும் திலகரின் மகாராஷ்டிர சுயாட்சிச் சங்கத்தையும் பின்னிடச் செய்யும் வகையிலே பெசன்டின் சுயாட்சி இயக்கம் வலுப் பெற்றது.

எங்கும் சுயாட்சி என்பதே பேச்சாக இருந்தது. பெசன்டை கைது செய்ததற்கு டில்லி சட்டமன்றத்திலே கண்டனக்குரல் எழுந்தது. லண்டன் பாராளுமன்றத்திலேயும் ஆட்சேபக் குரல்கள் எழுந்தன. இதன் விளைவாக, மூன்று திங்கள் வரை சிறையிலடைத்து வைத்தபின், பெசன்ட் அம்மையாரை நிபந்தனையின்றி அரசு விடுதலை செய்தது.

சீதையைக்கூடப் பத்துமாத காலம் சிறையில் வைக்க முடிந்தது, சின்னஞ்சிறு இலங்கை ஆட்சியால்! பெசன்ட் அம்மையாரை மூன்று திங்களுக்கு மேல் சிறையில் வைத்திருக்க முடியவில்லை, சர்வ சக்தி வாய்ந்த பிரிட்டிஷ் பேரரசால்!

வில்சனுக்கு மணி ஐயர் கடிதம்

பெசன்டம்மையாரைக் கைதுசெய்து காவலில் வைத்ததைக் கண்டித்து, ஓய்வு பெற்ற நீதிபதியும் மிதவாதக் காங்கிரஸ் வாதியுமான திரு.எஸ். சுப்பிரமணிய ஐயர் சர் பட்டத்தைத் துறந்தார். இவர், *1914* இல் சென்னையில் நடந்த காங்கிரஸ் மகாசபையின் வரவேற்புக்குழுத் தலைவராக இருந்தவர். ‘மணி ஐயர்’ என்றே இவர் அழைக்கப்பட்டார்.

அப்போது முதலாவது உலகப் பெரும்போர் நடைபெற்று வந்ததால், அமெரிக்கக் குடியரசுத் தலைவர் வில்சன் மனித உரிமைகளைக் காப்பதன் அவசியம் பற்றி ஓர் பிரகடனம் வெளியிட்டிருந்தார் அதனால், இந்தியாவில் பெசன்ட் கைது செய்யப் பட்டதை எடுத்துக்காட்டி, *24-6-1917* இல் மணி ஐயர் வில்சனுக்கு ஒரு கடிதம் எழுதினார். அதன் முக்கியப் பகுதிகள் வருமாறு:

‘‘கொடுங்கோன்மைக்கு அண்மையில் ஒரு சான்று, இந்தியாவுக்கு அரிய சேவை செய்துள்ள ஐரிஷ் பெண்ணரசி அன்னிபெசன்டைச் சிறையில் அடைத்தது. இத்துடன் சேர்க்கப் பட்டுள்ள அறிக்கையில் பெருமதிப்பு வாய்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள், பத்திரிகாசிரியர்கள், கல்வி நிபுணர்கள், சட்ட அறிஞர்கள் ஆகியோர் கையொப்பமிட்டிருக்கின்றனர். அதிலிருந்து சட்ட வரம்புக்குட்பட்டு இந்தியாவில் சீர்திருத்தங்கள் வரவேண்டுமென்று பிரசாரம் செய்ததுதான் அந்த அம்மையார் செய்த குற்றம் என்பதும், அதுவும் உலக மக்களுக்கு நீங்கள்

விடுத்துள்ள செய்திப் பிரகடனம் இந்த நாட்டிலும் மக்களுக்கு வழங்கப்பட்ட அதே சமயம் நிகழ்ந்தது என்பதும் தெரியவரும். மன்னர்பிரானும் பாராளுமன்றமும் இங்குள்ள உண்மை நிலையை அறிந்திருக்கவில்லை. இதை அவர்கள் அறியச் செய்தால் திருமதி பெசன்டை உடனே விடுவிக்க ஆணையிடுவார்கள். இது என் நம்பிக்கை.

''மதிப்பிற்குரிய ஐயா, உலகப் புனருத்தாரணத்திற்குக் கடவுளின் கருவியாக வந்திருப்பவர் தாங்கள் என்ற நம்பிக்கையில் இந்தியாவின் துடிதுடிக்கும் நெஞ்சம் தங்களைக் கூவி அழைக்கின்றது.''

பெசன்டம்மையார் சிறைப்பட்டபின் ஹோம்ரூல் லீகின் கௌரவத் தலைவர் பொறுப்பைத் திரு. மணி ஐயர் ஏற்றார். அந்தப் பொறுப்புடன்தான் வில்சனுக்குச் சரித்திரச் சிறப்புமிக்க கடிதத்தை அவர் எழுதினார்.

அப்போது சென்னை மாகாண ஆளுநராக இருந்த லார்டு பென்ட்லண்ட் என்பவர், மே திங்களில் சட்டமன்றத்தில் நிகழ்த்திய உரையொன்றிலே, ''சுயாட்சி இயக்கம் கடுமையாக ஒடுக்கப்படும்'' என்று பயமுறுத்தினார். அவருக்குப் பதிலளித்து மணி ஐயர் விட்ட அறிக்கை வருமாறு:

> ''சுயாட்சிச் சங்கம் சட்ட விரோதமானதென்று அறிவிக்கப் பட்டாலும், அதில் நான் வகிக்கும் பொறுப்பிலிருந்து விலகமாட்டேன். அதற்காக எந்தத் தண்டனையையும் அனுபவிக்க நான் தயாராக இருக்கிறேன். சுயாட்சிக் கோரிக்கையைக் கடைப்பிடிப்பதே நான் மேற்கொண்ட புனிதமான கடமை. இந்தக் கடமையை நான் நிறை வேற்றியே தீருவேன். இவ்விதமே நடக்கும்படி என் சகோதரர்களாகிய பொது மக்களையும் நான் வேண்டிக் கொள்ளுகிறேன்.''

திரு.வி.க. வின் அரசியல் பிரவேசம்

தமிழ்நாட்டு அரசியலிலேயும் இலக்கியத் துறையிலேயும் பிற்காலத்தில் பீஷ்மரெனத் திகழ்ந்தவரான தமிழ்ப் பெரியார் திரு.வி. கலியாணசுந்தரனார், பெசன்ட் அம்மையார் கைது செய்யப்பட்டபோதுதான் ஆவேசமுற்று அரசியலில் பிரவேசித் தார். அப்போது அவருக்கு வயது 35. சென்னை வெஸ்லி கல்லூரியில் தமிழாசிரியராக வேலை பார்த்து வந்தார். அதை அவரே கூறக் கேட்போம்.

''சுயாட்சி''க் கிளர்ச்சி சண்டதாண்டவம் புரிந்தது. அத்தாண்டவம் நாளுக்கு நாள் எழுச்சியூட்டிக் கொண்டே வந்தது. அன்னிபெசன்ட் அம்மையார் (16-6-1917) காப்பில் வைக்கப் பட்டனர். டாக்டர் சுப்பிரமணியஐயர் ருத்ரமூர்த்தியானார். என் நெஞ்சம் அரசியலில் தோய்ந்தது. சில கூட்டங்களில் நான் பேசுதலும் நேர்ந்தது. கல்லூரி விடுத்து நாட்டிற்குச் சேவை செய்ய வேண்டுமென்ற வேட்கை என்னுள் முருகிக் கிளர்ந்தது. யான் கல்லூரியை விடுத்து திடீரென விலகினேன்.''

(திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புகள்; பக். 245-246)

டாக்டர் சர்.எஸ். சுப்பிரமணிய ஐயர் பெசன்ட் அம்மையாரை 'நடமாடும் கலைமகள்' என்றே வருணித்தார். அம்மையாரிடம் அவருக்கிருந்த பக்தியே படுமிதவாதியாக இருந்த அவரை ஏகாதிபத்தியத்தின் எதிரியாக்கியது.

ராஜாஜியின் அரசியல் பிரவேசம்!

அம்மையார் உதகமண்டலத்தில் காவலிலிருந்து விடுதலை பெற்ற பின்னர், தம் சகாக்களான அருண்டேலுடனும் வாடியாவுடனும் சேர்ந்து, ரெயிலில் பயணம் செய்து சென்னைக்கு வந்தார். இடைவழியிலுள்ள ஒவ்வொரு ரயில் நிலையத்திலும் அம்மையார் ராஜோபசாரத்துடன் வரவேற்று, வழியனுப்பி வைத்தனர் தமிழ் மக்கள்.

இப்படிப்பட்ட உபசாரம் நடக்கும் என்று அரசு முன்கூட்டியே எதிர்பார்த்தது. அதனால், ''அம்மையார் பயணம் செய்யும் ரயில் வரும் நேரத்தில் பிளாட்பாரம் டிக்கெட்டுகளை விற்க வேண்டாம்'' என்று ரெயில்வே அதிகாரிகளை போலீஸ் அதிகாரிகள் கேட்டுக் கொண்டனர். அதன்படி, பிளாட்பாரம் டிக்கெட்டுகள் விற்கப்படவில்லை. சீப்பை ஒளித்து வைத்து விட்டால் கலியாணத்தை நிறுத்தி விடலாம் என்று எண்ணிய 'புத்திசாலி'யைப் போல, பிளாட்பாரம் டிக்கெட் விற்பதை நிறுத்தி விட்டால் நவ பாரதம் படைக்கும் வீராங்கனையை வரவேற்கும் கூட்டத்தைத் தடுத்து நிறுத்தி விடலாம் என்று அரசு எண்ணியது.

சேலம் ரயில் நிலையத்தில் பெசன்ட் அம்மையாரை வரவேற்க ராஜாஜி ஏற்பாடு செய்திருந்தார். ஆனால், அங்கும் பிளாட்பாரம் டிக்கெட்டுகள் விற்கப்படவில்லை. ரயில்வே அதிகாரிகளை அணுகி, அமைதிக்குத் தாம் பொறுப்பேற்பதாக, ராஜாஜி கூறியும் அவர்கள் டிக்கெட் விற்க இணங்கவில்லை.

பெசன்ட் பயணஞ் செய்து வந்த ரயில் சேலத்தை அடைந்த நேரத்திலே, அதுவரை அமைதியாக இருந்த ராஜாஜி ரயில் நிலையத்திற்கு வெளியேயிருந்த மக்களை பிளாட்பாரத்திற்கு வருமாறு சைகையால் அழைப்பு விடுத்து, தாமும் பிளாட் பாரத்திற்குச் சென்றார், ஆம்; டிக்கெட் இல்லாமலே! ராஜாஜியும் சேலம் நகரப் பிரமுகர்களும் பிளாட்பாரத்தை ஆக்கிரமித்துக் கொண்டு, பெசன்டுக்கு வரவேற்பளித்து வழியனுப்பி வைத்தனர்.

சென்னையில் சுயாட்சிச் சங்கம் துவக்கப்பட்டதுமே அதன் கிளை ஒன்று சேலம் நகரிலும் துவக்கப்பட்டது. அதன் சார்பில் தான் பெசன்ட் அம்மையாருக்கு வரவேற்பளித்தார் ராஜாஜி. அதுவே ராஜாஜியின் அரசியல் பிரவேசமாக அமைந்தது.

காங்கிரஸ் வரலாற்றிலே புதிய ஏடு

பெசன்டம்மையாரை காங்கிரஸ் மகா சபையின் தலைவராக்கியதால் தனது வரலாற்றிலே மற்றொரு புதிய ஏட்டினை காங்கிரஸ் சேர்த்தது. காங்கிரஸ் மகாசபை தொடங்கிய பின்னுள்ள நீண்ட வரலாற்றிலே பெசன்டம்மையாரால் தமிழகத்திற்கும் பெருஞ் சிறப்பு கிடைத்தது.

சிதம்பரனார் இரண்டு ஆயுள் தண்டனை அடைந்தபோதும், திலகர் பெருமான் ஆறாண்டுச் சிறைத் தண்டனை பெற்ற போதும், லஜபதிராய் நாடு கடத்தப்பட்டபோதும் ஏற்படாத எழுச்சியை பெசன்டு சிறையில் வைக்கப்பட்டபோது நாடு கண்டது. அதற்குக் காரணம் சிதம்பரனாரும் திலகரும் லஜபதியும் துன்பம் அனுபவித்ததால் மக்கள் அரசியல் ரீதியில் விழிப் படைந்திருந்ததாகும். அத்துடன், சிறைப்பிடிக்கப்பட்ட பெசன்ட் ஒரு பெண்ணாக இருந்ததும் மற்றொரு காரணமாக இருக்கலாம்.

பெசன்ட் கைதியானதன் விளைவுகள்

டாக்டர் அன்னிபெசன்ட் உதகமண்டலத்தில் காவலில் வைக்கப்பட்ட பின்னர், அதன் எதிரொலி நாடெங்கும் ஏற்பட்டது. முஸ்லிம் லீக் தலைவர் ஜனாப் ஜின்னா அரசைக் கண்டித்து அறிக்கை விட்டார். 'காவல் உத்தரவு முட்டாள்தனமானது' என்று வைசிராய்க்குக் கடிதம் எழுதினார் காந்திஜி.

பெசன்ட் சிறைப்பட்டதால் அவருடைய ஹோம்ரூல் லீகின் செல்வாக்கு இந்தியாவில் மட்டுமின்றி, அயல் நாடுகளிலும் அதிகரித்தது. இதற்கு அமெரிக்கத் தலைவர் வில்சனுக்கு டாக்டர்

எஸ். சுப்பிரமணிய ஐயர் எழுதிய கடிதம் பிரிட்டிஷ் பத்திரிகைகளில் வெளியானதும் ஒரு காரணமாகும்.

நாடெங்கும் ஹோம்ரூல் லீகின் கிளைகள் சுமார் 200-க்கு மேல் நிறுவப்பட்டன. தமிழ் நாட்டில் சர்.சி.பி. இராமசாமி ஐயர், திரு.வி. கலியாணசுந்தரனார், 'ஹிந்து' ஆசிரியர் கஸ்தூரிரங்க ஐயங்கார், குத்தி கேசவப் பிள்ளை ஆகியோரும்; வட இந்தியாவில் மோதிலால் நேரு, சர். தேஜ்பகதூர் சாப்ரு, ஜனாப் ஜின்னா, சி.ஆர். தாஸ், ஜவகர்லால் நேரு, ஜெயகர், புலாபாய் தேசாய் ஆகியோரும் ஹோம்ரூல் லீகில் சேர்ந்தனர்.

காந்தியடிகள் யோசனைப்படி பெசன்ட் சிறைப்பட்ட சூன் 16 மாதந்தோறும் தேசமெங்கணும் கொண்டாடப்பட்டது. அன்று ஊர்வலங்களும் பொதுக் கூட்டங்களும் நடத்தப் பெற்றன.

அப்போது, இஸ்லாமிய சமுதாயத்தின் பிரச்சினையில் அரசுக்கு எதிராகச் செயல்பட்டார்கள் என்று கூறி, மௌலானா அலி சகோதரர்களும், மௌலானா அப்துல்கலாம் ஆசாதும் கூடக் காவலில் வைக்கப்பட்டிருந்தனர். இவர்களுடைய விடுதலைக் காகவும் கிளர்ச்சி செய்யப்பட்டது.

பெசன்ட் காவலில் வைக்கப்பட்டிருந்த உதகமண்டலத்தை நோக்கித் தேசத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் ஊர்வலங்கள் செல்ல வேண்டுமென்று காந்தியடிகள் ஆலோசனை கூறினார். ஆனால், அதனால் நாட்டின் அமைதிக்குப் பங்கமேற்படலா மென்று ஐயுற்று, அந்த யோசனை கைவிடப்பட்டது. பெசன்ட் கைது செய்யப்பட்டது பற்றி 20-8-1917 இல் இந்தியா மந்திரி மாண்டேகு லண்டன் பாராளுமன்றத்தில் அறிக்கைவிட்டார்.

பம்பாய், பஞ்சாப், பீகார், சென்னை மாகாணங்களின் காங்கிரஸ் கமிட்டிகள் பெசன்டை விடுதலை செய்யக் கோரி நாடெங்கணும் போராட்டம் நடத்த வேண்டுமென்று தீர்மானங்கள் போட்டன. பெசன்டின் 'நியூ இண்டியா' பத்திரிகையின் செல்வாக்கு வானோங்கி வளர்ந்தது. நாடு முழுவதும் சட்டத்திற்குட்பட்ட ரீதியில் கிளர்ச்சியில் ஓங்கி வளர்ந்த நேரத்திலே, வங்காளம், பஞ்சாப், மகாராஷ்டிர மாநிலங் களிலே பயங்கரப் புரட்சியாளர்களின் வன்முறைப் புரட்சிச் செயல்கள் ஆட்சியை அச்சுறுத்துமளவுக்கு அதிகரித்து வந்தன.

1916-இல் லட்சுமணபுரியில் காங்கிரசுக்கும் முஸ்லிம் லீகுக்குமிடையே ஏற்பட்ட உடன்படிக்கையால் நாட்டில் இந்து -

முஸ்லிம் சமுதாயங்களிடையே ஒற்றுமை உணர்ச்சி அதிகரித்து வந்தது.

இந்திய சட்டசபை உறுப்பினர்களில் 19 பேர் இந்தியாவுக்குச் சுயாட்சி வழங்கக் கோரி கூட்டறிக்கை வெளியிட்டனர். இது, பெருத்த பரபரப்பை உண்டாக்கியது.

இந்த நேரத்தில் ஐரோப்பாவில் நடந்து வந்த யுத்தத்திலே பிரிட்டனுடன் கலந்திருந்த நேசநாடுகளின் அணி தோல்விக்கு மேல் தோல்வி அடைந்து கொண்டிருந்தது.

இந்தியா மந்திரியின் சதி!

இவற்றாலெல்லாம் அதிர்ச்சியடைந்த பிரிட்டிஷ் அரசாங்கம் இந்திய அரசியல் நிலையில் மாறுதல் காண வேண்டியதன் அவசியத்தை உணர்ந்ததாயினும், அதனை நேரிய முறையில் நிறை வேற்ற அதற்கு மனமில்லை. இந்தியாவில் செல்லாக் காசாகி விட்ட மிதவாதிகளுக்குத் திரும்பவும் செல்வாக்குத் தேடித்தரவும், திலகர் - பெசன்ட் போன்ற தீவிரவாதிகளின் செல்வாக்கைக் குறைக்கவும் திட்டமிட்டது. தெற்கே பிராமணர் - பிராமணரல்லாதாரிடையிலும், வடக்கே இந்து - முஸ்லிம்களிடையிலும் பிளவை உண்டாக்கவும் இந்திய வைசிராயும் இந்தியா மந்திரியும் சதி செய்யத் துணிந்தனர்.

★-★-★

சுயாட்சிக் கிளர்ச்சியும் உலகப் பெரும்போரும்

இந்திய சுயாட்சிக் கிளர்ச்சியாலும் உலகப் போராலும் பெரிதும் பாதிக்கப்பட்ட பிரிட்டிஷ் அரசாங்கம் இந்திய அரசியலில் புதிய தந்திரத்தைக் கையாளலானது. இதற்கான முதல் நடவடிக்கையாக, இந்தியாவுக்குச் சுயாட்சி வழங்குவதே பிரிட்டனின் குறிக்கோள் என்றும், அதற்கான நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படுமென்றும் 1916 ஆகஸ்டு 20-இல் இந்தியா மந்திரி மாண்டேகு பார்லிமெண்டில் அறிக்கை விட்டார்.

வழங்கப்படவிருக்கும் அரசியல் சீர்திருத்தம் பற்றி இந்தியத் தலைவர்களுடன் கலந்து ஆலோசிப்பதற்காகத் தாம் விரைவில் இந்தியாவுக்கு வரவிருப்பதாகவும் மாண்டேகு தமது அறிக்கையில் அறிவித்தார்.

இந்தியா மந்திரியின் அறிக்கை வெளியானதை யடுத்துதான் 17-9-1917-இல் பெசன்டம்மையார், டாக்டர் ஜி.எஸ். அருண்டேல், பி.பி. வாடியா ஆகியோர் காவலிலிருந்து விடுதலை செய்யப்பட்டனர்.

இரட்டை வேடம்!

மாண்டேகுவின் அறிக்கையால் மிதவாதிகள் புத்துயிர் பெற்றனர். இஸ்லாமியத் தலைவர்களிலே பிரிட்டிஷ் விசுவாசிகளானோர் வெளிப்படையாக அணி திரளலாயினர். தெற்கிலும் 'பிராமணரல்லாதார்' என்று சொல்லிக் கொண்டு சிலர் புறப்பட்டனர். இவர்களெல்லோரும் மாண்டேகுவின் அறிக்கையை வரவேற்றனர்.

இந்தியாவுக்குச் சுயாட்சி வழங்கப் போவதாக இந்தியா மந்திரி பாராளுமன்றத்தில் அறிக்கை விட்ட 3 வார காலத்திற்குள் இந்திய அரசு ரௌலட் என்ற ஆங்கிலேயர் தலைமையில் ஒரு கமிட்டியை நியமித்தது. அது, 'செடிஷியஸ் கமிட்டி' என்றும் 'ரௌலட் கமிட்டி' என்றும் அழைக்கப்பட்டது.

பயங்கரவாதி களின் வன்முறைச் செயல்களை ஒடுக்குவதற்கு ஆலோசனை கூறுவதற்கான இக்கமிட்டி நியமிக்கப்பட்டது.

ஒருபுறம் சுயாட்சி வழங்கப்போவதாக ஆசைகாட்டி அறிக்கை விட்டு, அதே நேரத்தில் தேச விடுதலைக்கான தீவிர முயற்சிகளை ஒடுக்கும் அடக்குமுறையிலும் அரசு இறங்கியது. ஆம்; இரட்டை வேடம் போட்டது!

கல்கத்தா காங்கிரஸ்

இந்தச் சூழ்நிலையிலே, 1917-ஆம் ஆண்டிற்குரிய 32-ஆவது காங்கிரஸ் மகாசபை கல்கத்தாவில் கூடியது. உலகப் பெரும்போர் உக்கிரமாகியிருந்த நேரத்திலே, ஏகாதிபத்தியங்களின் அஸ்தமனம் தொடங்கிவிட்டதென்பதற்கறிகுறியாக ருஷ்யாவிலே பொது வுடைமை ஆட்சி உதயமாகியிருந்த தருணத்திலே கல்கத்தாவில் காங்கிரஸ் மகாசபை கூடியது!

அந்த மகாசபைக்குச் சென்னைவாசியான டாக்டர் அன்னிபெசன்ட் தலைமை வகித்தார். 32 வயது நிறைவு பெற்று காளைப் பருவத்தை அடைந்திருந்த காங்கிரஸ் மகாசபைக்கு வழி காட்டி நடத்திச் செல்லும் பொறுப்பை 71 வயதை அடைந்திருந்த மூதாட்டியார் ஏற்றார்.

முந்தைய மகாசபைகளிலே 65 வயதுக்குட்பட்டவர்களே தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்க, பெசன்ட் அம்மையார் ஒருவர்தான் 70-க்கு மேற்பட்ட வயதை அடைந்திருந்த முதியவராகத் தலைமைப் பொறுப்பினை ஏற்றார்.

அன்னிபெசன்டுக்கு முன்பும் வெள்ளையர் பலர் காங்கிரஸ் மகாசபைக்குத் தலைமை தாங்கினரென்றாலும், அவரெல்லாம் இந்தியக் குடிகளல்லர்! அன்னியர் என்ற நிலையில்தான் காங்கிரஸ் மகா சபைக்குத் தலைமை தாங்கினர். பெசன்டும் பிறப்பால் அன்னியராயினும், இந்தியாவின் குடிமகளாகத் தம்மைப் பதிவு செய்து கொண்ட இந்தியராகக் காங்கிரஸ் தலைமைப் பொறுப்பை ஏற்றார்.

காங்கிரசுக்காக ஹோம்ரூல் எனும் கொள்கையைத் தந்து, 'ஹோம்ரூல் லீக்' என்னும் துணையமைப்பொன்றையும் படைத்துக் கொடுத்து, தேச மக்கள் நிறைவேற்றுவதற்கான வேலைத் திட்டத்தையும் வழங்கி காங்கிரசின் தலைமைப் பொறுப்பை ஏற்ற பெருமை பெசன்டம்மையார் ஒருவருக்கே உரிமை.

விடுதலைப் போராட்ட காலத்திலே தேசபக்தியுடைய ஒரு இந்தியர் பெறக்கூடிய மிகப் பெரிய பதவி காங்கிரஸ் மகா

சபையின் தலைமைப் பொறுப்பாகவே இருந்தது. ஒரு சமயத்திலே காங்கிரஸ் தலைமைப் பொறுப்பிலிருந்தவரை 'இந்தியாவின் முடிசூடா மன்னர்' என்று காந்தியடிகள் அழைத்தார். அத்தகைய பெரும் பதவியை அரசியல் வாழ்வில் புகுந்த நான்காவது ஆண்டிலேயே பெசன்டம்மையார் பெற்றார்.

ஆயுள் நீடிப்பு!

காங்கிரஸ் தோன்றிய பின்னுள்ள 32 ஆண்டுகளிலே கேரளரான சர். சங்கரன் நாயரும், ஆந்திரரான பி. அனந்தாச்சார்லும், கர்நாடக மரபினரான நவாப் சையத் முகமதுவும் காங்கிரஸ் மகாசபையின் தலைமைப் பீடத்தில் ஏறினர். தமிழ் நாடு தன்னுடைய சொந்த மக்களில் ஒருவர் மூலம் அந்தப் பதவியைப் பெறவில்லையென்றாலும், ஸ்வீகாரப் புதல்வியான டாக்டர் பெசன்டின் மூலம் 1917-இல் முதன் முதலாகத் தலைமைப் பதவியைப் பெற்றது.

பெசன்டம்மையாருக்கு முன் ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலே கூடும் மகா சபைக் கூட்டத்திற்குத் தலைமை வகிப்பதோடு காங்கிரஸ் தலைவர் பதவிக்கான வேலைப் பொறுப்பு முடிந்து வந்தது. ஆனால், டாக்டர் பெசன்ட் தலைவரான ஆண்டிலே தான் ஒரு மகாசபைத் தலைவர் அடுத்த மகாசபை கூடுகின்றவரை காங்கிரஸ் தலைவராக இருந்து, அதன் வேலைகளை கவனிக்கும் புது வழக்கம் அமலுக்கு வந்தது. அது, பிந்தைய ஆண்டுகளிலும் தொடரலானது. முந்தைய ஆண்டுகளில் கூடிய மகா சபைகளிலே தலைமை வகித்தவர்கள் இந்துவாகவோ, கிறித்துவராகவோ, இஸ்லாமியராகவோ, பார்சியாகவோ இருந்தனர். ஆம்; ஏதேனும் ஒரு மதத்தவராக இருந்தனர். இவர்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டு, சர்வ சமய சமரசவாதியாக, வள்ளலார் போதித்தபடி சமயங்கடந்த சமரச சுத்த சன்மார்க்கியாக பெசன்ட் அம்மையார் காங்கிரஸ் தலைமைப் பொறுப்பை ஏற்றார். இது வள்ளலாரைப் பெற்றெடுத்த - தம்மை ஸ்வீகார மெடுத்துக் கொண்ட - தமிழ்நாட்டுக்கு பெசன்ட் அம்மையார் தேடித் தந்த பெருமையாகும்.

'ஆள் காட்டித் துரைசாணி!'

அந்நாளில் வெள்ளையரை 'துரை' என்றும், வெள்ளை நிறப் பெண்மணியைத் 'துரைசாணி' என்றும் தமிழ் மக்கள் அழைத்து வந்தனர். அதன்படி, பெசன்ட் அம்மையாரையும் 'துரைசாணி' என்றே தமிழ் மக்கள் அழைக்கலாயினர்.

நாட்டிலுள்ள சாதாரண மக்கள் அவரை 'ஆள்காட்டித் துரைசாணி' என்ற செல்லப் பெயரால் அழைத்து வந்தனர். சர். ஆல்காட் என்ற அமெரிக்கரைத் தலைவராகக் கொண்ட பிரமஞான சங்கத்தில் பணியாற்றினார் பெசன்ட் அம்மையார். அவருக்குப் பின் சங்கத் தலைமைப் பொறுப்பை தாமே ஏற்றார். அதனால், ''ஆல்காட் துரைசாணி'' என்று அவரை அழைப்பது வழக்கமா யிற்று. அதுவே 'ஆள்காட்டித் துரைசாணி' என்று மருவி வழங்கியது. இத்தகைய சிறப்புகளுக்கெல்லா முரியவரான டாக்டர் பெசன்டம்மையார் தலைமையில் 27-12-1917 அன்று பிற்பகல் சரியாக 2 மணிக்கு கல்கத்தா நகரில் காங்கிரஸ் மகாசபைக் கூட்டம் ஆரம்பமானது.

ஆன்மிக அரசியல்

முதல் நடவடிக்கையாக, ரிக் வேதத்திலிருந்து ஒரு பாடல் பாடப்பட்டது. இது, பெசன்டம்மையாரின் சமரச உணர்வுக்குச் சான்றாகும். அடுத்து வழக்கம்போல வெள்ளைப் புடவை அணிந்த வங்காளப் பெண்கள் 'வந்தே மாதரம்' பாடினர்.

பின்னர், கவி ரவீந்திரநாத் தாகூர், தம்முடைய பாடல்களில் மிகச் சிறந்த ஒரு பாடலைத் தாமே பாடினார். இப்புதுமைகளுக் கெல்லாம் காரணம், அம்மையார் சமயங் கடந்த ஒரு கலாசார இயக்கத்தின் தலைவியாக இருந்த நிலையில் கல்கத்தாக் காங்கிரசுக்குத் தலைமை வகித்ததுதான்.

அரசியலிலே ஆன்மிகத்தைக் கலக்கவிருக்கும் 'காந்தியம்' தோன்றிக் கொண்டிருந்த நேரத்திலே, அதற்கு முன்னோடியாக, தலைசிறந்த ஆன்மிகவாதியான பெசன்டம்மையார் காங்கிரஸ் மகாசபையின் தலைமைப் பொறுப்பை ஏற்றார்.

சென்னைவாசியான பெசன்டம்மையார் காங்கிரஸ் மகாசபையின் தலைமைப் பொறுப்பை ஏற்ற நேரத்திலே மற்றிரு சென்னைவாசிகளான நவாப் சையது முகம்மது, என், சுப்பாராவ் பந்துலு ஆகியோர் காங்கிரஸ் மகாசபையின் பொதுச் செயலாளர் களாக இருந்தனர். தலைமைப் பொறுப்பை ஏற்றபின் சர். சி.பி. ராமசாமி ஐயர், வடாற்காடு வாசியான திரு. கேசவப் பிள்ளை ஆகிய இரு தமிழரை பொதுச் செயலாளராக்கினார் பெசன்ட்.

இதற்கு மூன்றாண்டுகள் கழித்துப் பண்டித மோதிலால் நேருவுடன் மூதறிஞர் ராஜாஜி பொதுச் செயலாளராக ஓராண்டுக்காலம் இருந்து வந்தார்.

கல்கத்தா காங்கிரசிலே 4967 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இது, 1916-ஆம் ஆண்டில் கூடிய காங்கிரசில் கலந்து கொண்ட பிரதிநிதிகளின் எண்ணிக்கையைப் போல இரண்டு மடங்காகும். பார்வையாளர் பதினாயிரக் கணக்கில் பந்தல் கொள்ளாதபடி குழுமியிருந்தனர்.

பெசன்டின் தலைமையுரை

காங்கிரஸ் மகா சபையிலே தலைமையுரையை ஆங்கிலத்தில் முன்கூட்டியே தயாரித்து அச்சடித்து அதைப் பலமணி நேரம் படிப்பதுதான் வழக்கம். பெசன்டின் தலைமையுரையும் அந்த வழக்கத்தை யொட்டியதாகவே இருந்தது. ஆனால், முந்தைய தலைவர்களையெல்லாம் விஞ்சிடும் வகையில் மிக நீண்டதாக இருந்தது பெசன்டின் தலைமையுரை. ஆம்; 87 பக்கங்களைக் கொண்டது.

அவர் தமது தலைமையுரையிலே மாநிலங்களை மொழிவாரி பிரிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். அதையும் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் செய்ய வேண்டும் என்றும் கூறினார்.

''பொதுமக்களுடைய அறிவு வளரவும் ஆற்றல் பெருகவும் வேண்டுமானால், அவர்களுடைய வாழ்வில் எங்கும் எதிலும் அவர் தம் தாய்மொழியே முதலிடம் பெற வேண்டும். அப்போது தான் பிரிட்டிஷாரிடமிருந்து கிடைக்கும் அதிகாரங்கள் நேராக மக்கள் கைக்குப் போய்ச் சேரும்'' என்றும் பெசன்ட் வலியுறுத்தினார். முந்தைய மகாசபைகளின் தலைவர்களிலே எவரும் பிரதேச மொழிகளின் உரிமை பற்றி இவ்வளவு திடமாகவும் தீவிரமாகவும் பேசியதில்லை.

சாதாரண மக்களின் வாழ்வில் எங்கும் எதிலும் அவர்கள் தாய்மொழியே முதலிடம் பெற்றால்தான் பிரிட்டிஷாரிடமிருந்து கிடைக்கக்கூடிய அதிகாரங்கள் அவர்கள் கைக்குப் போய்ச் சேரும் என்று பெசன்டம்மையார் கூறியது ஆழ்ந்த சிந்தனைக்குரியதாகும். உண்மையில் நாடு பெறக்கூடிய சுதந்திரத்தின் பலனை மக்கள் அவர்கள் தாய்மொழியின் மூலமாகத்தான் அனுபவிக்க முடியும். இதனை விரும்பாத சுயநலவாதிகள் தான் ஆங்கில ஆதிக்கம் நீடிப்பதை விரும்ப முடியும். பெசன்டம்மையார், சென்னை மாகாணத்தில் அப்போதுதான் தோன்றிக் கொண்டிருந்த பிராமணரல்லாதார் இயக்கம் பற்றியும் தமது உரையிலே குறிப்பிட்டார்.

தமது உரையின் முடிவிலே பெசன்டம்மையார் கீழ்வருமாறு முழக்கம் செய்தார்:

''சகோதரப் பிரதிநிதிகளே, உங்கள் வாய்கள் இந்திய விடுதலை பற்றியே பேசட்டும்;

''உங்கள் காதுகள் இந்திய விடுதலை பற்றிய செய்திகளையே கேட்கட்டும்;

''உங்கள் கண்கள் இந்திய விடுதலைக்கான நிகழ்ச்சிகளையே காணட்டும்;

''உங்கள் நெஞ்சங்கள் இந்திய விடுதலை பற்றியே சிந்திக்கட்டும். வந்தே மாதரம்''

தமிழகத்தின் தத்துவப் புதல்வியான டாக்டர் பெசன்ட் கல்கத்தா காங்கிரசிலே செய்த முழக்கத்தை நாடு சுதந்திரம் பெற்றுள்ள சூழ்நிலையில் இன்று படித்தாலும் உணர்ச்சி பொங்கியெழுகிறதென்றால், அன்று நேரில் கேட்டவர்கள் நிலையை சொல்லவா வேண்டும்! அவர்கள் மிகுந்த பாக்கியசாலிகள்! சங்ககாலத்து ஔவையாரே மறுபிறவியெடுத்து, கல்கத்தா காங்கிரசுக்குத் தலைமை வகித்துப் பேசினாரோ என்று தோன்றுகிறது! வாழ்க, பெசன்ட் அம்மையார் புகழ்!

முற்போக்கான தீர்மானங்கள்

கல்கத்தாவிலே தென்னிந்தியாவை மொழிவாரி ராஜ்யங்களாகப் பிரிக்குமாறு - குறிப்பாக, ஆந்திராவை சென்னை மாகாணத்திலிருந்து பிரித்துத் தனியரசு மாநிலமாக்குமாறு கோரும் தீர்மானம் ஒரு மனதுடன் நிறைவேற்றப்பட்டது. வழக்கம்போல, கல்கத்தா காங்கிரசிலும் பிரிட்டிஷ் அரசருக்கு விசுவாசம் தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சிறை வைக்கப்பட்டிருந்த அலி சகோதரர்களை விடுதலை செய்யக் கோரும் தீர்மானமும் நிறைவேற்றப் பெற்றது.

அப்போது தமிழ் நாட்டிலுள்ள வேலூர் மத்திய சிறையில் வைக்கப்பட்டிருந்த லாலா அர்ச்சுனலால் சேத்தி என்ற ஜெயின் பிரமுகர், சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டு மரணத்தறு வாயிலிருந்ததால், அவரை உடனடியாக விடுதலை செய்யக் கோரும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

இந்தியாவுக்கு எத்தகைய அரசியல் சீர்திருத்தம் தேவைப் படுகிறதென்பது பற்றி இந்தியத் தலைவர்களுடன் விவாதித்தறிய

இந்தியாவுக்கு வருகை தரவிருக்கும் இந்தியா மந்திரி மாண்டேகு வுக்குச் சிறப்பான முறையில் வரவேற்பு அளிப்ப தென்ற தீர்மானமும் நிறைவேறியது. மற்றத் தீர்மானங்க ளெல்லாம் முந்தைய மகா சபைகளிலே நிறைவேற்றப் பட்டவையே.

கல்கத்தா காங்கிரசிலே ரௌலட் கமிட்டி நியமனத்தைக் கண்டிக்கும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. ''இந்தக் கமிட்டி நியமனமானது பிரிட்டிஷார் ஒரு கையால் கொடுக்கும் அரசியல் சீர்திருத்தத்தை மற்றொரு கையால் பறிப்பது போலாகும்'' என்று தீர்மானம் கூறியது.

''பிரிட்டிஷாருக்கு இந்தியாவுக்குச் சுயாட்சி வழங்கும் விருப்பம் உண்மையிலேயே இருக்குமானால், அதற்கு அடையாள மாக காங்கிரஸ் - லீக் உடன்படிக்கையை ஏற்கட்டும்'' என்றும் கல்கத்தா மகாசபை கோரியது.

தலைவரின் தனிச் செய்தி

1916 வரை காங்கிரஸ் தலைவரின் உரை மகாசபையில் படிப்பதோடு சரி; பத்திரிகைகளில் அது சுருங்கிய அளவில் வெளிவரும். இது தவிர, மகாசபைத் தலைவர் மக்களுக்கு விசேஷ செய்தி எதையும் விடுவதில்லை. இந்த வழக்கத்திற்கு மாறாக, 1917-இல் டாக்டர் பெசன்ட் அவர்கள், தலைமையுரை நிகழ்த்திய தோடன்றி, தேச மக்களுக்கு விசேஷச் செய்தியொன்றையும் தனியாக வெளியிட்டார்.

காங்கிரஸ் மகாசபை கல்கத்தாவில் கூடிய நாளிலே, தேசமெங்கனும் வாய்ப்புள்ள இடங்களிலெல்லாம் பொதுக் கூட்டங்கள் நடத்தி, அவற்றில், காங்கிரஸ் தலைவர் விடுத்த விசேஷச் செய்தியும் அவரது தலைமை உரையும் படிக்கப்பட்டன. சென்னை நகரில் நடைபெற்ற கூட்டத்திலே திரு.வி. கலியாண சுந்தரனார், காங்கிரஸ் தலைவரின் செய்தியையும் தலைமை யுரையையும் படித்தார்.

சர்வதேச அரசியலும் விடுதலைப் போரும்

டாக்டர் பெசன்ட் தலைமையில் நடைபெற்ற கல்கத்தாக் காங்கிரசோடு இந்திய விடுதலைப் போர் வரலாற்றிலே 1917-ஆம் ஆண்டு நிறைவு பெறுகிறது. அடுத்துள்ள 1918-ஆம் ஆண்டில் புகுவதற்கு முன், இந்திய விடுதலைப் போருடன் தொடர்புடைய சர்வதேச அரசியலையும் சிறிது விவரிக்க வேண்டியது அவசியமாகிறது.

இந்தியாவில் ஹோம்ரூல் இயக்கம் வளர்ச்சி பெற்றிருந்த கட்டத்திலே சர்வதேச அரசியலில் இரண்டு முக்கியச் சம்பவங்கள் நிகழ்ந்து கொண்டிருந்தன. ஒன்று, முதலாவது உலகப் பெரும் போர்! மற்றொன்று, ருஷ்யாவில் ஜார் ஆட்சியை எதிர்த்து கம்யூனிஸ்டுகள் நடத்தி வந்த வர்க்கப் புரட்சி.

உலகப் பெரும்போரில் *4-8-14*-இல் இந்தியாவின் மீது ஆதிக்கம் பெற்றிருந்த பிரிட்டன் ஈடுபட்டது. அதனுடன் பிரான்சும், ஜார் ருஷ்யாவும் தோழமை கொண்டு போரில் இறங்கின. பின்னர், இந்த நாடுகளுடன் ஜப்பானும் இணைந்து கொண்டது.

கெய்சர் என்பான் தலைமையில் இயங்கிய ஜெர்மனிக் கெதிராகவே பிரிட்டனும் அதன் நேச நாடுகளும் போர் செய்தன. ஜெர்மனியுடன் ஆஸ்திரேலியா, இத்தாலி ஆகிய நாடுகள் கூட்டு சேர்ந்து போர் புரிந்தன. பின்னர், துருக்கியும் இணைந்து கொண்டது. போரின் ஒரு கட்டத்திலே அமெரிக்காவும் பிரிட்டன் தலைமையில் இயங்கிய நேச நாடுகள் அணியில் சேர்ந்து கொண்டது. நான்காண்டுகள் போர் நடந்த பின், *11-11-1918*-இல் ஜெர்மனியும் அதன் கூட்டாளி நாடுகளும் வீழ்ச்சியுற்றன. பிரிட்டனும் அதன் நேச நாடுகளும் வெற்றி பெற்றன. போர் ஒரு முடிவுக்கு வந்தது. இந்தப் போரிலே மாண்டவர் தொகை எண்பது லட்சம்!

உலகப்போர் நடந்து கொண்டிருந்தபோதுதான் இந்தியா தனது விடுதலைப் போரைத் தீவிரப்படுத்திக் காட்டியது. உலகப் போர் தொடங்கிய ஆண்டில்தான் டாக்டர் அன்னிபெசன்ட் காங்கிரஸ் மகாசபைக்குள் பிரவேசித்தார். அந்த ஆண்டில் தான் சென்னையில் காங்கிரஸ் மகாசபை கூடியது. தோன்றியுள்ள உலகப்போரில் பிரிட்டனை ஆதரிப்பதென்ற தீர்மானமும் நிறை வேற்றப் பெற்றது. இந்த மகாசபைக்குச் சென்னை கவர்னர் பென்ட்லண்ட் தமது மனைவியாருடனும் பரிவாரங்களுடனும் வருகை தந்தார் என்பதை முன்னரே அறிந்தோம். அவருடைய வருகையின் விசேஷத்தாலோ என்னவோ, யுத்தத்தில் பிரிட்டன் வெற்றி பெற வேண்டுமென்று காங்கிரஸ் மகாசபை தீர்மானம் போட்டது.

உலகப் பெரும் போரிலே இன்று நினைத்தாலும் மயிர்க்கூச் செறியத்தக்க ஒரு வீரச் செயலை நிகழ்த்தியது பெல்ஜிய நாடு. ஜெர்மனிக்கும் பிரான்சுக்கும் நடுவிலிருக்கிறது பெல்ஜியம். பிரான்சுக்குள் தன் படையை அனுப்பி வழிவிடும்படி பெல்ஜியத்தைக் கேட்டது ஜெர்மனி. பெல்ஜிய அரசு, ''பெல்ஜிய நாடு பாதையல்ல! வருகிறவன் போகிறவனுக்கெல்லாம் வழ

கொடுக்க; இது ஒரு தேசம்'' என்று வீரத்துடன் கூறி, வழிவிட மறுத்துவிட்டது. பின்னர், பெல்ஜியத்தைத் தாக்கி அதன் வழியாக பிரான்சுக்குள் புகுந்தன ஜெர்மன் படைகள். ஆம்; பெல்ஜியம் வீழ்ச்சியுற்றது. அதன் வீரத்தைப் புகழ்ந்து கவிதை பாடினார் கவிஞர் பாரதியார். முறத்தினால் புலியையோட்டும் மொய்வரைக் குறப் பெண்ணை உவமை காட்டி, படைபலம் மிக்க ஜெர்மனியை எதிர்த்து நின்ற பெல்ஜியத்திற்கு வாழ்த்துக் கூறினார். வாழ்த்து வீழ்ச்சிக்கல்ல; வீரத்திற்கு!

பெசன்டின் கேள்வி

உலகப் பெரும்போர் நடந்து கொண்டிருந்த நேரத்திலே இந்திய மக்கள் தங்கள் தாயகத்தின் விடுதலைக்கான கிளர்ச்சியை அடியோடு நிறுத்தி வைக்க வேண்டுமென்று பிரிட்டன் எதிர்பார்த்தது. இதற்கு மாறாக யுத்தத்திலே இந்தியாவின் மனப்பூர்வமான ஆதரவைப் பிரிட்டன் பெற வேண்டுமானால், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு உட்பட்ட சுயாட்சி அந்தஸ்தை யுத்த காலத்திலேயே இந்தியாவுக்கு வழங்க வேண்டும் என்று பெசன்ட் கோரினார். கல்கத்தா காங்கிரஸ் தலைமையுரையிலே, ''பிரிட்டனுக்கு எது கஷ்ட காலமோ, அதுவே இந்தியாவுக்கு நல்ல காலம்'' என்று மிகுந்த துணிவோடு பெசன்ட் கூறினார்.

''இந்தியா சுயாட்சி கோருவது, பிச்சைப் பொருளாக அல்ல; பிறப்புரிமையாக!'' என்றும் கூறினார். ஐரோப்பியப் போர்க்களத்திலே, ஜெர்மன் படைகளை எதிர்த்து இந்தியப் படைகள் வீர சாகசங்கள் புரிகின்றன என்று செய்திகள் வந்து கொண்டேயிருந்த காலம் அது. ''அந்த வீர சாகசங்களுக்கு பிரிட்டன் வழங்கும் சன்மானம் என்ன?'' என்று கேட்டார் பெசன்ட். ''அந்தச் சன்மானம் இந்தியாவுக்குச் சுயாட்சி வழங்குவதாகத்தான் இருக்க முடியும்'' என்றும் அவரே விடையளித்தார்.

பாரதியாரின் விருப்பம்

யுத்த காலத்திலே இந்தியாவுக்குச் சுயாட்சி வழங்க வேண்டுமென்ற கோரிக்கைக்கு ஆதரவாக வலுவான கிளர்ச்சி எழுந்தது. மக்களுடைய கோரிக்கையை எழுத்து மூலமான விண்ணப்பமாகத் தயாரிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இம் முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்ற விருப்பத்தை *1916*-லேயே பாரதியார் எழுப்பினார். 'சுய ஆட்சியைப் பற்றி ஒரு

யோசனை' என்னும் தலைப்பிட்டு, 25-5-1916 'சுதேச மித்திரன்' இதழில் பாரதியார் எழுதியது வருமாறு:

> "பாரத நாட்டுக்கு உடனே சுயாட்சி கொடுக்க வேண்டுமென்ற கருத்துடன் ஒரு பெரும் விண்ணப்பம் தயார் செய்து, அதிலே மாகாணந்தோறும் லக்ஷக்கணக்கான ஜனங்கள் கை எழுத்துப் போட்டு இந்த க்ஷணமே பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கு அனுப்ப வேண்டும்.
>
> "ஐரோப்பாவுக்கு ஏற்படும் யுத்த நெருக்கடியிலே பிரிட்டிஷ் ராஜாங்கத்துக்குச் செலுத்த வேண்டிய கடமை தவறிப் போகுமென்று சொல்லி நமது முன்னேற்றத்தைத் தடுக்க விரும்புவோரின் அர்த்தமில்லாத வார்த்தையைக் கருதி இக்காரியத்தை நிறுத்தி வைக்கலாகாது. அயர்லாந்து, போலந்து என்ற தேசங்களின் திருஷ்டாந்தத்தைக் காட்டலாம்."

முதலாவது உலகப் பெரும் போரின்போது அயர்லாந்தும் போலந்தும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலிருந்து விடுதலை பெறப் போராடிக் கொண்டிருந்தன. அதுபோல, போர்க் காலத்திலேயே சட்ட ரீதியான முறைகளில் விடுதலையைக் கோரி பிரிட்டனுக்கு விண்ணப்ப மனு அனுப்ப வேண்டுமென்று பாரதியார் கூறினார்.

சுயாட்சி கோரும் விண்ணப்பம் லட்சக்கணக்கான இந்திய மக்களின் கையொப்பங்களோடு 1917-இல் பிரிட்டனுக்கு அனுப்பப் பட்டது. தமிழ்நாட்டிலே, அந்த விண்ணப்பத்தில் முதன் முதலாகக் கையொப்பமிட்டவர் சென்னை உயர்நீதி மன்றத்தின் முன்னாள் நீதிபதியான சர்.எஸ்.சுப்பிரமணிய ஐயராவார். அடுத்தவர், 'இந்து' ஆசிரியர் திரு. கஸ்தூரிரங்க ஐயங்காராவார். திரு.சி.பி. ராமசாமி ஐயர், தமிழ்நாட்டின் சார்பில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்திலே பம்பாயிலிருந்தபடி கையொப்பமிட்டு அனுப்பினார்.

லோகமான்ய திலகர் உலகப் பெரும் போரில் பிரிட்டனும் அதன் நேச நாடுகளும் வெற்றி பெறுவதையே தாம் விரும்புவதாக வெளிப்படையாக அறிக்கை விடுத்தார். அப்படியிருந்தும், இங்குள்ள அதிகார வர்க்கம் அவரைச் சந்தேகித்தது. அவருடைய நடமாட்டத்திற்குத் தடை விதித்தது. பொதுக் கூட்டங்களிலே, அவர் பேசுவதற்கு முன்பாக, தாம் பேசப்போகும் விஷயத்தைப் பற்றி ஸ்தல அதிகாரிகளுக்கு அறிவிக்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்து அவரை அவமதித்தது. நன்னடத்தை ஜாமீன் கோரி அவர்மீது வழக்கும் தொடுத்தது.

டாக்டர் பெசன்டின் ஆதரவோடு சென்னை *(1914)* காங்கிரசில் யுத்த ஆதரவுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டும் அவ்வம்மையாரையும் சந்தேகித்தது அரசு வர்க்கம். யுத்தத்திற்கு எந்தவிதமான எதிர்ப்பும் காட்டாத் நிலையிலே பெசன்டையும் அவரது சகாக்கள் இருவரையும் உதகையில் காவல் வைத்தது. யுத்த காலத்திலே ஒன்றன்பின் ஒன்றாகப் பல அடக்குமுறைச் சட்டங்களை ஆட்சி அமுலுக்குக் கொண்டு வந்தது.

யுத்த காலத்தில் பிரிட்டனின் தோழமை நாடாக விளங்கிய ருஷ்ய நாட்டிலே, *1917* நவம்பரில் கம்யூனிஸ்டுப் புரட்சி வெற்றிபெற்று, ஜார் சக்கரவர்த்தியின் ஆட்சி வீழ்ச்சியுற்றது. கொடுங்கோலன் ஜார் புரட்சியாளரால் கொல்லப்பட்டான். ஆம் ஜார் ரஷ்யா, சோவியத் ரஷ்யாவாக மாறியது.

ஜாரின் வீழ்ச்சி பிரிட்டனுக்குப் பெரிய அதிர்ச்சியைத் தந்தது. பொதுவுடைமை அரசு தோன்றியபின் சோவியத் ருஷ்யா யுத்தத்திலிருந்து விலகிக் கொள்வதாகப் பிரகடனம் செய்தது. இதனால், நேச நாடுகளின் அணி பலவீனம் அடைந்தது.

ருஷ்யாவில் ஜார் ஆட்சி வீழ்ச்சியுற்றுப் பொதுவுடைமை ஆட்சி தோன்றியதானது, இந்திய விடுதலை வீரர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது. பாரதியார், 'புதிய ருஷ்யா' என்னும் தலைப்புத் தந்து, சோவியத் ருஷ்யாவை வரவேற்றுக் கவிதை பாடினார். இது, இந்திய விடுதலை வீரர்களிலே தீவிரவாதிகளாக இருந்தவர்களின் எண்ணத்தை எதிரொலித்ததாகும்.

தூத்துக்குடியில் சுதேசிக் கிளர்ச்சி உச்ச கட்டத்திலிருந் போது, வ.உ.சிதம்பரனாரும், சுப்பிரமணிய சிவாவும் 1905-இல் ஜார் ருஷ்யாவில் நடந்த வர்க்கப் புரட்சியை ஆதரித்துப் பேசினார்கள் என்று அவர்கள் மீது நடந்த வழக்கிலே போலீஸ் தரப்பில் சொன்ன சாட்சிகள் கூறின.

இப்படி, இந்தியாவில் சுயாட்சிக் கிளர்ச்சி வலுவடைந்து, உலக யுத்த அரங்கிலே பிரிட்டன் தோல்விக்கு மேல் தோல்வியடைந்து, ருஷ்யாவிலே ஜார் ஆட்சி வீழ்ச்சியுற்றுப் பொதுவுடைமை ஆட்சி தோன்றிக்கொண்டு வந்த நேரத்திலேதான் இந்தியா மந்திரி மாண்டேகு, 'இந்தியாவுக்கு விரைவில் சுயாட்சி வழங்குவதே பிரிட்டிஷ் அரசின் கொள்கை' என்று லண்டன் பார்லிமெண்டிலே பிரகடனம் விடுத்தார்.

★-★-★

பிரிட்டிஷாரின் பிரித்தாளும் தந்திரம்!

இந்திய விடுதலைப் போர் தீவிரமடைந்த நேரங்களில் எல்லாம் அதனுடைய வேகத்தைத் தணிப்பதற்காக அற்ப சொற்ப அளவில் அரசியல் சீர்திருத்தங்கள் வழங்குவது பிரிட்டிஷாரின் ராஜதந்திர நடவடிக்கையாக இருந்திருக்கிறது.

1857 முதல் 1917 வரை

1857-இல் சிப்பாய்ப் புரட்சி தீவிர எழுச்சி கொண்டபோது அதை முடிவுக்குக் கொண்டு வருவதற்காகப் பிரிட்டிஷ் சக்கரவர்த்தினியான விக்டோரியா ராணியார் ஒரு பிரகடனத்தை வெளியிட்டார். அதிலே அரசியல் ரீதியான பல உறுதி மொழிகளை அள்ளி வீசினார். புரட்சி பிசுபிசுத்துப் போனதற்கு ராணியாரின் பிரகடனமும் ஒரு காரணமாகும்.

அதுபோல, 1905-இல் வங்கப் பிரிவினை ஏற்பட்டபோதும், அதனை எதிர்த்துக் கிளம்பிய அரசியல் கிளர்ச்சியும் சுதேசி இயக்க எழுச்சியும் பிரிட்டிஷ் ஆட்சியாளருக்கு அச்சத்தைத் தந்தன. ஆகவே, அந்த எழுச்சியையும் கிளர்ச்சியையும் ஒடுக்கும் உள் நோக்குடன் 1909-இல் மிண்டோ - மார்லி சீர்திருத்தம் வழங்கப் பெற்றது.

இந்த வழக்கப்படி, 1915 தொடங்கி 1917 வரை 'ஹோம் ரூல்' கிளர்ச்சி உச்சகட்டத்தில் இருந்தபோதும், இந்தியாவுக்குச் சுயாட்சி வழங்கப்படுமென லண்டன் பாராளுமன்றத்தில் இந்தியா மந்திரி மாண்டேகு ஒரு பிரகடனத்தை வெளியிட்டார்.

லீக் தோன்றியதேன்?

அரசியல் சீர்திருத்தத்தை வழங்கிய ஒவ்வொரு சந்தர்ப்பத்தி லும் அந்தச் சீர்திருத்தமானது தேச பக்தர்களான தீவிரவாதிகள்

கைக்குப் போய்விடாதபடிச் செய்வதற்காக பிற்போக்காளர்களை ஒன்று திரட்டி, புதிய புதிய கட்சிகளைத் தோற்றுவிப்பதையே ஒரு தொண்டாகக் கொண்டிருந்தது பிரிட்டிஷ் அரசு.

வங்கப் பிரிவினையை யடுத்து மிண்டோ - மார்லி சீர்திருத்தம் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டபோது, அதற்கான மசோதாவை நாடாளுமன்றத்தில் சட்டமாக்குவதற்கு முன்பு அனைத்திந்திய ரீதியில் பிரிட்டிஷ் விசுவாசிகளாக இருந்த முஸ்லிம் பிரமுகர்களைக் கொண்ட அரசியல் கட்சி ஒன்றை உருவாக்க அப்போதைய வைசிராய் முயற்சி செய்தார். அதன் விளைவாக, *1906* டிசம்பர் *31*- ஆம் தேதி கிழக்கு வங்காளத்தின் தலைநகரான டாக்காவில் நடைபெற்ற முஸ்லிம்கள் அடங்கிய ஒரு மாநாட்டிலே 'அனைத்திந்திய முஸ்லிம் லீக்' தொடங்கப் பெற்றது.

பிரிட்டிஷாரின் தூண்டுதல் பேரில் முஸ்லிம்களுக்காகத் தனித் தொகுதி கோரியது முஸ்லிம் லீக். டாக்கா மாநாட்டிலே, லார்டு கர்சான் நடைமுறைப்படுத்திய வங்கப் பிரிவினையை ஆதரித்தும், அதனை எதிர்த்தும் நடந்த கிளர்ச்சியைக் கண்டித்தும் பிரிட்டிஷ் பொருள்களைப் பகிஷ்கரிக்கும் குறிக்கோளுடன் நடைபெற்ற சுதேசி இயக்கத்தை எதிர்த்தும் தீர்மானங்கள் நிறைவேவற்றப்பட்டன.

மிண்டே - மார்லி சீர்திருத்தத்தை வழங்கியபோது கடைப்பிடித்த அதே பிரித்தாளும் தந்திரத்தை மாண்டேகு - செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தை வழங்க முன்வந்த இப்போதும் பிரிட்டிஷ் அரசு கடைப்பிடித்தது. அதிலே, கிறிஸ்துவர்களுக்கும் ஆங்கிலோ - இந்தியருக்கும் ஆங்கிலேயருக்கும் தோட்ட முதலாளிகளுக்கும் நிலச்சுவான்தார்களுக்கும் வர்த்தக சமூகத்தினருக்கும் தனித் தொகுதிகள் அமைக்கப்படுமெனப் பிரிட்டிஷ் அரசு அறிவித்தது.

இதற்கெல்லாம் மேலாகத் தென்னிந்தியாவிலே ஒரு புதிய சாதி வழிக் கட்சியைத் தோற்றுவிக்க பிரிட்டிஷார் முயன்றனர். சென்னை மாகாண இந்துக்களைப் பிராமணர் என்றும் பிராமணரல்லாதார் என்றும் பிரித்தாள முயன்றனர்.

தமிழினத்தைப் பிளக்க...

1917 ஆகஸ்டு *20*-இல் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் இந்தியா வுக்குச் சீர்திருத்தம் வழங்கப்போவதாக மாண்டேகு அறிவித்தா

ரென்றாலும், அதற்கு ஓராண்டுக்கு முன்னதாகவே - அதாவது, 1916-இல் இந்தியாவுக்கு அரசியல் சீர்திருத்தம் வழங்கப்படலா மென சூசகமாக ஒரு சொற்பொழிவிலே அவர் அறிவித்திருந்தார். அதை ஒரு ஆதாரமாக வைத்துக் கொண்டு, சென்னை கவர்னரின் உதவியோடு, தென்னிந்தியர்களைப் பிரித்தாள முயற்சி எடுத்தார் அப்போதைய வைசிராய் லார்டு செம்ஸ்போர்டு.

மாண்டேகு - செம்ஸ்போர்டு சீர்திருத்தம் பொதுப்படை யாக அறிவிக்கப்பட்டபோது, மாகாண அளவில் நீதிபதி களாகவும், அரசு இலாக்காக்களில் செயலர்களாகவும், சென்னை கவர்னரின் நிர்வாக சபை உறுப்பினராகவும், வைசிராய் - நிர்வாக சபையின் உறுப்பினர்களாகவும் இருந்த தென்னிந்தியர்கள் எல்லாம் அனேகமாகப் பிராமணர்களாகவே இருந்தனர்.

சுருங்கச் சொன்னால், 1909-இல் வழங்கிய மிண்டோ - மார்லி சீர்திருத்தத்தைச் சென்னை மாகாணத்தைப் பொறுத்த வரையில் பிராமணர்களே அதிகப்படியாக அனுபவித்தனர்.

இதை எடுத்துக்காட்டி, வரவிருக்கும் மாண்டேகு - செம்ஸ்போர்டு சீர்திருத்தமும் பிராமணர் கைக்குப் போய்விடும் என்று சென்னை கவர்னரும், வெள்ளை அதிகார வர்க்கத்தினரும் பிராமணரல்லாதாரிடையே ஒரு பயத்தைக் கிளப்பி விட்டனர். அதனால், மாண்டேகு - செம்ஸ்போர்டு சீர்திருத்தம் நடை முறைக்கு வருவதற்கு முன்பே சென்னை மாகாணத்தில் பிராமணரல்லாதாருக்கென அரசியல் கட்சி ஒன்று தேவை என்பது உணர்த்தப்பட்டது.

அரசியல் மாறுதல்

மிண்டோ - மார்லி சீர்திருத்தம் வழங்கப்பட்டபோது சீர் திருத்தமானது பிராமணர் கைக்குப் போகும் என்பதை அப் போதைய சென்னை கவர்னரும், அவருடைய அதிகார வர்க்கமும் அறிந்திருந்தும், அதைத் தவிர்ப்பதற்கு பிராமணரல்லாதார் கட்சியைத் தோற்றுவிப்பதற்கான முயற்சி எதிலும் ஈடுபட வில்லை. ஏனெனில், அக்கால அரசியல் பிராமணர்களில் பெரும் பாலோர் பிரிட்டிஷ் விசுவாசிகளாக இருந்தார்கள். காங்கிரசிலே தீவிரவாதிகள் தலையெடுக்காதபடி அவர்களை ஒடுக்குவதிலே சென்னை மாகாண அரசோடு வெளிப்படையாகவே ஒத்துழைத் தார்கள். திலகரையும் அவருடைய சகாக்களான வ.உ.சி., சிவா, பாரதி ஆகியோரையும் பயங்கரமான தொழு நோயைப் போலக் கருதி, அவர்களிடமிருந்து மக்கள் ஒதுங்கிவிட வேண்டுமென்றுகூடப் பிரசாரம் செய்தனர். அதனால், பிராமண

மிதவாதிகள் மிண்டோ - மார்லி சீர்திருத்தத்தை அனுபவித்ததிலே பிரிட்டிஷார் கவலைப்பட வில்லை. அவர்களை ஊக்குவித்து, உத்தியோகங்கள் வழங்குவதிலும் அக்கறை காட்டினர். ஆனால், மாண்டேகு - செம்ஸ்போர்டு சீர்திருத்தம் நடைமுறைக்கு வரவிருந்த நேரத்திலே தமிழ்நாட்டுக் காங்கிரசானது மிதவாதிகள் ஆதிக்கத்தில் இல்லை. பெசன்ட் அம்மையாரின் செல்வாக்கின் கீழ்ப் போய்விட்டது. அதற்கு முன் படுமிதவாதியாக இருந்த - நீதிபதி பதவிகூட வகித்த - சர்.எஸ். சுப்பிரமணிய ஐயர், பெசன்ட் அம்மையாரைக் கைது செய்ததைக் கண்டித்துச் 'சர்' பட்டத்தைத் துறக்குமளவுக்குத் தீவிரவாதியாகி விட்டார். சர்.சி.பி. இராமசாமி ஐயர்கூட, மிதவாதத்துக்குத் தலைமுழுக்குப் போட்டுவிட்டு, டாக்டர் பெசன்டுடன் சேர்ந்துகொண்டு, அனைத்திந்திய காங்கிரசின் பொதுச்செயலாளராகி விட்டார். 'இந்து' ஆசிரியர் ஏ. அரங்கசாமி ஐயங்காரும் பெசன்ட் பக்தராகி விட்டார்.

கவர்னரின் கைவரிசை

உண்மையில் பெசன்டம்மையார் தொடங்கிய ஹோம்ரூல் இயக்கமானது அவரது இருப்பிடமான சென்னை மாகாணத்திலே தான் எல்லை கடந்த செல்வாக்கைப் பெற்றிருந்தது.

வடபுலத்திலே காங்கிரசின் செல்வாக்கைக் குறைக்க இந்து-முஸ்லிம் பிரச்சினையே பிரிட்டிஷாருக்குப் போதுமானதாக இருந்தது. முஸ்லிம்கள் மிகவும் சொற்பமாக உள்ள சென்னை மாகாணத்திலே மதப் பூசலைக் கிளப்பிக் காங்கிரசை ஒடுக்குவது சாத்தியமில்லை என்ற நிலை இருந்தது.

காங்கிரசுக்கு எதிராக வலுவான ஒரு கட்சியைத் தோற்றுவித்தாலொழிய நடைமுறைக்கு வரும் சீர்திருத்தம் ஹோம்ரூல் இயக்கத்தின் செல்வாக்கில் போய்விடக்கூடும் என்பதனை அரசு உணர்ந்தது. அதனைத் தவிர்ப்பதற்காகத்தான் பிராமணர் - பிராமணரல்லாதார் பூசலைக் கிளப்பச் சென்னைக் கவர்னர் திட்டமிட்டுச் செயல் புரிந்தார்.

நீதிக்கட்சி பிறந்தது!

வடபுலத்தில் தேசிய காங்கிரஸ் மகாசபைக்கு எதிராக முஸ்லிம் லீகைத் தோற்றுவிப்பதிலே வெற்றி கண்டதுபோலத் தென்புலத்தில் பிராமணரல்லாதார் கட்சியைத் தோற்றுவிப்பதிலே இந்திய வைசிராயும், சென்னை மாகாண கவர்னரும் வெற்றி கண்டனர்.

1916-இல் 'தென்னிந்தியர் நலவுரிமைச் சங்கம்' என்ற பெயரில் பிராமணரல்லாதாருக்கென அரசியல் கட்சி ஒன்று தோன்றியது. இதற்கு 'ஜஸ்டிஸ் கட்சி' என்ற பெயரும் வழங்கியது. பழகு தமிழிலே 'நீதிக்கட்சி' என்றும் அழைக்கப் பட்டது. இந்தக் கட்சியைத் தோற்றுவித்தவர்கள் சர்.பி. தியாகராச செட்டியாரும், டாக்டர் டி.எம். நாயரும் ஆவர். இரண்டாமவரின் முழுப் பெயர் மாதவன் நாயர் என்பதாகும்.

வள்ளல் தியாகராசர்!

நீதிக் கட்சியின் கர்த்தாக்களில் ஒருவரான சர்.பி. தியாகராச செட்டியார் வாணிபம் புரிந்து வாழ்ந்தவர்; சிறந்த செல்வர்; மிகுந்த கொடையாளி. பிரிட்டிஷ் ஆட்சியிலே பதவி எதையும் நாடாதவர். அந்த வகையிலே அவர் காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தைச் சார்ந்திருக்க வேண்டியவர். ஆரம்ப காலத்திலே தேசிய காங்கிரஸ் மகா சபையிடம் நல்லெண்ணம் உடைய வராகவே இருந்தார். 1887-இல் சென்னையில் கூடிய மூன்றாவது காங்கிரஸ் மகா சபை வெற்றிகரமாக நடப்பதற்கு நிதி உதவியதையும் அதில் கலந்துகொண்ட பிரதிநிதிகளில் அவரும் ஒருவராக இருந்ததையும் முன்பே அறிந்தோம்.

டாக்டர் டி.எம். நாயர், சர்.பி. தியாகராசரை விடவும் அதிக அளவில் காங்கிரஸ் பணிகளிலே ஈடுபட்டார். 1894-இல் சென்னையில் நடைபெற்ற மகாசபையிலே கலந்துகொண்டு, பிரிட்டிஷ் ஆட்சியில் இந்திய மருத்துவத் துறையில் இந்தியராக உள்ளவர்கள் அடையும் இன்னல்களைப் போக்குவதற்கான ஒரு தீர்மானத்தை முன்மொழிந்து, அது நிறைவேறும்படிச் செய்தார். 1904-ஆம் ஆண்டிலே நடைபெற்ற வடார்க்காடு மாவட்ட அரசியல் (காங்கிரஸ்) மாநாட்டிலே தலைமை வகித்தார். பிராமண வாக்காளர்கள் பெரும்பாலோராக இருந்த திருவல்லிக்கேணி தொகுதியிலிருந்து சென்னை மாநகராட்சிக்கு அடுத்தடுத்து மும்முறை தேர்ந்தெடுக்கப்பட்டார்.

வடபுலத்தில் முஸ்லிம் லீகைத் தோற்றுவித்தபோது தேசிய முஸ்லிம்களில் எவரும் அதிலே பங்கு கொள்ளவில்லை. அதற்கு எதிராகவும் இருந்தனர். அவர்களிலே ஜனாப் ஜின்னா அவர்களும் ஒருவராவார். தென்னிந்தியாவிலோ, தேசிய காங்கிரஸ் ஆதரவாளர்களைக் கொண்டே அந்தக் காங்கிரசுக்கு எதிராக ஒரு கட்சியை நிர்மாணிப்பதிலே பிரிட்டிஷார் வெற்றி கண்டு விட்டனர். இதற்கு ஏதேனும் நியாயமான காரணம் உண் டென்றால், அது அரசு உத்தியோகத் துறையிலும் மாநில - மத்திய

சட்டமன்றங்களிலும் பிராமண சமூகத்தினரே பெருமளவுக்கு ஆதிக்கம் செலுத்தி வந்தனர் என்பதுதான்.

வங்காள நிலைமை

முஸ்லிம் லீக் ஏற்படுவதற்கும் இதே காரணம்தான் அதனை நிர்மாணித்த தலைவர்களால் எடுத்துக் காட்டப்பட்டது. இந்தக் காரணத்தை ஒப்புக்கொண்டு டாக்டர் ராசேந்திர பிரசாத் எழுதியிருப்பது வருமாறு:

''கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சியின் கீழ் வந்த முதல் மாகாணம் வங்காளம். அந்த மாகாணத்தில்தான் ஆங்கிலக் கல்வி முதலில் தோன்றியது. வங்காள இந்துக்கள் வெகு விரைவில் அதைப் பயின்றார்கள். அக்காலத்திய கொள்கையின்படி முசல் மான்கள் வேண்டுமென்றே சர்க்காரால் ஒதுக்கப்பட்டிருந்தார்கள். இந்துக்கள் எல்லா இலாக்காக்களிலும் சர்க்கார் உத்தியோகங்களில் அமர்ந்ததோடல்லாமல், பலவகையிலும் சிறப்புற்றிருந்தார்கள். பெரிய சீர்திருத்தக்காரர்கள், பெரிய வக்கீல்கள், மருத்துவ நிபுணர்கள், விஞ்ஞானிகள், நாவலர்கள், எழுத்தாளர்கள், ஆங்கில இலக்கியங்களில் ஆழ்ந்தவர்கள், பிரிட்டிஷாரின் அமைப்புகளை வெகுவாகப் போற்றுகின்றவர்கள் யாவரும் இந்துக்களிடையில் தான் தோன்றினர்.''

('இந்தியா பிரிக்கப்பட்டால்...' - பக், 119)

ஆங்கிலத்தில் வந்த மாறுதல்

வடக்கே இஸ்லாமியர் பின்னிடும் வகையில் பிரிட்டிஷ் ஆட்சியிலே இந்துக்கள் முன்னேறியிருந்ததுபோல, தெற்கே பிராமணரல்லாதாரைப் பின்னிடச் செய்யும் வகையில் பிராமணர் முன்னேறியிருந்தனர் என்பதனை யாரும் மறுப்பதற்கில்லை.

இங்கு, குறிப்பிட்ட ஒரு சாதி அரசுத்துறையில் ஆதிக்கம் பெற்றதற்கான காரணங்களைச் சுருக்கமாகவேனும் சொல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது.

பிராமணரல்லாதாரை விடவும் பிராமணர் முன்னேறியது. தாய் மொழியான தமிழின் மூலம் அல்ல; சமய மொழியான சமஸ்கிருதத்தின் மூலமும் அல்ல; அன்னிய மொழியான ஆங்கிலத்தின் மூலம்தான். ஆங்கிலேயருக்குத் தமிழகம் அடிமைப் படாம லிருந்திருந்தால், அரசு அலுவல்களில் ஓதல் - ஓதுவித்தல் தொழிலுக்குரிய பிராமணர்கள் ஆதிக்கம் பெற்றிருக்க முடியாது.

தமிழகம் சுதந்திரமாக இருந்த நாளிலே நாடாளும் மன்னர்களாக அந்தணரில் எவரும் வந்ததில்லை. வடபுலத்தில் அந்நிலை இருந்தும்கூடத் தமிழகத்தில் அது ஏற்படட்டதில்லை. அமைச்சர் பதவியிலும் இதே நிலைதான்.

அந்தணர் வாழ்வு ஆங்கிலத்தால்!

தமிழகத்தில் நவாபுகள் ஆட்சி நடந்தபோது, அந்த ஆட்சியால் அறிவுத் தொழிலாளரான அந்தணர் பாதுகாக்கப் படவில்லை. காரணம், அவர்கள் மதத்தாலும் அன்னியர்களாக இருந்ததுதான். பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சியி லேயும் அந்தணர் நிலை இதுதான். இதனால், வேலையில்லாக் கொடுமையை முதலில் சந்தித்தவர்கள் அந்தணர்களாகவே இருந்தனர். ஆகவே, பிரிட்டிஷ் ஆட்சியிலே ஆங்கிலக் கல்வி முறை புகுத்தப்பட்டபோது தங்கள் ஆசாரத்தையும் கைவிட்டு அந்தணர்கள் ஆங்கிலக் கல்வி பயில முன்வந்தனர். அதனால், ஆட்சியிலே உத்தியோகங்கள் பெறுவதற்கான முதல் வாய்ப்பை அவர்கள் பெறுவது எளிதாக இருந்தது.

பிராமணரல்லாதாரில் முன்னேறிய சாதியினரும் குடும்பத்தினரும் வளமான தொழில், வாணிபத் துறைகளில் ஈடுபட்டுச் சுகவாழ்வு நடத்தினர். அதனால், அவர்களில் அதிகமானவர்கள் ஆங்கிலக் கல்வி கற்பதிலே ஆர்வம் காட்ட வில்லை. ஏழை எளிய குடும்பங்களைச் சார்ந்தவர்கள் அன்னிய மொழிக் கல்வி பயிலுவது சாத்தியமற்றதாக இருந்தது. இந்த நிலையில் ஆங்கிலம் பயின்ற அந்தணர்கள் அரசு அலுவல்களிலே ஆதிக்கம் பெற்றது தவிர்க்க முடியாததென்பதனை ஆராய்ச்சி அறிவுடையோர் எவரும் எளிதில் புரிந்து கொள்ள முடியும்.''*

மக்களை நோக்கி...

அரசுத்துறை உத்தியோகங்களில் அந்தணர்களுக்கு ஆதிக்கம் ஏற்படுத்தித் தந்தது ஆங்கிலேயர் திட்டமிட்டுச் செய்த செயலாகும். அந்தணர்கள் - ஆங்கிலம் படித்த காரணத்தால் - பிரிட்டிஷ் விசுவாசிகளாக அவர்கள் இருந்தவரை அவர்களுக்கு உத்தியோகங்களை வழங்கி, அவர்களை உற்சாகப்படுத்தியது அரசு. ஆனால், இந்திய தேசிய காங்கிரசானது படித்த வக்கீல்களின் செல்வாக்கிலிருந்து விடுபட்டு, நடுத்தர - அடித்தள மக்களின்

*இது பற்றிய உண்மைகள் ம.பொ.சி. எழுதிய 'தமிழகத்தில் பிறமொழியினர்' என்னும் நூலில் புள்ளி விவரங்களுடன் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

இயக்கமாக மாறிக் கொண்டிருந்த நேரத்திலே படித்த வகுப்பாரிலும் சிலர் பிரிட்டிஷ் ஆட்சிக்கெதிரான தீவிரவாதிகளாக மாறினர். இந்த மாறுதல் பிராமணரிடையில்தான் அதிகமாக வெளிப்பட்டது. அதனாற்றான், பிராமணர்களிடம் பிரிட்டிஷ் அரசுக்கு ஐயமும் அதிருப்தியும் தோன்றின.

இந்த நிலைமையானது பிரிட்டிஷ் ஆட்சியின் ஆயுளைக் குறைக்கக் கூடியதாக இருந்ததால், அந்த அபாயத்திலிருந்து தற்காப்புப் பெறப் பிராமணரல்லாதாரில் அப்போதுதான் தோன்றிக் கொண்டிருந்த படித்த வகுப்பாரைக் கொண்டு, நிலைமையைச் சமாளிக்க அரசு முயன்றது. விஞ்ஞான ரீதியாகச் சரித்திரத்தை ஆராய்ந்து பார்க்கும் எவருக்கும் மேலே நாம் எடுத்துக் காட்டியதிலுள்ள உண்மை தெற்றென விளங்கும்.

படித்தவரையும் பிளவுபடுத்தினர்!

ஹ்யூம் துரைமகனார் *1857*-இல் நடந்ததுபோன்ற ஒரு புரட்சி திரும்பவும் தோன்றாமல் இருப்பதற்காகத்தான் ஆங்கிலம் படித்த பட்டதாரிகளைக் கொண்டு காங்கிரஸ் மகாசபையைத் தோற்றுவித்து, நாடு முழுவதிலுமே பிரிட்டிஷ் விசுவாசிகளைத் தவிர வேறெவரும் இல்லாத நிலையை உருவாக்க முயன்றார். அதிலே அவருக்கு ஒரு கால் நூற்றாண்டுக் காலம் வெற்றி கிடைத்தது. ஆனால், வடக்கே திலகரும் தெற்கே பெசன்டம்மையாரும் தோன்றி நிலைமையைத் தலைகீழாக மாற்றி விட்டனர். உயர்தரக் கல்வி கற்ற பட்டதாரிகளிலேயும் - ஏன், அரசு அலுவலகங்களில் இருந்தவர்களிடையிலேயும் பிரிட்டிஷ் விரோதிகளைத் தோற்றுவித்து விட்டனர். இதனால், ஆங்கிலக் கல்விமுறை காரணமாக நாட்டில் புதிதாக உருவாகியிருந்த படித்த வர்க்கத்தையும், மத ரீதியிலும் சாதி ரீதியிலும் பிளவுபடுத்தியாக வேண்டிய கட்டாயம் பிரிட்டிஷாருக்கு ஏற்பட்டுவிட்டது.

வக்கீல்கள் ஆதிக்கம்

காங்கிரஸ் மகாசபை தோன்றிய காலத்திலே அதில் வக்கீல்களே முன்னணியில் இருந்தனர். ஆம்; பிரிட்டிஷாரிடம் உத்தியோகங்களைப் பெறுவதற்காகக் காங்கிரசைப் பயன்படுத்திக் கொள்ளும் குறிக்கோளுடனேயே வக்கீல் கூட்டத்தார் அதில் சேர்ந்திருந்தனர். அவர்களிலே பிராமணர்கள் அதிக அளவில் இருந்தனர். இருந்தாலும், அவர்களைத் தீவிர காங்கிரஸ்காரர்கள் கடுமையாக எதிர்த்து வந்தனர் என்பதனையும் இங்கு நினைவில் கொள்ள வேண்டும். அப்படி எதிர்த்தவர்களிலே பிராமணர்களும் உண்டு. அவர்களிலே முதல்வராகக் காட்சியளிக்கிறார் 'ஹிந்து,'

'சுதேசமித்திரன்' நாளிதழ்களைத் தொடங்கி வைத்த திரு.ஜி. சுப்பிரமணிய ஐயர்.

5-8-1893-இல் தமது 'சுதேசமித்திரன்' இதழில் 'வக்கீல்! வக்கீல்!! வக்கீல்!!!' என்னும் தலைப்பிட்டுத் திரு.ஜி. சுப்பிரமணிய ஐயர் எழுதியது வருமாறு:

> ''இப்போது புதிய நிபந்தனைகளின்படி இச்சென்னை சட்ட நிருபண சபைக்கு மெம்பராக வேண்டுமென்று பிரயத்தனப் படும் சுதேசிகள் அனேகமாய் எங்கும் வக்கீல்களே! வடக்கே சுப்பராவும் ஜெம்புலிங்க முதலியாரும் வக்கீல்களே! சேலம் ஜில்லா விஜயராகவாச்சாரியாரும், தஞ்சை ஜில்லா சாமினாத ஐயரும் கலியாணசுந்தர ஐயரும் வக்கீல்களே! சென்னை முனிசிபாலிடியில் ரெங்கைய நாயுடுவும் வக்கீலே! அனந்தாச்சார்யரும் வக்கீலே!
>
> ''இப்படி எங்கும் வக்கீல்களும் அச்சபைக்கு நியமிக்கப் பட்டு வந்தால் கௌரவம் அச்சபைக்கு குறைவுபடும். மேலும் கவர்ன்மெண்டார், இங்கு ஜனங்களுக்காகச் செய்யப்படும் வேலைகளை எல்லாம் வக்கீல்களே செய்து முடிக்கிறார்கள் என்று சொல்லி வருகிறார்கள்.
>
> ''இச்சமயத்தில் அங்குமிங்குமுள்ள மற்ற தொழிலாளிகளை நமது தேசத்தார் சட்ட நிருபண சபைக்கு நியமிக்க வேண்டும். இப்படிச் செய்தால் அச்சபை கௌரவப்படும். பி.ஏ., பி.எல்.களும், வக்கீல்களும் போதுமான வரையில் சட்ட நிருபண சபையில் இருக்கிறார்கள். ஆனால் விவசாயம், கைத்தொழில், வியாபாரம் இந்த விஷயங்களில் விசேஷ அனுபவமும் இவைகளை விருத்தி செய்வதற்கேற்ற தக்க ஆலோசனை சொல்லத் தக்கவர்களும் சட்ட நிருபண சபையில் ஒருவர்கூட இல்லை.''

('காங்கிரஸ் வினா - விடை' நூலில்)

தொழிலாளர் எங்கே?

மாநில - மத்திய சட்டசபைகளிலே அந்தணர்கள் அதிக அளவில் இடம் பெற்றதற்குக் காரணம் அந்நாளைய அரசியல் இயக்கத்திலே வக்கீல்கள் அதிக அளவில் ஆதிக்கம் பெற்றிருந்தது தான். அவர்களிலே திரு. ஜம்புலிங்க முதலியார், திரு. சங்கரன் நாயர் போன்ற பிராமணரல்லாதாரும் இருந்தனர் என்பதனை இங்கு நினைவில் கொள்ள வேண்டும். முதன் முதலில் இந்தியரிலே ஒருவர் நீதிபதியாக நியமனம் பெற்றாரென்றால்,

அவர் திரு. ஜம்புலிங்க முதலியார் ஆவார். ஆம்; பிராமண ரல்லாதாரிலும் முன்னணிச் சாதியினரே உயர் உத்தியோகங்களை அடையும் வாய்ப்பினைப் பெற்றிருந்தனர் என்பதனை இங்கு நினைவில் கொள்ள வேண்டும்.

இதனை மாற்றுவதற்கு அந்தணரான திரு.ஜி. சுப்பிரமணிய ஐயர் சொல்லும் வழி என்னவென்றால்,

> ''விவசாயம், கைத்தொழில், வியாபாரம் இந்த விஷயங்களில் விசேஷ அனுபவமும், இவற்றை விருத்தி செய்வதற்கேற்ற தக்க ஆலோசனை சொல்லத்தக்கவர்களும் சட்ட நிருபண சபையில் இடம்பெற வேண்டும்''

என்பதாகும். இவர்களில் ஒருவர்கூட அந்நாளைய மாநில - மத்திய சட்டமன்றங்களிலே இடம் பெற்றிருக்கவில்லை என்பதனையும் திரு.ஜி.சு. ஐயர் எடுத்துக் காட்டுகிறார். ஐயர் சொல்வது போன்று தொழில், விவசாயம், வர்த்தகம் போன்ற துறைகளில் இருப் போருக்குச் சட்ட சபைகளில் நியமனம் கிடைத்திருந்தால் அவர் களில் பெரும்பாலோர் பிராமணரல்லாதாராகவே இருந்திருப்பர் என்பதில் ஐயமில்லை. ஆனால், ஜி.சு.ஐயர் சொல்லும் இந்த முறையை அமல் நடத்துவதனால் பிரிட்டிஷாருக்கு லாபம் எதுவுமில்லை. அதனால், அந்தத் திசையிலே அவர்கள் கவனம் செலுத்தவில்லை. இதோ, பிற்காலத்தில் மகாகவியாக விளங்கிய சி. சுப்பிரமணிய பாரதியாரும் தேசியக் காங்கிரஸ் மகாசபையிலே வக்கீல்கள் பெற்றிருந்த ஆதிக்கத்தை எடுத்துக் காட்டுகிறார்:

> ''காங்கிரசுக்குச் செல்லுதல் பொருட்டு டெலிகேட்டுகள் தேர்ந்தெடுப்பதற்காக சென்னை மகா ஜன சபையில் கூடிய கூட்டத்தில் யார் யார் வந்திருந்தார்கள்? கூடியவர்களில் 100-க்கு 75 பேருக்கு மேல் வக்கீல்களாயிருந்தார்களேயன்றி நானாவித வகுப்பைச் சேர்ந்த எல்லா மனிதர்களும் வந்திருந்தார்களா?
>
> ''வக்கீல், வாத்திமை, பத்திரிகை நடத்தல் முதலிய தொழில் களில் அமர்ந்திருப்பவர்கள் தவிர மற்ற இங்கிலீஷ் தெரிந்த எவரும் கவர்ன்மெண்ட் உத்தியோகத்தில் இருப்பவர் களாகையினால் அவர்கள் பொதுக் கூட்டங்களில் தலையிட முடியாது. தலையிட இஷ்டமும்இராது. பத்திராதிபர்களும், உபாத்தியாயர்களும் சிலரே இருக்கக்கூடும்.
>
> ''ஆகவே, வக்கீல்களாகிய ஒரு வகுப்பார் மட்டுமே பொதுக்கூட்டங்களில் தலையிடவும், காங்கிரஸ் அபிமானி

என்று வாய் கூசாது சொல்லிக் கொள்ளவும், பொருள் செலவு செய்து கல்கத்தாவுக்குப் போகவும் கூடும். இவர்களே சென்னை ராஜதானியில் உள்ள கோடிக்காணக்கான ஜனங்களுக்கும் ஜனத் தலைவராகி கல்கத்தாவில் விளங்கியிருக்கிறார்கள்.''

இது, 1906-இல் தாதாபாய் நௌரோஜி தலைமையில் கல்கத்தாவில் நடந்த காங்கிரஸ் மகா சபைக்குச் சென்ற சென்னை மாகாணத்துப் பிரதிநிதிகள் தகுதி பற்றி 12-1-1907-இல் தமது 'இந்தியா' பத்திரிகையில் பாரதியார் எழுதியதாகும்.

அதே காரியத்துக்காக...

சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள சாதாரண மக்களிலிருந்து எவரும் காங்கிரஸ் மகாசபைக்குப் போகும் வாய்ப்பில்லாத நிலையை எடுத்துக் காட்டி அத்தகைய வாய்ப்பை உருவாக்க வேண்டும் என்று பாரதியார் வற்புறுத்தியிருக்கிறார். இந்தக் கருத்துடன் ஒப்பிட்டு நோக்கும்போது, பாரதியார் இப்படி எழுதிய பத்தாண்டுக்குப் பின் தோன்றிய நீதிக்கட்சியினர்கூடச் சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள சாதாரண மக்களின் பிரதி நிதிகள் அல்லர் என்பது புலப்படும். எந்த படித்த வர்க்கத்தின் ஆதிக்கத்தை ஜி.சு. ஐயரும் பாரதியாரும் வெறுத்து எழுதி னார்களோ, அதே ஆதிக்கவாதிகளை பிராமணரல்லாதாரி லிருந்து தேர்ந்தெடுத்துப் பதவிகளுக்கு அனுப்பத்தான் நீதிக்கட்சி பிறந்தது.

ஜனத் தலைவர் யார்?

'ஜனத் தலைவர்' என்போர் யார் என்பதற்கும் பாரதியார் விளக்கம் தந்திருக்கிறார். அது வருமாறு:

''காங்கிரஸ்களும், கான்பிரன்சுகளும் ஒன்றுக்குப் பத்தாக மலிந்து கிடக்கும் இந் நாட்களில் ஜனத் தலைவர்களும் 'புற்றீசல்' போல மலியத் தொடங்கினர். பொருள் உள்ளவர்களும், இங்கிலீஷ் பாஷையில் குளறிக் குளறியாவது பேசப் படித்தவர்களும் இன்னும் இப்படிப்பட்ட பலரும் தாங்களும் ஜனத் தலைவர்கள் என்று வாய்ப்பறை யறிவிக்கின்றனர்.

''யாவன் ஒருவன் தனது ஜனன தேசமாகிய இந்தியாவானது இந்த வறிய நிலையில் இருப்பது பற்றி இராப் பகல் வருந்து கின்றானோ, யாவன் ஒருவன் இந்த முப்பது கோடி இந்தியரும்

வயிறார உண்பதற்கு உணவும் உடுக்க உடையுமின்றித் தவிக்கிறார்களோ என மனமிரங்கிக் கண்ணீர் சொரிகிறானோ, யாவன் ஒருவன் பொது ஜனங்களுக்கு வந்த சுப துக்கங்களும். கஷ்ட நஷ்டங்களும் தனக்கு வந்ததாக எண்ணி அனுதாபிக் கிறானோ, இன்னும் யாவன் ஒருவன் இந்தத் துன்பங்களை நிவர்த்திப்பதன் பொருட்டுத் தனது உயிரையும் இழக்கத் தயாராயிருக்கின்றானோ அவன் ஒருவனே ஜனத் தலைவன்; அவன் ஒருவனே தேசாபிமானி; அவன் ஒருவனே தேசத்தார் வணங்கும் கண்கண்ட தெய்வமல்லாமல், கேவலம் பொருளைக் கொண்டும், வாயாடியைக் கொண்டும், தேசாபிமானி எனவும் ஜனத் தலைவன் எனவும் பிதற்றுவோர்கள் உண்மையான ஜனத் தலைவர்கள் ஆகமாட்டார்கள்.

''இப்போது சென்னையில் ஜனத் தலைவர் எனப்படுவோர் உண்மையான ஜனத்தலைவர் ஆகார். வக்கீல் உத்தியோகம் செய்யும் பலர் சமீப காலத்தில் ஜட்ஜ் ஸ்தானம் முதலிய உத்தியோகங்கள் கிடைக்க வேண்டுமென்று சதா கண் வைத்துக் கொண்டேயிருப்பார்கள். ஆகவே கவர்ன்மெண்டாரும், பொது வாய் காங்கிரஸ் பொன்ற பொதுச் சபைகளில் யார் யார் பிரபலமாய் இருந்து அதிக சப்த முண்டாக்குகின்றார்களோ அவர்களுக்குத்தான் ஜட்ஜ் வேலை கொடுப்பதென்றும் வழக்கம் வைத்துக் கொண்டு, சும்மாவேனும் பொருளுள்ள புண்ணியர்கள் ஜனத் தலைவர்கள் என்ற பெயர் 'சூடி' தேசாபிமானிகள்போல மினுக்குகின்றார்கள்.

''எப்பொழுதும் பொது ஜனங்களின் பொருட்டு உழைப்பவனும், பொது ஜனங்களால் நன்கு மதிக்கப் பட்டவனுமே ஜனத் தலைவன் ஆவான். அன்றி, பொது ஜனங்களிடமிருந்து இரக்கமின்றி ஆயிரக்கணக்காய் 'பீஸ்' வாங்கி பகற் கொள்ளையடிக்கும் பாரபக்ஷக்காரர் ஜனத் தலைவர் ஆகார்.''

('இந்தியா'. 12-1-1907)

அதே கூட்டந்தான்!

பாரதியாரின் இந்தக் கருத்து ஜஸ்டிஸ் கட்சி தோன்று வதற்குப் பத்தாண்டுகளுக்கு முன்பு வெளிப்பட்டதாகும். வறுமையில் வாடுபவனுக்காகப் பாடுபடுபவனே ஜனத் தலைவன் என்கிறார் பாரதியார். வறுமையால் வாடுவோர் யார்? பெரும்பாலும் பிராமணரல்லாதாரே யன்றோ? பாரதியாரின் முற்போக்குக் கருத்துப்படி நீதிக் கட்சியின் தலைவர்கள்கூட ஜனத் தலைவர்கள் என்று சொல்வதற்கில்லை. ஆயினும், பிறப்புக்

காரணமாக அவர்கள் தங்களை பிராமணரல்லாதார் அனை வருக்கும் தலைவர்களாகக் கருதிக் கொண்டனர்.

ஜஸ்டிஸ் கட்சி தோன்றிய *1916*-ஆம் ஆண்டிலே ஹோம்ரூல் இயக்கத் தலைவரான டாக்டர் பெசன்ட் அம்மையாரைச் சுற்றி அதிகமாக பிராமணர்களே முற்றுகையிட்டிருந்தனர். இதுவும் நீதிக் கட்சி தோன்றுவதற்கு ஒரு காரணமாக இருந்தது. திருமதி பெசன்ட் அம்மையார் அரசியலில் பிரவேசித்தது *1914* டிசம்பரில்தான் என்பதை முன்பே அறிந்தோம். அவ்வம்மையாருடைய புரட்சி உள்ளம் காரணமாக - குறிப்பாக, அவர் தொடங்கி வைத்த ஹோம்ரூல் இயக்கம் காரணமாக, காங்கிரசிலிருந்த மிதவாதக் கூட்டத்தார் அதிலிருந்து ஓட்டம் பிடித்தனர். அவர்களிலே பிராமணருமுண்டு. ஹோம்ரூல் இயக்கத்திலே பிராமணரல்லாத அறிஞர் பலர் பிரவேசித்தனர். அவர்கள் திரு. வி. கலியாணசுந்தர முதலியார், ஈ.வே. ராமசாமி நாயக்கர், பி.பி. வாடியா, டாக்டர் அருண்டேல், திரு.ஜி. செல்வபதி செட்டியார், டாக்டர் பி. வரதராசுலு நாயுடு, தோழர் சிங்காரவேலு செட்டியார், ஜார்ஜ் ஜோஸப் ஆகியோராவர். ஏற்கனவே காங்கிரசிலிருந்து வந்த குத்தி கேசவப்பிள்ளை, வ.உ.சி., சக்கரை செட்டியார் போன்ற பிராமணரல்லாதாரும் ஹோம்ரூல் இயக்கத்தால் பெருஞ் செல்வாக்குப் பெற்றனர்.

உழைப்பாளரை நோக்கி...

இன்னொன்றையும் இங்குக் குறிப்பிடவேண்டும். நீதிக்கட்சி தோன்றிய காலத்திலே, இந்திய தேசிய காங்கிரசானது தமிழ் நாட்டளவில் பார்த்தாலும் உழைக்கும் வர்க்கத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. *1918*-இல் காங்கிரஸ் தலைவர்களால் சென்னைத் தொழிலாளர் சங்கம் (மெட்ராஸ் லேபர் யூனியன்) தொடங்கி வைக்கப்பட்டது. இந்தியாவில் தோன்றிய முதல் தொழிற் சங்கம் இதுவே. அடுத்த ஆண்டிலேயே பெரம்பூர் ரெயில்வேத் தொழிற் சங்கம் தோன்றியது. இன்னும் ஒவ்வொரு தொழில் துறையிலும் தொழிற் சங்கங்களைத் தோற்றுவித்த வண்ணம் இருந்தனர் தேசியவாதிகள். சுருங்கச் சொன்னால், தமிழ்நாடு காங்கிரசிலே பிராமணர் மட்டுமல்லாமல் பல்வேறு சாதியினரும் முன்னணித் தலைவர்களாக மலர்ந்து கொண் டிருந்தனர்.

நாயரின் வருணனை!

டாக்டர் டி.எம். நாயர் அவர்கள் சென்னையிலுள்ள ஸ்பர்டேங்க் என்னும் வட்டத்தில் *1919*-இல் நிகழ்த்திய ஒரு

சொற்பொழிவு சரித்திரச் சிறப்புமிக்கதென்று சொல்லப்படுகிறது. அதிலே, அவர் குறிப்பிடுவதாவது:

''ஹோம்ரூலர்கள் அத்தனை பேரும், காங்கிரஸ்காரர்களுடைய பெரும்பெரும் தலைவர்களும் (ஒரு சில திராவிடக் கருங்காலிகள் - கங்காணிகள் - விபீஷணர்கள் தவிர, உதாரணத்திற்கு சேலம் டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு, ஈரோட்டு சௌகார் ஈ.வெ. ராமசாமி நாயக்கர், தூத்துக்குடி வக்கீல் சிதம்பரம்பிள்ளை, சென்னைப் புலவர் கலியாணசுந்தரமுதலியார் போன்றோர்) மற்றெல்லாத் தேசியத் தலைவர்களும் பார்ப்பனர்களே.''

(டாக்டர் நாயர் ஸ்பர்டேங்க் பேருரை: பக்கம் 38)

என்று கூறியிருக்கிறார். இதை இங்கு எடுத்துக்காட்டுவது காங்கிரசில் தோன்றிக் கொண்டிருந்த புதிய தலைவர்களை - குறிப்பாக, பிராமணரல்லாத தலைவர்களை எந்த உரைக்கல்லில் வைத்துத் தேய்த்துப் பார்த்தது நீதிக்கட்சி என்பதை எடுத்துக் காட்டத்தான்.

தியாகிகளை மறப்பதா?

காங்கிரசிலிருந்த பிராமணர்களிலேயும் எல்லோரும் பதவி விரும்பிகளல்லர். இன்று நினைத்தாலும் நம் தலை தானாகவே வணங்கி அஞ்சலி செய்யக்கூடிய வீரர்களும் தியாகிகளும் உண்டு. தூத்துக்குடி சிதம்பரம் பிள்ளையுடன் சேர்ந்து பத்தாண்டுக் கடுங்காவல் தண்டனை பெற்ற சிவா, வேளாளர் சிதம்பரம் பிள்ளைக்கு வேதனை தந்தான் என்ற ஒரே காரணத்துக்காக ஆஷ் துரையைச் சுட்டுக்கொன்று தன்னையும் மாய்த்துக் கொண்ட வீரன் வாஞ்சி, சிதம்பரம் பிள்ளையுடன் தோழமை கொண்டு சிறை புகுந்த தூத்துக்குடி பத்மநாப ஐயங்கார் இவர்கள் எல்லாம் பிராமணர்களே.

திருநெல்வேலிச் சதி வழக்கில் குற்றவாளிகளாக்கப்பட்ட பதினான்கு பேரில் ஏழு பேர் பிராமணர்கள். ஏழு பேர் வேளாளர்கள். இந்த வழக்கில் முதல் குற்றவாளியான நீல கண்ட பிரமச்சாரி பதினேழரை ஆண்டுக் காலச் சிறைத் தண்டனை பெற்று, இந்தியாவிலும், பாகிஸ்தானிலும், பர்மாவிலும் உள்ள சிறைகளில் எல்லாம் அடைக்கப்பட்டு வாழ்நாளைக் கழித்தார். சிதம்பரனாருக்குச் சிறைத் தண்டனை விதிக்கப் பட்ட கொடுமையைக் கண்டித்துப் பேசியதற்காக மயிலை கிருஷ்ணசாமி சர்மா நாடு கடத்தல் தண்டனையைப் பெற்றார். கண்டித்து எழுதியதற்காக 'சுயராஜ்யா' பத்திரிகை ஆசிரியர் ஹரி

சர்வோத்தம் ராவ் மூன்றாண்டுச் சிறைவாசத் தண்டனை பெற்றார். பாரதியாரும் வ.வே.சு. ஐயரும் பத்தாண்டுக்கு மேலாகப் புதுவையிலே அஞ்ஞாத வாசம் செய்தனர்.

தலைமைக் காவலர் வேலையிலிருந்து விலகி தேச விடுதலைக்குப் பாடுபட்டதற்காக தூத்துக்குடி குருநாத ஐயர் சிறைத்தண்டனை அனுபவித்தார். அவர் சிறையிலிருந்து வந்தபின் அயல்நாடு போனார். எங்கு போனாரோ, எப்படி முடிந்தாரோ இதுவரை அவரைப் பற்றித் தகவல் இல்லை.

மண்டயம் குடும்பத்தைச் சார்ந்த எம்.பி. திருமலாச்சாரி, அயல் நாட்டிலுள்ள புரட்சியாளர்களுடன் தொடர்பு கொள்ள லண்டன் சென்றார். பின்னர், அவர் பற்றித் தகவலே இல்லை.

இவ்வளவு பிராமணர்களும் பெசன்டம்மையாரின் ஹோம்ரூல் இயக்கம் தோன்றுவதற்கு முன்பிருந்தே தியாகப் பாதையில் நடை போட்டவர்களாவர்.

இவர்களேயன்றி, நெல்லைச் சதி வழக்கில் சம்பந்தப்பட்டவர்களாகக் கருதப்பட்டுக் கைது செய்யப்பட்டுப் போலீசாரின் காவலிலிருந்தபோது விஷமருந்தி மாண்டதாகச் சொல்லப்படும் செங்கோட்டை நிலக்கிழார் தருமராச ஐயரும், கத்தியால் கழுத்தை அறுத்துக் கொண்டு உயிர் துறந்ததாகச் சொல்லப்படும் வழக்கறிஞர் புனலூர் வேங்கடேசுவர ஐயரும் பிராமணர்களே!

உத்தியோகத் துறையில் பிராமணர்களுடன் ஏற்பட்ட போட்டி காரணமாக இந்த உத்தமத் தியாகிகளையெல்லாம் நினைவில் கொள்ளத் தவறிவிட்டனர் நீதிக்கட்சியார்.

நினைத்தது நடந்திருந்தால்...?

பிரிட்டிஷார் நினைத்தபடி தமிழ் நாட்டளவில் காங்கிரசை மாய்த்துவிட முடிந்திருந்தால், நீதிக்கட்சித் தலைவர்கள் நினைத்தபடி பிராமணரல்லாதாரெல்லாம் விடுதலைப் போரிலிருந்து விலகி நின்றிருந்தால், அந்த நிலையிலும் தமிழ் நாட்டையும் தன்னுள் கொண்டுள்ள இந்தியாவிலே விடுதலைப் போர் தொடர்ந்து நடந்திருக்கும். ஆகஸ்டு பதினைந்துக்குச் சற்று முன்போ, பின்போ, இந்தியாவுக்கு விடுதலையும் கிடைத்திருக்கும். ஆனால், அந்த விடுதலைப் போராட்ட வரலாற்றிலே,

தமிழகத்தின் பங்கு சூன்யமாக இருந்திருக்கும். இல்லையேல், பிராமணரல்லாதாரின் பங்கு படுசூன்யமாக இருந்திருக்கும். நல்ல வேளையாக, அப்படி நடக்காததனால்தான் விடுதலைப் போராட்டத்தில் தமிழகத்தின் பங்குபற்றித் தலை நிமிர்ந்து எழுதவும், பேசவும் முடிகிறது.

பிரிட்டிஷாரின் பிரித்தாளும் தந்திரம் தமிழகத்தில் செயல் பட்ட விதத்தை இத்துடன் முடித்து, விடுதலைப் போர்க் களத்துக்குச் செல்வோம்.

★-★-★

புதுவையில் புரட்சியாளர்கள்

இன்று புதுவை ராஜ்யம் எனப்படும் பகுதி விடுதலைப் போராட்ட காலத்திலே பிரெஞ்சுப் பேரரசின் பிடியில் இருந்தது. ஆறாயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள பிரிட்டிஷாருக்கு இந்தியா அடிமைப்பட்டிருந்தது என்றால், புதுவை மாநிலப் பிரதேசமானது அதே அளவு தொலைவிலுள்ள பிரெஞ்சு தேசத்தாருக்கு அடிமைப்பட்டிருந்தது. இன்று மேற்கு வங்கத்தின் ஒரு பகுதியாகவுள்ள சந்திரநாகூர் எனப்படும் பிரதேசமும் பிரெஞ்சு அரசின் ஆதிக்கத்திலிருந்தது. புதுவை, காரைக்கால், ஏனம், மாஹி, சந்திரநாகூர் ஆகிய ஐந்து பகுதிகளும் 'பிரெஞ்சிந்தியா' எனப் பெயர் பெற்று, ஒரே கவர்னரின் நிர்வாகத்திலிருந்தன. அடுத்தடுத்து வந்த கவர்னர்கள் பிரெஞ்சுக்காரர்களாகவே இருந்தார்கள்.

12 ஆண்டுக் காலம்

புதுவை நகரானது 1908 முதல் 1920 வரை இந்திய தேசபக்தர் களிலே புரட்சி உள்ளம் படைத்தவர்களுக்குப் புகலிடமாக இருந்தது. கௌரவர்களிடம் சூதில் தோற்ற பாண்டவர்கள், அதன்பின், பன்னிரண்டாண்டுகள் வனவாசம் புரிந்தனர் என்கிறது மகாபாரதக் கதை. அதுபோல, இந்திய தேச பக்தர்கள் - குறிப்பாக, தமிழ்நாட்டுப் புரட்சியாளர்கள் 1908 முதல் 1920 வரை சுமார் பன்னிரண்டாண்டுக் காலம் புதுவையில் வாசம் புரிந்தனர். இவர்களில் முதன் முதலாகப் புதுவையில் அடைக்கலம் புகுந்தவர் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரேயாவார்.

அரச நிந்தனை வழக்கில் வ.உ. சிதம்பரனார் இரண்டு ஆயுள் தீவாந்தரத் தண்டனையும், சுப்பிரமணிய சிவா பத்தாண்டுத் தீவாந்தரத் தண்டனையும் பெற்றதானது, தமிழ் நாட்டுத் தேச பக்தர்களை அதிர்ச்சியடையச் செய்துவிட்டது, அந்தக் கொடுந் தண்டனை ஆளுஞ் சாதியினரின் மனப்பான்மையைக் காட்டியது. ஆம்; வெள்ளைச் சாதிக்கு அதிகார வெறி பிடித்துவிட்டதைக்

காட்டியது. சிதம்பரனாரும் சிவாவுந்தான் தமிழ்நாட்டில் முதன் முதலில் சிறை புகுந்த தேச பக்தர்கள். ஆகவே, அடுத்தடுத்துப் பல தேசபக்தர்கள் நாடு கடத்தல் தண்டனைக்கு ஆளாகக் கூடுமென்ற வதந்தி உலவியது.

பாரதியாருக்கு வ.உ.சி. செய்தி

இந்த நிலையில்தான் சிதம்பரனாருக்கு விதிக்கப்பட்ட கொடுந் தண்டனையைக் கண்டித்து எழுதியதற்காக, 'இந்தியா' பத்திரிகைக்குப் பெயரளவில் ஆசிரியராக இருந்த திரு. சீனிவாச ஐயங்கார் ஐந்தாண்டு நாடு கடத்தல் தண்டனைக்கு ஆளானார். உண்மை ஆசிரியரான சி. சுப்பிரமணிய பாரதியார் மீதும் வாரண்டு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக வதந்தி உலவியது.

இந்தச் செய்தியறிந்த பாரதியார் செய்வதறியாது திகைத்தார். அவரது புரட்சி உள்ளம் பயமென்பதையே அறியாதது'' ஆயினும், 'அஞ்சுவதஞ்சாமை பேதைமை' யென்ற குறளையும் அவர் அறிவாரல்லவா! பாரதியாரின் நண்பர்கள் புதுவையில் அடைக்கலம் புகுமாறு அவருக்கு ஆலோசனை கூறினர். பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்து வெளியேறிப் பிரெஞ்சு இந்தியாவான புதுவையில் அடைக்கலம் புகுந்து அங்கிருந்தவாறு தேச விடுதலைக்கும் பாடுபடலாம் என்று கூறினர். இதுபற்றி வ.உ.சி. தரும் தகவல் வருமாறு:

> ''பாரதியார் பேரிலும், ஸ்ரீனிவாஸாச்சாரியார் பேரிலும் சர்க்கார் ராஜத் துவேஷ வழக்குத் தொடரப் போவதாகவும், அவர்கள் ஜெயில் செல்ல விரும்பவில்லையானால், புதுச்சேரிக்குத் சென்றுவிடும்படியாகவும் பாரதியாரின் தேசிய கீதங்களில் மயங்கிக் கிடந்த கவர்மெண்டு எக்ஸிக் யூட்டிவ் ஆபீஸர் ஒருவர் பாரதியாரிடம் தகவல் தெரிவித்து விட்டார். சில காரணங்களால் அவர் பெயரை நான் இங்கு சொல்ல விரும்பவில்லை. சிறையுள் கிடந்து தேச சேவை செய்து கொண்டிருப்பதே மேல் என நாங்கள் அவர்களுக்கு தகவல் சொல்லி அனுப்பினோம். முதலில் பாரதியார் இதை ஒப்புக் கொள்ளவில்லை. பின்னர் புதுச்சேரி செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதினால் சென்றுவிட்டார் போலும்!''

(வி.ஓ.சி. கண்ட பாரதி - பக் 42-43)

நண்பர்கள் கூறிய ஆலோசனையின்படி பாரதியார் 1908 - ஆம் ஆண்டு சூன் திங்களில் புதுவையில் அடைக்கலம் புகுந்தார்.

போலீசாரால் சதா கண்காணிக்கப்பட்டு வந்தவர் அவர்கள் பார்வையில் படாமல் தப்பியோடுவது எளிதல்ல. ஆனால், எப்படியோ மாறு வேடம் பூண்டு நெடுந்தூரம் நடந்தும் ரெயிலில் பயணஞ் செய்தும் புதுவை புகுந்தார்.

புதுவையில் அடைக்கலம் புகுந்த பிரிட்டிஷ் விரோதியை பிரெஞ்சு அரசு பிடித்துக் கொடுக்காது என்பதற்கு முன் உதாரண நிகழ்ச்சி எதுவும் அப்போது இருக்கவில்லை. சர்வ தேசச் சட்டத்தை நம்பியே பாரதியார் புதுவையில் அடைக்கலம் புகுந்தார்.

பாரதியார் தாய்நாட்டை விட்டு ஓடிவிடவில்லை. அப்படி ஓடுவது உண்மைத் தேசபக்தர்கள் மனதுக்கு வேதனை தருவதுதான். ஆனால், இந்தியன் ஒருவனுக்குப் புதுவையும் தாய்நாடு தானே! குறிப்பாக, ஒரு தமிழனுக்குப் புதுவையும் தாய்வீடு தானே! அதனால், தாயின் இடுப்பிலிருந்த குழந்தை அவள் மடியில் தவழ்ந்ததுபோல, சென்னையிலிருந்து வெளியேறிப் புதுவை புகுந்தார்.

கொடுங்கோலாட்சி!

ஒரு மகாகவி, 'கொடுங்கோல் மன்னன் வாழும் நாட்டின் கடும்புலி வாழ்ந்திடும் காடு நன்று' என்றுதானே கருதுவார்! அப்படிக் கருதித்தான் பிரிட்டிஷ் இந்தியத் தமிழகத்திலிருந்து வெளியேறி, பிரெஞ்சிந்தியத் தமிழகத்தில் அடைக்கலம் புகுந்தார் பாரதியார்.

பாரதி அடைக்கலம் புகுந்த சிலநாட்களுக்குள் 'இந்தியா' பத்திரிகையின் பதிப்பாசிரியர் மண்டையும் சீனிவாசாச்சாரியாரும் புதுவை சேர்ந்தார். இவர்கள் சென்ற இரண்டாண்டுகளுக்குள் வங்க வீரர் அரவிந்த கோஷ் அவர்களும் புதுவையில் தஞ்சம் புகுந்தார். அலிப்பூர் சதி வழக்கில் நிரபராதி என நீதிபதியால் விடுவிக்கப்பெற்ற அரவிந்தரை, வங்க மாநில அதிகார வர்க்கம் அமைதியாக இருக்க விடவில்லை, அவர்மீது பொய் வழக்குகளைச் சோடித்துத் திரும்பவும் அவரைச் சிறையில் தள்ளிவிட முயன்றது.

இருளில் பெற்ற ஒளி!

வெடிகுண்டு வழக்கில் சிறைப்பட்டிருந்தபோது' அரவிந்தர், அரசியலில் வெறுப்புற்று, ஆன்ம ஒளி பெற்றார். இந்து மத வேதாகம சாத்திர, தோத்திர இலக்கியங்களிலே நல்ல

பயிற்சியுடையவராதலால், சிறை வாழ்க்கையும் அரசு இழைத்த கொடுமைகளும் அவரை ஆண்டவனிடம் தஞ்சம் புகச் செய்தன.

சிறை மீண்டதும் அதுவரை அரசியல் நாளேடாக நடத்தி வந்த 'வந்தே மாதரம்' பத்திரிகையை நிறுத்தி விட்டு, ஆன்மிகத் தொண்டுக்காகக் 'கர்மயோகி', 'தருமா' என்ற பத்திரிகைகளைத் தொடங்கி, தத்துவ விளக்கங்களை எழுதி வந்தார். ஆனால், போலீசார், அவர் எழுதிய சமயக் கருத்துக்களுக்கெல்லாம் அரசியல் வண்ணம் பூசி அவரை வம்புக்கிழுத்தனர்.

இதனால் மனமுடைந்த அரவிந்தர், ஒரு நாள் திடீரென்று ஒரு படகின் மூலம் இரவோடு இரவாகப் பயணஞ் செய்து, கல்கத்தாவுக்கு 22 கல் தொலைவிலுள்ள கடற்கரைச் சிறு நகரான சந்திரநாகூரை அடைந்தார். அங்குத் தலைமறைவாகச் சில நாட்களைக் கழித்துவிட்டு, பின் 'டியூப்ளே' என்னும் பிரெஞ்சுக் கப்பலொன்றில் பயணஞ் செய்து 1910 ஏப்ரல் 4-இல் புதுவையை அடைந்தார். அதற்கும் மாறுவேடம் போடவேண்டியிருந்தது. அரசியல் புரட்சிக்காரர் ஆன்மிகவாதியாவது மாற்று வேடமல்ல; மறுபிறப்பு! அது போதாதென்று அரவிந்தர் மாறுவேடமும் போட வேண்டியிருந்தது!

புதுவையில் தஞ்சம்

அரவிந்தர் புதுவை வருவது முன்கூட்டியே தெரிந்திருந்த தால் பாரதியாரும் மண்டையம் சீனிவாசாச்சாரியாரும் அவரைப் புதுவைத் துறைமுகத்தில் எவருமறியாதவாறு வரவேற்று, அழைத்துச் சென்றனர்.

அரவிந்தர் புதுவையை அடைந்த சில தினங்களுக்குள் புரட்சி வீரர் வ.வே. சுப்பிரமணிய ஐயரும், அங்கு சென்று தங்கலானார். பாரதியார், வ.வே.சு. ஐயர், மண்டையம் சீனிவாசாச்சாரியார் ஆகிய மூவரும் தங்கள் மனைவி மக்களையும் புதுவைக்குத் தருவித்துக் கொண்டு விட்டனர். ஆம்; குடும்பம் குடும்ப மாகப் புதுவையில் அடைக்கலம் புகுந்தனர் தேச பக்தர்கள்!

இவர்கள் புதுவை புகுந்தது தேச விடுதலை முயற்சிகளுக்குத் தலைமுழுக்குப் போட்டு அல்ல! அப்படிப் புகுந்தவர் அரவிந்தர் மட்டுந்தான்! அவர்கூட, 'ஆன்மிகம் வளர்ந்தால், அரசியல் விடுதலை தானே கிடைக்கும்' என்று கூறினார்.

பாரதியாரும் மண்டையம் ஆச்சாரியாரும் புதுவை புகுந்த பின் தாங்கள் சென்னையில் நடத்தி வந்த 'இந்தியா' பத்திரிகையின் அச்சகத்தைப் புதுவைக்கு மாற்றிக் கொண்டனர். அங்கிருந்தபடி,

'இந்தியா'வை வெளியிட்டு வந்தனர். புதுவை சென்றபின் சென்னையில் இருந்ததைவிடவும் அதிகமாக 'இந்தியா' புரட்சிக் கனலைக் கக்கியது.

யாத்திரைத் தலம்

வங்கத்தில் அரவிந்தர் 'கர்மயோகி' 'தருமா' பத்திரிகைகளை நடத்தியதுபோல, அதே பெயர்களில் புதுவையில் இருபத்திரிகைகளை பாரதியார் குழுவினர் நடத்தினர். அவை ஆன்மிகப் பிரசார ஏடுகள் என்றே சொல்லிக் கொண்டனர். ஆனால், இந்த ஏடுகள் ஆயுதப் புரட்சிக்கு மறைமுகமாக மக்களைத் தூண்டி வந்தன என்று நெல்லைச் சதி வழக்கில் பிராசிகியூஷன் தரப்பில் கூறப்பட்டது.

பாரதி குழுவினர் புதுவையில் தங்கிய பின்னர், அது தேச பக்தர்களின் யாத்திரைத் தலமாகிவிட்டது! ஐந்தாண்டுச் சிறைத் தண்டனையை அனுபவித்த பின், எதிராஜ் சுதேந்திரநாத் ஆரியா, புதுவை சென்று, அங்குப் பாரதியாரின் விருந்தினராகச் சிறிது காலம் தாங்கினர்.

பிற்காலத்தில் பிரபல எழுத்தாளராக விளங்கிய திரு.வ.ரா. அவர்களும் புதுவை சென்று, அங்கேயே பாரதியாருடன் சிறிது காலம் தங்கினார்.

சுப்பிரமணிய சிவாவும் தமக்கு விதிக்கப்பட்ட ஆறு ஆண்டுக் காலத் தண்டனை முடிவுற்றதும், புதுவை சென்று, அங்கு ஏற்கனவே குடிபுகுந்திருந்த தேச பக்த சகாக்களைக் கண்டு அளவளாவினார்.

புதுவையில் வ.உ.சி.

கப்பலோட்டிய தமிழர் சிதம்பரனார் தமக்கு விதிக்கப்பட்ட ஆறாண்டுக் காலச் சிறைத் தண்டனை முடிந்ததும், புதுவை சென்றார். அவரது புதுவைப் பயணம் பற்றி அவரே கூறுகிறார், கேட்போம்:

''கண்ணனூர்ச் சிறையினின்றும் எனது தண்டனைக் காலம் கழிந்து விடுதலையடைந்த நான் என் குடும்பத்தோடு சென்னை வந்து தங்கியிருந்தேன். பாரதியார், ஸ்ரீநிவாசாச்சாரி முதலிய சென்னைத் தேசபக்தர்களைக் காண வேண்டும் என்ற அவா எனக்கு ஏற்பட்டது. நான் புதுச்சேரிக்குச் சென்றேன். பாரதி வீட்டை விசாரித்துக் கண்டுபிடித்து அங்கு போய்ச் சேர்ந்தேன்.

''பாரதியின் மனைவி மக்களைக் கண்டு களித்தேன். அவருடன் தங்கி அடிசில் உண்டும் ஆவி நீர் குடித்தும், அவரது ஆடல் பாடல்களைக் கண்டும் கேட்டும் அகமகிழ்ந்து சின்னாள் கழித்தேன்.

''பாரதியும் நானும் எங்கள் நண்பர் அரவிந்தர் மாளிகைக்குச் சென்றோம். பலர் என்னிடம் சொல்லியதுபோல அரவிந்தர் ஓர் ரிஷியாயிருக்கவில்லை. தேசபக்தராகவும் தேசத் தலைவராகவுமே விளங்கினார்.''

('வி.ஓ.சி. கண்ட பாரதி - பக்.44)

வறுமையிற் செம்மை!

பாரதியார் புதுவையில் தங்கியிருந்தபோது, அவருடைய மாத வருமானம் 'சுதேசமித்திரன் பத்திரிகையாளரிடமிருந்து கிடைத்து வந்த முப்பது ரூபாய்தான் என்கிறார், அவருடைய மகள் சகுந்தலா பாரதி.

அகப்பட்டவரிடமெல்லாம் பணம்பிடுங்கும் புத்தி அவருக்குக் கிடையாது. அவர் தன்மானி! இந்த நிலையில்தான் பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்து வந்த சக தேசபக்தர்களை யெல்லாம் தமது இல்லத்தில் விருந்தினராக ஏற்று உபசரித்தார். சிலருக்குப் பணவுதவியும் புரிந்திருக்கிறார். திருமதி. சகுந்தலாபாரதி உருக்கமாக ஒரு நிகழ்ச்சியைக் கூறுகிறார்:

''ஆறு வருஷக் கடுங்காவல் தண்டனையை அனுபவித்து விட்டு ஸ்ரீ.ஆர்யா வெளிவந்தார். வந்தவுடன் என் தந்தை புதுவையிலிருப்பதைக் கேள்விப்பட்டு, உடனே அவரைப் பார்ப்பதற்காகப் புதுவைக்கு வந்தாராம்.

''புதுவையில் தம் நண்பர் பாரதியாரைக் கண்டு சிறையில் தாம் பட்ட பாடனைத்தும் சொல்லி மனவாறுதலடைந்தபின், சென்னைக்குப் போக எண்ணினார். ஆனால், ரயில் சத்தம் கொடுக்கப் போதிய பணம் அவரிடம் கிடையாது. என் தாயார் காதிலணிந்திருந்த கம்மல்களை, வீட்டில் வேலை செய்யும் அம்மாக்கண்ணுவிடம் கொடுத்து, அதை அடகு வைத்து ரூபாய் ஏழு வாங்கி அவருக்கு ரயில் சத்தம் கொடுத்தார்களாம்.''

('என் தந்தை' - பக்.25-27)

புதுவையின் பூர்வ குடி மக்கள் தங்களிடம் அடைக்கலம் புகுந்த தேசபக்தத் தமிழர்களுக்குப் பலவகையிலும் உதவி புரிந்திருக்கவேண்டும். அந்த விருந்தாளிகளைச் 'சுதேசிகள்' என்றே அவர்கள் அழைத்தார்களாம்!

வங்காளியான அரவிந்தர் தமிழ் வழங்கும் புதுவையில் அடைக்கலம் புக விரும்பியதில் ஒரு விசேஷமுண்டு. அவர் முதலில் விரும்பியது, பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்து வெளியேறிப் பிரெஞ்சிந்தியாவில் அடைக்கலம் புகத்தான்! அதற்கு, அவர் சந்திரநாகூரைத் தேர்ந்தெடுத்திருக்கலாம்! அப்படித்தான் தேர்ந்தெடுத்து, முதலில் சந்திரநாகூருக்குச் சென்றார். ஆனால், அங்குச் சில நாட்கள் தங்கிய பின், அது பொருத்தமற்ற இடமென்பதை உணர்ந்தார். அப்போது, ஆயுதப் புரட்சியில் அதிக அளவில் ஈடுபட்டிருந்தவர்கள் வங்காளியர்களே. அதற்காக அந்தமானுக்குக் கடத்தப்பட்டவர்களும் வங்காளியரே! சந்திரநாகூரில் வங்காளியரே மிகுதியாக வாழ்வதால் இந்தியாவிலுள்ள புரட்சியாளர்கள் சந்திரநாகூரையும் தங்கள் புரட்சிச் செயல்களுக்குப் பயன்படுத்தி வந்தனர். பிரான்சிலிருந்து ஆயுதங்களைச் சந்திரநாகூர் வழியாகத்தான் பிரிட்டிஷ் இந்தியாவுக்குள் கொண்டு வந்தனர். இதனால், பிரிட்டிஷ் போலீசார் சந்திரநாகூரை முற்றுகையிட்டுப் புரட்சியாளர்களைக் கடுமையாகக் கண்காணித்து வந்தனர். இந்தச் சூழ்நிலையில் சந்திரநாகூரில் தங்குவதிலுள்ள அபாயத்தை அரவிந்தர் உணர்ந்தார். அதனாற்றான் அவர் அப்போது அமைதியின் நிலைக்களமாக இருந்த தமிழ் வழங்கும் புதுவையைத் தேர்ந்தெடுத்து அங்கே அடைக்கலம் புகுந்தார்.

மகரிஷியா, தலைவரா?

தமிழரான பாரதியார் புதுவை சேர்ந்தபின், தமிழக தேசபக்தர் பலர் ஒருவர்பின் ஒருவராக அங்குச்சென்று, தங்கலாயினர். அதுபோல, அரவிந்தரைப் பின்பற்றி வங்கத்துப் புரட்சியாளரில் எவரும் புதுவையில் தஞ்சம் புகுந்ததாகச் செய்தியில்லை. அதனாலும், புதுவை புகுந்த அரவிந்தர் அரசியலோடு தொடர்பற்றவராக இருந்தார் என்பது புலப்படுகிறது. ஆனால், புதுவையில் அரவிந்தரைச் சந்தித்துப் பேசிய வ.உ.சிதம்பரனார், ''பலர் என்னிடம் சொல்லியதுபோல அரவிந்தர் ஓர் ரிஷியாயிருக்கவில்லை. தேசபக்தராகவும் தேசத்தலைவராகவுமே விளங்கினார்'' என்று கூறுகிறார்.

அரவிந்தர் புதுவை புகுந்த ஆரம்பத்தில் அவரை சிதம்பரனார் கண்டாராதலால், அப்போது அவரிடம் பழைய வாசனை கொஞ்சம் இருந்திருக்கலாம். ஆனால், காலம் அவர் ரிஷியாகத்தான் வாழ்ந்தாரென்பதைக் காட்டிவிட்டதல்லவா!

வ.உ.சி. சொல்கிறார்!

புதுவை புகுந்த பாரதியார் குழுவினர் அங்குச் சும்மா யிருக்கவில்லை. அங்கிருந்த வண்ணம் 'இந்தியா,' 'கர்மயோகி,' 'தருமா,' 'சூர்யோதயம்' ஆகிய பத்திரிகைகளை நடத்தி, தொடர்ந்து பிரிட்டிஷ் இந்தியாவில் நடந்து வந்த விடுதலைப் போரை வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் வலுப்படுத்தி வந்தனர். அதனால், அந்த ஏடுகள் பிரிட்டிஷ் இந்தியாவுக்குள் வரக்கூடாதென்று இந்திய அரசு தடையுத்தரவு பிறப்பித்தது. அதன்பின், அந்தப் பத்திரிகைகள் அனைத்துமே நிறுத்தப்பட்டு விட்டன. இந்த நிலையிலும், தேசபக்தர்கள் தங்கள் முயற்சியைக் கைவிடவில்லை. சிறை மீண்டபின் புதுவை சென்று பாரதியார் குழுவினரைச் சந்தித்தது பற்றிக் கூறும் வ.உ.சிதம்பரனார், பாஷைக்கொரு பத்திரிகை நடத்துவது பற்றிப் பாரதியாரிடம் தாம் கூறியதாகக் குறிப்பிடுகிறார். அது வருமாறு:

''தேச அரசாட்சியை மீட்பதற்குரிய பல வழிகளைப் பற்றி மீண்டும் பேசினோம். வழக்கமாக இவ்வாறு நடந்து வந்தது. ஒரு நாள் மாலையில் அரவிந்தர் மாளிகையில் உலக முழுவதிலும் நமது சுதந்திரக் கிளர்ச்சியைப் பரப்ப வேண்டுமென்பது குறித்துப் பேசிக்கொண்டிருந்தேன். இது சம்பந்தமாக அரவிந்தரிடம் நான் இருபத்தேழு பாஷைகளில் பத்திரிகைகள் நடத்தவேண்டும் என்றும், அதற்கான பணத்தைச் சுலபமாகப் பொதுஜனங்களிட மிருந்து பெறலாமென்றும் கூறி ஒரு திட்டமிட்டு அதை அவருக்கு விளக்கிக் கூறிக் கொண்டிருந்தேன்.

''இந்தச் சமயத்தில் பாரதியாரும் ஸ்ரீநிவாசாச்சாரியாரும் அங்கு வந்து சேர்ந்தனர். எனது திட்டத்தைக் கேட்ட பாரதியார் 'கலகவென' நகைத்தார். 'பிள்ளைவாள், நாங்கள் ஒரு பத்திரிகை நடத்தவே திண்டாடும்போது இருபத்தேழு பாஷைகளில் பத்திரிகை நடத்துவது என்பது சாத்தியமா? அதற்கு எவ்வளவு ஆள்வேண்டும்? எவ்வளவு பணம் வேண்டும் இதெல்லாம் நடக்கிற காரியமா ஓய்?' எனக் கேட்டார்.''

(வி.ஒ.சி. கண்ட பாரதி -45-46)

இருபத்தேழு மொழிகளில் பத்திரிகைகள் நடத்தி தேச விடுதலைப் போரை வலுப்படுத்த வேண்டுமென்று வ.உ.சி. கூறினாரென்றால், சிறைமீண்ட பின் அவர் அரசியலுக்குத் தலைமுழுக்குப் போடவில்லையென்பதும், அத்துறையில் மேற்கொண்டு செய்ய வேண்டியவை பற்றிப் பாரதியாருடன் கலந்தாலோசிக்கவுந்தான் அவர் புதுவை சென்றாரென்பதும் புலனாகின்றதல்லவா!

புதுவை, புரட்சிக்குப் புறம்பான இடமென்று நம்பித்தான் அரவிந்தர் அங்கு அடைக்கலம் புகுந்தார். அவர் சென்ற எட்டு தினங்களுக்குள் வ.வே.சு. ஐயர் புதுவை சேர்ந்தாராதலால், அவர் வடிவத்தில் புரட்சியும் புகுந்துவிட்டது புதுவையிலே! ஐயர் புதுவை சென்ற ஆறு திங்களுக்குப்பின் கலெக்டர் ஆஷ் துரையின் கொலையில் சம்பந்தப்பட்டவரென்று தேடப்பட்டு வந்த ஒட்டப்பிடாரம் மாடசாமியும் புதுவையில் தஞ்சம் புகுந்ததாகத் தெரிகிறது. இத்தகவலை வ.உ.சி. மூலம்தான் தெரிந்து கொள்ள முடிகிறது. ஆம்; தாம் புதுவை சென்றிருந்தபோது, அங்கு மாடசாமியைக் கண்டதாக வ.உ.சி. கூறுகிறார். இதோ, அவரது வாக்குமூலம்:

''நான் புதுவையில் பாரதியார் வீட்டில் தங்கியிருந்த காலத்தில் நண்பர் வ.வே. சுப்பிரமணிய ஐயர் எங்கள் வீட்டிற்கு அடிக்கடி வந்து எங்களுடன் சம்பாஷித்துக் கொண்டிருந்தார். அவரது எளிய உடை பாவனைகளும், உள்ளும் புறமும் ஒத்த பேச்சும் அவரது தேசாபிமான நிறைவும் என்னைப் பெரிதும் கவர்ந்தன.

''கலெக்டர் மிஸ்டர் ஆஷ் துரை கொலை சம்பந்தமாக நான் ஏற்கனவே அறிந்தவற்றை புதுவை நண்பர்களிடம் தெரிவித்து ஒப்பிட்டு, உண்மை அறிந்தேன். ஒட்டப்பிடாரம் மாடசாமிப் பிள்ளையையும் கண்டு பேசினேன்.''

(வி.ஓ.சி. கண்ட பாரதி - பக். 46.47)

துப்பாக்கிப் பயிற்சி!

மாடசாமி புதுவையில் புகுவதற்கு முன்பே அவரும் ஆஷ்துரையைக் கொன்ற வாஞ்சிநாதனும் வேறு சிலரும் புதுவையில் முகாம் போட்டிருந்த புரட்சி வீரரான வ.வே.சு. ஐயருடன் தொடர்பு கொண்டிருந்ததாகவும், இவர்கள் புதுவைக்குச் சென்று ஐயரிடம் துப்பாக்கியால் சுடுவதற்குப் பயிற்சி பெற்றதாகவும் நெல்லை சதிவழக்கில் பிராசிக்யூஷன் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப் பத்திரிகை கூறுகின்றது. சென்னையில் அரசு ஆவணக் காப்பகத்திலுள்ள காவல்துறையின் ரகசியக் குறிப்புகளும் இதனை உறுதிப்படுத்துகின்றன. இந்தத் தகவல் 'ரௌலட் கமிட்டி'யின் அறிக்கையிலும் (பக். 164 இல்) எடுத்தாளப்பட்டுள்ளது. ஆனால், புதுவையில் நெல்லைப் புரட்சியாளர்கள் வ.வே.சு. ஐயருடன் சேர்ந்து நடத்தியதாகச் சொல்லப்படும் சதியிலே அரவிந்தர் சம்பந்தம் கொண்டிருந்ததாக அரசாங்கத் தரப்பில் கூறப்படவில்லை.

புதுவையில் பாரதியார் குழுவினரைக் கண்காணிக்க பிரிட்டிஷ் இந்தியப் போலீசார் அங்கு முற்றுகை செய்திருந்தனர். மணியாச்சியில் ஆஷ் துரையை வாஞ்சி ஐயர் சுட்டுக் கொன்றபின் புதுவையில் பிரிட்டிஷ் போலீசாரின் கெடுபிடிகள் அதிகமாகி விட்டன. ஆஷ் கொலையில் வ.வே.சு ஐயரை சம்பந்தப்படுத்தித் தூக்குத் தண்டனைக்கோ, ஆயுள் தண்டனைக்கோ அவரை ஆளாக்கிவிட பிரிட்டிஷ் அரசாங்கம் துடியாய்த் துடித்தது. இதுபற்றி ஐயரிடம் பல்லாண்டுக் காலம் நெருங்கிப் பழகிய திரு.வெ. சாமிநாத சர்மா கூறுவதைக் கேட்போம்:

''1911 -ஆம் வருடம் திருநெல்வேலி ஜில்லா கலெக்டராக இருந்த ஆஷ் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தக் கொலைக்கும் புதுச்சேரியிலிருந்த தியாகிகளுக்கும் ஏதோ தொடர்பிருக்க வேண்டுமென்று அரசினர் சந்தேகித்தனர். ஐயர் முதலானோருக்குப் போலீஸ் தொந்தரவுகள் அதிகரித்தன.

''ஒரு நாள் ஐயர் தெரு வழியாகப் போய்க் கொண்டிருந்தார். சில போக்கிரிகள் அவரைப் பின் தொடர்ந்தார்கள். அவரைப் பலவந்தமாக தூக்கிக் கொண்டு போய் பிரிட்டிஷ் எல்லையில் விட்டுவிட வேண்டுமென்பது இவர்களது எண்ணம். ஐயருக்கு இது தெரிந்தது. ஒரு சந்துக்குள் வேகமாகச் சென்றார் அங்கு ஒரு பிள்ளையார் கோவில் இருந்தது. அதற்குள் நுழைந்து, அங்கிருந்த விக்கிரகத்தின் பின்னால் மறைந்து கொண்டார். பின்தொடர்ந்த போக்கிரிகளுக்கு, இவர் போன இடம் தெரியவில்லை. இரவு பூராவும் விக்கிரகத்தின் பின்னாலேயே இருந்துவிட்டு, மறுநாள் காலை வீட்டுக்கு வந்து சேர்ந்தார்.''

('நான் கண்ட நால்வர்' - பக், 140)

புதுவையை விலைக்கு வாங்க முயற்சி!

இப்படி ஐயரைப் புதுவையிலிருந்து பிரிட்டிஷ் இந்தியா வுக்குள் கடத்திவரப் போலீசார் செய்த தந்திரங்கள் பவலற்றைப் பற்றி திரு.சர்மா தமது நூலில் மேலும் தகவல்கள் தருகிறார்.

சென்னை மாநிலத்தில் வன்முறை நிகழ்ச்சிகள் எங்கு நிகழ்ந்தாலும், நிகழ்வதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன என ஐயுற்றாலும் சென்னை மாநிலப் போலீசாரின் விஷக் கண்பார்வை புதுவை மீதே விழுந்தது.

1914-இல் இரண்டாவது உலகப் பெரும்போர் மூண்டபோது 'எம்டன்' என்னும் ஜெர்மன் கப்பலொன்று சென்னை நகரில் குண்டு வீசியதை ஏற்கனவே அறிந்தோம், இந்த நிகழ்ச்சியா லும் புதுவையிலிருந்த தேசபக்தர்கள் தொல்லைப்பட்டனர்.

புதுவையில் தஞ்சம் புகுந்த விடுதலை வீரர்களைச் சிறைப் பிடிப்பதற்காக, அந்த நகரையே பிரெஞ்சு அரசிடமிருந்து விலைக்கு வாங்கவும் பிரிட்டிஷ் அரசு முயன்றது. முதல் உலகப் பெரும்போர் நிகழ்ந்த காலத்திலே ஜெர்மனிக்கு எதிராகப் பிரிட்டனும் பிரான்சும் நேச நாடுகளின் கூட்டணியில் இணைந் திருந்தனவாதலால், பிரிட்டனுக்கு இசைவாக நடந்து கொள்ளப் பிரான்ஸ் கடமைப்பட்டிருந்தது. இதுபற்றிப் பாரதியாரின் மகள் தங்கம்மாள் பாரதி கூறுவதைக் கேட்போம்:

''ஒரு சமயம் புதுவை நகரைப் பிரெஞ்சுக்காரர்கள் ஆங்கிலேயருக்கு விற்று விடுவதாகப் பேச்சு நடந்தது. அப்பொழுது அங்கிருந்த 'சுதேசி'களை ஆங்கிலேயரிடம் காட்டிக் கொடாமல், பிரெஞ்சுக்காரர்களுக்குச் சொந்தமான அல்ஜேரியாவுக்கு அனுப்புவதாகப் பிரெஞ்சுக் கவர்னர் ஒப்புக் கொண்டார். அவ்வாறே போவதற்கு ஸ்ரீ.வ.வே.சு ஐயர், ஸ்ரீஅரவிந்தர், ஸ்ரீ ஸ்ரீனிவாசாச்சாரியார் எல்லோரும் ஸம்மதித்துவிட்டார்கள். என் தந்தை மட்டும் 'என் மனைவி மக்களையும் என்னுடன் வர அனுமதித்தால்தான் போக முடியும். இல்லாது போனால் விதிப்படி நடக்கட்டுமென்று நான் புதுவையிலேதான் இருப்பேன்' என்று கூறினார். அவ்வாறே அனுப்பவும் பிரெஞ்சுக்காரர் சம்மதித்து விட்டார்கள். கடவுளின் அருளால் புதுவையை விற்கவுமில்லை; நாங்கள் பாலைவனத்துக்குப் போக வேண்டிய அவசியம் நேரவுமில்லை.''

('என் தந்தை' பக்.45)

'சூர்யோதயம்!'

நெல்லைச் சதிவழக்கில் முதல் குற்றவாளியாக்கப்பட்ட திரு. நீலகண்ட பிரம்மச்சாரியாரும் புதுவையில் ஐயரைச் சார்ந்திருந்த புரட்சியாளரில் ஒருவராவார். இவர் புதுவையிலிருந்த வண்ணம் 'சூரியோதயம்' என்னும் பத்திரிகை ஒன்றை நடத்தி வந்தார். அந்தப் பத்திரிகைக்கும் பிரிட்டிஷ் இந்தியாவுக்குள் வருவதற்குத் தடை விதிக்கப்பட்டது.

புதுவை புகுந்த தேசாபிமானிகள் அங்கு அச்சத்தால் நடுங்கிக் கொண்டு காலத்தை வீணே கழிக்காமல், தேச விடுதலை முயற்சியில் துணிவுடன் ஈடுபட்டு வந்தனரென்று புதுவை சென்று திரும்பிய பின் வ.உ.சி எழுதுகிறார்:

''நெல்லைக் கலெக்டர் ஆஷ் துரையைத் துப்பாக்கியால் சுட்டுக் கொல்வதற்கு உடந்தையாக இருந்தவர் என அப்போது சொல்லப்பட்ட என் ஊர் (ஒட்டப்பிடாரம்) மாடசாமிப் பிள்ளை

யும் புதுவை புகுந்தார். இவ்விதமாக இந்திய தேசாபிமானிகள் பலர் புதுவையில் குடியேறி, நிலையாகத் தங்கிப் பத்திரிகைகள் வாயிலாகவும், வேறு வழிகளிலும் நமது தேச அரசாட்சியை மீட்பதற்குரிய வேலைகளைச் செய்து கொண்டிருந்தனர். அவர்களிடம் தோன்றிய சுதந்திர ஜோதி தமிழ்நாடு முழுவதும் சுடர் வீசிக் கொண்டிருந்தது.''

புதுவையிலிருந்த புரட்சியாளர்களிலே, நெல்லைச் சதி வழக்கில் சேர்க்கப்பட்ட குற்றவாளிகளில் ஒருவரான ஒட்டப் பிடாரம் திரு. மாடசாமியைப் பிடிப்பதிலேதான் பிரிட்டிஷ் இந்திய போலீசார் அதிக அளவில் அக்கறை காட்டினர். அவரைக் கைது செய்வதற்கெனக் காவல்துறை இன்ஸ்பெக்டர் ஜி.எஸ். அப்துல் கரீம் (சி.ஐ.டி) என்பவரைப் புதுவைக்கு அனுப்பி அங்கேயே முகாம் போட வைத்தது சென்னை அரசு.

சி.ஐ.டி. நடமாட்டம்!

பாரதியார் வாழ்ந்துவந்த புதுவை ஈஸ்வரன் தருமராசா கோவில் வீதியிலேதான் சென்னை மாகாண ரகசிய போலீசார் இடைவிடாமல் நடமாடிக் கொண்டிருந்தனர். இதுபற்றிப் பிற்காலத்தில் 'பாரதிதாசன்' என்னும் புனைப்பெயர் பெற்று விட்ட கவிஞர் கனக சுப்புரத்தினம் தரும் தகவல் வருமாறு:

''அரவிந்தகோஷ் வீட்டுக்கெதிரில் சுமார் பதினைந்து பிரிட்டிஷ் ரகசியப் போலீஸ்காரரை ஸ்திரமாகப் போட்டு வைத்தார்கள். ஈஸ்வரன் தருமராசா கோவில் தெருவில் எழுபது ரகசியப் போலீஸ்காரர்களைத் திரியவிட்டு வைத்தார்கள்.

''அப்போதெல்லாம் புதுவை ஈஸ்வரன் தருமராசா கோவில் வீதி சுதேசிகளின் ஸுகவாசத்திற்குப் பேர் போனது. பாரதியார் வீடு, வ.வே.சு. ஐயர் வீடு, பொன்னு முருகேசம் பிள்ளை வீடு, வாத்தியார் சுப்பிரமணிய ஐயர் வீடு - அனைத்தும் அந்தத் தெருவில்தான்! இவர்களுக்கெல்லாம் சி.ஐ.டி. போட்டிருந்தார்கள்.

'பாரதியார் வெளியில் புறப்படுவார். சி.ஐ.டி. பின் தொடருவான். சட்டப்படி அவன் பாரதியாரை அதிகமாக நெருங்கலாகாது. சற்று எட்டியே தொடர வேண்டும். அவன் நெருங்கிவிடும் நேரமோ, அவன் தொந்தரவுபடும் நேரமாகும். பாரதியார் அவனைத் திரும்பிப் பார்ப்பார்.

* ''வி.ஓ.சி. கண்ட பாரதி'' பக்.44.

அவரின் விழி கோபத்தை அடையும். அவன் செய்வது குற்றம் என்று அர்த்தம். நேர்ந்தது தொல்லை சி.ஐ.டிக்கு.

''பாரதியாரை, சுதேசிகளை, ஒரு பிரிட்டிஷ் சி.ஐ.டி. அவமதிப்பானானால் புதுவையில் உள்ள பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களின் ஆணிவேர் ஆடும்! பாரதியாருக்கு அத்தனைச் செல்வாக்கு!''

புதுவையில் தஞ்சம் புகுந்த புரட்சி வீரர்கள் சதா சர்வ காலமும் பிரிட்டிஷ் இந்தியப் போலீசாரின் கண்காணிப்பில்தான் வாழவேண்டி யிருந்ததென்பதனை மேலே தந்துள்ள தகவல்கள் காட்டும்.

நெல்லைக் கலெக்டர் ஆஷ் துரையைக்கொன்ற வாஞ்சிக்கும் புதுவையில் தங்கியிருந்த வ.வே.சு. ஐயருக்கும் நெருங்கிய தொடர்பிருந்ததாக நெல்லைச் சதிவழக்கு சம்பந்தமான காவல் துறை தஸ்தாவேசு கூறுகின்றது. அது வருமாறு:

''பாண்டிச்சேரியிலுள்ள பிரிட்டிஷ் அஞ்சல் அலுவலகத்தின் தலைமைக் குமாஸ்தா என்.கே. சீனிவாச ஐயங்கார் சாட்சியம் கூறுகையில் வாஞ்சியின் போட்டோ அவரிடம் காண்பிக்கப் பட்டது. வாஞ்சியை அடையாளம் காட்டி, பாண்டிச்சேரியில் 1911 ஏப்ரலில் வ.வே.சு. ஐயருடன் இருபது நாட்கள் தங்கி நெருக்கமாகப் பழகியதாகவும் என்.கே. சீனிவாச ஐயங்கார் சாட்சி கூறினார். இந்தச் சாட்சியம் பாண்டிச்சேரியிலுள்ள அராஜகக் கட்சியோடு வாஞ்சிக்கு உள்ள தொடர்பைக் காட்டுகிறது.''

'ரௌலட் தகவல்!'

திரு.வ.வே.சு. ஐயர் பாரிஸ்டர் படிப்பை முன்னிட்டு இங்கிலாந்தில் தங்கியிருந்த காலத்திலே ஆயுதப் புரட்சியில் நம்பிக்கை வைத்திருந்தார் என்பதற்கு எத்தனையோ சான்று களுள்ளன. அன்று அவரது குருவாக விளங்கிய வீர சவர்க்காரும் அதனை உறுதிப்படுத்துகின்றார். ஆனால் புதுவையில் ஐயர் தங்கியிருந்த போது அவர் ஆயுதப் புரட்சியில் நம்பிக்கை கொண்டவராக இருந்தார் என்பதற்கு அரசாங்கக் குறிப்புகளைத் தவிர வேறு தகவல்கள் இல்லை. ஐயரைப் பற்றி 'ரௌலட் கமிட்டி அறிக்கை' தரும் தகவல் வருமாறு:

*'நெல்லைக் கலவரம்' பாகம்.3. பக் 827

''வாஞ்சி ஐயர் தனது வேலையில் விடுப்பெடுத்துக் கொண்டு பாண்டிச்சேரிக்குச் சென்றார். அங்கு வ.வே.சு. ஐயரிடம் துப்பாக்கியால் சுடுவதற்குப் பயிற்சி பெற்றார். வ.வே.சு. ஐயர் மகரிஷி என்றும் அழைக்கப்படுகிறார். இவர் சில ஆண்டுகள் ஐரோப்பாவிலிருந்தார். அங்கு இவருக்கு விநாயக சவர்க்கார், சியாம்ஜி கிருஷ்ண வர்மா, மேடம் காமா ஆகியோருடன் தொடர்பிருந்திருக்கிறது. இவர் உயர் கல்வி கற்றவர். சமஸ்கிருதத்திலும் ஆங்கிலத்திலும் நிறை புலமையுடையவர்.

'இவர் ஐரோப்பாவிலிருந்து திரும்பியதும் பாண்டிச் சேரியில் முகாம் செய்தார். இந்திய அரசியலில் இவர் தேச பக்தராகவும், தீவிர தேசியவாதியாகவும் இருந்திருக்கிறார். இந்தியாவின் சுதந்திரத்தை வன்முறையால்தான் பெற முடியுமென்ற நம்பிக்கை கொண்டவர். இந்திய சுதந்திரத்திற்குப் போராடுவதற்காக ஒவ்வொரு இந்தியனும் ஆயுதப் பயிற்சி பெற வேண்டுமென்ற எண்ணம் ஐயருக்கு இருந்திருக்கிறது. கைத் துப்பாக்கியால் சுடுவதற்குப் பயிற்சி பெறக் கூடிய இளைஞர் படை ஒன்றை இவர் திரட்டினார். தார்மிக ரீதியிலும் தேக வலிமையிலும் பயிற்சி பெறுவதற்காக வாலிபர்கள் பலர் பாண்டிச்சேரி சென்றனர். ரகசியப் பிரசுரங்களைத் தயாரிக்கவும், ஆயுதங்களைக் கடத்தி வரவும் பாண்டிச்சேரி பாதுகாப்பான இடமாக இருந்தது.

''வாஞ்சி ஐயரும் சங்கரகிருஷ்ண ஐயரும் பாண்டிச்சேரி சென்று வ.வே.சு. ஐயரிடம் துப்பாக்கியால் சுடுவதற்குப் பயிற்சி பெற்று, பின்னர் ஆஷைக் கொலை செய்யும் முயற்சியில் ஈடுபட்டனர்.'

வ.உ. சிதம்பரம் பிள்ளை சிறையிலிருந்து விடுதலையாக விருந்த நேரத்திலே அவரது விடுதலை குறித்து சென்னை மாகாண அரசாங்கம் கொண்டிருந்த அச்சத்தை இங்கு விளக்குவது அவசியமாகும். சிதம்பரனார் 24-12-1912 இல் விடுதலையானார். விடுதலையாவதற்கு முன்பே அவரைத் திரும்பவும் சிறையில் தள்ளுவதற்கு அதிகார வர்க்கம் சதி செய்தது. 25-10-1912 இல் திருநெல்வேலி மாவட்ட போலீஸ் சூப்பிரண்டெண்ட் (சி.ஐ.டி.), போலீஸ் டி.ஐ.ஜி., ரெயில்வே அதிகாரிகள் ஆகியோருக்கு போலீஸ் ஐ.ஜி. விடுத்த சுற்றறிக்கை வருமாறு:

அரசு ஆவணக் காப்பகத்தில் உள்ள காவல்துறை குறிப்பு: பாகம்-1; பக். 17.

''வ.உ.சி. அவர்கள் 1912 டிசம்பர் 24 இல் விடுதலையாக இருக்கிறார். உடனே அவரைக் கண்காணிக்க வேண்டும். அவர் போகிற இடங்களை எனக்குத் தந்தி மூலம் தெரிவிக்க வேண்டும். நெல்லை ஜில்லாவுக்கே அவர் வருவாரானால் அவரைச் சந்திக்க யார் யார் வருகிறார்கள் என்பதைக் கண்காணிக்க எல்லா ரயில்வே நிலையங்களிலும் ஆட்களை ஏற்பாடு செய்யவிருக்கிறேன். இந்தச் செய்தியை அந்தந்தப் போலீஸ் நிலையங்களிலும் அவர் வருகை பற்றி விவரங்கள் குறிப்பிடப்பட வேண்டும்.

''நெல்லை ஜில்லாவில் அவர் எங்கேபோய் இறங்குகிறாரோ அங்கு அவருடைய நடவடிக்கைகளை கவனிக்கவும். அவரைச் சந்திக்கிறவர்களைப் பற்றிக் குறிப்பெடுக்கவும் ஒரு சப்-இன்ஸ் பெக்டரையும் ஒரு ஹெட் - கான்ஸ்டபிளையும் அனுப்பவிருக்கிறேன். இதைப் போலீஸ் ஸ்டேஷன் டைரியில் குறித்து வைத்து அவரைச் சந்திக்கிறவர்கள் யாராயிருந்தாலும் அவர்கள் சந்தேகத்தற்குரியவர்கள் என்று நிர்ணயிக்க வேண்டும்.

''இந்தியன் பினல்கோட்படி தண்டனைக்குரிய செயலை வ.உ. சிதம்பரம்பிள்ளை செய்வாரானால், உடனே நடவடிக்கை எடுப்பதிலும் அதற்காக அவர்மீது வழக்குத் தொடுப்பதிலும் தாமதம் ஏற்படக்கூடாது. இதுபோன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வழக்கும் வெற்றிகரமாக முடிந்துவிட்டால், வ.உ.சிதம்பரனார் ராஜத்துவேஷக் குற்றத்தை மீண்டும் செய்கிறார் என்ற அடிப்படையில் அவரை நாடு கடத்துவதற்கும் அனுமதி கோரப்படும்.

''நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தமக்கு எதிர்காலம் இல்லை என்பதை வ.உ.சிதம்பரம் பிள்ளை அறிந்திருந்தால், பாண்டிச்சேரியை நோக்கி அவர் போய்விடக் கூடும். இருந்தாலும், நெல்லையில் நிலைமை எப்படி இருக்கிறதென்பதை அறிய அவர் முயற்சிக்கக் கூடும்.''

இதிலிருந்து, விடுதலை பெற்ற வ.உ.சி. போலீசாரால் எவ்வளவு தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு வந்தார் என்பது புலனாகும். தம்மைப் போலீசார் கண்காணிக்கிறார்கள் என்பது அவருக்கும் தெரியும். திரும்பவும் சிறையில் தள்ள அதிகார வர்க்கம் திட்டமிட்டு வைத்திருக்கிறது என்பதும் அவர் அறியாதது அல்ல. அறிந்திருந்தும், 'புரட்சியாளர்கள்' என்று போலீசாரால் கருதப்பட்டு வந்த தம்முடைய தேசபக்த சகாக்களைக் காண வ.உ.சி. புதுவைக்குச் சென்றிருக்கிறார். ஆனால், மேலே தந்துள்ள போலீஸ் சுற்றறிக்கை கூறுவதுபோல, திரும்பவும் சிறை

புகுவதற்கு அஞ்சி அவர் புதுவையில் தஞ்சம் புகவில்லை. நண்பர்களுடன் அளவளாவி முடிந்ததும் தம்மைக் கண்காணித்து வரும் சென்னை மாகாணப் போலீஸ் வியூகத்திற்கே திரும்பவும் வந்து விட்டார்.

புதுவையில் அடைக்கலம் புகுந்த புரட்சி வீரர்களைக் கண்காணித்து வந்ததற்கு அதிகமாகப் பிரிட்டிஷ் இந்தியப் போலீசாரால் அங்கு எதுவும் செய்ய இயலவில்லை. அவர்களைக் கைது செய்து பிரிட்டிஷ் இந்தியாவுக்குக் கொண்டுவந்து, பொய் வழக்குகளைச் சோடித்து, அவர்களைச் சிறையில் தள்ளவோ நாடு கடத்தவோ வேண்டுமானால், அதற்குப் பிரெஞ்சிந்திய அரசின் ஒத்துழைப்புத் தேவைப்பட்டது. ஆனால், அத்தகைய ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை. அதனால், புதுவையில் தங்கியிருந்த தேசபக்தர்கள் மீது கெடுபிடிகளை அமுல் நடத்துவதோடு சென்னை மாகாணப் போலீசார் திருப்தியடைய வேண்டியதாயிற்று.

தடை முயற்சி

பிரெஞ்சு இந்தியப் பிரதேசங்களிலிருந்து பிரிட்டிஷ் இந்தியப் பிரதேசங்களுக்கு ஆயுதங்கள் கடத்திச் செல்லப் படுவதைத் தடுக்கப் பாண்டிச்சேரி கவர்னர் 1907-இல் முயற்சி எடுத்தார். அதற்காக, ஆயுதத் தடை மசோதா ஒன்றைத் தயாரித்து, அதைப் பிரெஞ்சு அரசின் அங்கீகாரத்திற்கு அனுப்புவதற்குப் பாண்டிச்சேரி சட்டமன்றத்தின் அனுமதியைக் கவர்னர் கோரினார். அப்போது அவர் பேசியதாவது:

> ''கனவான்களே! நம்மைச் சுற்றியுள்ள பிரிட்டிஷ் பிரதேசங்களில் ஐரோப்பியருக்கெதிராக நமக்கு வருத்தத்தைத் தரக்கூடிய வகையில் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அதனாலேயே இந்த ஆயுதச் சட்டத்தைக் கொண்டுவர நாம் கட்டாயப் படுத்தப்பட்டிருக்கிறோம். ஆயுதங்களையும் தோட்டாக்களையும் எடுத்துச் செல்வதையோ, விற்பனை செய்வதையோ கட்டுப்படுத்தியாக வேண்டிய நிர்ப்பந்தம் நமக்கு ஏற்பட்டிருக்கிறது.''

பாண்டிச்சேரி கவர்னர் கோரியபடி பிரெஞ்சு இந்தியப் பிரதேசங்களில் ஆயுதச் சட்டத்தை அமுல் நடத்துவதற்கான அனுமதியைத் தர பிரெஞ்சுப் பேரரசு மறுத்துவிட்டது.

ரௌலட் கமிட்டி அறிக்கை'; பக். 91-92

கெடுபிடிப் போர்!

இந்தியப் புரட்சி வீரர்களைக் கைது செய்யப் பிரெஞ்சு இந்திய அரசின் ஒத்துழைப்புக் கிடைக்காததனால், அவர்களில் ஒவ்வொருவரையும் ஏதேனும் ஒரு வகையில் ஏமாற்றிப் பிரிட்டிஷ் இந்திய எல்லைக்குள் கொண்டு வரப் புதுவையில் முற்றுகை யிட்டிருந்த சென்னை மாகாண ரகசியப் போலீசார் சதா முயன்றவண்ணமிருந்தனர். அந்த வகையில் வ.வே.சு. ஐயர் விஷயத்தில் சென்னைப் போலீசாரால் எடுக்கப்பட்ட முயற்சி களையும், அவற்றில் அவர்களுக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தையும் ஏற்கெனவே அறிந்தோம்.

1908 தொடங்கி 1920 வரை புதுவையில் அடைக்கலம் புகுந்த தேச பக்தர்களுக்கும், அவர்களைக் கண்ணி வைத்துப் பிடிப்பதற் காக அங்கு முற்றுகையிட்டிருந்த சென்னை மாகாணப் போலீசாருக்குமிடையே 'கெடுபிடிப் போர்' நடந்தவண்ண மிருந்தது. இந்த நிலையில் அந்தத் தேச பக்தர்கள் எப்படி மன அமைதியோடு அங்கு வாழ்ந்திருக்க முடியும்?

அரவிந்தர், பாரதியார், வ.வே.சு.ஐயர், மாடசாமி ஆகியோர் புதுவையில் அடைக்கலம் புகுந்தபின், அவர்கள் சாதித்தது என்ன? பிரிட்டிஷ் இந்தியாவில் நடைபெற்று வந்த விடுதலைக் கிளர்ச்சிக்கு அவர்களால் எந்த அளவில் உதவி புரிய முடிந்தது? இந்த வினாக்களுக்கு விடையளிப்பது சிறிது கஷ்டந்தான்.

பற்றுகளைத் துறந்த பரம ஞானி!

புதுவையில் அடைக்கலம் புகுந்த தேச பக்தர்கள் ஒரே மனப் போக்கினர் அல்லர். இந்தியாவிலேயே வெடிகுண்டுப் பிரதேசமாக விளங்கிய வங்காளத்தைச் சார்ந்தவரான அரவிந்தர், அரசியலுக்கு அடியோடு தலைமுழுக்குப் போட்டு விட்டுத்தான் புதுவைக்குள் புகுந்தார். புதுவையில் தஞ்சம் புகுந்த பின் இந்திய தேசம் விடுதலை பெற்ற நாள் வரை அங்கேயே அவர் வாழ்ந்தார். இடைக்காலத்தில் அவர் இந்திய மண்ணில் கால் வைக்கவே இல்லை. வங்காளத்திலிருந்த தமது குடும்பத்தாரோடு அவர் தொடர்பு வைத்திருந்ததாகவும் தெரியவில்லை. ஆம்; பற்றுகள் அனைத்தையும் துறந்துவிட்ட பரம ஞானியாகவே அரவிந்தர் புதுவை ஆசிரமத்துக்குப் பெருமை சேர்த்தார். ஆகவே, இந்திய விடுதலைப் போருக்கு அவரால் கிடைத்த உதவி எதுவுமே இல்லையென்று சொல்லிவிடலாம்.

வ.வே.சு. ஐயர் நிலை

வ.வே.சு. ஐயர் விஷயத்தில் அரசாங்க தஸ்தாவேஜுகள் சொல்வதையெல்லாம் நாம் நம்புவோமானால், அவர் ஆயுதப் புரட்சியில் நம்பிக்கை கொண்ட ஒரு பயங்கரவாதியாகவே புதுவையில் வாழ்ந்தார் என்ற முடிவுக்கே வரவேண்டியிருக்கும்.

புதுவையிலிருந்த காலத்தில் பயங்கர இயக்கத்தோடு ஐயருக்குத் தொடர்பிருந்ததற்கு அவருடைய எழுத்துகளிலிருந்து சான்று கிடைக்கவில்லை. தம்மோடு நெருங்கிப் பழகியவர்களிடம் பிற்காலத்தில் அவர் ஏதேனும் சொல்லியிருக்கலாம். அதனாற்றான், அவர் மறைந்தபின் வெளியான பல பிரசுரங்களிலே புதுவையில் அவர் பயங்கர இயக்கத்துடன் தொடர்பு கொண்டிருந்தார் என்ற செய்திகள் நாட்டில் பரவின போலும்!

புதுவையிலிருந்த தேச பக்த சகாக்களைச் சந்தித்த வ.உ. சிதம்பரனார்,

''கலெக்டர் மிஸ்டர் ஆஷ்துரை கொலை சம்பந்தமாக நான் ஏற்கெனவே அறிந்தவற்றைப் புதுவை நண்பர்களிடம் தெரிவித்து ஒப்பிட்டு உண்மையறிந்தேன்''*

என்று கூறுகின்றார். புதுவையில் வ.உ.சி. சந்தித்த நண்பர்கள் வ.வே.சு. ஐயர், பாரதியார், மாடசாமிப் பிள்ளை ஆகியோராவர். இவர்களிலே மாடசாமிப் பிள்ளை கலெக்டர் ஆஷ்துரை கொலை சம்பந்தப்பட்ட நெல்லைச் சதி வழக்கிலே ஒரு குற்றவாளி என்பதனை இங்கு நினைவில் கொள்ள வேண்டும்.

வன்முறைக்கு எதிரி!

''ஆஷ் துரை கொலை சம்பந்தமாக நான் ஏற்கெனவே அறிந்தவற்றைப் புதுவை நண்பர்களுடன் தெரிவித்து ஒப்பிட்டு உண்மையறிந்தேன்'' என்று வ.உ.சி. கூறினாலும், தாம் அறிந்த உண்மை என்னவென்பனத அவர் கூறவில்லை.

மற்றவர்கள் நிலை எதுவானாலும் சரி; பாரதியாரைப் பொறுத்த வரையில் ஆயுதப் புரட்சியில் நம்பிக்கையற்றவராகவே அவர் புதுவையில் வாழ்ந்தார். அதிலே வ.வே.சு. ஐயருடனோ, மாடசாமியுடனோ அவர் உடன்பாடுடையவராக இருக்கவில்லை. ஆஷ் கொலையுண்டபோதே அதை வன்மை

* 'வி. ஓ. சி. கண்ட பாரதி' பக். 47

யாகக் கண்டித்து எழுதினார் பாரதியார். இது ஒன்றே அவர் கொலை வழியில் நம்பிக்கையற்றவர் என்பதற்குச் சான்றாகும்.

வ.உ.சி.யின் துணிவு!

வ.உ. சிதம்பரனார் தம்முடைய நண்பர்களைப் பார்க்கப் புதுவை சென்றபோது, அவரையும் புதுவையிலேயே நிறுத்திக் கொள்ள அங்கிருந்த தேசபக்தர்கள் முயன்றதாகத் தெரிகிறது. சிதம்பரனார் அதை விரும்பவில்லை. பிரிட்டிஷ் இந்தியாவி லிருந்து கொண்டு ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரில் தொடர்ந்து ஈடுபடவும் அதன் மூலம் திரும்பவும் சிறை புகவும் அவர் துணிவு பெற்றிருந்தார் என்று சொல்லலாம்.

இரண்டு ஆயுள் தண்டனையோ, நாலரையாண்டுச் சிறைவாசத் துன்பமோ வ.உ.சியைப் பயமுறுத்திவிடவில்லை. அதனாற்றான், *1912* டிசம்பரில் தாம் சிறையிலிருந்து விடுதலை பெற்றதும் தம்முடைய தேச பக்த சகாக்களைப் பார்க்க அவர் மிகுந்த துணிவோடு புதுவைக்கு ஓடோடிச் சென்றார். பல வாரங்கள் அங்குத் தங்கினார். அங்கிருந்த புரட்சி வீரர்களோடு கலந்து பேசிச் சாத்விக முறையில் விடுதலைப் போரைத் தொடர்ந்து நடத்தத் திட்டம் தயாரித்தபின், பிரிட்டிஷ் இந்தியாவுக்குத் திரும்பினார்.

பாரதியின் பணி!

பாரதியார் புதுவை புகுந்தில்லையானால், சிதம்பரனாரை யும் சிவாவையும் போன்று அவரும் ஆண்டுக்கணக்கில் சிறையில் அடைபட நேர்ந்திருக்கும். பாரதி ஒரு இயற்கைக் கவிஞர்; ஆன்ம ஞானி, சுதந்திரத்தை இழந்து சிறையில் வாழ நேர்ந்திருந்தால் அந்தக் கவிஞனுடைய சிந்தனா சக்தியே செத்துப் போயிருக்கும். அதனாற்றான், பாரதியார் புதுவையில் அடைக்கலம் புகுந்தார்.

பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு, ஆகிய சிறுகாப்பியங் களும், கண்ணன் பாட்டு போன்ற பாடற்றொகுப்புகளும், புதிய ருஷ்யா போன்ற தனிப்பாடல்களும் பாரதியார் புதுவையிலிருந்த போது படைத்தவையாகும்.

ஜார் ருஷ்யா சோவியத் ருஷ்யாவாக மாறியபோது பாரதியார் புதுவையில் இருந்தார். 'புதிய ருஷ்யா' என்னும் தலைப்பில் பொதுவுடைமை ருஷ்யாவை வரவேற்று, அதற்கு வாழ்த்துக் கூறிக் கவிதை புனைந்தார்.

தமிழுக்கு அதிர்ஷ்டம்!

புதுவையிலிருக்கும் போதுதான் உரை நடைத் தமிழுக்குப் புது வாழ்வளிக்கும் கட்டுரைகளையும் கதைகளையும் எழுதி வழங்கினார். புதுவையிலிருந்த வண்ணம் அவர் எழுதி அனுப்பிக் கொண்டிருந்த எண்ணற்ற தேசியப் பாடல்களைப் பாடிப் பாடிப் பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்த தேச பக்தர்கள் நாட்டு மக்களுக்கு விடுதலை ஆவேசத்தை ஊட்டினர். இது, பாரதியார் சிறை வாழ்வைத் தவிர்த்தனால் இந்திய விடுதலைப் போருக்குக் கிடைத்த நற்பயனாகும். அந்த மகாகவி புதுவையில் தஞ்சம் புகுந்தது தமிழன்னைக்கு அதிர்ஷ்டமாகப் போய் விட்டது.

'புலவன் வறுமை!'

பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்து தப்பியோடிப் பிரெஞ்சு இந்தியாவில் பாரதியார் அடைக்கலம் புகுந்ததானது பெரிய சிறையிலிருந்து தப்பியோடிச் சிறிய சிறையில் அடைப்பட்டது போலத்தான்! புதுவையிலே அவருடைய அன்றாடத் தேவைகளை வழங்குவதற்கு நண்பர்கள் பலர் கிடைத்தனர் என்றாலும், அவருடையது திட்டமிட்ட வாழ்க்கையல்லவே! 'புலவன் வறுமை' என்பார்களே, அந்த வறுமை நோய் அவரைப் பூரணமாகப் பிடித்திருந்தது.

புதுவைக்கு யாத்திரை செய்த தேசபக்தர்களெல்லாம் அங்குப் பாரதியாரின் வீட்டில் அவருடைய விருந்தினராகத் தங்கியதாகவே தகவல் தந்திருக்கின்றனர். இந்த நிலையிலே அவருடைய மாத வருமானம் முப்பது ரூபாய்தான்!

'சித்தக் கடல்' என்னும் தலைப்பின் கீழ் பாரதியார் எழுதி வைத்துள்ள உயிர்த்துடிப்போடு கூடிய நாட் குறிப்பின் ஒரு பகுதி வருமாறு:

''பராசக்தி, இந்த உலகத்தின் ஆத்மா நீ. உனக்கு அறிவில்லையா? உனக்குக் காது கேட்காதா? நாள்தோறும் உன்மீது பாட்டுப் பாடுகிறேன். நான் கேட்கும் வரங்களை யெல்லாம் கொடுத்துவிடக் கூடாதா?

> ''கடன்காரன் தொல்லை தாங்க முடியவில்லையே. குழந்தைக்கு ஜுரம் வந்தது... வைத்தியனுக்குக் கொடுக்கப்பணம் இல்லை. குழப்பம், குழப்பம்; தீராத குழப்பம்! எத்தனை நாட்கள்! எத்தனை மாதங்கள்!

எத்தனை வருஷங்கள்! தாயே! என்னைக் கடன்காரர் ஓயாமல் தொல்லைப்படுத்திக் கொண்டிருந்தால், நான் அரிசிக்கும், உப்புக்கும் யோசனை செய்து கொண்டிருந்தால் உன்னை எப்படிப் பாடுவேன்?

''செட்டி பணத்துக்கு எத்தனை நாள் வாய்தா சொல்லுகிறது? பொய் வாய்தா, பொய் வாய்தா, பொய் வாய்தா! தினமும் இந்தக் கொடுமைதானா? சீச்சீ!''

இதைப் பாரதியார் எழுதியது 2-7-1915 இல். ஆம்; புதுவை புகுந்த ஏழாண்டுகளுக்குப்பின். இதற்குப் பின்னும் மூன்றாண்டுக் காலம் புதுவையில் அவர் வாழ்ந்திருக்கிறார். தமது வழிபடுதெய்வமான பராசக்தியையே வசைபாடுமளவுக்கு வறுமையால் நொந்து நொந்து நைந்து போன உள்ளத்துடன்தான் அவர் புதுவையில் குறுங்காப்பியங்களைப் படைத்தார். தேசியக் கவிதைகளைப் புனைந்தளித்தார். அதனால், துன்பத்திலே இன்பம் கண்டார்! ஆயினும், புதுவை வாழ்க்கை சலித்துவிட்டது அவருக்கு! அதனால் மகரிஷி அரவிந்தரின் தொடர்பை அறுத்துக் கொண்டு, பன்மொழிகளிலே புலமைபெற்ற இலக்கிய மாமேதையான வ.வே.சு. ஐயரின் தொடர்பிலிருந்து விடுபட்டு சின்னஞ்சிறு சிறையான பிரெஞ்சு இந்தியாவிலிருந்து வெளியேறிப் பெரிய சிறையான பிரிட்டிஷ் இந்தியாவுக்குள் புகுவதற்குத் துணிந்தார்.

கவிஞர் கைதியாகி, விடுதலை!

1918 டிசம்பரில் மனைவி மக்களையும் அழைத்துக்கொண்டு, ஒரு மாட்டு வண்டியில் பயணம் செய்து பிரெஞ்சு இந்திய எல்லையைத் தாண்டிக் கொடுங்கோலர்கள் கோலோச்சிய பிரிட்டிஷ் இந்தியாவுக்குள் புகுந்தார். அவ்வளவுதான்! ஒரு மகாகவியை வரவேற்க வேண்டிய 'மரியாதைப்'படி சென்னைப் மாகாணப் போலீசார் அவரை வரவேற்றனர். மனைவியிட மிருந்தும் மக்களிடமிருந்தும் அவரைப் பிரித்து, வாரண்டைக் காட்டி அவரைக் கைது செய்து கடலூர் சப் - ஜெயிலில் கொண்டு போய் வைத்தனர். எப்படியோ, பத்தாண்டுக் கால 'வனவாசம்' முடிந்தது!

சில வாரங்களே சிறையிலிருந்த நிலையிலே பாரதியார் கடுமையாக நோய்வாய்ப்பட்டார். அதன்பின் ஆளுவோரிடம் செல்வாக்குப் பெற்றிருந்த மிதவாத அரசியல் தலைவர்களில் சிலர் பாரதியாரின் விடுதலைக்கு முயற்சி எடுத்தனர். அதன்

பேரில் சில நிபந்தனைகளுடன் பாரதியார் விடுதலை செய்யப் பட்டார்.

1920-இல் மாண்டேகு - செம்ஸ்போர்டு அரசியல் சீர் திருத்தம் நாடு முழுவதிலும் நடைமுறைக்கு வந்தது. அதனையொட்டி, அரசியல் கைதிகட்டுப் 'பொது மன்னிப்பு' என்னும் பெயரில் விடுதலையளிக்க வைசிராயின் ஆணை பிறந்தது. அதனால், புதுவையில் தஞ்சம் புகுந்தவர்களில் எஞ்சியிருந்த ஒரே தேச பக்தரான வ.வே.சு. ஐயரும் அங்கிருந்து வெளியேறித் தமிழகத்திற்கு வருகை தந்தார். ஆம்; பத்தாண்டு 'வனசாசத்' துக்குப் பிறகு!

வனவாச காலத்திலே திருக்குறளில் உள்ள முப்பால் களையும் அழகிய ஆங்கிலத்திலே மொழி பெயர்த்தார். அதனுடன் ஆராய்ச்சி மிக்க முன்னுரை ஒன்றையும் எழுதிச் சேர்த்தார். இது, ஐயர் புதுவையில் தஞ்சம் புகுந்ததால் தமிழ் மொழிக்குக் கிடைத்த புதிய வரவு எனலாம்.

புதுவை செய்த தவம்

1920-லே காந்தி சகாப்தம் தோன்றியது. அதன் பின்னும் *17* ஆண்டுக் காலம் பல்வேறு கட்டங்களாக விடுதலைப் போர் நடந்ததென்றாலும், பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்து தப்பியோடிப் பிரெஞ்சு இந்தியாவிலே இந்திய தேச பக்தர் எவரும் தஞ்சம் புகவில்லை. காந்திய சகாப்தம் சாத்வீக வழியில் சென்ற சத்தியாக்கிரக சகாப்தமாதலால், இந்திய தேசபக்தர்களுக்கு புதுவையில் தஞ்சம் புகவேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

பத்தாண்டுக்கு மேற்பட்ட காலம் இந்திய தேச பக்தர்களுக்கு அடைக்கலம் தந்த பிரெஞ்சுப் பேரரசுக்கும், அவர்களைத் தன் மடியில் வைத்துக் காத்த புதுவைப் பிரதேசத்துக்கும் இந்தியத் தமிழகம் என்றென்றும் நன்றி செலுத்துமாக! இந்திய தேசபக்தர்களுக்குத் தஞ்சம் அளித்ததனால் புதுவை அடைந்த நற்பயன்கள் பல. அவற்றுள் ஒன்று, அங்குள்ள உலகப் புகழ் பெற்ற அரவிந்தர் ஆசிரமம்.

பாரதியார் சாதாரண மக்களின் பார்வையிலே ஒரு கவிஞர் தான் என்றாலும், அதற்கு மேலும் அரவிந்தருக்கு நிகராக அவரும் ஓர் ஆன்மஞானி என்பதை அவர் புனைந்துள்ள பக்திப் பாடல்களும் ஆன்மஞானக்கட்டுரைகளும் புலப்படுத்துகின்றன. அவர் பத்தாண்டுக் காலம் புதுவையில் தங்கினாரென்றால், அது புதுவைக்குக் கிடைத்த பெரும் பேறுதானே! அவர் புதுவையில்

தங்கியில்லையென்றால், அங்குள்ள மணக்குட விநாயகருக்கு அந்த மகாகவியின் 'நாண்மணி மாலை' கிடைத்திருக்குமா?

புதுவையில் பாரதியார் வீட்டில் வேலைக்காரியாக விருந்த அம்மாக்கண்ணு அம்மாள் அந்த மகாகவியின் பாடல்களில் ஒரு பாத்திரமாகியிருக்க முடியுமா? இவற்றிற்கெல்லாம் மேலாக, கனக சுப்புரத்தினம் என்னும் புரட்சிக் கவிஞன் 'பாரதிதாசன்' என்னும் புனைபெயரைப் பெற்றிருக்க முடியுமா? பாரதி புதுவையில் தங்கியது அந்த மண் பெற்ற பாக்கியமாகும்.

திரும்பாத மாடசாமி!

புதுவையில் தஞ்சம் புகுந்த தேசபக்தத் தமிழர்களிலே பாரதியாரையும் வ.வே.சு. ஐயரையும் திரும்பப் பெற்றுவிட்டது தாய்த் தமிழகம்! அந்தோ! புதுவை புகுந்த மாவீரனான மாடசாமி தாய்த் தமிழகத்தில் கால் வைக்காமலே மறைந்து போய்விட்டான். அவன் எங்கிருக்கிறானோ? என்ன ஆனானோ? திரும்பவும் வருவானோ? திரும்பவும் வருவதற்கே வழியில்லாமல் 'வீர சொர்க்கம்' என்று சொல்லுகிறார்களே, அங்கேயே அவன் போய்விட்டானோ? சுதந்திரத் தமிழ்நாட்டில் வாழும் பேறு பெற்ற தமிழ் மக்களே! வீரன் மாடசாமிக்கு நன்றியுடையவர்களாக வாழுங்கள்!

★-★-★

அயல் நாடுகளில் இந்தியப் புரட்சியாளர்

இந்திய விடுதலைப் போர் அலைகடலுக்கு அப்பாலுள்ள அயல் நாடுகளையும் களங்களாகக் கொண்டிருந்தது. குறிப்பாக, இந்தியாவை அடிமைப்படுத்திய இங்கிலாந்திலும் இந்திய விடுதலை வீரர்கள் முகாம் அமைத்து, ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரில் ஈடுபட்டனர். அவர்கள் அனைவருமே ஆயுதப் புரட்சியில் நம்பிக்கையுடையவர்களாக இருந்தனர் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

ஐரோப்பாவில் தமிழக வீரர்கள்!

ஐரோப்பாவிலிருந்த இந்தியப் புரட்சியாளர்களிலே ஒரு சாரார் கம்யூனிசத்தில் நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தனர். அதற்கு அக்காலத்தில் ருஷ்யாவில் ஜார் ஆட்சிக்கு எதிராக உள்நாட்டுப் போர் நடந்து கொண்டிருந்ததும் ஒரு காரணமாகும்.

ஐரோப்பாவில் இந்தியப் புரட்சியாளர் முதன்முதலாக முகாம் அமைத்தது பிரிட்டனின் தலைநகரான லண்டனிலாகும். பரோடா வாசியான சியாம்ஜி கிருஷ்ண வர்மாவும் பார்சிப் பெண்மணியான காமாவும் 1905 இல் லண்டன் சென்று, அங்கு உயர்தரக் கல்வி கற்று வந்த இந்திய மாணவர்களுக்கென ''இந்தியா விடுதி'' என ஒன்றை அமைத்து, அதையே புரட்சிப் பணிக்கான முகாமாகக் கொண்டனர் என்பதனை முன்பே அறிந்தோம். அந்த முகாமில் இருந்தவர்களில் வ.வே.சு. ஐயர், திருச்சி டி.எஸ்.எஸ். ராசன், சென்னை எம்.பி.டி. ஆச்சாரியா ஆகியோர் தமிழ்நாட்டாராவர்.

முகாம் மாறியது!

தமிழகத்தில் வ.உ.சி. கடுந்தண்டனைக்குள்ளான பின்னர் அவருடைய தோழரான தூத்துக்குடி குருநாத ஐயரும் லண்டன்

சென்று இந்தியா விடுதியிலிருந்த புரட்சியாளர்களோடு தோழமை கொண்டார்.

லண்டனில் கர்சான்வாலி என்னும் ஆங்கிலேயரை மதன்லால் திங்ரா என்பவர் சுட்டுக்கொன்று, அதன் விளைவாக அவரும் மரண தண்டனை பெற்ற பின்னர், அங்கிருந்த இந்தியப் புரட்சியாளர்கள் தங்கள் முகாமைப் பாரிசுக்கு மாற்றிக் கொண்டனர். 1914-ஆம் ஆண்டில் முதலாவது உலகப் பெரும்போர் மூண்டபோது ஜெர்மனிக்கு எதிரான நேச நாடுகளின் அணியிலே பிரிட்டனும் பிரான்சும் இணைந்திருந்ததால் பிரிட்டனின் விரோதிகளான இந்திய விடுதலை வீரர்களுக்குப் பாரிசில் தஞ்சமளிப்பதிலே பிரான்சுக்குச் சங்கடம் ஏற்பட்டது. பாரிசில் முகாம் செய்திருந்த இந்தியப் புரட்சியாளர்களும், பிரிட்டனுக்கேயன்றி, பிரான்சுக்கும் விரோத நாடாக இருந்த ஜெர்மனியின் ஆதரவைப் பெற்றுச் செயல்பட முனைந்தனர். இதனாலும், இந்தியப் புரட்சியாளர் விஷயத்தில் பிரான்ஸ் அரசு கடுமையாக நடந்துகொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. முதல் நடவடிக்கையாக காமா அம்மையாரைக் கைது செய்து, காவலில் வைத்தது. மற்றப் புரட்சியாளர்கள் சந்தடியின்றித் தங்கள் முகாமை ஜெர்மனியின் தலைநகரான பெர்லினுக்கு மாற்றிக் கொண்டனர். இந்தச் சந்தர்ப்பத்திலே நாஞ்சில் நாட்டுத் தமிழரான டாக்டர் செண்பகராமனும் பெர்லின் முகாமில் சேர்ந்து கொண்டார்.

டாக்டர் செண்பகராமன், எம்.பி.டி. ஆச்சாரியா, தூத்துக்குடி குருநாத ஐயர் ஆகிய மூன்று தமிழர்களும் பெர்லின் முகாமிலிருந்த புரட்சியாளரிடையில் மிகுந்த செல்வாக்குடையவர்களாக விளங்கினர். திரு. குருநாத ஐயர் பட்டதாரி. அவரைத் தனிமைப்படுத்திச் சொல்லுமளவுக்கு அவரைப் பற்றித் தகவல்கள் கிடைக்கவில்லை. இந்தியாவிலிருந்து வெளியேறியபின் லண்டன் சென்றார். பின் அங்கிருந்தும் வெளியேறிப் பெர்லினில் தஞ்சம் புகுந்தார். இந்த அளவில்தான் அவரைப் பற்றித் தகவல்கள் கிடைக்கின்றன. அவர் மீண்டும் தாயகம் திரும்பியதாகத் தகவல் இல்லை. பெர்லின் முகாமிலே திரு.எம்.என். ராய் அவர்களும் கலந்திருந்தார். அவர் அப்பட்டமான கம்யூனிஸ்டாக விளங்கினார்.

'கதார் இயக்கம்'

இந்திய விடுதலைக்காக வெளிநாட்டில் நடந்த மற்றொரு பயங்கரப் புரட்சியைப் பற்றியும் சிறிது சுருக்கமாகவேனும் இங்குக் கூறவேண்டியது அவசியமாகிறது. அது அமெரிக்காவில்

தோன்றி இந்திய கிழக்குக் கடற்கரையோரத்தில் கல்கத்தா வரை விரிவடைந்த 'கதார்' இயக்கமாகும்.

'கதார்' என்பதன் பொருள் 'புரட்சி' என்பதாகும். 1913-இல் அமெரிக்காவில் இந்த இயக்கம் தோன்றியது. அமெரிக்கக் குடியரசை அடுத்துள்ள கனடா நாட்டில் குடியேறியிருந்த சீக்கியர்களிடமிருந்தே இந்த இயக்கம் பிறந்தது. அப்போது லாலா லஜபதிராய், பாய் பரமானந்தர், மௌல்வி பர்கதுல்லா ஆகிய தலைவர்கள் அமெரிக்காவில் இருந்தனர். அவர்களுடைய தார்மிக ஆதரவும் கதார் இயக்கத்துக்கு இருந்தது. வெளிநாட்டு இந்தியரில் பத்தாயிரம் பேர்வரை இந்தப் புரட்சி இயக்கத்தில் சேர்ந்தனர்.

இந்த இயக்கத்தினர் 'கதார்' என்ற ஒரு பத்திரிகையை நடத்தினர். அதன் வாயிலாக, புரட்சிக் கருத்துக்களை உலகெங்கணுமிருந்த இந்தியரிடையே பரப்பி வந்தனர். முதல் மகாயுத்தம் தொடங்குவதற்கு முன்பே தோன்றிய இந்த இயக்கமானது யுத்தம் தொடங்கிய பின் வலுவடைந்தது. இவர்கள் இந்தியாவிலிருந்த புரட்சிவாதிகளுக்கு வழிகாட்டி வந்தனர். அவர்கள் செயல்பட வேண்டிய விவரங்கள் குறித்து அடிக்கடி அறிக்கைகள் தயாரித்து அனுப்பி வந்தனர். சென்னை மாகாணச் சிறையில் அடைப்பட்டுக் கிடந்த நீலகண்ட பிரமச்சாரியோடும் கதார் இயக்கத்தினர் தொடர்பு கொண்டனர் என்றால், அவர்களுடைய செயல் திறனுக்கு வேறு சான்றும் வேண்டுமோ!

கதார் தோல்வி

கதார் இயக்கத்தினர் ஒரு கப்பற் படையுடன் கல்கத்தா துறைமுகத்தையடைந்து, தாக்குதல் நடத்த முயன்றனர். ஆனால், பிரிட்டிஷ் படைகள் கதார் படையெடுப்பை முறியடித்தன. தோல்வியுற்ற கதார் வீரர்களிலே பலர் தப்பியோடினர். சிலர் பிடிபட்டனர். பிடிபட்டவர்களில் சிலர் சுட்டுக் கொல்லப் பட்டனர். மற்றுஞ் சிலர் விசாரணைக்குப் பின் ஆயுள் தண்டனையடைந்தனர். வேறு சிலர் நாடு கடத்தப்பட்டனர்.

முதல் மகாயுத்தம் பிரிட்டனுக்கு வெற்றியாக முடிந்ததும் கதார் இயக்கம் உருக்குலைந்து போனது. ஐரோப்பாவிலிருந்த தமிழருக்குக் கதார் இயக்கத்துடனிருந்த தொடர்பைப் பிரித்துக் காட்டுவதற்கு இயலவில்லை. ஆனால் தமிழரும் அதில் கலந்திருந்தனர் என்பது உண்மை.

செண்பகராமன் - லெனின் சந்திப்பு

இந்தியப் புரட்சியாளர்கள் யுத்த காலத்திலே மிகவும் நம்பிக்கையுடன் செயல்பட்டனர். யுத்தத்தில் பிரிட்டனும் அதன் நேச நாடுகளும் தோற்று, ஜெர்மனும் அதன் தோழமை நாடுகளும் வெற்றி பெறுமென்று இந்தியப் புரட்சியாளர்கள் நம்பினர். அதனால், இன்னல்களுக்கு அஞ்சாது துணிவுடன் செயல்பட்டனர்.

தனியாக இந்திய தேசிய ராணுவம் ஒன்றையும் அமைத்தனர். யுத்தத்தில் பிரிட்டன் சார்பில் போரிட்டு ஜெர்மானியரிடம் சிறைப்பட்ட யுத்தக் கைதிகளான - இந்திய ராணுவத்தினரோடு தொடர்பு கொண்டு, ஜெர்மனி அரசின் ஆதரவையும் பெற்று அவர்களை இந்திய தேசீய ராணுவத்தில் சேர்த்துக் கொண்டனர். இதனால், புரட்சியாளரின் படை பலம் பெருகியது. நாஞ்சில் தமிழரான டாக்டர் செண்பகராமன் ஜெர்மன் அதிபரான கெய்சரின் நம்பிக்கைக்குரியவராகி, தமது போர் முயற்சிகளுக்கு அவருடைய ஆதரவையும் பெற்றார். ஒரு கட்டத்திலே ருஷ்யப் புரட்சியாளர்களின் தலைவரான தோழர் லெனினையும் சந்தித்துப் பேசி, அவருடைய ஆதரவுக்கும் உத்தரவாதம் பெற்றார். ஆயினும், செண்பகராமன் கம்யூனிஸ்டு அல்ல, சுத்த தேசியவாதி!

டாக்டர் செண்பகராமன் ஐரோப்பாவுக்குச் சென்று ஆரம்ப காலத்திலே அந்தக் கண்டத்திலுள்ள பல நாடுகளில் சுற்றுலாச் செய்தார். பிரிட்டனுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்வதற்கென்று ஒன்றுக்கு மேற்பட்ட ஸ்தாபனங்களை நிறுவினார். 'புரோ இந்தியா' என்னும் பெயரில் பத்திரிகை ஒன்றையும் நடத்தினார். ஆங்கிலமல்லாத வேறு மொழிகளிலும் பத்திரிகைகள் நடத்தினார். அவர் பல மொழிகளைப் பயின்று வைத்திருந்தார்.

'இடைக்கால இந்திய அரசு' அமைந்தது!

இந்தியப் புரட்சியாளர்கள், இந்தியாவின் அண்டை நாடான ஆப்கனுக்கு வந்து, அதன் தலைநகரான காபூலில் 'இடைக்கால இந்தியக் குடியரசு' ஒன்றை நிறுவினர். அதன் அமைச்சரவையிலே அயல்நாட்டமைச்சராக டாக்டர் செண்பகராமன் பொறுப் பேற்றார். இந்த இடைக்கால அரசைப் பிரிட்டனின் முதல் நம்பர் எதிரியான கெய்சரின் ஜெர்மனியும், அதன் நேச நாடுகள் சிலவும் அங்கீகரித்தன. கப்பற் படையின் பலங்கொண்டு இந்தியாவுக்குள் புகுந்து ஆங்கிலேயரை வெளியேற்றுவதென்பது டாக்டர் செண்பகராமனை அயல்நாட்டுறவு அமைச்சராகக் கொண்டிருந்த

இந்திய இடைக்காலக் குடியரசின் திட்டமாக இருந்தது. இதற்கான பொருளுதவியும் ராணுவ உதவியும் ஜெர்மனியிடமிருந்து கிடைக்குமென இவர்கள் எதிர்பார்த்தனர். இந்தப் புரட்சியாளர் களிடையிலே கோஷ்டி மனப்பான்மை நிலவியது. கொள்கை வேறுபாடும் இதற்கொரு காரணமாக இருந்திருக்க வேண்டும்.

திரு.எம்.பி.டி. ஆச்சாரியாவுக்கும் திரு.எம்.என். ராய்க்கு மிடையே பூசல் ஏற்பட்டது. அயல் நாடுகளிடமிருந்து கிடைத்த பொருளுதவியைச் சரியாக நிர்வகிக்கவில்லை என்று திரு.எம்.என். ராய் மீது திரு.எம்.பி.டி. ஆச்சார்யா குற்றம் சாட்டினார். இதில் ஏற்பட்ட தகராறு காரணமாகக் கம்யூனிஸ்டு அகிலத்திடமிருந்து கிடைத்து வந்த உதவி முற்றிலும் நின்றுவிட்டதாகத் தெரிகிறது. இந்தியப் புரட்சியாளரிடையே நிலவிய ஒற்றுமையின்மை திறமையின்மை ஆகியவை காரண மாக ஜெர்மன் அரசும் இவர்களைக் கைவிடக்கூடிய நிலைமை ஏற்பட்டது. இந்த நிலையிலும் இந்திய தேசத்தின் விடுதலையில் தங்களுக்கிருந்த ஆர்வம் காரணமாக இந்தியப் புரட்சியாளர்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய எதிர்ப்பில் ஈடுபட்டு வந்தனர். சர்வதேச சோசலிச இயக்கத்தோடும் இவர்களுக்குத் தொடர்பிருந்தது.

'எம்டன்' போட்ட குண்டு!

உலகப் போர் தொடங்கிய ஆண்டிலேயே ஜெர்மனிக்குச் சொந்தமான 'எம்டன்' என்னும் பெயருடைய கப்பல் ஒன்றைப் பெற்று, சென்னைக் கடற்கரையோரத்தை டாக்டர் செண்பகராமன் அடைந்ததையும், சென்னை உயர்நீதிமன்றத்தைக் குறிபார்த்துக் குண்டு வீசியதையும் முன்பே அறிந்தோம். இது, இந்தியப் புரட்சியாளர்களிலே டாக்டர் செண்பகராமனின் அரும்பெரும் சாதனை என்று சொன்னால், அது மிகையாகாது. ஆனால், 'எம்டன்' கப்பல் பிரிட்டனால் கைப்பற்றப்பட்டு விட்டது.

ஐரோப்பாவிலிருந்த இந்தியப் புரட்சியாளர்கள் இந்தியாவி லும் ஒரு புரட்சிச் சேனையை உருவாக்க முயன்றனர். அதிலே ஓரளவு வெற்றியும் பெற்றனர். தேசாபிமானிகள் சங்கம், பாரத மாதா சங்கம், அபிநவ பாரத சங்கம் ஆகியவை போன்ற பல்வேறு புரட்சி ஸ்தாபனங்கள் இந்தியாவில் ஏற்பட்டதற்கு ஐரோப்பாவி லிருந்த இந்தியப் புரட்சியாளர்களே காரணமென்று 'ரௌலட் அறிக்கை' கூறுகின்றது.

தமிழ் நாட்டில் திரு. நீலகண்ட பிரமச்சாரியின் தலைமையில் இளைஞன் வாஞ்சியையும் வேறு பலரையும் கொண்டு இயங்கி

வந்த புரட்சிப் படையானது, ஐரோப்பாவிலிருந்த புரட்சியாளரிட மிருந்து ஆயுத உதவியையும் பொருளுதவியையும், ஆலோசனை களையும் பெற்று வந்ததாகத் தமிழக அரசின் காவல்துறைக் குறிப்புகள் கூறுகின்றன. இதிலே திரு.எம்.பி.டி. ஆச்சாரியா அவர்கள் முக்கிய பொறுப்பேற்றிருந்திருக்கிறார்.

1914-இல் உலகப் பெரும்போர் மூண்டதும் பெல்லாரிச் சிறையிலிருந்து திரு.நீலகண்ட பிரமச்சாரி தப்பியோடியது, ஐரோப்பா சென்று அங்கிருந்த புரட்சியாளருடன் சேர்ந்து கொண்டு செயலாற்றத்தான்! இந்தியாவில் *1857*-இல் நிகழ்ந்தது போன்ற புரட்சியொன்றை யுத்த காலத்தில் தோற்றுவிப்பது இவர்களுடைய திட்டமாக இருந்தது.

மண்டையம் குடும்பத்தார்

திரு.எம்.பி.டி. ஆச்சாரியா சென்னை திருவல்லிக்கேணியில் வாழ்ந்து வந்த மண்டையம் குடும்பத்தைச் சேர்ந்தவராவார். மைசூரில் 'மண்டையம்' என்று ஒரு ஊருண்டு. அங்கிருந்து வெளியேறிச் சென்னையில் குடியேறிய ஒரு ஐயங்கார் குடும்பத்திற்கு 'மண்டையம் குடும்பம்' என்ற பெயர் வந்தது. அது, அந்தக் குடும்பத்தின் வழி வந்த எல்லோருக்கும் அவர்கள் சொந்தப் பெயருக்கான அடைமொழியாகிவிட்டது.

பெர்லின் முகாமிலிருந்த திரு.எம்.பி.டி. ஆச்சாரியாவின் முழுப் பெயர் மண்டையம் பிரதிவாதி திருமலாச்சாரியார் என்பதாகும். இவர் தம் வாழ்வையே தாய்நாட்டின் விடுதலைக் காக அர்ப்பணித்துவிட்டார். அயல்நாடு சென்ற இவர் தாய்நாடு திரும்பியதாகத் தகவல் இல்லை.

மண்டையம் குடும்பத்தைச் சார்ந்த மற்றொருவரான மண்டையம் திரு.எஸ்.என். திருமலாச்சாரி பாரதியாரைப் பின்பற்றிப் புதுவை புகுந்தார். அங்கு பாண்டவரைப் போன்று பன்னிரண்டாண்டுக் காலம் வனவாச வாழ்க்கை நடத்தியபின் *1920*-இல் தாயகம் திரும்பினார்.

மண்டையம் குடும்பத்தைச் சார்ந்த மற்றொருவரான அழகிய சிங்கப்பெருமாள் என்பவர் விவேகானந்தரைப் பின் பற்றி வேதாந்த இயக்கத்தில் சேர்ந்தாரென்றாலும், தேச விடுதலை இயக்கத்திலும் ஆர்வம் காட்டி வந்தார்.

மறக்கப்பட்ட தியாகக் குடும்பம்

திருவல்லிக்கேணி மண்டையம் குடும்பத்தைச் சேர்ந்த விடுதலை வீரர்களைப் பற்றிய முழு விவரங்களையும் திரட்ட

முடியுமானால், அந்தத் தியாகக் குடும்பத்தைப் பற்றி ஒரு தனி நூலே எழுதி வெளியிடலாம். தேசம் சுதந்திரம் பெற்றதன் பலனை அனுபவிக்கும் இன்றைய தேச பக்தர்கள் மறந்துவிட்ட தியாகக் குடும்பங்களிலே மண்டையம் குடும்பமும் ஒன்றாகும்.

1918-ஆம் ஆண்டிலே உலகப் பெரும்போர் பிரிட்டனுக்கு வெற்றியாக முடிந்தது. இது ஐரோப்பாவில் முகாம் போட்டிருந்த இந்தியப் புரட்சியாளருக்கு அதிர்ச்சியைத் தந்தது. இதற்குப்பின், அவர்களுடைய கட்டுக்கோப்புக் குலைந்தது. டாக்டர் செண்பக ராமன் *1931*-ஆம் ஆண்டுவரை ஐரோப்பாவில் வாழ்ந்திருந்தார் என்றாலும், இந்தியாவின் விடுதலைக்காக ஆயுதபலம் கொண்டு அவரால் எதையும் சாதிக்க முடியவில்லை. பெர்லின் சென்ற வித்தல்பாய் படேல், ஜவகர்லால் நேரு, சுபாஷ் சந்திரபோஸ் ஆகிய பெருந்தலைவர்களை எல்லாம் நாஞ்சில் தமிழரான டாக்டர் செண்பகராமன் சந்தித்துப் பேசியிருக்கின்றார்.

நேருஜி கூறுகிறார்!

நேருஜி தமது சுயசரிதத்தில் டாக்டர் செண்பகராமனைப் பற்றிக் கூறியிருப்பதாவது:

''...மற்றோர் இந்தியரைச் சந்தித்தேன். அவர் போர்க்கால இந்தியக் குழுவில் முக்கிய உறுப்பினராக இருந்தவர். அவர் பெயர் செண்பகராமன் பிள்ளை. அவர் எதையும் தேசிய நோக்கோடுதான் பார்ப்பார். சமூக, பொருளாதார நோக்கோடு பார்க்க மாட்டார். ஜெர்மானிய தேசிய வாதிகளுக்கும் அவருக்கும் நல்ல ஒற்றுமை.''

தேச விடுதலைக்காகவே தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள் தேசியவாதிகளாக மட்டும் இருப்பது - அதாவது, சர்வ தேசிய ரீதியிலான சமூக, பொருளாதார பார்வையைப் பெறாதது ஒரு குறையாக இருக்கலாம். ஆனால், அது குற்றமாகாது. அந்த வகையில் டாக்டர் செண்பகராமனும் குற்றவாளியல்ல.

மாவீரத் தமிழன்!

இந்தியா விடுதலை பெறுவதற்கு முன்பே டாக்டர் செண்பகராமன் தாயகம் திரும்பாமலே வீர சொர்க்கம் அடைந்தார். அயல் நாடுகளில் தங்கி இந்திய விடுதலைக்குப் பாடுபட்டு மீண்டும் தாயகம் திரும்பாமலே மறைந்துவிட்ட நேதாஜி போன்ற மாவீரர்களுடன் சேர்த்து எண்ணத்தக்க பெருமைக்குரியவர் டாக்டர் செண்பகராமன். அவருடைய புகழ் என்றென்றும் நின்று நிலைபெறுவதாக!

★-★-★

தென்னாப்பிரிக்க சத்தியாக்கிரகத்தில் தமிழர் பங்கு

1905 முதல் 1918 வரை இந்திய விடுதலைக்கான முயற்சிகள் அயல் நாடுகளிலும் நடைபெற்றன என்பதை இதுவரை அறிந்தோம். அந்தக் கால கட்டத்திலே, இந்திய விடுதலைப் போரின் தலைமையை ஏற்கத் தக்க தளபதி ஒருவரும் இந்தியாவுக்கு வெளியேதான் வளர்ந்து கொண்டிருந்தார். அவர், குஜராத்தியான மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியாவார்.

புதிய சகாப்தம்!

இந்திய விடுதலைப் போர்க்களத்திலே 1919-ஆம் ஆண்டோடு திலகர் சகாப்தம் முடிவுக்கு வந்து, 1920-ஆம் ஆண்டிலே காந்தி சகாப்தம் தோன்றியது. அந்தப் புதிய சகாப்தத் தலைவரையும் தத்துவத்தையும் படைத்துக் கொடுத்த பெருமை தென்னாப்பிரிக்க இந்தியருடையதாகும். ஆகவே, காந்தி சகாப்தத்திற்குள் புகுவதற்கு முன் தென்னாப்பிரிக்காவிலேயே மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியைச் சந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இந்திய அரசியலிலே 'அகிம்சை' என்னும் சித்தாந்தத்தையும், 'சத்தியாக்கிரகம்' என்னும் போர் முறையையும் புகுத்துவதற்கு முன் அதற்கான ஒத்திகையைத் தென்னாப்பிரிக்காவிலேயே காந்திஜி நடத்தினார். தென்னாப்பிரிக்காவில் சத்தியாக்கிரகப் போர் நடந்தில்லையானால், இந்திய விடுதலைப் போரிலே நாம் காந்தியடிகளின் தலைமையைப் பெற்றிருக்க முடியாது. அந்நிலையிலே திலகருக்குப்பின் இந்திய விடுதலைப் போர் எப்படி நடந்திருக்குமோ, எப்போது முடிந்திருக்குமோ? யாரறிவார்!

தமிழர் பங்கு!

இந்திய விடுதலைப் போர் வரலாற்றிலிருந்து தென்னாப்பிரிக்காவில் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி நடத்திய

சத்தியாக்கிரகப் போரை ஒதுக்கி விடுவதற்கில்லை. இந்திய சுதந்திரப் போரின் ஒரு பகுதியாகவே தென்னாப்பிரிக்க சத்தியாக்கிரகப் போர் அமைந்துவிட்டது. தென்னாப்பிரிக்காவிலே மோகன்தாஸ் காந்திக்குப் பெரிதும் உதவி புரிந்தவர்கள் அந்த நாட்டில் குடியமர்த்தப்பட்ட தமிழர்களே யாவர். ஆகவே, இந்திய விடுதலைப் போரில் தமிழகத்தின் பங்கை அறிந்து கொள்ள முயலும் அதே நேரத்தில் தென்னாப்பிரிக்க சத்தியாக்கிரகத்தில் தமிழருடைய பங்கை அறிந்து கொள்ளுவதும் அவசியமாகிறது. அதனாற்றான், திலகர் சகாப்தம் முடிந்து காந்தி சகாப்தம் தோன்றுகின்ற கட்டத்திலே தென்னாப்பிரிக்க சத்தியாக்கிரகத்தைப் பற்றி விளக்க முயல்கின்றோம்.

காந்தியடிகள், *1893*-இல் தென்னாப்பிரிக்காவுக்குச் சென்றார். அந்த நாட்டிலுள்ள இந்தியக் கம்பெனி ஒன்றின் வழக்கில் வக்கீலாகப் பணி புரிவதற்கென்று ஓராண்டுக் கால உடன்படிக்கையின் பேரில் சென்றார். சென்றவர், அந்த நாட்டில் இந்தியர் படும் அல்லல்களையெல்லாம் கண்ணுற்று, அவற்றி லிருந்து தம் தேசத்தவரை விடுவிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டார்.

தென்னாப்பிரிக்காவில் நேட்டால், கேப், டிரான்ஸ்வால், ஆரஞ்சு ஃப்ரீ ஸ்டேட் என்ற நான்கு குடியேற்றப் பகுதிகள் அந்நாளில் இருந்தன. அவற்றில் முதலிரண்டு பகுதிகள் ஆங்கிலேயரிடமும், மற்றுள்ள இரண்டு பகுதிகள் டச்சுக்காரர் களிடமும் இருந்தன. அவர்கள் அனைவருமே நிறத்தால் வெள்ளையர்கள்; நிற வெறியும் கொண்டவர்கள்!

கடல் கடந்த தமிழர்!

தென்னாப்பிரிக்க வெள்ளையர்கள் அந்த நாட்டின் வளத்தைச் சுரண்ட அங்கு குடியேறியவர்களே யாவர். தென்னாப்பிரிக்காவின் பூர்வ குடிகள் நீக்ரோக்கள் ஆவர். அவர்களை வசப்படுத்தி வேலை வாங்குவதிலே இங்கிலீஷாருக் கும் டச்சுக்காரருக்கும் கஷ்டம் இருந்தது. அதனால், இந்தியா விலிருந்து ஏழை எளியவர்களைத் தென்னாப்பிரிக்கா வுக்குக் கொண்டு செல்ல அங்குள்ள வெள்ளையர்கள் திட்டமிட்டனர். அதனை வெற்றிகரமாகச் செய்ய இந்தியரிலேயே கங்காணிகளைத் தோற்றுவித்தனர். அந்நாளில் வறுமை கோரமாகத் தாண்டவ மாடியது இந்தியாவிலே!

19-ஆம் நூற்றாண்டிலே பீகார் மாநிலத்தில் மட்டும் மூன்றிலொரு பங்கு மக்கள் வறுமை என்னும் கொடிய நோய்க்கு

ஆளாகி ஆவி துறந்தனர். 'இந்தியாவின் வறுமை' என்னும் தமது நூலிலே இதனைப் புள்ளி விவரங்களோடு விவரிக்கிறார் தாதாபாய் நௌரோஜி.

கங்காணிகள்!

வெள்ளையர்களால் அமர்த்தப்பட்ட கங்காணிகள் பட்டினிக் கொடுமையால் இன்னலுற்ற இந்திய மக்களுக்குப் பொய்களைக் கூறி ஆசை காட்டினர். தென்னாப்பிரிக்காவை ஒரு சொர்க்க பூமிபோல அவர்கள் வருணித்தனர். அதனை நம்பிய ஏழை மக்கள் கங்காணிகளைப் பின்பற்றித் தென்னாப்பிரிக்காவுக்குச் சென்றனர். அங்குள்ள பிரிட்டிஷ், டச்சு குடியேற்றங்களில் வாழும் வெள்ளையர்களுக்குக் கூலிகளாய் அமர்ந்தனர்.

இந்தியர்கள் தென்னாப்பிரிக்காவுக்குச் செல்வதென்றால் அதற்கு இந்திய அரசாங்கத்தின் ஒத்துழைப்பும் தேவைப்பட்டது. இந்தியாவிலும் வெள்ளை நிறத்தவர் ஆட்சி நடைபெற்றதாதலால், அந்த ஆட்சியும் தென்னாப்பிரிக்க வெள்ளையர்களின் நலனுக்குத் துணை செய்தது. இந்தியர்களை அழைத்துச் செல்ல இங்குள்ள ஆட்சி தேவைப்படும் சட்டங்களைச் செய்து, திட்டங்களையும் வகுத்தது. இது விஷயத்தில் தென்னாப்பிரிக்க வெள்ளையர் அரசுக்கும் இந்தியாவிலிருந்த வெள்ளையர் ஆதிக்கத்துக்குமிடையே ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி, ஒப்பந்தக் கூலிகளாகவே இந்தியர்கள் தென்னாப்பிரிக்காவுக்குச் சென்றனர்.

ஒப்பந்தக் கூலிகள்

ஒவ்வொரு இந்தியனும் ஐந்து வருட கால ஒப்பந்தத்துக்கு ஆளாக வேண்டி ஏற்பட்டது. ஒப்பந்தக் காலம் முழுவதும் தன்னை ஏற்றுக்கொண்ட வெள்ளை எசமானனிடம் வேலை செய்ய வேண்டும். செய்ய மறுத்தால், அது கிரிமினல் குற்றமாகும். அதற்காக, அடிமை கொண்ட வெள்ளை எசமான் அந்தக் குற்றவாளியை நீதிமன்றத்தின் மூலம் சிறைத் தண்டனைக் குட்படுத்தலாம். தென்னாப்பிரிக்க நீதி மன்றங்களிலே வெள்ளையரே நீதிபதிகளாக வீற்றிருந்தனர்.

ஐந்தாண்டுக் கால ஒப்பந்தம் முடிந்தால் மறு ஒப்பந்தத்தின் மூலம் பழைய எசமானனிடமே திரும்பவும் ஐந்தாண்டுக் காலம் வேலை செய்யலாம். அதற்கு விருப்பமில்லையென்றால், தென்னாப்பரிக்காவிலேயே தங்கிச் சுயேச்சையாக வாழலாம். சுயேச்சை அந்தஸ்தைப்பெற்ற ஒவ்வொரு தொழிலாளிக்கும் அவர் இந்தியாவுக்குத் திரும்புவதற்கான பயணக் கட்டணத் தொகை

எவ்வளவோ அதன் மதிப்புக்குத் தென்னாப்பிரிக்காவில் நிலம் வழங்கப்படும்.

இந்த ஒப்பந்தத்தினால் தென்னாப்பிரிக்க இந்தியர்களிலே ஒரு சாரார் 'ஒப்பந்தக் கூலிகள்' என்றும், மற்றொரு சாரார் ஒப்பந்தத்திலிருந்து விடுபட்ட 'சுயேட்சைத் தொழிலாளர்கள்' என்றும் இரு வகையினராயினர்.

காலனி ஆதிக்கம்

இந்தியர்கள் தென்னாப்பிரிக்காவில் குடியேற்றப்பட்டது 19-ஆம் நூற்றாண்டின் மத்தியில் ஆகும். தென்னாப்பிரிக்கா சென்ற இந்தியர்கள் இருவகையினராவர். ஒருவகையினர் ஒப்பந்தக் கூலிகள். இவர்களில் மிகப் பெரும்பாலோர் தமிழர். இன்னொரு வகையினர் வணிகர்களும் குமாஸ்தாக்களுமாவர். இவர்கள் அனைவரும் குஜராத்திலிருந்து சென்றவர்கள். இந்த வணிகர்களில் ஒருவருக்காகத்தான் மோகன தாஸ் காந்தி வக்கீல் தொழில் புரியத் தென்னாப்பிரிக்கா சென்றார்.

தமிழ் மூவேந்தர்கள் கடல் கடந்த நாடுகள் மீதும் செல்வாக்குச் செலுத்தியதுண்டு. அவர்கள் இலங்கை, பர்மா, மலேசியா ஆகிய நாடுகள் மீதெல்லாம் அரசியல் ஆதிக்கம் பெற்றிருந்த காலமும் உண்டு. அந்தக் காலத்தில்கூட. அவர்கள் செல்வாக்குப் பெற்றிருந்த நாடுகளிலே இந்தியத் தமிழ் மக்களைக் குடியேற்றி, அங்கெல்லாம் காலனிகளைப் படைத்ததில்லை. காலனி ஆதிக்கம் என்பது வெள்ளையர்கள் வித்தூன்றி வளர்த்த விஷ விருட்சமாகும்.

இத்தகு பெருமைக்குரிய வரலாற்றைப் படைத்த தமிழகத்து மக்கள் கேவலம் வயிறு வளர்ப்பதற்காகத் தென்னாப்பிரிக்காவுக்கு ஒப்பந்தக் கூலிகளாகச் சென்றனர். ஆம்; இந்தியாவைப் பிரிட்டிஷார் அடிமைப்படுத்தி ஆண்ட காலத்திலே அங்கு அவர் கள் மிகவும் கேவலமாக நடத்தப்பட்டனர் வெள்ளையர்களால்!

அடியும் உதையும்!

ஒரு வெள்ளையரிடம் ஒப்பந்தக் கூலியாகவுள்ள இந்தியரை வேறு எந்த வெள்ளையரும் ஒப்பந்தக் கூலியாக ஏற்கமாட்டார். அதனால், ஒப்பந்தக் கூலிகள் எசமானனை மாற்றிக் கொள்ளவும் உரிமையற்றவர்களாக இருந்தனர். அடியும் உதையும் வெள்ளை எசமானரிடமிருந்து அவர்களுக்குக் கிடைக்கும் அன்றாடப் 'பரிசுகளா'கும். தன்னை அடித்த வெள்ளை எசமான் மீது வழக்குத்

தொடர ஒப்பந்தக் கூலியான இந்தியருக்குச் சட்டப்படி உரிமை இருந்ததென்றாலும், அந்த அளவுக்குச் செல்ல அடிமை மகனுக்குத் துணிவு வேண்டுமே! தனக்கென ஒரு நாடு இருந்தும் நாடோடியாகச் சென்ற துரதிருஷ்டம் பிடித்த தமிழன் புகுந்த நாட்டில் எசமானனோடு போராட்டம் வைத்துக்கொள்ள முடியுமா?

தென்னாப்பிரிக்க வெள்ளையரின் நிறத்திமிரானது ஒப்பந்தக் கூலிகளை அடிப்பதோடும் உதைப்பதோடும் நின்றுவிட வில்லை. செல்வம் படைத்த வணிகர்களான இந்தியர்களைக்கூட உதைத்துப் பழகின, வெள்ளையரின் பூட்ஸ் கால்கள்! தென்னாப்பிரிக்க இந்தியரிலே அத்திப் பூத்தாற்போல் ஆங்கிலத்தின் மூலம் சட்டம் படித்த வக்கீல்களும் தோன்றினர். அவர்களையும் 'கூலி வக்கீல்கள்' என்றே அழைத்தனர் நிறவெறி பிடித்த வெள்ளையர்கள்! இந்திய வழக்கறிஞர் எவரும் தமது தேசியச் சின்னமான தலைப்பாகையை அணிந்து கோர்ட்டிற்குள் செல்ல முடியாது. நீதிபதியே அனுமதிக்க மாட்டார். அவரும் வெள்ளையர்தானே!

நிறத் திமிர்!

ரெயிலில் உயர் வகுப்புகளில் இந்தியரானோர் - அவர் பட்டதாரியாயினும், பணக்காரராயினும் - பயணம் செய்ய முடியாது. செய்தால், வெள்ளைக்காரனுடைய பூட்ஸ் கால்கள் அவரைப் பதம் பார்க்கும். ரெயிலில் உயர்வகுப்பில் பயணம் செய்ய முயன்ற போதெல்லாம் அடியும் உதையும் பிற்காலத்தில் உலக மகாத்மாகவிருக்கும் மோகனதாஸ் காந்திக்கும் கிடைத்ததுண்டு. லண்டனில் படித்துப் 'பாரிஸ்டர்' பட்டம் பெற்றவரை - கத்தியவார் சமஸ்தானத்து மந்திரியின் மகனாரை - 'கூலி வக்கீல்' என்றே அழைத்தனர், நிறவெறி பிடித்த தென்னாப்பிரிக்க வெள்ளையர்கள்.

நேட்டால் வக்கீல் சங்கத்தின் உறுப்பினராகச் சேர்ந்து கொள்ள மோகன்தாஸ் காந்தி முயன்றபோது, 'நந்தா, உனக் கில்லையடா சிதம்பர தரிசனம்' என்று சோழ நாட்டு அந்தணர் கூறியது போல, 'காந்தி, உனக்கில்லை வக்கீல் சங்க தரிசனம்' என்று கூறிவிட்டது நேட்டால் உயர்நீதி மன்றத்தின் வக்கீல் சங்கம். தென்னாப்பிரிக்க இந்தியர்களில் ஒப்பந்தக் கூலிகள்மட்டுமின்றி ஒப்பந்தத்திலிருந்து விடுபட்ட சுயேட்சைத் தொழிலாளர் கூட வெள்ளையர் வாழ்கின்ற பிரதேசங்களில் வீதியிலே நடமாட உரிமை கிடையாது. ஆம்; 'சேரி' வாழ்க்கைதான்!

ஒப்பந்தம் முடிந்த பின்னும் கூலிகள் எனப்பட்ட இந்தியத் தொழிலாளர்கள் அந்த நாட்டில் வாழ உரிமை வழங்கப்பட்ட

தென்றாலும், நடைமுறையில் அவர்களை அந்த நாட்டிலிருந்து விரட்டிவிடவே வெள்ளையர்கள் முயன்றனர்! ஒப்பந்தத்திலிருந்து விடுபட்ட சுயேச்சைத் தொழிலாளர்கள் 25 பவுன் தலைவரி செலுத்தினால்தான் அந்த நாட்டில் வாழ முடியும் என்று ஆணை பிறப்பித்தனர்.

தென்னாப்பிரிக்க இந்தியர்கள் இவ்வளவு கொடுமைகளைப் பல தலைமுறைகளாக அனுபவித்துக் கொண்டிருந்த நேரத்திலே தான் பாரிஸ்டர் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி வக்கீல் தொழிலுக் காக அங்குச் சென்றார். அந்நாட்டில் இந்தியர் படும் அல்லல் களைப் பார்த்தும், பிறர் சொல்லக் கேட்டும் தாமே அனுபவத்தின் வாயிலாக அறிந்தும் வேதனைப்பட்டார். இதற் கெல்லாம் ஒரு விடிவு காலம் வராதா என்று நெஞ்சம் பொருமினார்.

பாரதியாரின் புலம்பல்

தென்னாப்பிரிக்காவிலே தமிழர் படும் அல்லல்கள் இந்தியாவிலிருந்த தமிழர் அறியாததல்ல; அறிந்திருந்தனர் என்பதற்குப் பாரதியார் பாடல்களிலே சான்றுகள் கிடைக்கின்றன. 'தமிழச் சாதி' என்னும் பாடலிலே, 'விதியே விதியே!' என்று விதிக்கு அழைப்பு விடுத்து, அதனிடம் தமது வேதனையைக் கூறுகின்றார் பாரதியார்:

"ஆப்பிரிக் கத்துக் காப்பிரி நாட்டிலும்
தென்முனை யடுத்த தீவுகள் பலவினும்
பூமிப் பந்தின் கீழ்ப்புறத் துள்ள
பற்பல தீவினும் பரவி யிவ்வெளிய
தமிழச் சாதி, தடியுதை யுண்டும்
காலுதை யுண்டும் கயிற்றடி யுண்டும்
வருந்திடுஞ் செய்தியும் மாய்ந்திடுஞ் செய்தியும்
பெண்டிரை மிலேச்சர் பிரித்திடல் பொறாது
செத்திடுஞ் செய்தியும் பசியாற் சாதலும்
பிணிகளாற் சாதலும் பெருந்தொலை யுள்ளதம்
நாட்டினைப் பிரிந்த நலிவினாற் சாதலும்
இஃதெலாங் கேட்டும் எனதுளம் அழிந்திலேன்.
விதியே! விதியே! தமிழச் சாதியை
என்செயக் கருதி யிருக்கின் றாயடா?"

இவை, விடுதலைக் கவிஞர் பாரதி தமது கண்ணீரால் வரைந்த வரிகளாகும். மற்றொரு கவிதையிலேயும், கடல் கடந்த நாடுகளிலே அல்லலுறும் தமிழ்ப் பெண்களின் நிலையை நினைந்து நினைந்து விம்மியழுகிறார் கவிஞர்.

''நாட்டை நினைப்பாரோ? - எந்த
நாளினிப் போயதைக்
காண்பதென்றே அன்னை
வீட்டை நினைப்பாரோ?''

என்று கூறி, விம்மிவிம்மி யழுகிறார் அந்த வீரக் கவிஞர். அவர் மேலும் விம்முகிறார்:

''பெண்ணென்று சொல்லிடிலோ - ஒரு
பேயும் இரங்கும் என்பார்; தெய்வமே! நினது
எண்ணம் இரங்காதோ?''

என்று தெய்வத்திற்கு வினாவும் வேண்டுகோளும் விடுக்கின்றார். இதற்குப் பின்னும் அந்த மகாகவியின் கண்களிலிருந்து பொழியும் நீர் நிற்கவில்லை. மேலும் அழுகிறார்:

''நெஞ்சம் குமுறுகிறார் - கற்பு
நீங்கிடச் செய்யும் கொடுமையிலே அந்தப்
பஞ்சைமகளிரெல்லாம் - துன்பப்
பட்டுமடிந்து மடிந்து மடிந்தொரு
தஞ்சமும் இல்லாதே - அவர்
சாகும் வழக்கத்தை இந்தக் கணத்தினில்
மிஞ்ச விடலாமோ? - ஹே!
வீர காளி, சாமுண்டி, காளீ!''

என்று கூறிக் காளியை அழைக்கிறார், தமது கண்ணீரைத் துடைக்க!

இது, ஆப்பிரிக்கத் தீவுகளிலே தமிழர் அடைந்த அல்லல் குறித்து தமிழ்க் கவிஞர் காளி தேவிக்கு விடுத்த வேண்டுகோள். கவிஞரின் வேண்டுகோள் வீண் போகவில்லை. மாகாளி பராசக்தி கடைக்கண் வைத்தாள். ஆஹா! நேட்டாலில் மோகனதாஸ் காந்தி வடிவிலே மாகாளி பராசக்தி தோன்றினாள், அவளை இனம் கண்டு, அவள் எதிரே (மோகனதாஸ் காந்தியின் முன்னே) ஆங்கிலேயனின் பூட்ஸ் காலால் உதைபட்டு முன் பற்களை இழந்த தமிழன் ஒருவன் தோன்றினான், முறையிட்டுக் கொள்ள! இனி, அந்த அவலக் காட்சியையும் பார்ப்போம்!

பல்லுடைந்த பாலசுந்தரம்!

வெள்ளை எசமானனால் உதைக்கப்பட்டுக் காயமடைந்த ஒப்பந்தத் தொழிலாளியான தமிழர் ஒருவர் திடீரென்று தம் எதிரே தோன்றியதைக் காந்தியடிகளே வருணிக்கிறார். கேட்போம்:

''ஒரு தமிழர்; கந்தை அணிந்து, முண்டாசுத் துணியைக் கையில் வைத்துக் கொண்டு, முன்னம் பற்கள் இரண்டும் உடைந்து போய், இரத்தம் வழியும் கோலத்தில் நடுங்கிக் கொண்டும் அழுது கொண்டும் என் முன்னே வந்து நின்றார். அவர், தம்முடைய எசமானால் கடுமையாக அடிக்கப்பட்டிருந்தார். என் குமாஸ்தா ஒரு தமிழர். அவர் மூலம் எல்லா விவரங்களையும் கேட்டுத் தெரிந்து கொண்டேன். வந்தவரின் பெயர் பாலசுந்தரம். டர்பனில் குடியிருப்பவரான ஒரு பிரபலமான ஐரோப்பியரின் கீழ் அவர் ஒப்பந்தத் தொழிலாளியாக வேலை செய்து வந்தார். அவருடைய எசமான் அவர் மீது கோபம் கொண்டார். வரம்பு மீறிப்போய்ப் பாலசுந்தரத்தைப் பலமாக அடித்து அவருடைய முன்னம் பற்கள் இரண்டை உடைத்து விட்டார்''

அபயம் தந்தவர்!

பரங்கியனிடம் பல்லுடைபட்ட பாலசுந்தரம், பாரத நாடு செய்த பெருந்தவத்தால் காந்திஜியை அடையாளங் கண்டு கொண்டவர்போல, அவர் எதிரே போய் நின்றார்.

காந்திஜி - பாலசுந்தரம் சந்திப்புத்தான் சத்தியாக்கிரகப் போர் முறையை இந்தியா பெறுவதற்குக் காரணமாக அமைந்தது. பாலசுந்தரத்தின் பல்லை உடைத்த பரங்கியன் கூட, தன்னை யறியாமலே இந்திய சமுதாயத்திற்கு நல்லதையே செய்தான்.

தன்னிடம் அபயம் புகுந்த பாலசுந்தரத்தை காந்திஜி ஒரு டாக்டரிடம் அனுப்பினார். அந்நாளில் நேட்டாலில் வெள்ளைக் கார டாக்டர்களே உண்டு. அதனால், ஒரு வெள்ளையனிடம் உதைபட்டுக் காயமடைந்த தமிழர் இன்னொரு வெள்ளை யனிடமே சிகிச்சைபெற வேண்டியிருந்தது. சிகிச்சை பெற்றபின், பல்லுடைபட்டதற்கு டாக்டரிடம் சான்றிதழ் பெற்று, பால சுந்தரத்தை நேரே மாஜிஸ்திரேட்டிடம் அழைத்துச் சென்றார் காந்திஜி. அந்த மாஜிஸ்திரேட்டும் வெள்ளையர் தான்.

விடுதலை தேடினார்!

வழக்கு நடந்தது. பாலசுந்தரத்தை அடித்த வெள்ளையரைத் தண்டனைக்குள்ளாக்க வேண்டும் என்பது காந்தியின் விருப்பமல்ல. அவரிடமுள்ள ஒப்பந்தத்திலிருந்து பாலசுந்தரத்தை விடுவிக்க வேண்டும் என்பதுதான் அவரது விருப்பம். அதற்காகச் சட்ட ரீதியான வழிகளில் முயற்சி எடுத்து, பாலசுந்தரத்திற்கு விடுதலை தேடினார், அவரை உதைத்த எசமானிடமிருந்து!

ஒரு எசமானிடமுள்ள ஒப்பந்தத்திலிருந்து ஒரு தொழிலாளி விடுதலை பெற வேண்டுமானால், மற்றொரு எசமான் அவரை ஏற்றுக்கொள்ள வேண்டும். அவரும் வெள்ளையராகத்தான் இருக்க வேண்டும். எசமானை மாற்றிக் கொள்ளவும் பழைய எசமான் உடன்பட வேண்டும். அதை மாஜிஸ்திரேட்டும் அங்கீகரிக்க வேண்டும். இத்தனைச் சடங்குகளையும் நிறைவேற்றப் பல நாட்கள் பாடுபட்டு, உதைத்த எசமானிட மிருந்து, பாலசுந்தரத்திற்குக் காந்திஜி விடுதலை தேடித் தந்தார்.

தமிழ் மகனான திரு. பாலசுந்தரத்திற்கு ஏற்பட்ட துன்பத்தைத் துடைக்கக் குஜராத்தியரான காந்திஜி முயற்சி எடுத்ததற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று, மனிதாபிமானம்! மற்றொன்று, தேசாபிமானம்! பாலசுந்தரம் மொழியால் தமிழர் என்றாலும், பிறந்த தேசத்தால் இந்தியர். அதனால், அந்த இந்தியருக்கு நேர்ந்த துன்பத்தைத் தமக்கு நேர்ந்ததாகக் கருதி அதனைத் துடைக்க காந்திஜி பாடுபட்டார்.

தொழிலாளர் அடைக்கலம்!

இந் நிகழ்ச்சியிலிருந்து ஓர் உண்மையைக் காந்திஜி புரிந்து கொண்டார். பாலசுந்தரத்தை ஒரு வெள்ளையரிடமிருந்து மீட்க அவரால் முடிந்தாலும், இன்னொரு வெள்ளையரிடம் அடிமைப் படுத்தி விட்டுத்தான் அதனைச் சாதிக்க வேண்டியிருந்தது. இது, தென்னாப்பிரிக்காவிலிருந்த கொடுமை! இந்தக் கொடுமையிலிருந்து தொழிலாளர் அனைவரையுமே விடுதலை செய்ய வேண்டுமென்ற முடிவைக் காந்திஜி மேற்கொண்டார்.

பாலசுந்தரம் அடையாளம் காட்டியபின் தென்னாப்பிரிக்க இந்தியத் தொழிலாளர்கள் எல்லாம் அடிமைத் தனத்திலிருந்து தங்களை மீட்க வந்த அவதார புருஷராகக் காந்திஜியைக் கருதினர். அவரை யணுகி, தங்களுக்குக் கதி மோட்சம் தருமாறு கை கூப்பி வேண்டினார். அதனை அடிகளே கூறக் கேட்போம்:

''பாலசுந்தரத்தின் வழக்கு, ஒப்பந்தத் தொழிலாளர் ஒவ்வொருவருடைய காதுக்கும் எட்டிவிட்டது. அவர்கள் என்னைத் தங்களுடைய நண்பனாகக் கருதினார்கள். இந்தத் தொடர்பைக் குறித்து, நான் அளவற்ற மகிழ்ச்சியடைந்தேன். ஒப்பந்தத் தொழிலாளர்கள் ஓயாமல் என் அலுவலகத்திற்கு வந்த வண்ணம் இருந்தனர். அவர்களுடைய இன்ப துன்பங்களை அறிந்து கொள்ளுவதற்கு எனக்குச் சிறந்த வாய்ப்பு ஏற்பட்டது.

''பாலசுந்தரம் வழக்கின் எதிரொலி தொலை தூரத்தில் இருக்கும் சென்னையிலும் கேட்டது. சென்னை மாகாணத்தின் பல

பகுதிகளிலிருந்தும் ஒப்பந்தத் தொழிலாளராக நேட்டாலுக்கு வந்திருந்தவர்கள், தங்கள் சகோதரத் தொழிலாளர்களின் மூலம் இந்த வழக்கைக் குறித்து அறியலாயினர்.

''தங்கள் கட்சியை எடுத்துப் பேசுவதற்கும், தங்களுக்காகப் பகிரங்கமாக வேலை செய்வதற்கும் நேட்டாலில் ஒருவர் இருக்கிறார் என்பது, ஒப்பந்தத் தொழிலாளருக்கு ஆனந்தத்தோடு கூடிய அதிசயமாக இருந்ததோடு, அதனால் அவர்களுக்கு ஒரு நம்பிக்கையும் உண்டாயிற்று.''

வெள்ளையன் தந்த உதையால் பல்லுடைப்பட்ட பாலசுந்தரம் காந்தியடிகள் எதிரே போய் நின்றபோது, தம் தலையில் கட்டியிருந்த முண்டாசை அவிழ்த்தெடுத்து, அதைக் கையில் வைத்துக் கொண்டு, ஐரோப்பியன் எதிரே ஒரு அடிமைத் தொழிலாளி காட்ட வேண்டிய பாவனையைக் காட்டினாராம். அதைக் கண்டு காந்திஜி வேதனைப்பட்டார். தம்மையும் ஓர் எசமானனாகவே கருதி, பாலசுந்தரம் அப்படி நடந்து கொண்டதை நினைத்து அவரது நெஞ்சம் புண்பட்டது. அந்த வேதனைப் புண்ணை வெளிப்படுத்தும் வாசகம் வருமாறு:

''முண்டாசுத் துணியைக் கையில் வைத்துக் கொண்டு பாலசுந்தரம் என் அலுவலகத்திற்குள் வந்தாரென்று கூறினேன். இதில் நமது மானக்கேட்டைக் காட்டும் துக்ககரமான அம்சம் ஒன்று இருக்கிறது.

''தலையில் வைத்திருப்பது குல்லாயாக இருந்தாலும், தலைப்பாகையாக இருந்தாலும் தலையில் சுற்றிய ஒரு துண்டாக இருந்தாலும், ஓர் ஐரோப்பியரைப் பார்க்கப் போகும்போது, ஒவ்வொரு ஒப்பந்தத் தொழிலாளியும், புதிதாக வந்த ஒவ்வொரு இந்தியரும் அதைத் தலையிலிருந்து எடுத்தாக வேண்டும்; இரண்டு கைகளால் சலாம்போட்டால் மட்டும் போதாது. இந்தப் பழக்கம் நிர்ப்பந்தமாகச் சுமத்தப்பட்டு வந்திருக்கிறது. என் விஷயத்திலும் அதே பழக்கத்தை அனுசரிக்க வேண்டுமென்று பாலசுந்தரம் கருதியிருக்கிறார். அதனாலேயே முண்டாசுத் துணியைக் கையிலெடுத்து வைத்துக் கொண்டு என்னிடம் வந்தார். என் அனுபவத்தில் இவ்விதம் நிகழ்ந்தது இதுவே முதல் தடவை.

''அவமானத்தினால் என் மனம் குன்றியது, தலையில் முண்டாசைக் கட்டும்படி அவரிடம் கூறினேன். கொஞ்சம் தயங்கிக் கொண்டே அவர் கட்டினார். என்றாலும் அவருக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியை அவருடைய முகத்தில் நான் காண முடிந்தது.''

(காந்தி நூல்கள் - தொகுப்பு - 3; பக்கம் 211 -12).

''மனிதர்கள் தங்கள் சகோதர மனிதர்களை அவமானப் படுத்துவதன் மூலம் தாங்கள் கௌரவிக்கப்படுவதாக எப்படி நினைக்கிறார்கள் என்பது எனக்கு என்றுமே புரியாத மர்மமாக இருந்து வருகிறது.

நேட்டால் இந்தியர் காங்கிரஸ்

ஒப்பந்தத் தொழிலாளியான திரு. பாலசுந்தரம் தம்மைச் சந்திப்பதற்கு முன்பே - அதாவது, தாம் தென்னாப்பிரிக்காவை அடைந்த ஓராண்டு கழித்து, 'நேட்டால் இந்தியர் காங்கிரஸ்' என்ற பெயரில் ஓர் அமைப்பைக் காந்தியடிகள் தொடங்கியிருந்தார். நேட்டாலிலிருந்த இந்தியர்களிலே பெருவணிகர்கள், சிறுகடைக் காரர்கள், குமாஸ்தாக்கள் ஆகியவர்களுக்காகவே அதனை அவர் தொடங்கினார். அதிலே உறுப்பினராகச் சேரும் இந்தியர் குறைந்த அளவு 3 பவுன் சந்தாச் செலுத்த வேண்டும். ஒப்பந்தத் தொழிலாளர்கள் அதனைச் செலுத்துவது சாத்திய மில்லை. அதனால் தொழிலாளர்கள் அதில் சேரவில்லை. ஆயினும், நேட்டால் காங்கிரசின் துணைகொண்டு ஒப்பந்தத் தொழிலாளர் களின் துயரங்களைப் போக்குவதற்குப் பாடுபடுவ தென முடிவு செய்தார். இதற்கு நேட்டால் காங்கிரசையும் இணங்கச் செய்தார்.

பிள்ளையார் சுழி

ஒப்பந்தத் தொழிலாளர்களுக்குத் தொண்டு செய்ய வேண்டுமென்ற எண்ணம் அடிகள் தென்னாப்பிரிக்காவுக்குச் சென்ற ஆரம்ப காலத்திலேயே அவருக்குத் தோன்றியது. திரு. பாலசுந்தரத்தின் சந்திப்பு இதற்கான அரிய வாய்ப்பாக அமைந்தது. அதனை அடிகளாரே கூறுகிறார், கேட்போம்:

''மனப்பூர்வமாகக் கொள்ளும் புனிதமான ஆசை எதுவும் நிறைவேறி விடுகிறது. இந்த விதி உண்மையானது என்பதை என் சொந்த அனுபவத்தில் நான் அடிக்கடி கண்டிருக்கிறேன். ஏழைகளுக்குச் சேவை செய்ய வேண்டுமென்பதே என் உள்ளத்தின் அத்யந்த ஆசை. அந்த ஆசை என்னை எப்பொழுதம் ஏழைகள் நடுவில் கொண்டு போய்ச் சேர்த்தது. அதனால், அவர்களில் ஒருவனாக என்னை ஆக்கிக்கொள்ளவும் முடிந்தது.

''தென்னாப்பிரிக்காவிலேயே பிறந்த இந்தியரும் குமாஸ்தாக்கள் வகுப்பினரும் நேட்டால் இந்தியர் காங்கிரசில் அங்கத்தினர்களாக இருந்த போதிலும், நுட்பப் பயிற்சி பெறாதவர்களான சாதாரணத் தொழிலாளரும், ஒப்பந்தத்

தொழிலாளரும் அதில் இன்னும் இடம் பெறாதவர்களாகவே இருந்து வந்தனர். சந்தா கொடுத்துச் சேர்ந்து அதன் அங்கத்தினர்கள் ஆகிவிட அந்த ஏழைகளால் இயலாது. அவர்களுக்குச் சேவை செய்வதன் மூலமே அவர்களுடைய அன்பைக் காங்கிரஸ் பெற முடியும் அதற்கு நானோ, காங்கிரசோ, தயாராக இல்லாத தருணத்தில் அதற்கான வாய்ப்பு தானே வந்து சேர்ந்தது.

''நான் வக்கீல் தொழிலை நடத்தத் தொடங்கி மூன்று நான்கு மாதங்கள்கூட ஆகவில்லை. காங்கிரசும் இன்னும் அதன் குழந்தைப்பருவத்தில் இருந்தது. அப்பொழுது ஒரு தமிழர், கந்தை அணிந்து, முண்டாசுத் துணியைக் கையில் வைத்துக் கொண்டு, முன்னம் பற்கள் இரண்டும் உடைந்து போய், இரத்தம் வழியும் கோலத்தில் நடுங்கிக்கொண்டும் அழுது கொண்டும் என்முன்னே வந்து நின்றார்.''

(காந்தி நூல்கள் தொகுப்பு 3; பக். 210)

குஜராத்தைச் சார்ந்த பெரிய வணிகரான அப்துல்லா சேத் கம்பெனிக்கு ஒரு வருட கால ஒப்பந்தத்தின் பேரில் வக்கீல் வேலை செய்யத் தென்னாப்பிரிக்காவுக்குப் போன காந்தியடிகளை, ஒப்பந்தத் தொழிலாளரின் - குறிப்பாக, ஏழைத் தமிழர்களின் தொண்டராக்கிய பெருமை திரு. பாலசுந்தரத்திற்கே உரியதாகிறது.

தென்னாப்பிரிக்கத் தமிழர் நிலையை அந்நாளில் இந்தியத் தமிழகத்திலிருந்த அரசியல் தலைவர்களில் எவரும் அதிகமாக அறிந்து வைத்திருக்கவில்லை. அந்த நிலையில குஜராத்தியரான காந்தியடிகள், மனிதாபிமானத்தின் பேரிலும் தேசாபிமானத்தின் பேரிலும் தென்னாப்பிரிக்கத் தமிழர்களுக்குத் தொண்டாற்ற முன் வந்தார் என்பது நன்றியுணர்வுடைய் தமிழர்கள் என்றென்றும் நினைவில் வைத்துப் போற்றத்தக்கதாகும்.

கடல் கடந்த தமிழர் அல்லல் குறித்துப் பாரதியார் தம் கண்ணீரால் கவிதை இயற்றியது காந்தியடிகள் தென்னாப்பிரிக்கத் தமிழர் நிலையை உலகறியச் செய்த பிறகுதான். பாலசுந்தரம் காந்தியடிகளைச் சந்தித்தது 1894-இல். பாரதியார் கடல் கடந்த தமிழர் குறித்துப் பாடியது 1910-க்குப் பின்னர்தான்.

தலைவரிச் சட்டம்!

நேட்டால் அரசு இந்தியரைத் துன்புறுத்தும் வகையில் சில சட்டங்களையும் இயற்ற முனைந்தது. ஒப்பந்தத்திலிருந்து விடு பட்ட சுயேச்சைத் தொழிலாளர்கள் இந்தியாவுக்குத் திரும்பாமல்

நேட்டாலிலேயே தங்கி வாழ விரும்பினால், அவர்களில் ஒவ்வொருவரும் ஆண்டொன்றுக்கு 25 பவுன் தலைவரி செலுத்த வேண்டும். இது ஒரு சட்டம். ஒரு மாதத்தில் 24 ஷில்லிங் அளவே கூலி பெறுகின்ற ஏழைத் தொழிலாளர்கள் ஆண்டுக்கு 25 பவுன் தலைவரி செலுத்துவது இயலாததாகும். இதைத் தெரிந்து கொண்ட நேட்டால் அரசு தலைவரிச் சட்டத்தைக் கொண்டு வந்தது. காரணம், ஒப்பந்தத்திருந்து விடுபட்ட இந்தியர்களை அங்கிருந்து இந்தியாவுக்கு விரட்டிவிட வேண்டுமென்பதுதான். இதை எதிர்த்துப் போராட நேட்டால் காங்கிரஸ் முடிவெடுத்தது.

இதே நேரத்தில், இந்தியருக்கிருந்த வாக்குரிமையைப் பறிக்கும் சட்டமொன்றையும் நிறைவேற்ற அரசு முன் வந்தது. இதையும் எதிர்த்துப் போராட காந்தியடிகளின் ஆலோசனையின் பேரில் காங்கிரஸ் முடிவெடுத்தது.

சத்தியாக்கிரகத் தொடக்கம்

தென்னாப்பிரிக்க இந்தியரைப் பாதிக்கக் கூடிய வகையில் அந்த நாட்டு அரசு ஒரு சட்டம் நிறைவேற்ற வேண்டுமானால் அதற்கு இந்திய அரசின் முன் அனுமதியைப் பெற்றாக வேண்டுமென்பது இந்திய - தென்னாப்பிரிக்க நாடுகளிடையில் ஏற்பட்டிருந்த ஒப்பந்தமாகும். அதன்படி, 25 பவுன் தலைவரியை இந்திய அரசு ஏற்க மறுத்தது. அதனை மூன்று பவுனாகக் குறைக்குமாறு ஆலோசனை கூறியது. அதனைத் தென்னாப்பிரிக்க அரசு ஏற்றுக் கொண்டு விட்டது.

ஒவ்வொரு ஒப்பந்தத் தொழிலாளியும் தனக்காகவும், தன் மனைவிக்காகவும், தன்னுடைய 16 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு மகளுக்காகவும் தலைக்கு 3 பவுன் வரி செலுத்த வேண்டுமென்பதற்கு இந்திய அரசு அங்கீகார மளித்துவிட்டது.

இதை நேட்டால் காங்கிரசும் ஏற்றிருந்தால் அந்நாட்டி லிருந்த சுயேச்சைத் தொழிலாளரில் பெரும்பாலோர் இந்தியா வுக்குத் திரும்ப வேண்டி ஏற்பட்டிருக்கும். அதனைத் தவிர்ப்பதற்காகக் காந்தியடிகள் சாத்விக முறையில் போர் தொடங்கத் திட்டமிட்டார். அதற்கு, 'சத்தியாக்கிரகம்' என்று பெயர் வைத்தார். இதிலிருந்துதான் உலகிற்கு சத்தியாக்கிரகப் போர் முறை அறிமுகமானது. இதற்குக் காரணமான பாலசுந்தரம் சரித்திர புருஷராகிவிட்டார்.

நேட்டால் இந்தியர்களைக் காங்கிரசும் காந்தியடிகளும் கை விட்டிருந்தால், இந்திய அரசு 25 பவுன் தலைவரியையே

ஏற்றுக் கொண்டிருக்கும். காங்கிரசினுடைய எதிர்ப்புக் காரணமாகத்தான் 3 பவுனாகக் குறைக்குமாறு நேட்டால் அரசுக்கு இந்திய அரசு ஆலோசனை கூறியது. இதுவும் தொழிலாளர்களின் சக்திக்கு மீறியதென்று கூறி, தலைவரி மறுப்புப் போரில் ஈடுபடுமாறு தொழிலாளர்களையேயன்றி, தென்னாப்பிரிக்க இந்தியர் அனைவரையுமே காங்கிரஸ் கேட்டுக்கொண்டது. அதனால் இந்தியர்களிலே குஜராத்தியரான வணிகர்கள், சிறு கடைக்காரர்கள் ஆகியோரும் சுயேச்சைத் தொழிலாளருக்கான போராட்டத்தில் பங்கு கொண்டனர். தொடர்ந்து 29 ஆண்டுகள் போராடிய பின்னரே 3 பவுன் தலைவரி தொலைந்தது.

காந்தியடிகள் பிரச்சாரம்

தென்னாப்பிரிக்க இந்தியத் தொழிலாளர் நலன்களைக் காக்க காங்கிரஸ் போராடிக் கொண்டிருந்த நிலையில் அதற்கு ஆதரவு திரட்டும் பொருட்டு, காந்தியடிகள் 1896-இல் இந்தியாவுக்கு வருகை தந்து, இங்குச் சுற்றுலா மேற்கொண்டார். அப்போது சென்னைக்கும் வருகை தந்து. 26-10-1896-இல் சென்னை பச்சையப்பன் மண்டபத்தில் திரு. அனந்தாச்சார்லு தலைமையில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் அடிகள் சொற்பொழி வாற்றினார். அதில், தென்னாப்பிரிக்க இந்தியர் படும் அல்லல் களை, தென்னாப்பரிக்க அரசு அவர்களுக்கு இழைத்து வரும் அநீதிகளை எடுத்துரைத்தார். அந்தச் சொற்பொழிவின் பிரதான பகுதிகளை மட்டும் இங்கு பார்ப்போம்:

''தென்னாப்பரிக்காவில் இருக்கும் ஒரு லட்சம் பிரிட்டிஷ் இந்தியரின் சார்பாக உங்களிடம் முறையிட்டுக் கொள்ளவே இன்று மாலை உங்கள் முன்பு பேச எழுந்திருக்கிறேன். இந்த ஒரு லட்சம் இந்தியர்களில் பெரும்பாலானவர்கள் சென்னை மாகாணத் திலிருந்து போனவர்கள். ஆகையால், அவர்கள் இந்தியர்கள் என்ற முறையில் நீங்கள் காட்ட வேண்டிய பற்றுதலைவிட இன்னும் அதிக சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டியவர்களாக நீங்கள் இருக்கிறீர்கள். தென்னாப்பிரிக்காவில் வெள்ளையர்களின் வீடுகளில் வேலைக்காரர்களாக இருப்பவர்களில் பெரும்பாலோர் சென்னை மாகாணத்தைச் சேர்ந்தவர்கள்.

''அங்கு எவ்விதப் பாகுபாடுமின்றி இந்தியர் எல்லோருமே 'கூலி' என்றுதான் அழைக்கப்படுகின்றனர். இந்தியரான பள்ளி ஆசிரியர்களைக் 'கூலிப் பள்ளி ஆசிரியர்கள்' என்கின்றனர். இந்தியரான கடைக்காரர்களைக் 'கூலிக் கடைக்காரர்கள்' என் கின்றனர். பம்பாயிலிருந்து போயிருக்கும் ஸ்ரீதாதா அப்துல்லா,

ஸ்ரீமூஸ்ஹாஜி காசிம் ஆகிய இருவருக்கும் சொந்தமாகக் கப்பல்கள் இருக்கின்றன. இவர்களுடைய கப்பல்கள் 'கூலிக் கப்பல்கள்' என்றே சொல்லப்படுகின்றன.

'ஏ. குழந்தைவேலுப் பிள்ளை கம்பெனி' என்பது சென்னை வர்த்தகர்களுக்குச் சொந்தமான கௌரவமான ஸ்தாபனம். இவர்கள் டர்பனில் பெரிய கட்டடங்களைக் கட்டியிருக்கிறார்கள். இந்தக் கட்டடங்களைக் 'கூலி ஸ்டோர்கள்' என்றே சொல்லுகிறார்கள். இந்தக் கட்டடங்களின் சொந்தக்காரர்களையும் 'கூலி முதலாளிகள்' என்றுதான் கூப்பிடுகின்றனர்.

''எந்தவித ஆபத்துக்கும் ஆளாகாமல் நடைபாதையில் அங்கே நாம் பத்திரமாக நடந்துபோக முடியாது. தாம் அவமதிக்கப்படலாம் அல்லது பிடித்துத் தள்ளப்பட்டு விடலாம் என்ற பயத்தினால் தூய ஆடையணிந்த மதராசி கனவான்களும் டர்பன் தெருக்களில் நடைபாதையில் நடப்பதற்குப் பயந்து கொண்டு அதைத் தவிர்த்துக் கொள்கிறார்கள்.

''எங்களை 'ஆசிய ஆபாசங்கள்' என்று மனமாறத் தூற்றுகின்றனர். நாங்கள் தீமைகள் மலிந்தவராம்; அரிசியைத் தின்று வாழ்கிறோமாம்; எங்களை 'நாற்றம் எடுத்த கூலிகள்' என்கின்றனர். எண்ணெய் படிந்த கந்தலைக் கட்டிக் கொண்டு வாழ்கிறோமாம்; நாங்கள் 'கறுப்பு விஷக் கிருமி'களாம்!

''தென்னாப்பிரிக்காவின் சட்டப் புத்தகங்களோ 'பாதிக் காட்டு மிராண்டிகளான ஆசியாக்காரர்கள்' அல்லது 'ஆசியாவின் நாகரிகமற்ற இனத்தைச் சேர்ந்தவர்கள்' என்று எங்களை வருணிக்கின்றன. நாங்கள் வெள்ளை முயல்களைப் போல ஏராளமாகப் பிள்ளைகளைப் பெறுகிறோம் என்கிறார்கள். டர்பனில் நடந்த ஒரு கூட்டத்தில், கனவான் ஒருவர், 'வெள்ளை முயல்களைக் கொல்வதுபோல இவர்களைக் கொல்ல முடியவில்லையே!' என்று வருத்தப்பட்டாராம்.

''ஓட்டல்களில் நாங்கள் அனுமதிக்கப்படுவதில்லை. நேட்டாலில் 'டண்டீ' என்ற கிராமத்தில் இந்தியரின் கடை ஒன்றை ஒரு ஐரோப்பியக் கூட்டத்தினர் சமீபத்தில் கொளுத்தி விட்டார்கள். ('வெட்கம் வெட்கம்' என்ற முழக்கம்) இந்தியர் மீது இவ்விதம் இருந்துவரும் தீவிரமான பகையானது தென்னாப்பிரிக்காவில் பல ராஜ்யங்களிலும் பல வழிகளிலும் இந்தியரின் உரிமையைக் கட்டுப்படுத்திவிடும் சட்டங்களாக உருவெடுத்திருக்கின்றன.

''*1894*-ஆம் ஆண்டு வரையில் ஐரோப்பியருடன் இந்தியரும் சமமாக வாக்குரிமையைப் பெற்றிருந்தனர். அந்த ஆண்டில்

சட்டசபை நிறைவேற்றிய ஒரு மசோதா ஆசியாக்காரர்களின் வாக்குரிமையைப் பறித்து விட்டது. ஐரோப்பிய வாக்காளர்கள் பத்தாயிரமாக இருக்கும்போது இந்தியவாக்காளரோ 250 பேர்தான். இதிலிருந்தே இந்திய வாக்குரிமை ஐரோப்பியரை ஒருநாளும் அழித்துவிடப் போவதில்லை என்பது நிச்சயமாகிறது. அப்படியிருந்தும், இந்தியரின் வாக்குரிமை பறிக்கப்பட்டிருக்கிறது.''

காந்தியடிகள் தமது சென்னைப் பேச்சிலே இந்தியர்கள் எத்தகைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் தென்னாப்பிரிக்காவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என்பதையும் விவரித்தார். அது வருமாறு:

''1894 ஆகஸ்டு 18-ஆம் தேதி வரையில் ஒப்பந்தத்தின் பேரில் சென்றவர்கள் 5 ஆண்டுகளுக்கு அங்கு இருப்பது என்று போனார்கள். நேட்டாலுக்குப் போய்ச் சேர இவர்களது கப்பல் செலவு இலவசம். இவர்களுக்கும் இவர்களது குடும்பங்களுக்கும் அங்குச் சாப்பாடும் வீட்டு வசதியும் இலவசமே.

''முதல் வருடத்திற்கு மாதம் 10 ஷில்லிங் சம்பளம். பின்னர் ஆண்டுக்கு ஒரு ஷில்லிங் வீதம் சம்பள உயர்வு. ஒப்பந்தம் முடிந்த பிறகு மேலும் ஐந்தாண்டுகளுக்கு இவர்கள் அங்குச் சுயேச்சையான கூலிகளாக இருப்பார்களானால், அந்த ஐந்தாண்டுக்குப் பின் இந்தியாவுக்குத் திரும்பி வரக் கப்பல் செலவு இலவசம்.

''இந்தச் சலுகைகள் யாவும் இப்போது மாற்றப்பட்டு விட்டன. ஒன்று, இவர்கள் என்றுமே ஒப்பந்தக் கூலிகள் என்ற முறையில் அங்கு இருந்து வர வேண்டும் அல்லது இந்தியாவுக்குத் திரும்பிவிட வேண்டும்.

''ஒப்பந்தக் கூலிகளாகவே அங்கு நீடித்து இருந்து வருவதென்றால், இவர்கள் வருடத்திற்கு மூன்று பவுன் தலைவரி செலுத்த வேண்டும். ஒப்பந்தக் கூலி விகிதத்தில் இந்தத் தொகை அவர்களுடைய அரையாண்டுச் சம்பளத்தின் மொத்தத் தொகைக்கு சமமாகும்.''

தமிழருக்கு அநீதி!

நேட்டாலில் இந்தியரைப் பொறுத்தவரையில் மனித உரிமைகள் கூட எப்படியெல்லாம் மறுக்கப்படுகின்றன. வீதிகளிலே நடை பாதைகளில் நடப்பதற்கான உரிமைகூட இந்தியர் விஷயத்தில் - குறிப்பாக, தமிழ்நாட்டுத் தொழிலாளர் விஷயத்தில் எப்படி மறுக்கப்பட்டு வருகிறது என்பதைக் காந்தியடிகள் மிகுந்த வேதனையோடு கூறினார். அது வருமாறு:

''நேட்டாலில் 'இரவு 9 மணி விதி' என்று ஒன்று இருக்கிறது. அதன்படி, இரவு 9 மணிக்குப் பிறகு இந்தியர் யாராவது வீட்டிற்கு வெளியே போக வேண்டுமாயின், ஒரு அனுமதிச் சீட்டை வைத்திருக்க வேண்டும். அந்தச் சீட்டு இல்லாது போய்விட்டால் அவர்கள் இருட்டறையில் வைக்கப்படுவார்கள். இது, இந்தியருக்கு - முக்கியமாகச் சென்னை மாகாணத்திலிருந்து போயிருப்பவர்களுக்கு நெஞ்சை வதைக்கும் பெருந் தொல்லை யாக இருந்து வருகிறது.''

(காந்தி நூல்கள் - தொகுப்பு - 3; பக் 210)

சென்னை மாகாணத்தவரின் தனிக்குணத்தைக் குறிப்பிடும் போது, ''இவர்கள் ஒரு சிறு அவமதிப்பையும் சகித்துக்கொள்ள இயலாத இனத்தினர்'' என்றார் காந்தியடிகள். இத்தகு மானமிகு இனத்தினர் ''இரவு 9 மணி விதியின் கீழ்க் கைதாகிவிடும் துன்பத்திற்கு ஆளாயினர்'' என்றும் குறிப்பிட்டார்.

இருட்டறையில் தமிழாசிரியர்!

சென்னைப் பொதுக்கூட்டத்தில் அடிகள் மேலும் பேசியது வருமாறு:

''தமிழ்ப் பள்ளிக்கூடப் பெண் ஆசிரியர் ஒருவர், தமிழ்ப் பள்ளிக்கூட ஆண் ஆசிரியர் ஒருவர், ஞாயிற்றுக்கிழமைப் பள்ளிக் கூடத் தமிழாசிரியர் ஆகியவர்கள் இரவு 9 மணி விதியின் கீழ் சில மாதங்களுக்கு முன்புதான் கைது செய்யப்பட்டு இருட்டறையில் அடைத்து வைக்கப்பட்டனர்.

''டர்பனில் இன்னொரு சட்டமும் இருக்கிறது. அதன்படி, வெள்ளையரல்லாத வேலைக்காரர்கள் எல்லோரும் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

''ரெயில்வே அதிகாரிகள் இந்தியரை மிருகங்களைப் போல நடத்துகிறார்கள். டிராம் வண்டிகளில் இந்தியரை உள்ளே உட்கார விடுவதில்லை. 'மாடி' என்று கூறப்படும் வண்டியின் மேல் தளத்துக்கே அவர்கள் அனுப்பப்படுகின்றனர். அங்கும் உட்கார்ந்த இடத்திலிருந்து கிளம்பி வேறு இடங்களுக்குப் போய் உட்காரும் படி விரட்டப்படுகின்றனர்.

''எனக்கு ஓர் இந்திய அதிகாரியைத் தெரியும். அவர் தமிழகக் கனவான். புது தினுசு ஐரோப்பிய ஆடைகளையே அவர் அணிந்திருந்தார். அவர் உட்கார டிராம் வண்டியில் நிறைய இடமிருந்தும், படிக்கட்டிலேயே நிறுத்தி வைக்கப்பட்டார்.

''டிரான்ஸ்வாலில் நாம் சொந்தமாக நிலம் வைத்துக் கொள்ள முடியாது. குறிப்பிட்ட இடத்தைத் தவிர மற்ற இடங்களில் நாம் வசிக்கவோ அல்லது வர்த்தகம் செய்யவோ கூடாது. இந்தியர்களுக்கென்று ஒதுக்கப்படும் இடத்தைப் பற்றி பிரிட்டிஷ் ஏஜெண்டு கூறுகையில், ''ஆபாசமான கழிவுநீரைத் தவிர வேறு தண்ணீரே கிடைக்காத குப்பை கொட்டும் இடமே இந்த இடம்'' என்று சொல்லியிருக்கிறார்.

''ஜோஹன்ஸ்பர்க்கிலும், பிரிட்டோரியாவிலும் நடை பாதைகளில் நாம் உரிமையுடன் நடக்க முடியாது. ரெயில் வேக்களில் முதல் வகுப்பில் நாம் பிரயாணம் செய்வதை சட்டம் தடுக்கிறது. டிரான்ஸ்வாலில் நாம் குடியேற வேண்டுமானால் அதற்காக நம்மை விசேஷமாகப் பதிவு செய்வதற்கு ஆளுக்கு 3 பவுன் வீதம் செலுத்த வேண்டும். நாம் அடிமைகளாகவே நடத்தப்பட்டு வரும் நிலையிலும், நமக்கு எந்தவித உரிமையுமே இல்லாது போயினும் ராணுவச் சேவை செய்ய வேண்டுமென நாம் கட்டாயப்படுத்தப்படலாம்.

''சுதேசித் தங்கத்தை ஒரு இந்தியர் வாங்கினால், அது குற்றம் எனச் சட்டம் செய்யப்பட்டிருக்கிறது.''

(காந்தி நூல் தொகுப்புகள், பகுதி 3; பக் 210)

இவ்வளவையும் கூறிய பின் பச்சையப்பன் மண்டபக் கூட்டத்திலே திரண்டிருந்த சென்னை வாசிகளுக்குக் காந்திஜி விடுத்த வேண்டுகோள் வருமாறு:

> *''எங்களுக்கு இருந்துவரும் சட்ட சம்மதமான இடையூறு களைக் குறித்து எடுத்துச் சொல்லி இங்கிலாந்திலும் இங்கும் மக்களுடைய ஆதரவைத் திரட்டப் பாடுபட்டு வருகிறோம். சென்னை மாகாணத்திலும் ஆதரவு இருந்து வருகிறது என்பதை நானறிவேன். ஆனால், எங்கள் நிலையில் நீங்கள் இன்னும் அதிகமான கவனம் செலுத்த வேண்டும் என்பதே எனது தாழ்மையான அபிப்பிராயம்.''*

அடிகள் பெற்ற உறுதி

இந்தியச் சுற்றுலாவின்போது, சென்னை நகரில் திரு. அனந்தாச்சார்லு (இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையின் முன்னாள் தலைவர்), சர்.எஸ். சுப்பிரமணிய ஐயர், திரு.ஜி.ஏ. நடேசன், பிரபல வழக்கறிஞர் திரு. பாஷ்யம் ஐயங்கார் ஆகிய தேசியத் தலைவர்கள் சென்னை மாகாணத்தின் பேராதரவைத் திரட்டித் தருவதாகக் காந்தியடிகளுக்கு உறுதி கூறினர்.

'இந்து' ஆசிரியர் திரு.ஜி. சுப்பிரமணிய ஐயர், 'மெட்ராஸ் ஸ்டாண்டர்டு ஆசிரியர் பரமேஸ்வரன் பிள்ளை ஆகிய இருவரும் சென்னை மாகாணப் பத்திரிகைகள் தென்னாப்பிரிக்க இந்தியர் இயக்கத்திற்கு ஆதரவு தரும் என்று உறுதி கூறினர்.

வட இந்தியாவிலே புனா நகரில் திரு பண்டார்க்கர் அவர்கள் தலைமையில் தென்னாப்பிரிக்க இந்தியருக்கு ஆதரவு தர நடத்தப் பட்ட கூட்டத்திலே லோகமான்ய திலகர், கோபாலகிருஷ்ண கோகலே மகாதேவ் கோவிந்த ரானடே பிரோசிஷா மேத்தா பத்ருதீன் தயாப்ஜி ஆகியோர் பேசினர். இக்கூட்டத்தில் காந்தியடிகளுக்கு ராஜோபசாரம் அளிக்கப்பட்டது.

கிளர்ச்சியும் எதிர்க்கிளர்ச்சியும்

இந்தியாவில் காந்தியடிகள் நிகழ்த்திய சொற்பொழிவுகள் பலவாயினும் சென்னைச் சொற்பொழிவுதான் வெள்ளையருக்கு ஆத்திர மூட்டத்தக்க வகையில் தென்னாப்பிரிக்கப் பத்திரிகை களில் திரித்து வெளியிடப்பட்டது. அடிகள் இந்தியரின் ஆதரவை பெற முயன்றது தென்னாப்பிரிக்காவையே இந்திய மயமாக்கி விடத்தான் என்று அங்குள்ள வெள்ளையர்கள் நம்பும் வகையில் பத்திரிகைகள் பிரச்சாரம் செய்தன. வெள்ளையர்கள் இந்தியர் இயக்கத்திற்கு எதிரான பிரசாரத்தைத் தொடங்கினர். கூட்டங்கள் நடத்தினர். பிரசுரங்கள் வெளியிட்டனர். தென்னாப்பிரிக்கா முழுவதிலுமிருந்து இந்தியர்களை விரட்டிவிட வேண்டுமென்று பிரசாரம் செய்தனர். காந்தியடிகள் தென்னாப்பிரிக்கா திரும்பாதபடி அவருக்குத் தடை விதிக்க வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்தனர்.

இவற்றையெல்லாம் கண்டு தென்னாப்பிரிக்க இந்தியத் தலைவர்கள் அஞ்சியவர்களாகி, உடனே திரும்புமாறு காந்தியடி களுக்குத் தந்தி அனுப்பினர். தந்தி கிடைத்ததும், சுற்றுலாவைக் கைவிட்டு, அடிகள் தம்முடைய மனைவியார் கஸ்தூரிபாய், மகன்களான அரிலால், மணிலால், விதவைத் தங்கையின் மகன் ஆகியோருடன் 'மாண்டவியா' என்னும் கப்பலில் தென்னாப்பிரிக்கா சென்றார்.

பதினெட்டு நாள் பயணத்திற்குப் பின், அடிகள் சென்ற கப்பல் டர்பன் துறைமுகத்தை நெருங்கியது. அந்தக் கப்பலில் சுமார் 400 இந்தியர்களும் பயணம் செய்தனர். 'நாத்தியா' என்ற மற்றொரு கப்பலும் அடிகள் சென்ற கப்பலைப் பின்பற்றி டர்பன் துறைமுகத்தை அடைந்தது. அதிலும் சுமார் 400 இந்தியர் வரை

சென்றனர். இந்த இரு கப்பல்களிலுமிருந்த இந்தியர்களுடன் காந்தியடிகளுக்கு எத்தகைய தொடர்பும் இருக்கவில்லை. அவர்கள் அடிகளைப் பின்பற்றுவதுபோலத் தென்னாப்பிரிக்காவை அடைந்தது எதிர்பாராத வகையில் தற்செயலாக நிகழ்ந்ததுதான். ஆனால், காந்திஜி சுமார் ஆயிரம் இந்தியர்களைத் தம்முடன் அழைத்துக் கொண்டு வருகிறாரென்றும், அவர்களைக் கொண்டு தென்னாப்பிரிக்காவில் இந்தியர் ஆதிக்கத்தை வலுப்படுத்துவதே அவரது நோக்க மென்றும் அங்குள்ள வெள்ளையர்களில் செல்வாக்கு மிக்கவர்களே நம்பினார்கள்.

இவை எல்லாமாகச் சேர்ந்து காந்தியடிகளுக்கு எதிராக ஓர் பேரியக்கத்தையே அங்கு உருவாக்கி விட்டது. காந்தியடிகள் சென்ற கப்பல் டர்பன் துறைமுகத்தை நெருங்கிய நாளிலே, வெறி பிடித்த ஒரு வெள்ளைக் கூட்டத்தார் அவர் கப்பலை விட்டு இறங்காதபடிப் பயமுறுத்த ஆர்ப்பாட்டம் செய்தனர். அதைக் கண்டு அஞ்சிய நேட்டால் அரசு, காந்தியடிகளேயன்றி, அவர் வந்த கப்பலில் பயணம் செய்த அனைவருமே கப்பலிலிருந்து இறங்காதபடிச் சூழ்ச்சி செய்து விட்டது! ஆம்; பயணிகள் மூலம் பிளேக் நோய் வரக்கூடுமென்று போலிக் காரணம் சொல்லி; துறைமுகக் கரையை கப்பல் அணுகாதபடி அரசு செய்து விட்டது.

தென்னாப்பிரிக்க இந்தியத் தலைவர்களில் சிலர் கப்பலிலேயே காந்தியடிகளைச் சந்தித்து, நிலைமையை அவருக்கு எடுத்துரைத்தனர். அதன்பின், டர்பன் நகரில் கொதிப்படைந்திருந்த வெள்ளையர் சாந்தமடையும் வரை காந்திஜி கப்பலிலேயே தங்கியிருப்பதென்று ஏற்பாடானது. ஆனால், அவருடைய மனைவி மக்களை மட்டும் கப்பலிலிருந்து இறக்கி, இந்தியத் தலைவர் ஒருவரின் இல்லத்திற்கு அழைத்துச் செல்ல ஏற்பாடானது.

சரியாக 23 நாட்கள் காந்தியடிகள் கப்பலில் தங்கியபின், ஐரோப்பியரிலே நல்லோர் சிலர் எடுத்த முயற்சி காரணமாக, எதிர்ப்பாளர்கள் சாந்தப்பட்டுவிட்டதாக அதிகாரிகள் நம்பினர். அதற்குள் காந்திஜியும் பொறுமையிழந்து கப்பலை விட்டு இறங்குவதென்ற முடிவுக்கு வந்து விட்டார்.

காந்தியைக் காத்த வெள்ளைப் பெண்

நேட்டால் வழக்கறிஞரான திரு. லாப்டன் என்பவரின் துணையோடு அண்ணல் காந்தி கப்பலைவிட்டு இறங்கினார். துறைமுகத்திலிருந்து இரண்டு கல் தொலைவிலுள்ள ருஸ்தம்பிஜி

யின் இல்லத்திற்கு அவர் செல்ல வேண்டும். துறைமுகத்துக்கு வெளியே திரண்டிருந்த ஐரோப்பிய ஆர்ப்பாட்டக்காரர்கள், காந்திஜியின் தலையைக் கண்டதும், 'அதோ காந்தி', 'அதோ காந்தி' என்று ஆரவாரித்தனர். 'அவனை விடாதீர்கள்! என்றும், 'சுற்றி வளைத்துக் கொள்ளுங்கள்!' என்றும் கத்தினர்.

அபாயம் நேரக்கூடம் என்று அஞ்சிய திரு. லாப்டன், ஒரு ரிக்ஷாவில் காந்தியை ஏற்றிவிட முயன்றார். மனிதனை மனிதன் இழுப்பதென்ற அநாகரிகத்தை விரும்பாத அடிகள், அதுவரை ரிக்ஷா ஏறியதில்லை. ஆயினும், திரு. லாப்டனின் வற்புறுத்தலுக் கிணங்கி, ரிக்ஷாவில் செல்ல முயன்றார். ரிக்ஷாக்காரரைக் கொன்று விடுவதாக கலகக்காரர்கள் பயமுறுத்தவே அவர் ஓடிவிட்டார்.

இந்நிலையில், வேறு வழியில்லாததால் காந்தியடிகள் நடக்கலானார். ஆர்ப்பாட்டக்காரர்களின் எண்ணிக்கை பெருகியது. கற்களாலும், அழுகிய முட்டைகளாலும் ஐயனை அடித்தனர். கால்களால் உதைத்தனர். முஷ்டிகளால் குத்தினர். காலிகளால் தாக்கப்பட்ட நேரத்திலே, தோன்றாத் துணையாக திருமதி அலெக்சாண்டர் என்ற பெண்மணி அங்கு வந்து சேர்ந்தார். அவர் போலீஸ் சூப்பிரன்டென்ட் அலெக்சாண்டரின் மனைவி யாவார். அவ்வம்மையார், தம் கையிலிருந்த குடையை விரித்துப் பிடித்துக் கொண்டு, காலிகள் எறிந்த கற்கள் அடிகள் மீது படாதபடித் தடுக்க முயன்றார். இதற்குள், தகவலறிந்த போலீஸ் சூப்பிரன்டெண்ட் பலத்த போலீஸ் படையை அங்கு அனுப்பினார். போலீஸ்காரர்கள் காந்திஜியைச் சூழ்ந்து கொண்டு அவரை ருஸ்தம்ஜியின் இல்லத்தில் கொண்டு போய்ச் சேர்த்தனர். அங்கு, டாக்டர் ஒருவர் காந்திஜியின் உடலில் ஏற்பட்ட இரத்த காயங்களுக்கும் ஊமைக் காய்ங்களுக்கும் சிகிச்சையளித்தார்.

வேடம் போட்டு வெளியேறினார்!

நிறவெறி பிடித்த காலிக்கும்பல் ருஸ்தம்ஜியின் வீட்டையும் முற்றுகையிட்டு விட்டது. 'காந்தியை வெளியே அனுப்பு; இல்லையேல், வீட்டைக் கொளுத்தி விடுவோம்!' என்று அக்கும்பல் கூச்சலிட்டது. இதற்குள், போலீஸ் சூப்பிரன்டெண்ட் திரு. அலெக்சாண்டர், பலத்த போலீஸ் படையுடன் அங்கு வந்து சேர்ந்தார். அவர் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு அறிவுரை கூறுவதுபோலப் பாவனை காட்டி, அவர்களுடன் பேசிக் கொண்டே, அதே நேரத்தில் காந்தியடிகளை ஆர்ப்பாட்டக்

காரர்கள் அறியாத வண்ணம் ருஸ்தம்ஜியின் இல்லத்திலிருந்து இரகசியமாக வெளியேற்றி விட்டார். போலீஸ்காரர்போல வேடம் புனைந்து, காலிகளிடமிருந்து தப்பிச் சென்றார் காந்தியடிகள். தமக்கு விருப்பமில்லாமலிருந்தும், போலீஸ் சூப்பிரன்டெண்ட் வற்புறுத்தியதன் பேரில் அடிகள் வேடம் போட வேண்டியதாயிற்று. அஞ்சுவது அஞ்சாமை பேதைமையன்றோ!

அடிகள் தப்பிச் சென்றதை அறிந்த கலகக்காரர்கள் ஏமாற்ற மடைந்தனர். எனினும், அவர்கள் ஆத்திரமடையாதவாறு போலீஸ் சூப்பிரன்டென்ட் அவர்களுக்கு அறிவுரை கூறி அனுப்பினார்.

ஏன் இந்த ஆத்திரம்?

தென்னாப்பிரிக்க வெள்ளையர்கள் காந்திஜி மீது இந்த அளவுக்கு ஆத்திரப்படக் காரணம், ‘ஒப்பந்தக்கூலிகள்’ எனப்பட்ட தொழிலாளர்களை, அந்த நாட்டின் வெள்ளையருக்குச் சமமான குடிமக்களாக வாழ வைக்க அவர் முயன்றதுதான்.

தென்னாப்பிரிக்காவிலிருந்த இந்தியர் அனைவருக்குமே அங்கு ஏதேனும் ஒருவகையில் பிரச்னை இருந்து வந்தது. ஆயினும், அவர்களில் ‘ஒப்பந்தக் கூலிகள்’ எனப்பட்டோரும் ஒப்பந்தத்திலிருந்து விடுபட்ட ‘சுயேச்சைத் தொழிலாளரு’மே மிருகங்களினும் கேவலமாக நடத்தப்பட்டனர் வெள்ளையரால்! இந்த நிறவெறிக் கொடுமையை காந்திஜி உலகறியச் செய்தார். காந்திஜி அங்குச் செல்லுமுன், தென்னாப்பிரிக்காவில் வாணிபமும் குமாஸ்தா வேலையும் செய்து சுகஜீவிகளாக வாழ்ந்த இந்தியர்கள், ‘ஒப்பந்தக் கூலிகள்’ எனப்பட்ட சகோதர இந்தியர்களின் அல்லல்களைத் துடைப்பதில் அக்கறை காட்ட வில்லை. காந்திஜி அங்குச் சென்ற பின், இந்தியரிடையே ஒற்றுமையை உருவாக்கினார். தங்கள் வாழ்க்கை உரிமைகளுக் காக அவர்கள் போராடும்படிச் செய்தார். இது, வெள்ளையருக்கு ஆத்திரத்தை மூட்டியது.

வெள்ளையர்கள் தென்னாப்பிரிக்காவின் பழங்குடியினர் அல்லர்; வந்தேறிகளே! உண்மையில், அந்நாட்டின் பழங்குடி மக்களில் எவரும் இந்தியரை வெறுக்கவில்லை. இந்தியருக்கும் அவர்களுக்குமிடையே பிரச்னை எதுவும் இருக்கவில்லை. வெள்ளையருடன் ஒப்பிடுங்கால், இந்தியர் சிறுபான்மையினரும் அல்லர்; எண்ணிக்கையில் வெள்ளையருக்குச் சமமானவரே!

தென்னாப்பிரிக்காவில் இந்தியத் தொழிலாளர் தாங்களாகக் குடியேறவில்லை, அங்குள்ள பழங்குடி மக்களைச் சுரண்டுவதற்கு! அப்படிச் சென்றவர்கள் வெள்ளையரே! இந்தியரோ, வெள்ளையரால் ஏமாற்றி அங்கு அழைத்துச் செல்லப் பட்டவர்களே! வணிகர்களும் குமாஸ்தாக்களுமான இந்தியர்கள் ஒப்பந்தக் கூலிகளான இந்தியர்களைப் பின்பற்றிச் சென்றவர்களே!

30 கோடி இந்திய மக்கள் மீது 6 லட்சம் பிரிட்டிஷார் எல்லா வகையிலும் ஆதிக்கம் செலுத்தி வந்த அதே நேரத்தில்தான் தென்னாப்பிரிக்க இந்தியர் அந்த நாட்டில் வாழ்வாங்கு வாழ அனுமதிக்க அவர்கள் மறுத்தனர். அதை எதிர்த்ததற்காகவே காந்தியடிகளை டர்பன் நகரத் தெருக்களில் கல்லாலடித்தனர்; காலால் உதைத்தனர்; அவர் இருந்த வீட்டைக் கொளுத்தவும் முயன்றனர். என்னே, வெள்ளையரின் 'நீதி!' தென்னாப்பிரிக்க இந்தியத் தொழிலாளரான தமிழருக்காக அன்று காந்திஜி பாடு பட்டில்லையானால், அவர்கள் அழிந்தே போயிருப்பார்கள்.

உண்மை தெரிந்தது!

இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர், தென்னாப்பிரிக்க வெள்ளை யர்கள் தம்மீது ஆத்திரம் கொள்ளும் வகையில் செய்யப்பட்டிருந்த பொய்ச் பிரசாரத்தை மறுத்து, உண்மையை வெளிப்படுத்தும் முயற்சியில் காந்தியடிகள் கருத்துச் செலுத்தினார். தாம் இந்தியாவிலிருக்கையில் வெள்ளையருக்கு எதிராக, அவர்கள் மீது இந்தியருக்குத் துவேஷத்தை ஏற்படுத்தும் வகையில் பிரச்சாரம் செய்யப்பட்டதாகச் சொல்லப்பட்டதை அடிகள் மறுத்தார். இந்தியாவில் தாம் நிகழ்த்திய சொற் பொழிவுகள் எல்லாம் எழுதிப் படித்தவை என்று சொல்லி அந்தச் சொற்பொழிவுகள் அனைத்தையும் அச்சிட்டு வழங்கினார். இதற்குப் பின், நிற வெறியர்கள் அமைதி பெற்றனர். ஐரோப்பியப் பத்திரிகைகள் உண்மையை உணர்ந்து, அடிகளுக்கு இழைக்கப் பட்ட இன்னல்களுக்கு வருத்தம் தெரிவித்தன.

போயர் யுத்தம்!

இதற்குப்பின், எதிர்பாராத வகையில் 'போயர் யுத்தம்' வந்து சேர்ந்தது. அதிலே, பிரிட்டிஷாருக்கு ஆதரவளித்தார் அடிகள். தென்னாப்பிரிக்க இந்தியர்களின் ஆதரவையும் திரட்டிக் கொடுத்தார். யுத்தத்திற்கு, இந்தியரிடையில் ஆள் சேர்த்துக் கொடுக்கும் பணியில் இரவு பகலாக ஈடுபட்டு, அதனால் கடுமையாக நோயுற்றார். யுத்தத்தில் பிரிட்டனுக்கே வெற்றி

கிடைத்தது. காந்தியடிகளின் ஒத்துழைப்பும் தென்னாப்பிரிக்க இந்தியரின் உதவியும் பாராட்டப்பெற்றன.

இந்தியா திரும்பினார்!

தம்முடைய ஒழுக்கத்தாலும், உயர் குணங்களாலும் ஐரோப்பிய சமுதாயத்திலும் சான்றோர்களின் பாராட்டுதல்களை அடிகள் பெற்றார். இந்நிலையில், 1901-ஆம் ஆண்டில் காந்தியடிகள் தென்னாப்பிரிக்க இந்தியரிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு, தம்முடைய மனைவி, மக்களுடன் இந்தியா திரும்பினார். மீண்டும் தென்னாப்பிரிக்கா செல்ல வேண்டிய அவசியமேற்படாது என்ற முடிவுடன்தான் அடிகள் திரும்பினார். பம்பாயில் தங்கி, வக்கீல் தொழிலையும் தொடங்கினார். தொழிலும் நல்ல வருவாயைத் தரத்தக்க வகையில் நடந்தது.

மீண்டும் தென்னாப்பிரிக்காவுக்கு!

இந்நிலையில், 'வேதாளம் திரும்பவும் முருங்கை மரத்தில் ஏறிக்கொண்டது' என்னும் பழமொழிபோல, தென்னாப்பிரிக்க அரசு திரும்பவும் இந்தியர்களுக்குத் தொல்லை தரும் சட்டங்களை நிறைவேற்ற முயன்றது. ஐரோப்பியர் வாழும் பிரதேசங்களில் இந்தியர் குடியேறுவதைத் தடை செய்யத் திட்டமிட்டது. ஒப்பந்தக் கூலிகள் சுயேச்சையுடைய தொழிலாளர்களாகத் தென்னாப்பிரிக்காவில் தங்கி வாழ விரும்பினால் மூன்று பவுன் தலைவரி செலுத்த வேண்டுமென்றும் கை ரேகைகளைப் பதிவு செய்து கொண்டு அடையாள அட்டைகளைப் பெற வேண்டு மென்றும் கூறும் புதிய சட்டங்களை அரசு கொண்டு வந்தது. அது கண்டு இந்திய சமுதாயத்தினர் அதிர்ச்சி அடைந்தனர்.

தொழிலாளர்களான தமிழர்கள் அழிவின் எல்லைக்கே தாங்கள் தள்ளப்பட்டு விட்டது போன்ற உணர்ச்சியை அடைந்தனர். உடனே, அவர்களுடைய கண்கள் கூர்ஜரத்திலிருந்த காந்தியடிகளை நோக்கின. தென்னாப்பிரிக்க இந்தியத் தொழிலாளர்கள் இனத்தால் தமிழர்களாக இருந்தும், தங்களுக்கு இன்னல் ஏற்பட்டபோது, அதிலிருந்து தங்களை விடுவிக்கும் தலைவனை இந்தியத் தமிழ்நாட்டிலிருந்து பெற அவர்கள் நினைக்கவில்லை. அப்படிப்பட்ட ஒருவர் அந்த நாளில் தமிழ் நாட்டில் இருக்கவுமில்லை. அதனால் கூர்ஜரத்தைத் தன்னுள் கொண்ட பம்பாய் ராஜ்யத்தின் தலைநகரத்தில் வக்கீல் தொழில் புரிந்து கொண்டிருந்த காந்தியடிகளுக்கு அழைப்பு விடுத்தனர். அடிகளும் அழைப்பை ஏற்று, தென்னாப்பிக்கா சென்றார். மனைவி மக்களையும் உடனழைத்துச் சென்றார்.

இம்முறை, தென்னாப்பிரிக்க இந்தியர்களின் துயர்களை முற்றிலும் துடைக்கும் வரை தாயகத்துக்குத் திரும்புவதில்லை என்ற உறுதியுடன் சென்றார்.

கருப்புச் சட்டம்

தென்னாப்பிரிக்கா சென்ற அடிகள், அங்கு ஜோஹன்ஸ் பர்க்கில் முகாம் அமைத்துக் கொண்டார். ஆம்; அங்குதான் இந்திய மக்களைத் தொல்லைகள் சூழ்ந்திருந்தன. தடை செய்யப்பட்ட பிரதேசத்தில் இந்தியர் வாழ வேண்டுமானால், கை ரேகைகளைப் பதிவு செய்துகொண்டு அரசின் அனுமதியைப் பெற வேண்டும் என்ற சட்டத்திற்கு 'கருப்புச் சட்டம்' என்று பெயர் கொடுத்தார் அடிகள்.

இதனை எதிர்த்துப் போர் தொடங்குவதென 1906-ஆம் ஆண்டு செப்டம்பர் 11-ஆம் தேதியன்று கூடிய தென்னாப்பிரிக்க இந்தியர்களின் பிரதிநிதிகள் அடங்கிய மாபெரும் கூட்டத்திலே முடிவு செய்யப்பட்டது. அதற்குச் 'சத்தியாக்கிரகம்' என்று பெயர் தரப்பட்டது.

தண்டனையும் முடிவும்

தென்னாப்பிரிக்க இந்தியரில் தொழிலாளரேயன்றி, வணிகப் பெருமக்களும் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டனர். நூற்றுக்கணக்கானவர்கள் சிறைத்தண்டனை பெற்றனர். ஐயன் காந்தி இரண்டு மாத சிறைத்தண்டனை பெற்றார். இதுவே அவர் பெற்ற முதல் சிறைவாசத் தண்டனையாகும்.

காந்தியடிகளின் புத்தம் புதிய 'சத்தியாக்கிரகப்' போர் முறை கண்டு, தென்னாப்பிரிக்க அரசு பயந்தது. அடக்குமுறைகள் பயனற்றுப் போனதை அறிந்து அதிர்ச்சியடைந்தது. பின்னர், சிறையிலிருந்த காந்தியடிகளைத் தம் அலுவலகத்துக்கு அழைத்து அவருடன் சமரசம் பேசி, தென்னாப்பிரிக்கப் பிரதமர் ஜெனரல் ஸ்மட்ஸ் ஒரு உடன்படிக்கை கண்டார். தமது அலுவலகத்தில் வைத்தே காந்தியடிகளுக்கு விடுதலை தந்தார். மறுநாள் காலையே தென்னாப்பரிக்கச் சிறைச்சாலைகளிலிருந்த 'சத்தியாக் கிரகி'கள் அனைவரும் விடுதலை பெற்றனர்.

''இந்தியர்கள் தாங்களாகவே முன் வந்து பதிவு செய்து கொண்டால் ஆசியாக்காரர் அவசரச் சட்டம் கைவிடப்படும்' என்று பிரதமர் ஜெனரல் ஸ்மட்ஸ் தமது அரசின் சார்பில் உறுதி கூறினார். அதனை ஏற்று, ''இந்தியர்கள் தாங்களாகவே பதிவு

செய்துகொள்வார்கள்'' என்று சத்தியாக்கிரகக் கமிட்டியின் சார்பில் காந்தியடிகள் உறுதி கூறினார். இதுவே ஸ்மட்ஸ் - காந்தி உடன்படிக்கையின் சாரமாகும். இதன்படி, அடிகள் முதலில் தம்மைப் பதிவு செய்து கொண்டார். அவரைப் பின்பற்றி மற்ற இந்தியர்களும் தங்களைப் பதிவு செய்து கொண்டனர்.

'இந்த ஒப்பந்தம் தென்னாப்பிரிக்க இந்தியருக்கு இழைக்கப்பட்ட துரோகம்' என்று கருதிய இந்தியப்பட்டாணிய ரொருவர், காந்தியடிகளைத் தாக்கி, அவரை மரணாவஸ்தைக் குள்ளாக்கினார். தெய்வாதீனமாக, தமக்கேற்பட்ட அபாயத் திலிருந்து காந்திஜி மீண்டார்.

ஒப்பந்த மீறலும் மறு போரும்

காந்தி - ஸ்மட்ஸ் ஒப்பந்தத்தை மீறி, தான் கைவிடுவதாகச் சொன்ன சட்டத்தை நிறைவேற்றி, அதனை அமுலுக்குக் கொண்டு வந்தது தென்னாப்பிரிக்க அரசு. அதனை எதிர்த்து, அடிகள் திரும்பவும் ஜோஹன்ஸ்பர்க்கில் சத்தியாக்கிரகப் போர் தொடங்கினார். நூற்றுக்கணக்கானவர்கள் சிறைத்தண்டனை பெற்றனர். சத்தியாக்கிரகிகள் சவுக்கால் அடிக்கப்பட்டனர். அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகமும் செய்யப்பட்டது. இந்தப் போரில் சத்தியாக்கிரகிகள் திரும்பத் திரும்பச் சிறைத் தண்டனை பெற்றனர்.

மூன்றாவது முறையாக நேட்டால் மாகாணத்திலுள்ள நியூகாசிலிலிருந்து டிரான்ஸ்வால் எல்லையைத் தாண்டிச் சென்ற மாபெரும் அணிவகுப்புக்குத் தலைமை தாங்கிச் சென்றார் காந்தியடிகள். இந்தப் போராட்டத்திற்கு ஆதரவாக இந்தியத் தமிழரான ஆறாயிரம் சுரங்கத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர்.

தடை செய்யப்பட்ட பிரதேசத்திற்குள் நுழையாதபடி அணிவகுப்புக்குத் தடை செய்யப்பட்டது. தடையை மீறியதற்காக நூற்றுக்கணக்கான சத்தியாக்கிரகிகள் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் பல அளவிலான சிறைத் தண்டனைகள் விதிக்கப்பெற்றனர்.

அரசுக்கு முன்னறிவிப்புக் கொடுத்துவிட்டு 2037 ஆண்களும், 127 பெண்களும், 75 குழந்தைகளும் கொண்ட அணி வகுப்பினர் டிரான்ஸ்வால் பிரதேசத்திற்குள் பிரவேசித்தனர். காந்தியடிகளும் ஏராளமான சத்தியாக்கிரகிகளும் தண்டிக்கப்பட்டனர்.

அடிகளும் தமிழும்

'இந்தியன் ஒபீனியன்' என்னும் பெயரில் ஆங்கில வாரப் பத்திரிகை ஒன்றை அடிகள் நடத்தினார். அது, தமிழிலும் வெளி வந்தது குறிப்பிடத்தக்கதாகும். தென்னாப்பிரிக்காவிலுள்ள தமிழ்த் தொழிலாளருடன் நெருங்கிய தொடர்பு கொள்ளும் பொருட்டு அடிகள் தமிழ் பயின்றார்.

ஐயன் காந்தி ஜோஹன்ஸ்பர்க்கில் 'டால்ஸ்டாய் பண்ணை' நிறுவினார். சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு தியாகம் புரிந்தவர்களை அதில் குடியமர்த்தி, அவர்களிடையில் குடும்ப உறவை வளர்த் தார். டால்ஸ்டாய் பண்ணையில் தமிழ்த் தொழிலாளர்களின் குழந்தைகளுக்குத் தமிழ் பயிற்றுவிப்பதற்காகத் தமிழ்ப் பள்ளியொன்றை நிறுவினார். அதில் தாமே ஆசிரியரானார்.

அரசுக்கும் அடிகளாருக்கும் மிடையில் ஏற்பட்ட உடன்படிக்கை காரணமாக 1914 ஜனவரி 21-இல் சத்தியாக்கிரகம் நிறுத்தப்பட்டது. இதுவே அடிகள் தென்னாப்பிரிக்காவில் நடத்திய கடைசிச் சத்தியாக்கிரகப் போர். இந்தியர் கஷ்ட நிவாரணச் சட்டம் 1914 சூலையில் நிறைவேற்றப்பட்டது. அதன் மூலம் 3 பவுன் தலைவரி ரத்தானது. இந்தியக் குடியேற்றக்காரர்கள் கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டன.

அடிகள் தென்னாப்பாரிக்காவில் மும்முறை சத்தியாக்கிரகப் போர் நடத்தினார். அவற்றில் அவர் ஐந்து முறை சிறை புகுந்தார். 2 மாதத்திலிருந்து 4 மாதம் வரை சிறைத் தண்டனைகள் பெற்றார். சிறையில் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்தார். காந்திஜி மட்டுமின்றி, அவருடைய மனைவி கஸ்தூரிபாயும் மகன்களான அரிலால், மணிலால் ஆகியோரும் தண்டனை பெற்று, இருட்டறையில் அடைப்பட்டு இன்னலுற்றனர்.

அடிகள், சரியாக 21 ஆண்டு காலம் தென்னாப்பிரிக்க இந்தியர்களின் - குறிப்பாக, தமிழரின் உரிமைக் கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்தார். சத்தியாக்கிரகப் போர் விட்டு விட்டு எட்டாண்டு காலம் நடைபெற்றது. இரண்டு முறை அரசு அவருக்குப் பணிந்து கொடுத்து அவருடன் உடன்படிக்கை கண்டது.

தமிழர் பங்கு

தென்னாப்பிரிக்க சத்தியாக்கிரகம் அங்கு குடியேறி வாழ்ந்த தமிழர்களுக்காகவே நடைபெற்ற தென்றும், போராட்டத்தில்

கலந்து கொண்டவர்களில் தமிழர்களே மிகுதியானவர்களென்றும் அடிகள் தமது பேச்சிலும் எழுத்திலும் அடிக்கடி தெரிவித்துள்ளார். அவர் தொடங்கிய 'டால்ஸ்டாய் பண்ணை'யில் குடியேற தமிழரல்லாத இந்தியர்கள் பயந்தபோது, தமிழர்களே குடும்பங் குடும்பமாக அதில் குடியேறினார்கள் என்று அடிகள் எழுதியும் பேசியும் உள்ளார்.

தென்னாப்பிரிக்காவில் அடிகள் நடத்திய சத்தியாக்கிரகப் போராட்டங்களிலே, டிரான்ஸ்வாலில் நடைபெற்ற - தடை செய்யப்பட்ட பிரதேசத்தில் தடையை மீறிப் பிரவேசித்த - போராட்டமே கடுமையானதாகும். அதிலே தலைமை தாங்கிய திரு. தம்பி நாயுடு தமிழ் நாட்டவராவார்.

இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு ஒத்திகையாகக் காந்தி தென்னாப்பிரிக்காவில் நடத்திய சத்தியாக்கிரகப் போராட்டத் தில் பலர் நாடு கடத்தப்பட்டனர். சிலர் சிறைக் கொடுமையால் நோயுற்று உயிரிழந்தனர். அப்படி உயிர்த் தியாகம் புரிந்த தமிழர்களில் செல்வி வள்ளியம்மாள், செல்வன் நாராயணசாமி, செல்வன் நாகப்பன் ஆகியோர் முக்கிய மானவர்களாவர். துப்பாக்கிப் பிரயோகங்களால் உயிரிழந்த தமிழர் பலராவர்.

தென்னாப்பிரிக்காவில் சத்தியாக்கிரகத்தின்போது, தமிழ் நாட்டிலிருந்து காந்திஜிக்குப் பொருளுதவி அனுப்பி வைத்தவர் களிலே திரு.ஜி.ஏ. நடேசன், திருமதி. அன்னிபெசன்ட், சர்.எஸ். சுப்பிரமணிய ஐயர் ஆகியோர் முக்கியமானவர்களாவர்.

தென்னாப்பிரிக்கப் போரில் நாடு கடத்தல் தண்டனைக்கு உள்ளாகி இந்தியத் தமிழகத்திற்கு வந்தவர்களை வரவேற்று அவர்களுக்கு இங்கு வாழ்வளிக்கவும், பின்னர், காந்தி - 'ஸ்மட்ஸ் ஒப்பந்தப்படி தென்னாப்பிரிக்க சத்தியாக்கிரகம் வெற்றிகரமாக நிறுத்தப்பட்டபோது, அவர்களை மீண்டும் தென்னாப் பிரிக்கா வுக்கு அனுப்பி வைக்கவும் திரு.ஜி.ஏ. நடேசன், சர்.எஸ். சுப்பிரமணிய ஐயர், திருமதி பெசன்ட் ஆகியோர் பெரு முயற்சி களை மேற்கொண்டனர். திரு.ஜி.ஏ. நடேசன், காந்தியடிகளுடன் நடத்திய கடிதப் போக்குவரத்துக்களைத் தொகுத்தளித்தால் அந்தத் தொகுப்பு நூல் தென்னாப்பிரிக்க சத்தியாக்கிரகத்தில் தமிழினத் தாருக்கிருந்த பிரதான பங்கைத் தெளிவாகக் காட்டும்.

அடிகள் தந்த சான்றுரை

தென்னாப்பிரிக்க சத்தியாக்கிரகப் போரில் தமிழர் தந்த ஒத்துழைப்புக்கு நன்றி கூறும் வகையில் காந்தியடிகள் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:

''தமிழர்களை நான் சந்திக்கும் போது, எனது உடன் பிறந்தவர்களைச் சந்திப்பது போன்றே உணர்கிறேன். எத்தனையோ ஆண்டுகளாக நான் போற்றி வளர்த்து வந்துள்ள மனோபாவம் இது. இதற்குக் காரணமுண்டு.

''தென்னாப்பிரிக்க இந்தியரிடையேயுள்ள பல்வேறு பிரிவினரில் போராட்டத்தின் உக்கிரத்தைத் தாங்கியவர்கள் தமிழர்கள்தான் என்று நான் கருதுகிறேன். சத்தியாக்கிரகத்தில் உயிர்த்தியாகம் செய்தவர்களில் மிக அதிகமானவர்கள் தமிழினத்தைச் சேர்ந்தவர்களே! நாராயணசாமியின் எலும்புகள் டெலகுடா வளைகுடாவில் மூழ்கிக் கிடக்கின்றன. அவர் ஒரு தமிழர். நாடு கடத்தப்பட்டவர்கள் தமிழர்கள். கடைசிவரை போராடியவர்களும், கடைசியாகச் சிறையிலிருந்து வெளியில் வந்தவர்களும் தமிழர்களே!

''தெருவில் விலை கூறி விற்பனை செய்த வாணிகத்தை அறவே இழந்தவர் அனைவரும் தமிழர்களே. டால்ஸ்டாய் பண்ணையிலிருந்த சத்தியாக்கிரகிகளில் பெரும்பாலானவர்கள் தமிழர்களே. இந்தியாவின் மிகச் சிறந்த பாரம்பர்யத்திற்குச் சான்று தாங்கள்தான் என்பதைத் தமிழர்கள் மெய்ப்பித்திருக்கிறார்கள். எள்ளளவும் மிகைப்படுத்தி இதை நான் கூற வில்லை.

''சிறைக்குச் சென்ற பெண்களில் பெரும்பாலானவர்கள் தமிழர்களே. கைதியாகத் தயார் என்று அறைகூவல் விடுத்து அதிகாரிகளை மீறியவர்கள், நியூகாசிலில் வீடு வீடாகச் சென்று சுரங்கம் சுரங்கமாகச் சென்று வேலை செய்யும் கருவிகளைப் போட்டுவிட்டு வேலை நிறுத்தம் செய்யுமாறு தொழிலாளர்களை வேண்டிக் கொண்டவர்கள் யார்? மீண்டும் சொல்கிறேன், அவர்கள் எல்லாம் தமிழ்ச் சகோதரர்களே! பெண்களிடையிலிருந்து போராட்டத்திற்கு அணிவகுத்துவந்தவர்கள் யார்? உறுதியாகச் சொல்லுகிறேன், தமிழர்களே! ஒரு ராத்தல் ரொட்டியும், ஒரு அவுன்ஸ் சக்கரையும் உண்டு வாழ்ந்தவர்கள் யார்? பெரும்பாலும் தமிழர்களே!

''இந்த விஷயத்தில் கல்கத்தாவைச் சேர்ந்தவர்களின் தியாகத்திற்கும் நாம் உரிய பங்கை அளிக்க வேண்டுமென்றாலும் அவர்கள் கடைசிப் போராட்டச் சங்கநாதத்திற்கு மிகச் சிறந்த முறையில் செவி சாய்த்தார்கள் என்றாலும் தமிழர்களைப் போன்று அவ்வளவு சிறந்த முறையில் அல்ல.

''மீண்டும் மீண்டும் சிறைக்குச் சென்றவர்களின் எண்ணிக்கையை நினைவில் கொண்டு பார்த்தாலும், அதில் தமிழர்களுடைய எண்ணிக்கையே அதிகமிருக்குமென்று நான் கருதுகிறேன். ஆகவே, தமிழர்கள் அடங்கிய கூட்டம் ஒன்றுக்கு வரும்போது ரத்த பாசமுடைய கூட்டம் ஒன்றுக்கு வருவதாகவே உணர்கிறேன். அவ்வளவு ஆண்மை, அவ்வளவு நம்பிக்கை, அவ்வளவு கடமை உணர்வு, அவ்வளவு உயர்ந்த எளிமை தங்களிட மிருக்கிறதென்பதைத் தமிழர்கள் எடுத்துக் காட்டி யிருக்கின்றனர்.

''நான் பேசியது அவர்களுடைய மொழியிலல்ல. அவர்களுடைய மொழியில் பேச வேண்டுமென்று எனக்கு எவ்வளவோ விருப்பந்தான். ஆனாலும், பேச முடியவில்லை. எனினும் தொடர்ந்து அவர்கள் உறுதியாகப் போராடினார்கள். அது மகத்தான, வளம் பொருந்திய அனுபவம். அதை எனது வாழ்நாள் இறுதிவரை கருவூலம் போல் போற்றுவேன்.

''தமிழர்கள் எதற்காகப் போராடினார்களோ, அதை அவர்கள் அடைந்து விட்டார்கள். பிரிட்டிஷ் குடியேற்ற நாடு ஒன்றில் பிறந்த அவர்கள் கேப் பகுதியில் நுழைய உரிமை யிருக்கிறதென்பதை நிலைநாட்டப் போராடினார்கள். அதை அவர்கள் அடைந்து விட்டார்கள்.

''சட்டங்கள் நியாயமான முறையில் செயல்படுத்தப்பட வேண்டுமென்று அவர்கள் போராடினார்கள். அதை அவர்கள் அடைந்து விட்டார்கள். ஆரஞ்சு ப்ரீஸ்டேட்டில் சட்டத்தை அமல் நடத்துவதில் நிற உணர்ச்சி காட்டப்படுவதை எதிர்த்து அவர்கள் போராடினார்கள். அதை அவர்கள் அடைந்து விட்டார்கள். மூன்று பவுன் வரி என்பது கடந்த கால விஷயமாகப் போய்விட்டது.

''திருமணச் சிக்கலைப் பொறுத்தவரை சிறைக்குச் சென்ற நமது அன்புச் சகோதரிகள் எல்லாம் இன்று தங்கள் கணவன்மார்கள் என்று கூறிக்கொள்ளலாம். நேற்றோஒரு நண்பர் வேண்டுமானால் அபிமானத்துடன் அவ்வாறு கூறியிருப்பாரே யொழிய, சட்டப்படி அவர்கள் மனைவி மார்கள் அல்ல.''

('தமிழ் நாட்டில் காந்தி' - பக். 92-94)

தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகள் தலைமையில் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போரில் தமிழர் எடுத்துக் கொண்ட சிறப்பான பங்குபற்றிச் சிறிதளவே இந்நூலில் எடுத்துக்காட்ட முடிந்தது. விரிவாக அறிந்து கொள்ள விரும்புவோர், காந்தியடிகள் எழுதிய 'தென்னாப்பிரிக்க சத்தியாக்கிரகம்', 'சத்திய சோதனை,' திரு.ஆ. ராமசாமி எழுதி வெளிவந்துள்ள 'தமிழ் நாட்டில் காந்தி' ஆகிய நூல்களைப் படிக்கலாம் இந்நூல்கள் காந்தி நூல் வெளியீட்டுச் கழகத்தாரால் தமிழில் வெளியிடப்பட்டுள்ளன.

இந்தியா வந்தார்!

காந்தியடிகள் *1914*-ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்க இந்தியர்களுக்குத் தாம் ஆற்ற வேண்டிய பணிகளை எல்லாம் முடித்துக் கொண்டு இந்தியாவுக்குத் திரும்பினார். இந்தியாவுக்கு வந்த பின்னும் தொடர்ந்து நான்காண்டுக் காலம் தென்னாப்பிரிக்க இந்தியர் நிலையை இந்திய மக்களுக்கு விளக்கவும், அவர்கள் ஆதரவு தொடர்ந்து நீடிக்கவும் பிரச்சாரம் செய்தார்.

இந்தியா வந்ததும், தேசியத் தலைவர்களில் ஒருவரான கோபால கிருஷ்ண கோகலேயைச் சந்தித்து, அவருடைய அறிவுரையைக் கேட்டார். அரசியலில் நேரடியாகக் குதித்து விடாமல், ஓராண்டுக் காலம் நாடு முழுவதையும் சுற்றிப் பார்த்து, இந்திய சமுதாயத்தினரைப் பற்றி அனுபவ அறிவை வளர்த்துக் கொள்ளுமாறு, கோகலே ஆலோசனை கூறினார். அடிகளாரும் அப்படியே நடந்து கொண்டார்.

தென்னாப்பிரிக்க சத்தியாக்கிரகத்திற்கும் இந்தியாவில் நடந்து வந்த சுதந்திரக் கிளர்ச்சிக்கும் இணைப்பு ஏற்படுத்தி விட்டார் காந்தியடிகள். தாம் தென்னாப்பிரிக்காவிருந்த போதே 'காங்கிரஸ்' என்னும் பெயரில் காந்தியடிகள் கவர்ச்சி பெற்றார். அதனாலேயே தென்னாப்பிரிக்க இந்தியருக்கெனத் தாம் தொடங்கிய ஸ்தாபனத்துக்குக் 'காங்கிரஸ்' என்னும் பெயரைத் தந்தார். இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான கோபாலகிருஷ்ண கோகலேயைத் தென்னாப்பிரிக்காவுக்கு அழைத்து, அங்குச் சுற்றுலா நிகழ்த்தச் செய்து, தென்னாப்பிரிக்க இந்தியர் காங்கிரசுக்கும், இந்திய தேசிய காங்கிரசுக்கும் ஏற்பட்டிருந்த உறவை வலுப்படுத்தினார். *1896*-இல் ஒரு முறையும், *1901*-இல் ஒரு முறையுமாக இரண்டு முறை தாமே இந்தியாவுக்கு வருகை தந்து, குமரி முதல் இமயம் வரை சுற்றுலாச் செய்து தென்னாப்பிரிக்காவிலுள்ள இந்தியருக்கும் இந்திய

நாட்டிலுள்ள மக்களுக்குமிடையில் ஆத்மார்த்தமான தொடர்பை ஏற்படுத்தி, அதை வலுப்படுத்தினார்.

காந்தியடிகள் முதன் முறையாக இந்தியாவுக்கு வருகை தந்து, தென்னாப்பிரிக்க இந்தியர் நிலையை இங்குள்ள மக்களுக்கு அறிவித்த பின்னர், ஆண்டுதோறும் கூடும் காங்கிரஸ் மகா சபையிலே தென்னாப்பிரிக்க இந்தியர் கோரிக்கைகளுக்கு ஆதரவு தரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு வந்தது. தென்னாப்பிரிக்க இந்தியரின் உரிமைப் போராட்டத்தைத் தாம் நடத்திக் கொண்டிருந்தபோது, இந்திய சுயராஜியப் போருக்கும் தம்மைத் தயார் படுத்திக் கொண்டு வந்தார். அதிலே முடிந்தவரை தார்மிக ரீதியில் பங்கு கொண்டும் வந்தார்.

இந்திய சுயராஜ்யம்

தென்னாப்பிரிக்காவிலிருந்தபோது 1910-ஆம் ஆண்டில் காந்தியடிகள் 'இந்திய சுயராஜ்யம்' என்னும் பெயரில் குஜராத் மொழியில் ஒரு நூல் எழுதினார். அதனை பம்பாய் மாகாண அரசாங்கம் தடை செய்தது. இதன் மூலமும் காந்தியடிகளுக்கு இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான அடக்கு முறையைச் சுவை பார்க்கும் வாய்ப்பு, அப்போதே கிடைத்து விட்டது.

1909-ஆம் ஆண்டில் கல்கத்தாவில் நடந்த இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையை யொட்டி 'அமிர்த பஜார்' பத்திரிகை வெளியிட்ட சிறப்பு மலருக்கு அனுப்பிய செய்தியிலே, தென்னாப்பிரிக்காவில் தாம் அறிமுகப்படுத்தியுள்ள புதிய சத்தியாக்கிரகப் போர் முறையை, இந்திய தேசிய காங்கிரஸ் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று காந்திஜி குறிப்பிட்டுள்ளார்.

1910-ஆம் ஆண்டில் தென்னாப்பிரிக்க இந்தியர் தூதுக் குழுவில் சேர்ந்து பிரிட்டிஷ் மந்திரிகளைப் பேட்டி காண்பதற்கு காந்திஜி லண்டன் சென்றிருந்தபோது, அங்குள்ள 'இந்தியா விடுதி'க்கும் சென்றார். சவர்க்கார், வ.வே.சு. ஐயர், காமா போன்ற புரட்சி வீரர்களுடன் இந்திய விடுதலைப் போர் பற்றி விவாதித் தார். ஆயுதப் புரட்சியில் அவர்களுக்குள்ள நம்பிக்கையைக் கைவிட்டு, அகிம்சை வழிப்பட்ட தமது சத்தியாக்கிரகப் போர் முறையை ஏற்குமாறு அவர்களைக் கேட்டுக் கொண்டார்.

தென்னாப்பிரிக்க இந்தியர் நடத்திய சத்தியாக்கிரகத்துக்கும் இந்தியாவில் நடந்து வந்த விடுதலைப் போராட்டத்துக்கும்

பொதுவான குறிக்கோள் ஒன்று இருந்து வந்தது. அது, ஏகாதிபத்தியக் கொடுமையை எதிர்ப்பதாகும். இந்தியாவில் நேரடியாக ஆதிக்கம் பெற்றிருந்தது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம். தென்னாப்பிரிக்கா குடியேற்ற நாடு என்றாலும், அதன் மீது பிரிட்டனுக்கு மேலாதிக்கம் இருந்தது. ஆகவே, அந்த வகையிலும் பிரிட்டிஷ் ஆதிக்கத்தை அல்லது மேலாதிக்கத்தை வெற்றி காணத்தான் தென்னாப்பிரிக்க இந்தியரும் இந்தியநாட்டு மக்களும் போராடினர்.

இந்தப் பின்னணி காரணமாக, தென்னாப்பிரிக்க சத்தியாக்கிரகப் போரை முடித்துக் கொண்டு இந்தியாவுக்கு வருகை தந்த காந்தியடிகள், இந்திய சுதந்திரப் போருக்கு அயலாராக, இருக்கவில்லை; சொந்தக்காரராகவே இருந்தார். அதனால் உலகம் முழுவதற்கும் பொதுச் சொத்தான காந்தி சகாப்தம் தென்னாப்பிரிக்காவிலேயே தோன்றிவிட்டதெனலாம்.

★-★-★

தமிழ்நாட்டில் காந்திஜியின் வெற்றியுலா

காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு வருகை தந்தபோது முதலாவது உலகப் பெரும் போர் தொடங்கி விட்டது. அதன் விளைவாக, இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி தேச பக்தர்களை வேட்டையாடும் கொடுமை அதிகப்பட்டிருந்தது. அதற்கெதிராக, விடுதலை வீரர்களிலே ஆயுதப் புரட்சியில் நம்பிக்கை கொண்டவர்களின் பழிவாங்கும் செயல்களும் அதிகரித்திருந்தன. காங்கிரஸ் தீவிரவாதிகளிலே லோகமான்ய திலகர், வ.உ.சி., சிவா ஆகியோர் சிறைக்கு வெளியே தானிருந்தனர் என்றாலும், உலகப் பெரும்போர் காரணமாகச் செயலற்று விட்டனர்.

சென்னையில் அடிகள்

இந்தச் சூழ்நிலையில் இந்தியா திரும்பிய மூன்று திங்களுக்குள் காந்தியடிகள் தமது மனைவியாருடன் 17-4-1916-இல் தமிழகத்திற்கு வருகை தந்தார். அதுவே, அந்த ஆண்டில் அவரது இந்தியச் சுற்றுலாவின் முதல்கட்டமாக இருந்தது. 1916 ஏப்ரல் 17-இல் சென்னை வந்த அடிகள், மே 9 வரை இங்கேயே தங்கி, எண்ணற்ற அலுவல்களில் ஈடுபட்டார். இடையில் தில்லை யாடிக்குச் சென்று திரும்பினார். அந்தப் புனிதப்பதிதானே தியாகி வள்ளியம்மையைத் தந்தது!

அடிகள் சென்னையிலிருந்து ரெயிலில் புறப்பட்டு, மாயூரம் சென்றார். அங்கிருந்து தில்லையாடி கிராமத்திற்குச் சென்றார். தமிழ்நாட்டில் அடிகளின் திருவடிபட்ட முதல் கிராமம் தில்லையாடிதான். அந்தப் பெருமைக்கு வள்ளியம்மையைத் தந்த அந்தக் கிராமம் தகுதியுடையதுதானே!

தென்னாப்பிரிக்கப் போரில் அரசு நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தின் விளைவாகக் கணவரை இழந்த இரு விதவைப் பெண்கள் தரங்கம்பாடியில் இருந்தனர், தங்கள் குழந்தைகளுடன்! இவர்களேயன்றி, தென்னாப்பிரிக்கப் போரில் பங்கு கொண்டு

இந்தியா திரும்பிய ஏராளமான குடும்பங்களும், ஒப்பந்தக் கூலிகளாக இருந்து ஒப்பந்தம் முடிந்ததும் இந்தியா திரும்பிய தொழிலாளர் குடும்பங்களும் தரங்கம்பாடியில்தான் இருந்தன. அதனால், அடிகள் சென்னைக்கு வருகை தந்தபோது, தரங்கம்பாடிக்குச் சென்றார்.

அடிகளை வரவேற்று உபசரித்தவர்கள்

காந்திஜி சென்னைக்கு வருகை தந்தபோது இங்குக் காங்கிரஸ் தீவிரவாதிகள் அடக்குமுறைக் கொடுமையால் ஒடுங்கிப் போயிருந்தனர். மிதவாதிகள் மட்டும் செல்வாக்குடன் இருந்தனர், ஆங்கிலேய அரசாங்கத்தின் தயவால்! கொள்கையில் மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையிலிருந்த டாக்டர் அன்னிபெசன்ட், அப்போதுதான் அரசியலில் பிரவேசித்திருந்தார். அவர் இன்னமும் 'ஹோம்ரூல் லீக்' கைத் தொடங்கவில்லை.

அடிகள் சென்னைக்கு வந்தபோது அவரை வரவேற்பதிலே காங்கிரஸ் மிதவாதிகள் அதிக ஆர்வங் காட்டினர். அவரது வரவு அவர்களுக்கு மக்கள் மத்தியில் இழந்திருந்த செல்வாக்கைத் திரும்பப் பெறுவதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்தது. நீதிபதி சர்.எஸ். சுப்பிரமணிய ஐயர், காங்கிரஸ் மகாசபையின் முன்னாள் தலைவர் திரு. அனந்தாச்சார்லு, பிரபல ஐரோப்பிய வழக்கறிஞர் நார்ட்டன் துரை, பாஷ்யம் ஐயங்கார், வி.எஸ். சீனிவாச சாஸ்திரியார், மெட்ராஸ் ஸ்டேண்டர்ட்' பத்திரிகை ஆசிரியர் பரமேசுவரன் பிள்ளை, ''ஹிந்து'' மு. வீரராகவாச்சாரி, பி.பி. வாடியா, சி.பி. இராமசாமி ஐயர், யாகூப் ஹாசன், சல்லா எஸ். குருசாமி செட்டி, திவான் பகதூர் கருணாகரமேனன் ஆகிய மிதவாதிகளெல்லாம் இந்திய அரசியலில் இனி மகத்தான புரட்சி நிகழ்த்தவிருக்கும் காந்திஜியை வரவேற்பதிலும், அவருக்கு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வதிலும், தத்தம், இல்லங்களுக்கு அழைத்துச் சென்று விருந்தளிப்பதிலும் மிகுந்த ஆர்வங் காட்டினர்.

சென்னை காஸ்மாபாலிடன் கிளப், அடையாறு தியோசாபிகல் சங்கம் ஆகிய இடங்களில் காந்திஜிக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. காஸ்மாபாலிடன் கிளப் தந்த வரவேற்புக்குப் பதிலளிக்கையில், அது, 'சுகஜீவிகளின் பூங்கா' எனப் பொருள் படப் பேசினார் அடிகள். அடையாறு தியோசாபிகல் சங்கத்தில் ஒரு இரவு தங்குவதற்கு இசைவு தெரிவித்த அடிகள், அங்கு சென்று பார்த்தபின் மனமாற்றம் அடைந்து விட்டார். அங்கு நடத்தப்படும்

அரிசனப் பள்ளிக்கும் பிரமஞான சங்கத்தின் சூழ்நிலைக்கு மிடையில் காணப்பட்ட வேற்றுமையே அடிகளின் மனமாற்றத் திற்குக் காரணம்.

காஸ்மாபாலிடன் கிளப்பில் அதன் துணைத் தலைவர் சர்.பி. தியாகராச செட்டியார் அடிகளுக்கு வரவேற்பிதழ் வாசித்தளித்தா ரென்பது சுவையான செய்தியாகும். அவர் தமது கரத்தாலே அடிகளாருக்கு மாலையணிவித்து மகிழ்ந்தார். இது நிகழ்ந்த ஓராண்டிற்குள் திரு. செட்டியார் ஜஸ்டிஸ் கட்சியைத் தோற்றுவித்தாரென்பது இங்கு நினைவில் கொள்ளத்தக்கதாகும்.

காந்திஜியை வரவேற்றவர்களில் ஒருவரும் புகழ் மிக்க வழக்கறிஞருமான திரு. நார்ட்டன், 1909-இல் வங்கத்தில் அரவிந்தருக்கு எதிராக நடத்தப்பட்ட அலிப்பூர் சதி வழக்கில் அரசு தரப்பில் ஆஜரானவராவார்.

காந்திஜி தமிழகத்திற்கு வருகை தந்த அதே ஆண்டின் இறுதியில் ஹோம்ரூல் இயக்கத்தைத் தோற்றுவித்து பிரிட்டிஷ் ஆட்சியையே கதி கலங்க வைக்கவிருக்கும் டாக்டர் பெசன்டம்மையாரும் சென்னை சென்டிரல் ரெயில் நிலையத் திற்கே சென்று அடிகளை வரவேற்றார். இவர்களின் சந்திப்பு இருவேறு புரட்சிச் சக்திகளின் சங்கமமாக இருந்தது.

இன்னும் ஒன்றிரண்டாண்டுகளில் சென்னை அரசின் அட்வகேட் ஜெனரலாகி, பின்னர் அதைத் தூக்கி எறிந்து, காங்கிரஸ் மகாசபையின் தலைமையைப் பெற்று, அதனையடுத்து பார்லிமெண்டரித் துறையிலே காங்கிரசை ஈடுபடுத்தும் மகத்தான புரட்சியை விளைவிக்கவிருக்கும் திரு.எஸ். சீனிவாச ஐயங்காரும், காந்தி தம்பதிகளை வரவேற்று, தமது இல்லத்தில் தங்க வைத்து விருந்தளித்தார்.

அடிகள் தென்னாப்பிரிக்காவில் சத்தியாக்கிரகப் போர் நடத்தியபோது, அதற்கு நிதி திரட்டி அனுப்பியும் தென்னாப் பிரிக்காவிலிருந்து நாடு கடத்தப்படுவோரை வரவேற்று வாழ்வளித்தும் தொண்டு புரிந்த திரு.ஜி.ஏ. நடேசனும் ஐயனை வரவேற்று உபசரித்தார்.

தென்னகத்தில் முதன்முதலில் தோன்றி இன்றுவரை நிலைபெற்றுள்ள தேசிய அமைப்பான சென்னை மகாஜன சபையும் அடிகளாரை வரவேற்று ஆனந்தமடைந்தது.

சென்னை விக்டோரியா மண்டபத்தை யடுத்துள்ள மிகப் பெரிய திடலில் நகர மக்கள் சார்பாக மாபெரும் பொது

கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அதிலே காந்திஜி தம்பதிகள் வரவேற்கப்பட்டனர். அக்கூட்டத்தில், தமக்குத் தமிழர் செய்த சிறப்பிற்கு காந்திஜி நன்றிதெரிவித்துப் பேசினார். அந்தப் பேச்சிலே தென்னாப்பிரிக்க சத்தியாக்கிரகப் போரிலே தமிழர் செய்த உதவிக்கு நன்றி தெரிவித்தார். மற்றும், உயிர் நீத்த தியாகிகளான வள்ளியம்மை, நாராயணசாமி, நாகப்பன் ஆகிய தமிழரைப் பாராட்டியும் பேசினார்.

சென்னைக்கு அடிகள் வருகை தந்தபோது, அவரது எதிர் காலபோக்கு எதுவாக இருக்குமென்பதை இங்கிருந்த மிதவாதிகள் தெரிந்து கொள்ளவில்லை. அதனை அனுமானித் தறிவதும் அவர்கள் அறிவுக்கு அப்பாற்பட்டதாக இருந்தது. அதனால், இந்திய அரசியலில் அடிகள் தலைமைப் பொறுப்பை ஏற்க வேண்டுமென்று அவருக்கு அழைப்பு விடுத்தனர். அவருக்களித்த வரவேற்பிதழிலே இது குறிப்பிடப்பட்டிருந்தது.

காந்திஜி தமது பத்தினியாருடன் சென்னைக்கு வருகை தந்தபோது, காங்கிரஸ் தீவிரவாதிகளான கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனாரும் தியாகி சுப்பிரமணிய சிவனாரும் சென்னை நகரில்தான் இருந்தனர். ஆயினும், அடிகளாரைக் கண்டு உரையாடியதாகத் தெரியவில்லை. அவர்களை 'அரசியல் தொழு நோயாளர்' என்று வருணித்த மிதவாதிகள் அடிகளாரை முற்றுகையிட்டிருந்தது காரணமாக இருக்கலாம்.

அடிகள் தென்னாப்பிரிக்காவிலிருந்தபோதே, அவருக்கும் வ.உ.சிக்கும் கடிதப் போக்குவரத்து நடைபெற்றது. சிறை மீண்ட வ.உ.சி அன்றாடப் தேவைகளுக்கு அல்லலுறுவதறிந்த அடிகள் தென்னாப்பிரிக்க நண்பர்கள் சிலரிடம் பொருள் திரட்டி அவருக்கு அனுப்பி வைத்தார். இவ்வளவிருந்தும், காந்திஜி - வ.உ.சி. சந்திப்பு நிகழவில்லை. அந்த அளவுக்கு மிதவாதக் கூட்டம் வலுவாக அடிகளை முற்றுகையிட்டிருந்தது போலும்!

அடிகள் பேச்சு

சென்னைப் பொதுக்கூட்டத்தில் காந்திபேசியது வருமாறு:

''நீங்கள் உங்களுடைய அழகான வரவேற்புரையில் நான் செய்த சிறு தொண்டை மிகைப்படுத்திப் பாராட்டியிருக் கிறீர்கள். நீங்கள் கூறியுள்ள புகழுரையில் பத்தில் ஒரு பங்கிற்காவது நாங்கள் தகுதியாக இருக்கிறோம் என்றே வைத்துக் கொள்ளுங்கள். எங்களையே இப்படிப் பாராட்டினால் தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களின்

நல்வாழ்விற்காகத் தங்கள் உயிரையே பலி கொடுத்தவர்களின் சேவையை எவ்வாறு பாராட்டப் போகிறீர்கள்?

''தாய் நாட்டின் மானத்தைப் பாதுகாப்பதற்காக அத்தனை இன்னல்களையும் அத்தனை சோதனைகளையும் அவமரியாதைகளையும் ஏற்ற பதினாறு பதினேழு வயது இளைஞர்களான நாகப்பன், நாராயணசாமி சேவையை எவ்வளவுதான் பாராட்டுவது? அந்த அழகான பதினேழு வயது இளம்பெண் வள்ளியம்மாளுக்கு - மாரிட்பர்க் சிறையிருந்து எலும்பும் தோலுமாக விடுதலை செய்யப் பெற்று காய்ச்சலால் பீடிக்கப் பெற்று, ஒரு மாத காலத்தில் உயிர் நீத்த அந்தப்பெண்ணுக்கு நீங்கள் என்ன பாராட்டுக் கூறப் போகிறீர்கள்?

''இம்மாபெரும் பணியை ஆற்றுவதற்கு இந்தியரிலேயே இறைவனால் குறித்துத் தேர்ந்தெடுக்கப்பெற்றவர்கள் சென்னை வாசிகள்தான். நெருக்கடியான கட்டங்களில் ஒரு முறையாவது சிறைக்குச் செல்லாத மதராஸியை ஜோகன்ஸ்பர்க்கில் மதராஸிகள் மதிப்பதில்லையென்பது உங்களுக்குத் தெரியுமா?

''அந்தப் பெரிய மனிதர்களுக்கும் மாது சிரோன்மணிகளுக்கும் நான் உணர்வூட்டியதாக நீங்கள் கூறியிருப்பதை நான் ஏற்க முடியாது. நம்பிக்கையுடன் எந்தவிதமான பலனையும் எதிர்பார்க்காது, பணியாற்றிய அந்த எளிய மக்கள்தான் எனக்கு உணர்வூட்டினார்கள். ஆண்டவன் மீது அவர்கள் வைத்த அழியா நம்பிக்கைதான் அங்கு நான் அப்பணியைச் செய்யுமாறு செய்தது. அவர்களெல்லாம் தியாகம் செய்ய, எங்களுக்குப் புகழ் கிடைத்தது.''

('தமிழ்நாட்டில் காந்தி' - பக் 141)

நன்றி!

காந்திஜி சென்னையில் தங்கியிருந்த நாட்களில் அவர் பல காரியங்களைச் செய்தார். குறிப்பாக, சென்னையில் இயங்கி வந்த 'தென்னாப்பிரிக்க இந்தியர் லீக்' என்ற அமைப்பைக் கலைத்து விட்டு, அதனிடம் எஞ்சியிருந்த நிதியை, தென்னாப்பிரிக்க சத்தியாக்கிரகப் போரில் உயிர்நீத்த செல்வன் என்பவரின் குடும்பத்தினருக்கு உதவுமாறு செய்தார். இந்த லீக் தென்னாப்பிரிக்க சத்தியாக்கிரகத்திற்கு உதவுவதற்காக நிறுவப்பட்டதாகும். திரு.ஜி.ஏ. நடேசன் இதன் நிர்வாகியாக இருந்தார்.

காந்தியடிகள் 3 வார காலம் தமிழ்நாட்டிலிருந்தபின், மே 9-ஆம் தேதியன்று, தமிழரிடம் விடைபெற்று வடபுலம் சென்றார். அங்கு சென்றதும், குஜராத்திலுள்ள அகமதாபாத் நகரையடுத்துள்ள சபர்மதி நதிக்கரையில் ஒரு ஆசிரமத்தை நிறுவினார். அதில் முதன் முதலில் சேர்ந்தவர்கள் 25 பேர். அவர்களில் 13 பேர் தமிழர். அவர்களில் 5 பேர் தென்னாப்பிரிக்காவிலிருந்து காந்தியடிகளுடன் திரும்பி வந்தவர்கள்.

காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் தமிழர்களைக் கொண்டு டால்ஸ்டாய் பண்ணை'யை நிறுவியதுபோல, இந்தியாவிலும், சபர்மதி ஆசிரமத்தைத் தமிழரைக் கொண்டே நிறுவினாரென்றால், தமிழரிடம் அவர் வைத்திருந்த நம்பிக்கையை என்ன சொல்லிப் புகழ்வது!

ஒப்பந்த முறை ஒழிப்பு

இந்தியா திரும்பிய பின், 1915 முதல் 1917 வரை தொடர்ந்து மூன்றாண்டுக் காலம் காந்திஜி தென்னாப்பிரிக்க இந்தியர் ஒப்பந்தக் கூலி முறையையே ஒழித்துக் கட்டப் பாடுபட்டார். 1917 ஏப்ரல் 11-ஆம் தேதிக்குள் இந்த ஒப்பந்தமுறையை ஒழிக்கா விட்டால், தாம் இந்தியாவிலேயே சத்தியாக்கிரகப் போரைத் தொடங்கப் போவதாக இந்திய அரசுக்கு முன்னறிவிப்புக் கொடுத்தார் காந்திஜி. அதற்காக, வைசிராய் லார்டு ஹார்டிஞ்சைப் பேட்டி கண்டு பேசினார். அவரும் ஒப்பந்த முறையை அடியோடு ரத்து செய்ய முயல்வதாக உறுதி கூறினார். இதிலே பெசன்டம்மையார் காந்திஜியுடன் தீவிரமாக ஒத்துழைத்தார்.

1916 மார்ச் மாதத்தில் பண்டித மாளவியா அவர்கள், டில்லி இம்பீரியல் சட்டசபையில் ஒப்பந்த முறையை ஒழிக்கக் கோரும் தீர்மானமொன்றைப் பிரேரேபித்தார். அரசின் ஆதரவோடு அது நிறைவேற்றி வைக்கப்பட்டது. பின்னர், 1917 பிப்ரவரியில் திரும்பவும் மாளவியாஜி, ஒப்பந்த முறையை ஒழிப்பதற்கான உத்தியோகப் பற்றற்ற மசோதாவொன்றையும் டில்லி இம்பீரியல் சட்டசபையில் பிரேரேபித்தார்.

இந்த முயற்சிகளின் விளைவாக 1917 மார்ச்சு மாதத்தில் ஒப்பந்தக் கூலி முறை ஒழிக்கப்பட்டுவிட்டதாக இந்திய அரசு அதிகார பூர்வமாக அறிவித்தது. இதற்காக இந்திய மக்கள் சார்பில் நன்றி தெரிவித்து வைசிராய்க்குக் காந்தியடிகள் கடிதம் எழுதினார். தென்னாப்பிரிக்காவில் காந்திஜி நடத்திய சத்தியாக்கிரகப்

போரினால் நேட்டால் பிரதேச அளவில்தான் ஒப்பந்தக் கூலி முறை ஒழிந்தது. ஆனால், அடிகள் இந்தியா வந்தபின் இங்கு நடத்திய கிளர்ச்சியினால் பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகள் அனைத்திலுமே ஒப்பந்தக் கூலி முறை ஒழிந்தது.

ஒப்பந்தக் கூலி முறையை ஒழித்து இந்திய அரசு அதிகார பூர்வமாக அறிக்கை வெளியிட்டதும், பிஜி, பிரிட்டிஷ் கயானா, டிரினிடாட், சுரினம், ஜமைக்கா ஆகிய பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளில் வாழும் இந்தியர்கள் விழாக் கொண்டாடினர். புனிதன் காந்தியை ஏற்றிப் போற்றினர்!

தமிழர் நன்றிக் கடன்!

பிஜித் தீவின் கரும்புத் தோட்டங்களில் அல்லலுற்ற ஒப்பந்தக் கூலிகளான தமிழர் பற்றிப் பாரதி அழுதழுது பாடினாரே, அவர் ஒப்பந்தக் கூலி முறை ஒழிந்த செய்தியைக் கேட்கக் கொடுத்து வைத்தார். பாரதியார் வாழ்ந்திருந்த காலத்திலேயே ஒப்பந்தக் கூலி முறையை ஒழித்து, அந்தக் கவிஞரின் கண்ணீரைத் துடைத்து விட்டார் காந்தியடிகள். அவர் கண்ணீரை மட்டுமா? தன்மானமுள்ள தமிழினத்தார் அனைவருடைய கண்ணீரையும் துடைத்தார்.

பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளில் அல்லலுற்ற ஒப்பந்தக் கூலிகளான தமிழர்களின் - குறிப்பாக, கண்ணகியின் வழிவந்த தமிழ்த் தாய்மார்களின் தொல்லையைத் துடைத்த காந்தியடிகளுக்குத் தமிழினத்தார் என்றென்றுமே நன்றியுடையவர்களாக இருக்கக் கடமைப்பட்டிருக்கின்றனர். வாழ்க, காந்தியடிகள் திருநாமம்!

1927-இல் தென்னாப்பிரிக்காவில் இந்தியர் பிரச்சினைகளைக் கவனிப்பதற்கென இந்திய அரசின் சார்பில் ஒரு ஏசெண்டை அனுப்ப பிரிட்டிஷ் அரசு முன் வந்தது. அந்நாளில் அயல் நாடுகளுக்குத் தூதுவர் அனுப்பும் உரிமை இந்திய அரசுக்கு இருக்கவில்லை. காரணம், இந்தியா பிரிட்டனுக்கு அடிமைப் பட்டிருந்ததுதான். அந்நிலையிலும், 'ஏசெண்டு' என்ற பெயரில் இந்திய அதிகாரி ஒருவரைத் தென்னாப்பிரிக்காவுக்கு அனுப்பி வைக்கப் பிரிட்டிஷ் அரசு முன் வந்தது பெரிய காரியமாகும். இந்தச் சாதனை காந்தியடிகளுடையதாகும். அந்த ஏசெண்டு தமிழராகவே இருக்க வேண்டுமென்றும் அவர் விரும்பினார். அதனை ஏற்று மகாகனம் வி.எஸ். சீனிவாச சாஸ்திரியை அனுப்பியது பிரிட்டிஷ் அரசு.

இந்திய ஏசென்ட் தமிழராக இருக்க வேண்டுமென்று அடிகள் விரும்பக் காரணம் தென்னாப்பிரிக்க இந்தியர் என்போரில் பெரும்பாலோர் தமிழராக இருந்ததுதான். இதிலுள்ள நியாயத்தை உணர்ந்து சாஸ்திரியாரை அனுப்பியது ஆங்கில அரசு.

திரு.வி.எஸ். சீனிவாச சாஸ்திரியார் தென்னாப்பிரிக்காவில் ஏசென்டாகப் பதவி வகித்த காலத்தில் காந்தி - ஸ்மட்ஸ் ஒப்பந்தம் சரியாக அமல்படுத்துவதற்குத் தூண்டுதல் புரிந்து வந்தார். அதற்காக அவரை 'மந்திரக்கோல் சாஸ்திரியார் என்று வருணித்தார் காந்தியடிகள்.

பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளில் ஒப்பந்தக் கூலிகளாக இருந்தவர்களின் துயர் துடைக்கப் பாடுபட்டவர்களிலே ஐரோப்பியர்களுமுண்டு. அவர்களில் முக்கியமானவர்கள் ஜெ.எப். ஆண்டு ரூஸ், போலக் ஆகியோராவர். அவர்களிருவரும் சத்தியாக்கிரகம் வெற்றி பெறக் காந்திஜிக்குப் பெரிதும் துணை புரிந்தார்கள். பிரிட்டிஷாரிடையில் ஆண்டுரூசுக்கிருந்த செல்வாக்கை காந்திஜி நன்கு பயன்படுத்திக் கொண்டார்.

இந்தியாவுக்குச் சுதந்திரம் தேடியதைவிடவும் நேட்டால், பிஜி, கயானா ஆகிய பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளில் ஒப்பந்தக் கூலிகளாக இருந்தவர்களின் துயர் துடைத்ததும், மேலும் அந்த நாடுகளுக்கு ஒப்பந்தக் கூலிகள் செல்வதைத் தடுத்து நிறுத்தியதும் காந்திஜி புரிந்த பெரிய சாதனைகளென்று சொல்லலாம். காந்திஜி இல்லையானாலும், சற்று முன் பின்னாக இந்தியா சுதந்திரம் பெற்றிருக்கக்கூடும். ஆனால், அவர் இல்லையானால், கடல் கடந்த நாடுகளில் தமிழர் பட்ட அல்லல்களைத் துடைக்க வேறு ஆள் ஏது?

இந்திய சுதந்திரப் போரில் காந்திஜி தலைமை வகித்தது' 1920 தொடங்கி 1947 வரையுள்ள 27 ஆண்டுகளிலாகும். தென்னாப் பிரிக்காவில் பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளில் வாழ்ந்த ஒப்பந்தக் கூலிகளான தமிழர் துயர் துடைக்க அடிகள் பாடுபட்டது, 1893 தொடங்கி 1920 வரையுள்ள 27 ஆண்டுகளிலாகும். இந்த உண்மையைத் தமிழர்களிலே எவ்வளவு பேர் உணர்ந்திருக் கின்றனரோ!

காந்தியடிகள் இன்று நம்மிடையே வாழவில்லை, ஆம் அவர் அமரராகி விட்டார்! இந்நிலையிலேனும், தமிழினத்தார் அந்த மகானுடைய திருநாமத்தை நன்றியுணர்வோடு நினைப்பார்களாக!

★-★-★

ரௌலட் சட்ட எதிர்ப்பு

காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பிய பின்னர்ச் சம்பரான், சௌரிசாரா முதலிய ஊர்களில் குட்டிப் போராட்டங்களை நடத்தினார். அவை பிரிட்டிஷாரின் கொடுங்கோன்மையை எதிர்த்து சத்தியாக்கிரக முறையில் நடந்த போராட்டங்களே! இந்திய விடுதலைப் போரின் தலைமையை ஏற்குமுன், சந்தர்ப்ப நிர்ப்பந்தம் காரணமாகவே. அவை தேச விடுதலைக்காக இனிமேல் பெரிய போராட்டத்தைத் தொடங்குவதற்கான ஒத்திகைகளாக அமைந்தன.

தேசந் தழுவிய முறையில் அடிகள் இந்தியாவில் நடத்திய முதல் போராட்டம் ரௌலட் சட்டத்தை எதிர்த்து நடத்திய சத்தியாக்கிரகமேயாகும். இதுகூட, அடிகளார்மீது பிரிட்டிஷார் திணித்ததுதான்!

ரௌலட் சட்டம்

1908 முதல் 1918 வரையுள்ள பத்தாண்டுக் காலத்திலே பாரத தேசமெங்கணும் அடுத்தடுத்து வன்முறைச் சம்பவங்கள் நிகழ்ந்தன வென்பதை முன்பே அறிந்தோம். குறிப்பாக, வங்காளத்திலும் பஞ்சாபிலுந்தான் அதிக அளவில் நிகழ்ந்தன. வெள்ளை அதிகாரிகளைக் கொலை செய்தல், அரசாங்க கஜானாக்களைக் கொள்ளையடித்தல், துப்பாக்கிகள் - வெடிகுண்டுகள் போன்ற ஆயுதங்களைக் களவாடல், ஆயுதங்களைத் தயாரித்தல், இரகசிய சங்கங்களை நிறுவிப் படித்த இளைஞர்களைக் கொலை, கொள்ளை முதலிய செயல்களுக்குத் தயாரித்தல் ஆகிய பயங்கரச் செயல்கள் ஆண்டுக்கு ஆண்டு அதிகப்பட்டு வந்து, 1918-ஆம் ஆண்டில் தலை தூக்கி நின்றன. பத்திரிகைகள் கூட இரகசியத்தில் நடத்தப்பட்டன. புரட்சிக்குத் தூண்டும் கருத்துக்களடங்கிய நூல்களும் பிரசுரங்களும் பெருகி வந்தன.

இந்தியப் புரட்சியாளருக்கு அயல் நாடுகளிலிருந்த புரட்சியாளரோடும் தொடர்பிருந்தது, இவர்களை ஒடுக்குவதற்குத்

திட்டமிட்ட முறையில் அல்லாமல் ஸ்தல அதிகாரிகளால் அவர்கள் சக்திக்கேற்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வந்தன வென்றாலும், அவற்றால் வன்முறைச் செயல்கள் குறையக்கூட இல்லை. அதனால், புரட்சிச் சக்திகளின் பிறப்பிடத்தையும் இருப்பிடத்தையும் அறியவும், அவற்றைப் பற்றிய பத்தாண்டுக் கால வரலாற்றைத் தயாரிக்கவும், திட்டமிட்ட முறையில் புரட்சியை ஒடுக்குவதற்கான வழிவகைகளை ஆராய்ந்து அறிவிக்கவும் ஒரு கமிட்டியை நியமிக்க வேண்டியதன் அவசியத்தை இந்திய அரசு உணர்ந்தது. 'செடிஷியஸ் கமிட்டி' என்ற பெயரில் நீதிபதி எஸ்.ஏ.டி. ரௌலட் என்பாரின் தலைமையில் 1918 டிசம்பர் 17-இல் ஐவர் கொண்ட ஒரு கமிட்டியை பிரிட்டிஷ் அரசு நியமித்தது. இந்தக் கமிட்டியின் மற்ற உறுப்பினர்கள் பெயர்கள் வருமாறு: 1. கனம் சர். பாஸில் ஸ்காட் (பம்பாய் உயிர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதி), 2. கனம் திவான் பகதூர் சி.வி. குமாரசாமி சாஸ்திரி (சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி), 3. சர். வெர்னே லேவராட் (உ. பி. அரசாங்க ரெவினியூ போர்டு உறுப்பினர்), 4. கனம் பிரவோஷ் சந்திரமித்தர் (கல்கத்தா உயர்நீதி மன்ற வழக்கறிஞர்).

'செடிஷியஸ் கமிட்டி' என்னும் பெயரால் இந்திய அரசால் நியமிக்கப்பட்ட இக்கமிட்டி நடைமுறையில் கமிட்டியின் தலைவர் பெயரால் 'ரௌலட் கமிட்டி' என்றே அழைக்கப்பட்டது. இக்கமிட்டி முழுசாக நான்கு மாத காலம் கல்கத்தாவைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டது. பம்பாய், வங்காளம், சென்னை, பீகார், ஒரிசா, மத்திய மாகாணங்கள் ஐக்கிய மாகாணங்கள் (உ.பி.), பஞ்சாப், பர்மா ஆகிய மாகாண அரசுகளும், இந்திய அரசும் தந்த ஆவணங்களைச் சாட்சியங்களாகக் கொண்டு ஆராய்ந்து, முடிவில் 15-4-18-இல் ஒரு பரிந்துரையை இந்திய அரசுக்குத் தந்தது.

'ரௌலட் சாஸ்திரி'

ரௌலட் கமிட்டியிலிருந்த திரு.சி.வி. குமாரசாமி சாஸ்திரியார் தமிழராவார். இவர் தமிழராக இருந்து தொலைத்தது, தமிழினத்தாரின் துரதிர்ஷ்டமாகும். இவர் அக்கமிட்டியிலிருந்து விலகிவிட வேண்டுமென்று காங்கிரஸ்காரர்கள் செய்த கிளர்ச்சி பயனற்றுப் போனது. அதனால், இவரைக் கண்டபோதெல்லாம் மக்கள் 'ரௌலட் சாஸ்திரி' என்று சொல்லிப் பரிகசித்தனர். இதற்கு வழி காட்டுவது போல, 'இந்து' பத்திரிகை 'ரௌலட் சாஸ்திரி' எனத் தலைப்பிட்டு இவரைக் கண்டித்துத் தலையங்கம் எழுதியிருந்தது.

அறிக்கை

ரௌலட் கமிட்டி தனது பரிந்துரையிலே பயங்கரப் புரட்சி இயக்கத்தின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் விரிவாகக் கூறியது. வங்கம், மகாராஷ்டிரம், பஞ்சாப் ஆகிய 3 மாநிலங்களில்தான் வன்முறைச் செயல்கள் ஓங்கி நிற்கின்றன என்பதைப் புள்ளி விவரங்களுடன் கமிட்டியின் பரிந்துரை புலப்படுத்தியது. பர்மா, உ.பி. ம.பி, பீகார் ஆகிய மாநிலங்கள் இரண்டாவது இடத்தைப் பெறுகின்றனவென்று கமிட்டி கூறியது. சென்னை மாகாணத்திலே - அதாவது, தமிழகத்திலே, கலெக்டர் ஆஷ் கொலைக்கு முன்னும் பின்னும் பயங்கரச் செயல் எதுவும் நிகழவில்லையென்றும் அக்கமிட்டி கூறியது. ஆம்; சென்னைக்கு 'சபாஷ்' பட்டம் கொடுத்தது ரௌலட் கமிட்டி!

இந்தியாவில் பயங்கரப் புரட்சி மகாராஷ்டிரத்திலுள்ள சித்பவ பிராமணர்களிடமிருந்து தொடங்கி, நாளடைவில் நாடு முழுவதிலும் பரவியதென்று கமிட்டி கூறியது. ஆம்; பிராமணர்கள் வருணாசிரமத் தருமத்தைக் கைவிட்டு, தேச பக்தி காரணமாக, க்ஷத்திரிய வருணத்தாருக்குரிய கடமையை மேற்கொண்டு விட்டனரென்று கமிட்டி சொல்லாமல் சொல்லியது! வங்க மாகாணத்திற்கே அதிகமான பக்கங்களை அளித்தார், அதன் தலைவர் ரௌலட் துரைமகனார்!

பரிந்துரைகள்

பயங்கரப் புரட்சியை ஒடுக்குவதற்கென இரண்டு புதிய சட்டங்களைக் கொண்டு வர வேண்டுமென்று கூறி, அவற்றின் நகல்களையும் தயாரித்தளித்தது கமிட்டி. ஒரு சட்டம் தற்காலிக மானது; மற்றொரு சட்டம் நிலைத்திருக்கத் தக்கது.

பொதுவாக, தற்காலிகச் சட்டம், நிரந்தரச் சட்டம் இரண்டிலுமே புரட்சியாளர்களை ஈவிரக்கமின்றி அழித்து முடிக்க விதிகளை வகுத்துக் கொடுத்தது கமிட்டி. புரட்சியாளரென்று போலீசாரால் சந்தேகிக்கப்படும் ஒருவரை வராண்டின்றிக் கைது செய்யலாம்; அவர் வசிக்க வேண்டிய இடத்தை அரசே நிச்சயித்து, அவருடைய நடமாட்டத்தை அன்றாடம் அவர் போலீசில் அறிவிக்க வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கலாம்.

3 நீதிபதிகளைக் கொண்ட விசேஷ நீதிமன்றமொன்றிலே புரட்சியாளர்களின் வழக்குகளை விசாரிக்கலாம். இந்திய சாட்சியச் சட்டம் இந்த விசேஷ நீதிமன்றத்திற்குப் பொருந்தாது.

குற்றவாளிமீது அரசு சாட்டிய குற்றம் அல்லது குற்றங்களை நிருபிக்கச் சாட்சிய மில்லாவிடினும் தண்டனை தரலாம். நீதி

மன்றத்தில் விசாரணை ரகசியமாக நடைபெறும். விசேஷ நீதி மன்றத்தின் தீர்ப்புக்கு மேல் அப்பீல் கிடையாது.

எந்த வீட்டையும் வாரண்டின்றியே போலீசார் சோதனை யிடலாம். குற்றவாளிகள், நீதி மன்றத்திலே தங்கள் சார்பில் வாதாட வக்கீலை நியமிக்க முடியாது. கோர்ட்டில் ஆஜராகி வாதாடவும் குற்றவாளிகளுக்கு உரிமை கிடையாது. இப்படி, இன்னும் பல கொடுமையான விதிகளைக் கொண்ட இரண்டு சட்டங்களைக் கொண்டுவர ரௌலட் கமிட்டி பரிந்துரை செய்தது.

ரௌலட் கமிட்டியின் அறிக்கை தன் கைக்குக் கிடைத்ததுமே, அதில் பரிந்துரைத்தபடி, இரு மசோதாக்களைத் தயாரித்தது இந்திய அரசு. அவை, ரௌலட் மசோதா - 1, ரௌலட் மசோதா - 2 எனப் பெயர் பெற்றன. இந்த மசோதாக்களை, இந்திய சட்டசபையில் பிரேரேபித்து சட்டமாக்கி விடுவதிலும் அரசு அவசரங் காட்டியது.

போராட்டத்துக்கு அடித்தளம்

மசோதாக்களைப் பத்திரிகைகளில் படித்து அதிர்ச்சி யடைந்தார் காந்திஜி. 'இவை தேவையற்றவை' என்றும், 'மான முள்ள இந்தியர்களால் ஏற்க முடியாதவை' என்றும் கூறினார். அப்போது அடிகள் கடுமையான நோயுற்று, பம்பாயில் தங்கி சிகிச்சை பெற்று வந்தார். ஆயினும், படுக்கையிலிருந்தபடியே திரு. வல்லபாய் படேலுடன் கலந்து ஆலோசித்தார். பம்பாய் பிரமுகர்களைக் கூட்டி, அவர்களுடனும் ஆலோசனை நடத்தினார். இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களில் கவியரசி சரோஜினி, வல்லபாய் படேல், திருமதி. அனுசூயாதேவி, திரு. சங்கர்லால் பாங்கர் ஆகியோர் முக்கியமானவர்களாவர். கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை இருபதுக்கு மேலில்லையென்றா லும், தேசத்தில் ஏற்பட்ட முதல் சத்தியாக்கிரகப் போராட்டத்திற்கு இந்தக் கூட்டமே அடித்தளமிட்டது என்று சொல்லலாம்.

பிரதிக்ஞை

காந்திஜியின் யோசனைப்படி சத்தியாக்கிரக சபை ஒன்று நிறுவப்பட்டது. அதன் தலைவராகக் காந்திஜியே பொறுப் பேற்றார். ரௌலட் சட்டங்களை எதிர்த்துப் போர் தொடங்குமுன் அதனை ஏற்க மறுக்கும் பிரதிக்ஞையில் நாடு முழுவதிலுமுள்ள

பிரமுகர்களின் கையெழுத்துக்களைப் பெறுவதெனத் தீர்மானிக்கப் பட்டது. பிரதிக்ஞையின் வாசகமும் தயாரிக்கப்பட்டது. அது வருமாறு:

''இந்திய கிரிமினல் சட்டத் (திருத்த) 1919-ஆம் வருட 1-ஆம் மசோதாவும், கிரிமினல் சட்ட (அவசர அதிகார) 1919-ஆம் வருட 2 ஆவது மசோதாவும் அநியாயமானவை. சுதந்திரக் கொள்கையையும் நீதியையும் பாதிப்பவையாக இவை இருப்பதோடு, சமூகத்தின் பாதுகாப்புக்கு வேண்டிய தனிப்பட்டவரின் ஜீவாதார உரிமைகளையும் பாதிப்பன வாக இருக்கின்றன என்று மனமாரக் கருதுகின்றோம். ஆகையால் இம்மசோதாக்கள் சட்டங்களானால் அவை ரத்துச்செய்யப்படும் வரையில், இந்தச்சட்டங்களுக்கும், மீற வேண்டியவை என்று இனி நியமிக்கப்படவிருக்கும் கமிட்டி கருதும் சட்டங்களுக்கும் உடன்படாமல் சாத்விக முறையில் மறுப்பதென்று உறுதியுடன் பிரதிக்ஞை எடுத்துக் கொள்ளுகின்றோம்.

''இந்தப் போராட்டத்தில் சத்தியத்தைக் கைவிடாமல் அனுசரித்து நடப்பதுடன், உயிருக்கும் உடலுக்கும் சொத்துக்கும் பலாத்காரம் விளைவிக்காமல் இருப்போம் என்றும் பிரதிக்ஞை செய்து கொள்ளுகிறோம்.''

இந்தப் பிரதிக்ஞைப் பத்திரத்தில் காந்திஜி கூட்டிய கூட்டத்திற்கு வந்திருந்தவர்கள் முதலில் கையொப்பமிட்டார்கள். ''ஒரு சிலரே பிரதிக்ஞையை ஏற்பதானாலுஞ் சரி; சத்தியாக்கிரகப் போர் தொடங்கப்படும்'' என்று காந்திஜி உறுதியாகக் கூறினார். இவ்வளவு உறுதியுடன் அவர் இருந்தாரென்றாலும், போரைத் தவிர்ப்பதற்கான சமாதான முறைகளைக் கடைப்பிடித்த பிறகே சத்தியாக்கிரகத்தைத் தொடங்க விரும்பினார்.

ரௌலட் மசோதாக்களைச் சட்டங்களாக்க வேண்டா மென்று கோரியும், சட்டங்களாக்குவதால் விளையக்கூடிய கேடுகளை நட்பு முறையில் எடுத்துக்காட்டி எச்சரித்தும், அடிகள் வைசிராய்க்குக் கடிதங்கள் எழுதினார். அவற்றால் பயன் விளையவில்லை. வைசிராய் தமது முயற்சியில் பிடிவாதங் காட்டினார். பம்பாயில் கூடிய பிரமுகர்கள் கூட்டத்தில் தயாரிக்கப்பட்ட பிரதிக்ஞைப் பத்திரங்கள் நாடு முழுவதற்கும் அனுப்பப்பட்டன. பிரமுகர்களின் கையெழுத்துக்களைப் பெறுவதற்காக!

சட்ட சபையில்

இந்நிலையில், ரௌலட் மசோதாக்கள் இந்திய சட்ட சபையில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. அப்போது காந்தியடிகள் பார்வையாளர் இடத்தில் அமர்ந்து விவாதத்தைக் கவனித்தார். அதுபற்றி அவரே கூறுகிறார், கேட்போம்:

''இந்திய சட்டசபைக் கூட்டத்திற்கு, எனது வாழ்நாளில் ஒரே ஒரு முறைதான் போயிருக்கிறேன். அது ரௌலட் மசோதாவின் பேரில் அந்தச் சட்டமன்றத்தில் விவாதம் நடந்தபோதுதான். அப்போது வி.எஸ். சீனிவாசசாஸ்திரியார் ஆவேசமாகப் பேசினார். அரசுக்குக் கடுமையான எச்சரிக்கையும் விடுத்தார். வைசிராய் வியப்பும் திகைப்பும் அடைந்த நிலையில் அவருடைய பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

''சாஸ்திரியார் மிகுந்த நாவன்மையுடன் பேசிக் கொண்டிருந்தபோது வைசிராய் கண்ணிமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தார். அவருடைய பேச்சில் உண்மையும் உணர்ச்சியும் நிறைந்திருந்தன.''

இங்கு, சாஸ்திரியாரைப் பற்றித் தெரிந்து கொள்வது அவசியமாகிறது. அவர் ப்ழுத்த மிதவாதி. வைசிராயால் நியமிக்கப்பட்டுத்தான் அவர் இந்திய சட்டசபையில் இடம் பெற்றார். ஆங்கிலத்தில் ஆழகாகவும் வாதத் திறமையோடும் பேசுவதில் வல்லவர். ஆங்கிலப் புலமைக்காக அவர், 'வெள்ளி நாக்கு சாஸ்திரி' என்று அறிஞர் பெருமக்களால் அழைக்கப் பட்டார். அவர், மிதவாதப் போக்குக் காரணமாகக் கோகலேயை வழிகாட்டியாகக் கொண்டு அரசியல் வாழ்வு நடத்தினார். பிற்காலத்தில் பிரிட்டிஷாரிடம் 'மகாகனம்' (ரைட்ஹானரபில்) என்னும் பட்டத்தையும் பெற்றார்.

சாஸ்திரியார், வைசிராயால் நியமிக்கப்பெற்ற உறுப்பினராயிருந்தும், ரௌலட் மசோதாக்களை எதிர்த்துப் பேச அவர் தயங்கவில்லை. தயவு தாட்சண்யங் காட்டாமல், இந்திய அரசை எதிர்த்துச் சட்டசபையில் முழக்கஞ் செய்தார். அவரது பேச்சைக் கேட்கக் காந்திஜியும் வைராசியும் ஒரே சந்தர்ப்பத்தில் இந்திய சட்டசபையில் இருந்தார்களென்றால், அந்தப் பெரு மகனாரைக் குடிமகனாகப் பெற்ற தமிழகம் பெருமைக் குரியதன்றோ!

வனாந்தரத்தில் இட்ட ஓலம்!

கடுமையான எதிர்ப்பிருந்தும் உத்தியோகப் பற்றற்ற இந்திய உறுப்பினர் அனைவரும் - மிதவாதிகள், தீவிரவாதிகள் என்ற வேற்றுமையின்றி - ஒரு மனமாக எதிர்த்து வாக்களித்தும் ரௌலட் மசோதாக்களில் ஒன்று சட்டமாகி விட்டது, இந்திய சட்ட சபையிலே! அதுபற்றிக் காந்தியடிகள் கூறுவது வருமாறு:

''ஒருவர் உண்மையிலேயே தூங்கிக் கொண்டிருந்தால் நாம் அவரை எழுப்பிவிட முடியும். ஆனால், தூங்குவதாகப் பாசாங்குதான் செய்கிறார் என்றால், அப்படிப்பட்டவரை என்னதான் முயன்றாலும் எழுப்பிவிட முடியாது. அரசின் உண்மையான நிலையும் அதுதான். அது முன்னாலேயே இதில் ஒரு தீர்மானம் செய்துகொண்டு விட்டது. இதற்குச் சட்ட ரீதியான சடங்குகளை நிறைவேற்றிவிட வேண்டும் என்பதில் மாத்திரமே அது கவலை கொண்டிருந்தது. ஆகையால், சாஸ்திரியாரின் உண்மையான எச்சரிக்கை அரசிடம் எத்தகைய மாறுதலையும் ஏற்படுத்தவில்லை. இப்படிப்பட்ட ஒரு நிலையில் என் பேச்சு வனாந்தரத்தில் இட்ட ஓலமாகவே முடியும்.

''வைசிராயை நான் மன்றாடிக் கேட்டுக்கொண்டேன். அந்தரங்கமாகவும் பகிரங்கமாகவும் அவருக்குக் கடிதங்கள் எழுதினேன். அரசின் போக்கால் சத்தியாக்கிரகத்தை மேற்கொள்ளுவதைத் தவிர எனக்கு வேறு வழியே இல்லாமல் போகிறது என்று அக்கடிதங்களில் கூறினேன். ஆனால், ஒன்றும் பயன்படவே இல்லை.''

சோதனை நேரத்தில் தமிழர்!

திக்கற்ற நிலையில் தாம் இருப்பதாக அடிகள் உணர்ந்த நிலையில் தமிழகம் அவரது நினைவுக்கு வந்தது. 'சத்தியாக்கிரகத்திற்கென்றே கடவுளால் படைக்கப்பட்டவர்கள்' என்று தென்னாப்பிரிக்கத் தமிழர்களை அவர் வருணித்ததை முன்பே அறிந்தோமல்லவா! அந்த சத்தியாக்கிரக சாதியை - ஆம்; தமிழ்ச் சாதியை சோதனை மிக்க நேரத்தில் அடிகள் நினைவில் கொண்டார்!

ஐயன் நினைத்த நேரத்திலே தமிழரிடமிருந்தும் அவருக்கு அழைப்புப் போனது தமிழகத்திற்கு வருகை தருமாறு! இதோ, அடிகளாரே கூறுகிறார், கேட்போம்:

''மசோதாக்கள் இன்னும் சட்டங்களாகக் கெஜட்டில் பிரசுரமாகவில்லை. நானோ அதிக பலவீனமான நிலையில்

இருந்தேன். என்றாலும், சென்னையிலிருந்து எனக்கு அழைப்பு வந்ததும் அந்த நீண்ட பிரயாணத்தினால் ஏற்படக் கூடிய அபாயத்திற்கும் துணிவது என்று முடிவு செய்தேன்.

''தென்னாடு எப்பொழுதுமே எனக்குச் சொந்த வீடு போல் தோன்றும். தென்னாப்பிரிக்காவில் நான் செய்த வேலையின் காரணமாகத் தமிழர் மீதும் தெலுங்கர் மீதும் எனக்கு ஒரு வகையான தனி உரிமை இருப்பதாகவே நான் உணர்ந்தேன். தென்னாட்டின் நல்ல மக்கள் என்நம்பிக்கையை என்றும் பொய்ப்பித்தது இல்லை.

''திரு. கஸ்தூரிரங்க ஐயங்காரின் கையொப்பத்துடன் அழைப்பு வந்தது. ஆனால், அந்த அழைப்புக்கு முக்கியமான காரணஸ்தராக இருந்தவர் இராசகோபாலாச்சாரியாரே என்பதை பிறகு நான் சென்னைக்குப் போகும் வழியில் தெரிந்து கொண்டேன். அவருடன் எனக்குப் பழக்கம் ஏற்பட்டது, அதுவே முதல் முறையென்று சொல்லலாம்.'

காலம் கொடுத்த தலைவர்கள்

ராஜாஜி தருமபுரி மாவட்டத்தில் ஹோசூர் தாலுக்காவிலுள்ள தொரப்பள்ளி கிராமத்தில் பிறந்தவர். பின்னர்ச் சேலம் நகரில் குடியமர்ந்து வக்கீல் தொழில் புரிந்ததோடு, சேலம் நகர மன்றத் தலைவராகவும் பதவி வகித்தவர். அவர் வக்கீல் தொழில் காரணமாகச் சென்னையில் குடி புகுந்திருந்த நேரத்தில்தான் அடிகள் தாம் தொடங்கியிருந்த சத்தியாக்கிரகப் போருக்கு ஆதரவு திரட்டச் சென்னைக்கு வருகை தந்தார். ராஜாஜி அழைத்தே வந்தாரென்பது தெய்வ ரகசியம் போலும்! ஆம்; காந்திஜியும் ராஜாஜியும் காலங்கொடுத்த தலைவர்களாவர். அவர்களுடைய முதல் சந்திப்பு, சரியான நேரத்தில் நிகழ்ந்ததாகும். தெய்வத்தின் திருவுள்ளப்படி நிகழ்ந்ததாகும்.

காங்கிரஸ், மிதவாதிகளின் கைதி!

இந்த நேரத்தில் காங்கிரஸ் ஸ்தாபனத்தின் நிலை என்ன? அது இன்னமும் மிதவாதிகளிடமிருந்து விடுபடவில்லை. மிதவாதிகளுக்கு ராஜவிசுவாசப் போதை தெளியவில்லை. ரௌலட் சட்டத்தை எதிர்த்துச் சத்தியாக்கிரகப் போர் தொடங்கக் காந்திஜி திட்டமிட்டது தமது சொந்தப் பொறுப்பில்தான்!

ரௌலட் கமிட்டியின் பரிந்துரைகள் வெளியான பின், 1918 ஆகஸ்டில் பம்பாயில் சையது ஹசன் இமாம் தலைமையில்

காங்கிரஸ் மகாசபையின் விசேஷக் கூட்டமொன்று நடந்தது. ரௌலட் கமிட்டியின் பரிந்துரைகளை எதிர்க்க அல்ல விசேஷ மகாசபை! அப்போது வெளியாகியிருந்த மான்டேகு - செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தை ஏற்பது பற்றி ஆலோசிக்கத்தான் இவ்விசேஷ மகாசபை கூடியது. நான்கு மாதங்களுக்குப்பின் வருடாந்தர மகாசபையும் டில்லியில் கூடியது. அதுவும் வரவிருக்கும் அரசியல் சீர்திருத்தத்திலேதான் கவனஞ் செலுத்தியது.

பம்பாயில் கூடிய விசேஷ காங்கிரஸ் மகாசபையிலும், பின்னர் டில்லியில் கூடிய வருடாந்தர மகாசபையிலேயும் ரௌலட் கமிட்டியின் பரிந்துரையை - அதாவது, ரௌலட் சட்டங்களை எதிர்த்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆம்; பம்பாய் மகாசபையில் பதினைந்தாவது தீர்மானமாகவும், டில்லி மகாசபையில் 10-ஆவது தீர்மானமாகவுந்தான்! இந்த மகாசபைகளில் நிறைவேற்றப்பட்ட முதல் தீர்மானம் அரசியல் சீர்திருத்தம் பற்றியதாகும்.

பிரிட்டிஷார் தந்திரசாலிகள்! அவர்கள், ஒருபுறம் அரசியல் சீர்திருத்தம் வழங்கப் போவதாக அறிவித்தார்கள், மிதவாதிகளைத் திருப்திப்படுத்த! இன்னொருபுறம், கொடிய அடக்குமுறைச் சட்டமான ரௌலட் சட்டத்தை கொண்டு வந்தார்கள். உண்மைத் தேசபக்தர்களைப் பூண்டோடு ஒழிக்க!

காந்தியடிகள் பம்பாயில் சத்தியாக்கிரக சபை நிறுவிய செய்தியை யறிந்து, தேசம் முழுவதிலுமே மக்கள் எழுச்சி கொண்டு விட்டனர். மாநிலத் தலைநகரந்தோறும் ரௌலட் சட்டத்தை எதிர்த்துப் பொதுக் கூட்டங்களும் ஊர்வலங்களும் நடைபெறலாயின. தென்னிந்தியாவின் பிரதானத் தலைநகரான சென்னையில் காந்தியடிகள் வருவதற்கு முன்பே திருவல்லிக்கேணிக் கடற்கரையில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

காந்தி வழியில் வ.உ.சி.

இக்கூட்டத்தில் கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி. உள்படத் தலைவர் பலர் பேசினர். காந்தியடிகளின் சத்தியாக்கிரகத் தத்துவத்திற்கு வ.உ.சி. தந்த விளக்கம் வருமாறு:

''மிருக சக்தியைப் பெருக்குவதில் மேற்கு நாட்டினர் திறமைசாலிகள். அந்த மிருக சக்திக்கும் ஆன்ம சக்திக்குமிடையில் நடைபெறும். இந்தப் போரில் ஆன்ம

சக்தி வெற்றி பெறுவது உறுதி. நாட்டின் உண்மையான பக்தர்கள் யார் என்பதை இனங் கண்டுகொள்வதற்கு இதுவே தகுந்த தருணமாகும். மகாத்மா காந்தியின் தலைமையின் கீழ் இந்தியா முழுவதும் சாத்விக எதிர்ப்பை மேற்கொள்ளு வதற்கும் இதுவே காலமாகும். சாத்விக எதிர்ப்பில் நாம் உறுதியாக இருந்தால் அது நாம் சுயாட்சி பெறுவதற்கு நிச்சயம் உதவும்.''

('இந்து', 10-3-19 இதழில் வெளியானபடி.)

தமிழ்ப் புலமையோடு தேசியம்

தமிழ்நாட்டின் அதிர்ஷ்டவசமாகத் தமிழ் மொழியிடத்துப் பற்றும் அதிலே நிறை புலமையும் பெற்ற தேச பக்தர்கள் அந்நாளைய காங்கிரசில் ஏராளமாக இருந்தனர். அவர்களில் வ.உ.சி., பாரதியார் திரு.வி.க., நாவலர் சோமசுந்தர பாரதி, வ.வே.சு. ஐயர் ஆகியோர் முக்கியமானவர்களாவர்.

சென்னைக் கூட்டத்தில் நாவலர் சோமசுந்தர பாரதியாரும் பேசினார். அவர், 'சத்தியாக்கிரகம்' என்பதற்குச் சரியானபடி விளக்கம் தந்தார். அது வருமாறு:

''சத்தியாக்கிரகம் என்ற சொல்லைச் சாத்விக எதிர்ப்பு என்று மொழி பெயர்ப்பது தவறு. ஏனெனில், சத்தியாக்கிரகத்தில் 'எதிர்ப்பு' என்பதே இல்லை.''

ஒட்டியிருந்தவர் விட்டுவிலகினர்

காந்தியடிகள் 18-3-19-இல் சென்னைக்கு ரெயிலில் வருகை தந்தார். இதற்கு முன்பெல்லாம் அவர் சென்னைக்கு வருகை தந்தபோது அவரை யாரெல்லாம் வரவேற்றார்களோ, அவருக்கு நிகழ்ச்சிகளை அமைத்துக் கொடுத்தார்களோ, விருந்துகள் நடத்தினார்களோ, அவர்களெல்லாம் இப்போது ஒதுங்கி நின்றார்கள். அவர்களிலே சிலர் மகாத்மாவின் சத்தியாக்கிரகப் போராட்டத்தை எதிர்த்தும் அறிக்கை விட்டார்கள்.

''ரௌலட் சட்டம் கொடியதுதான். ஆனால், சட்டசபை அதை ஏற்றுக்கொண்ட பிறகு அதனை எதிர்த்துச் சத்தியாக்கிரகம் நடத்துவது நீதியா, நெறியா?'' என்று வினா எழுப்பினர். சத்தியாக்கிரகத்தால் நாடு அராஜகத்தில் ஆழ்ந்துவிடக்கூடும் என்றும் பயமுறுத்தினர். இவர்களில் திரு.ஜி.ஏ. நடேசன், வி.எஸ். சீனிவாச சாஸ்திரியார், சர்.எஸ். சுப்பிரமணிய ஐயர் ஆகியோரு மிருந்தனர்.

புதிய தலைவர்கள்

நல்ல வேளையாக, 1915-இல் காந்திஜி சென்னைக்கு வந்ததற்குப் பின் புதிய தலைவர்கள் தமிழ்நாட்டில் தோன்றி யிருந்தனர். அவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் எஸ். சீனிவாச ஐயங்கார், எஸ். சத்தியமூர்த்தி ஐயர், திரு.வி. கலியாணசுந்தர முதலியார், ராஜாஜி, பி.பி. வாடியா, ஈ.வே.ரா., டாக்டர் பி. வரதராசுலு நாயுடு ஆகியோர் முக்கியமானவர்களாவர்.

1915-இல் காந்தி சென்னை வந்தபோது மிதவாதிகள் அவரை முற்றுகை யிட்டிருந்ததால் ஒதுங்கியிருந்த வ.உ.சி., சுப்பிரமணிய சிவா ஆகியோரும் இம்முறை காந்திஜியை வரவேற்பதில் ஆர்வங் காட்டினர். பாரதியார் புதுவையிலிருந்து சென்னைக்கு வந்திருந்த நேரமாதலால், அவரும் காந்திஜியை வரவேற்றுத் தனியாகச் சந்தித்து உரையாடி, அவரது சத்தியாக்கிரகப் போருக்கு ஆசியும் கூறினார். இந்தச் சந்தர்ப்பத்தில்தான் பாரதியார் 'வாழ்க! நீ எம்மான்' என்ற காந்தி பஞ்சகத்தைப் பாடினார் போலும்!

தமிழ்நாடு பெற்ற விடுதலை

ஹோம்ரூல் இயக்கத்தின் கர்த்தாவான டாக்டர் அன்னிபெசன்ட் இந்த நேரத்தில் லண்டனில் இருந்தார். எப்படியோ, காந்திஜியின் வருகையும், அவரது சத்தியாக்கிரக முயற்சியும் தமிழ் நாட்டை மிதவாதக் கூட்டத்தாரிடமிருந்து விடுவித்தன.

காந்தியடிகள் சரியாக 13 நாட்கள் தமிழ் நாட்டிலிருந்தார். தஞ்சை, நாகை, திருச்சி, மதுரை, தூத்துக்குடி ஆகிய நகரங் களுக்குச் சென்று சத்தியாக்கிரகத்திற்கு ஆதரவு திரட்டப் பொதுக் கூட்டங்களில் பேசினார். அங்கெல்லாம் ரெயில்வே நிலையத் திலிருந்து ஊர்வலமாக ஐயன் அழைத்துச் செல்லப்பட்டார். பொதுக்கூட்டங்களிலும் ஊர்வலங்களிலும் பதினாயிரக் கணக்கில் மக்கள் திரண்டு ஐயனைத் தரிசித்து அவருடைய போர் முழக்கங்களைக் கேட்டனர். ஒவ்வொரு ஊரிலும் சத்தியாக்கிரகப் பிரதிக்ஞையில் பலர் கையொப்பமிட்டனர்.

ரௌலட் சட்டம்

சென்னை நகரில் 6 நாட்கள் தங்கியிருந்த போதுதான் 'ரௌலட் சட்டம் வைசிராயின் அங்கீகாரத்தைப் பெற்று, மத்திய அரசாங்க கெஜட்டில் வெளியாகிவிட்டது' என்ற செய்தி அடிகளுக்குக் கிடைத்தது. இது அவருக்கு அதிர்ச்சியைத் தந்தது. அதுவரை தேசத்தினரின் எழுச்சியைக் கண்டு வைசிராய்

மனமாற்ற மடைந்து, ரௌலட் சட்டத்திற்கு அனுமதி தருவதைத் தவிர்ப்பார் என்றே அடிகள் கருதி வந்தார்.

பிரிட்டிஷாரின் 'நன்றி'

முதல் மகாயுத்த காலத்திலே காந்திஜி பிரிட்டிஷாரை ஆதரித்தார். யுத்தத்திற்கு ஆள் திரட்டிக் கொடுக்க வடபுலத்தில் சுற்றுலாச் செய்தார். இதனால், கடுமையாக நோயுற்று, மரணப் படுக்கையில் விழுந்த நிலையிலும், வைசிராய் டில்லியில் கூட்டிய மாநாட்டில் கலந்து கொண்டு யுத்த ஆதரவுத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசினார். இப்படி யெல்லாம் ஆபத்துக் காலத்தில் உதவிய அடிகளாரை வைசிராய் மதிக்கத் தவறி விட்டார்.

ரௌலட் மசோதாவைச் சட்டமாக்குவதை தவிர்க்குமாறு வைசிராய்க்கு அடிகள் மிகுந்த உருக்கத்துடன் விடுத்த வேண்டு கோள் வீணாகிவிட்டது. வைசிராயிடமிருந்து காந்தியடிகளுக்கு கிடைத்த பதில் இதுதான்:

''இந்திய பாதுகாப்புச் சட்டம் காலாவதியாகி விட்டதால், அதன் இடத்திற்கு ரௌலட் சட்டம் வருகிறது. இதில் புதுமை யொன்றுமில்லை. இந்தச் சட்டத்தைக் கை விட்டால் தேசம் பயங்கரப் புரட்சியாளர் கைக்குப் போய் விடும். அதிக பட்சம் மூன்றாண்டுக் காலந்தான் ரௌலட் சட்டம் அமலிலிருக்கும்.''

சட்டமல்லாத சட்டம்

இந்தச் சமாதானங்கள் ஐயனுக்கு ஆறுதலைத் தரவில்லை. அவர் வன்முறைப் புரட்சியைக் கட்டோடு வெறுத்தார். ஆனால், அதை ரௌலட் சட்டத்தால் ஒடுக்கிவிட முடியாதென்று அவர் உறுதியாக நம்பினார். தமது சத்தியாகிரக முறை ஒன்றினால் தான் பயங்கரப் புரட்சியாளருக்கு மனமாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்று அடிகள் உறுதியாக நம்பினார். இதை வைசிராயும் உணரும்படி செய்ய அவர் எடுத்துக் கொண்ட முயற்சிகள் வீணாகிவிட்டன. ரௌலட் சட்டத்தை 'சட்டமல்லாத சட்டம்' என்று காந்திஜி வருணித்தார்,

கனவிலே கிடைத்த திட்டம்

ரௌலட் சட்டத்தை எதிர்ப்பதென்று அடிகள் முடிவெடுத் தாலும் எப்படி எதிர்ப்பது என்பதிலே அவரது உள்ளத்தில் தெளிவு ஏற்படவில்லை. ஆம்; வேலைத் திட்டத்தை உருவாக்குவதிலே

அவரது மனம் குழப்பமடைந்திருந்தது. ரௌலட் சட்டம் அமுலுக்கு வந்தால் அதனை எதிர்ப்பது எளிதாகிவிடும். ஆனால், அரசு அதனை எப்போது அமல் நடத்துமென்பது அப்போது தெளிவாகத் தெரிந்திருக்கவில்லை. இந்தக் குழப்பத்திற்கிடையே காந்திஜி ஒருநாள் இரவு கனவு கண்டார். அந்தக் கனவிலே அவருக்கு வேலைத் திட்டம் கிடைத்து விட்டது. அந்தக் கனவை அவரே கூறக் கேட்போம்:

''ரௌலட் மசோதா சட்டமாகப் பிரசுரமாகிவிட்டது என்ற செய்தி எனக்குக் கிடைத்தது. அதைப் பற்றி யோசித்தவாறே அன்றிரவு தூங்கிவிட்டேன். மறுநாள் அதிகாலையில் வழக்கமாக எழுவதற்குக் கொஞ்சம் முன்பாகவே எழுந்து விட்டேன். தூக்கத்திற்கும் விழிப்பிற்கும் இடையேயுள்ள நிலையில் நான் இருக்கும் போது திடீரென்று எனக்கு ஒரு யோசனை தோன்றியது. அது கனவைப் போன்றே இருந்தது. காலையில் அதன் விவரம் முழுவதையும் ராசகோபாலாச்சாரியாரிடம் கூறினேன்.''

தாம் கண்ட கனவு இன்னதென்பதையும் அடிகளார் கூறுகிறார், கேட்போம்:

''நேற்றுக் கனவில் ஒரு யோசனை வந்தது. பொது அர்த்தாலை நடத்தவேண்டும் என்பதே அது. ஆன்மத் தூய்மை செய்து கொள்ளும் ஒரு முறையே சத்தியாக்கிரகம். நம்முடைய போராட்டமோ ஒரு புனிதமான போராட்டம். ஆகையால், அதை ஆன்மத் தூய்மை செய்து கொள்வதோடு ஆரம்பிப்பதே சரி என்று எனக்குத் தோன்றுகிறது. எனவே, இந்திய மக்கள் எல்லோரும் அன்று தங்கள் வேலைகளையெல்லாம் நிறுத்திவிட்டு உபவாசம் இருந்து பிரார்த்தனை செய்யட்டும். முஸ்லிம்கள் ஒரு நாளைக்கு மேல் பட்டினி விரதம் இருக்கமாட்டார்கள். ஆகவே, பட்டினி விரதம் இருக்கும் நேரம் 24 மணி என்று இருக்க வேண்டும். இந்த நமது கோரிக்கையை எல்லா மாகாணங்களுமே ஏற்றுக் கொண்டு நடத்தும் என்று சொல்வதற்கில்லை. ஆனால், பம்பாய், சென்னை, பீகார், சிந்து ஆகிய இடங்களிலெல்லாம் அர்த்தால் சரியானபடி அனுஷ்டிக்கப் பட்டாலும் நான் திருப்தியடையக் காரணமுண்டு என்றே கருதுகிறேன்.''

(காந்தி நூல்கள் - தொகுப்பு-3; பக்.582)

நாடெங்கும் அர்த்தால்!

தமது கனவை ராஜாஜியிடம் காந்திஜி கூறியதும், அவர் அப்படியே ஏற்றுக்கொண்டார். பின்னர் அடிகள் 'அர்த்தால்' பற்றிய அறிக்கையொன்றையும் தயாரித்தார். அதிலே, ஏப்ரல்

6 - ஆம் தேதியன்று நாடு முழுவதும் ரௌலட் சட்டத்தை எதிர்த்து அர்த்தால் (கடையடைப்பு, வேலை நிறுத்தம், 24 மணி நேர உண்ணா விரதம்) நடத்த வேண்டும் என்று அடிகள் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

முதலில் தமது அறிக்கையில் மார்ச்சு 30-ஆம் தேதியன்று அர்த்தால் என்று கூறிவிட்டு, பின்னர் அதனை ஏப்ரல் 6-ஆம் தேதி என்று மாற்றினார். இந்த மாற்றம் தெரிவதற்கு முன்பே டில்லியில் அர்த்தால் அனுட்டிக்கப்பட்டு விட்டது. சுவாமி சிரத்தானந்தரும், அக்கீம் அஜ்மல்கான் சாகிபும் வைத்தது சட்டம் டில்லியிலே! சரித்திரம் காணாத முறையில் டில்லி அர்த்தாலை நடத்தி வைத்தது. டில்லி ஜும்மா மசூதியில் பேசும்படி ஆரிய சமாஜியான சுவாமி சிரத்தானந்தரை முஸ்லிம்கள் அழைத்தார்கள். அவரும் போய்ப் பேசினார். அந்த அளவுக்கு டில்லி மாநகரில் இந்து - முஸ்லிம்களிடையில் ஒற்றுமை நிலவியது!

ஒற்றுமை கண்டு பொறாத நிலை

இது பொறாத அதிகார வர்க்கம் டில்லியில் நடந்த ஊர்வல மொன்றைக் கலைக்கத் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியது. சிலர் இறந்தனர்; பலர் காயமுற்றனர். ஆம்; சத்தியாக்கிரகப் போரிலே டில்லியில் இந்து - முஸ்லிம்களின் இரத்தங்கள் ஒன்று கலந்து ஆறாக ஓடியது. முதல் களப் பலியை டில்லி மாநகரம் தந்தது, பாரதப் பெரும் போரிலே! வாழ்க டில்லி!

காந்திஜி சென்னையில் இருந்தபோதுதான் டில்லி நகரில் கள பலியைப் பெற்றது அதிகார வர்க்கம்! சென்னையில் ராஜாஜி, எஸ். சத்தியமூர்த்தி, வ.உ.சி., திரு.வி.க. ஆகியோர் சத்தியாக்கிரகப் பிரதிக்ஞையில் கையொப்பமிட்டவர்களில் முக்கியமானவர் களாவர். சென்னையில் சத்தியாக்கிரக சபையொன்றையும், காந்தியடிகள் நிறுவினார். சென்னையில் சத்தியாக்கிரகத்தை அடிகள் தொடங்கி வைத்துவிட்டாரென்றே சொல்ல வேண்டும்.

மூன்று சகாப்தத்தில் தமிழகத்தின் முதன்மை

விடுதலைப் போரின் மன்னர்கள் சகாப்தத்திற்குத் தோற்றுவாய் செய்த பெருமையை வீரபாண்டிய கட்டபொம்மன் மூலம் தமிழ் நாடு பெற்றது. திலகர் சகாப்தத்தில் வ.உ.சி. மூலம் இந்தியாவுக்கு வழி காட்டிய பெருமையும் தமிழகத்தினுடையதே! 1919-இல் காந்தி சகாப்தத்தைத் தோற்றுவித்த பெருமையும் தமிழகத்திற்கே உரியதாகும்.

சென்னை மாகாணச் சத்தியாக்கிரகக் குழு

அடிகள் தமிழ் நாட்டுத் தலைநகரான சென்னைக்கு வந்த அன்றே திருவல்லிக்கேணி கடற்கரையில் மிகப் பெரிய பொதுக் கூட்டத்தில் பேசினார். 'இந்து' ஆசிரியர் ஏ. கஸ்தூரிரங்க ஐயங்கார் தலைமை வகித்தார்.

காந்திஜி சென்னையிலிருந்தபோது, சென்னை மாகாணத்திற்கெனத் தனியாகச் சத்தியாக்கிரகக் கமிட்டியொன்று நியமிக்கப்பட்டது. இம்மாகாணத் தலைவர்களெல்லாம் ஒருமனப்பட்டு கேட்டுக் கொண்டதற்கிணங்க அடிகளார் அக்கமிட்டியின் தலைவர் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

துணைத் தலைவர்களாக ஓய்வு பெற்ற நீதிபதி டாக்டர் சர்.எஸ். சுப்பிரமணிய ஐயர், சி. விசயராகவாச்சாரியார், டாக்டர் எம்.சி. நஞ்சுண்ட ராவ், டி. பிரகாசம் ஆகியோரும்; செயலாளர்களாக சி. இராசகோபாலாச்சாரி, ஏ. கஸ்தூரிரங்க ஐயங்கார், ஜி. அரிசர்வோத்தம ராவ். சேலம் டி.ஆதிநாராயண செட்டியார் ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

துணைத் தலைவர் பொறுப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட சர்.எஸ். சுப்பிரமணிய ஐயர் அப்பொறுப்பை ஏற்க மறுத்துவிட்டார். காரணம், காந்திஜியின் சத்தியாக்கிரக வேலைத் திட்டத்தை அவர் விரும்பாததுதான்.

காந்திஜியுடன் அவருடைய செயலாளர் மகாதேவ தேசாய், சரோஜினி தேவி, காகா கலேல்கர் ஆகியோரும் சென்னைக்கு வந்திருந்தனர். இவர்கள் அடிகளின் தமிழ் நாட்டுச் சுற்றுலா முழுவதிலும் கலந்து கொண்டனர். தமிழ் நாட்டுத் தலைவர் டி.எஸ்.எஸ். ராசனும் கலந்து கொண்டார்.

தமிழ்நாட்டுச் சுற்றுலாவின்போது நாகைக் கூட்டத்தில் காந்திஜி வெளியிட்ட கருத்துக்கள் வருமாறு:

> ''சத்தியாக்கிரகப் பிரதிக்ஞையில் கையெழுத்திடுமுன் எச்சரிக்கையுடனிடுங்கள். ஆனால், முடிவு செய்து கையெழுத்துப் போட்டு விட்டபின், அதிலிருந்து பிறழாதீர்கள். உறுதிமொழியை நிறைவேற்ற ஆண்டவன் உங்களுக்கு அருள்வானாக! சத்தியாக்கிரக உறுதி மொழி கையெழுத்திட்டவர்களெல்லாம் சத்தியாக்கிரகிகளாகிவிட மாட்டார்கள். அந்த உறுதி மொழிப்படி நடப்பவர்களே சத்தியாக்கிரகிகளாவார்கள்.''

('தமிழ் நாட்டில் காந்தி,' பக். 255)

தமிழினமும் சத்தியாக்கிரகமும்

சத்தியாக்கிரக நெறியில் தமிழ் இனத்தாருக்குள்ள நம்பிக்கையைப் பாராட்டுகையில் காந்திஜி கூறியதாவது.

''இந்தியாவில் வேறு எந்தப் பகுதியிலுமில்லாத அளவுக்கு உயர்ந்த முறையில் தேசியப் பாரம்பர்யத்தை நீங்கள் மிக நன்றாக உணர்ந்திருக்கிறீர்கள். ஆண்டவனிடம் உங்களுக்கு அழியாத நம்பிக்கை இருக்கிறது. உங்களைப் பார்க்கும்போது நம்முடைய மாபெரும் முனிவர்களே எனது நினைவுக்கு வருகின்றனர். இதைக் காட்டிலும் எளிய வாழ்க்கையை நம்முடைய முன்னோர்கள்கூட வாழ்ந்திருக்க மாட்டார்கள் என்று நான் உறுதியாகக் கூற முடியும்.

''இவ்வளவு அழகாக நீங்கள் காத்து வந்துள்ள இவ்வெளிய உருவத்தில் அந்த முனிவர்களின் உள்ளுணர்வைப் புகுத்த வேண்டும். அவ்வாறு மட்டும் நீங்களே செய்துவிட்டால், இந்தியாவில் நீங்கள் சக்தி மிக்கவர்களாகி விடுவீர்கள், இந்நாட்டின் கண்ணியத்தை காப்பாற்றி அதன் எதிர்காலக் கதிமோட்சத்தையும் நிலைநாட்டி விடுவீர்கள். இதற்கு வேண்டிய வலிமையை ஆண்டவன் உங்களுக்கு அருள்வாராக.''

('தமிழ் நாட்டில் காந்தி'' பக்.259)

சென்னைக் கடற்கரையில் காந்திஜி பேசிய முதல் கூட்டத்தில் திரு.ஏ. அரங்கசாமி ஐயங்கார், எஸ். சத்தியமூர்த்தி ஐயர், சரோஜினி தேவி, ராஜாஜி. வ.உ.சி., மதுரை ஜார்ஜ் ஜோஸப் ஆகியோரும் பேசினர். இக் கூட்டத்தில் டாக்டர் கில்பர்ட் ஸ்லேட்டர் என்பவரும் கலந்து கொண்டார். கூட்டத்தில் கலந்து கொண்ட பொது மக்களின் எண்ணிக்கை பதினைந்தாயிரத்துக்கு மேலிருக்கும் என்று பத்திரிகைச் செய்தி கூறுகிறது. சென்னைக் கடற்கரையில் காந்திஜி நிகழ்த்திய சொற்பொழிவு அவரால் எழுதப்பட்டு, அவருடைய செயலர் மகாதேவ தேசாயால் படிக்கப்பட்டது. இதற்குக் காரணம் உரத்த குரலில் பேசுவதற்குச் சக்தியற்ற நிலையில் அவர் இருந்ததுதான். ஆயினும், முதலில் சில வார்த்தைகள் மெல்லிய குரலில், பேசினார். அந்தப் பேச்சைத் தமது வெண்கலக் குரலில் திரு. சத்தியமூர்த்தி ஒலிபரப்பினார்.

கடற்கரைப் பேச்சு

தமது சத்தியாக்கிரக முயற்சியை எதிர்த்து கூட்டறிக்கை விட்ட கல்கத்தா திரேந்திரநாத் பானர்ஜி, திரு.ஜி.ஏ. நடேசன்,

டாக்டர் பெசன்ட், சர்.எஸ். சுப்பிரமணிய ஐயர், வி.எஸ். சீனிவாச சாஸ்திரியார் ஆகியோருக்குத் தம்முடைய கடற்கரைப் பேச்சில் காந்தியடிகள் பதிலளித்தார். அது வருமாறு:

''நம்முடைய நாட்டின் சிறந்த தலைவர்கள் சிலர் இந்த சத்தியாக்கிரக இயக்கம் நாட்டின் நலனிற்கு ஏற்றதல்ல என்று கூறியிருக்கின்றனர். சாஸ்திரியார் நாட்டின் நலனிற்காக எல்லாவற்றையும் தியாகம் செய்தவர். அவருடைய நேர்மைக்கும் நாணயத்திற்கும் ஈடு இணையே இல்லை. நாட்டுப் பற்றில் அவர் யாருக்கும் இளைத்தவரல்ல.

''சத்தியாக்கிரகத்தை எதிர்த்து வெளியான அறிக்கையில் கையொப்பமிட்டிருப்பவர்களுடன் எனக்குப் பிணைப்பு உண்டு. மிகுந்த மன வருத்தத்துடனேயே நான் அவர்களிடமிருந்து கருத்து வேறுபட வேண்டியிருக்கிறது. உற்றார் உறவினரையும் மீறிக்கூடச் சில சமயம் நாம் கட்டுப்பட வேண்டிய ஒரு குரல் - மனச்சாட்சியின் குரல் - இருக்கிறது அல்லவா!

''எதிர்ப்பு அறிக்கையில் கையொப்பமிட்டவர்கள் மீது நான் கொண்டிருந்த மதிப்பு எந்த வகையிலும் குறையவில்லை. சத்ததியாக்கிரகிகளும் அவர்கள் மீது மன வருத்தங் கொள்ளக் கூடாது. அவ்வாறு மன வருத்தங் கொள்வது சத்தியாக்கிரக உணர்வுக்கு விரோதமானதாகும்.

''தலைவர்களுக்குள் உண்மையான கருத்து வேறுபாடு தோன்றுவது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. நண்பர்களுக்குள் வேறுபாடு தோன்றுவது இன்னும் நல்லது. ஏனெனில், நாடு சரியானபடி நடந்து கொள்வதற்கு அது ஒரு எச்சரிக்கையாக இருக்கும்.''

தொழிற்சங்க மேடையிலே...

1919-இல் வேறெந்த மாகாணத்திலுமில்லாத அளவில் தமிழ் நாட்டில் தொழிற் சங்க இயக்கம் வளர்ந்து, வலுப்பெற்றிருந்தது. காந்திஜி சென்னை வந்த சமயத்திலே டிராம்வே தொழிலாளர் வேலை நிறுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் காந்திஜியைக் கண்டு அறிவுரைகள் கோரினர். அவரும் வேலை நிறுத்தம் இறுதி ஆயுதமாக இருக்க வேண்டும் என்றும், வன்முறை கலவாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் ஆலோசனைகள் கூறினார். சென்னையின் மேற்குப் பகுதியில் தொழிலாளர் சங்கக் கூட்டத்தில் காந்திஜி ஆங்கிலத்தில் பேசினார். திரு.பி.பி. வாடியா

தலைமை வகித்தார். தொழிலாளர் கூட்டத்தில் ஆங்கிலத்தில் பேச நேர்ந்துள்ளதற்கு வருந்துவதாக அடிகள் கூறினார்.

இரண்டாவது முறையாக, *20-3-1919*-இல் சென்னை திருவல்லிக்கேணிக் கடற்கரையில் நடந்த பொதுக் கூட்டத்தில் காந்திஜி பேசினார். சேலம் சி. விசயராகவாச்சாரியார் தலைமை வகித்தார். இக்கூட்டத்தில், ''நல்லுணர்வோடு நாம் சத்தியாக் கிரகத்தில் ஈடுபட்டால், ரௌலட் மசோதாக்கள் கைவிடப்படுவது மட்டுமல்லாமல், சத்தியாக்கிரகம் என்பது பலம் பொருந்திய ஆயுதம் என்பதையும் மக்கள் ஒப்புக் கொள்வார்கள்'' என்று காந்தியடிகள் கூறினார்.

வேலைத் திட்டம்

இக்கூட்டத்தில் பெரும் புலவர் ச. சோமசுந்திர பாரதியார் தமிழிலும், சரோஜினி தேவி, டி.வி. கோபாலாச்சாமி முதலியார் ஆகியோர் ஆங்கிலத்திலும் பேசினர். சத்தியாக்கிரகிகள் கடைப்பிடிக்க வேண்டிய கட்டுப்பாடுகளையும் அடிகள் கூறினார். அவை வருமாறு:

''1. எத்தகைய இன்னல்கள் வந்தாலும் சத்தியாக் கிரகத்தை உறுதியாகக் கடைப்பிடிக்க வேண்டும். 2. தன் எதிரிகளை அன்புடன் நேசிக்கத் தொடர்ந்து முயற்சி எடுத்து வரவேண்டும். 3. இன்னல்கள் அரசிடமிருந்து வந்தாலும், தம்முடன் கருத்து வேறுபடுகிறவர்களிடமிருந்து வந்தாலும் சத்தியாக்கிரகியானவர் அதை ஏற்று அனுபவிக்கத் தயாராக இருக்க வேண்டும்.''

வேலைத் திட்டம்

23-3-1919-இல் சென்னை நகரில் முக்கியத் தலைவர்களின் கூட்டத்தை அடிகள் நடத்தினார். ஏப்ரல் 6-இல் மக்கள் கடைப் பிடிக்க வேண்டிய வேலைத் திட்டத்தை அடிகள் இக்கூட்டத்தில் அறிவித்தார். அது வருமாறு:

''ரௌலட் மசோதாக்களுக்கு வைசிராய் அங்கீகாரமளித்த செய்தி வெளியானதற்குப் பிந்திய 2 -ஆவது ஞாயிற்றுக் கிழமையை - அதாவது, ஏப்ரல் 6 -ஆம் தேதியை அவமான நாளாகவும் பிரார்த்தனை நாளாகவும் அனுஷ்டிக்க வேண்டும். இதனைக் கீழ்வரும் மூன்று முறைகளால் நிறைவேற்ற வேண்டும்.

''(1) வயது வந்தோர், முதல் நாள் இரவு உணவு உண்ட நேரத்திலிருந்து இருபத்து நான்கு மணி நேரம் உணவு உண்ணக்கூடாது. சட்ட மறுப்பிற்குத் தயார் செய்வதற்கு அவசியமான ஒரு கட்டுப்பாடாகச் சத்தியாக்கிரகிகளும், தங்கள் மனம் புண்பட்டிருப்பதற்கு அறிகுறியாக மற்றவர்களும் இதை மேற்கொள்ள வேண்டும்.

''(2) பொது மக்களுக்கு இன்றியமையாதவை என்று கருதப்படுபவை தவிர மற்ற அலுவல்களையெல்லாம் அன்று நிறுத்திவிட வேண்டும். மார்க்கெட்டுகளும் மற்ற வணிகநிலையங்களும் மூடப் பெற வேண்டும்.

''(3) அன்று இந்தியா முழுவதிலும் - கிராமங்கள் உள்பட பொதுக்கூட்டங்கள் நடத்த வேண்டும். அக்கூட்டங்களில், இரண்டு ரௌலட் மசோதாக்களையும் கைவிட வேண்டுமென்று வைசிராயைக் கோரும் தீர்மானம் நிறைவேற்றப்படவேண்டும்.''

(**'தமிழ் நாட்டில் காந்தி'-பக். 422**)

'திலகர் பவனம்'

இது, அடிகளாரின் போர்ப் பிரகடனம் எனலாம். காந்திஜி சென்னையில் தங்கி சத்தியாக்கிரகப் போர்ப் பிரகடனத்தை வெளியிட்ட நாளிலே, அவருக்கு முன் விடுதலைப் போரில் ஒரு புரட்சி சகாப்தத்தைத் தோற்றுவித்த லோகமான்ய திலகர் இந்தியாவில் இல்லை. அவர் தம்மைப் பற்றி ஒரு நூலில் அவதூறாக எழுதிய வாலன்டைன் சிரால் என்பவர் மீது தாம் தொடுத்த மானநஷ்ட வழக்கிலே சாட்சியம் கூற லண்டனில் தங்கியிருந்தார். ஆயினும், சத்தியாக்கிரகப் போர்ப் பிரகடன அறிக்கையை தயாரித்தபோது காந்திஜி தங்கியிருந்த இல்லத்தின் பெயர் 'திலகர் பவனம்' ஆகும். இந்த வீட்டில்தான் அப்போது ராஜாஜி குடியிருந்தார். அந்நாளில், இந்திய தேசமே 'திலகர் பவனம்' ஆக இருந்ததென்று சொல்லலாம்.

சத்தியாக்கிரகம் பற்றி அடிகள் விடுத்த அறிக்கையைத் தேசம் முழுவதிலுமுள்ள பத்திரிகைகள் முக்கியத்துவம் தந்து பிரசுரித்தன. திரு. கஸ்தூரிரங்க ஐயங்காரை ஆசிரியராகக் கொண்டிருந்த 'இந்து' ஆங்கில நாளிதழும், திரு.ஏ. அரங்கசாமி ஐயங்காரை ஆசிரியராகக் கொண்டிருந்த 'சுதேசமித்திரன்' தமிழ் நாளிதழும் அதிக முக்கியத்துவம் தந்து பிரசுரித்தன. டாக்டர் பெசன்டம்மையாரின் 'நியூ இந்தியா' பத்திரிகை இரண்டாந்தர

முக்கியத்துவத்தையே தந்தது. திரு.வி. கலியாண சுந்தரனாரை ஆசிரியராகக் கொண்டிருந்த 'தேச பக்தன்' என்ற தமிழ் ஏடு, சத்தியாக்கிரகப் போர் முரசாக ஒலித்ததெனலாம்.

காந்தியடிகள் பேசுவதற்கான கடைசிக் கூட்டமாக *30-3-19*-இல் சென்னைக் கடற்கரையில் ஒரு மாபெரும் பொதுக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால், அடிகள் அவசரமாக விஜயவாடா சென்றதால், கடற்கரைக் கூட்டத்தில் பேசவில்லை. கூட்டத்திற்கு வர இயலாமைக்கு வருந்தியும், சத்தியாக்கிரகத்தைச் சென்னையில் நன்கு நடத்துமாறு ஆலோசனை கூறியும் அடிகள் எழுதியனுப்பியிருந்த கடிதம் திரு. எஸ். சத்தியமூர்த்தி ஐயரால் படிக்கப்பட்டது.

காந்திஜி தமது 13 ஆம் நாள் சுற்றுலாவை முடித்துக் கொண்டு தமிழ் நாட்டிலிருந்து புறப்பட்ட நாளிலேதான் டில்லி நகரம் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போர்க்களமானது.

முன்னேற்பாடுகள்

ஏப்ரல் 6 -இல் துக்க நாள் கொண்டாடச் சென்னை நகரில் பலமான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பொறுப்புகள் பிரித்துக் கொடுக்கப்பட்டன. திருவல்லிக்கேணிக் கடற்கரையில் பொதுக் கூட்டமும், பெரம்பூர், பட்டாளம் ஆகிய பகுதிகளில் தொழிலாளர் கூட்டங்களும் நடத்தத் திட்டமிடப்பட்டது. ராஜாஜி, திரு.வி.க., சஞ்சீவி காமத், வ.உ.சி. ஆகிய தலைவர்கள் ஏப்ரல் 5-ஆம் தேதியே சென்னை நகரின் பல பகுதிகளுக்குச் சென்று சத்தியாக்கிரக ஏற்பாடுகளை மேற்பார்வையிட்டனர். வன்முறை தலைகாட்ட இடமளிக்க வேண்டாமென்று காங்கிரஸ்காரர்களை எச்சரித்து வந்தனர். இதனையடுத்து, அந்த நாள் - ஆம், 'ரௌலட் சட்ட எதிர்ப்பு' என்ற பெயரிலே முதன் முதலாக நாடு தழுவிய முறையில் ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கையில் மக்கள் ஈடுபட்ட ஏப்ரல் ஆறாம் நாள் - மலர்ந்தது!

பாரதியாரின் 'முருகன்' பாட்டு

இராயப்பேட்டையில் ஓர் தேசிய பஜனை ஊர்வலம்! அதனை திரு.வி.க.வும் சஞ்சீவி காமத்தும் முன்னின்று நடத்தினர். ஊர்வலம் இராயப்பேட்டை பாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் அருகில் வந்தபோது அதில் பாரதியாரும் கலந்து வருவதைக் கண்டுவிட்டார் திரு.வி.க. 'சுப்பிரமணிய பாரதியார்

பஜனைக் கோஷ்டியில் எங்கேயோ, எப்படியோ கலந்து வந்தார் என்கிறார் திரு.வி.க.

அந்நிலையில் தமிழ்த் தலைவர் திரு.வி.க. கேட்டுக் கொண்டதன் பேரில் பாரதியார், ‘முருகா, முருகா...’ என்று தாம் இயற்றிய பாடலை பக்திப் பெருக்குடன் பாடினார். அந்நாளில் தேசபக்திக்கும் தெய்வ பக்திக்கும் வேற்றுமை ஏது? பாரதியார் பாடியது பற்றித் திரு.வி.க. வருணிக்கிறார், கேட்போம்:

‘‘தமிழ்ப் பெருமான், ‘முருகா, முருகா...’ என்று பாடத் தொடங்கினார். பாட்டு - தமிழ்ப் பாட்டு - தேனினும் இனிய முருகன் பாட்டு! படத்திலுள்ள ஓவிய உருவம் வீறுடன் வெளி வருவது போன்ற தோற்றம் உண்டாயிற்று. அன்பர் மெய்கள் அரும்பின; விதிர் விதிர்த்தன; சிலர் மயங்கினர்; சிலர் விழுந்தனர்; சிலர் கண்ணீர் உகுத்துத் தம்மை மறந்தனர்; எல்லோரும் ஆனந்தப் பரவசமாயினர். பாரதியார் சித்திரப் பதுமை ஆனார். பாட்டுக்கும் ஓவியத்துக்கும் உள்ள ஒருமைப்பாட்டை யான் கண்ணாரக் கண்டேன்.’’

(திரு.வி.க.வின் ‘வாழ்க்கைக் குறிப்புகள்’ பக்.307)

பாரதியார் பாடி வழிபட்ட முருகன் தமிழ்த் தெய்வமல்லவா! தமிழ் வீர மறவர்கள் போருக்குச் செல்லுங்கால், ‘வீரவேல்; வெற்றி வேல்’ என்று கோஷமிட்டு, முருகனுடைய வேலை வழிபடுவது பண்டைய நாளில் வழக்கம். அந்த மரபையொட்டித் தமிழ்த் தலைவர் திரு.வி.க. தலைமையில் புறப்பட்ட போர்ப் படையின் மத்தியிலே ‘முருகா - முருகா - முருகா’ என்று பாடினார் பாரதியார். அந்தப் பாடலிலே,

‘‘அடியார் பலரிங் குளரே
அவரை விடுவித் தருள்வாய்
முடியா மறையின் முடிவே! அசுரர்
முடிவே கருதும் வடிவே லவனே!’’

என்றுள்ள வரிகள் இந்திய விடுதலைக்கும் பொருந்துவதுதானே! ‘அடியார்’ என்னுஞ் சொல் இந்திய மக்களையும், ‘அசுரர்’ என்னுஞ் சொல் ஆங்கிலேயரையும் குறிப்பதாகக் கொண்டால், முருக பக்திப் பாடலே தேசபக்திப் பாடலாகவும் மாறி விடுகிறதன்றோ! பாடியவர் தேசபக்தரல்லவா?

ஆறு பல, கடல் ஒன்று!

சென்னையில் பல பேட்டைகளிலிருந்து புறப்பட்ட ஊர்வலங்களெல்லாம் திருவல்லிக்கேணிக் கடற்கரையில் நடந்த

பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டன. கடற்கரைக் கூட்டத்திலே ராஜாஜி, கஸ்தூரிரங்க ஐயங்கார், எஸ். சத்தியமூர்த்தி, ஜார்ஜ் ஜோசப் ஆகியோர் பேசினர்.

கடற்கரையில் தொழிலாளருக்கெனத் தனியாக ஒரு கூட்டம் நடத்தப் பெற்றது. அதிலே தொழிற்சங்க இயக்கத் தலைவர்களான வ.உ.சி., திரு.வி.க., பி.பி. வாடியா, சிதம்பரம் என். தண்டபாணிப்பிள்ளை ஆகியோர் பேசினர்.

இப்படியாக, தமிழ்நாடு, முருக வழிபாட்டோடு - தேசியக் கவியின் பாடலோடு - அதையும் அவரே பாடக்கேட்டு, சத்தியாக்கிரகப் போர் தொடக்க நாளைக் கொண்டாடியது.

'சத்தியாக்கிரகி'

'சத்தியாக்கிரகி' என்னும் பெயரில் ஏப்ரல் ஆறிலாவது அதற்கடுத்த நாட்களிலாவது ஒரு பத்திரிகையை வெளியிட வேண்டுமென்பது காந்திஜியின் கட்டளை! ஆம்; அரசிடம் அனுமதி பெறாமலே பத்திரிகைப் பதிவுச் சட்டத்தை மீறி வெளியிட வேண்டுமென்பது சத்தியாக்கிரகப் போர்த் திட்டங்களில் ஒன்றாகும். இதன்படி, ஏப்ரல் 7-இல் காந்திஜியை ஆசிரியராகக் கொண்டு பம்பாய் நகரில் ஒரு பத்திரிகை வெளிவந்தது. அதனை, காந்தியடிகளே வெளியிட்டு சட்டத்தை மீறினார்.

ஏப்ரல் 14-இல் சென்னை நகரில் 'சத்தியாக்கிரகி' வெளியிடப் பட்டது. அதன் ஆசிரியர்மார்: டி.வி. வேங்கடராம ஐயர், ஜார்ஜ் ஜோசப், கொண்டா வேங்கடப்பையா. வெளியிடுவோர்: எஸ். கஸ்தூரிரங்க ஐயங்கார். 'சத்தியாக்கிரகி' பத்திரிகை வெளியிட்டதற்காக எங்கும் யாரும் கைது செய்யப்படவில்லை.

அரசால் தடைசெய்யப்பட்ட நூல்களை விற்றுச்சட்டத்தை மீற வேண்டுமென்பதும் சத்தியாக்கிரகப் போர்த் திட்டங்களில் ஒன்றாகும். இதன்படி, காந்திஜியால் எழுதப்பட்ட 'சர்வோதயம்', 'இந்திய சுயராஜ்யம்' என்னும் நூல்களையும், வீர சவர்க்காரால் 1857 புரட்சி பற்றி எழுதப்பட்ட 'எரிமலை' என்னும் நூலையும் சத்தியாக்கிரகிகள் நாடெங்கும் விற்பனை செய்தனர். இந்த நூல்கள் அரசால் தடை செய்யப்பட்டிருந்தன. தமிழ்நாட்டிலும் விற்கப் பட்டன. ஆனால், யாரும் கைது செய்யப்படவில்லை.

ஏப்ரல் 6-இல் பம்பாயில் சத்தியாக்கிரக நாளைக் கொண்டாடிய பின் காந்திஜி டில்லிக்கும் பஞ்சாபுக்கும் செல்ல

முயன்றார். ஆனால், அவர் பம்பாயைவிட்டு வெளியேறக் கூடாதென்று பம்பாய் மாநில அரசும், பஞ்சாபுக்குள் நுழையக் கூடாதென்று அந்த மாநில அரசும் தடை ஆணை பிறப்பித்தன. டில்லி எல்லைக்குள் வரக் கூடாதென்றும் தடை பிறந்தது.

வடபுலம் அமர்க்களமானது!

அடிகள் தடையை மீறி டில்லிக்கும் பஞ்சாபுக்கும் செல்லும் திட்டத்துடன் பம்பாயிலிருந்து ஏப்ரல் 10-இல் புறப்பட்டார். ஆனால், அரசு அவரை வழியில் நிறுத்திக் கைது செய்தது. அவர் கைதியான செய்தி பம்பாய் நகருக்கு எட்டியதும், அந்நகரம் போர்க்களமானது! மக்கள் வீராவேசங் கொண்டு, சட்டத்தை மதியாது வன்முறையிலீடுபட்டனர். இதனால், அரசு காந்தியடிகளைத் திரும்பவும் பம்பாய்க்குக் கொண்டு சென்று, அங்கு அவரை விடுதலை செய்தது. அடிகள், ஆவேசங்கொண்டு கலகம் செய்யும் மக்கள் மத்தியில் சென்று அவர்களுக்கு அறிவுரை கூறி அமைதியை நிலை நாட்டினார்.

ஜாலியன் வாலாபாக் கொடுமை

இந்நிலையில் டெல்லி, அமிர்தசரஸ், வீரமகம், ஆமதாபாத், கல்கத்தா ஆகிய நகரங்கள் அமர்க்களமாயின. அமிர்தசரஸ் நகரில் ஜாலியன் வாலாபாக்கில் அமைதியாக நடந்துகொண்டிருந்த ஒரு பொதுக்கூட்டத்தினைப் பழிவாங்க எண்ணி, ஜெனரல் டயர் என்ற வெள்ளைத் தளபதி பீரங்கிப் பிரயோகம் செய்தான். ஒரு முறையல்ல; பன்முறை! அதன்பின், நகரம் முழுவதும் ராணுவப் பிரகடனம் செய்தான். நகரமக்களைப் மிருகங்களைப் போல வேட்டையாடியது ராணுவம். அத்துடன் நில்லாமல் மக்களிலே பலரை வீதிகளிலே மார்பால் ஊர்ந்து செல்லும்படியும் செய்தது. பெண்கள் ராணுவத்தாரால் கற்பழிக்கப்பட்டனர். இவ்வளவுக்கும் துணை புரிந்தார் பாஞ்சாலத் துணை ஆளுநரான சர் மைக்கேல் ஓட்வியர்.

கொடியவனான டயரின் பீரங்கிப் பிரயோகம் 10 நிமிட நேர அளவில் நிகழ்ந்தது. ஆனால், அதற்குப்பின் அமிர்தசரஸ் நகரில் இராணுவ அக்கிரமங்கள் தொடர்ந்து பல நாட்கள் நிகழ்ந்தன. வெளியுலகிற்குச் செய்திகள் கிடைக்காதவாறு தடை செய்யப்பட்டன.

அமிர்தசரஸ் அடக்குமுறைக்குப் பலியான ஆண்கள் பெண்கள் - குழந்தைகள் எண்ணிக்கை 379. குண்டுக் காயம் பட்டவர்கள் 1337 பேர். பீரங்கிப் பிரயோகத்திற்குப்பின்

ஜாலியன் வாலாபாக் திடலுக்குள் செல்ல யாரும் அனுமதிக்கப்படவில்லை. காயமடைந்தவர்களுக்குச் சிகிச்சை தரவும் அரசு தரப்பில் முயற்சி எடுக்கப்படவில்லை. அவர்கள் இரவு முழுவதும் அங்கேயே கிடந்தனர்.

பஞ்சாபில் மற்றொரு நகரில் விமானங்களிலிருந்து குண்டுகளை மக்கள் மீது பொழிந்தது ராணுவம். சிலர் மாண்டனர்; பலர் படுகாயமுற்றனர்.

அமிர்தசரசில் கலகம் மூளக் காரணம், டாக்டர் சத்தியபால், டாக்டர் கிச்சுலு என்ற இரு பெருந் தலைவர்கள் தலைமையில் அமைதியாகச் சென்று கொண்டிருந்த ஊர்வலத்தைப் போலீசார் தடுத்து நிறுத்தி, தலைவர்களைக் கைது செய்ததாகும்.

ஏப்ரல் 6-ஆம் தேதி ஒரு நாளளவில் நடத்தத் திட்டமிடப்பட்ட அமைதியான சத்தியாக்கிரகப் போர், அரசு கடைப்பிடித்த அடக்குமுறையால் ஏப்ரல் 13 வரை தொடர்ந்தது. இதன் நினைவாக, ஆண்டுதோறும் ஏப்ரல் 6 முதல் 13 வரை 'தேசிய வாரம்' கொண்டாடப்பட்டது, நாடு விடுதலை பெறும்வரை!

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை சத்தியாக்கிரக நாள் அமைதியாகவே நடைபெற்றது. அன்று, போராட்டக் கிளர்ச்சிகள் தலைவர்கள் திட்டமிட்டபடியே அமைதியாக நடந்தன. ஆயினும், வடபுலத்தில் நடைபெற்ற கலவரம் - குறிப்பாக பாஞ்சாலத்தில் நடந்த படுகொலை தமிழக மக்களுக்கு அதிர்ச்சியைத் தந்தது.

சத்தியாக்கிரக நடவடிக்கைகள் அனைத்துமே நிறுத்தப்பட வேண்டுமென்று 18-4-19-இல் காந்திஜி அறிக்கை விடுத்தார். பின் நாடு அமைதி பெற்றது.

'பஞ்சாப் படுகொலை'ப் பாட்டு!

ஜாலியன் வாலாபாக்கில் நடந்த படுகொலை, 'பஞ்சாப் படுகொலை' எனப் பெயர் பெற்றது. தமிழ்நாட்டிலே கவிதைகள் பிறந்தன. ஆம்; பஞ்சாப் படுகொலையை வருணித்து! 'பஞ்சாப் படுகொலை, பாரிற் கொடியது பழிபாவ முடையது' என்ற பாடல் நாடக மேடை தோறும் பாடப் பெற்றது. அதற்குத் தடை விதித்தது அரசு. தடையை மீறியும் பாடித் தொல்லையுற்றனர் நடிகமணிகள். தமிழ்நாடெங்கனும் பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்டு, பஞ்சாப் படுகொலை கண்டிக்கப்பட்டது. வைசிராய் லார்டு செம்ஸ் போர்டைத் திரும்ப அழைக்க வேண்டுமென்று இந்தியா மந்திரிக்குக் கோரிக்கை விடும் தீர்மானங்கள் அக்கூட்டங்களில் நிறைவேற்றப்பட்டன.

ரௌலட் சட்டத்தால் தமிழ்நாட்டிற்குப் பாதகம் ஏற்படச் சந்தர்ப்பமில்லாமலிருந்தும், தேசாபிமானம் காரணமாக வடபுலத்துப் பயங்கரவாதிகளை ஒடுக்கும் கொடிய சட்டத்தை எதிர்த்துத் தமிழ்மக்களும் போராடினர்.

காங்கிரஸ் குழுவின் அறிக்கை

பஞ்சாபில் பிரிட்டிஷ் இராணுவத்தார் மக்களுக்கிழைத்த கொடுமைகளைப் பற்றி விசாரணை நடத்தி அறிக்கை தர இந்திய தேசிய காங்கிரஸ் ஒரு தனிக் குழுவை நியமித்தது. பண்டித மோதிலால் நேரு இதன் தலைவராக இருந்தார். காந்திஜி, எம். ஆர். ஜெயகர், அப்பாஸ் தயாப்ஜி, சி.ஆர். தாஸ் ஆகியோர் உறுப்பினராவர். தமிழரான திரு.கே. சந்தானம் இக்குழுவின் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

14-11-19-இல் நியமிக்கப்பட்ட இக்குழு 20-2-20-இல் தனது அறிக்கையைத் தந்தது. காந்திஜி உள்ளிட்ட இக்குழுவினர், பஞ்சாப் மாநிலத்தில் பிரிட்டிஷ் ராணுவம் கொடுமை புரிந்த ஊர்தோறும் சென்று விசாரணை நடத்தித் தகவல்கள் சேகரித்தனர். இறுதியாகக் குழுவினர் தந்த அறிக்கையில் காணப்படும் தகவல்களில் முக்கியமானவற்றின் தொகுப்பு வருமாறு:

''பஞ்சாப் காங்கிரஸ் தலைவர்களான டாக்டர் சைபுதீன் கிச்சுலு, டாக்டர் சத்தியபால் என்ற இருவரும் ஒரு நாள் மாவட்ட நீதிபதியால் அழைக்கப்பட்டு, பின்னர்ப் போன இடம் தெரியாமல் கொண்டு போகப்பட்டனர். இவர்கள் மாயமாக மறைந்த செய்தி பஞ்சாப் மாநிலமெங்கும் பரவியது. மக்கள் தங்கள் தலைவர்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ள இடத்தை அறிவிக்கமாறு கேட்க, மாவட்ட நீதிபதி இருக்குமிடத்தை நோக்கிச் சென்றனர். வழியில் அவர்கள் இராணுவத்தாரால் மறிக்கப்பட்டனர். இதனால் கலவரம் ஏற்பட்டது. துருப்புகள் சுட்டன. மக்களில் ஓரிருவர் இறந்தனர்.

''வெறி பிடித்த மக்கள் கூட்டம் திரும்பி வந்து அமிர்தசரஸ் நகருக்கள் புகுந்து நேஷனல் பாங்க் கட்டிடத்தைக் கொளுத்தி அதன் ஐரோப்பிய மானேஜரைக் கொன்றது. ஐந்து ஐரோப்பியர்கள் கொல்லப்பட்டனர். நிலைமை மோசமாகவே அதிகாரிகள் அமிர்தசரஸ் நகரை இராணுவத்திடம் ஒப்படைத்தனர். குஜரன்வாலா, கஸுர் என்ற இடங்களில் மக்கள் கலகஞ் செய்து சொத்துக்களுக்குப் பெரும் சேதம் விளைவித்தனர். குஜரன் வாலாவில் முசாபரி பங்களா, தந்தி அலுவலகம், ரயில்வே நிலையம் ஆகியவை தீக்கிரையாக்கப்பட்டன. லாகூர் நகரிலும்

கலகம் நிகழ்ந்தது. அமிர்தசரசிலும் லாகூரிலும் கலகம் கட்டுக் கடங்காத நிலையில் வலுத்துவிட்டது.

''அமிர்தசரஸ் ஜாலியன் வாலாபாக் திடலில் ஒரு மாபெரும் கூட்டத்தை நடத்த பொதுமக்கள் முயன்றனர். அந்தத் திடல் நாற்புறங்களும் உயர்ந்த மதில்களால் சூழப்பட்டிருந்தது. அதற்குள்ளே செல்ல ஒரே ஒரு குறுகிய பாதைதான் உண்டு அங்கும் பெண்களும் ஆண்களுமாக இருபதாயிரம் பேர் குழுமியிருந்தனர். நகரம் முழுவதும் இராணுவச் சட்டத்தின் கீழ் இருப்பது இவர்களுக்குத் தெரியாது.

''இந்நிலையில் ஜெனரல் டயர் என்ற ராணுவ அதிகாரி 100 வெள்ளை சோல்ஜர்களையும், 50 இந்தியச் சிப்பாய்களையும் ஜாலியன்வாலாபாக் திடலுக்கு இட்டுச் சென்று யாதொரு எச்சரிக்கையும் தராமல் கூட்டத்தை நோக்கிச் சுடுமாறு உத்தரவிட்டார். கூட்டத்தினரில் சுமார் 400 பேர் உயிரிழந்தனர்; சுமார் 2000 பேர் படுகாய முற்றனர். படுகாயமுற்றுக் கீழே விழுந்து துடிப்பவர்கள் அன்று இரவு முழுவதும் யாதொரு சிகிச்சையுமின்றி திடலிலேயே கிடந்தனர்.

''ஜெனரல் டயர் நிர்வாகத்தில் அமிர்தசரஸ் வாசிகள் தீயிலிட்ட புழுப்போலத் துடித்தனர். தண்ணீர் வசதியும் மின்சார வசதியும் மறுக்கப்பட்டன.

''குற்றவாளிகளாகக் கருதப்பட்டவர்கள் சவுக்கடிக்கு ஆளாயினர். பள்ளிகளின் - கல்லூரிகளின் மாணவர்கள்கூட நடுவீதிகளிலே நிறுத்தப்பட்டு டஜன் அடி அடிக்கப்பட்டனர். மக்கள் வீதிகளிலே மார்பால் ஊர்ந்து செல்ல வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்பட்டனர்.

''எட்டு மணிக்கு மேல் வீதிகளில் நடப்போர் சுடப்படுவர்; சவுக்கடி பெறுவர்; சிறையில் அடைபடுவர்'' என உத்தரவுகள் பிறந்தன. இந்தியர்களுக்குச் சொந்தமான மோட்டார் வண்டிகள் சைகிள்கள் போலீசாரிடம் ஒப்புவிக்கப்பட வேண்டுமென்றும் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன.

''கிராம அதிகாரி ஒருவர் பொது இடத்தில் ஒரு மரத்தில் கட்டி வைத்து, மிருகத்தனமாக அடிக்கபட்டார்.

''பஞ்சாபில் மக்களை ஒடுக்க ஆகாய விமானங்களும் உபயோகிக்கப்பட்டன. ஜனக்கூட்டம் எங்கு தென்பட்டாலும் அதனை நோக்கிச் சுட்டார் ஒரு ராணுவ விமானி. வயல் பிரதேசத்தில் கூட்டம் கூட்டமாக விவசாயிகளைக் கண்ட போதெல்லாம் இந்த ஆகாய விமானி துப்பாக்கியை மூச்சு

விடாமல் அவர்கள்மீது பிரயோகித்துப் பிணங்களைக் குவித்தார். இவ்விமானி ஒரு கிராமத்திலுள்ள அனைவரையுமே சுட்டு அழித்தார்.

''இந்தியர்கள் பிரிட்டிஷ் அதிகாரிகளை கண்டவுடன் சலாமிட வேண்டும். சவாரி செய்து கொண்டிருக்கும் வாகனங் களிலிருந்து கீழே இறங்க வேண்டும். விரித்த குடையை மடக்க வேண்டும். இப்படியெல்லாம் சட்டம் பிறப்பித்த 'பெருமை' ராணுவ அதிகாரியான ஓபிராய்னைச் சாரும்.

''வீதிகளில் செல்வோர் கைது செய்யப்பட்டு, சங்கிலிகளால் பிணைத்துக் கட்டப்பட்டு இழுத்துச் செல்லப்பட்டார்கள். பெரிய பணக்காரர்களும், தருமவான்களும், வயோதிகர்களும்கூட இந்தத் துன்பங்களை அனுபவித்தனர்.

''இராணுவ அதிகாரிகள் நியமித்த விசாரணைக் கமிஷனில் 298 பேர் மீது கலக சம்பந்தமாகக் குற்றங்கள் சாட்டப்பட்டு, 218 பேர் தண்டிக்கப்பட்டனர். இவர்களில் 51 பேருக்கு மரண தண்டனையும் 46 பேருக்குத் தீவாந்தரத் தண்டனையும் அளிக்கப் பட்டன. மற்றும்; பல நூற்றுக்கணக்கானவர்கள் பல்வேறு தண்டனைகளைப் பெற்றனர்.''

நாடெங்கும் கண்டனம்!

ரௌலட் சட்டத்தை எதிர்த்து நடந்த சத்தியாக்கிரக இயக்கத்தை ஒடுக்க பஞ்சாப் முழுவதிலுமே தொடர்ந்து பல நாட்கள் இராணுவ ஆட்சி நடைபெற்றதை ஆதரித்தும் எதிர்த்தும் அறிக்கைகள் வெளியாயின. பஞ்சாபின் துணை ஆளுநர் சர். மைக்கேல் ஓட்வியர், ''ஜெனரல் டயரின் நடவடிக்கைகள் அனைத்தும் எனக்கு உடன்பாடானவையே'' என்று அறிக்கை விடுத்தார். மேலும் அவர், ''ஏப்ரல் 6-ஆம் தேதியன்றும், அதற்குப் பின்னும் நாட்டில் நடந்த அராஜகங்கள் அனைத்திற்கும் காந்திஜியே பொறுப்பேற்க வேண்டும்'' என்றும் கூறினார்.

அரசியல் வாழ்வில் தேய்பிறையாகிக் கொண்டிருந்த மிதவாதிகளும் காந்திஜியைக் கண்டித்து அறிக்கை விட்டனர். இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையின் 'மாஜி'த் தலைவர்களான பம்பாய் சர். தின்ஷா வாச்சாவும், சென்னை டாக்டர் பெசன்ட் அம்மையாரும்கூட, ''காந்திஜியின் தூண்டுதலால் நாட்டில் ஏற்பட்ட வன்முறைகளே இராணுவத்தார் மேற்கொண்ட கடுமையான நடவடிக்கைகளுக்குக் காரணம் என்றனர்.

'கல்மாரிக்குப் பதில் குண்டுமாரி!'

''மூர்க்கமான ஒரு கூட்டம் துருப்புகளைக் கற்களைக் கொண்டு தாக்கினால், அவர்கள் நாலுமுறை சுழல் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதில் என்ன தப்பு?'' என்று கேட்டார் டாக்டர் அன்னிபெசன்ட். இதிலிருந்துதான் 'கல்மாரிக்குப் பதில் குண்டுமாரி' என்ற மொழி பிறந்தது. பெசன்ட் ஆங்கில பழமொழிப் பட்டியலிலே ஒரு புதிய மொழியைச் சேர்த்து விட்டார்.

1916-இல் இந்தியாவுக்குச் சுயாட்சி கோரும் இயக்கத்தைத் தோற்றுவித்த டாக்டர் பெசன்டம்மையார், ஓராண்டுக்குப் பின், பஞ்சாபில் இராணுவத்தார் இழைத்த படுகொலைகளை நியாயப்படுத்தி அறிக்கைகளை விடுமளவுக்கு 'மிதவாதி' யாகி விட்டார். இது, அம்மையார் செய்துகொண்ட 'அரசியல் தற்கொலை' யாகி விட்டது.

பஞ்சாப் மாநிலத்தில் அமிர்தசரஸ், லாகூர், குஜரன்வாலா, கசூர் ஆகிய நகரங்களிலும் குஜராத்தில் அகமதாபாத், வீரமகம், நாதியாத் ஆகிய நகரங்களிலும்; வங்கத்தின் தலைநகரான கல்கத்தாவிலும் நடைபெற்ற கலவரங்கள் காந்தியடிகளை அதிர்ச்சியடையச் செய்தன. அவர் இதை விரும்பவில்லை; எதிர்பார்க்கவுமில்லை. அதனாற்றான், சத்தியாக்கிரக நடவடிக்கைகளை அடியோடு கைவிடுமாறு தேச மக்களுக்கு அவர் வேண்டுகோள் விடுத்தார்.

ஏப்ரல் 6-ஆம் தேதிக்கென நிர்ணயித்த - கடையடைப்பு - வேலை நிறுத்தம் - 24 மணிநேர உண்ணாவிரதம் ஆகிய நடவடிக்கைகளையடுத்து, சட்ட மறுப்புப் போராட்டத்தைத் தொடங்கவும் காந்திஜி திட்டமிட்டிருந்தார். இது, அவர் வகுத்தளித்த சத்தியாக்கிரக உறுதி மொழியிலேயே அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், வன்முறை தோன்றியதன் காரணமாக, சட்ட மறுப்பைத் தொடங்க இது நேரமல்லவென்று கருதி அதனைக் கைவிட்டு விட்டதாக அடிகள் அறிவித்தார். ஆயினும், அவரே எதிர்பாராத அளவில் ஏப்ரல் 6-ஆம் தேதி அவர் நடத்திய ரௌலட் மசோதா எதிர்ப்புப் போர் மகத்தான வெற்றியைத் தந்து விட்டது.

வைசிராயின் தோல்வி

ரௌலட் மசோதாக்கள் பயங்கரப் புரட்சியாளரை ஒடுக்கவே தயாரிக்கப்பட்டவை யாதலால், அதற்கு மற்றவர்களிடமிருந்து - குறிப்பாக, சட்டத்தையும் ஒழுங்கையும் காக்க

விரும்புவோரிடமிருந்து எதிர்ப்பு ஏற்படாதென்று வைசிராய் எதிர்பார்த்திருக்க வேண்டும். எதிர்ப்பு வந்தாலும், அறிக்கைகள், பொதுக் கூட்ட தீர்மானங்கள் என்ற அளவோடுதான் இருக்கு மென்றும் வைசிராய் கற்பனை செய்து கொண்டிருக்க வேண்டும்.

பொதுவாக, பயங்கர இயக்கம் வங்காளத்திலும் பஞ்சாபிலும் மட்டுமே இருந்து வந்ததால், அதனை ஒடுக்க எடுக்கும் நடவடிக்கைக்கு தேசம் முழுவதிலுமிருந்து எதிர்ப்பு ஏற்படா தென்றும் வைசிராய் கருதியிருக்க வேண்டும். பயங்கரவாதிகளைத் தனிமைப்படுத்தி அழித்தொழிக்க அரசு விரும்பியது. ஆனால், அரசு எதிர்பார்த்ததற்கு மாறாக, காந்தியடிகள் பொறுப்பேற்று, ரௌலட் சட்ட மசோதாக்களை எதிர்த்துத் தேசமெங்கணும் மகத்தான ஒரு போராட்டத்தையே தோற்றுவித்து விட்டார்.

தமிழ் நாட்டில் தொடங்கிய சத்தியாக்கிரக முயற்சியானது தேசம் முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்டுவிட்டது. காந்திஜி மக்களிடமிருந்து தோன்றும் வன்முறையை எதிர்ப்பது போல, அரசிடமிருந்து மக்களுடைய உரிமைகளை ஒடுக்கத் தோன்றும் வன்முறைகளையும் எதிர்க்கும் உணர்ச்சியுடையரென்பதை அதுவரை பிரிட்டிஷ் அரசு புரிந்து கொண்டிருக்கவில்லை இதிலே காந்திஜியின் போக்கு அரசுக்கு ஏமாற்றத்தை அளிப்பதாகவே இருந்தது.

வன்முறைக்கு எதிரிதான்; ஆனால்...

காந்தியடிகள் விடுதலைப் போராட்ட காலம் முழுவதிலும் வன்முறையைக் கட்டோடு எதிர்த்து வந்தாரென்றாலும், வன்முறையாளர்களை ஈவிரக்கமின்றி ஒடுக்கும் மிருகத்தனமான அடக்குமுறையை அவர் என்றும் ஆதரித்ததேயில்லை. ஆம்; பயங்கரப் புரட்சியாளர்களை காந்திஜி அன்னிய அரசுக்குக் காட்டிக் கொடுத்ததே இல்லை. அவருடைய இந்த நடைமுறை முதன்முதலாக வெளிப்பட்டது ரௌலட் மசோதா எதிர்ப்பின் போதுதான் என்று சொல்ல வேண்டும்.

ரௌலட் மசோதாக்களுக்கு எதிரான ஒரு கிளர்ச்சியைக் காந்தியடிகள் தொடங்கியதிலிருந்து, அவர் வெற்றிக்குமேல் வெற்றியைக் கண்டுவந்தார். முதல் வெற்றி, ரௌலட் கமிட்டியின் பரிந்துரைப்படி தயாரிக்கப்பட்ட இரண்டு மசோதாக்களில் முதல் மசோதாவை டில்லி சட்டசபையில் பிரேரேபித்ததோடு அரசு

அதனைக் கைவிட்டதாகும். ஆம், பிரசவத்தின்போதே செத்து விட்டது, இரண்டு ரௌலட் மசோதாக்களில் ஒன்று.

இரண்டாவது மசோதாவின் மீது சட்டசபையில் வாக்கெடுக்கப்பட்டபோது, ஆதரவாக 35 பேரும், எதிராக 22 பேரும் வாக்களித்தனர். எதிர்த்து வாக்களித்த அவ்வளவு பேரும் இந்தியர்கள். ஆதரித்து வாக்களித்தவர்களில் ஒருவர்தான் இந்தியர். அவர், வைசிராய் நிர்வாக சபையின் உறுப்பினராக இருந்த சர். சங்கரன் நாயராவார். மற்றவர்கள் அவ்வளவு பேரும் - அதாவது, அரசுக்கு ஆதரவாக வாக்களித்த 34 பேரும் உத்தியோகச் சார்புடைய வெள்ளையராவர்.

இது, காந்தியடிகளின் எதிர்ப்புக்குக் கிடைத்த மற்றொரு மகத்தான வெற்றியாகும். சட்டசபை இந்திய உறுப்பினர்களிலே வைசிராயால் நியமனம் பெற்றவர்கள் கூட அரசுக்கு எதிராக வாக்களித்தனர். அந்த அளவுக்கு இந்திய அரசியல்வாதி களிடையே ஒற்றுமையை உருவாக்கிவிட்டது காந்தியடிகள் தோற்றுவித்த ரௌலட் மசோதா எதிர்ப்பியக்கம்.

வெற்றிக்கு மேல் வெற்றி!

மற்றொரு வியப்புக்குரிய செய்தியென்னவென்றால் 'ரௌலட் மசோதா நெ.2' சட்ட சபையில் நிறைவேறியதும், முஸ்லிம் லீக் தலைவர் திரு.எம்.ஏ. ஜின்னா, பண்டித மதன் மோகன் மாளவியா, ஜனாப் பஸ்லுக் ஹக் ஆகிய மூவரும் இந்திய சட்ட சபை உறுப்பினர் பதவியிலிருந்து விலகிக் கொண்டதாகும். ரௌலட் மசோதாவைச் சட்டமாக்குவதில் அரசு காட்டிய பிடிவாதத்தைக் கண்டித்தே இவர்கள் பதவி துறந்தனர்.

இதனையடுத்து நடந்த மற்றொரு அதிசய நிகழ்ச்சி என்னவென்றால், பஞ்சாப் படுகொலைக்குக் காரணமான இராணுவ அதிகாரிகளைக் காப்பாற்ற இந்திய அரசு பிறப்பித்த ஒரு சட்டத்தைக் கண்டிக்கும் வகையில் சர். சங்கரன் நாயர் அவர்கள் வைசிராய் நிர்வாக சபை உறுப்பினர் பதவியைத் துறந்ததாகும்.

பஞ்சாப் அதிக்கிரமங்கள் பற்றி விசாரிக்க வைசிராய் ஹன்டர் என்ற வெள்ளையர் தலைமையில் ஒரு கமிட்டியை நியமித்தார். அதன் உறுப்பினரில் நால்வர் வெள்ளையர்; மூவர் இந்தியர். இக்கமிட்டியின் பரிந்துரை ஒருமனப்பட்டதாக இல்லை. ஐரோப்பிய உறுப்பினர் நால்வரும் ஒரு பரிந்துரை யையும் இந்திய உறுப்பினர் மூவரும் தனியாக இன்னொரு பரிந்துரையையும் தந்தனர். முன்னது 'பெரும்பான்மையினர்

அறிக்கை' என்றும், பின்னது 'சிறுபான்மையினர் அறிக்கை' என்றும் பெயர் பெற்றன. இதுவும் வெள்ளையருக்கு எதிராக இந்தியரிடையில் ஏற்பட்டு வந்த ஒற்றுமையைக் குறிப்பதாகும். இவ்வளவும் காந்தியடிகளின் சத்தியாக்கிரக இயக்கத்திற்கு - அதுவும், ஒரே ஒரு நாள் நடவடிக்கைக்குக் கிடைத்த மகத்தான வெற்றிகளாகும்.

1911-இல் டில்லியில் பிரிட்டிஷ் ஐந்தாம் ஜார்ஜ் அரசருக்கு முடிசூட்டுவிழா நடந்தபோது, அந்த விழாவிலே கலந்துகொண்டு அரசருக்கு வாழ்த்துப் பாடிய கவியரசர் ரவீந்திரநாத் தாகூர், பஞ்சாப் படுகொலையைக் கண்டிக்கு முகத்தான் 'சர்' பட்டத்தைத் துறந்தார். இத்தனைக்கும் மேலாக இந்திய தேசிய காங்கிரசானது மிதவாதக் கூட்டத்தாரிடமிருந்து விடுதலை பெறுவதற்கும் சத்தியாக்கிரகக் கிளர்ச்சியானது எதிர்பாராத வகையில் உதவி புரிந்துவிட்டது.

புதை குழிக்கு ரௌலட் சட்டம்!

ரௌலட் எதிர்ப்புக் கிளர்ச்சியிலே மற்றொரு மாபெரும் வெற்றியை மகாத்மாஜிக்குத் தரக் காலம் காத்துக் கிடந்ததையும் இங்குக் குறிப்பிட வேண்டும். மூன்றாண்டுக் கால அளவில் அமுல் நடத்துவதற்கென்று நிறைவேற்றப்பட்ட ரௌலட் சட்டமானது அந்தக்காலகட்டத்துக்குள் ஒரு முறை கூட அமுல் நடத்தப்பட வில்லை.

இந்திய தேசிய இயக்கமானது பதினைந்து ஆண்டுக்கால அளவில் இரண்டு பெரிய தோல்வியை இந்திய அரசுக்கு அளித்தது. ஒன்று, வங்கப் பிரிவினை; மற்றொன்று, ரௌலட் சட்டம். 1905-இல் அமுல் நடத்தப்பட்ட வங்கப் பிரிவினை 1912-இல் அடியோடு கைவிடப்பட்டது. 1919-இல் நிறை வேற்றப்பட்ட ரௌலட் சட்டம் ஒரு முறை கூட அமுல் நடத்தப்படாமல் புதை குழிக்குப் போனது.

பிரிட்டிஷாரைப் பற்றி இந்திய சமுதாயத்தினரிடையில் ஒரு தவறான கருத்து நிலவி வந்தது. ஆம்; ஆங்கிலேயர் கொடுங் கோன்மையை விரும்பாதவர்கள் என்ற நம்பிக்கையை மிதவாத அரசியல் கூட்டத்தார் இந்நாட்டில் ஏற்படுத்தினர். மிண்டோ - மார்லி சீர்திருத்தம், மாண்டேகு - செம்ஸ்போர்டு சீர்திருத்தம் ஆகியவற்றை வழங்கியதன் மூலம் இந்தியரின் அரசியல் முன்னேற்றத்தில் பிரிட்டிஷாருக்கு மிகுந்த அக்கறை யுண்டு என்ற நம்பிக்கை எப்படியோ ஆங்கிலம் படித்த இந்தியருக்கு இருந்து

வந்தது. அந்த மாயையிலிருந்து அவர்களை விடுவித்துவிட்டது பஞ்சாபில் வெள்ளை ராணுவத்தார் செய்த படுகொலை. அந்த ராணுவ அதிகாரிகளைத் தண்டனையிலிருந்து தப்புவிப்பதற்காக வைசிராய் புதிதாக ஒரு சட்டத்தைப் பிறப்பித்ததானது அவரது சுயவடிவைக் காட்டிவிட்டது.

ஹனடர் கமிட்டியிலிருந்த வெள்ளை உறுப்பினர் அவ்வளவு பேரும் பஞ்சாபில் இராணுவத்தார் இழைத்த கொடுமைகளுக்கு நியாயங்களைக் கற்பித்து அவர்களைத் தண்டனையிலிருந்து தப்புவிக்க முயன்றனர்.

இவ்வளவுஞ் சேர்ந்து பிரிட்டிஷாரின் உண்மை நிலையை இந்திய மக்கள் - குறிப்பாக, படித்த மக்கள் நன்கு உணரும்படிச் செய்து விட்டது. இது காந்தியடிகள் நடத்திய ஒரு நாள் சத்தியாக்கிரகத்திற்குக் கிடைத்த மற்றொரு வெற்றியாகும்.

இந்தியாவில் வெள்ளை அதிகாரிகள் மக்களுக்கு இழைத்து வரும் கொடுமைகளைப் பிரிட்டிஷ் மக்களுக்கு எடுத்துக் கூறுவதற்கென்று ஒழு தூதுக்குழு லண்டனுக்கு அனுப்பப்பட்டது. அதிலே திரு.பி.வி. மாதவராவ், திரு.ஏ. அரங்கசாமி ஐயங்கார் ஆகிய சென்னைவாசிகளும் இருந்தனர். மற்றவர்கள் திரு.வி.ஜே. படேல், ஜி.எஸ். கபார்த்தே சையது ஹஸன் இமாம், பி.ஜி. ஹார்னிமன், விபின்சந்திர பாலர் ஆகியோராவர்.

கிலாபத் இயக்கம்

காந்திஜி சத்தியாக்கிரக ரீதியிலான சட்ட மறுப்புப் போரைக் கைவிட்டாரென்றாலும், அவரது தலைமையில் மற்றொரு திட்டமிட்ட போருக்கு மக்கள் தயாராகிவிட்டனர். தேசம் காந்தியடிகளின் தலைமையை ஏற்றுக் கொண்டு விட்டது! அப்பொழுது இஸ்லாமிய உலகம் பிரிட்டிஷாருக்கு எதிரான திசையில் ஒருமைப்பட்டு வந்தது. உலகப் பெரும் போர் முடிந்ததும், யுத்தத்தில் தோல்வியுற்ற துருக்கியைப் பிரிட்டிஷார் பழிவாங்கினர் - குறிப்பாக, துருக்கியை இரண்டாகத் துண்டாட முயன்றதுடன், அந்நாட்டின் அதிபருக்கு இஸ்லாமிய உலகத்தின் மீதிருந்த தலைமையை அங்கீகரிக்கப் பிரிட்டிஷார் மறுத்ததானது இந்திய முஸ்லீம்களுக்கு அதிர்ச்சியைத் தந்தது. இது காரணமாகவும் அவர்கள் ஏப்ரல் 6-இல் நடந்த ரௌலட் சட்ட எதிர்ப்பு சத்தியாக்கிரகத்தில் இரண்டறக் கலந்தனர் என்று சொல்ல வேண்டும். துருக்கிக்கு பிரிட்டன் இழைத்த அநீதி உலகெங்கு முள்ள இஸ்லாமியருக்கு விடுத்த அறைகூவலாகக் கருதப்பட்டது.

அதன், விளைவாக, இந்தியாவில் தோன்றிய பிரிட்டிஷ் எதிர்ப்பு ''கிலாபத் இயக்கம்'' எனப் பெயர் பெற்றது.

இந்திய தேசியத் தலைவர்களிலே 'அலி சகோதரர்' என்றழைக்கப்பட்ட ஷவுக்கத் அலி, முகம்மதலி, அபுல்கலாம் ஆசாத் உள்ளிட்ட முஸ்லீம் தலைவர்களும் கிலாபத் இயக்கத்தில் இரண்டறக் கலந்தனர். இதனால், இந்திய தேசிய காங்கிரசுக்கும் முஸ்லிம்லீகுக்கு மிடையே உறவு ஏற்பட்டது.

கூட்டுக் கோஷம்!

காந்தியடிகள், கிலாபத் இயக்கத்தையும் இந்திய விடுதலை இயக்கத்தையும் இணைக்க முயன்று, அதிலே பெருமளவுக்கு வெற்றியும் கண்டார். இந்தச் சந்தர்ப்பத்தில்தான் ஏற்கனவே 'வந்தே மாதரம்' என்று கோஷித்து வந்த விடுதலை வீரர்கள் 'அல்லாஹு அக்பர்' (கடவுள் பெரியவர்) என்றும் கோஷிக்கலாயினர். கிலாபத் இயக்கத்துக்குத் தமிழ்நாட்டில் தனி முக்கியத்துவம் எதுவும் இல்லை யென்றாலும், இங்கும் 'வந்தே மாதரம் - அல்லாஹு அக்பர்' என்ற கூட்டுக் கோஷத்திற்குச் செல்வாக்கு ஏற்பட்டது. தமிழ்நாட்டில் எப்போதுமே இந்து முஸ்லிம்களிடையே பிணக்கு இருந்ததில்லையாதலால், கிலாபத் இயக்கத்திற்கு வலுத்தேட இங்குத் தனி முயற்சி எதுவும் எடுக்கப்படவில்லை. அந்த முயற்சிகளெல்லாம் வடபுலத்தி லேயே இந்து - முஸ்லிம் தலைவர்களால் எடுக்கப்பட்டன. அதிலே ராஜாஜி, ஏ. ரங்கசாமி ஐயங்கார், யாகூப் ஹாசன் போன்ற தமிழ் நாட்டுத் தலைவர்களும் பங்கு கொண்டனர்.

1919-ஆம் ஆண்டின் மத்தியிலே அமிர்தசரஸ் நகரத்திலே காங்கிரஸ் மகாசபையின் 34-வது மாநாடு பண்டித மோதிலால் நேரு தலைமையில் நடைபெற்றது. 1918-இல் டில்லியில் பண்டித மாளவியா தலைமையில் நடைபெற்ற 33-ஆவது காங்கிரஸ் மகாசபையிலேயே வழக்கம்போல அடுத்த காங்கிரசை அமிர்தசரசில் நடத்துவதென்று முடிவாகியிருந்தது. இதைத் தடுத்து விட வேண்டுமென்ற கெட்ட நோக்கத்துடனும் அமிர்தசரஸ் நகரைக் கலகப் பிரதேசமாக்கினார் பஞ்சாப் துணை ஆளுநர் சர். மைக்கேல் ஓட்வியர். அப்படி இருந்தும் திட்டமிட்டபடி காங்கிரஸ் மகாசபை 1919 டிசம்பரில் அமிர்தசரசில் நடைபெற்றது.

★-★-★

அமிர்தசரஸ் காங்கிரஸ்

1919 டிசம்பர் 5 ஆம் தேதியன்று ''இந்திய அரசியல் சட்டம் -1919' லண்டன் பார்லிமெண்டிலே நிறைவேற்றப்பட்டது. மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தின்படிதான் இந்தச் சட்டம் தயாரிக்கப்பட்டது. அடுத்த ஆண்டிலேயே இந்திய சட்டமன்றத்திற்கும் மாநில சட்டமன்றங்களுக்கும் பொதுத் தேர்தல் நடைபெறுவதும், அதன்பின் மாநிலந்தோறும் பொறுப்பாட்சி அமைவதும் உறுதி செய்யப்பட்டன. பிரிட்டிஷ் அரசு 'பொறுப்பாட்சி' என்று கூறியதனை 'இரட்டையாட்சி' என்று அழைத்தனர் இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர்கள்.

இந்திய அரசியல் சட்டமானது பஞ்சாபில் பிரிட்டிஷ் இராணுவத்தார் செய்த படுகொலைக்குப் பரிகாரமாக அமையுமென்று லண்டனிலுள்ள 'எஜமானர்களும்', இந்தியாவிலிருந்த அதிகார வர்க்கத்தினரும் கருதினர்.

காங்கிரஸ் ஏற்கவில்லை

இந்த இரட்டையாட்சி முறையை ஏற்பதில்லை என்றும், பிரிட்டிஷ் பேரரசுக்கு உட்பட்ட பூரண சுயாட்சியே இந்திய மக்களின் கோரிக்கை என்றும் டில்லியில் பண்டித மாளவியாவின் தலைமையில் கூடிய தேசிய காங்கிரஸ் மகாசபை 1918-லேயே ஒரு தீர்மானத்தின் மூலம் அறிவித்துவிட்டது.

காங்கிரசிலிருந்த மிதவாதிகள் பிரிட்டிஷார் வழங்கும் சீர்திருத்தத்தை நிபந்தனையின்றி ஏற்கத் தயாராயினர். டில்லி காங்கிரஸ் தீர்மானத்தை அவர்கள் விரும்பாததால், காங்கிரசிலிருந்து பிரிந்து சென்று, தனியாக 'ஜனநாயக மிதவாதிகள் கட்சி' என்ற பெயரில் புதிய கட்சி ஒன்றை அனைத்திந்திய ரீதியில் நிறுவவும் அவர்கள் தயாராகி வந்தனர். அதற்காகச் சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய நகரங்களிலே கூடிக் கூடிப் பேசி வந்தனர். மிதவாதிகளைக் காங்கிரசிலிருந்து பிரித்தெடுக்கவும், வழங்கவிருக்கும் அரசியல் சீர்திருத்தம் அவர்கள் கைக்குப்

போகும்படிச் செய்யவும் இந்திய அரசு ஒரு தனி இலாகாவையே படைத்து நடத்தியதாகச் சொல்லப்பட்டது.

மிதவாதத்திலும் தமிழர் தலைமை!

இந்தியா முழுவதிலுமிருந்த மிதவாதிகளுக்குத் தமிழ் நாட்டு மிதவாதிகளே வழிகாட்டிகளாக விளங்கினர். அவர்களில் மகாகனம் வி.எஸ். சீனிவாச சாஸ்திரியார், சர்.சி.பி. இராமசாமி ஐயர், திரு.ஜி.ஏ. நடேசன் ஆகியோர் முக்கியமானவர்களாவர். அந்த ஆண்டு ஆகஸ்டில் திருச்சியில் நடை பெற்ற சென்னை மாகாண அரசியல் (காங்கிரஸ்) மாநாட்டிலே மிதவாதிகளுக்கும் 'தேசியவாதிகள்' எனப்பட்ட தீவிரவாதிகளுக்குமிடையே பலப் பரீட்சை கூட நடந்தது.

இந்திய தேசிய காங்கிரஸ் தோன்றியதிலிருந்து ரௌலட் சட்ட எதிர்ப்பியக்கம் நடந்தது வரை சென்னை மாகாணம் - குறிப்பாக, தமிழ்நாடு மிதவாதிகளின் கோட்டையாகவே இருந்து வந்தது. காந்தியடிகள், ரௌலட் மசோதாக்களை எதிர்த்து சத்தியாக்கிரக இயக்கத்தைத் தோற்றுவித்ததன் விளைவாக, சென்னை மாகாணத்தில் தீவிரவாதிகளின் கை வலுத்தது. ஆம், இருள் அடைந்த மாகாணம் என்னும் பழிச்சொல்லிலிருந்து விடுபட்டது.

அமிர்தரசில் 34-வது காங்கிரஸ் மகாசபை கூடவிருந்த நேரத்திலே மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்குமிடையே ஒரு கடுமையான போராட்டம் உருவாகியது. இதனால், அமிர்தசரஸ் காங்கிரசானது இன்னொரு 'சூரத் காங்கிரஸ்' ஆக மாறுமோ என்ற ஐயம் நிலவியது.

ராஜாஜி ஏகத் தலைவரானார்!

ராஜாஜி சென்னை மாகாணத்தைப் பொறுத்த வரையில் 'தேசிய வாதிகளின்' தலைவராகத் திகழ்ந்தார். 1919 மார்ச்சு மாதத்தில் காந்தியடிகளைச் சென்னை நகருக்குத் தருவித்து, அவரை இங்கு பத்து நாட்கள் வரை தங்க வைத்து, அவரோடு பழகியதன் விளைவாக, அதற்குப் பின்னுள்ள எட்டே மாதங் களுக்குள் அனைத்திந்தியாவிலும் புகழொளி வீசும் வகையில் ராஜாஜி தென்னிந்தியாவின் ஏகத்தலைவரானார்!

அவர் மிதவாதிகளுக்கு எதிரான கோஷ்டிச் சண்டையில் கருத்துச் செலுத்தாமல், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு எதிராகத் தென்னிந்திய மக்களை விடுதலைப் போருக்குத் தயாரிக்கும்

வகையில் பணிபுரியலானார். அதற்கு பஞ்சாப் படுகொலையை ஒரு சாதனமாகக் கொண்டார்.

பஞ்சாபில் நடந்த இராணுவ அட்டூழியங்களைத் தமிழ் நாட்டுப் பொது மக்களுக்கு அறிவிக்கும் பிரசாரத்திற்கென ராஜாஜியின் முயற்சியால் சென்னையில் தனிக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. அந்தக் குழுவின் சார்பில் கூட்டங்கள் போட்டு, அக்கூட்டங்களிலே, வைசிராய் பதவியில் இருக்கும் செம்ஸ் போர்டு பிரபுவைத் திருப்பி அழைத்துக்கொள்ள வேண்டுமென்று தீர்மானம் போடப்பட்டது.

பஞ்சாபியான கோவர்த்தனதாஸ் என்பவரைச் சென்னைக்கு வரவழைத்து, பஞ்சாபில் நடந்த இராணுவ அட்டூழியங்களை இங்குள்ள பொது மக்களுக்கு அனுபவ ரீதியாகச் சொல்லும்படி ராஜாஜி ஏற்பாடு செய்தார். தாஸ் தந்த விவரங்களின் அடிப்படையில் 'இந்து' பத்திரிகை ஒரு தலையங்கம் எழுதியது. அதிலே, ஆட்சேபனைக்குரிய விஷயங்கள் இருக்கின்றன வென்று கூறி, சென்னை மாகாண அரசு 'இந்து' பத்திரிகையிடம் ரூபாய் இரண்டாயிரம் ஜாமீன் கேட்டது. இதுவே அப்பத்திரிகை ஆட்சியின் அடக்குமுறையைச் சுவை பார்த்த முதல் நிகழ்ச்சியாகும்.

தலைவர் ராஜாஜி சென்னை மாகாணத்திலுள்ள தேசிய வாதிகளின் கூட்டமொன்றை நவம்பரிலே கூட்டினார். 'இந்து' ஆசிரியர் திரு. கஸ்தூரிரங்க ஐயங்கார் தலைமை வகித்தார். அதிலே, சென்னை மாகாணத்துத் தேசியவாதிகள் அமிர்தசரஸ் காங்கிரசில் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறை பற்றி ஆலோசிக்கப்பட்டது. சூரத் காங்கிரஸ் கூடவிருந்த சமயத்திலும் வ.உ.சி தலைமையில் சென்னை மாகாணத்துத் தேசியவாதிகள் - அதாவது, தீவிரவாதிகள் சென்னை நகரில் தனியாகக் கூடியதனை இங்கு நினைவில் கொள்ள வேண்டும்.

சங்கரன் நாயர் மீது வழக்கு

பஞ்சாப் படுகொலை சம்பந்தமாகத் திரு. சங்கரன் நாயர் 'காந்திஜியும் அராஜகமும்' என்றொரு நூல் எழுதி வெளியிட்டி ருந்தார். அதிலே தம்மைப் பற்றி அவதூறாக எழுதப்பட்டிருக்கிற தென்று பஞ்சாபில் துணை ஆளுநராக இருந்த சர். மைக்கேல் ஓட்வியர், லண்டன் உயர் நீதி மன்றத்தில் நாயர் மீது மானநஷ்ட வழக்குத் தொடுத்திருந்தார். அவ்வழக்கிலே ஓட்வியருக்கு ரூபாய் 3 லட்சம் நஷ்டஈடு தரவேண்டு மென்று தீர்ப்பாயிற்று,

இதெல்லாம் எங்கோ பஞ்சாபில் நடந்த கொடுமையை எதிர்த்ததற்காகச் சென்னை வாசிகள் அனுபவித்த துன்பங்களாகும்.

சென்னை மாகாணத் தேசியவாதிகள் ஒன்றுபட்டுச் செயலாற்ற அவர்களுக்கு வழிகாட்டுவதற்காகத் திரு. கஸ்தூரிரங்க ஐயங்கார் தலைமையில் தனிக்குழு ஒன்று நியமிக்கப் பெற்றது. ராஜாஜியும் ஆந்திர பிரமுகரான திரு.டி. பிரகாசமும் செயலாளர் களாக நியமனம் பெற்றனர்.

திலகர் வருகை

இந்த நேரத்திலே லோகமான்ய பாலகங்காதர திலகர் சென்னை நகருக்கு வருகை தந்தார். வாலண்டைன் சிரால் என்னும் ஆங்கிலேயன் மீது லண்டன் நீதிமன்றத்தில் தாம் தொடுத்திருந்த மான நஷ்ட வழக்கிலே சாட்சியம் கொடுத்து விட்டுத் திரும்பு கையில்தான் திலகர் சென்னைக்கு வருகை தந்தார். இந்த வழக்கிலே திலகருக்கு ஆதரவாகச் சாட்சியம் தந்த டாக்டர் பெசன்டம்மையாரும் இதே சந்தர்ப்பத்தில்தான் சென்னைக்குத் திரும்பினார்.

திலகர் பெருமான் சென்னையில் 3 நாட்கள் தங்கினார். இங்கிருந்து நேராக அமிர்தசரஸ் காங்கிரசுக்குச் சென்றார். செல்லும் வழியில், இந்தியாவுக்கெனப் புதிய அரசியல் சட்ட மொன்றைப் பிரிட்டிஷ் அரசர் பெருமானுக்குத் திலகர் பெருமான் நன்றி தெரிவித்துத் தந்தி கொடுத்தார். பிரிட்டிஷ் அரசு வழங்கும் அரசியல் சீர்திருத்தத்தை நிபந்தனையின்றித் தாம் ஏற்பதாகவும் அறிக்கை விடுத்தார். இது, காங்கிரஸ் தீவிரவாதிகளுக்கு வியப்பைத் தந்தது.

பெசன்ட் – சி. ஆர். தாஸ் முரண்பாடு

அரசியல் பிரச்னைகளிலே எல்லாவகையிலும் திலகரோடு ஒத்த கருத்துக் கொண்டிருந்த பெசன்டம்மையாரும், பார்லி மெண்டில் நிறைவேற்றப்பட்ட அரசியல் சட்டத்தைத் தாம் அப்படியே ஏற்றுக் கொள்வதாக அறிவித்தார். அப்போதைய பெரிய வங்க மாநிலத்தில் எல்லையற்ற செல்வாக்குப் பெற்றிருந்த சித்தரஞ்சன் தாசர் (சி.ஆர். தாஸ்), பிரிட்டிஷ் அரசு வழங்கும் அரசியல் சீர்திருத்தத்தை அமிர்தசரஸ் காங்கிரஸ் அடியோடு நிராகரிக்க வேண்டுமென்று அறிக்கை விட்டார்.

இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையிலே டிசம்பர் கடைசி வாரத்தில் இந்திய தேசிய காங்கிரசின் 34-வது மகாசபை பஞ்சாப்

மாநிலத்தின் பிரதான நகரங்களில் ஒன்றான அமிர்தசரசிலே கூடியது. இந்த நேரத்தில் பஞ்சாபியரின் உள்ளங்கவர் தலைவரான லாலா லஜபதி அமெரிக்காவில் இருந்தார். டாக்டர் சைபுதீன் கிச்சுலு, டாக்டர் சத்தியபால் உள்ளிட்ட பஞ்சாபின் பெருந் தலைவர்களெல்லாம் சிறைகளில் அடைப்பட்டுக் கிடந்தனர்.

பஞ்சாபின் துணை ஆளுநர் சர். மைக்கேல் ஓட்வியரும், இராணுவத் தளபதி டயரும் நிகழ்த்திய அட்டூழியங்கள் காரணமாக அமிர்தசரஸ் நகரம் திடீரென்று உலகப் பிரசித்தி பெற்று விட்டது. அமிர்தசரஸ் ஜாலியன்வாலா பாக்கிலே ஜெனரல் டயர் நடத்திய அட்டூயங்களால் உயிரிழந்தவர்களைப் பிரிந்தவர் களின் கண்ணீரைத் துடைப்பதற்காகவும் அங்குக் காங்கிரஸ் மகாசபை கூட்டப்பட்டது. பஞ்சாப் மாநிலத்திலே இராணுவத்தார் புரிந்த அட்டூழியங்களால் படுகாயப்பட்டோர் பல்லாயிரவராவர். அவர்களுடைய உடற்புண்கள் ஆறுவதற்காக மருந்து போடுவது போலவும் காங்கிரஸ் மகாசபை பஞ்சாபிலே கூட்டப்பட்டது.

33-ஆவது மகாசபையிலேயே அடுத்த மகாசபையை அமிர்தசரசில் நடத்த முடிவாகியிருந்த தென்றாலும், அங்கு நடந்த படுகொலை காரணமாகக் காங்கிரஸ் பெருந்தலைவர்கள் அதிர்ச்சியடைந்து போயிருப்பார்கள்; அதனால், காங்கிரஸ் கூடும் இடத்தை மாற்றிவிடுவார்கள் என்றெல்லாம் பஞ்சாப் மாநில அதிகார வர்க்கம் கருதியது. அதுவரை காங்கிரசிலே ஆதிக்கம் பெற்றிருந்த மிதவாதிகளை நினைவில் கொண்டு பஞ்சாப் அதிகார வர்க்கம் அப்படிக் கருதியிருக்க வேண்டும். ஆனால், நிலைமை மாறி விட்டதை அது நினைவில் கொள்ளவில்லை. காங்கிரசில் காந்தி சகாப்தம் தோன்றிவிட்டது அதிகார வர்க்கத்தின் கண்ணில் படவில்லை.

அமிர்தசரஸ் காங்கிரசின் வரவேற்புக் குழுவிற்கு சுத்த ஆரிய சமாஜியான தவத்திரு. சிரத்தானந்த சுவாமிகள் தலைவராக இருந்து மகாசபையை நடத்தி வைத்தார். இங்கு ஒரு செய்தியைத் தமிழக மக்களின் நினைவுக்குத் தர வேண்டியது கடமையாகிறது.

வடபுலத்திலே காங்கிரஸ் தோன்றுவதற்கு முன்பே தயானந்த சரஸ்வதியால் தோற்றுவிக்கப்பட்ட ஆரிய சமாஜமும், அதற்கு முன்பே ராம்மோகன் ராயரால் நிறுவப்பட்ட பிரம சமாஜமும், இந்த இரண்டுக்கும் பின்னால் சுவாமி விவேகானந்தரால் நிர்மாணிக்கப்பட்ட இராமகிருஷ்ணர் சங்கமும்

அப்பட்டமான சமய - சமூக சீர்திருத்த இயக்கங்களாகும். இன்னும் சொன்னால், பிரம சமாஜமும் ஆரிய சமாஜமும் உருவ வழிபாட்டை எதிர்க்கின்ற இயக்கங்களாகும். இன்னும் சொன்னால், புராணங்களையும் இதிகாசங்களையும் மூட நம்பிக்கையாளர் சேர்த்துவைத்த புளுகு மூட்டைகள் என்று சொன்ன புரட்சி இயக்கங்களுமாகும். இவ்வியக்கங்கள் எல்லாம் தங்கள் சமய - சமூக சீர்திருத்தப் பணிகளுக்கு பிரிட்டிஷ் பேரரசின் ஆதரவைப் பெற்றன என்பதையும் இங்கு ஒளிவு மறைவின்றிச் சொல்லியாக வேண்டும்.

இவ்வளவிருந்தும் இந்திய தேசிய காங்கிரஸ் நடத்திய விடுதலைப் போருக்கு எதிராக இந்த இயக்கங்களில் எதுவும் ஒரு கணநேரம் கூடச் செயல்பட்டதில்லை. மாறாக, இந்த இயக்கங் களைச் சார்ந்த தனி நபர்கள் விடுதலைப் போரில் ஈடுபட்டுச் சொல்லொணாத் தியாகங்களைச் செய்தனர் என்றும் வரலாறு கூறுகிறது. அவர்கள் ஒருவர் இருவரல்லர்; பல்லாயிரவராவர். சமூகச் சீர்திருத்த இயக்கத்தைச் சார்ந்தவர்கள், தங்கள் சொந்த மக்களை எங்கிருந்தோ வந்தவன் அடிமைப்படுத்துவதையோ, உரிமை உணர்ச்சி கொண்ட அவர்களைக் கொடுமைப் படுத்து வதையோ ஆதரிக்க வேண்டுமென்று உலக வரலாறு கூறவில்லை.

வெளிநாட்டு அறிவியக்கவாதிகள்

ஐரோப்பாவில் தோன்றிய அறிவியக்கவாதிகள் ஒருவர் தவறாமல் அவ்வளவு பேரும் ஏகாதிபத்தியங்களின் எதிரி களாகவும், உரிமை வேட்கையுடைய மக்களின் நண்பர் களாகவுமே இருந்திருக்கின்றனர். அந்த வகையில் பிரபல நாத்திகராக விளங்கியவரும் திருமதி அன்னிபெசன்டம்மையாரின் குருநாதருமான சார்லஸ் பிராட்லா இந்திய விடுதலைப் போருக்கு ஆதரவாக இருந்தார். இந்திய காங்கிரஸ் மகாசபையின் மேடையில் தோன்றிப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வீரமுழக்கம் செய்தார்.

இந்தச் சரித்திரப் பின்னணியைக் கொண்டுதான் ஆரிய சமாஜியான தவத்திரு சிரத்தானந்தர் இந்திய தேசிய காங்கிரசிலே பஞ்சாப் மாநிலத்தில் முன்னணியில் நின்றார்.

கட்சிகளுக்கும் கிளர்ச்சிகளுக்கும் அப்பாற்பட்ட கலாச்சார வாழ்க்கையைப் பெற்றுவிட்ட கவி - ரவீந்திரநாத் தாகூர், அமிர்தசரஸ் காங்கிரசுக்குக் கவிதை வடிவில் செய்தி அனுப்பி யிருந்தார். பிறவிக் கவிஞன் எவனும் ஒரு நாட்டினரை இன்னொரு

நாட்டினர் அடிமைப்படுத்தி ஆளுவதைச் சகித்துக் கொள்ள மாட்டான். அடக்குமுறைக் கொடுமைகளை எதிர்க்க அஞ்சி, வானத்தின் இயற்கை அழகையும், குயிலின் குரலினிமையையும் இளங்காதலர்களின் உடலுணர்வுகளையும் வருணித்துக் கொண்டிருக்க மாட்டான். இந்த உண்மையை வடக்கே ரவீந்திரரும், தெற்கே பாரதியாரும் நமக்கு உணர்த்தி யிருக்கின்றனர். பஞ்சாப் படுகொலையைக் கண்டித்து சர், பட்டத்தைத் துறந்த ரவீந்திரநாத்தாகூர், அந்த நிகழ்ச்சிக்குச் சில மாதங்களுக்குப் பின் கூடிய அமிர்தசரஸ் காங்கிரசுக்குச் செய்தி அனுப்பியிருந்தார்.

மோதிலால் தீவிரவாதியானார்!

பண்டித மோதிலால் நேரு அமிர்தசரஸ் காங்கிரசிலே தலைமைப் பொறுப்பை ஏற்றார். அதுவரை அவர் காங்கிர சிலிருந்த மிதவாதிகளையே சார்ந்திருந்தார். சூரத் காங்கிரசின் போதுகூட மோதிலால் நேரு, திலகரை எதிர்த்தவர்களின் குழுவிலேதான் இருந்தார். ஆனால், காந்தி முனிவரின் தரிசனத்தால் அந்த மாமேதை மிதவாதிகளின் பாசறையிலிருந்து விடுபட்டுத் தீவிரவாதியாகிவிட்டார்.

அமிர்தசரஸ் காங்கிரசை மிதவாதிகளிலே ஒரு சாரார் பகிஷ்கரித்தனர். அவர்கள் எல்லாம் அமிர்தசரசில் காங்கிரஸ் மகாசபை கூடிய மறுநாளிலே ''ஜனநாயக மிதவாதிகள் மாநாடு'' என்னும் பெயரில் தனியாகக் கல்கத்தா நகரில் ஒரு மாநாட்டை நடத்தினர்.

தெற்கும் வடக்கும்

திரு.வி.எஸ். சீனிவாச சாஸ்திரி, சர்.சி.பி. ராமசாமி ஐயர், சர்.பி.என். சர்மா ஆகிய மூவரும் மிதவாதிகள் வட்டாரத்தைச் சார்ந்தவர்களாயினும், அமிர்தசரஸ் காங்கிரசைப் பகிஷ்கரிக்க வில்லை. அதிலே கலந்து கொண்டனர். ஆனால், பஞ்சாப் படு கொலைக்கு மூலகாரணமான வைசிராய் லார்டு செம்ஸ் போர்டைப் பிரிட்டிஷ் அரசு திரும்ப அழைத்துக்கொள்ள வேண்டு மென்ற தீர்மானம் விவாதத்துக்கு வந்தபோது சாஸ்திரியாரும், சர்.சி.பி.யும் காங்கிரஸ் மகாசபையிலிருந்து வெளியேறி விட்டனர்.

அங்கிருந்து நேரே கல்கத்தா சென்று மிதவாதிகள் மாநாட்டில் கலந்து கொண்டனர். ஆம்; வைசிராயைத் திரும்ப அழைக்கக் கோரும் தீர்மானத்தை எதிர்த்துப் பேசத் துணிவின்றி,

ஆதரித்துப் பேசவும் மனமின்றி அமைதியாக வெளியேறி விட்டனர், மயிலாப்பூர் மாமேதைகள்! வடபுலத்தவரான திரு.பி.என். சர்மா அவர்கள், தம்மை எதிர்த்து எழுந்த ஆவேசக் கூச்சலுக்கு அஞ்சாமல், வைசிராயைத் திருப்பி அழைக்கக் கோரும் தீர்மானத்தை எதிர்த்துப் பேசினார். தீர்மானம் நிறைவேறிய பின், அதைக் கண்டிக்கும் வகையில் காங்கிரசுக்கே தலை முழுக்குப் போட்டு விட்டதாகச் சொல்லிவிட்டு வெளியேறினார். இது நிகழ்ந்து ஆறு மாதங்களுக்குள் திரு.பி.என். சர்மா வைஸ்ராயின் நிர்வாக சபையில் சேர்த்துக்கொள்ளப் பட்டார். கைமேல் பலன் கிடைத்தது சர்மாஜிக்கு!

அமிர்தசரஸ் காங்கிரசிலேயே காந்தி சகாப்தம் பிறந்து விட்டதற்கான அறிகுறிகள் தோன்றின. காந்தி மகான் தங்கியிருந்த முகாமைச் சுற்றிப் பிரதிநிதிகள் முற்றுகையிட்டனர். அவரது திருமுகத்தைக் கண்டதும் 'மகாத்மா காந்திக்கு ஜே' என்று கோஷமிட்டு மக்கள் ஆரவாரம் செய்தனர். அமிர்தசரஸ் காங்கிரஸ் கூடுவதற்குச் சில திங்களுக்கு முன்புதான் கவியரசர் தாகூர், கரம் சந்திர மோகனதாஸ் காந்தியை 'மகாத்மா' என்று அழைத்தார். அதனால், அமிர்தசரஸ் காங்கிரஸ் முகாமிலே சத்தியாக்கிரகத் தத்துவத்தின் தந்தையைக் கண்ட போதெல்லாம் 'மகாத்மாஜி' என்றே மக்கள் அழைத்தனர்.

சி.ஆர். தாசருக்குத் தனி மதிப்பு!

மகாத்மாஜிக்கு அடுத்தபடியாக ஒரு தலைவருக்கு அமிர்தசரஸ் காங்கிரசிலே செல்வாக்கு இருந்ததென்றால், அவர் 'தேச பந்து' என்று மக்களால் அழைக்கப்பட்ட சித்தரஞ்சன் தாசராவார். தாசர் பிரிட்டிஷார் வழங்கும் அற்பச் சீர்திருத்தத்தை ஏற்கக் கூடாதென்று அறிக்கைவிட்டதால், அமிர்தசரஸ் காங்கிரஸ் மகாசபைப் பிரதிநிதிகளிடையே அவருக்குத் தனி மதிப்பேற் பட்டது. சீர்திருத்தத்தைக் காங்கிரஸ் மகாசபை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று காந்திஜிகூடக் கூறிவந்த நேரமது.

அறிஞர் ராஜாஜி அமிர்தசரஸ் காங்கிரசுக்குச் சென்றிருந்தார். அவர் கலந்து கொண்ட முதல் காங்கிரஸ் மகாசபை இதுதான். கப்ப லோட்டிய தமிழர் வ.உ.சி.யும் இந்த காங்கிரஸ் மகாசபையிலே கலந்து கொண்டார்.

பாரதியார் புதுவையைவிட்டு தமிழகத்திற்கு வந்து விட்டார் என்றாலும், சென்னை மாகாண அரசு அவருக்கு விதித்திருந்த தடை காரணமாக அந்த மகாகவி அமிர்தசரஸ் காங்கிரகிரசுக்குச்

செல்லவில்லை. அரசு விதித்த தடையை ஏற்றுக் கொண்டதன் காரணமாகவே பஞ்சாப் படுகொலை பற்றிப் பாரதியார் பாட்டெழுதவில்லை என்பதையும் இங்கு நினைவில் கொள்ளவேண்டும்.

பெசன்டின் முயற்சி

அமிர்தசரஸ் காங்கிரசுக்கு ஹோம்ரூல் இயக்கத்தின் தாயாகிய அன்னிபெசன்ட் அம்மையார் சென்றிருந்தார். ஓராண்டுக்கு முன்பு இந்திய அரசியல் வானில் பூரணச் சந்திரன் எனத் திகழ்ந்த பெசன்ட் அம்மையார் பஞ்சாப் படுகொலைக்கு நியாயம் கற்பித்து அறிக்கை விட்டதன் விளைவாக அமிர்தசரஸ் காங்கிரசிலே இருக்குமிடம் தெரியாத நிலையில் எங்கோ ஒதுக்கப்பட்டுக் கிடந்தார். இருந்தும், பிரிட்டிஷார் வழங்கும் அரசியல் சீர்திருத்தத்தை நிபந்தனையின்றி ஏற்கும் தீர்மானத்தை காங்கிரஸ் மகாசபையில் நிறைவேற்றுவதற்காக அம்மையார் முழுமூச்சுடன் பாடுபட்டார்.

மோதிலால் நேரு, காங்கிரஸ் மகாசபையைத் தம்முடைய நெடு நாளைய சகாக்களான மிதவாதிகள் பகிஷ்கரித்ததற்குத் தமது தலைமையுரையிலே ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்தார். அவர்களெல்லாம் காந்தியடிகளின் தலைமையை ஏற்று, காங்கிரசுக்குத் திரும்ப வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுத்தார். அந்நாளிலே 'பண்டித நேரு' என்றால், அது மோதிலால் நேருவைத் தான் குறிப்பதாக இருந்தது.

மைந்தன் ஜவகர்லால் நேருவும் அமிர்தசரஸ் காங்கிரசிலே கலந்து கொண்டார். மிதவாத வட்டாரத்திலிருந்து தந்தை மோதிலால் நேருவைத் தீவிரவாதிகள் வட்டாரத்திற்குக் கொண்டு வந்ததிலே மகன் ஜவகர்லாலுக்குப் பெரும் பங்கு உண்டு.

தாசரின் தீர்மானம்

அமிர்தசரஸ் காங்கிரசிலே பிரிட்டிஷார் வழங்கும் அரசியல் சீர்திருத்தத்தை அப்படியே ஏற்பதா? நிபந்தனையுடன் ஏற்பதா? அடியோடு நிராகரிப்பதா - என்ற மூவேறு வினாக்கள் எழுந்தன. ராஜாஜி, தாம் கலந்து கொள்ளும் முதல் காங்கிரசாக இருந்ததாலோ என்னவோ, அரசியல் தீர்மானம் பற்றிய விவாதத்திலே தீவிரப் பங்கு எடுக்கவில்லை ஆயினும். காந்தியடிகளுக்குப் பக்கத்துணையாக நின்றார். அரசியல் தீர்மானம் பற்றிய விவாதத்தின் ஒரு கட்டத்திலே, காங்கிரஸ் மகாசபையிலே தேசியவாதிகளுக்

குள்ளேயே பிளவு ஏற்படக் கூடிய அபாயமிருந்தது. ஆனால், காந்திஜி தலையிட்டு அதனைத் தவிர்த்தார். தேசபந்து சி.ஆர். தாஸ், கீழ்வரும் தீர்மானத்தை மகாசபையில் முன்மொழிந்தார்:

''(1) இம் மகாசபை, இந்தியா உடனே முழு அளவு சுயாட்சியைப் பெறத் தகுதியுடையது என மீண்டும் உறுதியாகக் கூறி, இதற்கு எதிரான கருத்துக்களைப் பொருட்படுத்தலாகாது எனத் தீர்மானிக்கிறது.

''(2) டில்லி மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டபடி புதிய சீர்திருத்தம் போதாது; மக்களுக்குத் திருப்தியளிக்காது. ஏமாற்றத்தை அளிப்பது எனத் தீர்மானிக்கிறது.

''(3) பார்லிமெண்டரி சபையார் சீக்கிரத்தில் இந்தியாவுக்குப் பூரண சுயாட்சியளிக்கத்தக்க வகையில் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென இம்மகாசபை கோருகிறது,''

இந்தத் தீர்மானத்தில் இரண்டாவது பாராவிலுள்ள ''ஏமாற்றத்தை விளைவிப்பது'' என்ற வாசகத்தை எடுத்து விட்டுக் கீழ்வரும் வாசகத்தைச் சேர்க்க வேண்டும் என்று கோரும் திருத்தத்தை காந்தியடிகள் முன்மொழிந்தார். அது வருமாறு:

''(4) அவ்வண்ணம் பார்லிமெண்டரி சபையார் இந்தியாவுக்குப் பூரணசுயாட்சி அளிக்கும் வகையில் மன்னர் பிரான் பிரகடனத்திலே,

''இந்திய சரித்திரத்தில் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் புதிய சகாப்தத்தில் என்னுடைய குடிகளும் உத்தயோகஸ்தர்களும் ஒன்றுபட்ட மனதுடன் 'விரைவில்' பூரண சுயாட்சி அந்தஸ்தை அடைவதற்கான முயற்சிகளைச் செய்வோம்,'' என்று கூறியிருப்பதற்கிணங்க, காங்கிரஸ் மகாசபை அரசியல் சீர்திருத்தத்தை ஏற்று உழைப்பதெனத் தீர்மானிக்கிறது.

தேசபந்து தாசர் பிரேரேபித்த தீர்மானமானது காந்தியடிகள் தந்த திருத்தத்தோடு காங்கிரஸ் மகாசபையில் ஒரு மனதாக நிறைவேற்றி வைக்கப்பட்டது.

பெசன்ட் கண்ட முதல் தோல்வி

இந்தத் தீர்மானத்திற்கு முற்றிலும் விரோதமான வகையிலே, எத்தகைய நிபந்தனையுமின்றி அரசியல் சீர்திருத்தத்தை

ஏற்கவேண்டுமென்று பெசன்ட்டம்மையார் கொண்டு வந்த தீர்மானம் தோல்வியுற்றது. அந்த அம்மையார் தோல்வியை முதன் முதலில் சுவை பார்த்தது இந்தச் சந்தர்ப்பத்தில்தான்.

1914-இல் சென்னையில் கூடிய காங்கிரஸ் மகாசபையி லிருந்து 1918-இல் டில்லியில் கூடிய காங்கிரஸ் மகாசபை வரை ஆண்டு தோறும் கூடிய ஒவ்வொரு மகாசபை யிலும் சென்னை வாசியான அம்மையாரின் செல்வாக்கு கொடி கட்டிப் பறந்தது. அமிர்தசரசில் அந்தக் கொடி தாழ்ந்துவிட்டது.

அலி சகோதரர் விடுதலை

அமிர்தசரஸ் காங்கிரஸ் மகாசபை கூடுவதற்கு முதல் நாளில் அதாவது, டிசம்பர் 25-இல் பிரிட்டிஷ் அரசர் பெருமான் ஒரு 'திடீர்ப் புரட்சி'யை நிகழ்த்தினார். இந்தியாவில் அரசியல் 'குற்றவாளிகளு'க்குப் பொது மன்னிப்பு அளிப்பதாகப் பிரகடனம் செய்தார்.

இதனால் கிலாபத் இயக்கம் சம்பந்தமாகச் சிறைப் பட்டிருந்த அலி சகோதரர்கள் விடுதலை செய்யப்பட்டனர். அவர்கள் சிறையிலிருந்து விடுதலையானதும் நேரே அமிர்தசரஸ் சென்று, காங்கிரஸ் மகாசபையில் கலந்து கொண்டனர். அவர்கள் மகாசபைப் பந்தலில் பிரவேசித்தபோது பிரதிநிதிகளும் பார்வையாளரும் ''அலி சகோதரர்கள் வாழ்க!'' என இடைவிடாது பல நிமிஷ நேரம் தொடர்ந்து ஒலி எழுப்பி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். இதன் பின்னரே அலி சகோதரர்கள் காங்கிரஸ் மகாசபையில் சேர்ந்தனர்.

மன்னர்பிரானின் பிரகடனத்திற்குப் பின் புதுவையிலிருந்த வ.வே.சு. ஐயர் தமிழகத்திற்கு வருகை தந்தார், பத்தாண்டு கால வனவாச வாழ்விலிருந்து விடுபட்டு! அப்படியே, லாலாலஜபதி ராயும் அமெரிக்காவிலிருந்து தாயகம் திரும்பினார்.

அலி சகோதரர்களில் மூத்தவரான ஷௌகத் அலி அமிர்த சரஸ் மகாசபையில் பேசுகையில் தாம் திரும்பவும் சிறை செல்ல நேரலாமென்று நம்பி 'ரிடர்ன் டிக்கட்' பெற்று வந்திருப்பதாகக் கூறினார்.

புதிய சூழ்நிலை - புதிய தீர்மானம்

அமிர்தசரஸ் காங்கிரஸ் முந்தைய காங்கிரஸ் மகாசபைகளுக் கில்லாத ஒரு புதிய சூழ்நிலையில் கூடியதால், அதில் நிறைவேற்றப்பெற்ற தீர்மானங்களும் புதியவையாக இருந்தன.

இந்தியாவுக்கு வருகை தரவிருக்கும் பிரிட்டிஷ் இளவரசர் பெருமானைக் காங்கிரஸ் மகாசபை வரவேற்பதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பெற்றது.

இந்திய அரசியல் குற்றவாளிகளுக்குப் பொது மன்னிப்பு அளித்து அரசர் பெருமான் விடுத்துள்ள பிரகடனத்தை வர வேற்றும், அதற்காக அவருக்கு நன்றி தெரிவித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பஞ்சாபில் இராணுவத்தார் அட்டூழியங்கள் புரிந்தபோது உயிர் துறந்தவர்களின் ஆன்மாக்கள் அமைதி பெறவேண்டி அமிர்தசரஸ் மகாசபை பிரார்த்தனை செய்தது.

ஜாலியன் வாலாபாக் சம்பவத்தால் பாதிக்கப்பட்ட வர்களுடைய இழப்புகளுக்கு ஈடு செய்ய வேண்டுமென்றும் அரசுக்குக் கோரிக்கை விடப்பட்டது. ஜாலியன்வாலாபாக் சம்பவத்தையொட்டி அங்கு தகுந்த நினைவுச் சின்னம் நிறுவவும் முடிவு செய்யப்பட்டது. அதற்கென ரூ. 5 லட்ச அளவில் நிதி திரட்டக் காந்திஜியையும் கொண்ட குழு ஒன்று நிறுவப்பட்டது. பாரதத்தின் முதுபெருந் தலைவரான சேலம் சி. விசயராகவாச்சாரியார், ''இந்திய மக்களுக்கு எல்லாவிதமான குடியுரிமைகளையும் வழங்க வேண்டும்'' என்று கோரும் தீர்மானமொன்றை முன்மொழிந்து, அது ஒருமனதாக நிறைவேறச் செய்தார். இதற்காக அந்த முதியவர் இரவு 10 மணிவரை கண் விழித்துக் காத்திருந்தார்.

அடிகள் காட்டிய உறுதி

பஞ்சாப் மாநிலத்தில் இராணுவத்தார் புரிந்த அட்டூழியங் களைக் கண்டித்து மகாசபை முன் தீர்மானம் வந்தபோது, கடுமையான கருத்து வேற்றுமை ஏற்பட்டது. மக்கள் சார்பில் நடந்த வன்முறைகளையும் கண்டிக்கும் வாசகம் தீர்மானத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்று மகாத்மா கோரினார். ஆனால், பெருந்தலைவர்களிலேயே பலர் அதனை விரும்பவில்லை. பிரதிநிதிகளிடையிலிருந்தும் எதிர்ப்பு எழுந்தது. ஆனால், அடிகள் பிடிவாதம் காட்டினார். தம்மைப் பொறுத்த வரையிலும் இது கொள்கைப் பிரச்னையென்றும், இதிலே தாம் விட்டுக் கொடுப்பதற்கில்லையென்றும் அடிகள் கூறிவிட்டார்.

பஞ்சாபில் இராணுவம் நிகழ்த்திய அட்டூழியங்களைக் கண்டிக்கும் தீர்மானத்திலே, ''ஜெனரல் டயர் பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும். பஞ்சாப் துணை ஆளுநர் சர். மைக்கேல் ஓட்வியர் தாமாகவே பதவி துறக்க வேண்டும். வைசிராய்

செம்ஸ்போர்டை பிரிட்டிஷ் அரசு திரும்ப அழைத்துக் கொள்ள வேண்டும்'' என்று இருந்தது. காந்திஜி கோரியபடி, 'கோப மூட்டப்பட்ட நிலையில் பாஞ்சால மக்கள் செய்த அக்கிரமங்களுக் காகக் காங்கிரஸ் மகாசபை பெரிதும் வருந்துகிறது'' என்ற வாசகமும் சேர்க்கப்பட்டு, இந்தத் திருத்தத்தோடு கூடிய தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

அடிகள் உணர்த்திய அறம்

இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர்க் காந்தியடி கள் பேசியதாவது:

''இம் மகாசபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களுள் இதுவே தலைசிறந்ததாகும். இதனுள் அடங்கியிருக்கும் தத்துவத்தை நீங்கள் உணர்ந்து அதன்படி நடக்க முயன்றீர்களே யானால், அதுவே நம்மை வெகு எளிதில் வெற்றிப் பாதையில் கொண்டு போய்ச் சேர்க்கும். இந்த உண்மையை நினைவில் கொள்ளாவிடில் நாம் தோல்வியுறுவது திண்ணம்.

''பாஞ்சாலத்தில் நம்மவர்கள் வன்முறைச் செயல்களில் ஈடுபடவில்லையென்று சொல்வீர்களேயானால், அதை மறுத்துக் கூற என்னிடம் தேவைக்கு அதிகமாகச் சாட்சியங்கள் உள்ளன. வீரகாம், அகமதாபாத், பம்பாய் முதலிய இடங்களில் மக்கள் வேண்டுமென்றே அகிம்சையிலிருந்து விலகிச் சென்றனர்.

''அரசு நெறி தவறியதென்றால், நம் நாட்டினரும் அது போலத்தான் நெறி தவறிச் செயல்பட்டனர். நெறி தவறியவரிடம் நாமும் அப்படியே நடந்து கொள்ளாமல் அகிம்சையுடன் நடந்து கொள்வோமானால், வெற்றி நம்முடையதாகும்.''

இவ்வளவும் அன்னிய அரசொன்றின் அடக்குமுறைகளை எதிர்த்து மக்கள் கடைப்பிடித்த வன்முறைச் செயல்களை எதிர்த்து அடிகள் கூறியதாகும்.

அடிகள் தலைமையும் தமிழரும்

இந்திய விடுதலைப் போர் வரலாற்றில் 1920-ஆம் ஆண்டுக்கு அதிக முக்கியத்துவம் ஏற்பட்டுவிட்டது. இந்த ஆண்டிலேதான் காந்தியடிகளின் தலைமையை இந்திய தேசிய காங்கிரஸ் ஏற்றுக்கொண்டது.

1920 செப்டம்பர் 4-இல் கல்கத்தாவில் கூடிய விசேஷ காங்கிரஸ்தான் காந்திஜியின் ஒத்துழையாமையைச் சொற்ப ஓட்டு கள் வித்தியாசத்தில் அரை மனத்துடன் ஏற்றுக்கொண்டது. பின்னர்க் காந்தியடிகளின் விருப்பத்துக்கிணங்க ஒத்துழையாமைப்

போர்ப் பிரகடனம் 1920-இல் நாகபுரியில் கூடிய வருடாந்திர காங்கிரஸ் மாநாட்டில்தான் வெளியிடப்பட்டது. இந்த மாநாட்டிலே இந்தியாவின் முதுபெரும் அரசியல் தலைவரும், தமிழ்த் தாயின் தவப் புதல்வருமான சேலம் வி. விசயராகவாச்சாரியார் தலைமை வகித்தார்.

சத்தியாக்கிரகம் என்னும் தத்துவம் பிறந்தது, தென்னாப் பிரிக்காவில் திரு. பாலசுந்தரம் என்ற தமிழ்த் தொழிலாளியைக் காரணமாகக் கொண்டுதான்.

சென்னை நகரில் தமிழர் தலைவரான ராஜாஜியின் இல்லத்தில் இருந்தபோதுதான் ரௌலட் மசோதாக்களை எதிர்த்துப் போராடுவதென்ற பிரகடனத்தைக் காந்தியடிகள் வெளியிட்டார்.

நாகபுரியில் ஒத்துழையாமை போர்ப் பிரகடனத்தை வெளியிட்ட காங்கிரஸ் மகாசபைக்குத் தலைமை வகிக்கும் பேறும் பெருமையும் தமிழகத்தின் முதுபெரும் தலைவர் ஒருவருக்குத்தான் கிடைத்தது.

ராஜாஜியின் கண்டனம்

1920-ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களிலே தேசம் எங்கும் பரபரப்பை ஊட்டக் கூடிய நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக ஏற்பட்டன. ஜாலியன்வாலாபாக் படுகொலை காரணமாகக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருந்த பாஞ்சால மாநில அரசானது, தான் நிரபராதி என்பதை நிரூபிக்க முயலும் ஒரு அறிக்கையைத் தயாரித்து பிரிட்டிஷ் அரசுக்கு அனுப்பியது. அது, லண்டனில் வெளியிடப்பட்டது. இந்த அறிக்கையை அறிஞர் ராஜாஜி கடுமையாக ஆட்சேபித்தார். பஞ்சாப் படுகொலை பற்றி ஹண்டர் கமிஷனின் நீதி விசாரணை நடைபெற்றுக் கொண் டிருக்கும் நேரத்திலே பஞ்சாப் மாநில அரசு தனது அறிக்கையை வெளியிட்டது, நீதிமன்றத்தையே அவமதித்ததாகும் என்பது ராஜாஜியின் வாதம். அவரது ஆட்சேபனையை ஆதரித்தும் எதிர்த்தும் இந்தியாவிலும் லண்டனிலும் அறிக்கைகள் வெளியாயின.

28-5-1920-இல் ஹண்டர் கமிஷன் பாஞ்சாலப்படுகொலை பற்றிய தனது விசாரணையை முடித்துக்கொண்டு, அது சம்பந்தமான அறிக்கையை வெளியிட்டது. பாஞ்சாலத்தில் அளவுக்கு மீறி இராணுவத்தினர் அக்கிரமங்கள் செய்திருக் கின்றனர் என்பதைக் கமிஷன் ஒப்புக் கொண்டதென்றாலும், அந்த

அநீதிகளை இழைத்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப் பரிந்துரை செய்ய வில்லை. இது மக்களுக்கு ஆத்திரத்தை மூட்டியது.

காந்திமகான் 'நவஜீவன்' என்ற குஜராத்தி வாரப் பத்திரிக்கையையும், 'யங் இந்தியா' என்ற ஆங்கில வாரப் பத்திரிக்கையையும் தமது பொறுப்பில் எடுத்துக் கொண்டு, அவற்றின் மூலம் ஒத்துழையாமை இயக்கத்துக்கு ஆதரவு திரட்டும் பிரச்சாரத்தைத் திறம்படச் செய்யலானார்.

சென்னை நகரில் மௌலானா முகமதலி தலைமையில் சென்னை மாகாண கிலாபத் மாநாடு நடைபெற்றது. கிலாபத்துக்கு நிதி திரட்டும் பொறுப்பை ராஜாஜி ஏற்றார். பிப்ரவரித் திங்களில் பம்பாயில் மூன்றாவது கிலாபத் மாநாடு நடைபெற்றது. பஞ்சாப் படுகொலைபற்றி விசாரணை செய்ய இந்திய தேசிய காங்கிரஸ் பண்டித மோதிலால் நேரு தலைமையில் காந்திஜி, அப்பாஸ் தயாப்ஜி, எம்.ஆர். ஜெயகர் ஆகியோரைக் கொண்டு நியமித்த கமிட்டியானது தனது அறிக்கையை 25-3-20-இல் வெளியிட்டது. அதிலே, பஞ்சாபில் ராணுவத்தார் இழைத்த அட்டூழியங்கள் விவரமாகத் தரப்பட்டிருந்தன. இந்த அறிக்கை பத்திரிகைகளில் வெளியானதும் தேசமக்களிடையே பெருத்த பரபரப்பு ஏற்பட்டது.

ஒத்துழையாமை இயக்கம்

கிலாபத் அநீதிக்குப் பரிகாரம் தேடுவதற்காக ஒத்துழை யாமைப் போர் தொடங்கத் தாம் முடிவெடுத்து விட்டதாகக் காந்திஜி அறிக்கை விட்டார். இஸ்லாமியரின் செல்வாக்கிலிருந்த கிலாபத் கமிட்டியும் காந்திஜியின் ஒத்துழையாமைப் போரில் ஈடுபடுவதென்று முடிவெடுத்தது.

மார்ச்சு 19-ஆம் தேதியன்று நாடெங்கும் துக்க தினம் கொண்டாட வேண்டும் என்று காந்திஜியும் கிலாபத் இயக்கத் தலைவர்களும் அறிக்கை விட்டனர். அந்தத் தேதியில் பிரிட்டிஷாருடன் இந்திய முஸ்லிம்களுக்குள்ள உறவு அறுபட்டுப் போகும் என்று மௌலானா ஷௌகத் அலி அறிக்கை வெளியிட்டார்.

ஒத்துழையாமை - முதல் அறிக்கை

''துக்க தினம்'' பற்றிக் காந்திஜி வெளியிட்ட முதல் அறிக்கை வருமாறு;

''முஸ்லிம்களின் கோரிக்கைகளுக்கு அரசு இணங்கா விட்டால் நாம் என்ன செய்ய வேண்டுமென்பதைப் பற்றி ஒரு வார்த்தை. பகிரங்கமாகவோ அல்லது இரகசிய மாகவோ, பலாத்கார முறைகளைக் கடைப்பிடித்துப் போர் புரிவது காட்டு மிராண்டிகள் கையாளும் வழியாகும். எமது தேசம் தற்போதுள்ள நிலைமையில் அது சாத்தியமில்லை, எனவே அந்த முறையைக் கைவிட்டு விடவேண்டும். ஹிம்சை முறையை யொழித்துவிட்டு அஹிம்சை நெறியில் போராடத் தேசம் தீர்மானிப்பதால் பிறக்கும் அற்புத சக்தி இணையற்றதாகும். சாத்தியமில்லை என்ற காரணத்தினாலேயே நான் ஹிம்சை முறையைக் கைவிட்டு விடும்படிச் சொல்கிறேன். எனவே, நமக்குள்ள ஒரே வழி ஒத்துழையாமைதான். இது மிகவும் பரிசுத்தமானது, விசேஷ பலனும் தரவல்லது. ஆனால், இதன் முழுப் பலனையும் நாம் காண வேண்டுமானால், துளிகூட ஹிம்சை கலக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

''ஒருவருடைய மதவுணர்ச்சி தாக்கப்படுகையில் ஒத்துழையாமைத் தருமத்தை மேற்கொள்வது அவரது கடமையாகும். நம்முடைய உரிமைகளில் தலையிட்டு, அவற்றை நியாயத்திற்கு விரோதமாகப் பறித்துக்கொள்ளும் போது அதற்கு நாம் சிறிதும் அசைந்து கொடுக்காமல் உட்பட்டு விடுவோமென இங்கிலாந்து எதிர்பார்ப்பதற் கில்லை. முஸ்லிம்களுக்கோ இத்தகைய தலையீடு அவர்களது வாழ்வையே தாக்குவதாகும்.

''ஆகவே நமது போரை நாம் மேலும் கீழுமாக ஆரம்பிக்க வேண்டும் - அதாவது, கௌரவத்தை உத்தேசித்தோ அல்லது ஊதியம் பெற்றோ உயர்ந்த பதவிகளை வகித்து வருபவர்கள் அவைகளை விட்டொழிக்க வேண்டும்.

''அரசில் கீழ்த்தர நிலையில் வேலைகளைப் பார்ப்பவர் களும் தங்கள் தங்கள் வேலைகளை ராஜிநாமாச் செய்துவிட வேண்டும். தனி நபர்களிடம் உத்தியோகம் பார்ப்பவர்கள் தங்கள் வேலைகளை விடவேண்டியதில்லை. ஏனெனில், அது ஒத்துழையாமையின் ஓர் அம்சமல்ல.

''ஒத்துழையாமையை மேற்கொள்ள மறுப்பவர்களிடையே நாம் சமூகப் பகிஷ்காரத்தை அனுஷ்டிக்க வேண்டு மென்பதை நான் அங்கீகரிக்க முடியாது; ஜனங்கள் எவ்வித நிர்ப்பந்தமுமில்லாமல் தாமே ஒத்துழையாத்

தருமத்திலிறங்குவதுதான் அவர்களது உணர்ச்சியையும் அதிருப்தியையும் எடுத்துக் காட்டும் அறிகுறியாக விளங்கும்.

''ராணுவ வீரர்களைத் தங்கள் ஊழியத்தை மறுத்து விடும்படி சொல்வதற்கு இது காலமல்ல. அது, நமது போர் முறையில் கடைசி ஆயுதமேயொழிய, முதல் ஆயுதமல்ல. வைசிராயும் இந்தியா மந்திரியும் பிரிட்டிஷ் பிரதம மந்திரியும் அத்தகைய நிர்ப்பந்தத்திற்கு நம்மை வெருட்டினால் அப்பொழுது நாம் அந்த முறையைக் கையாள வேண்டியதுதான்.

''தவிர வெகு ஜாக்கிரதையுடன் அவ்வப்பொழுது யோசித்து யோசித்தே நாம் ஒத்துழையாமையை அனுஷ்டிக்க வேண்டும். எவ்வளவு உக்கிரமான ஆத்திரமூட்டக் கூடிய நிலைமை ஏற்படினும் நாம் நமது சாந்தத்தையும் பொறுமையையும் அடக்கத்தையும் இழக்காமல் முன்னேறிச் செல்ல வேண்டும்.''

''காந்திஜி முதன் முதலாக ஒத்துழையாமை பற்றிப் பிரஸ்தாபித்தது இந்த அறிக்கையில்தான்'' என்கிறார் டாக்டர் பட்டாபி சீதர்ரமையா.

தமது ஒத்துழையாமைப் போர் முறை இன்னதெனத் திட்டவட்டமாகக் காந்திஜி அறிவித்தார். காங்கிரஸ் நியமித்த துணைக் குழு, கிலாபத் கமிட்டி ஆகியவற்றின் ஆதரவும் மகாத்மாஜியின் திட்டத்திற்குக் கிடைத்தது.

பெசன்ட் விலகல்

இந்தச் சந்தர்ப்பத்தில் சுயாட்சிச் சங்கத்தின் (ஹோம் ரூல் லீகின்) தலைவர் பொறுப்பைத் துறக்கலானார் டாக்டர் அன்னிபெசன்ட். ஆம்; தேசத்தைக் கடுமையான ஒரு போரில் ஈடுபடுத்த காந்திஜி முயன்று வருவது அம்மையாருக்குப் பிடிக்காததாலேயே தாமே படைத்த ஒரு பேரியக்கத்திலிருந்து அவர் விலகிக்கொள்ள நேரிட்டது. பெசன்ட் விலகியபோது சங்கம் வலுவுடையதாகவே இருந்தது. அதனை அழிப்பதோ, புறக்கணிப்பதோ காந்தியடிகளாலும் இயலாததாக இருந்தது. அதனால், சங்கத்தின் தலைமைப் பொறுப்பை அவர் ஏற்றுக் கொண்டார். அதையடுத்து அடிகள் ஒரு வேலைத் திட்டத்தையும் வெளியிட்டார். அது வருமாறு:

(1) சர்க்காரிடமிருந்து பெற்றுள்ள பட்டங்களைத் துறத்தல் சர்க்காரிடம் வகித்துவரும் கௌரவமான பதவிகளினின்றும் விலகிக் கொள்ளுதல்; ஸ்தல ஸ்தாபனங்களில்

வகிக்கும் நியமன ஸ்தானங்களை ராஜிநாமாச் செய்து விடுதல்.

(2) சர்க்காரால் நடத்தப்படும் தேக் கச்சேரிகள், விருந்துகள், தர்பார்கள், சர்க்கார் உத்தியோகஸ்தர்களால் பூரா உத்தியோக முறையிலோ அல்லது பாதி உத்தியோக முறையிலோ நடத்தப்படும் வைபவங்கள் இவற்றில் எவ்விதத்தினும் பங்கெடுத்துக் கொள்ள மறுத்துவிடுதல்.

(3) சர்க்காருக்குச் சொந்தமானவையும் அல்லது சர்க்காரின் அதிகாரத்திற்குட்பட்டவையுமான பள்ளிக்கூடங்களுக்குக் குழந்தைகளை அனுப்புவதைச் சிறிது சிறிதாக நிறுத்திக் கொண்டு, அந்தந்த மாகாணங்களில் அவரவர்களின் கல்வி போதனைக்காகத் தேசிய முறையிலான பள்ளிக் கூடங்களையும் கல்லூரிகளையும் ஏற்படுத்திக் கொள்ளுதல்.

(4) வக்கீல்களும் வழக்காளிகளும் நாளாவட்டத்தில் பிரிட்டிஷ் கோர்ட்டுகளைப் பகிஷ்கரித்து, வழக்குகளை விசாரிப்பதற் காக ஆங்காங்குப் பஞ்சாயத்துக் கோர்ட்டுகளை ஏற்படுத்திக் கொள்ளுதல்.

(5) இராணுவத்திலுள்ளவர்களும், குமாஸ்தாக்களாக வேலை பார்ப்பவர்களும், தொழிலாளி வகுப்பினரும் மெஸொபடோமியாவில் அரசாங்கத்தாருக்கு ஊழியம் புரிவதற்காக ஆட்கள் திரட்டப்படுகையில் அதில் சேர மறுத்துவிடுதல்.

(6) சீர்திருத்தப்பட்ட சட்டசபைக்கு அபேட்சகர்களாக நிற்பதி னின்றும் விலகிக் கொள்ளுதல்.

(7) காங்கிரஸின் கட்டளையையும் மதிக்காமல் எவராவது தேர்தலில் அபேட்சகராக நின்றால் அவருக்கு வாக்காளர்கள் தங்கள் வோட்டுகளைக் கொடுக்க மறுத்து விடுதல்.

கல்கத்தாவில் சிறப்பு மாநாடு

பொதுவாக, 1920-ஆம் ஆண்டின் முற்பாதியில் தேசத்தில் பெரிய குழப்பம் நிலவியது. இதிலே தெளிவு காண்பதற்காக விசேஷ காங்கிரஸ் மகாசபையைக் கல்கத்தாவில் கூட்டுவதென்று 30-6-20-இல் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கராச்சியில் கூடித் தீர்மானித்தது.

காங்கிரஸ் மகா சபையே அனுமதிக்கவில்லை யென்றாலும், கிலாபத் அநீதியை எதிர்த்துத் தாம் ஒத்துழையாமைப் போர்

தொடங்கப் போவது உறுதி என்று காந்தியடிகள் அறிவித்து விட்டார். அடிகளின் இந்த முடிவு திலகருக்குப் பிடிக்கவில்லை. ஆயினும், அடிகளாருடன் ஒத்துழைப்பதாக அவர் உறுதி கூறிவிட்டார்.

காங்கிரசிலே முன்னணியிலிருந்த தலைவர்களில் ஏராளமானவர் மத சம்பந்தப்பட்ட கிலாபத் இயக்கத்துடன் மதச் சார்பற்ற இந்திய விடுதலை இயக்கத்தை இணைப்பதை விரும்பவில்லை. கிலாபத் இயக்கம் உலக முஸ்லிம்களின் ஒருமனப்பட்ட முடிவிலிருந்து பிறந்ததன்று. அதிலே உலக முஸ்லிம்களிடையே இருவிதமான கருத்துகள் இருந்தன. கிலாபத் பிரச்னையில் துருக்கி முஸ்லிம்களுக் கிடையிலும் பிளவு இருந்தது. இதனைச் சுட்டிக் காட்டினர், காந்தியடிகளின் முடிவை விரும்பாத காங்கிரஸ்காரர்கள்.

திலகர் மறைந்தார்

விசேஷ காங்கிரசுக்குத் திலகர் பெருமானே தலைமைதாங்க வேண்டுமென்று தேசபந்து தாஸ் போன்ற பெருந்தலைவர்கள் விரும்பினார்கள். ஆனால், உடல் நலம் குன்றியிருப்பதன் காரண மாகத் திலகர் தலைமைப் பொறுப்பை ஏற்க விரும்பாதவரானார். எல்லையற்ற தியாகங்கள் செய்து துன்பங்களையே இன்பங்களாக ஏற்ற மாபெரும் தியாகியான லோகமான்யர் ஒரு முறைகூடக் காங்கிரஸ் மகாசபையின் தலைமைப் பீடத்தில் அமரவில்லை. அமிர்தசரஸ் காங்கிரஸ் தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட விருந்தும், வாலன்டைன் சிரால் மீது தாம் தொடுத்த மானநஷ்ட வழக்கிற்காக லண்டன் செல்ல வேண்டியிருந்ததால் தலைமைப் பொறுப்பை ஏற்க இயலாதவரானார். துரதிருஷ்டவசமாக, கல்கத்தா விசேஷ காங்கிரஸ் கூடுவதற்கு ஒரு திங்களுக்கு முன்பே ஆகஸ்டு 1-இல் திலகர் காலமாகிவிட்டார்.

திலகருடைய பிரேத ஊர்வலம் பம்பாயில் நடைபெற்றது. அதுவரை எந்தத் தலைவருடைய பிரேத ஊர்வலத்திலும் அவ்வளவு பெருந்திராளான மக்கள் கலந்து கொண்டதில்லை. காந்திஜியும் அலி சகோதரர்களும் திலகரின் பிரேதத்தைச் சுமந்து சென்றனர். 'திலகருடைய ஆதரவோடு ஒத்துழையாமைப் போரை நடத்தும் பேறு எனக்கு இல்லாமற் போய்விட்டதே'' என்று காந்திஜி கூறினார்.

லாலாஜி தலைமை

பாஞ்சாலச் சிங்கம் லாலா லஜபதி ராய் கல்கத்தா விசேஷ காங்கிரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆறாண்டுக்

காலம் நாடு கடத்தப்பட்ட நிலையில் அமெரிக்காவில் கைதிபோல் வாழ்ந்த லஜபதி ராய் அரசியல் 'குற்றவாளிகளு'க்குப் பிரிட்டிஷ் மன்னர் அளித்த பொது மன்னிப்பின் விளைவாக 1920-இல்தான் தாயகம் திரும்பி வந்தார். இந்த மாபெரும் தியாகி கல்கத்தா விசேஷ காங்கிரஸ் மகாசபையின் தலைமைப் பொறுப்பை ஏற்பதைத் தேசம் முழுவதுமே விரும்பியது எனலாம்.

ஒத்துழையாமைக்கு மாநிலங்கள் ஆதரவு

விசேஷக் காங்கிரஸ் கூடுவதற்கு முன்பு காந்தியடிகளின் ஒத்துழையாமைப் போர்பற்றி மாகாணக் கமிட்டிகளின் கருத்தறியச் சுற்றறிக்கை விடப்பட்டது.

தமிழ் மாகாணக் காங்கிரஸ் கமிட்டி ஒத்துழையாமைக் கொள்கையைக் வரவேற்று ஆதரவு தெரிவித்தது.

ஆந்திர மாகாணக் காங்கிரஸ் கமிட்டி காந்திஜியின் ஒத்துழையாமைக் கொள்கையைக் கல்கத்தா விசேஷக் காங்கிரஸ் மகாசபை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று தீர்மானித்தது.

பீகார், ஒரிசா, பீரார், பஞ்சாப், பம்பாய் ஆகிய மாகாணங்களின் காங்கிரஸ் கமிட்டிகளும் ஒத்துழையாமைக் கொள்கைக்கு ஆதரவு தெரிவித்தன.

வங்காளம், ''ஒத்துழையாமையை ஏற்பதைத் தவிரத் தேசத்திற்கு வேறு வழியில்லை'' என்றது. ஆனால், சட்டசபைப் பகிஷ்காரத்தை வங்கம் ஆதரிக்கவில்லை.

மத்திய மாகாணக் காங்கிரஸ் கமிட்டியும் வங்கத்தையே பின்பற்றிக் கருத்துத் தெரிவித்தது. பர்மா அப்போது இந்தியாவின் ஒரு மாகாணமாக இருந்தது. அந்த மாகாணக் கமிட்டி ஒத்துழையாமையை வரவேற்றதாயினும், அதை நடத்தி வைப்பதற்கான சூழ்நிலை பர்மாவில் இல்லையென அறிவித்துவிட்டது.

சிந்து மாகாணம் முழுமனத்துடன் ஆதரவு காட்டி, ஒரு வேலைத் திட்டத்தையும் வழங்கியது. ஆனால், ராணுவ இலாகாவில் ஒத்துழையாமையைத் தவிர்க்க வேண்டும் என்று கருத்துத் தெரிவித்தது.

ஐக்கிய மாகாணம் (உ.பி.) ஒத்துழையாமையை வரவேற்றதோடு, அரசியல் சீர்திருத்தத்தைத் தொடங்கி வைக்க இந்தியாவுக்கு வருகை தரவிருக்கும் கானாட்டுக் கோமகனைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்தது.

பொதுவாக, மாகாண காங்கிரஸ் கமிட்டிகளில் பெரும் பாலானவை நிபந்தனையின்றி ஒத்துழையாமைக்கு ஆதரவு தெரிவித்தன. இந்தச் சூழ்நிலையில் செப்டம்பர் 4-இல் விசேஷ காங்கிரஸ் மகாசபை கல்கத்தா நகரில் கூடியது.

வங்கமும் தமிழகமும்

கல்கத்தா விசேஷ காங்கிரஸ் மகா சபையானது, ஒத்துழையாமைப் போர் பற்றி முடிவெடுக்க வேண்டியதா யிருந்தது. ஒத்துழையாமையை விரும்புவோரும் விரும்பாத வருமாக இருவேறு அணியினர் கல்கத்தாவில் திரண்டனர். மகாசபை நடந்த மாநிலமாகிய வங்கத்திலே ஒத்துழையாமையை விரும்பாதவர்களே அதிகமாக இருந்தனர். வங்கத்தின் ஏகத் தலைவராக விளங்கிய தேசபந்து தாசர் ஒத்துழையாமையை அடியோடு வெறுத்தார் - குறிப்பாக, சட்ட மன்றங்களையும் நீதி மன்றங் களையும் பகிஷ்கரிப்பதனைத் தாசர் முழு மூச்சுடன் எதிர்த்தார்.

சென்னை மாகாணத்திலேயும் ஒத்துழையாமையை எதிர்ப்போரே அதிகமாக இருந்தனர். அப்போது, நீதிக் கட்சி நன்கு வளர்ந்து, வலுப்பெற்றிருந்தது. காங்கிரசைப் பகைக்கும் கட்சி என்ற காரணத்தால் அரசு அதற்கு எல்லாவகையிலும் ஆதரவளித்து வந்தது. பிராமணரல்லாத சமுதாயத்திலுள்ள பட்டதாரிகள், பணக்காரர்கள், ஆகியோரில் பெரும்பாலோர் தார்மிக ரீதியில் ஜஸ்டிஸ் கட்சியையே ஆதரிப்போராக இருந்தனர். இந்த நிலையில் சட்ட சபையைக் காங்கிரஸ் பகிஷ்கரித்தால், தேர்தல் களத்தில் எதிர்ப்பில்லாமல் ஜஸ்டிஸ் கட்சி மகத்தான வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றி விடும் என்று தமிழகக் காங்கிரஸ் தலைவர்கள் அஞ்சினர். இதனால், தமிழ் நாட்டில் விடுதலை இயக்கமும் பாதிக்கப்படும் என்றும் அவர்கள் கருதினர். இந்த நிலை வேறு மாகாணம் எதிலும் இருக்கவில்லை. ஆகவே, சட்டசபைப் பகிஷ்காரத்தை எதிர்ப்பதைத் தவிர வேறு வழி இல்லாத நிலையை தமிழகத் தலைவர்கள் கண்டனர்.

உண்மையில் சென்னை மாகாணத்தில் இயங்கி வந்த ஜஸ்டிஸ் கட்சியானது, பிராமண ஆதிக்கத்தை எதிர்க்கும் வேகத்திலே தேச விடுதலைப் போருக்கும் எதிரியாக - பிரிட்டிஷ் ஆட்சிக்கு எல்லா வகையிலும் ஆதரவளிக்கும் ராச விசுவாச இயக்கமாக - செயல்பட்டு வந்தது. அதே நேரத்தில் சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள சாதாரண மக்களின் நலனை நாடாத மிட்டா மிராசுகளின் கட்சியாகவும் இயங்கி வந்தது. இதனால், சட்ட

சபையை ஜஸ்டிஸ் கட்சி கைப்பற்றுவதைத் தடுத்துவிடும் நோக்கத்துடனும் சென்னை மாகாணக் காங்கிரஸ்காரர்களில் பெரும்பாலோர் ஒத்துழையாமைப் போரை வெறுத்தனர். சிறை செல்லவும், வருவாய் தரும் வக்கீல் தொழிலைவிடவும் தயாராக இல்லாத காரணத்தாலும் சிலர் ஒத்துழையாமையை விரும்பாதவராயினர்.

ஸ்தாபன ரீதியாக சென்னை (தமிழ்) மாகாண காங்கிரஸ் ஒத்துழையாமையை ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற்றிய தென்றாலும் கல்கத்தா காங்கிரசுக்குச் சென்ற தமிழ் நாட்டுப் பிரதிநிதிகளில் கணிசமான எண்ணிக்கையினர் ஒத்துழையாமைப் போர் தீர்மானத்தை எதிர்த்தே வாக்களித்தனர்.

கல்கத்தா காங்கிரசுக்குச் சென்ற தமிழ்த் தலைவர்களிலே கப்பலோட்டிய தமிழர் வ.உ. சிதம்பரனார், ராஜாஜி, 'இந்து' கஸ்தூரிரங்க ஐயங்கார், நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை, எஸ். சத்தியமூர்த்தி ஆகியோர் முக்கியமானவர்கள் ஆவர்.

'கிலாபத் ஸ்பெஷல்' என்னும் பெயர் தாங்கிய விசேஷ ரயிலில் சென்னை மாகாணத்துப் பிரதிநிதிகள் கல்கத்தா சென்றனர். பெசன்டைப் பிரிந்த சுயாட்சி சங்கத்தினர், காந்திஜியின் பக்கமே இருந்தனர். அப்போது, ராஜாஜி அச்சங்கத்தின் செயலாளர்களில் ஒருவராக இருந்தார். மற்றிரு செயலாளர்கள் பண்டித மோதிலால் நேருவும் பம்பாய் வாசியான சோபானியுமாவர். காங்கிரஸ் மகாசபை ஒத்துழையாமைப் போர் தீர்மானத்துக்கு எதிராக வோட்டளித்தாலும் சுயாட்சிச் சங்கத்தினர் ஆதரவளிக்கத் தயாராக இருந்தனர். முஸ்லிம் சமுதாயத்தினரின் ஆதரவும் இருந்தது.

தீர்மானம் நிறைவேறியது

விசேஷ காங்கிரசின் விஷயாலோசனைக் க்மிட்டியில் வங்காளியரான விபின்சந்திர பாலரும் தேசபந்து தாசரும் ஒத்துழையாமைத் தீர்மானத்தைக் கடுமையாக எதிர்த்தும், அதிகப்படியான வாக்குகளால் தீர்மானம் நிறைவேறிவிட்டது.

பின்னர், விசேஷக் காங்கிரஸ் மகாசபையில் ஒத்துழையாமைத் தீர்மானத்தின் மீது வாக்கெடுக்கப்பட்டபோது ஆதரவாக *1855* வாக்குகள் கிடைத்தன. எதிராகக் கிடைத்த வாக்குகள் *873*-ஆகும். ஆதரவாக வாக்களித்தவர்களில் பெரும்பாலோர் நடுத்தர வர்க்கத்தினரும் முஸ்லிம்களுமேயாவர்.

தமிழ் நாட்டுப் பிரதிநிதிகளுள் 161 பேர் காந்திஜிக்கு ஆதரவாகவும், 145 பேர் எதிராவும் வாக்களித்தனர். வ. உ. சிதம்பரனார், ஏ. அரங்கசாமி ஐயங்கார், எஸ். சத்தியமூர்த்தி ஐயர் ஆகியோர் எதிர்த்து வாக்களித்தவர்களில் முக்கியமானவர்களாவர்.

வ.உ.சி. விலகினார்!

திலகரின் சீடரான வ.உ. சிதம்பரனாருக்குக் காந்தியடிகளின் தலைமையில் நம்பிக்கை பிறக்கவில்லை. தாம் மறையும்போது, 'கிடைப்பதை மறுப்பின்றி ஏற்றுக் கொள்ளுங்கள்; மேலும் கிடைக்கக் கிளர்ச்சி செய்யுங்கள்' என்று திலகர் கூறியிருந்தார். இது வேதவாக்காகி விட்டது வ.உ. சிக்கு! அதனால், கல்கத்தாவிலிருந்து திரும்பும் வழியில் ஒத்துழையாமைத் திட்டம் தமக்குப் பிடிக்காததால் தாம் காங்கிரசிலிருந்து விலகிக் கொள்வதாக வ.உ.சி. அறிக்கை வெளியிட்டார்.

காங்கிரசிலே வ.உ.சி. பெற்றிருந்த இடம் மிகவும் புனிதமானது. அவர் தாயைவிடவும் அதிகமாகத் தமது தாய்ச் சபையான காங்கிரசை நேசித்தார். அவர் இரண்டு ஆயுள் சிறைவாசத் தண்டனை பெற்றது காங்கிரஸ்காரராக இருந்ததால் தான்! சிறை மீண்ட பின்னர் வறுமையால் வாடிய காலத்திலும் காங்கிரஸ் பணியில் ஈடுபட அவர் தயங்கியதேயில்லை. அத்தகைய புனிதமான உறவைத் துண்டித்துக் கொண்டார் தேச பக்தர் வ.உ. சிதம்பரனார். அப்போது அவர் மனம் என்ன பாடுபட்டதோ!

★-★-★

தமிழகத்துக்குச் சோதனை

1920-ஆம் ஆண்டின் பிற்பாதி முழுவதும் தமிழ்நாட்டுக்கு ஒரு கடும் சோதனைக் காலமாக அமைந்தது. 1916-இல் தோன்றி நாளொரு மேனியாக வளர்ந்து வந்த ஜஸ்டிஸ் கட்சியானது அந்த ஆண்டு நவம்பர்த் திங்களில் நடைபெறவிருந்த சென்னை மாகாண சட்டமன்றத் தேர்தலில் ஈடுபடுவதற்குத் தயாராக இருந்தது. அதனுடைய கொள்கைகளும் வேலைத் திட்டங்களும் பிராமண ஆதிக்கத்திற்கு எதிரானவையென்று பொதுவாகச் சொல்லப் பட்டாலும், தேச விடுதலைப் போருக்கும் எதிராகவே இருந்தன என்பது சரித்திர பூர்வமான உண்மையாகும்.

தியாகராசர் அறிக்கை

ஜஸ்டிஸ் கட்சியின் தலைவரான சர்.பி. தியாகராச செட்டியார், அந்தக் கட்சி பிறந்த ஆண்டிலேயே, அதன் கொள்கைப் பிரகடனம் ஒன்றை வெளியிட்டு, 'அளவுக்கு மிஞ்சிய சுயாட்சிக் கோரிக்கையை ஜஸ்டிஸ் கட்சி ஆதரிக்கவில்லை' என்பதைத் தெளிவுபடுத்தி யிருந்தார். மேலும், ஆங்கிலேய ஆட்சியின் செல்வாக்கைக் குறைக்கும் எந்தத் திட்டத்தையும் தாங்கள் விரும்பவில்லை என்பதையும் ஐயத்திற்கிடமின்றி அறிவித்திருந்தார். இன்னும் ஒரு படி மேலே போய், 'இன்று நாடு இருக்கும் நிலையில் வெவ்வேறு சாதியினருக்கு - வகுப்பினருக்கு நீதி கிடைக்கவும், அவர்களிடையே ஒத்துழைப்பை ஏற்படுத்தவும், தேசிய ஒருமைப்பாட்டை உண்டாக்கவும் கூடியவர்கள் ஆங்கிலேயர்தான். அவர்கள் வெளியேறினால், நாட்டில் தேச பக்தியின்றி - ஒற்றுமையின்றி ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டு சீரழிய நேரிடும்' என்றும் கூறி திரு. செட்டியார் பிராமணரல்லாதாரை எச்சரித்திருந்தார்.

ஜஸ்டிஸ் கட்சியின் இந்தப் பிரகடனமானது, காங்கிரஸ் மகாசபை தொடங்கவிருந்த ஒத்துழையாமை இயக்கத்திற்கு எதிரானதாகும்.

தமிழகத்தின் தனிச் சிக்கல்

காந்தியடிகள் ஒத்துழையாமைப் போருக்காகத் தேசத்தைத் தயார் செய்து கொண்டிருந்த நேரத்திலே நாடெங்கும் மாநில சட்டமன்றங்களுக்கான தேர்தலை நடத்துவதில் பிரிட்டிஷ் அரசு முனைப்புக் காட்டி வந்தது.

ஒத்துழையாமைப் போர்த் திட்டத்திலே புதிய சட்ட மன்றங்களுக்கு நடைபெறவிருக்கும் தேர்தலைப் பகிஷ்கரிப்பதும் ஒரு அம்சமாக இருந்தது. தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் சட்டசபைத் தேர்தலைப் பகிஷ்கரிப்பதற்குக் கடுமையான எதிர்ப்பு ஏற்பட்டது. இந்தப் பகிஷ்காரமானது, வகுப்புவாத அடிப் படையில் தோன்றி விடுதலைப் போருக்கு எதிராக இயங்கி வரும் ஜஸ்டிஸ் கட்சியின் வெற்றிக்கு வழி விடுவதாக இருக்கு மென்று தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்களில் பெரும்பாலோர் கருதினர்.

தமிழ்நாடு காங்கிரசில் முன்னணியில் இருந்த தலைவர் களில் பெரும்பாலோர் பிராமணர்களாவர். வெளிப்படையாக பிராமணர் ஆதிக்கத்திற்கு எதிரி என்று தன்னைப் பிரகடனப் படுத்திக்கொண்டு விட்ட ஜஸ்டிஸ் கட்சி சென்னை மாகாண அரசாங்கத்தைக் கைப்பற்றுவதைப் பிராமணர்கள் விரும்பாதது இயற்கைதானே!

அரசாங்கத்தாரால் நடத்தப்பெறும் அல்லது அரசாங்கத் தாரிடம் உதவி பெற்று நடத்தப் பெறும் பள்ளிகளையும் கல்லூரி களையும் பகிஷ்கரிக்க வேண்டும் என்பதும் ஒத்துழையாமைப் போர் வேலைத் திட்டங்களில் ஒன்றாக இருந்ததனைத் தமிழ்நாடு காங்கிரஸ் முன்னணித் தலைவர்களில் பெரும்பாலோர் விரும்பவில்லை - குறிப்பாக, கல்வித் துறையில் பிற சாதியினரை விடவும் பெருமளவுக்கு முன்னேறியிருந்த பிராமண சாதியினரில் பலர் கட்டோடு விரும்பவில்லை. இவர்களுடைய தேசபக்தியை யாரும் சந்தேகிப்பதற்கில்லை யென்றாலும், இவர்களில் சிலர் தங்கள் சுய சாதி நலனை மறந்து தேச விடுதலைப் போரில் தங்களை இணைத்துக் கொள்ள இயலாதவர்களாக இருந்தனர்.

இந்தக் காரணங்களால், காந்தியடிகள் ஒத்துழையாமைப் போருக்குத் தேசத்தைத் தயார்ப்படுத்திக் கொண்டிருந்த நேரத்திலே தமிழ்நாடு அதிலிருந்து பின்தங்கிவிடக் கூடிய ஒரு அவலச் சூழ்நிலை உருவாகியிருந்தது. 'இந்து', 'பேட்ரியட்', 'நியூ இந்தியா' ஆகிய ஆங்கில இதழ்களும், தமிழ் நாளிதழான 'சுதேச மித்திரனு'ம் சட்டசபைப் பகிஷ்காரத்தை ஒத்துழையாமைப்

போர் வேலைத் திட்டத்திலிருந்து நீக்கிவிட வேண்டும் என்று பிரசாரம் செய்து வந்தன.

கல்கத்தாவில் செப்டம்பர் மாதத்தில் விசேஷ காங்கிரஸ் மகாசபை கூடுவதற்கு முன்பு தமிழ் நாட்டில் உருவாகியிருந்த அரசியல் சூழ்நிலையே இதுகாறும் விவரிக்கப்பட்டது.

அடிகள் வருகை

இந்தச் சூழ்நிலையை மாற்றி ஒத்துழையாமைப் போரில் தமிழகமும் தனது பங்கைக் குறைவறச் செலுத்துவதற்குச் சாதகமான சூழ்நிலையை உருவாக்க ராஜாஜியும் ஜனாப் யாகூப் ஹசனும் காந்தியடிகளைத் தமிழ் நாட்டிற்குத் தருவித்தனர்.

போதிய முன்னறிவிப்பின்றி 2-8-20-இல் காந்தியடிகள் தமிழ் நாட்டிற்கு வருகை தந்தார். அலி சகோதரர்களில் மூத்தவரான மௌலானா ஷௌவுகத் அலியும் அடிகளாருடன் சேர்ந்துவந்தார். சென்னை சென்டிரல் ஸ்டேஷனில் அவர்கள் இருவருக்கும் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. பல்லாயிரக்கணக்கில் தமிழ் மக்கள் கூடி, காந்திஜியை வரவேற்றனர். தமிழ் நாட்டுக் காங்கிரஸ்காரர்கள் ஒத்துழையாமைப் போர்த் திட்டத்திலே கருத்துவேற்றுமை கொண்டு இருவேறு அணிகளாகப் பிரிந்திருந்தனரென்றாலும், அடிகளை வரவேற்பதில் ஒருமனப் பட்டு அனைவருமே சென்டிரல் ரெயில் நிலையத்தில் திரண்டிருந்தனர்.

அவர்களில் முக்கியமானவர்கள் 'இந்து' ஆசிரியர் எஸ். கஸ்தூரிரங்க ஐயங்கார், ஜனாப் அப்துல் ஹக்கீம், திரு.வி. கல்யாணசுந்தர முதலியார், சி. இராசகோபாலாச்சாரியார், வ.வே.சு. ஐயர், சல்லா குருசாமி செட்டி, எஸ். சத்தியமூர்த்தி, எஸ். ஆதிநாராயணசெட்டி, வி.எஸ். சீனிவாச சாஸ்திரியார், கான்பகதூர் குத்தூஸ் பாஷா ஆகியோராவர்.

காந்திஜி வருகை தந்த நேரத்திலே திரு. கஸ்தூரிரங்க ஐயங்கார் தமிழ் மாகாண காங்கிரசின் தலைவராக இருந்தார். கான்பகதூர் குத்தூஸ் பாஷா அவர்கள் சென்னை மாகாண மத்திய கிலாபத் கமிட்டியின் தலைவராக இருந்து வந்தார். சென்னையில் ஹாஜி அப்துல் ரகிம் சாகிப் காந்திஜியைத் தம் விருந்தினராக ஏற்றார்.

போர்ப் பிரகடனம்!

அடிகள் சென்னை வந்த நாளிலே திருவல்லிக்கேணி கடற்கரையில் நடந்த மாபெரும் பொதுக்கூட்டத்தில் ஒரு மணி

நேரத்திற்கு அதிகமாகச் சொற்பொழிவாற்றினார். அவருடைய பேச்சு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் முதல் நம்பர் எதிரியினுடைய போர்ப் பிரகடனமாக இருந்ததென்று சென்னைப் பத்திரிகைகள் வருணித்தன. பிரிட்டிஷார் விஷயத்தில் தமது நிலை என்ன என்பதை அடிகள் விளக்கிக் கூறியதாவது:

''நான் பிரிட்டிஷாரின் எதிரியல்ல; நான் எந்த அரசாங்கத்திற்கும் எதிரியல்ல! ஆனால் அசத்தியத்தை எதிர்ப்பவன்; வஞ்சகத்தை எதிர்ப்பவன்; அநீதியை எதிர்ப்பவன். மக்களுக்கு அரசாங்கம் அநீதி இழைக்கும் வரை அது என்னைத் தனது எதிரியாகக் கருதிக் கொள்ளலாம். இந்த முயற்சியில் நான் மரணமடைய நேர்ந்தாலும் அது என் பாக்கியமே!''

கான்பகதூர் அப்துல் குத்தூஸ் பாஷா தலைமையில் நடைபெற்ற கடற்கரைக் கூட்டத்திலே ஒத்துழையாமைப் போரில் தமிழ் மக்கள் தங்கள் பங்கைக் குறைவறச் செலுத்துவார்கள் என்பதில் தமக்கு நம்பிக்கை உண்டென்று அடிகள் கூறினார். அது பற்றி அவர் குறிப்பிட்டது வருமாறு:

''உங்களிடமும் - சென்னை நகர மக்களிடமும் இம்மாநில மக்களிடமும் - எனக்கு எல்லையற்ற நம்பிக்கை உண்டு. 1893-இல் தென்னாப்பிரிக்காவில் தமிழ்க் கூலிகளுடன் முதன் முதலாக எனக்கு ஏற்பட்ட தொடர்பிலிருந்து வளர்ந்து வரும் நம்பிக்கை இது. இந்தச் சோதனைக் கட்டத்தில் வேறு எம்மாநிலத்திற்கும் சென்னை மாநிலம் பின் தங்கியதாக இராது. தியாகத்தில் தலைமை தாங்கி நிற்கும். ஒவ்வொரு சொல்லையும் செயலில் மெய்ப்பித்துக் காட்டும்.''

சுற்றுலா

அடிகள் மொத்தம் 10 நாட்கள் தமிழ்நாட்டில் சுற்றுலாச் செய்தார். முஸ்லிம்கள் மிகுதியாக வாழும் நகரங்களுக்கெல்லாம் சென்றார். ''கிலாபத் கிளர்ச்சியை முஸ்லிம்களே கைவிட்டாலும் நான் கைவிடப் போவதில்லை'' என்று காந்திஜி வேலூரில் நடைபெற்ற வடார்க்காடு மாவட்ட கிலாபத் மாநாட்டில் கூறினார். தமிழ்நாட்டில் காந்தியடிகள் சென்ற இடங்களுக்கெல்லாம் மௌலானா ஷௌவுகத் அலியும் சென்றாரென்றாலும், உடல் நலக்குறைவு காரணமாக வேலூர் மாநாட்டில் மட்டும் அவர் கலந்து கொள்ளவில்லை. சென்னை ஹைகோர்ட் கடற்கரையிலே

தொழிலாளர்கள் அடங்கிய பொதுக் கூட்டம் ஒன்றிலும் காந்திஜி பேசினார்.

குடந்தை, நாகை, திருச்சி, தஞ்சை, ஈரோடு, திருப்பூர், சேலம் ஆகிய நகரங்களுக்குச் சென்று, அங்கெல்லாம் இந்துக் களும் முஸ்லிம்களும் அடங்கிய பொதுக் கூட்டங்களிலே ஒத்துழையாமைப் போரின் அவசியத்தை அடிகளும் மௌலானாவும் வலியுறுத்திப் பேசினர். அவர்கள் சென்றவிட மெல்லாம் 'இந்து - முஸ்லிம் ஏக்ஹோ', 'அல்லாஹு அக்பர் - 'வந்தே மாதரம்' என்ற கோஷங்கள் எழுந்தன.

சென்னை நகரில் திருவல்லிக்கேணி பெரிய மசூதியில் முஸ்லிம்களடங்கிய கூட்டமொன்றிலே அவர்களால் அழைக்கப் பட்டு காந்திஜி சொற்பொழி வாற்றினார். சென்னை நகரில் அடிகள் தங்கியிருந்தபோது ஒத்துழையாமை வேலைத் திட்டத்தில் கருத்து வேறுபாடு கொண்டிருந்த காங்கிரஸ்காரர்கள் அடிகளாரைச் சந்தித்து தங்கள் கருத்தை வெளியிட்டனர். அவர்கள் எழுப்பிய ஆட்சேபனைகளுக்கெல்லாம் அடிகள் தக்கவாறு சமாதானம் கூறினாரென்றாலும், அறிவிக்கப்பட்டுள்ள ஒத்துழையாமை வேலைத் திட்டத்திலிருந்து ஒரு அம்சத்தைக் கூடத் தாம் நீக்கப்போவதில்லையென்று தம்மைக் கண்டு பேசிய தலைவர்களிடம் உறுதியாகக் கூறிவிட்டார்.

அந்தரங்கக் கூட்டம்

காந்திஜி சென்னை நகரில் இருந்த நாட்களிலே, ஒத்துழையாமை இயக்கத்தைப் பற்றிப் பரஸ்பரம் கலந்துரையாடத் தமிழ்நாட்டின் காங்கிரஸ் பிரமுகர்கள் பலர் அடங்கிய அந்தரங்கக் கூட்டம் ஒன்று நடந்தது. அதிலே வி.எஸ். சீனிவாச சாஸ்திரி, ஜி.ஏ. நடேசன், சி.பி. ராமசாமி ஐயர், ராவ்பகதூர் அரங்காச்சாரி, டி.எஸ்.எஸ். ராஜன், மதுரை ஜார்ஜ் ஜோசப், குத்தூஸ் பாஷா, யாகூப் ஹாசன் முதலிய காங்கிரஸ் பிரமுகர்கள் கலந்து கொண்டனர். காந்திஜியும் மௌலானா ஷௌவுகத் அலியும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. தங்களுடைய நிர்ப்பந்தமின்றித் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் பிரமுகர்கள் ஒத்துழையாமை பற்றி விவாதித்து முடிவெடுப்பது நல்லதென்று மகாத்மாவும் மௌலானாவும் கருதியிருக்கலாம்.

அந்நாளிலே 'மெட்றாஸ் மெயில்' அப்பட்டமான ஆங்கிலோ - இந்தியப் பத்திரிகையாக வெளிவந்து கொண் டிருந்தது. பிரிட்டிஷ் அரசை ஆதரிப்பதை - தேச விடுதலைக்கான

எந்த முயற்சியையும் எதிர்ப்பதை - அது தனது கடமையாகக் கொண்டிருந்தது. ''அப்பட்டமாகச் சொல்வதானால், அறிவைக் காட்டிலும் அறியாமையைக் காந்திஜி நம்பியிருக்கிறார்'' என்று எழுதியது 'மெயில்.'

சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள சாதாரண மக்களை நம்பித்தான் காந்திஜி ஒத்துழையாமைப் போரைத் தொடங்க விருந்தார். ஆதலால், அதற்கு எதிர்ப்புக் காட்டியவர்களை அறிவாளிகள் என்றும், ஆதரவு காட்டும் சாதாரண மக்களை அறிவற்றவர்கள் என்றும் வருணித்தது 'மெயில்'.

'சுதேச மித்திரன்' பொதுவாக ஒத்துழையாமை இயக்கத்தை ஆதரித்த தென்றாலும், சட்டசபைப் பகிஷ்காரத்தைக் காந்திஜி கைவிடவேண்டும் என்று வற்புறுத்தியது. தமது 'யங் இந்தியா' பத்திரிகை மூலம் காந்திஜி 'சுதேச மித்திரனு'க்குப் பதிலளித்தார்.

அடிகள் கணிப்பு

தமிழ் நாட்டிலே முன்னணியிலிருந்த காங்கிரஸ் தலைவர்கள் ஒத்துழையாமைப் போரின் வேலைத் திட்டம்பற்றி விவாதித்துக் கொண்டிருந்தாலும், பொது மக்கள் மத்தியிலே ஒத்துழையாமைப் போருக்குப் பூரண ஆதரவு இருப்பதை காந்திஜி கண்டார். ஆயினும், ஒத்துழையாமைப் போராட்டத் திட்டமானது படித்த மக்கள் அமுல் நடத்தக் கூடியதாகவே இருந்தது.

வக்கீல்கள் நீதி மன்றங்களிலிருந்து வெளியேறுதல், மாணவர்கள் பள்ளிகளையும் கல்லூரிகளையும் பகிஷ்கரித்தல், அரசாங்க அதிகாரிகள் தாங்கள் வகிக்கும் அலுவல்களைத் துறத்தல், அரசியல்வாதிகள் சட்டமன்றங்களிலிருந்தும் ஸ்தல ஸ்தாபனங்களிலிருந்தும், வெளியேறல், பிரமுகர்கள் பிரிட்டிஷ் அரசிடம் பெற்ற பட்டங்களைத் துறத்தல் ஆகிய அனைத்தும் மேல்தர - நடுத்தர வர்க்கத்தினர் கடைப்பிடிக்க வேண்டியவையா கும். இந்தத் வேலைத் திட்டங்களில் ஒன்றைக்கூட நிறைவேற்றி வைக்கும் நிலையில் சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள மக்கள் இருக்கவில்லை.

ஆகஸ்டு 22-இல், அண்ணல் காந்தி தமிழ் நாட்டினரிட மிருந்து விடை பெற்றுக்கொண்டு வடபுலம் சென்றார். அங்குச் சென்றதும் தமிழகத்தில் தாம் செய்த சுற்றுப் பயணம் பற்றி ''நவ ஜீவன்' (29-8-20) இதழில் அவர் எழுதியது வருமாறு:

''சென்னை மக்கள் என் உள்ளத்தில் பதிந்துள்ள முறையே தனி. சென்னையில் நானும் என்னுடைய நண்பரும் ஆங்கிலத்தில்

சொற்பொழிவாற்றினோம், முஸ்லிம்கள் பெரும்பான்மை யினராக இருந்த சில கூட்டங்களில் ஷௌவுகத்அலி இந்துஸ்தானி யில் பேசினார். மக்களும் முழு அமைதியுடன் இருந்து அவருடைய பேச்சைக் கேட்டனர். என் மனத்தில் அது நல்ல கருத்தை ஏற்படுத்தியது.

''சென்னை மக்களுடைய நம்பிக்கை அளவு கடந்தது. அவர்களுடைய விசுவாசம் எல்லையற்றது. ஆனாலும், இந்தச் சுற்றுப் பயணத்தில் உடனடியாகப் பலன் அதிகம் என்று சொல்ல முடியாது. ஒவ்வொரு இடத்திலும் சில வழக்கறிஞர்கள் தொழிலை விட்டிருக்கிறார்கள். சில பெற்றோர் கல்வி நிலையங்களிலிருந்து தங்கள் பிள்ளைகளை நிறுத்திவிடுவதென்று முடிவு செய்திருக்கிறார்கள். சிலர் தங்களுடைய அலுவலகப் பதவிகளிலிருந்து விலகிவிட்டனர். சிலர் சட்டசபைக்குப் போகும் யோசனையைக் கைவிட்டனர். ஆனாலும், மக்கள் என்மீது வைத்துள்ள அன்பைப் பார்க்கும்போது ஏற்பட்ட பலன் நான் எதிர்பார்த்த அளவில் இல்லை. இதற்கான காரணங்களைப் புரிந்துகொள்வது கடினமல்ல.

''சில தலைவர்களுக்கு ஒத்துழையாமையில் நம்பிக்கை இல்லை. நம்பிக்கையுள்ளவர்களுக்குத் தியாகம் செய்யும் ஆற்றல் இல்லை. மூன்றாவது பிரிவைச் சார்ந்தவர்களோ நாணய மில்லாதவர்கள். அவர்கள் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுகிறார்கள். தலைவர்களின் நிலைமையே இவ்வாறிருப்பதால், மக்கள் உடனடியாகச் செயல்பட இயலாததில் வியப்பில்லை.''

காந்திஜியை அழைத்து வந்து தமிழ்நாட்டில் சுற்றுலாச் செய்ய வைத்துவிட்டால் இங்குள்ள படித்த வகுப்பினர் ஒத்துழையாமைக்கு ஆதரவாக மனமாற்றமடைவர் என்று நம்பிய ராஜாஜியும் யாகூப் ஹாசனும் கூட ஏமாற்ற மடைந்திருக்க வேண்டும்.

காந்திஜி தமிழ் நாட்டிற்கு வருவதற்கு முன்பே - அதாவது, ஆகஸ்டு முதல் தேதியன்றே 'ஒத்துழையாமைப் போர் தொடங்கி விட்டது' என்று பிரகடனம் செய்துவிட்டார். செப்டம்பரில் கல்கத்தாவில் கூடவிருந்த விசேஷ காங்கிரஸ் மாநாடு தமது ஒத்துழையாமை வேலைத் திட்டத்தை ஏற்குமா, ஏற்காதா என்பதைப் பற்றிக் காந்திஜி கவலைப்படவில்லை. தம்மால் தொடங்கப்படும் ஒத்துழையாமைப் போர் கிலாபத் அநீதிக்கும் பஞ்சாப் படுகொலைக்கும் பரிகாரம் காண்பதாகவே இருக்கும் என்பதை அடிகள் தெளிவுபடுத்தி விட்டார்.

முதுபெரும் தேசியத் தலைவரான சேலம் சி. விசயராகவாச் சாரியார், 'தேச விடுதலை ஒன்றிற்காகவே ஒத்துழையாமைப் போர் நடத்தப்பட வேண்டும்' என்று அறிக்கை விட்டார். காந்திஜி அதை ஏற்கவில்லை.

எஞ்சி நின்றது 'கிலாபத்' மட்டுமே!

உண்மையில் பஞ்சாப் படுகொலைக்குப் பரிகாரம் தேடுவதற்காகவும் தாம் ஒத்துழையாமைப் போர் தொடங்குவ தாகக் காந்திஜி கூறினாலும், அதற்கான சந்தர்ப்பம் போய்விட்டது. ஜாலியன் வாலாபாக்கில் படுகொலை நிகழ்த்திய ஜெனரல் டயர் பாரதத்தை விட்டு வெளியேறி, இலண்டனில் தஞ்சம் புகுந்து விட்டார். பஞ்சாப் துணை ஆளுநர் சர். மைக்கேல் ஓட்வியர், தாமாகவே கவர்னர் பதவியைத் துறந்து, ஓய்வு பெற்றவராக இலண்டனுக்கு ஓடி விட்டார்.

இதனால், இவர்கள் விஷயத்தில் அமிர்தசரஸ் காங்கிரஸ் விடுத்த கோரிக்கை நிறைவேறிவிட்டது. அரசியல் குற்றவாளி களுக்குப் பொது மன்னிப்பு அளிப்பதாக 25-12-19-இல் பிரிட்டிஷ் மன்னர் வெளியிட்ட அறிக்கை காரணமாகப் பஞ்சாபில் இராணுவ ஆட்சியின்போது தண்டிக்கப்பட்ட அரசியல் வாதிகள் விடுதலை பெற்று விட்டனர். இவற்றால் பஞ்சாப் அநீதிக்குப் பரிகாரம் காண்பது என்பது அவ்வளவு ஜீவனுள்ள பிரச்சினையாக இருக்க வில்லை. எஞ்சியிருந்தது, உலகப் பெரும்போரின் போது துருக்கி தேசத்திற்கு பிரிட்டன் இழைத்த அநீதியால் எழுந்த கிலாபத் பிரச்னைதான்.

''இஸ்லாமியர் மட்டுமே சம்பந்தப்பட்ட இந்த ஒரு பிரச்சினைக்காக இந்திய தேசத்தினர் எல்லையற்ற தியாகங்களைச் செய்ய வேண்டுமென்று காந்திஜி எதிர்பார்ப்பது நியாயமா?'' என்பது, அவரை எதிர்த்தவர்கள் எழுப்பிய கேள்வியாகும். காந்திஜியின் கருத்து எதுவாயினும், அவரால் அறிவிக்கப்பட்ட ஒத்துழையாமை இயக்கம் தேச விடுதலை சம்பந்தப்பட்டதென்றே சாதாரண மக்கள் கருதினர். இது விஷயத்தில் படித்தவர்களை விடவும் பாமரர்கள் தெளிவாக இருந்தனர்.

கிலாபத் கிளர்ச்சி காரணமாக இந்தியாவில் இந்து - முஸ்லிம் சமுதாயங்களிடையே ஏற்படும் ஒற்றுமையானது, பிற்காலத்தில் நடைபெறவிருக்கும் தேச விடுதலைப் போருக்குப் பெரிதும் பயன்படும் என்பதை உண்மையான தேசபக்தர்கள்

உணர்ந்திருந்தனர். அவர்களெல்லாம் 'ஏன்?', 'எதற்காக?' என்ற கேள்விகள் எழுப்பாமல் காந்தியடிகளைப் பின்பற்றித் தியாக வேள்வியில் குதிக்கத் தயாராயினர்.

அடிகள் பின்னே

ஒத்துழையாமை இயக்கத்தை முணுமுணுப்பின்றி ஏற்றுக் கொண்ட காங்கிரஸ் தமிழர்களிலே ராஜாஜி முக்கியமானவராக இருந்தார். அவர், மிகுந்த வருவாயைத் தந்து கொண்டிருந்த வக்கீல் தொழிலைத் துறந்தார்.

சென்னை பச்சையப்பன் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த தமது மகன் இராமசாமியையும் சென்னை மாநிலக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த மற்றொரு மகன் கிருஷ்ணசாமியையும் அக்கல்லூரிகளிலிருந்து வெளியேறச் செய்து, சேலம் மாவட்டத்திற்குக் கதர்த் தொண்டில் ஈடுபட அனுப்பி வைத்தார். இலண்டன் சென்று படித்து, பாரிஸ்டர் பட்டம் பெற்றிருந்த மதுரை வழக்கறிஞர் ஜார்ஜ் ஜோசப் அவர்கள், தமது தொழிலுக்குத் தலைமுழுக்குப் போட்டு, ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்து கொண்டார்.

வ.உ.சிதம்பரனார் ஒத்துழையாமை இயக்கத்தை ஏற்க மறுத்துக் காங்கிரசிலிருந்து வெளியேறினாரென்றாலும், தமக்கிருந்த தேச பக்தி காரணமாக, வக்கீல் தொழிலுக்கு ஓய்வு கொடுத்து இலக்கியப் பணியில் ஈடுபட்டார்.

சென்னை என்.எஸ். வரதாச்சாரி, எஸ். இராமநாதன் ஆகிய இளம் வழக்கறிஞர்கள் நீதிமன்றத்திற்குச் செல்வதில்லையென அறிக்கை விட்டனர். திரு. வரதாச்சாரி காந்தியடிகளின் சபர்மதி ஆசிரமத்திற்கே சென்றுவிட்டார்.

அங்குமிங்குமாகத் தமிழ்நாட்டு முஸ்லிம்களில் சிலர் கௌரவ மாஜிஸ்டிரேட் உத்தியோகங்களுக்குத் தலைமுழுக்குப் போட்டனர்.

மைலாப்பூர் திருக்கூட்டம்!

பொதுவாக, மயிலாப்பூர் வக்கீல் கூட்டம் ஒத்துழையாமையுடன் ஒத்துழையாமையைக் கடைப்பிடித்து, தனது பழைய போக்கில் பிரிட்டிஷ் விசுவாசப் பாதையிலே நடைபோட்டது. அதிலே, அக்கூட்டம் ஜஸ்டிஸ் கட்சியையே பின்பற்றியது. எப்படியோ, இந்த மிதவாத குழாத்திடமிருந்து விடுதலை பெற்றுவிட்டது தமிழ்நாடு காங்கிரஸ்!

செப்டம்பரில் கல்கத்தாவில் கூடிய விசேஷ காங்கிரசில் சொற்ப ஓட்டு வித்தியாசத்தில் ஒத்துழையாமைத் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டதென்றாலும், அதற்கு, டிசம்பர் திங்களில் நாகபுரியில் கூடவிருந்த வருடாந்திரக் காங்கிரஸ் மகாசபையின் அங்கீகாரத்தைப் பெறவேண்டியிருந்தது.

இந்த மகாசபை கூடுவதற்கு முன்பு தமிழ் நாட்டில் இருவேறு நிகழ்ச்சிகள் நடந்துவிட்டன. ஒன்று, நவம்பரில் நடந்த தேர்தலிலே எதிர்ப்பாரில்லாத நிலையில் வெற்றிபெற்று 4-12-20-இல் ஜஸ்டிஸ் கட்சி ஆட்சிப் பீடத்தில் ஏறியதாகும்.

மற்றொன்று, அப்போது அனைத்திந்திய காங்கிரசின் பொதுச் செயலாளராகவிருந்த ராஜாஜி அவர்கள் தடையுத்தரவை, மீறி நிகழ்த்திய சொற்பொழிவுக்காக வேலூரில் மூன்று மாதச் சிறைத் தண்டனை பெற்றதாகும். ஆம்; டிசம்பர்த் திங்களிலே நீதிக்கட்சி செக்ரடரியேட்டுக்குச் சென்றது! காங்கிரஸ் மகாசபை சிறைச்சாலைக்குச் சென்றது!

★-★-★

காந்தி சகாப்தம் பிறந்தது!

1920 டிசம்பர் இறுதிவாரத்தில் நாகபுரி (ம.பி) நகரில் கூடிய 35-வது காங்கிரஸ் மகாசபை தமிழ்நாட்டுக்கு ஒரு தனிச் சிறப்பைத் தருவதாக இருந்தது. காரணம், தமிழ்நாட்டின் முதுபெரும் அரசியல் தலைவரான - 'தமிழ்நாட்டின் தாதாபாய்' என்றழைக்கப்பட்ட - சேலம் சி. விசயராகவாச்சாரியார் அந்த மகாசபையில் தலைமை தாங்கியதாகும்.

காங்கிரஸ் மகாசபை தோன்றி முப்பத்தைந்து ஆண்டுகளுக்குப் பின்னர் நாகபுரியில்தான் அம்மகாசபைக்குத் தலைமை தாங்கும் பேறு முதல் முதலாக ஒரு தமிழருக்குக் கிடைத்தது. அதற்கு முன், ஆந்திரரான அனந்தாச்சார்லுவும், கேரளரான சர். சங்கரன் நாயரும் தலைமைப் பதவியைப் பெற்றதுண்டு. சென்னை வாசிகளான அன்னிபெசன்ட் அம்மையாரும், நவாப் சையத் முகமதுவும் காங்கிரஸ் மகாசபைக்குத் தலைமை தாங்கினர். மொழியால் முன்னவர், ஐரிஷ்காரர்; பின்னவர், கருநாடகர்.

1918-இல் டில்லியில் கூடிய மகாசபைக்கே சேலம் ஆச்சாரியப் பெருமகனார் தலைமை தாங்கியிருக்க வேண்டும். அப்போது, இந்து ஆசாரத்தின் மொத்தவடிவமான பண்டித மாளவியாவுக்கு விட்டுக் கொடுத்துவிட்டார். அதனால், விடுதலைப் போராட்டத்தின் சோதனை மிக்க ஒரு காலகட்டத்தில் - திலகர் சகாப்தத்திலிருந்து காந்தி சகாப்தத்துக்குத் தேசம் மாறிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்திலே - தமிழரான 'சேலத்துக் கிழவர்' காங்கிரஸ் மகாசபைக்குத் தலைமை தாங்கும் பெருமையைப் பெற்றார்.

சேலம் வீரர்!

அந்நாளில், விடுதலைப் பாசறைத் தளபதிகள் அடையக் கூடிய பெரிய பதவி ஒன்று இருந்ததென்றால், அது வருடாந்தரக் காங்கிரஸ் மகாசபையின் தலைமைப் பதவிதான். அதனைச் சேலம் சி. விசயராகவாச்சாரியார் அடைந்தது தமிழருக்கெல்லாம் பெருமை தருவதாக இருந்தது. அவர் 1887-இல் சென்னை நகரில்

நடந்த 3-வது மகாசபைக் கூட்டத்திலேதான் முதன் முதலாகக் காங்கிரஸ் ஜோதியில் கலந்தார்.

1882-இல் சேலம் நகரில் இந்து - முஸ்லிம்களிடையில் ஏற்பட்ட மிகப் பெரிய கலவரத்தையொட்டி, திரு.சி. விஜயராகவாச் சாரியார் மீது, கலகத்தைத் தூண்டியவர் எனக் குற்றம் சாட்டி, சென்னை மாகாண அரசு வழக்குத் தொடுத்தது. அந்த வழக்கை விசாரித்த வெள்ளை நீதிபதி ஆச்சாரியாருக்குப் பத்து வருடக் கடுங்காவல் தண்டனை விதித்து, அதை அந்தமான் தீவிலுள்ள சிறைச்சாலையில் அனுபவிக்க வேண்டுமென்று தீர்ப்பளித்தார்.

ஆச்சாரியார் சென்னை உயர் நீதி மன்றத்திற்கு அப்பீல் செய்தார். அந்நாளில் புகழ்மிக்க வழக்கறிஞராக விளங்கிய ஆங்கிலேயரான திரு. நார்ட்டன் துரை ஆச்சாரியார் சார்பில் வாதாடித் தண்டனை ரத்தாகும்படிச் செய்தார். வழக்கு நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் ஆச்சாரியாரை ஜாமீனில் விட மறுத்தது உயர்நீதி மன்றம். அதனால், பல மாத காலம் அவர் சிறையில் அடைப்பட்டிருக்க நேர்ந்தது. தமிழகத் தலைவர்களிலே முதன் முதலில் சிறை வாழ்க்கை நடத்தியவர் சி. விசயராகவாச்சாரியாரேயாவார். 'சேலம் வீரர்' என்றே இவர் அழைக்கப்பட்டார், வடபுலத்துத் தலைவர்களால்! இப்பெரியார் 94 வயது வரை வாழ்ந்தார்.

சேலம் வகுப்புக் கலவர வழக்கில் தம்முடன் நாடு கடத்தல் தண்டனை பெற்ற வேறு 9 பேரையும் விடுவிக்கப் பெருமுயற்சி எடுத்து, அதிலே வெற்றியும் பெற்றார். அந்தமான் சிறையிலிருந்து அவர்கள் விடுதலை பெற்றனர்.

நாகபுரி காங்கிரஸ்

சேத் ஜம்னாலால் பஜாஜ் அவர்கள் நாகபுரி காங்கிரஸ் மகாசபையின் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்து அதனை வெற்றிகரமாக நடத்தி வைத்தார். மௌலானா ஷௌவுகத் அலி நாகபுரி காங்கிரஸ் மகாசபையில் பேசுகையில்,

> ''தென்னிந்திய பிராமண சமூகம் வீரர்களைத் தோற்று விக்கும் சக்தியை முற்றிலும் இழந்துவிட்டதோ வென்று ஐயுற்றேன். ஆனால், சேலம் சி. விசயராகவாச்சாரியார் எனது ஐயத்தைப் பொய்யாக்கி விட்டார்''

என்று கூறி, ஆச்சாரியாரையும் அவரைத் தந்த சமூகத்தாரையும் பாராட்டினார்.

காங்கிரஸ் மகாசபை கூடிய நாகபுரி நகரைத் தன்னுட் கொண்ட மத்தியப் பிரதேசக் காங்கிரஸ் கமிட்டி ஒத்துழை யாமையைக் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டதென்றாலும், சட்டசபைப் பகிஷ்காரத்தை ஏற்க மறுத்ததோடு, வங்க மாநிலத்தோடு கூட்டுச் சேர்ந்து எதிர்த்தும் போராடியது. அதனால், நாகபுரிக் காங்கிரஸ் ஒத்துழையாமையை ஆதரிப்போரும் எதிர்ப்போரும் சந்திக்கும் போர்க்களமாக விளங்குமென்று எதிர்பார்க்கப்பட்டது. பிரதிநிதிகள் தொகை 15 ஆயிரத்தை எட்டியது. முந்திய காங்கிரசுக்கு வந்தவர்களை விடவும் இரண்டு பங்காகப் பிரதிநிதிகளின் எண்ணிக்கை உயர்ந்துவிட்டது.

எதிர்த்தவரே முன் மொழிந்தார்!

தேசபந்து தாசர் ஒத்துழையாமையை எதிர்ப்போரின் அணிக்குத் தலைவராக விளங்கினார். லாலா லஜபதிராய் தாசருக்கு வலது கரமாக விளங்கினார். ஒத்துழையாமையை ஆதரித்து நிற்போருக்கு ராஜாஜியும் அலி சகோதரர்களும் வழிகாட்டிகளாக இருந்தனர்.

ஒத்துழையாமை பற்றிய தீர்மானத்தைக் காந்தியடிகளே தயாரித்தார். அதற்கு எதிராகச் சில திருத்தங்களைத் தாசரும் லஜபதிராயும் தயாரித்தனர். மகாசபைக் கூட்டத்திலே விவாதம் பலமாக இருந்தது. தமது தலைமையுரையிலே சி.விசயராகவாச்சாரியார் ஒத்துழையாமை பற்றிக் கூறியதாவது:

> ''ஒத்துழையாமைப் பிரகடனம் செய்வதென்றால் குறிப்பிட்ட ஒன்றிரு அநீதிகளைப் பொறுத்ததாக மட்டும் அது ஏன் இருக்க வேண்டும்? நாடு அனுபவித்துக் கொண்டிருக்கும் பெரிய அநீதி அதற்குச் சுயராஜ்யம் இல்லாமல் இருப்பதேயாகும். ஆகையால், ஒத்துழையாமை அந்த அநீதியை எதிர்த்துப் போராடுவதாக இருக்க வேண்டும்.''

ஒத்துழையாமைத் தீர்மானம் பற்றிக் காந்திஜி சமரச மனோபாவத்துடன் நடந்து கொண்டார். ஆம்; நீதி மன்றங் களையும் அரசுக் கல்லூரிகளையும் நாளடைவில் கொஞ்சம் கொஞ்சமாகப் பகிஷ்கரிக்கலாம் என்று பண்டித மோதிலால் நேரு கொடுத்த திருத்தத்தையும், இந்தியா சுதந்திரம் பெறுவதற்காகத்தான் ஒத்துழையாமைப் போர் தொடங்கப்பட விருக்கிறதென்பதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று விசயராகவாச்சாரியார் கூறியதையும் காந்திஜி ஏற்றுக்கொண்டார். அதனால், அந்தத் தீர்மானத்தை மகாசபைக் கூட்டத்திலே தேசபந்து சித்தரஞ்சன் தாசரே பிரேரேபித்தார். லாலா லஜபதிராய்

ஆமோதித்தார். தீர்மானத்தில் சட்டமன்ற நீதிமன்ற பகிஷ்காரங்கள் இடம் பெற்றிருந்தன. பட்டங்களைத் துறப்பதும் நீக்கப்படவில்லை. சுதேசிப் பொருள்களுக்கு ஆதரவளித்தல், விதேசிப் பொருள்களைப் பகிஷ்கரித்தல் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டன. கிலாபத், பஞ்சாப் அநீதிகளுக்குப் பரிகாரம் கோரும் வாசகங்கள் தீர்மானத்திலிருந்து அகற்றப்படவில்லை.

பொதுவாக, காந்திஜி தம் கொள்கைகளில் வெற்றிபெற்று விட்டார். அவரது தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. மகாசபைத் தலைவர் சேலம் சி. விசயராகவாச்சாரியாருக்கு ஒத்துழையாமையை காந்திஜி விரும்பிய வடிவத்தில் ஏற்க விருப்பமில்லையென்றாலும், விட்டுக் கொடுத்துத் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டார்.

வேலைத் திட்டத்தில் மாறுதல்!

ஒத்துழையாமைத் தீர்மான விஷயத்தில் தலைவர்களெல்லாம் ஒருமனப்பட்டு நின்று அதை நிறைவேற்றி வைத்த போது, ''மகாத்மா காந்திக்கு ஜே!'', ''அல்லாஹு அக்பர் - வந்தே மாதரம்!'' என்னும் கோஷங்கள் மகா சபையில் பல நிமிஷ நேரம் தொடர்ந்து ஒலித்தன. இதிலிருந்துதான் தேசத்தில் காந்தி சகாப்தம் தோன்றியதெனலாம். நாகபுரி காங்கிரசில் காங்கிரஸ் மகாசபையின் வேலைத் திட்டம் மாறியதோடன்றி, கொள்கையும் மாற்றப்பட்டது. அதுவரை, இந்தியாவுக்கு பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்குட்பட்ட சுயாட்சி தேடுவது காங்கிரசின் கொள்கையாக இருந்தது. இதற்கு மாறாக, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கு உட்பட்ட சுயாட்சி தேடுவது சாத்தியமில்லை யென்றால், சட்டத்திற்கு உட்பட்ட முறையிலும் சமாதானமான வழிகளிலும் பூரண சுதந்திரம் தேடுவதே காங்கிரசின் கொள்கை என்று தீர்மானிக்கப்பட்டது. இதற்கு, காங்கிரசின் அமைப்பு விதிகளில் முதலிடம் தருவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

காங்கிரஸ் அமைப்பு விதிகள் காந்திஜியின் ஆலோசனைப்படி திருத்தப்பட்டன. இதற்குப் பிறகுதான் மாகாண, மாவட்ட, நகர, கிராம ரீதியில் காங்கிரஸ் கமிட்டிகள் அமைக்கப்பட்டன. மாகாண காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர்கள் மூலம் வருடந்தோறும் காங்கிரஸ் மகாசபைத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படவும் விதி வகுக்கப்பட்டது. காங்கிரஸ் மேலிடத்துக்கெனக் காரியக் கமிட்டி ஒன்று நிறுவவும் வழி செய்யப்பட்டது.

காங்கிரஸ் மாகாணங்களை மொழிவாரித் திருத்தியமைக்கத் தீர்மானிக்கப்பட்டது. இதுகாறும் சென்னை மாகாணத்தில்

ஆந்திரம் மட்டுமே தனி மாகாணக் கமிட்டியைப் பெற்றிருந்தது. நாகபுரிக் காங்கிரசுக்குப்பின் தமிழ்நாடும் தனிமாகாணக் காங்கிரஸ் கமிட்டியைப் பெற்றது. அது 'தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி' எனப் பெயர் பெற்றது.

திலகர் நினைவாக ஒரு கோடி ரூபாய் 'சுயராஜ்ய நிதி' திரட்டவும் நாகபுரிக் காங்கிரஸ் தீர்மானித்தது. இத்துடன், காங்கிரஸ் உறுப்பினர் சேர்த்திடும் பணியைத் தீவிரப்படுத்தி, உறுப்பினர் தொகையை ஒரு கோடியாக உயர்த்தவும் முடிவு செய்யப்பட்டது.

காங்கிரஸ் மகாசபையின் வரலாற்றிலே பிரிட்டிஷ் மன்னருக்கு வாழ்த்துப் பாடியோ, பாராட்டுத் தெரிவித்தோ, நன்றி கூறியோ தீர்மானம் நிறைவேற்றாத முதல் காங்கிரஸ் இதுதான். அத்துடனன்றி, ஒத்துழையாமை பற்றிய தீர்மானத்திலே, 'பிரிட்டிஷ் ஆட்சியிடம் காங்கிரஸ் தனது நம்பிக்கையைப் பூரணமாக இழந்து விட்டது' என்ற வாசகமும் சேர்க்கப்பட்டது.

புதிய அரசியல் சீர்திருத்தத்தைத் தொடங்கி வைக்க இந்தியா வரவிருக்கும் கான்னாட்கோமகன் வரவேற்பில் கலந்து கொள்வதில்லையென்றும் நாகபுரி காங்கிரஸ் தீர்மானித்தது.

நாகபுரியில் தமிழ்நாட்டுத் தலைவர் ராஜாஜி, காங்கிரஸ் மகாசபையின் பொதுச் செயலாளர் மூவரில் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதன் மூலம் முதன் முதலாக ராஜாஜி தேசிய அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டார். மற்றிரு பொதுச் செயலாளர்கள் பண்டித மோதிலா நேருவும், டாக்டர் அன்சாரியுமாவர்.

நாகபுரி காங்கிரசுக்குப் பிரிட்டிஷ் தொழிற் கட்சியின் சார்பில் கர்னல் வெட்ஜ்வுட், ஹால்போர் நைட், பென்ஸ்பூர் ஆகியோர் பார்வையாளராக வந்திருந்தனர். கர்னல் வெட்ஜ்வுட், காங்கிரஸ் மகாசபையில் பேச அனுமதி பெற்று, ஒத்துழையாமைப் போரைக் கடுமையாகக் கண்டித்துப் பேசினார். பிரிட்டனிலுள்ள நண்பர்களைப் பகைத்துக் கொள்ளாதீர்!'' என்று அவர் எச்சரிக்கை விடுத்தார். அவருக்குப் பதிலளித்து, 'இந்தியாவுக்கு வெளியேயுள்ள அன்னியர் எவரும் இந்தியருடைய நண்பர்களல்ல என்பதுதான் உண்மை. வீணாக மனப்பால் குடிக்க வேண்டாம்' என்று இந்தியப் பிரதிநிதி ஒருவர் சுடச்சுடக் கொடுத்தார்.

தமிழ்நாட்டவரான சி. விசயராகவாச்சாரியார் தலைமையில் நாகபுரியில் கூடிய 35-வது காங்கிரஸ் மகாசபையானது எல்லா வகையிலும் வெற்றிகரமாக முடிந்தது. காந்தி சகாப்தத்தைத்

தொடங்கிவைத்த பெருமை தமிழர் ஒருவர் தலைமையில் கூடிய நாகபுரி காங்கிரசினுடையதுதான்.

காந்தி சகாப்தத் தொடக்க ஆண்டில்தான் காங்கிரஸ் மகா சபையில் தமிழ்நாடு தனி மாநிலமாகவும், விடுதலைப் போரில் தனித்து நின்று பங்கு கொள்ளும் சுயாட்சிப் பிரதேசமாகவும் இயங்கும் உரிமையைப் பெற்றது. வாழ்க காந்தியடிகள் புகழ்!

'வாழ்க நீ எம்மான்!'

இந்த இடத்திலே விடுதலைப் போர்க்களத்தின் முதல் தளபதியான காந்திஜியையும், அவரது காந்தியத் தத்துவத்தையும் வரவேற்றுப் பாரதியார் பாடிய 'காந்தி பஞ்சக'த்தை வாய் மணக்கப் பாடி மகிழ்வோமாக!

வாழ்க நீ! எம்மான், இந்த
வையத்து நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மஹாத்மா! நீ வாழ்க! வாழ்க!
அடிமைவாழ் வகன்றிந் நாட்டார்
விடுதலை யார்ந்து செல்வம்,
குடிமையி லுயர்வு, கல்வி
ஞானமும் கூடியோங்கிப்
படிமிசைத் தலைமை யெய்தும்
படிக்கொரு சூழ்ச்சி செய்தாய்
முடிவிலாக் கீர்த்தி பெற்றாய்
புவிக்குளே முதன்மை யுற்றாய்!

வேறு

கொடியவெந் நாக பாசத்தை மாற்ற
மூலிகை கொணர்ந்தவ னென்கோ!
இடிமின்னல் காக்கும் குடை செய்தா னென்கோ!
என்சொலிப் புகழ்வதிங் குனையே!
விடிவிலாத் துன்பஞ் செயும் பராதீன
வெம்பிணி யகற்றிடும் வண்ணம்
படிமிசைப் புதிதாச் சாலவு மெளிதாம்
படிக்கொரு சூழ்ச்சி நீ படைத்தாய்!

தன்னுயிர் போலே தனக்கழி வெண்ணும்
பிறனுயிர் தன்னையுங் கணித்தல்;
மன்னுயி ரெல்லாம் கடவுளின் வடிவம்
கடவுளின் மக்களென் றுணர்தல்;
இன்னமெய்ஞ் ஞானத் துணிவினை மற்றாங்
கிழிபடு போர், கொலை, தண்டம்
பின்னியே கிடக்கும் அரசிய லதனிற்
பிணைத்திடத் துணிந்தனை, பெருமான்!
பெருங்கொலை வழியாம் போர்வழி யிகழ்ந்தால்,
அதனிலுந் திறன்பெரி துடைத்தாம்
அருங்கலை வாணர் மெய்த்தொண்டர் தங்கள்
அறவழி யென்று நீ யறிந்தாய்;
நெருங்கிய பயன்சேர் 'ஒத்துழையாமை'
நெறியினால் இந்தியா விற்கு
வருங்கதி கண்டு பகைத்தொழில் மறந்து
வையகம் வாழ்க நல் லறத்தே!

கான்னாட் கோமகன் பகிஷ்காரம்

1921 ஜனவரி 3-ஆம் தேதியன்று புதிய அரசியல் சீர்திருத்தம் - அதாவது, இரட்டையாட்சி முறை நடைமுறைக்கு வந்தது. அன்று மாநிலந்தோறும் ஆளுநர்களும் அவர்களின் நிர்வாக சபை உறுப்பினர்களும் அமைச்சர்களும் விசுவாசப் பிரமாணம் எடுத்துப் பதவியேற்றனர்.

புதிய அரசியல் சீர்திருத்தத்தைத் தொடங்கி வைக்க கான்னாட் கோமகன் (டியூக் ஆப் கான்னாட்) இந்தியாவுக்கு வருகை தந்தார். முதலில் வேல்ஸ் இளவரசர் வருவதாக இருந்தது. அவருக்கு உடல்நல மில்லாததால், அவருக்குப் பதில் கான்னாட் கோமகன் அனுப்பப்படுவாரென்று 23-12-20-இல் பிரிட்டிஷ் மன்னர்பிரான் அறிவித்தார்.

நாகபுரி காங்கிரஸ் கான்னாட் கோமகனைப் பகிஷ்கரிப்ப தென்று தீர்மானித்ததால், அதன்படி, பகிஷ்கார ஏற்பாடுகள் காங்கிரஸ் கமிட்டிகளால் செய்யப்பட்டன. கோமகனார் சென்னை நகருக்குத்தான் முதலில் வருகை தருவாரென்று அறிந்ததால், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி பகிஷ்காரத்திற்குரிய ஏற்பாடுகளில் தீவிரங் காட்டியது. அவர் வருவதற்கு ஆறு நாட்களுக்கு முன்பே - அதாவது, 15-1-21 அன்று சென்னைக் கடற்கரையில் மாபெரும் பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. பதினாயிரக்கணக்கான மக்கள் திரண்டனர். அதிலே,

''கான்னாட் கோமகனுடைய வரவையொட்டி நடத்தப் படும் நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளுவதில்லையென்று சென்னை நகர மக்களடங்கிய இந்தக் கூட்டம் தீர்மானிக்கிறது.''

என்னும் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.

பகிஷ்காரப் பிரசாரம் தொடர்ந்து ஒரு வார காலம் நடந்தது. சென்னை நகரில் முச்சந்திதோறும் கூட்டங்கள் நடத்தப்பட்டன. நகரின் பல பேட்டைகளிலும் ஊர்வலங்கள் நடத்தப்பெற்றன. நகரெங்கும் கோமகனார் பகிஷ்காரம் பற்றியே பேச்சாக இருந்தது.

''கான்னாட்டைப் பகிஷ்கரியுங்கள்!''

''நம்முடைய குறைகளை கான்னாட் தீர்க்க முடியாது!''

''ஜாலியன் வாலாபாக் படுகொலையை மறவாதீர்!''

என்ற வாக்கியங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகள் தெரு தோறும் காணப்பட்டன.

இயற்கையும் எதிர்த்தது!

கான்னாட் கோமகன் கப்பல் மூலம் *10-1-21* அன்று சென்னைத் துறைமுகத்தில் வந்து இறங்கினார். அன்று நகரம் முழுவதிலும் கடைகள் அடைக்கப்பட்டு பூரண அர்த்தால் அனுட்டிக்கப்பட்டது. அன்று மாலை கடற்கரையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் 50 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் திரண்டு, தேசத்தின் பிதாமகனாகிய காந்தியடிகள் ஆணைப்படி கான்னாட்கோமகனாருக்குத் தங்கள் எதிர்ப்பைக் காட்டினர்.

சென்னைக் கடற்கரையின் மற்றொரு புறத்தில் கோமகனாரை வரவேற்கும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. சென்னை மாநகராட்சியின் சார்பில் அங்கு அவருக்கு வரவேற்பிதழ் வாசித்தளிக்கப்பட்டது. ஆம்; அப்போதுதான் ஆட்சிக்கு வந்திருந்த ஜஸ்டிஸ் கட்சியினர், கான்னாட் கோமகனாரை வரவேற்றுத் தங்களது பிரிட்டிஷ் விசுவாசத்தை வெளிப்படுத்தினர்.

ஜனவரி 12-இல் சென்னை மாகாணச் சட்டமன்றத்தை கான்னாட் கோமகன் தொடங்கி வைத்து உரையாற்றினார். இந்நிகழ்ச்சிக்குப் பின் அவரை ஊர்வலமாக அழைத்துச் செல்லவும் ஏற்பாடாகியிருந்தது. அதற்காக ஊர்வலம் செல்ல விருந்த வீதிகள் அலங்கரிக்கப்பட்டிருந்தன. ஆனால், பெருமழை காரணமாக ஊர்வலம் ரத்துச் செய்யப்பட்டதுடன் அலங்காரங்

களும் பாழ்பட்டன. 'இயற்கை கூட ஒத்துழையாதார் பக்கமே இருக்கிறதென' மக்கள் பேசிக் கொண்டனர்.

கான்னாட் கோமகனார் முதலில் பம்பாய் மாகாணத்திற்குத் தான் சென்றிருக்க வேண்டும். லண்டனிலிருந்து கப்பலில் வருவோர் நேரே பம்பாய் நகரத் துறைமுகத்தில் இறங்குவது தான் வழக்கம். இதற்கு மாறாக, அவர் முதலில் சென்னையில் இறங்கியதற்கு விசேஷ காரணமுண்டு - அதாவது, சென்னை மாகாணந்தான் பாதுகாப்பான இடமென்று இந்திய அரசு கருதியது. பிராமணர் - பிராமணரல்லாதார் வேற்றுமை பயன்படு மென்று நம்பியது. அதனால், முதலில் சென்னையில் கான்னாட் கோமகனுக்கு ராஜோபசாரம் நடைபெற்றுவிட்டால், பின்னர் வடபுலத்திலும் சிறப்பான வரவேற்புத் தரப்படுமென்று வைசிராய் கருதியிருக்க வேண்டும். அதனாற்றான், கோமகனார் தருமமிக சென்னையில் முதலில் கால் வைத்து, இங்குள்ள பிரிட்டிஷ் விசுவாசிகளின் வரவேற்பைப் பெற்று, பின்னர் வடபுலம் சென்றார். ஆனால், சென்னையிலும் பொதுமக்களின் எதிர்ப்பு கடுமையாக இருந்தது. காங்கிரஸ் மிதவாத தலைவர் களில் பலர் தலைமறைவாகிவிட்டன ரென்றாலும், அப்போது தான் அரசியல் அடிவானத்தில் உதய சூரியனாகத் தோன்றி உச்சிவானத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த ராஜாஜியின் பெரு முயற்சியால் கான்னாட் கோமகனைப் பகிஷ்கரிக்கும் ஊர்வலங்களும் பொதுக் கூட்டங்களும் எதிர் பார்த்ததை விடவும் அதிக அளவில் வெற்றிகரமாக நடை பெற்றன. டாக்டர் பி. வரதராசுலு நாயுடு, திரு.வி. கலியாண சுந்தனார் ஆகியோர் ராஜாஜிக்குப் பக்கத்துணையாக இருந்தனர்.

பலவீன மன்று; பண்பாடு!

''இந்தப் பகிஷ்காரத்தின் விளைவாகப் பெரிய அளவில் அமைதிக்குப் பங்கம் ஒன்றும் ஏற்பட்டுவிடவில்லை'' என்று சென்னை மாகாண அரசு மத்திய அரசுக்கு எழுதியது. பகிஷ்காரம் அமைதிகரமாக நடைபெற்றதென்றால், அது தமிழகத்தின் பலவீனமன்று; பண்பாடு! ஆனால், வெள்ளையருக்கு இது விளங்காதுதானே! கான்னாட் கோமகனும், தமது பேச்சொன்றில் சென்னை மாகாணத்திற்கு சபாஷ் கூறினார். 'இந்தியாவில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் முதன் முதலில் சென்னையில்தான் உறுதியாக ஸ்தாபிக்கப்பட்டது' என்றும் திருவாய் மலர்ந்தார்.

பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக முதன்முதலில் விடுதலைப் போர் தொடங்கிய கட்டபொம்மன் பிறந்ததும், ஏகாதிபத்தி யத்திற்குப் பரணிபாடிய பாவலன் பாரதி தோன்றியதும்

ஏகாதிபத்தியக் கப்பலுக்கு எதிர்க் கப்பலோட்ட வ.உ.சி. பிறந்ததும் சென்னை ராஜ்யத்தில்தான் என்பது கான்னாட் கோமகனாருக்குத் தெரிந்திருக்காதுதானே!

மத்திய இந்தியாவில் 15 நாட்கள் சுற்றுலாச் செய்துவிட்டு 28-1-20- இல் கோமகனார் கல்கத்தா போய்ச் சேர்ந்தார். அவர் செல்வதற்கு முன்புள்ள எட்டு நாட்களில் அங்கேயும் சென்னையைப் பின்பற்றி எதிர்ப்பு ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன. கோமகனார் கல்கத்தா சென்ற நாளிலே பூரண அர்த்தால் அனுஷ்டிக்கப் பெற்றது. காந்தியடிகள் கல்கத்தாவில் இருந்தார். அவர் மக்கள் மத்தியில் சென்று, அமைதியைக் கடைப்பிடிக்குமாறும், கோமகனாரை வரவேற்க விரும்புவோரை அனுமதித்து விடுமாறும் கேட்டுக்கொண்டு, அசம்பாவிதம் எதுவும் நிகழாமல் காத்தார்.

கல்கத்தா நகரில் நடத்தப் பெற்ற எதிர்ப்புக் கூட்டங்களிலே ஒவ்வொன்றிலும்,

> ''சட்டமன்றம் மக்களுக்குப் பிரதிநிதித்துவ முடையதல்ல; தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் உடனடியாக ராஜிநாமாச் செய்ய வேண்டும்.''

என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கல்கத்தாவிலும் கோமகனார் வங்காளச் சட்டமன்றக் கூட்டத்தை 1-2-20-இல் தொடங்கி வைத்துப் பேசினார். 8-2-21-இல் கான்னாட் கோமகனார் டில்லியில் சமஸ்தான மன்னர்கள் சபையைத் தொடங்கி வைத்துப் பேசினார். இது, டில்லி செங்கோட்டையில் நடைபெற்றது. 210 சமஸ்தானங்களின் மன்னர்கள் கலந்து கொண்டனர்.

'மன்னித்து, மறக்கவும்!'

மறுநாள் (9-2-21) டில்லி ராஜ்யங்கள் சபை, அசெம்பிளி ஆகியவற்றின் கூட்டுக் கூட்டத்தைத் தொடங்கி வைத்துப் பேசினார். கோமகனாருக்கு முன் வைசிராய் வரவேற்புரை நிகழ்த்தினார். அப்பெருமகனார், அடிமைப்பட்ட இந்திய மக்களுக்கு ஆளுஞ் சாதியாரான ஆங்கிலேயர் கருணை கூர்ந்து அவ்வப்போது வழங்கி வந்த சீர்திருத்தங்களை விளக்கினார்.

அவருக்குப் பின், பிரிட்டிஷ் மன்னர் பிரானின் பிரகடனத்தை அவர் சார்பில் படித்துவிட்டு, அதன்பின் கோமகனார் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தமது உரையை நிகழ்த்தினார். அவர் தமது பேச்சின் தொடக்கத்தில்,

''நண்பர்களாக இருக்க வேண்டியவர்கள் பகைவர்களாகி விட்டதைப் பார்க்கிறேன். எனக்கு எதிராக வரம்பு கடந்த துவேஷத்தையும் பகைமையையும் வெளிப்படுத்துவதையும் பார்க்கிறேன்.''

என்று துக்கந் தோய்ந்த குரலில் கூறினார்.

கான்னாட் கோமகனார் தனது பேச்சில் பஞ்சாபில் இராணுவத்தார் நிகழ்த்திய அட்டூழியங்கள் பற்றியும் பேசினார். அது வருமாறு:

''ஜாலியன்வாலாபாக்கின் நிழல் இந்தியாவின் அழகிய முகத்தைத் தீண்டியிருக்கிறது. என்னைவிட அந்த நிகழ்ச்சியைப் பற்றி அதிகமாக வேதனைப்படுவோர் வேறு யாரும் இருக்க முடியாது.

''புண்களை ஆற்றிப் பிரிந்திருப்பவர்களை ஒன்றுபடுத்தும் விருப்பம் மேலிடும் உணர்ச்சியை நான் இப்பொழுது அடைந்துள்ளேன். வெகு காலந்தொட்டு இந்தியாவின் ஆப்த நண்பன் என்கிற முறையில், பழைய தகராறுகளையும் கோபச் செயல்களையும், சம்பவங்களையும் மன்னித்து மறந்துவிடுமாறு இந்தியர்களையும் ஆங்கிலேயர்களையும் நான் வேண்டிக் கொள்கிறேன். ஆங்கிலேயர்களும் இந்தியர்களும் இனி ஒவ்வொரு நாளும் அதிக அளவில் ஒத்துழைக்க வேண்டுமென்று நான் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.''

டில்லியிலும் கான்னாட் கோமகனாரின் வருகையையொட்டி பூரண அர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. எதிர்ப்புக் கூட்டங்களும் ஊர்வலங்களும் நடத்தப்பட்டன. டில்லி மாநகராட்சியில் பிரிட்டிஷ் மன்னர்பிரானின் விசேஷ பிரதிநிதிக்கு வரவேற்பிதழ் வாசித்தளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்தக் கூட்டத்திற்கு வராமல் மாநகராட்சியின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களில் பெரும்பாலோர் பகிஷ்கரித்தனர். அரசால் நியமிக்கப்பட்ட உறுப்பினரிலும் பலர் வரவில்லை. மாநகராட்சித் தலைவரே வரவில்லை. அதனால், மாநகராட்சியின் சார்பில் ஜில்லா மாஜிஸ்திரேட் வரவேற்பிதழை வாசித்தளித்தார். இந்த நிகழ்ச்சியைக் குறிப்பிட்டு டில்லி காங்கிரஸ் கமிட்டி வெற்றிப் பெருமிதத்துடன் பிரசுரம் வெளியிட்டது.

லண்டன் திரும்பினார்

23-2-21-இல் பம்பாய் சென்று பம்பாய் மாகாண சட்ட மன்றத்தைத் தொடங்கி வைத்துக் கான்னாட் கோமகன் பேசினார்.

அன்று பம்பாய் நகரிலும் பகிஷ்கார ஊர்வலங்களும் பொதுக் கூட்டங்களும் கடையடைப்பும் நடைபெற்றன.

பிரிட்டிஷ் அரசர் பெருமானின் விசேஷப் பிரதிநிதியாக சென்னையில் 10-1-21-இல் கப்பலை விட்டிறங்கிய கான்னாட் கோமகனார், 28-2-21-இல் பம்பாய் துறைமுகத்தில் கப்பலேறி னார். ஆம்; இந்தியாவிலிருந்து வெளியேறினார், வெள்ளை ஏகாதிபத்தியத்தின் விசேஷப் பிரதிநிதி!

1921-ஆம் ஆண்டில் தமிழ் நாட்டோடு தொடர்புடைய முக்கிய நிகழ்ச்சிகள் நான்கை வரலாறு பெற்றுவிட்டது. ஒன்று, கேரளத்தில் நடைபெற்ற மாப்பிள்ளைமார் கலகம்; மற்றொன்று காந்தியடிகளின் தமிழ்நாட்டுச் சுற்றுலா; இன்னொன்று, கான்னாட்கோமகன் பகிஷ்காரம்; பின்னொன்று ராஜாஜி மீது நடந்த அரச நிந்தனை வழக்கு. இந்த நான்கு நிகழ்ச்சிகளும் ஒத்துழையாமை இயக்கத்திலிருந்து தமிழ்நாடு ஒதுங்கியிருக்க வில்லையென்பதைக் காட்டிவிட்டன.

நாகபுரி காங்கிரஸ் முடிந்ததும், அங்கு நிறைவேற்றப்பட்ட காங்கிரஸ் அமைப்பு விதித் திருத்தத் தீர்மானப்படி தமிழ் நாட்டிற்கெனத் தனி மாகாணக் கமிட்டியை நிறுவுவதிலே ராஜாஜி மிகுந்த அக்கறை காட்டினார். அதிலே, பிறர் பொறாமைப் படுமளவுக்கு அவர் சாதனைகள் புரிந்தார். தமிழ் நாட்டில் காங்கிரஸ் உறுப்பினர் எண்ணிக்கையை 8 ஆயிரத்திலிருந்து 30 ஆயிரத்துக்கு உயர்த்தினார்.

தமிழ் மாகாணக் கமிட்டி உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கச் செய்து, அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக் கொண்டு தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் தேர்தலையும், அகில இந்தியக் காங்கிரஸ் உறுப்பினர் தேர்தலையும் நடத்தி முடித்தார். மொழிவழி அமைந்த தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முதல் தலைவராகத் திரு. சுப்பிரமணிய சாஸ்திரியார் தேர்ந்தெடுக்கப் பட்டார். இவர் வடாற்காடு வாசியாவார்.

'இந்து'வும் 'மெயிலு'ம்

இதிலே ராஜாஜி காட்டிய தீவிரத்தை ஒத்துழையாமையை விரும்பாத காங்கிரஸ் பிரமுகர்கள் வெறுத்தனர். அவர் சிலரை ஒதுக்கிவைத்துச் செயலாற்றுவதாகவும் குறை கூறினர். ஆம்; ஒத்துழையாமை இயக்கத்தின்பாலும், காந்திஜியின்பாலும் இருந்த வெறுப்பை அவர்கள் ராஜாஜிமீது காட்டினர். இதிலே, ஒத்துழையாம்மயை விரும்பாதவரான ஏ. அரங்கசாமி ஐயங்காரை

ஆசிரியராகக் கொண்டிருந்த 'இந்து' பத்திரிகை தீவிரங் காட்டியது.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் மேளமாக விளங்கிய 'மெயில்' பத்திரிகைகூட ராஜாஜியைச் 'சர்வாதிகாரி' என்று வருணித்தது. இதற்கெல்லாம் தக்க பதிலளித்து ராஜாஜி தமது தொண்டைத் தொடர்ந்தார். ஜி.ஏ. நடேசன், சர்.சி.பி. ராமசாமி ஐயர் ஆகியோர் கல்கத்தா விசேஷ செஷனுக்குப் பின் காங்கிரசிலிருந்து விலகிச் சென்று, அப்போதுதான் தோன்றியிருந்த மிதவாதக் கட்சியிலே கலந்துவிட்டனர். பெசன்ட் அம்மையார், தேசிய அரசியலிலிருந்தே ஒதுங்கி விட்டவர்போல, ஒத்துழையாமை இயக்கத்தை எதிர்த்து அடிக்கடி அறிக்கை விட்டுக் கொண்டிருந்தார்.

'ஹிந்து' ஆசிரியர் ஏ. அரங்கசாமி ஐயங்கார், எஸ். சத்திய மூர்த்தி ஐயர், எஸ். சீனிவாச ஐயங்கார் ஆகியோர் சட்டசபைப் பகிஷ்காரத்தோடு கூடிய ஒத்துழையாமைப் போரில் கவர்ச்சி பெறாததால், தூர நின்று முணுமுணுத்துக் கொண்டிருந்தனர். இந்த நேரத்தில் 'நவசக்தி' ஆசிரியர் திரு.வி. கலியாண சுந்தரனார், 'பிரபஞ்ச மித்திரன்' ஆசிரியர் டாக்டர் பி. வரத ராஜுலு, ஈ.வே. ராமசாமியார் ஆகிய மூவரின் துணையைப் பெற்று ராஜாஜி தமிழ்நாட்டில் காங்கிரசை வலுப்படுத்தி, ஒத்துழையாமைப் போர்க்களத்தில் ஏகாதிபத்தியத்துடன் போராடிக் கொண்டிருந்தார்.

அரசின் போர்க்கோலம்

இதே நேரத்தில் - அதாவது, நாகபுரிக் காங்கிரஸ் முடிந்ததைத் தொடர்ந்து வடபுலத்திலே பிரிட்டிஷ் அரசு இந்திய தேசியக் காங்கிரசுக்கு எதிராகப் பிரகடனம் செய்யாத ஒரு போரை நடத்திக் கொண்டிருந்தது.

இந்திய அரசு, 1921-ஆம் வருடத் தொடக்கத்தில் அடக்கு முறைச் சட்டங்களை ஆராய்ந்து அறிக்கை தர ஒரு கமிட்டியை நியமித்தது. அந்தக் கமிட்டி, 1922 தொடக்கத்தில் கொடுத்த அறிக்கையிலே, கிரிமினல் லா திருத்தச் சட்டத்தைத் தவிர மற்றச் சட்டங்களையெல்லாம் குப்பைக் கூடையில் எறிந்து விடுமாறு ஆலோசனை கூறியது. இந்திய அரசும் அதை அப்படியே ஏற்றுச் செயல்படுத்தியது.

அரசு, ஒருபுறம் அடக்குமுறைச் சட்டங்களை ஆராயக் கமிட்டி நியமித்துவிட்டு, இன்னொருபுறம் அந்தச் சட்டங்களைத் தீவிரமாக அமுல்படுத்தி ஒத்துழையாமை இயக்கத்தை முறியடிக்க

முயன்றது. அரசுக்கு எதிரான முயற்சிகளில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளுமாறு மாநில அரசுகளுக்கு ஆணை பிறப்பித்துச் சுற்றறிக்கை அனுப்பியது. அது வருமாறு:

''ஒத்துழையாமை இயக்கத்தைப் பரப்பும் எண்ணத்துடன் வேலை செய்பவர்கள் வழக்கமான எல்லைகளையும் கடந்து சொற்பொழிவு வாயிலாகவோ, எழுத்து மூலமாகவோ பொது மக்களை வன்முறையிலிறங்கும்படி தூண்டினாலும்; இராணுவம், போலீஸ் இவைகளில் வேலை பார்ப்பவர்கள் அரசிடம் காட்டிவரும் ராஜபக்தியை எவ்விதத்திலாவது கலைக்கவோ, குலைக்கவோ முயற்சித்தாலும் அத்தகையோர்மீது மாத்திரம் மாகாண அரசுகள் தேவைப்படும் நடவடிக்கைகள் எடுக்க அனுமதிக்கப்படுகின்றன.''

காங்கிரஸ் தரப்பிலும் ஒத்துழையாமை இயக்கத்தை யொட்டி ஸ்தாபன ரீதியான நடவடிக்கைகள் தீவிரப்பட்டன. மார்ச்சு 31-ஆம் தேதி சென்னை மாகாணத்தின் ஆந்திரப் பகுதியான பெஜவாடாவில் அ.இ.கா. கமிட்டி கூடி, ஒத்துழையாமைப் போருக்கான செயல்முறைகளை வகுத்துக் கொடுத்தது. அ.இ.கா. கமிட்டி அமைந்த முதலாமாண்டாதலாலும், தேசமே போர்க்களமாகி விட்டதாலும், அ.இ.கா.க.வும் காங்கிரஸ் காரியக் கமிட்டியும் மாதந்தோறும் வெவ்வேறு நகரங்களில் கூடி காங்கிரஸ்காரர்களுக்கும் தேசத்தாருக்கும் வழிகாட்டி வந்தன.

எங்கெங்கும் தடையுத்தரவு!

நாட்டில் பலவிடங்களில் இ.பி.கோ. 144-ஆவது பிரிவுப்படியும், 108-ஆவது பிரிவுப்படியும் தேச பக்தர்களுக்குத் தடை யுத்தரவுகள் வழங்கப்பெற்றன. காங்கிரக்குச் சட்ட மறுப்புப் போர் நடத்தும் உத்தேசமில்லாததால், தடையை மீறிச் சிறைப் படவேண்டாமென்று காங்கிரஸ் அறிக்கை விடுத்தது.

தமிழ்நாட்டுத் தலைவரான யாகூப்ஹாசன் கல்கத்தாவிற்குள் பிரவேசிக்கத் தடை விதிக்கப்பட்டது. சென்னை மாகாண அரசு, பொதுக்கூட்டங்கள் நடத்துவதற்குத் தடையுத்தரவைப் பிறப்பித்து, ஒத்துழையாமைப் பிரசாரத்தைத் தடுத்துவிட முயன்றது. ஒத்துழையாமை சம்பந்தமான எந்த முயற்சியிலும் ஸ்தல ஸ்தாபன ஊழியர்களோ, ஆசிரியர்களோ கலந்து கொள்ளக் கூடாதென்றும் சென்னை மாகாண அரசு ஆணை பிறப்பித்தது.

ஒத்துழையாமைக்கு எதிராக அரசின் அடக்குமுறை வடபுலத்தில்தான் அதிகமாக இருந்தது. பஞ்சாபில் பொதுக் கூட்டங்களில் அரசியல் பேசினால் அரச நிந்தனை வழக்கு தொடரப்படுமென்று அந்த மாகாண அரசு அறிவித்தது.

மைமன்சிங் செல்லாதபடித் தேசபந்து தாசருக்கும்; ஒரிசாவுக்குள் நுழையாதபடி மௌலானா பஸ்லுல் ஹக், ராசன் பாபு ஆகியோருக்கும்; பெஷாவர் நகருக்குச் செல்லாதபடி லாலா லஜபதிக்கும் அந்தந்த மாநில அரசுகளால் தடையுத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன.

ஆக்க வழிப் பணியாகக் கருதி நாட்டின் பல்வேறு இடங்களில் காங்கிரஸ்காரர்கள் மேற்கொண்ட மதுவிலக்கு நடவடிக்கைகளுக்கு எதிராகவும் அரசு அடக்குமுறைப் பாணங்களை ஏவியது.

''மாகாணத்தில் பல மாவட்டங்களிலும் மதுவிலக்கு இயக்கம் பரவி வருவதால் அரசுக்கு இந்த ஆண்டுக் கலால் வருமானம் கணிசமான அளவில் குறையலாம்'' என்று சென்னை மாகாண அரசு மத்திய அரசுக்கு அறிக்கை அனுப்பியது. ஆம்; அந்த அளவில் தமிழ்நாட்டில் மதுக்கடை மறியல் தீவிரமாக இருந்தது.

தொழிலைத் துறந்த தியாகிகள்!

நாகபுரிக் காங்கிரஸ் ஏற்றுக்கொண்ட ஒத்துழையாமைப் போர்த் திட்டப்படி நாட்டில் பலர் நீதிமன்றங்களைப் பகிஷ்கரிக்கும் வகையில் வக்கீல் தொழிலைத் துறந்தனர். தமிழ் நாட்டில் திரு.டி. பிரகாசம் உள்பட 36 பேர் வழக்கறிஞர் தொழிலைத் துறந்ததாக ராஜாஜி அ.இ.கா. கமிட்டிக்கு அறிக்கை அனுப்பினார்.

வக்கீல் தொழில் காரணமாகச் செல்வத்தையும் மக்களிடையே செல்வாக்கையும் பெற்று வந்த பண்டித மோதிலால் நேரு, ஜவகர்லால் நேரு, சர்தார் படேல், லாலா லஜபதிராய், ராசன் பாபு, தேசபந்து தாசர், ராஜாஜி, டி. பிரகாசம் ஆகியோர் அத்தொழிலிலிருந்து தங்களை விடுவித்துக் கொண்டது தேசத்திற்காக அவர்கள் செய்த மகத்தான தியாகம் என்றே சொல்ல வேண்டும்.

காங்கிரஸ் ஒத்துழையாமைப் போர் தொடங்கும் வரை மாநில வாரியாகப் பார்த்தால், தமிழ் நாட்டிலும் பிரபல வழக்கறிஞர்கள் காங்கிரசில் செல்வாக்குச் செலுத்தி வந்தனர்.

அவர்கள் அனைவரும் மிதவாதிகளாக இருந்ததால், பாரதியாரும் ஜி. சுப்பிரமணிய ஐயரும் அவர்களைக் குறிப்பிடுங்கால், 'மயிலாப்பூர் வக்கீல் கூட்டம்' என்றே கூறி வந்தனர். அந்தக் கூட்டம் ஒத்துழையாமையைக் கடைப்பிடிக்கவில்லை.

ஒத்துழையாமைப் போரின் முக்கிய அம்சமான அரசுடன் தொடர்புடைய பள்ளிகளையும் கல்லூரிகளையும் விட்டு வெளியேறுவதும் நாட்டில் நடைமுறைக்கு வந்தன. இதிலும் தமிழ்நாடு சிறிது பின்வாங்கிய தென்றாலும், இங்குமங்குமாக பெற்றோர் பலர் தங்கள் பிள்ளைகளுடைய படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்தனர். இதுவும் மகத்தான தியாகமாகும். இந்த பகிஷ்காரத்தைக் கடைப்பிடித்தவர்களில் சிலர் பிறகாலத்தில் மனமாற்றம் அடைந்து, திரும்பவும் கல்வியைத் தொடர்ந்தன ரென்றாலும், பலர் ஆயுள் வரை உயர்கல்வியை அடையாமலே போய் விட்டனர்.

பள்ளிகளையும் கல்லூரிகளையும் பகிஷ்கரித்தவர்களுக்காக வடநாட்டில் தேசியப் பல்கலைக் கழகங்களும், தேசியக் கல்லூரிகளும் தோற்றுவிக்கப்பட்டன. இதிலும் தமிழகம் பின்தங்கி விட்டதென்றே சொல்ல வேண்டும். இங்கு, வடபுலத்தில் தோன்றியதுபோல தேசியப் பல்கலைக் கழகம் என்று சொல்லத்தக்க வித்யா பீடம் எதுவும் எவராலும் தோற்றுவிக்கப்படவில்லை. இதற்கு, தமிழ் மக்களுக்கு ஆங்கிலத்தின் மீதுள்ள மோகந்தான் காரணமாகும்.

படித்த சமுதாயத்தின் போக்கு!

''தேசம் முழுவதிலுமே நீதிமன்றங்கள் பகிஷ்காரமும் கல்லூரிகள் பகிஷ்காரமும் அவ்வளவு திருப்திகரமாக் நடைபெறவில்லை'' என்று, தாம் எழுதிய 'காங்கிரஸ் மகாசபை வரலாறு' என்னும் நூலில் டாக்டர் பட்டாபி கூறுகின்றார். அ.இ.கா. கமிட்டியும் இந்த உண்மையை ஒரு தீர்மானத்தின் மூலம் வேதனையோடு வெளியிட்டுள்ளது.

பொதுவாக, படித்த சமுதாயம் தியாகத்திற்குத் தயாரா யில்லை யென்பது ஒத்துழையாமை இயக்கத்தின்போது நன்கு வெளிப்பட்டு விட்டது. இதனால், மெக்காலே கல்வித் திட்டமானது தேசபக்தர்களைத் தயாரிக்கவில்லையென்றஉண்மை முன் எப்போதையும் விட இப்போது அதிகமாக வெளிப்பட்டது.

படித்தவர்கள் நிலை இதுவாயினும், சாதாரண மக்களிடையே ஒத்துழையாமைக்குப் பேராதரவு இருந்தது. அதனால், சட்டமறுப்பைத் தொடங்க விரும்பும் மாகாணங்

களுக்கு அதைத் தொடங்க அ.இ.கா. கமிட்டி அனுமதி தந்தது. மார்ச்சில் பெஜவாடாவில் கூடிய அ.இ.கா. கமிட்டி வரிகொடா இயக்கத்தை மட்டும் ஒத்திப்போட்டது.

அலிகார் தேசிய முஸ்லிம் பல்கலைக்கழகம், குஜராத் வித்யா பீடம், பீகார் வித்யா பீடம், காசி வித்யா பீடம், வங்காள தேசியப் பல்கலைக்கழகம் ஆகியவை தேசியத் தலைவர்கள் பலரால் தோற்றுவிக்கப் பெற்றன. பலவிடங்களில் தேசியக் கல்லூரிகளும் படைக்கப்பட்டன.

ராஜாஜியின் தேசிய வித்யாலயம்

தமிழ் நாட்டிலும் சிறிய அளவில் 'தேசிய வித்யாலயம்' ஒன்றை ராஜாஜி துவக்கினார். 'கல்லூரிகளிலிருந்து வெளியேறிய மாணவர்கள் தேசியப் பணியாற்றவோ, தேசியப் பள்ளிகளில் ஆசிரியராக பணி புரியவோ தங்கள் தகுதிகளை வளர்த்துக்கொள்ள விரும்பினால் அவர்கள் இந்த வித்யாலயத்தில் சேரலாம்' என்று ராஜாஜி அறிக்கை விடுத்தார். ஆனால், இந்த வித்யாலயம் வெற்றிகரமாகச் செயல்படத் தமிழ்நாடு உதவி புரியவில்லை யென்று தெரிகிறது.

அரசிடம் பெற்ற பட்டங்களைத் துறப்பதிலேயும் தமிழ் நாட்டில் எவரும் ஆர்வம் காட்டவில்லை. அத்தகைய பட்டங்களைப் பெற்றிருந்த காங்கிரஸ்காரர்கள் காங்கிரசிலிருந்து விலகிச் சென்று விட்டனர். எஞ்சிய முன்னணித் தலைவர்கள் துறக்கத் தக்க பட்டம் எதையும் பெற்றிருக்கவில்லை. வடபுலத்தில் காந்திஜி கல்கத்தா காங்கிரசுக்கு முன்பே தென்னாப்பிரிக்காவில் போயர் யுத்தத்தின்போது செய்த சேவைக்காக பிரிட்டிஷ் அரசிடம் பெற்றிருந்த பதக்கங்களைத் துறந்தார். அந்நாளில் இளஞ் சிங்கமெனத் திகழ்ந்த சுபாஷ் சந்திரபோஸ் ஐ.சி.எஸ். உத்தியோகத்தைத் துறந்து, கல்கத்தா தேசியக் கல்லூரியின் தலைவரானார்.

வள்ளல் பஜாஜ்

மத்திய பிரதேசத்தைச் சார்ந்த பெருஞ்செல்வந்தரான ஜம்னாலால் பஜாஜ் என்பவர், தாம் பெற்றிருந்த 'சர்' பட்டத்தைத் துறந்ததோடு, திலகர் நிதிக்குத் தாராளமாக உதவி புரிந்தார். ஆம்; ஒரு லட்ச ரூபாய்! இதைக் கேட்டுத் தேசமே வியந்தது.

தமிழ் நாட்டிலே 'பஜாஜ்கள்' இல்லை யென்றாலும், பெருவணிகரான ஜனாப் அப்துல் அக்கீம் சாகிப் அவர்களை

அணுகி ராஜாஜி கிலாபத் இயக்கத்திற்கு நிதி கேட்டபோது, தமது செக் புத்தகத்தை அவரிடம் தந்து, எவ்வளவு நிதி தேவையோ அதை எழுதிக் கொடுத்தால் தாம் கையெழுத்திடுவதாகக் கூறினார் அக்கீம்சாகிப். ராஜாஜி ரூ.20 ஆயிரம் எழுதினார். அக்கீம் சாகிப் முணுமுணுப்பின்றிக் கைச்சாத்திட்டுச் செக்கைக் கிழித்துக் கொடுத்தார்.

மாப்பிள்ளைமார் கலகம்

எங்கோவுள்ள துருக்கி தேசத்தைப் பழிவாங்க நினைத்து இஸ்லாம் சமுதாயத்திற்குப் பிரிட்டிஷார் இழைத்த கொடுமைக்குப் பரிகாரம் தேடப் பாரத தேசமே போர்க் கோலம் கொண்டிருந்த நிலையில் இந்துக்களுடைய மனத்தைப் புண்படுத்தக் கூடிய கலகமொன்று மலையாளப் பிரதேசத்தில் நிகழ்ந்தது. இது, 'மாப்பிள்ளை மார் கலகம்' எனப் பெயர் பெற்றது. மலபார் சென்னை ராஜ்யப் பிரதேசமாதலால், தமிழ் நாட்டையும் அதிரச் செய்வதாக இருந்தது மாப்பிள்ளைமார் கலகம். இந்தக் கலகம் முதலில் அரசுக்கு எதிரானதாகத் தோன்றி, பின்னர் இந்துக்களுக்கு எதிரானதாக மாறி 'வகுப்புக் கலவரம்' என்ற வண்ணத்தைப் பெற்றது.

''மாப்பிள்ளைமார்'' என்பவர் மலபார் பிரதேசத்தில் - அது சேர மண்டலத்தின் ஒரு பகுதியாக இருந்தபோது - குடியேறிய அரேபியர்களின் சந்ததியாராவர். இவர்கள் குடியேறிய காலத்தில் தமிழில் 'மாப்பிள்ளைகள்' என்று அழைக்கப்பட்டதாகவும் ஒரு செய்தி உண்டு. இவர்கள் வீர மிக்கவர்கள். இவர்களைக் கண்டு பிரிட்டிஷாருக்கு அச்சம். அதனால், இவர்களை அடக்கி ஒடுக்க மலபார்ப் பிரதேசத்தில் நடந்த ஒரு சம்பவத்தைப் பெரிய வகுப்புக் கலவரமாக மாற்றிவிட்டது அரசு. தென்னிந்தியாவில் இதுபோன்ற ஒரு மதக் கலவரம் இதற்கு முன்னும் பின்னும் நிகழ்ந்ததே இல்லை. இந்துக்களில் பலர் மாப்பிள்ளைகளால் பலாத்காரமாக மதமாற்றம் செய்யப் பட்டனராம்.

ராஜாஜிக்குத் தடை!

ராஜாஜியும் யாகூப் அசனும் கலவரப் பகுதிக்குச் சென்று மக்களிடையே அமைதியை நிலைநாட்ட அகிம்சைப் பிரசாரம் செய்வதற்குச் சென்னை மாகாண அரசிடம் அனுமதி கோரினர். இந்த நேரத்தில் ராஜாஜி காங்கிரஸ் மகாசபையின் பொதுச்

செயலாளராக இருந்தார். அந்நாளில் வகுப்புக் கலவரம் எங்கு நடந்தாலும் அங்குத் தாமதமின்றி தேசியத் தலைவர்கள் செல்ல விரும்புவது வழக்கம். அரசு அவர்களுக்கு அனுமதி தர மறுப்பதும் வழக்கம். மலபார் பிரதேசத்திற்குச் செல்லத் தமிழ் நாட்டுத் தலைவர்களுக்கு அரசு அனுமதி தர மறுத்ததும் இந்த வழக்கத்தைச் சார்ந்ததுதான். நாட்டில் உருவாகி வந்த இந்து - முஸ்லிம் ஒற்றுமையை உடைக்க அரசு மலபார் சம்பவத்தைப் பயன்படுத்திக் கொண்டது. மாப்பிள்ளைமாரில் பலர் இந்து நிலப் பிரபுக்களிடம் குத்தகைதாரராக இருந்தனர். மலபார் செல்லத் தங்களை அனுமதித்தால், அங்கு ஒத்துழையாமை பற்றித் தாங்கள் பிரசாரம் செய்யப் போவதில்லையென்று ராஜாஜியும் மௌலானா யாகூப் ஹாசனும் அரசுக்கு உறுதி கூறினர். ஆனால், அரசு மனமாற்றம் அடையவில்லை.

மலபார் செல்லும் வழியில் ராஜாஜியும் ஹாசனும் தடுக்கப்பட்டனர். அதனால், திரும்புங்கால், 'இந்த அடக்குமுறை ஆட்சியாளர் வைத்த பொறியில் சிக்கிவிட வேண்டாம்'' என்று மாப்பிள்ளைமார்களை எச்சரித்து அறிக்கை விட்டனர்.

'மரணவண்டி!'

மாப்பிள்ளைமார் மிகுதியாக வாழும் இரண்டு தாலுக்காக்களில் ராணுவச் சட்டம் அமுல் நடத்தப்பட்டது. இதன் விளைவாக, 2339 பேர் இறந்தனர்; தமிழினத்தாரின் 'மாப்பிள்ளைகள்' மாண்டனர். 24167 பேர் கடுந் தண்டனைகளுக்கு ஆளாயினர். 150 மாப்பிள்ளைக் கைதிகள் ஒரு கூட்ஸ் ரெயில் பெட்டியில் அடைத்துக் கொண்டுபோகப்பட்டனர். அவர்களில் 66 பேர் மூச்சுத் திணறி இறந்தனர். இது, 'மரண வண்டி நிகழ்ச்சி' எனப் பெயர் பெற்றது. அ.இ.கா. கமிட்டி மாப்பிள்ளைமார் கலகம் குறித்துத் தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றியது.

பாரதியார் மறைந்தார்!

1921-ஆம் ஆண்டில், தமிழ் நாட்டிற்கு - குறிப்பாக, விடுதலைப் பாசறையினர்க்கு ஏற்பட்ட பேரிழப்பு ஒன்று உண்டு. அது தேசியக் கவி சுப்பிரமணிய பாரதியார் மறைந்ததாகும்.

1882 டிசம்பர் 11-இல் தோன்றிய பிறவிக் கவிஞர் பாரதியார் 1921 செப்டம்பர் 11-இல் தமது 30-ஆவது வயதில் மறைந்து விட்டார். அந்தோ! போர் தொடங்கு முன்பே-இல்லை, போர்

தொடங்கியிருந்த நேரத்திலே களம்பாடிய கவிஞர் உயிர் துறந்துவிட்டார். ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு!

விடுதலைப் போராட்டக் காலத்திலே 'தேசியக் கவிஞர்'- 'போர்க்களப் புலவர்' என்றெல்லாம் சொல்வதற்கு எல்லா வற்றாலும் தகுதி பெற்ற கவிஞர் பாரதம் முழுவதற்குமாக ஒருவர் தான் - சுப்பிரமணிய பாரதிதான் - பிறந்தார்! அவரும் மறைந்து போய் விட்டார்! இந்த அதிர்ச்சியையும் தாங்கிக் கொண்டு தமிழகம் விடுதலைப் போரில் தொடர்ந்து கடமையைச் செய்து வந்தது.

அடித்தளத்தில் நாட்டம்!

நாகபுரிக் காங்கிரஸ் மகாசபை முடிந்ததும், சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள சாமான்ய மக்களைத் தட்டியெழுப்புவதிலே காந்திஜி தனி அக்கறை காட்டினார். சமுதாயத்தின் மேல் தட்டிலுள்ளவர்களை ஒத்துழையாமையில் ஈடுபடுத்தும் வேலைத் திட்டங்களையும் அடிகள் வகுத்தார் என்றாலும், அவர்களிடம் அவர் அதிக அளவில் நம்பிக்கை வைக்கவில்லை. சாதாரண மக்களையே அவர் நம்பினார். அவர்களை விடுதலைப் போரில் ஈடுபடுத்துவதற்குரிய வேலைத் திட்டங்களை வழங்கினார். முதன் முதலாக, சாதாரண மக்களை - குறிப்பாக, கிராம வாசிகளை காங்கிரசிற்குள் கொண்டு வருவதற்கேற்ப அங்கத்தினர் சந்தாத் தொகையைக் குறைத்து ஒரு கோடி உறுப்பினரைச் சேர்க்க முடி வெடுத்தார். அதை ஓராண்டுக்குள் செய்வதென்று விரதங் கொண்டார்.

''சொக்கப் பனை!''

ஓராண்டுக்குள் 20 லட்சம் கை ராட்டினங்களை மக்கள் மத்தியில் கொண்டு வரவும் அடிகள் திட்டமிட்டார். இப்போது அவர் 'கதர்' ஆடையை விற்பனைக்குக் கொண்டு வந்துவிட்டார். இந்தியாவிலே முதலாவது கதர்க் கடையை 1921 ஜனவரியில் பம்பாய் நகரில் திறந்து வைத்தார். இதனால், அன்னிய ஆடை பகிஷ்காரத்தைத் தீவிரப்படுத்தினார். கதர் அணிவதைக் காங்கிரஸ்காரர்களுக்குக் கட்டாயமாக்கினார். அன்னிய ஆடை களைத் தீயிலிட்டுக் கொளுத்தும் 'சொக்கப் பனை' விளை யாட்டையும் அடிகள் அரசியலில் சேர்த்தார். 1920 ஆகஸ்டு முதல் தேதியன்று, ஆயுள்வரை தாம் கதரையே கட்டுவதென்று விரத மெடுத்துத் தேச மக்களுக்கு வழி காட்டினார்.

''திலகர் சுயராஜ்ய நிதி'' என்னும் பெயரால் தேசந் தழுவிய முறையில் நிதி சேர்க்கவும் திட்டமிட்டார். ஓராண்டுக்குள்

அதாவது, 1921-ஆம் ஆண்டு முடிவதற்குள் ஒரு கோடி ரூபாய் சேர்ப்பதென்றும் உறுதி பூண்டார். ரூபாய் ஒரு கோடி கொடுத்தால் ஓராண்டுக்குள் பூரண சுதந்திரம் தேடித் தருவதாகவும் தேச மக்களுக்கு அடிகள் உறுதி கூறினார்.

தொழிற் சங்க இயக்கம்

தொழிற் சங்க இயக்கத்தை வலுப்படுத்தி நாட்டிலுள்ள தொழிலாளர்களின் துயர் துடைக்கப் பாடுபடவும், அதன் மூலமாக கோடிக்கணக்கான தொழிலாளர்களை விடுதலை இயக்கத்தோடு இணைக்கவும் அண்ணல் காந்தி வழி செய்தார். தேசபந்து தாசரிடம் தொழிற் சங்க இயக்கத்தைக் கட்டி வளர்க்கும் பொறுப்பு ஒப்புவிக்கப்பட்டது.

தமிழகத்தில் காந்திஜி

1921-இல் ஏப்ரல் மாதத்தில் ஒரு முறையும், செப்டம்பரில் ஒரு முறையுமாக இருமுறை தமிழகத்திற்கு வருகை தந்தார். முதல் முறை வந்தபோது ஒரு நாள் மட்டுமே சென்னை நகரில் தங்கினார். அன்னை கஸ்தூரி பாயும் தேவதாஸூம் காந்திஜியுடன் வந்தனர். அவர் வருகை தந்தது ஏப்ரல் 6 முதல் 13 வரை கொண்டாடப்படும் தேசிய வாரத்திலாகும். சென்னையில் யாகூப் ஹாசன் அவர்களின் விருந்தினராக இருந்தார்.

சென்னையில் ஒத்துழையா இயக்க ஊழியர் கூட்டம் செயிந்தோமில் ராம்ஜி கல்யாண பங்களாவில் நடைபெற்றது. தலைவர்களும் இதில் கலந்து கொண்டனர். மாலையில் திருவல்லிக்கேணி கடற்கரையில் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. ஒத்துழையாமைப் போரின் தலைமைத் தளபதியான காந்திஜி அக்கூட்டத்தில் பேசினார்.

சென்னை மாகாணத்தில் பிராமணரல்லாதார் கட்சியான ஜஸ்டிஸ் கட்சியின் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அக்கட்சியினர் விடுதலைப் போருக்கு எதிராகப் பிரச்சாரம் செய்து வந்ததால், காங்கிரஸ் கட்சியினரும் ஏடுகளும் அதற்கு எதிர்ப்பிரசாரம் செய்துவந்த நேரமது. காந்திஜியும் அதிலிருந்து தப்பமுடியவில்லை போலும்! அவரும் கடற்கரைக் கூட்டத்தில் அது பற்றிப் பேசினார். அது வருமாறு:

> ''இந்து - முஸ்லிம் சண்டை என்ற சாதனம் இப்போது அரசுக்குக் கிடைக்கவில்லை. ஆகையால், பிராமணர் - பிராமணரல்லாதாரிடையே உள்ள பிளவைப் பயன்படுத்திக்

கொள்ளப் பார்க்கிறது. இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையிலிருந்த பிணக்கை நாம் எவ்வாறு தீர்த்து வைத்தோமோ, அதேபோன்று பிராமணர்களுக்கும் பிராமணரல்லாதாருக்குமிடையே தோன்றியுள்ள பிணக்கையும் தீர்த்து வைக்கவேண்டும்.

''பிராமணரல்லாதார் இதய பூர்வமாகத் தேச விடுதலை இயக்கத்தில் கலந்துகொள்ள இயலாவிட்டால், அரசாங்கத்தின் சதியில் சேர்ந்து கொண்டு இந்த இயக்கத்தில் குறுக்கீடு செய்யாமலாவது இருப்பார்களாக!''

'நான்கானாப் படுகொலை!'

1921 மார்ச்சு மாதத்தில் பஞ்சாப் மாநிலத்தில் தேசத்தையே அதிரச் செய்யும் படுகொலை நிகழ்ந்தது. ஆம்; ஜாலியன் வாலாபாக் சம்பவத்தால் பஞ்சாபியருக்கு ஏற்பட்ட துயரம் மறைவதற்கு முன்பே அந்த மாவீரச் சாதியினருக்கு எதிராக மற்றொரு 'ஜாலியன்வாலாபாக்' கொடுமையை நிகழ்த்தியது பிரிட்டிஷ் ராணுவம்.

மார்ச் முதல் வாரத்தில் குருத்வாராவில் கூடிய சீக்கியர் மீது பிரிட்டிஷ் இராணுவத்தார் திடீர்த் தாக்குதல் நடத்தினர். அப்போது நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தால் 150 சீக்கிய யாத்ரிகர்கள் மாண்டனர். சீக்கியரிடையில் ஏற்பட்ட கோஷ்டிப் பூசலே இராணுவம் தலையிட நேர்ந்ததற்குக் காரணம் என்று டில்லி ராஜாங்க சபையில் அரசு தரப்பில் போலிச் சமாதானம் சொல்லப்பட்டது. இது, 'நான்கானாப் படுகொலை' என்று பெயர் பெற்றுவிட்டது. 'இதுபோன்ற ஒரு படுகொலை இந்திய வரலாற்றில் நிகழ்ந்ததே கிடையாது' என்று காங்கிரஸ் காரியக் கமிட்டி தனது கண்டனத் தீர்மானத்தில் கூறியது. 'சீக்கிய யாத்ரிகர் இரக்கமின்றிச் சுட்டுக் கொல்லப்பட்டனர். காய மடைந்து உயிருடன் தத்தளித்துக் கொண்டிருப்பவர்கள் தீக்குழியில் எறியப்பட்டனர்' என்று டாக்டர் பட்டாபி எழுதிய 'காங்கிரஸ் மகாசபையின் வரலாறு' கூறுகிறது. அமிர்தசரஸ் ஜாலியன்வாலா பாக் படுகொலையின் போது,

''பாஞ்சாலத்தில் நடைபெற்ற படுகொலை கண்டு அரசு அதிகமாக வருத்தம் அடைந்துவிட்டது. இனி, இம்மாதிரி ஒருபோதும் நடைபெறாது என அரசு உறுதி கூறுகிறது.''

என்று, டில்லி சுப்ரீம் கவுன்சிலில் அரசின் சார்பில் சர். வில்லியம் என்பவர் உறுதி கூறினார். இதற்கு மாறாக, ஜாலியன்வாலாப்

படுகொலையையும் இரண்டாந்தரமாக்கும் வகையில் நான் - கானாப் படுகொலை நிகழ்ந்தது சீக்கியரின் குருத்துவாராவிலே

திட்டங்களுக்கு வெற்றி

காந்திஜியின் ஒரு வருடத் திட்டங்கள், அந்தக் காலக்கெடு முடிவதற்கு முன்பே - அதாவது, 1921-ஆம் ஆண்டின் மத்தியிலேயே நிறைவெய்திவிட்டன. ஆம்; திலகர் நிதிக்கு ரூபாய் ஒரு கோடிக்கும் அதிகமாக வசூலாகிவிட்டது - அதாவது, ஒரு கோடி பதினைந்து லட்சம் ரூபாய் சூலை இறுதிக்குள் வசூலாகிவிட்டது.

அதே கால கட்டத்திற்குள் திட்டமிட்டபடி 20 லட்சம் ராட்டினங்களைப் புழக்கத்திற்கு விடும் திட்டமும் நிறைவேறி விட்டது.

ஒரு கோடிக் காங்கிரஸ் அங்கத்தினர் சேர்ப்பதென்ற திட்டமானது, அரைக் கோடி என்ற அளவில் நின்றது.

அனைத்திந்திய ரீதியில் காங்கிரஸ் இயக்கமானது முன் எப்போதையும்விடக் காந்திஜி தலைமையைப் பெற்ற முதல் ஆண்டிலே மிகவும் தீவிரமாகச் செயல்பட்டு வந்தது.

கிலாபத் கிளர்ச்சி

1921 சூலைத் திங்களில் நாட்டில் கிலாபத் இயக்கம் உச்சகட்டத்தை யெட்டியது. இதற்குக் காரணம் சூலை 8-இல் கராச்சியில் நடைபெற்ற கிலாபத் மாநாட்டில் மௌலானா முகமதலி நிகழ்த்திய தலைமையுரையே யாகும்.

தமது தலைமையுரையிலே முகமதலி முஸ்லிம் மக்களுக்குத் தனியாக ஒரு வேண்டுகோள் விடுத்தார். அதிலே, 'கிலாபத் அநீதிக்குப் பரிகாரம் தேடும் வகையிலே, இன்று முதல் ராணுவத்தில் சேவை செய்வதோ, ராணுவத்திற்கு ஆள் சேர்த்துக் கொடுப்பதில் உடந்தையாக இருப்பதோ உண்மை முஸ்லிம் களுக்கு அடுக்காது' என முகமதலி கூறினார். இதுபோல, ஒரு தீர்மானமும் கராச்சி கிலாபத் மாநாட்டில் நிறை வேற்றப்பட்டது.

கராச்சி மாநாட்டின் தலைமையுரையும் சரி; தீர்மானமும் சரி; நாகபுரிக் காங்கிரஸ் மகாசபையின் தீர்மானத்தையும் அதற்குபின் கூடிய காங்கிரஸ் காரியக் கமிட்டி, அ.இ.கா. கமிட்டி ஆகிய வற்றின் தீர்மானங்களையும் ஒட்டியவைதான். அப்படி

யிருந்தும் கராச்சி மாநாட்டிற்கு எதிராக அரசு போர்க் கோலங் கொண்டது.

அலி சகோதரர்கள் கைது

அஸ்ஸாமிலிருந்து தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையை நோக்கி வந்து கொண்டிருக்கும் வழியில் ஆந்திரப் பிரதேசமான வால்டேரில் முகமதலி கைது செய்யப்பட்டார். தமிழகத்தில் முகமதலியை வரவேற்று உபசரிக்கத் தயாராகிக் கொண்டிருந்த தமிழ் மக்கள், அந்த விருந்தாளி வழியிலே கைதியாகிவிட்டார் என்பதை அறிந்ததும் ஆத்திரமடைந்தனர். சென்னை நகரில் கண்டனக் கூட்டம் நடந்தது. இங்குள்ள நாளேடுகள் கண்டனம் செய்து தலையங்கம் எழுதின.

வால்டேரில் முகமதலியைச் சிறை பிடித்ததை யடுத்து, பம்பாயில் அலி சகோதரர்களில் மூத்தவரான ஷௌகத் அலியையும் அரசு கைது செய்து சிறையில் அடைத்தது.

இந்த நேரத்தில் காந்திஜி திருச்சியில் இருந்தார். அலி சகோதரர்கள் கைது செய்யப்பட்டதை அடிகள் அறிந்ததும், முகமதலி எந்தச் சொற்பொழிவுக்காகக் கைது செய்யப்பட்டாரோ, அதைத் திருச்சிப் பொதுக் கூட்ட மேடையில் காந்திஜி தமது திருவாயால் திரும்பச் சொல்லி, 'துணிவிருந்தால் அரசு என்னையும் கைது செய்யட்டும்' என்று அறைகூவல் விட்டார். ஆனால், அவரை அரசு அணுகவில்லை.

கைது செய்யப்பட்ட அலி சகோதரர்கள் மீது அரசு வழக்குப் போட்டது. வழக்கை விசாரித்த நீதிபதி அவர்களுக்கு 2 ஆண்டுக் கடுங்காவல் தண்டனை விதித்தார்.

கராச்சி கிலாபத் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட - அலி சகோதரர்கள் சிறைப்படக் காரணமான - தீர்மானத்தை ஊர்தோறும் கூட்டங்கூட்டி, அதிலே நிறைவேற்றுமாறு காங்கிரஸ் காரர்களை அடிகள் கேட்டுக் கொண்டார்.

சீராளா சத்தியாக்கிரகம்

1921-இல் நாட்டில் இங்குமங்குமாகக் குட்டிப் போராட்டங் கள் அரசுக்கு எதிராக நடைபெற்றன. அவற்றுள் சென்னை மாகாணத்தில் தெலுங்கு வழங்கும் பிரதேசமான சீராளா என்னும் ஊரில் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போர் மிகவும் முக்கிய மானதாகும். அப்போது, சென்னை மாகாணத்தில் திரு. பனகல் அரசர் தலைமையில் ஜஸ்டிஸ் கட்சியின் ஆட்சி நடந்து

கொண்டிருந்தது. அந்த ஆட்சி, சீராளாவை நகரசபைப் பிரதேசமாகச் செய்ய முடிவெடுத்தது. இதனை சீராளா மக்கள் விரும்பவில்லை. அரசு தனது முடிவை அமுல்படுத்த முனைந்தது. அப்போது காந்திஜியின் கருத்து அறியப்பட்டது. அவர், 'முனிசிபாலிடியாவதை விரும்பாத மக்கள் ஊரைக் காலி செய்து வெளியேறி விடலாம்' என்று ஆலோசனை கூறி, இந்தச் சத்தியாக்கிரகத்தை காங்கிரஸ் பெயரால் நடத்தக்கூடாதென்றும் எச்சரித்தார். சீராளா மக்கள், அடிகளாரின் சொற்படி கிராமத்தை விட்டு வெளியேறி, வேறிடங்களில் குடிசைகள் அமைத்து வாழ்ந்தனர். இந்தப் போராட்டம் 10 மாதம் நடைபெற்றும் அரசு பணியவில்லை. இறுதியில் மக்கள் சத்தியாக்கிரகத்தைக் கைவிட்டு, ஊருக்குள் பிரவேசித்தனர். இந்தப் போராட்டத்தை 'ஆந்திர ரத்னா' கோபாலகிருஷ்ணா தலைமையேற்று நடத்தினார்.

காந்திஜியின் வருகை

காந்திஜி 1921-ஆம் ஆண்டில் இரண்டாவது முறையாக செப்டம்பர் 15-இல் தமிழ் நாட்டிற்கு வருகை தந்தார். இந்த முறை மூன்று வார காலம் தமிழ் நாட்டில் அடிகள் சுற்றுலாச் செய்தார். கதர்ப் பிரசாரம், ஒத்துழையாமைக்கு ஆதரவு திரட்டல், தீண்டாமை ஒழிப்பு ஆகியவற்றிற்காகவே இம்முறை அடிகள் வருகை தந்தார். தமிழ் நாட்டில் அடிகளார் சுற்றுலாச் செய்தபோது, ராஜாஜி, யாகூப் ஹாசன், டி.எஸ்.எஸ். ராசன் ஆகியோர் அவருடன் சென்றனர்.

சென்னை, கடலூர், குடந்தை, திருச்சி, மதுரை, திண்டுக்கல், காரைக்குடி, ஈரோடு, திருப்பூர், கோவை, சேலம் ஆகிய பெரு நகரங்களில் மாபெரும் பொதுக் கூட்டங்களில் அண்ணல் காந்தி சொற்பொழிவாற்றினார். குடந்தை, திருச்சி, திருவரங்கம் ஆகிய நகரங்களிலே நகர மன்றங்கள் சார்பில் அடிகளாருக்கு வரவேற்பிதழ் வாசித்தளிக்கப்பட்டது.

வழி நெடுக ரெயில்வே ஸ்டேஷன்களில் தமிழ் மக்கள் பல்லாயிரக் கணக்கில் குழுமியிருந்து காந்தியடிகளை உற்சாகமாக வரவேற்று வழியனுப்பி வைத்தனர். ஐயன் பேசிய கூட்டங்களிலே அன்னிய ஆடைக்குத் தீ வைக்கப்பட்டது. தமது புனிதக் கரத்தாலேயே சில ஊர்களில் அடிகளார் தீ வைத்தார்.

ஈரோடு நகருக்குச் சென்றபோது, காங்கிரசுக்குப் புதியவரான ஈ.வே. ராமசாமியார் அவர்கள் இல்லத்தில் தங்கினார்.

அப்போது ஈ.வே. ராவுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் கை ராட்டையில் நூற்பதற்கு அடிகளார் பயிற்சியளித்தார்.

வெள்ளம்போல் தமிழர் கூட்டம்!

சென்னை நகருக்கு வருகை தந்த அன்றே கடற்கரையில் நடந்த பொதுக் கூட்டத்தில் அடிகள் பேசினார். வரலாறு காணாத அளவில் மக்கள் திரண்டிருந்ததாக பத்திரிகைகள் வருணித்தன. அப்போது பிராமணரல்லாதார் இயக்கம் காங்கிரசுக்கு எதிராகப் போர்க்கோலங் கொண்டிருந்ததனால், கடற்கரைக் கூட்டத்தில் சுமார் 50 ஆயிரம் என்று சொல்லத்தக்க அளவில் மக்கள் திரண்டிருந்ததைச் சுட்டிக் காட்டி, 'இவர்களெல்லாம் பிராமணரல்லாதார்தானே?' என்று கேட்டு, 'பிராமணரல்லாதார் இயக்கத்தின் வரவால் - வளர்ச்சியால் தமிழ் நாட்டில் காங்கிரசின் செல்வாக்கு தேய்பிறையாகிவிடவில்லை' என்று 'சுதேச மித்திரன்' தலையங்கம் எழுதியது.

சென்னை நகரில் 2 நாட்களே அடிகள் தங்கியிருந்தார். அதனால், ஓய்வு ஒழிச்சலின்றிப் பல்வேறு நிகழ்ச்சிகளில் அடிகள் கலந்து கொள்ளவேண்டி யிருந்தது. மேற்குச் சென்னையில் தொழிலாளர்கள் அடங்கிய மிகப் பெரிய கூட்டத்தில் பேசினார்.

சென்னை துணி வியாபாரிகள் தனியாக நடத்திய கூட்டத்தில் பேசி, அவர்கள் அன்னிய நாட்டுத் துணிகளை விற்பதைக் கைவிட்டு, கதர் வாணிகத்தை மேற்கொள்ள வேண்டுமென்று அடிகள் கேட்டுக் கொண்டார்.

முழந்துண்டுப் பக்கிரி!

இம்முறை தமிழ் நாட்டுக்கு வருகை தந்த அடிகள் சரித்திரச் சிறப்புமிக்க ஒரு சாதனையைப் புரிந்தார். ஆம்; மதுரை நகரில் தங்கியிருந்தபோது, குஜராத்தி பாணியில் தாம் அணிந்திருந்த பொதிபோன்ற ஆடையைத் துறந்து, இரண்டாடைக் கோலத்தை மேற்கொண்டார். இதனால், அடிகளை 'முழந்துண்டுப் பக்கிரி'யாக முதன்முதலில் கண்ட பெருமை தமிழகத்திற்கு - அதிலேயும் மதுரையம்பதிக்குக் கிடைத்தது.

அடிகளின் உடை மாற்றத்தை அவருடன் சுற்றுலாவில் கலந்து கொண்ட ராஜாஜி ஆதரிக்கவில்லை. அவரது எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல்தான் காந்திஜி முழந்துண்டுப் பக்கிரியானார்!

ராஜாஜிக்குச் சிறைத் தண்டனை!

1921-இல் தமிழ் நாட்டில் பல நகரங்களில் காங்கிரஸ் கூட்டங்கள் நடத்தத் தடை விதிக்கப்பட்டது. வேலூரிலும் தடை விதிக்கப்பட்டது. தடையை மீறி வேலூர்ப் பொதுக் கூட்டத்தில் பேசப் போவதாக ராஜாஜி அறிவித்தார். அப்போது காங்கிரஸ் பொதுச் செயலாளர்களிலொருவரான பண்டித மோதிலால் நேரு சிறையில் அடைக்கப்பட்டு விட்டார். இரண்டாவது பொதுச் செயலாளரும் சிறைப்படுவதைத் தவிர்க்கத் தமிழ் நாட்டுத் தலைவர்களில் சிலர் முயன்றனர். அவர்களுக்குச் சமாதானம் சொல்லிவிட்டு, டிசம்பர் 14-ஆம் தேதியன்று வேலூர்க் கோட்டைத் திடலில் சுமார் ஐயாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் அடங்கிய பொதுக் கூட்டத்தில் தடையை மீறி ராஜாஜி பேசினார்.

அவருடன் சேர்ந்து தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருந்த திரு. சுப்பிரமணிய சாஸ்திரியாரும் அதே கூட்டத்தில் தடையை மீறிப் பேசினார்.

இருவர் மீதும் அரசு வழக்கு தொடுத்தது, வேலூர் கோர்ட்டிலேயே! அவர்கள் எதிர்வழக்காட மறுத்து, குற்றத்தை ஒப்புக்கொண்டனர். இருவருக்கும் தலா மூன்று மாத வெறுங்காவல் தண்டனை தரப்பட்டது. இவர்கள் வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

காந்திஜிக்குக் கடிதம்

''நாம் மீண்டும் எப்போது எந்தச் சூழ்நிலையில் சந்திப்போம் என்பதொன்றும் எனக்குத் தெரியவில்லை. ஆனால், சிறைச்சாலையை நான் நெருங்கும்போது, என் வாழ்க்கையின் லட்சியத்தை நான் அடைந்து கொண்டிருப்பது போல எனக்குத் தோன்றுகிறது'' என்று காந்திஜிக்கு ராஜாஜி கடிதம் எழுதினார்.

ராஜாஜி வார்த்தை ஜாலங்கள் செய்யும் வழக்கமில்லாதவர். அப்படிப்பட்டவர், 'இலட்சியத்தை அடைந்து கொண்டிருப்பது போன்று எனக்குத் தோன்றுகிறது' என்றாரென்றால், அவர் அப்படி நம்புமளவுக்கு ஒத்துழையாமை இயக்கம் தேசத்தில் எழுச்சி கொண்டிருந்திருக்குமல்லவா! ராஜாஜி 'இலட்சியம்' என்று குறிப்பிடுவது தேசச் சுதந்திரத்தைத்தான்!

வ.உ.சி. சிறை புகுந்ததிலிருந்து தமிழ் நாட்டில் திலகர் சகாப்தம் தொடங்கியது என்றால், ராஜாஜி சிறைபுகுந்ததிலிருந்து காந்தி சகாப்தம் தொடங்கியது எனலாம்.

அந்நாள்வரை சிறையில் 'ஏ' வகுப்பு 'பி' வகுப்பு என்ற பாகுபாடு ஏற்படவில்லை. கொலை, திருட்டு போன்ற குற்றங்களைச் செய்த சமூக விரோதிகளோடு அரசியல் கைதிகளையும் சேர்த்து வைத்தது அரசு. அதனால், அகில இந்திய காங்கிரசின் பொதுச் செயலாளரான ராஜாஜிக்கு சிறை வாழ்க்கை நரக வாழ்க்கையாகத்தான் இருந்திருக்க வேண்டும். ஆனால், அவர் அப்படிக் கருதவில்லை. சமூக விரோதிகளான கிரிமினல் கைதிகளையும் சகாக்களாகக் கொண்டு சிறையில் வாழ்க்கை நடத்தி, அவர்களையும் நல்வழிப்படுத்த முயன்றார். இதனைச் 'சிறையில் தவம்' என்ற அவரது நூலில் காணலாம்.

இளவரசரின் வருகை

1921-இல் நாட்டின் மிகப்பெரிய நிகழ்ச்சி நாடு முழுதும் நடந்த வேல்ஸ் இளவரசர் பகிஷ்காரமாகும். அவர் அந்த ஆண்டின் தொடக்கத்திலேயே வருவாரென்று அறிவிக்கப்பட்டது. ஆம்; அரசியல் சீர்திருத்தப்படிப் புதிதாக அமைந்த மாநில சட்டமன்றங்களையும், மத்திய சட்ட சபைகளையும் தொடங்கி வைக்கத்தான் அவர் வருவதாக இருந்தார். ஆனால், அப்போது இந்தியாவில் அரசியல் கொந்தளிப்பு இருந்ததால் இளவரசருக்குப் பதிலாகக் கான்னாட்கோமகன் அனுப்பிவைக்கப்பட்டார். ஆயினும், இளவரசரின் வருகை தவிர்க்கப்பட்டதால் பிரிட்டிஷ் அரசுக்கும் அரச குடும்பத்துக்கும் கௌரவக் குறைவு ஏற்பட்டுவிட்டதாகக் கருதப்பட்டு, அதற்குப் பரிகாரம் தேட இளவரசர் டிசம்பரில் அனுப்பப்பட்டார்.

28-7-21-இல் பம்பாயில் கூடிய அ.இ.கா. கமிட்டி வேல்ஸ் இளவரசரைப் பகிஷ்கரிக்குமாறு தேச மக்களுக்கு வேண்டுகோள் விட்டது. இந்தியாவில் தோன்றியுள்ள ஒத்துழையாமை இயக்கத்தை முறியடிப்பதற்காகவே வேல்ஸ் இளவரசர் அனுப்பப்படுவதாகக் காங்கிரஸ் கருதியது. அதனாலேயே அவரைப் பகிஷ்கரிக்க முடிவெடுத்தது. ஆனால், வேல்ஸ் இளவரசரின் வருகைக்கு அரசியல் உள்நோக்கம் எதுவும் கிடையாதென்று அறிவித்து பகிஷ்காரத்தைத் தவிர்க்குமாறு வைசிராய் பாரத மக்களைக் கேட்டுக்கொண்டார். வைசிராயின் சமாதானம் காங்கிரஸ் தலைவர்களுக்குத் திருப்தி தரவில்லை. ஆகவே பகிஷ்காரத்திற்கான ஏற்பாடுகள் தீவிரமடைந்தன.

களத்திலே காங்கிரஸ் படை!

காங்கிரஸ் சார்பிலும் கிலாபத் இயக்கத்தின் சார்பிலும் முன்னரே தொண்டர் படைகள் நிறுவப்பட்டிருந்தன. இந்தப்

படைகளில் மேலும் தொண்டர்கள் சேர்க்கப்பட்டு, அவர்கள் இளவரசர் பகிஸ்காரத்திற்கான ஏற்பாடுகளில் ஈடுபடுத்தப் பட்டனர். இதற்கு முன்பு நாட்டில் அங்குமிங்குமாகப் பிளேக் முதலிய தொத்து நோய்கள் ஏற்படும்போதும், ஊர்வலங்கள் - பொதுக் கூட்டங்களின்போதும் பணிபுரிவது போன்ற ஆக்கவழிப் பணிகளுக்கே காங்கிரஸ் தொண்டர்படை பயன்படுத்தப்பட்டு வந்தது. இப்போதுதான் முதன் முதலாக அர்த்தால், வேலை நிறுத்தம், மதுக்கடை மறியல், அன்னியத் துணிக்கடை மறியல், சட்ட மறுப்புப் போன்ற போராட்ட நடவடிக்கைகளுக்குத் தொண்டர் படை பயன்படுத்தப்பட்டது. காங்கிரஸ் தொண்டர் படையை விடவும் கிலாபத் தொண்டர் படையே வலுவுடன் இருந்ததாக இந்திய அரசு ஒரு குறிப்பில் கூறியது.

விசுவாசிகள் வரவேற்றனர்!

வேல்ஸ் இளவரசர் நவம்பர் 17-இல் பம்பாய்த் துறைமுகத்தில் கப்பலில் வந்திறங்கினார். வைசிராய், உயர்தர அதிகாரிகள், அப்பொழுதுதான் அரசியல் சீர்திருத்தப்படி அதிகாரப் பதவிகளைப் பெற்றிருந்த மிதவாத அரசியல் வாதிகள், வணிகர்கள், நிலச்சுவான்தார்கள் ஆகியோர் பம்பாய்த் துறைமுகத்தில் திரண்டு, வேல்ஸ் இளவரசரைப் பக்தி விசுவாசத்துடன் வரவேற்றனர். அதே நேரத்தில், சௌபாதிக் கடற்கரையில் நடந்த பகிஸ்காரக் கூட்டத்தில் காந்திஜி பேசினார்.

இளவரசர் பம்பாய்த் துறைமுகத்தில் கப்பலை விட்டிறங்கிய நாளிலே இந்தியப் பெருநாடெங்கும் 'அர்த்தால்' அனுஷ்டிக்கப்பெற்றது. கடையடைப்பும் வேலை நிறுத்தமும் வெற்றிகரமாக நடைபெற்றன. கண்டன ஊர்வலங்களும் பொதுக்கூட்டங்களும் கூட நடைபெற்றன.

'வேண்டாத விருந்தாளியே, திரும்பிப் போ!'

தமிழ் நாட்டில் பெருந்தலைவர் ராஜாஜி சிறைப் பட்டிருந்தார் என்றாலும், சென்னையில் அர்த்தால் வெற்றிகரமாக நடைபெற்றது. ஊர்வலமும் திருவல்லிக்கேணிக் கடற்கரையில் பொதுக் கூட்டமும் நடைபெற்றன. ஊர்வலத்தினர், 'வேண்டாத விருந்தாளியான வேல்ஸ் இளவரசரே, திரும்பிப் போ!'', ''இந்திய மக்கள் விரும்புவது வேல்ஸ் இளவரசரையல்ல; விடுதலை வாழ்வை!'' என்றெல்லாம் ஊர்வலத்தினர் கோஷித்துச் சென்றனர். 'நவ சக்தி ஆசிரியர் திரு.வி, கலியாண சுந்தரனார் டாக்டர் பி. வரதராசுலு நாயுடு, தேச பக்தன் ஆசிரியர், வ.வே.சு. ஐயர்

ஆகியோர் ஊர்வலத்தில் கலந்து கொண்டதோடு, கடற்கரைப் பொதுக் கூட்டத்திலும் பேசினர்.

ஒத்துழையாமை இயக்கத்தை விரும்பாத 'இந்து', 'சுதேச மித்திரன்' ஆகிய மிதவாத ஏடுகளும் வேல்ஸ் இளவரசர் பகிஷ்காரத்தை ஆதரித்தன. 'தேசம் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராகப் போர்க்கோலங் கொண்டிருக்கும் நேரத்தில் வேல்ஸ் இளவரசரை அனுப்பி வைத்தது ராச தந்திரமற்ற செயல்' என்று எழுதியது 'இந்து' பத்திரிகை.

கலகம் மூண்டது!

வேல்ஸ் இளவரசர் பம்பாய்த் துறைமுகத்தில் கால் வைத்த நாளிலே நகரின் பல்வேறிடங்களில் அன்னிய ஆடைகள் குவிக்கப்பட்டுத் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன. பகிஷ்கார வாசகங்கள் அடங்கிய தோரணங்கள் நகரெங்கணும் கட்டப் பட்டிருந்தன.

அந்தப் பெருநகரம் எங்கும் கலகம் மூண்டது. தெருக்களில் மக்கள் அணி அணியாகத் திரண்டு இளவரசருக்கு எதிரான கோஷங்களை எழுப்பிச் சென்றனர். காங்கிரஸ் - கிலாபத் தொண்டர் படையினர் கடைகளை அடைக்குமாறு வணிகர் களையும், தொழிற்சாலைகளுக்குச் செல்லவேண்டாமென்று தொழிலாளர்களையும் வேண்டிக் கொண்டனர்.

இது பொறாத ஆங்கிலேயரிற் சிலரும், ஆங்கிலோ - இந்தியர், பார்ஸிக்காரர்கள் ஆகியோரில் ஒருசாராரும் காங்கிரஸ் - கிலாபத் தொண்டர்களைத் தாக்கினர். கதரணிந்தவர்களைக் கண்டால், பழி வாங்கும் போக்கில் தாக்கி, அவர்களைப் படுகாயப்படுத்தினர். இதனால், அன்று காலையில் அமைதியான முறையில் உருவான பகிஷ்கார ஆர்ப்பாட்டம் நடுப்பகலுக்குள் பெருங் கலவரமாக மாறியது.

வெள்ளை நிறத்தவரும், ஆங்கிலோ - இந்தியரும், பார்ஸிகளும் வாழும் பிரதேசங்கள் தாக்குதலுக் குள்ளாயின, வெள்ளையரைக் கண்டால், தங்கள் தலைகளில் அணிந்துள்ள தொப்பிகளைக் கழற்றுமாறு மக்கள் கட்டாயப் படுத்தினர். வெள்ளைப் பெண்கள் அவமானப்படுத்தப்பட்டனர்.

53 பேர் பலி!

டிராம் வண்டிகள், மோட்டார்க் கார்கள் கொளுத்தப்பட்டன. தொழிலாளர்களும் கலவரத்தில் கலந்து கொண்டனர். கலவரம் 4 நாட்கள் தொடர்ந்து நடைபெற்றது. இராணுவத்தாரும்

போலீசாரும் சுட்டதால் 53 பேர் உயிரிழந்தனர். 400 பேர் படுகாய மடைந்தனர். இவர்களில் பெரும்பாலோர் ஒத்துழையாமை இயக்கத்தைச் சார்ந்தவர்களாகவோ, அதன் ஆதரவாளர்களாகவோ இருந்தனர் என்று காந்திஜி பத்திரிகைகளில் அறிக்கை வெளி யிட்டார்.

காந்திஜியும், மற்றும் பம்பாய் நகரக் காங்கிரஸ் கிலாபத் தலைவர்களும் கலகக்காரர்கள் மத்தியில் சென்று அமைதியைக் காக்குமாறு வேண்டிக் கொண்டனர். பெண்மணியான கவியரசி சரோஜினிதேவி, மிகுந்த துணிவோடு பலமணி நேரம் கலகக்காரர்கள் மத்தியில் நின்று அகிம்சையைப் போதித்தார்.

'முடை நாற்றம் மூக்கைத் துளைக்கிறதே!'

அண்ணல் காந்தி பம்பாயில் நடந்த கலவரத்தால் அதிர்ச்சியடைந்தார். 'அகிம்சை உதட்டவில்தான் இருக்கிறது. உள்ளத்தில் இல்லை' என்றும், 'பம்பாய் நகரில் நான் கண்ட சுயராஜ்யம் என் மூக்கைத் துளைக்குமளவுக்கு முடை நாற்றம் வீசியது' என்றும் கூறி அறிக்கை விட்டார்.

பம்பாய் நகரில் அமைதி ஏற்படும் வரையில் தாம் உணவு கொள்ளப் போவதில்லையென்று அறிவித்து, தொடர்ந்து ஐந்து நாட்கள் வரை காந்திஜி உண்ணாவிரதத்தைக் கடைப்பிடித்தார். அதன் பின்னரே நகரில் அமைதி நிலவியது.

பொதுவாக, நவம்பர் மாதம் 17-இல் நாடு முழுவதும் நடந்த பகிஷ்காரத்தைக் கண்டு வெள்ளைச் சாதியினர் வெறிபிடித்தவர் களாயினர். ஆங்கிலேயரால் நடத்தப்பட்ட கல்கத்தா 'ஸ்டேட்ஸ்மன்', 'இங்கிலீஷ்மேன்', பம்பாய் 'டைம்ஸ் ஆப் இந்தியா', மெட்ராஸ் மெயில்' ஆகிய பத்திரிகைகள் ஒத்துழையாமைக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று வைசிராயை வற்புறுத்தின. இது போலவே ஆங்கிலேயர் சம்பந்தப்பட்ட ஸ்தாபனங்களெல்லாம் ஒரே குரலில் ஓலமிட்டன. ''தேசம் முழுவதுமே காங்கிரசின் கைக்குப் போய்விட்டது'' என்று கூறி, அபயக் குரல் கொடுத்தன.

வைசிராய் வெறி கொண்டார்!

வெள்ளையர்களின் ஓலம் வைசிராயின் உள்ளத்தைத் தொட்டது. அதனால், முதலில் வங்காளத்தில் அரசு அடக்கு முறையில் இறங்கியது. தொண்டர் படைகள் தடை செய்யப்படு மெனக் கவர்னர் அறிவித்தார். அடுத்துள்ள மூன்று மாத

காலத்திற்கு அரசியல் கூட்டங்களும் ஊர்வலங்களும் தடைசெய்யப்பட்டன. 'இது போதாதென்றால், இன்னும் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்' என்றும் கூறி, வங்காளக் கவர்னர் மக்களைப் பயமுறுத்தினார்.

பம்பாய் நகரில் நடந்த அமளியால் வேதனையடைந்த காந்திஜி 23-11-21-இல் பர்தோலியில் தொடங்கப்படவிருந்த வரிகொடா இயக்கத்தைத் தற்காலிகமாகத் தாம் கைவிட்டிருப்பதாக அறிவித்தார்.

அபாய அறிவிப்பு!

இந்திய வைசிராய் லண்டனிலிருந்த இந்தியா மந்திரிக்குக் கொடுத்த அபாய அறிவிப்புப் போன்ற தந்தியொன்றிலே, 'இந்தியாவில் பிரிட்டிஷ் அரசுக்கு முன் எப்போதும் இல்லாத அளவில் அவமதிப்பு ஏற்பட்டு விட்டது' என்று தகவல் தந்தார்.

''ஒத்துழையாமை என்னும் பெயரில் உருவாக்கப்பட்டு வரும் அராஜகத்தை முறியடிக்கத் தேவையான எல்லா நடவடிக்கைகளும் எடுத்துக் கொள்ளப்படும். ராணுவமும் போலீசும் அவசியப்படும் நேரங்களிலெல்லாம் பயன்படுத்தப் படும்' என்று மேலிடத்துக்கு வைசிராய் உறுதி கூறினார்.

''காங்கிரஸ் தலைவர்கள், பேச்சாளர், பத்திரிகைகள் மீதெல்லாம் தயவு தாட்சண்யமின்றிக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது'' என்றும் வைசிராய் பெருமகனார் இந்தியா மந்திரிக்கு அனுப்பிய தந்தியில் உறுதி கூறினார்.

இதனால், ஆயுத பலமற்ற - அகிம்சையையே நம்பியுள்ள ஒத்துழையாதாருக்கும் சர்வ வல்லமை படைத்த பிரிட்டிஷ் அரசுக்குமிடையே போர் மூண்டுவிட்டது, வேல்ஸ் இளவரசர் வருகை காரணமாக! இளவரசருக்கு ஏற்பட்ட அவமதிப்பைக் கண்டு, வைசிராய் நிதானமிழந்தவரானார். பொதுவாக, நாடு முழுவதிலும் அமைதியான முறையில் வேல்ஸ் இளவரசர் பகிஷ்கார ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கல்கத்தாவில் தேசபந்துவின் ஆட்சி!

வேல்ஸ் இளவரசர் நவம்பர் 25-இல் கல்கத்தா செல்வதாக இருந்தது. அதனால், பகிஷ்காரத்தை அங்கு வெற்றிகரமாக நடத்தத் தேசபந்து சித்தரஞ்சன் தாசர் திட்டமிட்டு ஏற்பாடு செய்தார். இந்த ஏற்பாடுகளை முடியடிக்க விரும்பி, தொண்டர் படையை அரசு

தடை செய்தது. தேச பந்துவின் மனைவி திருமதி வசந்தா தேவியும், மகன் சித்தரஞ்சனும் கைது செய்யப்பட்டனர். இந்தச் செய்தி நகரில் பரவியதும், எங்கும் அமைதி குலைந்தது. 'திருமதி தேசபந்து ஒரு காவல் நிலையத்தில் அடைக்கப்பட்டிருக்கிறார்' என்ற செய்திதான் கல்கத்தா மக்களை ஆவேசமடையச் செய்தது. நிலைமை மோசமாவதை அறிந்த வங்காள அரசு, நள்ளிரவில் திருமதி வசந்தா தேவியையும் சித்தரஞ்சனையும் விடுதலை செய்த தோடு, அவர்களைக் கைது செய்ததற்காக மன்னிப்பும் கோரியது.

இளவரசர் கல்கத்தா வருவதற்கான நாள் நெருங்கி வந்த நேரத்திலே அந்த நகரம் முழுவதிலும் தேசபந்து தாசரின் ஆட்சியே நடைபெற்றது. அந்த ஆட்சிக்குமுன் பிரிட்டிஷ் ஆட்சி செயலற்று விட்டது. நிலைமையைச் சமாளிக்கத் தேசபந்துவைச் சிறையிலடைத்தது வங்காள அரசு. இதனால், காங்கிரசிலிருந்து ஒதுங்கி நின்ற மிதவாதிகளும் பகிஷ்காரத்தில் பங்கு பெறலாயினர்.

சமரச முயற்சி

கிறிஸ்துமஸ் நாளை இளவரசருடன் கழிப்பதற்காக வைசிராய் கல்கத்தாவுக்கு வந்திருந்தார். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வைசிராய்க்கும் தேச பந்துவுக்குமிடையே சமரசம் செய்து வைத்து, பம்பாயில் நடந்த அசம்பாவிதங்கள் கல்கத்தாவிலும் நடப்பதைத் தவிர்க்கப் பண்டித மாளவியாவும் வேறு சிலரும் முயன்றனர். அவர்கள் வைசிராயிடம் தூது சென்று பேசியபின், கல்கத்தா நகரிலுள்ள அலிப்பூர் சிறையிலிருந்த தேசபந்துவுடனும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பேசினர். அவர், அகமதாபாத்திலிருந்த காந்தியடிகளைக் கைகாட்டி விட்டார். சமரசத் தூதுவர்கள் அடிகளையும் அணுகினர். அவர், 'சிறையிலுள்ள அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப் பெற வேண்டும். அப்போதுதான் சமரசம் பேச முடியும்' என்று உறுதியாகக் கூறிவிட்டார்.

பொதுவாக, அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வைசிராய் இணங்கினா ரென்றாலும், லாலா லஜபதி, அலி சகோதரர்கள், டாக்டர் கிச்சுலு ஆகியோரை மட்டும் விடுதலை செய்ய மறுத்து விட்டார். இதன் பின்னரும் சமரசப் பேச்சுத் தொடர்ந்தது. அடுத்த ஆண்டு மார்ச்சு மாதத்தில் காங்கிரஸ் தலைவர்களையும் கொண்ட வட்ட மேஜை மாநாடொன்றை நடத்தி, அதிலே அரசியல் சீர்திருத்தம் பற்றி ஆலோசிக்கத் தாம் ஏற்பாடு செய்வதாக வைசிராய் உறுதி கூறினார். இதற்கு

விலையாக இளவரசர் பகிஷ்காரம் கைவிடப்பட வேண்டும் என்றார். எக்காரணங் கொண்டும் அரசியல் கைதிகளில் எவரும் சிறையில் நீடிப்பதை அனுமதிக்கவோ, ஒத்துழையாமையைக் கை விடவோ, மறியல் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்கவோ தம்மால் இயலாதென்று காந்திஜி உறுதியாகக் கூறிவிட்டார். அதனால் சமரசப் பேச்சு முறிந்தது.

அடக்குமுறை

வங்காளத்தில் பல அரசியல் அமைப்புகளை அரசு சட்ட விரோதமானவை என்று அறிவித்தது. மாகாண மெங்கணும் காங்கிரஸ் - கிலாபத் தலைவர்களும் தொண்டர்களில் பல்லாயிரக் கணக்கானவர்களும் சிறையில் அடைக்கப்பட்டனர். அரசியல் ரீதியான கிரிமினல் சட்டங்கள் எத்தனை யுண்டோ அத்தனையும் பயன்படுத்தப்பட்டன. பெருத்த அமளிக்கும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்குமிடையே வேல்ஸ் இளவரசர் கல்கத்தா நகருக்கு வருகை தந்தார். அங்கும் வைசிராய், வங்காள கவர்னர், உயர் அதிகாரிகள், பிரிட்டிஷ் விசுவாசிகளான இந்தியர்கள், வணிகர்கள், தொழிலதிபர்கள், ஜமீன்தார்கள் ஆகியோர் வேல்ஸ் இளவரசர் எதிரே கைகட்டி வாய் பொத்தி நின்று தங்கள் விசுவாசத்தை வெளிப்படுத்தி அவரை வரவேற்றனர். கல்கத்தா மாநகராட்சி வரவேற்பு வாசித்தளித்தது. நகரில் பூரண அர்த்தால் நடைபெற்றதுடன், கண்டன ஊர்வலங்களும் பொதுக் கூட்டங்களும் நடந்தன.

சென்னையை நோக்கி...

வேல்ஸ் இளவரசர் தமிழ் நாட்டின் தலைநகரான சென்னைக்கு 14-1-22-இல் வருகை தந்தார். அன்று இங்கும் அர்த்தால் வெற்றிகரமாக நடைபெற்றது. அந்த வெற்றிக்குத் திருஷ்டி கழிப்பது போன்று வன்முறைச் சம்பவங்களும் நடை பெற்றன. பம்பாய் நகரில் நடந்த அளவுக்கு இல்லையென்றாலும், காந்திஜியின் கடுமையான கண்டனத்தைப் பெருமளவுக்குச் சென்னை யிலும் வன்முறைச் சம்பவங்கள் தாராளமாக நடைபெற்றன.

காங்கிரஸ் தலைவர்கள் மிகுந்த எச்சரிக்கையுடனிருந்து நகரின் பல பகுதிகளுக்குச் சென்று, சிறு சிறு கூட்டங்கள் நடத்தி மக்களுக்கு அகிம்சையைப் போதித்தனரென்றாலும், சில இடங்களில் மக்களில் ஆத்திரங் கொண்ட சிலர் போலீசார் மீது கல்லெறிந்ததால் அவர்களில் பலர் படுகாயமடைந்தனர். டிராம் வண்டிகள் கொளுத்தப்பட்டன. வெள்ளைப் பெண்கள் பலர்

துன்புறுத்தப்பட்டனர். போலீசார் சுட்டதில் அறுவர் உயிர் நீத்தனர். பலர் காயமடைந்தனர்.

ஜஸ்டிஸ் கட்சித் தலைவர் சர்.பி. தியாகராச செட்டியார் வேல்ஸ் இளவரசரை வரவேற்கப் புறப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில் கலகக்காரர்கள் தண்டையார்ப் பேட்டையிலுள்ள அவரது மாளிகையைச் சூழ்ந்து கொண்டு கல்லெறிந்து, அவர் இளவரசர் வரவேற்பில் கலந்து கொள்வதற்கு இயலாதபடிச் செய்துவிட்டனர். இந்தச் சம்பவம் நகரில் பெருத்த பரபரப்பை ஏற்படுத்தியது.

துப்பாக்கிச் சூடு!

அர்த்தாலன்று மாலை நகரின் மத்தியப் பகுதியிலுள்ள 'வெல்லிங்டன்' திரைப்படத் தியேட்டர் மீது ஒரு கூட்டத்தார் கல்லெறிந்தனர். கொட்டகைக்குள்ளிருந்த ஒருவர் கலகக் கூட்டத்தை நோக்கித் தனது கைத் துப்பாக்கியால் சுட்டதில் திருவல்லிக்கேணியைச் சார்ந்த முஸ்லிம் ஒருவர் அங்கேயே மாண்டார். சுட்டவர், தியேட்டர் சொந்தக்காரரான வெள்ளையர் என்று சொல்லப்பட்டது. இந்தச் சம்பவத்தில் பலர் காயமடைந்தனர். தியேட்டருக்குள்ளிருந்து ஒருவர் சுட்டதில் ஆத்திரமடைந்த பொது மக்கள் தியேட்டருக்குள் நுழைந்து ஜன்னல்களையும், மேஜைகளையும் அடித்து நொறுக்கினர்.

ஜஸ்டிஸ் கட்சியினர் இளவரசர் வரவேற்பில் கலந்து கொண்டு, தாங்கள் தேசபக்தியுடைய ஒத்துழையாதாரிலிருந்து வேறுபட்டவர்கள் என்பதைக் காட்டிக்கொண்டனர். வரவேற்பில் கலந்து கொள்ளச் சென்றவர்களின் மோட்டார்கள் தாக்கப்பட்டன. சிலர் காயமடைந்தனர். பொதுவாக, அர்த்தால் நடைபெறும் நாட்களில் மட்டும் மாலை நேரத்தில் சகஜநிலை திரும்புவது வழக்கம். இதற்கு மாறாக, சென்னையில் வன்முறை தலை காட்டியதால் முன்னிரவு நேரத்தில் நகரில் பயம்குடிகொண்டிருந்தது.

ராஜாஜியின் குமுறல்!

வேலூர் சிறையிலிருந்த ராஜாஜி தம்மைப் பேட்டி கண்டு பேசிய டாக்டர் டி.எஸ்.எஸ். ராசன் மூலம் சென்னைச் சம்பவம் பற்றிய விவரங்களை அறிந்தார். அறிந்தவர், தமது நாட்(14-1-22) குறிப்பில் கீழ்வருமாறு குறித்து வைத்துள்ளார்:

''வேல்ஸ் இளவரசர் வந்த சமயத்தில் சென்னையில் ஜனங்கள் தவறாக நடந்து கொண்டதாக ராஜன் கூறுகிறார். அதைக் கேட்க எனக்கு வருத்தமாக இருக்கிறது. பலாத்காரம் தலை தூக்கி ஆடிற்றாம். அர்த்தால் வெற்றிபெற்ற போதிலும், அதில் பயமுறுத்தலும், பலாத்காரமும் இன்றி எளிதில் அர்த்தால் நடந்திருப்பதால் இப்போது இப்படி நடந்தது என்பதைக் கேட்க எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. இந்தத் தடவை ஜனங்களுக்கு எதிராக சர்க்கார் ஏஜெண்டுகள் வேலை செய்தார்களாம்! அதனால்தான் ஜனங்கள் அதை எதிர்க்கும் பொருட்டு தவறான பாதையில் இறங்கி விட்டார்களாம்! 'வில்லிங்டன் சினிமாக் கொட்டகையில் ஆங்கிலக் கொடி பறக்கவே ஜனங்கள் பெருந்திரளாகப் போய் அதைத் தாக்கினார்களாம். ஆனால் போலீசாரும் போர் வீரர்களும் ஒழுங்காக நடந்து கொண்டார்கள் என்று டாக்டர் ராஜன் கூறுகிறார்.''

(''சிறையில் தவம்'': பக்.60)

காந்திஜியின் வேதனை

சென்னைச் சம்பவம் பற்றி டாக்டர் டி.எஸ்.எஸ். ராசன் மூலம் தகவலறிந்த காந்திஜி, *19-1-22* 'யங் இந்தியா'வில் கீழ்வருமாறு எழுதினார்:

''சென்னையில் இளவரசர் வருகை தந்த நாளில் பொருள்களை நாசம் செய்தது காலிகள் செயல் என்று கூறுவது ஒரு வாதமாகாது. சென்னையில் ஒத்துழையாமை இயக்கவாதிகள் சுயாட்சிக்குத் தகுதியாகவில்லை என்பதற்கு இது முழுச் சான்றாகும். தகுதியிருப்பதாக உரிமை பாராட்டுவோர், இம்மைச் சக்திகளை அடக்க முடிந்திருக்க வேண்டும். இது அமைதியான அர்த்தால் அல்ல. ஏனெனில், மற்றவர்கள் கடைகளைத் திறந்து வைத்திருந்தால், பாவம், அந்தத் திரைப்படக் கொட்டகைக் காரருக்கு ஏற்பட்ட கதிதான் அவர்களுக்கும் ஏற்பட்டிருக்கும். திரைப்படக் கொட்டகைக்காரர் சுட்டது நியாயமானது தான் என நான் கருதுகிறேன். ஏனெனில, அவர் சுட்டிராவிட்டால் அவரது கொட்டகையையே இடித்துத் தள்ளியிருப்பார்கள்.

''சர். தியாகராச செட்டியார் இல்லத்தைச் சூழ்ந்து கொண்டது, தனியார் சுதந்திரத்தில் கோழைத்தனமாகக் குறுக் கிட்டதாகும். வன்முறைக் கூட்டத்தின் வழியாக இது இருக்கலாம். ஆனால், ஒத்துழையாமை இயக்க வாதிகள் கடைப்பிடிக்கக் கூடிய வழியல்ல.

''பம்பாயைப் போன்றே சென்னையும் நமக்கு ஒரு பாடத்தைக் கற்பித்துவிட்டது. சுயராஜ்யத்திற்கான சூழ்நிலையை உண்மையிலேயே உருவாக்குவதற்கு இன்னும் நாம் எவ்வளவோ செய்தாக வேண்டும்.''

காந்திஜி சென்னைச் சம்பவம் பற்றி இரண்டாவது முறையாகவும் 22-1-22 'யங் இந்தியா'வில் எழுதினார். அதிலே, ''சென்னை நிகழ்ச்சிகள் எதைக் காட்டுகின்றன? இந்த ஆட்சி முடியும்போது போக்கிரிகள்தான் ஆள்வார்களே தவிர, நாம் ஆள மாட்டோம், என்பதையே காண்பிக்கின்றன'' என்று கூறினார்.

சென்னையில் நடந்த வன்முறைகள் பற்றியெல்லாம் விவரமாகப் பலர் காந்திஜிக்கு எழுதினர். அந்தக் கடிதங்களை 'யங் இந்தியா'வில் பிரசுரித்து, ''சென்னைச் சம்பவங்கள் இந்தியாவின் பிற பகுதிகளுக்குத் தரும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி இந்தத் தவறுகளுக்கான பொறுப்பை ஏற்கும் என நான் நம்புகிறேன்' என்று காந்திஜி குறிப்பெழுதினார்.

பொதுவாக, நாடெங்கும் வேல்ஸ் இளவரசருக்கு எதிராக நடைபெற்ற பகிஷ்காரமானது, இந்தியா விழித்தெழுந்துவிட்டது என்பதைக் காட்டியது. குறிப்பாக, தமிழ்நாடு ஒத்துழையாமை இயக்கத்திலிருந்து ஒதுங்கி நிற்கவில்லையென்பதைச் சென்னை நகரில் வெற்றிகரமாக நடைபெற்ற 'அர்த்தால்' புலப்படுத்தி விட்டது.

ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்து அரசு அலுவல்களைத் துறக்கவும், பட்டம் பதவிகளைத் தூக்கி எறியவும், நீதிமன்றங்களில் தொழில் புரிவதை விட்டு வெளியேறவும் முன் வந்த தமிழர்களின் எண்ணிக்கை நாம் பெருமைப்பட்டுக் கொள்ளுமளவுக்கு இல்லையென்றாலும், சட்ட மறுப்பில் ஈடுபட்டுச் சிறைபுகுவதற்குத் தமிழ்நாட்டில் ஆயிரக்கணக் கானவர்கள் முன் வந்தனர். அவர்களுக்கெல்லாம் வழி காட்டிகளாகத் தலைவர் ராஜாஜியும், தமிழ்நாடு காங்கிரசின் தலைவர் திரு. சுப்பிரமணிய சாஸ்திரியாரும் சிறை புகுந்தார்கள் என்பதனை முன்பே அறிந்தோம்.

இவர்களைப் பின்பற்றித் திருவண்ணாமலை அண்ணா மலைப்பிள்ளை உட்பட ஆயிரக்கணக்கானவர்கள் சிறை புகுந்தனர். இதிலே ஆந்திரதேசம் தமிழ்நாட்டுடன் போட்டி யிட்டது. தேசம் முழுவதிலும் சிறை புகுந்தவர்களின் எண்ணிக்கை

1921 டிசம்பரிலே நாற்பதாயிரம் இருக்குமென்று காங்கிரஸ் மேலிட அறிவிப்பு ஒன்று கூறியது.

தனியறையில் ராஜாஜி

வேலூர் மத்திய சிறையிலே தேசபக்தர்களை அடைத்து வைக்கும் வழக்கத்தை அப்போதுதான் சென்னை மாகாண அரசு தொடங்கி வைத்தது. அதன்பின் நாடு விடுதலை பெறும்வரை தமிழ்நாட்டில் வேலூர் மத்திய சிறையில்தான் தேசபக்த அரசியல் கைதிகள் அதிக அளவில் அடைக்கப்பட்டு வந்தனர்.

ராஜாஜிக்கு மூன்று மாதத் தண்டனைதான் விதிக்கப்பட்ட தென்றாலும், தாங்கொணாத் துன்பங்களை அவர் சிறையில் அனுபவித்தார். தனி அறையில் அடைத்து வைக்கப்பட்டார். சிறையில் அனுபவிக்கும் கொடுமைகளிலெல்லாம் தலையாய கொடுமை அரசியல் கைதிகளை - அவர்களிலும், மூதறிஞர் ராஜாஜி போன்ற அறிஞர்களைத் தனிஅறையில் அடைத்து வைப்பதாகும். இதனால், சிறையில் புகுந்த ஒரு மாதத்திற்குள் ராஜாஜியின் உடல் நிறையில் 6 பவுண்டு குறைந்துவிட்டது.

காந்திஜியின் கண்டனம்

ராஜாஜி வேலூர் சிறையில் தனிக் கொட்டடியில் அடைக்கப் பட்டிருப்பதை அறிந்து காந்தியடிகள் திடுக்கிட்டுவிட்டார். 'யங் இந்தியா'வில் அவர் எழுதியது வருமாறு:

''ராசகோபாலச்சாரியாரின் எடை குறைந்திருப்பது லேசாக ஒதுக்கிவிடக் கூடிய விஷயமல்ல. தனிக் கொட்டடி பற்றி எனக்குத் தெரியும். சி.ஆர். அடைப்பட்டிருப்பது அப்படிப்பட்ட ஒரு கொட்டடிதான் என்றால், அது ஒரு ஆஸ்துமா நோயாளிக்கு ஏறக்குறைய மரண தண்டனை போலத்தான். கொட்டடியில் ஒருவரை அடைப்பதென்பது, ஒரு பெட்டிக்குள் அவரை வைத்திருப்பது போலத்தான். உயிர் வாழத் தேவையான குறைந்த பட்ச காற்றோட்டத்தை மட்டுமே அளிக்கும் சில துவாரங்களைக் கொண்ட பெட்டி அது.

''அதில் வெளிச்சமே இராது. எதிரெதிரான காற் றோட்டத்துக்கும் வழி இராது. அடைக்கப்பட்ட சிறிது நேரத்தி லேயே கொட்டடிக்குள் இருக்கும் காற்று கைதி வெளியேற்றும் சுவாசத்தாலேயே கனத்தும் அசுத்தப்பட்டும் போகும். தான் வெளியேற்றிய காற்றையே கைதி திரும்பவும் சுவாசிக்க வேண்டியதைத் தவிர வேறு வழியேயில்லை. குறைந்தபட்ச அளவில் மனிதாபிமானம் காட்டுவதென்றாலும், சி. ராசகோபாலாச்

சாரியாருக்கு இரவும் பகலும் தூய காற்று இதுவரை கிடைக்கவில்லையெனில், இனியேனும் கிடைக்கச் செய்ய வேண்டும்.''

சர்க்காவே துணை

'யங் இந்தியா'வில் காந்திஜி எழுதிய குறிப்பு வெளியாகி மூன்று வாரங்களுக்குப் பின் வேலூர் சிறையில் ராஜாஜி தனிக் கொட்டடியில் அடைப்பட்ட கொடுமையிலிருந்து விடுவிக்கப் பட்டார். அதாவது, பல கைதிக்ள் உள்ள பெரிய கொட்டடிக்கு மாற்றப்பட்டார்.

தனிக் கொட்டடியில் அடைக்கப்பட்ட நேரங்களிலே, தமது நண்பர் ஒருவர் அனுப்பிய சர்க்காவையே தோழனாகக் கொண்டு ராஜாஜி வாழ்க்கை நடத்தினார். ''இந்தச் சர்க்கா மட்டும் இல்லாவிடில் சிறை வாழ்க்கை எப்படி இருந்திருக்கும்?'' என்று வியப்பும் வேதனையும் கலந்த வினாவை யெழுப்பி, தமது நாட்குறிப்பில் ராஜாஜி எழுதியிருக்கிறார்.

அகமதாபாத் காங்கிரஸ்

1921 டிசம்பர் கடைசி வாரத்தில் 36 ஆவது காங்கிரஸ் மகாசபை குஜராத் மாநிலத்தில் அகமதாபாத் நகரில் கூடியது. காங்கிரஸ் பொதுச் செயலாளர்களான மோதிலால் நேருவும், ராஜாஜியும் அப்போது சிறையில் இருந்தனர்.

அகமதாபாத் காங்கிரஸ் மகாசபைக்கு தலைவராகத் தேர்ந் தெடுக்கப்பட்டிருந்த வங்க வீரர் தேசபந்துவும் சிறையிலிருந்தார். மாநிலந்தோறும் முன்னணித் தலைவர்களும் அடுத்த வரிசையில் உள்ள தொண்டர்களும் பல்லாயிரக் கணக்கில் சிறைச்சாலைகளில் அடைப்பட்டிருந்தனர். அவர்களின் எண்ணிக்கை நாற்பதா யிரத்துக்கு மேல் இருந்தது. இந்நேரத்திலே தான் காங்கிரஸ் மகாசபை அகமதாபாத்திலே கூடியது. திரு. வல்லபாய் படேல் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்து தமது வரவேற்புரையை இந்தி மொழியிலே தயாரித்துப் படித்தார்.

கைதியின் தலைமையுரை!

சிறையிலிருந்தபடியே தேசபந்து தாசர் எழுதியனுப்பிய தலைமையுரையைக் கவியரசி சரோஜினி தேவி படித்தார். தேச பந்துவுக்குப் பதில் ஜனாப் அப்துல் ஹக்கீம் அஜ்மல்கான் தலைமை வகித்து, மகாசபை நடவடிக்கைகளை நடத்தினார்.

தேசத்தின் பெருந் தலைவர்கள் எல்லாம் சிறைகளில் அடைப் பட்டிருந்த காரணத்தால் அகமதாபாத் காங்கிரஸ் மகாசபை ஆடம்பர மின்றி நடத்தப்பட்டது. பிரதிநிதிகள் அமர்வதற்கு நாற்காலிகள் போடும் வழக்கம் முதன் முதலாக இங்குதான் கைவிடப்பட்டது. பிரதிநிதிகளின் சொற்பொழிவுகள் கூடச் சுருக்கமாக இருந்தன. மகாசபையின் நடவடிக்கைகளிலே முதன் முதலாக அதிக அளவில் இந்தி மொழி இங்குதான் பயன்படுத்தப்பட்டது.

காந்தியடிகள் அழைத்ததன் பேரில் திரு.ஜெ.எப். ஆண்டு ரூஸ் இந்த மகாசபையில் கலந்துகொண்டு பேசினார். ''சமய உணர்வுடன் நோக்கும்போது, அன்னியத் துணிகளுக்குத் தீ வைத்துக் கொளுத்துவது பலாத்காரத்துக்கு ஊக்கம் அளிப்ப தாகும்'' என்று கூறி, 'சொக்கப் பானை' விளையாட்டை திரு. ஆண்ட்ரூஸ் கண்டித்தார்.

அகமதாபாத் காங்கிரஸில் ான் முதன்முதலாக கதர்க் கண் காட்சி நடத்தப்பெற்றது. அதன் பின்னர் காங்கிரஸ் மகாசபை கூடும் போதெல்லாம் கதர் கண்காட்சி நடத்துவது வழக்கமாகி விட்டது.

தேசபந்துவின் வீரவுரை

சிறையிலிருந்த வண்ணம் தேசபந்து தாசர் எழுதியனுப்பி யிருந்த தலைமையுரை வீரம் செறிந்ததாக இருந்தது. அதிலே, ''மாண்டேகு - செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள புதிய அரசியல் சட்டத்தை ஆதாரமாகக் கொண்டு அரசுடன் ஒத்துழைக்குமாறு ஒரு போதும் நான் தேச மக்களுக்குச் சொல்ல மாட்டேன்'' என்று தேசபந்து கூறியிருந்தார்.

''அவமானத்துடன் கூடிய சமாதானத்தை நான் வரவேற்க மாட்டேன். புதிய அரசியல் சட்டத்தின் பூர்வ பீடிகையிலே, 'சுதந்திரம் பெற இந்தியருக்கு உரிமை உண்டு' என்றுகூடச் சொல்லப்படவில்லை. இந்தியாவுக்கு எந்தக் காலத்திலாவது பிரிட்டனுக்குச் சமமான அந்தஸ்து அளிப்பதாகவும் சொல்லப்பட வில்லை. இந்தப் பூர்வ பீடிகை அமுலில் இருக்கும்வரை அரசுடன் செய்து கொள்ளப்படும் எந்த உடன்படிக்கையையும் நான் ஏற்றுக்கொள்ள முடியாது'' என்று தேசபந்து கூறினார்.

பொதுச் செயலாளராக ராஜாஜி தேர்வு

அகமதாபாத் காங்கிரஸ் மகாசபையில் நிறைவேற்றப்பட்ட அரசியல் தீர்மானத்திலே, ஒத்துழையாமைக் கொள்கையில்

நம்பிக்கை தெரிவிக்கப்பட்டதுடன், சட்டசபைப் பிரவேசம் பற்றிய யோசனை நிராகரிக்கப்பட்டது. இந்தத் தீர்மானத்தின் மீது கடுமையான விவாதம் நடைபெற்றதென்றாலும், இறுதியில் ஒருமனதாக ஏற்கப்பட்டது. இந்தத் தீர்மானத்தை மகாத்மாஜியே முன்மொழிந்தாரென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சிறையிலிருந்த ராஜாஜியே ஆமதாபாத் காங்கிரசிலே காங்கிரஸ் பொதுச் செயலாளர்களி லொருவராக இரண்டாவது முறையாகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றார். அவர் சிறையிலிருக்கும் வரை அவரது கடமைகளைச் செய்ய டாக்டர் டி.எஸ்.எஸ். ராசன் அனுமதிக்கப்பட்டார். காந்திஜியின் தலைமையில் நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மான மொன்றும் மகாசபையில் ஒரு மனதுடன் நிறைவேற்றப் பெற்றது.

ஆமதாபாத் மகாசபை முடிந்ததும் அதற்கு வந்திருந்த பிரதிநிதிகளை மாநிலவாரியாகச் சந்தித்து ஒத்துழையா இயக்கத்தைத் தீவிரப் படுத்துவதற்கான ஆலோசனைகளை அவர்களுக்குக் காந்திஜி கூறினார். தமிழ் நாட்டுப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசியபோது, ''ராஜாஜி சிறையிலிருக்கும் நேரத்தில் தமிழரிலே ஒவ்வொருவரும் தம்மை ராஜாஜியாக நினைத்து வேலை செய்ய வேண்டும்'' என்று காந்திஜி கூறினார்.

வரி கொடாப் போர்!

1922 ஜனவரி 12-இல் ஆந்திராவைச் சேர்ந்த குண்டூரில் வரி கொடா இயக்கம் ஸ்தல காங்கிரசால் பிரகடனம் செய்யப்பட்டது. ஆந்திரப் பிரதேசம் அப்பொழுது சென்னை மாகாண அரசின் நிர்வாகத்தில் இருந்ததால் குண்டூரில் நடைபெற்ற வரிகொடா இயக்கம் தமிழ் நாட்டின் பேராதரவைப் பெற்றது. தமிழரால் நடத்தப் பெற்று வந்த 'இந்து', 'சுதேச மித்திரன்' ஆகிய தேசியப் பத்திரிகைகள் எல்லாம் குண்டூர் போராட்டத்திற்கு முழு மனதுடன் ஆதரவளித்தன. தமிழ்நாடு காங்கிரசின் சார்பில் சென்னை நகரில் கூட்டங்கள் நடத்தப்பட்டு, குண்டூர் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கப்பட்டது.

சர்வ கட்சி மாநாடு

ஜனவரி 14-லிருந்து 16-வரை பம்பாய் நகரில் சர்வ கட்சி மாநாடு நடத்தப்பெற்றது. காங்கிரசுக்குள்ளேயும் வெளியேயு மிருந்த மிதவாதிகள் இந்த மாநாட்டைக் கூட்டினர். இந்திய வைசிராயின் அந்தரங்கமான தூண்டுதலும் இதற்கு இருந்தது.

சென்னை வாசியான சர். சங்கரன் நாயர் சர்வகட்சி மாநாட்டின் தலைவராக இருந்தார். இந்த மாநாட்டிற்குக் காங்கிரஸ் தலைவர்களிலே பலர் அழைக்கப்பட்டிருந்தும் காந்தியடிகளைத் தவிர வேறு யாரும் கலந்து கொள்ளவில்லை. காங்கிரஸின் நிலையை எடுத்துக் கூறுவதற்காக மட்டுமே காந்திஜி இந்த மாநாட்டில் கலந்து கொண்டார். அரசுக்கும் காங்கிரசுக்கும் சமரசம் ஏற்படுத்தி வைப்பதே இம்மாநாட்டைக் கூட்டியவர்களின் குறிக்கோளாகும்.

காந்திஜியின் நிபந்தனை

350 பிரமுகர்களுக்கு அழைப்பு விடப்பட்டிருந்தது. அவர்களில் 200-க்கு அதிகமானவர்கள் கலந்து கொண்டனர். காந்திஜி விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டத்தில் பங்கு கொண்டு காங்கிரசின் நிலையை விளக்கினார்.

''சம்பரான் ஜில்லாவிலுள்ள மக்கள் மீது ரூபாய் 25,000த்துக்கு அரசு தண்டப் போலீஸ் வரி விதித்திருக்கிறது. பஞ்சாப் படுகொலை காலத்தில் கூட இவ்வளவு பெரிய அடக்குமுறை கையாளப்படவில்லை'' என்று காந்திஜி கூறினார்.

''மாநாடு கூட்டுவது எங்கள் லட்சியமல்ல; தான் கையாண்ட கொடிய அடக்குமுறைகளுக்கு அரசு வருத்தத்தைத் தெரிவிக்க வேண்டும் என்று நாங்கள் வற்புறுத்துகிறோம். அரசை சிறுமைப்படுத்த நாங்கள் விரும்பவில்லை யென்றாலும், அரசு வருத்தத்தைத் தெரிவித்தால்தான் இச் சமரச மாநாடு வெற்றிபெறும்'' என்றும் அடிகள் கூறினார்.

''நான் சொல்லும் நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டால் இந்த மாநாட்டின் முடிவை ஒப்புக் கொள்ள நான் தயார். பகிஷ்கார ஆர்ப்பாட்டங்களையெல்லாம் நிறுத்தி விடவும் நாங்கள் தயார். வேண்டுமானால், மதுக்கடை மறியல் இயக்கத்தையும் நிறுத்தி விடுகிறோம். எங்கள் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளத் தயார் என்று அரசு சொல்லுமானால், அன்னியத் துணிக்கடை மறியல். அர்த்தால் ஆகிய எல்லாவற்றையும் நிறுத்தி வைத்துவிட்டு, சமரசப் பேச்சில் கலந்து கொள்ளத் தயார்'' என்றும் காந்திஜி கூறினார்.

மாநாட்டுத் தலைவரே வெளியேறினார்!

காந்திஜியின் பேச்சு மாநாட்டின் தலைவரான சர். சங்கரன் நாயருக்குப் பிடிக்கவில்லை. மாநாட்டின் நடவடிக்கைகளையே முடித்து வைத்து விடுவதாக ஒரு முறைக்கு இருமுறை நாயர்

மிரட்டினார். ஒத்துழையாமை இயக்கத்தின் தலைவர்களில் காந்திஜியைத் தவிர வேறெவரும் மாநாட்டிற்கு வராதது திரு. சங்கரன் நாயரின் கோபத்திற்குக் காரணம் என்று சொல்லப் பட்டது. அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்றும், சாத்விக முறையில் மறியல் செய்யக் காங்கிரசை அனுமதிக்க வேண்டுமென்றும் காந்திஜி கூறியபோது சர். நாயருக்குக் கோபத்தால் முகத்தில் தீப்பொறிகள் கிளம்பின. அவரது சீற்றங்கண்டு மாநாட்டைக் கூட்டுவதற்குப் பொறுப்பாளி களாயிருந்த ஜனாப் ஜின்னாவும் திரு.எம்.ஆர். ஜெயகரும் மாளவியாஜியும் கவலைப்பட்டனர். நாயரைச் சமாதானப்படுத்த முயன்றனர். இவர்களுடைய முயற்சி வெற்றி பெறவில்லை. மாநாட்டின் நடுவிலேயே திரு. நாயர், ''இதெல்லாம் சுத்த நான்சென்ஸ்' என்று சொல்லிக் கொண்டே வெளியேறிவிட்டார்.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களிலே ஒத்துழையாமையாளரால் கடைப்பிடிப்பதற் கேற்றவற்றை மட்டும் ஏற்றுக் கொண்டு அதன்படி நடப்பதாக ஜனவரி 18-ஆம் தேதி கூடிய காங்கிரஸ் காரியக் கமிட்டி அறிவித்தது.

இந்த சர்வ கட்சி மாநாட்டின் நடவடிக்கைகள் வைசிராய் லார்டு ரீடிங்குக்குத் திருப்தியளிக்கவில்லை. அதனால், மாநாடு எதிர்பார்த்த பலனைத் தரவில்லை. ஒருபுறம் காங்கிரசுக்கும் அரசுக்கு மிடையே சமரசம் ஏற்படுத்த மாநாடு நடந்து கொண் டிருக்க, இன்னொருபுறம் ஒத்துழையாதாருக்கும் அரசுக்கு மிடையே போராட்டம் மிகவும் கடுமையாக நடந்து கொண்டிருந்தது.

குண்டூரில் கலகம்

குண்டூரில் நடைபெற்ற வரிகொடா இயக்கத்திலே வன்முறை தலைகாட்டியது. வரிகொடுக்க மறுத்தவர்களின் இல்லங்களிலிருந்த ஆடு, மாடுகளை ஜப்தி செய்வதிலே அரசாங்க அதிகாரிகள் தீவிரம் காட்டினர். ஒரு கிராமத்திலே அதிகாரிகள் கன்றிடமிருந்து பிரித்து மாட்டை ஜப்தி செய்தனர். இதனை மக்கள் ஆட்சேபித்தனர். அப்போது சப்-இன்ஸ்பெக்டர் கிராமவாசி ஒருவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றார். இதனால், கலவரம் அதிகரித்தது. குண்டூர் நகரில் ராணுவம் புகுந்தது. கவர்னருடைய குதிரைப்படை பல கிராமங்களில் பவனி வந்து மக்களைப் பயமுறுத்தியது. இந்த அடக்குமுறையால் மக்களில் அறுவர் உயிரிழந்தனர்.

காந்திஜியின் கடிதம்

வரிகொடா இயக்கத்தைத் தேசத்தின் பல பகுதிகளிலும் தொடங்குவதற்கு காங்கிரஸ் காரியக் கமிட்டி அனுமதியளித்தது. முன்னர்த் தொடங்குவதாக இருந்து தடைப்பட்டுவிட்ட பர்டோலி வரிகொடா இயக்கமும் ஜனவரி 31-இல் தொடங்கப்படுமென வைசிராய்க்குக் காந்தியடிகள் எழுதினார்.

அந்தக் கடிதத்திலே, தேசத்தின் பல இடங்களிலே மக்களின் சொத்துக்களைப் போலீசார் கொள்ளையடித்திருப்பதாகவும், நிரபராதிகளை அநியாயமாகத் தாக்கியிருப்பதாகவும், சிறைகளில் ஒத்துழையாமை இயக்கவாதிகள் கொடுமையாக நடத்தப் படுவதாகவும் காந்திஜி புகார் கூறினார்.

''தமிழ்நாடு உள்பட சென்னை மாகாணம் முழுவதிலும் 100 கிராமங்களில் சட்ட மறுப்புக்கு அங்கீகாரம் அளிக்க இருக்கிறேன்'' என்றும் அறிவித்தார்.

ஒரு வார கெடு!

அரசியல் கைதிகளை நிபந்தனையின்றி விடுதலை செய்யவும், பத்திரிகைகளுக்கு விதிக்கப்பட்டிருக்கும் வாய்ப் பூட்டுகளை எடுத்து விடவும், மக்களுக்குப் பேச்சுச் சுதந்திரமும், எழுத்துச் சுதந்திரமும் தாராளமாக வழங்கவும் ஒரு வார காலத்திற்குள் அரசு முன் வராவிடில் தேசம் முழுவதிலும் சட்ட மறுப்புப் போராட்டத்தைத் தொடங்கப் போவதாக வைசிராய்க்குக் காந்திஜி 'இறுதி அறிவிப்பு'க் கொடுத்தார்.

காந்திஜியின் கடிதம் தம் கைக்குக் கிடைத்ததும், சிறிதும் தாமதமின்றி ஒத்துழையாமை இயக்கத்திற்கெதிராக அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு நியாயம் கற்பித்தும் இனியும் அந்த நடவடிக்கைகள் தொடருமென்றும் வைசிராய் லார்டு ரீடிங் காந்திஜிக்குப் பதிலளித்தார்.

''1922-ஆம் ஆண்டு காங்கிரசுக்குப் போதாத காலம்'' என்கிறார் டாக்டர் பட்டாபி சீதாராமய்யா. ஆம்; அந்த ஆண்டில் ஒன்றன்பின் ஒன்றாக நிகழ்ந்த சம்பவங்கள் தேச பக்தர்களுக்கு மகிழ்ச்சி தருவனவல்ல. 1919 ஏப்ரலில் ரௌலட் சட்ட எதிர்ப்புச் சத்தியாக்கிரகம் தோன்றியதிலிருந்து 1921 டிசம்பர் வரையிலுள்ள மூன்று ஆண்டு காலத்திலேயே காங்கிரசானது தார்மீக ரீதியில் வெற்றிக்கு மேல் வெற்றி கண்டு வந்தது.

காங்கிரசில் ஏற்பட்ட மாறுதல்

காந்தியடிகளின் சத்தியாக்கிரகமும் ஒத்துழையாமையும் தேச மக்களைப் பெரிதும் கவர்ந்திருந்தன. காங்கிரசிலிருந்து மிதவாதிகள் தாங்களாகவே அதிலிருந்து வெளியேறி, அதனை விடுதலை வீரர்கள் மட்டுமே கொண்ட பாசறையாக்கிவிட்டனர்! காந்தியடிகள் மாநிலந்தோறும் மாணிக்கங்கள் போன்ற மாவீரத் தலைவர்களைத் துணைத் தளபதிகளாகப் பெற்றிருந்தார்.

சென்னை மாகாணத்திலே ராஜாஜி, பஞ்சாபிலே லாலாஜி, வங்கத்திலே தேசபந்து தாசர், பீகாரிலே ராஜன்பாபு, உத்திரப் பிரதேசத்திலே பண்டித மோதிலால் நேரு - பண்டித ஜவகர்லால் நேரு, மத்தியப் பிரதேசத்திலே வள்ளல் ஜமுனாலால் பஜாஜ், குஜராத்திலே சர்தார் படேல் ஆகிய பேரறிஞர்கள் காந்தியடிகளின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடைபோட்டனர்.

முஸ்லிம் சமுதாயத்தின் நம்பிக்கையைப் பெற்றிருந்த அலிசகோதரர்கள், மௌலானா அபுல்கலாம் அசாத், டாக்டர் அன்சாரி, டாக்டர் கிச்சுலு, அக்கிம் அஜ்மல்கான், சென்னை வாசியான யாகூப் ஹாசன் ஆகிய முஸ்லிம் கனவான்கள் காந்தியடிகளின் தலைமையை ஏற்று, அவருடன் தோளோடு தோள் சேர்த்துத் தொண்டாற்றினர். பொதுவாக, இந்து - முஸ்லிம் சமுதாயங்களிடையே பரஸ்பர நம்பிக்கையோடு கூடிய நட்புறவு நிலவியது. பெண்ணுலகின் ஏகப் பிரதிநிதியாக கவியரசி சரோஜினி நாயுடு காந்திஜியின் வலதுகரமாகத் திகழ்ந்தார்,

காந்தியடிகளின் கட்டளைப்படி நாடு முழுவதும் 25 லட்சம் கை ராட்டினங்கள் ரீங்காரம் செய்து கொண்டிருந்தன. காங்கிரஸ் மகா சபைக்கு மாநில, மாவட்ட, வட்ட, நகர, கிராம ரீதியில் கிளைகள் தோன்றிவிட்டன. காங்கிரஸ் உறுப்பினர்களின் எண்ணிக்கை ஒரு கோடியை நோக்கி உயர்ந்து கொண்டிருந்தது.

மாநிலந்தோறும் காங்கிரஸ் சேவாதளத் தொண்டர் படைகள் பலப்படுத்தப்பட்டிருந்தன. நாட்டின் விடுதலைப் போருக்கு ஆதரவளிக்கும் நாளிதழ்களும், வார - மாத இதழ்களும் எண்ணிக்கையில் பெருகியிருந்தன.

மதுக்கடை மறியல், அன்னியத் துணிக்கடை மறியல் ஆகியவற்றில் ஈடுபட்டு நாள்தோறும் தலைவர்களும் தொண்டர் களும் சிறைச்சாலைகளை நிரப்பிக் கொண்டிருந்தனர். அரசாங்கம் பிறப்பித்த தடை யுத்தரவுகளைத் தகர்த்தெறிந்து தலைவர்களும் தொண்டர்களும் ஆண்டுக் கணக்கில் சிறைத் தண்டனை பெற்று தியாக வேள்வியை அணையவிடாது காத்து வந்தனர்.

வடபுலத்தில் பொது ஜனச் சட்ட மறுப்பும், தனி நபர் சட்ட மறுப்பும் மாநில - மத்திய அரசுக்களைக் கதிகலங்க வைக்கும் வகையில் அன்றாட நிகழ்ச்சிகளாகி இருந்தன. தெற்கே குண்டூரிலும், வடக்கே பர்டோலியிலும் விவசாயிகள் வரிகொடா இயக்கத்தை நடத்திக் கொண்டிருந்தனர்.

இவ்வளவுக்கும் காந்தியடிகள்தான் காரணம் என்பதனை இந்திய அரசு அறிந்திருந்த தென்றாலும், அவரைச் சிறையில் தள்ள அது துணிவு பெறவில்லை. அவருடைய எழுத்திலும் பேச்சிலும் வார்த்தைக்கு வார்த்தை அரச நிந்தனை அனல் வீசியது. ஆயினும், அவ்வளவையும் சகித்துக்கொண்டு வந்தார் வைசிராய் பெருமான்.

'இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி இன்னும் எத்தனை நாளைக்கு?' என்ற வினா எழுந்திருந்தது. இந்த நேரத்திலே உத்தரப் பிரதேசத்தில் கோரக்பூர் மாவட்டத்திலுள்ள செளரிசாரா என்னும் கிராமத்திலே காந்தியடிகளின் மனத்திற்கு அதிர்ச்சி தரும் கோர நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றுவிட்டது.

செளரிசாரா சம்பவம்

1922 பிப்ரவரி 5-ஆம் நாளிலே பொது ஜனச் சட்ட மறுப்பையொட்டி, காங்கிரஸ் சார்பில் ஊர்வலம் ஒன்று நடத்தப்பெற்றது. தடையை மீறி நடத்தப்பட்ட ஊர்வலமாதலால், போலீசார் அதனைக் கலைப்பதற்குத் தடியடிப் பிரயோகம் செய்தனர். மக்கள் போலீசாரை எதிர்த்துப் போராடினர். அதனால், மக்கள்மீது போலீசார் சுட்டனர். சிலர் உயிரிழந்தனர். போலீசாரிடமிருந்த துப்பாக்கிகளில் தோட்டாக்கள் தீர்ந்து போனதை யறிந்த மக்கள் கூட்டம் அவர்களை விரட்டியது. காவலர்கள் உயிர் காக்க விரும்பிக் காவல் நிலையத்திற்குள் நுழைந்தனர். மக்கள் கூட்டம் காவல் நிலையத்தைச் சூழ்ந்து கொண்டு அதற்குத் தீ வைத்தது. நிலையத்திற்குள்ளே யிருந்த ஒரு சப் இன்ஸ்பெக்டரும், 20 காவலர்களும் தீயினால் வெந்து மாண்டனர்.

செளரிசாராவில் நடந்த இந்தச் சம்பவத்தைக் கேட்டு காந்தியடிகள் அதிர்ச்சி யடைந்தார். திரு.ஜே.எப். ஆண்ட்ரூஸ் மூலம் செளரிசாரா நிகழ்ச்சி பற்றிய விவரங்களை அறிந்தார். தமக்குக் கிடைத்த தகவல்களைக் கொண்டு பொது மக்கள் வரம்பு மீறி நடந்து கொண்டனர் எனக் காந்திஜி கருதினார். இந்நிலையில், ஸ்தல காங்கிரஸ் கமிட்டியும் தொண்டர் படையும் கலைக்கப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டது.

மௌலானா அசாதும், அக்கீம் அஜ்மல்கானும் பொது ஜனச் சட்டமறுப்பை நிறுத்தி வைக்கக் கோரி, காந்தியடிகளுக்குத் தந்தி கொடுத்தனர்.

அவசரம் அவசரமாக குஜராத்திலுள்ள பர்டோலியில் பிப்ரவரி 12-இல் காங்கிரஸ் காரியக் கமிட்டி கூடியது. அதன் உறுப்பினர்களில் சிறைக்கு வெளியே இருந்த அனைவரும் கூட்டத்தில் கலந்து கொண்டனர். இளவரசர் வருகையின்போது பம்பாயிலும் சென்னையிலும் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களாலும், சௌரிசாரா நிகழ்ச்சியாலும் காங்கிரசுக்குத் தலைக்குனிவு ஏற்பட்டு விட்டதாகக் காந்திஜி காரியக் கமிட்டியில் கூறினார்.

காந்திஜிக்கு எதிர்ப்பு!

இந்தப் பழியிலிருந்து காங்கிரசின் நற்பெயரைக் காக்க வேண்டுமானால், அகிம்சையில் காங்கிரசுக்குள்ள நம்பிக்கையை மீண்டும் உறுதிப்படுத்த வேண்டுமானால், பொது ஜனச் சட்ட மறுப்பை உடனடியாக நிறுத்தியாக வேண்டுமென்று காந்திஜி ஆலோசனை கூறினார்.

இந்த ஆசோசனை காரியக் கமிட்டி உறுப்பினர்களில் பெரும்பாலோருக்கு அதிர்ச்சியைத் தந்தது. ஏற்கனவே பஞ்சாப் படுகொலையின்போது காந்தியடிகள் சத்தியாக்கிரக இயக்கத்தைத் திடீரெனக் கை விட்டதால் நாட்டில் ஏற்பட்ட பெரும்சோர்வைச் சுட்டிக் காட்டி, திரும்பவும் அதே தவறைச் செய்ய வேண்டாமென்று காரியக் கமிட்டி உறுப்பினர்களில் பலர் அடிகளாரை வேண்டிக் கொண்டனர். அவர் சிறிதும் வளைந்து கொடுக்காது, தமது நிலையில் உறுதியாக நின்றார். இறுதியில், பொது ஜனச் சட்ட மறுப்பைக் கைவிடுவ தென்றும், தனி நபர் சட்ட மறுப்பைத் தொடர்ந்து நடத்திவர அனுமதிப்பதென்றும் காங்கிரஸ் காரியக் கமிட்டி தீர்மானித்தது.

இதன்பின் பிப்ரவரி 24,25 தேதிகளில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி டில்லியில் கூடியது. சௌரிசாரா சம்பவத் திற்குத் தம்மையே பொறுப்பாக்கிக் கொண்டு, அதற்குப் பிராயச்சித்தமாக காந்திஜி ஐந்து நாட்கள் உண்ணாவிரதத்தைக் கடைப்பிடித்தார். அ.இ.கா. கமிட்டிக் கூட்டத்திலே, பர்டோலித் தீர்மானம் விவாதிக்கப்பட்டது. முன் எப்போதும் இல்லாத அளவில் தமக்கு ஏற்பட்ட கடுமையான எதிர்ப்பை காந்திஜி அங்கே சந்திக்கலானார்.

நாடு விடுதலையை நெருங்கிக் கொண்டிருந்த நேரத்திலே பொது ஜனச் சட்ட மறுப்பைக் கைவிடுவதானது வெண்ணெய் திரண்டு வரும் நேரத்தில் தாழியை உடைப்பது போலாகும் என்று உறுப்பினர்களில் சிலர் துக்கம் தோய்ந்த குரலில் கூறினர். வங்காள, மகாராஷ்டிரப் பிரதிநிதிகள் எல்லாருமே காந்தியடிகள் மீது தங்களுக்குள்ள ஆத்திரத்தை வெளிப்படுத்தினர்.

பர்டோலி தீர்மானத்தைக் கண்டிக்கும் தீர்மானமொன்றை டாக்டர் மூஞ்சே கொண்டு வந்தார். அது பலருடைய ஆதரவைப் பெற்றது. காந்திஜி மனங்கனிந்து பேசினார். அகிம்சை வழியிலன்றி வேறு வழியில் விடுதலைப் போரை நடத்துவதற்குத் தாம் பொறுப்பு ஏற்க முடியாதென்று அடிகள் உறுதியாகக் கூறினார்.

முதலில் பம்பாய் நகரிலும், அதனையடுத்துச் சென்னையிலும், பின்னர் சௌரிசாராவிலும் நடைபெற்றுள்ள வன்முறைச் சம்பவங்கள் நாளடைவில் நாடு முழுவதிலும் பரவிவிடக் கூடும் என்று கூறி, அ.இ.கா.க. உறுப்பினர்களை எச்சரித்தார். 'அ.இ.கா. கமிட்டியிலே காந்தியடிகளின் இதயம் பேசியது' என்று வருணித்தார் கவியரசி சரோஜினி. 'அடிகள் பேச்சை நேரில் கேட்டவர்கள் அதைத் தங்கள் வாழ்நாள் முழுவதும் மறக்கவே முடியாது' என்று தமது சுய சரிதையில் ராசன் பாபு கூறுகிறார்.

கடுமையான விவாதத்திற்குப் பின்னர், பொதுஜனச் சட்ட மறுப்பைக் கைவிடுவதென்ற பர்டோலி தீர்மானம் டில்லி அ.இ.கா. கமிட்டியால் ஏற்கப்பட்டது, தனிநபர் சட்ட மறுப்பு நீடிக்கலாம் என்ற வாசகமும் தீர்மானத்தில் சேர்க்கப்பட்டது. கதர் அபிவிருத்தி, மதுவிலக்கு, காங்கிரஸ் உறுப்பினர் சேர்த்தல், தீண்டாமை விலக்கு, தேசியக் கல்வி ஆகிய ஆக்கவழிப் பணிகளில் ஈடுபட வேண்டுமென்றும் காங்கிரஸ்காரர்களை டில்லித் தீர்மானம் கேட்டுக்கொண்டது.

சிறையதிகாரியின் கேலி!

டில்லித் தீர்மானம் பற்றி வேலூர் சிறையிலிருந்த ராஜாஜிக்கு சிறை அதிகாரியான ஜெயிலர் தகவல் தந்தார். இந்த நிகழ்ச்சி பற்றித் தமது நாட்குறிப்பில் ராஜாஜி பொறித்து வைத்திருப்பது வருமாறு:

'15-2-22 - இன்று காலை 6 மணிக்குத்தான் என்னுடைய அறைக் கதவைத் திறந்தார்கள். அதுவரை தூங்கிப் போய் விட்டேன். அதனால், இன்று காலைதான் முதன் முதலாகப் பிரார்த்தனை செய்யாத நாள், அறைகளைத் திறக்குமுன்

அதிகாரிகள், 'எழுந்திருங்கள், எழுந்திருங்கள்' என்று கத்துவது வழக்கம். ஆனால், எங்கள் சௌகரியத்தை உத்தேசித்து எங்கள் இரண்டு மூன்று அறைகள் முன்னால் மட்டும் அவ்வாறு கத்துவதில்லை.

'ஜெயிலர் ஏதோ பெரிய வெற்றியடைந்து விட்டவர் போல் எண்ணிக் கொண்டு, 'என்ன? ஒத்துழையாமை தூங்கிப் போய்விட்டது போலும்' என்று இன்று காலையில் என்னிடம் எக்களிப்புடன் கேட்டார். காந்தியடிகள் சாத்விகச் சட்ட மறுப்பு இயக்கத்தை நிறுத்திவிட்ட செய்தியை ஆதாரமாக வைத்தே, அவர் இவ்விதம் கூறினார். இது விஷயமாக நான் அவரிடம் பேசி, என்னுடைய நேரத்தை வீணாக்க விரும்பவில்லை.''

தம்மைப் பேட்டி காண வந்த திரு. ஈ.வெ. ராமசாமி அவர்கள் வாயிலாக முழு விவரங்களையும் ராஜாஜி அறிந்தார். ராஜாஜி, காந்திஜியின் உள்ளத்தை நன்கறிந்தவர். 'சத்தியாக்கிரக விஞ்ஞானத்தை வேறு யாரும் அறிந்திராத அளவில் ராஜாஜி தெரிந்து வைத்திருக்கிறார்' என்று காந்தியடிகளே ஒரு சமயம் கூறினார். அப்படிப்பட்ட ராஜாஜியும் பர்டோலி தீர்மானத்தை அறிந்ததும் மனச்சோர்வு அடைந்து விட்டார்.

ராஜாஜியின் வேதனை

பர்டோல் தீர்மானம் பற்றித் தமது மனம் அடைந்த வேதனை பற்றி ராஜாஜி தமது நாட்குறிப்பில் விரிவாக எழுதி வைத்திருக்கிறார். அதன் சில பகுதிகள் வருமாறு:

சாத்விகச் சட்ட மறுப்பை நிறுத்திவிட்டு, அங்கத்தினர் சேர்க்கும் விஷயத்தை மட்டும் மேற்கொள்வதென்பது, போரை விட்டுச் சமாதான நிலையை மேற்கொள்வதாகும். வங்காளமும், ஆந்திர தேசமும், ஐக்கிய மாகாணமும் தமிழ்நாடும் அதிக முன்னேற்றம் காணாவிட்டாலும், இந்த மாதிரி முடிவு செய்வதால் அது அந்தப் பிரதேசங்களுக்குக் கஷ்டமாகவே இருக்கும்.

போரை விட்டுப் பின்வாங்குவதால் மற்ற மாகாணங்களுக்கு அதிக நஷ்டம் ஏற்படாமல் இருக்கலாம்; ஆனால், மேற்கூறிய மாகாணங்களுக்கு நஷ்டமே உண்டாகும்.

காங்கிரஸ் ஊழியர்கள் கொலைகளைச் செய்யவோ, செய்யும்படித்தூண்டவோ செய்தால் மட்டுமே காந்தியடிகள் இயக்கத்தை நிறுத்தவோ, உண்ணாவிரதம் இருக்கவோ

நியாயம் உண்டு. அஃதின்றி, இரண்டாவது காரணத்தைக் கூறினால், அவர் கூறும் நிபந்தனை யாராலும் நிறைவேற்ற முடியாதது என்றுதான் கூறுவேன்.

''கோரக்பூரில் ஜனக் கூட்டத்தார் செய்த காரியங்கள் அதிக அக்கிரமமானவை என்பதை நான் முற்றிலும் ஒப்புக் கொள்ளுகிறேன். என் தலைவரிடமும் அவருடைய லட்சியத்திடமும் எனக்குப் பரிபூரணமான நம்பிக்கையுண்டு என்பதிலும் சந்தேகமில்லை. அப்படியிருந்தாலும், இத்தகைய சம்பவங்கள் நடந்துவிட்ட காரணத்திற்காக இயக்கத்தை நிறுத்தி வைப்பது என்பது எனக்கு விளங்கவே யில்லை.

''கோரக்பூர் சம்பவங்களைக் காரணமாகக் கொண்டு இயக்கத்தை நிறுத்துவதானால், இவற்றைவிட அதிகக் கோரமான மலையாள அக்கிரமங்களுக்கு நிறுத்தி வைக்க வேண்டாமோ? அப்படி நாம் நிறுத்தி வைக்கவில்லையே! அதனால், நிறுத்திவைத்ததைச் சரியென்று என்னால் கூற முடியவில்லை. ஆனால், ஒருவேளை வெளியே போய் விவரங்களையெல்லாம் அறிந்தால் வேறுவிதமான கருத்து எனக்கு உண்டாகுமோ, என்னவோ!

''ஆனால், ஒரு விஷயம். அறிவு வழிகாட்ட முடியாத இடத்திற்கு ஆண்டவன் வழிகாட்ட முடியும். காந்தியடிகளை இந்தச் சமயம் இழந்து விடலாகாது. தேசம் அதற்குத் தக்க ஆற்றலைப் பெற்றுவிடவில்லை.''

('சிறையில் தவம்', பக். 129, 131-32)

இளைய நேருவின் ஆத்திரம்!

இதே நேரத்தில், ஐக்கிய மாகாணத்திலுள்ள நைனிடால் சிறையில் அடைபட்டுக் கிடந்த நேருஜியும் பர்டோலி முடிவைக் கேட்டு அதிர்ச்சியும் ஆத்திரமும் அடைந்தார். ராஜாஜியை விடவும் பத்து வயது இளையவரான நேருஜி தமக்கேற்பட்ட அதிர்ச்சியைத் தாங்கிக்கொள்ள இயலாதவரானார். இதோ, அவரே கூறுகிறார், கேட்போம்:

சௌரிசாரா நிகழ்ச்சி காரணமாகக் காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தைத் திடீரென நிறுத்திவிட்டது, காங்கிரசின் மற்ற முக்கிய தலைவர்களுக்கெல்லாம் வருத்தத்தைத் தந்தது.

எங்கள் நிலை வலுப்பெற்று, நாங்கள் எல்லா முனைகளிலும் முன்னேறிக் கொண்டிருந்ததாகத் தோன்றிய நேரத்தில்

போராட்டம் நிறுத்தப்பட்டதை அறிந்ததும் சினம் பொங்கியெழுந்தது.

சிறையிலிருந்த என் தந்தையார் மிகவும் கலங்கினார். இளைஞர்கள் இயல்பாகவே உள்ளம் துடித்தனர். மலை போன்ற எங்கள் நம்பிக்கையெல்லாம் மண்ணோடு மண்ணாகச் சரிந்தது; மனம் தளர்ந்தது. இயக்கத்தை நிறுத்தியதைக் காட்டிலும் அதற்குச் சொல்லப்பட்ட காரணங்கள் தாம் எங்களுக்கு வருத்தத்தைத் தந்தன.

சௌரிசாரா நிகழ்ச்சி வருந்தத்தக்கது. சாத்விக நெறிக்கு முற்றிலும் முரணானதே. ஆனால், எங்கேயோ ஓர் முனையில் இருக்கும் யாரோ ஒரு சிலர் பொறுமை இழந்தமைக்காக விடுதலைப் போராட்டத்தை நிறுத்திவிட வேண்டுமா?

"அதுபோன்ற முரட்டுத்தனமாக நிகழ்ச்சிகள் நிகழ மாட்டாவென்று யாராலும் உறுதி கூற முடியாது. 36 கோடி இந்தியர்களுக்கு சாத்விகத் தத்துவத்திலும் முறையிலும் பயிற்சியளித்த பின்புதான் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டுமா?

அப்படியே செய்வதாயிருந்தாலும், போலீசாரின் கொடுமை எல்லை மீறும்போது, நம்மவரில் எத்தனை பேர் சாத்விகத்தைக் கடைப்பிடிக்க முடியும்? இதிலேயும் நாம் வெற்றி பெற்றாலும், கணக்கற்ற கருங்காலிகளும், கைக் கூலிக்காரர்களும் இயக்கத்தில் நுழைந்து பலாத்காரத்தில் ஈடுபடுவதையும், மற்றவர்களையும் அதில் ஈடுபடும்படித் தூண்டுவதையும் யாரால் தடுக்க முடியும்?

இதுவே சாத்விக நெறியின் செயலுக்குரிய ஒரே நிபந்தனை யென்றால், சாத்விக எதிர்ப்பு முறை என்றுமே வெற்றி பெறாது.

'சட்ட மறுப்பு இயக்கத்தை நிறுத்தியதற்கு காந்திஜி கூறிய காரணம் சரியானதென்றால், பகைவர்கள் நம் போராட்டத்தை நிறுத்தும்படியான சூழ்நிலைகளை ஏற் படுத்திக்கொண்டேயிருப்பார்கள். இது சாத்விக முறையின் குறையா? அல்லது காந்தியடிகள் கண்ட விளக்கத்தின் குறையா? அம்முறையைத் தோற்றுவித்தவரும் அவரே! அது என்ன ஏது என்பதை அவரையன்றி வேறு எவர் திட்டமாக

முடிவு செய்ய முடியும்? அவர் இல்லாமல் எங்கள் இயக்கம் தான் ஏது?''

('நேருஜியின் சுயசரிதை' - தமிழாக்கம்-124-25,129)

'நிறுத்தியது சரிதான்!'

நேருஜி இவ்வளவு உணர்ச்சியுடன் காந்திஜியின் முடிவுக்கு எதிராகத் தமது ஆத்திரத்தை வெளிப்படுத்தினாலும், இறுதியில் காந்திஜியின் முடிவே சரியானது என்று ஏற்றுக் கொள்கிறார். அதையும் அவரே கூறக்கேட்போம்:

> *19-1-22-இல் கட்டுப்பாடும் ஒழுங்கும் இல்லை. மக்களிடையே வெறும் ஆர்வமும் பரபரப்பும் இருந்தனவே யன்றி, திட்டமான முயற்சி இல்லை. போராட்டம் நீடித்திருக்கு மேல் பலவிடங்களில் பலாத்காரம் தலை தூக்கியிருக்கும் என்பதில் ஐயமில்லை. அப்போது அரசாங் கம் மூர்க்கத்தனமான முறையில் அதை அடக்கியிருக்கும். பயங்கர ஆட்சி ஏற்பட்டிருக்கும். மக்களின் பண்பும் பெருமையும் சீரழிந்து போயிருக்கும்.*
>
> *''காந்தியடிகள் இவற்றையெல்லாம் உணர்ந்துதான் போராட்டத்தை நிறுத்தியிருக்கிறார். அவருடைய சூழ்நிலையையும் கொள்கையையும் ஒட்டிப்பார்க்கு மிடத்து, அவர் செய்த முடிவு சரிதான். அவர், இயக்கத்தின் சீர்கேடுகளைக் களைந்து புதுப்பிக்கப் போராட்டத்தை நிறுத்த வேண்டியிருந்தது.''*

('நேருஜியின் சுயசரிதை'; தமிழாக்கம் - பக்.130-31)

★-★-★

வெஞ்சிறையில் வீரத் தளபதி!

1919-இல் காந்தியடிகள் ரௌலட் சட்டத்திற்கு எதிராக நடத்தியது, சத்தியாக்கிரகம்; சட்டமறுப்பு அல்ல. 1921-இல் கிலாபத் பிரச்னைக்காக அவர் நடத்தியது, சட்டமறுப்பு; சத்தியாக்கிரகமல்ல! அந்தச் சட்ட மறுப்பும் இருவிதமாக நடத்தப்பெற்றது. ஒருவிதம், பொதுஜனச் சட்ட மறுப்பு; மற்றொரு விதம் தனி நபர் சட்ட மறுப்பு!

பர்டோலித் தீர்மானப்படி சௌரிசாரா சம்பவத்தை யொட்டி நிறுத்தி வைக்கப்பட்டது பொதுஜன சட்டமறுப்புதான்; தனி நபர் சட்டமறுப்பு அல்ல! அது தொடர்ந்து நடைபெறலாமெனப் பர்டோலித் தீர்மானம் அறிவித்தது.

'பொதுஜனச் சட்டமறுப்பு' என்பது, தடை யுத்தரவை மீறிப் பலர் கூடி ஊர்வலமாகச் செல்வதும், பொதுக்கூட்டம் நடத்துவது மாம்! 'தனி நபர் சட்ட மறுப்பு' என்பது, மதுக்கடைகளையும் அன்னியத் துணிக் கடைகளையும் மறியல் செய்வதாகும். பர்டோலி தீர்மானப்படித் தனி நபர் சட்ட மறுப்பு அனுமதிக்கப் பட்ட தென்றாலும், அது பழைய வேகத்தில் நடைபெறுவது சாத்தியமில்லாமற் போய்விட்டது.

நாகபுரி காங்கிரஸ் மகாசபைத் தீர்மானப்படி நடைமுறைக்கு வந்த ஒத்துழையாமையைக் காங்கிரஸ் கைவிடவில்லை. ஆனால், நீதிமன்ற பகிஷ்காரமும் பள்ளிகள் - கல்லூரிகள் பகிஷ்காரமும் எதிர்பார்த்த வேகத்தில் படித்த வர்க்கத்தால் கடைப்பிடிக்கப்பட வில்லை யென்பதை மற்றொரு முறையும் இங்கு சொல்லியாக வேண்டும்.

காங்கிரசிலே பிளவு!

பொதுஜனச் சட்ட மறுப்பைக் கைவிட்டதன் காரணமாக பிரிட்டிஷ் அரசு தனக்கு ஏற்படவிருந்த வீழ்ச்சியிலிருந்து தற்காலிமாகத் தப்பிவிட்டது என்று காங்கிரஸ் தலைவர்களில் ஒரு சாரார் கருதினர். அதற்காக ஆத்திரப்பட்டனர். பொதுஜனச்

சட்ட மறுப்பைக் கைவிட பர்டோலியில் கூடிய காரியக் கமிட்டியும், அதையடுத்து, டில்லியில் கூடிய அ.இ.கா. கமிட்டியும் முடிவெடுத்தன வென்றாலும், அதற்குக் காங்கிரஸ்காரர் களிடையில் ஒருமித்த ஆதரவு இருக்கவில்லை. காந்தியடிகளின் தலைமையை இழக்கத் துணிவில்லாத காரணத்தாலேயே அவரது கருத்துக்கு இணங்கலாயினர். ஏகாதிபத்திய எதிர்ப்பின் பிரதான களங்களாக விளங்கிய மகாராஷ்டிர, வங்காள மாநிலங்களின் காங்கிரஸ்காரர்களில் பெரும்பாலோர் பர்டோலி முடிவுக்கு எதிரான உணர்வே கொண்டிருந்தனர். அந்த மாகாணங்களின் காங்கிரஸ் கமிட்டிகள் ஆக்க வழிப் பணிகளில் கருத்துச் செலுத்தாமல் சட்டசபைப் பிரவேசத்திற்கு ஆதரவு திரட்டும் முயற்சியில் ஈடுபட்டன.

காந்தியடிகள் கைது

பொதுவாக, பாரத நாடெங்கணும் காங்கிரஸ்காரர்கள் பிளவுபட்டு நின்றனர். அடித்தளத்து ஊழியர்களிடை காந்திபக்தி பரிபூரணமாக நிலவியதென்றாலும், மேல்தளத்துத் தலைவர் களிடையில் காந்தியடிகளின் போக்கில் கருத்து வேறுபாடுகள் வெளிப்படலாயின. இந்த அவலச் சூழ்நிலை காரணமாக, காந்தியடிகளைக் கைது செய்து சிறையில் தள்ளுவதற்கான துணிவு அரசுக்கு ஏற்பட்டது. அடிகள் 'யங் இந்தியா' பத்திரிகையில் எழுதிய மூன்று கட்டுரைகளைத் தேர்ந்தெடுத்து, அவற்றில் அரச நிந்தனை இருப்பதாகச் சொல்லி, 1922 மார்ச் 10 - ஆம் தேதியன்று அரசு அவரைக் கைது செய்து, சபர்மதி சிறையிலே அடைத்தது.

சௌரிசாரா சம்பவம் காரணமாக காங்கிரஸ் ஸ்தாபனத்தின் மேல்மட்டத் தலைவர்கள் பிளவுபடாம லிருந்திருந்தால், காந்தியடிகளைக் கைது செய்யும் துணிவு அரசுக்கு ஏற்பட்டிருக்காது. உண்மையில் பொதுஜனச் சட்டமறுப்பைக் கைவிடும்படி காங்கிரஸ் கமிட்டிக்கு அடிகள் ஆலோசனை கூறியதற்காக அரசு அவருக்கு நன்றி செலுத்தியிருக்க வேண்டும். மாறாக, காங்கிரசில் ஏற்பட்ட பிளவைப் பயன்படுத்திக் கொண்டு அவரைச் சிறையில் தள்ளி மகிழ்ந்தது.

1919-ஆம் ஆண்டில் பயங்கரப் புரட்சியை ஒடுக்குவதற்காக அரசு கொண்டு வந்த ரௌலட் சட்டத்தை எதிர்த்து அடிகள் நடத்திய சத்தியாக்கிரகமானது தனி நபர்களின் பயங்கரப் புரட்சியைப் பலவீனப்படுத்திவிட்டது. ஏகாதிபத்தியத்திற் கெதிராக சாத்விகமான முறையில் ஒரு போராட்டத்தை அடிகளாரே தொடங்கியதனால், ஆயுத பலத்தில் நம்பிக்கை கொண்டிருந்த இளைஞர்களிடையே மனமாற்றம் ஏற்பட்டிருக்க

வேண்டும். அதனால், 1919 முதல் 1922 வரையுள்ள ஒரு கால கட்டத்திலே நாட்டில் பயங்கரச் சம்பவங்கள் வெகுவாகக் குறைந்துவிட்டன. ரௌலட் சட்டத்தை அமுலுபடுத்தி யிருந்தாலும் இத்தகைய நல்ல பலனை அரசு கண்டிருக்க முடியாது. அதனால், பயங்கரச் சம்பவங்கள் அதிகப்பட்டிருக்கவும் கூடும். சட்டத்தாலாகாததைத் தமது சத்தியாக்கிரகத்தால் அடிகள் சாதித்துக் காட்டினார். இதற்காகவும் அரசு அடிகளாருக்கு நன்றி செலுத்துவதற்குப் பதிலாக, அவரைக் கைது செய்து சபர்மதிச் சிறையில் கொண்டு போய் அடைத்து வைத்தது.

காந்தியடிகளுடன் சேர்த்து 'யங் இந்தியா' பத்திரிகையின் பதிப்பாசிரியரான திரு. சங்கர்லால் பாங்கரும் கைது செய்யப்பட்டார்.

சத்தியம் பேசுகிறது!

இருவர் மீதும் மார்ச்சு 18-ஆம் தேதி அரச நிந்தனைக் குற்றத்திற்காக அரசு வழக்குத் தொடர்ந்தது. அகமதாபாத்தில் நீதிபதி புரூம்பீல்ட் என்பவரிடம் வழக்கு விசாரணை நடை பெற்றது. காந்திஜி தாம் குற்றவாளி என்பதை ஒப்புக்கொண்டு, எதிர்வழக்காட மறுத்துவிட்டார். ஆனால், தமது நிலையை விளக்கிப் பத்திரிகையின் ஆசிரியப் பொறுப்பை ஏற்பதற்கு முன்பிருந்தே அரசு நிந்தனைப் பிரச்சாரம் செய்து வருவதாகக் கூறினார். ''அது எனது கடமையாகிவிட்டது. இன்னும் தொடர்ந்து அதையே செய்து வருவேன்'' என்றும் அடிகள் கூறினார். காந்தியடிகளின் வாக்குமூலத்தில் முக்கிய பகுதிகள் வருமாறு:

> ''சென்னை, பம்பாய், சௌரிசாரா சம்பவங்களுக்கு நானே முழு பொறுப்பையும் ஏற்றுக்கொள்கிறேன். நான் நெருப்போடு விளையாடிக் கொண்டிருக்கிறேன் என்பதை அறிவேன். இன்னும் அதையே செய்வேன்.
>
> ''என் மீது குற்றம் சாட்டப்பட்டிருக்கும் இ.பி.கோ 124ஏ' பிரிவு இந்திய மக்களின் சுதந்திரத்தை நசுக்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட முக்கிய சட்டமாகும். சட்டத்தின் மூலம் அன்பு ஏற்படுத்த முடியாது. ஒருவரிடம் மற்றொருவருக்கு விருப்பம் இல்லையேல் பலாத்காரத்தைக் கைக்கொள்ளாத வரை அவர் தமது அதிருப்தியை நன்கு வெளியிட அனுமதிக்கப்பட வேண்டும்.
>
> ''நானும் திரு. பாங்கரும் அதிருப்தியை வளர்த்தோ மென்று குற்றம் சாட்டப்பட்டிருக்கிறோம். இந்தப் பிரிவின்

கீழ் இந்தியாவில் பல பிரபல தேசாபிமானிகள் தண்டிக்கப் பட்டிருக்கின்றனர். இப்பிரிவின் கீழ் என் மீதும் அரசு குற்றம் சாட்டியது எனது பாக்கியமென்று நான் கருதுகிறேன். எனது அதிருப்திக்கான காரணங்களை நான் விளக்கி விட்டேன்.

''மன்னரிடத்திலோ அல்லது நிர்வாகத்திலிருந்துவரும் தனிப்பட்ட ஒரு நபரிடத்திலோ எனக்கு அதிருப்தி கிடையாது இதுவரை இருந்து வந்த அரசாங்கங்களைக் காட்டிலும் அதிகத் தீங்குகளை இழைத்துள்ள ஓர் நிர்வாகத்திடம் நான் அதிருப்தி கொண்டிருப்பது எனது நற்பயனாகும்.

''பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இந்தியா வலிமை இழந்து விட்டது. இம்மாதிரியான மனோநிலையை வைத்துக் கொண்டு இந்த நிர்வாகத்திடம் திருப்தி கொள்வது பாவம் என்று நான் கருதுகிறேன். ஆட்சேபிக்கப்பட்ட கட்டுரை களை எழுதியது என் பாக்கியமென்றே நான் கருதுகிறேன்.

''ஒத்துழையா இயக்கத்தின் மூலம் இங்கிலாந்தும் இந்தியாவும் இருந்துவரும் இயற்கைக்கு மாறான வாழ்க்கையிலிருந்து தப்ப நான் ஓர் வழியைக் காண்பித்து இருநாடுகளுக்கும் சேவை செய்திருப்பதாக நம்புகிறேன். அக்கிரமம் செய்கிறவனைத் திருத்துவதற்காகத்தான் ஒத்துழையா இயக்கம் ஆரம்பிக்கப்பட்டதென்று என்னுடைய கருத்து. பலாத்காரத்துடன் கூடிய ஒத்துழையா இயக்கத்தினால் அக்கிரமங்கள் அதிகரிக்கும் என்பதையும்; அக்கிரமங்கள் ஒழிய வேண்டுமானால் முற்றிலும் அஹிம்சா தர்மத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென்பதையும் இந்தியர்களிடையே பிரசாரம் செய்ய நான் விரும்புகிறேன்.

''அஹிம்சை'' யென்றால், பலாத்காரமின்றி நடத்திய ஒத்துழையா இயக்கத்தால் விளைந்த துன்பங்களுக்குத் தானாகவே கீழ்ப்படிவதாகும். ஆகையால், கடுமையான தண்டனையை சந்தோஷத்துடன் வரவேற்கிறேன். சட்டப்படி நான் செய்தது தவறென்று சொல்லலாம். ஆனால், நான் ஓர் சாதாரண மனிதனுடைய கடமையைத்தான் செய்ததாகக் கருதுகிறேன்.

''நீதிபதியவர்களே, தாங்கள் பயன்படுத்தும் சட்டம் நீதியற்றது என்றும், நான் உண்மையில் குற்றமற்றவன் என்றும் உங்கள் மனதில் உதிக்குமாயின், தாங்களும் அசெஸர்களும் தங்கள் பதவிகளை ராஜினாமாச் செய்வதைத்

தவிர வேறு மார்க்கமில்லை, இல்லையேல், எனக்குக் கடுமையான தண்டனையை அளியுங்கள்.''

ஆறாண்டுச் சிறைத் தண்டனை!

காந்தியடிகள் வரலாற்றுச் சிறப்பு மிக்க தமது வாக்கு மூலத்தை முடித்தபின், நீதிபதி அளித்த தீர்ப்பு வருமாறு:

''குற்றத்தை ஒப்புக்கொண்டதன் மூலம் தாங்கள் என் வேலையை எளிதாக்கி விட்டீர்கள். ஆனால் நியாயமான தண்டனையை நிர்ணயிப்பது கஷ்டமாக இருக்கிறது. சட்டம் ஒருவருக்கும் மரியாதை காட்டுவதில்லை. இருந்த போதிலும் இதுவரை நான் விசாரித்தவர்களிலோ, இனி விசாரிக்கப் போகிறவர்களிலோ தங்களுக்கு இணையானவர்களை நான் கண்டதில்லை; இனி காணப்போவதுமில்லை.

''கோடிக்கணக்கான இந்திய மக்கள் தங்களைச் சிறந்த தேசாபிமானி யென்றும், தலைவர் என்றும் மதிப்பதை நான் ஒருபொழுதும் மறக்க முடியாது. அரசியல் கொள்கைகளில் தங்களைப் பின்பற்றாதவர்கள் கூட, தங்களுடைய உயர்ந்த குணங்களையும் புனிதமான வாழ்க்கையையும் போற்றுகின்றனர்.

''தாங்கள் இடைவிடாது வன்முறையை எதிர்த்துப் பிரசாரம் செய்து வந்திருப்பதை நான் அறிவேன். ஆனால், தங்களுடைய அரசியல் பிரசாரத்தின் தன்மையையும், அதைக் கேட்டுக்கொண்டு வந்த மக்களின் நிலைமையையும் கருத்தில் கொண்டால் மக்களால் வன்முறைகள் கையாளப் படமாட்டாவென்று தாங்கள் எவ்விதம் நம்பிக் கொண்டேயிருக்கக் கூடுமென்பது எனக்குப் புலப்பட வில்லை. தங்களைச் சும்மா விட்டுவைக்க முடியாத நிலைக்கு அரசைத் தாங்களே கொண்டு வந்து விட்டீர்களென்று இந்நாட்டில் பலர் கருதுகின்றனர்.

''பொது மக்களுடைய நன்மையை முன்னிட்டுத் தங்களுக்கு எத்தகைய தண்டனையை விதிக்கலாமென்பது பற்றியே நான் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்.

''12 ஆண்டுகளுக்கு முன்னால் நடைபெற்ற இதே போன்ற வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பையே பின்பற்ற நினைத் திருக்கிறேன். இதே குற்றத்திற்காக பாலகங்காதர திலகருக்கு விதிக்கப்பட்ட தண்டனையையே நான் குறிப் பிடுகிறேன். திலகருக்குச் சமமாகத் தங்களை நான்

பாவிப்பதைத் தாங்கள் அநீதியென்று கருத மாட்டீர்கள் என்று நம்புகிறேன்.

''தங்களுக்கு 6 ஆண்டு சாதாரண சிறைத் தண்டனை விதிக்கிறேன். இந்தியாவின் நிலைமை மாறி தங்களுடைய தண்டனைக் காலத்தை அரசினர் குறைத்து விடுவார்களே யானால், என்னைவிட அதிகமாக வேறு எவரும் மகிழ்ச்சியடைய மாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.''

திலகரோடு ஒப்பிட்டுக் கூறித் தம்மைப் பெருமைப் படுத்தியதற்காக நீதிபதிக்கு காந்திஜி நன்றி தெரிவித்தார். பின்னர், அவர் புனாவிலுள்ள எரவாடா சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டார். இந்தியாவில் அடிகள் சிறை புகுவது இதுதான் முதன் முறையாகும்.

ராஜாஜி 'யங் இந்தியா' ஆசிரியர்

'யங் இந்தியா' பதிப்பாசிரியராக இருந்து கொண்டு காந்திஜியின் அரச நிந்தனைக் கட்டுரைகளைப் பிரசுரித்த குற்றத்திற்காக சங்கர்லால் பாங்கருக்கு ஓராண்டு சிறைத் தண்டனையும் 1000 ரூபாய் அபராதமும், அபராதம் செலுத்தத் தவறினால் மேலும் 6 மாதச் சிறைத் தண்டனையும் விதிக்கப் பட்டன. திரு பாங்கர். காந்தியடிகளின் அரச நிந்தனைப் பிரசாரத்திற்கு உதவி புரிய நேர்ந்ததைத் தமக்கு வாய்த்த பெரும் பேறாகத் தாம் கருதுவதாகக் கூறினார்.

'ஆறாண்டு சிறைவாசம்' என்ற தீர்ப்பைக் கேட்டதும் நீதிமன்றத்தி லிருந்தவர்கள் கண்கலங்கினர். ராசன் பாபு தேம்பித் தேம்பி அழுதார். தாம் சிறைப்படுவதற்கு முன்னர், ''நான் கைது செய்யப்பட்டால் அர்த்தால் போன்ற அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் எதிலும் யாரும் ஈடுபடாமல், கதர் அபிவிருத்தி - தீண்டாமை விலக்கு - மதுவிலக்கு போன்ற ஆக்கவழிப் பணிகளில் ஈடுபட வேண்டும்' என்று 'யங் இந்தியா'வில் காந்திஜி எழுதியிருந்தார். அதனால், நாட்டில் அமைதி நிலவியது.

சிறைச்சாலைகளில் அடைபட்டிருந்த பெருந்தலைவர்களும் முப்பதாயிரத்துக்கும் மேற்பட்ட அரசியல் கைதிகளும் அடிகள் கைதியான செய்தியறிந்ததும் 36 மணி நேர உண்ணாவிரதத்தைக் கடைப்பிடித்தனர். வேலூர்ச் சிறையில் அடைபட்டிருந்த ராஜாஜியும், மற்ற அரசியல் கைதிகளும்கூட அடையாள உண்ணாவிரதத்தைக் கடமை யுணர்ச்சியோடு கடைப்பிடித்தனர்.

தாம் கைதியானதும் 'யங் இந்தியா' ஆசிரியர் பொறுப்பை ராஜாஜி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று காந்திஜி கூறியிருந்தார். அதற்கேற்ப ராஜாஜியும், அவருக்குப்பின் மதுரை ஜார்ஜ் ஜோசப்பும் அடுத்தடுத்து 'யங் இந்தியா'வின் ஆசிரியராயினர்.

நீதிபதியும் நெஞ்சுருகினார்!

காந்திஜி அகமதாபாத் நீதி மன்றத்தில் தண்டிக்கப்பட்டது பற்றி ராசன் பாபு கீழ் வருமாறு கூறுகிறார்:

''நீதிமன்றத்தில் காந்திஜி மீதான வழக்கு நடந்த காட்சியை நான் மறக்கவே முடியாது. காந்திஜியின் வாக்கு மூலம் போற்றற் குரியதாகும். நீதிபதியின் நடத்தையும் பேச்சும் அச்சிறப்பு மிகுந்த சமயத்திற்கு ஏற்றவையாக இருந்தன.

''நீதிபதியானவர் மிகவும் உருக்கமான சில வார்த்தைகளால் தமது தீர்ப்பைக் கூறி முடித்தார். நீதிபதி எழுந்து சென்ற பின் நாங்கள் எல்லோரும் ஒவ்வொருவராகக் காந்திஜியைச் சந்தித்து வணக்கம் செய்துவிட்டு விடைபெற்றுக் கொண்டோம். அந்தக் காட்சி எல்லை கடந்த வேதனை தரத்தக்கதாக இருந்தது' நான் இளகிய மனமுடையவன். அதனால் தேம்பித் தேம்பி அழத் தொடங்கினேன். சிறிது நேரத்திற்குப்பின் திரும்பவும் அமைதி பெற்றுக் காந்திஜியிடம் விடைபெற்றுக் கொண்டேன்.''

('என் வரலாறு'; பக் 301-302)

அடிகள் ஆறாண்டுத் தண்டனை பெற்றது குறித்துப் பண்டித ஜவகர்லாலர் நேரு கூறுவது வருமாறு:

''சிறையிலிருந்து விடுதலை பெற்றதும் உடனே அகமதா பாத்துக்குச் சென்று காந்தியடிகளைக் காண விரும்பினேன். ஆனால், நான் அங்கே போய்ச் சேர்வதற்குள் அவர் கைது செய்யப்பட்டு விட்டார். சபர்மதி சிறையில் நான் அவரைப் பேட்டி காண முடிந்தது.

''காந்திஜியின் வழக்கு விசாரணையின்போது நீதிமன்றத்தில் நானும் இருந்தேன். அந்நாள் என்றுமே மறக்க முடியாத நாளாகும். ஆங்கில நீதிபதி பண்போடும் இரக்கத்தோடும் நடந்து கொண்டார். காந்தியடிகள் நீதிமன்றத்தில் கொடுத்த வாக்கு மூலம் மிகவும் உருக்கமானது. அவருடைய பேச்சைக் கேட்ட எங்களுக்கு மெய் சிலிர்த்தது. அவருடைய தெளிவான சொற்றொடர்களும்

ஆழ்ந்த கருத்துக்களும் எங்கள் உள்ளங்களில் பசுமரத் தாணிபோல் பதிந்தன.''

(நேருஜியின் சுய சரிதை - தமிழாக்கம்; பக். 135)

ராஜாஜியின் வருத்தம்

காந்திஜிக்கு ஆறாண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது பற்றி ராஜாஜி தமது நாட்குறிப்பில் பொறித்து வைத்துள்ளது வருமாறு:

''ஏசு கிறிஸ்துவுக்கு பைலேட் ஆறு வருஷ வெறுங்காவல் தண்டனையே கொடுத்திருப்பதாக அறிகிறேன். நமக்கு வழிகாட்டுவதற்காகக் கடவுள் ஒருவரைத் தந்தார். ஆனால், அரசாங்கமோ அவரை நம்மிடமிருந்து பிரித்துவிட அதிகார முடையதாக இருக்கிறது. அவர்களுடைய சித்தம் நிறை வேறுவதாக!''

('சிறையில் தவம்'; பக். 60)

காந்திஜி தண்டிக்கப் பெற்ற அதே சமயத்தில் தமிழ் நாட்டில் தனி நபர் சட்ட மறுப்பும். ஆந்திர தேசத்தில் வரிகொடா இயக்கமும் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. அநேகர் கைது செய்யப்பட்டு வருடக் கணக்கில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டனர்.

தேசத்தின் தலைவர் சிறைப்பட்டதுமே அரசு தன் அடக்கு முறை ஆயுதங்கள் அனைத்தையும் பயன்படுத்தி ஒத்துழையா இயக்கத்தை அடையாளமின்றி அழித்துவிட வெறிபிடித்து வேலை செய்தது. சிறைப்பட்டவர்கள் கசையடிக்கும் தனிக் கொட்டடித் தண்டனைக்கும் ஆளாயினர்.

நாடெங்கும் தேசபக்தர்களுடைய வீடுகளும் பத்திரிகாலயங் களும் காங்கிரஸ் அலுவலகங்களும் போலீசாரின் கடுமையான சோதனைக்கு உள்ளாயின. தமிழ் நாட்டில் மதுரை மாவட்டமே அதிக அளவில் இந்தக் கொடுமையை அனுபவிக்க வேண்டியிருந்தது.

அடுத்த ஆறு ஆண்டுகளுக்குத் தேசத்தை நடத்திச் செல்வது யார்? இந்த வினாக்குறி ஒவ்வொருவர் உள்ளத்திலும் எழுந்தது. இந்நிலையில் காங்கிரஸ் பொதுச் செயலாளரான ராஜாஜி வேலூர் சிறையிலிருந்து தமது தண்டனைக் காலம் முடிந்து விடுதலை யானார். தாயைக் காண ஓடும் சேய்போல ராஜாஜி காந்திஜியைக் கண்டு பேச புனாவிலுள்ள எரவாடா சிறைக்குச் சென்றார். அவருடன் காந்திஜியின் அருமை மகன் தேவதாசும் சென்றார்.

சிறையில் காந்தியடிகள் நடத்தப்பட்ட விதத்தை நேரில் கண்டும் விசாரித்தறிந்தும் ராஜாஜி மனமுருகிப் போனார். இரவில் தனிக் கொட்டடியில் அடிகள் அடைத்து வைக்கப்படுவதை யறிந்து ஆட்சி மீது ராஜாஜி கடுஞ்சினங் கொண்டார்.

காந்திஜியைப் பேட்டி கண்டு திரும்பியதும் பத்திரிகை களுக்கு விடுத்த அறிக்கையில் கூறியது வருமாறு:

''கெய்சரைவிடவும் நெப்போலியனை விடவும் யுத்தத்தில் கைதியான மிகப்பெரிய ஒரு தளபதியைவிடவும் சிறந்த ஒரு மனிதரைப் பாதுகாக்கும் பெருமையும் கௌரவமும் தங்களுக்குக் கிடைத்திருப்பதை அரசு அதிகாரிகள் உணரவில்லை.''

(ராஜ்மோகன் காந்தி எழுதிய 'ராஜாஜி வாழ்க்கை வரலாறு' தமிழாக்கம்; கல்கி கி. ராசேந்திரன்; பக் 210)

ராஜாஜி பற்றி ''யங் இந்தியா''

ராஜாஜி சிறை மீண்டதற்கு வரவேற்புக் கூறியும், அவரிடம் தேசம் எதிர்பார்ப்பதை வலியுறுத்தியும் காந்தியடிகளின் 'யங் இந்தியா' பத்திரிகை எழுதியது வருமாறு:

''இந்த நெருக்கடியான கால கட்டத்தில் இறுதி முடிவு எடுக்கப்பட வேண்டிய பல முக்கியமான பிரச்னைகள் ராஜாஜியின் கவனத்தை ஈர்க்கக் காத்திருக்கின்றன. அவர் இனி சென்னையோடு மட்டும் தமது நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்ள முடியாது எனக் கருதுகிறோம். மூன்று மாதங்களுக்கு முன் தாம் சிறை புகுந்தபோது எந்த இந்தியாவை அவர் விட்டுச் சென்றாரோ, அதே நேரமல்ல இது; வெகுவாக மாறியிருப்பதை அவர் காண்பார். தேசம் என்ற கப்பலைச் சரியான திசையில் நடத்திச் செல்ல மக்கள் அவரது உதவியை எதிர்பார்த்து நிற்கின்றனர்.''

ஒத்துழையாக் கொள்கைக்கிணங்க பெருவருவாயைத் தரத்தக்க வக்கீல் தொழிலைத் துறந்தபின், ராஜாஜி சென்னையை விட்டு பழையபடி சேலத்தில் குடியமர்ந்தாராதலால் சிறையி லிருந்து விடுதலை பெற்றபின் சேலத்தில் தங்கி வாழ்க்கை நடத்தினார். அங்கிருந்தபடியே 'யங் இந்தியா' பத்திரிகையின் ஆசிரியப் பொறுப்பை நிறைவேற்றி வந்தார்.

★-★-★

1918 முதல் 1922 வரை
தமிழ் நாட்டின் எழுச்சி

காந்தியடிகள் காங்கிரசுக்கு வழிகாட்டத் தொடங்கிய பின்னுள்ள முதல் நான்காண்டு காலத்தில் இந்தியாவில் நிகழ்ந்தவற்றை இதுவரை விவரமாக அறிந்தோம். ஆம்; 1919-இல் அடிகள் தொடங்கிய ரௌலட் சட்ட எதிர்ப்புத் தொடங்கி 1922-இல் அவர் ஆறாண்டு காலச் சிறைத் தண்டனை பெற்றதுவரை நாட்டில் நிகழ்ந்தவற்றைத் தொகுத்துக் கூறினோம். அவற்றுள் தமிழ் நாட்டில் நிகழ்ந்தவற்றை இன்னும் சிறிது விவரமாக அறிய முயல்வோம்.

ரௌலட் சத்தியாக்கிரகம் தொடங்குவதற்கு முந்திய ஆண்டான 1918-லேயே தமிழ் நாடு போராட்டப் பாதையில் அடியெடுத்து வைத்து விட்டது. தமிழ் நாடு தொழிற் சங்க இயக்கத்தின் துணை கொண்டும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரில் ஈடுபட்டது. இத்துறையில் இந்தியா முழுவதற்குமே வழிகாட்டிய பெருமை தமிழ் நாட்டிற்கு உண்டு.

1907-ஆம் ஆண்டில் தமிழ் நாட்டின் ஆலைத் தொழில் பிரதேசமான தூத்துக்குடியில் கப்பலோட்டிய தமிழர் வ.உ. சிதம்பரனார் தொழிற் சங்க இயக்கத்தைத் தொடங்கி வைத்தார். தூத்துக்குடி ஹார்வி மில் தொழிலாளர்களை ஒன்று திரட்டி, அவர்களுடைய உரிமைக்காக வேலை நிறுத்தப் போராட்டத்தில் அவர்களை வ.உ.சி. ஈடுபடுத்தியதனை முன்பே அறிந்தோம். இந்தியாவில் நடந்த ஏகாதிபத்திய எதிர்ப்பு வண்ணம் பெற்ற முதல் வேலை நிறுத்தம் அதுதான்.

முதல் தொழிற் சங்கம்

1918 ஏப்ரல் 27-இல் சென்னையிலுள்ள பக்கிங்காம் அண்டு கர்னாடிக்மில், சூளை மில் ஆகியவற்றின் தொழிலாளர் களுக்கென 'சென்னைத் தொழிலாளர் சங்கம்' ஒன்று தோற்று விக்கப்பட்டது. இதற்குத் திரு.ஜி. செல்வபதி செட்டியார்,

திரு.ஜி. ராமானுஜலு நாயுடு ஆகிய இருவரும் முன்னோடிகளாக விளங்கினர்.

இவர்கள் குத்தி கேசவப்பிள்ளை, திரு.வி. கலியாண சுந்தரனார், பி.பி. வாடியா ஆகியோரின் துணையைப் பெற்று, சென்னைத் தொழிலாளர் சங்கத்தை உருவாக்கினர். இந்தியாவில் முதன்முதலில் தோன்றிய தொழிற்சங்கம் இதுதான் என்று சொல்லப்படுகிறது. இதன் முதல் தலைவராகத் திரு.பி.பி வாடியா தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் மொழியால் மகாராட்டிரராவார்.

1919-இல் சென்னை பெரம்பூரிலுள்ள ரெயில்வே தொழிற் சாலைக்கெனத் 'தென்னிந்திய ரெயில்வே தொழிலாளர் சங்கம்' என்ற பெயரில் மற்றொரு தொழிற் சங்கமும் சென்னையில் தோன்றலானது. இது, சுருக்கமாக 'எம்.எஸ்.எம். ரெயில்வே தொழிலாளர் சங்கம்' என்று அழைக்கப்படுகிறது. இதன் முதல் தலைவராக அடையாறு தியோசாபிகல் சங்கத்தைச் சார்ந்தவரான டாக்டர் ஜி.எஸ். அருண்டேல் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனார், டாக்டர் அன்னிபெசனட், டாக்டர் ஜி.எஸ். அருண்டேல் ஆகிய தேசியத் தலைவர்கள் சென்னைத் தொழிலாளர் சங்கத்திற்கும் பெரம்பூர் ரெயில்வே தொழிலாளர் சங்கத்திற்கும் காப்பாளர்களாக இருந்து செயல்பட்டனர். இந்த இரண்டு சங்கங்களும் இன்று பொன்விழாவைக் கண்டு, நூற்றாண்டு விழாவை நோக்கி நடைபோட்டுக் கொண்டிருக்கின்றன. இவை, விடுதலைப் போராட்டத்தின் இன்னொரு முனையாக தொழிலாளி வர்க்கப் போராட்டங்கள் பலவற்றை நடத்தி வந்துள்ளன.

டாக்டர் நாயுடு மீது வழக்கு

மதுரையிலுள்ள ஹார்வி மில் தொழிலாளர்கள் தங்கள் உழைப்பிற்கேற்ற ஊதிய உயர்வும் பிற உரிமைகளும் கோரி 1918-இல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். வேலை நிறுத்தம் நடைமுறையிலிருந்த காலத்தில் மதுரையில் நாள்தோறும் தொழிற்சங்கச் சார்பில் பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன. அவற்றில் காங்கிரஸ் தலைவர்கள் பங்கு கொண்டு பேசலாயினர். இவர்களில் டாக்டர் பி. வரதராசுலு நாயுடுவின் பேச்சுகள் அரசாங்கத்தின் நெற்றிக் கண் திறக்கக் காரணமாயின.

நாயுடுவின் 'பிரபஞ்ச மித்திரன்' பத்திரிகையில் வெளி யான ஒரு கட்டுரையை ஆட்சேபகரமானதென்று கூறி, அரசு ரூ. 1000 ஜாமீன் கேட்டது. நாயுடு அதைக் கட்டிவிட்டு

தொடர்ந்து தமது போக்கிலேயே அப்பத்திரிகையை நடத்தலானார்.

டாக்டர் நாயுடு, ஆற்றல்மிக்க பேச்சாளர். அவரது பேச்சுத்திறன் சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள சாதாரண மக்களை விழித்தெழச் செய்தது. அதனால், அவரை வெளியே விட்டு வைக்க அஞ்சி, 29-8-1918-இல் நாயுடுவைக் கைது செய்தது அரசு. அவர் மீது இ.பி.கோ. 124 - ஏ பிரிவுப்படி அரசு நிந்தனை வழக்குத் தொடர்ந்தது.

வழக்கு, 1918 செப்டம்பர் 27-இல் மதுரை கூடுதல் முதல்வகுப்பு மாஜிஸ்திரேட் எஸ்.வி. நற்குணம் அவர்களால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அரசு தரப்பில் சர்.சி. கிருஷ்ணன் நாயர் வாதாடினார். டாக்டர் நாயுடுவுக்காக சேலம் சி. இராசகோபாலாச்சாரியார் வாதாடினார். சேலம் ஆதிநாராயண செட்டியார், மதுரை ஜார்ஜ் ஜோசப், எம்.கே. சுந்தரராச ஐயங்கார், ஆர்.எஸ். வரதராசுலு நாயுடு ஆகிய வழக்கறிஞர்கள் ராஜாஜிக்குத் துணை நின்றனர். வழக்கு 1919 ஏப்ரல் வரை தொடர்ந்து நடைபெற்றது.

வழக்கு விசாரணை முழுவதும் 'இந்து', 'மெயில்', 'பேட்ரியட்', 'நியூ இந்தியா ஆகிய ஆங்கில ஏடுகளிலும் தமிழ் நாளேடான 'சுதேச மித்திரனி'லும் ஒரு வார்த்தை விடாமல் வெளிவந்தது. தமிழ்நாட்டுக்கு வெளியே வடபுலத்திலுள்ள நாளேடுகளிலும் விரிவாகப் பிரசுரிக்கப்பட்டது. ராஜாஜியின் சட்ட நுணுக்கமான வாதத் திறமையை முதன்முதலாக அனைத் திந்தியாவும் அறிந்து கொள்ள இந்த வழக்கு வாய்ப்பாக அமைந்தது.

நீதிமன்றத்திலே பீரங்கி!

வழக்கு நடக்கும் நாட்களிலே நீதி மன்றத்திற்கு உள்ளும் புறமுமாக மக்கள் கூட்டம் திரண்டது. நாள்தோறும் நகரில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. திரு.வி.க. டி.எஸ்.எஸ். ராஜன், வ.ரா. ஆகியோர் பேசினர். நீதிமன்றத்தின் நடவடிக்கைகள் பேச்சாளர்களால் விமர்சிக்கப்பட்டன. தமிழ்நாட்டின் பல ஊர்களிலிருந்து தேச பக்தர்கள் மதுரை நகரில் முகாம் செய்து வழக்கு விசாரணையைக் கவனித்து வரலாயினர்.

ஒரு கட்டத்தில் நகரில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டப் போலீஸ் படை போதாதெனக் கருதி, இராணுவம் அழைக்கப்பட்டு, நகரம் முழுவதும் அதன் பொறுப்பில் விடப்பட வேண்டியதாயிற்று. நாள்தோறும் ராணுவம் வீதிகளில் பவனி

வந்தவண்ணமிருந்தது. நீதிமன்றக் கட்டடத்தின் மேல் மாடியில் இடைவிடாமல் சுட்டுத் தள்ளக்கூடிய பீரங்கி மிஷின் வைக்கப் பட்டது. இவ்வளவு செய்தும் நகரில் சமாதானத்தை நிலைநாட்ட அரசால் முடியவில்லை. கலகம் ஏற்பட்டு, போலீஸ் துப்பாக்கிச் சூடும் நடைபெற்றது. திரு. நீலமேகம் சுப்பையா என்ற தேச பக்தரும் மற்றொருவரும் மாண்டனர்.

இந்தச் சம்பவங்களால் மதுரையில் டாக்டர் நாயுடு மீது நடந்த அரச நிந்தனை வழக்கு தென்னிந்தியா முழுவதிலுமுள்ள மக்களின் கவனத்தைக் கவர்ந்தது. வடபுலமும் தன் கவனத்தைத் தென்புலத்தின் மீது செலுத்தியது.

ஒரு அரசியல்வாதி மீது 124-ஏ விதிப்படி வழக்குத் தொடர வேண்டுமானால், அதற்கு ஆளுநருடையவும் அவருடைய நிர்வாக சபையினுடையவும் முன் அனுமதி தேவையென்கிறது சட்டம். இதன்படி, ஒரு தந்தி மூலம் முன் அனுமதி பெறப்பட்டதென்பது பிராசிகியூஷன் தரப்பின் வாதம். தந்தியின் வாசகம் முழுமையான அனுமதி யாகாதென்பது ராஜாஜியின் எதிர்வாதம். வழக்கு தோன்றக் காரணமாக இருந்த ஆகஸ்டு 18, 19-ஆம் தேதிகளில் டாக்டர் நாயுடு மதுரையில் நிகழ்த்திய சொற்பொழிவுகள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. அவை வார்த்தைக்கு வார்த்தை நாயுடுவினுடையவை என்று சொல்வதற்கில்லை என்பது ராஜாஜியின் மற்றொரு வாதம்.

தண்டனையும் விடுதலையும்

வழக்கு விசாரணையின் ஒரு கட்டத்தில் மாஜிஸ்திரேட்டும் ராஜாஜியும் கடுமையாக வாதிட்டனர். கோர்ட் அவமதிப்புக் குற்றத்திற்காக ராஜாஜி மீது வழக்குத் தொடரப்படலாமென்றும் எதிர்பார்க்கப்பட்டது.

விசாரணையின் முடிவில் நீதிபதி, எதிரியான டாக்டர் பி. வரதராசுலு நாயுடு குற்றவாளியே என்று கூறி, அவருக்கு 18 மாதக் கடுங்காவல் தண்டனை விதித்தார். 'நாயுடுவுக்கு மாபெரும் அநீதி இழைக்கப்பட்டு விட்டது' என்று 'இந்து' எழுதியது. லோகமான்ய திலகரின் 'கேசரி' ஏடு, ''பேச்சுரிமை பலிக்களத்திற்குப் போய் விட்டது. தேசபக்த சாதி டாக்டர் நாயுடுவுக்கு வீரவணக்கம் செலுத்துகிறது'' என்று எழுதியது.

டாக்டர் நாயுடு, மதுரை நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் மேல்வழக்கு தொடர்ந்தார். அங்கு, திரு.கே. சீனிவாச ஐயங்கார், திரு. அல்லாடி கிருஷ்ணசாமி

ஐயர், ராஜாஜி ஆகிய மூவரும் டாக்டர் நாயுடு தரப்பில் வாதாடினார்.

வெள்ளையரான தலைமை நீதிபதி ஐலிங், நீதிபதி சதாசிவ ஐயர் ஆகியோர் மேல் வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டனர். விசாரணையின் முடிவில் கீழ்க் கோர்ட்டில் ராஜாஜி எழுப்பிய ஆட்சேபனையின் அடிப்படையில் அக் கோர்ட்டின் தீர்ப்பை நிராகரித்து டாக்டர் நாயுடுவை உயர்நீதி மன்றம் விடுதலை செய்தது. இவ்வழக்கு காரணமாக, டாக்டர் பி. வரதராசுலு நாயுடுவும், ராஜாஜியும் முதன்முதலாக அனைத்திந்தியாவின் கவனத்திற்கும் உரியவராயினர்.

மதுரை வழக்கில் விடுதலை பெற்ற டாக்டர் நாயுடு, 1919-இல் நடைபெற்ற ரௌலட் சட்ட எதிர்ப்புச் சத்தியாக் கிரகத்தில் ஈடுபட்டு, சென்னை நகரிலும் சேலத்திலும் எண்ணற்ற பொதுக் கூட்டங்களில் பேசி, மக்களிடையே தேசிய எழுச்சியை ஏற்படுத்தினார். 1922-இல் ஒத்துழையாமைப் போரை யொட்டிய தனி நபர் சட்ட மறுப்பில் ஈடுபட்டு ஒரு வருடக் கடுங்காவல் தண்டனை பெற்றார். இவர், சேலம் ராசிபுரத்தில் 1898-இல் பிறந்தவர். 'பிரபஞ்ச மித்திரன்', 'தமிழ்நாடு' ஆகிய தேசிய ஏடுகளைத் தமிழில் நடத்தி விடுதலைப் போருக்குத் துணை புரிந்தார்.

மும்மூர்த்திகள்!

நீதிக் கட்சியினர் காங்கிரசானது பிராமணர் ஆதிக்கத்தி லிருப்பதாகப் பிரசாரம் செய்துவந்த நேரத்திலே, விடுதலைப் பாசறையிலே பிராமணரல்லாத தலைவர்கள் பெருகி வந்தனர். 1919-இல் தமிழ்நாடு காங்கிரஸ் வீரமிக்க தலைவர்கள் பலரைப் பெற்றது. அவர்கள் டாக்டர் திரு.பி. வரதராசுலு நாயுடு. திரு.வி. கலியாணசுந்தர முதலியார், ஈரோடு வே. இராமசாமி நாயக்கர் ஆகியோராவர். இவர்கள் நாயுடு - நாயக்கர் - முதலியார் எனச் சாதிகளின் பெயராலேயே அந்நாளில் மக்களால் அழைக்கப் பட்டனர்.

இம் மூவரும் அரசியலில் பிரவேசித்த ஆரம்பத்திலே நீதிக் கட்சியின் தேசிய விரோதப் பிரசாரத்தை எதிர்ப்பதிலே தீவிரங் காட்டினர். இதற்காக 'சென்னை மாகாண சங்கம்' என்ற பெயரில் நீதிக் கட்சிக்கு எதிராக ஒரு நிறுவனத்தை ஏற்படுத்தினர். இதிலே குத்தி கேசவப் பிள்ளை வ.உ. சிதம்பரனார் ஆகிய பழைய தலைவர்களும் இணைந்தனர்.

1919-இல் ஈரோடு நகரில் சென்னை மாகாண சங்கத்தின் மாநாடொன்றை நடத்தப்பொறுப்பேற்று, அதன் வரவேற்புத் தலைவராக இருந்தார் ஈ.வே.ரா. அதன் மூலம்தான் தேசிய அரசியலில் அவர் பிரவேசித்தார். இதற்கு முன்பே அவர் தமது குடும்பப் பெருமையாலும் தமது திறமையாலும் ஈரோடு நகர மன்றத்தின் தலைவராக இருந்து நகர மக்களுக்கு அருந்தொண்டுகள் புரிந்தார்.

திரு.வி.க. அரசியலில் புகுவதற்கு முன்பு சென்னை வெஸ்லிக் கல்லூரியில் தமிழாசிரியராக இருந்தார். பின்னர், பெசன்ட் அம்மையாரின் சுயாட்சி இயக்கத்தில் கவர்ச்சி பெற்று, இந்திய தேசிய இயக்கத்தில் இணையாலானார். ஆம்; வருவாய் தரும் ஆசிரியர் தொழிலை விட்டு விட்டு, போராட்ட அரசியலில் புகுந்தார்!

நாயுடு, நாயக்கர், முதலியார் ஆகிய மும்மூர்த்திகளும் பல்கலைக்கழகப் பட்டதாரிகளல்லர். இவர்கள் வருவதற்கு முன் தமிழ்நாடு காங்கிரசிலே பட்டதாரிகளே முன்னணித் தலைவர்களாக இருந்து வந்தனர். அவர்களிலும் வக்கீல்களே செல்வாக்குப் பெற்று விளங்கினர். இம் மும்மூர்த்திகளின் வரவால் தமிழ்நாட்டு அரசியல் மறுமலர்ச்சி பெற்றது. இது, காந்தி சகாப்தம் செய்த புரட்சி எனலாம்.

ஈ.வே.ரா. தம்முடைய மனைவி நாகம்மையார், தமது தமையனார் ஈ.வே. கிருஷ்ணசாமி நாயக்கர் ஆகியோருடன் சேர்ந்து குடும்பத்துடன் ஒத்துழையாமைப் போரில் ஈடுபட்டு, தியாக வாழ்க்கை நடத்தினார். முதலியாரும் நாயுடுவும் நடுத்தரக் குடும்பங்களைச் சார்ந்தவர்களாக அரசியலில் ஈடுபட்டனர். நாயக்கர் பெரிய செல்வந்தராக ஈடுபட்டார்.

பிற்காலத்தில் 'பெரியார்' என்ற சிறப்புப் பெயர் பெற்ற ஈ.வே. ராமசாமியார், ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டு கள்ளுக் கடைகளை மறியல் செய்தார். தமக்குச் சொந்தமான தென்னை மரங்களைக் கள் குத்தகைக்கு விட மறுத்தார். அதனால், ஆண்டுதோறும் பல்லாயிரம் ரூபாய் வருவாயை இழந்தார்.

முதல் கம்யூனிஸ்டு சிங்காரவேலர்!

1919-இல் தமிழ் நாட்டுக் காங்கிரசில் பிரவேசித்த மற்றொரு பேரறிஞரையும் இங்கு குறிப்பிட வேண்டும். அவர், தோழர் சிங்காரவேல் செட்டியாராவார். இவர், சென்னையில் தற்போது 'காமராசர் சாலை' எனப் பெயர் பெற்றுள்ள கடற்கரைச் சாலையிலுள்ள நொச்சிக் குப்பத்தில் மீனவர் குடியில் பிறந்தவர்.

பி.ஏ. பி.எல். பட்டம் பெற்ற வழக்கறிஞர். இவர் ரௌலட் சட்ட எதிர்ப்பியக்கத்திலும் ஒத்துழையாமைப் போரிலும் தீவிரமாக ஈடுபடலானார். இவர் அரசியலில் புகுந்த காலந்தொட்டே இடதுசாரிப் போக்கை வெளிப்படுத்தி வரலானார்.

தமிழ் நாட்டில் தொழிற் சங்க இயக்கத்தை கம்யூனிஸத்தின் செல்வாக்கில் கொண்டுவர முதன் முதலில் முயன்றவர் தோழர் சிங்காரவேலரே! இந்தியாவின் முதல் கம்யூனிஸ்டு தோழர் செட்டியார்தான் என்றும் கூறப்படுகிறது.

புதுவையிலிருந்த வ.வே.சு. ஐயர், 1920 ஆகஸ்டில் இந்தியத் தமிழகத்திற்கு வருகை தந்தார். இங்கு 'தேச பக்தன்' நாளிதழின் ஆசிரியர் பொறுப்பை ஏற்று, இரண்டாண்டு காலம் ஒத்துழையாமை இயக்கத்திற்கு ஆதரவளித்து வந்தார். பத்திரிகையில் வெளியான ஒரு தலையங்கம் அரச நிந்தனையானது எனக்கூறி, இ.பி.கோ. 124-ஏ விதிப்படி வ.வே.சு. ஐயர் மீது வழக்குத் தொடர்ந்தது அரசு. அதிலே அவர் 9 மாத வெறுங்காவல் தண்டனையைப் பெற்றார்.

சிவாவின் சிறந்த தொண்டு

திலகர் சகாப்த அரசியல்வாதியான சுப்பிரமணிய சிவா, தருமபுரி மாவட்டத்திலுள்ள பாப்பாரப்பட்டியில் முகாம் செய்து, அங்கு 'பாரத ஆசிரமம்' என்னும் பெயரால் தேசபக்தர்களின் பாசறை ஒன்றை அமைத்தார். இளம் தேச பக்தர்களை அந்த ஆசிரமத்தில் சேர்த்து, விடுதலைப் போருக்குப் பயன்படத் தக்க வகையில் அவர்களுக்குப் பயிற்சி அளித்து வந்தார். பாரதியாரின் தேசியப் பாடல்களைத் தெருத் தெருவாகப் பாடிச் செல்லும் பஜனைக் குழு ஒன்றையும் ஏற்படுத்தினார். அதனுடன் தாமும் சேர்ந்து, தமிழ் நாடு முழுவதும் சுற்றுலாச் செய்து தேசிய இயக்கத்தை வலுப்படுத்தினார்.

சிவாஜி, தேசிங்கு ராஜன் ஆகிய மாவீரர்களின் வரலாற்றை நாடகங்களாக்கி, தமது பாரத ஆசிரமக் குழுவுடன் தாமும் சேர்ந்து நடித்து வந்தார். இந்த நாடகங்களைக் கொண்டு பிரிட்டிஷ் ஏகாதிபத்திய எதிர்ப்புணர்ச்சியை வலுப்படுத்தும் வகையில் தாமே உரையாடல்களைத் தயாரித்தார்.

சுப்பிரமணிய சிவாவுக்கு சிறை வாழ்க்கையில் தொழுநோய் பற்றியதால், நாளடைவில் அது முற்றி அவர் பெரிதும் வருந்தினார். அந்நிலையிலும் ஒத்துழையாமை இயக்கத்துக்கு வலுத்தேட ஊர் ஊராகச் சென்று பஜனைக் கோஷ்டியுடன்

தெருக்களிலே உலாச் சென்றும், நாடகங்கள் நடத்தியும், பொதுக் கூட்டங்கள் போட்டுப் பேசியும் தமிழின மக்களுக்கு விழிப்பூட்டி வந்தார். இவருக்கிருந்த தொழு நோயைக் காரணங் காட்டி ரெயிலில் பயணம் செய்யத் தடை விதித்தது அரசு. அந்தத் தடையை மீறியும் பயணம் செய்து, பல ஊர்களிலே ரெயிலிலிருந்து இறக்கிவிடப்பட்டு இன்னல் பல ஏற்றார்.

தேச சேவையிலும் சரி; சிறைப்பட்டு இன்னலுற்ற தியாகத்தி லேயும் சரி, சிவாவுக்கு இணையாக இன்னொரு தேசபக்தரைச் சொல்ல முடியாது. தமிழகத்தின் வரலாற்றிலே தமக்கெனச் சிறப்பான ஒரு தனியிடத்தைத் தியாகி சிவா பெற்றுவிட்டார்.

கதர்த் தொண்டு

காந்தியடிகள் ஆறாண்டுக்கால சிறைத் தண்டனை பெற்ற மூன்றாம் நாளிலே வேலூர் சிறையிலிருந்து விடுதலை யடைந்த ராஜாஜி, காங்கிரஸ்காரர்கள் பெருங் குழப்பத்திற்கும் சோர்வுக்கும் ஆளாகியிருப்பதைக் கண்டார். அவற்றிலிருந்து அவர்களை மீட்க வேண்டிய பொறுப்புத் தம் மீது சுமந்திருப்பதையும் உணர்ந்தார். காங்கிரஸ் பொதுச் செயலாளர் 'மூவரிலே ராஜாஜி ஒருவர்தான் சிறைக்கு வெளியே இருந்தாராதலால், காங்கிரசின் அன்றாட நடவடிக்கைகளைக் கவனித்தாக வேண்டிய கடமையும் அவருக்கு இருந்தது.

வடஇந்தியத் தலைவர்களில் ராசேந்திர பிரசாத், வித்தல் பாய் படேல், பண்டித மாளவியா ஆகியோர் மட்டுமே சிறைக்கு வெளியே இருந்தனர். அவர்களுடைய துணைகொண்டு காந்தியடி கள் சிறைப்பட்ட பின்னுள் மூன்று மாதங்களிலே மாதந்தோறும் காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தை ராஜாஜி கூட்டினார். தாம் சிறைபுகு முன்பு காந்தியடிகள் அறிவித்திருந்தபடி மதுவிலக்கு, தீண்டாமை விலக்கு, கதர் அபிவிருத்தி, இந்து - முஸ்லீம் ஒற்றுமை, தேசியக் கல்வி ஆகிய ஆக்கவழிப் பணிகளை முடுக்கி விடுவதற்கான வகையிலே காங்கிரஸ் காரியக் கமிட்டி முயற்சிகளை மேற்கொண்டது.

கதர்த்துறை முழுவதும் ஜம்னாலால் பஜாஜ் பொறுப்பில் விடப்பட்டது. இச் சந்தர்ப்பத்தில்தான் முதன் முதலாக அனைத்திந்திய ரீதியில் 'காதி போர்டு' ஒன்று காங்கிரஸ் காரியக் கமிட்டியால் நிறுவப்பட்டது. திரு. ஜம்னாலால் பஜாஜ் இந்தப் போர்டின் தலைவராக்கப்பட்டார். கதர் அபிவிருத்திக்கெனத் திலகர் சுயராஜ்ய நிதியிலிருந்து ரூபாய் ஐந்து லட்சம் வழங்கப் பட்டது.

தெற்கே மலபார் மாவட்டத்தில் நடைபெற்ற 'மாப்பிள்ளை மார் கலகம்' என்றழைக்கப்பட்ட சம்பவம் குறித்து முழு அளவில் விசாரணை நடத்தி உண்மை நிலையை அறிவிக்கவும், அம்மாவட்டத்தில் இந்து - முஸ்லிம்களிடையே ஒற்றுமையை வளர்க்க வழி வகுக்கவும் ஒரு தனிக் குழுவை காங்கிரஸ் கமிட்டி நியமித்தது. கலகத்தின்போது பெரிதும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி புரிய திலகர் சுயராஜ்ய நிதியிலிருந்து ரூபாய் 84 ஆயிரம் வழங்கப்பட்டது.

ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்து நீதிமன்ற பகிஷ்காரத்தை மேற்கொண்டதால் வருவாயை இழந்து வருந்தும் வழக்கறிஞர்களுக்கு உதவி புரியும் பொருட்டு, தமது சொந்தப் பொறுப்பில் ஒரு லட்சம் ரூபாயை திரு. ஜம்னாலால் பஜாஜ் கொடுத்தார்.

லக்னோவில் அ.இ.கா.க.

ஜுன் 7,8,9 ஆகிய தேதிகளில் அ.இ.கா. கமிட்டி உத்தரப் பிரதேசத்திலுள்ள இலக்குமணபுரியில் கூடியது. இந்த நேரத்தில் சிறையிலிருந்து விடுதலையான பண்டித மோதிலால் நேரு நேரே லக்னோ வந்து அ.இ.கா. கமிட்டிக் கூட்டத்தில் கலந்து கொண்டார். அக்கமிட்டியின் தமிழ் நாட்டு உறுப்பினர்களில் சிறையில் அடைப்பட்டிருந்தவர்கள் போக மற்றவர்களில் பெரும்பாலோர் கலந்து கொண்டனர்.

பொதுஜனச் சட்ட மறுப்பைக் கைவிட்டதாலும், காந்தியடிகள் நீண்ட கால தண்டனை பெற்று எரவாடா சிறையில் அடைப்பட்டதாலும் ஏற்பட்டுள்ள அரசியல் நிலைமை குறித்து அ.இ.கா. கமிட்டியில் தீவிரமாக விவாதிக்கப்பட்டது. உறுப்பினர்களில் பலர் பொதுஜனச் சட்டமறுப்பு கைவிடப்பட்டு விட்டதனால் சட்டசபையில் பிரவேசிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தினர். சட்டசபைகளைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்று கல்கத்தா விசேஷ காங்கிரசில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ரத்து செய்யும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற வேண்டுமென்றும் அவர்கள் கோரினர்.

காங்கிரஸ் பொதுச் செயலாளரான ராஜாஜி மாறுதல் வேண்டாத நிலையை மேற்கொண்டார். அதாவது, பொதுஜன சட்ட மறுப்பைக் கைவிட்டாலும், ஆக்கவழிப் பணிகளில் ஈடுபடுவதோடு காங்கிரஸ்காரர்கள் திருப்தியடைய வேண்டு மென்று ராஜாஜி கூறினார். ராசன் பாபு, டாக்டர் அன்சாரி, ஜம்னா லால் பஜாஜ் ஆகியோர் ராஜாஜியை ஆதரித்து நின்றனர்.

இதனால், 'மாறுதல் வேண்டுவோர்' என்றும், 'மாறுதல் வேண்டாதார்' என்றும் காங்கிரஸ்காரர்கள் இருவேறு அணிகளாகப் பிரிந்தனர்.

மத்தியப் பிரதேச காங்கிரஸ் கமிட்டியும் மகாராஷ்டிர காங்கிரஸ் கமிட்டியும் ஆக்கவழிப் பணிகளைப் புறக்கணித்து, சட்டசபைப் பிரவேச முயற்சிக்கு ஆதரவு திரட்டும் பிரசாரத்தில் தீவிரம் காட்டி வருவது பற்றியும் லக்னோவில் கூடிய அ.இ.கா கமிட்டி ஆலோசித்தது. ஆனால், எந்தவிதமான முடிவையும் கமிட்டி எடுக்கவில்லை. இதுபற்றி முடிவெடுக்கும் பொறுப்பு கயா காங்கிரசிடம் விடப்பட்டது.

சிறையிலிருந்த தேசபந்து சித்தரஞ்சன் தாசர், காங்கிரசானது சட்டசபைப் பிரவேசத்தில் ஈடுபடுவதற்கான முடிவை எடுக்க வேண்டும் என்று விரும்புவதாக அவரைச் சிறையில் பேட்டி கண்டு பேசிவிட்டுத் திரும்பிய திருமதி தேசபந்து தாசர் பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுத்தார். தம்முடைய கணவரின் அனுமதியைப் பெற்றே இந்த அறிக்கையைத் தாம் விடுவதாக அவ்வம்மையார் கூறினார். சிறையிலிருந்தவண்ணம் தேசபந்து தாசர் அனுப்பிய இந்தச் செய்தியினால் காங்கிரசிலிருந்த மாறுதல் வேண்டும் பிரிவினர் உற்சாகமடைந்தனர். அதுபோல, மாறுதல் வேண்டாத பிரிவினர் தாசரின் போக்கு கண்டு எரிச்சலடைந்தனர்.

லக்னோ கூட்டத்திலே காந்திஜியின் சேவையும் தியாகமும் பாராட்டப்பட்டன. பொதுஜனச் சட்டமறுப்பு நிறுத்தப்பட்ட பின்னரும் அரசின் அடக்குமுறை கடுமையாகி வருவது குறித்து கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

தமிழ்நாட்டின் உறுதி

நாட்டின் நிலைமையைக் கண்டறியச் சட்ட மறுப்பு விசாரணைக் குழு என்ற பெயரில் ஒரு சிறு குழுவை நியமிப்ப தென்றும், அந்தக் குழுவினர் நாடு முழுவதும் சுற்றுலாச் செய்து நிலைமையை ஆராய்ந்தறிந்து காங்கிரஸ் தலைவருக்கே அறிக்கை தரவேண்டுமென்றும் அ.இ.கா. கமிட்டியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி, பண்டித மோதிலால் நேரு, டாக்டர் அன்சாரி, திரு. வித்தல்பாய் படேல், திரு.எஸ். கஸ்தூரிரங்க ஐயங்கார், திரு. ராஜாஜி, திரு. சேட் சோடானி ஆகிய அறுவர் கொண்ட குழு நியமிக்கப்பட்டது. இக்குழு தனது வேலையைத் தொடங்கும் நேரத்தில் துருக்கியில் நிகழ்ந்த ஒரு சம்பவம் மாறுதல் வேண்டுவோரின் கட்சியைப் பலப்படுத்துவ தாகிவிட்டது.

துருக்கியில் கமால் பாஷா புரட்சி செய்து ஆட்சியைக் கைப்பற்றினார். இவர், சுல்தானைப் பதவியிலிருந்து இறக்கிய தோடு, காலிஃப்பா பதவியையே ஒழித்து விட்டார். இதனால், இந்தியாவில் கிலாபத் இயக்கம் தேவையற்றதாகி விட்டது. ஆம்; எதற்காகக் காந்திஜி ஒத்துழையாமைப் போரைத் தொடங்கினாரோ அது முடிந்துபோன பிரச்சினையாகி விட்டது.

இந்நிலையில் சட்டமறுப்பு விசாரணைக்குழு நாடு முழுவதும் சுற்றி விசாரணை நடத்தி அக்டோபர் 30-இல் தனது அறிக்கையைத் தந்தது. அது ஒருமித்த கருத்துக் கொண்டதாக இல்லை. ராஜாஜி கஸ்தூரிரங்க ஐயங்கார், டாக்டர் அன்சாரி ஆகிய மூவரும் மாறுதல் தேவையற்றதென்றும்; அக்கீம் அஜ்மல்கான், பண்டித மோதிலால் நேரு, வித்தல்பாய் படேல் ஆகிய மூவரும் மாறுதல் தேவையென்றும் கூறினர். தமிழ்நாடு காந்தி வழியில் உறுதி காட்டியது.

காந்திஜி தண்டனை பெற்ற 18-ஆம் தேதியை ஒவ்வொரு மாதமும் கொண்டாடுமாறு காங்கிரஸ் கமிட்டிகள் கேட்டுக் கொள்ளப்பட்டன.

இந்நிலையிலே, 36-வது காங்கிரஸ் மகாசபை கூடுவதற்கான தேதி நெருங்கி வந்தது. டிசம்பர் மாத இறுதியிலே பீகார் மாநிலத்தைச் சேர்ந்த கயா நகரில் காங்கிரஸ் மகாசபை கூடியது. 1921-இல் ஆமதாபாத்தில் கூடிய காங்கிரஸ் மகாசபையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தேசபந்து தாசர் அப்போது சிறையிலிருந்ததால் தலைமைப் பொறுப்பை ஏற்று மகாசபையை நடத்த அவரால் இயலவில்லையாயினும், ஆமதாபாத் மகா சபைக்குப்பின் காங்கிரஸ் விதிமுறைப்படி அவரே காங்கிரசின் உத்தியோகபூர்வமான தலைவராக இருந்து வந்தார். கயா காங்கிரசில் திரு. தாசரே தலைமை தாங்க வேண்டுமென்று லக்னோவில் கூடிய அ.இ.கா.க. முடிவெடுத்தது.

★-★-★

கயா காங்கிரஸ்

கயா காங்கிரஸ் கூடுவதற்கு முன்பு நாடு முழுவதிலும் சிறைகளிலிருந்த காங்கிரஸ்காரர்களிலே பெரும்பாலோர் தங்கள் தண்டனைக் காலம் முடிவடைந்ததால் விடுதலையாயினர். அவர்கள் எல்லாம் கயா காங்கிரசில் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டிலிருந்தும் ராஜாஜி, டாக்டர் பி. வரதராசுலு நாயுடு, எஸ். சீனிவாச ஐயங்கார், ஈ.வே.ரா., தோழர் சிங்கார வேலர், எஸ். சத்தியமூர்த்தி, சர்தார் ஆதிகேசவ நாயகர், டாக்டர் டி.எஸ்.எஸ். ராசன், மதுரை ஜார்ஜ் ஜோசப் ஆகியோர் உட்பட ஏராளமான காங்கிரஸ்காரர்கள் கயா காங்கிரசுக்குச் சென்றனர்.

1922 டிசம்பர் 27-ஆம் நாளிலே கயா நகரில் வங்காளத்தின் முடிசூடா மன்னரான தேசபந்து தாசரின் தலைமையில் 36-வது காங்கிரஸ் மகாசபை கூடியது. இந்தக் காங்கிரசிலே காந்திஜி இல்லாத குறை பிரதிநிதிகளின் மனத்தைப் பெரிதும் வாட்டியது. சந்திரன் இல்லாத வானம்போல் மகாசபை காட்சியளித்தது.

தலைவர்களிடையே வேறுபாடு!

தேசபந்து தாசர் தமது தலைமையுரையிலே சட்டசபைப் பிரவேசம் பற்றித் தமது கொள்கையைத் திட்டவட்டமாக எடுத்துரைத்தார். அவருக்கு முன்பு வரவேற்புக் குழுத் தலைவர் என்ற முறையில் பிரதிநிதிகளையெல்லாம் வரவேற்றுப் பேசிய பாபு ராஜேந்திர பிரசாத், மாறுதல் வேண்டாதவர்களின் எண்ணத்தை எதிரொலித்தார். ஆம்; வரவேற்புக் குழுத் தலைவர் மாறுதல் வேண்டாதவராகவும், மகாசபைத் தலைவர் மாறுதல் வேண்டுபவராகவும் இருந்த நிலை கயா காங்கிரசில் வெளிப்பட்டது.

'கெடுபிடிப் போர்!'

கயா காங்கிரஸ் மகாசபையிலே மாறுதல் வேண்டாதாருக்கும் வேண்டுவோருக்குமிடையே, 'கெடுபிடிப் போர்' நடைபெற்றது.

மற்றொரு 'சூரத்' தாக கயா மாறிவிடுமோ என்ற ஐயமும் அங்குக் கூடியிருந்த பிரதிநிதிகளுக்கு ஏற்பட்டது.

மகா சபைக்குத் தலைமை வகித்த தேசபந்து தாசர் வீரமிக்க ஒரு சொற்பொழிவை நிகழ்த்தினார். பொதுஜனச் சட்ட மறுப்பைக் காங்கிரஸ் அடியோடு கைவிட்ட பின் சட்ட சபைப் பிரவேசம் தவிர்க்க முடியாததாகி விட்டது என்பதனை வலியுறுத்திப் பேசினார். மாறுதல் வேண்டாதார் மனத்தை மாற்றுவதற்குத் தமது தலைமை உரையின் மூலம் தேசபந்து தாசர் பெரிதும் முயன்றார்.

காங்கிரஸ் கடைப்பிடித்து வந்த சட்டசபைப் பகிஷ்காரம் மேலும் நீட்டிக்கப்பட வேண்டுமென்ற தீர்மானத்தை மூதறிஞர் ராஜாஜி தாமே முன்மொழிந்து பேசினார். அதனை எதிர்த்துப் பண்டித மோதிலால் நேரு, சித்தரஞ்சன் தாஸ், எஸ். சத்திய மூர்த்தி, எஸ். சீனிவாச ஐயங்கார், சர்தார் வல்லபாய் படேலின் சகோதரர் வித்தல்பாய் படேல் ஆகியோர் பேசினர்.

ராஜாஜிக்குச் சோதனை

பல ஆண்டுகளாகக் காங்கிரஸ் பணியில் ஈடுபட்டு, தியாகங்கள் பல செய்து, தேசமக்களின் வணக்கத்திற்கும் மரியாதைக்கும் உரியவர்களாக விளங்கிய பெருந்தலைவர்களை எதிர்த்துப் போராட வேண்டிய நிலையில் ராஜாஜி இருந்தார். அவரது அன்றைய நிலையை அவருடைய பேரன் திரு. ராஜ்மோகன் காந்தி தாம் எழுதியுள்ள 'ராஜாஜியின் வரலாறு' என்னும் நூலில் (பக்.226) கீழ்வருமாறு வருணிக்கிறார்:

> ''தாஸ் மோதிலால் நேரு, வித்தல்பாய் மூவரும் மாபெரும் தலைவர்களென அனைவராலும் ஒப்புக் கொள்ளப் பட்டவர்கள். மேலும், தாஸ் காங்கிரசின் அதிகாரபூர்வமான தலைவராகவும் விளங்கினார். ஒப்பு நோக்குகையில் சி.ஆர். தேசிய அரங்குக்கு அண்மைக் காலத்தில்தான் வந்து சேர்ந்தவர். சிறிய ஊரிலிருந்து வந்தவர் என்ற பின்னணியும் அவருக்குப் பாதகமாகவே இருந்தது. சி.ஆர். பொதுக் காரியதரிசியாக இருந்தபோதிலும் அவர் உத்தரவுக்குக் கீழ்ப்படியக் கூடிய உட்பிரிவோ பகுதியோ கட்சிக்குள் இல்லை. செல்வந்தர்கள் மீதும் அவருக்குச் செல்வாக்கும் கிடையாது. ஆயினும், அவரிடம் 'யங் இந்தியா' பத்திரிகை இருந்தது. கூர்மையான மதியும் இருந்தது.''

ராஜாஜிக்கு இத்தனை பலவீனங்கள் இருப்பினும், காந்திஜியின் ஆன்ம சக்தி அவருக்குப் பக்கபலமாக இருந்தது.

ராஜாஜி மேற்கொண்டுள்ள மாறுதல் வேண்டாத நிலை காந்திஜியின் இதயத்தை எதிரொலிப்பதாகும் என்ற நம்பிக்கை கயாவில் கூடிய பிரதிநிதிகளில் பெரும்பாலோருக்கு இருந்தது. சட்டசபைப் பிரவேசத்திற்கு எதிராக ராஜாஜி வெளியிட்ட கருத்துகள் வருமாறு:

''தேர்தல்கள் காங்கிரசிடம் இருக்கும் பணத்தையெல்லாம் விழுங்கிவிடும். நிர்மாணத் திட்டங்களுக்கும் போராட்டத்தின் அடுத்த கட்டத்திற்கும் மக்களைத் தயார்ப்படுத்தவும் தேவைப் படும் பணத்தை மட்டுமின்றி, ஆட்களையும் நேரத்தையும் சக்தியையும் திறமைகளையும் தேர்தல் உறிஞ்சிவிடும். மேலும், தேர்தலானது சமூகப் பிரிவினைகளையும் உண்டாக்கிவிடும். பதவிகளுக்கும் உத்தியோகங்களுக்கும் போட்டா போட்டி ஏற்பட்டு, சாதி - மத உணர்ச்சிகளைத் தூண்டி விடுவதில்தான் முடியும்.

''காங்கிரஸ் கட்சி வேட்பாளராகச் சட்டசபைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் அங்கத்தினர்கள் காங்கிரசின் உத்தரவுகளை அலட்சியப்படுத்தவோ, மீறவோ செய்யலாம். காங்கிரஸ் அமைப்புகளில் படிப்படியாக ஊழல்கள் புகவும், பிளவுகள் தோன்றவும் வாய்ப்பு ஏற்படலாம். மேலும், தேர்தல்கள் காங்கிரஸ் கொள்கைகளைப் பணக்காரர்களிடமும், அவர்களுடைய நண்பர்களிடமும் சரணடையச் செய்துவிடும் என்பது நிச்சயம்.''

ஐயர் ஆள் திரட்டினார்!

கயா காங்கிரஸ் மகாசபையிலே மாறுதல் வேண்டாதார் அணியின் ஏகத் தலைவராக தமிழ் நாட்டவரான ராஜாஜியே விளங்கினார். தமிழ்நாட்டிலிருந்து சென்றிருந்த பிரதிநிதிகள் அவ்வளவு பேரும் ராஜாஜியின் பின்னே இருந்தார்கள் என்றும் சொல்வதற்கில்லை. அவர்களிலே அனைத்திந்திய ரீதியில் ஓரளவு விளம்பரம் பெற்றிருந்தவர்களான திரு. சீனிவாச ஐயங்கார், திரு.எஸ். சத்தியமூர்த்தி ஆகியோர் ராஜாஜிக் கெதிராக மாறுதல் வேண்டுவோர் அணியில் இருந்தனர்.

திரு.எஸ். சத்தியமூர்த்தி, மாறுதல் வேண்டுவோர் கட்சிக்கு ஆதரவாகத் தமிழ்நாட்டில் பிரதிநிதிகளைத் திரட்டி, அவர்களைக் கயாவுக்கு அழைத்துச் செல்வதிலே வங்காளியான தேசபந்து தாசருக்குத் துணை நின்றார். பிரதிநிதிகளைத் திரட்டிக்கொண்டு வரும்படி திரு. சத்தியமூர்த்திக்கு மோதிலால் எழுதிய கடிதம் ஒன்றிலே, ''தென்னிந்தியாவிலிருந்து வரும் பிரதிநிதிகளிலே ஐந்தில் ஒரு பங்கினர் மாறுதல் வேண்டும் முயற்சிக்கு

ஆதரவாக இருந்தாலும் போதும், நமக்கு வெற்றி கிட்டிவிடும்' என்று குறிப்பிட்டிருந்தார்.

இதனால், தென்னிந்தியப் பிரதிநிதிகளிலே பெரும்பாலோரைத் தன் பக்கத்தில் இழுத்துக் கொள்ள முடியும் என்பதில் மோதிலாலுக்கு நம்பிக்கை இருக்கவில்லை என்பது புலப்படுகிறது. இறுதியாக, சட்டசபைகளைப் பகிஷ்கரிப்பதென்ற பழைய முடிவை உறுதிப்படுத்துமாறு கோரும் ராஜாஜியின் தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடத்தப் பெற்று, அது வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. தீர்மானத்திற்கு ஆதரவாக 1740 வாக்குகளும், எதிராக 890 வாக்குகளும் கிடைத்தன.

கயாவின் நாயகர்

கயா காங்கிரசிலே ராஜாஜிதான் பிரதிநிதிகள் எல்லோருடைய கவனத்தையும் ஈர்க்கத்தக்க நாயகராக இருந்தார். 'அன்றைய நாயகர் சி. ராஜகோபாலாச்சாரியார்தான்' என்று சுபாஷ்சந்திரபோஸ் கூறினார்.

ராஜாஜிக்கு எதிரணியிலிருந்த மாறுதல் வேண்டுவோர் அவரை 'குட்டி காந்தி' என்று கேலியாக அழைத்தனர். ஆயினும், அவர்பால் மதிப்புடையவர்கள் அவரது பெயரின் இறுதியில் ஒரு 'ஜியை'ச் சேர்த்து 'ராஜாஜி' என்று அழைக்கும் வழக்கம் அங்குதான் ஆரம்பமாயிற்று.

மாறுதல் வேண்டுமென்று கூறிய அணியிலேயும் பிளவு இருந்தது. ஆம்; சட்டசபையில் பிரவேசித்து அமைச்சர் பொறுப்புகளையும் ஏற்க வேண்டும் என்பது ஒரு குழுவின் கருத்து. இதற்கு தாசர் தலைவராக இருந்தார். இன்னொரு குழு தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றபின் ஒத்துழையாமைத் தத்துவப்படி சட்ட சபைக்குள் பிரவேசிக்காமல் இருக்க வேண்டும் என்று கூறியது. இதற்கு, திரு.எஸ். சீனிவாச ஐயங்கார் தலைவராக இருந்தார்.

சிங்காரவேலரின் சிம்மக் குரல்!

கயா காங்கிரசிலே மாறுதல் வேண்டாதாருக்கும் வேண்டுவோருக்குமிடையில் கெடுபிடிப்போர் நடந்த தருணத்திலேயே, அங்கு உலகத் தொழிலாளர் சார்பில் ஒரு புரட்சிக் குரல் ஒலித்தது. அது, தமிழகத்திலிருந்து சென்றிருந்த தோழர் சிங்காரவேலரின் தனிக்குரலாகும். காங்கிரஸ் மகாசபையில் தொழிலாளர்

சம்பந்தமான தீர்மானமொன்று விவாதத்திற்கு வந்தது. அந்தத் தீர்மானம் வருமாறு:

''இந்தியத் தொழிலாளர்களும் இந்திய நாட்டின் வளங்களும் சுரண்டப்படுவதைத் தடுக்கவும், இந்தியத் தொழிலாளர்களின் நியாயமான உரிமைகளை நிலைநாட்டவும், அவர்கள் வாழ்வு மேன்மையடைய வழிகாணவும், அவர்களை அமைப்பு ரீதியாக அணுகவேண்டும் என்று இந்தக் காங்கிரஸ் விரும்புகிற படியால், தொழிலாளர்களைச் சார்ந்த இந்திய தொழிற் சங்க காங்கிரஸ், கிசான் சபாக்கள் ஆகிய அமைப்புகளை வரவேற்பதுடன், விவசாயிகளையும் தொழிலாளர்களையும் சீரான முறையில் நடத்திச் செல்வதற்காக இந்திய தொழிற்சங்க காங்கிரஸின் செயற்குழுவிற்கு உதவிபுரிய கீழ்க்கண்டவர்களை இந்தக் காங்கிரஸ் நியமிக்கிறது.

''(1) ஸி.எப். ஆண்ட்ரூஸ், (2) ஜே.எம். சென்குப்தா, (3) எஸ்.என். ஹால்டர், (4) சுவாமி தீனநாத், (5) டாக்டர் டி.டி. சத்யா, (6) எம். சிங்காரவேலு செட்டியார்''

இந்தத் தீர்மானத்தை ஆதரித்துத் தோழர் சிங்காரவேலர் நிகழ்த்திய வரலாற்றுச் சிறப்பு மிக்க சொற்பொழிவு கீழே அப்படியே தரப்படுகிறது:

''தலைவர் அவர்களே, இங்கு குழுமியுள்ள தோழர்களே. ஹிந்துஸ்தானத்தின் விவசாயப் பெருமக்களே, தொழிலாளிகளே! உங்களுடைய சக தொழிலாளி என்ற முறையில் இங்கு பேச நிற்கிறேன். உலகக் கம்யூனிஸ்டுகள் சார்பாக அதன் பிரதிநிதியாக இங்கு நான் வந்திருக்கிறேன். உலகத் தொழிலாளருக்கு கம்யூனிஸம் வழங்கும் செய்தியை உங்களுக்கு அளிக்க இங்கு நான் வந்திருக்கிறேன். சோவியத் ருஷ்யாவிலும், ஜெர்மனியிலும் மற்ற உலக நாடுகளிலுமுள்ள கம்யூனிஸ்டுகள், தொழிலாளர்கள் சார்பாக நான் உங்கள் முன் நிற்கிறேன். உங்களுடைய விடுதலையிலும், உங்கள் உணவு, உடை, இருக்கை ஆகிய உரிமைகளிலும் அவர்களுக்கும் அக்கறை உண்டு.

''தோழர்களே, இந்த நாட்டில் நீங்கள் சுதந்திரமான வாழ்க்கையை நடத்தவும், எல்லா உரிமைகளையும் பெறவும் நமது காங்கிரஸ் பாடுபடுவதை நீங்கள் அறிவீர்கள். ஒரு சிலர் கையில் அதிகாரம் செல்வதை நாம் விரும்பவில்லை. நமக்கு உரிய முறையில் உணவும் உடையும் வீடும் கிடைப்பதற்கான அதிகாரம் நம் கையில் வந்தாக வேண்டும். இவை நமக்கு மிக முக்கியமானவை நமது காங்கிரஸ் இயக்கம் இதற்காகவே

தன்னை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். இந்த உரிமைகளை பெற்றுத் தருவதில் காங்கிரஸிற்கு உதவியாக இருக்க உலகக் கம்யூனிஸ்டுகள் தாயராயிருக்கிறார்கள். உங்களுடைய நியாய மான கோரிக்கைகளில் உலக கம்யூனிஸ்டுகளுக்கும் ஈடுபாடு உண்டு. ஆகவே, நீங்கள் விடுதலை பெறுவதிலும், உரிமைகளைப் பெறுவதிலும் அவர்கள் உங்களுடன் இருக்கிறார்கள் என்ற உண்மையை நீங்கள் அறியவேண்டும்.

''தோழர்களே, முதல்படியாக நாம் சுதந்திரம் பெற்றாக வேண்டும். இதற்கு மகாத்மா காந்தியின் சீடர்கள் என்ற வகையில் அகிம்சையையும், ஒத்துழையாமையையும் நாம் கடைப்பிடிப் போம். இந்த முறைகளில் எனக்குப் பெருத்த நம்பிக்கை இருக்கிறது. உலகக் கம்யூனிஸ்டுகளிடம் நான் இந்த வழியில் எனக்குள்ள நம்பிக்கையையும், இது நமக்கு நடைமுறை சாத்தியமானது என்பதையும் சொல்லியிருக்கிறேன். இதிலே அவர்கள் நம்மிடமிருந்து வேறுபடுகிறார்கள். நாமும் உலக கம்யூனிஸ்டுகளிடமிருந்து இந்த அடிப்படையில் வேறு படுகிறோம். ஆகவே, அகிம்சை, ஒத்துழையாமை ஆகியவற்றில் நமக்குள்ள ஈடுபாட்டையும், அவற்றின் மூலம்தான் இங்குள்ள பிரிட்டிஷ் ஆதிக்கத்திற்கு எதிராக போராடப் போகிறோம் என்பதையும் உலக கம்யூனிஸ்டுகளுக்கு நமது செய்தியாக சொல்லிக்கொள்ளுகிறோம். உலகத் தொழிலாளர்கள் இதை அறியவும் புரிந்து கொள்ளவும் வேண்டும்.

''தோழர்களே, காங்கிரஸ்காரர்களாகிய நாம் தொழிலாளர் நலனில் அதிக அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். இந்தியத் தொழிலாளர்கள் காங்கிரஸ் இயக்கத்தில் பங்கு பெறவேண்டும். இதனைச் செய்ய நாம் தவறிவிட்டோம். இதனால், பர்தோலியில் நாம் தோல்வியுற்றோம். பர்தோலியில் ஏற்பட்ட தோல்விக்குக் காரணம், விடுதலைப் போரில் தொழிலாளர்களை நாம் முழுமையாக ஈடுபடுத்தாததுதான் என்று தைரியமாக நான் சொல்வேன். இதனால், நாம் பல துன்பங்களை அனுபவித்து விட்டோம். ஆகவே, தேசிய அளவில் வேலை நிறுத்தங்கள் நடை பெற அகிம்சை, ஒத்துழையாமை ஆகிய கருவிகளை காங்கிரஸின் தலைமை பயன்படுத்தவேண்டும்.

''தேச அளவில் வேலை நிறுத்தங்கள் நடத்துவதன் மூலமாக பிரிட்டிஷ் ஆதிக்கத்தை மயிரிழைகூட நம்மால் அசைக்க முடியாது. இதற்காக இந்திய தொழிற் சங்க காங்கிரஸுடன் உள்ள உறவைத்தவிர. நேரடியாக காங்கிரஸ் இயக்கத்தின் பகுதியாகவே தொழிற் சங்கங்களை நாட்டில் ஏற்படுத்த வேண்டும்.

''தோழர்களே, உங்கள் சக்தி உங்களுக்குத் தெரியாது. உங்கள் பலத்தை நீங்கள் அறிந்திருக்கவில்லை. உங்கள் சக்தியை நீங்கள் அறிகின்ற கணத்திலே உங்கள் கண்களை மறைத்திருக்கும் திரை அகலும்; உலகம் உங்களுக்குச் சொந்தமாகும்.

''எல்லைகளைத் தாண்டி மலைகளையும், கடல்களையும் தாண்டி இப்போது தொழிலாளி பார்க்க ஆரம்பித்துவிட்டான். ரஷ்யத் தொழிலாளர்கள் மூலமாக, இந்திய, ஆசிய, அமெரிக்க, ஆஸ்திரேலியத் தொழிலாளர்கள் இப்போது தோழமை பூண்டு நிற்கிறார்கள். இந்தத் தோழமையைக் காக்க அவர்கள் விரதம் பூண்டிருக்கிறார்கள். மனித இன சகோதரத்துவத்தில் உலகக் கம்யூனிஸ்டுகளுக்கு நம்பிக்கை உண்டு. இந்தியத் தொழிலாளர்கள் இந்த மனித ஒருமைப்பாட்டிற்கு உதவ வேண்டும்.

''முதலாளித்துவ சக்திகளே, கேளுங்கள்! இந்தியத் தொழிலாளர்கள் விழித்துக்கொண்டு விட்டார்கள். மற்ற உலகத்தொழிலாளர்களைப்போல, இந்தியத் தொழிலாளர்களும் கடல், மலை, எல்லை கடந்து உண்மையான தோழமை பூண்டு நிற்கிறார்கள். அவர்களை நீங்கள் இனி அலட்சியப்படுத்த முடியாது. தங்கள் பலத்தை இன்று அவர்கள் உணர ஆரம்பித்துவிட்டார்கள்.

''இன்று இந்தியத் தொழிலாளி மிக இழிவான நிலையில் இருக்கின்றான். உலகத்தின் கீழ்மைகள் எல்லாம் அவன் தலையில், உலகத்தின் பஞ்சம், பட்டினி, பிணி, துயர் எல்லாமே அவனிடம். பணக்காரர்களே! பெரிய மனிதர்களே! மறவாதீர்! உலகத்திலுள்ள நல்லவற்றை யெல்லாம் நீங்கள் பெறுவதற்கு உழைத்தவன் தொழிலாளி. அவனைப் பின்னுக்குத் தள்ளாதீர். உங்களுக்காக உழைத்தவனை உதாசீனம் செய்கிறீர்கள். அவனுடைய அறிவால், உழைப்பால், சக்தியால் இந்த உலகத்தின் வாழ்வு மலர்ந்திருக்கிறது. காலம் மாறுகிறது. திமிர் பிடித்த முதலாளித்துவம் சீக்கிரமே சரணடையும். மதிப்பும் பெருமையும் மிக்க இந்தியத் தொழிலாளர் வர்க்கம் சீக்கிரமே அரசோச்சும்.

''முதலாளிகளே, இந்தியத் தொழிலாளர் விழித்துக் கொண்டதை அறிவீர்கள். உலகைக் காப்பாற்ற, தன் உரிமையைப் பேண விரைவில் உழைப்பாளி வர்க்கம் முயலும். இந்தப் பேரவை முன் வைக்கப்பட்டுள்ள தீர்மானத்தை முழுமனதாக நான் ஆதரிக்கிறேன்.''

கயா காங்கிரசிலே தோழர் சிங்காரவேலர் பேசியதனால் அந்த அவையில் ஏற்பட்ட எதிரொலி பற்றி 'வேன்கார்ட் ஆப் இன்டியன் இன்டிபெண்டன்ஸ்' என்னும் ஆங்கில வெளியீடு வால்யூம் 3, நெ. 21, மார்ச்சு 1923 கூறுவதாவது:

''இந்திய தேசிய காங்கிரஸ் கூட்டங்களிதிலேதான் தோழர் சிங்காரவேலர் முதன் முறையாகக் கலந்து கொண்டார். ஆக, காங்கிரசுக்கு அவர் புதியவர்தான். ஆனால், அதற்கு மூன்று ஆண்டுகள் முன்பாகவே ஒத்துழையாமை இயக்கத்தின் தீவிர தொண்டர் என்ற வகையில் அவர் பெயர் பிரபலமாகியிருந்தது. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர்களுக்கு அவருடைய போர் அறிக்கையின் 400 பிரதிகள் வினியோகிக்கப்பட்டிருந்தன. இதன் காரணமாக, எடுத்த எடுப்பிலேயே அந்தக் கூட்டத்தில் அவருக்கு உற்சாகமான வரவேற்புக் கிடைத்தது. கூட்டத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் அவருக்குப் பாராட்டுக்கள் குவிந்தன. அந்த முழுமையான காங்கிரஸ் கூட்டத்தில் அந்த முதியவர் எழுந்து தன் கன்னிப்பேச்சை தொடங்கும் வகையில் ''தோழர்களே (காம் ரேட்ஸ்) என்று விளித்தபோது, மிகப் பெரிய கரவொலி எழுந்தது. அதிலிருந்து கயைவிட்டு அவர் போகும் வரையில் ஆயிரக்கணக்கான காங்கிரஸ்காரர்கள் அவரை ''தோழர்'' என்றே அழைத்தனர். கூட்டத்தில் 'தோழர்' அடைமொழி அவரைப் பற்றிக்கொண்டது. தொழிலாளர் பற்றிய கமிட்டிகளில் 'துணிவுள்ள புதியவர்' ஆன அவரைச் சேர்க்க வேண்டுமென்று எல்லோரும் எழுந்து நின்று கோரினர். இதுபோன்ற எழுச்சிகள் எவ்வளவு பலவீனமானவை என்பதை அறிந்தவரான சிங்கார வேலர் அமைதியாக தன் காரியங்களிலே கவனம் செலுத்தினார். கயாவில் அவர் கலந்து கொண்ட நிகழ்ச்சி ஒரு சரித்திர சாதனை தான். 'கௌரவமான' தேசியத் தொண்டர்கள் விரும்பாத, அரசாங்க நடவடிக்கைகளுக்குத் தங்களை ஆட்படுத்தி விடும் என்று இளைஞர்களே பயந்த நிலையில், தன்னை ஒரு கம்யூனிஸ்டு என்று பகிரங்கமாகப் பிரகடனப்படுத்திக் கொண்ட இந்த அறுபது வயதைத் தாண்டிய நரைமுடிக் கிழவர் காட்டிய வீரம் கயாவில் கூடியிருந்தவர்களிடையே பெரிய அதிசயமாக இருந்தது.''

இந்திய விடுதலை இயக்கத்தோடு தொழிலாளர் இயக்கத்தைப் பிணைப்பதிலே இந்தியா முழுவதற்கும் வழிகாட்டிய பெருமை தமிழகத்திற்கே உரியதாகும் என்பது முன்னர் பலவிடங்களில் சுட்டிக்காட்டப்பட்டது. காங்கிரஸ் மகாசபைக் கூட்டமொன்றிலே உலகத் தொழிலாளி வர்க்கத்தின் சார்பில், தம்மை ஒரு கம்யூனிஸ்டாக அறிமுகப்படுத்திக் கொண்டு, காந்தியடிகளின் ஒத்துழையாமை, சத்தியாக்கிரகம் ஆகியவற்றில் நம்பிக்கை தெரிவித்து முதன் முதலில் குரல் கொடுத்தவர் தமிழரான தோழர் சிங்காரவேலரே யாவார். வாழ்க, சிங்காரவேலர் புகழ்!

★-★-★

சுயராஜ்யக் கட்சி பிறந்தது!

கயா காங்கிரசிலே மாறுதல் வேண்டுவோர் படுதோல்வியடைந்தனர். எரவாடா சிறையிலிருந்த காந்திஜியின் ஆன்மபலம் அவர்களை வெற்றி கண்டது. கயா காங்கிரஸ் முடிந்ததும் புதிதாக 'சுயராஜ்யக் கட்சி' என்ற பெயரில் ஒரு தனிக்கட்சி தொடங்கப்பட்டு விட்டதாகத் தேசபந்து தாஸ் கயாவிலேயே அறிவித்தார். புதிய கட்சி காங்கிரசின் உட்பிரிவாக இருந்து வரும் என்றும் அவர் கூறினார்.

கயா காங்கிரசில் மாறுதல் வேண்டுவோருக்கு ஏற்பட்ட தோல்வியானது தமிழ்நாட்டிலிருந்து சென்ற திரு.எஸ். சீனிவாச ஐயங்கார் குழுவினருக்குப் பெருத்த ஏமாற்றத்தை அளித்தது. சென்னை மாகாணத்தில் அப்போது ஆட்சிப் பொறுப்பிலிருந்த ஜஸ்டிஸ் கட்சியைத் தேர்தல் களத்திலே வீழ்த்தி வெற்றி காண வேண்டுமென்ற குறிக்கோளுடன் திரு.எஸ். சீனிவாச ஐயங்கார் மாறுதல் வேண்டுவோர் அணியில் கலந்தார்.

காங்கிரஸ் தலைவர் விலகினார்!

திரு. ஐயங்கார், அந்நாளில் மிகவும் கௌரவமான பதவியாகக் கருதப்பட்ட அட்வகேட் ஜெனரல் பதவியை ராஜினாமா செய்துவிட்டு, 'சி.ஐ.ஈ' என்னும் பட்டத்தையும் துறந்துவிட்டு, ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்தார். இந்தத் தியாகம் காரணமாக தேசமக்களால் அவர் பெரிதும் மதிக்கப்பட்டார். ஆயினும், காந்திஜியின் ஆன்ம பலத்துக்குப் பிரதிநிதியாக நின்ற ராஜாஜிக்குத்தான் தமிழ்நாட்டுக் காங்கிரசிலே பேராதரவு இருந்தது.

கயா காங்கிரஸ் முடிந்து பிரதிநிதிகள் தத்தம் ஊர்களுக்குப் புறப்படுவதற்கு முன்பே, தேசபந்து சித்தரஞ்சன தாஸ் காங்கிரஸ் தலைமைப் பதவியை ராஜிநாமா செய்தார். ஆனால், அது காரியக் கமிட்டியால் உடனடியாக ஏற்கப்படவில்லை. பண்டித ஜவகர்லால் நேருவும், லாலா லஜபதிராயும் காங்கிரஸ்காரர்

களிடையே ஒருமைப்பாட்டை உருவாக்கப்பாடுபட்டனர். அந்த முயற்சியின் முடிவு தெரியும்வரை தாசரின் ராஜிநாமா பற்றிய முடிவு ஒத்தி வைக்கப்பட்டது.

1923 பிப்ரவரியில் அலகாபாத்தில் அ.இ.கா. கமிட்டி கூட்டப்பட்டது. இதற்கு முன்பே ஜனவரியில் கூடிய கூட்டத்தில் ஏப்ரல் 30-க்குள் காங்கிரஸ் நிதிக்கு ரூ. 30 லட்சம் சேர்ப்பதென்றும், காங்கிரஸ் தொண்டர்களின் எண்ணிக்கையை 50 ஆயிரத்துக்கு உயர்த்துவதென்றும் முடிவாகி யிருந்தது. தொண்டர்களைத் திரட்டுவதென்ற முடிவு அரசுக்குக் கவலையைத் தந்தது. அதனால், இளைஞர்கள் காங்கிரஸ் படையில் சேர்ந்து விடுவதைத் தவிர்க்கும் உள்நோக்குடன் இராணுவத்தில் இந்திய இளைஞர் களைச் சேர்த்து அவர்களுக்குப் பயிற்சியளிக்கத் திட்டம் வகுத்து, அதை உடனடியாக அமுல் நடத்துவதில் அரசு அக்கறை காட்டியது.

திரிசங்கு நிலை

மே 25, 26, 27 தேதிகளில் பம்பாயில் கூடிய அ.இ.கா.க. கூட்டத்தில் சட்டசபைப் பிரவேசத்தை காங்கிரஸ்காரர்களோ, கமிட்டிகளோ கண்டிக்கக் கூடாதென்று மாறுதல் வேண்டுவோர் தரப்பிலிருந்து கொண்டு வரப்பட்ட தீர்மானம் நிறைவேறி விட்டது. மாறுதல் வேண்டாதாரில் ஒரு சாரார் ஆதரவளித்ததன் பேரிலேயே அத்தீர்மானம் நிறைவேறியது.

இதனை எதிர்த்து ராஜாஜி, வல்லபபாய் படேல், ஜம்னா லால் பஜாஜ், ராசேந்திர பிரசாத், கங்காதரராவ் தேஷ்பாண்டே, பிரிஜிகிஷோர் பிரசாத் ஆகிய அறுவரும் காரியக் கமிட்டியிலிருந்து ராஜிநாமா செய்து விட்டனர். இவர்களுக்கு மனமாற்றத்தை ஏற்படுத்த பண்டித ஜவஹர்லால் நேரு எடுத்துக் கொண்ட முயற்சி தோல்வியுற்றது.

சூன் திங்களில் திரும்பவும் பம்பாயில் கூடிய அ.இ.கா. கமிட்டி தேசபந்து தாசரின் ராஜிநாமாக் கடிதத்தை ஏற்றுக் கொண்டதுடன், ராஜாஜி உள்ளிட்ட அறுவர் காரியக் கமிட்டியிலிருந்து விலகிக் கொள்ளுவதாக அனுப்பியிருந்த நாஜிநாமாக் கடிதங்களையும் ஏற்றுக் கொண்டது.

சட்டசபைப் பிரவேசத்திற்கு ஆதரவாகவோ எதிராகவோ நடத்தக் கூடாதென்று அ.இ.கா. கமிட்டியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு எதிராக நடந்து கொண்டதாகத் தமிழ் நாடு

காங்கிரஸ் கமிட்டி மீது குற்றஞ்சாட்டி, அதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஜவகர்லால் நேரு ஒரு தீர்மானங் கொண்டு வந்தார். வாக்கெடுப்பில் அது தோல்வியுற்றது. இதனால் அதிருப்தியுற்று, ஜவகர்லால்ஜியும் அவருடைய ஆதரவாளர்களும் காங்கிரஸ் காரியக் கமிட்டிலிருந்து விலகிக் கொண்டனர். ராஜிநாமாக்களால் ஏற்பட்ட காலியிடங்களைப் பூர்த்தி செய்து புதிய காரியக் கமிட்டி அமைக்கப்பட்டது.

காங்கிரஸ் தலைமைப் பதவியைத் துறந்த தேசபந்து தாஸ் சுயராஜ்யக் கட்சியைத் தொடங்கினார். அதன் தலைவராக சித்தரஞ்சன் தாசும், பொதுச் செயலாளராக பண்டித மோதிலால் நேருவும் பொறுப்பேற்றனர்.

சமாதான காங்கிரஸ்

கயா காங்கிரசிலே, அடுத்த மகா சபையை சென்னை மாகாணத்திலுள்ள ஆந்திரப் பிரதேசமான காகினாடாவில் கூட்டுவதென்று முடிவு செய்யப்பட்டது. ஆனால், அதற்குப்பின் தலைவர்களிடையில் பூசல் தோன்றியதால், அவர்களை சமரசப்படுத்தி, காந்திஜி விட்டுப் போன நிலைக்குக் காங்கிரசைக் கொண்டு வருவதற்கான சமரச ஏற்பாடுகள் பற்றி ஆராயப் புது டில்லியில் விசேஷ காங்கிரஸ் மகாசபை யொன்று செப்டம்பரில் கூட்டப்பட்டது.

அப்போதுதான் சிறையிலிருந்து விடுதலையான லாலா லஜபதியும் மௌலானா முகமதலியும் டில்லி காங்கிரசில் கலந்து கொண்டனர். அவர்கள் தக்க மரியாதை காட்டப்பட்டு வரவேற்கப்பட்டனர். இவர்கள் கலந்து கொண்டதால் டில்லி காங்கிரஸ் தனிச் சிறப்பைப் பெற்று விட்டது.

மாறுதல் வேண்டுவோர், வேண்டாதார் ஆகிய இரு தரப்பாராலும் மதிக்கப்பட்டவரான மௌலானா அபுல் கலாம் ஆசாத் டில்லி காங்கிரஸ் மகாசபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். ஆசாத் அவர்கள் அப்போதுதான் சிறையிலிருந்து விடுதலையாகியிருந்தார்.

டில்லி விசேஷ காங்கிரசில் மாறுதல் வேண்டுவோருக்கும் வேண்டாதாருக்குமிடையில் ஒரு சமரசம் ஏற்பட்டது. ஆம்; விரும்புவோர் சட்டசபைத் தேர்தலில் போட்டியிடவும், வாக்குச்சாவடிகளுக்குச் சென்று வாக்களிக்கவும் அனுமதிப்ப தென்று டில்லி காங்கிரஸ் தீர்மானித்தது. அதே நேரத்தில்

நிர்மாணத் திட்டத்தில் முன்னைவிடவும் அதிக ஆர்வம் காட்ட வேண்டுமென்பதும் வற்புறுத்தப்பட்டது. தனி நபர் சட்ட மறுப்பு இயக்கம் தடை செய்யப்படாததால், அதனை நடத்துவதற்கு ஓர் தனிக்குழு நியமிக்கப்பட்டது.

சுயராஜ்யக் கட்சியைச் சேர்ந்தவர்கள் தனியே கூடி தங்கள் கொள்கைகளையும் வேலைத் திட்டத்தையும் வெளியிட்டனர். அந்த ஆண்டின் இறுதியில் நடைபெறவிருந்த இந்திய சட்டசபைத் தேர்தலிலும், மாகாண சட்ட சபைகளுக்கான தேர்தல்களிலும் போட்டியிடுவதெனத் தீர்மானித்தனர். வங்க மாகாண சட்டசபையைத் தாம் கைப்பற்றிவிடுவதாகத் தேசபந்து உறுதி கூறினார். டில்லி சட்டசபையைக் கைப்பற்றும் பொறுப்பு பண்டித மோதிலாலிடம் விடப்பட்டது. பம்பாய் சட்டசபையைக் கைப்பற்றும் பொறுப்பு மகாராஷ்டிர மாகாண காங்கிரஸ் கமிட்டியிடம் விடப்பட்டது.

சென்னை மாகாணந்தான் சுயராஜ்யக் கட்சிக்குச் சோதனைக் களமாக விளங்கியது. ஆம்; இங்கு 1920-இல் நடந்த சட்டசபைத் தேர்தலிலேயே ஜஸ்டிஸ் கட்சி சட்டசபையைக் கைப்பற்றி, ஆட்சிப் பொறுப்பையும் ஏற்று நடத்திக் கொண்டிருந்தது.

தேர்தல் களத்திலே சுயராஜ்யக் கட்சி

மத்திய சட்ட சபைக்கும், மாகாண சட்டசபைகளுக்கும் 2 ஆவது பொதுத் தேர்தல் 1923 நவம்பரில் நடைபெறுமென்று அரசு அறிவித்தது. இது, காங்கிரஸ்காரர்களில் பெரும்பாலோருக்கு முன் எப்போதுமில்லாத அளவில் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் ஏற்படுத்தியது.

சுயராஜ்யக் கட்சியின் மூலம் காங்கிரஸ்காரர்களிலே ஒரு சாராரை சட்டசபையில் பிரவேசிக்க அனுமதித்ததால் விடுதலைப் போராட்டப் பாசறையிலே நாளடைவில் பல குழப்பங்கள் வந்தன வென்றாலும், பொது ஜனச் சட்ட மறுப்பு திடீரென நிறுத்தப் பட்டதால் ஏற்பட்ட சோர்விலிருந்து அவர்களை மீட்டது.

சு.க. வின் உற்சாகம்

டில்லியில் கூடிய விசேஷ காங்கிரஸ் சட்டசபை பகிஷ் காரத்தைக் கைவிட்டு, காங்கிரஸ்காரர்களில் விரும்புவோர் தேர்தலில் போட்டியிடவும், வாக்களிக்கவும் அனுமதி யளித்த தானது சுயராஜ்யக் கட்சியினருக்கு மிகுந்த உற்சாகத்தை யளித்தது.

டில்லி விசேஷ காங்கிரசில் ராஜாஜியும் சேலம் சி.விஜயராக வாச்சாரியாரும் கலந்து கொள்ளவில்லை. சட்டசபைப் பகிஷ் காரத்தில் அதுவரை உறுதி காட்டி வந்த மௌலானா முகமதலி மனமாற்ற மடைந்து விட்டார். சர்தார் வல்லபபாய் கூட மௌலானாவால் மாற்றப்பட்டு விட்டார்.

பண்டித மோதிலால் நேரு, தேசபந்து தாஸ் ஆகிய இருபெருந்தலைவர்களின் செல்வாக்கு கொடிகட்டிப் பறந்தது. சட்டசபைப் பகிஷ்காரத்தைப் பிடிவாதமாக வற்புறுத்தினால், மோதிலால்ஜியும் தேசபந்துவும் காங்கிரசை விட்டே வெளியேறி விடக் கூடுமென்ற நிலை இருந்தது. இதனை ராஜாஜியே விரும்பவில்லை. இந்தச் சூழ்நிலை காரணமாக, அவர் நடப்பது நடக்கட்டுமென்று கருதி டில்லி விசேஷ காங்கிரசில் கலந்து கொள்ளாமல் விலகி நின்றார். உடல்நலக் குறைவைக் காரணங் காட்டி 'யங் இந்தியா' ஆசிரியர் பொறுப்பை மதுரை ஜார்ஜ் ஜோசப் அவர்களிடம் ஒப்புவித்து விட்டார். இந்நிலையிலும், சட்டசபைப் பகிஷ்காரத்தில் அவருக்கிருந்த உறுதி, தளரவில்லை. 'வோட்டளிக்காதீர்!' என்னுந் தலைப்பிட்டு 'யங் இந்தியா' வில் ஒரு கட்டுரை எழுதினார்.

டில்லி விசேஷ காங்கிரசில் ராஜாஜி கலந்து கொள்ளாததும் காங்கிரஸ் நிர்வாகப் பொறுப்பிலிருந்து அவர் விலகிக் கொண்ட தும் மாறுதல் வேண்டாதாருக்கு அவர்பால் அதிருப்தியை ஏற்படுத்தியது.

ஈ.வே. ராவின் எதிர்ப்பு

தமிழ் நாட்டில் மாறுதல் வேண்டாதார் அணியிலிருந்த திரு.ஈ.வே. ராமசாமியாரும், திரு.எஸ். இராமநாதனும் சட்டசபைத் தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்று மக்களைக் கேட்டுக் கொள்வதற்கான இயக்கமொன்றைத் தொடங்கினர். அதற்காக, பகிஷ்காரக் கமிட்டியையும் நிறுவினர். ஆனால், தங்கள் முயற்சியில் அவர்கள் வெற்றி பெறவில்லை.

சட்டமன்றத் தேர்தல் காரணமாக தமிழ்நாட்டில் மாறுதல் வேண்டாதவரிடையிலும் பிளவு ஏற்பட்டது. ஆம்; அதுவரை ராஜாஜியைத் தீவிரமாக ஆதரித்து வந்த ஈ.வே. ராமசாமியாரும், இராமநாதனும் அவரிடமிருந்து பிரிந்து நின்றனர். வெகு விரைவில் இவர்கள் காங்கிரசிலிருந்து விலகுவதற்கு இது முன்னோடி நிகழ்ச்சியாகி விட்டது.

நாடெங்கும் நடைபெற்ற தேர்தலிலே மத்திய சட்ட மன்றத்திற்குரிய 155 இடங்களில் சுயராஜ்யக் கட்சியின் சார்பில்

மொத்தம் 48 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்களன்றி, ஜனாப் ஜின்னாவின் தலைமையில் 'சுயேச்சையாளர் அணி என்னும் பெயரில் 24 பேர் மத்திய சட்ட சபையில் இடம் பெற்றனர். சுயராஜ்யக் கட்சியினரும் சுயேச்சை அணியினரும் மத்திய சட்ட சபையில் பரஸ்பரம் ஒத்துழைத்துப் பணிபுரிய உடன்பாடு கண்டனர்.

மத்திய சட்டசபைத் தேர்தலிலே தமிழ் நாட்டில் சுயராஜ்யக் கட்சி வேட்பாளர்களில் இங்குமங்குமாக ஒரு சிலரே தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களில் திரு.ஏ. அரங்கசாமி ஐயங்கார், டாக்டர் ஆர். கே. சண்முகஞ் செட்டியார், திரு.எஸ். சீனிவாச ஐயங்கார் முக்கியமானவராவர். மத்திய சட்ட சபையில் அமைந்த சுயராஜ்யக் கட்சிக்கு பண்டித மோதிலால் நேரு தலைவராகவும், திரு.எஸ். சீனிவாச ஐயங்கார் துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பெற்றனர்.

மாகாண சட்டசபைகளுக்கு நடந்த தேர்தலில் மத்தியப் பிரதேசத்தில் சுயராஜ்யக் கட்சிக்கு நிகரப் பெரும்பான்மை கிடைத்தது. சென்னை மாகாண சட்டசபைத் தேர்தலிலே சுயராஜ்யக் கட்சியின் சார்பில் மிகச் சிலரே தேர்ந்தெடுக்கப் பெற்றனர். பெரும்பாலான தொகுதிகளில் ஜஸ்டிஸ் கட்சியே வெற்றி பெற்று இரண்டாவது முறையாகவும் அக்கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது.

வங்காளத்தில் சட்டசபையில் இடம் பெற்ற கட்சிகளிலே முதல் கட்சியாகும் வாய்ப்பினை சுயராஜ்யக் கட்சி பெற்றது. தான் எதிர்பார்த்தப்படி பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்ற அக்கட்சியால் முடியவில்லை.

பஞ்சாபிலும் சென்னை மாகாணத்தைப் போலவே சொற்பத் தொகுதிகளில் வெற்றி பெற்று, சட்ட சபையில் சுயராஜ்யக் கட்சி இடம் பெற்றது.

பம்பாய், உத்தரப் பிரதேசம், அஸ்ஸாம் ஆகிய மாகாணங்களில் கணிசமான எண்ணிக்கையில் சுயராஜ்யக் கட்சி வெற்றி பெற்று, அம்மாநிலங்களின் சட்டசபைகளில் பலம் வாய்ந்த எதிர்க்கட்சியாக அமர்ந்தது.

பீகார், ஒரிசா மாநிலங்களிலே சுயராஜ்யக் கட்சி இடம் பெறவில்லையென்றாலும், தேசியவாதிகள் கணிசமான அளவில் வெற்றிபெற்று, சட்டசபைகளில் பிரவேசித்தனர்.

பொதுவாக, போதிய அவகாசமில்லாத நிலையில் பொதுத் தேர்தலில் போட்டியிட்ட சுயராஜ்யக் கட்சியானது, மாறுதல்

வேண்டா காங்கிரஸ்காரர்களின் எதிர்ப்பையும் சமாளித்து போதிய அளவுவெற்றி கண்டதென்றே சொல்லவேண்டும்.

மாறுதல் வேண்டா காங்கிரஸ்காரர்கள் ஒத்துழைத்திருந்தால் அல்லது வெளிப்படையாக எதிர்ப்புக் காட்டாதிருந்தால், சட்டசபைத் தேர்தலில் தமிழ் நாட்டிலும் சுயராஜ்யக் கட்சி வெற்றி பெற்றிருக்கக் கூடும். தமிழ்நாடு காந்தியத்தில் காட்டிய உறுதி ஜஸ்டிஸ் கட்சியின் வெற்றிக்கு வழி வகுத்து விட்டது.

நாகபுரி கொடிப் போர்!

நாட்டில் மத்திய - மாநில சட்ட மன்றங்களுக்கான தேர்தல்கள் நடைபெறுவதற்குச் சில மாதங்களுக்கு முன்பு - அதாவது, மே மாதத்தில் நாகபுரியில் தேசியக் கொடி போராட்டம் நடைபெற்றது. அரசு, நாகபுரி நகரசபைக் கட்டிடத்தின் மீது தேசியக் கொடியைப் பறக்கவிடக் கூடாதென்று தடைவிதித்ததன் காரணமாக, அந்நகரில் தொடர்ந்து 'கொடிப் போர்' நடந்தது. தடையை மீறித் தேசியக் கொடிகளை ஏந்தி காங்கிரஸ்காரர்கள் அடுத்தடுத்து ஊர்வலம் நடத்தி, பல்லாயிரக் கணக்கில் சிறைப் பட்டனர்.

நாகபுரி நகர அளவில் தொடங்கிய இப்போராட்டம் பின்னர் தேசந்தழுவிய முறையில் விரிவடைந்தது. தமிழ் நாட்டிலிருந்தும் தேச பக்தர்கள் அணிஅணியாகச் சென்று, நாகபுரிக்கொடிப் போரில் கலந்து கொண்டு சிறைத் தண்டனை பெற்று மத்தியப் பிரதேசச் சிறைகளிலே அடைபட்டுத் துன்புற்றனர்.

இப்போராட்டத்தின்போது 'யங் இந்தியா' பத்திரிகையில் ராஜாஜி 'கொடி அழைக்கிறது!' என்னுந் தலைப்பிட்டு எழுதிய உணர்ச்சி மிக்க ஒரு தலையங்கம் அப்போராட்டம் அனைத்திந்திய ரீதியில் நடப்பதற்குத் தூண்டுதலாக அமைந்தது.

தமிழ் நாட்டிலிருந்து நாகபுரி சென்று தடையை மீறிச் சிறைப்பட்டவர்கள் ஒரு நூற்றுக்கும் மேற்பட்டபவர்களாவர். அவர்களிலே திரு.என்.எஸ். வரதாச்சாரியார் முக்கியமான வராவார். நாகபுரி கொடிப் போராட்டத்தை வைத்து 'தேசியக் கொடி' என்னும் பெயரில் பிரபல தமிழ் நாடகாசிரியரும் சிறந்த தேசபக்தருமான தெ.பொ. கிருஷ்ணசாமிப் பாவலரவர்கள் நாடகமொன்றைத் தயாரித்து, அதனைத் தமிழ் நாடெங்கும் நடத்தி நாட்டில் விடுதலை ஆர்வத்தை வளர்த்தார்.

தமிழ் நாட்டிற்கு வெளியே சென்னைக்கு ஆயிரம் மைல்களுக்கப்பாலுள்ள நாகபுரியில் நடைபெற்ற போராட்ட

மென்றாலும், இந்தியர் என்னும் தேசிய உணர்ச்சியாலும் உந்தப்பட்டு தமிழ்நாட்டுத் தேச பக்தர்களும் கலந்து கொண்டு அயல் மாகாணச் சிறைகளில் அடைபட்டனர். இது, அந்நாளில் தமிழர் கொண்டிருந்த தேசிய உணர்ச்சிக்கு மிகச் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

நாகபுரி கொடிப்போரில் மத்திய பிரதேசத் தலைவரான திரு. ஜம்னாலால் பஜாஜ் தலைமை வகித்தார். அவர் கைது செய்யப்பட்டு, 18 மாதக் கடுங்காவல் தண்டனையும் 3000 ரூபாய் அபராதமும் விதிக்கப் பெற்றார். அபராதம் செலுத்த பஜாஜ் மறுத்ததால் அவரது மோட்டார் கார் ஜப்தி செய்யப்பட்டு ஏலத்தில் விடப்பட்டது. நாகபுரியில் எவரும் ஏலத்தில் காரை எடுக்க முன் வராததால், குஜராத்திலுள்ள கத்தியவாரில் கொண்டு போய் விற்க வேண்டிய நிலை அரசுக்கு ஏற்பட்டது.

பஜாஜ் கைதியான பின்னர் சர்தார் வல்லபாய் படேல் நாகபுரி கொடிப் போரில் தலைமையேற்றார். அவர் நாகபுரி யிலேயே தங்கி போராட்டத்தை நடத்தினார். இறுதியில், மத்திய மாகாண அரசு சர்தார் வல்லபாய், வித்தல்பாய் ஆகியோருடன் பேசி, சமரசங் கண்டதன் பேரில் கொடிப்போர் வெற்றிகரமாக முடிவுற்றது.

1924 ஜனவரி இரண்டாவது வாரத்தில் தேசத்தை அதிர்ச்சியிலாழ்த்தும் செய்தி ஒன்றை அரசு வெளியிட்டது. அதையடுத்து, தேச மக்களுக்கு மகிழ்ச்சிதரும் செய்தி ஒன்றையும் அரசு அறிவித்தது. முன்னது, காந்திஜிக்கு குடல் அனுபந்தத்திற் காக அறுவை சிகிச்சை நடத்தப்பட்டது என்பதாகும். பின்னது, காந்திஜி தமது உடல் நலக் குறைவு காரணமாக சிறையிலிருந்து நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட்டிருக்கிறார் என்பதாகும்.

''மகாத்மாஜிக்கு அறுவை சிகிச்சை நடத்தப் பெற்றபோது திடீரென மின்சாரம் தடைப்பட்டு விட்டதால் பாட்டரி விளக்கு வெளிச்சத்தில் அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடைபெற்று முடிந்தது'' என்று தேச மக்களுக்கு அரசு தகவல் தந்தது. அந்நாளில் குடல் அனுபந்தத்திற்கான அறுவை சிகிச்சை உயிருக்கு அபாயம் விளைவிப்பதாக இருந்தது.

ஜனவரி 27-ஆம் தேதி ராஜாஜி சிகிச்சை பெறும் நோயாளியின் நிலையில் எரவாடா சிறையின் கைதியாக இருந்த காந்திஜியைச் சந்தித்தார். மகாதேவ தேசாயும் உடனிருந்தார். பிப்ரவரி 5-ஆம் தேதி காந்திஜி நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட்டார்.

புதுப்பாளையத்தில் காந்தி ஆசிரமம்

ஆறாண்டு தண்டனைக் காலத்திலே இரண்டாண்டுகள் எரவாடா சிறையிலிருந்தபின் உடல்நலக் குறைவு காரணமாக விடுதலை செய்யப்பட்ட காந்தியடிகளுக்கு ஒரு இடைக்கால ஓய்வு அவசியமாயிற்று. அதனால், அவர் பம்பாய்க் கடற் கரையிலுள்ள 'ஜுஹு' என்னும் இடத்திற்குச் சென்று அங்கு தங்கி ஓய்வு பெறலானார்.

காந்திஜி சிறையிலிருந்தபோது இந்திய அரசு ரௌலட் சட்டத்தை ரத்து செய்துவிட்டதாக அறிவித்தது. இது, காந்திஜியின் சத்தியாக்கிரகத்துக்குக் கிடைத்த மகத்தான வெற்றியாகும்.

காந்தியடிகள் சிறையிலிருந்த இரண்டாண்டு காலத்திலே இந்திய தேசியக் காங்கிரசில் கட்டுப்பாடு குலைந்து போய்விட்டது. ஆனால், காங்கிரஸ் செயலற்றுப் போய் விடவில்லை. மாதத்திற்கொருமுறை செயற்குழு கூடிவந்தது. இரண்டு மாதத்திற்கொருமுறை அ.இ.கா. கமிட்டி கூடிக் கூடி அரசியல் நிலைமை பற்றி விவாதித்து வந்தது. விசேஷ காங்கிரஸ் மகாசபைகூடக் கூடியது. ஆக்கவழிப் பணிகளும் ஊக்குவிக்கப் பட்டன. ஆயினும், காங்கிரசானது தன்னையறியாமலே பழைய மிதவாதிகள் காலத்து நிலைக்குக் கொஞ்சம் கொஞ்சமாகச் சென்று கொண்டிருந்தது.

தேசபந்துவும் மோதிலாலும் தலைமை தாங்கி நடத்தி வந்த சுயராஜ்யக் கட்சியானது, ஏற்றேறக் குறைய கட்சிக்குள் கட்சியாகச் செயல்பட்டதோடு, காங்கிரசின் கட்டுக்கோப்பைக் குலைக்கும் நிலையிலும் செயல்படலானது. மாறுதல் வேண்டாதாருக்கு ராஜாஜி வழி காட்டி வந்தாரென்றாலும், தேசபந்து, மோதிலால் ஆகிய பெருந்தலைவர்களின் செல்வாக்குக்கு எதிராகச் செயல் படுவது அவருக்கு எளிதாக இல்லை. எப்படியோ சமாளித்துக் கொண்டு வந்தார் என்றுதான் சொல்ல வேண்டும்.

காங்கிரசில் ஏற்பட்டிருந்த இந்த அவல நிலையானது அரசுக்கு மகிழ்ச்சி தருவதாகவே இருந்தது. பொதுவாக, காங்கிரசுக்குள் ஏற்பட்டிருந்த குழப்பம் காரணமாக தேசிய இந்தியாவின் எதிர்காலம் நம்பிக்கை தரக் கூடியதாக இருக்கவில்லை.

இந்நிலையில் காந்திஜி விடுதலையடைந்து சிறையிலிருந்து வெளியில் வந்ததால், பொதுவாகக் காங்கிரஸ்காரர்களுக்கு - குறிப்பாக, மாறுதல் வேண்டாதாருக்கு மகிழ்ச்சி ஏற்படலானது. சுயராஜ்யக் கட்சித் தலைவர்களோ, இனி காந்திஜியின் செல்வாக்கைச் சமாளித்தாக வேண்டுமே என்ற கவலையில் ஆழ்ந்தனர். ஆனால், சட்டசபைப் பிரவேசம் வேண்டுமா, வேண்டாமா? - என்ற விவாத நிலைக்கு முற்றுப்புள்ளி விழுந்து விட்டது. காங்கிரசின் அரைகுறை அனுமதியோடு சுயராஜ்யக் கட்சியினர் சட்ட சபைக்குள் பிரவேசித்து விட்டனரல்லவா!

இப்போது காங்கிரஸ் முன்பு இருந்த ஒரே பிரச்னை, 'சுதந்திரப் போராட்டத்தை சட்டசபைக்கு உள்ளே எப்படி நடத்துவது, வெளியே எப்படி நடத்துவது?' என்பதை வரையறுப்பதுதான். இதுபற்றி விவாதிக்க சுயராஜ்யக் கட்சித் தலைவர்கள் ஜுஹு சென்று காந்தியடிகளைச் சந்தித்தனர்.

வங்காளம், மத்திய பிரதேசம், மகாராஷ்டிரம் ஆகிய மூன்று மாநிலங்களும் அநேகமாக சுயராஜ்யக் கட்சியின் செல்வாக்கின் கீழ் சென்று விட்டன. தமிழ்நாடு ராஜாஜியின் தலைமையைப் பெற்று காந்திஜியின் பாதையிலே உறுதியாக நடைபோட்டுக் கொண்டிருந்தது. இந்நிலையில்தான் தேசபந்து தாசரும், மோதிலால் நேருவும் காந்திஜியைச் சந்தித்துப் பேசினர். அவர்களிடையே கருத்தொற்றுமை ஏற்படவில்லை. காந்திஜி சட்டசபைப் பிரவேசத்தை மனமுவந்து ஏற்க இயலாதவரானார். தேசபந்துவும் மோதிலாலும் சட்டசபைப் பகிஷ்காரத்தோடு கூடிய ஒத்துழையாமைக்குத் திரும்பி வர விரும்பாதவராயினர். இருதரப்பினரும் பரஸ்பரம் அன்பும் மரியாதையும் காட்டி விவாதித்தனரென்றாலும், ஒருமித்த முடிவுக்கு வர இயலாதவராயினர். காந்திஜி, ஒத்துழையாமைக்கும் சட்டசபைப் பிரவேசத்துக்கும் கொஞ்சங்கூடத் தொடர்பு கிடையாதென்றும், ஒன்றுக்கொன்று நெடுந் தொலைவிலிருக்கின்றனவென்றும் உறுதியாகக் கூறிவிட்டார். ஆயினும், சுயராஜ்யக் கட்சியினர் சட்டசபைக்குள் பிரவேசித்துவிட்டனராதலால், அங்கு அவர்கள்

தொடர்ந்து செயல்பட அனுமதிக்கலாமென்று அறிக்கை விட்டார். அவர் தமது அறிக்கையில் கூறியதாவது:

''சுயராஜ்யக் கட்சியினர் என்ன செய்கிறார்கள் அல்லது என்ன சொல்லுகிறார்கள் என்பதைப் பற்றி மற்ற காங்கிரஸ்காரர்கள் (மாறுதல் வேண்டாதார்) கவலைப்படத் தேவையில்லை. அவர்கள் தங்கள் முழு அறிவையும் ஆற்றலையும் செலுத்தி நிர்மாணத் திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம் தேசத்திடமும் காங்கிரசிடமும் தங்களுக்குள்ள விசுவாசத்தை நிரூபிக்க வேண்டும் என்று ஆலோசனை கூறுகிறேன்.''

சுயராஜ்யக் கட்சித் தலைவர்களும் தங்கள் நிலையை விளக்கி அறிக்கை விடுத்தனர். அதிலே, தங்கள் பார்லிமெண்டரிப் பணிக்கு காந்திஜியின் ஆதரவைப் பெற இயலாததை ஒப்புக் கொண்டனர். காந்திஜி விடுதலையாவதற்கு முன்பிருந்த குழப்பநிலை நீடித்ததென்றே சொல்ல வேண்டும்.

சிறையிலிருந்து விடுதலையான இரண்டு தினங்களுக்குள் காந்திஜி 'யங் இந்தியா', 'நவஜீவன்' பத்திரிகைகளின் ஆசிரியப் பொறுப்பைத் திரும்பவும் ஏற்றுக் கொண்டார். அடிகள் சிறைப்பட்டபின் முதலில் ராஜாஜியும், பின்னர் மதுரை ஜார்ஜ் ஜோசப்பும் அடுத்தடுத்து ஆசிரியர் பொறுப்பை நிர்வகித்து வந்தனர் என்பது நினைவில் கொள்ளத் தக்கதாகும்.

இந்நிலையில், சூன் 27 , 28 தேதிகளில் அகமதாபாத்தில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூடியது. இரண்டரை ஆண்டுகளுக்குப் பின் காந்திஜி முதன் முதலாக காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

இக்கூட்டத்திலே காந்திஜி நூல் சந்தா முறையை அறிமுகப்படுத்தினார். ஆம்; காங்கிரசில் நான்கணா சந்தா கொடுத்து அங்கத்தினராகச் சேர்வதற்குப் பதிலாக. தானே நூற்ற 2000 கஜ அளவுள்ள ஒரே மாதிரியான நூலை சந்தாவாகக் கொடுத்து அங்கத்தினராகும் புதிய திட்டத்தைப் புகுத்தினார். இதற்குக் கடுமையான எதிர்ப்பிருந்தது - குறிப்பாக, தாசும் மோதிலாலும் அவர்களைப் பின்பற்றுவோரும் எதிர்த்தனர். ஆயினும், முடிவில் அடிகளின் ஆலோசனை அ.இ.கா.க. வில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. 1925 செப்டம்பரில் இது கட்டாயமில்லை என்று ஆனது.

காந்திஜி அழுதார்!

கடுமையாக எதிர்ப்புப் கிடையிலும் சட்டசபை பகிஷ்காரத்தோடு கூடிய பழைய ஒத்துழையாமைத் திட்டம் அ.இ.கா. கமிட்டியில் திரும்பவும் தீர்மானத்தின் மூலம் வலியுறுத்தப்பட்டது. எர்னஸ் டே என்ற ஆங்கிலேயரை கோபிநாத் என்ற புரட்சிக்காரர் கொலை செய்ததைக் கண்டிக்கும் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது. அதற்கு எதிராக 70-க்கு மேற்பட்டவர்கள் வாக்களித்தனர். இது காந்திஜியின் மனதுக்குத் துயரத்தைத் தந்தது. அவர் இதுபற்றிப் பேசியபோது கண்ணீர் ஆறாகப்பெருக அழுது விட்டார். அ.இ.கா.க. உறுப்பினர்களைப் பார்த்து, ''அகிம்சைக்கு நீங்கள் தரும் மதிப்பு இவ்வளவுதானா?'' என்று விம்முதலோடு கேட்டார்.

செப்டம்பரில் நாட்டின் பல பகுதிகளில் இந்து - முஸ்லிம் களிடையே வகுப்புக் கலவரங்கள் ஏற்பட்டு ஏராளமானவர்கள் உயிரிழக்கலாயினர் - குறிப்பாக டில்லி, அலகாபாத், கோஹத், இலட்சுமணபுரி, நாகபுரி, ஜபல்பூர், குல்பர்க்கா ஆகிய இடங்களில் கலவரம் பயங்கர நிலையை அடைந்தது. கோஹத்தில் உயிர்ச்சேதம் அதிகமாக இருந்தது.

இதனால் மகாத்மாஜி வேதனையுற்றார். கோஹத் சம்பவத்தைக் குறிப்பிட்டுச் சொல்லி, அதற்குப் பரிகாரமாக 21 நாள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டார். 'நான் யாரையும் கண்டிக்கவில்லை. என்னை நானே கண்டித்துக் கொள்ளுகிறேன்' என்று அடிகள் கூறினார். செப் 18-ல் மௌலானா முகமதலி வீட்டில் உண்ணாவிரதத்தைத் தொடங்கினார். அடிகளாரின் முடிவு குறித்துக் கடுமையான கண்டனம் தெரிவித்து தேவதாஸ் காந்திக்கு ராஜாஜி கடிதம் எழுதினார். பொதுவாக, கிலாபத் இயக்கத்தின் போது நாட்டில் இந்து - முஸ்லிம்களிடையே நிலவிய ஒற்றுமை அரசினரால் திட்டமிட்டுக் குலைக்கப்பட்டு வந்தது. ஒத்துழையாமையும் கிலாபத் கிளர்ச்சியும் நிறுத்தப்பட்டதனால் ஏற்பட்ட தீய விளைவுகளில் இதுவும் ஒன்றாகும்.

சமரசம்

காந்திஜி உண்ணாவிரதமிருந்த காலத்திலே இந்து - முஸ்லிம் களிடையில் ஒற்றுமையை உருவாக்குவதற்கான திட்டம் வகுக்க சர்வகட்சித் தலைவர்களின் ஒற்றுமை மாநாடு டில்லியில் நடை

பெற்றது. அதன் விளைவாக, இந்து - முஸ்லிம் தலைவர்களின் கூட்டறிக்கை வெளியானது. காந்திஜி தமது 22 நாள் உண்ணா விரதத்தை அக்டோபர் 8 - இல் வெற்றிகரமாக முடித்துவைத்தார். அன்று அடிகளின் உயிரைக் காத்த இறையருளுக்கு நன்றி செலுத்தும் வகையில் தேசமெங்கும் பிரார்த்தனை நடந்தது.

நவம்பர் 23,24 -இல் அ.இ.கா. கமிட்டி கூடியது. அதிலே சுயராஜ்யக் கட்சியினருடன் காந்திஜி சமரசம் செய்து கொண்டார். ஆம். சட்டசபையில் சுயராஜ்யக் கட்சியினர் காங்கிரஸ் சார்பிலேயே செயல்பட அனுமதிக்கலாம் என்று காந்திஜி கூறினார். காந்திஜி தாஸ் நேரு ஆகிய முப்பெருந் தலைவர் களிடையில் ஒரு சமரச உடன்படிக்கை ஏற்பட்டது. காந்திஜியின் இந்த இணக்கத்திற்கு விலையாக சுயராஜ்யக் கட்சியினர், சட்டசபைப் பகிஷ்காரம் நீங்கலாக உள்ள ஒத்துழையாமைத் திட்டத்தை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டனர். இந்து - முஸ்லிம் ஒற்றுமை தீண்டாமை விலக்கு கதர் அபிவிருத்தி, அன்னியத் துணி பகிஷ்காரம் மதுவிலககு ஆகியவை ஒத்துழையாமைத் திட்டத்திலுள்ளவையாகும்.

'தலைவர்களுக்கெல்லாம் தலைவர் காந்தி'

காந்திஜியின் மனமாற்றம் ராஜாஜிக்குப் பிடிக்கவில்லை யென்றாலும், 'என் குருநாதனுக்கு கட்டுப்படுகிறேன்' என்று கூறிவிட்டார். டிசம்பர் கடைசி வாரத்தில் 39-ஆவது காங்கிரஸ் மகாசபை கர்நாடக மாநிலத்திலுள்ள பெல்காம் நகரில் கூடியது. இதன் தலைமைப் பொறுப்பைக் காந்திஜி ஏற்றார். அந்நாளில் தேசத் தலைவர்கள் ஏற்கத்தக்க ஒரே பெரும் பதவியாக இருந்த காங்கிரஸ் தலைமைப் பதவியை காந்திஜி முதன் முறையாக இப்போதுதான் ஏற்றார். இதுவே கடைசியானதாகவும் இருந்தது. இதுபற்றி ஜவகர்லால்ஜி தமது சுயசரிதையில் கூறுவது வருமாறு:

> ''பெல்காமில் காந்திஜி தலைமைப் பொறுப்பை ஏற்றார். இந்தப் பதவி அவருடைய தகுதிக்குக் குறைந்ததேயாகும். ஏனெனில், அவர் பல ஆண்டுகளாகத் தலைவருக்கும் உயர்ந்த தலைவராக இருந்து வருகிறார்.''

காந்திஜியின் தலைமையுரை வழக்கத்திற்கு மாறாக மிகவும் சுருக்கமானதாக இருந்தது. ராஜ்யங்களை மொழிவாரி பிரிக்க வேண்டியதன் அவசியத்தை காந்திஜி வற்புறுத்தினார். காங்கிரஸ்

காரர்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையிலே ஆங்கிலத்தின் உபயோகத்தைக் குறைத்து, தாய் மொழிக்கு முக்கியத்துவமளிக்க வேண்டுமென்றும் அவர் கூறினார்.

பெல்காம் காங்கிரசிலே, சுயராஜ்யக் கட்சியினரின் சட்டசபைப் பிரவேசத்தை அங்கீகரிக்கும் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. இது, 'காந்திஜியின் சரணாகதி' என்றும், 'சுயராஜ்யக் கட்சிக்குக் கிடைத்த வெற்றி'' என்றும் சிலரால் வருணிக்கப்பட்டது. இதனால், இந்திய தேசிய அரசியலில் இரண்டாண்டு காலம் சுயராஜ்யக் கட்சிக்கு இருந்து வந்த தனித்தன்மை மறையலானது என்பது மாறுதல் வேண்டாதாரின் வாதமாக இருந்தது.

தாசர் செய்த தானம்

பெல்காம் காங்கிரஸ் கூடுவதற்குச் சில நாட்களுக்கு முன்பு தேசபந்து சித்த ரஞ்சன தாஸ் தமது சொத்து முழுவதையும் தாம் தேசத்துக்கு வழங்கிவிட்டதாக அறிக்கை விட்டார். இது அவருக்கு நாட்டு மக்களிடையிலிருந்த செல்வாக்கை இமயமலையளவுக்கு உயர்த்திவிட்டதெனலாம். அவரது வள்ளன்மையை வாழ்த்தி காந்திஜி அறிக்கை விட்டார்.

சேலம் மாவட்டம் திருச்செங்கோட்டுக்கு அருகிலுள்ள புதுப்பாளையம் கிராமத்திலே அறிஞர் ராஜாஜி 1925 பிப்ரவரியில் காந்தியடிகளின் பெயரால் ஓர் ஆசிரமம் நிறுவினார். அந்த காந்தி ஆசிரமம் கடந்த 55 ஆண்டுக் காலமாக நிலைபெற்றிருந்து வருகிறது.

காந்தி ஆசிரமம் தோன்றுவதற்குச் சரியாக ஓராண்டுக்கு முன்பு கதர் பிரசாரத்தின் பொருட்டு சங்கர்லால் பாங்கர், மாதுர்தாஸ் திரிகம்ஜி, ஜம்னாலால் பஜாஜ், மதன்லால் காந்தி ஆகியோர் தமிழகத்தில் சுற்றுலாச் செய்தனர். அப்போது அவர்கள் சேலம் சென்றபோதுதான் காந்தி ஆசிரமத்திற்கு வித்து விழுந்தது. திரு. ரத்தினசாமி கவுண்டர் தமக்குச் சொந்தமான நான்கு ஏக்கர் நிலத்தைக் கதர்த் தொண்டிற்குப் பயன்படுத்திக் கொள்ளும்படிக் கூறி ராஜாஜியிடம் கொடுத்தார்.

சுமார் 150 வீடுகளைக் கொண்ட அந்தக் குக்கிராமத்தில்தான் நான்கு ஏக்கர் நிலத்தில் ஓராண்டு கழித்து 6-2-25-இல் காந்தி ஆசிரமம் தோன்றியது. தொடக்கத்தில் மண்சுவரும் ஓலைக் கூரையும் கொண்ட ஆறு குடிசைகளையே சொந்தமாகக் கொண்டு ஆசிரமம் அமைந்தது. தம்முடைய 15 வயது மகன்

நரசிம்மனையும், 12 வயது மகள் லட்சுமியையும் காந்தி ஆசிரமத்திலேயே ராஜாஜி வைத்துக் கொண்டார். அகில இந்தியாவிலும் புகழ்மணக்கும் பெருந்தலைவராக விளங்கிய நிலையில் எளிய ஒரு குக்கிராமத்திலே ஆசிரமம் அமைத்துக் கொண்டு, தமது வாழ்விலே ராஜாஜி ஒரு மகத்தான புரட்சியைத் தோற்றுவித்தார்.

இதனால் சபர்மதி ஆசிரமத்தில் வாழ்ந்த காந்தியடிகளுக்கு அடுத்த நிலையில் தேச மக்கள் ராஜாஜிக்கு மதிப்புத் தந்தனர். தென்னாட்டுக் காந்தி' என்றும் அவரை அழைக்கலாயினர். கதர் அபிவிருத்தி, இந்து - முஸ்லிம் ஒற்றுமை, தீண்டாமை விலக்கு, மது விலக்கு ஆகிய காந்தியக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் பணியை ஆசிரமம் மேற்கொண்டது. தாழ்த்தப்பட்டோர் உட்பட பல சாதியினரான பதினேழு பேர் ஆசிரமத்தில் இடம் பெற்றனர்.

வக்கீல் தொழிலைத் துறந்து ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்துவிட்ட மதுரை வாசியான திரு.என். நாராயணன் என்பவர் ஆசிரமத்தின் நிர்வாகியாக நியமிக்கப்பட்டார். ராஜாஜியின் நம்பிக்கைக்குரிய சகாவான திரு.க. சந்தானம் கதர் உற்பத்திக்குப் பொறுப்பேற்றார்.

★-★-★

வைக்கம் சத்தியாக்கிரகம்

1924-இல் எதிர்பாராதவிதமாக திருவிதாங்கூர் சமஸ்தானத்திலே இந்து வைதிகத்திற்கு எதிராக ஒரு போர்க்களம் அமைந்தது. 'வைக்கம்' என்பது, அந்த சமஸ்தானத்திலுள்ள ஒரு சிற்றூர். அந்த ஊரிலுள்ள கோயிலைச் சேர்ந்த நான்கு வீதிகளில் தாழ்த்தப்பட்ட சாதியினர் நடமாடுவதற்கு வைதிகச் சாதியினரான 'நம்பூதிரிமார்கள்' திடீரென எதிர்ப்புக் காட்டினர். சமஸ்தான அரசு வைதிகர்களைச் சார்ந்து நின்றது.

பண்டைக் காலத்தில் தீண்டாமைக் கொடுமை சாத்திர சம்மதமாக இருந்தது. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலே, அதற்கு சட்ட சம்மதமும் கிடைத்தது. இந்து சமுதாயம் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என நால்வருணப் பாகுபாடு கொண்டது. அந்த நால் வருணங்களுக்கு அப்பாற்பட்ட ஐந்தாவது வருணத்தினராகத் தாழ்த்தப்பட்டோர் கருதப்பட்டனர். அதனால், 'பஞ்சமர்' என்றும் அழைக்கப்பட்டனர்.

கேரளத்தில் 'பாராமை'!

இந்தியாவின் ஒரு மாநிலமான கேரளத்திலோ 'தீண்டாமை' யோடு 'அண்டாமை', 'பாராமை' ஆகிய கொடுமைகளும் இந்துக்களால் கடைப்பிடிக்கப்பட்டு வந்தன. இதன் காரணமாகத் தாழ்த்தப்பட்டோர் 'சண்டாளர்' என்னும் கொடிய பெயரையும் பெற்றனர். இவர்கள் வைதிகச் சாதியினரின் பார்வையிலும் படக்கூடாதென்ற கொடிய வழக்கம் கேரளத்திலே நடைமுறையில் இருந்தது.

கேரளத்தின் ஒரு பகுதியான வைக்கத்திலோ இந்தக் கொடுமை இன்னும் விபரீத வடிவத்தை எடுத்தது. வைக்கம் கோயிலைச் சுற்றியுள்ள மாடவீதிகளிலே தாழ்த்தப்பட்ட சாதியினர் நடமாடவும் கூடாதென்று வைதிகச் சாதியினர் முடிவெடுத்து, அதை அமுல் நடத்த முயன்றனர்.

இந்தக் கொடுமையை எதிர்த்து கேரள மாகாண காங்கிரஸ் கமிட்டி ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. தடையை அகற்ற ஆணை பிறப்பிக்குமாறு கேரள காங்கிரஸ் மன்னர் பெருமானுக்கு விண்ணப்பம் அனுப்பியது. மன்னர் பெருமானோ வைதிகர்களைச் சார்ந்து நின்றார்.

வைக்கம் மாட வீதிகளிலே தாழ்த்தப்பட்டோர் செல்வதைத் தடை செய்து சமஸ்தான அரசு ஆணை பிறப்பித்தது. தடையை மீறிச் சத்தியாக்கிரகம் நடத்த முடிவெடுத்தது கேரள காங்கிரஸ் கமிட்டி. இதற்கு காந்திஜியின் அனுமதியையும் பெற்றது.

காங்கிரஸ் எந்த நாளிலுமே உயர்வு தாழ்வோடு கூடிய சாதிவேறுபாடுகளை ஏற்றதில்லை. எதிர்த்தும் போராடி வந்திருக்கிறது. இந்த வரலாற்றை யொட்டித்தான் கேரள மாகாண காங்கிரஸ் வைக்கத்தை தீண்டாமை ஒழிப்புப் போர்க்களமாக மாற்றத் திட்டமிட்டது. இது, விடுதலைப் போரின் மற்றொரு முனையாகவும் காங்கிரஸ்காரர்களால் கருதப்பட்டது.

இறுதியில் வைக்கம் கோயிலைச் சுற்றியுள்ள வீதிகளில் தாழ்த்தப்பட்டோருக்கு ஆதரவாக சத்தியாக்கிரகிகள் நுழைவதைத் தடுக்கும் வகையிலே அரசு வேலிகளை அமைத்தது. போலீஸ்காரர்களையும் காவலுக்கு நிறுத்தியது.

சத்தியாக்கிரகம்

திருவாளர்கள் கேளப்பன், டி.கே. மாதவன், வி. சங்கரன், கே. வேலாயுதம் ஆகியோர் கொண்ட தனிக்குழு ஒன்றை வைக்கத்தில் சத்தியாக்கிரகத்தை நடத்த கேரள காங்கிரஸ் கமிட்டி நியமித்தது.

மார்ச் 31-ஆம் நாளிலே முதல் சத்தியாக்கிரகப் படை வைக்கம் சென்று, அங்கு பொதுக் கூட்டம் நடத்தியது. அடுத்த நாளிலே கேரள மாகாண காங்கிரஸ் தலைவர் திரு.கே.பி. கேசவ மேனன் தலைமையில் 'ஈழவர்' எனப்படும் தாழ்த்தப்பட்டோரும் சேர்ந்த ஒரு சத்தியாக்கிரகப் படை தடை செய்யப்பட்டிருந்த வீதிகளில் பிரவேசித்தது. இந்தப் படையினரை போலீஸ் அதிகாரிகள் கைது செய்து வழக்குத் தொடுத்தனர். நீதிமன்றத்திலே படைத் தலைவர் கே.பி. கேசவ மேனனுக்கு ஆறுமாதச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. ஈழவ சாதியைச் சேர்ந்த திரு. கோவிந்தன் என்பாரின் மேற்பார்வையில் வைக்கத்திலே ஒரு சத்தியாக்கிரக முகாம் நிறுவப்பட்டது.

கேரளத்தில் ஈழவ சமூகத்தைச் சேர்ந்த மிகப் பெரிய சீர்திருத்தவாதியாக திரு. நாராயண குரு என்பவர், சத்தியாக்கிரகப் போருக்கு ஆசி கூறி ஆதரவளித்து வந்தார். நாயர் சமூகத் தலைவரான திரு. மன்னத்து பத்மநாபன் என்பவரும் சத்தியாக்கிரகிகளுக்குத் துணை நின்றார். சத்தியாக்கிரகப் போருக்குத் தேசத்தின் பல பகுதிகளிலிருந்தும் நிதியுதவி கிடைத்து வந்தது. அகில இந்தியக் காங்கிரஸ் அலுவலகம் ரூபாய் ஆயிரம் அனுப்பியது.

பஞ்சாபைச் சேர்ந்த ஆரிய சமாஜத்தினர் வைக்கத்தில் தனியாக முகாம் அமைத்து சத்தியாக்கிரகப் படையினருக்கு இலவசமாக உணவளித்தனர்.

களத்தில் ஈ.வே.ரா.

வைக்கம் சத்தியாக்கிரகக் கமிட்டி தமிழ் நாடு காங்கிரசின் ஆதரவையும் கோரியது. அப்போது த.நா.கா. கமிட்டியின் தலைவராக் இருந்த ஈ.வே.ரா. அவர்கள், கோவை ஐயாமுத்து உள்ளிட்ட பல தொண்டர்களை அழைத்துக்கொண்டு, வைக்கத்திற்குச் சென்று சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டார்.

முதன் முறையாக சட்டத்தை மீறியபோது ஈ.வே.ராவுக்கும் ஐயாமுத்துவுக்கும் நீதிமன்றத்தில் தலைக்கு ஒரு மாதச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

விடுதலை பெற்ற பின் சிறிது அவகாசம் எடுத்துத் திரும்பவும் ஈ.வே.ரா. சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு ஆறுமாதச் சிறைத் தண்டனை பெற்றார்.

மூதறிஞர் ராஜாஜி, திரு.எஸ். சீனிவாச ஐயங்கார் ஆகிய பெருந் தலைவர்கள் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் வைக்கத்திற்குச் சென்று, சத்தியாக்கிரகிகளை ஊக்குவித்தனர். திருவிதாங்கூர் சமஸ்தானம் முழுவதும சுற்றுலாச் செய்து தொண்டர்களையும் பொருளுதவியையும் திரட்டித் தந்தனர்.

மே மூன்றாவது வாரத்தில் வைக்கம் சத்தியாக்கிரகக் குழுவின் பிரதிநிதிகள் காந்திஜியைச் சந்தித்து வைக்கத்தின் நிலைமையை அவருக்கு விளக்கினர். போராட வேண்டிய வழிமுறைகளுக்கு அவரிடம் ஆலோசனை கோரினர். காந்திஜி, 'பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும்' என்னும் வள்ளுவர் குறளைத் தம் உள்ளத்தில் கொண்டவர். அதனால், தம்மைச் சந்தித்த வைக்கம் பிரதிநிதிகளிடம் சத்தியாக்கிரகப் போரை

நடத்த வேண்டிய வழிமுறைகளைக் கூறி அவர்களை ஊக்குவித்தார்.

வைக்கத்தில் முதன் முதலில் சென்ற சத்தியாக்கிரகப் படை கைதியானதும், தலைமைப் பொறுப்பை ஏற்க வருமாறு மதுரை ஜார்ஜ் ஜோசப்புக்குத் தந்தி மூலம் அழைப்பு அனுப்பியது சத்தியாக்கிரகக் குழு. இத்தகவலறிந்ததும், கிறித்துவரான ஜார்ஜ் ஜோசப் இந்து சமயம் சம்பந்தப்பட்ட ஒரு போராட்டத்தில் நேரடியாக ஈடுபடுவதைத் தவிர்ப்பது நல்லதென்று ஆலோசனை கூறி காந்திஜி அவருக்குத் தந்தி கொடுத்தார். இந்தத் தந்தி திரு. ஜோசப்பின் கைக்குக் கிடைப்பதற்கு முன்பே அவர் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுச் சிறைசென்று விட்டார். இதன் பின்னர்தான் வைணவரான ஈ.வே.ரா. வைக்கம் போரில் கலந்தார்.

வைக்கத்தில் சத்தியாக்கிரகம் நடந்தபோது திரு. மாதவராவ் என்பவர் திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் திவானாகவும், திரு. பிட் என்னும் ஆங்கிலேயர் திருவனந்தபுரம் கமிஷனராகவும் இருந்தனர். திவான் மாதவ ராவ், வைதிகர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க மனமிருந்தும் துணிவில்லாதவரானார். வைக்கம் சத்தியாக்கிரகப் போராட்டம் ஒரு ஆண்டுக் காலம் நீடித்தது.

வைக்கம் சத்தியாக்கிரகத்தை நடத்தியது கேரள காங்கிரஸ் கமிட்டிதா னென்றாலும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி அதற்கு எல்லா வகையிலும் உதவி புரிந்தது. த.நா.கா. கமிட்டி சார்பில்தான் பெரியார் ஈ.வே.ரா. அவர்கள் நேரடியாக சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு இருமுறை சிறை புகுந்தார்.

அப்போதைய திருவிதாங்கூர் மன்னர் ஈ.வே.ரா.வுக்கு வேண்டியவராக இருந்தும், நட்பைவிடவும் நாடே பெரிதென் றெண்ணிச் சத்தியாக்கிரகப் போரில் ஈடுபட்டார். அவருடைய மனைவி திருமதி நாகம்மாள், சகோதரி கண்ணம்மாள் ஆகியோ ரும் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு அடக்குமுறைக் கொடுமை களை ஏற்றனர்.

ஈ.வே.ரா.வுடன் தமிழ்நாடு காங்கிரஸ் பிரமுகர் திரு.டி. ஆர். கிருஷ்ணசாமி ஐயரும் சத்தியாக்கிரகத்தி லீடுபட்டுச் சிறை புகுந்தார். ஈ.வே.ரா., மதுரை பாரிஸ்டர் ஜார்ஜ் ஜோசப் ஆகியோர் திருவனந்தபுரம் சிறையில் சாதாரணக் கைதிகளாக நடத்தப் படுகின்றனர் என்று புகார் கூறி, தலைவர் ராஜாஜி திருவிதாங்கூர் மன்னருக்கு கடிதம் எழுதினார். அதன் பின்னர் அவர்கள் சிறையில் விசேஷ வகுப்பில் வைக்கப்பட்டனர்.

மன்னர் மரணம்

எதிர்பாராத விதமாக, 7-8-24-இல் திருவிதாங்கூர் மன்னர் ஸ்ரீமூலம் திருநாள் திடீரெனக் காலமானார். அடுத்து பட்டத்திற்கு வந்த மகாராணி சேது பார்வதியம்மாள் சிறையிலிருந்த சத்தியாக்கிரகிகளுக்குப் பொது விடுதலை யளித்தார். அதனால், ஈ.வே.ரா. உள்பட சத்தியாக்கிரகிகள் அனைவரும் தண்டனைக் காலம் முடியு முன்பே விடுதலையாயினர்.

வைக்கம் போரில் கலந்து கொண்டதற்காகப் பெரியார் ஈ.வே.ரா. வை 'வைக்கம் வீரர்' என்று பாராட்டி தமது 'நவ சக்தி'யில் திரு.வி.க. எழுதினார். சமூக சீர்திருத்தக் கொள்கைக்கு காங்கிரஸ் மகாசபை என்றும் தடையாக இருந்ததே இல்லை என்பதற்கு வைக்கம் சத்தியாக்கிரக வரலாறு ஒரு சிறந்த சான்றாகும்.

கேரள காங்கிரஸ் கமிட்டியும் வைக்கம் சத்தியாக்கிரகக் குழுவும் அழைத்ததன் பேரில் காந்திஜி 1925 மார்ச்சு 8 -ஆம் தேதியன்று திருவனந்தபுரம் சென்றார். ராஜாஜியும் உடன் சென்றார். திருவனந்தபுரம் செல்லும் வழியில் சென்னை நகரில் 7-3-25 அன்று கார்ப்பொரேஷன் தந்த வரவேற்பைக் காந்திஜி ஏற்றார். ஐரோப்பிய உறுப்பினர்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவில்லை. அன்று மாலை கடற்கரையில் நடத்தப் பெற்ற காங்கிரஸ் பொதுக் கூட்டத்தில் பேசினார்.

சென்னை வந்த அன்றிரவே மேட்டுப்பாளையம் மெயிலில் புறப்பட்டு சேலம், ஈரோடு, போத்தனூர் வழியாக வைக்கத்திற்குச் சென்றார். ஈரோடு ரெயிலடியில் வைக்கம் வீரர் பெரியார் ஈ.வே.ரா. அவர்கள் அடிகளாரை வரவேற்று உபசரித்து வழியனுப்பி வைத்தார்.

திருவிதாங்கூர் மகாராணியுடனும் வைதிகர்களுடனும் அடிகள் பேச்சு வார்த்தை நடத்தினார். சரியாக ஒருவார காலம் அடிகள் இந்த முயற்சியில் ஈடுபட்டார். திருவனந்தபுரம் கமிஷனர் திரு. டபிள்யூ.எச்.பிட், திவான் ராகவய்யா ஆகியோரும் சமரசப் பேச்சில் பங்கு கொண்டனர். பேச்சு வார்த்தை வெற்றியாக முடிந்தது. ஓராண்டு காலம் நடந்து வந்த சத்தியாக்கிரகம் நிறுத்தப் பெற்றது. வைக்கம் கோயில் மாடவீதிகளில் தாழ்த்தப் பட்டோருட்பட எல்லாச் சாதியினரும் செல்லலாமென்ற வைதிகரின் ஆதரவோடு திருவிதாங்கூர் அரசு ஆணை பிறப்பித்தது. இது, காந்தியடிகளின் சத்தியாக்கிரகத்திற்கு மதத் துறையில் கிடைத்த முதல் வெற்றியாகும்.

இந்திய மாநிலங்களிலே வைதிகத்தின் கோட்டையென விளங்கிய கேரளத்திலே சமய சீர்திருத்தத்தில் காந்தியம் முதல் வெற்றியைக் கண்டது. அடுத்த வெற்றி, 1936-இல் திருவனந்தபுரம் சமஸ்தானத்தில் ஆலயங்களெல்லாம் அரிசன மக்களுக்குத் திறந்துவிடப்பட்டதாகும். இதற்கு அப்போது திருவிதாங்கூர் திவானாக இருந்த தமிழ்நாட்டவரான சர்.சி.பி. இராமசாமி ஐயரே காரணமாவார். அப்போதும் காந்தியடிகள் நேரில் திருவிதாங்கூர் சென்று மன்னருக்கும் திவானுக்கும் பாராட்டுத் தெரிவித்தார். அரிஜனங்களுக்குத் திறந்துவிடப்பட்ட ஆலயம் என்பதற்காக காந்தியடிகளும் திருவனந்தபுரம் பத்மநாப சுவாமி கோயிலுக்குச் சென்று வழிபட்டார்.

குமரி முனையில் அடிகள்

வைக்கம் சத்தியாக்கிரகத்திற்கு வெற்றி தேடித் தந்தபின் காந்திஜி தமிழகத்தின் புனிதத்தலமான கன்னியாகுமரிக்குச் சென்றார். அப்போது குமரிமுனை திருவிதாங்கூர் ராஜ்யத்தின் தெற்கெல்லையாக இருந்தது. அவ்வமயம் கடல் தரிசனம், குமரியம்மன் கோயில் வழிபாடு ஆகியவற்றில் அடிகள் ஈடுபட்டார்.

குமரி முனையைக் கண்டது பற்றிக் காந்தியடிகள் தமது 'நவ ஜீவன்' (29-3-25) இதழில் 'கன்னியாகுமரி தரிசனம்' என்று தலைப்புத் தந்து எழுதியது வருமாறு:

''கதிரவன் மறையும் கம்பீரமான அந்தக் காட்சியைப் பார்த்துவிட்டுப் போகலாமெனத் திருவனந்தபுரம் அரசினர் விருந்து மாளிகையின் வாயில் காப்பவர் எங்களை எவ்வளவோ வற்புறுத்தினார். ஆனால், காலில் வெந்நீரை ஊற்றிக் கொண்டு வந்துள்ள நாங்கள் இவ்வளவு பெரிய பாக்யத்தை அனுபவிப்பதற்காக குமரிமுனையில் தங்க எவ்வாறு முடியும்? பாரதத்தாயின் கால்களைக் கழுவிப் புனிதப்பட்டிருந்த அந்தச் சமுத்திர அலைகள் பட்டு என்னுடைய பாதங்கள் புனித மடைந்ததுடன் நான் மன நிறைவு அடைய வேண்டியதாயிற்று.''

தமிழகப் பயணம்

கன்னியாகுமரியிலிருந்து திருவனந்தபுரத்திற்குத் திரும்புகை யில் வழியிலுள்ள நாகர்கோயில் நகரில் மக்கள் காந்திஜியை வரவேற்று உபசரித்து வழியனுப்பி வைத்தனர். இந்நகரம் தற்போது கன்னியாகுமரி மாவட்டத்தின் தலைநகராக உள்ளது.

மார்ச் 8-ஆம் தேதியன்று திருவிதாங்கூர் ராஜ்யத்திற்குச் சென்ற அடிகள் 18-ஆம் தேதிவரை அங்கு தங்கியிருந்து சென்ற

அலுவல்களை முடித்துக் கொண்டு 19-ஆம் தேதி சென்னைக்குத் திரும்பினார். வழியில் உள்ள திருப்பூர் நகரில் காந்திஜி மகத்தான முறையில் வரவேற்கப்பட்டார். திருப்பூர் கதர் உற்பத்தி ஸ்தலமாதலால், அங்கு அடிகளுக்குத் தரப்பட்ட வரவேற்பிதழில் திருப்பூரை 'கதர்த் தலை நகரம்' என்றும், காந்திஜியை 'கதர் மன்னர்' என்றும் வருணிக்கப்பட்டிருந்தது. அதற்குப் பதிலளித்த அடிகள், 'திருப்பூருக்குத் தந்த பெயர் சரி; எனக்குத் தந்த பட்டந்தான் தவறு' என்று கூறினார்.

காந்தி ஆசிரமத்தில் காந்தி!

திருப்பூர் வரவேற்பு முடிந்ததும், உடனே திருச்செங் கோட்டுக்கருகில் ராஜாஜியால் நிறுவப்பட்ட காந்தி ஆசிரமத்திற்கு காந்திஜி வருகை தந்தார். காந்தி ஆசிரமம் தொடங்கிய சில வாரங்களுக்குள் காந்திஜி அங்குச் சென்றா ரென்பது குறிப்பிடத் தக்க சிறப்பாகும். இங்கு அடிகளுக்கென ராஜாஜி அமைத்திருந்த குடிசையில் அவர் இரண்டு நாட்கள் தங்கியிருந்தார்.

புதுப்பாளையத்தில் காந்தி ஆசிரமத்தாரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் அடிகள் பேசினார். பிரார்த்தனையின்போது பயன்படுத்தப்பட்ட ஆர்மோனியத்தைப் பற்றி அடிகள் கூறியதாவது:

> ''இங்கு பயன்படுத்தப்படும் இசைக் கருவிகளைப் பார்த்தபோது உங்களுடைய பாடல்களை உங்களுடைய முறையிலேயே பாடக்கேட்க வேண்டுமென்று நான் விரும்பினேன். பழங்காலத்தில் நம்முடையவை என்று சொல்லக்கூடிய இசைக் கருவிகள் இருந்தன. அந்த உயர்ந்த இசைக் கருவிகளுக்குப் பதிலாக ஆர்மோனியம் இடம் பெற்றுவிட்டது. தந்திகள் மூலம் நாதம் இசைக்கும் அந்தப் பழங்கால இசைக்கருவிகளுக்கு நாம் செல்வோமாக! அந்தக் கருவிகள் நமது உள்ளத்தில் ஆழமாகப் பதியும் நாதத்தை எழுப்பும். என்னைப் பொறுத்தவரை ஆர்மோனியத்தைக் காட்டிலும் தந்திகள் மூலம் நாதத்தை எழுப்பும் பழைய இசைக்கருவிகளே என் உள்ளத்திற்கு சாந்தத்தை அளிக்கின்றன.''

கோவை நகர செங்குந்தர் மகாஜன சங்கத்தார் புதுப் பாளையத்திற்கு வந்து, அடிகளுக்கு தங்கள் சமூகத்தின் சார்பில் ஒரு வரவேற்பிதழ் வாசித்தளித்தனர். அதிலே, தங்கள் சமூகத்துத் தேவதாசிகளுக்குள்ள குறைகளைக் குறிப்பிட்டு, அவற்றிலிருந்து அவர்கள் விடுபட ஆலோசனை சொல்லுமாறு அடிகளாரைக்

கேட்டிருந்தனர். காந்திஜி, மிகுந்த உருக்கத்தோடு இந்த வரவேற்புக்குப் பதிலளித்துப் பேசினார்.

பெண்ணைத் தாசியாக்கும் பழக்கமுள்ள குடும்பங்களின் புள்ளி விவரத்தைச் சேகரித்து, அந்தக் குடும்பங்களை அணுகி தாசி வாழ்க்கையிலுள்ள கேடுகளை எடுத்துச் சொல்லுமாறு அடிகள் ஆலோசனை கூறினார். மனமாற்றமடைந்து தாசித் தொழிலை விடுவோருக்கு வேறு தொழிலைத் தேடித் தருவது சமுதாயத்தினர் கடமை என்றும் கூறினார்.

திருச்செங்கோட்டிலும் அண்ணலுக்கு வரவேற்பளிக்கப் பட்டது. இங்கு அவர் நிகழ்த்திய உரையை திரு.டி.எஸ்.எஸ். ராசன் மொழி பெயர்த்தார். காந்தி ஆசிரமத்தில் அரிஜனச் சிறுவர்கள் நடத்தப்படும் முறையில் தாம் திருப்தி அடைவதாக அடிகள் கூறினார்.

மார்ச்சு 22-ஆம் தேதியன்று காந்திஜி சென்னைக்கு வருகை தந்து திரு. சீனிவாச ஐயங்காரின் விருந்தினராக இருந்தார். ரௌலட் சத்தியாக்கிரகம், ஒத்துழையாமை ஆகியவற்றின்போது தமிழகத்தில் தமக்குப் பேருதவி புரிந்த 'இந்து' ஆசிரியர் திரு. கஸ்தூரிரங்க ஐயங்காரைப் பார்க்க முடியாமல் போனது தமக்கு மிகுந்த வருத்தத்தைத் தருவதாகக் கூறினார். ஐயங்கார் 12-12-23-இல் இயற்கையெய்தினார். 'இந்து' அலுவலகத்தில் அதன் முன்னாளைய ஆசிரியரின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்துச் சிறப்புரையாற்றினார். மகா கனம் சீனிவாச சாஸ்திரியார் இந்தக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். ''லண்டன் 'டைம்ஸ்' பத்திரிகையின் ஆசிரியருக்கு நிகரானவர் 'இந்து' பத்திரிகையின் ஆசிரியர்'' என்று அடிகள் கூறினார்.

காந்திஜி சென்னை காஸ்மாபாலிடன் கிளப்பில் இரண்டாவது முறையாக வரவேற்கப்பட்டார். முதன் முறையில் சர்.பி. தியாகராச செட்டியார் வரவேற்பளித்தார். இம்முறை அவர் காந்தியை வரவேற்க வரவில்லை. ஏனெனில், இப்போது அவர் விடுதலைப் போருக்கு எதிராக இயங்கிய ஜஸ்டிஸ் கட்சியின் தலைவர்! சென்னை திருவல்லிக்கேணிக் கடற்கரையில் நடந்த காங்கிரஸ் கூட்டத்திற்கு ஜனாப் யாகூப் அசன் தலைமை தாங்கினார்.

சென்னை நகரில் திரு. எஸ். சீனிவாச ஐயங்கார் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த எண்ணற்ற நிகழ்ச்சிகளில் காந்திஜி கலந்து கொண்டார். ஆம்; ஓய்வுக்கு இடைவெளி இல்லாமல் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தார் ஐயங்கார். இதைப் பற்றிக் குறிப்பிடுகையில்,

''எரவாடா சிறை அதிகாரியைக் காட்டிலும் அதிகமாக ஒரு வேலைத் திட்டத்தை இப்போது என்னைச் சிறைப் பிடித்துள்ள சீனிவாச ஐயங்கார் வகுத்துள்ளார்''

என்று அடிகள் கூறினார்.

திருவல்லிக்கேணி பெரிய தெருவில் அப்போது இந்திப் பிரசார வித்யாலயம் இருந்தது. அங்கும் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அடிகள் உரையாற்றினார். இந்நிகழ்ச்சியிலே கப்ப லோட்டிய தமிழர் வ.உ. சிதம்பரனார், 'ஆந்திரப் பத்திரிகா' என்னும் தெலுங்குப் பத்திரிகையின் ஆசிரியர் திரு. நாகேஸ்வரராவ், திரு. சந்தானம், ஆந்திரகேசரி டி. பிரகாசம், திரு. அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் ஆகியோர் கலந்து கொண்டனர். டாக்டர் அன்னிபெசன்ட் அம்மையார் தலைமையில் கோகலே மண்டபத்தில் நடைபெற்ற மதுவிலக்குப் பிரசாரகர்கள் கூட்டத்தி லும் அடிகள் பேசினார்.

சென்னை நகரில் வடக்கிலும் மேற்கிலும் உள்ள பேட்டை கள் பலவற்றிலே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொதுக்கூட்டங் களிலும் காந்திஜி பேசினார். வடசென்னை பெத்துநாயக்கன் பேட்டையில் நடைபெற்ற மாபெரும் கூட்டத்திலே சுமார் இருபதாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் குழுமியிருந்தனர். பிரபல தேச பக்தர் திரு.எம்.எஸ். சுப்பிரமணிய ஐயர் இங்கு அடிகள் நிகழ்த்திய சொற்பொழிவைத் தமிழில் மொழி பெயர்த்தார்.

சரியாக பதினெட்டு நாட்கள் தென்னகத்தில் சுற்றுலாச் செய்தபின் அடிகள் 24-3-25-இல் பம்பாய்க்குப் பயணமானார். இம்முறை தமது மகன்களில் ஒருவரான திரு. ராமதாஸ் காந்தியுடனும் மகாதேவ தேசாயுடனும் அடிகளார் வந்திருந்தார். தென்னகத்தில் தாம் சென்ற ஊர்தோறும் தம்மைக் காணவும், தமது பேச்சைக் கேட்கவும் வந்த மக்களிடம் மதுவிலக்கு, கதர் அபிவிருத்தி ஆகியவற்றின் அவசியத்தைக் காந்திஜி வலியுறுத்தி னார். 'காலில் வெந்நீரைக் கொட்டிக் கொண்டு வந்தேன்' என்று அடிகளாரே வருணிக்கும் அளவுக்கு வேதனை தரும் பிரச்சினை யான வைக்கம் வைதிகர்களின் கொடுமைக்குப் பரிகாரம் காண வந்த அடிகள் அதிலே வெற்றி கண்ட வீரராக வடபுலம் சென்றார்.

★-★-★

துரதிருஷ்ட ஆண்டு!

தியாகி சுப்பிரமணிய சிவா சென்னை மாகாண அரசுக்கு எதிராகச் செயல்படுவதையே மதமாகக் கொண்டிருந்தார். அவரே ஒரு தனி ஸ்தாபனம் என்று சொல்லக்கூடிய வகையில் ஓய்வின்றிப் பாடுபட்டு வந்தார். அவரது வாழ்நாளில் நான்கு முறை அரசு அவர் மீது அரச நிந்தனை வழக்குத் தொடுத்தது.

முதன் முறை

1908-ஆம் ஆண்டில் கப்பலோட்டிய தமிழருடன் சேர்ந்து சிவாவும் பத்தாண்டுத் தண்டனை பெற்றதையும், அத்தண்டனை உயர்நீதிமன்றத்தாரால் ஆறு ஆண்டாகக் குறைக்கப்பட்டு, அதனைத் திருச்சி, சேலம் சிறைகளில் அவர் அனுபவித்ததையும், அந்தக் காலத்திலே அவருக்குத் தொழுநோய் கண்டதையும் முன்பே அறிந்தோம். நீண்ட காலம் சிறைவாசத்தை அனுபவித்தபின் தொழு நோய் கண்டு வெளியே வந்த சிவா ஓய்வின்றித் துணிவுடன் செயல்பட்டு வந்தார். அவருக்கிருந்த தொழுநோய் காரணமாக ரெயில்வே சட்டப்படி அவர் ரயிலில் பிரயாணம் செய்வதை அரசாங்கம் தடை செய்து விட்டது. அந்நிலையில், மாட்டு வண்டியில் சென்றும், தொழு நோய் பிடித்த கால்கள் வருந்த நடந்தும் தமிழ்நாடு முழுவதும் சுற்றுலாச் செய்து மக்களிடையே விடுதலை ஆர்வத்தை வளர்த்து வந்தார்.

இரண்டாம் முறை

இரண்டாவது முறையாக 1921 அக்டோபரில் அரசு சிவா மீது ராஜநிந்தனை வழக்குத் தொடுத்தது. அதிலே இரண்டாண்டு சிறைத் தண்டனையும், ரூபாய் ஐந்நூறு அபராதமும் விதிக்கப் பெற்றார். அபராதம் செலுத்தத் தவறினால் மேலும் ஆறு மாத சிறைவாசம் அனுபவிக்க வேண்டுமென்று தீர்ப்பாயிற்று. சிறையில் கடுமையாக நோய்ப்பட்டதன் விளைவாக, 'இனிமேல் அரசியலில் ஈடுபடுவதில்லை' என்ற உறுதி மொழி எழுதிக்

கொடுத்துவிட்டு சிறைபுகுந்த 2 மாதங்களுக்குள் விடுதலை பெற்றார்.

மூன்றாம் முறை

மூன்றாவது முறையாக 1922-ஆம் ஆண்டின் இறுதியில் இ.பி.கோ. 108-வது விதிப்படி சென்னை மாகாண அரசு சிவா விடம் ஓராண்டுக் காலம் நன்னடத்தை ஜாமீன் கோரி வழக்குத் தொடுத்தது. காங்கிரஸ்காரர்கள் சத்தியாக்கிரக இயக்கத்திற்கான விதிமுறைகளை அந்நாளில் ஏற்றுக் கொண்டிருந்தனர். அதன்படி, ஜாமீன் வழக்கில் எதிர் வழக்காடுவதோ, ஜாமீன் தரவவோ கூடாது என்ற நிலை இருந்து வந்தது. திரு. சிவா எதிலும் தம்முடைய மனச்சாட்சிப்படி நடக்கின்ற சுபாவமுடையவராதலால் எதிர் வழக்காடினார். ஆனால், என்ன காரணத்தாலோ இறுதியில் ஜாமீன் கொடுத்தும் விடுதலையானார். இதனால் தேச பக்தர்களின் கண்டனத்திற்கு ஆளானார்.

நான்காவது முறை

நான்காவது முறையாக, 1924 மே திங்களில் சென்னை மாகாண அரசு இ.பி.கோ. 121ஏ விதிப்படி, சிவா மீது அரச நிந்தனை வழக்குத் தொடுத்தது. மே 4 -ஆம் தேதியன்று திரு.எஸ். சீனிவாச ஐயங்கார் தலைமையிலும், மே 11-ஆம் தேதியன்று திரு.ஏ. அரங்கசாமி ஐயங்கார் தலைமையிலும், திருவல்லிக்கேணி கடற்கரையிலுள்ள திலகர் கட்டத்தில் நிகழ்த்திய இரண்டு சொற்பொழிவுகளில் ஆட்சேபகரமான பகுதிகள் இருக்கின்றன வென்று பிராசிகியூஷன் தரப்பில் சொல்லப்பட்டது.

அரச நிந்தனைப் பேச்சு - 1

4-5-24-இல் திருவல்லிக்கேணிக் கடற்கரையில் திரு.எஸ். சீனிவாச ஐயங்கார் தலைமையில் திரு. சிவம் நிகழ்த்திய சொற்பொழிவில் ஆட்சேபகரமானவை என்று பிராசிகியூஷன் தரப்பில் சொல்லப்பட்ட பகுதிகள் வருமாறு:

''1908-இல் முதன் முதலாக நான் ஸ்ரீமான் சிதம்பரம் பிள்ளையுடன் சிறை செல்லும் பாக்கியம் பெற்றேன். நான் அப்பொழுது நியாயஸ்தலத்தில் கொடுத்த வாக்கு மூலத்தில், 'பரிபூரண ஸ்வராஜ்யமே இத்தேசத்தின் லட்சியம்; அதுவே எனது லட்சியம் என்று ஆவேசத்துடன் சொன்னேன். 'பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்குட்பட்ட ஸ்வராஜ்யம்' என்று வெகு காலமாக வரையறுக்கப்பட்டு வந்தது. ஆனால், தற்போது காங்கிரஸ்

லட்சியம் பரிபூர்ண விடுதலைக்காரரையும் திருப்தி செய்வதாய் இருக்கிறது. சுதந்திர மென்பது பரிபூர்ண மடையாவிட்டால் அதற்கு அர்த்தமில்லை.

''என்னுடைய புத்திக்குத் தகுந்தவாறு, எனது ஆசைக் கேற்றவாறு எனது குடும்பத்தையும் நான் நடத்த விரும்புகிறேன். ஸ்வராஜ்யம் எப்படி, எந்த மார்க்கத்தில் கிடைத்தாலும் நான் ஏற்றுக் கொள்ளத் தயார். திரு. பாலர் இதே இடத்தில் 1907-இல் சொல்லிய மாதிரி ராஜீய விஷயம் சதுரங்க விளையாட்டுப் போன்றது. எதிரி எப்படி காய் எடுத்து வைக்கிறானோ, அதற் கேற்றாற்போல் நாம் நடந்துகொள்ள வேண்டும். இந்த வழியில் தான் போகவேண்டும், வேறு வழி கூடாது என்று சொன்னால் அது பிசகு.

''அதிகாரிகள் அறியாமையாலோ, திமிரினாலோ இந்தக் கூட்டத்தைக் கலைக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அந்த க்ஷணத்திலேயே ஏதாவது சமயோசிதமான முடிவு செய்யவேண்டி இருக்குமேயன்றி முன்னதாகவே ஒரு திட்டத்தைப் போட்டுக் கொண்டு வருவது சாத்தியமில்லை. ஸ்வராஜ்யத்திற்கு ஒரே வழிதான் உண்டு என்று வரையறுப்பது அழகல்ல. இம்சையோ, அகிம்சையோ எந்த வழியில் ஸ்வராஜ்யம் வந்தாலும் சரி என்று நான் கருதுவது உண்மையே, ஆனால், கொள்கையளவில் அஹிம்சா தர்ம வழியை நான் ஏற்றுக் கொள்ளாமல் இல்லை.

''ஸங்கற்பத்தினாலும் வைராக்கியத்தினாலுந்தான் நமது ஸ்வதந்திரத்தை மனமில்லாத இடத்திலிருந்து பிடுங்கி நமது ஆண்மையை வெளிக்காட்ட வேண்டுமேயன்றி, அகஸ்மாத்தான ஸம்பவங்களால் ஸ்வராஜ்யம் கிடைக்காதா வென்று அண்ணாந்து இருக்கக் கூடாது. அஹிம்சா தர்மத்தின் மூலமாகப் பிறர் நம்மை உபத்திரவப்படுத்தி அதைச் சகித்துக் கொண்டதன் மூலமாக மட்டும் ஸ்வராஜ்யம் வரவேண்டுமென்று சொல்லிக் கொண் டிருப்பது ஒழுங்கல்ல; புத்திசாலித்தனமும் அல்ல. விடுதலையில் ஆர்வமுள்ளவர்களுக்கு ஸ்வராஜ்ய இலட்சியம் தான் முக்கியமே யன்றி, வேறில்லை. இப்படிச் சொல்வதற்காக வைதிகர்கள் என்னை மன்னிக்க வேண்டும். என் ஹிருதயத்திலே துடிப்புள்ள வரை, இத்தேசம் ஸ்வராஜ்யம் அடைவதற்காக என்னுடைய வழியில் எனது மனச்சாட்சி சொல்கிறபடி நான் நடந்து வருவேன். அதனிடையே ஆயிரந் தடவை தோல்வி யுற்றாலும் எனக்கு அக்கறை இல்லை. நம்மிலும் மேம்பட்டதான ஒரு சக்தி

உலகத்தில் இருப்பதை எல்லோரும் நம்புகிறார்கள். அந்த சக்தியில் நம்பிக்கை வைத்து நான் வேலையை ஆரம்பித்திருக் கிறேன்.

''நமது தேசம் என்று சொன்னால் கண்ணில் நீர் ததும்ப வேண்டும்; ஹிருதயம் துடிக்கவேண்டும். ஆயிரத்தில் ஒருவருக்காவது அங்ஙனம் துடிக்கிறதா? இரவும் பகலும் நான் இரத்தக் கண்ணீர் சொரிந்து வருகிறேன். இதை உண்மையாகச் சொல்கிறேன்.

''அயர்லாந்தில் உள்ளவர்களுக்கு என்ன தைரியம்; என்ன வைராக்யம்; என்ன துணிவு பாருங்கள். அயர்லாந்தைப் போல இந்தியாவில் பல மாக்ஸ்வினிகள் தோன்றினால் அப்புறம் பயம் இல்லை.

''சிறைச்சாலையிலும் வெளியிலும் நம்மவர்கள் படும் பாட்டை நீங்கள் அறிவீர்களா? அன்னிய நாடுகளிலே நம்மவர் துரத்தப்பட்டுத் திண்டாடுவது உங்களுக்குத் தெரியுமா? உங்களுக்குத் துணிவில்லாமல் ஆசை மாந்திரம் இருந்து பிரயோசனம் என்ன?

''சட்ட மறுப்புக்கு ஜனங்கள் தயாராயில்லையென்று சும்மாவேனும் தலைவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நாகபுரியிலும் மதுரையிலும் வைக்கத்திலும் சட்டமறுப்பு திறமை யாக நடக்கவில்லையா? வருங்காலத்தில் நமது பார்லிமெண்டாய் இருக்கவேண்டிய காங்கிரசில் ஒரு கூட்டத்தார் அசையாமல் நிர்வாகப் பதவிகளில் இருந்து கொண்டிருக் கிறார்கள். அவர்களைத் தள்ளிவிட்டு மறுகாரியம் பார்க்க வேண்டும் வாலிபர்களே, முன் வாருங்கள்; ஞானமும் தீரமும் ஏழ்மையும் படைத்த வாலிபர்கள்தான் பாரத மாதாவைக் காப்பாற்ற முடியும். இப்போது இருக்கிற காங்கிரஸ் உத்தியோகஸ்தர்களின் காதைப் பிடித்திழுத்து முதலில் கீழே தள்ளவேண்டும். இல்லாவிடில் காங்கிரஸ் கெட்டுப் போய்விடும்.

''என்னாலான வேலையை அத்துறையில் செய்து வருகிறேன். ரெயில் வண்டியில் பிரயாணம் செய்ய முடியாதபடி அதிகாரிகள் என்னைத் தடுத்து விட்டதால் அதிக வேலை என்னால் செய்ய முடியவில்லை. ஆயினும் வாலிபர்களிடத்தில் எனக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு.

''நான் இனி சிறைசெல்ல முடியாது. சிறை செல்லும் கொள்கையையும் நான் வெறுக்கிறேன். நான் வைதிக ஒத்துழையாதாரல்ல. காரியம் பெரிதே யொழிய, சிறைக்குப் போவது பெரிதன்று. அடித்தால் அடிபட்டுக் கொண்டிருப்பது

வீரத்தனமல்ல. ஒருதரம் சிறைக்குப் போனவர்களாவது இனிப் போகாமல் இருக்க வேண்டும். சிறைக்குப் போக விரும்பும் மற்றவர்கள் போகட்டும். நான் வாழ்த்துக் கூறுகிறேன்.''

(''சுதேச மித்திரன்''; 5-5-24)

அரச நிந்தனைப் பேச்சு - 2

சுப்பிரமணிய சிவா 11-5-24-இல் திருவல்லிக்கேணி கடற்கரையில் திரு.ஏ. அரங்கசாமி ஐயங்கார் அவர்கள் தலைமையில் நிகழ்த்திய மற்றொரு சொற்பொழிவில் ஆட்சேபகரமானவையென்று பிராசிகியூஷன் தரப்பில் கூறப்பட்ட பகுதிகள் வருமாறு:

''எதிரி என்னை எதிர்த்தால் என் கையில் ஆயுதம் இல்லையென்பதற்காக சும்மாயிருக்கமாட்டேன். எச்சமயத்தில் எது கிடைத்தாலும் அதனைக் கொண்டு எதிரியைத் தாக்கி அவனைத்திக்குமுக்காடச் செய்வதே யுத்த தர்மமாகும். நான் இம்மாதிரித் தான் செய்வேன். அன்னிய அரசாங்கத்தை ஒழிக்கும்படி ஜனங்களிடம் நான் எனது ஆசிரமத்தவரது உதவி பெற்றுப் பிரசாரம் செய்து வருகிறேன். அன்னிய அரசாங்கத்தினை ஒழிப்பதற்காக எம்முறையையும் கையாளுவேன்.

''காலஞ்சென்ற அல்லூரி சீதாராம ராஜு நாம் தற்காலம் கொண்டுள்ள முறையைக் கையாளாமல் ஹிம்சா முறையையே கையாண்டார் அவரது செயலுக்கு அவரது தேசபக்தியே காரணமாக இருந்ததென்று கவர்ன்மெண்டாரும் ஒப்புக் கொண்டிருக்கின்றனர். கொள்ளை, கொலை முதலியன செய்த ஜம்புலிங்கத்தின் வீரத்தைப் புகழ்ந்த அரசாங்கத்தார் தேசபக்தி காரணமாக ஹிம்சா முறையைக் கைக்கொண்ட அல்லூரி ராமராஜுவைப் புகழாமல் இருக்க முடியாது. அவருடைய முறை தவறானதாகவும், கெட்டதாகவும் இருக்கலாம். காலத்திற்கேற்றதாக இல்லாதிருக்கலாம். ஆனால், தேசபக்தி காரணமாக உயிர் துறந்த அவரது ஆத்மா சாந்தியடையும்படி பிரார்த்திப்பது நமது கடமையாகும்''

சிவா வாதம்

சென்னை எழும்பூர் பிரதம மாகாண மாஜிஸ்திரேட் டாக்டர் கே.கே. பாண்டலே அவர்கள் முன்பு வழக்கு விசாரணைக்கு வந்தது.

திரு. சிவம் தமது கடற்கரைப் பேச்சுகள் இரண்டும் சுருக்கெழுத்தாளர்களால் சரியாக எழுதப்படவில்லையென்று

நீதிமன்றத்தில் புகார் கூறினார். தமது பேச்சில் அரச நிந்தனையாகத் தாம் எதுவும் கூறவில்லையென்றும் சிவா வாதித்தார்.

1924-ஆம் ஆண்டில் நாட்டில் திட்டமிட்ட முறையில் காங்கிரஸ்காரர்களை சிறைக்கு அனுப்பும் சட்டமறுப்பு எதுவும் நடைமுறையில் இல்லை. ஆயினும், அந்தக் காலத்திலும் தேச பக்தர்கள் மீது ஜாமீன் வழக்குத் தொடுப்பதையும், ராஜ நிந்தனை வழக்குப் போடுவதையும் அரசு வழக்கமாகக் கொண்டிருந்தது. அந்த வகையில்தான் 1924-இல் சிவா மீது வழக்கு தொடுக்கப் பட்டது. பிராசிகியூஷன் தரப்புக்காகத் திரு.கே.பி.எம். மேனன் அவர்களும், எதிரியான சிவாவுக்காக திரு.எஸ். சத்தியமூர்த்தி ஐயரும் நீதிமன்றத்தில் தோன்றி வழக்காடினர். இந்த வழக்கில் முன்னாளைய அட்வகேட் ஜெனரல் திரு.எஸ். சீனிவாச ஐயங்காரும், இந்திய சட்டசபை உறுப்பினர் திரு.ஏ. அரங்கசாமி ஐயங்காரும் சிவா தரப்பில் சாட்சியம் தந்தனர்.

தம்மீது ராஜ நிந்தனை வழக்கு வருவதற்கு முன்பு திரு. சுப்பிரமணிய சிவா சென்னை நகரில் ஒரு சத்தியாக்கிரகப் போராட்டத்தைத் தொடங்குவதற்குத் தேதியை அறிவித்திருந்தார். சென்னை மூர்மார்க்கெட்டுக்கு அருகிலுள்ள திடலில் சிவாவால் நிறுவப்பட்ட பாரதாசிரமத்தினர் அடிக்கடிக் கூட்டங்கள் நடத்தி வந்தனர். போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதாகச் சொல்லி அதற்குத் தடை விதித்தது அரசு. அந்நாளிலே இன்று 'மூர்மார்க்கெட்' எனப்படும் இடம் 'ஷௌகத் பஜார்' என்று தேசபக்தர்களால் அழைக்கப்பட்டது. ஆம்; அலி சகோதரர்களில் மூத்தவரான ஷௌகத் அலியின் பெயரைப் பெற்றிருந்தது.

இந்தச் சத்தியாக்கிரகம் தொடங்குவதற்குச் சில நாட்களுக்கு முன்பு சிவா மீது அரசு வழக்குப் போட்டுவிட்டதால், மூர்மார்க்கெட் சத்தியாக்கிரகம் தேதி குறிப்பிடப்படாமல் ஒத்திப் போடப் பட்டது. சிவா மீது வழக்கு நடப்பதற்காகச் சத்தியாக் கிரகத்தை ஒத்திப் போடுவதை எதிர்த்து, அதை நடத்தியாக வேண்டும் என்று பண்ருட்டி திரு.எஸ்.ஏ. தேவநாயக ஐயர் அறிக்கை விட்டார். அவரது கருத்தைப் பாரதாசிரமத்தினர் ஏற்கவில்லை.

வழக்கை அவரே நடத்தினார்!

திரு. சிவாமீது நடந்த ராஜ நிந்தனை வழக்கிலே முதல் கட்டமாக அவர் மீது குற்றப் பத்திரிகை படிக்கப்பட்டது.

அதுவரை திரு.எஸ். சத்தியமூர்த்தி ஐயர் சிவாவுக்காக ஆஜராகி வாதாடி வந்தார். அதற்குமேல் ஐயருடன் கொண்ட கருத்து வேற்றுமையால் தமக்காக வக்கீல் தேவையில்லை யென்றும், தம்மீதுள்ள வழக்கைத் தாமே நடத்தப் போவதாகவும் நீதி மன்றத்தில் சிவா அறிவித்துவிட்டார். ஐயரிடம் சிவாவுக்கு ஏற்பட்ட கருத்து வேற்றுமையே இதற்குக் காரணமென்றுதெரிகிறது.

சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்து சட்டத் துறையில் தமக்குள்ள பொது அறிவைச் சிவா நன்கு வெளிப்படுத்தினார். வழக்கின் முடிவிலே, 'ஆர்க்யூமென்ட்' என்று சொல்லப்படும் முறையில் தம்முடைய கட்சியைப் பல மணி நேரம் தாமே எடுத்துரைத்தார். தீர்ப்பு மற்றொரு தேதிக்கு ஒத்திப்போடப் பட்டது.

உறுதி மொழி தந்து விடுதலை!

யாருமே எதிர்பாராத விதமாகத் திரு. சிவா அரசுக்கு ஓர் கடிதம் எழுதினார். அதிலே, மே 4,11 தேதிகளில் அரசை எதிர்ப்பதற்கு மக்களைத் தூண்ட வேண்டுமென்ற எண்ணத்தில் தாம் பேசவில்லை என்றும், இனியும் அப்படிப் பேசும் எண்ணம் தமக்கு இல்லை யென்றும், இந்த உறுதி மொழியை ஏற்றுத் தம் மீதுள்ள வழக்கை அரசு வாபஸ் பெற வேண்டுமென்றும் அவர் கோரியிருந்தார்.

பிரதம மாகாண மாஜிஸ்திரேட் டாக்டர் கே.கே. பாண்டலே, திரு. சிவாவின் உறுதிமொழியை ஏற்று, அவரை நிபந்தனையின்றி விடுதலை செய்திருப்பதாக அரசிடமிருந்து தமக்குத் தகவல் கிடைத்திருப்பதாகக் கூறி, திரு. சிவாவை விடுதலை செய்தார். ஆயினும், ஆரம்பத்திலேயே மன்னிப்புக் கோராமல் பல மாதங்கள் எதிர் வழக்காடிவிட்டு, தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்டு இருந்த நேரத்தில் மன்னிப்புக் கோரி அரசுக்கு எழுதியதை நீதிபதி கண்டித்தார்.

திரு. சிவா, தம்மீது வழக்குத் தோன்றும் போதெல்லாம் அரசுக்கு உறுதிமொழி கொடுத்து விடுதலையாவதும், பின் அரசுக்கெதிராக பிரசாரம் செய்வதுமான ராஜதந்திர முறையைக் கடைப்பிடித்து வந்தார். சென்னை மாகாண அரசு திரு. சிவாவின் இந்த நடத்தையைக் குறைகூறி அறிக்கை வெளியிட்டது. திரு. சிவாவிடம் கொள்கை ரீதியாக வேறுபாடு கொண்டிருந்த காங்கிரஸ்காரர்களும் அவரைக் குறை கூறிப் பேசியும் எழுதியும் வந்தனர். காந்தியடிகளுக்கும் இது பற்றிப் புகார் சென்றது. அடிகளாரும் சிவாவின் போக்கைக் குறை கூறி 'யங் இந்தியா'வில் எழுதினார்.

இந்நிலையில் 1925-ஆம் ஆண்டின் முன்பாதியிலே திரு. சிவம் நடமாடவும் முடியாதபடி தொழு நோயால் தொல்லையுற்றார். வெளியூர் செல்வதைத் தவிர்த்துச் சென்னையில் தங்கி நோய்க்குச் சிகிச்சை பெற்றார். மரணம் நெருங்கிவிட்டதை அறிந்தபோது, தாம் நிறுவிய பாரதாசிரமமும் பாரதமாதா கோயிலை நிர்மாணிப்பதற்குத் தாம் தேர்ந்தெடுத்த பாரதாபுரமும் உள்ள பாப்பாரப் பட்டிக்குச் சென்றார்.

ஐந்து 'சுப்பிரமணியங்கள்'

தமிழ்நாட்டின் விடுதலைப் பாசறையானது திலகர் சகாப்தத்திலே ஐந்து 'சுப்பிரமணியங்களை'ப் பெற்றது. தமிழினத்தாரின் தனித் தெய்வத்தின் பெயரைப் பெற்ற அந்த ஐவர் யாவர்? அவர்கள், திரு.ஜி. சுப்பிரமணிய ஐயர், டாக்டர் எஸ். சுப்பிரமணிய ஐயர், மகாகவி சி. சுப்பிரமணிய பாரதி, தியாகி சுப்பிரமணிய சிவா, திரு.வ.வே. சுப்பிரமணிய ஐயர் ஆகியோராவர்.

இவர்களில் ஜி. சுப்பிரமணிய ஐயர், தமது 66-வது வயதில் 1916 ஏப்ரல் 18-இல் மறைந்து விட்டார். எஞ்சியிருந்த நான்கு சுப்பிரமணியங்களிலே கவிச் சக்கரவர்த்தி சி. சுப்பிரமணிய பாரதியார் 39-வது வயதில் 1921 செப்டம்பர் 11-இல் அமரரானார்.

விடுதலைப் பாசறை பெற்ற ஐந்து சுப்பிரமணியங்களிலே திரு.வ.வே. சுப்பிரமணியமும் திரு. சுப்பிரமணிய சிவாவும் புரட்சி உள்ளம் படைத்தவர்களாக விளங்கினர். இவர்களிலே முன்னவர் 3-6-25-இல் நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த சேரன் மாதேவியிலும், பின்னவர், 23-7-25-இல் தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த பாப்பாரப்பட்டிலும் இயற்கை எய்தினர். இந்த நான்கு சுப்பிரமணியங்களோடு ஐந்தாவது சுப்பிரமணியத்தையும் பெற்றிருந்தது விடுதலைப் பாசறை. அவர் டாக்டர் எஸ். சுப்பிரமணிய ஐயர் ஆவார். இந்தப் பெருமகனார் தமிழகத்திற்கு துரதிருஷ்ட ஆண்டாக விளங்கிய 1925 -ஆம் ஆண்டு பிறப்பதற்கு 28 நாட்களுக்கு முன்பே அமரரானார்.

தமிழகத்தைப் பிடித்த துரதிருஷ்டம் விடுதலைப் பாசறையிலே தலைமை பெற்றிருந்த வங்கத்திற்கும் வாய்த்தது. 'இந்திய தேசியத்தின் தந்தை' எனப் புகழப் பெற்ற - 'முடி சூடா மன்னர்' என்று தாதாபாய் நௌரோஜி போன்றவர்களாலும் அழைக்கப்பட்ட சுரேந்திரநாத் பானர்ஜி 27-8-26-இல் காலமானார். இவர் மறைவதற்கு இரண்டு திங்களுக்கு முன்புதான் 'தேசபந்து' என்னும் சிறப்புப் பெயரால் பாரதத்தில் உள்ள கோடிக்கணக்கான

மக்கள் தங்கள் வாய் மணக்க அழைத்த சித்தரஞ்சன் தாசர் டார்ஜிலிங்கில் காலமானார்.

பாரதத் தாய் அழுகை!

எமன்கூட பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குத் துணை நின்றானோ என்று சொல்லத்தக்க வகையிலே 12-12-24 முதல் 23-8-25 வரையுள்ள ஒன்பது திங்களுக்குள்ளே ஐந்து தேசபக்த மாணிக்கங்களை - விடுதலைப் போர்க்களத்தின் துணைத் தளபதிகளின் உயிர்களை - எமன் கொள்ளை கொண்டான். இந்த உத்தம மைந்தர்களை அடுத்தடுத்து இழந்த மாணிக்கங்களைப் பற்றிச் சிறிது விரிவாகவே அறிந்துகொள்ள முயல்வோம்.

சிவாவின் வீர வரலாறு

சுப்பிரமணிய சிவா 41 வயதிலே காலமானார். அந்தக் குறைந்த வயதுக்குள்ளேயே துரதிருஷ்டசாலியான அவர் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்தார். மூன்று முறை மொத்தம் பதின்மூன்றரை ஆண்டு - சிறைத் தண்டனைகளைப் பெற்றார். 'பாரதிய மதம்' என்பதாக ஒரு புது மதத்தையே படைக்கச் சிவா முயன்றார். அந்தப் புது மதத்திற்கென பிரம்மச்சாரிப்படை யொன்றைத் திரட்டினார். அந்தப் பிரம்மச்சாரிகள் தங்கி வாழச் சென்னையிலும் காரைக்குடியிலும் பாப்பாரப்பட்டியிலும் 'பாரத ஆசிரமங்கள்' படைத்தார்.

தேசம் விடுதலை பெறும்வரை திருமணம் செய்துகொள்வ தில்லையென்று சத்தியம் செய்து கொடுப்பவர்களையே பாரத ஆசிரமத்தில் சேர்த்துக் கொண்டார். பாரதியாரின் இலக்கியங் களையும் வீர சிவாஜியின் தீர வரலாற்றையும் ஆசிரம சந்தியாசி கள் படித்தாக வேண்டுமென்ற நிபந்தனையை ஏற்படுத்தினார்.

பாரத மாதாவுக்குத் தமிழகத்தின் பல ஊர்களிலே திருக் கோயில்கள் எழுப்பத் திட்டமிட்டார். அதற்குத் தொடக்கமாக பாப்பாரப்பட்டியிலே தேசபந்து சித்தரஞ்சன் தாசரைக் கொண்டு 1923 -இல் பாரத மாதாகோயிலுக்கு அடிக்கல் நாட்டு விழா நடத்தினார். பிற்காலத்தில் தமிழகத்திலே பல்வேறு துறைகளில் சிறப்புப் பெற்ற தேசபக்தர் பலர் திரு. சிவாவைத் தங்கள் குருநாதராகக் கொண்டனர். அவர்களில் 'கல்கி' பத்திரிகை மூலம் புகழ் பெற்ற திரு.எஸ். சதாசிவமும் ஒருவராவார்.

கப்பலோட்டிய தமிழரின் வலது கரமாகத் திகழ்ந்த பெருமையும் திரு. சிவாவுக்கு உண்டு. இந்த இரு பெரும் வீரர்களுக்கும் நாடு கடத்தல் தண்டனை தந்த நீதிபதி பின்கே, ''திரு. சிவா, சிதம்பரம் பிள்ளை கையில் அகப்பட்ட கோல்'' என்று தமது தீர்ப்பிலே கூறினார். 'திலகருக்கு அடுத்தப்படியாகக் கப்பலோட்டிய தமிழரைத்தான் தனது வழிகாட்டியாகக் கொண்டிருந்தார் சிவா' என்று 'நான் கண்ட நால்வர்' என்னும் நூலில் கூறுகிறார், திரு.வெ. சாமிநாத சர்மா. ''1908- இல் முதன் முதலாக சிதம்பரம் பிள்ளையுடன் சிறை செல்லும் பாக்கியம் பெற்றேன்'' என்று 1924-இல் தம்மீது அரசு நிந்தனை வழக்கு நடைபெற்றபோது சிவா கூறினார்.

ஐயர் அமரரானார்!

சிவா மறைவதற்கு ஏழு வாரங்களுக்கு முன்பு திரு.வ.வே.சு. ஐயர் மறைந்தார். அப்போது அவருக்கு வயது 42. சட்டம் படித்து, முதலில் திருச்சியிலும் பின்னர் பர்மாவின் தலைநகரான ரங்கூனிலும் வக்கீல் தொழில் புரிந்தார். பாரிஸ்டர் படிப்புக்காக 1907-இல் லண்டனுக்குச் சென்றார். அங்கு மராத்திய மாவீரரான சவர்க்காரின் சீடரானார். வெடி குண்டுகளின் மூலம்தான் நாட்டிற்கு விடுதலை தேடமுடியும் என்று நம்பினார். லண்டனி லிருந்த 'இந்தியா விடுதி' என்னும் ஆயுதப் புரட்சியில் நம்பிக்கை கொண்டு இந்திய இளைஞர்களின் பயங்கரப் பாசறையில் ஐயர் சேர்ந்தார். அந்தப் பாசறையை லண்டன் போலீசார் கலைத்த போது சவர்க்காருடன் சேர்ந்து பாரிசுக்குச் சென்றார். அங்கு சவர்க்கார் கைதுசெய்யப்பட்டதும் அவருடைய ஆலோசனைப்படி மாறுவேடம் பூண்டு இந்தியாவுக்குத் திரும்பினார். இங்கும் பிரெஞ்சு இந்தியா எனப்பட்ட புதுவையிலே பத்தாண்டுக்காலம் 'வனவாச' வாழ்க்கை நடத்தினார்.

கலெக்டர் ஆஷ் கொலைக்கு வ.வே.சு. ஐயரைக் காரணமாக்கு கிறது ரௌலட் கமிட்டியின் அறிக்கை. 1920-இல் இரண்டாவது மகாயுத்தம் முடிந்ததையொட்டி அரசியல் குற்றவாளிகளுக்கு அரசு பொது மன்னிப்பு அளித்து அறிக்கை வெளியிட்டது. அதன்பின் வ.வே.சு. ஐயர் சென்னைக்கு வருகை தந்தார்.

இங்கு 'தேச பக்தன்' பத்திரிகையின் ஆசிரியப் பொறுப்பை ஏற்றார். அதில் வெளியான அரச நிந்தனைத் தலையங்கத்திற்காக 9 மாதக் கடுங்காவல் தண்டனை பெற்றார். பின்னர், அப் பொறுப்பைவிட்டு விலகி, 1922-இல் நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த சேரன்மாதேவி என்னும் ஊரிலே பரத்துவாஜ ஆசிரமம்

என்னும் பெயரில் தமிழ்க் குருகுலம் ஒன்றை நிறுவினார். தாய் மொழியான தமிழைப் பிரதான மொழியாகக்கொண்ட தேசியக் கல்வியை இளைஞர்களுக்கு அளிப்பதற்கென்றே அந்தக் குருகுலத்தை அவர் படைத்தார். தமிழ்நாடு காங்கிரசிடமும் நிதி உதவி பெற்று அந்த ஆசிரமத்தை மூன்றாண்டுக் காலம் கட்டி வளர்த்தார். ஆசிரமத்தின் தலைவராக இருந்த நிலையிலே 'பால பாரதி' என்னும் பெயரில் மாதாந்திர இலக்கிய ஏடு ஒன்றையும் நடத்தி வந்தார்.

ஆசிரமத்தில் சேர்ந்த மாணவர்களிலே அந்தணரா னோருக்குத் தனியாக உணவு படைக்கும் வழக்கத்தை - அந்த மாணவர்களின் பெற்றோர்களுடைய விருப்பத்திற்கேற்ப - அனுமதித்தார். பிராமண மாணவர்களிலும் சிலரே இச் சலுகையை தாங்களே விரும்பிப் பெற்றனர். இதனை டாக்டர் பி. வரதராசுலு நாயுடு, ஈ.வெ. ராமசாமி நாயக்கர் ஆகிய தேசியத் தலைவர்கள் எதிர்த்தனர். இந்த எதிர்ப்பு ஒரு வகுப்பு வாத இயக்கமாகவே உருவெடுத்தது. காந்தியடிகளே தலையிட்டு மத்தியஸ்தம் பேச வேண்டிய அளவுக்கு எதிர்ப்பு வளர்ந்தது.

திரு. ஐயர், ஆசிரமத்தில் அந்தணரானோருக்குத் தனி யிடத்தில் உணவளிக்கும் வழக்கத்தை விட அடியோடு மறுத்து விட்டார். தமக்குச் சாதி உயர்வு தாழ்வில் நம்பிக்கை யில்லை யென்றாலும், மாணவர்களின் பெற்றோருக்கு அளித்த உறுதி மொழியைக் காப்பாற்ற வேண்டும் என்று கூறிவிட்டார். உண்மையில் ஐயர் நாள்தோறும் ஆசிரமத்திலுள்ள பிராமண ரல்லாத பிள்ளைகளுடன் அமர்ந்து உணவு கொள்வதைத் தம்மளவில் வழக்கமாகக் கொண்டிருந்தார்.

இந்நிலையில் 3-6-25 அன்று தம்முடைய அருமை மகள் சுபத்ராவுடனும் ஆசிரம மாணவர்கள் சிலருடனும் சேர்ந்து குளிப்பதற்காக பாபநாசம் கலியாண தீர்த்தத்திற்குச் சென்றார். அங்கு வேகமாகச் சுழன்று வரும் அருவியில் தமது மகள் விழுந்து விட, அச்சிறுமியைக் காப்பதற்காக ஐயர் முயன்றபோது, அருவிக்கு இரையானார். தந்தையும்மகளும் ஒருசேர அமரத்துவம் பெற்றுவிட்டனர்! தமிழகத்தின் வீர விளக்கு அணைந்து விட்டது! மகரிஷி ஒருவர் மறைந்துவிட்டார்!

மணி ஐயர்

டாக்டர் எஸ். மணி ஐயர் தமிழகத்தின் அரசியலில் பிரிட்டிஷ் அரசுக்கு எதிரியாகச் செயல்பட்டார். கடைசிக் காலத்தில் மிதவாதிகளோடு கலந்தாரென்றாலும், அதற்கு

முன்பு தீவிர தேசியவாதியாகவே விளங்கினார். அன்னிபெசன்ட் அம்மையார் சிறைப்படுத்தப்பட்டபோது அதனை எதிர்த்து அமெரிக்க அதிபர் வில்சனுக்குக் கடிதம் எழுதி, பிரிட்டிஷ் ஆட்சியின் கடும் கோபத்திற்கு ஆளானார். ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்து வக்கீல் தொழிலை விட்டார். சர். பட்டத்தைத் துறந்தார். 'மணி ஐயர்' என்றே இவர் அழைக்கப்பட்டார். திரு.வி.க.வும் மணி ஐயரும் உடன் பிறவாச் சகோதரர்களாக மனமொத்துத் தேச விடுதலைக்காகப் பாடுபட்டனர். ஐயர் மறைந்தபோது 'மணிமரஞ் சாய்ந்தது' என்று தலைப்பிட்டுத் தமது 'நவசக்தி' வார இதழில் திரு.வி.க. தலையங்கம் எழுதினார்.

தியாகராசரும் மறைந்தார்!

ஜஸ்டிஸ் கட்சியைத் தோற்றுவித்த சர்.பி. தியாகராசச் செட்டியார் 28-4-25-இல் காலமானார். இவரது மரணத்திற்காக தமிழ் நாட்டுத் தேசியத் தலைவர்களும் வருந்தினர். திரு.வி.க. தம் 'நவ சக்தி' வார இதழிலும், வ.வே.சு. ஐயர் தம் 'பால பாரதி' என்ற மாத இதழிலும் அனுதாபத் தலையங்கங்கள் எழுதினர்.

சர்.பி. தியாகராசச் செட்டியார் காங்கிரசின் மூலம்தான் அரசியலுக்கு வந்தாரென்றாலும், சமுதாயத்திலுள்ள சாதி ரீதியான உயர்வுதாழ்வை ஒழிக்கும் நோக்கத்துடனும் நீதிக்கட்சியைத் தொடங்கினார். அதனால், காங்கிரஸ் அவரைப் பகைத்தது. அவரும் காங்கிரசைப் பகைக்க வேண்டியதாயிற்று. இது சந்தர்ப்ப நிர்ப்பந்தத்தால் விளைந்ததாகும். ஆயினும், சர்.பி. தியாகராசர் தியாகத்தின் அரசராகவே விளங்கினார்.

ஜஸ்டிஸ் கட்சி ஆட்சியிலே சென்னை மாகாணத்தின் முதல்வராக வருவதற்கு இரண்டு முறை வாய்ப்புக் கிடைத்தும், அதனை ஏற்க மறுத்தார். பெரும் செல்வந்தராயினும், ஏழைகளின் நலனுக்காக வாழ்நாள் முழுவதும் பாடுபட்டார்.

பொதுவாக, 1925-ஆம் ஆண்டில் அரசியல் - சமுதாய விடுதலைப் பாசறைகளின் தளபதிகளைக் காலதேவன் கொள்ளை கொண்டது போல அதற்கு முன்னும் பின்னும் வேறு எந்த ஆண்டிலும் நிகழ்ந்ததில்லை. அந்த ஆண்டில் இழந்த மாணிக்கங்களைக் காலம் ஈடு செய்யவே இல்லை. விடுதலைப் போர்க்களத்திலே 'சுப்பிரமணியங்களி'ன் செல்வாக்கு அந்த ஆண்டோடு முடிவுற்றன.

1925-இல் மற்றொரு கொடுமை!

காலன் கொள்ளைகொண்ட தேச பக்த மாணிக்கங்களை இழந்த 1925 -ஆம் ஆண்டிலேயே தமிழக அளவில் விடுதலைப் பாசறையின் முன்னணித் தளபதிகளில் ஒருவராக விளங்கிய ஈ.வெ. ராமசாமியாரும், அவரைப் பின்பற்றுவோருமாக ஒரு கூட்டத்தார் காங்கிரசிலிருந்து விலகி, அதன் பகைவர்களாக மாறினர். இவர்களுடைய வெளியேற்றமானது விடுதலைப் பாசறையைப் பெரிதும் பாதித்தது. அதனால், அதுபற்றிக் குறைந்த அளவிலேனும் இங்கு விளக்குவது அவசியமாகிறது.

1925 அக்டோபர் 21,22 தேதிகளில் காஞ்சிபுரத்தில் தமிழ் மாகாண அரசியல் மாநாடு கூடியது; அந்த மாநாட்டிலே அணி பிரிந்து போராடினர் தமிழ்நாட்டுத் தலைவர்கள். அதுவரை காங்கிரசுக்கும் சுயராஜ்யக் கட்சிக்குமிடையில் நிலவி வந்த பூசல் காஞ்சிபுரம் மாநாட்டில் ஒரு போராட்டமாகவே உருவெடுத்தது. முன்னாளில் பல்லவ சாம்ராஜ்யத்தை விழுங்கிய காஞ்சியிலே காங்கிரஸ் சாம்ராஜ்யமும் சிதறுண்டது!

காஞ்சியில் கூடிய மாநாட்டில் நிகழ்ந்த ஒரு புதுமை யென்னவென்றால், பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் இந்தியாவில் நீடிக்க வேண்டுமென்ற கொள்கையுடைய ஜஸ்டிஸ்கட்சித் தலைவர் களிலே சிலரும் சிறப்பு அழைப்பின் பேரில் கலந்து கொண்டதாகும், அவர்களில் ஆர்க்காடு ஏ. இராமசாமி முதலியார், கோவை ஆர்.கே. சண்முகம் செட்டியார் ஆகியோர் முக்கிய மானவர்களாவர்.

காங்கிரசுக்கு வெளியே வளர்ந்திருந்த 'பிராமணரல்லாதார்' என்ற வகுப்புவாத உணர்ச்சி காங்கிரசையும் ஊடுருவியிருந்தது. ஜஸ்டிஸ் கட்சி ஆட்சியாரின் பிரதான கொள்கையான 'வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம்' பிராமணரல்லாத காங்கிரஸ்காரர்களி லேயும் பலரைக் கவர்ந்திருந்தது.

அவர்கள், சட்டசபைப் பிரவேசத்தை காங்கிரசானது தனது கொள்கையாக ஏற்றுக் கொள்ளுமானால், ஜஸ்டிஸ் கட்சியை காங்கிரசோடு இணைத்து விடலாம் என்று நம்பினார்கள். இது இயலாவிடினும், ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களிலே பலர் காங்கிரசிலே இரண்டறக் கலந்து விடுவார்கள் என்று நம்பினார்கள். இந்த நம்பிக்கையுடையவர்களின் செல்வாக்கு காரணமாகவே, காஞ்சி மாநாட்டில் கலந்துகொள்ள ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களிலே சிலர் வாய்ப்புப் பெற்றனர்.

திரு.சி.என். முத்துரங்க முதலியார் வரவேற்புக் குழுவின் தலைவராக இருந்து மாநாட்டை நடத்தி வைத்தார். திரு.வி. கல்யாணசுந்தர முதலியார் மாநாட்டின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். பின் வருவோர் கலந்து கொண்டனர்.

வ.உ. சிதம்பரனார், சி. இராசகோபாலாச்சாரியார், எஸ். சீனிவாச ஐயங்கார், ஈ.வெ. ராமசாமியார், 'இந்து' ஆசிரியர் ஏ. அரங்கசாமி ஐயங்கார், தோழர் வி. சக்கரைச் செட்டியார், கே. பாஷ்யம் ஐயங்கார், தோழர் எம். சிங்காரவேலு செட்டியார், 'தமிழ்நாடு' ஆசிரியர் டாக்டர் பி. வரதராசுலு நாயுடு. எஸ். சத்தியமூர்த்தி ஐயர், எம். பக்தவத்சல முதலியார், சாமி வெங்கடாசலஞ் செட்டியார், சித்தூர் இராமலிங்க ரெட்டியார் (சி.ஆர். ரெட்டி), எஸ். இராமனாதன்.

திரு.வ.உ. சிதம்பரனார் 1920-இல் நாகபுரி காங்கிரஸ் மகாசபை ஒத்துழையாமையை ஏற்றதும், காங்கிரசிலிருந்து விலகினார் என்றாலும், அதன் பகைவராகிவிடவில்லை. வாய்ப்பு நேர்ந்த போதெல்லாம் காங்கிரஸ் நடவடிக்கைகளில் கலந்து கொண்டார். அப்படித்தான் காஞ்சி மாநாட்டிலும் கலந்து கொண்டார்.

மாநாட்டின் முதல் நாள் நிகழ்ச்சியிலே அமைதி நிலவியது. அப்போதும், திரு.சி.என். முத்துரங்க முதலியார் தமது வரவேற்புரையில் ஜஸ்டிஸ் கட்சியைப் பலமாகக் கண்டிக்கும் பாகம் வந்தபோது, பிரதிநிதகளில் சிலர் அதிருப்தி காட்டி ஆட்சேபித்தனர் ஆம்; விடுதலை வீரர்களுடைய பாசறையிலே பிரிட்டிஷாரிடம் விசுவாசமுடைய ஜஸ்டிஸ் கட்சியைக் கண்டிப்பதை ஆட்சேபிப்பவர்களும் இருந்தனர்.

காஞ்சியில் கூடிய மாகாணக் காங்கிரஸ் மாநாட்டின் இரண்டாம்நாள் நடவடிக்கையிலே முன்னணித் தலைவர்களிடையில் கருத்து மோதல் ஏற்பட்டது. அது, இருவகைப் பட்டதாக இருந்தது. ஒருவகை சட்டசபைப் பிரவேசத்திற்குக் காங்கிரசே பொறுப்பேற்க வேண்டுமென்று திரு.எஸ். சீனிவாச ஐயங்கார் முன்மொழிந்த தீர்மானம் பற்றியது. மற்றொரு வகை, அப்போது ஜஸ்டிஸ் கட்சியின் கொள்கையாகக் கருதப்பட்ட வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை காங்கிரஸ் ஏற்க வேண்டுமென்று கோரி ஈ.வெ. ராமசாமியார் முன்மொழிந்த தீர்மானம் பற்றியது.

ஐயங்கார் தீர்மானம்

மாநாட்டில் திரு.எஸ். சீனிவாச ஐயங்கார் முன்மொழிந்த தீர்மானம் வருமாறு:

''இப்போது, சுயராஜ்யச் கட்சியார் நடத்திவரும் ராஜ்யத் திட்டத்திலே குறைவுபடாமல் இன்னும் தீவிரமாக காங்கிரஸ் ராஜீய வேலைத் திட்டத்தை நடத்திச் செல்ல வேண்டுமென்றும், இனி, தனிப்பட்ட சுயராஜ்யக் கட்சி வேண்டாமென்றும், இம்மாநாடு கான்பூரில் கூடவிருக்கும் காங்கிரஸ் மகாசபைக்குச் சிபாரிசு செய்கிறது.''

இத் தீர்மானத்தை டாக்டர் வரதராசுலு நாயுடு வழிமொழிந்து பேசினார். இத்தீர்மானத்திற்கு அந்நாளில் புகழ்மிக்க தொழிற்சங்க வாதியாக விளங்கிய திரு.எம். சிங்காரவேலு செட்டியார் கீழ்க் கண்டவாறு திருத்தப் பிரேரணை யொன்றை முன்மொழிந்தார்:

''சட்டசபைகளில் அதிகார விஷயங்களில் ஒத்துழை யாமையைக் கடைப்பிடித்து அரசாங்கத்தின் நடவடிக்கை களை ஸ்தம்பிக்கச் செய்ய வேண்டிய முறைகளை காங்கிரஸ் ஏற்கவேண்டுமென்றும், காங்கிரஸ் இதையேற்காவிட்டால் சுயராஜ்யக் கட்சியினர் சட்ட சபைக் கமிட்டியிலாவது வேறு உத்தியோகங்களிலாவது பதவியேற்காமல் அரசியலை ஸ்தம்பிக்கச் செய்ய வேண்டுமென்றும், அதுவும் பயன்படா விட்டால், முழு ஒத்துழையாமையைக் கடைப் பிடித்துச் சுயராஜ்யம் பெறவேண்டுமென்றும் இம்மாநாடு கான்பூர் காங்கிரசுக்குச் சிபாரிசு செய்கிறது.''

இந்தத் திருத்தத்தைத் திரு. இராமபத்ர உடையார் வழிமொழிந்தார்.

ஆதரவும் எதிர்ப்பும்

திரு.எஸ். இராமநாதன், தீர்மானத்தை எதிர்த்துப் பேசினார். பெரியார் ஈ.வெ.ரா., தீர்மானம் திருத்தம் ஆகிய இரண்டையுமே எதிர்த்துப் பேசினார். இத் தீர்மானம் நிறைவேறி விட்டால் சுயமரியாதையுள்ள மிதவாதிகளோ, ஜஸ்டிஸ் கட்சியினரோ காங்கிரஸில் வந்து சேர மாட்டார்கள் என்று இராமநாதன் கூறினார்.

திரு.எஸ். சத்தியமூர்த்தி அசல் தீர்மானத்தை ஆதரித்துப் பேசினார். 'ஐயங்காரின் அசல் தீர்மானம் நிறைவேறினால் ஜஸ்டிஸ் கட்சியாரும் மிதவாதிகளும் காங்கிரசில் வந்து சேர

மாட்டார்கள்' என்று திரு.எஸ். ராமநாதன் சொன்னதற்கு, ''எல்லோரும் வருவதற்கு இங்கே என்ன சமாராதனையா நடக்கிறது?'' என்று ஐயர் கேட்டார்.

ராஜாஜியின் கருத்தைத் தெரிந்துகொள்ள மாநாட்டினர் விரும்பினர். அதன் பேரில் ராஜாஜி பேசியபோது, அசல் தீர்மானம் தேவையற்றதென்று கூறினார். ''சட்டசபையில் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று சுயராஜ்யக் கட்சியினருக்கு ஆலோசனை கூறுவதை விட்டு, அவர்கள் விருப்பப்படி சமயோசிதமாக நடந்து கொள்ள அவர்களை விட்டு விடுவதே நல்லது'' என்று ராஜாஜி கூறினார்.

பின்னர், திரு.எஸ். சீனிவாச ஐயங்கார், ஒற்றுமையை உருவாக்கக் கருதி, தாம் கொண்டு வந்த தீர்மானத்தினால் பிளவு ஏற்படும் போலிருப்பதால் அதனைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுவதாகக் கூறினார். இதன்பின், காஞ்சி மாநாட்டில் காங்கிரஸ் பிளவுபடுவதற்கிருந்த ஒரு அபாயம் சமாளிக்கப்பட்டது.

புயல் புகுந்தது!

அடுத்து, ஈ.வெ. இராமசாமியார் கொடுத்திருந்த தீர்மானத்தின் காரணமாக காஞ்சி மாநாட்டிலே புயல் வீசியது. அத் தீர்மானம் வருமாறு:

> ''தேசிய முன்னேற்றத்திற்கு இந்து சமூகத்தாருக்குள்ளும் பற்பல சாதியாருக்குள்ளும் பரஸ்பர நம்பிக்கையும் துவேஷமின்மையும் ஏற்பட வேண்டுமாகையால் ராஜீயச் சபைகளிலும், பொது ஸ்தாபனங்களிலும், பிராமணர், பிராமணரல்லாதார், தீண்டாதார் எனக்கருதப்படுவோர் என்ற இம்மூன்று பிரிவினருக்கும் தனித்தனியாக ஜனத் தொகை விழுக்காடு தங்கள் தங்கள் சமூகத்திலிருந்து பிரதிநிதிகள் தேர்ந்தெடுத்துக் கொள்ள உரிமை ஏற்படுத்த வேண்டுமென்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.''

இத் தீர்மானம் ஏற்கெனவே விஷயாலோசனைக் கமிட்டியால் நிராகரிக்கப்பட்டுவிட்டது. அப்படியிருந்தும், 25 பிரதிநிதிகளின் கையொப்பத்தைப் பெற்று, பகிரங்க மாநாட்டிலே தமது தீர்மானத்தை ஈ.வெ.ரா. முன்மொழியவும், எஸ். இராமநாதன் வழிமொழியவும் முயன்றனர்.

வெளி நடப்பு

மாநாட்டுத் தலைவர் திரு.வி. கலியாணசுந்தரனார், 'தீர்மானம் ஒழுங்கற்றது' என்று கூறி, அதைப் பிரேரணை

செய்வதற்கு அனுமதி தர மறுத்துவிட்டார். தலைவரின் தீர்ப்பை எதிர்த்து ஈ.வெ.ரா. மாநாட்டிலிருந்து வெளியேறினார். அவரைப் பின்பற்றித் திரு.எஸ். இராமநாதனுள்ளிட்ட வேறு சிலரும் வெளி நடப்பு செய்தனர். இதனையடுத்து இவர்கள் காங்கிரசிலிருந்தே வெளியேறிவிட்டனர்.

'வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்' என்பது, சட்டசபைப் பதவிகளிலும், அரசாங்க உத்தியோகங்களிலும் பிராமணர் தங்கள் சதவிகிதத்திற்கும் அதிகமாகப் பெற்று வந்ததைத் தவிர்க்க பிராமணர், பிராமணரல்லாதார், தாழ்த்தப்பட்டோர் என்ற வகுப்பு அடிப்படையில் சட்டசபைப் பதவிகளையும் அரசு உத்தியோகங் களையும் பகிர்ந்தளிக்க வேண்டுமென்ற கோரிக்கையாகும்.

காஞ்சியில் தமிழ் மாகாண காங்கிரஸ் மாநாடு நடந்த போது சட்டசபைப் பிரவேசத்தை காங்கிரஸ் அதிகார பூர்வமாக ஏற்றிருக்கவில்லை. ஏற்க வேண்டுமென்று எஸ். சீனிவாச ஐயங்கார் கொண்டு வந்த தீர்மானம் ஈ.வெ.ரா.வின் எதிர்ப்பால் திரும்பப் பெறப்பட்டுவிட்டது.

நிராகரித்ததேன்?

இந்நிலையில், 1920-இல் நாகபுரி காங்கிரஸ் தீர்மானித்தப் படி, சட்டசபைப் பகிஷ்காரமே அதன் கொள்கையாக இருந்தது. ஒத்துழையாமை இயக்கம் கைவிடப்படாததால், அரசாங்க உத்தியோகங்களை இந்தியர் ஏற்கக் கூடாதென்ற கொள்கையும் அமுலிலிருந்தது. இந்தக் காரணங்களாலேயே ஈ.வெ.ரா.வின் வகுப்புரிமைத் தீர்மானத்தை முன்மொழிய திரு.வி.க. அனுமதிப்பதற்கில்லாத நிலைமை இருந்தது. இதனை அவரே கூறக் கேட்போம்:

''காஞ்சி மாநாடு காங்கிரஸ் சார்பில் கூட்டப்பட்டதேயன்றிச் சுயராஜ்யக் கட்சி சார்பிலே கூட்டப்படவில்லை. சட்டசபை நுழைவிற்குரிய கட்சி சுயராஜ்யக் கட்சியேயன்றிக் காங்கிரஸ் அன்று என்பது எவரும் அறிந்ததொன்று. சட்டசபை நுழைவு சுயராஜ்யக் கட்சியார் வயமே பட்டுக் கிடக்கிறது. இவ்வாறாகக் காங்கிரஸ் சார்பிலே கூடியுள்ள மாநாடு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்கு எவ்வாறு இடந்தரும்? வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவப் போர் சுயராஜ்யக் கட்சி மாநாட்டுக்குள் நுழையலாமேயன்றிக் காங்கிரஸ் மாநாடுகளில் நுழையலாகாது. இக்காரணம் பற்றி மாநாட்டுத் தலைவர் சட்டசபைக் குறிப்போடு

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவங் கொண்ட தீர்மானம் ஒழுங்கீன மெனத் தள்ளிவிட்டனர்.''

(திரு.வி.க. வின் வாழ்க்கைக் குறிப்புகள் பக்; 372)

ஈ.வெ.ரா.வின் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத் தீர்மானம் காஞ்சி மாநாட்டில் நிராகரிக்கப்பட்டது கொள்கை அடிப் படையில் அல்ல; சட்டசபை பகிஷ்காரத்தையும், அரசுடன் ஒத்துழையாமையையும் கடைப்பிடித்து வந்த காங்கிரஸ் மாநாட்டில் வகுப்புரிமை பற்றிய தீர்மானத்தைப் பற்றி விவாதிப்பதற்கே சந்தர்ப்பமில்லாததால் அது ஒழுங்கற்றது என்று சொல்லித் தள்ளப்பட்டது.

முந்தைய ஆண்டுகளில் நடந்த தமிழ் மாகாண காங்கிரஸ் மாநாடுகளிலும் ஈ.வெ.ரா. வகுப்புரிமைத் தீர்மானத்தைக் கொடுத்தார். அப்போதும் காஞ்சியில் சொல்லப்பட்ட காரணத்தாலேயே தீர்மானம் நிராகரிக்கப்பட்டது.

காங்கிரஸ் நிலை

காங்கிரஸ் மகாசபை அன்றுங்கூடச் சமுதாயப் பிரச்னை யிலே தாழ்த்துப்பட்ட - பிற்பட்ட சாதிகளுக்கு நீதி வழங்குவதைத் தன் கொள்கையாகக் கொண்டிருந்தது. அந்த வகையில்தான் வைக்கம் சத்தியாக்கிரகத்தைக் கேரள மாகாணக் காங்கிரஸ் நடத்தியது. தமிழ்நாடு காங்கிரசும் அதற்கு ஆதரவளித்தது, காங்கிரஸ் மேலிடமும் ஒத்துழைத்தது. ஆனால், சட்டசபைப் பதவிகளையும் அரசு உத்தியோகங்களையும் ஏற்கக்கூடாதென்ற ஒத்துழையாமைக் கொள்கையைக் காங்கிரஸ் கடைப்பிடித்த காரணத்தால், அந்தத் துறைகளிலே இந்துக்களில் தாழ்த்தப்பட்ட - பிற்பட்ட சாதிகளுக்கு விகிதாசார அடிப்படையில் பதவிகள் வழங்கக் கோரும் வகுப்புரிமைத் தீர்மானத்தை அன்றைய காங்கிரஸ் மாநாட்டிலே பிரேரேபிக்க திரு.வி.க. அனுமதிக்காத தால், வகுப்புரிமைக்குக் கொள்கையளவில் அவரோ, காங்கிரசோ எதிரிகளாக இருந்தார்களென்று கருதுவதற்கில்லை.

காந்திஜியின் கருத்து

ஒரு சந்தர்ப்பத்தில் நீதிக்கட்சியின் தலைவர்களான சர்.ஏ.டி. பன்னீர்செல்வமும் த.வே. உமாமகேசுவரம் பிள்ளையும் காந்தியடி களை யணுகி, வகுப்புரிமை அடிப்படையில் பிராமணருக்கும் பிராமணரல்லாதாருக்கு மிடையில் சமரசம் செய்து வைக்க வேண்டுமென்று கேட்டபோது, அடிகள் கூறியதாவது:

''ஒத்துழையாமை இயக்கத்தை நடத்திவரும் உத்தியோகங்களைச் சாதிவாரி பங்கு போட்டுக் கொள்வதில் ஏற்பட்டுள்ள சண்டையை எப்படித் தீர்த்துவைக்க முடியும்? இந்தப் பிரச்சினையிலே நான் பிராமணர்களுக்கு யோசனை மட்டுமே சொல்ல முடியும்.

''பிராமணர் - பிராமணரல்லாதார் போராட்டத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் பிராமணர்கள் சரணாகதி அடைந்துவிட வேண்டும். இதுதான் அவர்களுடைய கடமை. பிராமணரல்லாதார் எத்தனை இடங்கள் கேட்கிறார்களோ அத்தனை இடங்களையும் அளித்துவிட வேண்டும், என்னுடைய அதிகாரத்தில் அது இருந்தால், அவர்கள் கேட்பதற்கு மேலும் சில இடங்களை அளிப்பேன். பிராமணர்கள் மீது கொண்டுள்ள அவநம்பிக்கையால் தான் பிராமணரல்லாதார் இவ்வாறு இடங்கள் கேட்கிறார்கள்.''

(''தமிழகத்தில் பிறமொழியினர்''; பக். 163-64)

ராஜாஜி சொன்னது

அடிகள் கூறிய இதையே மூதறிஞர் ராஜாஜியும் ஒரு சந்தர்ப்பத்தில் பிராமணர்களுக்குக் கூறினார். 1926-இல் நடந்த சென்னை மாகாண சட்டசபைத் தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சி படுதோல்வியுற்றது. அப்போது சுயராஜ்யக் கட்சியின் சார்பில் வெற்றிபெற்ற டாக்டர் யூ. ராமராவ் அவர்களுக்கு நடந்த பாராட்டுக் கூட்டத்திலே பேசியபோது ராஜாஜி கூறியதாவது:

''இங்கே பெரும்பாலோர் பிராமணர்களாக யிருப்பதால் அவர்களுக்கென்று சில வார்த்தைகள் கூறுகிறேன். ''உத்தியோகம், உத்தியோகம்'' என்று வயிற்றுப் பிழைப்பு வேட்டையில் ஈடுபட்டு, பிற வகுப்பாரின் பொறாமைக்கும் பகைமைக்கும் ஏன் நீங்கள் ஆளாக வேண்டும்?

''தேர்தலில் டாக்டர் ராமராவ் போன்றவர்களை நிறுத்தி வெற்றிபெற வைத்துவிட்டதால் மட்டும் இந்தப் பகைமை போய் விட்டதாக எண்ணிக் கொள்ள வேண்டாம். உத்தியோகப்போட்டி உள்ளளவும் பகைமையும் துவேஷமும் இருக்கத்தான் செய்யும். எளிய வாழ்க்கையை மேற்கொள்வதன் மூலம் இந்தப் போட்டியிலிருந்து நீங்கள் ஏன் விலகிக் கொள்ளக் கூடாது?

''அக்காலத்தில் பிராமணர்கள் பிறருடைய வேலைகளுடன் போட்டியிட வரவில்லை. அவர்களுடைய சந்ததிகளாகிய

நீங்கள் ஏன் அவர்களைப் பின்பற்றக்கூடாது? பிராமணர் களிடம் மற்றவர்களுக்குள்ள பகைமையைப் போக்க இதுதான் வழி. அவர்களை எதிர்த்துப் போராடுவதால் துவேஷம் வளருமேயன்றி வேறில்லை. ஜஸ்டிஸ் கட்சி தேர்தலில் தோற்றுவிட்டதால் பகைமையாவது உத்தியோகப் போட்டியாவது தீர்ந்து விடவில்லை.''

(திரு.வி.க.வின் 'நவ சக்தி' (3-12-26) இதழில் வெளியானபடி.)

காந்திஜியும் ராஜாஜியும் கூறியவற்றிலிருந்து வகுப்புரிமைக் கோரிக்கையை அவர்களோ அவர்கள் தலைமையைப் பெற்றிருந்த தமிழ்நாடு காங்கிரசோ என்றுமே கொள்கையளவில் எதிர்த்த தில்லை யென்பது புலனாகும். 1928-இல் சேலம் நகரில் நடைபெற்ற சேலம் மாவட்ட காங்கிரஸ் மாநாட்டிற்குத் தலைமை வகித்த வ.உ. சிதம்பரனார், தமது தலைமையுரையிலே வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை ஆதரித்தார்.

வரலாறு காட்டும் உண்மை இது. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைக் கொள்கையாகக் கொண்டிருந்த ஜஸ்டிஸ் கட்சியானது அந்நாளில் நடந்து வந்த விடுதலைப் போருக்கு முதல் நம்பர் எதிரியாகச் செயல்பட்டு வந்தது. தேசமே துண்டாடப்படுவதற்குக் காரணமாக இருந்த முஸ்லிம் லீக்கூட ரௌலட் சட்ட எதிர்ப்பு, கிலாபத் கிளர்ச்சி, வேல்ஸ் இளவரசர் பகிஷ்காரம் ஆகியவற்றிலே இந்திய தேசிய காங்கிரசுடன் கைகோத்து நின்று செயல்பட்டது. இம்மாதிரியான தேசியப் பிரச்சினைகளில் கூட, காங்கிரசுடன் ஒத்துழைக்க ஜஸ்டிஸ் கட்சி அந்நாளில் முன்வரவில்லை.

காங்கிரஸ் ஆட்சியிலே...

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை ஜஸ்டிஸ் கட்சி வற்புறுத்தியதென்றாலும், அதற்காக, 'கம்யூனல் ஜி.ஓ.'பிறப் பித்தது அந்தக் கட்சியல்ல. காங்கிரசின் பார்லிமெண்டரிக் கிளையாக விளங்கிய சுயராஜ்யக் கட்சியின் ஆதரவைப் பெற்று இயங்கிய டாக்டர் பி. சுப்பராயன் தலைமையிலான சுயேச்சை அமைச்சரவைதான் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்குச் சட்ட ரீதியான உத்தரவாதத்தை ஏற்படுத்தியது என்பதையும் இங்கு நினைவூட்டவேண்டும். ஆம்; 'கம்யூனல் ஜி.ஓ.' பிறந்தது டாக்டர் சுப்பராயன் ஆட்சியில்தான். திரு. சேதுரத்தினம் ஐயர் என்ற பிராமணரையும் கொண்டிருந்த அமைச்சரவைதான் இதனைச்

சாதித்தது. டாக்டர் சுப்பராயன், திருமதி. ராதாபாய் என்ற பிராமணப் பெண்ணை மணந்து வாழ்ந்தவராவார்.

1937-இல் ராஜாஜியின் தலைமையில் இரண்டரை ஆண்டு காலம் சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் ஆட்சி நடைபெற்ற போதும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அமுல் நடத்தப்பெற்ற தென்பதையும், அதற்கு காங்கிரஸ் அரசு எத்தகைய எதிர்ப்பும் காட்டவில்லை யென்பதையும் இங்கு நினைவூட்ட வேண்டும்.

நாடு சுதந்திரம் பெற்றபின், 1951-இல் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறை சென்னை மாகாண உயர்நீதி மன்றத்தில் அடிபட்டுவிட்டது. அப்போதிருந்த காங்கிரஸ் ஆட்சி அதற்குப் புத்துயிரளிக்க முயன்றது. அதற்காக, அரசியல் சட்டத்தையே திருத்தியது பிராமணரான நேருஜியின் தலைமையைப் பெற்றிருந்த மத்திய அரசு. இந்திய அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த ஓராண்டுக்குள்ளாக அதில் செய்யப்பட்ட முதல் திருத்தம் சென்னை மாகாணத்திற்கே வுரிய வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் பற்றியதுதான். ஆம்; ஜஸ்டிஸ் கட்சி கோரியதும், சென்னை மாகாண சுயேட்சை அமைச்சரவை செய்ததும் 'கம்யூனல் ஜி.ஓ.' என்ற அளவில்தான்! ஆனால், காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேதான் வகுப்புரிமை நீதி இந்திய அரசியல் சட்டத்தில் ஏறியது. இதனால், இந்தியா முழுவதிலுமே வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் நடைமுறைக்கு வரவும் வழி பிறந்தது.

காஞ்சி மாநாட்டிலிருந்து வெளியேறிய பின், காங்கிரசுக்கு அடியோடு தலைமுழுக்குப் போட்டார் ஈ.வெ.ரா. ஆம்; 1919 தொடங்கி 1925 வரை காங்கிரசுடன் தமக்கிருந்த தொடர்பைத் துண்டித்துக் கொண்டார். இது, 1925 ந்தாம் ஆண்டில் நிகழ்ந்த மிகவும் துரதிருஷ்டமான சம்பவமாகும். ஈ.வெ.ரா. விலகியதால் தமிழ்நாடு காங்கிரஸ் தனது ரத்தத்தின் ரத்தமான அவரை முதல் நம்பர் எதிரியாக மிக நீண்ட காலம் அரசியல் களத்திலே சந்திக்க வேண்டி ஏற்பட்டது.

கான்பூர் காங்கிரஸ்

1925 டிசம்பர் மாத இறுதியில் உத்தரப் பிரதேசத்திலுள்ள கான்பூர் நகரில் திருமதி சரோஜினிநாயுடு தலைமையில் 39-ஆவது காங்கிரஸ் மகாசபை கூடியது. இதிலே காந்திஜியும் கலந்து கொண்டு அதுவரை தாம் ஓராண்டு காலம் வகித்து வந்த காங்கிரஸ் தலைமைப் பொறுப்பை கவியரசியிடம் ஒப்புவித்தார். காங்கிரஸ் மகாசபைத் தலைமைப் பதவிக்கு ஒரு இந்தியப் பெண்மணி

தேர்ந்தெடுக்கப்பட்டது இதுவே முதன் முறையாகும். இதற்கு முன் 1917-இல் சென்னை வாசியான டாக்டர் அன்னிபெசன்ட் தலைமைப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டாரென்றாலும், அவர் ஐரிஷ் நாட்டவர்தானே!

சரோஜினி தேவி, இனத்தால் வங்காளியாயினும், தென்னிந்திய நாயுடு ஒருவரை மணந்தவராதலால், அவர் தலைமைப் பதவியில் அமர்ந்தது கண்டு தென்னகத்தாரும் மகிழ்ச்சி யடைந்தனர்.

கவியரசியாரின் தலைமையுரை மிகவும் சுருக்கமாக இருந்தது. கான்பூர் காங்கிரசில் விசேஷம் எதுவுமில்லை. அடுத்த ஆண்டில் நடைபெறவிருந்த சட்டசபைகளுக்கான பொதுத் தேர்தலில் போட்டியிட சுயராஜ்யக் கட்சிக்கு ஆதரவாக நிற்க கான்பூர் காங்கிரஸ் தீர்மானித்தது. முந்தைய பொதுத் தேர்தல்களின் போது காங்கிரசுக்கும் சுயராஜ்யக் கட்சிக்குமிருந்த பூசலும் போராட்டமும் கான்பூரில் தவிர்க்கப்பட்டன.

★-★-★

பயங்கரச் சோதனைகள்

1926-ஆம் ஆண்டில் பயங்கரமான பல சோதனைகளைக் காங்கிரஸ் சந்திக்கலானது. நம் தேசத்தின் பல பகுதிகளில் இந்து - முஸ்லிம் கலவரம், கட்சியிலே பிளவு ஆகிய சோதனைகள் அடுத்தடுத்து வந்து காங்கிரசை கவலைக்குள்ளாக்கின. அவற்றை ஒவ்வொன்றாக அறிய முயல்வோம்.

1926-ஆம் ஆண்டில் கல்கத்தா, அலகாபாத், டில்லி ஆகிய பெரு நகரங்கள் உள்பட வடபுலத்தில் பல நகரங்களிலே இந்து முஸ்லிம்களிடையில் கலவரம் ஏற்படலானது. கல்கத்தா நகரில் தான் கலவரம் பயங்கர வடிவத்தை எடுத்தது. தொடர்ந்து இரண்டு வார காலம் நீடித்தது. அடுத்தடுத்து நிகழ்ந்த போலீஸ் துப்பாக்கி சூடுகளால் *44* பேர் உயிரிழந்தனர். *548* பேர் படுகாயமுற்றனர் என்று அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டது. உயிர்ச் சேதம் இன்னும் அதிக அளவில் இருக்கக்கூடுமென்று பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்தன.

இந்து - முஸ்லிம் சமுதாயங்களிடையிலுள்ள அடித்தளத்து மக்கள்தான் கலகத்தில் ஈடுபட்டனர். பண்டிகை நாட்களின்போது உணவுக்காக முஸ்லிம்கள் மத்தியில் நிகழும் பசுவதையும், முஸ்லிம்களின் தொழுகை இடமான மசூதி அருகே மேளமடித்து ஒலியெழுப்பி இந்துக்கள் ஊர்வலம் நடத்துவதுமே வகுப்புக் கலவரங்களுக்குக் காரணங்களாயின.

ஒற்றுமை மறைந்தது!

இக் கலவரங்கள் பற்றி விசாரணை செய்து அறிக்கை தரும் பொறுப்பு காந்திஜியிடமும் மௌலானா முகமதலியிடமும் காங்கிரசால் விடப்பட்டது. இந்த இரு பெரும் தலைவர்களும் ஒருமனப்பட்டு ஒரே அறிக்கையைத் தரவில்லை. முரண் பாடுடைய இரு வேறு அறிக்கைகளைத் தயாரித்து வழங்கினர். இதனால், வகுப்பு வாதப் பூசல் வலுப்பெறலானது. கிலாபத்

இயக்கமும் ஒத்துழையாமையும் இணைந்து நடந்தபோது, நாட்டில் 'இந்து - முஸ்லிம்களிடையே உருவான ஒற்றுமை உணர்வு குலைந்தது. 'வந்தே மாதரம் - அல்லாஹு அக்பர்' என்னும் கூட்டுக் கோஷம் மறைந்தது. 'இந்து - முஸ்லிம் ஏக்ஹோ' என்னும் ஒற்றுமை முழக்கமும் அடங்கி விட்டது. காந்திஜி, ''இந்துக்களும் முஸ்லிம்களும் சண்டை போட்டுக் கொண்டே இருக்கவேண்டுமென்பது ஆண்டவன் தந்துவிட்ட சாபம் போலும்!'' என்று மனம் நொந்து அறிக்கை விட்டார்.

மேல் தட்டிலே...

இஸ்லாம் சமுதாயத்தின் மேல் தளத்திலுள்ள தலைவர்கள் இந்த வகுப்புக் கலவரங்களைக் கண்டு வேதனைப்பட்டனர். ஜனாப் ஜின்னா, இந்திய சட்ட சபையில் இருந்த தேசியக் கட்சியின் தலைவர் என்ற முறையில் சுயராஜ்யக் கட்சியுடன் ஒத்துழைத்து அரசுக்குத் தோல்வி மேல் தோல்வி கொடுத்துக் கொண்டிருந்தார். அலி சகோதரர்கள் இன்னமும் காங்கிரசில்தான் இருந்துகொண்டிருந்தனர். இந்தச் சூழ்நிலையிலும் நாட்டில் வகுப்புக் கலவரங்கள் அடிக்கடி நிகழ்ந்து வந்தன, மத ரீதியான பழக்கம் காரணமாக!

1926 -ஆம் ஆண்டின் இறுதியில் சுவாமி சிரத்தானந்தர் தமது இல்லத்தில் உறங்கிக் கொண்டிருக்கையில் ஒரு முஸ்லிமால் கொல்லப்பட்டார்.

தமிழகத்தில் அமைதி!

நல்ல வேளையாக தமிழகத்தில் அமைதி நிலவியது. பஞ்சத்தால் வாடிய இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் அள்ளியள்ளிக் கொடுத்த வள்ளல் சீதக்காதியும், தீந்தமிழில் சீறாப்புராணம்பாடி இஸ்லாத்தை வளர்த்த உமர் புலவரும், வள்ளலார் பக்தராக விளங்கிய ஷெய்குத்தம்பி பாவலரும் வாழ்ந்த தமிழ்நாட்டிலே வகுப்புக் கலவரம் தலைகாட்டவே இல்லை. ஒரு சமயத்தில், காந்தியடிகள், ''தமிழ்நாடு தான் எனக்கு ஆறுதலைத் தருகிறது'' என்று வாய்விட்டுச் சொன்னார்.

வடநாட்டில் வகுப்புக் கலவரம் நடந்துகொண்டிருந்த நேரத்திலே, லார்டு இர்வின் என்பார் இந்தியாவின் வைசிராயாக வந்தார். இவரும் பரஸ்பரம் பகையைத் தவிர்த்து ஒன்றுபடுமாறு இந்துக்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் மிகவும் உருக்கமான வேண்டுகோள் ஒன்றை விடுத்தார்.

வெளியேற்றம்!

இந்நிலையில் மத்திய சட்டசபைக்கும் மாநில சட்ட மன்றங்களுக்கும் பொதுத் தேர்தல் நெருங்கி வந்தது. மத்திய சட்ட சபையில் சுமார் இரண்டரையாண்டு காலம் சுயராஜ்யக் கட்சியினர் தங்களாலியன்ற அளவில் ஆட்சியை எதிர்த்துப் போராடி வந்தனர். ஆம், ஆட்சி கொண்டு வந்த தீர்மானங்கள், மசோதாக்கள், பட்ஜெட்டுகள் ஆகியவற்றைத் தோற்கடிப்பதிலே சுயராஜ்யக் கட்சி வெற்றிக்கு மேல் வெற்றி கண்டது. ஆனால், மத்திய சட்ட சபையால் நிராகரிக்கப்படும் மசோதாக்களையும் பட்ஜெட்டு களையும் வைசிராய் தன் விசேஷாதிகாரத்தால் நிறைவேற்றி அமுல்படுத்தி வந்தார். மாநிலங்களிலும் இந்த நாடகமே தொடர்ந்து நடந்து வந்தது. இதனால், சுயராஜ்யக் கட்சியினர் மத்திய, மாநில சட்ட மன்றங்கிலிருந்து 1926 மார்ச்சு 26-இல் வெளியேறினர். ஆம், பொதுத் தேர்தல் நடக்கும்வரை திரும்பவும் உள்ளே நுழைவதில்லை யென்று பிரகடனம் செய்துவிட்டு வெளியேறினர்.

மத்திய சட்டசபையிலிருந்த சுயராஜ்யக் கட்சியின் தலைவர் களிடையில் கருத்து வேற்றுமை ஏற்பட்டு, கட்சி பிளவுபட்டது. பண்டித மோதிலால் நேரு, எஸ். சீனிவாச ஐயங்கார் ஆகியோர் அரசுடன் ஒத்துழையாக் கொள்கையை வைதிகமாகக் கடைப் பிடித்து வருமாறு கட்சியை வற்புறுத்தி வந்தனர். அது பிடிக்காமல் லாலா லஜபதி ராயும் பண்டித மாளவியாஜியும் கட்சியிலிருந்து வெளியேறி, 'சுதந்தர காங்கிரஸ் கட்சி' என்னும் பெயரில் புதிய கட்சியொன்றை நிறுவினர். இந்தக் கட்சி, அரசுடன் ஒத்துழைத்தலும் ஒத்துழையாமையுமே தனது கொள்கையென அறிவித்தது. லஜபதி ராயும், மாளவியாவும் சட்டசபை உறுப்பினர் பதவியிலிருந்தும் விலகினர். பொதுத் தேர்தலில் சுயராஜ்யக் கட்சியை எதிர்த்துப் போட்டியிடவும் புதிய கட்சி தயாரானது.

பொதுத் தேர்தல்

1925 டிசம்பரில் கான்பூரில் கூடிய வருடாந்தர காங்கிரஸ் மகாசபையானது அடுத்துவரும் பொதுத் தேர்தலில் பங்கு கொள்ள காங்கிரசை அனுமதிக்கும் வகையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியதன் காரணமாக, 1926-ஆம் ஆண்டு நவம்பரில் நடந்த பொதுத் தேர்தலில் காங்கிரசும் சுயராஜ்யக் கட்சியும் கைகோத்துப் பாடுபட்டன. பண்டித மோதிலால் நேருவும் திரு.எஸ். சீனிவாச ஐயங்காரும் தேர்தல் முன்னேற்பாடுகளைக் கவனிக்கத் தேச முழுவதிலும் சுற்றுலாச் செய்தனர்.

இந்த முறை தமிழ் நாட்டிலும் தேர்தல் களத்தில் காங்கிரஸ் குதித்து விட்டது. திரு.வி.க., எஸ். சீனிவாச ஐயங்கார், எஸ், சத்தியமூர்த்தி ஐயர், ஏ. அரங்கசாமி ஐயங்கார், ஆர்.கே. சண்முகஞ் செட்டியார் ஆகியோர் தமிழ் நாடெங்கணும் கூட்டாகச் சுற்றுலாச் செய்து, காங்கிரஸ் வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கவும், அவர்களுக்குத் தேர்தல் களத்திலே வெற்றி தேடித் தரவும் பாடுபட்டனர்.

செங்கற்பட்டுத் தொகுதியிலே திரு.சி.என். முத்துரங்க முதலியார் காங்கிரஸ் சார்பிலும், ஆர்க்காடு ஏ. இராமசாமி முதலியார் ஜஸ்டிஸ் கட்சியின் சார்பிலும் போட்டியிட்டனர்.

தமிழ் நாட்டிலே...

சென்னை மாகாணத்தில் அப்போது ஜஸ்டிஸ் கட்சி ஆட்சியிலிருந்ததால் பெரும்பாலான தொகுதிகளிலே காங்கிரசுக்கும் ஜஸ்டிஸ் கட்சிக்குமே போட்டி இருந்தது. சில தொகுதிகளில் ஜஸ்டிஸ் கட்சியை எதிர்த்து நின்ற சுயேச்சைகளை காங்கிரஸ் ஆதரித்தது.

செங்கற்பட்டு மாவட்டத்தில் திரு. முத்துரங்க முதலியார் குடும்பத்திற்கு மிகுந்த செல்வாக்கு உண்டு. திரு.ஏ. இராமசாமி முதலியார் 'ஜஸ்டிஸ் கட்சியின் மலை' யென வருணிக்கப்பட்டார். இந்த இரு முதலியார்களிடையில் ஏற்பட்ட மோதல் தமிழ் நாட்டின் கவனத்தை ஈர்த்தது. திரு.வி.க. செங்கற்பட்டுத் தொகுதியில் முகாம் செய்து காங்கிரஸ் வெற்றிக்குப் பாடுபட்டார்.

திரு.எஸ். சீனிவாசய்யங்கார் தலைமையின் கீழ் தமிழ் நாட்டுக் காங்கிரஸ்காரர்களும் சுயராஜ்யக் கட்சியினரும் ஒற்றுமையுடன் ஜஸ்டிஸ் கட்சியை வீழ்த்தப் பாடுபட்டனர். காஞ்சி மாநாட்டிலிருந்து வெளியேறிய ஈ.வெ.ரா.வும், அவருடைய நண்பர்களும் இன்னமும் காங்கிரசிலிருந்தனர்.

ராஜாஜியின் நிலை

ராஜாஜி திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்தைத் தங்குமிடமாகக் கொண்டு தீண்டாமை விலக்கு, மதுவிலக்கு, கதர்

* *இந்தத் தேர்தலில் காங்கிரசின் வெற்றிக்குப் பாடுபட்ட தொண்டர்களிலே திரு. ம.பொ. சிவஞானமும் ஒருவராவார். இதுவே அவரது அரசியல் பிரவேசமாக அமைந்தது.*

வளர்ச்சி ஆகிய ஆக்க வேலைகளிலேயே கருத்துச் செலுத்தி வந்தார். அதனால், அவர் தேர்தல் வேலைகளில் வெளிப் படையாகத் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளவில்லை. ஆயினும், பண்டித மோதிலாலும் சீனிவாச ஐயங்காரும் தேர்தல் களத்தில் ராஜாஜியின் ஒத்துழைப்பை நாடி அவருக்குக் கடிதம் எழுதினர். ராஜாஜி, தமிழ் நாட்டு வாக்காளர்களுக்கு மட்டும் காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரித்து வாக்களிக்குமாறு வேண்டுகோள் விடுத்தார். அது பயன் தந்தது.

தேர்தல் முடிவிலே நாடு முழுவதிலும் மத்திய சட்ட சபைக்குக் காங்கிரஸ் போட்டியிட்ட தொகுதிகளில் பெரும் பாலானவற்றில் அதன் வேட்பாளர்கள் வெற்றி பெற்றனர். ஆயினும் பஞ்சாப், உத்தரப் பிரதேசம் ஆகிய இரு மாநிலங்களில் சுதந்திரக் காங்கிரஸ் கட்சி கணிசமான இடங்களில் வெற்றி பெற்றது.

மத்திய சட்ட சபைக்கு சென்னை நகரத் தொகுதியில் தம்மை எதிர்த்து ஜஸ்டிஸ் கட்சியின் சார்பில் போட்டியிட்ட முன்னாளைய காங்கிரஸ்காரரான திரு. வி. சக்கரைச் செட்டியாரைத் தோற் கடித்துத் திரு. எஸ். சீனிவாச ஐயங்கார் வெற்றி பெற்றார். கோவைத் தொகுதியிலிருந்து காங்கிரஸ் வேட்பாளராக டாக்டர் ஆர்.கே. சண்முகமும் மத்திய சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

சென்னை சட்ட சபைக்குரிய செங்கற்பட்டு மாவட்டத் தொகுதிகளிரண்டில் ஒன்றிலே ஜஸ்டிஸ் கட்சியின் சார்பில் போட்டியிட்ட திரு. ஏ. இராமசாமி முதலியாரைத் தோற்கடித்து திரு. முத்துரங்க முதலியார் வெற்றி பெற்றார். இந்தத் தொகுதி யிலே *1923*-ஆம் ஆண்டுத் தேர்தலில் ஏ. ராமசாமி முதலியாரிடம் திரு. முத்துரங்க முதலியார் தோல்வியுற்றார். தேர்தலில் காங்கிரஸ் போட்டியிடாத காலமது. இப்போது காங்கிரஸ் முத்திரை பெற்று முத்துரங்கனார் வெற்றி வாகை சூடினார்.

''ஈ.வெ.ரா. காங்கிரஸ் நிர்வாகியாக இருந்து கொண்டே காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு எதிராக வேலை செய்தார்'' என்று தமது 'வாழ்க்கைக் குறிப்புகள்' என்னும் நூலில் (பக். *388*) கூறுகிறார் திரு.வி.க.

காங்கிரஸ் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. சாமி வெங்கடாசலஞ் செட்டியார் சென்னை மாகாண சட்ட சபைக் காங்கிரஸ் கட்சியின் தலைவராக்கப்பட்டார். திரு.எஸ். சத்திய

மூர்த்தி அவர்கள் பல்கலைக் கழகத் தொகுதியிலிருந்து சென்னை சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஜஸ்டிஸ் கட்சியின் வீழ்ச்சி!

தமிழ்நாட்டில் ஜஸ்டிஸ் கட்சி படுதோல்வி யடைந்தது. காங்கிரஸ் ஆதரவுடன் போட்டியிட்ட சுயராஜ்யக் கட்சி வேட்பாளர்களில் பெரும்பாலோர் வெற்றி பெற்றனர். சென்னை மாகாண சட்டசபைத் தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சியை வீழ்த்துவதில் வெற்றிகாணக் காங்கிரஸால் முடிந்ததென்றாலும், அமைச்சரவை நிறுவ அது முன்வரவில்லை. காரணம், பதவி ஏற்காத கொள்கையை அது கடைப்பிடித்து வந்ததே! இந்த நிலையில் வெற்றி பெற்ற சுயேச்சையாளர்கள் அமைச்சரவை நிறுவ முன் வந்தனர். அவர்களில் டாக்டர் ப. சுப்பராயன் முதலமைச்சராக விரும்பி காங்கிரசின் ஆதரவை நாடினார். ராஜாஜிக்கு அதிலே விருப்பமில்லையென்றாலும், தலையிடாக் கொள்கையைக் கடைப்பிடித்து ஒதுங்கி நின்றார். திரு. சீனிவாசய்யங்கார் காங்கிரசின் ஆதரவு சுயேச்சை அமைச்சரவைக்கு உண்டென்று அறிவித்தார்.

இந்நிலையில், டாக்டர் ப. சுப்பராயனை முதல்வராகக் கொண்ட 'சுயேச்சை அமைச்சரவை' தோன்றியது. முதலமைச்சர் டாக்டர் சுப்பராயன் திருச்செங்கோடு தாலுக்காவில் குமார மங்கலம் ஜமீன்தாராவார். ராஜாஜியின் நண்பராகவும் விளங்கினார்.

கோகத்தி காங்கிரஸ்

நாடெங்கும் பொதுத் தேர்தல் முடிந்த ஒரு திங்களுக் கெல்லாம் 41-ஆவது காங்கிரஸ் மகாசபை தற்போது அஸ்ஸாம் மாநிலத்தின் தலைநகராக இருந்து வரும் கோகத்தி நகரில் பிரம்மபுத்ரா நதிக்கரையில் கூடியது. இதன் தலைவராக திரு. எஸ். சீனிவாச ஐயங்கார் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். திரு. ஐயங்கார், 1916 முதல் 1920 வரை சென்னை மாகாணத்தின் அட்வகேட் ஜெனரலாக இருந்து வந்தார். ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்து 1920-இல் பதவி துறந்தார். அதன் மூலம் அவரது புகழ் பாரதமெங்கும் பரவியது. பின்னர், 1923-இல் சென்னைத் தொகுதியிலிருந்து சுயராஜ்யக் கட்சி சார்பில் டில்லி சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

டில்லி சட்டசபைக் காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவ ராக இருந்து பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்துப் போராடினார். 1926-இல் பண்டித மோதிலால் நேரு இரண்டு மாத காலம்,

ஐரோப்பாவில் தங்கியிருந்தபோது, டில்லி சட்டசபை காங்கிரஸ் கட்சியின் தற்காலிகத் தலைவராகவும் இருந்து செயல்பட்டார்.

திரு. ஐயங்கார் காங்கிரசில் சேர்ந்த பின் தமிழ்நாட்டில் அது நன்கு வலுப்பெறலானது. தமது சொந்தப் பணத்தைச் செலவழித்து காங்கிரஸ் ஸ்தாபனத்தைக் கட்டி வளர்க்கப் பாடுபட்டார். பொதுத் தேர்தலில் சென்னை மாகாணத்தில் ஜஸ்டிஸ் கட்சியின் ஆட்சியை வீழ்த்திய பெருமையில் திரு. ஐயங்காருக்குப் பெரும் பங்கு உண்டு.

சிரத்தானந்தர் கொலை!

காங்கிரஸ் மகா சபை கூடவிருந்த நேரத்தில்தான் சுவாமி சிரத்தானந்தர் டில்லியில் ஒரு முஸ்லிமால் கொல்லப்பட்டார். இந்த நிகழ்ச்சி தேசத்திற்குப் பேரதிர்ச்சியைத் தந்தது. எங்கும் துக்கம் கவ்வியது. அதனால், வெகு கோலாகலமாக நடைபெற விருந்த காங்கிரஸ் தலைவர் ஊர்வலம் கைவிடப் பட்டது.

சிரத்தானந்தர் ஆரிய சமாஜி. ஆயினும், முஸ்லிம் கனவான்கள் அவரைப் பெரிதும் மதித்தனர். 1319-இல் ரௌலட் சட்ட எதிர்ப்புச் சத்தியாக்கிரகம் நடைபெற்றபோது, சுவாமிஜியை டில்லி முஸ்லிம் ஜும்மா மசூதிக்கு அழைத்து அங்கு அவரை பேசச் செய்தனர்.

தலைமையுரை

திரு. ஐயங்கார் காங்கிரஸ் மகாசபை தலைமைப் பொறுப்பை ஏற்ற இரண்டாவது தமிழராவார். 1920-இல் சேலம் சி. விசயராகவாச்சாரியார் நாகபுரியில் கூடிய காங்கிரசில் மகா சபையில் தலைமை வகித்தது இங்கு நினைவில் கொள்ளத் தக்கதாகும். ஆந்திரரான அனந்தாச்சார்லு (1891), கேரளரான சர்.சி. சங்கரன் நாயர் (1897), உருது மொழியினரான நவாப் சையது முகமது (1913), ஐரிஷ் பெண்மணியான அன்னிபெசன்ட் (1917) ஆகிய நால்வரும் காங்கிரஸ் மகாசபைத் தலைவர் பதவியைப் பெற்ற சென்னை நகரவாசிகள் என்பதனை முன்பே அறிந்தோம்.

திரு.எஸ். சீனிவாச ஐயங்காரின் தலைமையுரை மிகவும் விரிவானதாகும். அதிலே, சட்டசபைப் பிரவேசத்திற்குக் காங்கிரசே நேரடியாகப் பொறுப்பேற்க வேண்டுமென்பதனைத் தக்க சான்றுகள் காட்டி வற்புறுத்தினார். மற்றும், மாநகராட்சி, நகர மன்றம் ஆகிய ஸ்தல ஸ்தாபனங்களையும் காங்கிரஸ் தொடர்ந்து கைப்பற்றி வரவேண்டும் என்றார்.

தீண்டாமை விலக்கு, மது விலக்கு, கதர் வளர்ச்சி ஆகிய ஆக்கவழிப் பணிகளிலும் காங்கிரஸ்காரர்கள் தொடர்ந்து ஈடுபட்டு வருவதன் அவசியத்தையும் திரு. ஐயங்கார் வற்புறுத்தினார்.

கோகத்தி காங்கிரஸ் நடவடிக்கைகளிலோ, தீர்மானங் களிலோ புதுமை எதுவும் இருக்கவில்லை. வெறும் சம்பிரதாய மாகவே காங்கிரஸ் மகாசபை கூடிக் கலைந்தது. கொலையுண்ட சுவாமி சிரத்தானந்தருக்கு அஞ்சலி செலுத்தும் தீர்மானத்தைக் காந்தியடிகள் முன்மொழிய, மௌலானா முகமதலி வழி மொழிந்தார்.

1927-ஆம் ஆண்டில் சென்னை நகரில் *42*-ஆவது காங்கிரஸ் மகாசபையை நடத்துவதெனக் கோஹக் காங்கிரஸ் தீர்மானித்தது.

★-★-★

நீல் சிலைச் சத்தியாக்கிரகம்

இந்திய விடுதலைப் போரில் தமிழகத்திற்குரிய பங்கை மாவட்ட ரீதியாக ஆராய்ந்தால், நெல்லை, மதுரை மாவட்டங்கள் முன்னணியில் நிற்கின்றன வென்பது புலனாகும். திலகர் சகாப்தத்தில் திருநெல்வேலி மாவட்டமே தமிழ்நாடு முழுவதற் கும் தலைமை தாங்கியது - ஏன், ''இந்தியா முழுவதற்குமே நெல்லை மாவட்டத்திலுள்ள தூத்துக்குடி நகரம் வழிகாட்டு கின்றது'' என்று அரவிந்தரே தமது 'வந்தே மாதரம்' பத்திரிகையில் எழுதினார். திலகர் சகாப்தத்தை யடுத்ததான காந்தி சகாப்தத்திலே நெல்லை மாவட்டத்தைப் பின்னுக்குத் தள்ளும் வகையில் மதுரை மாவட்டமே தலைமை தாங்கியது.

வர்க்கப் போர்!

தொழில் முதலாளியான வெள்ளையர்களை எதிர்த்துத் தமிழகத் தொழிலாளர் நடத்திய வர்க்கப்போரில் திலகர் சகாப்தத்தில் தூத்துக்குடி முன்னோடியாக இருந்ததென்றால், அதனைப் பின்பற்றிக் காந்தி சகாப்தத்தில் மதுரை மாநகரமே தலைதூக்கி நின்றது. மதுரை ஹார்வி மில் தொழிலாளர் நடத்திய வேலை நிறுத்தத்தையும், அதனை ஒடுக்கப் போலீசார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தால் இருவர் மாண்டதையும், தொழிலாளருக்கு ஆதரவு காட்டிப் பேசியதற்காக டாக்டர் பி. வரதராசுலு நாயுடு மீது அரச நிந்தனை வழக்கு நடந்ததையும் முன்பே அறிந்தோம்.

திலகர் சகாப்தத்திலே நெல்லை மாவட்டம் சிதம்பரனாரைத் தந்ததென்றால், மதுரை மாவட்டம் சிவாவைத் தந்தது. மதுரை மாவட்டம் தனித்து நின்றும் பல போராட்டங்களை நடத்தியது. அவை ஆயுதச் சட்ட எதிர்ப்புப் போர், பிரமலைக் கள்ளர் கைரேகை எதிர்ப்புப் போர், நீல் சிலைச் சத்தியாக்கிரகம் ஆகியனவாம்.

கை ரேகைப் போர்!

பாண்டி நாட்டில் பிரமலைக் கள்ளர் என்னும் வகுப்பாரைக் கொடுமைப்படுத்தியது ஆங்கில அரசு. அவர்கள் ஆயுத மேந்துவதற்குத் தடை விதித்தது. இரவில் காவல் நிலையங்களில் படுத்துறங்க வேண்டுமென்றும் ஆணை பிறப்பித்தது. மற்றும் அவர்களிடம் கை ரேகை பதிவு பெறும் உத்தரவொன்றையும் அமுல் நடத்தியது. இதனை எதிர்த்துப் போர் தொடங்கினார் மதுரை வழக்கறிஞரான பாரிஸ்டர் ஜார்ஜ் ஜோசப். இவர் இங்கிலாந்து சென்று பாரிஸ்டர் படித்தவர். மதுரையில் வழக்கறிஞர் தொழிலில் நல்ல வருவாயைப் பெற்று வந்தவர். காந்தியடிகளால் பெரிதும் மதிக்கப்பட்டவர். அடிகள் சிறைப்பட்ட பின் அவருடைய 'யங் இந்தியா' பத்திரிகையின் ஆசிரியராக இருந்தார் என்பதை முன்பே அறிந்தோம். இவ்வளவு சிறப்புகளுக்குரியவரான திரு. ஜோசப், மனிதாபிமானத்தாலும் தேசாபிமானத்தாலும் உந்தப்பட்டு, பிரமலைக் கள்ளர்பால் அனுதாபங் கொண்டு, கை ரேகைச் சட்டத்தை எதிர்த்துப் போராட்டம் நடத்தினார். அதன் காரணமாக, துப்பாக்கிப் பிரயோகம் நடந்து, ஒருவர் பலியானார். பின், அச்சட்டம் தளர்த்தப்பட்டது. பிரமலைக் கள்ளர் வகுப்பார், தலைவர் ஜோசப்பிடம் நன்றியுணர்வை வெளிப்படுத்தினர். 'ரோஜாப்பூ துரை' என்ற செல்லப் பெயரால் அவரை அழைத்தனர்.

வாளேந்தும் போராட்டம்!

மதுரை மாவட்டத்தில் நடந்த வாளேந்தும் போரையும் இங்கு குறிப்பிட வேண்டும். 1927 - இல் நாகபுரி (மகாராஷ்டிரம்) நகர மன்றத் தலைவர் ஜெனரல் மன்சர்ஷா அவாரி என்பவர், பிரிட்டிஷ் அரசு பிறப்பித்த - இந்தியர்களை நிராயுத பாணி களாக்கிய - ஆயுதச் சட்டத்தை எதிர்த்துப் போராடினார். ஆயுதந் தாங்கிய தேசியப் படையொன்றையும் வடபுலத்தில் நிறுவினார்.

ஜெனரல் அவாரி மீது ம.பி. அரசு ஆயுதச் சட்டப்படி வழக்குத் தொடர்ந்து, அவரை நான்காண்டு சிறைத் தண்டனைக் குள்ளாக்கியது. இந்தக் கொடுந் தண்டனையைக் கண்டித்து மதுரை மாநகரில் காங்கிரஸ் கமிட்டி சார்பில் பொதுக் கூட்டம் நடத்தப்பட்டது. அக்கூட்டத்தில், நாகபுரி மாவீரர் அவாரியைப் பாராட்டியும், அவருக்குத் தண்டனை விதிக்கப்பட்டதைக் கண்டித்தும் பலர் பேசினர். அவாரியைப் பின் பற்றித் தமிழ

நாட்டிலும் ஆயுதச் சட்டத்தை எதிர்த்துக் கைகளில் வாளேந்திச் செல்லும் ஊர்வலத்தை நடத்த ஒரு கூட்டம் திரண்டது.

நூலேந்திய கை வாளேந்தியது!

1927 சூலை 16-ஆம் தேதியன்று மதுரை மேலச் சித்திரை வீதியிலுள்ள தேசியப் பள்ளிக்கூடத்திலிருந்து திரு.ந. சோமயாஜுலு தலைமையில் ஆயுதச் சட்டத்தை எதிர்த்து, சென்னை கே.வி. கணபதி ஐயர், இராமநாதபுரம் முகமது சாலி ஆகியோர் கைகளில் வாள்களை ஏந்தி ஊர்வலம் சென்றனர். ''இந்தியருக்கு ஆயுதம் தாங்கும் உரிமை வேண்டும்' என்று ஊர்வலத்தினர் முழக்கமிட்டனர்.

அரசு போராட்டக்காரர்களைக் கைது செய்யவில்லை. இது பற்றித் திரு. சோமயாஜுலு வெளியிட்டுள்ள 'மதுரை மாவட்ட விடுதலைப்போர் வரலாறு' என்னும் நூல் கூறுவதாவது:

''இரண்டரை அடி நீளமுள்ள பட்டாக் கத்திகளை எடுத்துக் கொண்டு ஆயுதச் சட்டத்தை எதிர்த்து ஊர்வலம் வந்தனர். மாவட்ட கலெக்டருக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. சென்னையை ஆலோசனை கேட்டார். சென்னை அரசு சட்ட மெம்பர் சர்.சி. ராமசாமி ஐயரை ஆலோசனை கேட்டது. 'மலபார் போன்ற சில இடங்களில் தவிர மற்ற இடங்களில் ஆயுதம் வைத்துக் கொள்ளலாம்' என்று அவர் கூறிய ஆலோசனையைச் சென்னை அரசு ஏற்றது. மதுரையில் வாளேந்திய போராட்டம் அஞ்சா நெஞ்சன் என். சோமயாஜுலு தலைமையில் வெற்றி பெற்றது.''

காந்திஜியின் கருத்து

திருவாளர்கள் ரெ. சிதம்பர பாரதி, சீனிவாசவரதன் ஆகிய இருவராலும் 1948-இல் வெளியிடப்பட்ட 'மதுரை மாவட்ட தியாகிகள் மலரு'ம் மதுரையில் நடந்த வாட்போர் வெற்றி பெற்றதாகத்தான் தகவல் தருகிறது. ஆனால், இந்தப் போர் வெற்றி பெறவில்லையென்று காந்தியடிகள் கருதினார். இதனை, சென்னையில் 6-9-27-இல் தம்மைச் சந்தித்த வாட்போர் வீரர்களிடமே காந்திஜி கூறியதாகத் 'தமிழ் நாட்டில் காந்தி' என்னும் நூல் தகவல் தருகிறது.

அடிகளைச் சந்தித்த வாட்போர் வீரர்கள், 'அது ஒரு தோல்வியே அல்ல. நாங்கள் தெருக்களில் பட்டாக்கத்தியுடன் தாராளமாகச் சென்றோம். யாரும் எங்களைக் கைது செய்ய

வில்லை' என்று கூறினர். அடிகள் சிரித்துவிட்டு, அவர்களிடம் கூறியதாவது:

''அது ஒரு வெற்றி என்று நினைத்து உங்களையே நீங்கள் ஏமாற்றிக் கொள்ளாதீர்கள். நீங்கள் கொண்டு சென்றவை யெல்லாம் வெறும் தகரத் தகடுகள் என்பதையும், அதற்குப் பொது மக்கள் ஆதரவு இல்லை யென்பதையும் அறிந்து அரசாங்கம் உங்களை விட்டுவிட்டது.

''கைது செய்யப்படவில்லை யென்பதற்காக நீங்கள் வெற்றியடைந்து விட்டதாகக் கூறுவதில் பொருளில்லை. ஆயுதச் சட்டத்தை அகற்றிவிட்டு, ஒவ்வொருவரும் தாம் விரும்பிய ஆயுதத்தை எடுத்துச் செல்ல அரசாங்கம் அனுமதித்துவிட்டது என்றால், அப்போதுதான் உங்கள் குறிக்கோள் வெற்றி பெற்றுவிட்டது என்று பொருளாகும். ஆனால், அது முடியாது என்பது ஞாபகமிருக்கட்டும். சுதந்திர அரசாங்கம் கூட இராணுவச் சட்டம் ஒன்று இல்லாமல் இருக்க முடியாது.''

காந்திஜி மதுரையில் நடந்த வாளேந்தும் சத்தியாக்கிரகத்தை வெறுத்ததற்குக் காரணம் அது அகிம்சைக்கு விரோதமானது என்ற எண்ணந்தான்! பொதுவாக, மதுரையில் நடந்த வாள் சத்தியாக்கிரகம் மக்களுக்குத் துணிவையும், தேச பக்தியையும் தந்ததென்பதில் ஐயமில்லை. அந்த அளவில் அதற்கு வெற்றிதான். காந்தி, கூறியதுபோல, சுதந்திர இந்தியாவிலும் இராணுவச்சட்டம் இருக்கிறது. பொது மக்கள் பயங்கர ஆயுதங்களை வைத்துக் கொள்வதற்குக் கட்டுப்பாடுகளும் இருந்து வருகின்றன.

நீல் செய்த கொடுமை!

மதுரையோடு சம்பந்தப்பட்ட மற்றொரு போராட்டம் சென்னையில் நடந்த நீல் சிலைச் சத்தியாக்கிரகமாகும். கர்னல் நீல் என்ற ஆங்கிலேயன், சென்னை இராணுவப் பிரிவின் தலைவனாக இருந்தவன். *1857*-இல் நடந்த சிப்பாய்ப் புரட்சியை ஒடுக்கு வதிலே இவன் மற்ற தளபதிகளை விடவும் அதிக அளவில் பங்கேற்றான். விடுதலைப் புரட்சியிலே ஈடுபட்ட ஆண்களையே யன்றி, பெண்களையும் குழந்தைகளையும் கூடக் கொலை புரிந்தான். தான் படை நடத்திச் சென்ற வழியிலுள்ள கிராமங்களை யெல்லாம் தீக்கிரையாக்கினான்.

இவனுடைய 'சேவை'யைப் பாராட்டும் வகையில் பிரிட்டிஷ் அரசு இவனது முழு உருவச் சிலையைச் சென்னையின்

பிரதான பகுதியில் நிறுத்தியது. நீலன் தன் கை வரிசையைக் காட்டி விடுதலைப் புரட்சியை ஒடுக்கியது வடபுலத்தில்தான். ஆனால், அவன் சென்னை இராணுவத்திலிருந்து அனுப்பப் பட்டவன் என்பதற்காக அவனுக்குச் சென்னை நகரில் சிலை நிறுத்தப் பட்டது. மற்றும், அப்போதைய சென்னை ஆளுநர் சர். தாமஸ் மன்றோ என்பவருக்கு நீலன் துரை உறவினனாம்! இந்த உறவும் அவனுக்கு சென்னையில் நினைவுச் சின்னம் எழுப்பக் காரணமாகி யிருக்கலாம்.

தமிழரைப் பொறுத்தவரையில் நீலன் சிலை ஒரு அவமானச் சின்னந்தானே! அவன் கொடுமைப்படுத்தியது வடபுலத்தவரைத் தானென்றாலும், விடுதலை ஆர்வமுடைய தமிழர் பார்வையிலே வடக்கு தெற்கு வேற்றுமை ஏது? அதனால், கர்னல் நீலன் சிலையைத் தகர்த்துத் தவிடு பொடியாக்க விரும்பினர் தமிழ் நாட்டுத் தேச பக்தர்கள். அந்த நிகழ்ச்சி 'நீலன் சிலை உடைப்புச் சத்தியாக்கிரகம்' என்று பெயர் பெற்றுவிட்டது விடுதலைப் போர் வரலாற்றிலே!

சென்னையிலுள்ள நீலன் சிலையைத் தகர்க்கும் எண்ணம் முதலில் மதுரை மாவட்டத் தேச பக்தர்களுக்குத்தான் தோன்றியது. அதற்கான போராட்டம் நெல்லை திரு.ந. சோமயாஜுலுவின் தலைமையில் தொடங்கியது. மதுரை திரு. சீனிவாச வரதய்யங் கார், அவருடைய மனைவி திருமதி. பத்மாசனி அம்மாள், மதுரை ரெ. சிதம்பர பாரதி ஆகியோர் நெல்லை சோமயாஜுலுவுக்குத் துணை நின்றனர். தமிழ் நாட்டுப் பெருந் தலைவரான டாக்டர் பி. வரதராசுலு நாயுடு பொருளுதவி புரிந்தார்.

மாவீரர் இருவர்!

போராட்டம் 11-8-27-இல் தொடங்கியது மதுரை வாசிகளான திரு. சுப்பராயலு நாயுடு, முகமது சாலியா ராவுத்தர் இருவரும் முதல் நாள் போருக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்களிருவரும் ஆர்க்காடு நவாபு ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடிய உயிர்த் தோழர்களான ராசா தேசிங்கும் மகமத்கானும் போலச் சென்னை வந்து களம் புகுந்தனர். இவர்களிருவரும் கைகளில் தேசியக் கொடிகளைத் தாங்கிய வண்ணம் தமிழ்நாடு காங்கிரஸ் அலுவலகத்திலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு, வழிநெடுக தேசபக்தர்களால் உற்சாகப்படுத்தப்பட்டு நீல் சிலை இருக்கும் இடத்தை அடைந்தனர்.

சுப்பராயலுவும் சாலியாவும் ஒரு ஏணியை நீலன் சிலை மீது சார்த்தி, அதிலே ஏறி, கையில் சுத்திகொண்டு தாக்கி சிலையைச்

சேதப்படுத்தினர். இருவரையும் போலீசார் கைதுசெய்து வழக்குத் தொடுத்தனர். தலைக்கு ஆறு மாதக் கடுங்காவல் தண்டனை விதித்தது எழும்பூர் நீதிமன்றம்.

வழக்கு விசாரணையின்போது சுப்பராயலுவும் சாலியாவும் எதிர் வழக்காடவில்லை. குற்றத்தை ஒப்புக் கொண்டனர். ''கடுந் தண்டனை கிடைக்குமென்று தெரிந்துதான் நாங்கள் இதில் ஈடுபட்டோம். எவ்வளவு கடுந்தண்டனையையும் ஏற்கத் தயார்'' என்று இளைஞர் இருவரும் வாக்குமூலம் தந்தனர்.

> ''நீலன் சிலை நாங்கள் நினைத்தது போன்று வெண் கலத்தினாலாவது சலவைக் கல்லினாலாவது செய்யப் பட்டிருக்கவில்லை. செம்பினால் செய்யப்பட்டிருந்தது. அதனால், முதல் முயற்சியிலேயே அதனை முற்றிலும் அழித்துவிட எங்களால் முடியாமற் போயிற்று. அதற்காக வருந்துகிறோம்.''

என்று சுப்பராயலுவும் சாலியாவும் நீதிமன்றத்தில் கூறினர்.

காந்தியடிகளின் பாராட்டு!

இந்த வழக்கு பற்றிப் பத்திரிகைகளில் படித்தறிந்த காந்தியடிகள் தமது 'யங் இந்தியா' பத்திரிகையில் நீண்ட கட்டுரை யொன்றை எழுதினார். அதன் சில பகுதிகள் வருமாறு:

''சிப்பாய்க் கலகக் காலத்தில் பிரக்யாதி பெற்றவரான கர்னல் நீலுக்கு சென்னை மவுண்ட் ரோட்டில் வைத்திருக்கும் சிலையைப் பின்னப்படுத்திய குற்றத்திற்காக சென்னையில் 30 வயதுள்ள ஒரு இந்துவின் மீதும், 25 வயதுள்ள ஒரு முஸ்லிம் மீதும் கொண்டு வந்த வழக்கு சுவையானதாக இருக்கிறது. ஒத்துழை யாமை இயக்கம் ஓங்கியிருந்த காலத்தில் லாகூரில் லாரன்ஸ் சிலையை அப்புறப்படுத்தவிட வேண்டுமென்று நடந்த கிளர்ச்சியை இவர்களது முயற்சியானது நினைவூட்டுகிறது. லாகூரில் இந்த முயற்சி பொதுமக்களால் செய்யப்பட்டது. சென்னையில் இந்த இரண்டு இளைஞர்கள் எவ்வித ஆடம்பர மில்லாமலும் திடபுத்தியுடனும் இந்தக் காரியத்தைச் செய்திருக் கிறார்கள். அவர்கள் நீதிமன்றத்தில் கொடுத்ததாக 'இந்து' பத்திரிகையில் காணப்படும் வாக்குமூலத்தைப் பொதுமக்கள் படிப்பார்களென்று நம்புகிறேன்.

''இந்த இளைஞர்களுடைய உத்தமமான லட்சியத்தையும் வழக்கு விசாரணையின்போது அவர்கள் மிகவும் கண்ணியமாக நடந்து கொண்டதையும் குறித்து பெருமைப்படாமலிருக்க என்னால் முடியவில்லை.

''தேசிய உணர்ச்சி வளர்ந்து வருவதற்குத் தகுந்தபடி பிரிட்டிஷாருடைய ஆணவத்தையும் அவர்களுடைய கொடுமை களையும் மிகவும் இறுமாப்புடன் இந்திய மக்களுக்கு நினை வூட்டக் கூடியவையாக உள்ள இத்தகைய நினைவுச் சின்னங் களிடத்தில் வெறுப்பு அதிகரித்துக் கொண்டுதான் வரும். ஒரு அரசானது - அது எவ்வளவுதான் ஆற்றலுடையதாக இருப்பினும், புத்திசாலித்தனமுள்ளதாக இருந்தால் இத்தகைய ஆட்சேபகரமான நினைவுச் சின்னங்களை அதுவாகவே அகற்றி ஆத்திரமடைந்த மக்கள் அதனைச் சேதப்படுத்துவதற்கு இடங்கொடுக்காமல் இருக்கவேண்டும்.

''மக்களுடைய செயல்கள் வருந்தத் தக்கவையாகவும் அருவருக்கத் தக்கவையாகவும் இருந்த போதிலும், தேசிய உணர்ச்சியைப் பிரிட்டிஷ் அரசு அவமதித்து வருவதற்கு அந்தச் செயல்கள் சரியான பதில் என்றே நினைக்க நேரிடுகின்றது.

''மனத்தைப் புண்படுத்தத்தக்க இத்தகைய நினைவுச் சின்னங்களை அகற்றுவதற்காகச் செய்யும் முயற்சிகளைப் பயனற்றதாகச் செய்ய அரசின் சார்பில் எடுக்கப்படும் நடவடிக்கை களானது மக்களுடைய வெறுப்பை வளர்க்கும், பிரிட்டிஷா ருக்கும் இந்தியருக்கும் இடையே நிலவி வரும் வேற்றுமை அதிகரிக்கும்படியும் செய்யும். இந்தச் சிலைக்குச் சொந்தம் கொண்டாடும் நிறுவனமான சென்னை மாநகராட்சியானது அதை இப்போதுள்ள இடத்திலிருந்து எடுத்துவிடவேண்டும்.''

நீல் சிலையின் அடிப்புறத்தில் பொறிக்கப்பட்டிருந்த வாசகத்தைக் காந்தியடிகள் படித்துப் பார்த்து, அதனைக் கடுமை யாக ஆட்சேபித்தார். நீலன் பற்றிய அந்த வாசகம் வருமாறு;

> ''சென்னை ஃப்யூசிலியர்ஸ் (துப்பாக்கி) படை லெப்டி னென்ட் கர்னலும், பிரிட்டிஷ் பேரரசியின் ஏ.டி.சியுமான ஜேம்ஸ் ஜார்ஜ் ஸ்மித் நீல் உறுதியும் தன்னம்பிக்கையும் படைத்த போர் வீரர். வங்காளத்தில் கிளர்ச்சியைத் தடுத்தவர்களில் முதன்மையானவர் என்று எல்லோராலும் ஏற்கப் பெற்றவர். இலட்சுமணபுரி நிவாரண நடவடிக்கை யில் 1857 செப்டம்பர் 25-ஆம் தேதியன்று இவர் புகழ் மிக்க மரணம் அடைந்தார்.''

'புகழுக்கே அவமானம்!'

''நீல் புகழ் மிக்க மரணம் அடைந்தார்'' என்று கூறுவது புகழ் என்னும் சொல்லையே அவமதிப்பதாகும்'' என்று காந்திஜி,

கூறினார். நீல் செய்த கொடுமைகளைப் பொறுத்துக்கொள்ள இயலாமல் அவரைப் பழிவாங்க நினைத்த யாரோ ஒருவரால் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். இது காந்திஜிக்குத் தெரியுமாத லால், நீல் சிலைக்குக் கீழே 'புகழ் மிக்க மரணம் அடைந்தவர்' என்று பொறிக்கப்பட்டிருப்பதை அவர் ஆட்சேபித்தார்.

> ''சிலை உயிரற்ற பொருளாதலால், உடைப்பது இம்சை யல்ல. ஆனால், சிலையின் அருகில் இருக்கக்கூடிய காவலர்களுக்குக் காயம் ஏற்படும்படி நடந்து கொள்ளக் கூடாது. சத்தியாக்கிரகத்திற்கு அது ஏற்றதல்ல. களிமண் உருண்டைகளை சிலை மீது குறிவைத்து எறியுங்கள். சிலையின்பால் உங்களுக்குள்ள வெறுப்பை வெளிப்படுத்த அதுவே போதுமானது.''

என்று அடிகள் கூறினார்.

நீல் சிலைச் சத்தியாக்கிரகத்தைத் திரு.ந. சோமயாஜுலு போன்ற தனி நபர்களே பொறுப்பேற்று நடத்தினர். இதற்கு மாறாக, தமிழ்நாடு காங்கிரசே பொறுப்பேற்று நடத்தவேண்டு மென்று காந்தியடிகள் யோசனை கூறவேண்டுமென்று சிலர் அவரிடம் கூறியபோது,

> ''நீல் சிலைச் சத்தியாக்கிரகத்தில் காங்கிரஸ் கமிட்டி அதிகார பூர்வமாக பொறுப்பேற்க முடியாது. இளைஞர்கள் தங்கள் பொறுப்பிலேயே அதைத் தொடர்ந்து செய்ய வேண்டும். அவர்கள் சத்தியாக்கிரகத்திற்குத் தாங்கள் தகுதியானவர்கள் தான் என்பதை மெய்ப்பித்துக் காட்டினால், அதன்பின் காங்கிரஸ் கமிட்டி உதவிக்கு வரும்.''

என்று காந்தியடிகள் கூறினார்.

1857-இல் நடந்த சிப்பாய்ப் புரட்சி பற்றி வீர சவர்க்கார் எழுதிய ''எரிமலை அல்லது முதலாவது சுதந்திரப் புரட்சி'' என்னும் நூல் அப்போதுதான் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு படித்த தமிழர் மத்தியில் பரவியிருந்தது. அந்நூலில், கர்னல் நீல் செய்த கொடுமைகளை படிப்போர் நெஞ்சம் பதறும் வகையில் சவர்க்கார் விவரித்துள்ளாராதலால், அதைப் படித்த மக்கள் நீல் சிலைச் சத்தியாக்கிரகத்திற்கு ஆதரவு தரலாயினர்.

தளபதி சோமயாஜுலு

ஆகஸ்டில் தொடங்கிய சத்தியாக்கிரகம் டிசம்பர்வரை தொடர்ந்து நடந்தது. தமிழ்நாட்டின் பல மாவட்டங்களில்

இருந்தும் சத்தியாக்கிரகத்தில் பங்கு பெறத் தொண்டர்கள் சென்னை வந்து குவிந்தனர். வட சென்னையில் இராயபுரத்தில் சத்தியாக்கிரக முகாம் அமைக்கப்பட்டது. அதற்கெனத் தனியாக ஒரு கமிட்டியும் நிறுவப்பட்டது.

தொடக்கத்தில் நெல்லை ந. சோமயாஜுலு தளபதியாக இருந்து பல நாட்கள் வரை தொண்டர்களை அனுப்பி, சிலையை உடைக்கும் சத்தியாக்கிரகத்தை நடத்தினார். பின்னர், அவர் கைது செய்யப்பட்டு, 15 மாதக் கடுங்காவல் தண்டனைக்குள்ளாக்கப் பட்டார். அவரைத் தமிழ் நாட்டிலுள்ள எந்தச் சிறையில் வைத்தாலும் சத்தியாக்கிரகத்திற்கு உதவியாயிருப்பார் என்று அரசு கருதியது. அதனால், மொழி வேறுபாடுடைய ஒரிசாவிலுள்ள பெர்ஹாம்பூர் சிறையில் கொண்டு போய்ச் சேர்த்தது.

திரு. சோமயாஜுலுவை அடுத்து குடியாத்தம் திரு. சாமி நாத முதலியார் (பிற்காலத்தில் இவர் அண்ணல்தங்கோ என்று அழைக்கப் பெற்றார்) அவர்கள் தளபதியாகப் பொறுப்பேற்றுச் சத்தியாக்கிரகத்தை நடத்தினார். இவரை யடுத்து, பண்ருட்டி திரு.எஸ்.எ. தேவநாயக ஐயா தளபதியானார்.

அஞ்சலையம்மாள் குடும்பத்தின் தியாகம்!

கடலூர் திருமதி. அஞ்சலையம்மாள், அவரது கணவர் முருகேச படையாச்சி, இந்த வீரத் தம்பதிகளின் மகள் அம்மாக்கண்ணு, மற்றும் அங்கச்சி அம்மாள், வடசென்னை என். திருவேங்கடம், நெல்லை சிதம்பரநாதன் ஆகியோருட்பட 49 பேர் சிலை உடைப்பில் ஈடுபட்டுச் சிறைத் தண்டனை பெற்றனர். என். திருவேங்கடம், கே. அருணாசல ராவ், எஸ். சாமிநாத ஐயர் ஆகியோருக்குத் தலா 2 வருடக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. ஆம்; உயிரற்ற ஒரு சிலையை உடைக்க முயன்ற 'குற்றத்'திற்காக 2 வருடச் சிறைவாசம்! இப்படியும் ஒரு கொடுங்கோலாட்சி நடைபெற்றது அந்தக் காலத்திலே.

பிற்காலத்தில் புகழ்மிக்க தேசபக்தராகவும் எழுத்தாளராக வும் கவிஞராகவும் விளங்கிய ஜமதக்கினி, தமக்கு 24 வயதாக இருந்தபோது நீல் சிலைச் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டார். இவர் மீது 'வீடு பிளக்க வந்தார்' என்று பொய்க் குற்றஞ்சாட்டி, ஒரு வருடக் கடுங்காவல் தண்டனைக்குள்ளாக்கினர் போலீசார்.

திரு.டி. பிரகாசம் பந்துலுவால் நடத்தப்பட்ட தமிழ் நாளேடான 'சுயராஜ்யா', டாக்டர் பி. வரதராசுலு நாயுடுவால்

நடத்தப்பட்ட மற்றொரு தமிழ் நாளேடான 'தமிழ் நாடு'. திரு.ஏ. அரங்கசாமி ஐயங்காரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்து கொண்டிருந்த இன்னொரு தமிழ் நாளேடான 'சுதேசமித்திரன்', ஆங்கில நாளேடான 'இந்து' ஆகியவை நீல் சிலைச் சத்தியாக்கிரகத்திற்குப் பேராதரவு தந்தன.

தலைவர்கள் பிரசாரம்

சத்தியாக்கிரகம் நடந்த காலத்தில் அடிக்கடி சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையிலும், பல்வேறு பேட்டைகளிலும் பொதுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இக்கூட்டங்களில் நாவலர் எஸ். சத்தியமூர்த்தி, பிரபல நாடகாசிரியர், தெ.பொ. கிருஷ்ணசாமிப் பாவலர், எம்.எஸ். சுப்பிரமணிய ஐயர், சுத்தானந்த பாரதி, டி.ஜி. லட்சுமணசாமி முதலியார், தோழர் சிங்காரவேலு செட்டியார் ஆகியோருட்பட காங்கிரஸ் தலைவர்கள் பலர் பேசினர். திரு.எஸ். சீனிவாச ஐயங்கார் தேவைப்படும் போதெல்லாம் பொருளுதவி புரிந்து வந்தார். ஆக்கூர் அனந்தாச்சாரியார் சத்தியாக்கிரக முகாமில் விளம்பர அதிகாரியாக இருந்து, இறுதியில் சிறை சென்றார். சிந்தாதிரிப் பேட்டை முத்துசாமி ஐயர் என்பவர், தமது உணவுச் சாலையில் சத்தியாக்கிரகிகளுக்கு இலவசமாக உணவளித்து வந்தார். இவர் போலீசாரால் கொடுமைப்படுத்தப்பட்டார்.

ஆந்திர காங்கிரஸ் தலைவர்களான புலுசு சாம்பமூர்த்தி, அன்னபூர்ணையா ஆகியோர் சென்னை வந்து, சத்தியாக் கிரகத்தைக் கண்ணுற்று, ஆந்திர காங்கிரசின் ஆதரவைத் தெரிவித்தனர்.

அகில இந்தியச் சிறப்பு

மதுரை இளைஞர்களான சுப்பராயலுவும், முகமது சாலியாவும் முதன் முதலில் சிறை புகுந்து தொடங்கி வைத்த நீல் சத்தியாக்கிரகமானது, அவர்களே எதிர்பாராத வகையில் அகில இந்திய முக்கியத்துவத்தைப் பெற்றது. ஆம்; வட புலத்தில் நாகபுரியில் நடைபெற்ற தேசியக் கொடிப் போர், பர்டோலியில் நடைபெற்ற வரிகொடா இயக்கம், கேரளத்தில் நடை பெற்ற வைக்கம் சத்தியாக்கிரகம் ஆகியவற்றுக்கு இணையானதாக இருந்தது சென்னையில் நடைபெற்ற நீல் சிலைச் சத்தியாக்கிரகம்.

1927 டிசம்பரில் சென்னையில் காங்கிரஸ் மகாசபை நடைபெறவேண்டியிருந்ததாலும், அதையடுத்து சைமன் கமிஷன்

பகிஷ்காரத்தில் தேசம் முழுவதுமே ஈடுபடவேண்டியிருந்ததாலும் வெற்றி தோல்வியின்றி நீல் சத்தியாக்கிரகம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது.

பொருட்காட்சியகத்தில் நீல்

1937-இல் சென்னை மாகாணத்தில் ராஜாஜியை முதலமைச்சராகக் கொண்டு காங்கிரஸ் அமைச்சரவை ஏற்பட்ட போது, ராஜாஜி, நீல் சிலையை அது இருந்த இடத்திலிருந்து அகற்றி, எழும்பூரிலுள்ள மியூஸியம் பொருட்காட்சியில் சேர்த்தார். ஆம்; 1927-இல் நடத்தப்பட்ட சத்தியாக்கிரகத்திற்கு 1937-இல் வெற்றி கிடைத்தது. தமிழ் இளைஞர்களின் தியாகம் வீண் போகவில்லை.

நீல் சிலையை உடைத்து நொறுக்க பல மாதங்கள் சத்தியாக்கிரகம் நடந்ததென்றாலும், சிலையின் ஒரு பகுதியை - நீலின் கை பிடித்திருந்த வாளை - மட்டுமே சேதப்படுத்த முடிந்தது. அதற்கு மேல் அச்சிலையை உடைத்து நொறுக்க முடியாதபடி இரவு பகலாக போலீஸ் காவல் போடப்பட்டிருந்தது. சத்தியாக்கிரகிகள் சிலையை அணுகிய அளவிலேயே கைது செய்து தாக்கப்பட்டனர். பிற்காலத்தில் புகழ்மிக்க நாடகப் பேராசிரியராக விளங்கிய திரு.ப. சம்பந்த முதலியாரே நீல் சிலைச் சத்தியாக்கிரகி களுக்குத் தண்டனை விதிக்கும் மாஜிஸ்திரேட்டாக இருந்தார்.

நீல் சிலையின் உயரம் 16 அடி. அது வெண்கலத்தினால் செய்யப்பட்டிருந்தது. அப்போதைய நிலையில் அதன் விலை ரூ. 25 ஆயிரம் என்று மதிப்பிடப்பட்டது. அந்தச் சிலை லண்டனில் செய்யப்பட்டு, கப்பலில் சென்னைக்குக் கொண்டு வரப்பட்டது.

நீல் சிலையைப் பொருட் காட்சிச் சாலைக்கு ராஜாஜி ஆட்சி அனுப்பியபோது, அதற்கு லண்டனில் கடுமையான எதிர்ப்பு ஏற்பட்டது. பிரிட்டிஷ் பார்லிமெண்டில் வினாக்கள் எழுந்தன. நீலின் சிலையை லண்டனுக்குத் தருவித்து, அதற்கு மரியாதை செய்யுமாறு பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர் சிலர் கோரிக்கை விடுத்தனர். இந்தக் கோரிக்கைப்படி சிலையை அனுப்பி வைக்க ராஜாஜி மறுத்து விட்டார். 'நீல் சிலை சென்னை மாகாண அரசின் சொத்து. அதைக் கேட்க பிரிட்டிஷ் அரசுக்கு உரிமை இல்லை' என்று பதிலளித்து விட்டார்.

நீலனுக்குத் துணையாக...

கொடுங்கோலனான நீலன் சிலையைப் போலவே, கிழக்கிந்தியக் கம்பெனியின் காலத்திலிருந்து சென்னை மாகாணத்தின் ஆளுநர்களாக அடுத்தடுத்து வந்த வெள்ளையர்களின் உருவப் படங்கள் இன்று ராஜாஜி மண்டபம் என்று அழைக்கப்படுகின்ற - பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் அரசினர் விருந்து மண்டபம் என்று அழைக்கப்பட்ட - மண்டபத்திலுள்ள சுவர்களில் மாட்டப் பட்டிருந்தன. அவற்றுள், வீரபாண்டியக் கட்டபொம்மனைத் தூக்கிலிட்டு, அவனுடைய பாளையத்தையே அழித்து முடித்த லார்டு எட்வர்டு கிளைவ் என்பவனுடைய உருவப்படமும் ஒன்றாகும்.

இந்த உருவப் படங்கள் அனைத்தும் *1975*, சூன் 27 -இல் ராஜாஜி மண்டபத்திலிருந்து அகற்றப்பட்டு, நீலன் சிலை எங்கு வைக்கப்பட்டதோ, அந்தப் பொருட் காட்சிச் சாலையிலேயே கொண்டு போய் வைக்கப்பட்டன.

★-★-★

சென்னையில் 42-ஆவது காங்கிரஸ் மகாசபை

1927 டிசம்பரில் 42-ஆவது இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை சென்னை மாநகரில் நடைபெற்றது. அப்போது நாட்டிலிருந்து வந்த சூழ்நிலை காரணமாக, இம் மகாசபை பலவகையிலும் சரித்திர முக்கியத்துவம் பெற்றதாகி விட்டது. முதலில், நாட்டிலிருந்து வந்த சூழ்நிலையைக் கவனிப்போம்.

வகுப்புக் கலவரத் தீ பரவியது!

1927-இல் வடபுலத்தில் தோன்றிய இந்து - முஸ்லிம் வகுப்புக் கலவரம் தேசத் தலைவர்களுக்கே யன்றி, இந்திய வைசிராய் லார்டு இர்வினுக்கும் கவலையைத் தரக்கூடிய அளவில் பரவியது. முதலில் டில்லி, கல்கத்தா, அலகாபாத் ஆகிய மூன்று பெருநகரங்களில் தோன்றிய வகுப்புக் கலவரமானது, பின்னர் லாகூர், மூல்டான், பாட்னா, பெரீல்லி, நாகபுரி ஆகிய நகரங்களுக்கும் பரவியது. பொதுவாக, பஞ்சாப், உத்திரப் பிரதேசம், மகாராஷ்டிரம், பீகார், டில்லி ஆகிய ஐந்து மாகாணங் களில் வகுப்புக் கலவரம் பெருந் தீ போல் மூண்டெழுந்தது.

மொத்தத்தில் வடபுலத்தில் 25 நகரங்களில் கலகம் நடந்து வந்தது. இந்திய சட்டசபையில் ஆகஸ்டு 29-இல் வைசிராய் லார்டு இர்வின் நிகழ்த்திய சொற்பொழிவிலே, ''வகுப்புக் கலவரங் களால் சுமார் 300 பேர் வரை கொல்லப்பட்டனர். சுமார் 2500-க்கு மேற்பட்டவர் படுகாய முற்றனர்'' என்று அதிகாரபூர்வமாக அறிவித்தார்.

வைசிராய் இர்வின் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க இந்து - முஸ்லிம் சர்வ கட்சித் தலைவர்கள் மாநாடு டில்லியில் நடைபெற்றது. பல நாட்கள் நடந்தும் பயனொன்றும் ஏற்படாமற் போய்விட்டது. கலகத் தீ அணையவில்லை.

ஐயங்காரின் சமரசப் பணி

அப்போது காங்கிரஸ் மகாசபைத் தலைவராக இருந்த திரு.எஸ். சீனிவாச ஐயங்கார், தமிழருக்கேவுரிய சமய சமரச மனோபாவத்துடன் இந்து - முஸ்லிம் வகுப்புக்களிடையே சமரசம் செய்து வைக்கப் பெருமுயற்சி எடுத்தார். அதற்காகத் தொடர்ந்து பல வாரங்கள் வட பாரதத்தில் சுற்றுலாச் செய்தார்.

திரு. ஐயங்கார், காங்கிரஸ் மகாசபைத் தலைவர் என்ற முறையில் பெருந் தலைவர்கள் கொண்ட சமரச மாநாட்டை நடத்தி, கலவரத்திற்குக் காரணமான பசுவதை, மசூதி முன்பு வாத்திய ஒலியெழுப்பல் ஆகிய பிரச்னைகளில் இரு சமயத்தாருக்கும் மனநிறைவளிக்கக் கூடிய வகையில் உடன்பாடு காண முயன்றார்.

இந்துக்களுக்கு அறிவுரை

சமரச மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் இந்துக்களுக்கு விடப்பட்ட வேண்டுகோள் வருமாறு:

''மதம் அல்லது சமூகம் சம்பந்தமாக எந்த நேரத்திலும் ஊர்வலங்களை நடத்திச் செல்லவும், மசூதி முன் வாத்தியம் வாசித்துச் செல்லவும் இந்துக்களுக்கு உரிமை உண்டு. ஆனால் மசூதி முன்பு நிற்கவோ, விசேஷ ஆர்ப்பாட்டம் செய்யவோ கூடாது. மசூதியில் பிரார்த்தனை செய்பவர்களுக்குத் தொல்லையாக இருக்கக்கூடிய அல்லது அவர்கள் குற்றமென்று கருதக்கூடிய முறையில் பாடவோ வாத்தியங்கள் வாசிக்கவோ கூடாது.''

இஸ்லாமியருக்கு யோசனை!

திரு. ஐயங்கார் கூட்டிய வகுப்புச் சமரச மாநாட்டில் நிறைவேறிய தீர்மானம் முஸ்லிம்களுக்கு விடுத்த வேண்டுகோள் வருமாறு:

''முஸ்லிம்களுக்குத் தங்கள் உரிமைப்படி பசுவைப் பலியிடவோ, வதை செய்யவோ உரிமையுண்டு. ஆனால் எந்தக் கிராமத்திலாயினும் நகரத்திலாயினும் பொது மக்கள் போக்குவரத்து செய்யும் பாதையிலோ, திருக்கோயிலின் அருகாமையிலோ இந்துக்களின் முன்பாகவோ பசுவைப் பலியிடவோ,வதை செய்யவோ கூடாது. பலியிடுவதற்காகவோ, வதை செய்வதற்காகவோ பசுவை ஊர்வலமாகக்

கொண்டு செல்லக்கூடாது. பசு பலி சம்பந்தமாக இந்துக்களுக்குள்ள ஆழ்ந்த உணர்ச்சி கருதி, அவர்கள் மனம் புண்படாத வகையில் நடந்து கொள்ளுமாறு முஸ்லிம் மக்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.''

அக்டோபரில் கல்கத்தாவில் கூடிய அ.இ.கா. கமிட்டியிலும் மேற்படி சமரசத் தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

புதிய சட்டம்!

மாநில காங்கிரஸ் கமிட்டி ஒவ்வொன்றும் தத்தம் மாநிலத்தில் இந்து - முஸ்லிம் மக்களிடையே சமரசங் காணத் தனியாக ஒரு கமிட்டியை நியமிக்க வேண்டுமென்றும் அ.இ.கா. கமிட்டி தீர்மானித்தது. ஆகஸ்டுத் திங்களில் இந்திய சட்ட சபையில் புதிதாக ஒரு மசோதா பிரேரேபிக்கப்பட்டு, அது சட்டமாக்கப்பட்டது.

''பேச்சின் மூலமோ, எழுத்து மூலமோ இதர முறைகளிலோ மதத்தையோ, மதக் கொள்கைகளையோ, பழிக்க முற்படுவோருக்கு இரண்டு ஆண்டுச் சிறைத் தண்டனையோ, அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கலாம்'' என்ற விதியைக் கொண்டதாக அது இருந்தது.

சைமன் கமிஷன்

வட பாரதத்தில் வகுப்புக் கலவரம் மூண்டிருந்த நிலையிலே மற்றொரு அரசியல் கலவரத்திற்கும் வழி வகுத்தது பிரிட்டிஷ் ஆட்சி. அது, இந்தியாவில் பார்லிமெண்டரி அரசியல் நடைபெறும்விதம் பற்றி விசாரிக்கவும், மேற்கொண்டு அரசியல் சீர்திருத்தம் தருவதற்கான பரிந்துரை ஒன்றை வழங்கவும் சர். ஜான் சைமன் என்ற ஆங்கிலேயர் தலைமையில் ஒரு கமிஷனை நியமித்ததாகும். இந்தக் கமிஷனில் இந்தியர் ஒருவர்கூட இடம் பெறவில்லை. கமிஷன் விரும்பினால் தனக்கு ஆலோசனை கூற இந்தியர்களை அழைக்கலாம் என்று அரசு அறிவித்தது. இக்கமிஷனைப் பற்றிய ஆணை 8-11-27-இல் பிரிட்டிஷ் பிரதமரால் வெளியிடப்பட்டது.

சைமன் கமிஷன் நியமனம் பற்றிக் கருத்தறிய நவம்பரில் காந்திஜி உள்ளிட்ட தலைவர்கள் பலரை வைசிராய் இர்வின் டில்லிக்கு அழைத்துப் பேசினார். அதனால், பலன் எதுவும் ஏற்படவில்லை. மிதவாதிகள் கூட சைமன் கமிஷனை வரவேற்கவில்லை; எதிர்த்தும் அறிக்கை விட்டனர். சைமன் கமிஷன் நியமனத்தால் தேசமெங்கும் மக்களிடையே ஆத்திரம் மூண்டு

இருந்தது. காந்திஜி உடல் நலத்திற்காக ஓய்வு பெறும் பொருட்டு மைசூர் நந்தி மலையில் தங்கியிருந்தார். இந்தச் சூழ்நிலையில் தான் காங்கிரஸ் மகாசபை சென்னையில் கூடியது. அதற்கென எழும்பூரில் பிரம்மாண்டமான கொட்டகை அமைக்கப்பட்டது.

சென்னையில் 42 – ஆவது காங்கிரஸ்

1914-இல் சர் பூபேந்திரநாத் பாசு தலைமையில் 29-ஆவது காங்கிரஸ் மகாசபை சென்னையில் நடைபெற்றதன் பின் சரியாக 15 ஆண்டுகள் கழித்து மீண்டும் சென்னையில் கூடியது. மகாசபையை நடத்தும் வரவேற்புப் குழுவுக்கு திரு.சி.என். முத்துரங்க முதலியார் தலைவராக இருந்தார். வட நாடெங்கும் இந்து - முஸ்லிம் கலவரமிருந்து வந்ததால் சமரச உணர்வை வளர்க்க விரும்பி, டாக்டர் எம்.ஏ. அன்சாரி என்ற முஸ்லிம் கனவான் சென்னை காங்கிரசுக்குத் தலைவராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார்.

இந்திய சட்டசபையில் காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த பண்டித மோதிலால் நேரு ஐரோப்பாவிலிருந்ததால் அவர் சென்னை காங்கிரசில் கலந்து கொள்ளவில்லை. காந்தியடிகளும் ராஜாஜியும் சென்னை காங்கிரசில் கலந்து கொண்டன ரென்றா லும், நடவடிக்கைகளில் அதிக அளவில் அவர்கள் பங்கு கொள்ள வில்லை. காரணம், சென்னை காங்கிரஸ் மகாசபை சுயராஜ்யக் கட்சியினரின் செல்வாக்குக்குட்பட்டு நடைபெற்றது தான்.

ஐயங்காரின் முயற்சி

பண்டித ஜவகர்லால் நேரு தமது தந்தையாருடன் ஐரோப்பா சென்று அங்கு பல மாதங்கள் தங்கியிருந்த பின், காங்கிரஸ் மகாசபை கூடவிருந்த நேரத்தில் இந்தியாவுக்குத் திரும்பி, சென்னைக்கு வருகை தந்தார். அவர், அப்போதுதான் பூத்திருந்த பொதுவுடைமைப் புது உலகமான சோவியத் ருஷ்யாவுக்குச் சென்று திரும்பினார்.

சென்னை காங்கிரசிலே, அதுவரை காங்கிரஸ் தலைவராக இருந்து வந்த திரு. சீனிவாச ஐயங்கார், புதிய தலைவரான டாக்டர் எம்.ஏ. அன்சாரி அவர்களிடம் பொறுப்பை ஒப்புவித்தார். காங்கிரஸ் தலைவர் ஊர்வலம் வெகு சிறப்பாக நடை பெற்றது. காந்திஜியும் காங்கிரஸ் தலைவரின் அருகில் அமர்ந்து ஊர் வலத்தில் கலந்து கொண்டார். காங்கிரஸ் மகாசபைப் பந்தலிலே கதர் கண்காட்சி யொன்றும் நடத்தப்பெற்றது.

பூரண சுதந்திரம்

முந்தைய காங்கிரஸ் மகாசபைகளை விடவும் சென்னை காங்கிரசிலே தலைவர்களிடையில் ஒற்றுமை நிலவியது. உட்கட்சிப் பூசல் தலைகாட்டவில்லை. காங்கிரஸ் மகாசபையின் வரலாற்றிலேயே முதன் முதலில் 'பூரண சுதந்திர'க் கோரிக்கைத் தீர்மானம் சென்னைக் காங்கிரசில்தான் ஒருமனதாக நிறைவேற்றப் பட்டது. முந்தைய மகாசபைகளில் இத் தீர்மானம் கொண்டு வரப்பட்டதென்றாலும், சென்னையில்தான் அது நிறைவேறு வதற்கு காலம் கனிந்திருந்தது. பிரிட்டிஷ் சார்புடைய மிதவாதி என்று ஐயுறப்பட்ட டாக்டர் அன்னி பெசன்டம்மையாரும் தீர் மானத்தை ஆதரித்துப் பேசினார். ''இந்தியாவின் கோரிக்கையைத் தெளிவாகவும் கம்பீரமாகவும் இத் தீர்மானம் கூறுகின்றது'' என்று பெசன்ட் பேசினார். பண்டித ஜவகர்லால்தான் தீர்மானத்தை முன்மொழிந்தார்.

பகிஷ்கார முடிவு!

இந்தியாவுக்கு வரவிருக்கின்ற சைமன் கமிஷனைப் பகிஷ்கரிப்பதென்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. கமிஷன் இந்தியாவில் கால் வைக்கின்ற நாளில் தேசமெங்கணும் கடையடைப்பும், எதிர்ப்பு ஆர்ப்பாட்ட ஊர்வலமும், கண்டனக் கூட்டமும் நடத்த காங்கிரஸ் தீர்மானித்தது. சைமன் கமிஷன் இந்தியாவில் எங்கு சென்றாலும், அங்கெல்லாம் கருப்புக் கொடிகளைக் காட்டி, 'சைமனே திரும்பிப் போ!' என்று கோஷித்து ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டுமென்றும் தீர்மானம் கூறியது.

சர்வகட்சி மாநாட்டைக் கூட்டி, அதிலே இந்திய அரசியல் அமைப்பைத் தயாரித்து, அதனை மக்கள் மத்தியில் வைத்து அவர்களுடைய ஆதரவைத் திரட்ட வேண்டுமென்ற மற்றொரு தீர்மானமும் நிறைவேறியது.

சென்னையில் காங்கிரஸ் மகாசபை நடந்தபோது இரண்டாவது உலகப் பெரும் போர் ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகி இருந்தது. அதனால், போர் மூளுமானால் பிரிட்டிஷ் அரசுடன் எந்த விதத்திலும் ஒத்துழைக்க இந்திய மக்கள் மறுத்துவிடவேண்டுமென்ற தீர்மானமும் மிகுந்த ஆரவாரத்துடன் நிறைவேற்றப்பட்டது.

அந்நாளில், காங்கிரஸ் மகாசபை நடந்தால் அந்தப் பந்தலிலேயே முஸ்லிம் லீக் மாநாடோ, சமூக சீர்திருத்த மாநாடோ நடைபெறுவது வழக்கம். சென்னையில் டாக்டர் அன்சாரி தலைமையில் நடந்த காங்கிரசிலே 'குடியரசு வாதிகளின்

முதலாவது மாநாடு' பண்டித ஜவகர்லால் நேரு தலைமையில் நடைபெற்றது. அதுவே கடைசி மாநாடாகவும் முடிந்தது. அதற்குப் பின் அப்படியொரு மாநாட்டை நடத்த எவரும் முன் வரவில்லை.

சென்னை காங்கிரசிலே பசு பலி, மசூதிமுன் மேளம் வாசித்தல் ஆகியவை பற்றி இந்து - முஸ்லிம் மக்களுக்கு ஆலோசனை கூறும் தீர்மானமொன்றும் நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானம் விஷயாலோசனைக் கமிட்டியில் விவாதிக்கப்பட்ட போது பசுவதை பற்றியிருந்த வாசகத்தில் கண்டிப்பு காணப்படவில்லை யென்று கூறி ராசன் பாபு போன்ற காங்கிரஸ் இந்துத் தலைவர்கள் தீர்மானத்தை எதிர்த்தனர். அதுபோல, மசூதிமுன் மேளம் வாசித்தல் சம்பந்தமாக இந்துக்களுக்குக் கூறும் அறிவுரையிலும் கண்டிப்புக் காணப்படவில்லை யென்று காங்கிரஸ் முஸ்லிம்களிலே சிலர் முணுமுணுத்தனர். முடிவில் விஷயாலோசனைக் கமிட்டியில் இத்தீர்மானம் நிறைவேறியது. மகாசபையிலும் அது அப்படியே ஏற்கப்பட்டது. இதற்காகத் திரு. சீனிவாச ஐயங்கார் அரும்பாடுபட்டார். பொதுவாக சென்னை நகரில் கூடிய 42-ஆவது காங்கிரஸ் மகாசபை மிகவும் வெற்றிகரமாக நடந்து முடிந்தது.

சென்னை காங்கிரஸ் மகாசபைக்காக வசூலான பணத்திலே ரூ.75 ஆயிரம் மிச்சம் ஏற்பட்டது. அதனைக் கொண்டு தமிழ்நாடு காங்கிரசுக்கெனச் சென்னையிலே ஒரு மாளிகை நிர்மாணிப்ப தென திரு. சீனிவாச ஐயங்கார் கூறிய யோசனை ஏற்கப்பட்டது. அதன்படி, சென்னை ராயப்பேட்டை ஜெனரல் பீட்டர்ஸ் சாலையில் ஒரு இடத்தை விலைக்கு வாங்கி, அங்கு தமிழ்நாடு காங்கிரசுக்கென ஒரு மாளிகை எழுப்பப்பட்டது.

1927-ஆம் ஆண்டிலே சென்னை நகரில் மகாசபை கூடியதற்கு முன் காந்தியடிகள் மூன்று முறை தமிழ் நாட்டிற்கு வருகை தந்து நீண்ட சுற்றுலாவை மேற்கொண்டார். முதல் முறையில் 24-8-27 தொடங்கி 23-10-27 வரையுள்ள 2 மாத காலத்தில் தமிழ்நாடெங்கணும் சுற்றுலாச் செய்து கதர் வளர்ச்சி, மது விலக்கு, தீண்டாமை விலக்கு ஆகிய கொள்கைகளுக்கு மக்களுடைய ஆதரவைத் திரட்டும் வகையில் பிரசாரம் செய்தார்.

* *சென்னை காங்கிரஸ் தொண்டர் படையில் ஒருவராக திரு.ம.பொ. சிவஞானம் சேர்ந்து பணிபுரிந்தார். இதன் மூலம் அவர் காங்கிரஸ் மகாசபையில் முதன் முதலாகத் தம்மை இணைத்துக் கொண்டார்.*

இரண்டாவது முறையாக இலங்கைக்குச் சென்று திரும்புகையில் நவம்பர் 30, டிசம்பர் 1 ஆகிய இரண்டு நாட்கள் தமிழ் நாட்டில் தங்கினார்.

மூன்றாவது முறையாக காங்கிரஸ் மகாசபை நடந்த தருணத்திலே 23-12-27 தொடங்கி 28-12-27 வரை சென்னை நகரில் தங்கி மகாசபை நடவடிக்கைகளில் கலந்து கொண்டார். அடிகளின் இந்த சுற்றுலாக்கள் சென்னை காங்கிரஸ் மகாசபையின் வெற்றிக்குப் பெரிதும் பயன்பட்டன எனலாம்.

பூரண சுதந்திரக் கோரிக்கை

சென்னை காங்கிரசிலே பூரண சுதந்தரமே காங்கிரசின் கோரிக்கை என்னும் தீர்மானம் நிறைவேறியதற்கு திரு.எஸ். சீனிவாசய்யங்காரும் காரணமாவார். அவர் தலைமை வகித்த கோஹத்தி காங்கிரசிலேயே தமது தலைமையுரையில் இந்தக் கோரிக்கையை காங்கிரஸ் வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். விஷயாலோசனைக் கூட்டத்திலே ஒரு தீர்மானம் விவாதத்துக்கு வந்தது. எனினும், அப்போது அது நிறைவேற வில்லை. தமது செல்வாக்கில் நடைபெற்ற சென்னை காங்கிரசிலே அதனை திரு. ஐயங்கார் நிறைவேற்றி வைத்து விட்டார்.

ஐயங்கார் பற்றி ராசன்பாபு

சென்னை காங்கிரசில் இந்து - முஸ்லிம் ஒற்றுமைக்காக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு திரு. ஐயங்காரே காரணமாக இருந்தார். முஸ்லிம்கள் விஷயத்தில் அவர் கொண்டிருந்த தாராள மனப்பான்மையானது தமிழினத்தாருக்கேவுரிய சமரசப் பண்பாட்டைத் தழுவியதாகும். ஆனால் இந்து மனப் பான்மையுடைய தேசியத் தலைவர்களான லாலா லஜபதி ராய், பண்டித மதன்மோகன் மாளவியா, ராஜேந்திர பிரசாத் ஆகியோர் ஐயங்காரின் சமரச மனப்பான்மையை அடிக்கடி குறை கூறி வந்தனர். இதோ, ஐயங்கார் பற்றி ராஜன் பாபு கூறுகிறார்:

''இந்து - முஸ்லிம் பிரச்சினையிலே ஏதாவது ஒரு சமரச ஒப்பந்தம் செய்யப்பட வேண்டுமென்று திரு. சீனிவாச ஐயங்காருக்கு அதிக ஆர்வம் இருந்து வந்தது. ஆனால், இந்து - முஸ்லிம் தகராறு வடநாட்டில் எவ்வளவு சிக்கலானதாக இருந்ததோ, அதுபோலத் தென்னாட்டில் இல்லை. அங்கே, பிராமணர் - பிராமணரல்லாதாருக்கும், தீண்டத்தக்கவர் - தீண்டத்தக்காதவருக்கும் இடையில்தான் அதிகமாகப் போராட்டம் இருந்து வந்தது. அங்கே முஸ்லிம்களின்

எண்ணிக்கை குறைவு. பசு பலியைக் காரணமாகக் கொண்டு வட நாட்டில் எத்தனைக் கலகங்கள் நடந்து வந்தனவோ, அத்தனைக் கலகங்கள் தென்னாட்டில் நடக்கவில்லை. இந்தச் சிக்கலான விஷயத்தில் உள்ள கஷ்டத்தையும் இந்துக்களின் மனநிலையையும் தென்னாட்டார் சரியாக மதிப்பிட முடியாது.

''திரு. சீனிவாச ஐயங்கார் சிறிது பரபரப்புக்காரர். அவர் எவ்வளவு விரைவாகப் பேசுவாரோ, அதேபோல' விரைவில் ஒரு விஷயத்தைப் பற்றி முடிவுக்கு வந்து விடுவார், ஒருமுறை முடிவுக்கு வந்த பின் அதிலிருந்து மாற மாட்டார். அவர் மிகவும் மதி நுட்பம் உடையவர். ஆனால் செயல் திறன் போதாது. சட்ட நூல்களின் அறிவைப் பொறுத்தவரையில் அவர் எல்லோரையும் தோற்கடித்து விடுவார். ஆனால் செயல் திறன் என்று வந்த இடத்தில் அவருடைய அறிவு கவைக்கு உதவுவதில்லை.

''திரு. ஐயங்கார் காங்கிரஸ் தலைவராக இருந்தபோது இந்து - முஸ்லிம்களுக்கிடையே ஒரு ஒப்பந்தத்தைச் செய்து வைக்க வேண்டுமென்று பெருமுயற்சி எடுத்தார். ஆனால் அவர் கருத்தில் கொண்ட ஒப்பந்தத்தை இந்துப் பொது மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. காங்கிரசிலிருந்த இந்துக்களும் கூட ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் அவருடைய முயற்சி வீணாயிற்று.''

('என் வரலாறு' (தமிழ்); பக். 453-54)

வழி காட்டியது தமிழ் நாடே!

மூதறிஞர் ராஜாஜி இந்து - முஸ்லிம் சமுதாயங்களிடையே நிலவிய பிணக்கைத் தீர்க்கவும் காங்கிரசுக்கும் முஸ்லிம் லீகுக்குமிடையே ஒரு உடன்படிக்கை காணவும் 1942 - ஆம் ஆண்டில் பெரு முயற்சி எடுத்தது நாடறிந்ததாகும். அதற்காக, லீகின் பாகிஸ்தான் திட்டத்திற்குக்கூட ஓரளவு இசைவு தெரிவிக்குமளவுக்கு ராஜாஜி சென்றார். பிற்காலத்தில் அதுதான் நிறைவேறியது. இந்து - முஸ்லிம் பிரச்னையில் ராஜாஜிக்கு முன்னோடியாகத் திகழ்ந்தார், திரு.எஸ். சீனிவாச ஐயங்கார், இந்த வகுப்புப் பிரச்னையிலே தென்னாட்டுத் தலைவர்கள்தான் சரியான நிலையை மேற்கொண்டிருந்தார்கள். ஆனால் வடநாட்டுத் தலைவர்கள் சரியான நேரத்தில் புரிந்து கொள்ளத் தவறி விட்டார்கள். அதனால்தான் தேசத்தைத் துண்டாட வேண்டிய நிலை ஏற்பட்டது.

சைமன் கமிஷன் பகிஷ்காரம்

1920-இல் நடைமுறைக்கு வந்த மாண்டேகு - செம்ஸ்போர்டு சீர்திருத்தத்திலேயே, 'இந்தச் சீர்திருத்தம் நடைமுறைக்கு வந்தபின் பத்தாண்டுகள் கழித்து இதன் பலாபலன்களை ஆராயவும் வேண்டிய மாறுதல்களைச் செய்து பரிந்துரை தரவும் ஒரு கமிஷன் நியமிக்கப்படும்' என்ற உறுதி மொழியும் சேர்க்கப்பட்டிருந்தது.

அதன்படி, பத்தாண்டு நிறைவு பெறுவதற்கு முன்பே 1927 நவம்பரில் சர். ஜான் சைமன் என்பார் தலைமையில் பிரிட்டிஷ் பார்லிமெண்டு உறுப்பினர் எழுவர் கொண்ட கமிஷன் நியமிக்கப்பட்டது. இதுபற்றிய பிரிட்டிஷ் அரசின் அறிக்கை இந்தியாவிலும் லண்டனிலும் ஒரே காலத்தில் வெளியானது.

இந்தியர் இல்லை

சைமன் கமிஷனிலே இந்தியர் எவரும் இடம் பெறவில்லை. அடுத்த சீர்திருத்தம் எதுவாக இருக்க வேண்டும் என்பதை ஆலோசித்து முடிவு செய்யும் உரிமையும் திறமையும் ஆளுஞ்சாதியாரான ஆங்கிலேயருக்குத்தான் உண்டு என்பதைச் சொல்லாமல் சொல்லுவது போலிருந்தது பிரிட்டிஷாரின் போக்கு!

1909-இல் முதன் முதலாக இந்தியாவுக்கு வழங்கப்பட்ட சீர்திருத்தத்தை உருவாக்கக் கமிஷன் எதுவும் நியமிக்கப்பட வில்லை. அப்போது இந்தியா மந்திரியாக இருந்த மார்லி என்பவரும், இந்தியாவின் வைசிராயாக இருந்த லார்டு மிண்டோ என்பவரும் கலந்து பேசி, சீர்திருத்தத்தை உருவாக்கி வழங்கினர். அதனாற்றான், அது 'மிண்டோ மார்லி சீர்திருத்தம்' எனப் பெயர் பெற்றது.

பின்னர், இரண்டாவது முறையாக 1919-இல் சீர்திருத்தம் வழங்கப்பட்டபோதும், இந்தியா மந்திரியாக இருந்த மாண்டேகு என்பவரும் வைசிராயாக இருந்த செம்ஸ்போர்டு என்பவரும் கலந்து பேசி அதனை உருவாக்கி வெளியிட்டனர். அது,

'மாண்டேகு - செம்ஸ்போர்டு சீர்திருத்தம்' என்று பெயர் பெற்றது.

இந்தப் பழைய முறைகளைக் கைவிட்டு, 1927 -இல் சர். ஜான் சைமன் தலைமையில் வெள்ளையர்களையே கொண்ட ஒரு கமிஷனை நியமித்து, அதன் மூலம் சீர்திருத்தத் திட்டத்தைப் பெற பிரிட்டிஷ் அரசு முடிவெடுத்தது. அந்தக் கமிஷனிலே இந்திய மிதவாதிகளில் எவரையேனும் சேர்த்திருக்கலாம். அவர்களைக் கூடப் புறக்கணித்தது பிரிட்டிஷ் அரசு.

சுயமரியாதைக்கு இழுக்கு

சைமன் கமிஷன் நியமனமானது திடீரென நிகழ்ந்ததால் இந்தியர்களுக்குப் பெருத்த அதிர்ச்சியைத் தந்தது. ''இந்தக் கமிஷனை ஏற்பது இந்தியரின் சுயமரியாதைக்கே இழுக்காகும்'' என்றது இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை.

மிதவாதிகள் தங்கள் வரலாற்றிலே முன் எப்போதுங் காட்டாத வகையில் பிரிட்டிஷ் அரசுக்கு எதிர்ப்புக் காட்டினர். சர். தேஜ்பகதூர் சாப்ரு போன்ற மிதவாதத் தலைவர்கள் சைமன் கமிஷன் நியமனத்தை எதிர்த்து அறிக்கை விட்டனர். இந்துக்கள் பெயராலும் இஸ்லாமியர் பெயராலும் இயங்கிக் கொண்டிருந்த வகுப்பு வாத அரசியல் அமைப்புகளும் சைமன் கமிஷனுடன் ஒத்துழைக்க இயலாதென அறிக்கை விட்டன. ஆனால், மிதவாதிகளும் வகுப்புவாத அரசியல் அமைப்புகளும் கண்டன அறிக்கை வெளியிட்டதோடு ஓய்ந்து விட்டன. இந்திய மக்களுடைய எதிர்ப்பைச் செயல் மூலம் வெளிப்படுத்திக் காட்ட வேண்டிய பொறுப்பை காங்கிரஸ்தான் மேற்கொள்ள வேண்டியிருந்தது.

1927 டிசம்பரில் சென்னையில் கூடிய காங்கிரஸ் மகாசபையானது, சைமன் கமிஷன் இந்திய மண்ணில் கால் வைக்கும் நாளிலே நாடெங்கும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றியதை முன்பே அறிந்தோம்.

சட்டசபைகளில்...

சைமன் கமிஷனுடன் எந்த வகையிலும் ஒத்துழைக்க வேண்டாமென்று பொது மக்களையும் அரசியல் கட்சிகளையும் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒன்றை 16-2-28 - இல் கூடிய இந்திய சட்டசபைக் கூட்டத்தில் லாலா லஜபதிராய் கொண்டு வர, அது மிகப் பெரும்பாலான வாக்குகளைப் பெற்று நிறைவேறியது.

சென்னை சட்ட மன்றத்திலேயும் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. சாமி வெங்கடாசலஞ் செட்டியார், சைமன் கமிஷனுடன் ஒத்துழைக்க முடியாதென்று பிரகடனப்படுத்தும் தீர்மானம் ஒன்றைக் கொடுத்தார். அத்தீர்மானம் 1928 ஜனவரி 24, 25 ஆகிய இரண்டு நாட்களிலும் மிகவும் காரசாரமாக விவாதிக்கப்பட்டது. இந்தத் தீர்மானத்தை ஆதரித்துக் காங்கிரஸ் பெருந்தலைவர்களான எஸ். சத்தியமூர்த்தி, குத்தி கேசவப் பிள்ளை, ஜி. அரிசர்வோத்தம ராவ், சி.என். முத்துரங்க முதலியார், பி. சிவராவ் ஆகியோர் பேசினர்.

திரு.எஸ். சத்தியமூர்த்தி பேசுகையில், ''அழையா வீட்டுக்கு நுழையா சம்பந்தி போல சைமன் கமிஷன் எதற்காக வர வேண்டும்?'' என்று கேட்டார். ''இந்தியாவின் தேவை பரிபூரண சுதந்திரந்தான் அதை விசாரணைக்குவிட ஒரு கமிஷன் தேவை யில்லை. பிரிட்டிஷ் அரசு செய்ய வேண்டிய ஒரே காரியம் இந்தியாவை இந்தியரிடம் ஒப்படைத்து விட்டு, வெளியேறிவிட வேண்டியதுதான்'' என்று சட்டசபையிலிருந்த வெள்ளை உறுப்பினர்களின் காதுகள் கேட்கக் கர்ஜனை செய்தார்.

தீர்மானத்தின் மீது வாக்கெடுத்தபோது, ஆதரித்து 61 பேரும் எதிர்த்து 29 பேரும் வாக்களித்தனர். 19 பேர் எந்தப் பக்கமும் சாராமல் நடுநிலை வகித்தனர்.

முதலமைச்சர் டாக்டர் ப. சுப்பராயனும் மற்றிரு அமைச்சர் களான திரு. அரங்கநாத முதலியார், திரு. ஆரோக்கியசாமி முதலியார் ஆகியோரும் நடுநிலை வகித்தனர்.

தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்த 29 பேரில் 13 பேர் வெள்ளையர்கள். நியமன உறுப்பினர் 15 பேர். ஒருவர்தான் முஸ்லிம்களுக்குரிய தனித்தொகுதி யொன்றிலிருந்து தேர்ந் தெடுக்கப்பட்டவர். நியமன உறுப்பினரில் சரிபாதிக்கு மேற்பட்டவர்கள் அரிசனப் பிரதிநிதிகளாவர். அவர்களனைவரும் தீர்மானத்தை எதிர்த்தே வாக்களித்தனர். கவர்னரின் நிர்வாக சபை உறுப்பினர்களான சர்.சி.பி. ராமசாமி ஐயரும், சர். முகமது உஸ்மானும் எதிர்த்து வாக்களித்தனர்.

தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்த 61 பேரில் 57 பேர் வாக்காளர்களால் பல்வேறு தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்டவர்களாவர். நியமன உறுப்பினர்களிலும் 4 பேர் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர். சட்ட சபையின் ஒரே பெண் பிரதிநிதியும் நியமன உறுப்பினருமான டாக்டர் முத்து லட்சுமி ரெட்டியும் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தார்.

சைமன் கமிஷன் நியமனத்தை அமைப்பு ரீதியில் ஜஸ்டிஸ் கட்சி எதிர்க்கவில்லை; ஆதரிக்கவும் செய்தது. ஆயினும், அக்கட்சியைச் சார்ந்த ஒரு சிலர் சுயமரியாதை உணர்வுடன் காங்கிரஸ் முன் மொழிந்த தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர்.

மத்திய சட்ட மன்றத்திலும், மற்றுள்ள மாநில சட்ட மன்றங்களிலும் சைமன் கமிஷனுடன் தேச மக்கள் எந்த வகையிலும் ஒத்துழைக்கக் கூடாதென்று தீர்மானம் நிறைவேற்றியதானது பொதுமக்களுக்கு மிகுந்த உற்சாகத்தைத் தந்தது. அதனால், காங்கிரஸ் மேற்கொண்ட பகிஷ்கார நடவடிக்கைகளிலே மக்கள் பங்கு கொள்ள முன் வந்தனர்.

இர்வின் இறுமாப்பு!

தேசத்தில் சைமன் கமிஷனுக்கு ஏற்பட்ட எதிர்ப்பை ஏளனப் படுத்தும் வகையிலே, ''யார் ஒத்துழைத்தாலும் ஒத்துழைக்க மறுத்தாலும் சைமன் கமிஷன் தனது வேலையைச் செய்யும்'' என்று வைசிராய் லார்டு இர்வின் இறுமாப்புடன் அறிக்கை விடுத்தார். இது, எரிகிற தீயில் எண்ணெய் ஊற்றுவதுபோல் இருந்தது.

பிப்ரவரி 3 -ஆம் தேதியன்று சைமன் கமிஷன் பம்பாய்த் துறைமுகத்தில் கப்பலில் வந்து இறங்கியது. அன்று நாடெங்கும் கடையடைப்பும் தொழிலாளர் வேலை நிறுத்தமும் நடைபெற்றன. மாணவர்கள் பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் செல்லவில்லை. வழக்கறிஞர்கள் நீதி மன்றங்களுக்குச் செல்லவில்லை. டில்லி, லட்சுமணபுரி, பாட்னா, கல்கத்தா ஆகிய பிரதான நகரங்களிலெல்லாம் கண்டன ஊர்வலங்களும், பொதுக் கூட்டங்களும் நடைபெற்றன. காணுமிடந்தோறும் கறுப்புக் கொடிகள் காட்சியளித்தன. 'சைமனே, திரும்பிப் போ!' என்னும் ஒலி எங்கும் எழுந்தது. சென்னை நகரிலும் கடையடைப்பும் கண்டன ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றன!

சென்னையில் உயிர்ப் பலி!

சென்னையில் நடந்த கண்டன ஆர்ப்பாட்டத்தை ஒடுக்கப் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததால், மூவர் உயிரிழக்க நேர்ந்தது. சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் பதினாயிரக் கணக்கான மக்கள் அடங்கிய பொதுக்கூட்டம் நடைபெற்றது. முக்கிய தலைவர்களெல்லாம் பேசினர். சைமன் கமிஷனைத்

திருப்பி அழைத்துக் கொள்ளுமாறு பிரிட்டிஷ் அரசைக் கோரும் தீர்மானம் கடற்கரைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

சென்னை புரசைவாக்கம் பகுதியில் நடந்த ஆர்ப் பாட்டத்தில் பங்கு கொண்டு திரு.ம.பொ.சி. கைதியானார். வேப்பேரி காவல் நிலையத்தில் பலமணிநேரம் காவலில் வைக்கப்பட்டபின் நள்ளிரவில் விடுதலை செய்யப்பட்டார்.

சைமன் கமிஷன் டில்லி மாநகருக்கும் பாட்னா, கல்கத்தா ஆகிய பிரதான நகரங்களுக்கும் சென்றது. அதுபோல, சென்னை நகருக்கும் வருகை தந்தது. அப்போது கமிஷன் பகிஷ்கரிக்கப் பட்டது. 'சைமனே, திரும்பிப் போ!' என்னும் வாசகம் பொறிக்கப்பட்ட சுவரொட்டி நகரெங்கும் ஒட்டப்பட்டிருந்தது. கண்டன ஊர்வலமும் கடற்கரையில் பொதுக்கூட்டமும் நடைபெற்றன. ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்த பலர் கமிஷனுக்கு நடைபெற்ற வரவேற்பில் கலந்து கொண்டார்கள்.

முடிவைப் புறக்கணித்து...

சைமன் கமிஷன் சென்னை வந்தபோது டாக்டர்.ப. சுப்பராயன் தலைமையில் சுயேச்சை அமைச்சரவை இயங்கி வந்தது. அது காங்கிரஸ் கட்சியின் தயவால்தான் நடந்து வந்தது. சைமன் கமிஷனைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்று காங்கிரஸ் முடிவு எடுத்திருந்தும் சுயேச்சை அமைச்சரவையின் தலைவர் ப. சுப்பராயன் கமிஷன் வரவேற்பில் கலந்து கொண்டார். அவரைக் கண்டித்து அவரது அமைச்சரவையிலிருந்த திரு. அரங்கநாத முதலியார், திரு. ஆரோக்கியசாமி முதலியார் ஆகிய இருவரும் அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தனர். ஆனால், டாக்டர் ப. சுப்பராயன் தனது தவறை உணரவில்லை. திரு.எஸ். முத்தையா முதலியார், திரு. சேதுரத்தினம் ஐயர் ஆகிய இருவரையும் அமைச்சர்களாக்கி, ஜஸ்டிஸ் கட்சி சட்டசபை உறுப்பினர்களின் ஆதரவோடு சில மாதங்கள் ஆட்சி நடத்தினார்.

புகைச்சல் அனலாயிற்று!

பொதுவாக சைமன் கமிஷன் வருகை தந்ததன் காரணமாக, தேசம் எங்கும் பிரிட்டிஷ் ஆட்சி மீதிருந்த வெறுப்புணர்ச்சி அதிகரித்தது. 1905-இல் அப்போதைய வைசிராய் லார்டு கர்சான் வங்க மாநிலத்தைத் துண்டாடியதால் விடுதலை ஆவேசம் வீறிட்டெழுந்தது. பின்னர் வங்கப் பிரிவினை கைவிடப்பட்ட தென்றாலும் தேசாவேகம் அடங்கவில்லை.

1919-இல் பயங்கரப் புரட்சியாளர்களை ஒடுக்குவதற்கென்று இந்திய வைசிராய் கொண்டு வந்த ரௌலட் சட்டத்தின் விளைவாக இரண்டாவது முறையாகத் தேசம் முழுவதிலும் கொதிப்பு ஏற்பட்டது. ரௌலட் சட்டத்தை எதிர்த்து ஒரு போராட்டமே நடந்தது. பின்னர் அந்தச் சட்டம் கைவிடப்பட்டதென்றாலும், அது ஏற்படுத்திய ஆவேசம் அடங்கவில்லை.

1921-இல் வேல்ஸ் இளவரசர் இந்தியாவுக்கு வருகை தந்த போதும் அவருக்கு எதிராக எழுந்த பகிஷ்காரக் கிளர்ச்சி ஒரு போராட்டமாகவே உருவெடுத்தது. *1928*-லும் சைமன் கமிஷன் வருகை காரணமாக தேசத்தில் திரும்பவும் விடுதலை ஆவேசம் வெளிப்பட்டது.

சைமன் கமிஷன் பிப்ரவரி *3*-இல் இந்தியாவுக்கு வருகை தந்தது. மார்ச்சு *31*-இல் இந்தியாவிலிருந்து புறப்பட்டு லண்டனுக்குச் சென்றது. கமிஷனுக்கு எதிராக அரசியல் ரீதியில் மட்டுமின்றி, சமூக ரீதியிலும் பகிஷ்காரம் நடைபெற்றதென்று கமிஷன் குழுவின் தலைவர் சர். ஜான் சைமனே ஒப்புக் கொண்டார். அரசியல் கட்சித் தலைவர்களில் யாரையுமே விசாரிக்க முடியாத நிலையில்தான் தமது கமிஷனில் வேலையை இந்தியாவில் முடிக்க வேண்டியிருந்ததென்றும் சர். ஜான் சைமன் அறிவித்தார்.

ஜஸ்டிஸ் கட்சியின் தனித்தன்மை

இந்தியாவில் காங்கிரசல்லாத அரசியல் கட்சிகளிலே சென்னை மாகாணத்திலிருந்த ஜஸ்டிஸ் கட்சி ஒன்றுதான் அதிகார பூர்வமாக சைமன் கமிஷன் வரவேற்பில் கலந்து கொண்டது. இது, அக்கட்சி சென்னை மாகாணத்துப் பிராமணரல்லாதாருக்குத் தேடி வைத்த 'பெருமை' போலும்!

இங்கு ஒரு சுவையான செய்தியைச் சொல்லியாக வேண்டும். அது, *1928* -ஆம் ஆண்டில் செங்கற்பட்டு நகரில் கூடிய மாகாண சுயமரியாதை மாநாட்டில் சைமன் கமிஷனை வரவேற்றும், அப்படி வரவேற்பது பிராமணரல்லாதாரின் சுயமரியாதைக்கு ஒத்ததே என்று சொல்லியும் நிறைவேற்றப்பட்ட தீர்மானமாகும். அந்தத் தீர்மானம் வருமாறு:

> ''இந்தியாவிலுள்ள பல வகுப்பாரின் உரிமைகளும் அபிப்பிராயங்களும் ஒன்றுக்கொன்று மாறாக இருப்பதாலும், இந்திய அரசியல் விசாரணைக் கமிஷனில் இந்தப் பல வகுப்புகளுக்கும் பிரதிநிதிகள் நியமிப்பது சாத்தியமல்ல

வென்று இந்தியா மந்திரி பார்லிமெண்டில் கூறியிருப்பதாலும், இந்தியர்களில் எல்லா சமூகத்தாருக்கும் நம்பிக்கை கொடுக்கக்கூடிய ஒருவரைச் சேர்க்க முடியாத நிலைமையில் நமது தேசம் இருக்கிறபடியாலும், இந்திய அங்கத்தினர் நியமிக்கப்படவில்லையென்னும் காரணத்தைக் கொண்டு கமிஷனை பகிஷ்கரிப்பது நியாயம் அல்ல வென்று இம்மாநாடு கருதுகின்றது.

''பிரிட்டிஷ் பார்லிமெண்டார் இந்திய தேசத்தை ஆண்டு வருகிற உரிமையையும் இந்திய அரசாங்கத்தை நிர்வகித்து வருகிறதையும் இந்தத் தேசத்திலுள்ள எல்லா ராஜ்யக் கட்சியும் ஏற்று அடங்கி ஒத்துழைத்து வருகிற இக்காலத்தில் அதே பார்லிமெண்டால் நியமிக்கப்பட்ட விசாரணைக் கமிஷன் முன் சாட்சியம் சொல்வது இந்தியரின் சுய மரியாதைக்கு விரோதமென்று சொல்லுதல் பொருத்த முள்ளதல்ல வென்று இம்மாநாடு கருதுகின்றது.''

(''நமது குறிக்கோள்'' என்னும் தலைப்பில் 1948-இல் பிரசுரிக்கப்பட்ட ''விடுதலை'' வெளியீட்டிலிருந்து எடுக்கப் பட்டதாகும்.)

திரும்பி வந்தபோது...

1928 மார்ச்சு 31-இல் இந்தியாவை விட்டுச் சென்ற சைமன் கமிஷன் திரும்பவும் அதே ஆண்டு அக். 27-இல் இந்தியா வந்தது. இந்த முறையும் பம்பாய்த் துறைமுகத்தில் வந்து இறங்கிய நாளிலே, பம்பாய் மாகாணம் முழுவதிலும் கடையடைப்பும், வேலை நிறுத்தமும், கருப்புக்கொடி ஆர்ப்பாட்டமும் முன்னை விடவும் அதிக அளவில் நடைபெற்றன. ஆம்; மற்ற மாகாணங்களுக்கு வழி காட்டியது பம்பாய் மாகாணம். பம்பாய் நகரில் மட்டும் சர்' பட்டதாரிகள் 20 பேருக்கு மேலிருந்தும் அவர்களில் ஒருவர் கூடச் சைமனுக்கு நடந்த வரவேற்பில் கலந்து கொள்ளவில்லை.

லஜபதி மரணம்!

இந்த முறையும் டில்லி, கல்கத்தா, லாகூர், லட்சுமணபுரி, சென்னை, ரங்கூன் (பர்மா) ஆகிய பெருநகரங்களுக்குக் கமிஷன் சென்றது. அக். 30-இல் லாகூரில் லாலா லஜபதிராய் தலைமையில் கருப்புக்கொடி ஊர்வலம் நடைபெற்றது. சாண்டர்ஸ் என்ற ஆங்கிலேயே சார்ஜண்ட், 'சட்ட விரோதமானது' என்று கூறி, ஊர்வலத்தைத் தடியாலடித்துக் கலைக்க முற்பட்டபோது,

தலைவர் லஜபதி ராய் படுகாயமுற்றார். அப்பெருமகனார், காயமடைந்த சில நாட்களுக்குள் 17-11-28-இல் காலமானார். அப்போது, ''என் மீது பட்ட ஒவ்வொரு அடியும் பிரிட்டிஷ் ஆட்சியின் சவப்பெட்டி மீது அறையப்பட்ட ஒவ்வொரு ஆணியாகும்'' என்று அவர் கூறினார். லஜபதியின் மரணச் செய்தியைக் கேட்ட ராஜாஜி, ''பாஞ்சாலம் இந்தத் துக்கத்தை எப்படித் தாங்கிக் கொள்ளும்? இறைவன்தான் அதற்கான சக்தியைத் தர வேண்டும்'' என்று கூறினார். ''இமயஞ் சாய்ந்ததோ?'' என்னுந் தலைப்பிட்டு, தமது 'நவசக்தி' வார இதழில் (21-11-28) திரு.வி.க. தலையங்கமெழுதினார்.

நேருஜிக்குப் படுகாயம்

சைமன் கமிஷன் லட்சுமணபுரி சென்றபோது, அங்கு ஜவகர்லால் தலைமையில் பகிஷ்கார ஊர்வலம் நடைபெற்றது. அப்போது, போலீசார் தடிகளால் அடித்து ஊர்வலத்தைக் கலைக்க முயன்றனர். அதனால், நேருஜிக்கும் பண்டித கோவிந்த வல்லப பந்த் அவர்களுக்கும் உடலில் பலமான காயங்கள் ஏற்பட்டன. போலீசார் கூட்டத்தைத் தடியால் அடித்துக் கலைத்துகொண்டிருந்த நேரத்தில் நேருஜி ஆவேசங் கொண்டவராக நின்றார். அச் சமயத்தில் ஒரு இளைஞன் அவரை அணுகி, 'நேருஜி, துப்பாக்கி தாருங்கள், இந்தப் போலீசாருக்குப் பாடங் கற்பிக்கிறேன்' என்று உரத்த குரலில் கூறினான். நேருஜி அதற்கு இணங்காமல், அவனை விரட்டி விட்டார். ஆனால், பின்னர் விசாரித்தறிந்ததில் அந்த இளைஞன் போலீஸ் ஒற்றன் என்பது தெரிந்தது.

இதுபற்றி நேருஜி எழுதிய கடிதமொன்றை காந்திஜி தமது 'யங் இந்தியா'வில் பிரசுரித்து, ஒரு குறிப்பும் எழுதினார். அதிலே, ''துப்பாக்கியை உபயோகிப்பதென்ற முடிவுக்கு வந்து விடுவோமானால், அதற்கு வெளியாரைப் பயன்படுத்த மாட்டோம். நாமே அதைச் செய்வோம். ஆனால், அந்த நிலை நமக்கு என்றுமே ஏற்படாது'' என்றார்.

நீதிக் கட்சியின் அரச விசுவாசம்!

சைமன் கமிஷன் 1926 பிப்ரவரி 29-இல் சென்னை வந்தது. இம்முறையும் காங்கிரசும் தேசபக்தியுள்ள பிற அமைப்புகளும் கமிஷனைப் பகிஷ்கரித்தன. சென்னை மாகாண மெங்கும் கடையடைப்பும் பொது வேலை நிறுத்தமும் வெற்றிகரமாக நடை

பெற்றன. மாணவர்கள் பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் செல்லாமல் பகிஷ்கார ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்டனர்.

கமிஷன் முதன் முதலாகச் சென்னை நகருக்கு வருகை தந்த நாளில் நடந்த பகிஷ்காரத்தின்போது, ஜார்ஜ் டவுனில் ராணுவம் அழைக்கப்பட்டது. போலீஸ் துப்பாக்கிச் சூடும் நடைபெற்றது. இரண்டாவது முறை அப்படிப்பட்ட அசம்பாவிதம் எதுவுமின்றி பகிஷ்கார ஆர்ப்பாட்டங்கள் அமைதியாக நடைபெற்றன.

துரதிர்ஷ்டவசமாக, இம்முறையும் ஜஸ்டிஸ் கட்சி கமிஷனை வரவேற்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தது. அதற்கென சர். சங்கரன் நாயர் தலைமையில் தனியாக ஒரு குழுவும் அமைக்கப்பட்டது. கமிஷன் சென்னை வந்த நாளிலே ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களும் வெள்ளையர்களும் துறைமுகஞ்சென்று வரவேற்பளித்தனர். ஜஸ்டிஸ் கட்சியின் பிரச்சார யந்திரமாக இயங்கிய சுயமரியாதை இயக்கமே கமிஷனை வரவேற்பது திராவிடர்களின் சுயமரியாதைக்கு ஏற்றதுதான் என்று கூறிவிட்டதல்லவா!

ஐயரின் வேதனை!

சென்னை மாநகராட்சியின் சார்பில் கமிஷனுக்கு வரவேற்பளிக்கவும் ஜஸ்டிஸ் கட்சி முயன்றது. ஆனால், மாநகராட்சியின் காங்கிரஸ் உறுப்பினர்கள் கடுமையாக எதிர்த்தனர். திரு.எஸ். சத்தியமூர்த்தி ஐயர், ''தேசம் முழுவதுமே கமிஷனை பகிஷ்கரிக்கும் போது சென்னை மாகாணத்தில் மட்டும் ஜஸ்டிஸ் கட்சியினர் வரவேற்பளிப்பது முதல்தரமான தேசத் துரோகமாகும். இதை மக்கள் மன்னிக்க மாட்டார்கள்'' என்று கூறினார்.

மாநகராட்சியிலே ஜஸ்டிஸ் உறுப்பினர்களைத் தவிர மற்ற உறுப்பினர்க ளெல்லாம் வரவேற்புக்கு எதிராக வாக்களித்து ஜஸ்டிஸ் கட்சியின் முகத்தில் கரி பூசினர். அப்போது, திரு.ஏ. இராமசாமி முதலியார் மாநகராட்சியின் தலைவராக இருந்தார். அவர், துறைமுகத்திற்குச் சென்று, அங்கு மாநகராட்சியின் பெயரால் ஒரு கூட்டத்தைச் சேர்த்து, மாநகராட்சியின் தலைவர் என்ற முறையில் கமிஷனுக்கு வரவேற்பிதழ் வாசித்தளித்தார்.

முதலியார் மன்னிப்புக் கோரினார்!

மறுநாள் நடந்த மாநகராட்சிக் கூட்டத்திலே காங்கிரஸ் உறுப்பினர்கள், 'திரு. முதலியார் மாநகராட்சியை அசிங்கப்

படுத்திவிட்டார்' என்று கூறி, அமளி செய்தனர். கூட்டத்தை நடத்த முடியாத அளவுக்கு அமளி வலுத்தது. 'ஜஸ்டிஸ் கட்சியின் தேசத் துரோகத்தை தேசம் மன்னிக்காது' என்றார் திரு. புர்ரா சத்தியநாராயணா. துறைமுகத்தில் கமிஷனுக்கு தரப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சிக்குக் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு மட்டும் அழைப்பு அனுப்பப்படாததற்குக் காரணம் கேட்கப்பட்டது. ''வரவேற்புத் தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்தவர்களுக்கு அழைப்பு அனுப்பாதது சரிதான்'' என்றார் தலைவர் முதலியார். இதனால், அமளி வலுத்தது. பின்னர், திரு.ஏ. இராமசாமி முதலியார், தாம் செய்தது தவறு என்பதை ஒப்புக் கொண்டு, அதற்காக மாநகராட்சி உறுப்பினர்களிடம் மன்னிப்புக் கேட்டார்.

மோதிலால் கண்டனம்!

இந்தியாவிலேயே ஒரு அரசியல் கட்சியின் பெயரால் கமிஷனுக்கு வரவேற்பளிக்கப்பட்டது சென்னையில்தான். இதனை வடபுலத்திலுள்ள செல்வாக்கு மிக்க நாளேடுகளெல்லாம் கண்டித்தன. 'வங்காளி' என்ற நாளேடு, ''சைமனுக்கு எதிராக இந்தியா காட்டிய தேசபக்தி மிக்க எழுச்சிக்கு சென்னை மாகாணம் களங்கம் ஏற்படுத்தி விட்டது'' என்று எழுதியது. அப்போது ஆங்கிலேயரால் நடத்தப்பட்ட சென்னை 'மெயில்', கல்கத்தா 'ஸ்டேட்ஸ்மேன்' ஆகிய ஆங்கில நாளேடுகள் ஜஸ்டிஸ் கட்சியைப் பாராட்டி எழுதின.

பண்டித மோதிலால்நேரு, சென்னையில் ஜஸ்டிஸ் கட்சியினர் கமிஷனுக்கு வரவேற்பளித்ததறிந்து வேதனைப் பட்டார். இதே சென்னையில் நடந்த காங்கிரஸ் மகாசபையில் கமிஷனைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்ற தீர்மானம் நிறை வேற்றப்பட்டதை மோதிலால் நேரு சுட்டிக்காட்டினார். முதன் முறையில் கமிஷன் வந்தபோது இதே சென்னைதான் அதற்கு எதிராகப் போர்க்கோலங் கொண்டது என்பதையும் மோதிலால் நேரு நினைப்பூட்டினார்.

'இந்து'வின் பதில்

பெரிய நேருவுக்குப் பதிலளித்தது சென்னை 'இந்து' பத்திரிகை. அது வருமாறு:

''ஜஸ்டிஸ் கட்சி கமிஷனை வரவேற்றது அப்பட்டமான சந்தர்ப்பவாதமாகும். இதுபோன்ற துரோகம் இந்தியாவின் வரலாற்றிலே இதற்கு முன் நடந்ததே இல்லை. காங்கிரசும்

அனைத்துக் கட்சிகளின் குழுவும் முடிவு செய்தபடி நாடே ஒன்றுபட்டு நின்று சைமன் கமிஷனைப் பகிஷ்கரித்தது. பம்பாய், சென்னை, கல்கத்தா, லாகூர், ரங்கூன் மட்டுமல்லாமல், எங்கெல்லாம் கமிஷன் சென்றதோ அங்கெல்லாம் மக்கள் கறுப்புக்கொடி காட்டி கமிஷனை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தார்கள். 'சென்னை மட்டும் நாட்டைக் காட்டிக் கொடுத்து விட்டது' என்று மோதிலால் நேரு கூறியுள்ளார். ஆனால், சென்னை மக்கள் துரோகம் செய்யவில்லை. 1929 பிப்ரவரி 18-இல் சென்னை மக்கள் ஒன்றுபட்டு நின்று சைமன் கமிஷனை எதிர்த்தார்கள். நகரமெங்கணும் முழு அளவு கடையடைப்பு நடைபெற்றது. கறுப்புக் கொடியும் காட்டப்பட்டது. 'சைமனே, திரும்பிப் போ!' என்று கோஷிக்கப்பட்டது. அதற்காக சென்னை பாராட்டப் படவேண்டும்.''

சைமன் கமிஷன் இந்தியாவிலிருந்த சந்தர்ப்பத்திலே அதன் உறுப்பினர்களைக் கொல்லச் சதி செய்ததாக வடபுலத்தில் சிலர் மீது சதி வழக்குத் தொடரப்பட்டது. அவர்களில் மன்மோகன் குப்தா, நரேந்திரன், மார்க்கண்டேயன் ஆகிய மூவருக்குத் தலா நான்காண்டு கடுங்காவல் தண்டனை தரப்பட்டது.

திருஷ்டி கழிப்பு!

கிலாபத் கிளர்ச்சிக்கு அடுத்தபடியாக சைமன் கமிஷன் பகிஷ்காரத்தின்போதுதான் இந்தியாவில் இந்து - முஸ்லிம் தலைவர்கள் ஒருமனப்பட்டு பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்தனர். முஸ்லிம் லீக், இந்து மகாசபை ஆகிய மத அமைப்புகளெல்லாம் காங்கிரசுடன் கைகோத்து நின்றன.

இரண்டாவது முறையாக இந்தியாவுக்கு வருகை தந்த சைமன் கமிஷன் முதன் முறை பெற்ற கசப்பான அனுபவத்தையே திரும்பப் பெற்றது. ஆம், இம்முறையும் சென்னை நகரில் தவிர நாட்டின் வேறு எந்தப் பகுதியிலும் அரசியல் தலைவர்களேயன்றி, வணிகர்கள் - தொழிலதிபர்கள் ஆகியோர் கூடக் கமிஷன் முன் ஆஜராகிச் சாட்சியந் தரவில்லை. தர மறுத்துவிட்டனர். சர். சங்கரன் நாயர்கூட, *''கமிஷன் எந்தச் சாட்சியத்தைக் கொண்டு அறிக்கை தயாரிக்கப் போகிறதோ?''* என்று சலிப்போடு கூறினார். சைமன் கமிஷன் பகிஷ்காரத்தின் போது நாட்டில் வெளிப்பட்ட தேச பக்தியும் ஒருமைப்பாட்டுணர்வும் முன்பு எந்தச் சந்தர்ப்பத்திலும் வெளிப்பட்டதில்லை. இதற்குத் திருஷ்டி கழித்தது போலிருந்தது ஜஸ்டிஸ் கட்சி வெளிப்படுத்திய பிரிட்டிஷ் விசுவாசம்!

சைமன் கமிஷனுக்கு ஒரு சவால்!

சைமன் கமிஷன் இரண்டாவது முறையாக இந்தியா வந்த போது இந்திய அரசாங்கம் பிரிட்டிஷ் விசுவாசிகளான இந்தியர் களைக் கொண்ட அனைத்திந்தியக் குழுவொன்றை நியமித்தது. இதன் தலைவர் பொறுப்புக்குச் சென்னை மாகாணத்துக்குக் கனவான் ஒருவர் கிடைத்தார். அவர் சர். சங்கரன் நாயர் ஆவார். இவர் அமராவதி (ம.பி.)யில் நடந்த 13-ஆவது காங்கிரஸ் மகாசபையில் தலைமை வகித்தவர். பின்னர் காங்கிரசிலிருந்து விலகினார். சென்னை மாகாண உயர்நீதி மன்றத்தின் நீதிபதியாக நியமிக்கப் பெற்றார். கலெக்டர் ஆஷ் கொலையை யொட்டி உருவாக்கப்பட்ட நெல்லைச் சதி வழக்கை விசாரித்த மூன்று நிதிபதிகளில் இவரும் ஒருவராவார். இதன் பின்னர் வைசிராய் நிர்வாக சபை உறுப்பினரானார். அதிலும் பொருந்தாமல் பஞ்சாப் இராணுவ ஆட்சியைக் கண்டித்துப் பதவி துறந்தார். அதனை யடுத்து, 'காந்திஜியும் அராஜகமும்' என்றொரு நூல் எழுதினார். இந்நூலில் காந்திஜியை வசைபாடியதோடு, ஜாலியன் வாலா பாக் படுகொலையின்போது துணை ஆளுநராக விருந்த சர். மைக்கேல் ஓட்வியரையும் குறை கூறியிருந்தார். அதனை ஆட்சேபித்து மாஜி தேசியவாதியான இவர் மீது ஓட்வியர் மான நஷ்ட வழக்குத் தொடுத்தார். அவ் வழக்கு விசாரணை லண்டன் உயர்நீதி மன்றத்தில் நடைபெற்று, ஓட்வியருக்கு 3 லட்ச ரூபாய் நாயர் மான நஷ்டம் தரவேண்டுமென்று தீர்ப்பாயிற்று. வழக்கின்போது ஓட்வியரிடம் மன்னிப்புக் கேட்க நாயர் மறுத்தாரென்பது பாராட்டத்தக்க அம்சமாகும்.

இத்தகைய வரலாற்றைப் பின்னணியாகக் கொண்ட சர். சங்கரன் நாயர் தலைமையில்தான் சைமன் கமிஷனுக்கு உதவி புரிவதற்காக அனைத்திந்தியாவுக்குமாக ஒரு குழு நியமிக்கப் பட்டது. இதற்கு 'மத்தியக் குழு' எனப் பெயர் தந்து மாகாணந் தோறும் கிளைக்குழுக்கள் நியமிக்கப்பட்டன.

மத்தியக் குழுவில் டில்லி மேல் சபை உறுப்பினர் நால்வரும், அசெம்பிளி உறுப்பினர் ஐவரும் இடம் பெற்றனர். ஒன்பதின்மர் அடங்கிய இந்த மத்தியக் குழுவானது எழுவரடங் கிய சைமன் கமிஷனைப் பின்பற்றிச் சென்று கொண்டிருந்தது. இதனை, 'மத்தியக் குழுவானது ஸப்த ரிஷிகளுடன் தேசத்தில் சஞ்சாரம் செய்து கொண்டிருந்தது' என்று 'காங்கிரஸ் வரலாறு' என்னும் தமது நூலில் டாக்டர் பட்டாபி வருணிக்கிறார். சைமன் கமிஷன் முன் சாட்சியமளிக்க ஆள் பிடிக்கும் திருப்பணியிலும் மத்தியக் குழு ஈடுபட்டது. இந்த மத்தியக்

குழுவில் சர்.ஏ. இராமசாமி முதலியாரும் ஒரு உறுப்பினராவார். இரண்டாவது முறையாக இந்தியா வந்த சைமன் கமிஷன் 1928 ஏப்ரல் 14-இல் தனது வேலையை முடித்துக் கொண்டு லண்டன் போய்ச் சேர்ந்ததுமே பிரிட்டனில் அதுவரை இருந்து வந்த கன்சர் வேடிவ் ஆட்சி கவிழ்ந்தது. தொழிற் கட்சி ஆட்சி தோன்றியது. இந்தப் புதிய ஆட்சி பற்றி பின்னர் விரிவாக அறிவோம்.

அறிக்கை!

சைமன் கமிஷன் 1930-இல் தனது அறிக்கையை பிரிட்டிஷ் அரசுக்கு வழங்கியது. அதில் சொல்லப்பட்ட பரிந்துரை வருமாறு.

(1) புதிய அரசியல் அமைப்பானது வளர்ச்சிக்கு இடந்தருவதாக அமைய வேண்டும்.

(2) மத்திய ஆட்சி சமஷ்டி முறையில் அமையவேண்டும்.

(3) பர்மாவை இந்தியாவிலிருந்து பிரித்துவிட வேண்டும்.

(4) மாநிலங்களுக்கு முழு சுயாட்சி இருக்க வேண்டும். ஆனால், ஆளுநருக்குள்ள விசேஷாதிகாரம் நீடிக்க வேண்டும்.

(5) மத்தியில் கீழவை, மேலவை என இரு அவைகள் கொண்ட சட்டசபை அமைய வேண்டும். கீழவை விரிவாக்கப்பட வேண்டும்.

(6) மாநிலச் சட்டமன்றங்களை விரிவுபடுத்தி அவற்றிற்கு நிதி அதிகாரந் தரவேண்டும்.

(7) மத்தியில் அரசப்பிரதிநிதி (வைசிராய்) தமது அமைச்சர வையைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

(8) உயர் நீதி மன்றங்கள் மத்திய அரசின் பொறுப்பில் விடப்பட வேண்டும்.

(9) இங்கிலாந்திலுள்ள இந்தியக் கவுன்சிலின் அதிகாரங்களைக் குறைப்பதோடு, அதன் உறுப்பினர்களின் எண்ணிக்கையை யும் குறைக்க வேண்டும்.

சைமன் கமிஷன் தந்த மேற்படி அறிக்கையின் அடிப் படையில்தான் 1935 -இல் அரசியல் சீர்திருத்தம் (1935 - ஆம் ஆண்டு சட்டம்) வழங்கப்பட்டது.

★-★-★

சர்வ கட்சி மாநாடு

சைமன் கமிஷன் இந்தியாவிலிருந்தபோது இந்தியாவுக் கென ஒரு அரசியல் அமைப்பைத் தயாரிப்பதிலே காங்கிரஸ் ஈடுபட்டது. அதற்காக டில்லியிலே இந்தியா முழுவதிலுமுள்ள பல்வேறு அரசியல் கட்சிகளின் - சாதி மத அமைப்புகளின் - தலைவர்களடங்கிய மாநாடொன்றை புது டில்லியில் காங்கிரஸ் கூட்டியது.

1927-டிசம்பரில் சென்னையில் கூடிய காங்கிரஸ் மகாசபை யும் இந்தியாவுக்கென அரசமைப்பைத் தயாரிக்கச் சர்வகட்சி மாநாட்டை நடத்துவதென ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிய தல்லவா! அதன்படிதான் டில்லி மாநாடு கூட்டப்பட்டது.

பிரிட்டிஷ் தொழிற் கட்சித் தலைவர்களி லொருவரான திரு. பர்ஹன்ஹெட் என்பார், ''இந்தியத் தலைவர்கள் ஒருமனப்பட்டு இந்தியாவுக்கென ஒரு அரசியல் அமைப்பைத் தயாரித்துத் தரமுடியுமா?'' என்று 1925-இல் அறைகூவல் விட்டிருந்தார். 1927-இல் சென்னையில் காங்கிரஸ் மகாசபை கூடவிருந்த சமயத்திலேயும் அதே அறைகூவலைத் திரும்பவும் அவர் வெளியிட்டார். அவருக்குப் பதிலளிக்கும் வகையிலேயே இந்தியாவுக்கென ஒரு அரசியல் அமைப்பைத் தயாரித்து வெளியிடும் பொறுப்பைக் காங்கிரஸ் மேற்கொண்டது.

1928-பிப்ரவரி 28-இல் சர்வ கட்சித் தலைவர்கள் மாநாடு டாக்டர் எம்.ஏ. அன்சாரி அவர்கள் தலைமையில் புதுடில்லியில் கூடியது. இந்தியா முழுவதிலுமுள்ள 29 பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

சென்னை மாகாணத்திலிருந்து நிலச்சுவான்தாரர் சங்கம், தென்னிந்திய வர்த்தகர் சங்கம், ஆதி திராவிட மகாஜன சபை, தென்னிந்திய நலவுரிமைச் சங்கம், அகில இந்திய தொழிலாளர் காங்கிரஸ் (ஏ.ஐ.டி.யு.சி.) ஆகியவற்றின் சார்பில், டில்லி மாநாட்டிற்குப் பிரதிநிதிகள் அனுப்பப்பட்டனர்.

வியப்பு!

மொத்தம் 58 அமைப்புகளின் பிரதிநிதிகள் புதுடில்லியில் கூடினர். வியப்பென்னவென்றால், ஆங்கிலேயருடைய இரத்தத்தின் ரத்தங்களாகத் தங்களைக் கருதிக் கொண்டவர்களால் நடத்தப்பட்ட ஆங்கிலோ - இந்தியர் அசோசியேஷனும் டில்லி மாநாட்டில் கலந்து கொண்டதாகும். ஆம்; அவர்கள்கூட தாங்கள் தேசபக்திக்கு விலக்கானவர்களல்ல வென்பதைக் காட்டிக் கொண்டனர், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே! எல்லா வற்றிற்கும் மேலாக, பிரிட்டிஷ் ஏஜண்டுகளின் கைப்பிடியிலிருந்த சமஸ்தானங்களின் சங்கமும் டில்லி மாநாட்டிற்குப் பிரதி நிதிகளை அனுப்பியது.

அனைத்துக் கட்சி மாநாடு 2 திங்களில் 25 முறை கூடி சமூகப் பிரச்னைகளுக்குந் தீர்வு காணவும், அந்த அடிப்படையில் இந்திய அரசியல் அமைப்பைத் தயாரிக்கவும் முயன்றது. ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பிரச்னைகளில் முக்கால்வாசிக்கு சமரச முடிவு கண்டது. இந்திய சட்டசபையில் முஸ்லிம்களுக்கு மூன்றில் ஒருபங்கு இடங்கள் ஒதுக்கப்பட வேண்டுமென்று ஜனாப் ஜின்னா கோரினார். இதனை இந்துத் தலைவர்களில் ஒரு சாராரும் சீக்கியத் தலைவர்களும் எதிர்த்தனர்.

மோதிலால் நேரு குழு

மே 19-இல் நடைபெற்ற மாநாட்டில் முடிவு செய்யப் பட்டவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒரு அரசியல் அமைப்பைத் தயாரித்துத் தரப் பண்டித மோதிலால் நேரு தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டது. சூலை 11-க்குள் குழு தனது அறிக்கையைத் தரவேண்டுமென்றும் முடிவு செய்யப் பட்டது. இக்குழுவிற்குத் தமிழ்நாட்டவரான திரு.க. சந்தானம் செயலாளராக நியமிக்கப்பட்டார். நேரு கமிட்டியானது சரியாக 3 மாத காலம் உழைத்து, ஒரு அறிக்கையைத் தயாரித்து, அதனை சர்வ கட்சி மாநாட்டிற்குத் தந்தது.

ஆகஸ்டு 28 - முதல் 31- வரை நான்கு நாட்கள் சர்வ கட்சி மாநாடு திரும்பவும் இலட்சுமணபுரியில் கூடி, நேரு கமிட்டி அறிக்கையை ஆராய்ந்தது. திரும்பவும் டிசம்பரில் கல்கத்தாவில் கூடிச் சில திருத்தங்களுடன் நேரு கமிட்டியின் அறிக்கையை மாநாடு ஏற்றுக்கொண்டது.

''இந்தியா முழு அளவு குடியேற்ற நாட்டு அந்தஸ்துடன் சமஷ்டி அரசையுடையதாக, பூர்ண சுயாட்சியுடைய

மொழிவாரி மாநிலங்களைக் கொண்டதாக, மத்தியில் பூரண இறையாட்சியுடைய இரு சபைகள் உள்ளதாக இருக்கும்'' என்று நேரு கமிட்டியின் அறிக்கை கூறியது. முஸ்லிம்களுக்குத் தனித் தொகுதிகள் வேண்டும் என்ற கோரிக்கையையும் அறிக்கை ஏற்றுக்கொண்டது. ஆனால், மத்திய சட்ட சபையில் முஸ்லிம்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இடங்களை ஒதுக்கவேண்டுமென்பதிலே சமரசங்காண முடியாததால், அதனை நேரு கமிட்டி ஏற்கவில்லை.

லீக் வெளியேறியது!

இதனைக் காரணங் காட்டி, ஜனாப் ஜின்னா வேறு சில முஸ்லிம் பிரதிநிதிகளுடன் மாநாட்டிலிருந்து வெளியேறினார். ஆனால் வேறு சில முஸ்லிம் தலைவர்கள் நேரு அறிக்கைக்கு ஆதரவளித்து, சர்வ கட்சி மாநாட்டை வெற்றிகரமாக முடித்து வைக்க உதவி புரிந்தனர். இது, இந்திய விடுதலை வரலாற்றிலே மகத்தான ஒரு சாதனையாக அமைந்த தெனலாம். இந்த அளவுக்குக்கூட இந்தியத் தலைவர்கள் ஒன்றுபட மாட்டார்கள் என்று எதிர்பார்த்த பிரிட்டிஷார் ஏமாந்தனர்.

சர்வ கட்சி மாநாடு டிசம்பர் 23-இல் கல்கத்தாவில் கூடி, நேரு அரசமைப்பை ஏற்றபின் அம்மாநாடு ஒத்திப் போடப்பட்டது. மாநாட்டிலிருந்து வெளியேறிய முஸ்லிம் லீக் தலைவர் ஜனாப் ஜின்னா அவர்கள், அனைத்துக் கட்சி முஸ்லிம் மாநாடு ஒன்றை டில்லியில் நடத்தினார். இச் சந்தர்ப்பத்தில் காங்கிரசிலிருந்தும் சில முஸ்லிம் தலைவர்கள் வெளியேறி, ஜின்னா கூட்டிய மாநாட்டில் கலந்து கொண்டனர்.

கிணறு வெட்டக் கிளம்பிய பூதம்!

இந்த மாநாட்டில்தான் முதன் முதலாக பிரசித்தி பெற்ற தமது *14* அம்சத் திட்டத்தை ஜனாப் ஜின்னா வெளியிட்டார். இத்திட்டத்தை சர்வ கட்சி முஸ்லிம் மாநாடு ஒருமனதுடன் ஏற்றுக்கொண்டது. தமது திட்டம் இறுதியானதென்றும் இதில் எதையும் விட்டுக்கொடுத்து யாரிடமும் சமரசம் பேசப் போவதில்லை யென்றும் ஜின்னா பிரகடனம் செய்தார்.

'கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது' என்பது பழமொழி. அதுபோல, இந்தியா மந்திரி லார்டு பர்ஹன்ஹெட் அவர்கள் விடுத்த அறைகூவலுக்குப் பதிலளிக்க நடத்தப்பட்ட சர்வ கட்சி மாநாடு அதுவரை காங்கிரஸின் நேசக் கட்சியாக இருந்த முஸ்லிம் லீகானது பகைக் கட்சியாக மாறக் காரணமாகிவிட்டது.

இதற்குப் பிறகு திரும்பவும் காங்கிரசுக்கும் லீகுக்குமிடையே பழையபடி உறவு ஏற்படவே இல்லை. மாறாக, நாடு துண்டாடப் படுவதற்கும் காங்கிரஸ் - லீக் பகைமை காரணமாகி விட்டது.

பிரிவதற்கு முன்...

1917- முதல் காங்கிரஸுக்கும் லீகுக்குமிடையே நெருங்கிய உறவு இருந்து வந்தது. ரௌலட் சட்ட எதிர்ப்பையும் கிலாபத் இயக்கத்தையும் இந்த இரண்டு அமைப்புகளும் இணைந்து நடத்தியதை முன்பே அறிந்தோம். அப்போது லீகின் காரியக் கமிட்டி காங்கிரஸ் மகாசபைப் பந்தலிலேயே நடைபெற்றது. காந்திஜியும் கலந்து கொண்டார்.

இந்திய சட்டசபையிலே ஜனாப் ஜின்னா அவர்கள் தலைமையில் இயங்கிய சுயேச்சைக் கட்சியும், பண்டித மோதிலால் தலைமையைப் பெற்றிருந்த சுயராஜ்க் கட்சியும் பரஸ்பரம் ஒத்துழைத்து, பிரிட்டிஷ் அரசுக்குத் தோல்வி கொடுத்து வந்தன. சைமன் கமிஷன் பகிஷ்காரத்தை லீகும் காங்கிரசும் சேர்ந்து நடத்தியதையும் தேச பக்தியுடைய இந்திய மக்கள் கண்டு களித்தனர். இவ்வளவும் பொய்யாய், கனவாய், பழங்கதையாய் போய்விடக் கூடிய வகையில் காங்கிரசும் லீகும் பகை கொள்ளலாயின.

பிளவுபடக் காரணங்கள்

இந்தியாவுக்குக் குடியேற்ற நாட்டு அந்தஸ்து வேண்டு மென்று கோருவதிலே லீக் - காங்கிரஸ் ஸ்தாபனங்களிடையே கருத்தொற்றுமை நிலவியது. இந்தியாவின் இறுதி லட்சியம் பூரண சுதந்திரமே என்பதிலும் அவற்றிடையே கருத்து வேற்றுமை நிலவவில்லை. உண்மையில் லீகும் காங்கிரசும் பிளவுபடக் காரணமாக இருந்தவை மூன்றே விஷயங்கள்தான்.

முதலாவது, மத்திய அசெம்பிளியில் மூன்றில் ஒரு பங்கு இடங்கள் - அதாவது, 100-க்கு முப்பத்து மூன்று சதவிகிதம் இடங்கள் முஸ்லிம்களுக்கென ஒதுக்கப்பட வேண்டும். இரண்டாவது, மாநிலச் சட்ட மன்றங்களிலே ஜனத்தொகைக் கேற்ப இடம் ஒதுக்க வேண்டும். மூன்றாவது, 'மிச்ச அதிகாரங்கள்' மாநிலங்களுக்குத்தான் இருக்க வேண்டும்.

மத்திய, மாநில சட்ட மன்றங்களில் இடம் ஒதுக்குவதிலே காங்கிரஸ் விட்டுக் கொடுத்து சமரசங் காண முயன்றது. ஆனால், சர்வ கட்சி மாநாட்டில் கலந்து கொண்ட சீக்கிய சங்கம், இந்து

மகா சபை ஆகியவற்றின் பிரதிநிதிகள் அதற்கு இணங்கவில்லை. கடுமையாக எதிர்த்தனர். முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ள மாநிலங்களிலே மக்கள் தொகைக்கேற்ப இடங்களை ஒதுக்கக் கேட்ட லீகானது, இந்துக்கள் பெரும்பாலோராகவுள்ள இந்தியா முழுவதற்குமான மத்திய சட்ட சபையிலே மக்கள் தொகை அடிப்படையில் இடம் ஒதுக்குவதை ஏற்க மறுத்தது முரண்பட்ட வாதந்தானே!

விதி விளையாடி விட்டது!

எப்படியோ, பிற்காலத்தில் தேசம் பிளவுபடுவதற்கான வித்து விழுந்தது, 1928 டிசம்பர் 22-இல் கல்கத்தாவில் நடந்த சர்வகட்சி மாநாட்டில்தான்! தேசத்திற்கென ஒரு அரசமைப்பைத் தயாரித்த வகையில் சர்வ கட்சி மாநாடு மகத்தான வெற்றியைக் கண்டது. அதே நேரத்தில், முஸ்லிம் லீகுக்கும் காங்கிரசுக்கு மிடையில் நிலவிய நட்பு முறிந்ததானது, அம்மாநாட்டிற்கு ஏற்பட்ட மகத்தான தோல்வியாகும். என்ன செய்வது, விதி விளையாடிவிட்டது!

★-★-★

கல்கத்தா காங்கிரஸ்

1928 டிசம்பர் 26-இல் 43 ஆவது இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை கல்கத்தாவில் கூடியது. சர்வகட்சி மாநாட்டில் ஏற்கப்பட்ட நேரு அரசியல் அமைப்பிற்கு அங்கீகாரம் பெறுவதற்காகவும் இந்த மகாசபை தேவைப்பட்டது.

ஒன்றிரு திங்களுக்கு முன் பர்டோலியில் வரிகொடாப் போர் நடத்தி வெற்றி வீரராக விளங்கிய சர்தார் வல்லபாய் படேல் கல்கத்தா மகாசபைக்குத் தலைமை தாங்க வேண்டுமென்று பொதுவாகக் கருத்து நிலவியது. ஆனால் காந்தியடிகள், 'பெரிய நேருவையே தேர்ந்தெடுங்கள்'' என்று வெளிப்படையாகக் கூறி விட்டதால், அவரே தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அரச பவனியோ?

வங்காளத்தின் இளந்தலைவரான சுபாஷ்சந்திர போஸ் தொண்டர் படைத் தலைவராக இருந்து மாநாட்டைச் சிறப்பாக நடத்தப் பொறுப்பேற்றார். 36 குதிரைகள் பூட்டிய தேரில் மகாசபைத் தலைவர் பண்டித மோதிலால் நேரு கல்கத்தா நகர வீதிகளிலே அரச பவனியோ என்று ஐயுறத்தக்க வகையில் உலாப் போனார்.

இக் காங்கிரசுக்குக் காந்திஜி வருவதாக இல்லை. ஆனால், 'வந்தே ஆக வேண்டும்' என்று தலைவர் மோதிலால் நேரு மும்முறை தந்தி மூலம் அழைப்பு விடுத்ததால், வந்து கலந்து கொண்டார். தாம் சிறையிலிருந்து வெளிவந்த பின் நடந்த காங்கிரஸ் மகாசபைகளிலே அவர் அதிக ஆர்வங்காட்டாமல் இருந்து வந்தார். ஆனால், கல்கத்தா காங்கிரசின்போது நாட்டிலிருந்த சூழ்நிலை காரணமாக, அடிகள் அதிலே கலந்து கொண்டு, நடவடிக்கைகளிலும் தீவிரமாக ஈடுபடலானார்.

இளைஞர்களின் எழுச்சி!

காங்கிரஸ் கூடவிருந்த சமயத்திலே தேசத்திலே இளைஞர்களிடையில் மகத்தான விழிப்பு ஏற்பட்டிருந்தது.

இதுபோல இதற்கு முன் ஏற்பட்டதில்லை. சைமன் கமிஷன் வருகையின் போது, பிரிட்டிஷ் அரசு தேச பக்தர்களுக்கு எதிராக நடத்திய அடக்குமுறைக் கொடுமைகளால் இளைஞர் சமுதாயம் ஆவேசங் கொண்டிருந்தது. போலீசாரின் தடியடியால் லாகூரில் லாலாஜி மாண்டதும், லட்சுமணபுரியில் இளைய நேரு காயமுற்றதும் தேச இளைஞர்களுக்கு அரசு விடுத்த அறைகூவலாயின. இதன் விளைவாக, காங்கிரசுக்கு உள்ளும் புறமுமாக இளைஞர்கள் சார்பில் பல அமைப்புகள் தோன்றின.

காங்கிரசுக்குள்ளே இளைய நேருவாலும் சுபாஷ்சந்திர போசாலும் 'காங்கிரஸ் சங்கம்' என்ற பெயரில் ஒரு புதிய அமைப்பு பிறந்தது. இது, 'அஹிம்சை' வழியில் தேசத்திற்குப் பூரண விடுதலை தேட வேண்டுமென்ற கொள்கையைக் கொண்டது. 'நேரு அரசியல் அமைப்பு' பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குட்பட்ட குடியேற்ற நாட்டு அந்தஸ்தைக் கோரியதானது இளைய நேருவுக்கும் சுபாஷுக்கும் பிடிக்கவில்லை. அதனாலேயே, பூரண சுதந்திரத்திற்குப் போராட நாட்டைத் தயாரிப்பதற்காகக் காங்கிரஸ் சங்கத்தைத் தோற்றுவித்தனர். இதிலே, சென்னை திரு. சீனிவாச ஐயங்காரும் சேர்ந்து கொண்டார்.

காங்கிரசுக்கு வெளியே பலாத்காரத்தில் நம்பிக்கையுடைய இளைஞர் பலர் கூடி, அனைத்திந்திய ரீதியில் 'இந்துஸ்தான் சோஷலிசக் குடியரசுக் கழகம்' நிறுவினர். இது பெரும்பாலும் வன்முறையிலான வேலைத் திட்டப்படி இரகசிய நிறுவனமாக இயங்கவே பிறந்ததெனலாம். இதுபற்றிப் பின்னர் விரிவாக அறிவோம்.

சமரச முடிவு!

கல்கத்தா காங்கிரஸ் மகாசபையிலே 'நேரு கமிட்டி அரசியல்' பற்றி ஆராயப்பட்டது. ஜவஹர்லால், சுபாஷ்போஸ், சீனிவாச ஐயங்கார் ஆகியோர், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு உட்பட்ட குடியேற்ற நாட்டு அந்தஸ்து கோருவதை எதிர்த்தனர். *1927* -இல் சென்னை காங்கிரசால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பூரண சுதந்திரக்கோரிக்கையை நேரு அரசியலில் சேர்க்கக் கோரும் திருத்தத்தை விஷயாலோசனைக் கமிட்டியில் பிரேரேபித்தனர். ஆனால், மோதிலால் நேரு, டாக்டர் எம்.ஏ. அன்சாரி ஆகியோர் நேரு அரசியலுக்கு எந்தவிதமான திருத்தத்தையும் ஏற்க மறுத்தனர். இதனால், கல்கத்தா காங்கிரசில் முதியோருக்கும்

இளைஞர்களுக்கு மிடையே மோதல் ஏற்படும் நிலை உருவானது. இந்நிலையில் காந்திஜி தலையிட்டுச் சமரசம் ஏற்படுத்த முயன்றார். அவரும் சர்வகட்சி மாநாடு ஏற்றுக்கொண்டு விட்ட 'நேரு அரசியல்' சாசனத்தில் திருத்தம் செய்வதை விரும்ப வில்லை. ஆயினும், அடிகள் ஒரு சமரசத் திட்டத்தைத் தந்து நிலைமையைச் சமாளித்தார்.

ஓராண்டுக் கெடு!

பூரண சுதந்திரம் கோருவோர் அதுபற்றிப் பிரசாரம் செய்ய உரிமையுண்டு என்று அடிகள் கூறினார். நேரு அரசியல் கோரும் குடியேற்ற நாட்டு அந்தஸ்தை 1929-ஆம் ஆண்டின் இறுதிக்குள் ஏற்க பிரிட்டிஷ் அரசுக்கு அவகாசம் தருவதென்றும், அதற்குள் ஏற்காவிடில், 1929 டிசம்பரில் கூடும் காங்கிரஸ் மகாசபையில் பூரண சுதந்திரக் கோரிக்கையைப் பிரகடனப்படுத்தி, அதன் அடிப்படையில் சுதந்திரப் போர் தொடங்கப்படுமெனக் கல்கத்தா காங்கிரசிலே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றலாமென்றும் காந்தியடிகள் ஆலோசனை கூறினார்.

இந்தச் சமரச யோசனையை விஷாயலோசனைக் கமிட்டி யில் ஜவகர்லால் நேரு, சுபாஷ் போஸ், சீனிவாச ஐயங்கார் ஆகிய மூவரும் ஏற்றுக்கொண்டனர். இதன் பேரில் காந்திஜியின் சமரசத் தீர்மானம் பெரும்பாலான வாக்குகளால் விஷயாலோசனைக் கமிட்டியில் நிறைவேறியது. ஆனால், தீர்மானம் மகாசபையில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, சுபாஷ் போஸ் மட்டும் கடுமையாக எதிர்த்தார். ஆம்; அவருடைய சகாக்களான இளைஞர்களின் வற்புறுத்தலால் அவர் மனமாற்றம் அடைந்து முன்னுக்குப் பின் முரணாக நடந்து கொண்டார்.

தீர்மானம்

இது, காந்திஜிக்கு எரிச்சலைத் தந்தது. அதனால், அவர் சுபாஷைக் கண்டித்து உருக்கமான ஒரு சொற்பொழிவை நிகழ்த்தினார். முடிவில் சமரசத் தீர்மானம் மகாசபையாலும் பெருத்த மகிழ்ச்சி ஆரவாரத்திடையே ஏற்றுக் கொள்ளப்பட்டது. அத்தீர்மானம் வருமாறு:

''இந்தக் காங்கிரசானது, சர்வகட்சி மாநாட்டுக் கமிட்டியின் அறிக்கையில் சிபாரிசு செய்யப்பட்டுள்ள 'அரசியல் அமைப்பை', இந்தியாவின் அரசியல் பிரச்சினையையும் வகுப்புப் பிரச்சினையையும் தீர்ப்பதற்கு உதவிகரமான

தெனக் கருதி, அதனை வரவேற்கிறது. அதன் சிபாரிசுகளில் உண்மையான ஒற்றுமை நிலவி வருவதைக் கண்டு அக்கமிட்டியைப் பாராட்டுகிறது. சென்னைக் காங்கிரசில் நிறைவேறிய பூரண சுதந்திரம் சம்பந்தமான தீர்மானத்தை இது அங்கீகரிப்பதாலும், நாட்டிலுள்ள முக்கியமான கட்சிகளில் பெரும்பாலானவற்றின் ஆதரவைக் காட்டுவதாலும் அரசியல் முன்னேற்றத்தில் அதை ஒரு படி மேலேறத் தக்க தெனக் கருதி அங்கீகரிக்கிறது.

''அரசியல் நிலைமையிலேற்படும் நெருக்கடிகளுக்குட் பட்டு நேரு அரசியலமைப்பானது பிரிட்டிஷ் பாராளு மன்றத்தால் 1929 டிசம்பர் 31-ஆம் தேதிக்கு முன் பூரணமாக அங்கீகரிக்கப்படின், இந்தக் காங்கிரஸ் அதை ஏற்றுக் கொள்ளும். ஆனால், அந்தத் தேதிக்குள் அது அங்கீகரிக்கப் படாவிடிலோ, அதற்கு முன்னதாக நிராகரிக்கப்படிலோ வரிகொடாமலிருக்கும்படிச் சிபாரிசு செய்வதுட்படத் தீர்மானிக்கப்படும். இதர முறைகளிலும் இந்தக் காங்கிரஸ் சாத்விகச் சட்ட மறுப்பு இயக்கத்தை நடத்தும்.''

கல்கத்தா காங்கிரசில் காந்திஜி பேசுகையில், ''பிரிட்டிஷ் அரசானது 1929 டிசம்பருக்குள் நேரு கமிட்டி அரசியலை ஏற்காவிடில், அடுத்து காங்கிரஸ் தொடங்கும் போராட்டத்திற்கு நானே தலைமை தாங்குவேன்'' என்று உறுதி கூறினார். இதனால், கல்கத்தா காங்கிரஸ் மகாசபையில் திரண்டிருந்த பிரதிநிதிகளுக்குப் புதியதொரு உற்சாகம் ஏற்பட்டது.

சரணாகதி!

''கல்கத்தாக் காங்கிரஸ் காந்திஜியிடம் சரணாகதியடைந்து விட்டது'' என்கிறார் டாக்டர் பட்டாபி சீதாராமையா. இதற்கு முக்கியக் காரணம், பண்டித மோதிலால் நேருவுக்குச் சட்ட சபையிலிருந்த மோகம் போனதுதான். காந்திஜியிடம் காங்கிரசைத் திரும்பவும் கொண்டு போய்ச் சேர்த்த பெருமைக்குரியவர் பண்டித மோதிலாலேயாவார்.

கல்கத்தாக் காங்கிரசில் வழக்கம்போல வேறுபல தீர்மானங்களும் நிறைவேறின. அன்னிய ஆடை பகிஷ்கரிப்பு, கதர் வளர்ச்சி, தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு ஆகிய ஆக்க வழிப் பணிகளில் அடுத்துள்ள ஓராண்டுக் காலத்தில் காங்கிரஸ்காரர்களை ஈடுபடுத்துவதன் மூலம் ஒரு போராட்டத்தை நடத்துவதற்கான

சக்தியைத் திரட்டவும் காங்கிரஸ் திட்டமிட்டது. ஆக்கப் பணிகளிலே ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பெருந்தலைவர் பொறுப்பேற்றனர். அதன்படி, மதுவிலக்கு இயக்கத்தைத் தேசம் முழுவதிலும் நடத்துவதற்கான பொறுப்பு ராஜாஜியிடம் ஒப்படைக்கப்பட்டது.

மோகந் தீர்ந்தது!

கல்கத்தாக் காங்கிரஸ் மகாசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூலம் காங்கிரஸ்காரர்களுக்குச் சட்டசபை மீதிருந்த மோகம் அகன்று விட்டதென்ற நம்பிக்கை காந்திஜிக்கு ஏற்பட்டுவிட்டதால், அவர் இந்தியா முழுவதிலும் சுற்றுலாச் செய்து அடுத்துவரும் போருக்கு மக்களைத் தயார்படுத்தலானார். கல்கத்தாக் காங்கிரஸ் முடிந்த பின்னுள்ள மூன்று மாத காலத்தில் அவர் சுற்றுலாவில் ஈடுபட்டார்.

பின்னர், 1929 மார்ச்சு மாதத்தில் திரும்பவும் அடிகள் கல்கத்தாவுக்கு வருகை தந்தார். அப்போது, அங்குத் தற்செயலாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அன்னியத் துணி எரிப்பு நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டு, தம் கையால் தீ வைத்தார். இது வழக்கமாக நாடு முழுவதிலும் நடப்பதுதான். ஆனால், கல்கத்தாக் காங்கிரஸ் முழுவதிலும் நடப்பதுதான். ஆனால், கல்கத்தாக் காங்கிரஸ் எடுத்த முடிவால் அடிகள்பால் ஆத்திரங் கொண்டிருந்த அரசு, அவரை அவமானப்படுத்த விரும்பி, அன்னியத் துணிக்குத் தீ வைத்த குற்றத்திற்காக அவர் மீது வழக்குத் தொடுத்தது. வழக்கு விசாரணையில் அடிகள் கலந்து கொண்டா ரென்றாலும், வாக்குமூலம் எதுவும் தரவில்லை. அவருக்காக வழக்கறிஞர் சிலர் சட்ட புத்தகங்களைப் புரட்டிக் காட்டி வாதாடினர். வழக்கை விசாரித்த நீதிபதி, அடிகள் குற்றவாளியே எனக்கூறி, அவருக்கு ஒரு ரூபாய் அபராதம் விதித்தார். அடிகள் அபராதம் செலுத்தவில்லை. சில நாட்கள் கழித்து வேறு யாரோ அதைச் செலுத்தி விட்டனர்.

ஆந்திராவில் சுற்றுலா

இந்த நிகழ்ச்சிக்குப்பின் அடிகள் அப்போதைய சென்னை மாகாணத்தின் ஒரு பகுதியாக இருந்த ஆந்திராவில் சுற்றுலாச் செய்தார். பிற்காலத்தில் தமிழ் நாட்டில் இணைக்கப்பட்டுவிட்ட திருத்தணி அப்போது ஆந்திரப் பகுதியில் இருந்தது. அதனால், 15-5-29-இல் தணிகைக்கு வருகை தந்தார். அங்குள்ள தமிழ் மக்கள் அடிகளை வரவேற்று, கதர் நிதிக்கு 1151-20 வழங்கினர்.

தமிழகத்தில் வடக்கெல்லையாகவுள்ள இந்தப் புனிதப் பதிக்கு அடிகள் வருகை தந்தது இது முதன்முறையாகும். இதுவே கடைசி முறையாகவும் அமைந்துவிட்டது.

கல்கத்தாக் காங்கிரஸ் முடிந்ததும் ராஜாஜி திரும்பவும் அரசியலில் தீவிரமாக ஈடுபடலானார். தொடங்கப்படவிருக்கும் சுதந்திரப் போருக்குத் தமிழ் மக்களைத் தயார்ப்படுத்தத் தமிழ்நாடு முழுவதும் சுற்றுலாச் செய்தார்.

பண்டித மோதிலால் நேருவின் தலைமையில் கல்கத்தாவில் 43 ஆவது காங்கிரஸ் மகாசபை நடந்து முடிந்தபின், தமிழக அரசியலிலே தலைமை மாறும் நிலைமை ஏற்பட்டது. திருச்செங்கோட்டில் காந்தி ஆசிரமத்தை நிர்மாணித்ததும், அரசியலை இரண்டாந்தரமாகக் கொண்டு, தீண்டாமை விலக்கு - மதுவிலக்கு - கதர் வளர்ச்சி ஆகிய பணிகளுக்கு முதன்மை தந்து ராஜாஜி பாடுபட்டு வந்ததை முன்பே அறிந்தோம். இதற்கு, தமிழ் நாட்டிலே காங்கிரசானது சுயராஜ்யக் கட்சியினரின் செல்வாக்கில் சிக்கியதும் ஒரு காரணமாகும். கல்கத்தா காங்கிரஸ் செய்த முடிவு காரணமாக, காந்தியடிகள் காங்கிரசுக்கு வழி காட்டும் பொறுப்பைத் திரும்பவும் ஏற்றார். அதன் விளைவாக, மீண்டும் தமிழ்நாடு ராஜாஜியின் தலைமையை விரும்பியது. அதுவரை தமிழ்நாடு காங்கிரசைத் தம் செல்வாக்கில் வைத்திருந்த மயிலை எஸ். சீனிவாச ஐயங்கார் நிர்வாகப் பொறுப்பிலிருந்து ஒதுங்கிக் கொள்ள விரும்பினார்.

கல்கத்தாவில் கூடிய சர்வ கட்சி மாநாடு இந்து - முஸ்லிம் ஒற்றுமைக்குப் பயன்படாமற் போனதும், முஸ்லிம் லீகின் தலைமையில் காங்கிரசுக்கு எதிராக அனைத்துக் கட்சிகளைச் சார்ந்த முஸ்லிம்கள் ஒன்றுபட்டதும், அந்த ஒற்றுமை அணியிலே அலி சகோதரர்கள் உள்ளிட்ட சில தேசிய முஸ்லிம்களும் கலந்து கொண்டதும் ஐயங்காருக்கு மனச் சோர்வைத் தந்தன.

கல்கத்தா காங்கிரஸ் முடிந்ததை அடுத்து திரு. ஐயங்காரின் உடல் நலிவுற்றது. இதற்கு அவர் உள்ளத்தில் ஏற்பட்ட சோர்வும் ஒரு காரணமாகும். உடல்நலங் கருதி ஐரோப்பா சென்றார். பொதுவுடைமைச் சமுதாயமாக மாறியிருந்த சோவியத் ருஷ்யாவுக்கும் சென்றார். சோவியத் ருஷ்யாவுக்கு முதன் முதலில் சென்ற தமிழ்நாட்டுத் தலைவர் ஐயங்காரேயாவார்.

சோவியத் பிரதமர் ஸ்டாலினைச் சந்தித்து உரையாடினார். தாம் ஐரோப்பாவிலிருக்கையில் பிரிட்டிஷ் ராஜ தந்திரிகளைக்

கண்டு இந்தியாவின் விடுதலை குறித்து அவர்களுடன் விவாதித்தார். அவர்களிடம் வெளிப்பட்ட ஏகாதிபத்திய வெறிப் போக்கு கண்டு ஐயங்கார் ஏமாற்றமடைந்தார். சட்ட ரீதியான கிளர்ச்சியின் மூலமே தேசத்துக்குச் சுதந்திரம் தேடிவிட முடியு மென்பதில் அவருக்கிருந்த நம்பிக்கை ஆட்டங் கண்டுவிட்டது. அந்த நிலையிலும், தேசம் முழுவதும் சட்டமறுப்புப் போரில் ஈடுபடுவதை விரும்பவோ, தாமும் அதில் பங்கு கொள்ளத் துணிவு பெறவோ அவரால் முடியவில்லை. ஆகவே, இந்தியா திரும்பியதும் த.நா.கா. நிர்வாகப் பொறுப்பிலிருந்து ஒதுங்கினார்.

ராஜாஜியின் திறமை

ராஜாஜியின் தலைமையைத் தமிழகம் ஏற்றது. அவர் தமக்கே உரிய போக்குப்படி, மது விலக்கு - கதர் வளர்ச்சி - தீண்டாமை ஒழிப்பு ஆகிய ஆக்கவழிப் பணிகளுக்குத் தமிழக மக்களைத் தயார் செய்வதே தொடங்க விருக்கும் போருக்கு முன்னோடி நடவடிக்கைகளாகும் என்று கருதினார்.

கல்கத்தாக் காங்கிரசிலே நிறுவப்பட்ட அகில இந்திய மதுவிலக்குப் பிரச்சாரக் குழுவின் பொதுச் செயலாளராக ராஜாஜி நியமிக்கப்பட்டார். இதற்குத் தொழிலதிபர் ஜி.டி. பிர்லா அவர்களின் தூண்டுதலே காரணமாகும். மதுவிலக்குச் சங்கத்தின் பிரசார ஏடாகப் 'புரொஹிபிஷன்' என்னும் மாத மும்முறை ஆங்கில ஏடொன்று நடத்தப்பட்டது. அதன் ஆசிரியப் பொறுப்பு ராஜாஜியிடம் விடப்பட்டது. தமிழில் 'விமோசனம்' என்னும் மாத இதழையும் ராஜாஜி தொடங்கினார். 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி இந்த இதழின் துணை ஆசியரானார்.

1927-இல் டாக்டர் பி. சுப்பராயன் சென்னை மாகாணத்தின் முதலமைச்சரானபோது அவரது தோழமையுடன் தமிழகத்தில் மதுவிலக்குக் கொள்கைக்கு வெற்றி தேட ராஜாஜி முயற்சி எடுத்தார். அப்போது சென்னை மாகாண சட்டமன்றத்திலே பலமுள்ள எதிர்க்கட்சியாக விளங்கிய சுயராஜ்யக் கட்சியின் ஆதரவையும் பெற்றார்.

1929 ஏப்ரலில் தேசம் முழுவதிலும் மதுவிலக்குப் பிரசாரத்தை நடத்த ராஜாஜி ஒரு திட்டம் தயாரித்தார். அதனை அமுல் நடத்த டாக்டர் எம்.ஏ. அன்சாரி, வல்லபாய் படேல், ராஜேந்திர பிரசாத், ராஜாஜி ஆகியோர் கொண்ட தனிக் குழு ஒன்றை காங்கிரஸ் காரியக் கமிட்டி நியமித்தது.

ராஜாஜியின் திட்டப்படி ஒவ்வொரு மாகாணத்திலும் மாகாணக் காங்கிரஸ் கமிட்டியுடன் இணைந்ததாக மதுவிலக்குக்

கமிட்டி ஒன்றும் இருக்கவும், தாலுக்காதோறும் மதுவிலக்கு நிர்வாகிகள் நியமிக்கப்படவும், அந்த நிர்வாகிகள் கிராமங்களிலும் நகரங்களிலும் மதுவிலக்குச் சபைகள் அமைக்கவும், வாய்ப்புள்ள இடங்களிலே மதுக்கடைகளை மறியல் செய்யவும், மதுக்கடைகள் ஏலம் விடப்படும்போது, ஏலத்தில் எடுக்க வேண்டாமென்று மதுக்கடைக்காரர்களைக் கேட்டுக்கொள்ளவும் காங்கிரஸ் காரியக் கமிட்டி அனுமதி வழங்கியது.

சுயராஜ்யமா? மதுவிலக்கா?

விடுதலைப் போருக்குத் தேசத்தைத் தயாரிக்க வேண்டிய நேரத்திலே ராஜாஜி மதுவிலக்கில் அதிகத் தீவிரங் காட்டியது தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவர்களிலே சிலருக்குப் பிடிக்க வில்லை. அவர்களிலே முதல்வராக விளங்கினார் திரு. எஸ். சத்தியமூர்த்தி.

> ''சுயராஜ்யம் தான் நமது முன்னிருக்கும் ஒரே பிரச்னை. நான் குடிகாரர்கள் நிறைந்த ஒரு சுதந்திர அரசின் குடிமகனாக இருந்தாலும் இருப்பேனே தவிர, குடிப்பவர்களே இல்லாத அடிமை நாட்டைச் சேர்ந்தவனாக இருக்க மாட்டேன்.''

என்று ஐயர் சொன்னார்.

இதற்கு, ''உறுதியான மதுவிலக்குப் போராட்டம் சுதந்திரம் பெறுகிற விஷயத்தையும் முன்னணிக்குக் கொண்டுவரும். இது அரசியலிலிருந்து ஓய்வு பெற விரும்புபவர்களின் ஜால வித்தை அல்ல'' என்று ராஜாஜி பதிலளித்தார்.

காங்கிரஸ் மேலிடத்தார் மதுவிலக்குப் பிரசாரத்திற்கான முழுப் பொறுப்பையும் ராஜாஜியிடம் விட்டதற்குக் காரணம், ஆக்கவழித் துறையில் பாடுபடுவதில் அவரிடம் வெளிப்பட்ட அசாதாரணமான திறமைதான். உண்மையில் காந்திஜி மீது ராஜாஜிக்கு எல்லையற்ற செல்வாக்கு ஏற்பட்டதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

மதுவிலக்கில் ராஜாஜியின் வெற்றி!

ராஜாஜி தமது உழைப்பால் கதர் உற்பத்தியிலே அனைத் திந்தியாவிற்கும் தலைமை தாங்கும் தகுதியைத் தமிழகத்திற்கு ஏற்படுத்திக் கொடுத்தார். 1927-28-ஆம் ஆண்டிலே தேசம் முழுவதிலும் உற்பத்தியான கதராடையிலே மூன்றிலொரு பங்கு தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டதாகும். இதிலே,

ஈ.வெ.ரா., க. சந்தானம், கோவை ஐயாமுத்து ஆகியோர் ராஜாஜிக்கு ஒத்துழைப்புத் தந்தனர். காங்கிரசிலிருந்து விலகி அந்த தேசிய அமைப்பை எதிர்த்துப் போராடத் தொடங்கிவிட்ட பின்னரும் தமது 'குடியரசு' பத்திரிகையில் ஈ.வெ.ரா. கதருக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்தார். ஆனால், ஒன்றிரண்டு ஆண்டு களிலே அதைக் கைவிட்டு, 'கதர் ஒரு மூட நம்பிக்கை' என்று எழுதலானார்.

ராஜாஜி, அனைத்திந்திய மதுவிலக்குச் சங்கத்தின் பொதுச் செயலாளர் பொறுப்பை தாம் ஏற்று அதிலே தீவிரங் காட்டுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்த திரு. சத்தியமூர்த்தி போன்றவர் களையும் நாளடைவில் தம் வயப்படுத்திக் கொண்டார்.

சென்னை மாகாண அரசின் எக்சைஸ் கமிஷனரான வெள்ளையரைத் தமது திருச்செங்கோடு ஆசிரமத்திற்கு வருகை தரச்செய்தார். அவரது வருகைக்குப்பின் திருச்செங்கோடு ஆசிரமத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் பூரண மதுவிலக்கை சட்ட ரீதியில் அமுல் நடத்த அரசு நடவடிக்கை எடுத்தது. திருச் செங்கோடு தாலுக்காவில் 31 கள்ளு - சாராயக் கடைகளையும், அதை ஒட்டியுள்ள ராசிபுரம் தாலுக்காவில் 22 கள்ளு - சாராயக் கடைகளையும் மூடுவதற்கு அரசு ஏற்பாடு செய்தது. பரீட்சார்த்தமாக இந்தத் திட்டம் மூன்றாண்டுக் காலம் அமுல் நடத்தப்படு மென்றும் அரசு அறிவித்தது. இது, காங்கிரசுக்கும் ராஜாஜிக்கும் கிடைத்த மகத்தான வெற்றியாகும். ஆனால், சட்டமறுப்புப் போர் தொடங்கி ராஜாஜி சிறைபுகுந்த பின், இந்தப் பரீட்சார்த்தத் திட்டம் அரசால் கைவிடப்பட்டது.

மாகாண அரசின் இரட்டை வேடம்!

சென்னை மாகாண அரசு ஒரு புறம் மதுக் கடைகளை ஏலத்தில் விட்டு பெரும் பொருள் திரட்டி வந்தது. அதே நேரத்தில் மது விலக்குக் கொள்கையாளரைத் திருப்தி செய்ய விரும்பி மிதக்குடிப் பிரசாரத்தையும் மேற்கொண்டது. இந்தப் பிரசாரத்திற்கென ஆண்டுதோறும் ஐந்து லட்ச ரூபாயை ஒதுக்கி, அதிலே ஒரு பகுதியை மதுவிலக்குப் பிரசாரகர்களுக்கு மாதச் சம்பளமாகக் கொடுத்து வந்தது. இதனை ராஜாஜி கேலி செய்தார். ஒருபுறம் மதுக் கடைகளை நடத்த அனுமதித்து விட்டு அதிலே அரசும் பெரும் பொருள் பெற்றுக்கொண்டு, இன்னொரு புறம் அரசே குடிகாரர்களை அணுகி, 'அளவோடு குடியுங்கள்!' என்று பிரசாரம் செய்வது முரண்பட்ட செய்கையாகும் என்று ராஜாஜி கூறினார்.

''மிதக்குடிப் பிரசாரத்திற்குச் செலவழிக்கும் பணத்தை அரசு என்னிடம் கொடுத்தால் குடிப்பழக்கத்திலிருந்து எவ்வளவோ பேரை மீட்டுவிட என்னால் முடியும்'' என்றும் கூறினார். ஒவ்வொரு மதுக்கடையும் சிற்றுண்டிச் சாலையாகவும், மக்கள் கூடிப் பேசும் இடமாகவும் மாறவேண்டுமென்று காந்திஜி கூறினார்.

சுயமரியாதையாளர் எதிர்ப்பு!

வழக்கம்போல ராஜாஜியின் மதுவிலக்குப் பிரசாரத்திற்கும் சுயமரியாதை இயக்கத்தாரிட மிருந்து எதிர்ப்பு ஏற்பட்டது. ''மகாத்மா காந்தி தென்னாப்பிரிக்காவில் சேகரித்த பணத்தை எல்லாம் ராஜாஜியிடம் கொடுத்து விட்டார். அவரோ, சோம்பேறிப் பார்ப்பனர்களுக்குச் சோறு போட்டு, தம்முடன் வைத்துக் கொண்டிருக்கிறார்'' என்று சுயமரியாதை ஏடு ஒன்று ராஜாஜியைப் பழித்தது.

''இந்தச் சுயமரியாதைக்காரர்களை விடவும் எனது தனிப்பட்ட வாழ்க்கையில் அதிக அளவில் நெடுங்காலமாக நான் ஏழைகளுடைய துயரங்களைத் துடைக்க முயன்று வருகிறேன்'' என்று ராஜாஜி பதிலளித்தார்.

சுயமரியாதை இயக்கத்தார் கொள்கையளவில் மதுவிலக்கை ஆதரித்தனரென்றாலும், ராஜாஜி பிராமணராதலால் அவருடைய முயற்சிகளுக்கு உள்நோக்கம் கற்பித்து எதிர்ப் பிரசாரம் செய்தனர்.

காந்திஜியின் வாரிசு!

அனைத்திந்தியாவுக்குமாகத்தான் மதுவிலக்குப் பிரசாரக் குழு அமைக்கப்பட்ட தென்றாலும், அதன் பணிகள் ராஜாஜியின் சொந்த மாநிலமான தமிழ் நாட்டிலும், காந்திஜியின் சொந்த மாநிலமான குஜராத்திலுந்தான் பயனுடைய வகையில் பரிணமித்தன. விடுதலைப் புரட்சிக்கு வித்தூன்றிய திலகருடைய சொந்த மாநிலமான மகாராஷ்டிரத்தில் கூடச் சிறப்பாக நடைபெறவில்லை. அந்த மாநிலத்தில் 'திலகரிஸ்டுகள்' என்று தங்களைக் கூறிக்கொண்டவர்கள் மதுவிலக்கில் ஆர்வங்காட்டாத தோடு, அதைக் கேலி செய்யவும் துணிந்தனர். ''மதுவிலக்கிலே ராஜாஜி ஒருவர்தான் எனது வாரிசு'' என்று காந்தியடிகள் கூறினார்.

அமெரிக்காவில் மது அரக்கனை எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்த ஜான்சன் என்பவரை ராஜாஜி சென்னைக்குத்

தருவித்தார். அவரை 'பூனைக்கால் ஜான்சன்' என்று அமெரிக்க மக்கள் அழைத்து வந்தார்கள். ஆம்; பூனைபோல இரவு நேரங்களில் சந்தடியின்றி மதுக்கடைகளில் புகுந்து போதைப் பொருள்களை அழித்து விடுவாராம். அவர் பிப்ரவரித் திங்கள் இறுதியில் ராஜாஜியின் அழைப்பை ஏற்றுத் தமிழகத்திற்குவந்தார்.

ராஜாஜியை ஆசிரியராகக் கொண்ட தமிழ் 'விமோசனம்' பத்திரிகை திருச்செங்கோடு ஆசிரமத்தில் எழுதப்பட்டு, சென்னை யில் அச்சிடப் பெற்றது. பத்து இதழ்கள்தான் வெளிவந்தன.

விடுதலைப் போருக்குத் தேசமக்களைத் தயாரிக்கும் ஆக்க வழிப் பணிகளிலே தீண்டாமை விலக்குக்கென 'அகில இந்திய தீண்டாமை விலக்குச் சங்கம்' ஒன்றை காங்கிரஸ் மேலிடம் அமைத்தது. அதன் பொதுச் செயலாளராக வார்தா வள்ளல் ஜம்னாலால் பஜாஜ் நியமிக்கப்பட்டார். அதிலேயும் தமிழ் நாட்டளவில் ராஜாஜி தமது கடமையைக் குறைவறச் செய்து வந்தார்.

அந்நியத் துணி பகிஷ்காரக் கமிட்டி ஒன்றையும் காங்கிரஸ் மேலிடம் அமைத்தது. அதன் தலைவர் பொறுப்பைக் காந்தியடிகளே ஏற்றார். திரு. ஜெயராமதாஸ்-தௌலத்ராம் செயலாளராக நியமிக்கப்பட்டார். இதற்காகவே அவர் பம்பாய் சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜிநாமாச் செய்தார்.

போராட்டம் தொடங்கும்வரை காத்திராமல் அன்னியத் துணிக்குப் பொதுவிடங்களில் தீ வைக்கும் 'சொக்கப்பானைப் போர்' நாடெங்கும் நடத்தப்பட்டது. காங்கிரஸ்காரர்களிலேயே பலர் எண்ணியதுபோல பிரிட்டிஷ் அரசும் தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு, அன்னியத் துணி தகனம் ஆகியவை இனி தொடங்கப்பட விருக்கும் போராட்டத்துக்கு ஒத்திகைகள் என்பதனை நம்பவில்லை. இவற்றை விளையாட்டுகளாகக் கருதி வேடிக்கை பார்த்தது.

வேதாரண்யம் மாநாடு

1929 செப்டம்பரில் தமிழ் மாகாண அரசியல் மாநாட்டை நடத்தத் தமிழ்நாடு காங்கிரஸ் முன்வந்தது. அதற்கு வேதாரண்யத்தைத் தேர்ந்தெடுத்தார் ராஜாஜி. உப்புச்சத்தியாக் கிரகத்திற்கு வேதாரண்யத்தையே களமாக்கும் உள்நோக்கும் ராஜாஜிக்கு அப்போதே இருந்ததுபோலும்!

வேதாரண்யம் மாநாட்டில் தலைமை தாங்கப் பர்டோலி வீரர் சர்தார் வல்லபபாய் படேலைத் தந்து உதவுமாறு காந்திஜிக்கு

ராஜாஜி எழுதினார். காந்திஜியின் அனுமதியோடு சர்தார் படேல் வேதாரண்யத்திற்கு வருகை தந்தார். இம்மாநாட்டில் 'இந்து' ஆசிரியர் ஏ. அரங்கசாமி ஐயங்கார், எஸ். சத்தியமூர்த்தி, ராஜாஜி ஆகியோர் கலந்து கொண்டனர். பிற்காலத்தில் ஜஸ்டிஸ் கட்சியின் பிரபல தூணாக மாறிய திரு.எஸ். முத்தையா முதலியாரும் பங்கு பெற்றார். பர்டோலியை நினைவில் கொண்டு தமிழ்நாட்டிலும் விவசாயிகளை விடுதலைப்போரில் ஈடுபடுத்தும் குறிக்கோளுடன் விவசாயிகள் சங்கமொன்று நிறுவப்பட்டது.

இம்மாநாட்டிற்குப் பிறகு சர்தார் வல்லபபாயும், ராஜாஜியும் தென்னிந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்தனர். தாங்கள் சென்ற இடந்தோறும் மக்களிடம் போராட்ட அலைகள் பொங்கி எழுவதை அவர்கள் கண்டனர். அதனை ஊக்குவிக்கும் வகையிலேயே பிரசாரம் செய்தனர்.

★-★-★

டில்லியிலிருந்து லண்டன் வரை

1929- ஆம் ஆண்டு மே மாதத்திலே பிரிட்டனில் ஆட்சி மாறிய செய்தியை முன்பே கூறினோம். இங்கு அதன் விளைவுகளை ஆராய்வோம்.

பிரிட்டனில் நடந்த பொதுத் தேர்தலிலே கன்சர்வேடிவ் கட்சிக்கு வீழ்ச்சியும் தொழிற் கட்சிக்கு வெற்றியும் கிடைத்தன. அதனால், திரு. சேம்பர்லேன் அவர்களைப் பிரதமராகவும், லார்டு பர்ஹன்ஹெட் அவர்களை இந்தியா மந்திரியாகவும் கொண்டிருந்த கன்சர்வேடிவ் கட்சி மந்திரி சபையின் ஆயுள் முடிந்தது. திரு. ராம்சே மெக்டொனால்டு அவர்களைப் பிரதமராகவும், கர்னல் வெட்ஜ்வுட் பென் என்பவரை இந்தியா மந்திரியாகவும் கொண்ட தொழிற்கட்சி அமைச்சரவை பிரிட்டனில் தோன்றியது.

தொழிற் கட்சியின் பூர்வ வரலாறு!

1924 லேயே ஒருமுறை தேர்தல் களத்திலே கன்சர்வேடிவ் கட்சியை வீழ்த்தித் தொழிற் கட்சி வெற்றி கண்டது. ஆனால், ஒன்பதே திங்களில் தொழிற் கட்சி ஆட்சியை வீழ்த்தித் திரும்பவும் கன்சர்வேடிவ் கட்சி ஆட்சிக்கு வரும் புரட்சி நிகழ்ந்தது. பிரிட்டிஷ் தொழிற் கட்சியார், தாங்கள் பார்லிமெண்டிலே எதிர்க்கட்சியாக இருந்தபோது, இந்திய தேசிய காங்கிரசுடன் தோழமை கொண்டிருந்ததோடு, லண்டனில் காங்கிரஸ் அமைத்த கிளைக் கமிட்டியுடனும் தொடர்பு கொண்டிருந்தனர். இப்போது பிரிட்டனில் பிரதமராகப் பொறுப்பேற்ற திரு. ராம்சே மெக்டொனால்டு *1911*-இல் கல்கத்தாவில் கூடிய 27 ஆவது காங்கிரஸ் மகாசபைக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டவராவார்.

1919-இல் அமிர்தசரசில் கூடிய காங்கிரஸ் மகாச்பைக்கு அனுப்பிய செய்தியிலே,

''மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தச் சட்டத்தில் இடம்பெற்றுள்ள ஆட்சேபகரமான பகுதிகளைப் பிரிட்டிஷ் தொழிற் கட்சி ஆட்சிக்கு வந்தால் ஏற்காது''

என்று திரு. ராம்சே மெக்டொனால்டு கூறினார்.

இவருடைய அமைச்சரவையில் இந்தியா மந்திரியாகப் பொறுப்பேற்ற கர்னல் வெட்ஜ்வுட் பென், *1920* - ஆம் ஆண்டிலே நாகபுரியில் நடந்த காங்கிரஸ் மகாசபைக்குப் பிரிட்டிஷ் தொழிற் கட்சியின் நல்லெண்ணத் தூதுவராக வந்திருந்தார்.

இந்தியாவுக்கு மாண்டேகு -செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தைப் பிரிட்டனில் வழங்கியபோது அங்கு எதிர்க்கட்சித் தலைவராக இருந்த திரு. ஆடம்சன் என்பவர், ''இந்த அரசியல் சீர்திருத்த மானது இந்தியாவின் சுதந்திர விருப்பத்தை நிறைவேற்றாது'' என்று கூறினார்.

1920 - ஆம் ஆண்டில் நடைபெற்ற பிரிட்டிஷ் தொழிற் கட்சியின் வருடாந்தர மாநாட்டிலே கீழ்க்கண்ட தீர்மானம் ஒரு மனதுடன் நிறைவேற்றப்பட்டது:

''இந்தியர்களின் உண்மையான, நியாயமான எல்லாக் கோரிக்கைகளையும் நிறைவு செய்யும் வகையில் - இந்தியாவுக்குச் சுய நிர்ணயம் அளிக்கின்ற வகையில் தற்போதுள்ள இந்திய அரசாங்கத்தை மாற்றியமைக்க வேண்டும் என்ற கருத்தைத் தொழிற் கட்சியின் இந்த மாநாடு ஏற்பதோடு, அதனைத் தனது கொள்கையாகவும் கொள்ளுகின்றது.''

தொழிற் கட்சியார் வெளியிட்ட தேர்தல் அறிக்கையிலேயும், இந்தியாவுக்கு முழு சுதந்திரம் அளிக்கவேண்டும் என்ற கொள்கை வலியுறுத்தப்பட்டிருந்தது.

1924 ஜூன் *27*-இல் லண்டனிலுள்ள 'ராணி அரங்கம்' (குயின்ஸ் ஹால்) என்னும் இடத்தில் நடைபெற்ற தொழிற் கட்சிக் கூட்டம் ஒன்றில் பேசியபோது திரு. ராம்சே மெக்டொனால்டு கூறியதாவது:

''இந்தியாவுக்குக் குடியேற்ற நாட்டு அந்தஸ்து - அதாவது, டொமினியன் அந்தஸ்து அளிக்கவேண்டும். முதலாவது உலகப் பெரும்போர் காலத்தில் இந்தியாவுக்கு அதன் சுதந்திரம் பற்றி அளித்த உறுதி மொழியைப் பிரிட்டிஷ் அரசு காற்றில் பறக்க விட்டது கண்டிக்கத் தக்கதாகும். நம்மவர்களில் நியாய உணர்வுடைய எல்லோரும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தினுடைய

ஒற்றுமையைக் கருதியேனும் இந்தியாவுக்கு டொமினியன் அந்தஸ்தை அளிக்கவேண்டும் என்று பிரிட்டிஷ் அரசை வலியுறுத்த வேண்டும்.''

இந்தியாவிடம் இவ்வளவு நல்லெண்ணம் காட்டி வந்த தொழிற் கட்சியானது 1924 - இல் முதன் முதலாக ஆட்சிக்கு வந்த போதே இந்தியர்கள் அதனிடம் நிறைய எதிர்பார்த்தனர். குறைந்த பட்சமாகக் குடியேற்ற நாட்டு அந்தஸ்தையேனும் இந்தியாவுக்கு அளிக்குமென்று இந்திய தேசிய காங்கிரசும் எதிர்பார்த்தது. ஆனால், ஒன்பது மாதங்களுக்குள்ளாகவே தொழிற் கட்சியின் ஆட்சி கவிழ்க்கப்பட்டு விட்டதால் அதனுடைய யோக்கியதையைப் புரிந்துகொள்ளப் போதிய அவகாசமில்லாமல் போய்விட்டது. ஆட்சியிலிருந்த ஒன்பது மாத காலத்திலே தனது பழைய உறுதி மொழிகளை நிறைவேற்றக் கூடிய வகையில் தொழிற்கட்சியின் ஆடசி எதையும் செய்யவில்லை.

இரண்டாவது முறையாக 1929 மே மாதத்தில் தொழிற்கட்சி ஆட்சிக்கு வந்தபோது இந்தியாவில் அரசியல் சூழ்நிலை பக்குவப் பட்டிருந்தது. 'உடனடியாக பிரிட்டிஷ் மேலாதிக்கத்திற்குட்பட்ட டொமினியன் அந்தஸ்து கொடுத்தாலே போதும்' என்று கல்கத்தாவில் கூடிய காங்கிரஸ் மகாசபை அறிவித்திருந்ததானது, தொழிற்கட்சியின் ஆட்சிக்கு ஒரு நல்ல சந்தர்ப்பத்தை அளித்தது. ஆகவே, இந்திய தேசிய காங்கிரசின் முன்னால் தலைவர் திரு. ராம்சே மெக்டொனால்டிடமிருந்து இந்தியா நிரம்ப எதிர் பார்த்தது.

''கூடை செங்கல்லும் பிடாரிதான்!''

காந்திஜி, ராஜாஜி, பண்டித மோதிலால்ஜி போன்ற பெருந் தலைவர்கள் தொழிற் கட்சியிடம் அதிக அளவில் நம்பிக்கை கொண்டவர்கள் அல்ல. இந்தியா விஷயத்தில் கன்சர்வேடிவ் கட்சியை விடவும் தொழிற்கட்சி முற்போக்கானது என அவர்கள் என்றுமே கருதியதில்லை. ''கூடை செங்கல்லும், பிடாரிதான்'' என்பதே அவர்கள் கருத்தாக இருந்தது. ஆயினும் ''அவாளுக்கு இவாள் எழுந்திருந்து உண்பாள்' என்னும் பழமொழிப்படி, கன்சர்வேடிவ் கட்சியின் ஆட்சியை விடவும் தொழிற் கட்சியின் ஆட்சி சிறிது இங்கிதமாக நடந்து கொள்ளும் என்று காங்கிரஸ் தலைவர்கள் எதிர்பார்த்தனர்.

இந்நிலையில், இந்திய வைசிராய் லார்டு இர்வின் என்பார் ஜூன் மாத இறுதியில் நான்கு மாத ஓய்வுக்காக இங்கிலாந்து சென்றார். 'ஓய்வுக்காகத்தான் செல்கிறார்' என்று அறிவிக்கப்

படினும் சைமன் கமிஷன் தந்த பரிந்துரையின் அடிப்படையில் இந்தியாவுக்கு வழங்கபட வேண்டிய அரசியல் சீர்திருத்தம் பற்றி ஆலோசிப்பதற்காக பிரிட்டிஷ் பிரதமர் விடுத்த அழைப்பின் பேரில்தான் வைசிராய் லண்டன் சென்றார். இங்கிலாந்துக்குப் புறப்பட்டபோது வைசிராய் இர்வின், விடுத்த அறிக்கை வருமாறு:

''இந்தியாவிலுள்ள கடுமையான விஷயங்களைப் பற்றி மன்னர்பிரானுடன் விவாதிக்கக்கூடிய சந்தர்ப்பங்களை நான் கட்டாயம் தேடுவேன். இந்தியாவின் அரசியல் விருப்பங் களையும், இங்குள்ள பல்வேறு அரசியல் கட்சிகளின் நோக்கங்களையும் பிரிட்டிஷ் மன்னரிடம் நான் எடுத்துக் கூறுவேன்''

நான்கு மாதங்கள் இங்கிலாந்தில் கழித்து, பிரிட்டிஷ் பிரதமருடனும், இந்தியா மந்திரியுடனும், ஏனைய ராஜ தந்திரிகளுடனும் ஆலோசனை நடத்திய பின்னர், அக்டோபர் 25 -ஆம் தேதி வைசிராய் லார்டு இர்வின் இந்தியாவுக்குத் திரும்பினார். திரும்பியதும், அக்டோபர் 31-ஆம் தேதி அவர் விடுத்த அறிக்கை வருமாறு:

''சைமன்கமிஷனின் பரிந்துரையும் பிரிட்டிஷ் அரசினர் இனி தயாரிக்க விருக்கும் திட்டங்களும் பரந்த நோக்கங்களுடன் கூடியவையாக இருப்பதற்கு இப்போது உத்தேசிக்கப் பட்டுள்ள திட்ட முறையை அரசினர் திருத்தி அமைத்தாக வேண்டும். கமிஷன் பரிந்துரையும் இந்திய மத்திய கமிட்டி (சைமன்கமிஷன் இந்தியா வந்தபோது சர்.சி. சங்கரன்நாயர் தலைமையில் அமைக்கப்பட்டது) யின் அறிக்கையும் பிரசுரமாகி மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வதற்கு முன்பு கூட்டுப் பார்லிமெண்டரிக் குழு லண்டனில் ஒரு மாநாட்டைக் கூட்டும். இம் மாநாட்டிலே மன்னர்பிரானின் அரசாங்கத்தார் பிரிட்டிஷ் இந்தியாவின் பிரதிநிதிகளுடனும், இந்திய சமஸ்தானங்களின் பிரதி நிதிகளுடனும் கலந்து பேசுவார்கள்.

''இறுதியாக, அரசாங்கத்தார் தங்கள் யோசனைகளைப் பார்லிமெண்டில் வைப்பதற்கு முன்பு எவ்வளவு அதிகமான ஒற்றுமையையும், ஒருமித்த கருத்தையும் உண்டுபண்ணிக் கொள்ளலாமோ அவ்வளவையும் உண்டுபண்ண வேண்டும் என்பதே இம் மாநாட்டின் குறிக்கோள்.

''1917-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் வெளியிட்ட அறிக்கையில் பிரிட்டிஷ் அரசினர் தங்கள் கொள்கையை

விளக்கினர். பிரிட்டிஷ் அரசின் ஓர் அம்சமாக இந்தியாவில் நாளா வட்டத்தில் பொறுப்பாட்சியை ஏற்படுத்தும் நோக்கத்துடன் சிறிது சிறிதாக அங்குச் சுய ஆட்சி அமைப்புகளை நிறுவுவதே தங்கள் கொள்கையென அவர்கள் அறிவித்தனர்.

''1919 - ஆம் ஆண்டில் பார்லிமெண்டு வகுத்த திட்டங்களின் படி இந்தியாவும் தனது ஏனைய குடியேற்ற நாடுகளுடன் சம அந்தஸ்தில் இருக்கவேண்டும் என்பதே மன்னர்பிரானின் நோக்கம் என்பது வெளிப்படை. இதனையே வற்புறுத்திப் பிரிட்டிஷ் அமைச்சர்கள் பலர் பல நேரங்களில் பேசியிருக்கிறார்கள். ஆனால், இதுபற்றிக் கிரேட் பிரிட்டனிலும் சரி, இந்தியாவிலும் சரி; பலருக்கு இன்னும் ஐயங்கள் இருந்து வருவதை முன்னிட்டு விஷயங்களைத் தெளிவு படுத்துமாறு மன்னர்பிரானின் அரசினர் எனக்கு அதிகாரம் கொடுத்திருக்கின்றனர்.

''1917 - ஆம் ஆண்டு அறிக்கையின்படி இந்தியாவின் அரசியல் முன்னேற்றம் குடியேற்ற நாட்டு அந்தஸ்துதான் என்பதைத் தெளிவாக்க வேண்டுமென்பது அவர்கள் விருப்பம்.''

புதிய செய்தி

வைசிராயின் அறிக்கையில் உருப்படியான அம்சம் ஏதேனுமொன்று இருந்ததென்றால், அது இந்தியாவுக்கு குடியேற்ற நாட்டு அந்தஸ்து வழங்குவதுதான் பிரிட்டிஷ் அரசின் கொள்கை என்று கூறியதாகும். இத்துடன், விரைவில் லண்டனில் இந்திய - பிரிட்டிஷ் ராஜ தந்திரிகளைக் கொண்ட மாநாடு ஒன்று நடக்கும் என்பதும் வைசிராயிடமிருந்து கிடைத்த புதிய செய்தியாகும்.

வரவேற்றனர்

வைசிராய் அறிக்கை வெளியான தருணத்தில் காந்திஜி, மோதிலால் நேரு, ராஜாஜி, மாளவியா, அன்னிபெசன்ட், சர். தேஜபகதூர் சாப்ரு ஆகியோர் டில்லியில்தானிருந்தனர். காங்கிரஸ் காரியக் கமிட்டி உறுப்பினர்களுங்கூட டில்லியில் தானிருந்தனர். எல்லாத் தலைவர்களும் டில்லியில் கூடி ஆலோசித்து, வைசிராய் அறிக்கையை வரவேற்று ஒரு கூட்டறிக்கை வெளியிட்டனர். அதிலே பிரிட்டிஷ் அரசின்

நல்லெண்ணத்தைப் பாராட்டுவ தாகவும் கூறியிருந்தனர். அந்தக் கூட்டறிக்கையின் பிரதான பகுதிகள் வருமாறு:

''இந்தியாவின் தேவைகளுக்கேற்ற வகையில் குடியேற்ற நாட்டு அரசியலமைப்பு ஒன்றை வகுக்கும் முயற்சியில் அரசாங்கத்தாருடன் நாங்களும் ஒத்துழைக்க முடியும் என்று நம்புகிறோம். ஆனால் அரசாங்கத்தார் இந்திய அரசியல் அமைப்புகளிடமிருந்து இத்தகைய ஒத்துழைப்பைப் பெறுவதற்கு முன்னர், அவர்களிடையே போதுமான நம்பிக்கையை உண்டுபண்ணுவதற்காக, சில காரியங்களைச் செய்வதும், சில விஷயங்களைத் தெளிவாக்க வேண்டியதும் அவர்கள் கடமையென நாங்கள் கருதுகிறோம். ஆகவே வைசிராயின் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள மாநாடு வெற்றிகரமாக நடைபெற வேண்டுமானால் கீழ்க்கண்ட காரியங்கள் நிறைவேற்றி வைக்கப்படவேண்டும்:

''நாட்டின் அரசியல் நிலையில் காணப்படும் கொந்தளிப்பை நீக்கிச் சமாதானத்தையும் அமைதியையும் உண்டுபண்ணு வதற்கேதுவான சாந்த முறைகளைக் கையாள்வது;

''அரசியல் கைதிகளை விடுதலை செய்தல்;

''நாட்டிலுள்ள பல்வேறு அரசியலமைப்புகளின் ஒத்துழைப்பையும் பிரதிநிதித்துவத்தையும் செம்மையாகப் பெறுதல்; இத்தகைய அமைப்புகளில் முக்கியமானதாக விளங்கும் இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபைக்குச்சிறப்புப் பிரதிநிதித்துவம் இருக்கவேண்டும்;

''வைசிராயின் அறிக்கையில் குடியேற்ற நாட்டு அந்தஸ்தைப் பற்றிக் கூறியிருப்பது குறித்துச் சில ஐயப்பாடுகள் கிளம்பியிருக்கின்றன. குடியேற்ற நாட்டு அந்தஸ்தை எப்பொழுது ஏற்படுத்துவது என்பது பற்றி விவாதிப்பதற் காக அல்லாமல், இந்தியாவுக்குக் குடியேற்ற நாட்டு அந்தஸ்துடைய அரசியலமைப்பை வகுக்கவே மாநாடு கூட்டப்பட விருக்கின்றது என்று நம்புகிறோம்.

''புதிய அரசியலமைப்பு ஏற்படும் வரையில் நாட்டின் அரசியலில் இப்போது இருப்பதைவிட இன்னும் அதிக தாராளப் போக்கும் காட்டப்பட வேண்டும்.

''இன்றைய நாளிலிருந்தே புதிய சகாப்தம் ஒன்று ஏற்பட்டு விட்டதை இந்திய மக்கள் உணருமாறு செய்ய வேண்டும். இறுதியாக, வீணே காலங் கடத்தாமல்

உத்தேசித்துள்ள மாநாட்டை விரைவில் கூட்டிவைக்க வேண்டும்.

''பிரிட்டிஷ் அரசின் கொள்கையில் இப் புதிய மாறுதல் ஏற்பட்டதற்குக் காரணம் தொழிற் கட்சி அதிகாரத்திற்கு வந்ததுதான் என்பதில் எங்களுக்கு ஐயமில்லை.''

அடிகளின் தனி அறிக்கை

தலைவர்களின் கூட்டறிக்கையை யடுத்து, தனிப்பட்ட முறையில் தமது நிலையை விளக்கிக் காந்தியடிகளும் தனியாக ஓர் அறிக்கை விடுத்தார். அதிலே அவர் கூறியதாவது:

'நான் ஒத்துழைப்பையே தேடி அலைகிறேன். ஆனால், வாயிலிருந்து வெளிவரும் வாக்குக்கு மதிப்பு உண்டு. கல்கத்தாக் காங்கிரசின் தீர்மானத்தை நான் என் உயிர் போலக் கருதி வருகிறேன். அதுபோலத்தான் தலைவர்களின் கூட்டறிக்கையையும் நான் கருதுகிறேன். அதன் ஒவ்வொரு வார்த்தைக்கும் அர்த்தம் உண்டு என்பதைப் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் உணரவேண்டும். கல்கத்தாக் காங்கிரஸ் தீர்மானமும் தலைவர்களின் கூட்டறிக்கையும் முரண் பட்டவையல்ல. வாயால் எதையும் சொல்லிவிட்டு, இதயத்தால் அதற்குத் துரோகம் பண்ணுவதைவிட அநீதி உலகில் வேறு எதுவுமில்லை.

''உண்மையான குடியேற்ற நாட்டு அந்தஸ்து கிடைக்கும் போலிருந்தால் அதற்காக நான் காத்துக் கொண்டிருக்கத் தயார். பிரிட்டிஷாரிடமிருந்து உண்மையான மன மாறுதலையே நான் கோருகிறேன். இந்தியா சுதந்திரம் பெற்றுத் தன்மதிப்புடன் வாழ வேண்டுமென்ற எண்ணம் பிரிட்டிஷாருக்கு இருக்கிறதா என்பதே எனது கேள்வி. இந்தியாவிலுள்ள அதிகாரிகள் தங்களைப் பொதுமக்களின் சேவகர்களாக நினைத்துக் கொள்கிறார்களா? இவ்வினாக் களுக்கு 'ஆம்' என்பதுதான் விடையாயின் பிரிட்டிஷ் அரசாங்கம் தன் கையிலுள்ள துப்பாக்கியைத் தூர வைத்து விட்டு, இந்திய மக்களின் நன்மதிப்பைப் பெறும் வகையில் அரசாளத் தலைப்படவேண்டும். இதற்கு அவர்கள் தயாராக இல்லையென்றால், எனக்குத் திருப்தி தரக்கூடிய குடியேற்ற நாட்டு அந்தஸ்தை நான் காணமுடியாது. நான் மனத்தில் கொண்டிருக்கும் குடியேற்ற நாட்டு அந்தஸ்தின் வடிவமே வேறு. நான் விரும்பினாலும் இன்று பிரிட்டிஷ் தொடர்பை

அறுத்துக் கொள்வது சாத்தியமில்லை. அதனாற்றான், குடியேற்ற நாட்டு அந்தஸ்தை ஏற்க நான் தயாராக இருக்கிறேன்.

ஒரு தேசத்தார் இன்னொரு தேசத்தாரைக் கொள்ளை யடிப்பதிலும் பிரிட்டினின் ஏகாதிபத்தியப் பேராசையிலும் நான் பங்கெடுத்துக் கொள்ளமுடியாது. இங்கிலாந்திலும் இந்தியாவிலும் உள்ள என்னுடைய நண்பர்கள் எனது நிலைமையை நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

''தன்னுடைய சுதந்திரத்தைத் தானே நிலைநாட்டிக் கொள்ளும் வலிமையை இந்தியா இன்னும் பெறவில்லை. இந்த நிலையில் இப்பொழுது தேசத்திற்குக் கிடைக்கும் எந்த வகையான சுதந்திரமும் பிரிட்டிஷாரின் கருணையிலிருந்து பிறப்பதேயாகும். அத்தகைய கருணையை அவர்கள் இப்பொழுது காட்டுவாராயின் அதில் வியப்பதற்கு ஒன்றும் இல்லை. அவர்கள் முன்பு இந்தியாவுக்கு இழைத்த அநீதிகளுக்கு அது தக்க பிராயச்சித்தமாகும்.

''ஆனால் இந்தியா தனது விடுதலையைப் பெறுவதற்கான காலம் இன்னும் வரவில்லையென்றால் அதற்காகப் பொறுமையுடன் காத்திருக்க நான் தயார். சுதந்திர லட்சியத்திற்காகவே உயிர் வைத்துக் கொண்டிருக்கிறேன்.''

லண்டனிலிருந்து திரும்பியதும் இந்திய வைசிராய் லார்டு இர்வின் அறிக்கை விடுத்ததையடுத்துப் பிரிட்டிஷ் தொழிற்கட்சித் தலைவர்களிடமிருந்து காந்தியடிகளுக்குத் தந்திக்கு மேல் தந்திகள் வந்து கொண்டிருந்தன. அவற்றிலே இந்தியாவுக்கு உதவி புரியும் வேலையில் தாங்கள் ஈடுபட்டிருப்பதாகவும், அதற்கு உதவிபுரிய வேண்டுமென்றும் அவர்கள் காந்திஜியைக் கேட்டுக் கொண்டிருந்தனர். அதன்பேரில்தான் காந்திஜி தமது நிலையை விளக்கி அறிக்கை விட்டார்.

நம்பிக்கை நாசமாயிற்று!

1929 நவம்பர் மாதம் *16* -ஆம் தேதியன்று அலகாபாத்தில் முன்னர் ஒத்தி வைக்கப்பட்ட சர்வ கட்சி மாநாடும் காங்கிரஸ் காரியக் கமிட்டியும் தனித்தனியே கூடி வைசிராய் அறிக்கையை ஆராய்ந்தன. வழக்கம்போல மிதவாதிகள் அரச விசுவாசத்திற்கும் தேச விசுவாசத்திற்குமிடையே ஊசலாட்டம் போட்டனர்.

காங்கிரசிலும் வழக்கம்போலப் பூரண சுதந்திரம் கோரும் குழுவின் தலைவர்களான ஜவகர்லாலும் சுபாஷ் போசும் வைசிராய் அறிக்கையில் நல்லது எதுவுமே இல்லையென்று வாதாடினர். லண்டனில் கூட்டப்பட விருக்கும் மாநாட்டாலும் சுதந்திர லட்சியம் சித்திக்காதென்றும் உறுதியாகக் கூறினர். இம்முறை முதியவரான பண்டித மோதிலாலும் இந்த இளைஞர்களுடன் சேர்ந்து கொண்டார். காங்கிரஸ் முடிவில் தங்களுக்குள்ள வெறுப்பை வெளிப்படுத்துவதாகச் சொல்லி ஜவகர்லால் நேருஜியும் சுபாஷ் போசும் காங்கிரஸ் காரியக் கமிட்டியிலிருந்து ராஜினாமாச் செய்தனர்.

இந்நிலையில் வைசிராய் இர்வின் அழைத்ததன் பேரில் காந்திஜியும் மோதிலாலும் டில்லி சென்று அவரைச் சந்தித்தனர். இவர்களுக்கு முன்பே ஜனாப்ஜின்னாவும் டாக்டர் சாப்ருவும் வைசிராய் மாளிகையில் இருந்தனர்.

''இந்தியாவிற்குக் குடியேற்ற நாட்டு அந்தஸ்து அளிக்கப்படும்'' என்ற உறுதிமொழி யொன்றையே தாம் எதிர்பார்ப்பதாகக் காந்திஜி வைசிராயிடம் உறுதியாகக் கூறினார். 'அது சாத்தியமில்லை' என்று கூறி வைசிராய் கையை விரித்தார். ஏமாற்றத்துடன் காந்திஜி வைசிராய் மாளிகையிலிருந்து திரும்பினார். இந்நிகழ்ச்சியே பின்னால் காந்திஜி தொடரவிருந்த விடுதலைப் போருக்கு வித்தாக அமைந்தது.

இந்தியாவில் நிலைமை இதுவாக இருந்தபோது இங்கிலாந்திலும் வைசிராய் அறிக்கையை யொட்டித் தொழிற் கட்சி ஆட்சிக்குக் கடுமையான எதிர்ப்பு ஏற்பட்டது. வைசிராய் அறிக்கையால் பிரிட்டிஷ் சாம்ராஜ்யமே சரிந்து போய்விடக் கூடுமென்று கன்சர்வேடிவ் கட்சியினர் கூச்சலிட்டனர். லண்டன் பார்லிமெண்டில் தொழிற் கட்சியினருக்குப் பெரும்பான்மை யிருந்ததால், அங்கு எதிர்ப்பைச் சமாளித்துவிட முடிந்தது. ஆனால் மேல் சபையான லார்டுகள் சபையில் தொழிற்கட்சி தத்தளித்தது. பழைய இந்தியா மந்திரியான திரு. பர்ஹன் ஹெட் எதிர்ப்புக்குத் தலைமை தாங்கினார்.

பிரிட்டிஷ் பிரதமர் மெக்டொனால்டு, இந்தியா மந்திரி கர்னல் வெட்ஜ்வுட் பென் ஆகிய இருவரும் தங்களுக்கு ஏற்பட்ட எதிர்ப்புக் கண்டு அஞ்சியோ என்னவோ வைசிராய் அறிக்கைக்குக் கன்சர்வேடிவ்களைத் திருப்திப்படுத்தும் நிலையில் வியாக்யானஞ் செய்யலாயினர். பிரிட்டிஷ் அரசின் கொள்கையில் மாறுதல் எதுவும் இல்லையென்று அறிவித்தனர்.

எப்படியோ இந்திய வைசிராயின் அறிக்கையில் காங்கிரஸ் தலைவர்கள் வைத்த நம்பிக்கை நாசமாகிவிட்டது, விடுதலைப் போரைத் தொடங்குவதைத் தவிர தங்களுக்கு வேறு வழி இல்லையென்று காந்திஜியும் காங்கிரஸ் தலைவர்களும் கருதினர்.

இதற்கு முன்பே தேசத்தில் போராட்டம் தொடங்கிவிட்டது. ஆயுதப் புரட்சியில் நம்பிக்கையுள்ள இளைஞர் கூட்டத்தார் பஞ்சாப், வங்காளம், உத்திரப்பிரதேசம், டில்லி ஆகிய மாநிலங்களில் 1924 முதலே புரட்சிச் செயல்களில் ஈடுபட்டு வந்தனர். அதையே காரணம் காட்டி, இந்திய அரசும் அந்த மாநிலங்களின் அரசுகளும் அடக்குமுறையி லிறங்கின.

★-★-★

எங்கெங்கும் சதி வழக்கு

குடியேற்ற நாட்டு அந்தஸ்துக் கோரிக்கையை ஏற்க பிரிட்டிஷ் அரசுக்கு இந்திய தேசிய காங்கிரஸ் கொடுத்திருந்த ஓராண்டுக் கால கெடு முடிந்து கொண்டிருந்த நேரத்தில் தேசம் முழுவதிலும் ஏகாதிபத்திய அடக்குமுறை தாண்டவமாடிக் கொண்டிருந்தது. புரட்சி உள்ளம் படைத்த விடுதலை வீரர்கள் வேட்டையாடப்பட்டு வந்தனர். ஒருபுறத்தில் அன்னிய ஆதிக்கத்திற்கு எதிராகக் காங்கிரஸ் விடுதலைப் போர் தொடங்கத் தயாராகி வந்தது. இன்னொரு புறத்திலே, அரசாங்கமும் விடுதலைப் போருக்கான சூழ்நிலையை உருவாக்கி வந்தது.

வன்முறை இயக்கங்கள்

ஒத்துழையாமைப் போரைச் சௌரிசாரா சம்பவம் காரணமாகக் காந்தியடிகள் திடீரென நிறுத்தியதி லிருந்தே அரசு அடக்குமுறையி லீடுபட்டு வந்தது. போரை நிறுத்திய பின்னும் அதன் தளபதியான காந்திஜி மீது வழக்குத் தொடுத்து, அவருக்கு ஆறு ஆண்டுத் தண்டனை கிடைக்க வழி செய்தது. ஆம்; பாராட்டப்பட வேண்டியவர் பழிவாங்கப்பட்டார்!

இதைத் தொடர்ந்து, நாட்டில் அப்போதுதான் தோன்றி நாளொரு மேனியாக வளர்ந்து கொண்டிருந்த தொழிலாளர் - விவசாயிகள் இயக்கங்களையும் அரசு திட்டமிட்டு ஒடுக்கி வந்தது. இதன் விளைவாக, *1924* முதல் திரும்பவும் நாட்டில் வன்முறை இயக்கங்கள் தோன்றி வளர்ந்து வந்தன.

1908 தொடங்கி *1918* வரை வெள்ளை அதிகாரிகளைக் கொல்லுவது, அரசாங்க கஜானாக்களைக் கொள்ளை அடிப்பது போன்ற பயங்கரச் செயல்கள் திட்டமிட்ட முறையில் நாட்டில் நடைபெற்று வந்தன. அப்போதுதான் காந்தியடிகள் ரௌலட் சட்ட எதிர்ப்புச் சத்தியாக்கிரகம், கிலாபத் கிளர்ச்சி, ஒத்துழையாமை இயக்கம் ஆகியவற்றைத் தோற்றுவித்துத் தேசம் முழுவதையும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போர்க்களமாக்கினார். இதனால், நாட்டில் பயங்கரப் புரட்சிச் செயல்கள் அடிகள்

எதிர்பார்த்தபடி குறைந்து வந்தன. விடுதலை ஆர்வமுடன் இளைஞர்கள் காந்திஜியின் தலைமையில் நம்பிக்கை வைத்து, ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டனர். ஆனால், திடீரென்று ஒத்துழையாமை இயக்கத்தை காந்திஜி கைவிட்டதானது இளைஞர்களுக்கு ஏமாற்றத்தை அளித்தது. காந்திஜியிடமும் காங்கிரசிடமும் நம்பிக்கையிழந்து, திரும்பவும் பயங்கர இயக்கத்தைக் கட்டி வளர்க்க முயன்றனர்.

புரட்சி அமைப்புகள் தோன்றின!

1924 முதல் 1929 வரை தேசத்தில் பயங்கரப் புரட்சி அமைப்புகள் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றி வந்தன. மாநிலந்தோறும் கிளைகளையும் மத்திய அமைப்பையும் கொண்டு பயங்கரப் புரட்சி இயக்கம் முன்னைவிடவும் வேகமாக உருவாகி வந்தது. வங்கத்தில் 'அனுசீலம்', யுகாந்திரம்' என்னும் பெயர்களில் புரட்சி அமைப்புகள் தோன்றின. பஞ்சாபில் 'பாரத மாதா சங்கம்', 'பாபா அகாலி தளம்' ஆகியவை தோன்றின.

தேசம் முழுவதற்குமாக 'இந்தியன் ரிபப்ளிக்கன் ஆர்மி' என்னும் ஆங்கிலப் பெயர் கொண்டு 'இந்தியக் குடியரசு ராணுவம்' என்ற ஒரு புரட்சி அமைப்புத் தோன்றியது. இதற்கு சென்னை மாகாணம் உள்பட மாநிலந்தோறும் கிளையமைப்புகளும் பிறந்தன. குடியரசு ராணுவம் சோசலிச இந்தியாவைப் படைக்கும் குறிக்கோளைக் கொண்டிருந்தது. அதனால், சோவியத் ருஷ்யாவை ஆதர்ச சக்தியாகக் கொண்டு கம்யூனிசத்தில் நம்பிக்கையுடையவர்கள் இந்திய விடுதலைப் புரட்சியில் முன்னணிக்கு வந்தனர். உண்மையில் இவர்களால் நடத்தப்பட்டு வந்த பயங்கர அமைப்புகள்தான் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக முழு அளவில் திட்டமிட்டுச் செயல் புரிந்து வந்தன. நாட்டிலுள்ள பெரிய குடும்பங்களைச் சேர்ந்த பட்டதாரி இளைஞர் பலர் இவற்றில் சேர்ந்து வந்தனர். வங்கத்தில் ஒரு சில பெண்களும் கலந்திருந்தனர்.

இந்த இருபதாம் நூற்றாண்டின் இரண்டாவது பத்தாண்டுக் காலத்திலே தேச பக்தர்கள் குடும்பம் குடும்பமாக விடுதலைப் போரில் ஈடுபட்டு வரலாயினர். மகாராஷ்டிரத்தில் வீர சவர்க்கார், வங்கத்தில் அரவிந்தர், பஞ்சாபில் லஜபதி ராய், தமிழ் நாட்டில் மண்டையம் சீனிவாசாச்சாரியார், செங்கோட்டை வாஞ்சி ஆகியோரின் குடும்பங்கள் குறிப்பிடத் தக்கவையாகும். அதுபோல, மூன்றாவது பத்தாண்டுக் காலத்தில் வடபுலத்தில் எண்ணற்ற குடும்பங்கள் இடதுசாரித் தன்மை வாய்ந்த புரட்சி இயக்கத்தில் ஈடுபட்டு வந்தன.

புரட்சி ஸ்தாபனங்களின் செயல்களும், அவற்றிற்கு எதிரான அரசாங்க அடக்குமுறைகளும் 1927 முதல் 1929 வரையுள்ள மூன்றாண்டு காலத்தில்தான் அதிகரித்து வந்தன - குறிப்பாக, காங்கிரஸ் மகாசபை போர்க்கொடி உயர்த்தியிருந்த 1929 - ஆம் ஆண்டிலே புரட்சியாளர்களின் பயங்கரச் செயல்களும் அரசின் அடக்கு முறைகளும் உச்ச நிலையை அடைந்தன. வங்கத்தில் பாரிசால், மைமன்சிங், சிட்டகாங் ஆகிய நகரங்களும்; பஞ்சாபில் லாகூர், சஹரான் ஆகிய நகரங்களும்; உத்தரப் பிரதேசத்தில் ஆக்ரா, கான்பூர், மீரத் ஆகிய நகரங்களும் புரட்சியாளர்களின் கேந்திரங்களாக விளங்கின.

தமிழகத்திலும் புரட்சி அமைப்புகள்

புரட்சியாளர்கள் சர்வதேச அமைப்புகள் பலவற்றுடனும் தொடர்பு கொண்டனரென்று காவல் துறையின் இரகசியக் குறிப்புகள் கூறுகின்றன. இவர்கள், இரகசியமாகச் சுற்றறிக்கை வெளியிடல், பிரசுரங்கள் தயாரித்து விநியோகித்தல் ஆகியவற்றின் மூலம் தங்கள் கொள்கைகளையும், வேலைத் திட்டங்களையும் இளைஞர்களிடையே பரப்பி வந்தனர். ஒன்றிரு கருத்துப் பிரசாரப் பத்திரிகைகளையும் வெளியிட்டு வந்தனர். வடபுலத்தில் பல நகரங்களில் புரட்சியாளர்கள் ஆயுதப் சாலைகளையும் பெற்றிருந்தனர் என்பது அரசாங்கம் சதி வழக்குகளில் தாக்கல் செய்த சாட்சியங்களிலிருந்து தெரிய வந்தது.

இந்திய விடுதலை இயக்கத்தை ஊடுருவி வளர்ந்து வந்த கம்யூனிஸ்டுகள் தமிழ் நாட்டிலும் தொழிலாளர் விவசாய அமைப்புகளைப் படைத்து வந்தனர். இவர்களில் வழக்கறிஞர் தோழர் சிங்காரவேலு செட்டியார் முதல்வராக விளங்கினார். 'உழவர் - தொழிலாளர் கட்சி' என்னும் பெயரில், 1923 மே மாதத்தில் புதிய அரசியல் கட்சி ஒன்றைத் திரு. செட்டியார் தமிழகத்தில் தோற்றுவித்தார். இது, அகில இந்திய உழவர் - தொழிலாளர் கட்சியின் கிளையாக இயங்கி வந்தது. 'கிஸான் - மஸ்தூர் கெஜட்' என்ற ஆங்கில வாரப் பத்திரிகையையும், 'தொழிலாளி' என்ற தமிழ் வாரப் பத்திரிகையையும் தோழர் சிங்காரவேலர் நடத்தலானார்.

தமிழ் நாட்டில் இயங்கி வந்த தொழிற் சங்கங்களிலே தென்னிந்திய ரயில்வே தொழிலாளர் சங்கத்தில்தான் அதிக அளவில் இடதுசாரிகள் ஊடுருவி வளர்ந்து வந்தனர். இடதுசாரிகளால் அமைதியான முறையில் தொழிலாளர் இயக்கத்தைக் கட்டி வளர்க்க முடிந்ததென்றாலும் வடபுலத்தைப் போல ஆயுதப் புரட்சியிலே தமிழ் நாட்டு இளைஞர்களை ஈடுபடுத்த அவர்

களால் இயலவில்லை. இது, தமிழ் மண்ணுக்குள்ள தனிப்பண்பு போலும்!

சதி வழக்குகள்

பஞ்சாபில் ஜாலியன்வாலாபாக் கொடுமைக்குப் பழி வாங்கத் தோன்றிய பாபா அகாலி தளம் என்ற பஞ்சாபியரின் புரட்சி இயக்கத்தை ஒடுக்க அரசு முயன்றது. அதனைச் சார்ந்த 90 பஞ்சாபியரைக் கைது செய்து, 'பாபா அகாலி தளச் சதி வழக்கு' என்ற பெயரில் ஒரு சதி வழக்கை அரசு சிருஷ்டித்தது. அவர்களில் 54 பேர் குற்றவாளிகளாகக் கருதப்பட்டு, பலவிதத் தண்டனைகள் விதிக்கப்பட்டனர். 5 பேருக்குத் தூக்குத் தண்டனை! மற்றவர் களுக்கு ஆண்டுக் கணக்கில் சிறைத் தண்டனை! இவர்கள் சார்பில் உயர்நீதி மன்றத்திற்குச் செய்து கொள்ளப்பட்ட அப்பீல் நிராகரிக்கப்பட்டு, தண்டனை உறுதி செய்யப்பட்டது.

1925- இல் உத்தரப் பிரதேசத்தில் உள்ள காகோரி என்னும் ஊரில் ரயிலில் நடைபெற்ற அரசாங்க நிதி கொள்ளை சம்பந்தமாக 19-8-25 இல் தொடரப்பட்ட காகோரி சதி வழக்கில் ஒன்றரை யாண்டுக் கால விசாரணைக்குப்பின் தீர்ப்பு வழங்கப்பட்டது. குற்றவாளிகள் 4 பேருக்குத் தூக்குத் தண்டனையும், 4 பேருக்கு ஆயுள் தண்டனையும், மற்றவர்களுக்கு 4 ஆண்டு முதல் 14 ஆண்டு வரையிலான சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டன. குற்ற வாளிகள் அவ்வளவு பேரும் உயர் கல்வி கற்றவர்கள்.

வடபுலத்தின் அரசியல் சூழ்நிலை இதுவாக இருந்து வந்த நேரத்திலே, தமிழ்நாடு உறங்கிக் கொண்டிருக்கவில்லை. இங்கு ஒரு புறத்தில் ஜஸ்டிஸ் கட்சியும், அதனோடு போட்டியிட்டுக் கொண்டு டாக்டர் சுப்பராயன் போன்ற சுயேச்சையாளர்களும் பிரிட்டிஷ் விசுவாசத்துடன் சென்னை மாகாண அரசை மாறி மாறி நடத்திக் கொண்டிருந்தன ரென்றாலும், மற்றொரு புறத்தில் தேசபக்தர்கள் ஏகாதிபத்திய எதிர்ப்பில் ஈடுபட்டு வந்தனர். குறிப்பாக, தொழிற் சங்க இயக்கத்தைக் கட்டி வளர்த்து வந்தனர். உண்மையில் தேசிய இயக்கத்திலிருந்து பிரித்தெடுக்க முடியாத படித் தொழிற் சங்க இயக்கமும், தொழிற்சங்க இயக்கத்திலிருந்து பிரித்தெடுக்க முடியாதபடித் தேசிய இயக்கமும் இணைந் திருந்தன. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைக் குறிபார்ப்பதிலே, இந்த இரண்டும் இரட்டைக் குழல் துப்பாக்கியாகச் செயல்பட்டு வந்தன.

இந்தியாவிலேயே முதன் முதலாகச் சென்னை நகரில் தொழிற் சங்க இயக்கத்தை - சென்னைத் தொழிலாளர் சங்கத்தை -

தோற்றுவித்தபின் தமிழ் நாட்டிலே தொழில்வாரி பல்வேறு சங்கங்கள் தோன்றி வந்தன. இவையனைத்தையும் பிணைக்கும் மத்திய தொழிற் சங்க மொன்றும் திரு.வி.க தலைமையில் தோன்றியது.

1918 தொடங்கி *1929* வரையுள்ள காலத்திலே தமிழகத்தில் தேசிய இயக்கம் வளர்ந்ததை விடவும் தொழிலாளர் இயக்கமே அதிக வேகமாக வளர்ந்து வந்ததெனலாம். இதிலே, அதிக அளவில் பொறுப்பேற்றவர்கள் திரு.வி.க., வ.உ.சி., குத்தி கேசவப் பிள்ளை, தோழர் சிங்காரவேலு செட்டியார், வி. சக்கரை செட்டியார், நாகை பி.வி. பக்கிரிசாமிப் பிள்ளை, பு.ம. ஆதிகேசவ நாயகர், ஜி. செல்வபதி செட்டியார், அரி சர்வோத்தம ராவ், என். தண்டபாணிப் பிள்ளை, இ.எல். ஐயர், டாக்டர் பி. வரதராசுலு நாயுடு, ஜி. இராமானுஜலு நாயுடு ஆகியோராவார்.

அந்நாளில் தமிழ்நாட்டில் தொழிற் சங்க இயக்கத்தைக் கட்டி வளர்த்ததிலே தமிழருக்கேயன்றி, ஐரிஷ்காரரான டாக்டர் பெசன்ட், டாக்டர் ஜி.எஸ். அருண்டேல், மகாராஷ்டிரரான திரு. வாடியா, வங்காளியரான முகுந்தலால் சர்க்கார், திருமதி. மிருணாளினி சட்டோபாத்யாயா (கவியரசி சரோஜினி தேவியின் சகோதரிகளில் ஒருவர்) ஆகியோருக்கும் பங்குண்டு.

தமிழ் நாட்டில் தொழிற் சங்கத் தலைவர்கள் மீதும் தொழிலாளர் மீதும் அரசாங்கமும் வெள்ளை முதலாளிகளும் தொடுத்த வழக்குகளில் எல்லாம் திருவாளர்கள் அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர்,எஸ். சத்தியமூர்த்தி ஐயர் ஆகியோர் தேச பக்தியுடனும் தொண்டு மனப்பான்மையோடும் நீதி மன்றங்களில் ஆஜராகி வாதாடினர்.

சதி வழக்கில் சிங்காரவேலர்!

1924-ஆம் ஆண்டில் வடபுலத்தில் 'கான்பூர் போல்ஷ்விக் சதி வழக்கு' என ஒன்றை உத்தரப் பிரதேச அரசு உருவாக்கிய போது சென்னை வாசியான தோழர் சிங்காரவேலு செட்டியாரும் அதிலே குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டார். அந்த வழக்கு சம்பந்தமாக அவர் 6-3-24-இல் சென்னையில் கைது செய்யப்பட்டார். அப்போது அவர் உடல் நலிவுற்றுப் படுக்கையிலிருந்ததால், கைது செய்யப்பட்ட மறுநாளே - சென்னையில் வீட்டிலேயே இருக்க அனுமதிக்கப்பட்டு - ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டார். இதன் பின்னர், 1925 டிசம்பரில் அதே கான்பூரில் நடைபெற்ற முதலாவது இந்திய கம்யூனிஸ்டு மாநாட்டில் திரு. சிங்காரவேலர் தலைமை வகித்தார். இது அவருக்கிருந்த மனத்துணிவைக் காட்டுகிறது.

கான்பூர் சதிவழக்கின் மற்ற எதிரிகளான திரு. எம்.என்.ராய், திரு.எஸ்.ஏ. டாங்கே, ஷௌகத் ஊஸ்மானி, நளினிகுப்தா ஆர்.சி.எஸ். சர்மா ஆகியோர் மீது வழக்கு நடத்தப்பட்டு அவர்களுக்குத் தலா 4 வருடக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. தண்டனை பெற்றவர்களில் திரு.எம்.என். ராய் ஜெர்மனியிலும் திரு. சர்மா பாண்டிச்சேரியிலும் இருந்தனராத லால் இவர்களைக் கைது செய்ய அரசால் இயலவில்லை. குற்றவாளிகளில் திரு.குலாம் உசேன் என்பவர் அப்ரூவராக மாறியதால் விடுதலை பெற்றார்.

திரு. சிங்காரவேலர் மீதுள்ள வழக்கு தனியாக விசாரிக்கப் படவேண்டுமென்று கான்பூர் செஷன்ஸ் நீதிமன்றத்தால் ஆணையிடப்பட்டது. தாம் கடுமையாக நோயுற்றிருப்பதால் கான்பூர்வரை பயணம் செய்ய இயலாதென்று கூறி, தம்மீதுள்ள வழக்கை பம்பாயிலாவது சென்னையிலாவது விசாரிக்க ஏற்பாடு செய்யுமாறு திரு. சிங்காரவேலர் மத்திய அரசுக்கு எழுதினார். ஆனால், அரசு அவர் மீதுள்ள வழக்கைக் கைவிட்டுவிட்டது.

நாகைப் போராட்டம்

1928-இல் நாகை தென்னிந்திய ரயில்வே தொழிற்சாலையின் நிர்வாகமானது ஆட்குறைப்புத் திட்டத்தை வகுத்தது. நாகையிலுள்ள ரயில்வே தொழிற்சாலையை திருச்சிக்கு மாற்றிவிடவும் நிர்வாகம் திட்டமிட்டது. அதன்படி 5000 தொழிலாளர்களை வீட்டுக்கனுப்ப முயன்றது. அதனை எதிர்த்துத் தொழிலாளர்கள் கிளர்ச்சி தொடங்கினர். இதனால், நிர்வாகம் தொழிற்சாலையையே மூடிவிட்டது. தொழிலாளர்கள் சரணடைந்து வேலைக்குச் செல்ல மறுத்தனர். வேலை நிறுத்தம் தொடர்ந்து 10 நாள் வரை நடைபெற்றது. இதனை, 'தென்னிந்தியாவையே உலுக்கிய பத்து நாள் போராட்டம்' என்று சென்னை மாகாண அரசின் ஆண்டறிக்கை வருணிக்கிறது. தென்னிந்திய ரெயில்வே தொழிலாளருக்கு ஆதரவு காட்டும் வகையில் *29-7-28*-இல் நாடு முழுவதுமே ரயில்வே பொது வேலை நிறுத்தம் நடைபெற்றது.

'இவ்வேலை நிறுத்தம் கம்யூனிஸ்டுகளால் தூண்டப்பட்டு நடைபெற்றது' என்று அரசாங்க காவல் துறையின் இரகசியக் குறிப்புக் கூறுகின்றது. உண்மையில், 'இந்தியாவின் முதல் கம்யூனிஸ்டு' என்று தம்மை வருணித்துக் கொண்ட திரு. சிங்காரவேலர் தென்னிந்திய ரெயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தத்தை முன்னின்று நடத்தினார். வங்காளியான திரு. முகுந்தலால் சர்க்கார் துணை நின்றார். பொது மக்கள் ஆதரவு வேலை நிறுத்தக்காரர்கள் பக்கமே இருந்தது. வேலை நிறுத்தம்

அமைதியாவே நடைபெற்றதென்றாலும், இங்கு மங்குமாகச் சிலவிடங்களில் கல்லெறிதல், தீ வைத்தல், தண்டவாளத்தில் வெடி வைத்தல் போன்ற நாசவேலைகளும் நடைபெற்றன.

இந்த வேலை நிறுத்தத்திற்குத் திரு.ஈ.வெ.ரா. ஆதரவு தந்தார். தடையை மீறி ஒரு பொதுக் கூட்டத்தில் பேசியதற்காக அவரைக் கைது செய்து, அவர்மீது அரசு வழக்குத் தொடுத்தது, ஆனால், பின்னர் வழக்கைக் கைவிட்டுவிட்டது.

ஆட்குறைப்புக்கு ரெயில்வே தொழிலாளர் சங்கம் இணக்கம் தெரிவிக்காததால், நிர்வாகம் கதவடைப்புச் செய்தது, அந்நாளில் ரெயில்வே நிர்வாகம் முழுவதும் இன்றுபோல மத்திய அரசின் நேர் பொறுப்பிலிருக்கவில்லை. வெள்ளையர்களைக் கொண்ட கம்பெனியின் நிர்வாகத்திலிருந்து வந்தது. வெள்ளையர் அரசு கம்பெனிக்கு உதவி புரிந்து வேலை நிறுத்தத்தை முறியடிக்க அடக்குமுறையிலிறங்கியது. பல இடங்களில் போலீசாரின் தடியடியும் துப்பாக்கிச் சூடும் நடைபெற்றன.

23-6-28-இல் திரு. சிங்காரவேலர், திரு. முகுந்தலால் சர்க்கார் உட்படப் பலர் கைது செய்யப்பட்டனர். தொழிற்சங்க அலுவலகம் போலீசாரால் சோதனையிடப்பட்டு, பின்னர் கைப்பற்றப்பட்டது. ‘தொழிலாளர்’ பத்திரிகை அலுவலகமும் சோதனை யிடப்பட்டது. 27-6-28-இல் ரெயில்வே தொழிலாளர் சங்க நிர்வாகக் குழுவினரும் வேலை நிறுத்தக் கமிட்டியினரும் கைது செய்யப்பட்டனர். இவர்களேயன்றி, நூற்றுக்கணக்கான தொழிலாளர்களும் கைதாயினர்.

தலைவர்களை விடுதலை செய்யக்கோரி சென்னை நகரையே உலுக்கும் வகையில் அனைத்துத் தொழிற்சங்கங்களும் சேர்ந்து பதினாயிரக்கணக்கான தொழிலாளர்களைக் கொண்ட ஊர்வலமொன்றை நடத்தின. இதுபோல, திருச்சி நகரிலும் தொழிலாளர்கள் மிகப் பெரிய ஊர்வலமொன்றை நடத்தினர். ஆனால், வேலை நிறுத்தம் தோல்வியுற்றது.

வேலை நிறுத்தத்திற்குத் தொழிலாளர்களைத் தூண்டிவிட்டு, அதன் மூலம் அரசைக் கவிழ்ப்பதற்குச் சதி செய்ததாகத் தொழிலாளர் தலைவர்கள் மீது இ.பி.கோ. சட்டப்பட்டி ‘தென்னிந்திய ரெயில்வே சதி வழக்கு’ ஒன்றை சென்னை மாகாண அரசு உருவாக்கியது. இவ்வழக்கில் திரு. சிங்காரவேலர், திரு. முகுந்தலால் சர்க்கார் உள்பட பலர் குற்றவாளிகளாகச் சேர்க்கப் பட்டனர்.

சென்னை செஷன்ஸ் நீதிமன்றத்தில் நீதிபதி லட்சுமணராவ் என்பவர் முன் வழக்கு விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கில் மதுரை ஜார்ஜ் ஜோசப், எஸ். சத்தியமூர்த்தி, புகழ்மிக்க பிரிட்டிஷ்

வழக்கறிஞரான நியூஜண்ட் கிராண்ட் கே. எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார், கோவை என்.எஸ். ராமசாமி ஆகியோர் குற்றவாளிகளுக்காக ஆஜராகி வாதாடினர்.

அந்தமான் சென்ற முதல் தமிழர்!

விசாரணையின் முடிவில் திரு. சிங்காரவேலர், திரு. முகுந்தலால் சர்க்கார், தென்னிந்திய ரெயில்வே தொழிலாளர் சங்கத் தலைவர் திரு.டி. கிருஷ்ணசாமி உள்பட பலருக்குத் தலா பத்தாண்டுக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. குற்றவாளிகளில் திரு. பெருமாள் என்ற தொழிலாளிக்குக் 'காருண்ய' நீதிபதி ஆயுள் தண்டனை விதித்தார். இவர் அந்தமான் சிறைக்கு அனுப்பப்பட்டார். தேசபக்தர்களைத் துன்புறுத்தும் நரகமான அந்தமானுக்கு அனுப்பப்பட்ட முதல் தமிழ் நாட்டுத் தேசபக்தர் திரு. பெருமாள் தான்! அவர் பெயரைக் கூடத் தமிழ் நாடு மறந்துவிட்டதே!

வெள்ளையர் மனம் கொண்ட இந்திய அதிகாரி!

வ.உ.சிக்குப் பின் ஆயுள் தண்டனை பெற்ற தமிழக விடுதலை வீரர் உழைத்துப் பிழைத்த தொழிலாளியான பெருமாள் அவர்களே யாவார். அதுபோலத் திரு. சுப்பிரமணிய சிவாவுக்குப் பின் 10 ஆண்டுக் கடுங்காவல் தண்டனை பெற்ற தலைவர்கள் சிங்காரவேலர், முகுந்தலால் சர்க்கார் ஆகியோரேயாவர். வியப்பென்னவென்றால், சிதம்பரனாருக்கும் சிவாவுக்கும் கொடுந்தண்டனை விதித்தவர் வெள்ளை நீதிபதி. ஆனால், ரயில்வே சதி வழக்கில் சிங்காரவேலர், முகுந்தலால் சர்க்கார், பெருமாள் ஆகியோருக்குக்கொடுந் தண்டனை விதித்தவர் வெள்ளையரல்ல; பிறப்பால் இந்தியர்! இந்தச் சதி வழக்கில் அளித்த தீர்ப்புக்குப் பின் செஷன்ஸ் நீதிபதி லட்சுமணராவ் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதியாகப் பதவி உயர்வு பெற்றார். பாரதியார், ஜார் ருஷ்யாவிலே,

''உழுதுவிதைத் தறுப்பாருக் குணவில்லை;
பிணிகள்பல வுண்டு; பொய்யைத்
தொழுதடிமை செய்வார்க்குச் செல்வங்க
ளுண்டு; உண்மை சொல்வோர்க் கெல்லாம்
எழுதரிய பெருங்கொடுமைச் சிறையுண்டு;
தூக்குண்டே இறப்ப துண்டு''

என்று பாடியதற்கு இந்த நிகழ்ச்சியும் பொருந்துவதுதானே! உயர்நீதி மன்றத்திற்கு அப்பீல் செய்ததில் திரு. பெருமாள் தவிர மற்றவர்கள் தண்டனை குறைக்கப்பட்டது.

உச்ச கட்டம்!

1924 தொடங்கி 1928 வரையிலுள்ள ஐந்தாண்டுக் காலத்தில் நாட்டில் உருவாகி வந்த புரட்சி இயக்கங்கள் 1929-ஆம் ஆண்டிலே உச்ச கட்டத்தை அடைந்தன. இந்த ஆண்டில் வடபுலத்தில் பல நகரங்களில் போலீசார் நடத்திய சோதனைகளிலே புரட்சி யாளர்கள் நடத்தி வந்த வெடிகுண்டு தயாரிக்கும் தொழிற் சாலைகள் கண்டுபிடிக்கப்பட்டன. சிட்டகாங்கிலிருந்த அரசுக்குச் சொந்தமான ஆயுதக் கிடங்கு - புரட்சியாளர்களால் முற்றுகை யிடப்பட்டு அங்கிருந்த ஆயுதங்கள் அவர்களால் கைப்பற்றப் பட்டன.

வடக்கே ஒரு வாஞ்சி!

வங்காளம், பஞ்சாப், உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங் களிலே வெள்ளையரும் இந்தியருமாக உயர்தர அதிகாரிகள் பலர் கொல்லப்பட்டனர். 17-12-28-இல் சாண்டர்ஸ் என்னும் ஆங்கில சார்ஜண்ட் ஒருவர் லாகூர் நகரில் சுட்டுக் கொல்லப்பட்டார். சைமன் கமிஷன் பகிஷ்காரத்தின்போது லாலா லஜபதி ராய் மரணமடையக் காரணமானவர் என்பதற்காகவே இவர் கொல்லப்பட்டார்.

வ.உ.சி. கொடுந் தண்டனை பெறக் காரணமாக இருந்த கலெக்டர் ஆஷ் துரையைப் பழிவாங்க வாஞ்சி தோன்றியது போல, லாலா லஜபதிக்காகச் சாண்டர்சைப் பழிவாங்க வடக் கேயும் ஒரு வாஞ்சி தோன்றினார். அவர் பெயர் சர்தார் பகத்சிங்.

டில்லி சட்ட மன்றத்தில் வெடி!

8-4-29-இல் டில்லியில் அசெம்பிளிக் கூட்டம் நடந்து கொண்டிருந்தபோது, பகத் சிங், பூதகேசுவர தத் என்னும் இளைஞர் இருவர் ஆளுக்கொரு வெடிகுண்டைப் பார்வையாளர் காலரியிலிருந்த வண்ணம் சபையை நோக்கி எறிந்தனர். பின்னர்த் தங்கள் கைத் துப்பாக்கிகளால் வேட்டுகளை எழுப்பினர். சிவப்புநிறப் பிரசுரங்களை வீசினர். இவர்கள் பார்வையாளர் காலரியில் அமருவதற்குச் சட்டமன்ற உறுப்பினர் பண்டித மதன்மோகன் மாளவியா மூலம் நுழைவுச் சீட்டு பெற்றிருந்தனர். இந்த நிகழ்ச்சியின்போது, இந்தியாவுக்கு வழங்கவேண்டிய அரசியல் சீர்திருத்தம் பற்றி விசாரணை நடத்த வந்திருந்த சர் ஜான் சைமன் பார்வையாளர் காலரியில் அமர்ந்திருந்தார். வெடிச் சத்தம் கேட்டதும் அவர் வெருண்டோடி விட்டார்.

குண்டு வெடித்ததால் ஒருவருக்குப் பலத்த காயம், ஐவருக்கு லேசான காயம். சட்டசபை உறுப்பினர்களில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

யாரையும் கொல்லுவது தங்கள் நோக்கமல்ல என்றும், கேளாக்காதினரான ஆளுவோருக்கு எச்சரிக்கை விடுக்கவே வெடிகுண்டுகளை வீசியதாகவும் இளைஞர்கள் கூறினர். தங்கள் வேலை முடிந்ததும், அவர்களாகவே தங்களைப் போலீசாரிடம் ஒப்படைத்துக்கொண்டனர்.

இந்தச் சம்பவத்தையொட்டி பகத்சிங், பூதகேசுவர தத் ஆகிய இருவர் மீதும் தொடரப்பட்ட வழக்கிலே, இருவருக்கும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. ஆம்; எவரையும் கொல்லும் நோக்கம் தங்களுக்கு இல்லையென்று அவர்கள் கூறியிருந்தும் நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்தது.

இந்த வழக்கில் இரு குற்றவாளிகளில் ஒருவரான சர்தார் பகத்சிங் அளித்த வாக்குமூலம் பத்திரிகைகளில் வெளியாகி உலகோர் கவனத்தைக் கவர்ந்தது. அது அச்சடிக்கப்பட்டு உலகெங்கும் பரப்பப்பட்டது.

சதி வழக்குகள்

லாகூரில் சாண்டர்ஸ் கொலை செய்யப்பட்டதை யொட்டிச் சதி வழக்கு ஒன்றை பஞ்சாப் அரசு உருவாக்கியது. அதிலேயும் பகத் சிங்கைக் குற்றவாளிகள் பட்டியலில் அரசு சேர்த்தது. மற்றும், சுகதேவ், ராஜகுரு, யதீந்திரநாத தாஸ், மகாவீர்சிங், பகவதிசரண், திசாய் குமார் ஆகியோரும் சதி வழக்கில் சேர்க்கப்பட்டனர்.

இதே நேரத்தில் உத்திரப்பிரதேசத்தில் சுமார் 32 பேர் கொண்ட குற்றவாளிகள் பட்டிலையைத் தயாரித்து 'மீரத் சதி வழக்கு' என்னும் பெயரில் மற்றொரு சதி வழக்கையும் உ.பி. அரசு ஜோடித்தது.

மீரத் சதி வழக்கு நான்காண்டு காலம் நடைபெற்றது. வழக்கிலே சிக்கிய தேச பக்தர்களுக்கு உதவி புரியும் பொருட்டு மத்திய கமிட்டி யொன்றை காங்கிரஸ் நிறுவியதுடன், தனது நிதியிலிருந்து ரூ.150-ஐ . உதவியது. காங்கிரஸ் பெருந் தலைவர்களான பண்டித மோதிலால் நேரு, ஜவகர்லால் நேரு உள்ளிட்ட வழக்கறிஞர் பலர் குற்றவாளிகளுக்காக நீதிமன்றத்தில் ஆஜராகி வாதாடினர். இறுதியில் 4 ஆண்டு முதல் 24 ஆண்டுகள் வரை தண்டனை விதிக்கப்பட்டது. உயர்நீதி மன்றத்தில் அப்பீல் செய்து கொண்டதில் தண்டனை குறைக்கப்பட்டது.

லாகூர் சதி வழக்கு நடந்து கொண்டிருந்தபோது விசாரணைக் கைதிகள் லாகூர்ச் சிறையில் வைக்கப்பட்டனர். அங்கு சிறைச்சாலை அதிகாரிகள் தங்களை மனிதாபிமானத்துடன் நடத்தவில்லை யென்று கூறி, அவர்கள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டனர்.

வழக்கமான உணவும் படிப்பதற்குப் பத்திரிகைகளும் நூல்களும் தங்களுக்குத் தரப்பட வேண்டுமென்று கைதிகள் கோரினர். காற்றோட்டமான அறைகளில் அடைக்கவேண்டு மென்றும், பிற அரசியல் கைதிகளுக்குரிய மரியாதை தங்களுக்கும் அளிக்கப்பட வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்தனர். இந்தக் கோரிக்கைகளை ஏற்கச் சிறை அதிகாரிகளும் அரசும் மறுத்த பின்னரே புரட்சி வீரர்கள் உண்ணாவிரதத்தை மேற் கொண்டனர்.

தேசத்தின் பல்வேறு சிறைகளில் அடைக்கப்பட்டிருந்த அரசியல் கைதிகள் எல்லாம் லாகூர்ச் சதி வழக்குக் கைதிகளிடம் அனுதாபம் காட்டும் வகையில் ஒரு நாள் உண்ணாவிரதத்தைக் கடைப்பிடித்தனர்.

ஜதின்தாஸ் மரணம்

சில நாட்களுக்குப் பின் லாகூர் சிறையில் அரசியல் கைதிகள் கடைப்பிடித்த உண்ணாவிரதத்தில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. எல்லோரும் உண்ணாவிரதம் இருப்பதைத் தவிர்த்துத் தான் மட்டுமே உண்ணாவிரதத்தை நீட்டிக்க அனுமதிக்க வேண்டும் என்று உண்ணாவிரதிகளில் ஒருவரான ஜதின்தாஸ் என்ற இளைஞர் கேட்டுக் கொண்டார். சக கைதிகள் முதலில் இதற்கு இணங்க வில்லையென்றாலும், அவரது பிடிவாதம் காரணமாக இணங்கினர்.

ஜதின்தாஸ் மரணத்தை நெருங்கிக் கொண்டிருந்த நேரத்தில் தேசம் கவலையில் ஆழ்ந்தது. அப்போது காங்கிரஸ் மகாசபைத் தலைவராக இருந்த பண்டித மோதிலால் நேரு லாகூர் சிறைச்சாலைக்குச் சென்று ஜதின்தாசைப் பார்த்தார். பயன் ஏதும் ஏற்படவில்லை. அரசாங்கமும் பிடிவாதம் காட்டியது. 63 நாட்கள் உண்ணாவிரதம் இருந்த பின்னர் 13-9-29-இல் லாகூர் சிறையில் ஜதின்தாஸ் உயிர் துறந்து வீர சொர்க்கம் புகுந்தார்!

ஜதின் தாசின் மரணத்திற்குக் காரணமான பஞ்சாப் அரசைக் கண்டிக்கும் வகையிலே, டாக்டர் ஆலம், டாக்டர் கோபிச்சந்த் இருவரும் பஞ்சாப் மாநிலச் சட்ட மன்றத்திலிருந்தும் விலகினர்.

ஜதின்தாசின் மரணத்திற்குப்பின் இரக்கமற்ற ஆட்சியும் சிறைச்சாலைகளில் சீர்திருத்தம் காண முனைந்தது. ‘ஏ’, ‘பி’, ‘சி’ என்ற மூன்று வகுப்புகளை ஏற்படுத்தி, அரசியல் கைதிகளில் கல்வியிலும் செல்வத்திலும் சிறந்தவர்கள் முதலிரண்டு வகுப்புகளைப் பெற வழி வகுத்தது.

ரெயிலுக்கு வெடிகுண்டு

23-12-29-இல் வைசிராய் லார்டு இர்வின் பயணஞ் செய்த ரெயில் வெடி குண்டு விபத்துக் குள்ளானது. அவர் டில்லியை நோக்கி ரெயிலில் வந்து கொண்டிருந்த நேரத்தில் டில்லிக்குச் சற்று தொலைவிலே இந்த விபத்து நடந்தது. ஆனால் வைசிராய் காயமின்றித் தப்பி விட்டார்!

இது நிகழ்ந்த அடுத்த நாளிலேதான் காந்திஜி வைசிராயைச் சந்தித்துப் பேசினார். முன்பே அரசியல் சீர்திருத்தம் பற்றி வைசிராய் வெளியிட்டிருந்த அறிக்கை குறித்து விவாதிக்கத்தான் இந்தச் சந்திப்பு நிகழ்ந்தது. பேச்சு வார்த்தை முறிந்து போனதை முன்பே அறிந்தோம்.

சந்திரசேகர ஆசாத்

லாகூரில் நடந்த சாண்டர்ஸ் கொலையிலும், வைசிராய் பயணம் செய்த ரயிலுக்கு தண்டவாளத்தில் வெடிகுண்டு வைத்ததிலும் சம்பந்தப்பட்டவர் என்று சொல்லி உத்தரப் பிரதேசத்தவரான சந்திரசேகர் ஆசாத் என்பவர் போலீசாரால் தேடப்பட்டு வந்தார். சில மாதங்களுக்குப்பின் அலகாபாத் நகரப் பூங்கா ஒன்றிலே போலீசாருடன் ஏற்பட்ட துப்பாக்கிச் சண்டையிலே வீரர் ஆசாத் அமரரானார், இவரது வீர வரலாறு ஈடு இணையற்றதாகும்.

காகோரி சதி வழக்கு, லாகூர் சதி வழக்கு, கான்பூர் சதி வழக்கு, டில்லி சதிவழக்கு, மீரத் சதி வழக்கு, பாபா அகாலிதள சதிவழக்கு, தென்னிந்திய ரயில்வே சதிவழக்கு ஆகியவை காரணமாகத் தேசம் முழுவதிலும் ஒரு பயங்கரமான அரசியல் சூழ்நிலையை பிரிட்டிஷ் அரசு திட்டமிட்டு உருவாக்கியது. தேசவிடுதலை இயக்கமே பயங்கரப் புரட்சியாளர் கைக்குப்போய் விட்டதென்ற தோற்றம் ஏற்பட்டது. இந்தச் சூழ்நிலையிலே தான் லாகூரிலே 44-வது அகில இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை 29-12-29-இல் கூடியது, இந்தியப் பெருநாட்டின் தலையெழுத்தை நிர்ணயிக்க!

பூரண சுதந்திரப் பிரதிக்னை!

பிரிட்டனுக்குக் கொடுத்த காலக் கெடு முடிவதற்கு மூன்று நாட்களே இருந்தபோது இந்திய தேசிய காங்கிரசின் வருடாந்திர மகாசபை லாகூரில் கூடியது. அப்போது, துண்டாடப்படாத பெரிய பஞ்சாப் மாநிலத்தின் தலைநகராக லாகூர் இருந்தது.

காங்கிரஸ் மகாசபைத் தலைவரை மாநில காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர்கள் தத்தம் மாநிலத்திலேயே கூட்டமாகக் கூடி வாக்களித்துத் தேர்ந்தெடுப்பது வழக்கமாக இருந்தது. அதன்படி, 10 மாநிலங்கள் காந்திஜியையும், 5 மாநிலங்கள் சர்தார் படேலையும், 3 மாநிலங்கள் பண்டித ஜவகர்லால் நேருவையும் தேர்ந்தெடுத்தன. தமிழ் மாகாணக் காங்கிரஸ் காந்திஜியைத் தேர்ந்தெடுத்தது. சரிபாதிக்கு மேற்பட்ட மாநிலங்கள் காந்திஜியைத் தேர்ந்தெடுத்ததால், அவரே தலைமைப் பதவியை ஏற்றிருக்க வேண்டும். அத்துடன் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போர்ப் பிரகடனம் செய்ய வேண்டிய கடமை லாகூர்க் காங்கிரசுக்கு இருந்ததாலும், அதற்குரியவர் காந்தியடிகளே யாதலாலும் அவரே தலைமைப் பதவியை ஏற்பாரென்று மக்களெல்லாம் எதிர்பார்த்தனர். ஆனால், அடிகள் மறுத்துவிட்டார். அப்போது அவருக்கு வயது 61. அதனால், இளைஞர் ஒருவரிடம் தலைமைப் பொறுப்பை ஒப்புவிக்க வேண்டுமென்று அவர் கருதினார்.

சோஷலிச இந்தியாவைப் படைக்கும் குறிக்கோளுடன் தேச பக்தியுடைய இளைஞர்களெல்லாம் ஒரு புரட்சி இயக்கத்தில் திரண்டு வருவதைக் காந்திஜி கண்டார். தாம் உயிரெனக் கருதும் அகிம்சைக்கு எதிரான ஆயுதப் புரட்சியில் இளைஞர் சமுதாயம் - குறிப்பாக, படித்த இளைஞர்கள் நம்பிக்கை கொண்டு வருவதிலுள்ள அபாயத்தை அடிகள் உணர்ந்தார்.

புரட்சியாளர்கள் எவ்வளவுதான் திறமைசாலிகளாயினும், சர்வ சக்தி படைத்த பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைச் சில தனி நபர்கள் ஒளிந்து மறைந்து நடத்தும் பயங்கரச் செயல்களால் வீழ்த்திடவிட முடியாதென்று காந்திஜி உறுதியாக நம்பினார், ஆகவே, தோல்விப் பாதையில் சென்று கொண்டிருக்கும்

இளைஞர்களைக் காங்கிரஸ் மகாசபையின் பக்கம் இழுக்க வேண்டுமானால், காங்கிரஸ் மகாசபையின் தலைமைப் பொறுப்பை இளைஞர் ஒருவரிடம் ஒப்புவிப்பது அவசிய மென்றும், அவர் ஜவகர்லாலாகத்தான் இருக்க முடியுமென்றும் அடிகள் கருதினார். அதனால் தலைமைப் பொறுப்பை ஏற்க அடிகள் பிடிவாதமாக மறுத்தார். சர்தார் படேலையும் விலகிக் கொள்ளச் செய்து ஜவகர்லாலையே லாகூர் காங்கிரஸ் மகாசபையின் தலைவராக்குமாறு ஆலோசனை கூறினார்.

தேசத்தின் நாட்டம் காந்திஜியின் பக்கமே இருந்ததால் இது பற்றி முடிவு செய்ய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி 18-9-29-இல் லட்சுமணபுரியில் கூடியது. அந்தக் கூட்டத்திலும் ஜவகர்லால் உள்பட உறுப்பினர்கள் எல்லோரும் தலைமைப் பொறுப்பை ஏற்குமாறு காந்திஜியை வற்புறுத்தினர். ஆயினும், அடிகள் பிடிவாதமாக மறுத்துவிட்டதால் அ.இ.கா, கமிட்டி ஜவகர்லால் நேருவைத் தெர்ந்தெடுத்தது. அப்போது அவருக்கு வயது 40.

இதே வயதில் 1905-இல் கோபாலாகிருஷ்ண கோகலே காங்கிரஸ் தலைவர் பதவியை ஏற்றார். அவருக்குப்பின் சரியாக கால் நூற்றாண்டு கழித்து ஜவஹர்லால் அந்தப் பெருமையை அடைந்தார். பதவி ஏற்றபோது கோகலேயை விடவும் ஆறு மாதம் இளையவர் ஜவஹர்லால் நேரு.

தந்தையிடமிருந்து தலைமைப் பதவியை ஏற்ற பெருமைக்குரியவர் அவர் ஒருவராகவே இருந்தார். லாகூர் காங்கிரஸ் மகாசபையிலே தந்தை மோதிலாலிடமிருந்து தனயன் ஜவகர்லால் தலைமைப் பதவியைப் பெற்றதானது, அதற்கு முன்னும் பின்னும் காங்கிரஸ் வரலாறு காணாத காட்சியாகும்.

நேருஜியின் தலைமையுரை

லாகூர் காங்கிரஸ் மகாசபையிலே நேருஜி நிகழ்த்திய தலைமையுரை இளைஞர் சமுதாயத்தைக் கவரக் கூடியதாக இருந்தது. இதோ, நேருஜி பேசுகிறார்:

> ''நான் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் எதிரி என்று வெளிப்படையாகச் சொல்லிக் கொள்ளுகிறேன். அத்துடன் நான் ஒரு சோஷலிஸ்டுமாவேன். எனக்கு மன்னர் ஆட்சி முறையில் நம்பிக்கை கிடையாது. குடியரசு ஆட்சி முறையையே நான் விரும்புகிறேன்.
>
> ''இம்சை வழியில் எனக்கு நம்பிக்கையில்லை. அகிம்சை வழியே சிறந்தது. நீடித்து, நிலையான பலன்களைத்

தரவல்லதும் அதுவே. அத்துடன், நமது நாட்டினருக்குப் பலாத்கார வழியில் செல்லச் சந்தர்ப்பமே இல்லை. இன்று பலாத்காரம் பூதாகாரமான உருக்கொண்டு உலகை ஆண்டு வருவது உண்மைதான். அதனைக் கடைப்பிடிப்பதனால் நாமும் ஒரு வேளை நன்மையடைந்தாலும் அடையலாம். ஆனால், அதனை ஒழுங்கான முறையில் நடத்தி வெற்றி காண நம்மிடம் போதுமான சக்திகளும் சாதனங்களும் இல்லை. ஆகவே, அந்த வழியை நாம் கைவிட்டுவிட வேண்டியதுதான். தேசத்தின் விடுதலைக்கான எந்த இயக்கமும் பாமர மக்களைத் தன்னுடன் அழைத்துச் செல்லும் சக்தி படைத்ததாக இருக்க வேண்டும். அத்தகைய இயக்கம் சாத்விக வழியில்தான் செல்ல முடியும்.

'சுயராஜ்யம்' என்று நாம் கூறுகையில் பிரிட்டிஷ் ஆதிக்கம், பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சி ஆகியவற்றிலிருந்து முற்றிலும் விடுபட்ட ஒரு நிலையையே நாம் விரும்புகிறோம். குடியேற்ற நாட்டு அந்தஸ்தில் எந்தவிதத்திலும் இந்தியாவிற்கு அதிகாரம் கிடைக்குமென்று நாம் நம்ப முடியாது.''

நேருஜியின் தலைமையுரை பற்றி காங்கிரஸின் மூத்தத் தலைவர்களிலொருவரான டாக்டர் பட்டாபி சீதாராமையா அவர்கள் கூறுவது வருமாறு:

''அரசியல் வானம் இரண்டு போர் மேகங்கள் மூடிக்கொண்டிருந்த நேரத்தில்தான் ஜவகர்லால் நேரு காங்கிரஸ் மணி மகுடத்தைத் தரித்துக் கொண்டார். அவர் தமது இதயத்தையே கிழித்துக் காட்டி தலைமையுரையை நிகழ்த்தினார். இந்தியாவிற்குப் பிரிட்டிஷார் இழைத்து வரும் அநீதிகளைக் கண்டு பொறுக்க முடியாத ஆத்திரமும், தேச விடுதலைக்கான திட்டமும், சோஷலிசக் கொள்கை பற்றிய விளக்கமும், மனவுறுதியும், வீரமும் அவருடைய பேச்சில் வெளிப்பட்டன.''

(காங்கிரஸ் மகாசபை சரித்திரம்; முதல் பாகம்; பக்-521)

போர்த் தீர்மானம்

லாகூர் காங்கிரஸ் மகாசபையில் திரண்டிருந்தவர்களிடையே போர் உணர்ச்சியே மிகுதியாக வெளிப்பட்டது. அதனை அதிகரிக்கச் செய்வதாக இருந்தது நேருஜியின் தலைமையுரை. 'வந்தே மாதரம்', 'மகாத்மா காந்திக்கு ஜே!' என்னும் கோஷங்கள் முன்பு கூடிய எந்தக் காங்கிரசை விடவும் லாகூர் காங்கிரசிலே

அதிகமாக ஒலித்தன. தலைமைப் பொறுப்பில் நேருஜிதான் இருந்தாரென்றாலும், லாகூர் மகாசபையின் உண்மையான தலைவர் அடிகளாகத்தான் இருந்தார். போர் தொடங்கும் தேதியையும், போர் முறையையும் அவரிடமிருந்தே மகாசபையின் பிரதிநிதிகள் எதிர்பார்த்தனர்.

வழக்கம்போல லாகூர் மகாசபையிலும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றுள் முக்கியமான தீர்மானம் தொடங்க விருக்கும் விடுதலைப் போர் பற்றியதாகவே இருந்தது. அதனைக் காந்தியடிகளே பிரேரேபித்தார். அதிலே, 'பிரிட்டிஷாருக்குக் கொடுத்த ஓராண்டு காலக் கெடு முடிந்து விட்டது' என்று அறிவிக்கப்பட்டது. அத்துடன், 'சுயராஜ்யம் என்பது, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலிருந்து விடுபட்ட பூரண சுதந்திரந்தான்' என்பதும் தெளிவுபடுத்தப்பட்டது. தொடங்கப்பட விருக்கும் போரின் தளபதி காந்திஜிதான் என்றும் அறிவிக்கப் பட்டது. அத்தீர்மானத்தின் முழு வடிவம் வருமாறு:

''குடியேற்ற நாட்டந்தஸ்து சம்பந்தமாக அக்டோபர் மாதம் 31-ந் தேதியன்று வைஸ்ராய் அவர்கள் வெளியிட்ட அறிக்கையைப் பற்றி காங்கிரஸ்வாதிகள் உள்பட சர்வ கட்சித் தலைவர்களும் ஒன்றுபட்டுக் கையொப்பமிட்டு வெளியிட்ட அறிக்கை விஷயமாக காரியக்கமிட்டி எடுத்துக் கொண்டுள்ள நடைமுறையை காங்கிரஸ் மகாசபை ஆதரிக்கின்றது.

''தவிர ஸ்வராஜ்யப் போராட்டத்தை ஒருவிதமாகத் தீர்த்து வைக்க இராஜப் பிரதிநிதி அவர்கள் செய்துவரும் முயற்சிகளை இக் காங்கிரஸ் பாராட்டுகின்றது. எனினும் நடந்த விஷயங்கள் யாவையும் தீர்க்கமாக ஆலோசிக்க வேண்டும். மகாத்மாகாந்தி, பண்டித மோதிலால் நேரு இவர்களும் இதர தலைவர்களும் இராஜப் பிரதிநிதியுடன் கலந்து பேசியதன் முடிவைக் கண்ட பிறகும், உத்தேசிக்கப் பட்டுள்ள மகாநாட்டில் பங்கெடுத்துக் கொள்ளவதால் எவ்வித நன்மையும் ஏற்படாதென காங்கிரஸ் அபிப்பிராயப்படுகிறது.

''ஆகவே, கடந்த வருஷம் கல்கத்தாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கிணங்க, காங்கிரஸ் அமைப்பின் 1 - ஆவது விதியில் கண்டுள்ள, 'சுயராஜ்யம்' என்பது பரிபூரண சுதந்திரம் என்ற அர்த்தத்துடன் விளங்குமென்றும் நேரு

கமிட்டி யதாஸ்தை இனிக் கொண்டாட முடியாதென்றும் இக்காங்கிரஸ் அறிவிக்கின்றது.

''ஆதலால், இனிமேல் யாவரும் இந்தியாவின் பூரண விடுதலைக்காகவே தங்கள் முழு கவனத்தையும் சிரமத்தையும் செலவிட்டுப் பாடுபடுவரெனவும் காங்கிரஸ் நம்புகின்றது.

''பூரண சுயேச்சைக்கான போராட்டத்தைத் துவக்குவதற்குப் பூர்வாங்கமாகவும், காங்கிரஸ் கொள்கையைச் சாத்தியமான வரையில், மாற்றப்பட்டுள்ள லட்சியத்துடன் அனுசரித்துப் போகுமாறு செய்யவும் வேண்டி இந்தியா சட்ட சபையையும் இன்னும் கவர்மென்டாரால் கூட்டப்படும் இதர கமிட்டிகளையும் பகிஷ்கரிப்பதெனக் காங்கிரஸ் முடிவு செய்கின்றது. இனிமேல் காங்கிரஸ்வாதிகள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தேர்தல்களில் எவ்விதத்திலும் கலந்து கொள்ளக் கூடாதென்றும், இப்பொழுது சட்டசபையிலுள்ளவர்களைத் தங்கள் பதவிகளை ராஜினாமா செய்துவிடும்படியும் இக்காங்கிரஸ் கட்டளையிடுகின்றது.

''மேலும் காங்கிரஸின் நிர்மாணத் திட்டத்தை நிறைவேற்றி வைக்கும்படி இக்காங்கிரஸ் தேச மகா ஜனங்களைக் கேட்டுக் கொள்ளுகிறது. தவிர எப்பொழுது தகுதியெனத் தோன்றுகிறதோ அப்பொழுது குறிப்பிட்ட சில இடங்களிலோ அல்லது எல்லா இடங்களிலுமோ வரி மறுத்தல் உள்பட சட்டமறுப்பு போரைத் துவக்குவதற்கு அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கு இக் காங்கிரஸ் அதிகாரமளிக்கிறது.''

(காங்கிரஸ் மகா சபை சரித்திரம்; பக். 325)

லாகூர் தீர்மானம் பற்றிக் கூறிய ராஜாஜி, 'பிரிட்டிஷாரிட மிருந்து இந்தியா விவாக ரத்துப் பெற்றது போலாகும்' என்று வருணித்தார்.

லாகூர் காங்கிரஸ் நடைமுறை

காந்திஜியின் அகிம்சா தருமம் பகைவனுக்கு அருள் புரியவதாகுமாதலால், வெடிகுண்டு விபத்திலிருந்து வைசிராய் இர்வின் தப்பியதற்கு லாகூர் காங்கிரஸ் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்தது. அவரைக் கொல்ல நடந்த முயற்சியைக் கண்டிக்கவும் செய்தது. இத் தீர்மானத்தின் மீது வாக்கெடுக்கப் பட்ட போது சுபாஷ் சந்திர போசும் பிரதிநிதிகளிலே கணிசமான எண்ணிக்கையினரும் எதிர்த்து வாக்களித்தனர். பல சதி

வழக்குகளை அரசு உருவாக்கியதையும், ஏராளமான காங்கிரஸ் தலைவர்களையும் தொண்டர்களையும் கைது செய்து அவர்கள் மீது போலீசார் பொய் வழக்குகள் தொடுத்ததையும் கண்டித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திலே, 'இந்த அடக்குமுறைகள் காட்டுமிராண்டித்தனமானவை' என்று கூறப்பட்டது.

1929 டிசம்பர் 31 ஆம் தேதி முடிந்து 1930 ஜனவரி முதல் தேதி ஆரம்பமாகிற நள்ளிரவு நேரத்திலே லாகூர் நகரிலுள்ள ரவி நதிக்கரையில் காங்கிரஸ் மகாசபைத் தலைவர் ஜவகர்லால் நேரு மூவர்ணத் தேசியக் கொடியை உயர்த்தி வைத்தார். மகாத்மா காந்தி உள்ளிட்ட பெருந்தலைவர்களும், பல்லாயிரக்கணக்கான பிரதிநிதிகளும், 3 லட்சம் பொது மக்களும் தேசியக் கொடியின் கீழ் நின்று பூரண சுதந்திரப் பிரச்னையை மேற்கொண்டனர். இந்த நிகழ்ச்சி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் மீது தேசிய இந்தியா போர்ப் பிரகடனம் செய்ததற்கு ஒப்பாக இருந்தது.

காங்கிரஸ் மகாசபை முடிந்ததும் 2-1-30 இல் லாகூரிலேயே காங்கிரசின் புதிய செயற்குழு கூடி, ஜனவரி 26ஐ பூரண சுதந்திர நாளாகக் கொண்டாட முடிவெடுத்தது. இது, ஆண்டுதோறும் நாடு விடுதலை பெறும்வரை நிகழ வேண்டுமென்றும் அறிவுறுத்தியது. இத்துடன், மாநில - மத்திய சட்டசபைகளிலுள்ள காங்கிரஸ் காரர்கள் தங்கள் பதவிகளை ராஜினாமாச் செய்ய வேண்டு மென்றும், சூன் திங்களில் மத்திய - மாநில சட்ட மன்றங்களுக்கு நடத்தப்படவிருக்கும் பொதுத் தேர்தல்களைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்றும் காங்கிரஸ் காரியக் கமிட்டி தீர்மானித்தது.

ஜனவரி 26 அன்று ஊர்தோறும் ஊர்வலமும் பொதுக் கூட்டமும் நடத்தப்பட வேண்டுமென்றும், பொதுக்கூட்டங்களில் சொற்பொழிவு கூடாதென்றும்,

சுதந்திரப் பிரதிக்னையைக் கூட்டத் தலைவர் படிக்க, அவரைப் பின்பற்றி மற்றவர்கள் பிரதிக்ஞை எடுப்பதோடு கூட்டத்தை முடித்துவிட வேண்டுமென்றும் காங்கிரஸ் செயற்குழு அறிவித்தது.

லாகூர்க் காங்கிரஸ் மகாசபையானது எதிர்பார்த்ததை விடவும் அதிக அளவில் வெற்றி பெற்றது. இதனை, 'காந்திஜி - ஜவகர் கூட்டுத் தலைமைக்கு கிடைத்த மகத்தான வெற்றி' என்று டாக்டர் பட்டாபி சீதாராமையா வருணித்தார்.

லாகூர் காங்கிரஸ் மகாசபைப் பந்தலிலேயே அனைத்திந்திய மதுவிலக்கு மாநாடும் ராஜாஜியின் தலைமையில் நடந்தது குறிப்பிடத் தக்கதாகும்.

சுபாஷ், ஐயங்கார் வெளியேற்றம்!

காங்கிரஸ் மகாசபை நடைபெற்ற இறுதி நாளிலே புதிய காரியக் கமிட்டி அமைக்கப்பட்டது. காங்கிரஸ் தலைவர் ஜவகரும் காந்தியடிகளும் மற்றுள்ள பெருந் தலைவர்களைக் கலந்து பேசி காரியக் கமிட்டி உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தனர்.

புதிய கமிட்டியில் சுபாஷ் போசும் திரு.எஸ். சீனிவாச ஐயங்காரும் சேர்க்கப்படவில்லை. இதனை முன்கூட்டி எதிர்பார்த்தவர் போல, காரியக் கமிட்டி உறுப்பினர்களை அ.இ.கா. கமிட்டி உறுப்பினர்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று சுபாஷ்போஸ் வாதாடினார். இதனை வலியுறுத்தி அவர் அ.இ.கா. கமிட்டிக் கூட்டத்தில் கொண்டுவந்த தீர்மானம் தோல்வியுற்றது. தமிழ் நாட்டின் சார்பாகத் திரு.எஸ். சீனிவாச ஐயங்காருக்குப் பதிலாக ராஜாஜி காரியக் கமிட்டியில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

தேர்தல் முறையில் காரியக் கமிட்டி உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று தாம் கொடுத்த பிரேரணை தோல்வியுற்றதும் சுபாஷ் காங்கிரஸ் மகா சபையிலிருந்து வெளியேறினார். அவருடன் சேர்ந்து திரு. ஐயங்காரும் வெளியேறினார். இது நிகழ்ந்த பத்தே நிமிடங்களுக்குள் இவ்விருவரும் வேறு பலரைச் சேர்த்துக் கொண்டு 'காங்கிரஸ் ஜனநாயகக் கட்சி என்ற பெயரில் ஒரு புதிய கட்சியை தாங்கள் தொடங்கியிருப்பதாக அறிவித்தனர். பூரண சுதந்திரமே அதன் குறிக்கோள் என்றும் பிரகடனம் செய்தனர்.

மாநில - மத்திய சட்ட மன்றங்களிலிருந்து காங்கிரஸ் காரர்கள் வெளியேறிவிட வேண்டுமென்று காங்கிரஸ் காரியக்கமிட்டி தீர்மானித்தது. அதன்படி, மத்திய சட்ட சபையிலிருந்து 30 உறுப்பினர்களும், மாநில சட்ட மன்றங்களிலிருந்து 172 உறுப்பினர்களும் வெளியேறினர். மத்திய சட்ட சபையிலிருந்து வெளியேறியவர்களில் பண்டித மோதிலால் நேருவும் பண்டித மாளவியாவும் எஸ். சீனிவாச ஐயங்காரும் முக்கியமானவர்களாவர். தமிழக சட்ட மன்றத்திலிருந்து திரு.எஸ். சத்தியமூர்த்தி, திரு.சி.என். முத்துரங்க முதலியார் ஆகியோருட் படப் பலர் வெளியேறினர்.

இந்திய சட்டசபைத் தலைவர் திரு. வித்தல்பாய் படேலும் தமது தலைமைப் பதவியோடு, உறுப்பினர் பதவியையும் சேர்த்து ராஜிநாமாச் செய்தார். காங்கிரஸ்காரர்களிலே சிலர் காங்கிரஸ் கட்டளையை மீறி சட்ட சபைப் பதவிகளில் நீடித்தனர்.

இவர்களில் சாமி வெங்கடாசலஞ் செட்டியார் முக்கிய மானவராவார்.

தமிழ் நாட்டவரான கோவை ஆர்.கே. சண்முகம் செட்டியார் வெளியேறாதவர்களில் ஒருவராவார். இதற்குப்பின் இவர் ஜஸ்டிஸ் கட்சியில் கலந்து விட்டார்.

லாகூர் காங்கிரஸ் மகாசபையின் முடிவுகளை எதிர்த்துத் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரும், செயலாளரும், தங்கள் பதவிகளை ராஜிநாமாச் செய்தனர். இவர்களுடன் சேர்ந்து திரு.எஸ். சீனிவாச ஐயங்காரும், திரு.எஸ். சத்தியமூர்த்தி ஐயரும் நிர்வாகப் பொறுப்புகளிலிருந்து வெளியேறினர்.

1930 ஜனவரி 26-இல் முதன் முதலாகப் பூரணசுதந்திர நாள் தேசமெங்கும் கொண்டாடப்பட்டது. பெரிய நகரங்களில் மட்டுமின்றிக் குக்கிராமங்களிலும் கொண்டாடப்பட்டது. பாரத தேசமே புத்துயிர் பெற்றுவிட்டதை ஜனவரி 29 - இல் காந்திஜி கண்டார்.

ஜனவரி 26-ஐ தமிழ் மக்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு குடும்பமும் வீதிதோறும் ஊர்தோறும் கொண்டாட வேண்டு மென்று ராஜாஜி பத்திரிகைகளில் வேண்டுகோள் விடுத்தார். அது வருமாறு:

> ''இந்தியாவுக்குச் சுதந்திரம் வேண்டுமென்று விரும்பு கிறவர்கள் ஜனவரி 26 ஆம் தேதியன்று தங்கள் வீடுகளையும் வீதிகளையும் தேசியக் கொடிகளாலும், தோரணங்களாலும் அலங்கரிக்க வேண்டும். எல்லா நகரங்களிலும் கிராமங்களிலும் நடக்கும் பொதுக் கூட்டங்களில் காங்கிரஸ் மகா சபையின் சுதந்திரச் செய்தியைப் படிப்பார்கள். அக்கூட்டங்களில் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும். அன்றுதான் பாரத நாடு துரைத்தனத்தின் முன் மார்தட்டி நிற்கும் தினமாகும். மக்கள் உண்மையாக விரும்புவது காங்கிரசா அல்லது அரசாங்கமா என்பது அன்று வெளியாக வேண்டுமாதலால் அனைவரும் அந்தக் கூட்டங்களுக்கு வருக! அவ்வாறு செய்யாமல் வீட்டிலிருப்பவர் கள் இந்த அரசாங்கத்தை ஆதரிப்பவர்கள் ஆவார்கள்.''

'சுதந்திரச் சங்கு'

இந்தப் புனித நாளிலேதான் 'சுதந்திரச் சங்கு' என்னும் பெயருடைய வாரமிருமுறைப் பத்திரிகை தமிழில் தோன்றியது.

இதன் ஆசிரியர் திரு. சுப்பிரமணியம், நாளடைவில் இவர் 'சங்கு சுப்பிரமணியம்' என்றே அழைக்கப்பட்டார், 'சங்கு' கணேசன் பதிப்பாசிரியராக இருந்தார்.

ராஜாஜி மதுரையிலிருந்த வண்ணம் சுதந்திர நாள் விழாவில் பங்கு கொண்டார். அவருடைய பரம பக்தரான திரு.ஏ. வைத்தியநாத ஐயரும் பங்கு பெற்றார்.

கடற்கரையில் பிரதிக்னை!

சென்னை நகரில் காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் காலையில் தேசியக் கொடியேற்றமும், மாலையில் திருவல்லிக்கேணி திலகர் கட்டத்தில் பொதுக்கூட்டமும் பூரண சுதந்திர நாள் நிகழ்ச்சிகளாக அமைந்தன. 'தலைவர் ராஜாஜியின் வேண்டுகோளுக்கிணங்கிப் பொதுக் கூட்டத்தில் மக்கள் திரண்டிருந்த காட்சியானது விடுதலைப் போராட்ட வரலாற்றிலே ஒரு புதுமையான நிகழ்ச்சி' என்று சென்னைப் பத்திரிகைகள் வருணித்தன.

திலகர் கட்டப்பொதுக் கூட்டத்தில் யாரும் சொற்பொழிவு நிகழ்த்தவில்லை. காங்கிரஸ் காரியக் கமிட்டி தயாரித்திருந்த பூரண சுதந்திரப் பிரதிக்ஞையைக் கூட்டத் தலைவர் வாசகம் வாசகமாகப் படிக்க, குழுமியிருந்த 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் அவ்வளவுபேரும் அந்த வாசகங்களைச் சொல்லி பிரதிக்னை எடுத்த காட்சி கண்டோர் கவனத்தில் என்றென்றும் நிலைத்து நிற்கத் தக்கதாக இருந்தது.

காரியத்துக்கு உதவாத கனிவு

தேசம் ஜனவரி 26-இல் பூரண சுதந்திரப் பிரதிக்னையை மேற்கொள்ளத் தயாராகி வந்த நேரத்திலே வைஸ்ராய் லார்டு இர்வின் இந்திய சட்ட சபையிலே ஜனவரி 25 - ந்தில் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார். அதிலே, காங்கிரஸ் தலைவர்களை வசப்படுத்த முயலும் வகையில் கனிவும் பரிவும் இருந்தன. ஆனால், கொள்கை அளவில் வைஸ்ராய் காங்கிரஸ் தலைவர் களைத் திருப்திப்படுத்தும் வகையில் எதுவும் சொல்ல வில்லை மாறாக, லண்டனில் இயங்கி வரும் தொழிற்கட்சியின் ஆட்சியும் பழைய குருடிதான் என்பதை மெய்ப்பிக்கும் வகையிலே வைசிராய் பேசினார். பூரண சுதந்திரமோ அதற்கும் குறைவான குடியேற்ற நாட்டு அந்தஸ்தோ இந்தியாவுக்கு வழங்கும் எண்ணம் பிரிட்டிஷ் அரசுக்கு இல்லை என்பதை வைஸ்ராயின் பேச்சு தெளிவுபடுத்தியது. அத்துடனன்றி, லண்டனில் வட்ட மேஜை மாநாட்டைக் கூட்டுவது இந்தியத் தலைவர்களின் கருத்துகளை அறியும் முயற்சிதான் என்றும்

வைசிராய் அறிவித்தார். வைசிராயின் பேச்சானது காந்தியடிகளுக்கு மனநிறைவைத் தரவில்லை. ''நிலைமையைத் தெளிவு படுத்தி விட்டதற்காக வைசிராய்க்கு நன்றி தெரிவிக்கலாம்'' என்று கூறினார். ஆயினும், கடைசியாக ஒரு முயற்சியை மேற்கொண்டு பார்த்துவிட முடிவு செய்து அடிகள் பதினொரு கோரிக்கைகளை வைஸ்ராய்க்கு விடுத்தார். அவை வருமாறு:

(1) மது பானத்தை அடியோடு ஒழித்துவிட வேண்டும்;

(2) இந்திய நாணய மாற்று விகிதத்தை 1 ஷில்லிங் 4 பென்சுக்குக் குறைத்துவிட வேண்டும்;

(3) நிலத்தீர்வையை 100-க்கு 50-வீதம் குறைப்பதோடு நிலத்தீர்வை சம்பந்தமான முழுப் பொறுப்பையும் சட்டசபைகளுக்கு விட்டுவிட வேண்டும்;

(4) உப்பு வரியை எடுத்துவிட வேண்டும்;

(5) இப்போதைக்கு ராணுவச் செலவைப் பாதியளவுக்காவது குறைத்துவிட வேண்டியது அவசியம்;

(6) உயர்ந்த சம்பளங்களிலிருக்கும் உத்தியோகஸ்தர் சம்பளத்தை வருமானம் குறையும் அளவுக்கு பாதிக்கோ அல்லது அதற்கும் குறைவாகவோ குறைத்துவிட வேண்டும்;

(7) அன்னிய நாட்டுத் துணிகள் மீது அதிக வரி விதித்து இந்தியத் துணி வியாபாரத்தைப் பாதுகாக்க ஏற்பாடு செய்யப் படவேண்டும்;

(8) இந்தியக் கரையோரக் கப்பல் மசோதாவைச் சட்டமாக்க வேண்டும்;

(9) கொலைக் குற்றம் செய்தோ அல்லது கொலை செய்ய முயற்சித்தோ தண்டனையடைந்த ராஜீயக் கைதிகளைத் தவிர மற்ற அரசியல் கைதிகளை உடனே விடுதலை செய்துவிட வேண்டும். அரசியல் குற்றத்துக்காக அரசியல்வாதிகள் மீது தொடுத்திருக்கும் வழக்குகளை உடனே வாபஸ் வாங்குவதோடு, 1818-ஆம் வருஷத்திய இ.பி.கோ. சட்டத்தின் (124 -ஏ பிரிவு முதலிய) பல பிரிவுகளை உடனே ரத்து செய்ய வேண்டும்; அன்றியும், நாடு கடத்தப்பட்ட சகல இந்தியர்களுக்கும் இந்தியாவிற்குத் திரும்பி வர அனுமதிகொடுக்க வேண்டும்.

(10) இரகசியப் போலீஸ் இலாகாவை ஒழித்துவிட வேண்டும். இன்றேல், அதற்கிருந்துவரும் அளவு கடந்த அதிகாரத்தைக் குறைத்துவிட வேண்டும்.

(11) தற்காப்புக்காக ஆயுதங்கள் வைத்துக்கொள்ள இந்தியருக்கு உரிமையிருக்க வேண்டும்; ஆனால், அதற்கு லைசென்ஸ் கொடுக்கும் அதிகாரம் பொதுவாக விருக்க வேண்டும்.''

இந்தக் கோரிக்கைகளை வைஸ்ராய் உடனடியாக ஏற்பாரானால் சட்ட மறுப்பிற்கே இடமில்லாது போகும். இந்தியருக்கு சமஉரிமை இருக்குமாயின், அரசு கூட்டும் எந்த மாநாட்டிலும் கலந்து கொள்ள காங்கிரஸ்வாதிகள் தயாரென்றும் அடிகள் தமது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்

(முதல் பாகம் முடிவுற்றது)

பொருளகராதி

அ

அகமதாபாத் காங்கிரஸ் தீர்மானம் 486
அகமதாபாத் காங்கிரஸ் மகாசபை 487
அகிம்சை 341
அகில இந்திய சுயாட்சி சங்கம் 273
அகில இந்திய தீண்டாமை விலக்குச் சங்கம் 630
அடக்கு முறைச் சட்ட ஆய்வுக் கமிட்டி 460
அடிகளின் தனி அறிக்கை (இர்வினுக்கு) 638
''அண்டாமை'' 543
அந்தணர் ஆட்சி 78
அந்தணர்கள் 303
அந்தணர் வாழ்வு ஆங்கிலத்தால் 301
அந்தமான் சென்ற முதல் தமிழர் 649
அமிர்தசரஸ் காங்கிரஸ் 415, 416, 423, 425
அமிர்த பஜார் 208
அயலாரின் ஆதிக்க வேட்டை 33
அயல்நாடுகளில் இந்தியப் புரட்சியாளர் 334
அரசியல் சட்டத்தின் முதல் திருத்தம் 572
அரசியலசார்பு நிறுவனங்கள் 106
''அரசியல் தொழு நோயாளர்'' 377
அரசியல் நாகரிகம் 193
அரசியல் வானில் விடிவெள்ளி 261, 263
அரவிந்தரின் மாறு வேடம் 314
அராஜக வாதிகள் 207
அர்பத் நாட் பாங்கு 156
அலிசகோதரர் கைது 471
அலி சகோதரர் விடுதலை 425
அலிப்பூர் சதி வழக்கு 198
''அல்லாஹு அக்பர்'' 414,442
அறிவுப் புரட்சி 88
அனந்தராம் மோதல் 114
அனுசீலம் 643
அனைத்திந்திய காங்கிரஸ் இயக்கம் 470
அனைத்திந்தியக் முஸ்லிம் லீக் 296
அனைத்துக் கட்சி முஸ்லிம்கள் மாநாடு 617

ஆ

ஆங்கிலேயர் நாடகம் 202
ஆங்கிலேயர் - இந்தியர் அசோசியேஷன் 616
ஆட்டுத் தோலுக்கு இடந்தந்த ஆந்திர மன்னன் 30
ஆயுதத் தடை மசோதா 326
ஆரிய சமாஜத்தார் 105
ஆரிய சமாஜம் 92,98,99,100,101
ஆரிய சரித்திரம் 155
ஆரிய வீரர் வ.உ.சி. 250
ஆர்னால்டு மன்றோ தீர்ப்பு 201
ஆள்காட்டித் துரைசாணி 286
ஆனந்த மடம் 107, 151,148
ஆன்ம நேய ஒருமைப்பாடு 92
ஆஷ் கொலைக்குப் பின் தமிழகம் 254

இ

இங்கிலாந்தில் இந்திய விடுதலை வீரர்கள் 334
இணையற்ற சிவா 516
இந்திய அரசியல் அமைப்பு மாநாடு 615
இந்திய அரசியலில் இருள் 261
இந்தியக் குடியரசு ராணுவம் 643
இந்திய சமுதாயத்திலுள்ள குறைகள் 87
''இந்தியா சுதந்திரத்திற்குப் பாடுபட்ட விதம் (நூல்) 267
இந்திய சுயராஜ்யம் 372
இந்திய தேசிய காங்கிரஸில் தென்னிந்தியர் 139
இந்திய தேசிய காங்கிரஸின் இரண்டாவது மாநாடு 120
இந்திய தேசிய காங்கிரஸ் 114,142,272
இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை 88,89,114
இந்திய தேசிய காங்கிரஸ் முஸ்லிம் லீக் உறவு 414
இந்திய தேசியம் 144
இந்திய தேசிய ராணுவம் 337
இந்திய நாகரிகம் 28
இந்தியப் புரட்சியாளர் 338,340

இந்தியப் புரட்சியின் முதல் வேட்டொலி 220
இந்தியனாக இரு! இந்தியப் பொருள்களையே வாங்கு! 156
இந்தியன் அசோசியேஷன் 106
''இந்தியா''(பத்திரிக்கை) 147,264
இந்தியா இரண்டாவது 80
இந்தியா மந்திரியின் சதி 283
''இந்தியா விடுதி'' 119,334,561
இந்தியாவில் பயங்கரப் புரட்சி 584
''இந்தியாவின் முடி சூடா மன்னர்'' 286
இந்தியாவின் முதல் கம்யூனிஸ்டு 647
''இந்தியாவின் வறுமை'' 343
''இந்து முஸ்லிம் ஏக்ஹோ'' 442
இந்து-முஸ்லிம் கலவரம் 574,594
இந்து - முஸ்லிம் கூட்டறிக்கை 540
இந்து-முஸ்லிம் தலைவர்கள் 612
இந்து-முஸ்லிம் மக்களுக்கு ஆலோசனை 599
இந்து-முஸ்லிம் வகுப்புக் கலவரங்கள் 539
இந்துஸ்தான் சோஷலிசக் குடியரசுக் கழகம் 621
''இ.பி.ஐ'' 114
இரட்டையாட்சி (பொறுப்பாட்சி) 415,454
இரண்டாவது பாஞ்சைப் போர் 59
இராம கிருஷ்ணரின் வேதாந்த இயக்கத்தார் 105
இராம கிருஷ்ணரின் சங்கம் 95,96
இராமலிங்க சுவாமிகள் 101
இராமலிங்க விலாசம் 45,52
இருளடைந்த மாநிலம் 128
இர்வின் அறிக்கை 635
இலக்குமணபுரி காங்கிரஸ் 271
இளஞ் சிங்கம் 464
இளவரசனின் வருகை-மறுப்பும் வரவேற்பும் 475

ஈ

''ஈழவர்'' 544
ஈ.வே.ரா. வீட்டில் காந்தி 472

உ

உருவ வழிபாடு 98
உலகத் தொழிலாளர் புரட்சிக் குரல் 523

எ

எங்கள் காங்கிரஸ் யாத்திரை (நூல்) 182
எட்வர்டு கிளைவ் உருவப் படம் 593
எம்டன் 320

ஏ

ஏகாதிபத்திய எதிர்ப்புப் புரட்சிகள் 85
ஏகாதிபத்திய எழுத்தாளர்கள் 64
ஏகாதிபத்தியரின் பிரித்தாளும் திறம் 152

ஐ

ஐரோப்பாவில் இந்தியப் புரட்சியாளர்கள் 334
ஐரோப்பாவில் தமிழக வீரர்கள் 334

ஒ

ஒத்துழையாமை இயக்கத்தில் தமிழ்நாடு 459,484
ஒத்துழையாமை இயக்கம் 452,474
ஒத்துழையாமைக்கு ஆதரவு 434
ஒத்துழையாமைக் கொள்கை 141,434
ஒத்துழையாமைத் திட்டம் 443,539
ஒத்துழையாமைத் தீர்மானம் 450
ஒத்துழையாமை பற்றி அந்தரங்கக் கூட்டம் 442
ஒத்துழையாமைப் போரில் தமிழகம் 439
ஒத்துழையாமைப் போர் 445
ஒத்துழையாமைப் போர்ப் பிரகடனம் 428
ஒத்துழையாமை - முதல் அறிக்கை 429
ஒப்பந்தக்கூலிகள் 343,344
ஒப்பந்தக் கூலி முறை 380
ஒருமைப்பாட்டு இயக்கங்கள் 81
ஒற்றுமை மாநாடு 540
ஒற்றுமைக் காங்கிரஸ் 270

க

கங்காணிகள் 343
கடன்கார நவாப்பு 31
கட்சிக்குள் கட்சி 537
கட்டபொம்மனின் அமைதியற்ற வாழ்வு 56

கட்டபொம்மனுக்கு மரண தண்டனை 52
கட்ட பொம்மனும் வ.உ.சி.யும் 188
கட்ட பொம்மன் தன்மானி! 56
கட்ட பொம்மன் வரி கொடுக்க மறுத்தது 43
''கதர்!'' (புரட்சி இயக்கம்) 467
கம்பெனிகளின் வருகை 29
கம்யூனல் ஜி.ஓ. 571
கம்யூனிஸ்டுப் புரட்சி 294
கயா காங்கிரஸ் 519,520
கயா காங்கிரஸ் தலைமையுரை 521
கயாவின் நாயகர் 523
''கருப்புச் சட்டம்'' 365
கர்சானின் ஆணவப் பேச்சு 154
கர்சானின் ஆணவப் பேச்சிற்கு தமிழர்கள் கண்டனம் 154
கலாச்சார எழுச்சி 88
கலாச்சார ஒருமைப்பாடு 26
கலாச்சார ரீதியிலான தேசிய எழுச்சிகள் 88
கலெக்டர் ஆஷ் கொலை 215
கல் மாரிக்கு குண்டு மாரி 409
கல்கத்தா காங்கிரஸ்(1906) 168
கல்கத்தா காங்கிரஸ்(1886) 120
கல்கத்தா காங்கிரஸ்(1928) 622
கல்கத்தா காங்கிரசின் முற்போக்கான தீர்மானங்கள்(1917) 289
கல்கத்தாவில் சர்வ கட்சி மாநாடு 625
கல்கத்தாவில் சிறப்பு மாநாடு (1920) 435
கல்கத்தாவில் தேசபந்துவின் செல்வாக்கு 479
கனவிலே கிடைத்த திட்டம் 393
கன்சர்வேடிவ் கட்சி 632

கா

காகோரி சதி வழக்கு 645
காங்கிரசில் மாறுதல் 495
காங்கிரசின் அமைப்பு விதிகள் 128,451,452
காங்கிரசின் தந்தை 128
காங்கிரசின் நாக்கு 170
காங்கிரசுக்குப் போதாத காலம் 491
காங்கிரசை வளர்த்த அமைப்புகள் 125
காங்கிரஸ் 579
காங்கிரஸ் இளைஞர்கள் அமைப்புகள் 534
காங்கிரஸ் தலைமையில் காந்தி 540
காங்கிரஸ் தலைமைக்கு முதல் இந்தியப் பெண்மணி 572
காங்கிரஸ் தொண்டர் படை 476
காங்கிரஸ் நிலை(1908-1915) 257
காங்கிரஸ் பிறந்த சூழ்நிலை 109
காங்கிரஸ் மகாசபை 141
காங்கிரஸ் மகாசபைகளில் வெள்ளையர் 137
காங்கிரஸ் மகாசபைகள் (1908-1914) 265
காங்கிரஸ் மகாசபை புதுமரபு 286
காங்கிரஸ் மகாசபை பிறந்தது 113
காங்கிரஸ் மகாசபையில் கவர்னரின் முதல் பேச்சு 270
காங்கிரஸ் மகாசபையில் தமிழ்நாடு 453
காங்கிரஸ் மகாசபையில் சமூகச் சீர்திருத்தம் 143
காங்கிரஸ் மகாசபையின் மூன்றாவது மாநாடு 122
காங்கிரஸ் மாநாடு (1906) 151
காங்கிரஸ் - லீக்பகைமை 618
காங்கிரஸ் வரலாறு காணாத காட்சி 655
காங்கிரஸ் வரலாற்றிலே புதிய ஏடு 281
காங்கிரஸ் வினா-விடை 120,129,131,321,134.
காங்கிரஸ் ஜனநாயகக் கட்சி 660
''காசி- இராமேசுவரம்'' 24
காஞ்சி மாநாட்டில் இரண்டாம் நாள் 564
காஞ்சி மாநாட்டில் ஒரு புதுமை 564
காஞ்சி மாநாட்டில் புயல் 567
காஞ்சி மாநாட்டில் முதல் நாள் 565
காட்டிக் கொடுத்தான் புதுக்கோட்டையான் 51
'காதி போர்டு'' 516
காந்தி சகாப்தம், 141,332,451.
காந்தி சகாப்தம் செய்த புரட்சி 514
காந்தியடிகளின் தலைமை 427
காந்தியடிகள் கலந்து கொண்ட முதல் மகா சபை 268
காந்தியடிகள் சிறையிலிருந்த காலத்திலே காங்கிரஸ் நிலை 536
காந்தியடிகளின் தமிழ்நாடு வருகை 440

காந்தியடிகள் மீண்டும் தென் ஆப்பிரிக்கா சென்றது 364
காந்தியத்திற்கு முன்னோடி 287
காந்தி - ஸ்மட்ஸ் ஒப்பந்தம் 381
காந்திஜி உண்ணாவிரதம் 389
காந்திஜி ராஜாஜி முதல் சந்திப்பு 389
காந்திஜி - பாலசுந்தரம் சந்திப்பு 348
காந்தி - ஜவகர் கூட்டுத் தலைமை 659
காந்திஜிக்கு ஆறு வருட சிறைத் தண்டனை 504
காந்திஜியின் கண்ணீர் 539
காந்திஜியின் சரணாகதி 541
காந்திஜியின் முதல் சிறை வாசம் 505
காந்திஜியின் போர்ப் பிரகடனம் 440
''காந்திஜியும் அராஜகமும்'' 417
''காமன் வீல்'' 265
காலங் கொடுத்த தலைவர்கள் 389
காலனி ஆதிக்கம் 344
காலியா 162,247
கால்ஃபா பதவி 519
கால்வின் கண்டனம் 131
கான்பூர் போல்ஷ்விக் சதி வழக்கு 646
கான்னாட் கோமகன் வருகைக்கு எதிர்ப்பும் வரவேற்பும் 454

கி

கிட்டூர்ச் சென்னம்மாள் போராட்டம் 19
கிலாபத் அநீதிக்குப் பரிகாரம் 429
கிலாபத் இயக்க இணைப்பு 433
கிலாபத் இயக்கம் 413,470
கிலாபத் தொண்டர் படை 475
கிழக்கிந்தியக் கம்பெனி 18
கிறித்துவ ஆட்சி 89

கு

குட்டிப் புரட்சி 68
குட்டிப் போராட்டங்கள் 382
குண்டர்ட் பிரகடனம் 20,74
குண்டூரில் வரி கொடா இயக்கம் 488, 490
குமரி முனையில் காந்தி 548

கூ

கூட்டுக் கோஷம் 414
கூலி வக்கீல்கள் 345
கூட்டறிக்கை (இர்வினுக்கு) 636

கே

கேரள இந்துக்களின் கொடுமைகள் 543

கை

கைரேகைச் சட்ட எதிர்ப்புப் போராட்டம் 583
கைரேகைப் போர் 583

கொ

கொடிப் போர் 534

கோ

கோகத்தி காங்கிரஸ் 579
கோரல் மில் தொழிலாளர் சங்கம் 155
கோவை செங்குந்தர் மகாஜன சங்கத்தார் காந்தி சந்திப்பு 549
கோஹத் சம்பவம் 539

ச

சட்டசபைப் பிரவேசத்திற்கு எதிராக ராஜாஜி 522
சட்ட சபைப் பிரவேசம் 521
சட்டசபைப் பிரவேசம் ஏற்கப் பட்டது 529
சட்ட மறுப்பு 472
சட்ட மறுப்பு விசாரணைக் குழு 518
சட்டமில்லாத சட்டம் 393
''சண்டாளர்'' 543
சண்பகராமன் லெனின் சந்திப்பு 337
சத்திய ஞான சபை 107
சத்தியாக்கிரக இயக்கத்திற்குக் கிடைத்த வெற்றி 412
சத்தியாக்கிரக சபை 385
சத்தியாக்கிரக சாதி 389
சத்தியாக்கிரகத் தத்துவத்தின் விளக்கம் 390
சத்தியாக்கிரகத்தின் வெற்றிகள் 413,536
சத்தியாக்கிரக நெறியில் தமிழ் இனத்தார் 397
சத்தியாக்கிரகப் பிரதிக்ஞை 392
சத்தியாக்கிரகப் போராட்டம் 391

சத்தியாக்கிரக தொடக்க நாள் 403
சத்தியாக்கிரகப் போர் முறை அறிமுகம் 370
சத்தியாக்கிரக மும் சட்ட மறுப்பும் 501
''சத்தியாக்கிரகம்'' 341
சத்தியாக்கிரகியின் கட்டுப் பாடுகள் 399
சபர்மதி ஆசிரமம் 379
சபாஷ் சென்னை 384
சமரச சுத்த சன்மார்க்க சங்கம் 91
சமரசத் தீர்மானம் 622
சமரச மாநாடு 595
சமஸ்தானங்களின் சங்கம் 616
''சமஸ்தானங்கள்'' 26
சமூகப் பிரச்சினையில் காங்கிரஸ் நிலை 569
சரித்திரக் களங்கம் 254
சர்க்காரின் சேவகர்கள் (மிதவாதிகள்) 213
சர்வ கட்சி மாநாடு 489
சர்வ சமய சமரசக் கீர்த்தனை 108,112
சர்வதேச அரசியலும் விடுதலைப் போரும் 204
சன்மார்க்க சங்கம் 91

சா

சாண்டார்ஸ் கொலை 651

சி

சிதம்பரம் பிள்ளை கையில் அகப்பட்ட கோல் 561
சிதம்பரனார் இட்டது சட்டம் 184
''சித்தக் கடல்'' 330
சித்தூர் மாவட்டத்தைச் சிருஷ்டித்தது 153
சிப்பாய்ப் புரட்சி 17,21,22,76, 81,84,86,88
சிப்பாய்ப் புரட்சி மக்கள் புரட்சியா? 77
சிப்பாய்ப் புரட்சியில் தமிழகத்தின் பங்கு 83
சிவகங்கைப் பாளையத்தின் பொறுப்பு 62
சிவகங்கை மீது வலுவில் போர் 63
சிவஞான புரம் 57
சிவாவின் சிறைவாசங்கள் 553
சிவாவின் ராச தந்திரம் 558
சிவாசின் வீர வரலாறு 560
சிறையில் தீவிர வாதிகள் 208

சீ

சீராளா சத்தியாக்கிரகம் 471
சீனிவாச ஐயங்கார்(எஸ்) அணி 529

சு

''சுக ஜீவிகளின் பூங்கா'' 375
சுடுகாட்டு அமைதி 88
சுதந்திரக் காங்கிரஸ் கட்சி 576,578
''சுதந்திரச் சங்கு'' 661
சுதேச இயக்க ஆண்டு 157
சுதேசமித்திரன் மீது தாக்கு 203
சுதேச வங்கி 157
சுதேசி இயக்கத்திற்கு எதிர்ப்பு 296
''சுதேசிகள்'' 316
சுதேசிக் கப்பல் கம்பெனி 156,158
சுதேசிக் கப்பலுக்கு வர வேற்பு 162
சுதேசிக்கப்பலும், விதேசிக் கப்பலும் 163
சுதேசிக் கப்பல்களுக்கு விதேச மொழிப்பெயர் 163
சுதேசி தினம் 157
சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி 158
சுத்த சன்மார்க்க சங்கம் 101
சுய அரசாட்சி வினா - விடை 118,119
'சுய ஆட்சியைப் பற்றி ஒரு யோசனை 293
சுயமரியாதை இயக்கத்தால் 629
சுயமரியாதை இயக்கம் 610
சுயராஜ்யக் கட்சி 528,576,618
சுயராஜ்யக் கட்சிக்குச் சோதனைக்களம் 531
சுயராஜ்யக் கட்சித் தலைவர்கள் காந்தி சந்திப்பு 537
சுயராஜ்ய கட்சியின் வெற்றிக் களிப்பு 533
''சுயராஜ்ய நிதி'' 452
சுயராஜ்யமா? மதுவிலக்கா? 627
''சுயராஜ்யம்'' 121, 170
''சுயராஜ்யா'' 200
சுயாட்சிக் கட்சியினருடன் காந்திஜி 539
சுயாட்சிக் கிளர்ச்சியும் உலகப் பெரும் போரும் 284

''சுயாட்சிச் சங்கம்'' 272
சுயேச்சை அமைச்சரவை 571,579.
சுயேச்சைக் கட்சி 618
சுயேச்சைத் தொழிலாளர்கள் 344
சுயேச்சையாளர் அணி 533
சுல்தான்கள் போர் சுதந்திரப் போர் 87

சூ

சூரத் காங்கிரஸ் 179
சூரத்தில் தமிழர் படை 179

செ

சென்னைக் கடற்கரையில் காந்தி 397
சென்னை காங்கிரசில் வக்கீல்கள் ஆதிக்கம் 167
சென்னை காங்கிரஸ் மகாசபை (1908) 205
சென்னை காங்கிரஸ் மகாசபை (1914) 257
சென்னை காங்கிரஸ் மகாசபையின் அரச விசுவாசம் 130
சென்னை காங்கிரஸ் மாநாட்டில் மொழிப் புரட்சி 130
சென்னை காஸ்மாபாலிடன் கிளப் 375
சென்னைத் தொழிலாளர் சங்கம் 307
சென்னை மகாஜன சபை 376
சென்னை மாகாண கிலாபத் மாநாடு 429
சென்னை மாகாண சங்கம் 513
சென்னை மாநகரிலே மூன்றாவது காங்கிரஸ் 122
சென்னையில் காந்தி அடிகள் 374
சென்னையில் பாலர் 172
சென்னையில் 42வது காங்கிரஸ் 597
சென்னை வாசிகளின் துன்பங்கள் 418
சென்னை விவசாய - கைத்தொழில் சங்கம் லிமிடெட் 164
சென்னை விவசாயக் - கைத்தொழில் சங்கத்தின் கொள்கைகள் 164
செடிஷியஸ் கமிட்டி 284,383

சே

'சேலத்துக் கிழவர்' 448
சேலம் வீரர் 448

சை

சைமன் கமிஷன் இந்தியா வருகை 596,602,613
சைமன் கமிஷன் இந்தியா வருகை 607,608,609
சைமன் கமிஷன் எதிர்ப்பு 598,603,605,607,608,610
சைமன் கமிஷன் சென்னை வருகை 606
சைமன் கமிஷன் பரிந்துரை 614

சொ

சொக்கப் பானைப் போர் 630

சோ

சோவியத் ரஷ்யா 294

சௌ

சௌரிசாரா சம்பவம் 493

டா

''டால்ஸ்டாய் பண்ணை'' 367,368,379

டி

டில்லித் தீர்மானம் 495,496
டில்லி விசேஷ காங்கிரஸ் 530

ட்

''ட்ரிப்யூன் 120

த

தணிகையில் காந்தி 625
தமிழகத்தில் ஒரு குதிராம் போஸ் 224
தமிழகத்தில் காந்திஜி 335,468,548
தமிழகத்தில் சுல்தான்கள் ஆதிக்கம் 37
தமிழகத்தில் தீவிர மிதவாதிகள் 124
தமிழகத்தில் வக்கீல்கள் ஆதிக்கம் 302
தமிழகத்தில் வெள்ளையர் ஆதிக்கம் 29
தமிழகத்தின் தனிப் பெருமை 421,505,527,644
தமிழகத்தின் வரலாற்றுப் பெருமை 263
தமிழகத்துக்குச் சோதனை 438
தமிழரின் தேசிய உணர்ச்சி 535

தமிழர் துயர் துடைத்த காந்தி 381
தமிழர் வீரம் 27
தமிழ் ஒலித்த காங்கிரஸ் மகாசபை 125
தமிழ்நாடு காங்கிரஸ் 445
தமிழ் நாடு காங்கிரஸ் ''கமிட்டி'' 452
தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முதல் தலைவர் 459
தமிழ் நாடு காங்கிரஸ் மகாசபைத் தலைமை 448
தமிழ்நாடு காங்கிரஸ் மாளிகை 599
தமிழ் நாட்டில் இராம கிருஷ்ண சங்கம் 100
தமிழ் நாட்டில் தனி நபர் சட்ட மறுப்பும், ஆந்திர தேசத்தில் வரி கொடா இயக்கமும் 507
தமிழ்நாட்டில் தொழிற் சங்க இயக்கம் 398
தமிழ்நாட்டில் மதுக்கடை மறியல் 462
''தமிழ் நாட்டின் தாதாபாய்'' 448
தமிழ் நாட்டின் ஸ்வீகாரப் புதல்வி 264
தமிழ்நாடு முஸ்லிம்கள் 445
தமிழ் மக்களின் ஆங்கில மோகம் 463
தமிழ் மாகாண அரசியல் மாநாடு (1955) 564
தரங்கம் பாடி 375
தரும சங்க நெசவுச்சாலை 164
தலை தந்த தமிழன் 58
தலைவரிச் சட்டம் 352
தலைவரி தொலைந்தது 354
தலைவரி மறுப்புப் போர் 354
தளவாய் 72
''தற்காலிக இந்தியக் குடியரசு'' 337
தனிநபர் சட்ட மறுப்பு இயக்கம் 531

தி

தியாகத்தின் அரசர் 563
தியோசாபி 96
தியோசாபிகல் சங்கம் 96,264,265,375
திருநெல்வேலிச் சதிவழக்கு 234,238,240,254
திருநெல்வேலிச் சதி வழக்கு அப்பீல் 244
திருப்பத்தூர் கோட்டை 64
திருவல்லிக்கேணி இலக்கியச் சங்கம் 107
திருவல்லிக்கேணிக் கடற்கரையில் சிவா பேட்டி 553,556
திரு.வி.க.வின் அரசியல் பிரவேசம் 279
திலகரிடம் நன்னடத்தை ஜாமீன் கோரிக்கை 293
திலகரின் பெருங் குணம் 273
திலகரிஸ்டுகள் 629
திலகர் சகாப்தத் தொடக்கம் 144
திலகர் சகாப்தம் 559
''திலகர் சுயராஜ்ய நிதி'' 467
திலகர் பவனம் 400
திலகர் மறைந்தார் 433
திலகர் மீண்டும் அரசியலில் நுழைந்தது 268
திலகர் மீது நன்னடத்தை ஜாமீன் வழக்கு 274
தில்லையாடி 374

தீ

தீவிர வாதப் புயல் அடங்கியது 198
தீவிரவாதிகள் மிதவாதிகள் போராட்டம் 166
''தீண்டாமை'' 543
தீண்டாமை ஒழிப்புப் போர்க்களம் 544

தூ

தூக்கு மேடையிலே மருது பாண்டியர் 63

தெ

தென்பாண்டிப் பாளையங்கள் 41
''தென்னாட்டுக் காந்தி'' 354
தென்னாப்பிரிக்க இந்தியர் 341
''தென்னாப்பிரிக்க இந்தியர் லீக்'' 376
தென்னாப்பிரிக்க சத்தியாக்கிரகத்தில் தமிழர் பங்கு 341,367
தென்னாப்பிரிக்க சத்தியாக்கிரகப் போர் 341
தென்னாப்பிரிக்காவில் இந்தியத் தொழிலாளர் 362
தென்னிந்திய ரெயில்வே சதிவழக்கு 648
''தென்னிந்திய ரெயில்வே தொழிலாளர் சங்கம்'' 510
''தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்'' 299

தே

தேச பக்தர்கள் 445
தேச பக்தர்கள் மறந்துவிட்ட தியாகக் குடும்பம் 339
தேச பக்தர்களின் யாத்திரைத்தலம் 315
தேச பக்தர் குடும்பங்கள் 649
தேச பக்தியும் தெய்வ பக்தியும் 402
தேசப் பிளவுக்கு வித்து 619
தேசிய இயக்கத்தால் பிரிட்டிஷ் அரசின் தோல்விகள் 412
தேசிய இலக்கியங்கள் 107
தேசிய ஏடுகள் 105
தேசிய ஒருமைப்பாட்டிற்கு முன்னோடி (அசோகன்) 25
தேசிய ஒருமைப்பாட்டு ஏற்பாடுகள் 26
தேசியக் கல்லூரிகள் 463
தேசியக் கவி பாரதியார் 139
தேசிய கான்பரன்ஸ் 182
''தேசியக் கொடி'' (நாடகம்) 534
தேசிய பண்டக சாலை 164
தேசிய பல்கலைக் கழகங்கள் 464
''தேசிய மாநாடு'' 268
தேசிய வாதிகள் 416
தேசிய வாரம் 405
தேசிய வித்யாலயம் 464
தேசிய விழாக்கள் 107
தேர்தல் களத்திலே சுயராஜ்யக் கட்சி 531

தொ

தொழிற் கட்சி அமைச்சரவை 632
தொழிற் கட்சியின் பூர்வ வரலாறு 632
தொழிற்சங்க இயக்கம் 645

தோ

தோக்கலவார் வீரம் 61

ந

''நடமாடும் கலைமகள்'' 252
நடிகமணிகளின் நாட்டுப்பற்று 405
நந்தனார் சரித்திரக் கீர்த்தனை 108,177
'நல்லகாரியம் செய்தாய் சிதம்பரம்' 193
நள்ளிரவில் பூத்த புரட்சி 69
நவாப்புகள் மோதல் 31

நா

நாகபுரிக் காங்கிரஸ் 149
நாகபுரியில் தேசியக் கொடிப் போராட்டம் 534
நாகலாபுரப்போர் 50
நாகைப் போராட்டம் 647
நாயர் படை 74
நால்வரின் பொதுக் கொள்கை 93
நால்வேறு இயக்கங்கள் 88
''நான்கானாப் படுகொலை'' 469
நான்கு மகா புருஷர்கள் 90

நி

நியூ இந்தியா 266

நீ

நீதிக்கட்சி 298,305,435,563
நீதிக் கட்சி தோன்றுவதற்குக் காரணம் 307
நீதிக் கட்சியினர் 305
நீலகண்டப் பிரமச்சாரியின் வாக்கு மூலம் 242
நீல்சிலைச் சத்தியாக்கிரகம் 582,586,159,592

நூ

நூல் சந்தா முறை அறிமுகம் 568

நெ

நெல்லைக் கலவரம் 190
நெல்லையும் மதுரையும் 438

நே

நேட்டால் இந்தியர் காங்கிரஸ் 351,352
நேட்டாலில் தமிழருக்கு அநீதி 356
நேரு அரசியல் 621
நேரு கமிட்டியின் அறிக்கை 616
நேஷனல் கன்வென்ஷன் 182
நேஷனல் பாங்க் ஆப் இந்தியா 159

ப

பசுவதை 144
பஞ்சமர் 543

பஞ்சாப் படுகொலை 405,412
படித்த சமுதாயத்தில் தியாகமின்மை 463
பட்டதாரிகள் மாநாடு 119
பட்டதாரிகள் மாநாடு தமிழர் பங்கு
பத்திரிகைச் சட்டம் 199
பயங்கரச் சோதனைகள் 574
பயங்கரப் புரட்சி 677
பரங்கி ஒழிப்புச் சமாஜம் 183
பரத்துவாஜ ஆசிரமம் 561
பரிபூரண சுதந்திரம் 141
பர்டோலி தீர்மானம் 495,500
பர்டோலி முடிவு பற்றி நேரு 497
பர்டோலி வரி கொடா இயக்கம் 491

பா

பாஞ்சைக் கோட்டை தரை மட்டம் 54
பாஞ்சை, சிவகங்கைப் போராட்டங்கள் 66
பாஞ்சைப் போர் 18,21
பாண்டி மண்டலத்தில் முதல் ஆதிக்க
எதிர்ப்பு 41
பாபா அகாலி தளச் சதி வழக்கு 651
பாபா அகாலிதளம் 643
பாரத ஆசிரமங்கள் 560
பாரத நாடெங்கணும் காங்கிரஸ்
பிளவு 500
பாரத மாதா கோயில் 560
பாரத மாதா சங்கம் 183,643
பாரத மாதா சமிதி 183
பாரதாசிரமத்தினர் 557
பாரதி ஆன்ம ஞானி 332
பாரதிப் பாட்டு சரித்திரச் சாசனம் 189
''பாரதிய மதம்'' 550
பாரதியார் மறைந்தார்'' 469
''பாராமை'' 543
பாரிசால் அடக்குமுறை 151
பால சுந்தரத்திற்கு விடுதலை 384
''பாலபாரதி'' 562
பாலர் விடுதலை நாள் 185
பாளையக்காரர்களின் மூன்றாவது
போர் 64
பாளையங்கோட்டைச் சிறை
தகர்ந்தது 64
பானர்மென் பிரகடனம் 58
பாஷைக்கொரு பத்திரிகை 317

பி

பிரசவத்தின் போதே செத்துவிட்ட
ரௌலட் 441
பிரதாப முதலியார் சரித்திரம் 108
பிரம்மஞான சங்கத் தலைமை 98
பிரம்மஞான சங்கத்தின் மாநாடு 113
பிரம்ம ஞான சங்கம் 109
பிரம்ம சமாஜத்தார் 105
பிரம்ம சமாஜமும் ஆரிய சமாஜமும் 420
பிரம்மசமாஜம் 90,95,96,97,98
பிராமண மிதவாதிகள் 298
பிராமணரல்லாதார் இயக்கம் 564
பிராமணரல்லாதார் என்ற உணர்ச்சி 564
பிராமணரல்லாதவர் கட்சி 297
பிராமணர் 302,309,439
பிராமணர் - பிராமணரல்லாதார்
பூசல் 212,296,298
பிரிட்டிஷ் அரசின் அடக்குமுறை 157
பிரிட்டிஷ் அரசின் இரட்டை வேடம் 284
பிரிட்டிஷாரின் அரசியல்
சீர்திருத்தங்கள் 295
பிரிட்டிஷாரின் பிரித்தாளும்
தந்திரம் 296,297
பிரிட்டிஷ் மன்னருக்கு வாழ்த்துப்
பாடாத காங்கிரஸ் மகாசபை 452
பிளவட்ஸ்கியின் வள்ளலார் பற்று 110
பிற்கால மைசூர் அரசர்கள் 38
பின்ஹேயின் தீர்ப்பு 195

பு

புகுந்தவர்களிடையே போர் 30
''புதுக்கட்சியாரின்
கோட்பாடுகள்''(பேச்சு) 182
''புதிய ருஷ்யா'' 294
புதுப்பாளையக் காந்தி ஆசிரமம் 536
புதுப்பாளையம் காந்தி ஆசிரமத்தில்
காந்தி 549
புதுப்பாளையம் காந்தி ஆசிரமம் 541
புதுவையில் அடைக்கலம் புகுந்த
முதல் இந்திய தேசபக்தர் 202
புதுவையில் வ.உ.சி. 312
புதுவையை விலைக்கு வாங்க
முயற்சி 320
புரட்சி அமைப்புகள் 643,650

புரட்சி அமைப்புகள் (தமிழகத்தில்) 644
புரட்சிப் படை 339
''புரோ இந்தியா'' 337

பூ

பூரண சுதந்திரக் கோரிக்கை 645
பூரண சுதந்திரம் 451
பூரண சுயாட்சித் தீர்மானம் 263
பூனைக்கால் ஜான்சன் 630

பெ

பெசன்டின் கோரிக்கை 292
பெசன்டின் சுயாட்சி இயக்கம் 277
பெசன்டின் தரிசனம் 291
பெசன்டின் தலைமையுரை (1917) 288
பெசன்ட் அம்மையாரின் வெற்றி 271
பெசன்ட் அம்மையார் மீது அடக்குமுறை 274
பெசன்ட் கண்ட முதல் தோல்வி 424
பெசன்ட் கைதியானதன் விளைவுகள் 281
பெசன்ட் - சி. ஆர் தாஸ் முரண்பாடு 418
பெசன்ட் விலகல் 431
பெரம்பூர் ரெயில்வே தொழிற் சங்கம் 307
பெரிய மருதுவின் மரண வாக்கு மூலம் 65
பெல்காம் காங்கிரஸ் 541
பெஜவாடாவில் அ.இ.கா. கமிட்டி 464

பே

பேச்சுரிமை பற்றி பின்ஹே 195

பொ

''பொது மன்னிப்பு'' 332
பொது ஜனச் சட்ட மறுப்பும் தனி நபர் சட்ட மறுப்பும் 500

போ

போயர் யுத்தம் 363

ம

மகாத்மா 422
மகாத்மாஜி 422
மகாத்மாஜிக்கு அறுவை சிகிச்சை 535
மகாராஷ்டிர சுயாட்சிச் சங்கம் 273
மகாஜன சபை 106
மக்கீஸ் கார்டன் 122
மணி ஐயர் 279
மணிஐயர் கடிதம் (வில்சனுக்கு) 278
''மணிமரஞ் சாய்ந்தது'' 562
மண்டயம் குடும்பம் 339
மதுரையில் தொழிற்சங்கப் பொதுக்கூட்டங்கள் 510
மதுவிலக்கு 144
மதுவிலுக்கு பரீட்சார்த்தத் திட்டம் 628
மத்தியக்குழு 613
மத்திய தொழிற் சங்கம் 646
மத்திய பிரதேசக் காங்கிரஸ் 450
மயிலாப்பூர் மாமேதைகள் 422
மயிலாப்பூர் வக்கீல்களும் எழும்பூர் வக்கீல்களும் 213
மயிலாப்பூர் வக்கில் கூட்டம் 445, 463
மரணவண்டி நிகழ்ச்சி 466
மராத்தியப் பேரரசு 28
மற்றொரு ''ஜாலியன் வாலாபாக்'' 469
மன்னர் போர் மக்கள் போராகாது 27

மா

மாகாண சுயமரியாதை மாநாடு(1928) 607
மாகாணத்துத் தேசிய வாதிகள் 417
மாக்ஸ்வெல் வருகை 43
மாண்டவியா 359
மாண்டேகு - செம்ஸ்போர்டு சீர்திருத்தம் 390,692
மாண்டேகு பிரகடனம் 294, 295
மாப்பிள்ளைமார் கலகம் 465,517
மாவீரர்களின் வரலாற்று நாடகங்கள் 515
மானங்காத்த மகான் 211

மி

மிண்டோ- மார்லி சீர் திருத்தம் 212,295,296,602
மிதவாதத்திலும் தமிழர் தலைமை 416
மிதவாதிகள் தீவிரவாதிகளாயினர் 228

மீ

மீரத் சதிவழக்கு 651

மு

முதலாவது உலகப் பெரும் போர் 290
முதலில் தோன்றிய தேசிய ஒருமைப்பாடு 81
முதல் அன்னியப் படையெடுப்பு 27
முதல் சத்தியாக்கிரகப் போருக்கு அடித்தளம் 385
முதல் பெண கைதி 277
முதல் மகா யுத்தம் 254
முதல் வேலை நிறுத்தம் 510
முதன் முதலாக புதுவையில் அடைக்கலம் புகுந்தவர் 311
முதன் முதலில் சிறை சென்ற தேசியத் தலைவர் 208
முழத்துண்டு பக்கிரி 473
முன்னோடி இயக்கங்கள் 91
முஸ்லிம் லீக் ஏற்படக் காரணம் 500

மூ

மூர்மார்க்கெட் சத்தியாக்கிரகம் 557
மூவேறு சகாப்தங்கள் 141
மூன்று சகாப்தத்திலும் தமிழகம் 395
மூன்று பவுன் தலைவரி ரத்து 367

மெ

மெக்காலே கல்வி திட்டம் 463

மொ

மொகலாய ஆக்ரமிப்பு 27
மொகலாயப் பேரரசு அஸ்தமனம் 34
மொழிவாரிப் பிரிவினை 540

மோ

மோதிலால் தீவிரவாதியானார் 421

ய

யதீன்தாஸ் மரணம் 652
யுகாந்திரம் 439
யுகாந்தர் 194
யுத்த ஆதரவுத் தீர்மானம் 293

ர

ரயிலுக்கு வெடிகுண்டு 653
ரவீந்திரரும் பாரதியாரும் 421

ரா

ராணி அரங்கம் 633
''ராஜாஜி'' என்று அழைக்கும் மரபு தொடக்கம் 523
ராஜாஜி கலந்து கொண்ட முதல் காங்கிரஸ் மகாசபை 422
ராஜாஜிக்கு சிறைத் தண்டனை 474
ராஜாஜிக்குத் தேசிய அந்தஸ்து 452
ராஜாஜி தென்னிந்தியாவின் ஏகத் தலைவர் 416
ராஜாஜியின் அரசியல் பிரவேசம் 280
ராஜாஜியின் சட்ட நுணுக்கம் 511

ரு

ருஸ்தம்ஜி இல்லம் 362

ரோ

ரோஜாப்பூ துரை 583

ரௌ

ரௌலட் கமிட்டி 95,255,382
ரௌலட் கமிட்டி அறிக்கை 384
ரௌலட் சட்ட எதிர்ப்பு 382,389,390,401,408,409,410,501, 580
ரௌலட் சட்ட எதிர்ப்பு பிரதிக்ஞை 385
ரௌலட் சட்டம் 388,392,606
ரௌலட் சாஸ்திரி 383
ரௌலட் மசோதாக்கள் 382
ரௌலட் மசோதா நெ,2. 410

ல

லக்னோவில் அ.இ.கா.க. 517
லஜபதி ராய் கைது 175

லா

லாகூரிலே காங்கிரசின் புதிய செயற்குழு 658

லாகூர்க் காங்கிரஸ் 654
லாகூர்க் காங்கிரஸ் நடைமுறை 658
லாகூர் காங்கிரசில் நேரு
தலைமையுரை 655
லாவோ 162

லீ

லீக் - காங்கிரஸ் பிளவு 618

லோ

லோகமான்ய திலகா் சகாப்தம் 141
''லோகமான்யா'' 255

வ

வ.உ.சி. சகாப்தம் 250
வ.உ.சி. சுதேசி இயக்கம் 155
வ.உ.சி.யின் மும்முனைப் போர் 184
வ.உ.சி. விலகல் 437
வகுப்புரிமைத் தீர்மானம் 569
வகுப்புரிமை நீதி 572
வகுப்புரிமை பற்றிக் காந்திஜி 569
வகுப்புரிமை பற்றித் தமிழ்நாடு
காங்கிரஸ் கொள்கை 571
வகுப்புரிமை பற்றி ராஜாஜி 570,603
வகுப்புரிமையில் காங்கிரஸ் ஆட்சி 571
வகுப்புவாரிப் பிரதி
நிதித்துவம் 564,567, 571
வங்கஇனத்தவரின் ஒற்றுமை
மாநாடு 150
வங்கப் பிரிவினைச் சட்டம் 150
வங்க மாநிலத்திற்குப் பாரதி
வாழ்த்து 151
வங்க மாநிலப் பிரிவினை 147
வங்கம் வங்காளியருக்கே 151
வடக்குக்கு வழிகாட்டி 165
வடக்கே ஒரு வாஞ்சி 650
வடாற்காடு கிலாபத் மாநாடு 441
வந்தே மாதரம் (மொழி பெயர்ப்பு) 156
வந்தே மாதரம் (பாரதி) 156
வந்தே மாதரம் (தேசிய கீதம்) 108
வந்தே மாதரம் - அல்லாஹு அக்பர் 575
வரலாறு அறியாத தண்டனை 197
வரிகொடா இயக்கம் 478
வர்க்கப் போர் 187
வள்ளலாரின் ஆறாம் திருமுறை
வள்ளலாரின் இறுதி வாசகம் 92
வள்ளலாரின் சிறு பிழம்பு 112
வள்ளலாரின் புரட்சிக் கொள்கை 92,93
வள்ளலார் இயக்கத்திற்குத் தடை 110
வன்முறை இயக்கம் 642

வா

வாஞ்சியின் தீரம் 225
வாஞ்சியின் பிரேதம் 225
வாளேந்தும் போராட்டம் 583
வாழ்க? நீ எம்மான் 453
வாழ்விழந்த பொன்னம்மாள் 232

வி

விக்டோரியா உறுதிமொழி 295
விசயநகரப் பேரரசு 28
விடுதலைப் போருக்கு வழிகாட்டி 218
விடுதலைப் போருக்கு வித்து
விடுதலைப்
போரில் 640
சுப்பிரமணியங்கள் 563
விடுதலை வீரர்களை மட்டுமே
கொண்ட பாசறை 492
விதேசிப் பொருள் எதிர்ப்புத்
தீர்மானம் 170
வில்சன் பிரகடனம் 278
விவசாயிகள் சங்கம் 631
விவேகானந்தரும் தமிழ்நாடும் 104
வினா - விடைப் பிரசுரம் 135

வீ

வீடு பிளக்க வந்தார் 590
வீர சிவாஜி விழா 107
வீரபாண்டியனின் முன்னோர் காலம் 41

வெ

வெஞ்சிறையில் வீரத் தளபதி 500
வெல்லிங்டன் திரைப்படத்
தியேட்டர் கலவரம் 482
வெளிநாட்டு அறிவியக்கவாதிகள் 420
வெள்ளி நாக்குச் சாஸ்திரி 387
வெள்ளை நிற ஸ்வீகாரக் குடிகள் 136

வே

வேலுத்தம்பியின் போராட்டம் 20
வேலுத்தம்பியும் கட்ட பொம்மனும் 74
வேலூர்க் கோட்டையில் இளவரசர்கள் 96

வேலூர் மத்திய சிறை 485
வேல்ஸ் இளவரசர் வருகை 483
வேல்ஸ் இளவரசர் வருகை (தமிழ்நாடு) 481

வை

வைக்கம் 543
வைக்கம் போரில் ஈ.வே.ரா. 545
வைக்கம் சத்தியாக்கிரகக் குழு 544,545
வைக்கம் சத்தியாக்கிரகம் 543,544,546
வைக்கம் சத்தியாக்கிரக முடிவு 547
வைக்கம் போர்க்களத்தில் ஜாா்ஜ் ஜோசப் 546
வைக்கம் வீரர் 547
வைஸ்ராய்க்கு விடுத்த பதினோரு கோரிக்கைகள் 662

ஜ

ஜனத்தலைவர் 305,306
ஜனநாயக மிதவாதிகள் கட்சி 415
ஜனநாயக மிதவாதிகள் மாநாடு 421
ஜஸ்டிஸ் கட்சி 167,213,438,439,539,455,509, 572,604,606,607,609,610,611,612.
ஜஸ்டிஸ் கட்சி ஆட்சி 468
ஜஸ்டிஸ் கட்சியின் மலை 577
ஜஸ்டிஸ் கட்சியின் வீழ்ச்சி 579

ஜா

ஜாக்சனின் இராமநாதபுர நாடகம் 45
ஜாக்சனின் பொய்ப் புகார் 46
ஜாதிய மேளா 102

ஜி

ஜின்னா பிரகடனம் 617
ஜின்னாவின் 14 அம்ச திட்டம் 617

ஜோ

ஜோகன்ஸ்பாக் சத்தியாக்கிரகம் 365

ஸ்

ஸ்டாண்டாடு 266
ஸ்தல ஸ்தாபனங்கள் 580
ஸ்மட்ஸ் - காந்தி உடன்படிக்கை 366

ஷா

ஷாலைன் ஸ்டீமர்ஸ் கம்பெனி 161

ஷௌ

ஷௌகத் பஜார் 557

ஹ

ஹண்டர் கமிஷன் 428

ஹை

ஹைதரலியின் போர் 35

ஹோ

ஹோம் ரூல் 98, 267
ஹோம்ரூல் இயக்கம் 272
ஹோம் ரூல் கொள்கை 271
ஹோம் ரூல் லீக் 119, 272

ஹ்

ஹ்யூம் அறிக்கை 125
ஹ்யூம் எச்சிக்கை 114
ஹ்யூம் சகாப்தம் 142
ஹியூம் பட்டதாரிகள் மாநாடு 116
ஹ்யூம் விவாதம் (கால்வினுடன்) 134

ஸ்ரீ

ஸ்ரீவைகுண்டம் கொள்ளை 47

எண்

19 ஆம் நூற்றாண்டு பெருமை 91
31 ஆவது காங்கிரஸ் மகாசபை 269
32 ஆவது காங்கிரஸ் மகாசபை 285
33 ஆவது காங்கிரஸ் மகா சபை 414,416
34 ஆவது காங்கிரஸ் மகாசபை 414
35 ஆவது காங்கிரஸ் மகாசபை 448, 452
36 ஆவது காங்கிரஸ் மகாசபை 614
39 ஆவது காங்கிரஸ் மகாசபை 574
41 ஆவது காங்கிரஸ் மகாசபை 579
42 ஆவது காங்கிரஸ் மகாசபை 595
43 ஆவது இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை 620
44 ஆவது அகில இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை 653
44 ஆவது காங்கிரஸ் மகாசபை 625
1908 முதல் 1915 வரை 252
1915 ல் ஓர் ஔவையார் 265
1918 முதல் 1922 வரை தமிழ் நாட்டின் எழுச்சி 538

பெயர் அகராதி

அ

அக்கீம் அஜ்மல்கான் 395,492,494
அசுவினி குமாரதத் 222
அசோகன் (அசோகச் சக்ரவர்த்தி, சாம்ராட் அசோகன்) 25,37
அசோக் மேத்தா 17,86
அஞ்சலையம்மாள் கடலூர் 590
அண்ணாமலைப் பிள்ளை, திருவண்ணாமலை 484
அபுல் கலாம் ஆசாத் 413
அபேதானந்தா 103
அப்துல்கரீம் ஜி.எஸ். 322
அப்துல் ஹக்கீம் 440
அப்பாஸ் தயாப்ஜி 406,429
அமீத் அலி 127
அம்பிகா சரண் மஜீம்தார் 269
அம்மாக்கண்ணு 590
அரங்கசாமி ஐயங்கார், ஏ 307,397,413,414,436,460,533, 557,577
அரங்கநாத முதலியார் 606,604
அரங்காச்சாரி ராவ் பகதூர் 442
அரவிந்த் கோஷ் (அரவிந்தர்) 135,143,186,191,193,198,208,209, 250,251,259,313,316,317,318,327,643
அரிசர் வோத்தமராவ் 200,230,396,604
அருணாசலராவ் கே. 590
அருண்டேல் ஜி.எஸ்.(எஸ். அருண்டேல், அருண்டேல்) 142,275,284,307,510
அலி சகோதரர் 414,433,492,625
அலெக்சாண்டர் (மகா அலெக்சாந்தர்)27
அவுரங்கசீப் 34
அழகிய சிங்கப் பெருமாள் 339
அனந்தாச்சாரியார் ஆக்கூர் 591
அனந்தாச்சார்லு 259,354,358,375
அனவரதம் பிள்ளை 59
அனுசுயா தேவி 385
அன்சாரி எம்.ஏ, (டாக்டர் அன்சாரி) 141,492,517,518,597,615, 621
அன்வர்-உத்தீன் 32
அன்ன பூர்ணையா 591
அன்னி பெசன்ட்(டாக்டர் அன்னி பெசன்ட், டாக்டர் பெசன்ட், பெசன்ட் அம்மையார், பெசன்ட் 96,97,109,139,263,267,269,271,272, 277,281,284,288,290,298,302, 368,375,376,392,398,409, 418,424,510,551,573,598,
அஜீத்சிங் 175
அஸ்வினி தத் 253

ஆ

ஆச்சார்யா எம்.பி.டி. 334,335,339,
ஆண்டுரூஸ் ஜே.எப். 39,487
ஆண்ட்ரூஸ் ஸி.எப். 524
ஆதிகேசவ நாயகர் சர்தார் 520
ஆதிநாராயண செட்டி எஸ். 440
ஆதிநாராயண செட்டியார் டி.(சேலம் ஆதிநாராயண செட்டியார்) 396,511,
ஆறுமுக நாவலர் 203
ஆறுமுகம் 240
ஆரோக்கியசாமி முதலியார் 604,606
ஆர்க்காட்டு நவாப் 31
ஆர்னால்டு ரைட் 268
ஆர்னால்டு வொயிட் 237
ஆலன் ஆக்டேவியன் ஹியூம் (ஹ்யூம்) 88,114,127,128,130,132,143, 215,272
ஆல்காட்(கர்னல் ஆல்காட்) 96,109,267
ஆஷ்(ஆஷ்துரை) 190,222,224,230

இ

இரகுநாதராவ் 113
இராசகோபாலாச்சாரியார் சி. (சேலம் சி. ராஜகோபலாச்சாரியார், ராஜாஜி) 198,249,280,287,389,392,394,396, 397,403,414,416,418,422,428,436, 440,444-447,452,456,457,460,462, 465,472,474,475,482,485,486,487, 492,506,508,511-513,517,518,520, 521-523,529,532,534,536,539,540-542, 545 ,547,565,567,570,577,579,597, 601,592,609,626,628,630, 634, 660, 662

இராசராச சோழன் 25,37
இராசேந்திர சோழன் 25
இராமகிருஷ்ண பரமஹம்சர், (இராமகிருஷ்ணர், ராமகிருஷ்ணர்) 91,92,93,96,111,148
இராமசாமி என்.கே. 192
இராமசாமி ஐயர் சி.பி.(சர்.சி.பி. ராமசாமி ஐயர், சர்.சி.பி) 250,266,293,298,375,421,416,442,591
இராமசாமிப் பிள்ளை ஆர். 125
இராமசாமி முதலியார் ஏ. 577,578,610,613
இராம பத்ர உடையார் 566
இராமலிங்க சுவாமி(அருட் பிரகாச வள்ளலார், இராமலிங்கர், ராமலிங்கர்) 90,92,100,211
நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை 436
இராமநாதன் எஸ். 445,532,566,568
இராமனாதப் பிள்ளை 58
இர்வின்லார்டு (இர்வின் பிரபு,இர்வின்) 575,594,653,658,662

ஈ

ஈசுவர தத் 94

உ

உடையத்தேவன் 66
உட் அவுஸ் 70
உமேஷ் சந்திர பானர்ஜி 117

ஊ

ஊமைத்துரை(ஊமைத் தம்பி) 21,43,44,48,51,54,59,60,62,63,70

எ

எட்டப்பன்(எட்டப்ப நாயக்கன்) 48,49,51,58
எதிராஜ் சுரேந்திரநாத் 209,228
எஸ்லாஜிடாஸ்பாய் 161

ஏ

ஏர்லி நார்ட்டன் 127,138,221

ஐ

ஐதர் அலி (ஹைதர் அலி, ஹைதர், ஐதர்) 18,35-37,39,76
கோவை ஐயாமுத்து 545
ஐலிங் (அய்லிங்) 237

ஒ

ஒரீலி 48

க

கங்காதர ராவ் தேஷ் பாண்டே 529
கணபதி ஐயர் கே.வி. 584
கண்ணம்மாள் 546
கதிர்வேலர் 111
கபார்தே சையது ஹஸன் (கபார்தே) 252,270,413,
கமால் பாஷா 518
கருணாகர மேனன் 375
கர்சான் லார்டு 147,149,153,154
கர்சான் வாலி 220,334
கலியாணசுந்தரனார் திரு.வி.(திரு.வி.க.) 99,279,291,307,391,392,402, 440,456,460,476,510, 513,514,563,564,567,569,577
கஸ்தூரிரங்க ஐயங்கார் எஸ். (எஸ் கஸ்தூரிரங்க ஐயங்கார், ஐயங்கார்) 293,396,403,416,417,436,440,518,550

கா

காமா (மாடம் காமா) 119,228,334,335
கால்டுவெல் பாதிரியார் (கால்டுவெல்) 47,64
கால்வின் 131
காலின்ஸ் 48,49
கான்பகதூர் குத்தூஸ் பாஷா 440,441
கானாட் கோமகனார் 454,455,457

கி

கிச்சலு 406,492
கிராஸ் 134
கிருஷ்ணசாமி ஐயர், அல்லாடி 513,551,646

கிருஷ்ணசாமி ஐயர் வி.)
(வி.கிருஷ்ணசாமி)
154,167,170,175,204,207,213,230,266
கிருஷ்ணசாமிசர்மா 200,253,308
கிருஷ்ணசாமிப் பாவலர் தெ.பொ. 534
கிருஷ்ண நாயர் சி.சர். 511
கிளார்க்,லெப்டினனட் (தளபதி கிளார்க்) 53,46
கிளைவ் 31,54

கு

குதிராம் போஸ் 23
குத்தி கேசவப்பிள்ளை 121,510,542
குத்தூஸ் பாஷா 442
குமாரசாமி சாஸ்திரி 383
குருசாமி ஐயர் 160
குருசாமி செட்டி எஸ். சல்லா 375,440
குருநாத ஐயர் 255,309,334,335

கெ

கெய்சர் 337
கென்னடி 70

கே

கேசவ சந்திர சென் 98,111
கேசவ பிள்ளை 119,287
கேசவ மேனன் 544

கோ

கோபால கிருஷ்ண கோகலே (கோகலே)
143,150,218,252,259,265,359,650
கோபால கிருஷ்ண பாரதியார் 108,177
கோபால கிருஷ்ணா(ஆந்திர ரத்னா) 472
கோபாலசாமி முதலியார் டி.வி. 399
கோபி நாத் 539
கோவர்த்தன தாஸ் 417
கோவிந்ததாஸ்,லாட் 156
கோவிந்தன் 544
கோவிந்த் வல்ல பந்த் 609

ச

சர்க்கரைச் செட்டியார் வி. 181,307,578
சங்கரன் நாயர் எம். (சர். சங்கர நாயர்)
160,212,214,221,238,303,411,417,489
சங்கு சுப்பிரமணியம் 661
சங்கர கிருஷ்ண ஐயர் 237
சங்கர்லால் பாங்கர் 385,502,505,541
சஞ்சீவி காமத் 401
சணபக ராமன் டாக்டர்
255,335,337,340,341
சண்முகஞ் செட்டியார் ஆர். 533,577
சதாசிவ ஐயர் 513
சத்திய பால் 406,419
சத்திய மூர்த்தி ஐயர், எஸ் (நாவலர் எஸ்.சத்தியமூர்த்தி, சத்திய மூர்த்தி)
392,397,401,403,436,437,440,460, 537,577,578,591,604,610,627, 646,662
சத்திய நாராயணா ப்ர்ரா 592
சத்யா டி.டி. டாக்டர் 524
சத்யேந்திர பிரசன்ன சின்கா 268
சந்தானம். க (சந்தானம்)
406,542,551,616
சந்திரகிரி மன்னன் 30
சந்திர சேகர ஆசாத் 653
சரோஜினி தேவி (சரோஜினி நாயுடு, கவியரசி சரோஜினி, சரோஜினி)
385,396,397,399,478,486,492,495,576
சர்மா பி.என் 421,422,647

சா

சாண்டர்ஸ் 650
சாமிநாத ஐயர் 121,590
சாமிநாத சர்மா வெ. 320
சாமிநாத முதலியார் குடியாத்தம் 590
சாம்பமூர்த்தி. புலுசு 591
சார்லஸ் பிராட்லா 420

சி

சிங்காரவேலு செட்டியார் எம்.(தோழர் சிங்கார வேலு செட்டியார், சிங்கார வேலர்) 307,515,520,527,565,644, 646,647,648,649
சிதம்பர பாரதி ரெ. 584,586
சிதம்பரனார் வ.உ.(சிதம்பரனார் வ.உ.சி கப்லோட்டிய தமிழர்)
103,158-160,164,165,179,182,18 3,184,188,189,192,197,209,210,221, 229,231,246,248,249,250,253,

259,294,297,317,318,321 ,328, 329,374,377,390,394,403,417, 423,436,437,445,509,510, 513,551,565,571,599
சித்ரஞ்சன் தாஸ் (தேசபந்து சித்தரஞ்சன் தாஸ், தேசபந்து தாசர், தேசபந்து, சி.ஆர், தாஸ், தாஸ்) 406,417,418,422,424, 433,436,450,462,479, 486,492,519,520, 523,528,531,532,537,538, 541,558,559
சியாம்ஜி கிருஷ்ணவர்மா 126,334
சிரத்தானந்தர், (சிரத்தானந்த சுவாமிகள்) 102,395,419,420,575,580
சிராஜ்-உத் தௌலா 147
சிவசாமி ஐயர். எஸ். 214
சிவசுப்பிரமணியம் பிள்ளை 44
சிவநாத் சென் 98
சிவராவ் பி. 604
சின்ன மருது 61

சீ

சீதாராமையா பட்டாபி 93,262
சீனிவாச ஐயங்கார் கே. 512
சீனிவாசய்யங்கார் எஸ். (சீனிவாசய்யங்கார், ஐயங்கார்) 202,230,312,376,391,460;521, 523,528,533,545,550, 557,566,577,578,579, 580,595,597,599,600, 601,621,625,659,660.
சீனிவாச சாஸ்திரியார் வி.எஸ்.(சீனிவாச சாஸ்திரியார், சாஸ்திரியார்) 199,375,381,387,391,398, 416,421,442,550,
சீனிவாச வரதன் 584
சீனிவாசன் 200
சீனிவாசாச்சாரியார். மண்டயம் 313,314,643

சு

சுகதேவ் 651
சுந்தரமய்யார் பி.ஆர். 175,259
சுந்தரராச ஐயங்கார் எம்.கே. 511
சுபாஸ் சந்திரபோஸ் (நேதாஜி) 340,463,523,620,621,658,660
சுப்பராயலு நாயுடு 586
சுப்பராயன் ப. 604,609
சுப்பராயன் டாக்டர் 571
சுப்பராயன் ப. 579
சுப்பராவ் பந்தலு என். 287
சுப்பிரமணிய ஐயர் எஸ். 117,257,266,278, 293,298,368,375,394,396,398,559
சுப்பிரமணிய ஐயர் ஜி. 106,117,121,135,136, 157,203,204,231,271,303,304,358,559
சுப்பிரமணிய ஐயர் சர். 358
சுப்பிரமணிய ஐயர் வ.வே. (வ.வே.சு. ஐயர், ஐயர்) 220,250,309,314,319,323, 327,332,334,391,424, 440,477,515,559,561,562
சுப்பிரமணிய சாஸ்திரி 548
சுப்பிரமணிய சிவா, (தியாகி சு.சிவா சிவம், சிவா) 104,184,186,189,192,209,230 ,253,294,297,374,377,515, 552,553,556,559,557,582
சுப்பிரமணிய பாரதியார் (மகாகவி சுப்பிரமணிய பாரதியார், பாரதி) 95,99,99,102,117,151,156,157,162,167 ,168,171,172,174,176,177,186, 189,194,201,203,211,215,228, 231,246,247,260,292,294, 297,304,311-314,318,328,329, 330,331,346,347,351,391, 392,401,422,453,559,649
சுரேந்திரநாத் ஆரியா 200,231,253
சுரேந்திரநாத் பானர்ஜி 127,143,148,150,157,252,265,270,559

செ

செங்குட்டுவன் 24
செம்ஸ்போர்டு (செம்ஸ்போர்ட்) 259,274,297,405,417
செல்வபதி செட்டியார் ஜி. 307,509
சென்குப்தா ஜே.எம். 524

சென்னம்மாள் (கிட்டூர்ச் சென்னம்மா, கிட்டூர் ராணி சென்னம்மாள்) 19,76

சே

சேது பார்வதி அம்மாள் மகாராணி 547
சேது ரத்தினம் ஐயர் (சேது ரத்தினம்) 571,606

சை

சையது ஹசன் இமாம் 389
சைபுதீன் கிச்சலு 419

சோ

சோடானி சேட் 518
சோபானி 436
சோம சுந்தரம் 240
சோமசுந்தர பாரதியார். ச (சோமசுந்தர பாரதி) 319,399
சோமயாஜுலு (தளபதி சோமயாஜுலு) 584,586,589,590

சௌ

சௌந்தர பாண்டியன் 50
சௌந்தரம் ராமச்சந்திரன் 83

ட

டக்ளஸ் 48
டப்ரின் லார்டு 134
டயர் (ஜெனரல் டயர்) 419,445

டா

டார்மீக்ஸ் 48
டால்ஸ்டாய் 87

டி

டிவேலரா 264

டூ

டூப்ளே 31

டெ

டெல்லாஸ் 48

டே

டேவிட்சன்

த

தண்டபாணிப்பிள்ளை என். 403
தம்பி நாயுடு 368
தயானந்த சரஸ்வதி (தயானந்தர்) 90,100,110
தருமராச ஐயர் 234,235,309

தா

தாதாபாய் நௌரோஜி 121,169,343
தாந்தியா தோபே 78
தாம்பே 237
தானாபதிப்பிள்ளை (தானாபதி) 45,46-50,58,59

தி

திசாய்குமார் 651
திப்பு சுல்தான் (திப்பு) 18,36-40,69,77
தியாகராச செட்டியார் பி.சா. 123,299,376,439,482,563
திரேந்திரநாத் பானர்ஜி 397
திருமலாச்சாரி எம்.பி. 255,309
திருமலாச்சாரி எஸ். என். 339
திருவேங்கடம் என். 590
தின்ஷா வாச்சா 408

தீ

தீனநாத் சுவாமி 524

து

துரைசாமி ஐயர் 181
துரைசிங்கம் 43

தே

தேசிகாச்சாரியார் வி.பி. 175
தேவநாயக ஐயா எஸ்.ஏ. பண்ருட்டி 590

தொ

தொண்டைமான் 51,63

ந

நஞ்சுண்டராவ் எம்.சி. 396
நடேசன் ஜி.ஏ.
358,368,376,378,391,397,416,442
நரேந்திரன் 612
நவாப் சையது முகம்மது 287
நற்குணம் எஸ்.வி. 511

நா

நாகப்பன் 368,377
நாகம்மாள் 546
நாகேஸ்வரராவ் 551
நாயர் டி.எம். 213,299,307
நாராயண குரு 545
நாராயணசாமி 368,377
நாராயணன். என். 542
நார்ட்டன் (நார்ட்டன் துரை)
139,154,375,376,449
நானாசாகிப் 78,79

நி

நியூஜண்ட் கிராண்ட் 204
நிவேதிதா 102
நிஜாம் 77

நீ

நீலகண்ட பிரம்மச்சாரி (நீலகண்ட ஐயர்)
236,240,241,244,255,308,321,339
நீலமேகம் சுப்பையா 512
நீல் (கர்னல் நீல்) 83,585,592

ப

பகதூர் ஷா 22
பகவதி சரண் 651
பகத் சிங் 651,650
பக்ருதீன் தயாப்ஜி 122,144,359
பங்கிம் சந்திர சட்டர்ஜி
(பங்கிம் சந்திரர்) 108,148
படேல் வி.ஜே. 413
பண்டார்க்கா 359
பத்மநாப ஐயங்கார் 189,192
பத்மநாபன் மன்னத்து 545
பத்மாசனி அம்மாள் திருமதி 586
பரமேசுவரன் பிள்ளை 359,375
பர்ஹன் ஹெட் 615
பலராம வர்மா 72,73
பலியத் அச்சன் 20
பழாசிராஜா (கேரள வர்மா
பழாசிராஜா) 20
பழைய அச்சன் 74

பா

பானர்மென் 46,48,50,52,53,54,58
பாண்டலே கே.கே. 558
பாண்டித் துரைச்சாமித் தேவர் 159
பாலகங்காதரதிலகர்,
(லோகமான்ய திலகர், திலகர்)
105,199,268,270,271,272,274,302,374
பால் பீடர் பிள்ளை 160
பானகல் அரசர் 471
பானர்மென் தளபதி 57
பாஸில் ஸ்காட் சர் 383
பாஸ்கர சேதுபதி 101
பாஷ்யம் ஐயங்கார் வி. (பாஷ்யம்
ஐயங்கார்) 259,375

பி

பிட்டபிள்யூ.எச் 547
பிரகாசம் டி. (ஆந்திர கேசரி)
396,418,462,551
பிரபோஷ் சந்திர மித்தர் 383
பிராட்லா 137
பிராண்டு மேஜர் 42
பிரோசிஷா மேத்தா
(பிரோஸிஷா மேதா) 259,276,359
பிரோக் எம்.சி 99
பிரௌன் 48
பிர்லா ஜி.டி. 626
பிளாக் 48
பிளாவட்ஸ்கி அம்மையார்
(பிளவாட்ஸ்கி) 96,109
பின்ஹே ஏ.எஃப் 195,194
பிஷன் நாராயன் பண்டித 138

பு

புரும் பீல்ட் நீதிபதி 502
புரூஸ் 48

புல்லார்டன் (கா்னல் புல்லா்டன்) 42
புலித்தேவன் (புலித் தேவர்) 21,42

பூ

பூபேந்திரநாத் பாசு (சர் பூபேந்திரநாத் பாசு, பூபேந்திரர்) 103,257,597
பூதகேசுவர தத் 625

பெ

பெரிய உடையத் தேவன் பட மாத்தூர் கௌரி வல்லப்பப் 67
பெரிய மருது 62
பெருமாள் 649
பென்ட்லண்டு லார்டு 258,279

போ

போலக் 270,381

ம

மகன் லால் காந்தி 541
மகாதேவ கோவிந்த ரானடே 139,143,359
மகா தேவ தேசாய் 46
மகாவீர் சிங் 651
மணி ஐயர், எஸ் (மணி ஐயர்) 278,562
மதன் மோகன் மாளவியா பண்டித (பண்டித மாளவியா, மாளவியா) 127,379,411,441,448,480, 516,576,600,660
மதன் லால் திங்ரா 220,335
மருது சகோதரர்கள் 62,64,67,76
மறைமலையடிகள் 114
மன மோகன் குப்தா 612
மன்சர்ஷா அவாரி 583
மன்றோ 201
மஜூர்-உல்-ஹக் 270

மா

மாக் லாசலன் 70
மாக்ஸ்வெல் 43
மாடசாமி (மடசாமிப் பிள்ளை) 236,246,255,33
மாண்டேகு 277,282,284
மாதவராவ், பி.வி 126,412,546
மாதுர் தாஸ் திரிகம் ஜி, 356
மார்கண்டேயன் 612
மார்கரட் கசின்ஸ் 139
மார்லி, லார்டு 602,155

மி

மிண்டோ லார்டு 259,602
மித்தர் 113

மீ

மீனாட்சி சுந்தரம் பிள்ளை 195

மு

முகமதலி 471
முகமதாபாத் ராசா 270
முகமது உஸ்மான் சர் 604
முகமது கஜினி 28
முகமது சாலி 584
முகமது சாலியா ராவுத்தர் 586
முகுந்தலால் சர்க்கார் 647,648,649
முத்துரங்க முதலியார். சி.என். 565,577,578,597,604,660
முத்தையா முதலியார் 631,606
முத்துலட்சுமி ரெட்டி 604
முத்துவடுக நாதர் 62
முத்து வடிவு 58
முருகேச படையாச்சி 590
முஸ்தபா 71

மூ

மூக்கணாச்சாரியார் 138,142
மூஞ்சே டாக்டர் 495
மூல சங்கரர் 90

மெ

மெகஸ்தனிசு 28
மெக்காலே (ரெவிடென்ட் மெக்காலே, கா்னா் மெக்காலே, லார்டு மெக்காலே) 73,74,89
மெஸ்டன் லார்டு 270

மே

மேனன் கே.பி.எஸ். 557

மை

மைக்கேல் ஓட்வியர்(சர். மைக்கேல் ஓட்வியர்)404,408,414,417,419,445

மோ

மோகன் கோஷ் லால் 259
மோகனதாஸ் கரம் கந்த் சாந்தி (காந்தி, காந்திஜி, மகாத்மா, மகாத்மாஜி காந்தியடிகள், அடிகள், மோகனதாஸ் காந்தி, மோக காந்தி) 99,268,281,341,342,344,345,347, 349,351,368,371,372,373, 376,381,382,383,387,388, 389,390,398,403-406, 409,410,416,423,424,426,429, 433,440,445,451,456,459,463,467, 468,480,483,485,488,490,494, 505,520,537,540,545,550,569, 572-575,581,596,597,599, 584,585,587,620,623, 634,640,654,658,660
மோதிலால் நேரு (பண்டித மோதிலால் நேரு பெரிய நேரு) 276,287,406,414,421,423,429, 436,450,462,474,530,531,486,492, 517,518,521,522,533,537, 538,576,578,580,597, 111,616,620,621,634,651,652,660.

மௌ

மௌலானா அபுல்கலாம் ஆசாத் (மௌலானா ஆசாத்) 492,494,530
மௌலான முகமதலி 429,470,530,532,574,581
மௌலானா ஷௌகத் அலி 140,429,449

ய

யங் 71
யதீன் தாஸ் 651,652

யா

யாகூப் ஹாசன் 375,440,442,444,461,465,468,472,492

ர

ரகுபதி ஐயர் 227
ரசூல் 270
ரத்தினசாமி கவுண்டர் 541
ரவீந்திர நாத் தாகூர் 151,412,420,421
ராகவய்யா திவான் 547
ராமலிங்க முதலியார் துவிபாஷி 48
ராஜாராம் மோகன் ராய் (ராம் மோகன் ராய், ராய்) 90,91,94,95,98,110,148)
ராயண்ணா 19
ரஸ்ஸல் 79

ரா

ராசன் பாபு 462,492,505,506,517
ராசேந்திர பிரசாத் பாபு300,516,520,600
ராமசாமி நாய்க்கர் ஈ.வெ.(ஈ.வெ.ரா., ஈ.வெ.ராமசாமியார் ஈ.வெ.ராமசாமி வெ. இராமசாமி நாய்க்கர்) 307,392,460,514,520,513, 532,545,562,565,568, 569,572,577,648
ராம்சே மெக்டனால்டு 138
ராம ராவ் யூ 570
ராமானுஜலு நாயுடு 510
ராய் எம்-என் 335,647
ரானடே 252
ராசன் டி.எஸ்.எஸ். 220,257,334,396,442,472,511,520,550
ராஜகுரு 651
ராஷ்பிகாரிகோஷ்180,205,207,252,270

ரி

ரிச்மண்டு 201
ரிட்டர்ன் லார்டு வைசிராய் 114

ரீ

ரீஸ் 231

ரு

ருக்மணி 139

ரெ

ஷாப்டர் (ரெவரன்ட் ஷாப்டர்) 190

ரொ

ரொமேஷ் சந்திரர் 259

ரௌ

ரௌலட் ஏ.டி 383

ல

லட்சுமிபாய் 19
லாப்டன் 361
லாலா அர்ச்சுனலால் சேத்தி 289
லாலா லஜபதி ராய்(லாலா லஜபதி, லஜபதிராய்) 100,111,143,144,182,208,419, 425,433,450,462,528,530, 576,600,603,608,643

லூ

லூஷிங்டன் 47

லோ

லோகமான்ய பாலகங்தர திலகர், (லோகமான்ய திலகர், லோகமான்யர் திலகர், திலகர்) 105,143,182,209,375,400

வ

வரதராசுலு நாயுடு பி (டாக்டர் நாயுடு) 83,392,456,460,476, 510,511,512,513,520,562,582,586,628
வரதராசுலு நாயுடு ஆர்.எஸ். 511
வரதாச்சாரி என்.எஸ். 445,534
வ.ரா 315,511
வல்லபபாய் படேல் (சர்தார் படேல்) 385,462,486,521,529,532,535
வள்ளியம்மை (வள்ளியம்மாள்)368,374

வா

வாஞ்சிநாதன் 225,228,319
வாடியா பி.பி. (வாடியா) 276,307,375,392,399,403,510
வாலன்டைன் சிரால் 433
வால்ஸ் 161,188,192

வி

விக்டோரியா அம்மையார் 80
விஞ்ச் 187,188,189
விசயராகவாச்சாரியார் சி. (சேலம் விஜயராகவாச்சாரி) 155,160,396,399,426, 428,445,448,449,450,451,532,580
விசயரகுநாதத் தொண்டமான் 51
வித்தல்பாய் படேல் (சகோதரர் வித்தல்பாய் படேல்) 516,521,660
விபின்சந்திர பாலர் 127,143,144,170,173;200,208,252,413, 436
விவேகானந்தர் (சுவாமி விவேகானந்தர்) 93,95,111,148
வின்சென்ட் எச். 176

வீ

விநாயக தாமோதர சவர்க்கார் (வீரசவர்க்கார், சவர்க்கார்) 17,38,69,76,84,220,643
வீரபாண்டியக் கட்ட பொம்மன் (வீரபாண்டியன், கட்டபொம்மன்) 18,19,20,21,22,40,45,46,47, 50,51,52,53,54,56,57,76,159,221
வீரராகவாச்சாரி மு. (முடாம்பி வீரராகவாச்சாரியார்) 106,199,129,131,135,136,375

வெ

வெங்கடாசலஞ் செட்டியார்சாமி578,604
வெட்ஜ்வுட் (கர்னல் வெட்ஜவுட்) 452,453,633,640
வெர்னேலெவரா சர் 383
வெல்லெஸ்லி 73
வெல்ஷ் (கர்னல் வெல்ஷ்) 63,64

வெள்ளைச்சாமி 59
வெள்ளையத் தேவன் 44,49

வே

வேங்கடராம ஐயர் டி.வி. 403
வேங்கடேசுவர ஐயர், புனலூர் (வேங்கடேசுவர ஐயர்) 234,235,309
வேதநாயகனார் (மயூரம் நீதிபதி வேதநாயகனார்) 108,112
வேலாயுத முதலியார் தொழுவூர் 92
வேலுத்தம்பி 20,75,76
வேலு நாச்சியார் 61,62
வேல்ஸ் இளவரசர் 607

வை

வைத்தியநாத ஐயர் ஏ. 662

ஜ

ஜமதக்கினி 590
ஜம்புலிங்க முதலியார் 303
ஜம்னாலால் பஜாஜ் 449,464,492,516,517,529
ஜவஹர்லால் நேரு (பண்டித நேரு, ஜவகர்லால், ஜவகர் லால்ஜி, நேருஜி நேரு) 34,35,38,423,462,492,497,529,540, 572,597,599,609,621,651,655
ஜனாப் அப்துல் அக்கீம் சாகிப் 464,486
ஜனாப் பஸ்லுல் ஹக் 411
ஜனாப் யாகூப் அசன் 550

ஜா

ஜாக்சன் (ஜாக்சன் துரை மகன்) 45,46,47,53
ஜார்ஜ் ஐந்து (ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தி) 227,259
ஜார்ஜ் ஜோசப் மதுரை (ஜார்ஜ் ஜோசப்) 307,397,403,442,445,511,520,546,583
ஜான் ஆடன் 138
ஜான்சன் (பூனைக்கால் ஜான்சன்) 629
ஜான்சி ராணி (ஜான்சி) 19,83
ஜான் சைமன் 596,650,607,602

ஜி

ஜின்னா எம்.ஏ.(ஜின்னா) 271,281,299,411,490,575,617,616

ஜெ

ஜெயகர் எம்.ஆர். 406,429,490
ஜெயந்தன் சங்கரன் நம்பூதிரி 72
ஜெயராம் தாஸ் தௌலத் ராம் 630

ஸ்

ஸ்டெட் 168
ஸ்மட்ஸ் 365

ஷெ

ஷெய்கு தம்பிப் பாவலர் சதாவதானம் 112

ஷௌ

ஷௌகத் அலி 425

ஹ

ஹரி சர்வோத்தமராவ் 309

ஹா

ஹார்டிஞ் (லார்ட் ஹார்டிஞ்) 222,253,259,379
ஹால்டர் எஸ்.என். 524
ஹால்போர் நைட் 452
ஹார்னிமன் பி.ஜி. 413
ஹாஜி அப்துல் ரகீம் சாகிப் 440

ஸ்ரீ

ஸ்ரீமூலம் திருநாள் 547

விபரங்களுக்கு